D
Y211,31 N73
31N73-35.3)
91605

# Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*13th to 16th March* 1973.

VOLUME XXXV (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.


PAGES

*Tuesday, 13th March* 1973.

Personnel of the Government of Tamil Nadu .. i–vi

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. .. vii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies .. .. .. ix–xvi

1. Questions and Answers .. .. .. .. 1–31

2. Point of Order—

   Allotment of seat in the front row to the Member of the Tamil Arasu Kazhagam .. .. .. .. 32–34

3. Voting on Demands for Grants for the year 1973–74 (*cont.*)—

   Demand No. 17—Medical .. .. .. .. 34–109

   Demand No. 18—Public Health .. .. ..

4. Papers laid on the Table .. .. .. .. .. 110


A 47—1

வெளியீடு—12—6—1973]
Issued—12—6—1973]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1973 மார்ச் 13

Tuesday 13th March 1973

தொகுதி XXXV—எண் 1

Volume XXXV—No. 1

©
தமிழ் நாடு அரசு
1973

GOVERNMENT OF TAMIL NADU
1973

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9.*

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

6. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் தனி ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், பால்பண்ணைத் துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

**THIRU KODARDAS KALIDAS SHAH**

---

***Members of the Council of Ministers.***

1. THE HON. DR. M. KARUNANIDHI, (Chief Minister)-in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, (Minister for Education and Local Administration)-in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, (Minister for Public Health)-in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, (Minister for Labour)-in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, (Minister for Harijan Welfare)-in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, (Minister for Revenue)-in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 | அபுசாலி, திரு. எம். எ. .. .. .. | புவனகிரி. |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 | அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 | அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 | அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 | அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 | அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 12 | ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 | ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 | ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 | ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 | இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 | இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 | இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 | இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 | இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 | இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 25 | இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 | இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 29 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 33 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 34 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். | ஓரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ) |
| 56 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 59 கார்த்திசன், திரு. வீ. | இராதாபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 60 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |
| 91 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 97 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்கநல்லூர். |
| 107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 108 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 109 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 110 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 111 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 112 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 113 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 114 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 116 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 120 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 121 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 124 சேதுராமன். திரு. சி. | சிவகங்கை. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணாராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. வ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. வ. எம். டி. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 160 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 162 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.) |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. ஏ. | கௌச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவினாசி. |
| 180 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னாகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம்.. |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | கோயம்புத்தூர் (மேற்கு). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

**செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 13.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### வீதிவிடங்கன் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள்.

***குறுகியகால வினா எண் 3—திரு. கு. பெரியசாமி** : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் **வீதிவிடங்கன்** என்கிற கிராமத்தில் சாமிநாதன் என்பவரால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கண்டெடுக்கப்பட்ட 11 சிலைகள் சம்பந்தமாக வழக்கு ஏதேனும் முடிவுறு நிலையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தச் சிலைகள் கடத்தப்படாமலிருக்கவும், விற்று அழிக்கப்படாமலிருக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : (அ) ஆம்.

(இ) இந்தச் சிலைகள் தற்போது காவல் துறையினர் பாதுகாப்பில் உள்ளன.

திரு. கு. பெரியசாமி : தலைவர் அவர்களே, முப்பதாண்டுகளுக்குமுன் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சிலைகள் வெள்ளைக்கார அரசால், கண்டெடுத்தவருக்கு நூறு ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டது உண்மையா? விற்பனை செய்யப்பட்ட அதே சிலைகளை இன்றைக்கு ஏதாவது ஒரு மதிப்பு போட்டு அரசு திரும்பவும் விலைக்கு வாங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 16—10—1924-ல் அந்த சிலைகளை 129 ரூபாய் 14 அணாவுக்கு அந்தக் கிராமத்தாருக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் அதை எடுத்துக் கொண்டுபோய் அங்கே இருக்கின்ற கோயிலில் வைத்து அதற்கு விழாக்களெல்லாம் நடத்திக்கொண்டு வந்தார்கள். தற்போது அந்தச் சிலையைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவரான திரு. சாமிநாதன் என்பவரை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு சில பேர் சிலைகளை விற்பதற்கு முயன்று வருவதை அறிந்த காவல் துறையினர் அந்தச் சிலைகளை விற்காமலிருக்க

நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஆனால், அந்த சாமிநாதன் அவர்கள் தனக்குத்தான் அந்தச் சிலை சேரவேண்டும் என்று சொல்லி, அது சம்பந்தமாக நீதி மன்றத்திற்குப் போய் தஞ்சை மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் தொடுத்துள்ள அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. இன்னும் விசாரணை முடியவில்லை.

திரு. கு. பெரியசாமி : விலை மதிப்பற்ற அரிய கலைப் பொக்கிஷங்களை வாங்கிக் கொள்ளையடிப்பதற்காகவும் வெளிநாடுகளுக்குக் கடத்துவதற்காகவும் செய்யப்படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தவும் அப்படிப்பட்டவர்கள்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அரசு என்ன முயற்சி செய்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தச் சிலைகள் அத்தனையும் தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பில் இருக்கின்றன. நீதி மன்றத்தின் முடிவு தெரிந்த பிறகுதான் அந்தச் சிலைகளை அற நிலையத் துறைக்கு ஒப்படைப்பதா அல்லது வேறு என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டும். சிறிய கோவில்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் பக்கத்திலே இருக்கின்ற வாஞ்சிநாதசாமி கோவிலின் துணைக் கோவிலாக அதை எடுத்துக்கொண்டு வாஞ்சிநாத ஆலயம் அதற்காகும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்து அந்தக் கோவிலினுடைய நிர்வாக அதிகாரியை ஒரு வாதியாக இணைத்துக்கொண்டு அந்த வழக்கு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## தஞ்சை மாவட்டத்திறகு வானொலி நிலையம்.

* 341 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மை கருதி ஒரு புதிய வானொலி நிலையம் அமைத்திட மத்திய அரசினை வற்புறுத்தி ஆவன செய்யும் செயற்குறிப்பு மாநில அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. கு. காமாட்சி : கட்சிப் பிரச்சினையில் மத்திய சர்க்கார் தாமதம் காட்டுகிறது என்பதை அனுமதிக்காத ஆலோசனைக் குழு அதைச் சொல்ல மறுத்துவிட்டது. அப்படியிருக்க, தமிழக சர்க்காரைப்பற்றி எந்த ஒரு கட்சி குறை சொன்னாலும் அதை மிகப் பெரிதுபடுத்தி விளம்பரப்படுத்துவதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது, வானொலி நிலையத்தார் அப்படிச் செய்வார்களானல் அவர்களை நாம் கேட்க வேண்டிய கேள்வி. ஆனால், அப்படிச் செய்கிறார்களா என்பதை நாம் பார்க்க வேண்டும்.



திரு. மே. சி. தூயமணி : தமிழக அரசுக்கு விரோதமாக வானொலியில் செய்தி சொல்லப்படுகிறதே அதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில நேரங்களில் அப்படி ஒலிபரப்புகள் வரக்கூடும். அவைகளைப் பற்றி வானொலிக்கு அரசின் சார்பாக அறிவுறுத்தவும் கூடும்.

திரு. வை. பாலசுந்தரம் : வானொலியில் "ஊழல்" என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறதே அதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வானொலியில் "ஊழல்" என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்படுகிறதா ? அல்லது "ஊழல்" என்ற வார்த்தை வானொலியில் உபயோகப்படுத்தப்படுகிறதா? என்று புரியவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் வேறு எந்தப் பகுதியிலாவது வானொலி நிலையம் அமைக்க வேண்டும் என்று நமது அரசு வற்புறுத்தி வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நெல்லை, கோவை நிலையங்கள் இப்பொழுது திருச்சியினுடைய அஞ்சல் நிலையங்களாக இருக்கின்றன. அவைகளைத் திருச்சி போல, சென்னை போல நிலையங்களாக ஆக்க வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்துகிறது.

திரு. கே. ஏ. வகாப் : வானொலியில் ஒரே சமயத்தைச் சார்ந்த மதப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. ஆகவே, எல்லா சமயங்களைச் சார்ந்த மதப் பிரசாரங்களுக்கும் சம பங்கு அளிக்க தமிழக அரசு முயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அநேகமாக எல்லா சமயங்களையும் சார்ந்த பிரசாரம் செய்யப்படுவதாக நான் அறிகிறேன். ஆனால் எவ்வளவு எவ்வளவு நேரம் ஒதுக்கப்படுகிறது என்பதற்கு விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். தேவராசன் : வானொலியில் மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதைத் தணிக்கை செய்த பிறகுதான் அனுமதிக்கிறார்களா? அல்லது அப்படியே அனுமதிக்கிறார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு அமைச்சர்கள், தணிக்கை செய்யவேண்டிய அளவுக்கு எந்தக் கருத்தையும் வானொலியில் பேசுவதில்லை.

திரு. ப. முத்துசாமி : சென்னையை அடுத்த பெரிய நகரமாகிய மதுரையில் வானொலி நிலையம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வானொலி நிலையம் மதுரையில் அமைக்கவேண்டும் என்ற கருத்து நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆனால், நிதி வசதியின்மையினால் புதிய திட்டங்களை எடுத்துக்கொள்ள இயலாமையால் இப்பொழுது அந்தக் கருத்தை அவர்கள் நிறைவேற்றுவதற்கு இயலவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : வானொலி நிலையங்களில் சில நேரங்களில், நடக்காத நிகழ்ச்சியைக்கூட நடந்ததாக அறிவித்துவிடுகிற காரணத்தால் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்படுகிறது என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நடக்காத நிகழ்ச்சிகள் நாடகம், கதைகளாக இருக்கும் ; அவைகள் ஒலிபரப்பப்படலாம்.

திரு. நா. வீராசாமி : எல்லா சமயத்தவர்களுடைய கருத்துக்களும் வானொலியில் ஒலிபரப்பப்படுவதாகச் சொன்னார்கள். தந்தை பெரியாருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் இந்த நாட்டில் மக்களுக்கு ஒலிபரப்பப்படுவதில்லை. ஆகவே, சீர்திருத்தக் கருத்துக்களையும் "வள்ளுவர் சொல்லியிருக்கிற நல்ல அறிவார்ந்த கருத்துக்களையும் அன்றாடம் ஒலிபரப்புவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாச் சமயக் கருத்துக்களும் பரப்பப்படுவதைப்போல் அந்தக் கருத்தும் பரப்பப்பட ஒரு சமயம் வரும்.

*Fake Notes seized at Mannargudi*

* 342 *Q.* **THIRU N. DENNIS** : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of fake notes were seized at Mannargudi about April, 1972 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(ஆ) மன்னார்குடியில் இருவர் உட்பட, 6 பேர்களைக் காவலர் கைது செய்தனர். அவர்களிடமிருந்து கள்ள நோட்டுகளும், அந்த நோட்டுகளைத் தயாரிப்பதற்கான சாதனங்களும் கைப்பற்றப்பட்டன. அவர்கள் அனைவரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட கள்ள நோட்டுகளும், அச்சுகளும் திருநெல்வேலி துணை மாஜிஸ்ட்ரேட்



நீதி மன்றத்திலிருந்து நாசிக் அச்சகத்தின் கருத்தைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டு நாசிக் அச்சகத்தின் கருத்து பெறப்பட்டு 28—2—1973 அன்று குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் அதிகமாக எந்தக் கள்ள ரூபாய் நோட்டுகள் நடமாடுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எவை என்கிற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கள்ள ரூபாய் நோட்டு அச்சடிக்கப்படுவது குடிசைத் தொழில் போல நடைபெறுகிறது. ஆகவே, நோட்டுகளை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை "வித்ட்ரா" செய்துவிட்டுப் புதிய நோட்டுகளை வெளியிடுவதன் மூலம் கள்ள நோட்டுப் புழக்கம் தடை செய்யப்பட முடியும். இந்த ஆலோசனையை மத்திய அரசுக்கு இந்த அரசு எடுத்துக்கூறுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுபோன்ற பல யோசனைகள் நாடாளுமன்றத்தில் மத்திய அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று குடிசைத் தொழிலாக நடைபெறவில்லை. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கூட, ஆண்டொன்றுக்குக் கள்ள நோட்டு வழக்குகள் இரண்டிலிருந்து நான்கு வரையிலும் தான் பிடிக்கப்பட்டிருக்கின்றன ; பரந்த அளவில் நடைபெறவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கள்ள நோட்டு அச்சடிக்கின்ற இயந்திரங்கள் நம்முடைய நாட்டிலேயே செய்யப்பட்டவையா? அல்லது வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டவையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அநேகமாக கள்ள நோட்டுகள் தான் இங்கே வந்து புழங்குகின்றன. இயந்திரங்களெல்லாம் வெளி மாநிலங்களில் தயாராகின்றன.

திரு. ந. சோமசுந்தரம் : மன்னார்குடியில் அவர்கள் பிடிபடும்போது எவ்வளவு நோட்டுகள் பிடிபட்டன? அதற்கு முன்னால் எவ்வளவு ரூபாய்கள் அவர்கள் புழக்கத்தில் விட்டுவிட்டார்கள் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் பிடிபடும்போது 234 நூறு ரூபாய் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. அதற்குமுன்பு எவ்வளவு பிடிபட்டன என்பதெல்லாம் வழக்கு நடைபெறுகிற நேரத்தில் தான் வெளிவரும்.

திரு. என். கே. பழனிசாமி : சமீபத்தில் கோயம்புத்தூர் சென்ட்ரல் ஜெயிலில் கள்ள நோட்டு அடித்தார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பிறகுதான் செய்தி வெளிவந்திருக்கிறது. அந்த வார்டர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது க்ரைம் ஸி.ஐ.டி. விசாரணை நடத்தி வருகிறார்கள்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, கள்ள நோட்டு இப்போது தான் அடிக்கிறார்களா, அல்லது 1967-க்கு முன்பாக அடித்ததாக அரசுக்கு ஏதாவது தகவல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நல்ல நோட்டு வெளியான அந்தக் காலத்திலிருந்தே கள்ளநோட்டு அடிக்கவேண்டுமென்ற எண்ணம் சிலருக்கு ஏற்பட்டு விட்டது.

*திரு. கு. காமாட்சி :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை. திரு கு. காமாட்சி அவர்களின் துணை வினா நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட உத்தரவிடுகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, மத்திய அரசு காகித நோட்டு அதிகமாக அடிப்பதால்தான் கள்ளநோட்டு அடிப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட காகித நோட்டுகள் அடிப்பதைக் குறைப்பதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை கூறுவதோடு, அந்தக் கள்ள நோட்டுக்களை ஒழிப்பதற்கு ஒரு கிராஷ் பிரோக்ராம் வைத்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கள்ள நோட்டு அடிப்பவர்களைப் பிடிப்பதற்கும், அதைப் புழக்கத்தில் விடுபவர்களைப் பிடிப்பதற்கும் தனியே ஒரு சிறப்புக் காவல் பிரிவு இங்கே பணியாற்றி வருகிறது. காகிதத்தில் அடிப்பதா அல்லது வேறு பொருளில் அடிப்பதா என்பது பற்றி முடிவு எடுக்க மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது.

திரு. என். நல்லசாமி : தலைவரவர்களே, கள்ளநோட்டு வெளிநாட்டி லிருந்து கள்ளக் கடத்தல் மூலமாக வருகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே ஒரு கள்ளம் தான், இரண்டு கள்ளம் இல்லை.

புலவர் கி. பழனிச்சாமி : துணைத் தலைவரவர்களே, கள்ள நோட்டு அச்சடித்த கோவை கிருஷ்ணன் போன்றவர்களுக்கு சிறையில் நல்ல வசதி செய்து கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அப்படிப்பட்ட கடுமையான குற்றம் செய்தவர்களுக்கு சிறையில் கடுமையான தண்டனை வழங்க, அல்லது கடுமையான வேலை கொடுக்க அரசு முன் வருமா?

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவாக, கள்ள நோட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்போது இருக்கும் தண்டனை குறைவாக இருக்கிறது, அதை அதிகப்படுத்தினால் அந்தக் காரியங்களில் ஈடுபடுகிறவர்கள் அந்தக் காரியத்தில் ஈடுபடமாட்டார்கள் என்ற கருத்து நிலவுகிறது. ஏற்கனவே யாரோ பி. கிளாசில் இருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கள்ளநோட்டு அச்சடிப்பவர்களுக்குக் குறைந்த கால தண்டனை இருப்பதால்தான், இந்தக் குற்றம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று முதலைமச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட குற்றம் செய்பவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 10 ஆண்டு காலம் 20 ஆண்டு காலம் தண்டனையாக்க வேண்டுமென்று கருத்து இருக்கிறது. அது நிறைவேற்றப்பட்டாலே போதுமானது.

*Educational concessions to children of Repatriates from Burma and Ceylon.*

*343 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the concessions given to the children of the repatriates from Burma and Ceylon for admission into (1) Engineering (2) Medical and (3) other colleges ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அயல்நாட்டிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கென மாநில முழுவதற்கும் பொறியியல் கல்லூரியில் இரு இடங்களும், மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரை இலங்கையிலிருந்து திரும்பியவர்களுக்கு இரு இடங்களும், பர்மாவிலிருந்து மீண்டவர்களுக்கு நான்கு இடங்களும், ஏனைய கலைக் கல்லூரிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு அரசினர் கல்லூரியிலும் புகுமுக வகுப்பில் இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. மற்ற பட்டப் படிப்புகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர மதுரை, நாகர்கோவில், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஆதாரப் பொறியியற் கல்வி பட்டயப் படிப்புக்கு ஒரு இடம் 1972-73 ஆண்டில் ஒதுக்கப்பட்டது.

திரு. ஆ. பரந்தாமன் : துணைத் தலைவரவர்களே, பர்மாவிலிருந்து வருகின்ற மாணவர்களுடைய கல்வித் தகுதிகள் தமிழ்நாட்டுக் கல்வித் தகுதியோடு முறையோடு ஒத்து வருகிறதா, இல்லையென்றால், எந்த அடிப்படையில் அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒத்து வருகின்ற அடிப்படையில்தான் இங்கே பல்வேறு வகுப்புகளில் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். அதற்கான தகுதியைப் பெறவில்லையென்றால், அவ்வாறு பெற்றதற்குப் பின் தான் சேர்ப்பார்கள்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சில இடங்களில் ஒதுக்கப்பட் டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒதுக்கப்பட்ட இடங்களில் மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்களா அல்லது அந்த இடங்கள் காலியாக இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எனக் குத் தெரிந்த வரையில் மாணவர்கள் சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டுள்ள இடம் காலியாக இருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, தமிழ்நாட்டை விட்டு வெளி நாட்டிற்குச் சென்று வாழ முடியாமல் இன்று தாயகம் திரும்பி வருகிற வர்களுக்குப் பொறியியல் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் 1—2 இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அடுத்த ஆண்டிலிருந்து கூடுதலாக இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல் வேறு பிரச்னைகள், அவர்களுடைய எண்ணிக்கை, விண்ணப்பங்கள், மற்ற வசதிகள், சூழ்நிலைகள் இவைகளை ஆராய்ந்தபின் தான் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இப்படி அங்கே இருந்து வரும் மாணவர்களில் சிலருக்குத் தமிழே தெரியவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி தமிழ் தெரியாதவர்களுக்கு முறையாக தமிழ் கற்றுக்கொடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழைக் கற்றுக் கொள்வதற்குப் பல்வேறு வசதி, வாய்ப்புகள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்தி அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அங்கே யிருந்து வருகிறவர்கள் இங்கே வந்து தமிழ் கற்றுக்கொள்ள முடியாத வர்களாக இருந்தால், ஆங்கிலத்தில் சிலபல பள்ளிகளில் பயிற்சி இருப்ப தால், அதிலே சேர்ந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த பர்மா, சிலோன அகதிகளின் குழந்தைகளுக்குத் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிற சீட்டுகள் குறைந்த அளவில் இருக்கின்றன. ஆகவே, ஏற்கனவே இரண்டு சீட் ஒதுக்கப்பட்டிருந்தால் இன்னொரு சீட் அதிகமாக்கி 3 சீட்டாகவும், ஒரு சீட் ஒதுக்கி இருந்தால் அதை இரண்டு சீட்டாக ஆக்கவும் அரசு முன் வருமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தந்தக் கல்வித் துறைக்கு அவர்கள் விண்ணப்பித்தால், அந்தந்தக கல்வித் துறை அது குறித்து இன்னும் ஒதுக்கலாம். சர்வகலாசாலை யில் அதிக இடம் ஒதுக்க சங்கடம் இருக்காது. மருத்துவக் கல்லூரி, பொறியியல கல்லூரி ஆகியவற்றிற்கு அவர்கள் விண்ணப்பித்தால், அவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ப முடிவு எடுக்கலாம்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, தாயகம் திரும்பிய பர்மா, இலங்கை அகதிகளுக்கு இப்போது கல்லூரிகளில் அளிக்கப்படுகின்ற இடங்களை அதிகப்படுத்துவதோடு, அவர்களுக்குப் பணமாக உதவி செய்வ தற்கும் அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியில்லையென்றால், அதைச் செய்து தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, என்னைப பொறுத்தவரையில், கல்வித் துறையில என்னென்ன வசதி கள் செய்து தரப்பட்டிருக்கின்றன என்பதுதான் தெரியும். அவர் களுக்குப் பொருளாதார வசதிகள், மற்ற மற்ற வசதிகள் எல்லாம் அதற்கென்று இருக்கும் துறைகளில் கவனிக்கப்பட்டு வருகின்றன. அந்தத் துறைகள் சில பல வசதிகளைச் செய்து தருகின்றன.

வேலம்பாளையத்திலுள்ள தனியார் பள்ளி.

*344 வினா :—திரு சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971-ம் ஆண்டில், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட் பட்ட 15 வேலம்பாளையத்தில் உள்ள தனியார் பள்ளியை அரசு பள்ளியாக மாற்ற வேண்டும் எனக் கேட்டு பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் பணிகள்.

*345 வினா :—திரு நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 70-71, 71–72-ம் ஆண்டுகளில் மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் (R.M.P.) வேலை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கென எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? எந்த எந்த ஊராட்சி மன்றங்களில் வேலை மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை (a) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். எந்தெந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மொத்தத்தில் செலவழிக்கப்பட்ட தொகை 1970–71-ல் ரூ. 25,000, 1971–72-ல் ரூ. 40,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1970–71-ல் ரெங்க சமுத்திரம் சாலை சீரமைப்பு, குன்னூர் சாலை சீரமைப்பு, கிணற்றுக்கு கைப்பிடிச் சுவர் அமைத்தல், அம்மச்சியாபுரம் சாலை சீரமைப்பு, திருமலாபுரம் சாலை சீரமைப்பு, டி. சுப்பலாபுரம் சாலை சீரமைப்பும், கிணற்றுக்கு கைப்பிடிச் சுவர் அமைத்தல், அனுப்பபட்டி சாலை சீரமைப்பு, ராஜகோபாலன்பட்டி சாலை சீரமைப்பு, கோத்தநாத்து சாலை சீரமைப்பு, திம்மராச நாய்க்கனூர் சாலைச் சீரமைப்பு, கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் அமைத்தல், இராசதானி சாலை சீரமைப்பு எடுத்துக்கொள்ளப் பட்டன. 1971–72-ல் கோத்தநாத்து, நாசிங்காபுரம், ராஜகோபாலன்பட்டி ஆகிய இடங்களில் கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் அமைத்தலும், ஜி. உசிலம்பட்டியில் அணைக்கட்டு சீரமைத்தலும், கன்னியப் பிள்ளைப்பட்டியில் சாலைக்கு வரப்பு அமைத்தலும், பிச்சம்பட்டி, ரெங்கசமுத்திரம், திருமலாபுரம், அம்மச்சியாபுரம் போன்ற இடங்களில் தடுப்புச் சுவர் அமைத்தலும், புலமான்கொம்பை, மயிலாடும் பாறை போன்ற இடங்களில் சாலைகளை அமைத்தலும், சித்தார்பட்டியில் ஊரணி அமைத்தலும் ஆகிய வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, இந்த ரூரல் மேன்-பவர் ப்ரோக்ராம் கீழ் சில ஊர் மன்றங்கள் ஆராய்ந்து வருகின்றன. 1970–71 1971–1972 ஆகிய ஆண்டுகளில் இதனால் ஆதாயம் பெறாத சில மன்றங்களுக்கு இந்த ஆண்டில் அந்தத் திட்டத்தில் ஈடுபட்டு செயல்பட ரூ. $1\frac{1}{2}$ லட்சத்தை வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆராய்ந்து முடித்து மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்கிறார். ஏற்கனவே நிறைவேற்றப்பட்டவைகளை நீக்கிவிட்டு, புதிதாக நடைபெறவேண்டிய பணிகளை, அதிலே மிகவும் முக்கியமாக உள்ள பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்கிறார். அந்த சிபார்சின் அடிப்படையில் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1971–72-ல் மொத்தம் ரூ. 50 லட்சம் அந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

---

(a) III-ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. ஆ. பரந்தாமன் : துணைத் தலைவரவர்களே, இந்த "ரூரல் மான்-பவர்" திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்குகின்ற பணம் உரிய காலத்தில் ஒதுக்கப்படுவதாகத் தெரியவில்லை. மூன்று மாதங்கள் அல்லது 4 மாதங்கள் தாமதமாகக்கிடைப்பதால் அந்த நாட்களில் வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அந்தப் பணத்தை உரிய காலத்தில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த "ரூரல் மான்-பவர்" திட்டத்திற்கு மத்திய அரசு பணம் ஒதுக்குகிறதா இல்லையா என்பது தெரியவில்லை. தீவிர வேலைத் திட்டத்திற்குத்தான் மத்திய அரசு பணம் தருகிறது. தீவிர வேலைத் திட்டம் வேறு; ரூரல் மான்-பவர் திட்டம் வேறு. இந்தத் திட்டத்திற்காக சென்ற ஆண்டு நம்முடைய அரசு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் பணத்தை, சில ஒன்றியங்களால் முழுத் தொகையும் பயன்படுத்தப்படாமல் அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்துவதாகத் தெரிகிறது. இந்தத் தகவல் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விபரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எதனால் திருப்பி அனுப்பப்படுகிறது என்பதற்கான விபரத்தைத் திரட்டிக் கொடுக்க வசதியாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ரூரல் மான்-பவர் ஸ்கீம் எத்தனை ஆண்டுகளாக நமது மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விபரக் குறிப்பு தற்போது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, மனித சக்தித் திட்டத்தின் கீழ் என்னென்ன வேலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசு வரையறை விதித்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டத்தின் கீழ் சாலைகளைச் சீரமைத்தல், சிறு பாசன வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[1973 மார்ச் 13

## Remuneration for Prosperity Brigade Volunteers.

* 346 Q. THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(a) whether it is a fact that remuneration is being paid to the Prosperity Brigade Volunteers, for (1) distributing nutritious bread and (2) regulating passenger traffic in buses in Madras City ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிலையத்திற்கும் சத்துணவு வழங்க குறைந்த பட்சம்
200 குழந்தைகளாவது தேவை. ஒவ்வொரு நிலையத்திலும், பொறுப்
பேற்றிருக்கும் அமைப்பாளருக்கும், உதவியாளருக்கும் முறையே ஒவ்
வொரு குழந்தைக்கு ஒவ்வொரு மாதத்திற்கு 10 காசுகள் வீதமும்
5 காசுகள் வீதமும், மதிப்பு ஊதியம் தரப்படுகிறது.

சென்னை நகரில் நெரிசல் அதிகமாக உள்ள பேருந்து நிலையங்களில்
பேருந்துப் பயணிகளை வரிசையாக நிறுத்தி ஒழுங்கு படுத்தும் பணியில்
ஈடுபட்டுள்ள சீரணித் தொண்டர்களுக்குப் பணிபுரியும் நாட்களில் நாளொன்
றுக்கு ரூ. 3 கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பேருந்து நிலையங்களில்
நெரிசல் வேளைகளில் சீரணித் தொண்டர்கள் கண்டக்டர்களுக்கு உதவியாக
இருக்கும்போது, சில சமயங்களில் இரண்டு பேருக்கும் மோதல் ஏற்படு
கிறது. அதைத் தவிர்க்க, சீரணித் தொண்டர்களுக்குப் பதிலாக பேருந்து
இலாகாவில் உள்ள ஊழியர்களே இந்த வேலையைச் செய்வதற்கு ஏற்பாடு
செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம்
உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து முன்பு இருந்தது. இப்போது
இரு தரப்பினரும் ஒற்றுமையாகப் பணியாற்றுகிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட சீரணித்
தொண்டர்களின் சிறப்பான சேவையைக் கருதி, அவர்களை பேருந்து
இலாகாவில் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும் திட்டம் அரசாங்கத்
திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போதைக்கு அதுபோன்ற
திட்டம் இல்லை. எதிர் காலத்தில் அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.



1973 மார்ச் 13]

திரு. வை. பாலசுந்தரம் : இந்தச் சீரணித் தொண்டர்களுக்கு
எல்லாவிதமான பயிற்சிகளும் நல்ல முறையில் தரப்படுகின்றன. ஆனால்
துப்பாக்கிச் சுடுகின்ற பயிற்சி தரப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்தப்
பயிற்சியை அளிப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினரவர்கள்
சொன்ன கருத்து இப்போதுதான் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட
திட்டம் ஒன்றும் அரசிடம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : இந்த சீரணித் தொண்டர்களை வேறு
வேலைகளில் பயன்படுத்தும் திட்டம் எதுவும் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : வேறு திட்டங்களுக்கும்
அவர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். அதோடு இந்தத் திட்டமும்
கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, செலவுகள் அதிகமான
இந்தக் காலத்தில் சீரணித் தொண்டர்களுக்கு மூன்று ரூபாய்தான்
சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதாது. அதிலும்
இந்த மூன்று ரூபாயாவது அவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்க வசதி
இருக்கிறதா ? இல்லையென்றால் எத்தனை நாள் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அவர்கள் பணியாற்றும்
நாட்களில் மட்டும்தான் இந்த மூன்று ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது.
இப்போது கொடுக்கப்படுகின்ற இந்த ஊதியத்திற்கே அரசியல் பிரச்சினை
கிளப்பப்படுகிறது. ஆகவே, அதிமாகக் கொடுக்கும் உத்தேசம் இல்லை ;
இப்போது கொடுப்பதே போதும் என்று அரசு கருதுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை
பெருகிக் கொண்டே வருகின்ற இந்த நேரத்தில், முழு நேரம் வேலை
இல்லை ; பாதி நேரம் வேலை ; வேலை நேரத்தில் மட்டும் சீரணித்
தொண்டர்களுக்கு ஊதியம் வழங்குவது என்றால் அது இன்னும் வேலை
இல்லாதவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு உதவுவதாக அமை
யாதா ? அதை அரசாங்கம் ஆராயுமா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : வேலையில்லாத் திண்டாட்
டத்தைப் பெருக்கவேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப்
படவில்லை. சமுதாயத்தின் உயர்வுக்குத் தங்கள் உழைப்பை தானம் செய்
வது என்ற முறையில் தான் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் சீரணிப்
படையில் பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு
சம்பந்தப்பட்ட துணைக் கேள்வி அல்ல. இப்படிக் குறிப்பாக புள்ளி

விபரம் கேட்டால் அமைச்சர்களால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? ஆகவே, இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை.

### *Manufacture of measuring tapes.*

* 347. Q. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have issued any warning on the manufacture of measuring tapes by private bodies in October 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ): அங்குல அளவை நாடா அல்லது அங்குலம், மெட்ரிக் அளவுகள் கொண்ட அளவை நாடாக்கள் ஆகியவற்றைத் தயாரித்தல், வாங்குதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் ஆகியவை 1956-ஆம் ஆண்டு தர எடை—அளவைகள் சட்டம், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு எடை—அளவைகள் செயற்படுத்துதல் சட்டம் ஆகியவற்றை மீறியதாகும் எனவும், இத்தவறுகளைச் செய்பவர்கள் தங்கள் மீது வழக்கு தொடரப்படுத்துவதற்குட்பட்டவராவார்கள் எனவும் ஒரு அறிக்கையை 1972 அக்டோபரில் அரசு வெளியிட்டது.

### *Students of Fisheries Technology.*

* 348 Q. THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that the students of the Fisheries Technology of the Central Polytechnic, Adyar, have gone on hunger strike in November 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மீனளத் தொழில் நுட்பவியல்—கப்பற்கலையியல் வகுப்பு மாணவர்கள் (1-வது, 2-வது ஆண்டு மாணவர்கள்), தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 20-11-1972-லிருந்து உண்ணாவிரதம் இருந்தனர். மீனளத்துறைத் துணை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இணை இயக்குநர், மத்திய பல் தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஆகியோர் மாணவர்களின் கோரிக்கைகள் மீது அவசியமான விளக்கங்கள் கொடுத்த பின்னர், மாணவர்கள் 21-11-1972 அன்று உண்ணா விரதத்தைக் கைவிட்டனர்.



திரு. சோ. அழகர்சாமி: அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள்? அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவர்கள் 4 கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களது முதல் கோரிக்கை, மீனளத் தொழில் நுட்பவியல் கப்பற் கலையியல் பட்டயதாரர்கள் தொழில் நுட்பப் பணியாளர்களாகக் கருதப்பட வேண்டும்; அவர்களுக்கு தொடக்கச் சம்பளமாக ரூ. 325 வழங்கப்படவேண்டும் என்பது. இரண்டாவது கோரிக்கை—மீனளத் துறையிலுள்ள துணை ஆய்வாளர் பதவிகள், மீனளத் தொழில் நுட்பவியல்—கப்பற் கலையியல் வகுப்பில் பட்டயம் பெற்றவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும்.

மூன்றுவது கோரிக்கை—நேர்முக விளக்கப்பயிற்சி அளிப்பதற்காக பல் தொழில் பயிற்சிப் பள்ளி வளைவுக்குள் தனியாக நீச்சல் குளம் ஒன்றிற்கு வகை செய்யப்பட வேண்டும்.

நான்காவது கோரிக்கை—நேர்முகப் பயிற்சி வகுப்புகளுக்காக மீன்பிடி படகு ஒன்று வாங்கப்பட வேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளுக்காக அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நீச்சல் குளம் ஒன்றைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளி வளைவுக்குள் தனியாக அமைக்கவும், மீன்பிடி படகு ஒன்றை வாங்குவதற்கும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஒப்புக்கொண்டிருக்கிறார். நீச்சல் குளம் அமைக்கப்படும் வரையில் மாணவர்கள் மெரீனா நீச்சல் குளத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படும்போதெல்லாம் பல்தொழில் பயிற்சிப்பள்ளி பேருந்தைத் தருவதாக மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஒப்புக்கொண்டிருக்கிறார். மீனளத்துறையில் துணை ஆய்வாளர்களது பதவிகளுக்கு விலங்கியல் பட்டதாரிகளை நியமிப்பதற்குப் பதிலாக, மீனளத் தொழில் நுட்பவியல் — கப்பற்கலையியல் வகுப்பில் பட்டயம் பெற்றவர்களை நேரடியாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று வரையறுத்தல், மீனளத் துறைத் துணை ஆய்வாளர்களது பதவிக்கான சம்பள விகித்தை மாற்றியமைத்தல் என்ற கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

### *Fishermen reported missing.*

* 349 Q. THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether some fishermen who went in catamarans and mechanised boats from Royapuram area during the first week of October 1972 are missing;

(b) the steps taken to rescue them; and

(c) the results of the rescue operations?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம், 1-10-1972-ல் கட்டுமரம் ஒன்றில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும், 3—10—1972-ல் மீன்பிடி விசைப்படகு ஒன்றில் சென்ற மூன்று பேரும் காணமற் போனதாக அறிவிக்கப்பட்டது.

(இ) செய்தி கிடைத்தவுடன், கப்பல்களை விழிப்புடன் இருக்க எச்சரிக்கை செய்யுமாறு தொலைபேசிமூலம் சென்னை கம்பியில்லாத் தந்திச் செய்தித் துறை முதன்மை அதிகாரிக்கும், உதவிப் பொறியாளருக்கும், மீனளத் துறை தெரிவித்தது. கடற் கரைப் பகுதியிலுள்ள எல்லா மீனளத் துறை உதவி இயக்குநர்களுக்கும் காணமற்போன மீனவர்கள் பற்றியும், மீன் பிடிபடகுகள் பற்றியும் தகவல் அளிக்கப்பட்டது. காணமற் போன மீனவர்களைத் தேடுவதற்கென மீனளத் துறையின் படகு ஒன்றும் அனுப்பப்பட்டது. காணமற்போன மீனவர்களைப் பற்றி 7—10—1972 வரை அரசுக்கு எந்தத் தகவலும் கிடைக்காததால், காணமற் போன மீனவர்களையும் மீன் பிடி படகுகளையும் கண்டுபிடிப்பதற்கென விமானம் மூலம் விரிவாகத் தேடும்படி இந்திய விமானப்படையைக் கேட்டுக்கொள்ளு மாறு, சென்னை கப்பற்படை அதிகாரி வேண்டப்பட்டார். 8—10—1972 அன்று விமானம் மூலம் விரிவாகத் தேடப்பட்டது. ஆனால், காணமற் போன மீனவர்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

(உ) 1—10—1972-ல் கட்டுமரம் ஒன்றில் சென்ற நான்கு மீனவர்கள், 8—10—1972-ல் கரைக்குத் திரும்பினர். 3—10—1972-ல் படகொன்றில் சென்ற மூன்று மீனவர்கள், கிரேட் ஈஸ்டர்ன் ஷிப்பிங் கம்பெனிக்குச் சொந்தமான சரக்குக்கப்பல் ஒன்றால் 14—10—1972-ல் காப்பாற்றப் பட்டு, பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

முற்பகல் 9-30 திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே அடிக்கடி இம்மாதிரியான விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே புயல் வருவதை அறிந்து கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு அறிவிக்க ஒரு நிரந்தரமான ஏற்பாட்டை அரசாங்கம் செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுதே புயல் வரு வதுபற்றி வானொலி மூலமாக மீனவர்களுக்கு அறிவித்துக்கொண்டிருக் கிறோம். வேறு வகையிலும் செய்திகள் அனுப்புகிறோம். இந்தக் கேள்வி புயலினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியது அல்ல, கடலில் மீன் பிடிக்கச் செல்கிற போது திசை தவறிப்போய்விடுபவர்கள் பற்றியது.

திரு. க. உரோ. எட்மண்ட் : இது போன்ற விபத்துகள் அடிக்கடி ஆங்காங்கே ஏற்படுகிற காரணத்தினால் மாவட்டங்கள்தோறும் ஒரு ரோந் துப் படையை அமைக்கிற ஆலோசனை அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திசை தவறிப்போய் விடு டவர்களைக் கண்டுபிடிக்க நாம் இப்போது விமானம், ஹெலிகாப்டர் ஆகியவற்றை செலவு என்ன ஆனாலும் கவலைப்படாது உபயோகித்து



கிறோம். அடிக்கடி நிகழ்கிற சம்பவம் அல்ல இது. ஆகவே மாவட்டங்கள்தோறும் நிரந்தரமாக இப்போது ரோந்துப்படை அமைக்கிற ஆலோசனை அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. த. சோலையா : கடலில் மீன்பிடிக்கச் சென்று காணமலோ, உயிரிழந்தோ போகிறவர்கள் குடும்பத்திற்கு தமிழக அரசு நிதி உதவி கொடுக்கிறதா ? கொடுக்கிறது என்றால், எந்த ஆண்டில் இருந்து கொடுக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த அரசு வந்த பிறகு கடலில் மீன்பிடிக்கச் சென்று விபத்துக்குள்ளாகிறவர்கள் குடும் பத்திற்கு ஆயிரம் ரூபாய் உதவி அளிக்கிறது. ஒரு குடும்பத்தில் தகப்பன், மகன் ஆகிய இருவருமே உயிரிழந்தால் முன்பு ஆயிரம்தான் கொடுக்கப்பட்டது என்பதை மாற்றி, அவர்களது மனைவிக்கோ, தாய்க்கோ —இரண்டு பேர்களுக்கும் என்றே ஆயிரம் ஆயிரம் கொடுக்க மாற்றி அமைத்திருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம் : கட்டுமரங்களில் கடலில் சென்று காணமற் போகும் மீனவர்களைத் தேட நமது அரசு விமானங்களைப் பயன்படுத்து கிறார்களே, இதற்கு மத்திய அரசாங்கத்தின் சலுகை தரப்படவேண்டும் என்று வற்புறுத்துவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சில நேரங்களில்தான் இது போன்ற விபத்து ஏற்படுகிறது. அந்த நேரத்தில்தான் நாம் ஹெலி காப்டர், விமானம் ஆகியவற்றைக் கோருகிறோம். அரசு சார்பில் கிடைக்கவில்லை என்றாலும் தனி லௌகிக நிறுவனங்களிடம் இருந்து பெற்றும் தேடுகிறோம். இப்போது எடுக்கப்பட்ட முயற்சிக்குக்கூட ரூ. 5,930 விமானத்திற்காகக் கொடுத்திருக்கிறோம். இன்னும் நாற் பதாயிரம், ஐம்பதாயிரம் கூட சில நேரங்களில் ஆகியிருக்கிறது. எப் படியோ நமது மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கமாக இருந்துவருகிறது.

திரு. கே. ஏ. வகாப் : கடலோர மீனவர்கள் இதுபோல திசைமாறி விட்டாலும்கூட டிரான்ஸ்மிஷன் மூலம் தங்கள் இருப்பிடத்தை, திசையைச் சொல்ல — ஜப்பான் நாட்டில் நானூறு, ஐநூறு ரூபாய்களுக்குள் இயந்திரங்களைத் தயாரித்திருக்கிறார்களே, அதை இந்த அரசு பயன் படுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது குறித்து எனக்குத் தகவல் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மரணம் அடைந்த மீனவர் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய்வீதம் அவரது குடும்பத்தாருக்குக் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். இறந்தவரின் வயது என்ன, அவர் உயிருடன் இருந்திருந்தால் பாக்கி

யுள்ள ஆண்டுகளில் எவ்வளவு சம்பாதித்திருக்கக்கூடும் என்பதை எல்லாம் கணக்கிட்டு அவரது குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர் மாதச் சம்பளத் தில் வேலைக்கு இருப்பவர்கள் அல்ல. சுயேச்சையாக கடலில் சென்று சம்பாதிக்கிறவர்கள். சில நேரங்களில் கூடவும் வருமானம் இருக்கும். குறைந்தும் இருக்கும். ஆகவேதான், அதுபோல கணக்குப் பார்க்காது அரசாங்கம் அவரது குடும்பத்தில் இரக்கம் வைத்து ஆயிரம் ரூபாய் உதவி செய்கிறது.

## *Committee on ceiling on Urban Property*

* 350 *Q.*—THIRU N. DENNIS
THIRU N. KITTAPPA: } Will the Hon. the Minister for Revenue be pleased to state whether a copy of the Report of the Official Committee for Ceiling on Urban Property will be placed on the Table of the House ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குழுவின் பரிவுரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. இந்நிலையில் குழுவின் அறிக்கையைப் பேரவை முன் வைப்பது பொது நலனுக்கு ஏற்றதல்ல.

## கூடலூர் தாலூகாவில் ஆக்கிரமிப்புகள்

* 351 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலூக்காவில் ஆக்கிரமிப்புகளை " முறைப்படுத்தும் " வேலை துவங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், பந்தலூர் பிர்காவைச் சேர்ந்த நெல்லியாளம், சேரங்கோடு, மூனைடு, எருமாடு கிராமங்களில் 30-6-1971 தேதி வரை (பசலி 1380 வரை) அரசுக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்புகள் 5,560·08 எக்கரா பரப்பளவுக்கு இருந்தன. இதுவரை 3,174·03 எக்கரா பரப்பளவு நிலம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டு 2,871 நில உடைமைக் குறிப்புகள் (பட்டாக்கள்) வழங்கப்பட்டுள்ளன.



திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இப்படி ஆக்கிரமிக்கப் பட்ட நிலங்களை பாதர் வடக்கன் போன்றவர்கள் பலாத்காரமாகப் பேசியதால் —அங்கிருந்த லட்சக்கணக்கான காடுகளை எல்லாம் அழித்திருக்கிறார்களே, இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இது குறித்து முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி நேரில் அறிந்து வர வருவாய்த்துறை உறுப்பினர் நம்பியாரை அனுப்பியிருக்கிறோம். அவரது அறிக்கை வரவில்லை. அவரது அறிக்கை கிடைத்த பிறகுதான் அரசு இதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு எம். சுரேந்திரன் : இந்த நிகழ்ச்சி பற்றி அங்குள்ளவர் களோடும், அண்டை மாநிலத்தோடும், தமிழக அதிகாரிகள் பேசி ஒரு தீர்வுகாணப்பட்டு இருப்பதாகவும், நம்பியார் வருவதற்குள் எல்லாம் சரி யாகிவிடும் என்கிற செய்தி வந்திருக்கிறதே அங்கே இன்னும் போலீசார் இருக்கிறார்களா ? எவ்வளவு பேர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது ? எப்படி முடிவு எடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பல பேர் கைது செய்யப்பட் டிருக்கிறார்கள். 5 லட்சம் பெறுமான காட்டுப்பொருள் தீக்கு இரை யாக்கப்பட்டிருக்கிறது. அங்கு சென்ற வருவாய்த்துறை அதிகாரி இன்னும் என்னை வந்து சந்திக்கவில்லை. அவரது அறிக்கை கிடைத்த பிறகுதான் அரசு இதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு எம். தேவராசன் : அந்தப் பகுதியில் தமிழர்களைக் கொண்டு போய் அதிகமாகக் குடியேற்றினால்தான் இந்தப் பிரச்சினை தீரும் என்பதை அரசு அறியுமா ? இலங்கைத் தமிழர் அகதிகளை அங்கே குடியேற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : வெளியிடங்களில் இருந்து வருகிற தமிழர்களை அங்கே குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

## குழாய் கிணறுகள் அமைக்கக் கடன்கள்

* 352 வினா— திரு கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் சர்வேதேச வளர்ச்சி ஸ்தாபன— நிதி உதவியுடன் நிலவள வங்கி மூலமாக அளிக்கப்பட்ட கடன் உதவி எவ்வளவு ?

(இ) இதில் குழாய்க் கிணறுகள் எத்தனை அமைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : (அ) 31—1—1973 வரை ரூ. 90·80 லட்சம்.

(ஆ) குழாய்க் கிணறுகள் இல்லை.

திரு கே. ஏ. வகாப் : குழாய்க் கிணறுகள் இல்லை என்று சொன்னார்கள். குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கிறது. மின் சார வெட்டின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் ஆயில் என்ஜின் வைக்க 2 ஆயிரம் ரூபாய் மானியம் என்ற அடிப்படையில் வாங்க, வடாற்காடு மாவட்டத்திற்கும் உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, வினா, உலக வங்கியின் பணத்தைக் கொண்டு எவ்வளவு கிணறுகள் வெட்டப் பட்டன என்பது. ஆனால், உலக வங்கியின் பணம் அல்லாமல், நமது மாநில நிளவள வங்கியின் மூலமாக கிணறுகள் பல வெட்டப்பட்டிருக் கின்றன. அவைகளிலே குழாய்க் கிணறுகளும் அடங்கியிருக்கின்றன. உலக வங்கியினர் 3 மாவட்டங்களிலே கிணறுகள் வெட்டுவதற்குத்தான் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று, திருச்சி, இன்னொன்று தஞ்சாவூர், மூன்றாவது வட ஆற்காடு.

திரு. ஆ. பரந்தாமன் : ஐ. நா. திட்டத்தின்கீழ் கடன்களைக் கொடுக் கின்ற நேரத்தில் ரிசர்வ் வங்கியின் பல கட்டுப்பாடுகளை நீக்க, அல்லது தளர்த்த, அல்லது மாற்ற அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தக் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் தளர்த்தப்பட்டு, இப்பொழுது இலகுவான முறையிலே கடன்கள் வழங்கப்படுகின்றன.

திரு. த. சோலையா : தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக வெட்டப்படுகின்ற கிணறுகள் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதில், வறட்சிப் பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்திலே எத்தனை கிணறுகள் வெட்ட உதவப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இராமநாதபுரம் மாவட்டத் திற்கு உலக வங்கியிலிருந்துதான், பணம் வாங்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. சாதாரணமாக, இங்கே எங்களுடைய குறை, போதுமான அள வுககுக் கிணறுகளை வெட்டவில்லை என்பதுதான். டார்கெட்டில் பாதி அள வுக்குத்தான் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த குழாய்க் கிணறுகளை அரசே அமைத்து, 10, 15 ஏக்கர்களுக்கு தண்ணீர் தரும் செயற்குறிப் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அரசு சிற்சில இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் சில இடங் களில் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை, பெரும்பாலும் வறட்சிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. ந. சோமசுந்தரம் : குழாய்க் கிணறுகளை வெட்டும்போது ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடையில் உள்ள இடைவெளி, ஆயிரம் அடி இருக்கவேண்டுமென்பதைத் தளர்த்துகின்ற உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இப் பொழுது ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடைவெளி இவ்வளவு அடி என்ற அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு, 1,000 அடி அல்ல, 9,000 அடி அல்ல, 800 அடி அல்ல, 400 அடி அல்ல, 300 அடி அல்ல, 200 அடி இருந்தால்கூட, ஒரு கிணற்றிலிருந்து இறைக்கிற தண்ணீர் மற்றொரு கிணற்றுத் தண்ணீரைப் பாதிக்காது என்று இன்ஜினீயர்கள் சொன்னால் போதும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : 90·8 லட்சம் செலவிலே குழாய் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். இதிலே, நார்த் ஆற்காட் டிஸ்டிரிக்டிலே எவ்வளவு செலவாகி யிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கொடுக் கப்பட்ட பணத்தைப் பற்றித்தான் இருக்கிறது. அது கூட, 31—1—1973 வரை கிணறுகளுக்காக வட ஆற்காடு மாவட்டத்திற்கு மட்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக உள்ள தகவல்படி, எனக்கு நினைவில் இருக்கும்வரை சொல்லுகிறேன், ஏறத்தாழ ரூ. 1 கோடியே 10 லட்சத்திற்கு கொடுக்கப்படுகிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்தக் கிணறுகளுக்கு இடையிலே இருக்கிற தூரம் ஆயிரம் அடி அல்ல, 200 அடி இருந்தால்கூட போதும் என்று சொன்னார்கள். அதற்கு இன்ஜினீயர்கள் சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். எந்தத் துறையைச் சேர்ந்த இன்ஜினீயர் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும் ? அவருடைய அதிகார வரையறை எவ்வ ளவு? ஒரு மாவட்டத்திற்கு ஒருவரா ? அல்லது 10, 20 பாங்குகள் சேர்ந்து ஒருவரா ? என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இவ்வளவு தான் இருக்க வேண்டுமென்று சான்றிதழ் அளிக்கவேண்டியது நமது அரசின் இன்ஜி னீயர்கள், அவர்கள், இப்பொழுது பொதுப் பணித்துறையின் அடிப்படையிலே இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே, அந்த நிர்வாகத்தின் கிளை அலுவலகங்கள் உள்ளன. அவர்களுக்குப் பல மாவட்டங்களிலே இன்ஜினீயர்களும் இருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள்
பதில் சொல்லும்போது, அதிகமாக விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு
பணம் வாங்கி வெட்டவில்லையேயென்று கவலையாக இருக்கின்றது,
என்று சொன்னார்கள். பெரும்பாலான பகுதிகளில் ஒரு கிணறை வெட்டு
வதற்கு அருகில் இத்தனை அடி இடைவெளிவேண்டும், இருக்கிற கிணறு
களை ஆழப்படுத்த, அல்லது கிணறுகளுக்கு பம்ப் செட்கள் போடுவதற்குக்
கூட, பக்கத்திலே இருக்கிற கிணறுகளை பாதிக்கக் கூடாது என்று பலவித
மான நிபந்தனைகள் இருப்பதால் கஷ்டம் ஏற்படுகிறது என்பது அமைச்சர்
அவர்களுக்குத் தெரியுமா ? விதிகளை எப்படி தளர்த்தியிருக்கிறார்கள்
என்பதை விவரமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்பொழுது மாண்புமிகு
உறுப்பினர் சொன்னதெல்லாம் முன்காலத்தில் இருந்தது என்று கனம்
உறுப்பினருக்குத் தெரியுமா என்று நான் கூட கேட்க முடியும். கிணறு
வெட்டுவதற்கு இவ்வளவு இடைவெளி வேண்டுமென்று முன்னால் கட்டுப்
பாடு இருந்தது. ஆழப்படுத்துவதற்கு சில கட்டுப்பாடுகள் இருந்தன.
ஏற்கெனவே இருக்கிற கிணறுகளுக்கு பம்ப் செட்டுகள் வைப்பதற்குக்
கட்டுப்பாடுகள் இருந்தன. அதெல்லாம் முந்திய காலம். கூட்டுறவுதுறை
யில் நன்றாக அனுபவம் உள்ள அங்கத்தினர் அவர்கள் தெரிந்து
கொள்ள ஒன்றை சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ 6 மாதங்களுக்கு
முன்னால் ரிசர்வ் வங்கி அதிகாரிகளிடம் நான் பேசி, அதை தனியாக அரசு
ஆணையாக வெளியிட்டிருக்கிறோம். அதன் காப்பி ஒன்றை நண்பர் அவர்
களுக்கு அனுப்பி வைக்கிறேன். இப்பொழுது வேறு எந்தக் கட்டுப்பாடும்
கிடையாது. நமது அரசில் இருக்கிற இஞ்ஜினீயர்கள் இதிலே ஒரு கிணற்றுத்
தண்ணீரை இறைக்கும்போது, அது அடுத்த கிணற்றைப் பாதிக்காது
என்று சான்றிதழ் கொடுத்தால் போதும், சான்றிதழ் அளிக்கும்போது
இஞ்ஜினீயர்கள் கொஞ்சம் நன்றாக ஆராய்ந்து கொடுத்துக் கொண்டிருக்
கிறார்கள். முன்னே போல் அவ்வளவு காலதாமதமோ, அவ்வளவு
கடினமோ இல்லாமல் இருக்கிறது இப்பொழுது.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, நில மட்டத்திற்கு மேல்
நீர் வளம் எப்படி இடத்திற்கு இடம் மாறுபாடுகின்றதோ அதேபோல்,
நிலத்திற்கு அடியில் கூட இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கிறது. ஆகவே,
தூரத்தைப் பொறுத்து இல்லாமல், பொறியாளர்களை விட்டு குத்து மதிப்
பாக சான்றிதழ் பெறுவதைவிட, இன்றையதினம் கையாளப்படுகிற நவீனக்
கருவிகளைப் பயன்படுத்தி, எந்த நிலத்தில் குறிப்பிட்ட அளவிலே நீர்
இருக்கிறதோ, அங்குதான் ஒரு தனிப்பட்ட நபர்கூட, கிணறு வெட்ட
வேண்டுமென்று அதற்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்யுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதுமாதிரியான கருவிகள்
பயன்படுத்தப்படுகின்றன இஞ்ஜினீயர்களால்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி) :
பலமுறை இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. எனவே, அடுத்த
கேள்வி.



வேளாண்மைக் கருவிகள் தயாரிப்பு

*353 வினா—திரு பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கூட்டுற
வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) விவசாயக் கருவிகளைத் தயாரிக்கும் ஆலையொன்றை நிறுவும்
செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) தலைவர் அவர்களே,
புதிதாக ஆலை தொடங்க செயற்குறிப்பு இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that alaready we have a workshop near Basin Bridge and whether it is not a fact that the Hon. Minister has taken steps to extend this workshop and if so, may I know the steps taken to expand the activities of this workshop so that more implements could be manufactured ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, this Workshop is one of the best—equipped workshops in the State. It has got machinery and equipment to manufacture even the most-complicated machines. At the moment, we are manufacturing threshing machines and also tube-well drilling equipment. There is no need to have additional machinery, and even with it, many new implements for agriculture can be manufactured.

THIRU M. A. LATHEEF : Sir, from the answer of the Hon. Minister, we note that the factory, that is the agricultural workshop is not fully utilised at present, Will the Hon. Minister specify the reasons why it cannot be utilised to the fullest extent and will the Government consider that there is need for utilisation of the factory fully to produce the equipments required hence forward at least.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, we are now manufacturing hand-operated drilling sets in this workshop.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether this threshing machinery is popular with the ryots and if it is not popular, will the Government take steps to popularise it?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, it has not been fully popularised so far. Steps are taken to see that cultivators use it in a wider manner.

DR. H. V. HANDE : The hon. Minister was saying that there are plans for expansion to increase the quantum of production from this factory. I do not know why there has been delay in stepping up production. Has the Government got any concrete programme of implementation with regard to stepping up production so that the entire area can be fully utilised ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, what he means by area, I do not know (Interruption) what is proposed to be utilised is, the machinery now available in the workshop. There are plans for expansion so as to produce hand-operated drilling sets. There is great need for these sets, and these are in great demand also not only in our State, but in the neighbouring States as well. Now we have stepped up production. I think a good number of these hand-operated sets are available for drilling tube-wells. We have also Engineering workshops in the Blocks now, where these hand-operated drilling sets will be put to the fullest use.

திரு. எம். சுரேந்திரன் : சார், நில உச்சவரம்புச் சட்டம் வந்துவிட்டதாலும், நிலங்களினுடைய அளவு குறைவாகப் போய்விட்டதாலும் நவீனமாகவும், விஞ்ஞான ரீதியாகவும், விவசாயம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயக் கருவிகள் உற்பத்தியை அதிகப்படுத்தினால் தான் அந்த அளவிற்குச் சரியான முறையிலே அமைக்க முடியும். விவசாயக் கருவிகளை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய முறையில் அதற்கான தொழிற்சாலையை வேறு எங்காவது ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற தொழிற்சாலைகளைத் தவிர, புதிதாக எதும் தொடங்க வேண்டும் என்பதில்லை. இப்பொழுது உள்ள தொழிற்சாலையையே நாம் பூராவாகப் பயன்படுத்தவில்லை. விவசாயம் பற்றிச் சொன்னார்கள். விவசாயத்திற்கு முதலிலே வேண்டியது தண்ணீர்தான். தண்ணீரை நிலத்தின் அடியிலே இருந்து கொண்டு வருவதற்கு டிரில்லிங் செட்ஸ்தான் அதிகமாக வேண்டும். அதைத்தான் முதன்முதலாக அங்கே உற்பத்தி செய்கிறார்கள்.

### *Roads for Elagiri and Javvadu Hill areas*

*354*Q*.— THIRU B. VENKATASWAMY : **Will the Hon. the** Minister for Electricity be pleased to state :—

(*a*) whether there is any special scheme with the Goverrment to lay roads in the Hilly and forest areas like **Elagiri and Javvadu hills** in North Arcot district ; and

(*b*) if so, the details thereof ?



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ & இ) ஏலகிரி, சவ்வாது மலைகள், வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலைக் காட்டில், சாலைகள் போடுவதற்கு, தற்போது திட்டம் எதுவும் இல்லை. வட ஆற்காடு மாவட்டம் சவ்வாது மலைப் பகுதியில், பாமநந்தனில் இருந்து, மேல்பட்டு வரை ரூ. 4 இலட்சம் செலவில் 13·66 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை புதிதாகப் போடப்பட்டுள்ளது.

THIRU M. A. LATHEEF : Transportation and free movement of the people is not possible there and that is why there has been oft repeated demand on the part of the people there living in that area to construct new roads. If it cannot be taken up by the Public Works Department, it may be converted into highways and the Highways Department may be asked to accede to the demand. Will the Hon. Minister be pleased at least to accede to the demand of the Highways Department to take up this matter and do the work as their own ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, காட்டு இலாகாவில் இருந்து பொதுப்பணித் துறைக்கு மாற்றுவது பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் அதைப் பரிசீலிக்க முயற்சி செய்யலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is a sizable population in these hills with a number of villages which require the roads badly. The two hillse Elagiri and Javvadu has played a great role in history of ancient medieval and history of Tamil Nadu and they require a lot of improvement and hence, all these areas require improvement. May I know whether the Hon. Minister will take steps in consultation with the Public Works Minister to lay the roads and give other facilities in those areas ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற சாலைகளைப் பொறுத்தவரையில் சாலைகள் அமைப்பதில் குறைந்த செலவுள்ள முறையில் சாலைகள் அமைப்பதாக இருந்தால் காட்டு இலாக்கா மூலமாகச் செய்யப்படுகிறது. ஆனால் அதிகமான செலவு ஏற்படக்கூடிய சாலைகளாக இருந்தால் அவை பொதுப்பணித் துறையின் மூலம்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : இந்த ஜவ்வாது மலையிலே ஆலங்காயத்திற்கும் போளூருக்கும் இடையிலே உள்ள ஒரு சாலை காட்டு இலாகாவின் பராமரிப்பிலே இருந்து பழுதடைந்து விட்ட நிலைமைக்குப் போய்விட்டதால் இப்பொழுது ஜீப் போகக்கூடிய நிலைமையும் நின்றுவிட்டது. அதைப் பழுது பார்க்க வேண்டுமென்று பொது மக்கள் மனுச் செய்திருக்கிறார்களா ? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அந்தப் பணியை பொதுப்பணித் துறைக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விபரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை.

## மின்னல் வேகப் பேருந்துகள்

*339. வினா—திரு. என். கிட்டப்பா : திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

1972-73-ம் நிதி ஆண்டில் சென்னையிலிருந்து எந்தெந்த வழித்தடங்களில் மின்னல் வேகப் பேருந்துகளை விடுவதற்கு அரசு ஆலோசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1972–73-ம் நிதி ஆண்டில் சென்னையிலிருந்து புதிய வழித்தடங்களில் மின்னல் வேகப் பேருந்துகளை விடும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. பழைய வழித்தடங்களில் அவை ஓடுகின்றன.

திரு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பழைய வழித்தடங்களிலே] அவை ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றை விட வேகமாக—பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் போன்று—இருநூறு, முந்நூறு மைல்கள் தூரமுள்ள இடங்களுக்கு மின்னல் வேக பஸ்களை விட்டு 100 மைல்களுக்கு ஒரு முறை உள்ள இடங்களில் நிற்பதற்கு வசதி செய்து அதனுடைய வேகத்தை அதிகப்படுத்துவதற்கு, ஏற்ற முறையிலே மின்னல் வேக பேருந்துகளை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்னல் வேகப் பேருந்துகளைப் பொறுத்த அளவிற்கு 100 மைல்களுக்கு ஒரு இடத்திலே நிறுத்தப்படுகிறது. சென்னையிலிருந்து புறப்பட்டால் விழுப்புரத்திலேயும், திருச்சியிலேயும், மதுரையிலேயும் நிறுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் போன்று அதனுடைய வேகத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தில் ஓடுகிறது. ஆனால் மின்னல் வேகப் பேருந்துகள் தார் ரோட்டிலே ஓடுகின்றன. பல வண்டிகள் மட்டுமல்ல, பல வாகனங்கள், பல உயிரினங்கள் வருகின்றன வென்பதை மறந்துவிடக் கூடாது.

திரு க. உரொ. எட்மண்ட் : இந்த மின்னல் வேக வண்டிகளை விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் 450 மைல் தூரம் உள்ள ஊர்களுக்கு இந்த வண்டிகள் செல்லும் பொழுது 50 பேர்கள் செல்வது என்பது சங்கடமாக இருக்கும். மேலும் அந்த மின்னல் வேக வண்டிகள் எல்லாம் இரவு நேரங்களிலேதான் ஓடுகின்றன. எனவே பயணிகள் எல்லாம் இரவு நேரத்திலே கொஞ்சம் தூங்குவதற்கு வசதி செய்யக்கூடிய முறையிலே ஆசனங்களை சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?



மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மின்னல் வேக வண்டிகளைப் பொறுத்தவரையில் நல்ல வசதிகள் செய்யப்பட்ட இருக்கைகள் பொருத்தப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. படிப்படியாக அந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

திரு எண். கணபதி : தலைவர் அவர்களே, நம்முடைய மின்னல் வேக வண்டிகள் தரையிலேதான் ஓடுகின்றன. தரையிலேயும் இல்லாமல், தண்டவாளத்திலேயும் இல்லாமல் ஆகாயத்தில் விடுகின்ற முறையில் ஏர் பஸ்களை விடுவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நல்ல வேளையாக தண்ணீரிலே ஓடுகின்ற பஸ்களைப்பற்றிக் கேட்காது இருந்தாரே அதற்காக நன்றி.

திரு கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : மின்னல் வேக பஸ்கள் குறித்த இடத்திற்கு குறித்த நேரத்திலே போய்ச்சேரவேண்டுமானால் அந்த வண்டிகளை ஓட்டுபவர்களுக்கு நல்ல வசதிகள் இருக்க வேண்டும். வண்டிகளிலே லைட்டுகள் போதுமான அளவிற்கு வெளிச்சமாக எரியாததால் வேகமாக ஓட்ட முடியவில்லை யென்று சொல்கிறார்கள். அதைத்தவிர சில இடங்களிலே வைப்ரேட்டர் வேலை சரியாக செய்யவில்லை. எனவே இந்த நிலைமைகளை மாற்றி அந்த வண்டிகளை ஓட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய குறைகள் ஏதேனும் இருக்குமானால் அவற்றை அரசாங்கத்தின் போக்குவரத்துதுறை பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நிறைந்த வருமானத்தை ஈட்டித் தருகின்ற திருப்பதிக்குப் போகின்ற வண்டிகளை, மின்னல் வேக வண்டிகளை ஆந்திர மாநிலம் தான் ஓட்டிக் கொண்டிருக்கிறது. மின்னல் வேக வண்டிகளை ஊத்துக்கோட்டை, பெரிய பாளையம் வழியாக திருப்பதிக்கு விட்டு நிறைந்த வருமானத்தை ஈட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : திருப்பதிக்குப் போக வேண்டிய பேருந்துகள், ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் வழியாகப் போனால் மின்னல் வேக பஸ்களாக எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. ஆந்திர மாநிலம்தான் அந்தப் பகுதிக்கு பஸ்களை விடுகிறார்கள், நாம் விடவில்லை என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அவர்கள் 6 வண்டிகளை விடுகிறார்கள், நாம் 6 வண்டிகளை விடுகிறோம். எனவே சரியான முறையில் தான் ஒப்பந்தம் செய்து கொண்டு பேருந்துகளை விட்டு வருகிறோம்.

திரு நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மதுரைக்கு மின்னல் வேக வண்டிகள் 9 மணி நேரத்தில் ஏற்கெனவே

போய்க் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, 10 மணி நேரத்திலே செல் கிறது. அதை 9 மணி நேரமாக ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சென்னை யிலே இருந்து திருச்சி செல்வதற்கு 6½ மணி நேரம் ஆகிறது. ஆகை யினாலே மதுரைக்கு 9½ மணி நேரம் ஆக்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

அரசுப்போக்குவரத்துத்துறை பணி மனைகளில் சோதனைக் கூடங்கள்.

* 340. வினா—திரு எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அரசுப் போக்குவரத்துத்துறை பணிமனைகளில் "ஓட்டுனர்" டெஸ்டிங் கிளினிக்குகளை அரசு ஏற்படுத்துயுள்ளதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை.

THIRU M. A. LATHEEF: In view of the large scale accidents that are reported now, is it not essential that such testing clinics are provided in the Government workshops, so that the drivers may be properly examined and such recurring accidents may be prevented?

THE HON. THIRU S. RAMACHANDRAN: The Government is already seized of this matter and we would like to have a separate training institution for the drivers wherein the drivers can not only be trained, but also tested with a vision test, a reaction time test and medical test to enable them to minimise the number of accidents.

திரு எம். தேவராசன்: தலைவர் அவர்களே, பஸ்களிலே அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க ஜப்பான் நாட்டிலே டிரைவர் சீட்டுக்கு முன்னால் அவர்களுடைய குடும்பத்தாருடைய படத்தை வைத்திருக்கிறார் கள். அந்த முறையை நாமும் கையாண்டால் அவர்களுடைய மனைவி மக்களின் படத்தைப் பார்க்கிறபோது நல்ல முறையிலே விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா? அந்த முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டிலே டிரைவர்கள் எல்லாம் தொழில் நுட்ப வல்லுநர்களாக எஞ்சினியர்களாக இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்ற தகுதியை வைத்திருக்கிறோம். ஆகவே டிரைவர்களுக்கு நல்ல முறையிலே பயிற்சி அளித்து விபத்துக்களைத் தடுக்க முடியும் என்று கருதுகிறேன். குடும்பத்தாருடைய படத்தை



முன்னாலே மாட்டினால் விபத்துக்கள் குறையுமா அல்லது அதிகமாகுமா என்பது அவரவர்களுடைய குடும்பத்தினுடைய நிலையைப் பொறுத்துத் தான் அமையும்.

திரு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, குடும்பத்தாருடைய போட்டோக்களை வைத்தால் விபத்துக்கள் குறையும் என்று சொன்னார்கள். குடும்பம் இல்லாதவர்கள் யாருடைய போட்டோவை வைத்துக் கொள்ளுவது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவரவர் களுக்குப் பிடித்தமான போட்டோக்களை வைத்துக் கொள்ளலாம்.

திரு கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, தண்ணீரில் செலுத்து கின்ற பஸ் இருப்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஹூவர்கூப்பர் என்ற தண்ணீரில் செலுத்துகின்ற பஸ் வெளிநாடுகளில் இருக்கின்றது. அந்த மாதிரி பஸ்களை கிழக்குக் கடற்கரையில் விட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: முதலில் தரையில் ஓடுகின்ற பஸ்களைப் பற்றிக் கவனிப்போம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு தொ. பா. சீனிவாசன்: தலைவர் அவர்களே, அடிக்கடி விபத் துக்கள் குடிப்பழக்கம் உள்ள டிரைவர்கள் இருப்பதால் ஏற் படுகிறது என்று சொல்லப்படுகின்றது. ஆகவே குடிப்பழக்கம் உள்ள டிரைவர்களுக்கு லைசென்சுகளை ரத்து செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விபத் துக்களைப் பொறுத்தவரையில், டிரைவர்களின் குடிப்பழக்கத்தால் மட்டும் ஏற்படுகின்றது என்று கொள்ளுவது சரியானதல்ல. சாலைகளின் விதி களை சரியாகப் பின்பற்றாத காரணத்தாலும், அதே போன்று பல்வேறு வகையான வண்டிகள் நம்முடைய சாலைகளில் செல்லுகின்ற காரணத் தாலும், அதுமட்டுமல்லாமல் டிரைவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நீண்டநேரம் வேலை செய்யவேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் விபத்துக் கள் ஏற்படுகின்றன. ஆகவே டிரைவர்களின் குடிப் பழக்கத்தால் மட்டும் ஏற்படுகிறது என்ற கருத்து சரியானதல்ல. இருந்தாலும் டில்லி யில் நடைபெற்ற அனைத்திந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் பிரத்திலைசர் (Breathyliser) என்ற கருவி மூலம் குடிப்பழக்கத்தில் இருக்கும் டிரைவர்களைக் கண்டுபிடிக்க முடியும் என்றும், அந்தக் கருவியை நம் நாட்டிலேயே செய்ய முடியும் என்றும், அதைப் பயன்படுத்தி டிரை வர்களைக் கட்டுப்படுத்த முடியுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[1973 மார்ச் 13

அறநிலையங்களால் நடத்தப்பட்டுவரும் மருத்துவ மனைகள்

*355. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்கு விடை யளிப்பாரா?

தமிழ்நாட்டில், இந்து அறநிலையத் துறையினரால் நடத்தப்பட்டுவரும் சித்த வைத்திய சாலைகளில் B. I. M. பட்டம் பெற்ற வைத்தியர்கள் எத்தனை பேர் பணியாற்றி வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நான்கு பேர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. சொ. காவேரி மணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான பயிற்சி நிலையங்கள் நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? அவ்வாறு உள்ள பயிற்சி நிலையங்கள் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பயிற்சி நிலையங்களைப் பற்றி அல்ல கேள்வி. சித்த வைத்திய சாலைகளைப் பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள், மொத்தம் கோவில்கள் சார்பில் நடத்தப்படு கின்ற சித்த வைத்திய சாலைகள் 18 ஆகும். சென்ற ஆண்டு 26 மருத்துவ மனைகள் துவங்க வேண்டும் என்று துறையிலிருந்து அனுமதி கொடுக்கப் பட்டிருந்தாலும், நான்கு மருத்துவமனைகள்தான் கோவில்கள் சார்பில் துவக்கியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அதிகப்படியாக துவங்க ஏற் பாடுகள் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, அறநிலையங்களிலிருந்து நடத்தப்படும் மருத்துவமனைகள் நான்கு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவை எங்கெங்கு இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான்கு என்று சொல்லவில்லை. 18 என்று சொன்னேன். 1972-ல் ஆரம்பிக்கப் பட்டது நான்காகும். அவை தஞ்சை மாவட்டத்தில் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவமனைகளுக்கு ஆகும் செலவை முழுக்க முழுக்க அற நிலைய பாதுகாப்பு இலாக்கா ஏற்றுக்கொள்ளுகிறதா அல்லது மருத்துவ இலாக்கா விலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோவில் நிதியிலிருந்துதான் செலவு செய்யப்படுகிறது.



1973 மார்ச் 13]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டாரிடம் ஏராளமாக பணம் இருக்கிறது. ஆதலால் இந்த மருந்தகங்கள் அவர்கள் நடத்த ஏதாவது ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எதிர்காலத்தில் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவ மனைகள் பழைய காலத்திலிருந்திருக்கின்றன. இதனால் எந்த வியாதிகள் தீர்க்கப்படுகின்றன என்று மக்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. எனவே முதலில் அதுகுறித்து மக்கள் அறிவதற்கு போதிய விளம்பரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே விஷயம் அறிந்தவர் ஆதலால், அவரே இந்தப் பணியைச் செய்தால் நலமாக இருக்கும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற நேரத்திலே 18 இடங்களிலே சித்த மருத்துவ மனைகள் நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள். நான்கு இடங்களில் பி. ஐ. எம். பட்டம் பெற்றவர்கள் மருத்துவர்களாக இருப்பதாகச் சொன் னார்கள். மற்ற மருத்துவ மனைகளை யார் கவனித்துக்கொள்ளுகிறார்கள் ? தகுதியில்லாதவர்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மற்ற மருத்துவ மனைகளில் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தகுதியில்லாதவர்கள் என்று சொல்லமுடியாது. ஏற்கெனவே பல ஆண்டுகளாக அந்தத் துறை யில் பயிற்சி பெற்றவர்கள்தான் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். சமீபத்தில் திண்டுக்கல்லுக்குப் பக்கத்திலிருக்கிற கோவிலில் நீண்ட நாள் அனுபவம் பெற்ற மருத்துவரைத் தான் சித்த வைத்தியராக நியமித்திருக்கிறார்கள். நாள்தோறும் நூற்றுக் கணக் கான நோயாளிகள் அங்கு வந்து சிகிச்சை பெற்று செல்லுகிறார்கள். 1971-ம் ஆண்டுக்கு முன்னால் சித்த வைத்திய துறையில் பட்டம் பெற்றவர் கள், அவர்கள் கோவில்களிடத்தில் மனுச் செய்துகொண்டார்கள். அவற் றைப் பரிசீலித்து புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நான்கு மருத்துவ மனைகளில் அத்தகைய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள் விடைகள் முடி வுற்றன.

---

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## 3 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு - தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மருத்துவ மானியக் கோரிக்கையை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்..........

## 2 நடைமுறைக் கேள்வி

### தமிழரசுக் கழக உறுப்பினருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே. ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களில், எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நம் எதிரே இருக்கின்ற முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னத்தில் வெற்றி பெற்ற நண்பர் திரு. தியாகராசன் என்பவருக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் தமிழரசு கழகத்தின் சார்பில் இந்த மன்றத்தில் இருக்கிறார் என்று நீங்கள் சொல்லுவீர்களேயானால், இந்த மன்றத்தில் குடியரசு கட்சியின் சார்பில் இருந்த ஒரே உறுப்பினரான திரு. கே. பி. எஸ். மணிக்கு பின்னால் இடம் ஒதுக்கப்பட்டது. ஆகவே, திரு. தியாகராசன் அவர்களுக்கு எந்த அடிப்படையில் முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உதய சூரியன் சின்னத்தில் வெற்றி பெற்றவர் தியாகராசன் மாத்திரமல்ல. நண்பர் அவர்களும் இந்தச் சின்னத்தில்தான் வெற்றி பெற்றார் என் பதை மறந்திருக்க மாட்டார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே சோஷலிஸ்டு கட்சியின் சார்பில் திரு. நல்லசிவம் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் ஒருவராக இருந்த நேரத்தில் கூட முன்வரிசையில் அவருக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஒரு சஜஷன் கொடுக்க விரும்புகிறேன். உண்மையாக எதிர்கட்சியிலிருப்பவர்களுக்கு முதல் வரிசையில் இடமும், தோழமை கட்சியைச் சேர்ந்த ஆளுங்கட்சி சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பின் வரிசையில் இடமும் ஒதுக்கப்பட்டால், பின்னால் இருக்கிற உபதலைவர்களுக்கு முன் வரிசைக்கு வர வாய்ப்பிருக்கும். இந்த சஜஷனை தயவு செய்து அரசு ஆலோசிக்குமா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படி போகமாட்டார்கள் யோசிக்கின்ற நேரத்தில், அவர்கள் வேறு கட்சிக்கு போகமாட்டார்கள் என்ற உறுதியை, நம்பிக்கையை நாங்கள் பெற்றால், அந்த அடிப்படையில் யோசிக்கலாம். (கரவொலி)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிடக் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வந்தவர் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுவார் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் அதற்கும் பதில் சொல்லவிரும்புகிறேன். இங்கே மன்றத்தில் நாம் சட்டமன்ற கட்சிகளைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். திராவிட கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியபோது கொள்கைகளை நாங்கள் விட்டுவிட்டுவரவில்லை. இரட்டைக் குழல் துப்பாக்கி என்று சொல்லிவிட்டு வந்தோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாக இரண்டு பேர்கள் முன் வரிசையில் இருக்கிறோம். நானும், எங்களுடைய சட்டமன்ற கட்சியின் துணைத் தலைவர் திருமதி ஜோதி அம்மையார் அவர்களும் இங்கே முன் வரிசையில் இருக்கிறோம். மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற எதிர்க்கட்சி என்ற முறையில் எங்கள் இரண்டு பேருக்கும் முன் வரிசையில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை இது மற்ற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் உணர்ச்சிகளைப் பாதிக்கிறது என்று அவர்கள் கருதினால், வேறு பக்கம் எங்களுக்கு இடம் கொடுத்தாலும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஜனநாயக முறைப்படி நாங்கள் இங்கே இந்த வரிசையில் இடம் பெற்றிருக்கிறோம். ஒருவேளை எங்களுடைய கட்சி எண்ணிக்கையில் குறைந்து போனாலும், நாங்கள் வேறு பக்கத்திற்குச் செல்ல தயாராக இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன் (ஆரவாரம்).

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த இடம் ஒதுக்குவது என்பது தலைவர் அவர்களுக்கே உரித்தான டிஸ்கிரிஷனரி பவராகும். மற்றவர்கள் வேண்டுமானால் ஆலோசனை சொல்ல உரிமை இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாத ஒன்று. இந்த நிலையில், டிஸ்கிரிஷனரி பவரை தலைவரவர்கள் தம்முடைய இஷ்டப் பிரகாரம் உபயோகப்படுத்த வேண்டுமா, அல்லது அதற்கு வரைமுறை, சட்ட திட்டங்கள் வேண்டுமா என்பதை முதலில் முடிவு செய்து கொண்டால், இந்தப் பிரச்சினைக்கு இடம் இருக்காது. விதிமுறைகள் இல்லாத நேரத்தில் இந்த விவாதத்தை இங்கே எழுப்புவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அவர்களே பதில் சொல்லி விட்டார்கள்

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை
மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்
களுக்கு வீட்டு வசதி அளிக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 17—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ்
ஒதுக்கப்படுகின்ற ரூ. 24,29,47,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

## கோரிக்கை எண் 18—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆளுநர்
அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்
மொழிகிறேன் :—

" நிதிக் கோரிக்கை எண் 18—பொதுச் சுகாதாரம் என்ற
தலைப்பின் கீழ் ரூ. 17,53,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு
வழங்கப்பட வேண்டும்."

THIRU K. S. KOTHANDARAMAIH : Sir, I move the follwoing cut-motion: to discuss about providing more medical facilities in rural areas:—

" That the allotment of Rs. 17,53,30,000 under Demand No. 18—Public Health be reduced by Rs. 100 ".

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need to improve the sanitary and hygienic conditions of the slums in the State:—

" That the allotment of Rs. 17,53,30,000 under Demand No. 18—Public Health be reduced by Rs. 100 ".

திரு கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படங்களைத்
தடுப்பதற்கு ஏதுவாக, அதிகக் கண்காணிப்பையும் குற்றவாளிகளுக்குக்
கடும் தண்டனையும் அளிக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து
விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 18—பொதுச் சுகாதாரம்—என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 17,53,30,000-ல் ரூ. 100 குறைக்க
வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion to discuss about the need to provide sanitary and drainage



facilities in all pilgrim centres of Tamil Nadu:—

" That the allotment of Rs. 17,53,30,000 under Demand No. 18—Public Health be reduced by Rs. 100 ".

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss about the short-term course required, for giving training to Health Inspectors who detect food adulteration cases:—

" That the allotment of Rs. 17,53,30,000 under Demand No.—18 Public Health be reduced by Rs. 100. "

திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, " இராஜபாளையம்
அரசு மருத்துவ மனையை ஒன்றிய ஊராட்சி சேத்தூர் உள்வட்டம்,
மேற்கொண்டு விரிவு படுத்தத்தவறியது குறித்து விவாதிக்க—

" நிதி கோரிக்கை எண். 18—பொதுச் சுகாதாரம்—என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ.17,53,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்,*
வெட்டுத் தீர்மானங்களும் அவையின்முன் விவாதத்திற்கு வந்திருக்
கின்றன.

THIRU M. A. LATHEEF : Sir, let me at the outset congratulate the Tamil Nadu Government for having provided my constituency, Vaniyambadi, with a modern hospital. I also congratulate the Hon. Minister for Health on behalf of the people of my constituency for the same. The Hon. Minister has rightly pointed out in the note submitted to this House what the Health Department does to the people. I wish to point out that besides providing the basic medical facilities to the people, besides providing much attention to the care of the physical aspect of human nature, we must also pay attention to the psychological aspect. Proper attention has not so far been paid to this basic aspect in human life, i.e., the various psychological and psychic feelings of human-beings.

Ultimately, it is these psychological instincts which lead towards so many perversions in human life and because of these perversions, human beings indulge in such behaviour which ultimately result in physical complications. Thereforeo, the physical complications if they are to be properly remedied, then we must devote sufficient attention to see that the psychological aspect is taken care of properly and there

* மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய கோரிக்கைகள் மீதான
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரது உரை 112-221 பக்கங்களில்
இணைப்புகள்....II, III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

should be a separate wing in every major hospital, at least the Distric Headquarters Hospitals in the State to treat the patients who are suffering from psychic perversions. That is my one suggestion.

Then with regard to the cut motion that has been moved by the Hon. Member belonging to my party, it is now a complaint on the part of the Muslim population of this State that proportional representation that should be given to the students belonging to my community is not being given now. Even as per the present population in this State, I submit that the number of Muslim students should be selected for the Medical Course should not be less than 103. I may submit for proper calculations, that out of 1,500 students who are selected for, particularly the M.B.B.S., course, there should at least be 103 candidates from my community. During the chiefministership of late lamented our great leader, Perarignar Anna, Anna devoted much attention to this Muslim grievance and he gave sufficient representation to the Muslim population of this State. That number is being every year reduced now. I do not know on what basis. Of course, I do not attach any motive to the Government. But it does happen because of the way in which candidates are selected and because of the method of selection as such, Muslims are weeded out, in spite of their equal competency and in spite of their getting proper marks and proper grades. But somehow they are weeded out. I request the Hon. Minister to see that at least hereafter 103 Muslim boys are selected for the M.B.B.S., course.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the Hon. Member says that the total number of admissions for Medical Colleges is 1,500 ; it is not so ; it is only 1,015 seats ; out of this 1,015 seats, for Scheduled Castes and Scheduled Tribes candidates some seats are reserved according to the percentage stipulated for them and also there are 10 per cent graduates ; therefore, the actual admission in general, both for the Muslims as well as the other communities will be only about 750 seats.

THIRU M. A. LATHEEF : Thanks for the clarification by the Hon. Minister. Even if the admission is only 800and odd, even then, the Muslim(s) must get as their due share about 88 seats in the M.B.B.S., course. I hope the Hon. Minister will give serious consideration to the representation that I make on the floor of this House, and I make this representation for the serious consideration of the Government of Tamil Nadu.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the hon. Member is an able advocate and also one who has expertise in the Constitution of the country. There cannot be any specific number being given fos any particular community or particular religious group, even if it comes



under the backward community. Even then it is a general pool for the backward communities. The total number reserved are given. For the Scheduled Castes and Scheduled Tribes a fixed number of seats are given. Therefore, for Muslims or Christians no demarcation is possible. However candidates from every district and every area which is backward as far as possible will naturally get representations and in the last two years, the number of seats given to them is 44 to 48.

THIRU M. A. LATHEEF : Sir, the Hon. Minister has driven me to the necessity of giving an explanation. We claim this right on the guarantee given in the Constitution. If they argue that no seat reservation can be made as it may be against the provision of the Constitution, we will also argue that the reservation made for the Scheduled Castes and Scheduled Tribes is also alien to the genius of the Indian Constitution. Therefore, in a country where people, a larger section of the people, are depressed and oppressed and rendered backward and most backward, it is but right and proper that as per the directive principles of the Consitution and the spirit of the Constitution, that section of the people who have been rendered backward are brought forward. Unless and until the State comes forward to patronise them and encourage them, they cannot prosper. If that is not possible, what can we say ? It is only on that basis I claim this right, not otherwise and not at the cost of the other people, the Muslims would ever demand anything. That is my submission.

With regard to indigenous systems of medicine, even last year it was submitted to the Government and I am very happy that the Government is devoted to the development of these systems of medicine which have been proved to be more effective and useful than the other system, namely, the allopathic system. We have given sufficient attention to Siddha system and the Ayurveda system . At the same time, the Government of Tamil Nadu no doubt is encouraging the Unani system also. But the method in which the Unani system is being populasrised is not according to the need and according to the wishes of the people who are connected with that particular system. The system has been found to be very very effective and very useful as the other two systems. Therefore equitable consideration or equitable attention and equal concern should be paid towards the development of all these three important indigenous systems of medicine. That is my submission.

With regard to adultration of drugs , so many complaints have been made and even recently what happened was that some medicines were administered to the people which ultimately proved to be poisonous. How these things can happen and now these medicines come to the market ? Therefore, some very effective measures are to be contrived

so that such unscrupulous people who just go on dumping these things in the market and minting money are checked. By dumping in the market adulterated drugs in the market, these people cause great damage to the life of the people and also to the health of the people. I request that sufficient steps be taken to check these people and prevent harm being done to the people.

With regard to the appointments made in the medical field I submit, Sir, to the Hon. Minister that whilemaking appointments,doctors belonging to my community may also be given their due share; for it is now proved that there are many doctors in the field who are very competent, experienced and have a long record of good service in the medical field. In spite of all that, we receive complaints—we do not know on what basis and we do not attach motive to the Government, the Government is not responsible, we understand but—we do receive complaints that members belonging to the Muslim Community are not given their due share and their rights are not safeguarded. I submit that while promotions are given as Heads of Departments or while appointing other medical officers, the Muslims also may be given some due representation in the field of appointments.

**The Hon. Thiru K. ANBAZHAGAN:** Mr. Deputy Speaker, Sir, the Director of Health Services until three years before, was a Muslim lady. The Dean of the Madurai Medical College is Dr. Kabir, a Muslim. The Professor of the E.N.T. Department in the Stanley Medical College is a Muslim. The Deputy Director of Health Services who is in charge of E.S.I. is a Muslim and therefore Muslims are there; these Muslims are there not because they are Muslims, but because they are either seniors or experts in the field. There may not be suitable people available for all jobs in the different departments.

**Thiru M. A. LATHEEF:** What I submit is this. I do not deny the graciousness and generosity and the great accommodation that is shown to the Muslim population by this Government. But this accommodation should not only be confined to the higher strata of the departments, but it should be extended to the other strata, at the district level and also in the various units that are there in the department. That is my submission. Their cases may be considered on the basis of their competence and with due regard to Muslim representation.

முற்பகல் 10-30

With regard to the constituency to which I belong, I submit that my constituency is largely comprised of hill areas which are very intractable areas. People have no easy access to the places where they can get medical facilities. Considerable number of people are living in Javadu hills. They are having a Primary Health Centre at Alangayam, but they have no easy access to Alangayam. The Hon. Minister [illegible] consider whether it is possible to have atleast a Primary Hea[illegible]



or a Clinic at Pudur Nadu in Javadu Hills which is in the centre of the Javadu Hills. As the hill tribe live in Pudur Nadu the clinic may be started there.

We are having what is called at present mobile hospitals. Of course for a hospital to be mobile or to effect mobility and free movement, there should be roads. That is why we have been pleading with the Hon. Minister for Public Works and Hon. Minister for Forest that there should be roads in Javadu Hills, so that the modern development that has taken place in other areas may also be effected in Javadu Hills. Therefore, it is not sufficient if they have a mobile hospital which rarely goes to these areas. Even once in a week they do not go. Of course, on record it will be shown that they have gone to the Javadu Hills. It is not the fault on the part of the doctors because they cannot go there and even vehicles cannot move in that area. Therefore, instead of having a mobile hospital there and a Primary Health Centre at Alangayam, the Hon. Minister should consider that there should be a clinic at least in Pudur Nadu or Pungampattu Nadu or somewhere in Kavalur in Javadu Hills. That is my submssion to the Government.

In the constituency represented by my learned friend Thiru Wahab, there is the Government Hospital at Wandiwash. In Wandiwash hospital for a number of months there is no lady doctor, even though there are considerable number of lady patients. Of course, ladies are more prone to some diseases which should be looked after only by lady doctors. Without a lady doctor the ladies living in that area do suffer very much and in spite of repeated demands, their demand has not been acceded to. I submit to the consideration of the Hon. Minister that proper and immediate action may be taken in that behalf.

**The Hon. Thiru K. ANBAZHAGAN:** Action has already been taken. The department has posted two lady doctors one after another. But because they are not willing to go and serve in that area, they have applied for leave and they have not joined. They are in a different region. Further, the department will continuously try to post some X or Y, so that some lady doctor can go and join there on duty.

<u>திரு. கே. ஏ. வகாப்</u>: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் வாரத்திற்கு ஒரு டாக்டர், 15 நாட்களுக்கு ஒரு டாக்டர் வந்துகொண்டிருக்கிறார், போய்க்கொண்டிருகிறார். அங்கு பெண்கள் அதிகமாக வருகின்ற காரணத்தால், 500-க்கு மேற்பட்டு வருகின்ற காரணத்தால் பெண் டாக்டர் இல்லாமல் அவர்கள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்கள் கிராமங்களில் இருக்கப் பிரியமில்லாமல் நகரங்களையே கேட்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட கிராமப் புறங்களிலும் அவர்களை வற்புறுத்தி இருக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

[1973 மார்ச் 13

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கிராமப் புறங்களில் பணியாற்ற அடியோடு யாரும் மறுப்பதில்லை. அவரவர்கள் விரும்புகிற மாவட்டங் களிலுள்ள கிராமப்புறங்களில் பெற்றோர்கள், உறவினர்கள் இருக்கும் கிராமப் புறங்களில் பணியாற்ற அவர்கள் விரும்புகிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வந்தவாசிப் பகுதியில் பணியாற்ற விரும்புகிற ஒரு பெண் டாக்டர் பெயரைச் சொல்வார்களானால், ஒரு வாரத்திற்குள் அவர் அங்கு அனுப்பப்படுவார்.

THIRU M. A. LATHEEF : I thank the Hon. Minister for the explana- tion given by him. Various provisions have been placed on the statute book and the rules governing the drugs and medicines. Of course, these rules are themselves the outcome of the malpractices carried out by big merchants who manufacture drugs and medicines. Because of the enforcement of these rules, incidentally small merchants who are not responsible for such adulteration are teased. Therefore, a happy method should be so contrived as not to affect the small drug-sellers who are not responsible for such adulteration. That is my submission.

Ultimately what I feel is, that there should not be any disturbance in the normal work of the medical clinic. I am sorry a very deplorable factor is developing in our State. Even responsible people like doctors who are intended to serve the cause of the public and who are considered to be sacrificing themselves for upholding the dignity and the physical aspect of the people and to keep the health of the community in tact, indulge in things like strikes. Every week we hear that this hospital is closed and in that hospital patients are suffering and in a particular hospital doctors are on strike. This is not the way in which people who are devoted for the cause of the community should act. I feel very much that this should not be done. There are certain fields which are called the social-head fields where social-head facilities are provided to the community. People who work in those fields should have the utmost sense of responsibility to uphold the cause of the community in this State or elsewhere, Wherever they may be. Doctors, teachers and such people who have to formulate the ideas of the community and to keep the community healthy and sound are prone to certain suscepti- bilities which we expect only from such people who indulge in trade union activities. Doctors and teachers who give their experience and knowledge and service to the community should not indulge in such strikes. I request the Hon. Minister to see that recurrence of such inci- dental and accidental strikes does not happen. We must see that such strikes are not conducted by doctors and teachers. That is my last request to the medical field. People suffer ultimately. With these observations I thank you, Mr. Deputy Speaker for having given me this opportunity. I fully subscribe to the views expressed by the Hon. Minister for Health in the note given to the Members and I sit supporting the Demand moved by the Hon. Minister.



1973 மார்ச் 13]

திரு. இரா. நைனுமலை : மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மருத்துவ மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

இந்த மருத்துவ மானியக் கோரிக்கையின்மீது இந்த ஆண்டு ஒதுக்கப் பட்டத் தொகையானது சென்ற ஆண்டை விடக் கூடுதலாக இருக்கிறது. 1972-73க்கு மருத்துவத் துறைக்கும் நலத்துறைக்கும் ஒதுக்கப்பட்டிருந்த தொகை 38 கோடி 91 லட்சமாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு அது 41 கோடி 17 லட்சமாக உயர்ந்திருக்கிறது. கல்விக்கு அடுத்தபடியாக மிக அதிகமாக மானியத்தை பெறக்கூடிய துறை இந்தத் துறை என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் துறைக்கு கல்விக்கு அடுத்தபடியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தை பார்க்கும்போது இந்தத் தமிழக அரசு இந்தத் துறைக்கு எவ்வளவு அக்கரை செலுத்திக்கொண்டிருக்கிறது, எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பது தெரிய வரும். மக்களுடைய நலனில் இந்த அரசு அக்கரைக் கொண்டிருக்கிற காரணத்தாலே இந்தத் துறையில் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு இந்தத் தொகை குறைவாக இருந்தாலும் கூட மிக பெரிய அளவிலே திட்டங்களையெல்லாம் தீட்டி அவைகளை படிப்படியாக ஆண்டுதோறும் செயல் படுத்திக்கொண்டு வருகிறது.

இத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை மக்களின் எதிர் காலத்திற்கு அவர்களின் நல்வாழ்விற்கு மக்களின் ஆரோக்கியத்திற்கு, எதிர்கால இந்தியாவின் நலனுக்கு இவற்றிற்கு மிகப் பயன் உள்ள ஒரு முதலீடாக இருக்கிறது. இந்த அளவில் இந்த மானியம் போது மான அளவிலில்லை என்று சொன்னேன். ஆனால் தமிழகத்தில் உள்ள நான்கு கோடி 11 லட்சம் பேர்களுக்கு 41 கோடி ரூபாய் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. கிட்டத்தட்ட தலைக்கு 10 ரூபாய் வீதம் இந்த அரசாங்கம் ஆண்டுதோறும் அவர்களுக்காக செலவு செய்துவருகிறது. அதை இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழக அரசின் குறைந்த நிதி நிலையைக் கொண்டு இதற்கு அதிகமாக செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது ஆகவே நல்ல மனோபாவம் உள்ளவர்கள், நிதி படைத்தவர்கள், வசதி உள்ளவர்கள் இவர்கள் எல்லாம் இத்தகைய காரியங்களுக்காக அரசாங்கத்தின் இத் தகைய முயற்சிகளுக்கு அவர்கள் தாங்களாகவே, முன்வந்து உதவி செய்வார்களேயானால் அது மிகச் சிறந்த நல்லதொரு பணியாக, நல்லதொரு கொடையாக இருக்கும்.

இந்த வகையில் இப்போதுகூட அமைச்சரவர்களால் கொடுக்கப் பட்டுள்ள இந்த விவர அறிக்கையில் மதுரையிலுள்ள டி. வி. எஸ். நிறுவனத்தினர் ஐந்து லட்சம் ரூபாய்க்கு அங்கு மதுரையில் ஒரு கிளை மருத்துவ மனையை நிர்மாணிப்பதற்காக அத் தொகையைத் தந்திருக்கிறார்கள் என்று சொல்கிற நேரத்தில் அத்தகைய கொடை யாளிகளையெல்லாம் நாம் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறோம். அதே போல் பொது மக்களும் தாங்களாகவே முன்வந்து இத்தகைய கொடைகளை வழங் குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது தமிழக

அரசு கூட இத்தகைய காரியங்களுக்காக, இதற்காக இன்று தனி ஒரு வரி போட்டுக் கூட அதை மக்களிடத்தில் இருந்து வசூலிப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

இந்த அறிக்கையில் பல புதுத் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு புதிதாக கரூரில் 24 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையை தொடங்க இருக்கிறார்கள். அதே போல் வாணியம்பாடியில் 24 படுக்கைகளைக் கொண்ட ஒரு புது மருத்துவ மனையைத் தொடங்க இருக்கிறார்கள். அதேபோல் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் 30 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டை கட்டுவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அங்கு 100 படுக்கைகளைக் கொண்ட ஒரு வார்டை கட்ட ஏற்ப்பாடு செய்திருக்கிறார்கள். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 147 படுக்கைகள் கொண்ட வார்ட் ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 5 தாலுக்கா மருத்துவ மனைகளில் ஈ. ஸி. ஜி. போன்ற கருவிகளை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல் பத்து தாலுக்கா மருத்துவ மனைகளில் எக்ஸ்-கதிர் யூனிட்டுகள் அமைப்பதற்காக அங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ராசிபுரம் தாலுக்கா மருத்துவ மனையில் ஒரு எக்ஸ்-கதிர் யூனிட்டு கொடுப்பதற்கு அரசு முன் வந்ததற்காக ராசிபுரம் தொகுதி மக்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, மருத்துவத் துறையில் மருத்துவப் பட்டதாரிகளுக்கும் மற்ற துணை மருத்துவர்களுக்கும் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்காக கடந்த ஆண்டு 1972-73-ல் 280 மருத்துவப் பட்டதாரிகளுக்குப் புதிதாகப் பதவிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல் இந்த ஆண்டு 1973-74-இல் 122 உதவி அறுவை மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் வகையில் பதவிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. 72 சிவிலியர்கள், 27 மருந்து ஆக்குநர்கள், 10 பல் மருத்துவர்கள் என்று புதிதாக பதவிகள் உண்டாக்கப்பட்டிருக்கிறன. அதே போல் ஹவுஸ் சர்ஜன்களுக்கு ஏற்கெனவே அவர்களுக்கு கொடுத்துவந்த ரூ. 175 என்பதை ரூ. 200 ஆக ஆக்கி அதுவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்தத் துறையில் ஆண்டு தோறும் புதிதாக வரக்கூடிய பட்டதாரிகளுக்கும் டிப்ளமா ஹோல்டர்களுக்கும் இத்தகைய புதிய பதவிகளை ஏற்படுத்தி அவர்களுக்குச் செவ்வாய் வேலைவாய்ப்பினை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே இந்த அரசைப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்று மருத்துவப் பட்டதாரிகள் 500, 600-க்குமேல் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதேபோல் பெண் மருத்துவ பட்டதாரிகளும் கணிசமான அளவு தொகை 120 பேர்களுக்கு மேல் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் இந்தத் துறையிலும் வந்துவிட்டது. எனவே இந்த நிலையில் தொடர்ந்து நாம் மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் 1,000-க்கு மேற்பட்டவர்களைச் சேர்த்துக்கொண்டே போனால் (மணியடிக்கப்பட்டது). இந்த நிலைமை நீடிக்குமானால் எதிர்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப்



பயங்கரமான முறையில் இத் துறையிலும் உருவெடுக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது அந்த எண்ணிக்கையை கணிசமான அளவில் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையில் மாணவர்களின் படிப்பின் தரத்தையும் நாம் உயர்த்த வேண்டும். இடைக்காலத்தில் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற முறையில் அந்த மாணவர்களுடைய தரம் ஓரளவிற்கு குறைந்துவிட்டது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆகவே அவர்களின் தரத்தை உயர்த்துவதற்காக நான் சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டு திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் அழைக்கப்பட்டார்.)

திரு சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, இன்று இந்த அவை முன் இருக்கும் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தத் துறையை நல்லமுறையில் நிர்வாகம் செய்து வரும் நமது அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் துறையில் உள்ள அரசு அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் என் மனதில் உள்ள சில எண்ணங்களையும் இந்த நேரத்தில் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கடந்த காலத்தில் நமது மருத்துவத் தொழில் எப்படி இருந்தது, அப்போது அத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் எத்தகைய உணர்வுடன் இருந்தார்கள் என்பதையும் இப்போது வர வர மருத்துவத் துறையில் இருக்கக்கூடிய டாக்டர்கள், புதிதாக இந்தத் தொழிலுக்கு வருகிற டாக்டர்கள் எந்த முறையில் பிரச்சினைகளை அணுகுகிறார்கள், எத்தகைய உணர்வுடன் இருக்கிறார்கள் என்பதையும் பார்த்தால் வரவர பல வித்தியாசங்கள் இருப்பதை நான் நேரில் காண்கிறேன். முக்கியமாக அந்தக் காலத்தில் டாக்டர்கள் என்றால் மருத்துவத் தொழில் என்றாலும் அதை ஒரு புனிதமான தொழிலாக, மக்களுக்கு சேவை செய்ய கிடைத்துள்ள அரிய பெரிய வாய்ப்பாக நினைத்து அந்த அளவில் அவர்கள் பணியாற்றி வந்தார்கள். அத்தகைய மனோநிலையைக் கொண்ட பல பெரிய டாக்டர்கள் நம் மருத்துவத் துறைக்கு பெரும் புகழும் தேடித் தந்திருக்கிறார்கள். ஆனால் சமீப காலங்களில் வரக்கூடிய டாக்டர்கள் இந்த மருத்துவத் துறையை ஒரு வாணிபத் துறையாக, இதை ஒரு பொருள் ஈட்டும் துறையாக கருதக் கூடிய மனோநிலை இன்று பயிற்சி பெற்று வரும் டாக்டர்களிடம் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அது மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. எனவே நாம் எவ்வளவோ திட்டங்களைப் போட்டும் கூட எவ்வளவோ, பணத்தை நாம் அதிகமாகச் செலவழித்தும் கூட, மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக அரிய பெரிய காரியங்களைச் செய்து வந்தாலும் கூட அதன் பலன் உண்மையில் மக்களுக்குப் போய் சேருகிறதா என்பதை நினைக்கும்போது அது சந்தேகமாகத்தான் இருக்கிறது. எனவே மருத்துவத் துறையில் இப்படிப்பட்ட ஒரு விரும்பத் தகாத வளர்ச்சியை, விரும்பத்தகாத மனோநிலையை நாம் தடுத்து நிறுத்த

வேண்டும். அப்படி தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதை நாம் நிச்சயமாக கட்டுப்படுத்தியே ஆகவேண்டும். இதில் நான் முக்கியமாகச் சொல்வேன், ஏற்கனவே முன்பு பயிற்சி பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்கள்.

மற்ற துறைகளில் 58 வயதுக்கு மேல் யாரும் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இத்துறையில் ஏற்கனவே பயிற்சி பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பயிற்சியின் தன்மையே வேறு. இப்போது பயிற்சி பெற்று வரும் டாக்டர்களின் தன்மையே வேறு. எனவே, இத்துறையில் பழைய முறையில் பயிற்சி பெற்ற டாக்டர்களின் அனுபவத்தை வைத்துக்கொண்டு அவர்களை வைத்து இத்துறையை பழையபடியும் புனிதமாக்குவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்களில், அவர்களுக்கு வயது வரம்பு வைக்காமல் அவர்களின் சேவையையும், அவர்களின் ஒத்துழைப்பையும், அவர்களின் சேவா மனப்பான்மையையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது ஒன்றாகும்.

பொதுவாக மருத்துவத் துறைக்கு அதிகமாகச் செலவு செய்கிறோம். அங்கேயிருக்கிற டாக்டர்களைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. சரியாகவோ தவறாகவோ அப்படிப்பட்ட ஒரு நிலையேற்பட்டு இருக்கிறது. அதை நிச்சயமாகத் தடுத்தாக வேண்டும். அரசாங்கச் செலவில், மருத்துவத் துறைக்கு அதிகமாகச் செலவு செய்கிறோம். நாம் ரூ. 12 கோடி கல்விக்காகச் செலவழித்தால், அதைவிட அதிகமாக மருத்துவத் தொழிலுக்குச் செலவு செய்கிறோம். ஸ்பெஷலிஸ்ட் பட்டம் பெற்றபின்பும், நல்ல அறிவுகளைப் பெற்ற பின்பும் அவர்கள் தேசத்தின் சொத்தாக கருதப்படவேண்டும். அந்தச் சொத்தை, அவர்கள் வீணாக்கவிடக்கூடாது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் நம்முடைய இளைஞர் சமுதாயம் கெட்டுவிட்டது என்பதற்காகச் சொல்லவில்லை—சரியான முறையில், சீரான முறையில் அவர்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும், அவர்களுடைய கவனத்தைச் சரியான முறையில் எடுத்துச் செல்வதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்காக என்ன செய்யவேண்டும் என்றால் பழைய முறையில் பயிற்சி பெற்றவர்களை வைத்து ஒரு குழு அமைத்து, அவர்கள் சொல்லும் யோசனைகளைக்கேட்டு, மருத்துவத் துறையில் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்கிற காரணத்தால், இந்த விஷயத்தையும் கவனத்தில் கொண்டு அத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் பல கட்மோஷன்களைக் கொடுத்து இருக்கிறேன். எல்லாவற்றையும் பற்றிச் சொல்லுவதற்கு நேரம் இல்லாவிட்டாலும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். குறிப்பாக நான் கொடுத்து இருக்கும் கட்மோஷன் அந்த இரண்டாவது கட்மோஷனை எதற்காகக் கொடுத்தேன்



'To discuss about the necessity to allot a percentage of seats for students coming out of Sainik Schools for admission in Medical Colleges.' இன்னொன்று,

"To discuss about the need to introduce 'visiting Mobile E.N.T. and Eye Units' comprising of Specialists to make regular camps at all Hospitals which do not have such facilities."

அந்த இரண்டாவது கட்மோஷனை எதற்காகக் கொடுத்தேன் என்றால், எங்கள் பகுதியில் லயன்ஸ் கிளப் சார்பில் "ஐ காம்ப்" நடத்தினார்கள். "ஐ காம்ப்" நடக்கிறது என்று சொன்னவுடனே அந்தப் பகுதியிலிருந்து கிராம மக்கள் ஏராளமாக வந்து விட்டார்கள். காரணம், அவர்களுக்கு இது போன்ற தனிச் சிகிச்சை கிடைக்க வேண்டுமென்று சொன்னால், மதுரை போன்ற பெரிய நகரங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் ஏழையாக வறியவர்களாக இருக்கிற காரணத்தால் அவர்கள் அங்கே சென்று மருத்துவம் பார்த்து கொள்ள முடியவில்லை. ஆகவே, மிகவும் ஆர்வமாக அங்கே வந்து விட்டார்கள். அந்த ஒரு நாள்தான் அவர்களால் அந்தச் சிகிச்சைப் பெற முடிந்தது. அவர்களுக்குத் தொடர்ந்து அந்தச் சிகிச்சை அளிக்கப் படுமா என்று கேட்டபோது நாங்கள் இது மாதிரி பல இடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது, ஆகவே, அது இயலாது என்று சொல்லிவிட்டார்கள். சில கேஸ்களை மதுரைக்கு வரச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். மதுரைக்குச் சென்று வர முடியாத நிலையில் பல நோயாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் அன்றையதினம் சிகிச்சைப்பெற்று இருந்தாலும், தொடர்ந்து சிகிச்சைப் பெற முடியாத காரணத்தால் அது பயன் இல்லாமல் போய் விடுகிறது. என்னுடைய மனதில் என்ன தோன்றுகிறது என்றால், இத்தகைய ஸ்பெஷலிஸ்ட்கள், இ.என்.டி., கண்நோய், எல்லாம் ஒரு இடத்தில் தான் இருந்து சிகிச்சை கொடுக்கிறார்கள். சென்னை, மதுரை, கோவை போன்ற இடங்களில் தான் இப்படிப்பட்ட சிகிச்சை பெற முடிகிறது. அந்த இடங்களுக்குச் சென்று மருத்துவ வசதி பெற முடியாத நிலையில் பலர் இருக்கிறார்கள். ஆகவே, அதற்காக என்ன செய்யவேண்டுமென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்க மருத்துவ மனை இருக்கிறது. அந்த மருத்துவ மனைகளில் இந்த ஸ்பெஷலிஸ்ட்களைத் தனியாக வைத்து, பல ஹாஸ்பிடல்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை, அல்லது மாதத்திற்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாள் சென்று பார்த்து வரவேண்டும் என்று சொல்லவேண்டும். இப்படி அவர்கள் போய்க்கொண்டே இருந்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தொடர்ந்து அந்தச் சிகிச்சையைப் பெற முடியும். அங்கேயுள்ள மருத்துவ மனைகளிலும் தொடர்ந்து சிகிச்சைகள் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்து இருக்கும் இந்தக் கண் சிகிச்சை முகாம் நல்ல பலனைக் கொடுத்து வருகிறது. இத்தகைய வசதிகளையும் செய்து கொடுத்தால் இன்னும் மருத்துவத்துறை மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்ததாக இருக்கும், அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சைனிக் ஸ்கூல் மாணவர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் மெடிகல் காலேஜில் சேருவதற்கு ஒரு பர்சன்டேஜ் ஒதுக்கவேண்டும். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் லத்தீப் அவர்கள் முஸ்லீம்களுக்கு அதிகமாக இடம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த நேரத்தில் என் மனதில் சில கருத்துக்கள் தோன்றின. அதைச் சொல்வது ஒரு கான்ட்ரோவர்சியல் பாயிண்டாக இருக்கும் என்று நினைக்கிறேன். முஸ்லீம்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட விதி ஒன்றும் நம்முடைய கான்ஸ்டிட்யூஷனில் இல்லை. இப்படி ஒவ்வொரு ஜாதியாக, ஒவ்வொரு சமயமாக இருப்பவர்கள் கேட்டால் என்ன ஆகும் என்று நினைத்துக்கொண்டு இருந்தேன். அப்படிக் கேட்பது சரியல்ல. நம்முடைய சமுதாயத்தில் ஏழை பணக்காரர்கள் இருக்கிறார்கள். நாம் ஏழைகளுக்கு உதவக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அவர்களில் நன்கு படித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்வதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள் இத்தனை பர்சன்ட் சமுதாயத்தில் இருக்கிறோம். ஆகவே இத்தனை பர்சன்ட் இடம் ஒதுக்கவேண்டுமென்று கேட்பது நல்ல முறையாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப் எழுந்தார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) : என்ன சொல்லப் போகிறீர்கள் ?

THIRU M. A. LATHEEF : Sir, what I submit now is by way of clarification or personal explanation because the hon. Member made some observations. My submission is that we do not claim particularly that reservation must be made. What we claim has been upheld by the Constitution and the way in which the Constitution is being worked in this country. This is now an accomplished and acknowledged fact that those people who are suppressed and backward......

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMY) : The hon. Member (Thiru Sowdi Sundara Bharathi) has not referred to a controversial matter..........

THIRU M. A. LATHEEF : Because the hon. Member raised the point that it is not proper to ask for separate reservation for the Muslims, I want to submit that it is not a question of........

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMY) : There is no time to refer to all such things and I will have to allot time to various hon. Members who want to speak. The Hon. Member can clarify it afterwards....

THIRU M. A. LATHEEF : Sir, I will clarify it later.





திரு சௌடி எஸ். சுந்தரபாரதி : நண்பர் லத்தீப் அவர்கள் பேச்சை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் சொன்ன ஸ்பிரிட், அதன் தன்மை வேறு. அவர்களை நான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். அவர்களும் என்னை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களும் படித்தவர்கள், நானும் படித்தவன் என்றமுறையில் நான் சொல்லக்கூடிய வாதத்தை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நான் அவர்களுடைய முஸ்லீம் சமுதாயத்திற்கு எந்தவிதமான கெடுதலையும் ஏற்படுத்த விரும்பவில்லை. நாம் இந்திய நாட்டில் இருக்கிறோம். இந்தியன் என்ற உணர்வில் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை என்று தெரிவித்துக் கொண்டு, சைனிக் முறை பாடத்திட்டங்களுக்கும், நம்முடைய பாடத் திட்டங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் மார்க் கொடுக்கும் அடிப்படை வேறு, நாம் மார்க் கொடுக்கும் அடிப்படை வேறு. சைனிக் ஸ்கூலில் செகண்டு கிளாஸ் வாங்கியிருந்தால் நம்முடைய பள்ளிகளில் பர்ஸ்ட் கிளாஸ் வாங்கும் தகுதி பெற்ற நிலையில் அந்த மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தாலும், அவர்கள் கொடுக்கும் பெர்சன்டேஜ் படி ஆயிரத்தில் 1—2 பேர் கூட பர்ஸ்ட் கிளாஸ் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, சைனிக் ஸ்கூலில் படித்து வரும் மாணவர்களுக்கு என்று ஒரு பர்சன்டேஜ் ஆப் சீட்ஸ் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்கள் நல்வாழ்வு என்பது ஏதோ அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ்ந்தால் போதாது, அவர்கள் உடல் நலத்தோடும் உள்ள வளத்தோடும் வாழவேண்டும் என்ற நோக்கோடு இந்த அரசு பல்வேறு புதிய திட்டங்களை ஆண்டுக்காண்டு இந்தத் துறையில் தீட்டி மக்களுக்குச் சிறப்பான முறையில் பணிபுரிந்து வருவதைப் பாராட்டுகின்றேன். எந்தத் துறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்றாலும், அது கல்வித்துறையிலாகட்டும், வேளாண்மைத் துறையிலாகட்டும், அதற்கு அடிப்படை மக்கள் நல்வாழ்வு என்பதால் இந்தத் துறைக்கு இன்னும் சிறப்பான கவனத்தை கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்ல வைத்திய வசதி கிடைக்க வேண்டும் என்ற உரிமை அவனுக்கு இருக்கிறது. அதைச் செய்து கொடுக்கவேண்டிய கடமை இந்த அரசுக்கு மட்டுமல்ல, எந்த அரசிற்கும் இருக்கின்றது என்ற காரணத்தால், நாட்டில் இருக்கின்ற கிராமங்களில் வாழ்கின்ற 70 சதவிகித மக்களுக்கு, நகரப்புறத்தில் வாழ்கின்ற 30 சதவிகித மக்களுக்குக் கிடைக்கின்ற மருத்துவ வசதிகள் கிடைக்கின்றதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாதாரணமாக பெரிய மருத்துவ மனைகள் நகரப்புறத்தில் இருக்கின்றன. அதுதவிர மருத்துவப் படிப்பு படித்துவிட்டு தொழில் நடத்துகிறவர்களில் 100-க்கு 80 பேர் நகரப்புறத்தில் தான் தொழில் நடத்துகிறார்கள். 100-க்கு 20 பேர் தான் கிராமத்தில் தொழில் நடத்துகிறார்கள். இந்த அமைப்பை மாற்ற வேண்டும்.

முற்பகல் 11·00

அடுத்ததாக, மக்களோடு நெருங்கிய தொடர்புள்ள பிரைமரி ஹெல்த்
சென்டர், தாலுக்கா, ஹெட்குவார்டர்ஸ் மருத்துவ மனைகளை விரிவுபடுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பிரைமரி ஹெல்த் சென்டர்களை
எடுத்துக்கொண்டால், நம்முடைய மாநிலத்தில் உள்ள 379 ஊராட்சி
ஒன்றியங்களில் 379 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதாகச் சொல்லு
கிருர்கள். எதிர்காலத்தில் ஒவ்வொரு யூனியனுக்கும் இரண்டு ஆரம்ப
சுகாதார நிலையங்கள் என்று ஆக்கப்போவதாகச் சொல்லுகிருர்கள்.
அதையும் விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எண்பது ஆயிரம், ஒரு லட்சம் மக்களைக்கொண்ட ஏரியாவுக்கு ஒரு
பிரைமரி ஹெல்த் சென்டர் இருப்பது போதாது. அங்கே அவற்றில்
வேலை செய்கின்ற மருத்துவர்களுக்கு பல்வேறு அலுவல்கள் இருக்
கின்றன. பல நோயாளிகளை கவனிக்க வேண்டும், 6 படுக்கைகளை
கவனிக்க வேண்டும், குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போட வேண்டும்,
இப்படி பல வேலைகள் இருப்பதால் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே
யூனியனுக்கு இரண்டு பிரைமரி ஹெல்த் சென்டர் என்பதை விரைவில்
கொண்டுவர வேண்டும். மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற்று
அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களில் எளிய வியாதிகளுக்குத் தான்
மருத்துவ வசதி செய்துகொடுக்கப்படுகிறது. நான் இங்கே ஒரு யோசனை
யைச் சொல்ல விரும்புகிறேன். கன்சல்டன்சி சர்விஸஸ் என்று ஏற்பாடு
செய்து, மாவட்ட மருத்துவ மனையிலிருந்து சிறப்பு தேர்ச்சி பெற்ற
மருத்துவர்கள், இ.என்.டி. மருத்துவர்கள், அறுவை சிகிச்சை சிறப்பு
மருத்துவர்கள், ஆகியவர்கள் மாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு பிரைமரி
ஹெல்த் சென்டருக்கும், ஞாயிற்றுக்கிழமைகளிலோ, அல்லது அவர்களுக்கு
என்று வசதியான நேரம் கிடைக்கிறதோ அன்றைக்கு வந்து தங்களுடைய
சேவைகளை பிரைமரி ஹெல்த் சென்டருக்கு வரக்கூடிய நோயாளிகளுக்கு
அளிக்கின்ற திட்டத்தை அரசு தீட்டினுல் கிராம மக்களுக்கு உண்மையான
சேவை செய்தவர்களாக ஆவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்
றேன்.

மற்ருென்று, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தற்போது இருக்கும்
6 படுக்கைகளை கூடுதலாக்கி, 10 படுக்கைகளாக மாற்றியமைக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பாதிக்கு மேற்பட்ட பிரதம சுகாதார
நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம் கிடையாது. வாடகைக் கட்டிடங்களில்
இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கு
கின்ற அளவுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டும். பிரதம சுகாதார
நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும்
வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள்
கிராமத்தில் உள்ள அந்த மருத்துவ நிலையங்களுக்கு பணிபுரிய விரும்பிச்
செல்லுவார்கள். தற்போது அங்கெல்லாம் தங்கள் குழந்தைகளை படிக்க
வைக்க நல்ல பள்ளிக்கூடங்கள் இல்லாததால் மருத்துவர்கள் கிராமப்



புறங்களுக்குச் செல்ல மறுக்கிருர்கள். அவர்களுக்கு கிராமத்துக்குப்
போகக்கூடாது என்ற எண்ணமில்லை. ஆனுல் அடிப்படைக் தேவைகள்
கிராமப்புறத்தில் இல்லாததால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்சார
வசதி போன்றவை இல்லாத காரணத்தால் அங்கே போக அச்சப்படுகிருர்
கள். இந்தக் குறைகளை நிவர்த்திக்கவேண்டும், அதற்கான முயற்சிகளை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, வட்ட மருத்துவ மனைகளை எடுத்துக்கொண்டால், போதிய
படுக்கைகள் கிடையாது. 100-க்கு மேற்பட்டவர்கள் உள்ளிருப்பு நோயாளி
களாக (இன்பேஷண்ட்ஸ்) இருக்கிருர்கள். அவ்வளவு பேரும் ஜெனரல்
வார்டில் தான் இருக்க வேண்டியிருக்கிறது. மிடில் இன்கம் குரூப்பில்
உள்ளவர்களும் அங்கு இன்பேஷண்டுகளாக வரும்போது, ஒரு சிறு
அளவிலாவது ஸ்பெஷல் வார்டுகள் ஏற்படுத்த வேண்டும். வட்ட
மருத்துவ மனைகளில் 10 அல்லது 15 அறைகள் கொண்ட "சி" கிளாஸ்
அளவிற்கான ஸ்பெஷல் வார்டுகள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன். வட்ட மருத்துவ மனைகள் 86 இருப்பதாகச்
சொல்லுகிருர்கள். ஆகவே ஆண்டுக்கு 10, 15 மருத்துவ மனைகளில்
10 ஸ்பெஷல் வார்டுகள் அதில் ஒரு குளியல் அறை, கக்கூஸ் என்ற
அளவிலாவது திட்டம் போட்டு எதிர்காலத்தில் நிறைவேற்ற முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்ஞென்று, வட்ட மருத்துவ மனைகளில் பிளட் பாங்கு கிடையாது.
அங்கேயுள்ள மருத்துவர்கள் அறுவை சிகிச்சையில் தேர்ச்சி பெற்றவர்
களாக இருந்தாலும், அறுவை செய்கிறபோது தேவைப்படும் பிளட்
கிடைக்காத ஒரே காரணத்துக்காக தலைமை மாவட்ட மருத்துவ மனை
களுக்கு அந்த நோயாளிகளை அனுப்பவேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே
வட்ட மருத்துவ மனைகளில் சிறு அளவில் ரத்த சேமிப்புச் செய்யும்
விதத்தில் "மினி பிளட் பாங்கு" ஏற்படுத்த வழிவகை செய்யவேண்டும்.
இந்த ஆண்டு அம்மாதிரி நான்கு இடங்களில் செய்யப்போவதாகச்
சொல்லுகிருர்கள். அதுவும் சென்னையைச் சுற்றியிருக்கிறது. வட்ட
மருத்துவ மனைகள் இதிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. தாய்மார்கள்
பிரசவத்திற்கு வரும்போது, கடைசி நிமிடத்தில் ரத்த சேமிப்பு இல்லாத
தால் எங்களால் இந்த கேஸை பார்க்க முடியவில்லை என்று அனுப்பி
விடுகிருர்கள். நம்முடைய தாய்மார்களில் 100-க்கு 50 பேர் ரத்த
சோகையால் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களை பிரசவ காலத்தில்
மாவட்ட மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லச் சொல்லுகிருர்கள். வட்ட
மருத்துவ மனைகளில் வாகன வசதி கிடையாது. பிரைவேட் டாக்சி
ஏற்படுத்திக்கொண்டு வரவேண்டுமென்ருல் டாக்சிகாரரர்கள் அதிக பணம்
கேட்கிருர்கள். எங்கள் கோபி தொகுதியை எடுத்துக்கொண்டால், அந்தத்
தாய்மார்களை 20, 25 மைல் தொலைவிற்கு கொண்டு செல்ல வேண்டி
யிருக்கிறது. டாக்சிகாரரர்கள் 50, 60 ரூபாய் கேட்கிருர்கள் அந்த சந்தர்ப்
பத்தை உபயோகப்படுத்திக்கொண்டு. இந்த நிலைமை மாற வட்ட மருத்துவ
மனைகளில் மினி பிளட் பாங்கு ஏற்படுத்த வேண்டும். அத்துடன் வட்ட
மருத்துவ மனைகளுக்கு போஸ்ட் கிராசுவேட் படிப்பு படித்தவர்களை,
எம்.டி., எம்.எஸ். படித்தவர்களை டாக்டர்களாகப் போஸ்ட் பண்ண
வேண்டும், பெண் டாக்டர்களாக இருந்தால் டி.ஜி.ஓ. படித்தவர்களாகப்

போட முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். தலைமை மருத்துவ
மனைகளை எடுத்துக்கொண்டால் பல்வேறு வசதிகளைச் செய்ய வேண்டி
யிருக்கிறது. இந்த ஆண்டு 100 படுக்கைகள் அதிகப்படுத்த திட்ட
மிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏறக்குறைய 13 டிஸ்டிரிக்டு ஹெட்
குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கு 100 படுக்கைகள் அதிகப்படுத்துவது
என்றால் அது மிகக் குறைவாக இருக்கிறது. இந்த எண்ணிக்கையை
இன்னும் கூடுதல் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மருத்துவக் கல்வியை எடுத்துக்கொண்டால், முன்பெல்லாம் மேல் படிப்பு
படிக்க வேண்டுமென்றால் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டியிருந்தது.
இன்றைக்கு மதராஸ் யூனிவர்சிடி மதுரை யூனிவர்சிடி ஆகியவற்றில் எல்லாத்
துறைகளிலும் மேல் பட்டப் படிப்பு படிக்க வசதி செய்திருக்கிறார்கள். இந்த
நேரத்தில் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். 100 டாக்டர்களை, 200 டாக்டர்களை உற்பத்தி செய்கிறோம்
என்ற எண்ணிக்கை கணக்கைப் பார்க்காமல், தரத்தைக் கட்டிக் காப்பதில்
நம்மிடம் இருந்துவந்த பாரம்பரியத்தை காப்பாற்ற முயல வேண்டும்.
மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள் சொன்னார்கள். மாணவர்
களைப் படிப்பிற்கு சேர்த்துக்கொள்ளும்போதும், வேலைகளுக்கு அமர்த்தும்
போதும் மத அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று சொல்லி,
அதற்கு அரசியல் சட்டத்தை துணையாகக் காட்டினார்கள். அதுபோன்ற
கருத்துக்களை நாம் கண்டிக்க வேண்டும். இதுபோன்ற ரிசர்வேஷன்
கூடாது. பியூர்லி மெரிட், திறமைக்கு மட்டுமே மதிப்பளித்துச் சேர்க்க
வேண்டும். இப்போது அம்மாதிரி செய்யமுடியாவிட்டாலும் எதிர்காலத்தி
லாவது அந்த முறையை மருத்துவத்துறை, என்ஜினியரிங் துறைகளில்
பின்பற்ற யோசனை செய்யவேண்டும்.

இன்னொன்று, காச நோயைப் பற்றிச் சொன்னார்கள். 8 லட்சம்
பேர் நமது மாநிலத்தில் காச நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த
எண்ணிக்கை இன்னும் கூடுதலாக இருக்கும் என்று கருதுகிறேன்.
அதற்காக உள்ள சானிடோரியத்தில் மொத்தம் 3,217 படுக்கைகள் இருக்
கின்றன. அது போதாது. வீட்டிலிருந்து அந்த வியாதிக்கு வைத்தியம்
செய்துகொள்ள மேல் நாடுகளில் வசதியிருக்கிறது. நமது மாநிலத்தில்
அம்மாதிரி சக்சஸ்புல்லாக செய்வதற்கு என்ன வழி என்பதை யோசனை
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய வீடுகளில்
காற்றோட்டம், சத்தான உணவு இவைகள் எல்லாம் கிடைப்பதில்லை......
(மணி அடிக்கப்பட்டது).

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவரவர்களே, சுகாதாரம், மருத்துவம்
என்ற இந்த மானியங்கள் மீது ஒரு தெளிவான அறிக்கையை மாண்பு
மிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்
களைப் பாராட்டுகிறேன். அதைப் படித்துப் பார்க்கும்போது தெளிவாக
இந்தத் துறையிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ற முறையில்
அபிவிருத்திக்கான பல விஷயங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
இன்றைக்கு இந்தத் துறை செயல்படக்கூடிய விதத்தைப் பார்த்தால்
முன்பு இருந்ததைவிட இப்போது சிறப்பாக மக்களுக்குச் செயல்
படுகிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.
இருந்தாலும் 4 கோடி





ஜனங்களுக்கு சுகாதார வசதி அளிக்கக்கூடிய முறையிலே பார்த்தால்,
—அது ஒரு முக்கியமான—பிரச்சினை அந்த அளவுக்கு இப்போதைய
வசதிகள் போதாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆங்கில நாட்டு வைத்திய முறை—அலோபதி சிஸ்டம்—இன்றைக்கு
வளர்ந்து உலகம் பூராவும் அங்கீகரிக்கப்பட்டு இருந்தாலும், ஒவ்வொரு
நாடும் தங்கள் தங்கள் நாட்டில் இருக்கக்கூடிய வைத்திய முறைகளையும்
ஓரளவு சிறப்பாக வளர்த்து, அதையும் சேர்த்து பயன்படுத்துவதன் மூலமாக
நல்ல பலன் கண்டிருக்கிறார்கள். நம்நாட்டிலே அந்த அலோபதி
முறையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்
கிறார்கள். ஆனால் அவர்கள் தாங்கள் கற்ற முறையை, தங்களின்
சிறந்த தேர்ச்சியை நாட்டு மக்களுக்குப் பயன்படுத்துகின்ற வகையில்,
அதற்கு ஒரு உருக் கொடுத்து, மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற
முறையில், நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற முறையில் அவர்கள்
இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்பது நிச்சயமாகத் தெரியும்.
அது நம் நாட்டின் துர்பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும்.

அலோபதி முறையில் தேர்ச்சி பெற்ற டாக்டர்கள் இப்படி இருக்கிறார்கள்,
அது மட்டுமல்ல. அவர்கள் தாங்கள் கற்ற முறைதான் சிறந்த முறை
என்றும் கருதுகிறார்கள். அதனால் நமது நாட்டு மருத்துவத்திற்கு
முக்கியத்துவம் இல்லாமலிருக்கிறது. அரசாங்கம் இதில் அதிக அக்
கறை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அண்மையில் நாங்கள்
இந்தியாவில் பல மாநிலங்களுக்கும் சென்றிருந்தோம். அங்கெல்லாம்
மருத்துவத்துறை எப்படி செயல்படுகிறது என்று விசாரித்தோம். அங்கே
பல மாநிலங்களிலே நாட்டு மருத்துவத்திற்கு சிறந்த இடம் அளித்
திருக்கிறார்கள். பெனாரஸ் யூனிவர்சிட்டியில் விசாரித்தோம். அங்கே
நாட்டு மருத்துவப் படிப்பிற்காக 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.
அதேபோன்று குஜராத் மாநிலத்திலே ஆயுர்வேத காலேஜை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். அவர்கள் ஆயுர்வேத வைத்தியத்திற்கு சிறந்த ஒரு
இடத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சரவர்கள்
இந்தத் துறையிலே நல்ல ஞானம் உடையவர்கள்; ஆர்வம் உடையவர்
கள்; இந்தத் துறை சிறந்து விளங்கவேண்டும் என்று நினைப்பவர்கள்.
அதிலே எனக்கு சந்தேகம் கிடையாது. ஆனால், அவர்களுடைய ஆர்வத்
திற்கும் முயற்சிக்கும் ஏற்ற வகையில் இந்தத் துறை செயல்பட வேண்டு
மானால் பழைய பிடிப்பில் இருந்து அவர்கள் இந்தத் துறையைக்
கத்திரித்துவிட வேண்டும். அப்போதுதான் புதிய முறையில் செயல்பட
முடியும்.

நமது மாநிலத்தில் இப்போது சித்த வைத்தியத்திற்காக ஒதுக்கி
யிருக்கும் தொகை 33 லட்சம் ரூபாய்தான், என்றால் எந்த அளவுக்கு
இங்கே சித்த மருத்துவம் முன்னேறும் என்பதை நாம் புரிந்துகொள்ள
முடியும். அமைச்சரவர்கள் அதை யோசித்துப்பார்க்க வேண்டும்.
என்னைக் கேட்டால் நிச்சயமாக இந்தத் தொகை போதாது. இந்தத்
தொகையைக் கொண்டு அலோபதி முறையோடு சித்த மருத்துவத்துறை
போட்டி போட முடியாது. ஆகவே, இந்தத் துறை வளர்ச்சி பெற
முடியாது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.
அதனால் இந்த சித்த மருத்துவத்திற்கு இன்னும் அதிகமான

தொகை ஒதுக்கி, இரண்டு முறைகளும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படும் வகையில் திட்டமிட்டு செயல்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது மாநிலத்தில் அலோபதி வைத்தியத்தில் பயிற்சி பெற்ற டாக்டர்கள்—உலகம் பூராவிலும் போற்றப்படக் கூடிய அளவுக்கு திறமைபெற்ற டாக்டர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நமது நாட்டின் துர்பாக்கியம் என்ன வென்றால் அந்தத் திறமைபெற்ற டாக்டர்கள் எல்லாம் சென்னையிலே தான் இருக்கிறார்கள். அவர்கள் வெளி இடங்களுக்குச் சென்று மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று விரும்பவில்லை. இங்கே இருக்கின்ற ஸ்பெஷலிஸ்டுகள் எல்லாம் இங்கேயே இருப்பதற்கு வகை செய்யாமல் இரண்டு வருஷம், அல்லது மூன்று வருஷத்திற்கு ஒருமுறை ஆங்காங்கே மாற்றப்பட வேண்டும். மாற்றக்கூடிய இடங்களுக்கு அவர் கள் செல்ல வேண்டும். அவர்களுக்கு இருக்கக்கூடிய திறமைகள் மற்றவர்களுக்கு—இந்த நாட்டு மக்களுக்கு பயன்பட வேண்டும். அத் தகைய முறையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு முறை மாற்றத் தைக் கொண்டுவரவேண்டும். இல்லாவிட்டால் அவர்களைப் பார்த்து பலர் பொறாமைப்படுவார்கள். அவர்கள் மட்டும் சென்னையிலே இருந்து கொண்டு அதிகமாக சம்பாதிக்கிறார்கள்; நாமும் சென்னைக்குப் போனால் என்ன என்று எண்ணுவார்கள்.

சென்னையிலே இருக்கக்கூடிய டாக்டர்களில் பலர் தனியாக டிஸ்பென் சரிகளும் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அவர்களை அப்படி மாற்றும்போது அவர்களுக்கு போக விருப்பம் இல்லை என்றால், அவர்கள் ராஜிநாமா செய்து விட்டு, தனியாக மருத்துவமனைகளை வைத்து நடத்தி, திறமையைக் காட்டிக்கொள்ளட்டும். அதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் அரசாங்கப்பணியில் இருப்பவர்கள் —அவர்களின் திறமை பரவலாக எல்லோருக்கும் பயன்படும் வகையில்— ஒவ்வொரு ஜில்லாவுக்கும் மாற்றப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அப்படிச் சொல்வதால் அவர்கள் மீது பழி சுமத்துகிறேன். என்று யாரும் எண்ணவேண்டாம். அவர்கள் திறமை வளரவேண்டும்; அவர்கள் திறமை நாட்டு மக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன்தான் நான் இதைச் சொல்கிறேன். அது அல்லாமல் தப்பெண்ணத்தில் நான் சொல்லவில்லை.

அண்மையில் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்குச் சென்றிருந்தோம். அங்கே போய் பார்த்தால், அங்கே இருக்கின்ற மாணவர்கள் அந்த கல்லூரியை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால் இங்கே படிப்பதற்குள்ள வசதிகளும் வாய்ப்புகளும் மிகக் குறைவாக இருக்கின்றன; நாங்கள் 86 பேர்கள் தான் இருக்கிறோம்; இந்தக் கல்லூரி இங்கே தேவையில்லை; சென்னைக்கு மாற்றிவிடுங்கள் என்று சொல்கிறார்கள். ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்யப்பட்டபின் அந்தக் கல்லூரியின் நிலைமை இப்படி இருக்கிறது. அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் எல்லாம் சென்னை யில் இருந்துதான் போகிறார்கள். அங்கே போய் வருவதற்குக் கூட



போதுமான பஸ் வசதி இல்லை. அந்தக் கல்லூரி செங்கற்பட்டு நகரி லிருந்து கிட்டத்தட்ட நான்கு மைல் தள்ளி இருக்கிறது. படிக்கின்ற மாணவர்களில், அந்தக் கல்லூரியை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று ஒரு கட்சி, அது கூடாது என்று ஒரு கட்சி, ஆசிரியர்கள் ஒரு கட்சி, வேலை செய்யும் இதர சிப்பந்திகள் ஒரு கட்சி என்று இப்படி பல்வேறு எண்ணங்கொண்டவர்கள் அங்கே இருக்கிறார்கள். அதனால் கோடிக்கணக்கான ரூபாய் விரயம் ஏற்படுகிறது. ஆகவே, நான் அமைச் சரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றில் அந்தக் கல்லூரியை சென்னைக்கு மாற்றிவிடுங்கள். மாற்றிவிட்டு, அந்த இடத்தில் சித்த மருத்துவ ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள். இல்லை என்றால் அங்கே சிறந்த 'புரொஃபசர்களை'ப் போட்டு பாடம் போதிக்க ஏற்பாடு செய்யுங்கள். கல்லூரிக்குச் சென்றுவர பஸ் வசதிக்கு ஏற்பாடு செய்யுங்கள். கல்லூரிக்கும் மருத்துவமனைக்கும் இடையில் கிட்டத்தட்ட இரண்டு மைல் இருக்கும் என்று கருதுகிறேன். அது மட்டுமல்லாமல் அந்தக் கல்லூரிக் குப் பக்கத்தில் புதிய குடியிருப்புகளை ஏற்படுத்த வேண்டும். செங்கற் பட்டு நகரில் இருக்கின்ற ஜன நெருக்கத்தைக் குறைக்கும் வகையில் மருத்துவக் கல்லூரி இருக்கும் இடத்தைச் சுற்றி ஒரு புதிய நகரை உருவாக்க வேண்டும்.

டவுன் பிளானிங் பற்றியும் இங்கே குறிப்பிட்டிருப்பதால் அதைப் பற்றிச் சொல்கிறேன். மாணவர்களும் ஆசிரியர்களும் அங்கே தங்கு வதற்கு ஏற்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். செங் கற்பட்டு மருத்துவக் கல்லூரி சம்பந்தமான என்னுடைய இந்த யோச னையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரிகள் எப்படிச் செயல் படுகின்றன என்றால், கிட்டத்தட்ட மருத்துவத் தலைமை இடங்கள் எல்லாம் ஒரு 'டிரேடிங் சென்டர்' மாதிரி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நக ருக்கு உள்ளேயே, ஜன நெருக்கடியான இடங்களில் வியாபார ஸ்தலம் மாதிரி செயல்படுவது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. நான் மேலை நாடுகளுக்குச் சென்றிருந்தபோது அங்கெல்லாம் மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரிகள் எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என் பதைப் பார்த்தேன். அவர்கள் நகருக்கு வெளியே தான் அமைத் திருக்கிறார்கள். நகருக்கு உள்ளே கிளினிக்குகள்—சோதனைக் கூடங்கள் தான் கட்டப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். நகருக்கு வெளியே 30, 40 கிலோ மீட்டர் தூரத்தில்தான் அங்கெல்லாம் அமைத் திருக்கிறார்கள். நமது நாட்டிலே அப்படி இல்லை. நகருக்குள்ளேயே மருத்துவத் தலைமையிடங்கள் எல்லாம் இருக்கின்றன. பெரிய டாக்டர்கள் எல்லாம் சென்னை நகரிலேயே இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இனி வருங்காலத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கு இடம் கொடுக்காமல் இப்போது இருக்கின்ற முறையையே கத்தரித்துவிட்டு, மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தையும் மாண்புமிகு அமைச்சரவர் களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல்வேறு இடங் களில் இருக்கின்ற மருத்துவ மனைகளை—ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி கள் நடத்துகின்ற மருத்துவ மனைகளை—படிப்படியாக அரசாங்கம் எடுத்

துக் கொள்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி எடுத்துக்கொள்வ தற்கு முன்னால் ஒவ்வொரு ஜில்லா எம்.எல்.ஏ.க்களையும் கூப்பிட்டு— அவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள் என்று பார்க்காமல்—மிக நலிந்த நிலையிலிருக்கும் மருத்துவ மனைகள் எவை எவை என்று கேட்டறிந்து, அவசியமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் மருத்துவ மனைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஜில்லாவுக்கு முந்தி, அந்த ஜில்லாவுக்கு முந்தி, அவர் ஆளும் கட்சிக்காரர், இவர் எதிர்க்கட்சிக்காரர் என்று பார்க்காமல், பாரபட்சம் காட்டாமல் இந்த விஷயத்தில் அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் பல இடங்களில் 'அவுட் பேஷெண்ட்ஸ், இன் பேஷெண்ட்ஸ்' சிகிச்சை அளிப் பதற்கும், சிகிச்சை பெறுவதற்கும் வசதி இல்லாமல் இருக்கிறது. அப்படிப் பட்ட இடங்களை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப் பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலையில், நிச்சயமாக ஆங்காங்கே உள்ள ஜில்லா பிரதிநிதிகளைக் கூப்பிட்டு, எதை, எதை முதலில் செய்வது, பிறகு படிப்படியாக எதைச் செய்வது என்று முடிவு செய்து செயலாற்றுவது நல்லதாக இருக்கும் என்று குறிப்பிட விரும்பு கிறேன்.

அடுத்து, சித்த மருத்துவத்தைப் பற்றி குறிப்பிடும்போது, குறைந்த பட்சம் ஒவ்வொரு ஜில்லா தலைமை மருந்தகங்களிலும் ஒரு மருந்தகம் சித்த மருத்துவத்திற்காக என்ற முறையில், ஆயிரக் கணக்கான மக்கள் நன்மை பெறுகின்ற வகையில்—அவர்கள் நிச்சயமாக இன்றைக்கு நம் ... திருச்சியில் ஒரு ... பிக்கை பெற்றிருக்கிறார்கள்,—அமைக்கப்பட வேண்டும். ... பலனடைந்திருக்கிறார்கள்— ...கொண்டு—ஆயிரக் கணக்கான நோயாளிகள் ... என்ற முறையில்—ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இது ஆங்கில மருத்துவர்களுக்குப் பிடிக்கவில்லை போலே இருக்கிறது. ஆகவே, அந்த சித்த மருத்துவர் டாக்டர் பட்டம் பெறவில்லை, என்று சொல்லி, வேறு ஒருவரைப் போட்டு, இப்போது நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்த அளவில் வந்து கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடமளிக்கக் கூடாது.

ஆகவே, நாட்டு மக்களின் சுகாதாரம் என்பது, என்ன விலை கொடுத் தும் வாங்க முடியாத ஒன்று. ஒரு அரும்பெரும் சொத்து. ஆகவே, சித்த மருந்தகங்களை ஒவ்வொரு இடத்திலும் ஏற்படுத்த வேண்டும். இப்போது இருக்கின்ற மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

பதிவு பெற்ற வைத்தியர்களை கூடிய மட்டிலும் பஞ்சாயத்து யூனியன் களில் வேலை கொடுக்கும்படியாகச் செய்து அவர்களுடைய சம்பள விகிதத் தையும்—அவர்கள் வசதியான வாழ்க்கை நடத்தக்கூடிய அளவுக்கு —மற்ற மருத்துவ மனைகளில் இருக்கின்ற சிப்பந்திகளுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளமாவது அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றாலும், அவர்களை வாழ்க்கை நடத்த முடியாத—என்ற முறையில் போதிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

... வருமானம் உள்ள கோயில்கள் கோயில்களில், ஓரளவுக்கு மேல் ... கோயில்கள் சித்த மருத்துவச் ...ன்று வைத்திருக்கிறார்கள்—அந்தக் ... இருக்க வேண்டும். அதற்கு ...லகளை ஏற்படுத்த வேண்டுமென்ற முறை இருக்க வேண்டும். அதற்கு



சம்பந்தப்பட்ட அமைச்சரும் ஒத்துழைப்பார் என்று கருதுகின்றேன். இப்படி சித்த மருத்துவத்தின் நிலையை கைதூக்கி விடுவதின் மூலம் இந்தத் துறைக்கு ஊக்கம் ஏற்படுத்த முடியும்.

அடையாறில் ஒரு சித்த மருத்துவ பார்மசி இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு சித்த மருத்துவத்தை பரப்ப முடியாது. சர்க்காரின் தலைமையிலே, அதனுடைய மூலதனத்திலே, திறமையாளர்களைக் கொண்டு வந்து நிறைய மருந்துகளை செய்யக்கூடிய அளவுக்கு பெரிய பார்மசியினை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்பு கிறேன்.

நான் கூறிய கருத்துக்களை நல்ல எண்ணத்தில் பார்க்க வேண்டும். இந்தத் துறையில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டு வந்தாலும் 4 கோடி மக்களுக்கும் சுகாதாரம் அளிப்பது நல்ல முறையில் நடை பெற வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, பல விஷயங்கள் இருந் தாலும், இந்தக் காலச் சக்கரத்தின் நிர்ணயம் காரணமாக இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கோ. விசுவநாதன் : தலைவரவர்களே, மருத்துவம், பொது சுகாதாரம் ஆகிய இரண்டு துறைகளின் சார்பில், ஏறக்குறைய ரூ. 42 கோடிக்கு மேல் ஒரு திட்டத்தை உருவாக்கி அதைப் பற்றிய விரிவான அறிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆளுங் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில், இந்தத் துறையின் வெற்றி களையும் சிறப்பு அம்சங்களைப் பற்றியும் நான் சொல்வதைவிட மாற்றுக் கட்சியிலே இருக்கின்ற திரு. மணலியார் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத் தில் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட சிறப்பான விளக்கத் தைக் கொடுக்கின்ற அறிக்கை முன்பிருந்த அமைச்சர்களால் செய்யப்பட வில்லை என்பதையும் குறிப்பிட்டு சில கோரிக்கைகளையும், விளக்கங்களையும் தந்திருக்கிறார்கள் என்றும் பாராட்டினார்கள். அதற்காக அவருக்கு நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவ மானியக் கோரிக் கையின் மூலமாக, நாட்டில் பல புரட்சித் திட்டங்களின் மூலமாக அரசு செயல்படுகின்ற நேரத்தில் அதன் ஒரு அங்கமாக இருக்கின்ற இந்தத் துறை, மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாடு அறியும். மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தின விழாவை ஒட்டி அவருக்காக, கண்ணொளி இழந்தவர்களுக்கு கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தை மாண்புமிகு சுகாதார அமைச்சரவர்கள் உருவாக்கி அதை விரிவான முறையில் நடத்தி, ஏறக்குறைய அது ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஒரு லட்சம் மக்களுக்கு இந்த கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தில் ரூ. 49 லட்சத்திற்கு நிதி சேர்ந் தாலும், அதற்கு ஒரு தொகை ஒதுக்கி ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங் களிலும், தாலூகாக்களிலும் கண்ணொளி வழங்குகின்ற திட்டம் நமது நாட்டிலுள்ள எல்லோராலும் பாராட்டக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அகில உலகக் கண்ணொளி வழங்குகின்ற தலைவர் கூட, சென்ற சில மாதங் களுக்கு முன்பு வந்திருந்தபோது, இங்கே நடத்தப்படுகின்ற கண்ணொளி வழங்குகின்ற திட்டம் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறது ...

பற்றிக் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார்கள். பிற நாடுகளில் கூட செய்ய முடியாத சாதனையை இங்கே செய்திருக்கிறார்கள் என்று பாராட்டக் கூடிய அளவில் கூறியிருக்கிறார்கள்.

இதையடுத்து, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு என்ற முறையில், தொழுநோயாளிகள் மருத்துவ வசதி பெறுகின்ற முறையில், 10 தொழுநோய் நிலையங்கள் உருவாக்கி, ஆறு நிலையங்கள் கட்டி முடிக்கப்படுகின்ற தருவாயில் இருந்து வருகின்றன. தொழுநோய்ப் பிணியாளர்களுக்கு வேண்டிய எந்தவிதமான வசதியும் இந்த நாட்டு மக்கள் செய்யாத நிலையில், இந்த அரசானது அதற்காக விரிவான திட்டத்தைத் தீட்டி, நாட்டின் பல பகுதிகளிலும் அவர்களுக்காக குடியிருப்புகளைக் கட்டி, மேலும் அவர்களுக்கு உணவு வசதி செய்து தருகின்ற நேரத்தில் மருத்துவ வசதிகளை வழங்குகின்ற நிலையில், இந்த அரசு வெற்றி நடை போடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, நகரங்களில் மக்கள் பெறுகின்ற மருத்துவ வசதியை கிராமப் புறங்களிலே இருக்கின்ற மக்களும் பெற வேண்டும் என்ற அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மேலாக சுகாதார நிலையங்களை ஏற்படுத்த இந்த அரசு உத்தரவு இட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். கிராமப்புறங்களிலுள்ள மக்களும் நல்ல முறையில் மருத்துவ வசதிகளைப் பெற்று, மேலும் நல்ல உடல் நிலை பெறவேண்டுமென்ற எண்ணத்தில் நமது அமைச்சரவர்கள் செய்து கொண்டு வருகின்ற காரியங்களுக்கு நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நமது மருத்துவத் துறையிலே பட்டப் படிப்பு படிக்கக் கோரி வந்த மாணவர்களின் நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பெல்லாம் மருத்துவத் துறைக்கு வருவதென்றால் நகரங்களிலே உள்ள பணக்காரர்கள், அதிகாரத்திலுள்ளவர்களின் வீட்டுப் பிள்ளைகள் தான் வர முடியும் என்ற நிலையைப் போக்கி, இன்றைய தினம் சாதாரண ஏழை எளிய வீட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் எல்லாம் மருத்துவக் கல்லூரியில் படிக்கின்ற நிலையை உருவாக்க முடியும் என்ற நிலை நமது கலைஞரின் தலைமையிலே இருக்கின்ற அரசுதான். மாண்புமிகு சுகாதார அமைச்சரின் பெரு முயற்சியாலே இது பற்றிய வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனாலும் வெற்றியடைய முடியாத அளவுக்கு எம்.பி.பி.எஸ். தேர்வு அடிப்படையில் நிலைமைகளை உருவாக்கி அதே நேரத்தில், சமுதாயத்திலுள்ள அடித்தள மக்களும், மேல் மட்டத்திலுள்ள மக்களுக்கு இணையாக வாய்ப்புகளை உருவாக்கியது கழக அரசு தான் என்பதைப் பார்க்கிறோம்.

அந்த முறையில் நமது அரசானது கொள்கையின் அடிப்படையில் ஏழை எளிய மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் மருத்துவப் படிப்பு கொடுக்க வசதி செய்து கொடுத்திருக்கிறது.

அடுத்து, கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, குடும்பநலத் திட்டத்தின் மூலமாக நல்ல வெற்றியைக் கொண்டு கண்டிருக்கிறார்கள். அகில இந்தியாவிலேகூட மற்றெல்லா



மாநிலங்களை விட நாம் இதில் நல்ல வெற்றியைப் பெற்றிருக்கிறோம் என்பதை ஏற்கனவே அமைச்சராக இருந்த மாண்புமிகு ஜோதி வெங்கடாசலம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய முறையில் இந்தத் துறையிலே அதிகமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள் நமது அமைச்சர் அவர்கள் என்பதைவிட அதிகமான வெற்றியை தமிழக அரசானது குடும்ப நலத் திட்டத்தின் மூலம் கண்டு பலராலும் பாராட்டு பெறக்கூடிய முறையில் இருக்கிறது என்பதை யாரும் அறிவர். அந்த அடிப்படையில் இன்றைய தினம் சுகாதார அமைச்சரவர்கள் எடுத்துக் கொண்ட முன்னோடித்திட்டத்தில் பல வெற்றிகளைக் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

ஹோமியோபதி மருத்துவ முறை பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். முன்பு ஹோமியோபதி முறைபற்றி பல இடங்களில், பல கோரிக்கைகள் வைத்திருந்த போதிலும், இன்றைய தினம் அதற்காக நமது தமிழக அரசானது ஒரு தனி கவுன்சில் அமைத்து அதன் மூலமாக சிறப்பான திட்டங்களை உருவாக்கக்கூடிய நிலை இருப்பதற்கு தமிழக அரசை நாம் பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இப்படி படிப்படியாக வருகிற நோயைக் குறைப்படுத்த இந்த அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருவதோடு கூட, நோய் வராமல் தடுக்க குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருவதற்காகப் பாராட்டுகிறேன். இளைஞர்களுக்கு, குழந்தைகளுக்கு சத்துணவைக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு வருகிற நோயைத் தடுக்க முடியும். எதிர்காலத்தில் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழியேற்படும். ஆகவே, இதனைப் பாராட்டுகிறேன்.

அடுத்ததாக, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியைப்பற்றி ஒரு வார்த்தை. தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அதைப் பற்றி மணலி அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அந்தக் கல்லூரியில் 50 மாணவர்கள் படிக்கிறார்கள். 50 மாணவர்கள் படிக்க அங்கே வசதி இருக்கிறது. நிர்வாகத்தினர் வந்து பார்த்து அறிவித்த பின்னர்தான் 50 பேர்கள் சேர்க்கப்பட்டார்கள். இன்றையதினம் அங்கே மாணவர்கள் செய்கிற தகராறுகளுக்குக் காரணம் அங்குள்ள ஆசிரியர்கள்தான். அங்கே வேலை செய்கிற பெரும்பான்மையானவர்கள் சென்னையில் இருந்துதான் அங்கே போகிறார்கள். அதனால் அங்கே படிக்க வசதி இல்லைபோல, சென்னைக்கே அதை மாற்றுவது மாணவர்கள் நலனுக்கு உகந்தது என்பதுபோல மாணவர்களை அவர்கள் திசைதிருப்பிவிடுவதன் காரணமாகத்தான் கோரிக்கை தினம் என்பதாக மாணவர்கள் நடத்தியது. இங்குள்ள நிபுணர்களை அங்கே நாம் போட்டாலும் போகமாட்டேன் என்கிறார்கள். லீவில் போகிறார்கள். சென்ற ஆண்டு பைனல் இயர் மாணவர்களை சென்னைக்கு மாற்றியதாகக் குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக அந்தக் கல்லூரி சென்னைக்கே மாற்றப்பட்டு விடுமோ என்று மக்கள் ஐயுறுகிறார்கள். என்னிடம் கேட்கிறார்கள். கடந்த ஆண்டு அதைப்பற்றி கேட்ட போது கூட அங்கே கல்லூரியை ஆரம்பித்துவிட்டு மூடுகிற எண்ணம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றிவிடக்கூடாது. விழுப்புரத்தைவிட்டால் 100 மைலுக்கு ஒன்றும் இல்லை. நடுவில் செங்கல்பட்டில் இது இருப்பது பலவகையிலும்

உதவியாக இருக்கிறது. முதல்வர் அவர்கள் விபத்துக்குள்ளான போது கூட அங்கே வைத்துத்தான் அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. திரு. கோவிந்தசாமி அவர்கள் உடல் நலம் இழந்தபோதுகூட அவருக்கு அங்கேதான் என்னுடைய ரத்தத்தைக் கொடுத்து, சென்னைக்கு அழைத்து வந்தோம். அது ஒரு முக்கியமான சென்டராக இருப்பதால் அந்த மருத்துவக் கல்லூரியைப் பற்பல வகையிலும் முன்னேற்றம் செய்வ தற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். அதை அந்த இடத்தைவிட்டு மாற்றிவிடக்கூடாது என்பதாக அமைச்சர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய ஒரு வேண்டுகோள்—என்னுடைய தொகுதி யில் மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் நடைபெறுகிற ஒரு தொழு நோய் மருத்துவமனை இருக்கிறது. அகில இந்தியாவிலும்— என் ஆசியாவிலேயே அது ஒரு பெரிய மருத்துவமனையாகும். முன்பு மாநில அரசாங்கத்தின் மானியத்தில் நடைபெற்றது. அவ்வளவு முக்கியம் வாய்ந்த அந்த மருத்துவமனையில் உள்ளவர்கள் இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை. நாம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் விடுதி என்பதாக அங்கங்கே கட்டுவதற்கு அந்த மருத்துவமனையை ஒட்டியே கட்டி அதை ஒரு நகரமாக ஆக்கலாம். அந்த மருத்துவமனையை ஒரு மத்திய கேந்திரமாக வைத்துக்கொள்ளலாம். அத்தகைய மருத்துவ மனையில் உள்ளவர்களை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

கடைசியாக காச நோய்க்காரர்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்கவும் இந்த அரசு முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் மேலும் நூறு படுக்கைகளை அதிகப்படுத்த முன் வந்திருப்பதையும் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Deputy Speaker, Sir, there are just two practical aspects which I would like to stress in the matter of health. We have been listening to the word 'quality' used quite often and the Hon. Chief Minister also said that there would be a stress on quality when it came to matters of health.

I would like to say, Sir, that the nursing profession today does not come up to this expectation of it. The quality is poor. Yet, the Indian nurses abroad are much sought after. They are preferred to continental or English nurses because they have something about them. They give themselves and they give their time to their patients. But this standard does not prevail in our Government hospitals. You have got to be a patient there or perhaps just a visitor to know what I mean. The unfortunate nurse has 20 patients to look after. Apart from the patients who are in the beds, each bed may have two patients on the floor on the left and on the right and then the verandah and corridor with mats touching one another, all filled with patients. Therefore, perhaps the nurse deserves our sympathy.





Even so, Sir, she is not the nurse, she is not the type of nurse that we used to have in times past. The nurse gives pills and drugs and injections to the patients and that is all. Gone are the days when the nurse made the beds, saw to the patients' comforts and sponged the patients and also attended to other amenities. Other things are just too menial by nature to be attended to by a nurse. Now-a-days the nurse calls to the ayah, the ayah calls to the sweeper and the sweeper attends to the patients, if she feels like it or if she is given money. Every patient has to pay daily for even cups of water in our Government hospitals in the general wards. That is a fact which I have witnessed.

Sir, if this is our quality of the nursing profession, we have to look to the cause. We recruit our personnel from people who just do not have anything to give. The nursing profession is one where teaching alone cannot be sufficient. The pay packet is only a secondary matter. Every day, every hour and every minute it should be possible to give herself, to give her time to the patients and that is the quality which we expect from nurses. If we look to this sort of people, then and then only will we have quality nursing and quality hospitals and good clean wards and obedient menial servants who have to do what they are told and keep the place clean. So, Sir, when we look to the cause, let us see that in enrolling our nurses we choose the right type of persons.

My second point, Sir, is this. I do not see any provision made for immunisation against polio.

Everyone knows how costly the rehabilitation of residual-polio treatment—whatever the term is—can be. Every single item is costly. One small hospital will go into lakhs and so also the equipment, not to mention the personnel.

Sir, how much more economical it would be, if we add to vaccines against small pox which is a must in our country; if we also add and stress the need for immunization against polio, the country would be saved in this way by not having this very great expenditure of having to put up rehabilitation hospitals.

I might add that the Society for the Aid of the Handicapped Children in Coimbatore has a hospital in progress. Plans and applications for grants have been in the right office, before the right officer and on the right table for two years and still nothing has been forthcoming. I can understand that this is a big expenditure. So, why not do the positive thing, instead of healing the sick, to save them from getting sick altogether.

Thanking you, Sir.

[1973 மார்ச் 13

*திரு க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின்
முன்னால் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையின்மீது என்
னுடைய கருத்துக்களை, எங்களுடைய கட்சியின் சார்பில் இந்த மன்றத்திலே
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.
நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தமட்டில், அந்தப்
பொறுப்பினை ஏற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பணியை
நாங்கள் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த இரண்டு
ஆண்டு காலத்திற்குள், இந்தப் பொறுப்பினை அவர்கள் ஏற்றுக்கொண்ட
தற்குப் பின்னால் இந்த துறையிலே நல்ல முன்னேற்றம் காணுகின்ற
வகையில் அயராது உழைத்திருக்கிறார்கள் என்பதையும், அதிலே ஏராள
வுக்கு வெற்றியைக் கண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே
நான் இந்த மன்றத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளில்
மருத்துவ கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்த நேரத்தில்,
மிக நியாயமான முறையிலே, நேர்மையான முறையிலே, கல்லூரிகளுக்கு
மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது கடந்த இரண்டு ஆண்டு
காலத்திற்குள் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்
களின் தேர்வை எதிர்த்து யாரும் உயர்நீதிமன்றத்திற்கு வழக்குகளை
எடுத்துச் செல்லவில்லை என்பதிலிருந்து இது மிகவும் தெளிவாகிறது.

இந்த நேரத்திலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை மக்களுடைய
முன்னேற்றத்திற்காகவும் சுகாதாரத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைத்
தீட்டி, அதிலே வெற்றி காண்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்
டாலும்கூட, அந்த நன்மைகள் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ
அவர்களுக்குப் போய்ச் சேரவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

25 ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய இதயத் தெய்வம் பேரறிஞர்
அண்ணா அவர்கள் ஒரு சினிமாவிலே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.
அந்த படத்தின் மூலமாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய
கருத்தைச் சொல்கின்ற நேரத்தில், "சட்டம் ஒரு இருட்டறை, அதில்
வக்கீல்களின் வாதம் ஒரு விளக்கு; அந்த விளக்கை ஏழைகளால்
பெறமுடியாது" என்று நாட்டுக்கு எடுத்துச் சொன்னார்கள். அந்த
வகையில் இன்று மருத்துவத்தை எடுத்துக் கொண்டால், மருத்துவ
மனை ஒரு இருட்டறை; அதிலே மருத்துவர்கள் சேவை ஒரு விளக்காக
இருக்கிறது. ஆனால் அந்தச் சேவை என்னும் விளக்கு நாட்டிலே
இருக்கிற நடுத்தர மக்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க
வில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாகும். இப்படிச்
சொல்வதன்மூலம், அமைச்சர் அவர்களைக் குற்றம் சாட்டுகிறேன் என்று
இந்த நேரத்திலே யாரும் தயவு செய்து எண்ணிவிட வேண்டாமென்று
நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நல்ல எண்ணத்தோடு, நல்ல
உள்ளத்தோடு, நம்முடைய அமைச்சர் அவர்கள் பல திட்டங்களை நிறை
வேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தீட்டப்படுகின்ற அந்த திட்டங்கள்
யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென்று அந்தத் துறையினரும், அந்தத்



1973 மார்ச் 13] [திரு. க. உரோ. எட்மண்ட்]

துறையைச் சரிய முறையிலே நடத்திக்கொண்டிருக்கின்ற அமைச்சர்
அவர்களும் எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்குப் போய்ச்
சேரவில்லையென்பதை நான் இந்த நேரத்தில் மிகுந்த வருத்தத்
தோடு என்னுடைய கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக, அரசாங்கத்தினுடைய மருத்துவ மனைகள், எந்த மருத்
துவ மனையாக இருந்தாலும், மாவட்டத் தலைமை மருத்துவ மனையாக
இருந்தாலும், அல்லது வட்ட தலைமையிடங்களிலே இருக்கிற மருத்துவ
மனையானாலும், அல்லது ஊராட்சி ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டின்
கீழ், நிர்வாகத்தின்கீழ் உள்ள மருத்துவ மனையாக இருந்தாலும்,
பொதுவாக, சமுதாயத்தின் உயர்ந்த மட்டத்திலே இருக்கின்றவர்களுக்குத்
தனிச், சலுகையும், அதனால் தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கிறவர்
வர்களுக்கு, பொருளாதாரத் துறையிலே மிகவும் பின்தங்கியவர்களுக்கு
அதனால் கிடைக்க வேண்டிய நியாயமான பலன்களும் கிடைக்கவில்லை
யென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க
முடியாது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நெல்லை மாவட்
டத்திலே இருக்கிற மாவட்டத் தலைமை மருத்துவ மனை, வைத்தியக்
கல்லூரிக்கு இணையாக இருக்கிற மருத்துவ மனையில், நோயாளிகளை
உள்ளே சேர்க்கிற நேரத்தில், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் தனித்
தனி பாரபட்சம் அங்கே காட்டப்படுகிறது. பல கோடி ரூபாய்களை
இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது
என்றால், அரசினுடைய முக்கிய நோக்கம், இதனால் பயன்பெறுகின்றவர்
கள் ஏழை எளியவர்களாக, நடுத்தர வர்கத்தினராக இருக்க வேண்டு
மென்பதாகத்தான் இருக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அரசாங்கம் நடத்துகின்ற மருத்துவ
மனைகள் ஏழை எளிய மக்களுக்காகவும் நடுத்தர மக்களுக்காகவும்தான்
நடத்தப்படுகிறதேதவிர, பெரும் பணம் படைத்தவர்களுக்கு, வசதி
படைத்தவர்களுக்கு நடத்தப்படவில்லையென்பதை யாரும் மறுக்க முடி
யாது. பணம் படைத்திருக்கின்றவர்கள் தங்களுக்கு உண்டான வியாதி
களைக் குணப்படுத்திக்கொள்வதற்கு பெரிய தனிப்பட்ட மருத்துவர்களை
நாடிச் செல்கின்ற அளவுக்கு வசதி படைத்திருக்கிறார்கள். ஆகவே,
இப்படிப்பட்ட அரசாங்க மருத்துவ மனைகள் மூலமாக பயன்படவேண்டிய
வர்கள் ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள் என்பதை அரசும்
அமைச்சரும், இந்த துறையை நடத்துகின்றவர்களும் மறந்துவிடக்கூடாது
என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சுத்தம் சுகம் தரும் என்று
ஒரு பழமொழி சொல்வார்கள். ஆனால் அரசாங்கம் நடத்துகிற மருத்துவ மனைகளிலே
சுத்தம் இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான்
பல மருத்துவ மனைகளை அப்பொழுதைக்கப்பொழுது சென்று பார்த்திருக்
கிறேன். பல மருத்துவ மனைகளிலே, கழிவு இடங்கள், "கக்கூஸ்"
கூட சுத்தம் இல்லாமல் இருக்கிறது. ஏனென்று கேட்டால், பெனயில்
இல்லையென்று சொல்கிறார்கள். பெனயில் வினியோகம் செய்யப்பட
வில்லையென்று சொல்கிறார்கள். பெருவாரியான மருத்துவ மனைகளில்,
சாதாரண மருந்துகள், சின்னச் சின்ன மருந்துகள், ஒரு மருத்துவ மனை
யில் இருக்க வேண்டிய சாதாரண மருந்துகள் கூட இல்லையென்று

அவர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையிலே வேலை செய்கிற மருத்துவர்கள்கூட இந்தக் குறைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மருத்துவ மனையிலே போதுமான படுக்கைகள் இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கல்லூரிக்கு இணைப் பான மருத்துவ மனையில், கூடுதலாக 100 படுக்கைகளை இன்றைய தினம் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. ஆனால், கூடுதல் செய்யப்பட்ட 100 படுக்கைகள் அந்த மாவட்டத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது. நான் பலமுறை நெல்லையிலே இருக்கிற அந்த மருத்துவ மனையைச் சென்று பார்க்கிற நேரத்தில் ஒவ்வொரு அறையிலும் ஏராளமான நோயாளிகள் கீழே தரையிலே பாய் விரிக்கப்பட்டு, அங்கே கிடத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளைச் சீர்திருத்துவதற்குக் கூடுதலான படுக்கைகளை ஏற்பாடு செய்து தருவார்கள் அமைச்சர் அவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதையும் அவர்கள் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக, ஏழை எளியவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் மருந்துகள் கேட்டால் இல்லையென்றே சொல்கிறார்கள். பெரும்பாலான மருந்துகளை ஏழை எளிய வியாதியஸ்தர்கள், வெளியிலே, மருந்து கடை களிலே வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான அளவுக்கு நல்ல மருந்துகளைக் கொடுப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சில மருத்துவ மனைகளில் உள் வியாதியஸ்தர்களாக, இன்-பேஷண் டாக அவர்களைச் சேர்க்கிற நேரத்தில், பூரண குணம் அடைவதற்கு முன்னாலேயே மருத்துவர்கள் அவர்களை வெளியேற்றி விடுகிறார்கள். இந்தச் சம்பவம் கடந்த 10 நாட்களுக்கு முன்னால் நெல்லையிலே நடந்திருக்கிறது. திருநெல்வேலிக்குப் பக்கத்தில் சுத்தமல்லி கிராமத் திலிருந்த ஒருவர் நெல்லை மருத்துவமனையில் இன்-பேஷண்டாக சேர்க் கப்பட்டார். அவர் பூரண, முழு குணம் அடைவதற்கு முன்னால் வெளி யேற்றப்பட்டுவிட்டார். எங்களிடம் அவர் வந்து சொன்னதன் பேரில் நாங்கள் அங்கே இருக்கிற ரெசிடெண்ட் மெடிகல் ஆபிசரைச் சந்தித்துச் சொன்ன நேரத்தில், அவரை மீண்டும் பரிசோதித்து, ஆஸ்பத்திரியிலே மீண்டும் சேர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டு, ஒருவார காலம் வைத்திருக்கப் பட்டு பிறகு வெளியே வந்திருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் சாதாரணமாக சமுதாயத்தின் அடித்தளத்திலே இருப்பவர்களுக்கும் பொருளாதாரச் சூழ்நிலையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஏற்படக் கூடாது என்று இந்த மன்றத்திலே இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்னொரு கருத்தையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக, எந்த நோயாளிக்காவது எக்ஸ்-ரே எடுக்க வேண்டுமென்றால், எங்காவது தூரத்திலேயுள்ள கிராமத்திலே யிருந்து மாவட்ட மருத்துவ மனைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே,



இந்தக் கோரிக்கைகளை நிவர்த்திக்க வட்டந்தோறும் இருக்கிற தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு எக்ஸ்ரே பிளாண்ட் நிறுவுவதற்கு இனிமேலாவது அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதேபோல ஒன்றியங்களின்கீழ் சில மருத்துவ மனைகள் ஆங்காங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை ஒன்றியங்களின்கீழ் இருப்பதால் அந்த மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்களை மாற்றுகின்ற வாய்ப்பு அந்த ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களுக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல, ஒன்றியங்களின்கீழ் அந்த மருத்துவ மனைகள் இருப் பதால் ஒன்றியத்தினுடைய நிதி நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் போதுமான வசதிகளை அப்படிப்பட்ட மருத்துவ மனைகளிலே வியாதிக் காரர்களுக்குச் செய்துகொடுக்க முடியவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்........

__மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து__: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற சேர்மனுக்கு அவர்களை மாற்றுவதற்கு அதிகாரம் இல்லை, டி.ஹெச்.எஸ்.க்குத்தான் மாற்றக் கூடிய அதிகாரம் இருக்கிறது.

*__திரு. க. உரோ. எட்மண்ட்__: மருத்துவ மனைகள் ஒன்றியத்தின் எல்லைக்குள்ளே இருப்பதால் ஒன்றியங்கள் அப்படிப்பட்ட மருத்துவ மனைகளுக்குப் பொருளாதார உதவி செய்கின்ற காரணத்தினால், அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பது எனக்குத் தெரியும். அந்த ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள் பெரிய அதிகாரிகளைப் பார்த்து மாற்றுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் எந்த மருத்துவ மனையாக இருந்தாலும் அது அரசாங்கத்தினுடைய நேரடிப் பார்வையிலே இருக்கவேண்டுமேயொழிய ஒன்றியத்தின் அல்லது ஊராட்சியின் கீழ் இருக்கிற நிலைமை சரியல்ல, அந்த முறையை மாற்றி ஒரு யூனி பார்ம்டி இதிலே உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே காச நோய் வியாதிஸ்தர்களைக் குணப்படுத்து வதற்கு சிகிச்சையளிப்பதற்கு ஒரு மருத்துவ மனை தனியாக இல்லை. திருநெல்வேலி மாவட்ட மருத்துவ மனையிலேதான் 10, 20 படுக்கைகள் அதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திலேயுள்ளவர்கள் அந்த வியாதியினால் பாதிக்கப்பட்டால் அவர்கள் ஏறத்தாழ 50 மைல், 100 மைல் கடந்து சென்று நாகர்கோவிலுக்குச் சென்றுதான் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒன்று நெல்லையிலே காச நோய்க் காக தனியாக ஒரு மருத்துவ மனையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் அல்லது, அது முடியாவிட்டால் திருநெல்வேலியிலே உள்ள மருத்துவக் கல்லூரியோடு சேர்ந்த மருத்துவ மனையிலே ஒரு நூறு படுக்கைகள் அதற்காக ஒதுக்கி காச நோய் வியாதிஸ்தர்களுக்கு சிகிச்சையளிக்க நட வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

சென்னையிலே இருக்கின்ற சைதாப்பேட்டையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையிலே தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அவுட் பேஷண்ட்ஸ் வந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை செய்வதற் காக அங்கே ஒதுக்கப்பட்டிருக்கின்ற மருத்துவர்கள் மூன்றே மூன்று பேர்கள் தான். இதை நாம் எல்லாம் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டிருக் கிறோம். நாள் முழுவதும் அங்கு வருகின்ற 1,000க்கு மேற்பட்ட அவுட் பேஷண்ட்களை கவனிப்பதற்கு மூன்று மருத்துவர்களால் எப்படி முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே சைதாப்பேட்டை மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள பேராவூரணியில் ஏறத்தாழ 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு மருத்துவ மனைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. கட்டி முடிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இன்னும் அந்தக் கட்டடம் திறக்கப்படாமல் இருக்கிறது. நான் அதைப் பற்றி விசாரித்த நேரத்திலே அங்குள்ள மக்கள் எல்லாம் சொல்கிறார்கள், மறைந்துபோன நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய துணைவி யார் இராணி அம்மையார் அவர்களுடைய பெயரை அதற்கு இடவேண்டு மென்று அந்தப் பேரூராட்சியிலே ஸ்தாபன காங்கிரஸைச் சேர்ந்தவர் கள் அங்கே இருக்கிறார்கள்—தீர்மானம் நிறைவேற்றியிருக்கிற காரணத் தினாலே அந்தக் கட்டடம் திறக்கப்படவில்லை என்று மக்கள் சொல்கிறார் கள். இந்தக் களங்கமான பெயரை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது, உடனடியாக அந்த மருத்துவ மனைக் கட்டடத்திற்கு இராணி அம்மையார் அவர்களுடைய பெயரை வைத்து திறக்க ஏற்பாடு செய்யவேண்டும், கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகும் நம்முடைய அண்ணாவின் துணைவி யாரின் பெயரை வைக்க மறுக்கிறீர்கள். அந்த மருத்துவ மனைக் கட்டடத்தைத் திறந்துவைக்க உடனே ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே காயல்பட்டினம் பேரூராட்சியில் அரசாங்க மருத்துவ மனை ஒன்றிருக்கிறது. ஏறத்தாழ 50 ஆண்டு காலமாக நல்ல முறையிலே செயல்பட்டுவருகிறது. திருச் செந்தூரிலே உள்ள தாலுகா தலைமை நிலைய மருத்துவ மனை நல்ல முறையிலே செயல்படுவதற்கு முன்னாலேயே இருந்து மிக நல்ல முறை யிலே அது செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அங்கே கூடுதலான படுக்கைகள் கேட்டும், எக்ஸ்-ரே பிளாண்ட் கேட்டும் பல கோரிக்கைகள் எழுந்துகொண்டிருக்கின்றன. அதையும் உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஆத்தூர் பேரூராட்சியின் எல்லைக்குள்ளே ஒரு மருத்துவ மனையை நிறுவவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதற்காக நிலம் வேண்டும் என்று கேட்ட நேரத்திலே அங்கேயுள்ள மக்கள் அந்த மருத்துவ மனைக்காக வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆத்தூர் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள பகுதி, ரசாயனத் தொழிற்சாலை அதிகமாக இருப்பதால் அந்தத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி தேவைப்படுகிறது.





உடனடியாக அங்கே ஒரு சில படுக்கைகளைக் கொண்ட மருத்துவ மனையை யாவது உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பேமலி பிளானிங்—பொறுத்தவரையில் சில ஆடவர்கள் அறுவைச் சிகிச்சை, கர்ப்பத் தடை சிகிச்சை செய்துகொண்ட பிறகு சில நேரங்களிலே ஒழுங்காக பலன் தராத நிலையிலே பெய்லியர் ஆகிவிடுகிறது. அப்படி பெய்லியர் ஆகிவிட்டால் அவர்கள் மீண்டும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள மருத்துவர்கள் மறுக்கிறார்கள். அதற்கு நிவாரணம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல குறைகள் இப்படி இருந்தாலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல முறைகளைக் கையாண்டு கொண்டு வருகிறார்கள். குறைகள் இருக்கின்றன என்றால் அது அவர்களால் அல்ல. கிராமங்களிலே உள்ள மருத்துவமனைகளை அவர்கள் போய்ப் பார்க்க முடியாவிட்டாலும் எதிர்கட்சியிலே இருக்கின் றவர்கள் எங்களைப் போன்றவர்கள் ஆங்காங்குள்ள மருத்துவமனை களுக்குச் சென்று பார்க்கிறோம். எதிர்கட்சிக்காரர்கள் எதையும் எதிர்ப்போம் என்று நினைத்துவிடாமல், நாங்கள் சொல்வதில் உண்மை நிச்சயம் இருக்கும் என்பதை மனதில் கொண்டு நான் சொன்ன கருத்துக் களை நிறைவேற்றி குறைபாடுகளை நீக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார் கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய கட்சியின் சார்பாக தெரிவிக் கின்ற கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*<u>திரு. எம். கந்தசாமி</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மருத்துவம், பொதுச்சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரி விக்க விரும்புகிறேன்.

மருத்துவத் துறையிலே பெரிய மாறுதல்கள் செய்யவேண்டுமென்ற முறையில் கடந்த இரண்டாண்டுக் காலமாக இந்தத் துறையை மிகத் திறம்பட நடத்திவரும் பேராசிரியர் அவர்கள், குறிப்பாக மருத்துவக் கல்லூரியிலே மாணவர்கள் சேர்க்கும் விஷயத்திலும், அதே நேரத்திலே படித்துப் பட்டதாரியாக இருக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் விஷயத்திலும் நல்ல முறையிலே திட்டம் தீட்டி, படித்த மாணவர் களுக்கு வேலைவாய்ப்புக்களை அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் இன்றும் வேலைவாய்ப்பு இல்லாமலிருக்கும் பட்டதாரிகளுக்கு, இந்த ஆண்டிலாவது மருத்துவக் கல்லூரியிலே படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு வேலையில்லை என்ற நிலைமை இல்லாமல் அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹவுஸ் சர்ஜன்ஸ் தங்களுக்குப் போதிய சம்பளம் இல்லை என்ற கோரிக்கை கொடுத்த நேரத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மிகப் பொறுப்போடு பரிவோடு ஏற்று அவர்களுக்கு ஊதிய உயர்வை அளித்ததற்காக அவர் களுடைய சார்பிலே நான் என்னுடைய நன்றியை இந்த அரசுக்கும் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவக் கல்லூரியிலே இன்றைய தினம் எவ்வளவுதான் படித்
தாலும்கூட படித்துப் பட்டம் பெற்ற பிறகு நிச்சயமாக வேலை கிடைக்கும்
என்று கல்லூரியிலே சேர்ந்தவர்கள், பின்னாலே தொடர்ச்சியாக வேலை
பார்க்காமல் அவர்கள் தனியாக போய்விடுகிற காரணத்தினாலே இன்னும்
மருத்துவமனைகளிலே கிராமப் புறங்களிலே மருத்துவர்கள் வந்து
பணியாற்றுவது மிகச் சிரமமாக இருக்கிறது. இந்த அறிக்கையிலே
கிராமப்புற மக்கள் 70 சதவீதமும், நகர்ப்புறத்திலேயுள்ள மக்கள்
30 சதவீதமும் என்று புள்ளி விவரக் கணக்கு இருந்தாலும்
இன்றைய தினம் நகரப்புறத்தில் உள்ள மக்களுக்குத்தான் செய்யக்
கூடிய வசதிகள் அதிகமாக இருக்கிறது, கிராமப்புற மக்களுக்குத் தொன்று
தொட்டு, நீண்ட நெடுங்காலமாக முறையாக அந்த வசதிகள் செய்யப்
படுவது குறைவுதான். அமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களிலே உள்ள
மருத்துவமனைகளிலே அதுவும் பேரூராட்சிகளிலே உள்ள மருத்துவமனை
களுக்கு எம்.பி.பி.எஸ். மருத்துவர்களை நியமிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12—00 அடுத்தபடியாக, மணப்பாறை என்னுடைய தொகுதியிலே இருப்ப
தாலும், அது நகராட்சியாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கு முன்பு
நகராட்சி மருத்துவமனையாக இருந்ததை மாண்புமிகு அமைச்சரவர்
களிடத்திலே சொன்ன நேரத்தில், அதை இன்றையதினம் அரசாங்க
மருத்துவமனையாக மாற்றியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை இன்னும்
அதிகப் படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை வட்டத் தலைநகரமாக இருந்தாலும், நீண்ட நெடுங்கால
மாக லோகல் ஃபண்ட் டிஸ்பென்சரி என்று பெயரளவிலே இருந்து
இப்பொழுது அரசாங்க மருத்துவமனையாக சிறிய அளவில்தான்
இருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக் காலமாக முயற்சி செய்து இப்பொழுது
நிலத்தை ஒதுக்கீடு செய்து ஏறத்தாழ 57,000 ரூபாய் செலவிலே ஏறத்
தாழ 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதை இந்த
ஆண்டிலே இல்லாவிட்டாலும் வருகிற ஆண்டிலேயாவது அங்கே 50 படுக்கை
கள் கொண்ட புதிய மருத்துவமனையாகக் கட்டித்தர வேண்டு
மென்று இந்த நேரத்தில் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதற்குக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அருகிலே உள்ள கரூரில் அதிகப்படியாகப் படுக்கை வசதிகள் செய்யப்
பட்டிருக்கிறது. அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நர்சிங் அசிஸ்டெண்டுகளை, அவர்களின் கோரிக்கைகளை அமைச்சர
வர்கள் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு அளித்திருக்கிறார்
கள். அவர்கள் பதவியிலேதான் உயர்வு பெற்றிருக்கிறார்களே தவிர
சம்பள விகிதம் அவர்களுக்கு முன்பிருந்த நிலையிலேயே இருக்கிறது.
அதைக் கொஞ்சம் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மருத்துவத் துறைக்கு 40 கோடி, 41 கோடி, 42 கோடி
என்று செலவழித்தாலும், இந்தத் துறையைச் சீர்திருத்துவது மிகவும்
சிரமமான காரியம். இதை உணர்ந்த நம்முடைய முதலமைச்சரவர்கள்,



தன்னுடைய பிறந்த நாள் விழாவை, சென்ற ஆண்டும் அதற்கு
முந்தைய ஆண்டும், இந்தத் துறை நல்லமுறையில் இருக்க வேண்டு
மென்று கருதி, பிச்சைக்காரர் மறுவாழ்வு என்று, தொழுநோய்ப்
பிச்சைக்காரர்களுக்கான இல்லங்களைக் கட்டி மருத்துவ வசதி செய்து கொடுத்
திருக்கிறார்கள். அதற்கடுத்தாற்போல் இன்றையதினம் கண்ணொளி
வழங்கும் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 35,000 பேர்களுக்கு கண்
ணொளி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அரசுக் குறிப்பிலிருந்து தெரி
கிறது. அந்த முறையிலே இரண்டு பிறந்த நாள் விழாவிலேயும்
மருத்துவத் துறைக்கு கலைஞர் அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள்
என்ற விதத்திலே இந்தப் பகுதியிலே உள்ள குறிப்பாகத் தமிழகத்
திலேயுள்ள அத்தனை பேர்களும் கலைஞர் அவர்களுக்கு நன்றி
செலுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்று சொல்லிக்கொண்டிருக்
கிறோமே யொழிய இன்னும் கிராமப்புறங்களிலே நோய் வாய்ப்பட்டவர்கள்
மருத்துவ வசதிகளை விரும்பினாலும் கூட அவர்கள் விரும்பிய
நேரத்திலே மருத்துவ வசதிகளை அவர்கள் பெற முடியாமல்
இருக்கிறார்கள். இதை உணர்ந்து நல்ல திட்டத்தை தீட்டி, குறிப்பாக
அரசாங்க வட்டத் தலைமை மருத்துவமனைகள் அந்தப் பகுதி மக்களுக்கு
நல்ல விதத்திலே பயன்படும் விதத்தில், " மொபைல் யூனிட்" என்ற
விதத்தில் அசிஸ்டெண்டைப் போட்டு கிராமங்களுக்கு வாராவாரம் சென்று
நோயால் பீடிக்கப்பட்டிருப்பவர்களுக்குப் பயன் கிடைக்கும் விதத்தில்
புதிய திட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

குறிப்பாக திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சென்னை இந்த
மாநிலத்தின் தலைநகரமாகயிருந்தாலும் கூட, திருச்சிதான் தலைநகர
மாக விளங்க வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள அத்தனை மக்களும்
விரும்புவதற்கு காரணம் அது தமிழ் நாட்டில் மத்தியில்
இருப்பது தான். அப்படி உள்ள திருச்சி மாவட்டத்தில் ஒரு
மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த முறை
அதற்காகத் தொகைகளெல்லாம் வசூலிக்கப்பட்டும் மருத்துவக் கல்லூரி
இல்லாத நிலையில் இன்றைக்கும் இருக்கிறது. திருச்சி தமிழ்நாட்டின்
மத்திய இடத்திலேயிருந்தும்கூட, அங்கே எல்லாவிடங்களிலேயிருந்தும்
வருபவர்கள் அதிகமாகயிருந்தும்கூட, அங்கே மருத்துவக் கல்லூரி இல்
லாத குறையிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி
செய்து அடுத்த ஆண்டிலேயே திருச்சியிலே மருத்துவக் கல்லூரியை
ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்களெல்லாம், குறிப்பாக
உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் இந்தத் துறையைப் பற்றியும்,
அமைச்சரைப் பற்றியும் அவர் அளித்த விளக்கங்களைப் பற்றியும் பாராட்டிப்
பேசினார்கள். எதிர்க் கட்சி உறுப்பினர்களே, அவரே, பாராட்டிவிட்ட பிறகு
நாங்களெல்லாம், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களெல்லாம் பேசு
வதைவிட, அதைப்போன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அவர்கள் கட்சிக்
கும் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவரவர்களுக்கு
நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in support of my cut motion, viz., to discuss about providing more medical facilities in rural areas, I want to say a few words.

I wish to congratulate the Hon. Minister for Public Health for having sanctioned additional buildings for the hospital at Hosur and also for increasing the bed strength by about 25 beds. The construction work is going on and I hope it will be over in a month or two. I hope the Hon. Minister will give us some more buildings also. Denkanikota is a very big taluk and it is a hilly area. Down the taluk, there are 40 miles full of forests and they contain number of villages. For the whole of the area, only the hospital of Denkanikota is available. So it should be properly expanded.

I have been representing to the Hon. Minister several times to the sanction more buildings and open some more beds there. He has promised a number of times. I hope he will implement the promise and see that more buildings to expand the present hospital at Denikankota are provided for. Further there is beyond Denkanikota, Anjatti a fully forest area. There is necessity for a rural medical hopsital there. I hope the Hon. Minister will give consideration for this backward area and sanction a hospital there. It is full of hills and villages and the people there have to walk a minimum distance of 3 to 4 miles to get medical facility. The present bed strength is not sufficient. They should be increased. Besides Hosur and Denkanikota, there is the case of Harur. It is a hilly area and requires to be developed. Besides more primary health centres in hilly areas, we want that Berigai consisting of 100 villages and wherein people have to walk 15 to 20 miles to get medical facilities, to have onePrimary HealthCentre. Itis in pursuance of developing medical facilities in rural areas, that I am asking this. It has been previously a zamindari area and zamindars had neglected everything including education, agriculture, industry and medical aid in those areas, for many centuries. If a Primary Health Centre is opened there, people will be happy. At Bagalur I congratulate Government on posting an efficient doctor. People are pouring in and women patients are coming in large numbers due to efficiency of the doctor. But more space should be provided for the persons bringing the patients. More buildings have to be constructed. I request the Hon. Minister to consider this request and do the needful in the matter.

Dharmapuri needs a medical college. It has been discussed a number of times in the District Development Council meetings and I hope the District Collector, Chairman of the D. D. C. would have communicated the view to Government. A medical college is a necessity in Dharmapuri district. Number of people, especially in Dharmapuri area and other areas apply for seats in medical colleges and they have not been able to see that even 2 or 3 students get seats in these medical colleges in distant



areas because of so many difficulties and so many other things. The boys are not able to get seats. So, if a medical college is opened at Dharmapuri, I think it will serve the needs of those people and also others. I think there is a great Railway Reserve Fund which is not distributed. I think the Hon. Minister must take some amount from that Railway Reserve Fund and use it for the construction of the college there.

Recently, I had occasion to see the medical college at Chingleput. There we find excellent doctors and students are interested in medical courses. But one thing is the glamour of Madras because it is very near to Madras. I find that there is a glamour for appointment of doctors in hospitals in Madras and also glamour to go to Madras Colleges, so far as the students are concerned, because in respect of the facilities provided there, when compared to Madras hospitals and Madras colleges, there is a lot of difference. Students say that they require more facilities there. Any town or any village which is nearer to a big city will never develop because of the big city. There is a rumour that the college at Chingleput may be shifted. I do not say that it should be shifted. It must be there. Let it be there. Let it be developed. Many boys of those villages can get the benefit. But in any case if the Government wishes that that college should be shifted to some other place, my request is that the benefit should go to Dharmapuri district. Otherwise, the backwardness of the Dharmapuri district will not develop. Therefore, I appeal to the Hon. Minister to remember this point and see more medical facilities are given to the backward areas in Dharmapuri district.

Further with regard to medical inspection in schools, now-a-days there is no arrangement for medical inspection in schools. There are number of schools where the boys are very backward on account of health conditions. Unless they are medically examined, unless their vision is tested and unless their hearing capacity is tested and unless sufficient care is bestowed on the health of the students, I think their progress will not be satisfactory. Therefore, arrangements should be made for proper medical examination in schools. I hope the Hon. Minister will consider all these points and do justice to Dharmapuri district. With these words, I close my speech.

திருமதி த. ந. அனந்தநாயகி : துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே நான் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளையும், எங்கள் கட்சி சார்பாக கொடுத்த வெட்டுப் பிரேரணைகளையும் ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே கிட்டதட்ட 24 கோடி ரூபாய் மருத்துவத் திற்காகவும், 17 கோடி பொதுச் சுகாதாரத்திற்காகவும் கோரியிருக்கிறார்கள். பொதுச் சுகாதாரத்திற்காகச் சென்ற ஆண்டு 12 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டதிலேயே பத்து கோடி ரூபாய்தான் செலவழித்தார்கள், இரண்டு

கோடி ரூபாய் செலவழிக்காமலே விடப்பட்டிருக்கிறது என்று நாண் சுட்டிக்காட்டியபோது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தத் தொகை குடும்ப நலத் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அப்படிச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று திரும் பவும் பட்ஜட் மெமொரண்டத்தைப் பார்த்தேன். அதற்குத் திருப்திகர மான விளக்கத்தைக் காணேம். 12 கோடி ரூபாயையே செலவழிக்க முடி யாமல் இருந்த நிலையில் இப்போது 17 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பொதுச் சுகாதாரம் மிக முக்கியமான பிரச்சினை. இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் நல்ல முறையில் செலவழிப்பதில், நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் இந்த இலாகா கவனம் செலுத்த வேண்டும்.

மருத்துவ இலாகாவுக்கு வரும்போது எவ்வளவோ கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தாலும் நாலரைக் கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் ஆஸ்பத்திரிக்குச் சென்று மக்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ள படுக்கை வசதி 16,200 பேருக்குத்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது ரொம்பக் குறைவு. நாம் போய்ச் சேருவதற்கே பெரிய சிபாரிசு தேவையாக இருக்கிறது. சேர்ந்த பிறகு நோயைத் தீர்ப்பதற்கு எடுக்கின்ற சிரத்தையை விட சீக்கிரம் மறுபடியும் வீட்டுக்கு அனுப்பி வைப்பதற்குத் தான் பார்க்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு படுக்கைகள் என்று கணக்கை வைத்து அவ்வளவு பேர்தான் நோயாளிகள் என்று கருதக்கூடாது. சிலபேர் இரண்டு மூன்று நாளைக்குத் தான் இருப்பார்கள். சில பேர் ஒரு வாரம் இருப்பார்கள், சில பேர் 10 நாட்கள் 12 நாட்கள் இருப்பார்கள். ஆக, ஓராண்டுக்கு ஏறத்தாழ இரண்டு லட்சம் பேருக்குப் படுக்கை வசதியுடன் மருத்துவ சிகிச்சை கிடைக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : படுக்கை வசதி குறைவாக இருப்ப தால் 10 நாள் 15 நாள் இருந்து சிகிச்சை பெற வேண்டியவர்களை எல்லாம் சிபாரிசு, செல்வாக்கு இல்லையென்றால் அவசரப்பட்டு வெளியே அனுப்பிவிடு கின்றார்கள். ஆகவே, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து செலவழிக்க முடியவில்லை என்றாலும் ஹெல்த் ஃபண்ட் என்று ஆரம்பித்து —எப்படி கலாமிடிஸ் ரிலீப் பண்ட் என்று ஆரம்பித்திருக்கிறீர்களோ- அதே முறையில் ஆரம்பித்து ஐந்து ரூபாய் நன்கொடையானாலும், ஐந்து பைசா நன்கொடையானாலும் பெற்று அதிகமாக மருத்துவ வசதி தரும் வகையில் படுக்கை வசதிகளுடன் ஆஸ்பத்திரிகளைத் திறக்கவழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காச நோயாளிகள் 8 லட்சம் பேர் இருக்க டி.பி. சானடோரியத்தில் 320 பேருக்குத்தான் படுக்கை வசதி இருக்கிறது. அந்த நோய் ராஜ நோய், நடுத்தர மக்கள், அடித்தள மக்கள் வீட்டில் இருந்துகொண்டு மருந்து சாப்பிட்டு உடம்பைக் கவனித்துக் கொள்ள முடியாது. சத்துணவு இவர் களுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட நோயாளிகளுக்கு எவ்வளவு காலமானாலும் ஆஸ்பத்திரியில் இடம் கிடைக்க மாட்டேன் என்கிறது. கடைசியில், அடுத்த உலகத்திற்குப் போன பிறகுதான் இடம்



கிடைக்கும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. வீட்டுக்கு அனுப்பி மருத்துவ வசதி கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நோய் ஆரம்ப மாக இருந்தால் பரவாயில்லை....

திரு. நா. வீராசாமி : அடுத்த உலகத்திற்குப் போன பிறகுதான் இங்கு இடம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு இங்கு எங்கே இடம் வைத்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : செத்த பிறகுதான் இடம் கிடைக் கிறது. They get a letter that 'you may come and get yourself admitted.'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த உலகத்திற்குப் போனவர்களை மறுபடியும் ஏன் திரும்ப இழுக்கிறீர்கள் ?

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த உலகத்தில் வாழவேண்டு மென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். நீங்கள் அவர்களை அடுத்த உலகத் திற்கு அனுப்பி வைத்துக் விடுகின்றீர்கள். இந்தப் பாவத்தைக் குறைத் துக் கொள்ள முன்வாருங்கள்.

அடுத்தபடியாக, ட்ரக் கண்ட்ரோல். மருந்து சாப்பிட ஜனங்கள் பயப் படுகிறார்கள். சென்ற வருஷம் ஆகஸ்ட் மாதம் 30 குழந்தைகள் இறந்த பிறகுதான் மருந்திலே தகராறு என்று தெரிய வந்தது. ஒரு போலீஸ் அதிகாரி பி. காம்ப்ளெக்ஸ் போட்டதால் செத்துவிட்டார். இதனால் மக்கள் இன்று ஆஸ்பத்திரிக்குப் போகவே பயப்படுகிறார்கள். Drug control is your responsibility.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தயவுசெய்து அம்மையார் அவர்கள் விஷயங்களை முழுவதும் தெரிந்து குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும். ஆஸ்பத்திரியில் சாப்பிட்ட மருந்து காரணமாகக் குழந்தைகள் இறக்கவில்லை. வெளியே கடையில் வாங்கிச் சாப்பிட்ட மருந்து காரணமாக இறந்திருக்கின்றன. அந்த மருந்து இன்னது, இன்ன கோளாறு என்று மருத்துவமனையில் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்ற வாளிகள் இன்றைக்குத் தண்டிக்கப்படக்கூடிய நிலைமையில் உள்ளனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எப்படியும் மக்கள் மருந்து சாப்பிடப் பயப்படுகின்றார்கள். என்ன மருந்து கொடுப்பார்களோ, உயிருக்கு என்ன ஆகுமோ என்ற பயம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சில பேர் நன்றாக இருப்பவர்கள் பேசுகின்ற நேரத்திலேயே இருதய நோய் ஏற்பட்டு திடீரென்று இறந்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. அது போன்று ஏற்படுவதே இப்படிப்பட்ட நிலைமை களாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் பேசும்போது இறந்துவிட
மாட்டேன். என்னுடைய இருதயம் ரொம்ப பலமானது. உங்களைப்போல்
பத்து அமைச்சர்களுக்குக்கூட பதில் சொல்லக்கூடிய இருதயம் இருக்
கிறது. எதையும் தாங்கும் இதயம் இருக்கிறது. நீங்கள் கவலைப்பட
வேண்டாம். **Your drug control is very weak.**

அதிகமான ட்ரக் இன்ஸ்பெக்டர்களைப் போட்டு எங்கெங்கே மருந்துகள்
தயார் செய்கின்றார்களோ அங்கெல்லாம் கலப்படம் ஏற்படாமல் இருப்ப
தைக் கண்காணிக்கத் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு
அதற்காக 9 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த மூலையில்
இருக்கக்கூடிய மருந்து தயாரிக்கும் இடத்திற்கும் இன்ஸ்பெக்டர்கள் போய்
தக்க முறையில் பரிசோதனைசெய்து கலப்படம் இருந்தால் நடவடிக்கை
எடுக்க அதிகமான இன்ஸ்பெக்டர்களைப் போடவேண்டும். அதிகப் பணம்
ஒதுக்க வேண்டும்.

இப்போதுதான் **Full fledged drug - testing laboratories**
ஆரம்பிக்கப் போகிறார்கள். அதிகமான ஆய்வுக்கூடங்களை ஆரம்பிக்க
வேண்டும். இப்போது பி. பார்ம், படித்தவர்கள் வேலையில்லாமல் அவதிப்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வேலை கொடுக்கும்
அளவிலும் அதிகப்படியான ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தி மருந்துகளை
ஆஸ்பத்திரிகளிலேயே உற்பத்தி செய்யவும் வழி செய்து சரியான முறையில்
தரமான முறையில் தரமான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றனவா
என்றும் பார்க்கவேண்டும். அப்படி தரமான மருந்துகள் தயாரிக்கப்
படாது, தரமற்ற மருந்துகள் தயாரிப்பதைக் கட்டுப்படுத்துவதில்
தீவிர நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் அது எங்கே கொண்டு
போய்விடுமோ என்ற பயம் இருக்கிறது. சில ஆஸ்பத்திரிகளில் எக்ஸ்பயரி
டேட் ஆன மருந்துகளையெல்லாம் போடுகிறார்கள் என்று கேள்விப்படு
கிறேன். அப்படிப் போட்டால் அதன் விளைவு வேதனையில் கொண்டு போய்
விடும். இந்த நிலையில், பாவம் வாய் பேசத் தெரியாத பூச்சிகளுக்கு,
சமுதாயத்தில் வசதியற்று இருக்கக்கூடியவர்களுக்கு, அரசாங்க ஆஸ்பத்திரி
களை நம்பி வருகிறவர்களுக்குத் தகுந்த முறையில், நல்லமுறையில் அவர்
களுக்கு வைத்திய வசதி அளிக்க அரசு முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன்.
இந்த எக்ஸ்டென்ஷன் கொடுப்பது ரொம்பவும் தவறு. அடியில் இருப்ப
வர்கள் ப்ரமோஷன் பெற்று அந்த இடத்திற்கு வரவேண்டுமென்று நினைப்
பவர்களுக்கு வாய்பில்லாமல் மீண்டும் மீண்டும் எக்ஸ்டென்ஷன் கொடுத்
துக்கொண்டேயிருந்தால் அதற்கு என்ன பொருள் என்பது எனக்கு
விளங்கவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய அரசின் சார்பில்,
நிபுணர்களாக உள்ளவர்கள், துறையின் தலைவர்களாக உள்ளவர்கள்
இவர்களுக்கு 60 வயது வரையில் பதவி நீடிக்க வேண்டுமென்று
ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் 58 வயதுக்கு மேற்பட்டு



ஒரே ஒருவரை மட்டும்தான் வைத்துக்கொண்டிருக்கிறோம் **Upgraded
department**-ல். மத்திய அரசு 60 வயது வரையில் பதவியில்
இருக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லும்போது மாநிலத்தின்
நிலைமைக்கேற்ப, இன்றியமையாத நிலையில் தகுதி, திறமை உள்ளவர்களை
அந்த இடத்தில் நீடிக்கச் செய்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தகுதி உள்ளவர்களை, திறமை
உள்ளவர்களைப் பயன்படுத்திக் கொள்வது தவறு என்று சொல்லவில்லை.
அவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்காமல் வேறு எதாவது ஸ்பெஷல்
போஸ்ட்ஸ் க்ரியேட் செய்து, அவர்கள் ரொம்பவும் நிபுணர்களாக
இருந்தால் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வேண்டாமென்று சொல்ல
வில்லை. கண் ஆஸ்பத்திரியில் சூப்பரின்டென்ட்டென்ட் இருக்கிறார்.
அவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்தால் அடுத்தபடியாக இருப்பவருக்கு
ப்ரமோஷன் கிடைக்க வாய்ப்பு இருக்காது. மேலே உள்ளவர்களுக்கு
எக்ஸ்டென்ஷன் கொடுத்து உட்காரவைத்திருந்தால் அடியில் இருப்பவர்
களுக்கு எப்படி உற்சாகம் இருக்கமுடியும் என்று கேட்கிறேன். உங்கள்
அகராதிப்படி அவர் நிபுணராக இருந்தால் **Create special
posts and have them till 60 or till you want**
அதை வேண்டாமென்று சொல்லவில்லை. அடியில் இருப்பவர்களுக்கும்
வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். எனவே இந்த எக்ஸ்டென்ஷன் என்
பதே கூடாது. அரசாங்கத் துறையில் வேலை செய்பவர்கள் செனட் தேர்
தலிலும், சிண்டிகேட் தேர்தலிலும் நிற்பதற்கு வாய்ப்புக் கொடுக்கக்
கூடாது. வெளியே எவ்வளவோ டாக்டர்கள் இருக்கிறார்கள். பட்டதாரிகள்
இருக்கிறார்கள். தேர்தலில் ஈடுபட அனுமதித்தால் இலாகாவைச் சரியாகப்
பார்த்துக் கொள்ள அவர்களுக்கு நேரம் இருக்காது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது அரசியல் தேர்தல் அல்ல.
கல்வித் துறையில் அவர்கள் பெறவேண்டிய இடத்தைப் பெற்று ஆலோ
சனை வழங்குவதற்குப் பயன்படுகிறது. சென்னைப் பல்கலைக் கழக சிண்டி
கேட்டிற்கு மருத்துவத்துறையில் உள்ளவர்களின் ஆலோசனை மருத்துவக்
கல்விபற்றிக் கிடைக்கிறது. இந்த உரிமைகூடப் படித்தவர்களுக்கு, தகுதி
யுள்ளவர்களுக்கு, ஆற்றல் உள்ளவர்களுக்குக் கொடுக்காது பறித்து
விடுவது நல்லதுதானா என்று சொல்ல வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல்கலைக் கழகத் தேர்தலாக இருந்
தாலும்கூட இப்போது எக்கச்சக்கமான அரசியல் புகுந்துவிட்ட காரணத்தால்
தயவுசெய்து அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்களை இப்படிப்பட்ட தேர்தல்
களில் புக விடக்கூடாது. அப்படி அவர்கள் போகக் கூடாது என்று
முன்னால் ஜீ. ஓ. போட்டிருக்கிறார்கள். உங்களுக்கு வேண்டியவர்கள்
என்றால் ரூல்லை ரிலாக்ஸ் செய்கிறீர்கள். ஆகவே செனட் அல்லது
சிண்டிகேட் எந்தத் தேர்தலுக்கும் அவர்கள் போகவேண்டிய தேவை
யில்லை. வெளியே பல மருத்துவர்கள், பல நிபுணர்கள் இருக்கிறார்கள்,
அவர்கள் போய் ஆலோசனைகள் வழங்கட்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவக் கல்வித்துறை முழு
வதும் அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது. மருத்துவக் கல்வித் துறையில்
உள்ள யாரும் வெளியே இல்லை. கல்வித் துறையில் உள்ளவர்கள்
இடம் பெறுவதா இல்லையா? அனுமதி கேட்டவர்களுக்கு அனுமதி
வழங்கப்பட்டிருக்கிறது. கேட்டவர்கள் அனைவருக்கும் அனுமதி வழங்கி
யிருக்கிறோம். இதில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்றில்லை.
வேண்டாதவர்கள் ஒரு வேளை அனுமதி கேட்காமல் போயிருப்பார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்கள் தேர்தலில் இறங்குவது
தவறு. நிபுணர்களாக இருந்தால் அவர்களை வேண்டுமானால் நாமினேட்
செய்து கொள்ளுங்கள். செனட், சிண்டிகேட் என்று தேர்தல் வைக்க
வேண்டாம்.

திரு. நா. வீராசாமி : அம்மையார் அவர்கள் இரண்டு கொள்கைகளைக்
குழப்பிக் கொள்கிறார்கள். தேர்தலில் நிற்கக் கூடாது என்று சொன்னார்
கள். அடுத்து வேண்டுமானால் அவர்களை நாமினேட் செய்துவிட்டுப்
போங்கள் என்று சொல்கிறார்கள். நாமினேட் செய்த பிறகும்
அவர்கள் சிண்டிகேட் மெம்பர்கள்தான். நாமினேட் செய்துவரும்போது,
அந்த உரிமை இருக்கும் போது அவர்கள் தேர்தலில் நின்று வந்தால்
என்ன? அரசியல் நுழைந்துவிட்டது என்று சொன்னார்கள். ஒருவேளை
அம்மையார் போன பிறகு அரசியல் போயிற்றோ என்னவோ தெரியாது.
யூனிவர்ஸிட்டியைப் பொறுத்தவரையில் அது அரசியலுக்கு அப்பாற்பட்ட
ஒரு பாடியாகும். அதை அம்மையார் அவர்கள் கொஞ்சம் நினைவில்
வைத்துக் கொள்ள வேண்டும்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : அரசாங்க உத்தியோகத்தில் உள்ள
வர்களுக்கு இதை அவசியம் கொடுக்கக்கூடாது, அதாவது அவர்கள் தேர்த
லில் கலந்து கொள்ளக்கூடாது. அதனால் பல சிக்கல்கள் ஏற்படும்.
அத்தகைய சிக்கல்கள் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும். அடுத்தபடியாக
எப்போதும் நான் சொல்வது வழக்கம். தென் சென்னையில் ஒரு
ஜெனரல் ஆஸ்பத்திரி ஆரம்பியுங்கள் என்று சொல்லிக்கொண்டே
இருக்கிறேன். முன்பும் சொன்னேன். அப்போது காங்கிரஸ் அரசும்
கவனிக்கவில்லை. இப்போதுள்ள நிலையில் இவர்களும் கவனிக்க மாட்
டேன் என்று சொல்கிறார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனால் எக்கச்
சக்கமான கூட்டம். அதைப் பார்க்கும்போது உண்மையில் அவர்களுக்கு
நோய் போகுமா அல்லது இல்லாத நோய்கள் வந்துவிடுமோ என்ற சூழ்
நிலையில்தான் இருக்கிறார்கள். **Such insanitary conditions prevail.**
இப்போது ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தால் பாயில் படுக்க
வைத்திருப்பதை, வராந்தாக்களில் படுக்க வைத்திருப்பதைப் பார்த்தால்
மனம் வேதனைப்படுகிறது. எனவே ஸவுத் மதராஸில் ஒரு ஜெனரல்
ஆஸ்பத்திரியை அமைப்பதற்கு, இப்போதுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில்
உள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, அடையாறு அல்லது மைலாப்பூர்
பக்கத்தில் ஏதாவது வசதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து உடனடியாக



நடவடிக்கைகள் எடுத்தால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, இந்தியன் ஸிஸ்டம்
ஆப் மெடிஸின்ஸ், பாளையங்கோட்டை, முன்பு சர்வீஸ் கமிஷனில்
இருந்து பொறுப்புள்ள பதவி வகிக்கக்கூடாது என்று தள்ளப்பட்ட ஒரு
டாக்டரை மீண்டும் பொறுப்புள்ள பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள்
என்ற தகவல் எனக்கு வந்தது. அது எந்த அளவிற்கு உண்மை என்று
தெரியவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த மருத்துவர்பற்றி விசாரணை
நடைபெற்றுக் கொண்டிருந்தது. முடிவு எடுக்கப்படவில்லை. முடிவு
எடுக்கப்படாத காலத்தில் அவர்களுக்குத் தரவேண்டிய சில உரிமைகள்
தரப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. விசாரணை வைக்கப்பட்டு,
தரவேண்டிய தகுதியைத் தந்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்த விசாரணையின் முடிவு என்ன
என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட
வில்லை. அந்தக் குற்றச்சாட்டுக்கூட மிகவும் அற்பத்தனமான குற்றச்சாட்டு.
அப்படியெல்லாம் ஒரு டாக்டரை இழிவுபடுத்துவது தவறு.

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்கு வந்த தகவலை நான் உங்கள்
கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன், மக்கள் பிரதி
நிதி என்ற முறையில். விசாரணை ரிப்போர்ட் உங்களிடம்தான் இருக்கிறது,
என்னிடம் இல்லை. ஆகவே சரியான முடிவு எடுக்கப்பட்டதா, சரியான
முறையில் நியமிக்கப்பட்டாரா என்று கேட்கிறேன். சரியான முறையில்
செய்திருந்தால் வரவேற்கிறோம். அடுத்தபடியாக, இந்த இலாகாவில்
ஒதுக்கப்பட்டிருக்கிற சில வேலைகள் எல்லாம் குறித்த காலங்களில் செய்து
முடிக்கப்படுவதில்லை, செய்யப்படுவதும் இல்லை. உதாரணமாக, **Steam
laundries in the city hospitals** 1966-ல் ஆரம்பிக்கப்பட்டு
இன்று 73 வரையில் அந்த லாண்ட்ரி வேலைகள் செய்து முடிக்கப்பட்டிருக்
கின்றனவா என்றால் இல்லை. உங்களுக்குத் தெரியும் ஸ்டீம் லாண்ட்ரீஸ்
ஆஸ்பத்திரிகளில் எந்த அளவிற்கு அவசியமானவை என்று. ஆஸ்பத்திரி
களில் உள்ள படுக்கைகள் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டுமென்று
ஆசைப்படுகிறோம். ஆனால் இப்படிப்பட்ட ஸ்டீம் லாண்ட்ரீஸ்க்கு பணம்
ஒதுக்கிவிட்டு 66-ல் வேலைகளை ஆரம்பித்து இன்னும் முடியவில்லை என்றால்
இப்படிப்பட்ட சிறிய ஸ்டீம் லாண்ட்ரீஸ்-ல் கூட இவ்வளவு அக்கறை இல்லாத
முறையில் இலாகாவை நடத்திவருகிறார்களே என்பதை இந்த அரசாங்கம்
யோசிக்க வேண்டும். புதுப்பாண்டியில் ஒரு ஆஸ்பத்திரியில் அவசியமான
தேவைகள் இல்லாத நிலை இருக்கிறது. இப்படி சின்னச் சின்ன காரியங்
களில்கூட காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன? அந்த இலாகா
என் அப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து உடனடியாகத் தக்க நட
வடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பொதுச் சுகாதாரம். காப்பிடல் அவுட் லே-யை குடி
நீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றிவிட்டார்கள். குடிநீர் வடிகால்
வாரியத்தில் வேலைகள் என்ன எப்டி எப்படி நடக்கின்றன, எப்படிக்

கண்காணிக்கப்படுகிறது என்பதெல்லாம் தெரிவதில்லை. எலக்ட்ரிஸிட்டி
போர்ட் என்றால் அது குறித்த அறிக்கை சபை முன்னால் வைக்கப்படுகிறது.
ஆண்டுக்கு ஒரு முறை அது பரிசீலிக்கப்பட்டு என்னென்ன நடக்கின்றன,
என்னென்ன நடக்கவில்லை என்று தெரிகிறது. ஆனால் இந்த குடிநீர்
வடிகால் வாரியம்பற்றிய அறிக்கை நம்முன் வருவதில்லை. எப்படி
எப்படி, என்ன என்ன வேலைகள் நடக்கின்றன, என்னென்ன முறை
யில் டெண்டர்கள் விடுகிறார்கள் என்பவற்றை எல்லாம் பரிசீலித்துப்
பார்த்து சட்டசபையில் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பில்லாமல் இருக்
கிறது.

ஆகவே, ஏதாவது வழிவகைகள் வகுத்து குடிநீர் வடிகால் வாரியம்
வேலைகள் பற்றிய அறிக்கையை இந்தச் சட்டசபை முன் வைத்தால் எந்த
முறையில் நாம் பொது சுகாதாரத்தைக் கவனித்து வருகிறோம் என்பதை
அறிந்து கொள்ள வழி பிறக்கமுடியும். இன்று தமிழ்நாட்டில் மிக
முக்கியமான யாத்திரை ஸ்தலங்கள் இருக்கின்றன. அவ்விடங்களில் உட
னடியாகக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் சாக்கடை வசதிகளையும்
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

யாத்திரை ஸ்தலங்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போய்க்
கொண்டிருக்கிறார்கள். இந்த வசதிகளை நாம் செய்து கொடுக்காவிட்டால்
அவ்விடங்கள் தொத்து நோய்களுக்குப் பிறப்பிடமாக ஆகக் கூடிய நிலை
ஏற்படும். நோய் ஏற்பட்ட பிறகு அதைத் தீர்க்கப் பணம் இல்லையே,
மருந்துகள் இல்லையே என்று சொல்வது எப்படி நியாயமாக இருக்கும்
என்று கேட்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் கவனித்து
பிற்பகல் 12—30. செய்ய வேண்டும். பி. பார்மா மாணவர்களுக்காக நம்முடைய முதல
மைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த போது எவ்வளவோ வாதாடி
யிருக்கிறார்கள். மந்திரிகள் குறைகள் எவ்வளவு வேகமாக தீர்க்கப்படு
கிறதோ அதைப்போல் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்
னார்கள். அவர்களே, இப்போது முதலமைச்சராகப் பதவியில் இருக்கிற
போது, அந்த பி. பார்மா மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை
எம். பார்மா கோர்ஸ் ஏற்படுத்தித் தருவதை என் உடனடியாக செய்துக்
கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதே ஆண்டில் எம். பார்மா
தொடங்குவதற்காகப் பல்கலைக் கழகத்தின் அனுமதியைக் கேட்டிருக்கி
றோம். அனுமதி வந்தவுடன் தொடங்கப்படும். தற்போது அவர்களு
டைய குறை, வேலை கிடைக்கவேண்டுமென்பதாகும். வேலைக்கு முன்பு
பயிற்சி தேவை. பயிற்சி இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம்
எடுத்து வரும் நடவடிக்கைகளை உணர்ந்து அந்த மாணவர்கள் வேலை
நிறுத்தத்தை நிறுத்தி விட்டதாக கூறியுள்ளார்கள். அம்மையார் அவர்
கள் அரசாங்கம் என்ன செய்து இருக்கிறது என்பதை அறிந்துக்கொண்டு,
முதலமைச்சர் அவர்கள் சுறுசுறுப்பாக இருக்கிறார்களா என்பதைத்
தெரிந்துகொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





திருமதி த. ந. அனந்தநாயகி: இன்று காலையில்கூட அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அம்மையாருக்கு யார் யார் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்ற தகவல் தினம் காலையில் வரும்போல் இருக்கிறது. நேற்றையதினம் அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தி விட்டதாகச் சொன்னார்கள். மதுரையிலும், உண்ணாவிரதத்தை நிறுத்தி விட்டார்கள் 1 வாரத்திற்கு முன்பு. நேற்றைய தினம் சென்னைக் கல்லூரியில் நிறுத்துவதாகச் செயலாளரிடம் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் இதுவரை எடுத்து இருக்கிற காரியங்களை அவர்கள் அறிவார்கள், அறிந்த பிறகுதான் அவர்கள் அதை நிறுத்தியிருக்கிறார்கள். அதைப் பற்றி பின்னாலே அறிவிக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நாங்கள் எதிர்க் கட்சிக்காரர்களாக இருப்பதால் எங்களுக்குச் சில தகவல்கள் வரும். அவற்றை உங்கள் நன்மைக்காகத்தான் தருகிறேன். அதை நீங்கள் பரிசீலித்து எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் சொல்வதை எடுத்துக்கொள்ளவில்லை யென்றால், அதன் பலாபலன்களை நீங்கள்தான் அனுபவிக்கப் போகிறீர்கள். இவ்வளவு பணத்தை இதற்காக ஒதுக்கி இருக்கிறீர்கள், இதை நல்ல முறையில் செலவிட்டு, சீரான முறையில் மக்களுக்குச் சேவை புரியவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் கோரியுள்ள இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மானியத்தைப் பொறுத்த வரை ரூ. 48 கோடியை நம்முடைய தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவு செய்ய முன்வந்திருப்பதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே துவக்கப்பட்டு இருக்கும் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் பலவற்றிற்குக் கட்டடங்கள் இல்லை. ஆண்டு ஒன்றுக்குச் சில பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மட்டும்தான் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. என்னுடைய தொகுதியில், திருத்தணியைப் பொறுத்த வரையில், இருக்கின்ற மூன்று பிரைமரி ஹெல்த் சென்டர்களில் ஒன்றுக்குக் கூடக் கட்டடம் இல்லாமல், பேமிலி பிளானிங் கட்டடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குத் தனிக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குப் போடப்படும் பெண் டாக்டர்கள் வேலைக்கு வந்து சேருவதில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால், என்னுடைய தொகுதியில் இருக்கின்ற பிரைமரி ஹெல்த் சென்டருக்குப் போட்ட பெண் டாக்டர்கள் ஒருவரும் வந்து சேரவில்லை. இதன் காரண

மாக அங்கேயுள்ள பெண்கள் மருத்துவ வசதி பெற முடியாமல் இருக்
கிறார்கள். இதைக் கவனத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரை
மரிஹெல்த் சென்டருக்கான சப்-சென்டர்கள் 10,000 ஜனத் தொகை
உள்ள இடத்தில் மட்டும்தான் அமைக்கிறார்கள். இது அந்தப் பகுதியில்
உள்ள மக்களுக்குப் போதுமான வசதிகளைத் தருவதாக இல்லை. ஆகவே,
குறைந்தது 5,000 ஜனத் தொகை உள்ள இடங்களில் சப்-சென்டர்கள்
அமைத்தால் அதன் பலனை அந்தக் கிராம மக்கள் நல்ல வசதியைப்
பெற முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பிரசவ
விடுதிகளை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும். இதனால் ஆங்காங்கு வாழ்
கிற பெண்களுக்கு நல்ல வசதி செய்து கொடுத்தது போல் இருக்கும்.
இந்த விஷயத்தில் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அதோடு, படுக்கை வசதிகளையும் அதிகப்படுத்தினால்
நல்லது.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் நம்முடைய தமிழகம் தான் இந்தியாவி
லேயே முதலிடம் வகிக்கிறது என்பதைக் கூறிக்கொள்வதில் உண்மையி
லேயே பெருமைப்படுகிறேன். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு குடும்ப நலத்
திட்டம் நல்ல முறையில் வளர்ந்து விளங்கி நிற்கிறது என்பதை நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு நா. வீராசாமி—தலைமை.)

என்னுடைய தொகுதியில் திருத்தணியில் தாலூகா ஹாஸ்பிடல்
கட்டாமல் 7—8 ஆண்டுக் காலமாக இருக்கிறது. இடம் தேர்ந்தெடுப்பதில்
சிக்கல் இருந்தது. இப்போது 2—3 மாதங்களுக்கு முன்புதான் இடம்
தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே,
விரைவில் அங்கே தாலூகா மருத்துவ மனையைக் கட்ட நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், பள்ளப்பட்டில் ஒரு ரூரல் மருத்துவமனை
இருக்கிறது. இருபது ஆண்டு காலமாக அது அந்த நிலையில் இருக்கிறது.
அதை அரசு மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று பல விண்ணப்
பங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அரசு எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்
எங்கள் தொகுதியில் நெசவாளர்கள் அதிகமாக உள்ள வெங்கலூரில் ஒரு
மருத்துவ விடுதி கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்
கள் மத்திய அரசோடு பேசி ஒவ்வொரு யூனியனுக்கும் இரண்டு பிரைமரி
ஹெல்த் சென்டர்கள் வைப்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகக்
கேள்விப்பட்டேன். அதுபற்றி என்ன முடிவாயிற்று, நம்முடைய
மாநிலத்தில் உள்ள எல்லா யூனியனுக்கும் இரண்டு பிரைமரி ஹெல்த்
சென்டர்கள் வருமா என்று எடுத்துச் சொன்னால் அதை மக்கள் நல்ல
முறையில் வரவேற்பார்கள் என்று கூறிக்கொண்டு, இந்த மானியத்தை
வரவேற்று என் உரையை முடித்து அமைகிறேன். வணக்கம்.





*திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்
கும் மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கின்ற
வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு
கின்றேன். மருத்துவ மனையில் நடக்கும் குறைகள் பல இருந்தாலும்,
இந்த மானியத்தில் மிகவும் விரிவான முறையில், மிகவும் கஷ்டப்பட்டு
எல்லா விவரங்களையும் சுட்டிக்காட்டி இருப்பதற்காக என்னுடைய நன்றி
யையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறைகளும், குற்றங்களும் தொடர்ந்து மருத்துவ மனைகளில் இருந்து
கொண்டுதான் வருகின்றன. இன்றைக்கு நேற்றைக்கு என்று சொல்வதற்கு
இல்லை. அது அப்படியேதான் இருந்துகொண்டிருக்கும் என்பதில் சந்
தேகம் இல்லை. படுக்கை எண்ணிக்கை மருத்துவ மனைகளில் அதிகப்
படியாக இருக்கிறது. இதிலே ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன்.
தற்போது டாக்டர்-நர்ஸஸ் ரேஷியோ, பேஷண்ட்-டாக்டர் ரேஷியோ பார்க்
கிறபோது அயல் நாடுகளில் இருப்பதைக் குறிப்பிடுவதைவிட, நம்மால்
நம்முடைய சக்திக்கு ஏற்றவாறு எந்த அளவில் செய்யலாம் என்பதை
எடுத்துக் கூற விரும்புகிறேன். 150 செவிலியர்களுக்கு நாம் ஆண்டு
தோறும் பயிற்சி கொடுக்கிறோம். அதை அதிகப்படுத்தித் தற்போது மருத்
துவ மனைகளில் இருப்பதைவிட ஒரு பங்கு அளவு செவிலியர்களைக் கூட்டி
னால் அதனால் பெரும் அளவுக்கு நோயாளிகளுக்குப் பணியாற்றுவ
தற்கு இயலும். ஓரளவு நோயாளிக்கும் தற்போது அளிக்கும் மருத்துவ
வசதியைவிட அதிகம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

என்னுடைய தொகுதி ஸ்ரீரங்கத்தில் உள்ள மருத்துவ மனையைப்
பார்த்தால் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. ரிபேர்ஸ்
ஆண்டுகளிருக்கும். அங்கே
கிடையாது. வெள்ளை அடித்துப் பல பயனில்லை. ஒரு நல்ல
பணியாற்றுகிற மருத்துவர்களைக் குறைகூறிப் ஊக்கம் அளிக்கும் மருத்துவரை
மருத்துவரை அங்கே போட்டால், ஒரு என்று சொல்லிக்கொள்கிறேன்.
அங்கே போட்டால், நன்றாக இருக்கும் வேண்டுமென்று இந்தச்
படுக்கை எண்ணிக்கையையும் அதிகப்படுத்த
சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கிராம மக்களுக்கு
மருத்துவ வசதி தேவையென்றால் திருச்சிக்கு வரவேண்டிய அவசியம்
ஏற்படுகிறது. நான் சென்ற முறையே கேட்டிருந்தேன். கம்பரசம்
பேட்டையில் ஒரு பிரதம சுகாதார நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தால்,
அங்கேயுள்ள கிராம மக்களுக்கு அத்தியாவசிய சிகிச்சை அளிக்க ஏதுவாக
இருக்கும். அதைச் செய்து தரவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து நாம் சைல்டு ஹெல்த் புரோகிராம் ஆரம்பித்ததன் காரணம்,
நம்முடைய வருங்கால மக்கள், நாட்டின் பிரஜைகள், நாட்டை ஆளக்
கூடிய வாய்ப்பைக் கொண்டவர்கள் என்று கூறும்போது, குழந்தைகளின்
சுகாதாரம் அத்தியாவசியம் ஆகிறது. இப்போது ஒருசில டாக்டர்களைப் போட்டு,
வாரத்தில் 5 முறை குழந்தைகள் பள்ளிக்குச் சென்று குழந்தைகளை

எக்ஸாமின் செய்து, வியாதியைக் கண்டுபிடித்து, வியாதிகளுக்கு சிகிச்சை
அளிக்கின்ற வகையில் மருத்துவ செல்கள் ஆரம்பிக்கப்பட்டு மருத்துவ மனை
களுக்கு அனுப்பப்படுகிருர்கள் சிகிச்சைக்கு. இப்படி ஒரு புறம் அவர்களுக்கு
வியாதி வராமல் தடுக்கவும், ஏற்கனவே வியாதி இருக்கின்ற பிள்ளைகளுக்கு
சிகிச்சை அளிக்கவும், சுகாதார வாழ்வு வாழவும், வழி செய்யவும் போதிய
அளவு பணம் ஒதுக்கும்போது, ஒன்றை நமது மாண்புமிகு கல்வித்துறை
அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன்.

நாம் கார்ப்பரேஷன் பள்ளிகளில் கொடுக்கிற மதிய உணவு எந்த அள
வில் சுகாதார முறையில், சக்தியுள்ள உணவாக இருக்கிறது என்பதைப்
பார்க்க வேண்டும். நான் பல பள்ளிகளில் பார்த்திருக்கிறேன். மெயின்
ரோட்டுக்குப் பக்கத்தில் பல பள்ளிகள் இருக்கின்றன. ரோட்டில் போக்கு
வரத்து பேருந்துகள் சென்றுகொண்டிருக்கின்றன. பிள்ளைகளுக்குச் சாப்
பாட்டைக் கொடுக்கும்போது, ரோட்டில் வைத்து சாதம் போடுகிருர்கள்.
இந்தப் பேருந்துகள் போகும்போது கிளப்புகின்ற மண், புழுதி, குழந்தை
கள் சாப்பாட்டில் கலக்கிறது. தயிர் சாதம் ஒரு நாளைக்குக் கொடுக்கிருேம்
என்று சொல்லி, அது வெறும் கஞ்சித் தண்ணீர் சாதமாக இருந்ததைப்
பார்த்தேன். அதை இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளு
கிறேன். சைல்டு ஹெல்த் புரோகிராம் என்று வைத்துக்கொண்டு,
குழந்தைகளுக்கு நாமே வியாதியை உற்பத்தி செய்கிற அளவுக்கு
உணவு கொடுக்கிருேம் என்ருல், அதை உடனடியாக அரசு கவனிக்க
வேண்டும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பல மருத்துவ மனைகளிலிருந்து
School health programme-க்கு போடுகிருர்கள். டாக்டர்களை
கள் வேலையில்லாமல் இருக்கிருர்கள். எத்தனையோ டாக்டர்
என்னவென்ருல், அப்படியே வேலையில்லாமல் நான் கூறுகின்ற யோசனை
பார்ட் டைம் வேலையாகக் இருக்கின்ற டாக்டர்களுக்கு
இந்த வேலையில் அமர்த்திஞல், குழந்தைகளைப் பரிசோதிப்பதற்கு அவர்களை
வேலை செய்வார்கள். மிகவும் ஊக்கத்தை எடுத்துக்கொண்டு
பார்ட் டைம் டாக்டர்கள் மருத்துவ அவர்களுக்கு Honorarium கொடுக்கலாம்.
பார்க்கிருர்கள். போர்செப்ஸ், மனையிலிருந்து சென்று குழந்தைகளைப்
கிருர்கள். குழந்தைகளைப் டங் பிரஸ்ஸர்ஸ் எல்லாம் எடுத்துச் செல்லு
யோகித்துப் பரிசோதிக்கும்போது, பரிசோதிக்க. அப்படி அந்தக் கருவிகளை உப
களுக்கு எந்த உதவியாளர்களும் அவற்றை ஸ்டெரிலைஸ் செய்வதற்கு அவர்
ஆயாவோ, அவர்களுடைய இல்லை. ஒரு அசிஸ்டெண்டோ,
குழந்தையின் தொண்டையில் உதவிக்கு இல்லாத காரணத்தால், ஒரு
தைக்குத் துணியில் துடைத்துவிட்டு வைக்கிற டங் பிரஸ்ஸரை மற்ருெரு குழந்
ஏற்பட வழி ஏற்படுகிறது. வைக்கிருர்கள். அதனுல் இன்பெக்ஷன்
களுக்கு பார்ட் டைம் ஊதியம் ஆகவே, வேலையில்லாமல் இருக்கின்ற டாக்டர்
கொடுத்து இந்த சைல்டு கொடுத்து, அவர்களுக்கு அசிஸ்டென்ஸ்
என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஹெல்த் புரோகிராமைச் செய்தால் நல்லது
அவர்கள் இந்த வேலையைச் ஏனென்ருல், வாரத்தில் 5 தினங்கள்
மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த
செய்தால் அவர்கள் தவருமல் இந்த வேலையைச



செய்ய முன்வருவார்கள். அதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ருென்று, இந்தியன் சிஸ்டம்
ஆப் மெடிகல் எனக்கு இதில் ஒரு பெரும் மகிழ்ச்சி.

இங்கே எனக்கு முன்பு பேசியவர்கள்கூட அதைக் கூறிஞர்கள்.
இந்திய மருத்துவ முறைக்கு இன்றைக்குப் பெருமளவில் எழுச்சியை
உண்டாக்கி, பல மருத்துவ மனைகளில் தனியாக இந்திய மருத்துவப்
பிரிவு என்று ஒன்று ஏற்படுத்தி மருத்துவ சிகிச்சை அளிக்கிருர்கள். எனக்கு
எல்லாவற்றையும்விட அதிக மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்னவென்ருல்,
போஸ்ட் கிராஜுவேட் டிரையினிங் of Research schemeஐ, சென்டிரலி
ஸ்பான்சர்ட் Scheme ஆக, Centre ஏற்றுக்கொண்டு அவர்களே
செலவை முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டிருப்பது அதிசயத்திலும்
அதிசயம். மத்திய அரசு இப்படி ஒரு சித்த வைத்திய முறை
இருப்பதையே ஒத்துக்கொள்ள மறுத்துவந்த நிலை போக, இன்றைக்கு
டிரைனிங்குக்கும் ரிசர்ச்சுக்கும் பணம் கொடுத்து உதவும் நிலைக்கு வந்திருக்
கிருர்கள் என்ருல் அது உள்ளபடியே இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு
சுகாதார அமைச்சர் அவர்களின் அதிர்ஷ்டம் என்றுதான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். மேலும் பல சித்த மருத்துவசாலைகளை ஹிந்து ரிலிஜியஸ்
என்டௌமெண்ட்ஸ் மூலமாக ஏற்படுத்தியிருக்கிருர்கள். அவற்றில்
பி.ஐ.எம். பட்டப்படிப்பு படித்தவர்களை மருத்துவர்களாகப் போட்டால்
நன்ருக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பி. பார்மசி மாணவர்கள், பி. டி. எஸ். மாணவர்கள்,
ஆஸ்பத்திரியில் உள்ள கடைநிலை ஊழியர்கள் (லாஸ்டு கிரேட் ஹாஸ்பிடல்
ஒர்க்கர்ஸ்), ஹவுஸ் சர்ஜன்கள் இவர்கள் எல்லாம் அடிக்கடி ஸ்டிரைக்
செய்கிருர்கள். இந்த ஸ்டிரைக் ஒரு வியாதி போல் பரவிக்
கொண்டு வருவதைப் பார்க்கிறபோது ஒரு தடுப்பு......................
(ஒரு குரல் : “ஊசி போடவேண்டும் என்கிறீர்களா ?”) ஊசியிருந்
தால் போட்டால் வரவேற்கத் தக்கது. ஒரு தடுப்பு மேற்கொள்ளவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். லாஸ்டு கிரேட் ஹாஸ்பிடல் ஒர்க்கர்ஸ்களைப்
பொறுத்த மட்டில் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேல் தளத்
தில் இருக்கின்ற டாக்டர்கள், டீன், சூப்பிரெண்டுகள், இவர்கள் எல்லோ
ரும் நாம் ஏதோ ஆஸ்பத்திரியில், மருத்துவக் கல்லூரியில் டீன், சூப்பி
ரெண்டுகளாக இருக்கிருேம்., ஆகவே கீழ்தளத்தில் இருப்பவர்களை மதிக்
கக் கூடாது என்று நினைத்தால், அதன் காரணமாகக் கீழ் மட்டத்தில்
இருப்பவர்களிடம் ஒருவித எழுச்சி ஏற்பட்டு ஸ்டிரைக்குகள் ஏற்படுகின்றன.
அவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்ருல், நாம்தான் மருத்துவ
மனைகளில் கஷ்டப்படுகிருேம் என்று நினைக்கிருர்கள். கஷ்டப்படுகிறவர்
கள் கீழ்தளத்தில் இருப்பவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களை
நாம் பகைத்துக் கொண்டால் மருத்துவ மனைகளில் எந்தவிதப் பணியை
ஆற்றமுடியும் என்பதை மருத்துவர்கள் அறிந்திருப்பார்கள் என்று
நினைக்கிறேன். குறைந்தது 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை
மேல்தளத்தில் இருக்கின்ற மருத்துவர்கள், டீன்கள், சூப்பிரண்டெண்டுகள்,
டாக்டர்கள் கீழ்தளத்தில் இருக்கிற ஊழியர்களைக்கூப்பிட்டு, சாதாரண
மாகத் தங்கள் குடும்பத்தில் இருக்கின்ற ஒருவரிடம் பழகுவதுபோல் பழ

அவர்களுக்கு என்ன கஷ்டங்கள் இருக்கின்றன, என்னென்ன வசதிகள் வேண்டும் என்றெல்லாம் கேட்டறிந்து, அவற்றிற்கு ஆவன செய்ய அரசிற்கு சிபாரிசு செய்யவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன். பல குறைகள் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள்மீது இருக்கலாம். அவைகளை எல்லாம் டாக்டர்கள் சமாளித்துக்கொண்டு, மருத்துவ மனை களில் வேலைகள் தடைபடாமல் இருப்பதற்காக, தொடர்ந்து கீழ்மட்டத்தில் உள்ள ஊழியர்களோடு நல்லுறவு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பூந்தமல்லி ஹைரோட்டில், London Harlery Street-ல் இருப்பது மாதிரி தனிப்பட்டவர்கள் மருத்துவ மனைகள், அறுவை சிகிச்சை மனைகள் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் பல பார்மசிகள் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற இடத்தில் இந்த மருத்துவ மனைகளுக்கும் பார்மசிகளுக்கும் இடையே ஒரு சாராயக் கடை வந்திருக் கிறது. அதை தயவுசெய்து எடுத்துவிட உத்திரவு பிறப்பிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்களுடைய கட்சியின் சார்பில் திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**To discuss tdo necessity to expand the Kulasekaram Government Hospital in kanyakumari district.**

காங்கிரஸ் ஆட்சியிருந்தபோதே, நான் அமைச்சராக இருந்தபோதே அந்த ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த வேண்டுமென்ற புரபோசல் இருந்தது, அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. அது ஏறத்தாழ 30,000 மக்கள் இருக்கிற ஏரியா. அதற்குப் பக்கத்தில் பிளாண்டேஷன் தொழி லாளிகள் இருக்கிறார்கள். ஆகவே அரசு அதைக் கவனித்து விரிவு படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாகர்கோவில் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிட்டல் எக்ஸ்பான்ஷன் செய்யப் படுவதுபற்றி ஒரு புரபோஸல் இருந்தது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதையும் சேர்த்து நிறைவேற்றி, கன்னியாகுமரி ஜில்லா வையும் சற்று கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்பு மிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

டி. பி. ஆஸ்பத்திரிகள் இப்போது நல்லமுறையில் செயல்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுகுறித்து மகிழ்ச்சியடைகிறேன். டி. பி. சிகிச்சை நல்லமுறையில் நடைபெறுவதற்கு அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். ஆனால் அவர்களுக்கு இப்போது ஒரு குறை இருப்பதாகத் தெரிகிறது. டி. பி. ஆஸ்பத்திரிகளில் பணி யாற்றக்கூடியவர்களுக்கு "ரிஸ்க் அலவன்ஸ்" என்று கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது பல மாதங்களாக அந்த அலவன்ஸ் கொடுக்கப்பட வில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைப்பற்றி பலர் பேசினார்கள். மாண வர்கள் விரும்பவில்லை; தொழிலாளர்கள் விரும்பவில்லை; எதிர்க்கட்சி யினர் விரும்பவில்லை என்றெல்லாம் பார்த்து காரியங்களைச் செய்வதாக



இருந்தால் நல்லமுறையில் எதையும் செய்ய முடியாது. அவர்கள் எல்லாம் மாற்றச் சொல்கிறார்கள் என்பதற்காக செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை மாற்றிவிடக் கூடாது. பெற்றவளுக்குத்தான் பிள்ளையின் அருமை பற்றித் தெரியும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், எங்கள் முத லமைச்சரிடம் வாதாடி, இந்த மருத்துவக் கல்லூரி அங்கே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அப்போதைய முதலமைச்சரின் சகலர் அந்த மாவட்டத்தில் இருக்கிறார் என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி அது அங்கே ஏற்படுத்தப் பட்டது (சிரிப்பு). உண்மையை ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும். அங்கே வசதிகள் போதவில்லை என்று மாணவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமே தவிர, அந்தக் கல்லூரியை அங்கிருந்து மாற்றக்கூடாது என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: அங்கே சிகிச்சைப் பெறுவதற்கு போதுமான நோயாளிகள் வரவில்லை; அதனால் சிறந்த முறையில் நாங்கள் பயிற்சி பெற முடியவில்லை என்று மாணவர்கள் சொல்கிறார்கள். அதனால் 5-வது ஆண்டில் படிக்கும் மாணவர்களுக்கும், ஹவுஸ் சர்ஜன் களுக்கும் சென்னையிலேயே பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைத்தவிர அந்தக் கல்லூரியை மாற்றிவிடும் உத்தேசம் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மருத்துவக் கல்லூரியை மாற்ற வேண்டும் என்று அரசாங்கம் கனவில்கூட நினைக்கக்கூடாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு பிரச்சனை. அனிமல் நோய் பிடித்து ஒருவர் மதுரை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறச் சென்றார். அவரை உள்ளே விடவில்லை. அவர் ஆஸ்பத்திரி கேட்டிலேயே நின்றுகொண்டு, திரும்பி வந்துவிட்டார். வியாதி பிடித்து சிகிச்சைப் பெறச் சென்றவருக்கு சிகிச்சை அளிக்காமலே திருப்பி அனுப்புவது முறையல்ல. இந்தச் செய்தி பத்திரிகையிலே வந் திருக்கிறது. அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: அது பத்திரிகையிலே விளம்பரமாக வந்த செய்தியே தவிர உண்மையல்ல. உண்மையிலேயே அந்த நோய் விலங்குகளோடு பழகியதாலேயே வருவதில்லை என்றும் நோயினால் இறந்த விலங்குகளின் இறைச்சியைச் சாப்பிட்டால்தான் அந்த மாதிரி நோய் வரலாம் என்றும் மருத்துவ நிபுணர் தெரிவித்திருக்கிறார். மேலும் மருத்துவ மனை கேட்டுகள் எல்லாம் இரவில் 10 மணிக்கு மூடி, காலை 5 மணிக்குத் திறக்கப்படுகின்றன. எந்த நேரத்தில் ஒருவர் கேட்டிலே போய் நின்றிருப்பார் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். தாங்களும் சுகாதார அமைச்சராக இருந்திருக்கிறீர்கள்; இதுபற்றி நன்றாக அறிந்திருப்பீர்கள். பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்க வேண்டும் என் பதற்காக இவ்வளவு பிரமாதப்படுத்தி இருப்பார்களேயானால் அதற்காக நான் வேதனைப்படுகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பத்திரிகையிலே வந்த செய்தி, அதை வைத்துத்தான் நான் சொல்கிறேன். எப்படியும் உண்மை வர வேண்டும் என்பதற்காகத்தான் மன்றத்திலே குறிப்பிட்டேன்.

இன்னொன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மருத்துவ மனை களில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளை, அவர்களின் நோய் பூரணமாக குணமாகாமல் டிஸ்சார்ஜ் செய்துவிடுகிருர்கள் என்ற பெரும் புகார் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக அந்தந்த மருத்துவ மனைகளில் இருக்கக்கூடிய டாக்டர்களும் மற்ற அதிகாரிகளும் முக்கிய மாகக் கவனம் செலுத்தி அப்படியெல்லாம் நடைபெருமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வியாதியஸ்தர்களுக்கு சிகிச்சை அளித்து, முற்றி லும் குணமடைந்த பின்னுல் அவர்களை டிஸ்சார்ஜ் செய்ய வேண்டும். அப்படி டிஸ்சார்ஜ் செய்யும்போது அவர்களின் குறிப்புச் சீட்டில் "ஃபிட் ஃபார் டிஸ்சார்ஜ்" என்று எழுதிக் கொடுத்துவிட வேண்டும். அதற்கு எற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் தினமும் ஜெனரல் ஆஸ்பத்திரி பக்கம் செல்லக்கூடிய வாய்ப்பு எனக்கு இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன் அசெம்பிளி முடிந்து நான் சென்று கொண்டிருக்கும்போது, ஒரு வயோதிகர் ஆஸ்பத்திரிக்கு வெளியே "வீல் செயரில்" General Hospital platform gate பக்கத்தில் இருந்தார். அவருடைய உறவினர்கள் யாரும் இல்லாமல், அவரை நல்ல வெயில் வேளையில் டிஸ்சார்ஜ் பண்ணி, அங்கே கொண்டுவந்து. விட்டுவிட்டுப் போய்விட்டதாகச் சொன்னுர், அவரை அழைத்துச் செல்வதற்கு யாரும் வரவில்லை. அங்கேயே இருந்தார். நான் எதுவும் செய்யமுடியாத நிலையில், என்னுடைய கார் டிரைவரை இறங்கி அங்கே இருந்து, அந்த வயோதிகரை உறவினர் யாராவது வந்து அழைத்துச் செல்லும் வரை பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, நான் போய் விட்டேன்.

அதைப்போன்று இந்த "உமன் அண்டு சில்ரன்" ஆஸ்பத்திரியிலும் செய்து விடுகிருர்கள்: நோயாளியின் உறவினர் யாரும் இல்லாமல் இருக்கும்போது டிஸ்சார்ஜ் செய்யக்கூடாது. காலையில் 11 மணிக்கு அல்லது மாலையில் 3 மணிக்கு டிஸ்சார்ஜ் செய்கிருர்கள். டிஸ்சார்ஜ் செய்வதற்கு ஒரு நாளைக்கு முன்னதாகவே வியாதியஸ்தர்களின் உறவினர் களிடம் நாளை இந்த நேரத்தில் டிஸ்சார்ஜ் செய்துவிடுவோம் என்று சொல் லிவிட்டால், அந்த நேரத்தில் அவர்கள் வந்து அழைத்துச் செல்வார்கள். அப்படிச் செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாறு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சில நாட்களுக்கு முன்பு மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டிருந்த பல குழந்தைகள் இறந்துவிட்டன. அதற்குக் காரணம் அந்த குழந்தைகளுக்கு செலுத்தப்பட்ட மருந்தில் பாய்சன் கலந்திருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டு, அந்த மருந்தை தயாரித்த "பிப்மால்" "பிப்மால்-சி" மருந்தை தயாரித்த கம்பெனி தண்டிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அறிக் கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. விரைவிலே கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும் "டிரக் கண்ட்ரோல்" மத்திய



அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருந்தாலும், நமது அரசாங்கம் மருந்தின் தன்மைகளைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும், போலி மருந்துகளை ஒழிப்பதற்கும் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவில் திறமையான நிபுணர்களை வைத்து, அமைச்சரவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளில் இருக்கின்ற லிப்டுகள் எல்லாம் ரிப்பேராக இருக்கின்றன. அது எப்போதும் இருக்கக்கூடிய நிலைதான் என்ருலும் ஒரு லிப்டாவது எப்போதும் இயக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். லிப்டும், ஆம்புலன்ஸும் மிகவும் அவசியமானவை. அவை எப்பொழுதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். இப்போது பார்த்தால், அவை இரண்டும் எப்போதும் இயங்கமுடியாத குறையாக இருக்கிறது. நம்மு டைய முதலமைச்சரவர்கள் வார்த்தைகளில் சொல்வதானுல், அது ஒரு சாபக்கேடாக இருக்கிறது. அவைகளை சரியாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகளைப் பழுது பார்ப்பதைவிட புதிதா கவே வாங்கிவிடுவது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். புதிய லிப்ட் போடுவதற்கு அரசு தயங்கக் கூடாது.

அடுத்து, குடும்பக் கட்டுப்பாடு. இப்போது இந்தத் திட்டம் நல்ல முறையில் நடைபெற்று வந்தாலும், நான் இதிலே ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் பயன்படுத்து கின்ற oral 'கான்ட்ராசெப்டிவ்ஸ்' முறையை ஒழித்துவிட வேண்டும். அதனுல் பெருத்த நஷ்டமும், கஷ்டமும் எற்படுகின்றன. எனவே, இந்த முறையை ஒழித்துவிட்டு, இதிலே செலவிடுகிற பணத்தை வேறு நல்ல மருத்துவ வசதிகளுக்குப் பயன்படுத்துவது நல்லது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் 'ஸ்டெரிலைசேஷன்' முறை, 'ஐ. யு. சி. டி.' இவைகளை தொடர்ந்து அமுல்படுத்தலாம். அமைச்சரவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'பாரா மெடிக்கல்' ஆப்டிஷியன்ஸ் கோர்ஸ் பயிற்சி பெற வேண்டியவர்கள் 40 பேர். இந்த Course is kept in abeyance ஏன்? கண் மருத்துவ மனைகளில் இவர்களைப் போட்டால் மிகவும் நன்மையாக இருக்கும். இந்த ஆண்டு அமைச்சரவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுக்க வாய்ப்பளித்து கண் மருத்துவமனை களில் வேலைக்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதோடு இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற "ஆப்டிஷியன்ஸ்" கோர்சையும் மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டாக்டர்களுக்குள்ள ஏஜ் லிமிட்டைப்பற்றி கூற விரும்புகிறேன். சற்று முன்பு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கூறும்போது மத்திய அரசு 60 வயதுவரையிலும் அனுபவம் வாய்ந்த டாக்டர்களை வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்திருப்பதாகச் சொன்னுர்கள். மத்திய அரசாங்கம் டாக்டர்களின் வயது வரம்பைப்பற்றி சொல்லியவைகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நான் கூறுவது என்னவென்ருல் டாக்டர்களை 58 வயதுவரை வைத்துக் கொண்டால் போதும். நாம் அப்படி திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டால் 58 வயது

வரும்போது அவர்கள் பின்னுல் தங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது என்று திட்டமிட்டு, அதன்படி நடந்து கொள்வார்கள். அதே நேரத்தில் 58 வயதில் ஒரு டாக்டர் ரிட்டயராகி விடுவார் ; நமக்கு பிரமோஷன் இடைக்கும் என்று அவருக்குப் பின்னுல் இருக்கக்கூடிய வர்கள் நினைத்துக்கொண்டு, உற்சாகமாகப் பணியாற்றுவார்கள். ஆகவே, டாக்டர்களின் வயதுவரம்பை 58 என்றே முடிவு செய்துவிட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கொசுத் தொந்தரவு. இப்போது மறுபடியும் இந்தத் தொந்தரவு வந்திருக்கிறது. அசெம்பிளியில்கூட நிறைய இருக்கிறது.
பிற் பகல் 1-00 செகரடரியிடம்கூட பலமுறை சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் அவர் கள் எதோ பார்க்கிருர்கள். இருக்கிறது. வேண்டுமானுல் நாளைக்கு அனுப்பி வைக்கிறேன் அந்தப் பக்கம். எங்கள் பக்கம்தான் இருக்கிறது என்று சொன்னுல் இங்கேயும் இருக்கிறது. மலேரியா, (Filaria), எராடிகேஷன் புரோகிராம் செய்திருந்தும்கூட, மறுபடியும் கொசுத் தொல்லைகள் ஏற்பட்டிருக்கிறது.

பக்கிங்காம் கால்வாயைச் சுத்தப்படுத்துகின்ற திட்டம் அரசிடம் இருக்கி றது. என்னைக் கேட்டால் அதைக் கொஞ்சம் பொறுத்து எடுப்பது நலமாக இருக்கும். அதற்குப் பதிலாக இந்தமாதிரி திட்டங்களுக்கெல்லாம் செலவிடுவதைவிட அந்தப் பணத்தை சுகாதாரத்திற்குச் செலவிட்டால் பல லட்சக்கணக்கான பணத்தை நல்ல முறையில் செலவழிக்க லாம். இந்தத் திட்டங்களை அமுல் செய்வதிலும் நான் கூறிய யோசனை களுக்கும் அரசு ஆவன செய்யும் என்று கூறி, நான் முடிப்பதற்கு முன்பாக, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சுவாமிதாஸ் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். அவைத் தலைவரின் உத்தரவின் பேரில் அதை இங்கே படிக்கிறேன் :—

" நாகர்கோயில் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவிற்குக் கூடுதல் பணியாளர்களை நியமித்தும், பெண் மருத்துவர் ஒருவரை நியமித்தும், வசதி செய்து தர வேண்டும் என்பதைப்பற்றி "

திரு. சுவாமிதாஸ் அவர்கள் கேட்டிருக்கிறபடி, அந்த மாவட்ட மருத்துவ மனைக்கு சித்த வைத்தியப் பிரிவு ஒன்றும் முக்கியமாக, பெண் மருத்துவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE**: Sir, in support of the cut motion moved on behalf of my party, I wish to say that the health policy lacks dynamism and also it lacks effective execution in different fields of medicine which I shall briefly elaborate. Firstly let us take the eight hospitals under the control of the Director of Medical Education. The bed strength in all —numbering about 12,000 beds—has increased only by 200. This is pitifully a small figure. I thought the Hon. Minister would surprise us by giving a bright news but he had given only this dismal news.



Now regarding help given to leprosy patients, a lot of confusion has
arisen. Number of foreign agencies are trying to increase the quantum
of assistance to leprosy patients. Government is doing something of its
own. Whether it has done enough, I cannot say. The foreign agencies
are also trying to help. Thirteen European countries, under the name of
'ELEP' with Canada leading, are trying to help. There is a leprosy
unit at Dharmapuri. I was saying that 'ELEP' was trying to help us
and trying to give us funds. Sometime ago Dr. Sushmur was there.
But some politics entered in the department and Dr. Sushmur is not
there now. I do not want to go into details now. I have all the details
and I shall give it to the Hon. Minister later.

**The Hon. Thiru K. ANBAZHAGAN**: I know every detail about it.
Foreigners who are interested in doing service in the country for the sake
of mere service to leprosy patients are welcome by Tamil Nadu Govern-
ment. But Central Government, as a policy, are objecting to foreigners
staying here and doing such service. Applications forwarded by Tamil
Nadu for two projects have not been approved by the Central Govern
ment.

**Dr. H. V. HANDE**: I know in Usilampatti you wanted to start.
To the extent Tamil Nadu wanted two more centres, I am glad about
it. But what I say is some people from this State had written to the
Centre casting some remarks against this particular unit. That is the
information I have got. I will give it in writing to the Hon. Minister
if he wants it. I am so thorough with the subject. So, what we should
have got in a right royal way has been lost on some flimsy ground..
Whereas the Central Government had approved several such units run by
foreigners in other States, why can't it be done in Tamil Nadu ? The
foreigners are agreeable to Indian doctors looking after the patients,

**The Hon. Thiru K. ANBAZHAGAN**: The State Government has
already accepted on the condition that Indian doctors will be employed
in such projects with the aid of foreign agencies. But the Central
Government has stated no foreign agency will further be allowed in
this country for doing any such work. So they have objected to our
requests. Actually they have not agreed. That is why we are not able
to implement the projects very much to our regret.

**Dr. H. V. HANDE**: Some persons here were not interested in the
unit coming up at Usilampatti. So they put obstacles. Even for
starting the unit at Dharmapuri, there was some difficulty. First, Centre
did not accept. But later on they agreed. It is upto the State Govern-
ment to persuade the Centre and make them agree. Even now it is
possible. Let the Hon. Minister get over departmental pin-pricks. That
is what I would like to say. I will give the details to Hon. Minister as to
who were the persons responsible for this in the department.

What is the point in implementing the filaria eradication programme if we are not able to tackle such a rudimentary problem of the nuisance of the mosquitoes. Something must be done to solve it, as otherwise no progress can take place in that field.

Lastly, my hon. colleague, Thiru Guruswamy wants certain things to be done in his constituency. In Andipatti there is a Panchayat Union Hospital. Even though the Committee on Estimates has recommended that the hospital can be taken over by this Government, it has not so far been taken over by them. So he requests the Hon. Minister to look into this matter, and take it up during the Fourth Plan period.



these things. It is the duty of the Government, it is the duty of the department to brief, to educate and to tell the Minister all these things. But it has not been done. Therefore, the load in the in-patients department has increased considerably.

Then again, my suggestion is to have a panel of experts in the out-patient department itself. For instance, if there is a case of tumour in the brain, how much time they take for discovering that? It might have impinged certain parts of the brain or caused some damage to the brain or haemorrhage in the brain. Suppose there is a cardiac case and when it is brought to the out-patient department, they do not straightaway rush the case to the in-patient department. But they just start taking the name of the patient and other particulars. They go on writing. By that time the patient might have collapsed. This could have been avoided, if some immediate treatment is given to the patient. Instead of bothering about writing of name and other particulars about the patient, the patient should be straightaway rushed to the in-patient department for immediate treatment and attention. But unfortunately this has not been done. A statutory order saying that whenever a cardiac case is suspected it should be straightaway rushed to the in-patient department should be issued by the Hon. Minister. I would like to bring to the notice of the Hon. Minister a concrete tragic incident. A doctor friend of mine had taken a patient suffering from a head injury to the General Hospital. This was at 8 p.m. on a particular date. The name and other things were filled up and then the patient was sent to the ward at 9-30 p.m. Then there was nobody at that particular time. The House Surgeon of the next ward came to the ward and he had to find out where exactly the concerned Surgeon was there. Then the doctor came and started examining the patient in the in-patient department after he was referred by the Casualty at 10-30 p.m. Then the patient was sent to the Neuro-surgical department at 11 p.m. After all these things, I am going to say what? The patient passed away. So, due to red-tapism 2 to 2½ hours had been wasted. If the patient had been immediately attended to straightaway, he could have had some satisfaction that some treatment had been given to him. It is not as if that this alone has the positive effect. But something could have been done and that was not done. Such things are lacking.

Then, I come to the General Hospital. So many people have written letters about the conditions obtaining in General Hospital. The way in which the General Hospital is maintained is far from satisfactory. Therefore, complete cleansing of the hospital is necessary. The Hon. Minister should see to it that it is completely cleansed and modernised. That should be done. I would even suggest that an extraordinary well-equipped hospital, a new hospital should be started in a place somewhere in Madras City. It is the duty of the Hon. Health Minister or the department concerned or the Government to see that a fully-

equipped hospital with all modern amenities is started, so that the entire State can depend upon a particular post-graduate institution. Such an hospital should be started by the Government.

Only one word with regard to this extension of period of service. I beg to differ if it is said that 58 years' limit should be there. I feel that whatever period is there, it should be strictly enforced. The House Surgeons' Association has passed a resolution, the Assistant Surgeons' Association has passed a resolution, the Medical Council Association has passed a resolution urging upon the Government not to give extensions to persons exceeding 55 years of age. I totally differ from the Hon. Minister if he is going to say that we do not have adequate men. We have got adequate number of doctors with capacity. I summarily reject that extension should be given and I am totally opposed to giving extension of service because it totally demoralises all the doctors concerned. Then again....

THE HON. THIRU K. ANBAZHAGAN : Because the Hon. Member has got a definite and strict view about that issue, I would like to know from him whether all the doctors who are experts are willing to take responsibility for administrative work. Many doctors refuse and therefore, administrative part of it is to be given to certain people who are willing. There are always certain considerations which have to be looked into.

DR. H. V. HANDE : I am afraid I cannot accept the contention of the Hon. Minister that they are not willing to take up administrative responsibility. It is their duty to obey orders. Even now there are some experts who are doing this work in the departments and I can go on mentioning names. Therefore, that is not a point. There are number of persons who are willing. You can just pass orders and let them obey. There is no difficulty at all about it. So, I would not accept the contention of the Hon. Minister.

Then again with regard to tuberculosis, I would like to say that there is a hospital in Pulianthope. They have recently increased one more X-ray unit. I am very sorry to bring to the notice of the Hon. Minister that things are not satisfactory. In fact, the Hon. Minister for Harijan Welfare knows about it. It caters partly to my constituency and mostly to her constituency. It caters to the whole city. The way in which medical treatment is given there is very unsatisfactory and I have received a large number of complaints that though equipment is there, proper treatment is not given. I have got a letter here also and I will pass it on to the Hon. Minister. The petitioner has complained against the manner in which the hospital is functioning and the manner in which the doctors are treating the patients. The



Hon. Minister can attend to that. (Dr. H. V. Hande handed over a petition to the Hon. Minister). I would like the Hon. Minister to see to it that such complaints are completely stopped.

The Otteri tuberculosis hospital also needs to be upgraded. He may say that there is not enough space, but it can be built up vertically and it is possible to have more place. Why I say it is this. It is in a central place in Ayanavaram where it can cater to the entire North Madras and South Madras. This is much more easily accessible than Tambaram hospital. I would request the Hon. Minister to give serious consideration to this point.

As regards nurses, I must say that the ratio of nurses to patients has to be revised completely. The difficulties of nurses should be properly attended to.

My cut motion is with regard to the diet. I am very sorry to find that as far as diet is concerned, though for the the past two or three years I am fighting on that particular point successively giving the same cut motion, nothing seems to have been done. Recently I had been to Coimbatore. Naturally petitions are given to me for my information. I have forgotten to bring facts and figures. They give much smaller quotation than the real rate. For coffee powder for a pound they give three-fourth of the cost or much less and then they supply only about 50 per cent of the coffee powder and 50 per cent they do not supply. Similarly 50 per cent of the bread they supply and 50 per cent they do not supply. The result is that many people do not get quality food and quality diet because they underquote and then supply only 50 per cent with some understanding between them. This is taking place for a long time. Many years ago there was a R.M.O. murder case due to this diet alone. There was serious trouble in General Hospital. Nobody need fear for all these things. But it is the duty of the department to see that proper diet and quality diet is given and I would like to urge that point very strongly.

Finally, Sir, with regard to sanitary conditions, if we do not do anything about mosquitos, it will very much affect the health of the people. As the Hon. Ex. Minister Thirumathi Jothi Venkatachellam has pointed out, this should not be neglected. This mosquito problem is a problem of sanitation not only affecting the Madras City but the whole of Tamil Nadu. Wherever we go, the sanitary condition is far from satisfactory. The Government should take concrete steps to see that sanitary steps are upgraded. They said that it was due to this cooum and other things. But even after cooum is supposed to be made proper and even after this '*seerthirutham*', they have not seen to it that the munber of mosquitos go down. The number is increasing very much.

What is the point in implementing the filaria eradication programme if we are not able to tackle such a rudimentary problem of the nuisance of the mosquitoes. Something must be done to solve it, as otherwise no progress can take place in that field.

Lastly, my hon. colleague, Thiru Guruswamy wants certain things to be done in his constituency. In Andipatti there is a Panchayat Union Hospital. Even though the Committee on Estimates has recommended that the hospital can be taken over by this Government, it has not so far been taken over by them. So he requests the Hon. Minister to look into this matter, and take it up during the Fourth Plan period.

Also in the hospital at Periakulam, he wants a blood bank to be established.

I hope and trust that the Hon. Minister will give serious thought to the points I have raised. There are a number of other points to be referred to but for want of time I am not referring to them. But I want to refer to one other matter. In the Royapettah Hospital the Fracture Department should be streamlined still more and in the case of other hospital. more fracture clinics could be opened.

I hope and trust that the Hon. Minister will reply at least to some of my points so that I can consider whether my cut motions should be withdrawn or not.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டி னுடைய 4 கோடியே 15 லட்சம் மக்களுடைய நல்வாழ்வுக்காக தமிழக அரசு செய்து வருகிற பல்வேறு காரியங்களையும் அதற்காக மேலும் செய்யப்பட வேண்டிய காரியங்களையும் இங்கே சட்டமன்றத்தினுடைய அனுமதி பெற்று செய்கின்ற வகையில், இந்த மானியக் கோரிக்கையை எடுத்து வைத்து, அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிற வேளையில் ஏறக்குறைய 14 மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தங்களுடைய மேலான ஆலோசனைகளையும், நல்லெண்ணத்தோடு கூடிய சுட்டிக்காட்டப்பட வேண்டிய குறைகளையும் எடுத்துக் காட்டியதற்காக என் னுடைய உளமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நலத்துறை என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதையும் கட்சி மனப்பான்மைக்கு இடம் இருக்கத் தேவையில்லாதது என்பதையும், குறை சொல்கின்றவர்கள் அவற்றை நல்லெண்ணதிலேதான் சொல்கிறார்கள் என்பதையும், அவற்றை அரசாங்கம் எப்பொழுதும் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்பதையும் நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



குறைகள் இல்லையென்று சொன்னால் நான் தவறு செய்தவன் ஆவேன். ஆனால் எவ்வளவோ குறைகள் இருப்பதை எப்படிக் குறைப்பது என்பதுதான் இன்றைக்குள்ள மிக முக்கியமான கேள்வியாகும். இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் சிலர் பேசுகிறபொழுது காச நோயினாலே அவதிப்படுகிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள், ஏறத்தாழ 3,200 படுக் கைகள்தான் அதற்கென்று இன்றைக்கு இருக்கின்றன, எனவே, படுக்கை வசதி இல்லாமல் காசநோயாளிகளை எல்லாம் எப்படி நீங்கள் கரை ஏற்றமுடியும், அல்லது அவர்களுக்கு சிகிச்சை வழங்கமுடியும் என்ற கேள்விகளை எழுப்பினார்கள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 7 லட்சத்து 50 ஆயிரம் பேர், ஏறத்தாழ, ஏதாவது ஒரு அளவில் முழு அளவில் இல்லை யென்று சொன்னாலும், இந்த காசநோயினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த 7 லட்சத்து 50 ஆயிரம் பேரில், குறைந்தது 1 லட்சம் பேராவது ஒரு கட்டத்தில் படுக்கையில் இருக்க வேண்டி வரும். 3,200 படுக்கைகள் இருக்குமானால் ஏறத்தாழ 50,000 பேருக்கு அந்த சிகிச்சை வழங்க முடியும். இன்னும் 3,400 படுக்கைகளை ஏற்படுத்துவது என்று சொன்னால் ஏறத்தாழ ரூ. 3 கோடி தேவை. எனவே ஒவ்வொரு துறையிலும், காசநோய் சிகிச்சைசெய்வதாக இருந்தா லும், தொழுநோய் சிகிச்சையைப் பரவலாக வழங்குவதாக இருந்தா லும் படுக்கை அமைப்பும், படுக்கை அமைப்பின்கீழ் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பது என்று சொல்லும்போதே பெரும் முதலீடு தேவை. படுக்கை வசதி அளிப்பதற்கும் அதற்குப் பிறகு சிகிச்சைக்காகவும் முதலீடு தேவை. அதற்குப் பிறகு உணவுக்காகவும் தேவை. இவற்றையெல்லாம் சேர்த்து ஒரே நேரத்தில் எல்லோருக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய காரணத்தால் தான் இன்றைக்கு சிகிச்சையின் மூலம் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சியின் காரணமாக ஓரளவு ஈடு செய்ய முடிகிறது.

ஒரு காலத்திலே, காசநோய்க்கு சல்போ மெடிசன் கண்டுபிடிக்காமல் இருந்த காலத்தில் உடலின் தாங்குகிற சக்தியை வைத்துதான் நோயைத் தீர்க்க வேண்டுமென்ற நிலை இருந்தது. ஆனால், நல்ல வேளை, 25 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டு, புற நோயாளிகளுக்கு அவர்கள் இல்லத் திலே இருந்து சாப்பிடுகிற நேரத்தில் இந்த மருந்துகளை வழங்கத்தக்க வாய்ப்புகள் ஏற்பட்ட காரணத்தால் படுக்கை ஒன்றின்மூலம்தான் சிகிச்சை அளிக்க வாய்ப்பு ஏற்படும் என்று இல்லாமல், இன்று ஏறத்தாழ 7½ லட்சம் மக்களில் 5 லட்சம் மக்களுக்கு மேல்—புள்ளிவிவரத்தில் சிறிது வேற்றுமை இருக்கும்—காச நோய்க்கான சிகிச்சையை நம்முடைய நாட்டில் பெற்று வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

கூடுமானவரையில் படுக்கை வசதியை விரிவுபடுத்துவதற்கும், வழங்கு வதற்கும் முறைப்படி பல ஏற்பாடுகள் இருக்கின்றன. அதிலே மேலும் சிக்கல்கள் இருக்குமானால் அவை சீர்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைவிட முக்கியமானது, காச நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் 7½ லட்சம் 8½ லட்சம் பேர் ; தொழுநோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ஏறத்தாழ 8 லட்சம், 10 லட்சம் பேர் ; இரண்டு கண்ணோ, ஒரு கண்ணோ பார்வை

இழந்தவர்கள் ஏறத்தாழ 6 லட்சத்திலிருந்து 10 லட்சம் பேர் ; கான்சர் என்னும் புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 4 லட்சம் பேர், 5 லட்சம் பேர், இன்னும் சில கொடுமையான நரம்புச் சிலந்தி போன்ற நோய்களாலும், "யானைக்கால்" போன்ற நோய்களாலும் இங்கே மக்கள் திட்டுத் திட்டாக ஆளாகி இருக்கிற நிலையில், இன்னொரு பக்கம் மலேரியா காய்ச்சல் இருக்கிற நிலையில்—அது ஏறத்தாழ ஒழிக்கப் பட்டுவிட்டது என்றாலும் அது இன்னும் மிச்சம் இருக்கிறது என்ற நிலையில் —அதனால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இருக்கிற நிலையில் இப்படிப் பட்ட மக்களுடைய எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் ஏறத்தாழ 415 லட்சம் மக்களில் 40 லட்சம் பேர் இந்த நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; ஏதாவது ஒருவகையில், ஏதாவது ஒரு நோயினால் எப்படியோ பிறருடைய உதவியினாலோ மருத்துவ சிகிச்சை பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், அந்த 40 லட்சம் பேர்களுக்கும் படிப்படியாக, முறையாக சிகிச்சை வழங்க வேண்டிய நிலையில்தான் இந்தத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்தக் குறைகளையெல்லாம் ஒரே ஆண்டில் போக்க முடியாது என்பதையும் பல ஆண்டுகள் தொடர்ந்து செய்ய வேண்டிய முயற்சி இது என்பதையும், இந்த முயற்சியை அரசாங்கம் மட்டும் செய்தால் போதாது என்பதையும், வெறும் மருத்துவமனை கட்டினால் மட்டும் போதாது என்பதையும், மக்களும் இந்த நோய்களைப் போக்குவதற்கான வழிவகைகளையும் முறைகளையும் உணர்ந்து உடலைப் பாது காப்பதிலே மக்களுக்கு ஓரளவு அக்கறை ஏற்பட்டு, அவர்கள் பாதுகாத்துக் கொள்வதைப் பொறுத்துத்தான் இதிலே இந்த அரசு வெற்றிபெற முடியும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் நகர்ப்புறப் பகுதியிலே இருக்கிற மருத்துவ மனைகளில் வசதி வாய்ப்புகள் குறைவாக இருப்பதைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்களும் திருமதி அனந்தநாயகி அவர்களும் எடுத்துக் காட்டினார்கள்.

கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி யில்லையென்பதை கோதண்டராமையா அவர்களும் லத்தீப் அவர்களும் எடுத்துக் காட்டினார்கள்.

நகரமாக இல்லாமலும் கிராமமாக இல்லாமலும் இருக்கிற ஸ்ரீரங்கத் திலே வசதி இல்லையென்று திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

நிலைமை அங்கு எப்படியிருந்தாலும், அவர்களுக்கு அங்கே இருக்கிற மக்கள் மீதுள்ள அக்கறையை எடுத்துக் காட்டினார்கள். நான், அனைத்துத் துறைகளில், மருத்துவத்தைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அப்படி மருத்துவ வசதியில்லையென்று ஒத்துக்கொள்கிறேன். மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரே ஒத்துக்கொள்கிறாரா என்று கேட்கலாம். ஆமாம், ஒத்துக்கொள்கிறேன். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் எந்த அளவு இந்த நலத்துறையிலே செலவிட்டு வருகிறது அல்லது எந்த அளவு அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கு இருக்கிற கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டு மென்ற அர்த்தத்திலே நான் சில சொல்ல விரும்புகிறேன்.



தமிழ் நாட்டிலே ஏறத்தாழ ரூ. 41 கோடி மருத்துவ நலத்துறைக்கு செலவிடுகிற பொழுது இதை விட அதிகம் செலவிடுகிற ஒரே ஒரு மாநிலம் மகாராஷ்டிர மாநிலம் மட்டும்தான். அந்த மகாராஷ்டிர மாநில அரசின் வரவு செலவு அளவு, வருவாய் வசதிகள் எல்லோருக்கும் தெரியும். வேறு எந்த மாநிலத்திலும் நம்மை விட ஏறக்குறைய 3/4 பங்கும் பாதியும் தான் செலவிடுகிறார்கள் (குறுக்கீடு) யூ. பி. யிலே கூடக் குறைவு தான். இந்த விகிதாசாரத்தைப் பார்த்தால் சில மாநிலங்கள் 9 சதவீதம் அவர்களுடைய வருமான வரவு செலவில் ஒதுக்கியிருக்கின்றன. சில மாநிலங்களிலே 7 சதவீதம், சில மாநிலங் களிலே 6 சதவீதம், இப்படி 5 சதவீதம் கூட இருக்கிற அளவிற்கு குறைவாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே நாம் செலவழிப்பது இன்றைய தினம் கணக்கெடுத்துப் பார்த்தால் ஏறத்தாழ 9.3 சதவீதம் அல்லது 9.5 சதவீதம் என்ற அளவிற்கு இந்த விகிதாசாரத்தில் வருமானத்திலிருந்து ஒதுக்குகிறோம். ஆனால் 4 கோடியே 15 இலட்சம் மக்கள் இருக்கிற ஒரு மாநிலத்தில் ரூ. 41¼ கோடி செலவழிக்கிறோம் என்று சொன்னால், பர் காபிட்டா எக்ஸ்பென்டிச்சர் என்ற அளவோடு பார்க்கிற பொழுது ஒரு ஆளுக்கு ரூ. 10 வருகிறது. ஆள் ஒன்றுக்கு ரூபாய் 10 செலவிடக் கூடிய வாய்ப்பு நமக்கு கிடைக்கிற அளவிலே மகிழ்ச்சி அடைகிறோம், ஆனால் அது போதாது.

உண்மையாக இந்தக் குறைகள் இல்லாமல் 5 ஆண்டு காலத்திலே இவைகளை சீரமைக்க, வசதி அளிக்க, ஆள் ஒன்றுக்கு ரூபாய் 20 செலவிட வேண்டும். அதற்கு நமக்கு நிதி நிலை வேண்டும். அப்படியென்றால் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 85 கோடி செலவிட வேண்டும். அதை எட்டிப் பிடிக்க இன்னும் 4 ஆண்டு காலம் 5 ஆண்டு காலம் ஆகும். ஆனால், இன்றைக்கு அந்தத் தேவை இருக்கிறது. ஆக தேவை இருக்கிற மக்களுக்குப் பல்வேறு குறைகள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு எடுத்துக்கொள்கின்ற முயற்சியிலே தமிழ் நாடு அரசாங்கம் வேறு எந்த மாநில அரசாங்கத்தையும் விட மிகச் சிறப்பாகப் பணியாற்றினாலும்கூட இன்றைக்கு இருக்கிற பொருளாதார வசதி குறைவினால் முடியவில்லை. இதை நிறைவேற்றுவதற்கு ஒரு வகையில் நீங்கள் எண்ணிப் பார்ப் பீர்களேயானால் நலகமாக இருக்குமென நம்புகிறேன்.

நமது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட ஒவ்வொரு கிராமத்திலே இருக்கிற மக்களும் தங்கள் தங்கள் சக்திக்கேற்ப வரி செலுத்த வேண்டுமென்று ஒரு ஆலோசனை சொன்னார்கள். செஸ் ஆன் தி லாண்ட் ரெவின்யூ ஆர் செஸ் ஆன் தி ப்ராப்பர்ட்டி இன் தி வில்லேஜஸ் என்ற முறையிலே கிராமங்களிலே உள்ளவர்கள் 10 ரூபாய் வரி செலுத்துவார்களானால், அதிலே ஒரு ரூபாயாவது சுகாதாரத்திற்காகக் கொடுக்க வேண்டுமென்று முறை செய்தால் ஒரு வேளை நிதி கிடைக்கக் கூடும். அல்லது திருமதி அனந்தநாயகி அம்மை யார் அவர்கள் சொன்னதைப்போன்று நிதி திரட்டினால் உண்டியல் வைத்து நிதி திரட்டினால்கூட 1 சத வீதம் நிதி சேர்க்க முடியுமா என்பது கஷ்டம். அண்மையிலே தமிழக அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது, தமிழகத் திலே பரிசுச் சீட்டு திட்டமொன்று ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்வதாக. அதற்கு அம்மையாரைப் போன்ற மாண்புமிகு

உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தருவார்களானால், அந்த நிதியை
சேர்க்க முடியுமானால் அந்த ஐந்து கோடி ரூபாயை வைத்து பல்வேறு
மருத்துவ மனைகளுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுவதற்கும் பல
அமைப்புகளை ஏற்படுத்துவதற்கும்.......

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படியானால் நீங்கள் மாதா
மாதம் பரிசுச் சீட்டு குலுக்குகிறீர்களே, அதை நிறுத்தி விட்டு இப்படி
குறிப்பிட்ட நல்ல காரியங்களுக்கு அந்த முறையைக் கொண்டுவரலாமே?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாங்கள் மாதா மாதம் குலுக்கு
கிறோம். ஆனால் நாங்கள் மாதா மாதம் குலுக்குவது இந்த நாட்டிலே
இருக்கின்ற நிலைமையை ஒட்டி ஏறத்தாழ 50 இலட்சம் அல்லது 60
இலட்சம் ரூபாய் அளவிற்கு சுகாதாரத் துறைக்காகவும், ஏறத்தாழ 50
அல்லது 60 இலட்சம் ரூபாய் வரையில் பள்ளிக்கூடக் கட்டிடங்கள்
கட்டுவதற்காகவும் இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காகத்தான் ஒதுக்கப்
படுகின்றன. ஆகவே, குலுக்குகிற காரியம் கெட்டுப் போகவில்லை. தினந்
தோறும் குலுக்கவில்லை என்ற வருத்தம் எங்களுக்கு இருக்கிறதே
தவிர நிரம்பக் குலுக்குவதற்கு அம்மையாருடைய ஆதரவை நான்
கேட்கிறேன்.

அம்மையார் அவர்கள் வழக்கறிஞருக்குப் படித்தவர்கள்— இங்கே
சொல்லும் பொழுது ஏதோ புள்ளி விவரத்திலே குறை இருப்பதாகச்
சொன்னார்கள். நான் கூட இப்படி ஏதாவது கிடைக்கக்கூடிய தொகையை
நாம் முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெறாமல் விட்டு விட்ட குறை
இருப்பதாக எண்ணி வருத்தப்பட்டேன். ஆனால் உண்மை அதுவல்ல,
1972-73 ஆம் ஆண்டிற்கு சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் குடும்பநலத்
திட்டத் துறையையும் சேர்த்து 12 கோடியே 4 இலட்சம் என்று
ஒதுக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு உதவி நான்கில் மூன்று பங்கு
வருகிற காரணத்தினாலே அந்தத் தொகையை அதிலே வைத்துவிடாமல்
டிமாண்ட் 18-லே, 30-ல என்று இன்னொரு பிரிவாக ஆக்கி 6 கோடியே
5 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இங்கே குறைந்த தொகையான
ஏறத்தாழ 2 கோடியே 41 இலட்சம் ரூபாய்க்கு பேலாகவே இன்னொரு
இடத்திலே 6 கோடியே 5 இலட்சம் ரூபாய்க்கு செலவுக் கணக்கு காட்டப்
பட்டு இருக்கிறது. இரண்டையும் கூட்டிப்பார்த்தால் 4 கோடி ரூபாய்
அளவிற்கு அதிகமான தொகை ஒதுக்கியிருப்பது தெரியவரும். அது
போதுமா, போதாதா என்பது வேறு பிரச்சினை. இந்த ஆண்டும்
6 கோடியே 51 இலட்சம் ரூபாய் அளவிற்கு அந்தத் தலைப்பில் செல
வழிப்பதற்குத் திட்டமிருக்கிறது.

ஆகவே, அம்மையார் அவர்கள் பணம் சேர்த்து வைத்திருந்து அதைக்
கொடுத்தால்கூட செலவழிப்போமே தவிர, மிச்சம் வைக்க மாட்டோம்.
சில திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்த வரையில் நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் அவற்றை நிறைவேற்றுவதில் எவ்வளவு செல
வானாலும் நிறைவேற்றுங்கள் என்ற முறையிலே அனுமதி வழங்கி
இருக்கிறார்கள். ஆனால் நிதி இலாக்காவிலே நாம் கேட்கிற பொழுது
இப்பொழுது 3 இலட்சம் ரூபாய் தான் தர முடியும் பின்னால் வாங்கிக்
கொள்ளுங்கள் என்று சொல்கிறார்களே தவிர ஒதுக்கப்பட்ட பணத்தை



நாங்கள் செலவழிக்காமல் மிச்சம் வைப்பதில்லை. எனவே, ஒதுக்கப்
படுகிற பணம் எல்லாமே செலவிடப் படுகிறது என்பதை நான் இந்த
நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன்.

மக்கள் நலத் துறையைப் பொறுத்த வரையில் இரண்டு வகையான
வளர்ச்சி வேகமாகத் தேவைப்படுகிறது. ஒன்று வெர்ட்டிக்கல் குரோத், மற்
றொன்று ஹாரிசாண்டல் குரோத் அல்லது டெவலப்மெண்ட். பரவலாக மருத்
துவ வசதிகளை செய்து தர வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது.
ஆனால் அதே நேரத்திலே சில துறைகளிலே மிகச் சிறப்பான நுண் அறிவு
பெற்றவர்கள், பெற்றிருந்தவர்கள் இருந்தால்தான் மக்களுக்குப் பயன்
படும். இல்லாவிட்டால் மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்கு அது
ஊக்கம் தராது, மருத்துவ வசதி தேவைப்படுகிறவர்களுக்குப் பயன்
தராது. அந்த வகையிலே ஆராய்ச்சித் துறையிலேயும் வளர்ச்சி பெற
வேண்டும். நுண்ணறிவு பெறக்கூடிய முறையிலே, மேல் நாட்டிலே
சென்று சில துறைகளிலே பயிற்சி பெற்ற இளைஞர்கள் தேவை என்பதோடு
மட்டுமல்ல கிராமங்களுக்கெல்லாம் மருத்துவ வசதிகள் பரவலாகச்
செய்யப்பட வேண்டும். சென்னை பொது மருத்துவ மனையிலே வளர்ச்சி
தேவைப் படுகிறது. ஆனால் மருத்துவ வசதியே இல்லாத கிராமங்களுக்கும்
மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன என்பதையும் மறந்து விடுதல்
கூடாது. இரண்டு இடங்களிலேயும் வளர்ச்சியை ஏற்படுத்தினால்தான்—
நல்ல பரிசீலனைக்குப் பின்னர்—அந்த வளர்ச்சி எல்லோருக்கும் ஏற்ற
தாகப் பயன்தரத் தக்கதாக அமையும் என்பதை உணர்ந்துதான் அரசு
செயல்பட்டு வருகிறது.

சென்னை பொது மருத்துவமனையைப் போன்று தென் சென்னையிலே
ஒரு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்
கள். சென்னையிலே தற்போது இருக்கிற பொது மருத்துவமனை, கல்லூரி
ஆகியவற்றின் மதிப்பு என்ன என்று பார்க்கிறபொழுது 20 கோடி
ரூபாயிலிருந்து 30 கோடி ரூபாய் வரையில் அதனுடைய மதிப்பு இருக்க
லாம். ஏறத்தாழ 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படக் கூடுமானால்
தமிழ் நாட்டிலே ஒன்றியந்தோறும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம்
உள்ள இடத்தில் இரண்டு ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். இருக்
இன்ற மருத்துவமனைகளைச் சீர்படுத்தி ஒழுங்கு படுத்தி டாக்டர் ஹாண்டே
அவர்கள் சொன்னதைப் போன்று சிறிய சிறிய, தொகைகளைச் செல
வழித்து அவற்றை முறைப்படுத்துவதிலேதான் இந்த அரசு அக்கறை
காட்டுமேயல்லாமல் பத்துப் பதினைந்து கோடி ரூபாயை மொத்தமாக ஒரே
இடத்திலே கொட்டுவதற்கு இந்த அரசு தயாராக இல்லை. . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னை நகரத்திலே இருக்கிற
மக்கள் தொகையை நீங்கள் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதி
யோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அம்மையார் அவர்கள் சென்னை
யிலே இருக்கிற காரணத்தினாலே—வெளியூர் தொகுதியிலே நிற்போம்
என்ற நம்பிக்கை இல்லை போல் இருக்கிறது—சென்னையைப் பொறுத்த

வரையிலே சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவ
மனை, ராயப்பேட்டை மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை,
சென்னை பேரறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, கஸ்தூரிபா
காந்தி மருத்துவமனை, சென்னை மகளிர்-குழந்தைகள் மருத்துவமனை,
கண் சிகிச்சை மருத்துவமனை, சென்னை - குழந்தைகள் நலப் பாதுகாப்பு
மருத்துவமனை, சென்னை ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை,
இ. எஸ். ஐ. மருத்துவமனை, சென்னையிலே உள்ள வாலண்டரி ஹெல்த்
சர்வீஸ் மருத்துவமனை, ஆந்திர மகிளா மருத்துவமனை, சென்னை
கார்ப்பொரேஷன் மருத்துவமனைகள் இவைகளிலே உள்ள நோயாளிகளின்
நோயைப் போக்குவதற்கு நாம் பாடு பட்டுக்கொண்டிருக்கிறோம். இவ்வளவு
மருத்துவமனைகளையும் வைத்துக்கொண்டு செம்மையாகச் சிகிச்சை அளிப்
பதற்கு நோயாளிகளும் பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்வோமே தவிர தமிழ் நாட்டு மக்களுக்கு இரண்டு ஆண்டு
காலத்திலே பல வகைகளிலே நிவாரணம் அளிக்க வேண்டும். அதனால்
அதே நேரத்திலே சிறப்புப் பிரிவுகளை
Venereal Diseases Research Department Cardiology, Neurology
ஏற்படுத்துவதிலேயும் அரசாங்கம் தயக்கம் காட்டவில்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையிலே சென்னை பொது மருத்துவமனையிலே ஒரு
கோடி ரூபாய் செலவிலே கட்டிடம் எழுப்பப்பட்டிருக்கிறது. 100
ஆண்டுகளுக்கு முன்னாலே எழுப்பப்பட்ட கட்டிடங்கள் இருக்கின்றன.
சிறிய, சிறிய கட்டடங்கள் கட்டுவதிலே பயனில்லை என்பதால் பழைய
கட்டடத்தை இடித்து விட்டு, ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவிலே
கட்டடம் கட்ட வேண்டுமென்ற ஆலோசனையும் இருக்கிறது. கீழ்ப்பாக்கம்
மன நோய் மருத்துவமனையிலேயும் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.
அந்த மருத்துவமனைக்கு நான் நேற்று சென்றிருந்தேன். 4 அல்லது
5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
இங்கே மட்டுமல்ல; மதுரை, எர்ஸ்கின் மருத்துவமனையிலே புதிய
கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தஞ்சை மருத்துவமனையிலேயும்
திருநெல்வேலி மருத்துவமனையிலேயும் போதுமான படுக்கை வசதிகள்
இல்லை என்று நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் அவர்கள்
தெரிவித்தார்கள். 1972-73-ஆம் ஆண்டில் டி. பி. படுக்கைகள் 20
கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தவும் டி. பி. அவுட் பேஷியண்ட் கிளினிக்
பகுதி ஏற்படுத்தவும் ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
ஆக இப்படிப் பரவலாகச் செய்யப்படுவதை இந்த அறிக்கையைப் படித்துப்
பார்க்கிற எந்த உறுப்பினரும் ஒப்புக்கொள்வார்கள். பரவலாகச் செய்
கிறோம். இடையிடையே சில இடங்களிலே நிதி நிலை இடம் தராத
காரணத்தினால் விடப்படுகிறது. நிதி நிலை சரியான பிறகு அவை முறைப்
படி கவனிக்கப்படும். உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்த
குறைகள் இந்தத் துறையினரால் பரிசீலிக்கப்பட்டு, எது எது எந்த
எந்த நேரத்திலே கவனிக்கப்பட வேண்டுமோ அது கவனிக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையிலே அகில இந்திய
அளவிலே ஒரு விதிமுறை தரப்பட்டது. ஒரு ஒன்றியத்திற்கு ஒரு
ஆரம்பச் சுகாதார நிலையமும் அதோடு இணைந்த குடும்பக் கட்டுப்பாடு



நிலையமும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையிலே
விதிமுறை தெரிவிக்கப்பட்டு, ஏறத்தாழ 375 இடங்களிலே கட்டுவதற்கு
பரிசீலிக்கப்பட்டு அதிலே 50 இடங்களிலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு
விட்டது.

நண்பர், அங்கத்தினர் திரு இ. எஸ். தியாகராசன் அவர்கள் சௌகார்
கள், எங்கள் பகுதியில் குடும்ப நல மருத்துவ மனைகளுக்கான
கட்டடங்கள் வந்துவிட்டன; ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வரவில்லை என்று
சொன்னார்கள். மத்திய அரசு நிறைவேற்றச் சொல்லும் திட்டத்தின்படி
குடும்ப நலத்திற்கு ஒரு கட்டடத்திற்கு 1 இலட்சத்து 10,000 ரூபாய்
வழங்குகிறார்கள். எனவே, அதை விரைவில் கட்ட வேண்டுமென்று
கட்டியிருக்கிறோம். ஆரம்பச் சுகாதார நிலையங்களைப்பொறுத்த வரையில்
1 இலட்சத்து 80,000 ரூபாய் செலவழிக்க வேண்டும். அதற்குத்
தமிழ்நாட்டில், மாநில அரசின் நிதிநிலையிலிருந்து கட்டடத்திற்கு ஒதுக்க
வேண்டும். ஒரு ஆண்டுக்கு, 10, 15, அல்லது 20 இடங்களில் கட்ட
வேண்டுமென்ற முறையில் இந்த ஆண்டு மாவட்டத்திற்கு இரண்டு
இடங்களில் கட்டிக்கொண்டு வருகிறோம். அப்படிக் கட்டி முடித்த பிறகு
நான் போய்ப்பார்த்தபொழுது, ஒரு ஒன்றியத்தில் கட்டப்பட்டு, அங்கே
இரண்டு டாக்டர்களும், உதவி செய்ய 8 பேர்களும், ஆண்டுக்கு
மருந்துக்காகவும், மற்றவைகளுக்காகவும், 1 இலட்சம் ரூபாய் செலவா
கிறது. இவ்வளவும் செலவழித்தும் அங்கே பயன்பெறும் நோயாளி
களின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையங்களில்
மிகவும் குறைவாக இருக்கிறது. இவ்வாறு அது பயன்படாமல் இருப்ப
தற்குக் காரணம், ஒன்றியத் தலைவரின் விருப்பப்படி இடம் தீர்மானிக்கப்
பட்டிருந்தால், சில இடங்களில் சுற்றுப்புறங்களில் அதிக கிராமங்
கள் இல்லாத சூழ்நிலை இருந்தால், அதனால் கிராம மக்களுக்கு
முழு அளவில் பயன் கிடைக்கவில்லை. அதைப் பார்த்தபிறகு ஒரு
ஒன்றியத்திலே ஆரம்பச் சுகாதார நிலையங்களை இரண்டு இடங்களாகப்
பிரித்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதை மத்திய
அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு இடத்திலே பிரித்து
அமைக்க குடும்ப நல மருத்துவமனை கட்ட ஒப்புக்கொள்வார்களானால்
ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் செல
வழிப்பதை, ஒரு இலட்சத்தை ஓரிடத்திலும், இன்னொரு இடத்தில் ஒரு
இலட்சத்தையும் செலவிட்டு அதே ஒன்றியத்தில் இரண்டையும் அமைத்து,
இங்கே ஒரு ஆண் டாக்டரையும், அங்கே ஒரு ஆண் டாக்டரையும் நியமித்து,
ஒரு பெண் டாக்டரை இரண்டு இடங்களுக்கும் பொதுவாக்கி, வைத்து
வருகின்ற தாய்மார்களையும், குழந்தைகளையும் கவனித்து குடும்ப நலத்
திட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய ஆலோசனையை மத்திய அரசுக்குத்
தெரிவித்து, மத்திய அரசும் அதை [illegible] பரிசீலிக்கிறார்கள். அதை
ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை [illegible] இருக்கிறது. இரண்டா
வது ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதை ஒத்துக்கொள்கிறோம்
என்று பொதுவிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இரண்டு ஆரம்பச்
சுகாதார நிலையங்கள் ஏற்பட்டு, குடும்ப நல மருத்துவமனை கட்டடமும் வர
வேண்டுமென்றால் மத்திய அரசு நிதி [illegible] வழங்குவதற்குத் தயாராக இருக்க
வேண்டும்.

சில ஒன்றியங்களிலே 1 இலட்சத்து [illegible] 000 [illegible] க்கு மேல
இருக்கிறார்கள், சில ஒன்றியங்களில் 1 இலட்சத்து 20,000 மக்களுக்கு
மேலே இருக்கிறார்கள். இப்படியிருக்கும்பொழுது [illegible] 1 இலட்சத்து

40,000-க்கு மேல் மக்கள் தொகை உள்ள 10, 15 இடங்களுக்கு
ப்ரையாரிட்டி முன்னுரிமை தந்து, அதற்குப் பிறகு 1 இலட்சத்து 20,000
மக்களுக்கு மேல் உள்ள இடங்களையும், அதற்குப்பிறகு 1 இலட்சம்
மக்களுக்குமேல் உள்ள இடங்களையும் எடுத்துக்கொண்டு, இப்படி முறைப்
படி காரியம் செய்வதற்கு அரசு எண்ணிக்கொண்டு இருக்கிறது. ஆனால்
இவைகளை எண்ணும்பொழுது அவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்க வேண்
டிய பெரும் நிதிப் பொறுப்பை இந்த அரசாங்கம் உடனடியாக ஏற்க
முடியாது. முதலமைச்சரவர்களிடத்திலே நாங்களே சில கோரிக்கைகளை
வலியுறுத்தும்பொழுது படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று எங்க
ளுக்கே சொல்லுகிறார்கள். அப்படிப் படிப்படியாக நிறைவேற்றப்படும்
அளவில் இருக்கும். நாங்கள் சொல்கிற அந்தப் படிகள் முறையான படி
களாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு டாக்டர்களாகப் பணியாற்றுகின்றவர்
களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
சில இடங்களிலே வேலைப்பளு இருக்கலாம். ஆனால் எல்லா இடங்களி
லேயும் அதிக வேலைப்பளு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுவதற்குத்
தயாராக இல்லை. எங்கே அதிகமாக வேலைப்பளு இருக்கிறதோ,
கவனிக்க முடியாத அளவில் புற நோயாளிகள் அதிக
மாக இருந்து, பளு எங்கெங்கே அதிகமாக இருக்கிறதோ அந்தத் தாலுக்கா
மருத்துவ மனைகளில் மேலும் ஒரு டாக்டரை நோயாளிகளின் எண்ணிக்
கைக்கு ஏற்ப நியமிக்க ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திருமதி ஆல்டா பௌலர் அவர்களும் வேறு சில அங்கத்தினர்களும்
நர்சுகளின் பணி செம்மையுற வேண்டுமானால் "நர்ஸ் பேஷண்ட் ப்ரபோர்
ஷன்" அந்தப் படுக்கைகளின் ப்ரபோர்ஷன், விகிதாச்சாரம் குறைய
வேண்டுமென்று சொன்னார்கள். அதைக் குறைக்கின்ற முயற்சியை எடுக்கக்
கூடிய வகையில்அவர்களுக்கு 8 படுக்கைகள் என்பதை 7 படுக்கைகள் என்று
கடந்த இரண்டு ஆண்டு காலமாகக் குறைத்திருக்கிறது. மேலும் ஆங்காங்கே
உள்ள நிலைமைகளைப் பரிசீலித்து, தனித் தனியாகக் கவனம் செலுத்தி,
வேலைக்குத் தகுந்தாற்போல், இருக்கின்ற நிலைமைகளுக்குத் தகுந்தாற்
போல், நர்சுகளின் எண்ணிக்கையை அவ்வப்பொழுது உயர்த்த, பட்ஜெட்
காலத்திலே மட்டும் அல்லாமல் ஆண்டு முழுவதும் எந்த மாதமாக
இருந்தாலும் அவ்வப்பொழுது சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன
என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டாக்டர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையில்,
களுக்கு, 200 டாக்டர்களுக்கு வேலை கிடைக்க அரசாங்கம் பல புதிய
பதவிகளை ஏற்படுத்தி அவர்களை நியமித்தது. ஆனால் இன்றைக்கும் 150 டாக்டர்
கூட போதுமான பெண் டாக்டர்கள் இல்லை என்ற கருத்தைச் சொன்னார்
கள். கடந்த பத்தாண்டுக் காலமாக எந்தெந்த இடத்திலே ஆண்
டாக்டரோ, பெண் டாக்டரோ நியமிக்கப்பட வேண்டுமென்றிருந்தாலும்
பெண் டாக்டர்கள் போதுமான அளவில் கிடைக்காத காரணத்தால்—
இந்த ஆண்டிலே கிடைப்பார்கள்—கடந்த பத்தாண்டுக் காலமாகக் கிடைக்
காத காரணத்தால், கடந்த 3, 4 ஆண்டுகளில் பெண் டாக்டர்கள்
நியமிக்கப்பட வேண்டிய இடமாகயிருந்தாலும் கூட, அங்கே டாக்டர்கள்
இல்லை என்ற குறை இருக்கக்கூடாது என்ற காரணத்தினால் ஆண்



டாக்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். கிராமங்களிலே, ஆரம்பச் சுகாதார
நிலையங்களிலே "ஃபேமிலி ப்ளானிங்", குடும்ப நலத் திட்டங்களை நிறை
வேற்ற வேண்டுமானால் பெண் டாக்டர்களைப் போடுவது அவசியம். ஆனால்
பெண் டாக்டர்கள் கிடைக்காத காரணத்தினால் ஆண் டாக்டர்கள் நியமிக்கப்
பட்டார்கள். மறுபடியும் அரசாங்கம் கடந்த ஆண்டு 70 பெண் டாக்டர்களை
நியமித்தது. மறுபடியும், 100 பேர், 120 பேர்களை நியமித்து, அங்குள்ள
ஆண் டாக்டர்களை வேறிடங்களிலே பணி புரிவதற்கு ஏற்பாடு செய்து
பெண்களே பணியாற்றும் முறையில் அரசு செய்யும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்குக் கிராமங்களிலே மருத்துவ வசதியைப்
பெருக்குவதற்காக மத்திய அரசு சொன்ன ஒரு ஆலோசனை, கிராமத்
திலே, விவசாயத்திலே ஈடுபட்ட குடிமகன் ஒருவருக்கு, 8-வது 10-வது
படித்தவருக்கு, 6 மாத காலம் பயிற்சி கொடுத்து மூன்று வகையான
மருந்துகளை அவர்களுக்கு வழங்கி, இன்னின்ன நோய்களுக்கு இன்னின்ன
மருந்து என்ற முறையில் அலோபதி வகையில் 30 வகையான
மருந்துகளையும், ஹோமியோபதி வகையில் 30 வகையான மருந்துகளை
யும், சித்தம் அல்லது ஆயுர்வேத வகையில் 25 மருந்துகளையும்
பட்டியல் போட்டு, ( Bare foot Doctor) "பேர் புட் டாக்டர்ஸ்"
என்ற முறையில் சைனாவிலே இருக்கின்ற ஒரு முறையைப் போல
இங்கே மருத்துவர்களைப் பயிற்றுவித்து கிராமங்களுக்கு அனுப்ப வேண்
டும். அவர்கள் மக்களுக்கு மருந்துகளைக் கொடுக்கும்பொழுது நோயாளி
களிடமிருந்து 10 காசு, 15 காசு என்று வாங்கிக்கொள்ள வேண்டும்
அல்லது கிராமங்களிலிருப்பவர்கள் வரி செலுத்த வேண்டுமென்றும்
ஆலோசனையைத் தெரிவித்தார்கள். தமிழகத்தின் சார்பில் அது
ஏற்புடையது அல்ல என்பது கருத்து.

தமிழ்நாட்டில் கிராமங்களில் மருத்துவப் பணி செய்யக்கூடியவர்கள்
ஏராளமாக இருக்கிறார்கள். அப்படி ஏராளமாக இருக்கின்றவர்களை
நாங்கள் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அவர்
கள் ஏதாவது ஒரு துறை மருத்துவப் பணியைத்தான் செய்ய முடியும்.
அவர்கள் பல்வேறு துறை மருந்துகளை வழங்கக்கூடாது. ஒரு துறை
மருந்துகளை வழங்குவதற்கு, தேவையானால் மறு பயிற்சி அளிக்க
ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்தோம். இரண்டு மாவட்டங்களில்,
4 ஒன்றியங்களில், இரண்டாயிரம் பேர்களுக்கு ஒருவர் வீதம் கிராம
மருத்துவர்களை அமைக்கும் முறையில் அமைக்க வேண்டுமென்று மத்திய
அரசைக் கேட்டுள்ளோம். அதை ஆராய்ந்து பார்த்து அலோபதி
முறையில் நடத்தப்படுகின்ற முறைகளும் ஹோமியோபதி முறையில்
நடத்தப்படும் சிக்கனமான மருத்துவ வசதிகளும், சித்த வைத்திய
முறையில் பரம்பரையாகக் கையாளப்படும் நல்ல மருந்துகளும் மக்க
ளுக்குக் கிடைக்க வழி செய்யத்தக்க வகையில் படம் உள்பட வரைந்து
நான்கு ஒன்றியங்களில் ஓராண்டுக்காலம் நாங்கள் பரீட்சார்த்தமான
முறையாகச் செய்து காட்டுகிறோம் என்று மத்திய அரசுக்குத் தெரி
வித்தோம். அதற்கிடையில் அங்கே நலத் துறை அமைச்சரவர்கள் மாறி
விட்டார்கள். இன்னொரு நலத் துறை அமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள்.
அவர்களிடத்திலிருந்து ஏப்ரல் மாதம் ஏற்றுக்கொள்கிறோம் என்ற
பதில் கிடைக்கும் என்று காத்திருக்கிறோம். அப்படியே வந்தாலும்கூட

எந்த அளவில் அது வெற்றிபெறும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் பெருவாரியான மக்களுக்குப் பரவலாக மருத்துவ வசதி கிடைக்க வழி ஏற்படும் என்று நினைக்கிறோம்.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், அலோபதி மருத்துவத் திலே வளர்ச்சிகளை உண்டாக்கிக் கொண்டு, அதற்கடுத்தபடியாக, "பேரா மெடிகல் பர்சன்ஸ்" என்ற வகையில் இன்னின்ன நோய்களுக்கு இந்த மருந்துகளை மக்களுக்கு வழங்க வேண்டும், இந்த விதமான சிகிச்சை அளிக்க வேண்டும் என்று, தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவ தற்குப் பயிற்சி பெற்றவர்களைப்போல், தனித்தனியாகப் பயிற்சி பெற்றவர் களைக் கொண்டு எல்லாக் கிராமங்களுக்கும், சிகிச்சை வழங்க வேண்டு மென்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

ஹோமியோபதி சம்பந்தமாக கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத் திலும், விதிமுறைகளின்படியும், அமைத்திருக்கிற ஹோமியோ பதி கவுன்சிலின் மூலமாகவும் 8 ஆண்டு, 10 ஆண்டுக் காலமாக அந்தத் துறையில் அனுபவம் பெற்றிருந்தால், அதற்கான சான்றிதழ்களை வைத்திருந்தால், அவர்களைப் பதிவு செய்து கொள்ளவும், 4 ஆண்டுக் காலம் மட்டும் அனுபவம் இருந்து, 10 ஆண்டுக்கால பயிற்சி இல்லை என்றால் தேர்வு எழுதி அவர்களைப் பதிவு செய்து கொள்ளவும் முறை களை ஏற்படுத்தியிருக்கிறோம். இதை மட்டும் இந்த ஆண்டில் நிறை வேற்றினால் 5,000, 10,000 ஹோமியோபதி மருத்துவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மருத்துவப் பணி ஆற்றுவார்கள். சிக்கனமாகவும் இருக் கும். ஹோமியோபதி மருத்துவத்தில் சில நன்மைகள் இருப்பதாக உணருகிறார்கள்.

சித்த மருத்துவ முறைகளை வளர்க்க வேண்டுமென்று நம்முடைய மணலி கந்தசாமி அவர்களும், மற்றும் திருமதி ஜோதி அம்மையார் அவர்களும் சித்த மருத்துவ வளர்ச்சியிலே ஆர்வத்தோடு சொன்னார்கள். உள்ளபடியே மேல்நாட்டு மருத்துவ வல்லுநர்கள்கூட சித்த மருத்துவத் தின் அருமையை ஏற்பதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயுர்வேதத்திலே சொல்லப்பட்ட சில மருந்துகளை பெரிய நிபுணர்கள் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். பிற துறை மருத்துவர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க சிறந்த மருந்துகள் இருக்கும் அந்தத் துறையைத் தமிழகத்திலுள்ள மக்களுக்கு, நம்முடைய நிதிநிலை வசதிக்கேற்ப பரவலாக்க வேண்டு மென்ற நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு சித்த மருத்துவ வளர்ச்சிக்கு அந்தத் துறையிலே ஏற்கெனவே உள்ள எத்தனையோ ஏடுகள் வெளி வராமல் இருக்கின்றன, அவை அச்சேற்றப்பட வேண்டுமென்பதற்காகக் குழு நியமித் திருக்கிறோம். சில மூலிகைகளைப் பற்றி ஆராய பாளையங்கோட்டை மருத் துவக் கல்லூரியில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. சித்த வைத்தி யத்தில் "மூப்பூ" என்ற மருந்தைத் தயாரிப்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதற்காக அதைப்பற்றி ஆராய்ந்து சொல்ல ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் ஆராய்ச்சிக்காக மேலும் படுக்கைகளை அதிகப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.





மத்திய அரசு தருகிற உதவியோடு ஆராய்ச்சித் திட்டத்தை நிறை வேற்ற ஐந்து லட்சம் ரூபாயில் ஒரு கட்டடம் தேவை என்பதற்காக பட்ஜெட் முடிந்து விட்டாலும் முதலமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு வகையில் நிதி ஒதுக்க வேண்டுமென்று ஏற்கனவே அவர் ஒப்புதலுக்கு வைத்திருக்கிறேன்.

திரு லத்தீப் அவர்கள் பாளையங்கோட்டை மருத்துவ மனையில் யுனானி மருத்துவ முறைக்குப் போதுமான வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். சித்தம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்றுக்கும் சேர்த்து தொடங்கப்பட்ட நிலையில், முன்னாலே திட்டமிட்டபோது யுனானி முறைக்குப் போதுமான விண்ணப்பங்கள் வரவில்லை. விண்ணப்பங்கள் அதிக அளவுக்கு வந்திருக்குமானால் ஆசிரியர்களை வெளியிலிருந்தாவது கொண்டு வர முயற்சி எடுத்திருக்கலாம்.

உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் சித்த வைத்தியத்தில் கூட தேர்ச்சி பெற்றவர்கள் இல்லை. எல்லாத் தகுதியும் பெற்ற சித்த வைத்திய வல்லுநர்கள் கிடைக்கவில்லை. யுனானி மருத்துவ முறையிலும் அந்த நிலை இருக்கிறது.

இந்த மருத்துவ முறைகளுக்கு வசதிகள் அளிப்பது குறைவாக இருக் கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் ஆயுர்வேத மருத்துவ மனைகள், சித்த, யுனானி மருத்துவ மனைகள் தொடங்க வேண்டுமென்று எந்த ஒன்றியத்தில் இருந்து நகரசபையிலிருந்து கேட்டாலும் அரசு அதற்கு அனுமதி அளிக்கிறது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் இந்திய மருத்துவத் துறைக்கு இயக்குநராக இருந்த டாக்டர் சுபான் அவர்கள் யுனானி டாக்டர்தான். அவர் மிகச் சிறந்த டாக்டராவார். மிகப் பொறுப்புணர்ச்சியோடு கடமை யாற்றி வந்தவர். தமிழ்நாட்டில் சித்த மருத்துவத் துறை மறைந்து விடுமானால் அது என்றைக்குமே வெளியேற்றப்பட்டதாகப் போய்விடும் என்று உணர்ந்து, அது மறையாமல் காப்பாற்ற முனைந்து அக்கறை காட்டியவர். அவர் இருதய நோய் காரணமாக மறைந்து விட்டார். இந்த வைத்திய முறைகளுக்கெல்லாம் எந்த வேற்றுமையும் காட்டவில்லை. சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் யுனானி பகுதி இருக்கிறது, ஆயுர்வேத பகுதி இருக்கிறது. ஆயுர்வேத பகுதியைச் சேர்ந்த மருத்துவர்தான் அந்த மருத்துவ மனையின் சூப்பரின்டென் டென்டாகப் பணியாற்றுகிறார்கள். இதிலே எல்லாம் வேற்றுமை காட்டப் படவில்லை.

அரசாங்கம் அடிப்படையான, அவசியமான கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சித்த மருத்துவம் ஐந்தாண்டுக் காலத்தில் முறைப்படி வளர்க்கப்பட்டு, நிலைநாட்டத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்யாவிட்டால் அகில இந்தியாவில் சித்த வைத்தியம் இருப்பதே தெரியாமல் போய்விடும். திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் இந்தத் துறையில் அமைச்சராக இருந்தவர்கள். அவர்கள் சொன்னார்கள்—" அன்பழகன் அதிர்ஷ்டக்காரர், சித்த வைத்தியத்தை

மத்திய அரசு ஏற்றுக் கொண்டது” என்று. நாடாளு மன்றத்தில்
நான் உறுப்பினராக இருந்தபோதே அகில இந்திய மருத்துவ ஆலோ
சனைக் குழுவில் நான் இடம் பெற்றிருந்த காரணத்தால் அப்போதே
இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ஆளுநராக இருக்கிற
திரு கே. கே. ஷா அவர்கள் அன்றைக்கு மத்திய மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சராக இருந்தார். அவர் சொன்னார்—மருத்துவ முறையில்
சித்த மருத்துவத்திற்கு எந்த அளவுக்கு தகுதியுள்ளவர்களைத் தரு
கிறார்களோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்க ஆவன செய்வோம் என்று
அன்றைக்கே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் சித்த வைத்திய
வளர்ச்சிக்கு உதவிகள் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அதை முழு
அளவில் பயன்படுத்திக் கொள்ள தமிழகத்தில் எல்லா ஏற்பாடுகளும்
தொடங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய திரு எட்மண்ட் அவர்கள் மதிப்பிற்குரிய எங்களுக்கு
வழிகாட்டிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் துணைவியார் பெயரை
வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டதாகவும் அந்தத் தீர்மானத்தை
அரசு நிறைவேற்றுமலும் மருத்துவ மனையைத் திறந்து வைக்காமலும்
இருப்பதாகவும் கூறினார்கள். அவர் தொகுதியாக இருந்தால் முழு
உண்மையும் தெரிந்திருக்கும். வேறு தொகுதியாக இருப்பதால் முழு
உண்மை தெரிய வாய்ப்பில்லை. உண்மை என்னவென்றால் ஏற்கெனவே
ஒரு மருத்துவ மனை அங்கு இருக்கிறது. பழைய கட்டடத்தில் இருக்கிறது.
புதிதாகச் சில கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு
கூட புதிதாகக் சட்ட மேலும் ஆலோசனை இருக்கிறது. புதிய கட்டடம்
கட்டுவதாலேயே பழைய மருத்துவ மனைக்கு புதிய பெயரை வைப்பது
முறையாக இருக்காது. புதிய மருத்துவ மனையைக் கட்டி அதற்கு
இராணி அண்ணாதுரை பெயரையோ, அண்ணா அவர்கள் பெயரையோ
வைப்பதில் அர்த்தம் உண்டு. எங்களிடத்தில் இருந்து நல்ல பயிற்சி
பெற்றுச் சென்ற எட்மண்ட் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் எங்களுக்கு
இல்லாமல் போய்விடவில்லை. புது மருத்துவமனை அவர் தொகுதியிலேயே
தொடங்குவதாக இருந்தாலும் கூட அறிஞர் அண்ணா அவர்கள் பெயரை
வைப்பதிலோ, அவர்களது துணைவியார் பெயரை வைப்பதிலோ மாறுபாடு
இல்லை.

அமைச்சர் வந்து திறந்து வைக்காததன் காரணமாக அந்த மருத்துவ
மனை இயங்காமல் இருக்கிறது என்றார்கள். அமைச்சர்கள் திறந்தாலும்
திறக்காவிட்டாலும் அமைச்சர் வருகைக்காகக் காத்து ஒரு மருத்துவ மனை
இயங்காமல் இருக்கக்கூடாது. அந்த மருத்துவ மனையைக் கட்டி முடித்து
மின்சாரமும், குடிதண்ணீர் வசதியும் கிடைத்தவுடன் இயங்கத் தொடங்கி
விட வேண்டும்; ஒப்புக்கு திறப்பு விழா வைத்தாலும் ஆறு மாதம்
கழித்துக் கூட அமைச்சர் வந்து விழா நடத்திக் கொள்ளலாம் என்று
கூறியிருக்கிறோம். அதன்படி அந்த மருத்துவ மனை இயங்கிக் கொண்டு
தான் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் நோய்த் தடுப்பில், தொழு நோய் தடுப்பதில்
100-க்கு 70 பங்கு மக்களுக்கு தொழு நோய்த் தடுப்பு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு தடுக்கப்பட்டிருக்கின்றன. 30 பங்கு மக்கள் அள
வுக்குத்தான் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுவும் வருகிற



ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக முழு அளவுக்கு நிறைவேற்ற
வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். காச நோய்த்
தடுப்பை நூற்றுக்கு 60 பங்கு, 70 பங்கு மக்களுக்கு திட்டத்தை நிறை
வேற்றி இருக்கிறோம். ஸ்மால் பாக்ஸ்—பெரியம்மை நோய் தமிழ்
நாட்டில் அடியோடு ஓடிப் போகச் செய்கிற அளவுக்கு வெற்றி பெற்றிருக்
கிறோம். பக்கத்து நாட்டிலிருந்து வருகின்றவர்கள் அல்லது வெளிநாடு
சென்று வருகின்றவர்களால் ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுகிறதே தவிர
பெரும்பாலும் பெரியம்மை நோயைத் தடுத்திருக்கிறோம். காலரா
நோயையும் பெரும்பாலும் தடுத்திருக்கிறோம். நேற்று முன்தினம்
செஞ்சிக்குப் பக்கத்தில் கலைவைப் பகுதியில் இரண்டு மூன்று இடங்களில்
காலரா ஏற்பட்டிருப்பதாகச் செய்தி வந்தவுடன் அரசு நலத்துறை அலுவ
லர்கள் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்றார்கள். போதுமான அளவுக்கு
முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு நோயையும் தீர்க்க மக்களுக்கு மருத்துவ மனை வசதி
என்பது ஒரு நோக்கம். அதோடு நோய்த் தடுப்புக்காக தனித் தனி
நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஏர் பொல்யூஷன், வாட்டர்பொல்யூஷன்-காற்றுத் துப்புரவு கெடுதல், நீர்த்
துப்புரவு கெடுதல்—இவற்றால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்க என்ன
விதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதை ஆராய குழுக்கள்
நியமிக்கப்பட்டு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
நீர்த் துப்புரவுக் கெடுதலைத் தடுக்க கழிவுப் பொருள்களை வெளியேற்றும்
போது வடிகட்டும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஆலைகளுக்கு
ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும்
ஆலோசனைக் குழு தொடர்ந்து ஆலோசனை செய்து கூறுகின்ற முடிவுகளின்
பேரில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

குடிநீர் வாரியத்தின் தொண்டு காரணமாக பல்வேறு கிராமப் பகுதி
களில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இன்றைக்குப் பரவலாகக் கிடைத்து
வருகிறது. இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் இடங்களில்
நோய்த் தடுப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடு வருகின்றன.
கிராமங்களில் உள்ள தாய்மார்களுக்கும்; குழந்தைகளுக்கும் கர்ப்பமாகி,
பிரசவ காலத்திற்கு முன்னாலும் அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்ப
தோடு சத்துணவும் வழங்க திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்படி
பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களை எல்லாம் நான் விளக்குவது என்று சொன்னால்
இந்த அவையின் காலத்தை நீடிப்பதால் அங்கத்தினர்களுக்கு எவ்
வளவோ சங்கடங்கள் ஏற்படும். அவ்வளவு காரியங்கள் இந்தத் துறையில்
நடைபெற்று வருகின்றன.

மருத்துவத் துறை மானியத்திலே ஜேம்ஸ் அவர்கள் எண்ணிக்
கொண்டிருந்ததை திரு. தாஸ் அவர்கள் சொன்னார்கள். நாகர்கோயில்
மருத்துவமனை பற்றிச் சொன்னார்கள். அந்த மருத்துவ மனைக்கு
இடம் வாங்க வேண்டுமென்றால் ஐந்தாறு லட்சம் ரூபாய் விலை சொல்லு
கிறார்கள். அதற்கு மேல் கட்டடம் கட்ட 20 லட்சம் ரூபாய்க்கு மேல்

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 13

ஆகும். ஆக 26 லட்சம் ரூபாயைச் சேர்த்து ஒரே சமயத்தில் ஒதுக்க முடியாத காரணத்தால் 6 லட்சம் ரூபாயில் இடத்தை வாங்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்களும், கன்னியாகுமரி மாவட்ட அங்கத்தினர்களும் ஒத்துழைப்பார்களானால் நிதி திரட்டி இடத்தை வாங்கித் தந்தால் உடனே கட்டடம் கட்டும் பணியை அரசு ஏற்று இரண்டு மூன்று ஆண்டுகளில் நல்ல மருத்துவ மனை அங்கு வரும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2—00. தர்மபுரி மாவட்ட மருத்துவமனை, அதேபோல் வேறு சில மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகள் இவற்றிலுள்ள குறைகளை நீக்க படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அடுத்து, நகர்ப்புற வளர்ச்சியில், சென்னை மாநகரத்திற்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களை, முன்கூட்டியே செய்யப்பட வேண்டிய காரியங்களை, வட்டார வளர்ச்சிக்கு அடிகோல வேண்டிய காரியங்களைக் கவனித்து காரியங்கள் செயலாற்றப்பட்டு வருகின்றன. சென்னையில் இருந்து செங்கல்பட்டு செல்கிற வழியில் நான்கு மைல்களுக்கு இப்பால் ஒரு பெரிய வட்டாரம் ஒரு புதிய நகர வளர்ச்சிக்கு உரியதாக கருதப்பட்டு அந்தப் புது நகரத்திற்குத் தேவையான அடிப்படையான பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு அதற்காக ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மெட்ரோபாலிட்டன் அதாரிட்டி என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கவும், நகர வளர்ச்சிக்காக, அதன் பெயர் தமிழகத்தில் தமிழக மக்கள் என்றைக்கும் பெருமையோடு எண்ணிக் கொண்டிருக்கிற மறைமலை அடிகளின் பெயரால் " மறைமலை நகர் " என்று பெயர் சூட்டப்படுகிறது. இப்படி பல்வேறு பணிகளில் உள்ளபடியே அரசுக்கு அக்கறை இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு பேசிய உறுப்பினர்கள் பலரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஜோதி அம்மையார் அவர்களும், மற்றவர்களும் இந்த அரசு செய்துவருகிற நல்ல காரியங்களை வரவேற்பதாகவும் தெரிவித்து குறைகளையும் சுட்டிக்காட்டி, ஒத்துழைப்போடு கூடிய ஆலோசனைகளை வழங்கியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு புள்ளிவிவரங்களோடு பேசுவது என்றிருந்தால் நேரம் காணாது என்பதால் புள்ளி விவரங்களை கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவ்வளவு பேர்களும் சொன்ன ஒவ்வொன்றுக்கும் விளக்கம் நான் சொல்ல முடியும். அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களும் முறையே பரிசீலிக்கப்பட்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை இந்தத் துறையிலிருந்து எடுப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இந்தத் துறையை மேலும் முறையாக இயங்கச் செய்வதற்கும், ஏழை நடுத்தர மக்கள் பயன்படவும், கிராமப்புறங்களில் போதுமான மருத்துவ வசதி கிடைப்பதற்கும் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி கூறி இந்த அளவுவிற்கு அரசு பணியாற்றுவதை ஊக்கப்படுத்த விரும்புகிற மாற்றுக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் வெட்டுத் தீர்மானங்களைத் தந்து ஊக்கத்தைக் குறைத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1973 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 17-க்கு திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி, திரு. கே. ஏ. வகாப், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ், திருமதி. த. ந. அனந்தநாயகி ஆகியோர் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

திரு என். மருதாசலம் அவர்களின் வெட்டுத் தீர்மானம், அவர்கள் அவையில் இல்லாததால் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 17—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,29,47,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 18-க்கு திரு கே. எஸ். கோதண்டராமையா, திருமதி. த. ந. அனந்தநாயகி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. ஏ. வகாப், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப் பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை எண் 18—பொதுச் சுகாதாரம் என்ற தலைப் பின் கீழ் ரூ. 17,53,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·04 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 4 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

'Nil'.

### B. *Reports, Notifications and Other Papers*

* 69. A. Review on Industrial Growth in Tamil Nadu—Major Industries 1972-73 (English and Tamil).

* 70. A Review on Industrial Growth in Tamil Nadu—Small Scale Industries—1972-73 (English and Tamil).

* 71. A Review on Industrial Growth in Tamil Nadu—Mineral Development 1972-73 (English and Tamil).

* 72. A Review on the Tamil Nadu Government comes to the Rescue of Sick Units—1972-73 (English and Tamil).

* 73. A Review on Industrial Growth in Tamil Nadu—Handloom and Textile—1972-73 (English and Tamil).

* 74. A Review on Industrial Growth in Tamil Nadu—Sugar Industry 1972-73 (English and Tamil).

* 75. A Review on Industrial Growth in Tamil Nadu—Industrial Finance (English).

* 76. A Review on Industrial Gorwth in Tamil Nadu—Tamil Nadu Industrial Development Corporation Limited—1972-73 (English and Tamil).

* 77. A Review on Industrial Growth in Tamil Nadu—Small Industries Development Corporation (English and Tamil).

* 78. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Textile Corporation Limited (English and Tamil).

* 79. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Small Industries Corporation Limited (English and Tamil).

* 80. Pamphlet on Tamil Nadu Small Industries Corporation Limited (cover).

* 81. Pamphlets on State Industries Promotion Corporation of Tamil Nadu (cover).

* 82. A Review on Industrial Growth in Tamil Nadu—State Industries Promotion Corporation of Tamil Nadu (English and Tamil).

† 83. Performance Budget on Industries—1973-74.

---

* Despatched to Members on 10th March 1973.

† Laid on the Table of the House on 12th March 1973.



## இணைப்பு I

இந்திய

ம் செ பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 345-க்கான விடையைக்

நல்ல

க்க

ாண்டு 70-71-ல் ரூ. 25,000 செலவில் கீழ்க்கண்ட ஊராட்சிகளில் மனித

யைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் வேலைகள் மேற்கொள்ளப்

ளே-ன :—

1 செங்கசமுத்திரம்.

2 குன்னூர்.

3 அம்மச்சியாபுரம்.

4 திருமலாபுரம்.

5 டி. சுப்பலாபுரம்.

6 அனுப்பப்பட்டி.

7 ராஜகோபாலன்பட்டி.

8 கோத்தலூத்து.

9 திம்மராச நாயக்கனூர்.

10 இராசதானி.

1971-72-ல் ரூ. 40,000 செலவில் கீழ்க்கண்ட ஊராட்சிகளில் மேற்படி திட்டத்தின் கீழ் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன :—

1 கோத்தலூத்து.

2 நரசிங்காபுரம்.

3 ராஜகோபாலன் பட்டி.

4 ஜி. உசிலம்பட்டி.

5 கன்னியப்பிள்ளைபட்டி.

6 பிச்சம்பட்டி.

7 செங்கசமுத்திரம்.

8 திருமலாபுரம்.

9 அம்மச்சியாபுரம்.

10 புலிமான்கொம்பை.

11 மயிலாடும்பாறை.

12 சித்தார்பட்டி.

* மருத்துவக் கல்வி
மருத்துவப் பணிகள் } ரூ. 17,39·56 இலட்சம்.
இந்திய மருத்துவம்

அப்போது இந்த மூன்று துறைகளும் சேர்ந்து மருத்துவப்
பணிகள் இயக்குநர் அலுவலகம் என்ற ஒரே துறையாக இருந்தது.

1972–73-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்தைக்
காட்டிலும், 1973–74-ஆம் ஆண்டில் பல பிரிவுகளுக்கு ஒதுக்கப்
பட்ட நிதி ஒதுக்கம் கணிசமான அளவுக்கு உயர்ந்து வந்துள்ளதை
மேற்கண்ட விவர அட்டவணையிலிருந்து காணலாம்.

## மருத்துவக் கல்வி.

இம்மாநிலத்தில் தற்போது 8 மருத்துவக் கல்லூரிகள் ஏற்
படுத்தப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் ஆண்டுதோறும் 1,015
மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள்
தவிர, பல் மருத்துவப் பட்டப்படிப்புக்கு 35 மாணவர்கள் சேர்த்
துக் கொள்ளப்படுகின்றனர். இந்த மருத்துவக் கல்வி நிறுவனங்
களில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்புடன், பல பட்டமேற்படிப்புப்
பாடமுறைகளும் தகுதிப் பட்டயப் பாடமுறைகளும் நடத்தப்படு
கின்றன. இந்த மருத்துவக் கல்லூரிகளுடன் மருத்துவ மனை
களும் இணைக்கப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டில், இந்த
மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை
12,047 ஆகும். 1973–74-ஆம் ஆண்டில், இந்த படுக்கைகளின்
எண்ணிக்கை 12,314 ஆக உயர்த்தப்படும். இந்தக் கல்வி நிறு
வனங்கள் அனைத்தும் மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின்
கீழ் உள்ளன. 1972–73-ஆம் ஆண்டில் இந்த மருத்துவக் கல்லூரி
களில் நடத்தப்பட்ட பாடமுறைகள் பற்றிய விவரங்கள்
II(அ)-ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மருத்துவக்
கல்லூரிபற்றிய விவரங்கள் II(ஆ)-ஆம் இணைப்பில் கொடுக்கப்
பட்டுள்ளன.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவக் கல்விக்காக
ரூ. 433 லட்சம் ஒதுக்கப்பட்டதில், ரூ. 380 லட்சம், செங்கற்
பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள
புதிய மருத்துவக் கல்லூரிகளின் கட்டிடத் தேவை நிறைவுக்காகப்
பயன்படுத்தப்பட்டுள்ளது. திருநெல்வேலி, கோயம்புத்தூர்,
செங்கற்பட்டு ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்
குக் கட்டிடங்களும், இந்தக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ,
மாணவியருக்கு விடுதிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முடிவுறு
மலிருக்கும் ஒரு சில பணிகள் 1973-ஆம் ஆண்டு இறுதிக்குள்
முடிவுறும். கூடுதலாகச் சில வசதிகளும் அதாவது குளிர்பதனப்
பொறி நிறுவுவது, சிறுவிலங்குக்கூடம் அமைத்தல், கண்ணுடி
ஊதல் முறையில் கண்ணுடிப் பொருள்கள் அறை அமைத்தல் ஆகிய



வையும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் சவக்கிடங்கு கட்
டும் பணியும் முடியும் தறுவாயில் உள்ளன. 1973–74-ஆம் ஆண்
டில், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் துப்புரவு ஆய்வுப்
பயிற்சியாளர்களுக்கு (Sanitary Inspectors) தங்கும் விடுதி
கட்டுதல், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில்
100 படுக்கைகள் கொண்ட கூடம் கட்டுதல், கோயம்புத்தூர்,
செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு நீர் வழங்கு ஏற்பாடு
செய்தல் போன்ற பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்படும்.

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள மருத்
துவக் கல்லூரிகளை மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் பெரும்
பணிகள் முடிக்கப்பட்டுள்ளன :—

1. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் போதனைக் கூடம்
கட்டுதலும், சமூக, தடுப்பு மருந்து ஆய்வுக் கூடங்களை விரிவு
படுத்தலும்.

2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் வெளி
நோயாளி சிகிச்சைப் பிரிவு ஒன்றைப் புதிதாகக் கட்டுதல்.

3. அதே கல்லூரியில் அவசர அறுவைச் சிகிச்சைக் கூடம்
ஒன்று கட்டுதல்.

4. அதே கல்லூரியில் மருந்தாக்க இயல் பிரிவுக் கூடம்
கட்டுதல்.

5. அதே கல்லூரியில் உடல் அறுவைக் கூடம் கட்டுதல்.

6. சென்னை மருத்துவக் கல்லூரியில் சவக் கிடங்கிற்கு
மேலே முதல் மாடி கட்டுதலும், பொதுவான ஆராய்ச்சிப்
பிரிவு கட்டுதலும்.

7. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் கட்டுத் தொட்டி
(Sump) கட்டுதல்.

8. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் கூடுதலாகப் போத
னைக் கூடங்கள் கட்டுதலும், இரசாயனம், ஆய்வுக் கூடங்களை
விரிவுபடுத்தலும்.

மேலும் மருத்துவக் கல்லூரிகளில் கீழ்க்காணும் பணிகள்
தற்போது நடந்தேறி வருகின்றன :—

1. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் புற
நிலை நோயாளி சிகிச்சைத் துறைக்காகக் கட்டிடங்கள் கட்டுதல்.

2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் புதிய
கட்டிடத்தில் கூடுதலாக மாடிகள் கட்டுதல்.

3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் குளிர் பதனப்
பொறி நிறுவுவது உட்பட சவக்கிடங்கு கட்டுதல்.

4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் போதனைக் கூடம் ஒன்று கட்டுதல்.

**மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகளுக்கு மேம்பாடுகள்.**

கீழ்க்காணும் பெரும் பணிகள் எல்லா வகையிலும் முடிக்கப்பட்டுள்ளன :—

1. சென்னை, அரசு கண்நோய் சிகிச்சை மருத்துவ மனையில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவு ஒன்றைப் புதிதாகக் கட்டுதல்.

2. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடத்திற்குக் குளிர் வசதி செய்து கொடுத்தல்.

3. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையில் முட நீக்கியியல் கூடத்திற்கும் எக்ஸ்-கதிர்ப் பிரிவு போன்றவற்றிற்கும் இடவசதியளிக்க மூன்று மாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

4. அரசு மனநோய் மருத்துவமனைக்கு மேம்பாடுகள். (வேலையளித்து சிகிச்சையளிக்கும் கொட்டகைகள் கட்டுதல், தொழுநோய் பிணியாளருக்கான கட்டிடம் கட்டுதல், 'சி' பிரிவு கட்டிடம் கட்டுதல்).

5. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள மூன்று மாடிக் கட்டிடங்களுக்கு மேலே கூடுதலாக இரண்டு மாடிகள் கட்டுதல்.

6. சென்னை, மகப்பேறு—சிசு நல, அரசு மருத்துவமனையில் குடும்ப நலத் திட்டத்திற்காகக் கட்டிடம் கட்டுதல்.

7. மகப்பேறு—மகளிர் நோயியல் மருத்துவ நிலையத்திலும், மகளிர் — சிசு நல அரசு மருத்துவமனையிலும் தாய்மார்களுக்கான அரும்பொருட்காட்சிக் கூடம் கட்டுதல்.

8. சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில், குடும்ப நலத் திட்டத்தின்கீழ் மகளிர் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள கூடுதல் கூடமும் அறுவைச் சிகிச்சைக் கூடமும் கட்டுதல்.

கீழ்க்காணும் திட்டப்பணிகள் நடந்தேறி வருகின்றன :—

1. தஞ்சாவூர், ராஜா மிராசுதார் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட கூடமும், அறுவைச் சிகிச்சைக் கூடமும் கட்டுதல்.

2. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் 20 படுக்கைகளுடன் நரம்பியல் கூடம் கட்டுதல்.

3. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில், கண் சேமிப்பு விழிவெண்படல மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.



4. தோப்பூர், காசநோய் மருத்துவமனையில் 30 படுக்கைகளுக்கு இடவசதியளிக்க, முன்பிருந்த கட்டிடங்களைப் போலவே இரண்டு கட்டிடங்கள் கட்டுதல்.

5. தாம்பரம், அரசு காசநோய் மருத்துவமனையில் 104 படுக்கைகள் கொண்ட கூடம் ஒன்றைக் கூடுதலாகக் கட்டுதல்.

6. சென்னை, மகளிர் — குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் குறைமாதக் குழந்தை சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

7. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட கூடம் கட்டுதல்.

8. மகப்பேறு — மகளிர் நோயியல் மருத்துவ நிலையத்திலும் சென்னை மகளிர் — குழந்தை நல மருத்துவமனையிலும் தாய், சிசு சிகிச்சை கூடமும் அவசர நோய்ச்சிகிச்சைப் பிரிவும் கட்டுதல்.

9. சென்னை, அரசு மனநோய் மருத்துவமனையில் பெண் நோயாளிகளுக்காக 17 படுக்கைகள் கொண்ட தொழுநோய் சிகிச்சைக் கூடமும் 'சி' பிரிவு கட்டிடமும் கட்டுதல்.

10. சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

1973–74-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பெரும்பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரகவியல் பாடமுறை (Nephrology) தொடங்க வசதியளித்தல்.

2. சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் மருத்துவப் பிரிவுக் கட்டிடத்தின் இரண்டாவது மாடிக்கு மேல், அறுவைச் சிகிச்சை கூடம் கட்டுதல்.

3. மகப்பேறு பெண் நோயியல் மருத்துவ நிலையத்திலும், சென்னை, மகளிர் – குழந்தை நல மருத்துவமனையிலும் டி. சி. மின்சக்தியில் இயங்கும் லிப்ட்டுக்குப் (தூக்கி) பதிலாக ஏ. சி. மின்சக்தியில் இயங்கும் தூக்கி நிறுவுதல்.

4. குழந்தைகள் நல்வாழ்வு மருத்துவ நிலையத்திலும் சென்னை, மகளிர் – குழந்தை நல மருத்துவ மனையிலும் தொற்றுநோய் நீக்கும் மத்திய அறை கட்டுதல்.

5. சென்னை, அரசு மனநோய் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட கடும் நோய்ப் (Acute) பிரிவு கட்டுதல்.

6. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் தீவிர நோய்ச் சிகிச்சைப் பிரிவு ஒன்று கட்டுதல்.

எழும்பூர், அரசு கண்நோய்ச் சிகிச்சை மருத்துவமனைக்கும், மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள நரம்பியல் அறுவைச் சிகிச்சைத் துறைக்கும் தேவைப்படும் நவீன கருவிகளை வாங்க ஒப்பளிப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தென் மதுரைப் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அப்பகுதியில் பொது கிளை மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்காக திருவாளர்கள் டி.வி.எஸ். அற நிறுவனத்தினர் ரூ. 5 லட்சம் நன்கொடை வழங்க முன்வந்துள்ளனர். தென் மதுரைப் பகுதியில் பொது மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக மதுரை மாநகராட்சி தென் மதுரைப் பகுதியில் தனக்குச் சொந்தமாகவுள்ள சுமார் 3 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளித்துள்ளது. இவ்விரு நன்கொடைகளையும் ஏற்றுக் கொண்டு, தென் மதுரைப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு பொது கிளை மருத்துவமனை ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பெரும் பணியாக இருப்பதால், இது, மூன்று முதல் நான்காண்டுக் காலத்தில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்று கட்டுவதற்காக இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மதுரை கிளை அலுவலகம் ரூ. 1·50 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது. குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு ரூ. 10 லட்சத்திற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட நன்கொடைத் தொகைக்கு மேலாகத் தேவைப்படும் தொகை அரசின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

இது போலவே, தஞ்சாவூர், அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்காகத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஜவஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து ரூ. 2 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். ரூ. 5 லட்சம் செலவிலான இப்பணிக்குத் திட்டங்களும் மதிப்பீடுகளும் வகுக்கப்பட்டுள்ளன. அரசு இந்த நன்கொடையை ஏற்றுக் கொண்டு, எஞ்சிய செலவை அரசு நிதியிலிருந்து சரிக்கட்டுவதன் மூலம் 1972–73-ல் இப்பணியைச் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### புதிய பயிற்சித் திட்டங்கள்.

1972-73-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பட்ட மேற்படிப்புத் தகுதிப்பட்டய பாடமுறைகளும், பட்டப்படிப்புப் பாடமுறைகளும் தொடங்கப்பட்டுள்ளன :—

1. சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் மனவியல் மருந்துகள் பட்டயப்படிப்பு. (Diploma in Psychological Medicines in Madras and Madurai Medical College.)



2. சென்னை மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு. M.D.S. (Operative Surgery) in Madras Medical College.

3. மதுரை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருந்தியலில் பட்ட மேற்படிப்பு. M. D. (Forensic Medicine) in Madurai Medical College.

4. மதுரை மருத்துவக் கல்லூரியில் (முட நீக்கியியல் அறுவைச் சிகிச்சை) பட்ட மேற்படிப்பு (1973 ஏப்ரல் முதல் தொடங்கப்படும்.) M. S. (Orthopaedic Surgery) in Madurai Medical College from April 1973.

சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியிலும், அதனுடன் இணைந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தரம் உயர்த்தப்பட்ட கீழ்க்காணும் துறைகள் செயல்பட்டு வருகின்றன:

1. மகப்பேறு — மகளிர் நோயியல் துறை. (Institute of Obstetrics and Gynaecology).
2. மேகநோயியல் துறை. (Institute of Venereology).
3. உடல் இயல் கூறு துறை. (Institute of Anatomy).
4. ரேடியம் கதிர்வீச்சுத் துறை. (Institute of Radiology).
5. சிசு நல்வாழ்வுத் துறை. (Institute of Child Health).
6. நுண்ணுயிரியல் துறை. (Institute of Microbiology).
7. உடல் இயங்கு கூறு துறை. (Institute of Physiology).
8. காது—மூக்கு—தொண்டை இயல் நிறுவனம். (Institute of Oto-Rhino-Laryngdogy).

1 முதல் 3 இனங்களில் குறிப்பிட்டுள்ள துறைகள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது தரம் உயர்த்தப்பட்டன. 4, 5-வது இனங்களில் குறிப்பிட்டுள்ளத் துறைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தரம் உயர்த்தப்பட்டன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், பட்டமேற்படிப்பு மருத்துவக் கல்வி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 6, 7-வது இனங்களில் குறிப்பிட்டுள்ள துறைகள் 1970–71 ஆம் ஆண்டிலும், 8-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள துறை 1971–72-லும் தரம் உயர்த்தப்பட்டன.

### மருத்துவத் துறை அடிப்படை அறிவியல் பட்டமேற்படிப்பு நிலையம்.

அடிப்படை மருத்துவ அறிவியலில் பட்ட மேற்படிப்பு நிலையம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்த சென்னை பல்கலைக் கழகம் 1965-ல் திட்டமிட்டது. இத்திட்டத்திற்காகும் தொடரா இனச் செலவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கினையும்,

தொடர் செலவில் பாதிப் பங்கினையும் ஏற்றுக் கொள்ள பல்கலைக்கழக மானியக் குழு உறுதியளித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் எஞ்சிய செலவைப் பல்கலைக் கழகம் ஏற்க வேண்டும். எஞ்சியிருக்கும் தொடரா இனச் செலவு முழுவதையும் நான்காண்டுக் காலத்தில் சரிக்கட்டுமாறு அரசினைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொண்டது. மேலும், பல்கலைக்கழகம் தமக்குத் தற்போது ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வரும் ரூ. 19 லட்சம் தொடர் மானியத்தை, இத்திட்டத்திற்காகும் தொடர் இனச் செலவைச் சரிக்கட்டும் பொருட்டு ரூ. 20 லட்சமாக உயர்த்துமாறும் அரசைக் கேட்டுக் கொண்டது. பல்கலைக் கழகத்தின் செயற் குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்தது ; கூடுதலாக ஆண்டுதோறும் கொடுக்கப்படும் ரூ. 1 லட்சம் தொடர் மானியம் தனிப்பட்ட மானியமாகக் கொடுக்கப்படலாம் என்ற மாற்றத்திற்குட்பட்டு அச்செயற்குறிப்புகளை அரசு ஏற்றுக் கொள்ள முடிவு செய்தது.

அவ்வாறே, 1965–66 ஆம் ஆண்டு முதல் நான்காண்டுக் கால அளவிற்கு ரூ. 12·50 லட்சத்திற்கு (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்படாத தொடரா இன மானியத் தொகையைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கவும், 1965–66-ல் இது குறித்து ரூ. 3,12,500-க்கு (ரூபாய் மூன்று லட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) மேற்படாமல் செலவு செய்யவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேற்சொன்ன காரியத்திற்காக 1965–66 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 1 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) தொடர் இன மானியத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சி.

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவிலும், பி. எல். 480 திட்டத்தின் கீழ்க் கிடைக்கும் நிதியைக் கொண்டும் இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் முப்பதுக்கு மேற்பட்ட திட்டங்கள், ஆராய்ச்சிப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 10 திட்டங்கள் குறித்து ஆராய்ச்சிப் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சியிருக்கும் திட்டங்கள் குறித்து ஆராய்ச்சிப் பணி நடந்தேறி வருகிறது. சில திட்டங்கள் குறித்து மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணியின் முடிவுகள் இந்திய மருத்துவச் சங்கப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் நாடு முழுவதிலும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகளுடன் இணைந்துள்ள ஆராய்ச்சிப்பணியாளர்கள், தமிழ்நாடு மாநில ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவில் பல்வேறு பொருள்கள் குறித்து சுமார் 75 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.



## பள்ளிக் குழந்தைகளுக்குப் பொதுவாக மருத்துவச் சோதனை செய்தல்

சென்னை மாநகரிலுள்ள பள்ளிகளில் 1-ம் வகுப்பிலும், ஆறும் வகுப்பிலும் படிக்கும் குழந்தைகளுக்குப் பொதுவான மருத்துவச் சோதனை செய்யும் திட்டத்திற்கு அரசு, 1972-ஆம் ஆண்டில் ஒப் பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஒரு குழுவாக, மாநகரிலுள்ள கீழ்க்காணும் ஆறு மருத்துவமனைகளில் பள்ளிக் குழந்தைகள் உடல்நலக் குழுக்கள் ஆறு அமைக்கப்பட் டுள்ளன :—

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை.
4. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி-மருத்துவமனை, சென்னை.
5. அரசு சிசு நல நிலையம் & குழந்தை மருத்துவமனை, சென்னை.
6. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

சென்னை, அரசுப்பொது மருத்துவமனையில் இருந்து பணிபுரிய ஒப்பளிப்பு வழங்கப்பட்ட குழு, சென்னை, சிசு நல நிலையம்—குழந்தை மருத்துவ மனைக்கு மாற்றப்படும். இதனால் இங்கு இரு குழுக்கள் இருக்கும். ஆறு குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழ்க் காணும் கூடுதல் பணியாளரை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

சிசுநோயியல் உதவிப் பேராசிரியர்.

தலைமைச் செவிலியர்.

சமூகப் பணியாளர்.

ஆய்வுக்கூட வல்லுநர்-நிலை II.

பணியாளர். பள்ளிக்குழந்தைகள் உடல் மாநகர மருத்துவமனைகளில் பணியாளர்கள் நியமிக் நலக் குழுக்களுக்காக மேற்கண்ட மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில், கப்படுவதுடன், மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில், சிவில் அறுவை உயர் மருத்துவர் ஒருவர் பதவித்தரத்திலான மருத்துவக்கல்வி உதவி இயக்குநர் பதவி ஒன்றைக் கூடுதலாகவும், சுருக்கெழுத்துத்தட்டச்சர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இயக்குநர் அலுவலகத்திலுள்ள மருத்துவக்கல்வி உதவி இயக்குநர் (பள்ளிக் குழந்தைகள் உடல் நல அதிகாரி) இத் திட்டத்திற்கு முழுப்பொறுப்பு வகிப்பார். 1972–73-ல் இதற்காகும் செலவினை ஈடுசெய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ரூ. 3,02,000 கொடுக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத் திட்டத்தின்கீழ், மாநகர மருத்துவ மனைகளில் பணி
புரியும் 2 அல்லது 3 மருத்துவ அதிகாரிகள், மாநகரில் இருக்கும்
தொடக்கப்பள்ளிகள், நடுத்தரப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளி
களின் குறிப்பிடப்பட்ட வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு,
ஒரு வாரத்தில் 5 நாட்களுக்குப் பிற்பகல் 2-30 மணி முதல்
மாலை 4 மணி வரை பொதுவாக உடல் நலச் சோதனை செய்யப்
பகுதிநேரப் பணியாற்ற அனுப்பப்படுவர். இப் பகுதிநேரப் பணி
க்கு, மாநகராட்சி மருந்தகங்களைச் சேர்ந்த 40 மருத்துவர்
களின் பணியைப் பயன்படுத்திக் கொள்ளவும் திட்டமிடப்பட்
டுள்ளது. பகுதிநேர மருத்துவ அதிகாரிகள், பள்ளிக் குழந்தை
களுக்கு உடல் நலச் சோதனை செய்வர். சிறப்பு மருத்துவரின்
ஆலோசனை தேவைப்படும் குழந்தைகளுக்கு அத்தகைய ஆய்
வுரை கிடைக்கவும், சிகிச்சை அளிப்பது அவசியமெனில் சிகிச்சை
அளிப்பதற்கும் அந்தக் குழந்தைகளை மருத்துவமனையில் இதற்
கென நியமிக்கப்பட்டுள்ள வல்லுநரிடம் அனுப்பி வைப்பர்.

**வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குதலும் பணி நியந்தனைகளை மேம்படுத்துதலும்.**

கல்லூரிகளிலிருந்து தேர்ச்சி பெற்று வரும் மருத்துவப்
பட்டதாரிகளுக்கும் ஏனையோருக்கும் அதிக வேலைவாய்ப்பு வசதி
களை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி அரசு மிகுந்த நாட்டம்
செலுத்தி வந்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் 500 பேர்
மருத்துவக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளி வரு
கின்றனர். இவர்கள் அனைவரையும் பொதுத்துறையில் அரசு
எடுத்துக் கொள்வது கடினமான காரியமாகும். ஆண்டுதோறும்,
அறுவை உதவி மருத்துவர், செவிலியர், மருத்துவம் சார்ந்த
ஏனைய பணியாளர் பதவிகளைக் கூடுதலாக ஏற்படுத்தி, அதன்
மூலம் இயன்றவரை இவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளை
அளிக்க அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

1972–73ஆம் ஆண்டில் 280 உதவி மருத்துவர் பதவிகளுக்கு
ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1973–74ஆம் ஆண்டில், 122
உதவி மருத்துவர் பதவிகள், 73 செவிலியர் பதவிகள், விடுப்பில்
சென்றுல் அவர்களுக்குப் பதிலாக நியமிப்பதற்காக 27 மருந்
தாக்க இயல் வல்லுநர் பதவிகள், 10 பல் உதவி மருத்துவர்
பதவிகள், மருத்துவக்கல்லூரி இணைந்திராத மருத்துவமனை
களுக்காக 10 பல் சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றுக்கு ஒப்ப
ளிப்பு வழங்கப்படும்.

இம் மாநிலத்தில் சுழல் முறையில் கட்டாயப் பயிற்சி பணி
யாற்றிவரும் மனையிட மருத்துவர்கள், பல் சிகிச்சை மனையிட
மருத்துவர்கள் அனைவரது ஊதியத்தையும் திங்கள் ஒன்றுக்கு ரூ.
175-லிருந்து ரூ. 200 ஆக அரசு 1972ஆம் ஆண்டில் உயர்த்தி
யுள்ளது. மருத்துவ மனையிலேயே தங்கியிருக்கும் மருத்துவர்
களுக்குக் கொடுக்கப்படும் ஊதியமும் திங்கள் ஒன்றுக்கு ரூ.
175-லிருந்து ரூ. 200ஆக உயர்த்தப்பட்டது. புதிய மருத்துவக்



கல்லூரிகளில் தங்கியிருக்கும் மருத்துவர்கள் பதவிகளுக்கும் அரசு
ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னையிலுள்ள சென்னை மருத்து
வக் கல்லூரி பல் சிகிச்சைப் பிரிவில் பல் சிகிச்சை மனையிட
மருத்துவர் பதவிகள் 18 ஏற்படுத்த மருத்துவக் கல்வி இயக்கு
நருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலையாக வைத்துக்கொள்ளுதல்.—குடும்ப நலத் திட்டத்
துறையில் கீழ்க்காணும் பதவிகளை நிலையாக வைத்துக் கொள்ள
அரசு 1972 டிசம்பர் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது :—

| | |
|---|---|
| நல்வாழ்வுப் பணிகள் & குடும்ப நலத் திட்டத் துணை இயக்குநர் (குடும்ப நலத் திட்டம்). | ஒன்று. |
| நல்வாழ்வுப் பணிகள் & குடும்ப நலத் திட்ட உதவி இயக்குநர் (குடும்ப நலத் திட்டம்). | ஒன்று. |
| நிர்வாக அதிகாரி (குடும்ப நலத்துறை) .. | ஒன்று. |
| புள்ளி விவர அதிகாரி .. .. .. | ஒன்று. |
| முதுநிலைக் கணக்கர் .. .. .. | ஒன்று. |
| மாவட்ட குடும்பநல மகப்பேறு-சிசு நல அதிகாரி .. | பதின்மூன்று. |
| தகவல் அதிகாரிகள் .. .. .. | பதின்மூன்று |
| உதவி அறுவை மருத்துவர் .. .. .. | நூற்று ஐம்பத்தொன்று |

இத்துறையில் உள்ள பதவிகளை நிலையுடையதாக அமைப்ப
தால் பணியாளர்களுக்குத் தாங்கள் நிலையான பணியாளர்
என்ற எண்ணம் ஏற்படும். வரும் ஆண்டுகளில் படிப்படியாக
இப்பதவிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

தேர்வுத்தர பதவிகளை ஏற்படுத்துதல்.—குடும்ப நலத்திட்ட
திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட வட்டார வளர்ச்சிக் கல்வி
அதிகாரி பதவி, உடல் நலத்துறை ஆய்வாளர்களுக்கு
(Health Inspectors) தேர்வுத்தரப் பதவியாகும். உடல்நல
ஆய்வாளர்களைத் தவிர சமூக நலத் துறையின் வளர்ச்சி அதிகாரி
களும் (கல்வி) (Extension Officers Education of the C. D.
Department) இப்பதவியில் நியமிக்கப்படுகின்றனர். இத
ுல் அவர்களுக்குப் பதவி உயர்வு பெறும் புதிய வாய்ப்பு
ஏற்படுகிறது.

இதைப்போலவே, குடும்பநலத் திட்டத்தின்கீழ் அனுமதி
வழங்கப்பட்ட கணக்கிடுபவர் ( Computors ) பதவிகளின்
மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு இருபத்தைந்து பங்கு.
உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி பெற்ற

இளநிலை உதவியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற செவிலியர்களிடையே உள்ள வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கவும், அவர்களின் பணியை குடும்ப நலத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும், பயிற்சி பெற்ற செவிலியர்களை, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் (Health Visitor) (உடல் நலக் கண்காணிப்பாளர்) உடல் நல பார்வையாளராக (மகளிர்) நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவர்களுக்கு அதிகப் படியான அடிப்படை ஊதியம் வழங்கப்படுகிறது.

மாவட்ட விளம்பரப் பிரிவுகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, அப்பிரிவில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளர்களில் சிலர் குடும்ப நலத் துறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் விளம்பரப் பிரிவில் ஆட்குறைப்பு செய்யப்பட்டதி லிருந்து மீண்டும் குடும்ப நலத்துறையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது வரையில் அவர்களது பணியில் இடை முறிவு ஏற்பட்டது. அவர்களது பணி இடைவிடாத ஒன்றாக இருப்பதற்காக அரசு அண்மையில் அவர்களது பணி இடை முறிவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இருக்க விலக்கு அளித்துள்ளது.

**ஏனைய** சிறப்புச் சலுகைகள்.—இதுகாறும், ஆண்களுக்கான அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அரசுப் பணியாளர் ஒரு வருக்கு, 6 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்பு மட்டும்தான் அளிக்கப்பட்டது. தற்பொழுது அது 8 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளது. முன்னர், கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண் அரசுப் பணியாளர் ஒருவருக்கு 14 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்பு மட்டும்தான் வழங்கப்பட்டது. அது, தற்போது 20 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

மருந்தாக்குநர்களுக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பை அதி கப்படுத்தும் நோக்கத்துடன், மருந்தாக்குநர் பதவிகளில் 10 சத வீதத்தை தலைமை மருந்தாக்குநர் பதவிகளாக உயர்த்தப்பட வேண்டும் என்று ஒரு நபர் குழு பரிவுரைத்தது. இப்பரிவுரை யினை அரசு பரிசீலித்து வருகிறது.

அரசு, அண்மையில், மருந்தாக்குநர், தலைமை மருந்தாக்குநர், மருத்துவப் பண்டகசாலைக் காப்பாளர் ஆகியோரது ஊதிய விகி தத்தில் இருந்த குறையை நீக்கி திருத்தி அமைத்துள்ளது. அவை யாவன :—

| பதவி. | இருந்த ஊதிய வீதம். | திருத்தப்பட்ட ஊதிய வீதம். |
|---|---|---|
| 1 மருந்தாக்குநர் | 210—5—245—10—325 | 225—5—250—10—350 |
| 2 தலைமை மருந்தாக்குநர் | 275—10—375—15—450 | 300—10—350 15—500 |
| 3 மருத்துவப் பண்டக சாலை காப்பாளர் | 325—15—550—15—600 | 350—15—500—20—600—25—650 |



பி. பார்மசி பட்டதாரிகளுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் ஒன்றும். மதுரை அரசினர் எர்ஸ்க்கின் மருத்துவமனையில் ஒன்றும், ஆக மருத்துவமனை மருந் தாக்கியில் பிரிவுகளைத் (Hospital Pharmacy) துவக்கும் செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசிலனையில் உள்ளது.

இந்தத் துறைப் பட்டதாரிகள் அனைவருக்கும் தகுந்த பயிற்சி குறிப்பிட்ட கால அளவுக்குக் கிடைத்தால்தான், உரிய வேலைகள் கிடைக்கும் என்பதால்—அதற்கான பயிற்சி வாய்ப்புக்களையும் வசதிகளையும் பெருக்கவும் தனிப்பட்ட மருந்து உற்பத்தி நிறு வனங்களுடன் தொடர்பு கொண்டு உள்ளது.

### கிங் நிறுவனம், கிண்டி.

1899-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட கிண்டியில் உள்ள, நோய்த்தடுப்பு மருந்து உற்பத்தி கிங்நிறுவனம் பொதுச் சுகாதார மருந்துகள் உற்பத்தி பயிற்சி, ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பெரியதொரு நிலையமாக வளர்ந்துள்ளது.

தற்பொழுது, இந்த நிறுவனத்தில், 120 இலட்சம் யூனிட் (Unit) உறைய வைக்கப்பட்ட உலர்ந்த அம்மைத் தடுப்பு, ஊசி மருந்து உற்பத்தி செய்யப்பட்டு இம்மாநிலத்தின் நல்வாழ்வுத்துறை பணிகட்கும் சென்னை மாநகராட்சிக்கும் வழங் கப்படுகின்றது. உறையவைக்கப்பட்ட உலர் அம்மை நோய்த் தடுப்பு ஊசி மருந்து உற்பத்திக்கு யூனிசெஃப் (UNICEF), அனைத்து நாடுகள் சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் உதவி பெறப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், அந்த நிறுவனங்கள் தேவையான கருவி களை வழங்குகின்றன. தொடர் செலவை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. இம்மருந்து உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறக் கூடிய வகையில், கிங் நிறுவனம் இம்மருந்து தயாரிக்கும் நிறுவனங் களில் ஒன்றாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. 170 இலட்சம் யூனிட் ஊசி மருந்து தயாரிப்பதற்குத் தேவையான இயந் திரங்கள் இந்த நிறுவனத்தில் உள்ளன. இந்த நிறுவனத் திற்கு மேலும் கருவிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நிறுவனத்திற்கு 300 இலட்சம் ஊசி மருந்து உற்பத்தி திட்ட இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்துவதற்காக இந்திய அரசிடமிருந்து ரூ. 12 இலட்சம் கடன் உதவி கேட்கப்பட்டுள்ளது. இதில், 1971–72-ல் ரூ. 3·18 லட்சமே வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையையும் பெறுவது பற்றிய இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஊசி மருந்து உற்பத்திக்கான கூடுதல் பணியாளர்கள், அதற்குத் தேவைப்படும் கூடுதல் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மருத்துவப் பணிகள்.

**நலக்காப்புப் பணி.**—குடும்ப நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ், தற்பொழுது 803 மருத்துவமனைகளும்-நிலையங்களும் உள்ளன. இவற்றில் உள்ள படுக்கைகளின் கூடுதல் எண்ணிக்கை 14,200 ஆகும். அவற்றின் வகைகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1 | மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் .. | 13 |
| 2 | வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் .. | 86 |
| 3 | ஏனைய மருத்துவமனைகள் .. .. .. | 106 |
| 4 | மருந்தகங்கள் .. .. .. .. | 109 |
| 5 | தொழிலாளர் காப்புறுதி மருத்துவமனைகள் .. | 3 |
| 6 | தொழிலாளர் காப்புறுதி மருந்தகங்கள் .. | 107 |
| 7 | ஆரம்பச் சுகாதார நிலையங்கள் .. .. | 379 |
| | மொத்தம் .. | 803 |

இந்த மருத்துவ நிறுவனங்கள் அளிக்கும் பொது மருத்துவ வசதிகளைத் தவிர தொழுநோய், காசநோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்புத் திட்டங்களும் உள்ளன.

1971–72-ல் தேனியில் 38 படுக்கைகளுடனும், தாம்பரத்தில் 100 படுக்கைகளுடனும், பாகனேரியில் 10 படுக்கைகளுடனும் புதிய மருத்துவமனைகள் திறக்கப்பட்டன. கீழ்க்கண்ட மருந்தகங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்தும், தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் செய்து கொடுத்தும், மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

| | | படுக்கைகள். |
|---|---|---|
| 1 | ஜெயங்கொண்ட சோழபுரம் (திருச்சி) .. | 40 |
| 2 | திருப்பத்தூர் (முகவை மாவட்டம்) .. | 38 |
| 3 | தேவகோட்டை (முகவை மாவட்டம்) .. | 50 |

தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர், கோயம்புத்தூர் மாவட்டம் பவானி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. பின்வரும் மருத்துவமனைகளில், கூடுதல் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1 | மாவட்டத் தலைமையிட அரசினர் மருத்துவமனை, நாகப்பட்டினம். | 8 படுக்கைகள் கொண்ட சிறுவர் பகுதி. |
| 2 | மாவட்டத் தலைமையிட அரசினர் மருத்துவமனை, உதகமண்டலம். | 30 படுக்கைகள் கொண்ட மகப்பேறு கூடம். |



| | | |
|---|---|---|
| 3 | அரசினர் மருத்துவமனை, திண்டிவனம். | 32 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 4 | அரசினர் மருத்துவமனை, பட்டுக்கோட்டை. | 32 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 5 | அரசினர் மருத்துவமனை, மதுராந்தகம். | 24 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 6 | அரசினர் மருத்துவமனை, பொன்னேரி. | 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதி. |
| 7 | அரசினர் மருத்துவமனை, மேட்டுப்பாளையம். | 10 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 8 | அரசினர் மருத்துவமனை, வளவனூர். | 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு கூடம். |
| 9 | அரசினர் மருத்துவமனை, பூதப்பாண்டி. | 15 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 10 | அரசினர் மருத்துவமனை, கடையநல்லூர். | 46 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 11 | அரசினர் மருத்துவமனை, ஆம்பூர். | 48 படுக்கைகள் கொண்ட கூடம். |
| 12 | அரசினர் மருத்துவமனை, இலுப்பூர். | 16 படுக்கைகள் கொண்ட மகப்பேறு கூடம். |

1971–72-ம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பழவன்குடியில் 4 படுக்கைகளுடன் மகப்பேறு மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டது. கீழ்க்கண்ட மருந்தகங்களில் கூடுதல் கட்டிடங்கள், அகப் பணியாளர்கள் கூடம் ஆகியவை கட்டப்பட்டதைத் தொடர்ந்து அவை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டன :—

| | | இருந்த படுக்கைகள். | இன்றுள்ள படுக்கைகள். |
|---|---|---|---|
| 1 | பேராவூரணி (தஞ்சை மாவட்டம்). | 3 | 35 |
| 2 | பஞ்சப்பட்டி (திருச்சி மாவட்டம்). | இல்லை. | 10 |
| 3 | புதுமடம் (முகவை மாவட்டம்). | இல்லை. | 10 |

கூடுதலான பிணியாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறத்தக்க வகையில், பின்வரும் அரசினர் மருத்துவமனைகளில் புதிய கூடங்கள் கட்டப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மருத்துவமனை, மன்னார்குடி .. | 32 படுக்கை உள்ள கூடம் |
| 2 | அரசினர் மருத்துவமனை, ஈரோடு .. | 80 ஷை |

3 அரசினர் மருத்துவமனை, கள்ளக்குறிச்சி .. 8 படுக்கை உள்ள கூடம்

4 அரசினர் மருத்துவமனை, நாமக்கல் .. 38 டிடி

5 அரசினர் மருத்துவமனை, பழனி .. .. 10 படுக்கையுள்ளதொற்று நோய் பிரிவு.

6 அரசினர் மருத்துவமனை, வத்திராயிருப்பு .. 8 படுக்கையுள்ள கூடம்.

7 அரசினர் மருத்துவமனை, கரம்பக்குடி .. 5 படுக்கையுள்ள மகப் பேறு பிரிவு.

1972-ம் ஆண்டில் அரசினால் ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் புதிய திட்டங்களை நிறைவேற்றும்.

1. தென்காசி, அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கை கொண்ட ஒரு கூடம்.

2. கும்பகோணம், அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கை கொண்ட ஒரு கூடம்.

3. ஆத்தூர், அரசினர் மருத்துவமனையில் வெளி நோயாளி கட்கான பிரிவு ஒன்று.

4. சிதம்பரத்தில் புதிய இடத்தில் வட்ட அரசினர் மருத்துவமனை ஒன்று.

5. செங்கம் (வ.ஆ. மாவட்டம்) 36 படுக்கையுள்ள கூடத் துடன் வட்ட அரசினர் மருத்துவமனை ஒன்று. (அரசினர் மருத்துவ மனையில் 36 படுக்கைகள் கொண்ட புதிய கூடம் ஒன்று கட்டுதல்).

6. மேட்டூர் அணை, அரசினர் மருத்துவ மனையில், 30 படுக் கையுள்ள மகப் பேறு பகுதி.

7. தானிப்பாடியில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 16 படுக் கையுள்ள புதிய மருத்துவமனை.

8. திட்டக்குடி (தென் ஆர்க்காடு மாவட்டம்), அரசினர் மருத்துவ மனையில் 20 படுக்கையுள்ள மகப்பேறு அறுவைச் சிகிச் சைக் கூடம் ஒன்று.

9. கலவையில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 10 படுக்கையுள்ள புதிய மருத்துவ மனை.

10. பேராவூரணி, அரசினர் மருத்துவ மனையில், வெளி நோயாளிகள் பிரிவு, மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம், தொற்று நோய்பிரிவு ஆகியவை.

11. உளுந்தூர் பேட்டை, அரசினர் மருத்துவ மனையில், வெளி நோயாளிகள் பிரிவு ஒன்று. 24 படுக்கையுள்ள மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம் ஆகியவை.



1973-74-ஆம் ஆண்டில் பின்வரும் மேம்பாடுகளைச் செய்யவும் கருதப்பட்டுள்ளது.

1. கரூர் (திருச்சி மாவட்டம்), அரசினர் மருத்துவ மனையில் 24 படுக்கையுள்ள கூடம்.

2. இராமேசுவரம் (இராமநாதபுரம் மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில் 8 படுக்கையுள்ள கூடம்.

3. வாணியம்பாடி (வட ஆர்க்காடு மாவட்டம்) அரசினர் பொது மருத்துவ மனை மகளிர்—குழந்தை மருத்துவ மனையைப் 24 படுக்கையுள்ள யாக மாற்றுவதுடன் ஆண்களுக்கு ஒரு கூடம்.

4. பொள்ளாச்சி (கோவை மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில், 48 படுக்கையுள்ள கூடங்கள், வெளிநோயாளிகள் பிரிவு, மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம், சமையற் கூடம், சலக்கிடங்கு (அறை) ஆகியவை.

வெளியூர் மருத்துவ மனைகளில், சிறப்புத் துறைகள் அமைத் துக் கொடுப்பது தொடர்பான வல்லுநர்கள் குழுவின் பரிவுரை களுக்கிணங்க மாவட்டத் தலைமை இட மருத்துவ மனைகளில் பின்வரும் சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

1. தருமபுரியில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் சிசு நோய் மருத்துவத் துறைகளை ஏற்படுத்தல்.

2. செங்கை மாவட்டம் காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும், நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை யிலும், கண் நோய்ச் சிகிச்சைத்துறையினை ஏற்படுத்தல்.

3. தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் மாவட்டத் தலைமை இட மருத்துவ மனையிலும், சேலத்தில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைத் துறையினை ஏற்படுத்தல்.

4. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரிலும், மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லிலும் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் முடவியல் மருத்துவத் துறையினை ஏற்படுத் தல்.

5. தாம்பரம், உடுமலைப்பேட்டை, பட்டுக்கோட்டை, திண்டிவனம், நாமக்கல், திருவாரூர், ஆம்பூர், கடைய நல்லூர், கூடலூர், திருவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளிலும் ஆக கூடுதல் பல் மருந்தகங் கள் பத்து ஏற்படுத்தல்.

6. திருவண்ணாமலை, திருவள்ளூர், திண்டிவனம், கோவில் பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனை களில் இரத்தச் சேமிப்பு வங்கிகள் ஏற்படுத்தல்.

[1973 மார்ச் 13

7. தருமபுரியில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ
மனையிலும், குன்னூர், திருச்செங்கோடு, பத்மநாபபுரம் ஆகிய
இடங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் மேகநோய்
சிகிச்சைப் பகுதி மருந்தகங்கள் ஏற்படுத்தல்.

1972-73 ஆம் ஆண்டில் அரசு மருத்துவ மனைகளில் பின்
வருமாறு படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் நிலை
உள்ளது:

1. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள். 50 படுக்கைகள்.
2. வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள். 100 படுக்கைகள்.
3. இதர மருத்துவ மனைகள் .. 150 படுக்கைகள்.

1973-74 ஆம் ஆண்டில், மருத்துவ மனைகளில் பின்வருமாறு
படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த திட்டமிடப்பட்டு
உள்ளது: -

1. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள். 100 படுக்கைகள்.
2. வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள். 300 படுக்கைகள்.
3. ஏனைய மருத்துவ மனைகள் .. 200 படுக்கைகள்.

காச நோய்த் தடுப்புத் திட்டம்.

விரிவான காச நோய் சிகிச்சைப் பணிக்காக, மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து மாவட்டக் காச நோய்
தடுப்புத் திட்டம் என்னும் பெயரில் அமைப்பு ஒன்று செயல்
படுகிறது. இதுவும் மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு
திட்டமாகும். காச நோய் மருந்தகங்களை ஏற்படுத்தவும்
அவற்றின் தரத்தை உயர்த்தவும் உதவி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 8 லட்சம் பேர் காச நோயால்
பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மாவட்
டக் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்
தில் 4 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காசநோயால் பாதிக்கப்
பட்டிருப்பது பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசினர் காசநோய் மருந்தகங்கள்,
மருத்துவ மனைகள், தனியார் காச நோய் மருந்தகங்கள்
மற்றும் அரசினர் மருத்துவ மனைகளுடனும், தனியார் மருத்துவ
மனைகளுடனும் இணைந்துள்ள காசநோய்ச் சிகிச்சை பிரிவுகள்
ஆகியவற்றில் மொத்தம் 3,217 காசநோய் படுக்கைகளே இருப்ப
தால், காசநோயாளிகள் அனைவரையும் மருத்துவ மனைகளில்



1973 மார்ச் 13]

தங்கச் செய்து சிகிச்சை அளிப்பதென்பது இயலாது. காச
நோய் மருந்துகள் பல புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை
வந்துள்ளதால் பெரும்பாலான நோயாளிகளை அவர்களது வீட்
டிலே இருந்தவாறே சிகிச்சை பெறச் செய்ய முடியும். இதனால்,
சிகிச்சைபெறுவதற்காக குடும்பத்தைப் பிரிந்து இருப்பதனால்
ஏற்படும் மனச்சுமையையும் தவிர்க்கலாம்.

காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கண்டறிந்து
அவர்களது வீட்டிலேயே அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதுதான்
1962 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட காச நோய் தடுப்புத் திட்டத்
டத்தின் நோக்கமாகும்.

குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் முறையாக பி. சி. ஜி.
தடுப்பூசி போட்டு மேலும் அவர்களைப் பாதுகாப்பதும் இத்திட்
டத்தின் நோக்கமாகும்.

தமிழ் நாட்டில் சென்னையிலும், 13 மாவட்டங்களிலும்
காச நோய்க் கட்டுப்பாடு திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.
மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட
காச நோய்ச் சிகிச்சை அதிகாரி, தனது பணியாளர்களாகிய
புள்ளி விவர உதவியாளர், சிகிச்சை அமைப்பாளர், ஆய்வுக்கூட
தொழில் நுட்பப் பணியாளர், கதிர் வீச்சுப் படம் பிடிப்பவர்
ஆகியோரின் உதவியுடன் அரசினர் (வட்ட) மருத்துவ மனைகள்,
ஆரம்பச் சுகாதார நிலையம், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்,
அரசினர் மருந்தகங்கள், தனியார் மருத்துவ மனைகள் ஆகிய
வற்றின் மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றுகிறார். தமிழ் நாட்
டில் இதுவரையில் 827 சுகாதார நிலையங்களில் காச நோய்த்
தடுப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில்
மாவட்டக் காசநோய் நிலையங்களும், திண்டுக்கல், பாளையங்
கோட்டை, அருப்புக் கோட்டை, பூவிருந்தவல்லி, விழுப்புரம்,
புதுக்கோட்டை, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய இடங்களில்
உள்ள 8 அரசினர் மார்பு நோய்ச் சிகிச்சை மருந்தகங்களும்
அடங்கும். இந்தக் காச நோய் கண்டுள்ள இடங்கள் அனைத்திலும்
இலவச நோய்க்கண்டுபிடிப்பு மற்றும் வீட்டில் தங்கச் செய்தே
காசநோய் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகள் உள்ளன.

மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்
பட வேண்டியவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்ய வேண்டி
யுள்ளவர்களுக்குமே மருத்துவ மனையில் தங்கச் செய்து சிகிச்சை
அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 7 அரசினர் காசநோய்
சிகிச்சை இல்லங்கள் காசநோய் மருத்துவ மனைகளிலும், 5
தனியார் காச நோயினர் நலம் பேணும் இல்லங்களிலும் மற்றும்
அரசினர், தனியார் மருத்துவ மனைகளுடன் இணைந்துள்ள காச
நோய் கூடங்களிலும் இதற்கான சிகிச்சை வசதிகள் செய்து
கொடுக்கப்பட்டுள்ளன.

[1973 மார்ச் 13

தமிழ்நாட்டில் 100 காசநோய்ப் படுக்கைகள் ஏற்படுத்து
வதற்கான மத்திய உதவி வழங்க இந்திய அரசு ஒப்புக்
கொண்டுள்ளது. அதன்படி, இராமநாதபுரம், தூத்துக்குடி
நாகப்பட்டினம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் மத்திய
அரசின் முழு உதவியுடன் 25 படுக்கைகள் கொண்ட நான்கு காச
நோய் சிகிச்சை கூடங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்
பித்துள்ளது. இதனால், இம்மாநிலத்தில் மருத்துவ மனையில்
தங்கியிருந்து காச நோய்ச் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள்
மேலும் உயரும்.

மாவட்டக் காச நோய் நிலையம் ஒவ்வொன்றிலும், ஒரு
பி.சி.ஜி. குழு உள்ளது. இக்குழு, 0–20 வயது தொகுதியைச்
சேர்ந்த, ஊசிகுத்தத் தகுந்தவர்களுக்கு (நேரடியாக) பி.சி.ஜி.
நோய்த்தடுப்பு ஊசி மருந்து போடுகின்றது. மாவட்டத் தலைமை
யிட மருத்துவ மனைகளிலும், மகப்பேறு மருத்துவ மனைகளிலும்
வார்டுகளிலும் குழந்தைகளுக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்படுகிறது.
வீடு வீடாகச் சென்று பி.சி.ஜி. ஊசி குத்தும் இக்குழு, பள்ளி
களுக்கும் சென்று ஊசி மருந்தை மாணவர்கட்டு செலுத்துகிறது.
சென்னை, சேத்துப்பட்டில் உள்ள மார்பு நோய்ச் சிகிச்சை காச
நோய் கட்புல விளக்க—பயிற்சி நிலையம் சென்னை மாநகரில் இப்
பணியை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரையில் 56
லட்சம் பேருக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டுள்ளது. இவர்களில் 4
லட்சம் பேர் குழந்தைகள்.

தமிழ்நாட்டில், காசநோய்த் தடுப்புத்திட்டத்தின்கீழ் சென்னை,
மதுரை ஆகிய இடங்களைத் தலைநகராகக் கொண்ட காசநோய்
விளம்பரப் பிரிவு இரண்டு செயல்படுகிறது. இப்பிரிவுகள், காச
நோய் பற்றிய திரைப்படங்களை மக்களுக்குக் காட்டி, காசநோய்
குறிகளைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதற்காக உள்ள வசதிகள்
குறித்தும் அந்த நோய்க்குத் தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டி
யதன் அவசியம் பற்றியும் கற்பிக்கிறது.

இப்பிரிவுகள் விவாதங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை
நடத்துவதன் மூலம், பி.சி.ஜி. ஊசி குத்திக்கொள்ள வேண்டியதன்
அவசியம்பற்றி பிரச்சாரம் செய்து அப்பணியை நிறைவேற்று
வதில் பி.சி.ஜி. குழுவிற்கு உதவிபுரிகிறது.

தமிழ்நாட்டில் உள்ள சில காசநோய் சிகிச்சை நிலையங்கள்
தமிழ்நாடு அரசிடமிருந்து உதவித்தொகை பெறுகின்றன. இத்
தகைய சிகிச்சை நிலையங்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை
வருமாறு :—

| | |
|---|---|
| மகாத்மா காந்தி காசநோய் சிகிச்சை நிலையம், தஞ்சாவூர் .. .. .. | ஆண்டு ஒன்றுக்கு. |
| இராமலிங்கம் காசநோய் சிகிச்சை நிலையம், கோயம்புத்தூர் .. .. .. | ரூ. 44,000 |
| இராஜாஜி காசநோய் சிகிச்சை நிலையம், திருச்சிராப்பள்ளி .. .. .. | ரூ. 1.5 லட்சம். |
| | ரூ. 52,700 |



1973 மார்ச் 13]

தமிழ்நாட்டில் செயல்படும் காசநோய்த் தடுப்புத் திட்டத்தின்
முக்கியக் கூறுகள் இணைப்பு II-(இ)-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை, காசநோய் கட்டுப்பாட்டுச் சங்கம் 1939-ஆம் ஆண்
டில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவர் ஆளுநர் ஆவார்.
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அதன் கூட்டத் தலைவரும்,
நலத்துறைப் பணி குடும்ப நலத்துறை இயக்குநர் கூட்டத்
துணைத் தலைவரும் ஆவர். கீழ்க்கண்டவர்கள் மத்தியக் குழுவில்
தம் அலுவலால் உறுப்பினர்களாக இருப்பர்.

1. தமிழ்நாடு முதலமைச்சர்,

2. அரசுச் செயலாளர் (நல்வாழ்வுத்துறை),

3. தமிழ்நாடு ஆளுநரின் தனிச் செயலாளர்,

4. நலத்துறைப் பணி குடும்ப நலத்துறையின் கூடுதல்
இயக்குநர்,

5. தமிழ்நாடு இடைநிலைக் கல்வி இயக்குநர்,

6. இந்திய ஸ்டேட் வங்கியின் செயலாளரும் பொருளாளரும்
(Secretary and Treasurer).

இந்நிறுவனம், குடியரசு தலைவரைப் புரவலராகக் கொண்ட
இந்திய காசநோய்ச் சங்கத்துடன் இணைந்து தொண்டு நிறுவன
மாகும். புதுடில்லி, நலத்துறைப் பணிகள் துறையின் தலைமை
இயக்குநர் (D.G.H.S.) அதன் கூட்டத் தலைவராவார். மாவட்டங்
களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டக் காசநோய்
சங்கத்தின் தலைவர்களாவர். மாவட்டச் சங்கங்கள் மாநிலச்
சங்கத்துடன் இணைந்தவை.

இவற்றின் முக்கிய நோக்கங்களாவன :—

(அ) காசநோய் பரவுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல்,
நிவாரணம் அளித்தல்.

(இ) இச்சங்கங்களின் நோக்கங்களையே கொண்டுள்ள மாவட்ட
நிறுவனங்களை ஊக்குவித்தலும் அவற்றிற்கு உதவி அளித்தலும்.

(உ) கழகத்தின் நோக்கங்கள் அனைத்திற்குமாக அல்லது
நோக்கங்கள் ஒன்றிற்காகத் திரட்டப்பட்ட அல்லது திரட்டப்
படவுள்ள நிதியை வசூலித்தல், நிர்வகித்தல், செலவு செய்தல்,

(எ) மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்கு அல்லது
நோக்கங்களில் எவற்றையாவது எய்துவதற்கு இடை நிகழ்வான
அல்லது நடத்தப்பட வேண்டிய அத்தகைய காரியங்கள் அனைத்
தையும் செய்தல் அல்லது மேற்சொன்ன நோக்கங்களுடன்
அல்லது மேற்சொன்ன நோக்கங்களுக்கு துணையாகச் செய்யப்படும்
காரியங்கள் அனைத்தும்.

[1973 மார்ச் 13

கழகத்திற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள வகைகளின் மூலம் முக்கியமாக நிதி வசதி கிடைக்கிறது :—

(1) உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் கட்டணம் ;

(2) பொது மக்கள் வழங்கும் நன்கொடை ;

(3) காச நோய் வில்லைகள் விற்பனை இயக்கத்தின்போது அதன் மூலம் கிடைக்கும் தொகை.

இந்த இயக்கம் ஒவ்வொரு ஆண்டும் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாளன்று தொடங்கி குடியரசு தினமான ஜனவரி 26-ஆம் நாளன்று முடிவுறுகிறது. மேற் சொன்ன இயக்கத்தின்போது ஒவ்வொன்றும் 10 காசு மதிப்புள்ள காச நோய் வில்லைகள் பொது மக்களிடம் விற்பனை செய்யப்படு கின்றன. காச நோய்த் தடுப்பு சிகிச்சைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்தில் வசூலிக்கப் படும் தொகைகள் அந்தந்த மாவட்டங்களில் மட்டுமே செல விடப்படும் என்று மாநில காசநோய்க் கழகம் முடிவு செய்துள்ளது. மத்திய காசநோய் கழகத்துக்கு பொருள்கள் வாங்கப்பட்டதால் ஏற்பட்ட செலவு விகிதாச்சாரத் தொகை, நிர்வாகச் செலவுகள், மத்திய, மாநில காச நோய்க் கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 சத வீத பங்கு போக மொத்த நிகர வசூலில் மீதியுள்ள தொகை மட்டுமே மேற்சொன்னவாறு அந்தந்த மாவட்டங்களில் செல விடப்படும். வசூலிக்கப்பட்ட தொகையில் மாவட்டத்தின் பங் குக்குக் கிடைத்த தொகையை மாநில கழகம் வைத்து வரும்: சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் பங்குத் தொகையை பயன்படுத் துவதற்கான செயற்குறிப்புகளுக்கு மாநில கழகம் ஏற்பளிக்கும் சமயங்களில் அத்தொகைகள் அந்தந்த மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படும். மாவட்டக் காசநோய் கழகங்களின் முழு மனதான ஒத்துழைப்புடன் தமிழ்நாடு காச நோய் கழகம் இதுவரை 22 காச நோய் வில்லைகள் விற்பனை இயக்கங்களை வெற்றி கரமாக நடத்தியுள்ளது. 21-வது காசநோய் வில்லைகள் விற்பனை இயக்கம் வரை மொத்தம் ரூ. 23,05,699·64 வசூலிக்கப்பட்டது. இத்தொகையில் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ள ஏழை நோயாளி களின் உதவிக்காக ரூ. 7,89,128·98 செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களின் காச நோய் கழகங் களைவிட நம் மாநிலக் காசநோய் கழகம், 17-வது விற்பனை இயக்கத்திலிருந்து அதிக அளவில் வில்லைகளை விற்று வருவதால் இந்தியக் காசநோய்க் கழகம் கடந்த 5 ஆண்டுகளாக நம் மாநில கழகத்துக்குச் சுழற் கேடயத்தை வழங்கி வருகிறது. 22-வது விற்பனை இயக்கத்துக்காக இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 5,80,710·80 ஆகும். 23-வது விற்பனை இயக்கத்துக்காக ரூ. 9,90,000 மதிப்புள்ள 99,00,000 வில்லைகள் வழங்கப்பட்டுள் ளன. 22-வது விற்பனை இயக்கத்தின் போது வசூலிக்கப்பட்ட தொகையைவிட இன்னும் அதிகமாக வசூலிக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தத் தொகை பின் வரும் காரியங்களில் எவற்றிற்கும் செலவிடப்படலாம்:



1973 மார்ச் 13]

(1) காசநோய் மருத்துவ மனை அல்லது சிகிச்சை நிலையங்கள் கட்டுதல்.

(2) காச நோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மறு வாழ்வு அளித்தல்.

(3) மைக்கிராஸ்கோப், எக்ஸ் கதிர் முதலிய கருவிகளை வாங்குதல்.

(4) மருந்துகள் வாங்குதல்.

இந்தியக் காசநோய்க் கழகத்தால் 1972-ல் வரையறுக்கப் பட்ட நிபந்தனைகளின்படி மாநிலக் கழகம் ஒன்று தொடர்ந்து மூன்றாண்டுகள் கேடயத்தைப் பெற்றுவந்தால் கேடயத்தின் மாதிரி ஒன்று நினைவில் நிலைக்கும் வகையில் தாமே வைத்துக்கொள்ளு மாறு மாநிலக் கழகத்துக்கு கொடுக்கப்படும். நம் மாநிலம் தொடர்ந்து ஐந்தாண்டுகளாகக் கேடயத்தை வென்றுள்ளது. எனவே, தமிழ்நாடு மாநில காச நோய்க் கழகத்தின் தலைவரான இத்துறை அமைச்சரிடம் இந்தியக் காசநோய்க் கழகத்தின் தலைமைச் செயலாளர் மாதிரிக் கேடயத்தை அண்மையில் வழங்கவிருக்கிறார்.

தென் ஆர்க்காடு மாவட்ட காசநோய்க் கழகம், மாவட்டத் திலுள்ள காசநோயாளிகளைக் கண்டறிவதற்குப் பயன்படுத்து வதற்காகக் காசநோய் வில்லைகள் விற்பனை நிதியிலிருந்து M.M.R. மோட்டார் வேன் ஒன்றை வாங்கியுள்ளது. மாவட்டத்தில் பயன்படுத்துவதற்காகக் கடலூர் மாவட்ட மருத்துவ அதிகாரி யிடம் அந்த மோட்டார் வேன் ஒப்படைக்கப்படும். அந்த மோட்டார் வேனைப் பேணுவதற்காகக் கீழ்க்காணும் பணியாளர் களை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. | "எக்ஸ்" கதிர் படமெடுப்பவர் .. | 1 |
| 2. | வலவர் .. .. .. .. | 1 |
| 3. | லஸ்கர் .. .. .. .. .. | 1 |

காசநோய்க் கழகத்தில் பின்வரும் மூன்றுக் குழுக்கள் இடம் பெற்றுள்ளன :—

1. மத்தியக் குழு.
2. நிருவாகக் குழு.
3. தொழில் நுட்பக் குழு.

கழகத்தின் பொதுக்கூட்டம் ஒவ்வொரு ஆண்டிலும் ஒருமுறை நடைபெற்று வருகிறது.

தொழுநோய் தடுப்புத் திட்டம்.

பழைய காலத்தில் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக, தொழுநோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளை ஊருக்கு வெளி யில் தனியான குடியிருப்புகளில் பிரித்து வைத்திருந்தனர்.

அநேக நேர்வுகளில் இம்முறையைச் செயலில் கையாளமுடியாது என்பதுடன் இது நியாயமற்றதுமாகும். இவ்வாறு இந்நோயாளி களைக் கட்டாயமாகப் பிரித்து வைத்ததால் அப்படிப் பிரித்து வைக்கப்படுவோம் என்ற பயத்தின் காரணமாக நோயாளிகள் தங்கள் நோயை மறைத்து வைத்து வந்தார்கள். இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டதால் இந்நோய் மேலும் முற்றியதுடன், மறைத்து வைக்கப்பட்ட காலங்களில் மேலும் பல பேருக்கு இந்நோய் பரவியது. முன்னாட்களில் தொழு நோயைக் குணப் படுத்துவதற்காக ஒரு எண்ணெய் மருந்து கொடுக்கப்பட்டது. நோயைப் போக்குவதில் இந்த எண்ணெய் மருந்து மிகவும் மெதுவாகச் செயல்பட்டதால் இந்நோய்க்கு இது சரியான மருந் தாக அமையவில்லை.

நம் நாடு விடுதலை பெறுவதற்குமுன் அரசினல் அல்லது உள்ளாட்சி மன்றங்களால் அல்லது தொண்டு நிறுவனங்களா நடத்தப்பட்ட மருத்துவ மனைகளில் அனைத்திலும் தொழுநோ சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தாலும் தொழுநோயினுல் பாதிக்கப் பட்டுள்ள ஏராளமான பேருக்கு சிகிச்சையளிக்கவோ இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கோ எவ்வித மும்முரத் திட்டமும் மேற் கொள்ளப்படவில்லை. விடுதலை பெற்ற பிறகு நாட்டு மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, நாளும் பரவுவதால் நாட்டின் முன்னேற்றத்துக்கு இடையூறு விளைவிக்கக்கூடியதாக இருப்பதால் உடனடியாக முனைந்து தடுக்கப்பட வேண்டியது இந்தக் கொடிய தொழுநோய் என்று கண்டறியப்பட்டது. நம் நாட்டில் ஏராளமான தொழு நோயாளிகள் உள்ளனர். அவர்கள் பல்வேறு நிலைகளில் உடலுறுப்பு சிதைந்தவர்களாக இருப்ப தால் நலமுள்ள பிறருக்கு ஈடாக அவர்களால் உழைக்க முடிய வில்லை. தொழு நோயாளிகளிடமிருந்து அந்நோய் 'மற்றவர் களுக்குப் பரவாமல் தடுக்கும் வகையில்தொழுநோய் சிகிச்சைக்குச் சிறந்த மருந்தாக சல்போன் (Sulphone) இருக்கும் என்று அறியப்பட்டது. எனவே, சல்போன் (Sulphone) சிகிச்சை மூலம் தொழுநோயைக் கட்டுப்படுத்தும் முறை ஒரு திட்டப் பணியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இதுவரை தொழு நோய் மருத்துவ மனைகளைப் பேணிவந்த தொண்டு நிறுவனங்கள் தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் தேசியத் திட்டத்தின் கொள்கை களை ஏற்றுக்கொண்டுள்ளது; தற்போது அவர்களும் நோய்த் தடுப்புப் பணிகளைப் புரிந்து வருகின்றனர்.

தற்போது தொழு நோயாளிகளுக்குச் சீரமைப்பு அறுவைமுறை சிகிச்சைகள், உடற்கூறு இயல் மருத்துவச் சிகிச்சை ஆகியன செய்யப்படுகிறது. உடலுறுப்பு இழந்தவர்களுக்கும் அவர்கள் இழந்த உடல் உறுப்பைச் சிகிச்சை மூலம் ஈடு செய்வதற்கு முடி கிறது. இதுவரை இந்நோயைத் தீர்க்க முடியாது என்று கருதப் பட்டுவந்த, உடலுறுப்பு இழந்த நோயாளிகளுக்கு இச் சிகிச்சை முறைகள் புது நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.



தமிழ் நாட்டில் இந்நோய் அதிக அளவில் குறிப்பிட்ட வட்டாரங்களில் பரவும் நோயாக உள்ளது. இங்கு ஏறத்தாழ 7·5 லட்சம் தொழு நோயாளிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1969-ஆம் ஆண்டுக்கு முன் அரசுச் சிகிச்சை, ஆய்வு நிலையம்—1, தொழுநோய்த் தடுப்புப் பிரிவுகள்—14, துணை நிலையங்கள்—7, பயிற்சிப் பிரிவுகள்—78 ஆகியவை அரசினல் நடத்தப்பட்டு வந்தன. 50 லட்சம் மக்கள் தொகை உள்ள பகுதிக்கு இந்நிலை யங்களும், பிரிவுகளும் பணிபுரிந்து வந்தன; 27 தொண்டு நிறுவனங்கள் 61 லட்சம் மக்களுள்ள பகுதிக்கு பயன்பட்டு வந்தன. நடப்பு திட்டத்தின் கடந்த மூன்று ஆண்டுகளில். (1969–72) தடுப்புப் பிரிவுகள்—7, முழுநிலை நோய்த் தடுப்புப் பிரிவுகளாக நிலை உயர்த்தப்பட்ட 7 துணை நிலையங்கள் பயிற்சி பிரிவுகள்—48 ஆகியன ஏற்படுத்தப்பட்டன. இவை மேலும் 46 லட்சம் மக்களுள்ள பகுதிக்குப் பயன்படுகின்றன. இந்த மூன்றாண்டுகளில், அரசு நோய்த்தடுப்புப் பிரிவுகளினுல் பயனடைந்த மக்கள் தொகை இரு மடங்காக்கப்பட்டன, 1972 பிப்ரவரி மாதத்தில் மேற்கொண்டு மூன்று பிரிவுகளுக்கு ஒப் பளிப்பு வழங்கப்பட்டது. இதனுல் பயன் பெறும் பகுதி மக்கள் தொகை—

1969-ஆம் ஆண்டில் —

அரசு நிறுவனங்கள் மூலம் .. .. 50 லட்சம்.

தொண்டு நிறுவனங்கள் மூலம் .. 61 லட்சம்.

1972-ஆம் ஆண்டில் —

அரசு நிறுவனங்கள் மூலம் .. 96 லட்சம்

தொண்டு நிறுவனங்கள் மூலம் .. 61 லட்சம்.

1972 மார்ச்சு திங்கள் முடிவில் பயனடையும் பகுதியில் உள்ள மக்கள் தொகை. 157 லட்சம்.

1972-73 ஆம் ஆண்டில் திட்டத்தினுல் பயனடையும் புதிய பகுதி மக்களின் தொகை. 9 லட்சம்.

தமிழ்நாட்டில் 7·5 லட்சம் தொழு நோயாளிகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 4·03 லட்சம் தொழு நோயா ளிகள் அரசு கட்டுப்பாட்டுப் பிரிவுகள், தொண்டு நிறுவனங்கள், மாநகர மருத்துவ மனைகள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் பயன் பெற்று வருகின்றனர். எனவே, நோயாளிகளில் 54 சதவீதம் பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 1973-74-ஆம் ஆண்டில் 5 தடுப்புப் பிரிவுகளைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் உள்ள தொழு நோயாளிகளின் பயனுக்காக ஒரு சில ஆண்டுகளில் புதிய பல தொழு நோய்த் தடுப்பு பிரிவுகள் தொடங்கப்பட உள்ளன;

எனவே, இத்திட்டம் முழுவதற்கும் முதுகெலும்பு போல பணி
புரிய அதிக அளவு மருத்துவச் சார்பு பணியாளர்களுக்குப்
பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன்படி
1973 ஜனவரியில் பயிற்சி அளிப்பதற்காக 75 பேர் தேர்ந்தெடுக்
கப்பட்டனர். 1973-74-ஆம் ஆண்டில் 150 பேருக்கு பயிற்சி
அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழு நோய்த் தடுப்புத் திட்டத்தின் ஒரு
பகுதியாக நல்வாழ்வுக் கல்வி பிரச்சாரத்தை ஹிந்து குஷ்ட
நிவாரண சங்கத்தின் தமிழ்நாடு கிளை மிகவும் சிறந்த முறையில்
மேற்கொண்டு வருகிறது. நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள்
தவிர மற்ற 11 மாவட்டங்களில் இச் சங்கத்திற்குக் கிளைச்
சங்கங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் தொழு நோயாளிகள்
எவரும் இல்லையென்று தெரியவந்துள்ளது. கன்னியாகுமரி
மாவட்டத்தில் தொழு நோய் அறிகுறிகள் மிகவும் குறைவாகக்
காணப்படுகின்றன. பிரச்சாரப் பணிகளுக்காக அரசு இச்சங்
கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 13,000 உதவித் தொகை
வழங்குகிறது.

நலத்துறை வசதிகளையும், தடுப்பு நடவடிக்கைகளையும்
முனைப்புடன் செயற்படுத்தி வருவதால் பொது மக்களின் எல்லாப்
பிரிவினரிடையேயும் தொழு நோய் பிரச்சினை குறித்து ஒரு விழிப்
புணர்ச்சியை ஏற்படுத்துவதில் இச்சங்கம் முக்கிய பங்கு வகிக்
கிறது; சங்கத்தின் பணியை ஆய்வு செய்வதற்கும், வருங்
காலத் திட்டங்களை வகுப்பதற்காகவும் இச்சங்கம் ஆண்டு
தோறும் பொதுக் கூட்டத்தை நடத்தி வருகிறது.

பாக்டீரியா கிருமி தொற்றிய (Bacteriologically positive)
தொழு நோயாளிகளுக்கும், தொழு நோய் நீங்கியவர்கள் உடல்
குறை நீக்க அறுவை சிகிச்சைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டி
ருந்தால் அவர்களுக்கும் சிகிச்சையளித்துவரும் கீழ்க் குறிப்பிட்
டுள்ள 10 நிலையங்களுக்கு திங்கள் ஒன்றுக்கு வயது வந்த
ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 என்ற வீதத்திலும், சிறுவர்
ஒவ்வொருவருக்கும் ரூபாய் 12 என்ற வீதத்திலும் எண்ணிக்கை
அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகின்றன:—

1. (Schieffelin) தொழுநோய் ஆராய்ச்சிக்கூடம், கரிகிரி,
வட ஆற்காடு மாவட்டம்.

2. தேபேந்திரநாத முல்லிக் தொழுநோய்மனை, வடதராசலூர்,
தென்னாற்காடு மாவட்டம்.

3. கஸ்தூரிபா காந்தி குஷ்ட நிவாரண நிலையம், மலவந்
தாங்கல், தென்னாற்காடு மாவட்டம்.

4. சி. பி. நினைவு தொழுநோய் மருத்துவ மனை, கொளச்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.



5. புனித இதய தொழுநோய் மருத்துவ மனை, கும்ப
கோணம், தஞ்சை மாவட்டம்.

6. தயாபுரம் தொழுநோய் மருத்துவ மனை, மானாமதுரை,
இராமநாதபுரம் மாவட்டம்.

7. (Holy Family Hansorium), பாதிமாநகர், திருச்சி
மாவட்டம்.

8. தூய சூசையப்பர் தொழு நோய் மருத்துவ மனை,
தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்.

9. புனித லூக்ஸ் தொழுநோய் மருத்துவ மனை, பெரிய
குளம், திருநெல்வேலி மாவட்டம்.

10. (Cheshire) விடுதி, காட்பாடி, வட ஆற்காடு
மாவட்டம்.

தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்துதல்.

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குச் சிறந்த முறையில்
சிகிச்சை அளிப்பதற்கான மறு வாழ்வு இல்லங்களை ஏற்படுத்த
அரசு முடிவு செய்தது. இதுவரை 10 மறு வாழ்வு இல்லங்களை
ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. கீழ்க் குறிப்பிடப்
பட்ட அந்த இல்லங்கள் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதற்கொண்டு
செயல்படத் தொடங்கி விட்டன.

1. பரனூர், செங்கற்பட்டு மாவட்டம் 2—10—1971.
2. உளுந்தூர்பேட்டை, தென் ஆர்க்காடு மாவட்டம் 22—1—1972.
3. பர்கூர், தர்மபுரி மாவட்டம் 18—6—1972.
4. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் 7-1-1973.
5. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் 17–2–1973.
6. விண்ணபள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம் 15–2–1973.

கீழ்வரும் இல்லங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும்
நிலையில் உள்ளன.

1. திருவண்ணாமலை, வட ஆர்க்காடு மாவட்டம்.
2. தேவியாகுரிச்சி, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.
3. செல்லையம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
4. புதுப்பட்டி கிராமம், மதுரை மாவட்டம்.

ஒவ்வொரு இல்லத்திலும் 500 பேர் சேர்த்துக் கொள்ளப்
படுவார்கள். தொழுநோயாளிகளின் பாதுகாப்பு, அவர்களுக்கு
சிகிச்சையும் மறுவாழ்வும் அளித்தல் ஆகியவற்றை இவ்வில்-
லங்கள் கவனித்துக் கொள்ளும். இவ்வில்லத்திலிருப்போருக்கு முழு
நேர மருத்துவ அதிகாரி ஒருவர் மருத்துவ சிகிச்சை அளிப்பார்.
பயிற்சி அளிக்கப்பட்ட துணை மருத்துவப் பணியாளர் குழு ஒன்று
மருத்துவ அதிகாரிக்கு உதவியாயிருக்கும். ஆக்கபூர்வமான
பல்வேறு வாழ்க்கைத்தொழிலில் இவ்வில்லத்தில் இருப்போர் ஈடு
படுவர். இத்தொழிலில் இயன்ற அளவு முதலீடு செய்யப்படும்;
இல்லத்திலிருப்போரின் உடலுழைப்பும் குறைவாகயிருக்கும்.
முடிவில் பிச்சை எடுக்கும் பழக்கத்தை முழுவதுமாக விட்டுவிட்டு
தங்கள் சொந்த உழைப்பையே நம்பி வாழ இவர்களுக்கு தன்
னம்பிக்கை ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

இவ்வில்லத்திலிருப்போருக்கு சிகிச்சை, உணவு, உடை, தங்கும்
வசதிகள் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

தொழுநோய்க்கான பொது சிகிச்சையுடன் வழக்கமான
எல்லா வியாதிகளுக்கும் இந்நிலையங்களில் சிகிச்சையளிக்கப்படு
கிறது. அவசியம் ஏற்படின், அவர்களை இல்லத்திலுள்ள சிகிச்-
சைக் கூடங்களில் சேர்த்துக்கொண்டு சிகிச்சை அளிக்கப்படும்.
இவ்வில்லங்கள் அரசின் சமூக நலத்துறையின் நிர்வாகத்தின்கீழ்
செயல் பட்டு வருகின்றன.

## புற்றுநோய்க் கட்டுப்பாடு.

அரசின் முக்கிய மருத்துவ மனைகளில் புற்றுநோய்க்கு அறுவை
மருத்துவம், இராசயன மருத்துவ சிகிச்சை முறை (Chemo-
therapeutic treatment) ஆகியன அளிக்கப்பட்டு வருகின்றன.
இது தவிர உலகச் சுகாதார நிறுவனத்துடன் இணைந்து, அறிஞர்
அண்ணா நினைவுப் புற்றுநோய் நிறுவனம் காஞ்சிபுரத்தில் ஏற்
படுத்தப்பட்டது. இதுவே இந்தியாவில் இவ்வகையில் முதன்
முதலில் ஏற்படுத்தப்பட்டது.

பெண்களின் கருப்பைவாய் பாகத்தில் ஏற்படும் புற்று நோயை
யும், வாய்ப்புற்று நோயையும் தொடக்க நிலையிலேயே அறிவதற்
காக அதிகளவு மக்களுக்கு எக்ஸ்கதிர் படம் எடுக்கும் திட்ட
மொன்று இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும். உலக சுகாதார
நிறுவனம் இந்நிறுவனத்துக்கு உதவித் தொகை வழங்குகிறது.
தொழில் நுட்ப ஆலோசனை, தேவைகளை பூர்த்தி செய்தல், கருவி
கள், படிப்பு உதவிப்பணம் ஆகிய உதவிகளையும் இந்நிறுவனம்
வழங்கிவருகிறது. உயிர் நாற்பிரிவு ஆய்வுக்கூடம், சிறு அறுவை
சிகிச்சைக் கூடம் ஆகியவற்றிற்கு குளிர்ச் சாதன வசதி ஏற்
படுத்த அரசு ரூ. 2,23,850 தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கி
யுள்ளது. கட்டிடத்தின் தரைப்பகுதியின் இருபிரிவுகளிலும், முதல்
மாடியிலும், கூடங்கள் கட்டுவதற்காக அரசு ஏற்கெனவே
ரூ. 7·3 லட்சம் வழங்கியுள்ளது.



காஞ்சிபுரம் நகரை ஒட்டி சென்னையிலிருந்து பெங்களூருக்குச்
செல்லும் முக்கிய தேசிய நெடுஞ்சாலை பக்கம், புற்று நோய்
மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக 20 ஏக்கர் அளவு நிலத்தைக்
கையகப்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இம்மனையில்
கோபால்ட் 60, கால்சியம் 137 பிரிவுகள் முதலியவற்றிற்கான
இடவசதியுடன் 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்
துவ மனை கட்டுவதற்கு ரூ. 27 லட்சம் செலவிற்கான திட்ட
மதிப்பீடு அரசுக்கு வந்துள்ளது. இது குறித்து ஆய்வு செய்யப்
பட்டு வருகிறது.

கருப்பையில் ஏற்படும் புற்று நோய்க்கான முன்
அறிகுறியையும், புற்றுநோயின் தொடக்க நிலையையும் ஆரம்பத்
திலேயே கண்டறிவதற்காக 1—1—1972 முதல் 30—9—1972
வரை 1,396 பெண்களுக்கு எக்ஸ்கதிர் படம் எடுக்கப்பட்டது.
இந்நிலையம் தொடங்கி வைக்கப்பட்ட நாளான 21—3—1969
முதல் 30—9—1972 வரை மொத்தம் 8,376 பெண்களுக்கு
எக்ஸ்கதிர் படம் எடுக்கப்பட்டது.

1—1—1972 முதல் 30—9—1972 வரை எக்ஸ் கதிர் படம்
எடுக்கப்பட்ட பெண்களில் 12 பெண்களுக்கு கருப்பை புற்று
நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. 1973 ஜனவரி
முதல் இத்திட்டத்திற்கு தொடர்ந்து உலக சுகாதார நிறுவனத்
தின் உதவியை பெறுவதற்கான செயற்குறிப்புகள் அந்நிறு
வனத்துக்கு அனுப்பி வைக்க இந்திய அரசுக்கு அனுப்பப்பட்
டுள்ளது. உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து கிடைக்கும்
அந்நியச் செலாவணி முழுவதையும் உதவித் தொகை மானியமாக
(Grant-in-Aid) அளிக்கும்படியும், நோராட் (Norad) நிதியிலிருந்து
வாங்கப்படும் கோபால்ட் 60 கருவிப் போன்ற கதிர் வீச்சியல்
சிகிச்சை முறை கருவிகளை முன்னுரிமை அடிப்படையில் இந்நிறு
வனத்துக்கு வழங்கும்படி உலக சுகாதார நிறுவனத்திடம் கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை முகாம் திட்டம்.

நம் மாநிலத்தில் விழி வெண்படல நோயினால் (Cataract)
இரண்டு கண்களும் குருடாக அல்லது ஒரு கண் குருடாக
உள்ளோர் சுமார் 10 லட்சம் பேர் என மதிப்பிடப்பட்டுள்ளது.
இது தவிர மற்ற பல்வேறு கண் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்
பல லட்சம்பேர் உள்ளனர். இவர்களில் சுமார் 60 சத
வீதம் பேர் கண்ணொளி பெற்றால், திரும்ப இயல்பான வாழ்வைப்
பெறமுடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கண்ணொளி இழந்த
பல லட்சம் மக்களின் குடும்பங்களுக்கு ஒளியையும், மகிழ்ச்சி
யையும் தருவதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்
சரின் பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் 3—6—1972
முதற் கொண்டு " முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக்
கண்நோய் சிகிச்சை முகாம்" என்னும் பெயரில் பெரிய திட்டம்
ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பொது மக்களிடமிருந்தும், உள்

ளாட்சி மன்றங்கள், தொழில்-வணிக நிறுவனங்கள் முதலியவற்றிடமிருந்தும் நன்கொடைகள் பெறுவதன் மூலம் இத்திட்டத்துக்கு நிதி வசதி திரட்டப்படுகிறது. இவ்வாண்டிலும், அடுத்த ஆண்டிலும் விழி வெண்படல நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் பேருக்கு அறுவை சிகிச்சை செய்தல், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் கண்நோய் சிகிச்சை முகாம்கள் அமைத்து கண் விழி விறைப்பு நோய் ( Glauchoma ) கண் அமர நோய் ( Trachoma ) முதலியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மற்ற நோயாளிகளுக்கும் சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்தல் ஆகியன அரசின் நோக்கங்களாகும்.

இத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக மாநிலம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய ஒவ்வொரு மண்டலத்திலும் நடமாடும் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்று செயல்படும். சென்னையில் நடமாடும் கண் நோய் சிகிச்சைப் பிரிவுகள் இரண்டு செயல்படும். ஒவ்வொரு பிரிவும் சுமார் இரண்டு, மூன்று மாவட்டங்களில் செயல்படும் விதத்தில் பணி அமைந்துள்ளது. இந்த நடமாடும் கண்நோய் சிகிச்சைப் பிரிவுகள் அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கண் நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தும் வகையில் இந்த நடமாடும் பிரிவுகள் முழு அளவு வசதியைக் கொண்டுள்ளது.

இந்த ஐந்து பிரிவுகளில் இரண்டு பிரிவுகள் சென்னை அரசு கண் நோய் மருத்துவமனை கண்காணிப்பாளரின் மேற்பார்வையிலும், நிர்வாகத்தின் கீழும் உள்ளன; மீதி மூன்று பிரிவுகள் மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் துணை முதல்வரான கண்நோய் அறுவை சிகிச்சை நிபுணரின் மேற்பார்வையிலும் நிர்வாகத்தின் கீழும் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் ஒரு மாதத்தில் இரண்டு கண்நோய் சிகிச்சை முகாம்களை நடத்தும்; ஒவ்வொரு முகாமும் குறைந்த அளவு 500 பேருக்கு கண்நோய் அறுவை சிகிச்சை செய்யும். கண்நோய் சிகிச்சை முகாம்களை சிறந்த இலகுவான முறையில் நடத்துவதற்காக ரூ.1,00,000 மதிப்புள்ள தேவையான கருவிகள், அறுவை கட்டில், தள்ளுவண்டி, மேஜை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள் ஆகியவை ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ளன; மேலும் ஜீப், வேன், பேருந்து ஆகியவை ஒவ்வொன்று வழங்கப்பட்டுள்ளன. கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாள் முதல் கண் நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன:—

**சென்னையிலுள்ள பிரிவு**

**செங்கற்பட்டு மாவட்டம்**

1. அனகாபுத்தூர்.
2. அம்பத்தூர்.



**செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.**

3. காஞ்சிபுரம்.
4. கும்மிடிப்பூண்டி.
5. திருத்தணி.
6. செங்கற்பட்டு.

**தென் ஆர்க்காடு மாவட்டம்.**

7. விருத்தாச்சலம்.
8. சிதம்பரம்.
9. விழுப்புரம்.
10. கடலூர்.
11. பெண்ணாடம்.

**வட ஆர்க்காடு மாவட்டம்.**

12. வேலூர்.
13. திருவண்ணாமலை.
14. ஆம்பூர்.
15. குடியாத்தம்.
16. செய்யாறு.

**தர்மபுரி மாவட்டம்**

17. கிருஷ்ணகிரி.
18. தர்மபுரி.
19. ஹரூர்.

**சென்னை மாநகரம்.**

20. நுங்கம்பாக்கம்.

**மதுரையிலுள்ள பிரிவு முதலியன.**

**தஞ்சாவூர் மாவட்டம்.**

1. திருவாரூர்.
2. மாயூரம்.
3. குற்றாலம்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

4. டால்மியாபுரம்.
5. திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி.

6. புதுக்கோட்டை.
7. கரூர்.
8. முசிறி.
9. மணப்பாறை.

திருநெல்வேலி மாவட்டம்.

10. திருச்செந்தூர்.
11. திருக்குருங்குடி.
12. தூத்துக்குடி.
13. சங்கரன் கோயில்.

இராமநாதபுரம் மாவட்டம்.

14. திருப்பத்தூர்.
15. பரமக்குடி.
16. விருதுநகர்.
17. சிவகாசி.

கோயம்புத்தூர் மாவட்டம்.

18. குமாரபாளையம்.
19. கோபிசெட்டிப்பாளையம்.
20. கோயம்புத்தூர்.
21. பொள்ளாச்சி.
22. உடுமலைப்பேட்டை.
23. ஈரோடு.

சேலம் மாவட்டம்.

24. பரமத்தி வேலூர்.
25. மேட்டூர்.

கன்னியாகுமரி மாவட்டம்.

26. நாகர்கோயில்.
27. குழித்துறை.

நீலகிரி மாவட்டம்.

28. உதகமண்டலம்.
29. குன்னூர்.



மதுரை மாவட்டம்.

30. போடிநாயக்கனூர்.
31. பழனி.
32. மேலூர்.
33. உசிலம்பட்டி.
34. திண்டுக்கல்.

இந்த மருத்துவப் பிரிவுகளில் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாள் வரை அடைந்த சாதனைகள் பின்வருமாறு:—

| பிரிவுகள். (1) | | மருத்துவம் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. (2) | விழிவெண்படல (காடராக்ட்) கண் நோய் மருத்துவம் அளிக்கப்பட்டவர் எண்ணிக்கை. (3) | கண் விழிவிலைறப்பு நோய்களுக்கு மருத்துவம் பெற்றவர்கள். (4) | நடத்திய ஙிப்ராக்கிஷன் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|---|
| சென்னை | .. | 56,099 | 7,583 | 63 | 13,068 |
| மதுரை முதலியவை | .. | 166,986 | 24,102 | 2,620 | 21,263 |
| மொத்தம் | .. | 223,085 | 31,685 | 2,683 | 34,331 |

முகாம்கள் நடத்துவதைத் தவிர்த்து, கோயம்புத்தூர் C.S.W. ஆலையைச் சேர்ந்த திருமண மண்டபத்தில் 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாளிலிருந்து (தொடர் முகாம்) தற்காலிக கண் மருத்துவமனை தொடங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் கோயம்புத்தூர் சுற்றிலுமுள்ள கண் நோயாளி களுக்கு அறுவை மருத்துவம் செய்யப்படுகிறது. இந்த மருத்துவ மனை மேலும் ஆறு திங்களுக்குத் தொடர்ந்து நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வாரத்தில் இருநூறு நோயாளிகளுக் காயினும் அறுவை மருத்துவம் அளிப்பதே இதன் நோக்கமாகும். கோயம்புத்தூர் மருத்துவமனையைச் சேர்ந்த கண்மருத்துவ இய ஊர்த்திப் பிரிவால் இக் கண் சிகிச்சை முகாம் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த கண்சிகிச்சை முகாமில் புறநோயாளிகட்கும் மருத் துவம் அளிப்பதுடன் விழிவெண்படல (காடராக்ட்) நோய்க்கும்

1,234 பேருக்கு மருத்துவம் அளிக்கப்பட்டது. இதைப் போலவே
திருச்சிராப்பள்ளி மருத்துவமனையில் 1972-ஆம்ஆண்டு அக்டோபர்
திங்கள் 21-ஆம் நாளிலிருந்து மற்றொரு கண் நோய் மருத்துவ
மனை தொடங்கப்பட்டுள்ளது. இங்கு, 359 நோயாளிகளுக்கு
விழிவெண்படல நோய்க்கு மருத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

நலத்துறைப் பணிகள் குடும்ப நலத் துறை இயக்குநர் இத்
திட்டத்திற்கு முழுப் பொறுப்புடையவராவார். கண்முகாம்
சம்பந்தப்பட்ட வேலையைக் கவனிப்பதற்காக, சிறப்புத் துணைக்
கலெக்டர் ஒருவர், இளநிலை கணக்கு அதிகாரி, இரு உதவியாளர்
கள், கடைநிலைப் பணியாளர் மூவர் ஆகியோர் நலத் துறைப்
பணி குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகத்திற்காக நியமிக்
கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. வருவாய்த் துறை
வளர்ச்சி வட்டாரப் பணியாளர் உதவியுடன் மாவட்ட ஆட்சித்
தலைவர்கள், மருத்துவப் பிரிவு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துக்
கொண்டு கண்முகாம்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பணி குறித்த செலவை ஈடு செய்வதற்காக, '' முதல
மைச்சர் கண் சிகிச்சை முகாம் நிதி '' எனப்படும் சிறப்பு நிதி
ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தாராளமாக நன்கொடை
அளிக்குமாறு பொதுமக்களுக்கு முதலமைச்சரும், மக்கள் நல்வாழ்
வுத்துறை அமைச்சரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பொது
மக்கள் நன்கொடை மூலம் வசூலிக்கப்பெறும் தொகைகள்
''முதலமைச்சர் கண் முகாம் நிதிக்கு'' வரவு வைக்கப்படுகின்றன.
மேற்படி நிதி நிர்வாகத்தில் அரசுக்கு ஆலோசனை நல்குவதற்கு
ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மக்கள் நல்
வாழ்வுத் துறை அமைச்சர் இக்குழுவின் தலைவர் ஆவார். அரசுச்
சார்புள்ள ஐவரும் அரசுச் சார்பற்ற நால்வரும் இதில் உள்ளனர்.
இந்நிதிக்குக் கிடைத்த வசூல் 1—3—1973 நிலவரப்படி ரூ.
44,77,620·43 ஆகும்.

கண்சிகிச்சை முகாம்கள் குறித்த செலவுக்காக மாவட்ட
ஆட்சித் தலைவர்களுக்கும், மருத்துவப் பிரிவு அதிகாரிகளுக்கும்
முன் பணமாக 1—3—1973 நாள்வரை ரூ. 19,29,276·00
அனுமதிக்கப்பட்டுள்ளது. 1973–74-ஆம் ஆண்டில் 59,000 விழி
வெண்படல (காடராக்ட்) அறுவை சிகிச்சை செய்வதென்று திட்ட
மிடப்பட்டுள்ளது.

## மருந்துக் கட்டுப்பாடு.

இம்மாநிலத்தில் மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகத்தின் முக்கிய
அலுவல், மருந்துகள், ஒப்பனைப் பொருட்களின் தயாரிப்பு,
விற்பனை, விநியோகத்தை முறைப்படுத்துவதாகும். மருந்துகள்
இறக்குமதிக் கட்டுப்பாட்டை இந்திய அரசு, மருந்துகள் கட்டுப்
பாடு அதிகாரி மூலமாக நிர்வகித்து வருகையில், இம்மாநிலத்தில்
மருந்துகள் தயாரிப்பு விற்பனை விநியோகக் கட்டுப்பாடு மாநில



அரசுச் சம்பந்தப்பட்டதாகும். மருந்துகள், ஒப்பனைப் பொருட்
கள் சட்டத்தையும், ஏனைய சட்டங்களையும் விதிகளையும் முன்னி
லும் சிறப்பாகச் செயல்படுத்தும் பொருட்டு, துணைக்கட்டுப்பாடு
அதிகாரி, மேலும் ஒரு உதவிக் கட்டுப்பாடு அதிகாரி, மேலும்
முதுநிலை மருந்தாய்வாளர் ஐவர் ஆகியோரை நியமித்து 1972-ஆம்
ஆண்டில் மருந்துகள் கட்டுப்பாடு பிரிவு வலுப்படுத்தப்பட்டது.
1972-ஆம் ஆண்டில் (31—12—1972வரை) மருந்தாய்வாளர்கள்
விற்பனை நிறுவனங்களில் 15,301 ஆய்வுகளும், தயாரிப்பு நிறுவனங்
களில் 1,022 ஆய்வுகளும், மருத்துவமனை மருந்தகங்களில் 912
ஆய்வுகளும் நடத்தினர். இவர்கள் 674 மாதிரிகள் எடுத்து அரசு
பகுப்பாய்வாளர்களுக்குப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைத்தனர்.
இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ்ப் பிறப்பித்த மருந்து
கள் (விலைக் கட்டுப்பாடு) ஆணையை மீறி அதிக விலைகளில் மருந்து
களை விற்றதற்காக தொடரப்பட்ட இரண்டு வழக்குகள் உட்பட
1972-ஆம் ஆண்டில் 124 வழக்குகள் தொடரப்பட்டன. இவ்
வாண்டில் 59 வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதமும் விதிக்
கப்பட்டுள்ளது. 16 பேர்களுக்குச் சிறைத் தண்டனையும் அளிக்கப்
பட்டது. முழுவசதி பெற்ற மருந்துகள் சோதனை ஆய்வுக்கூடம்
திறக்கப்படுவதற்கு 1973–74-ல் தொடக்க வேலை மேற்கொள்ளப்
படும்.

1972 ஜூலை—ஆகஸ்டில் அரசு, குழந்தைகள் மருத்துவமனை
யில், நீரடைப்பு நோய் காரணமாக ( Anuria ) அனுமதிக்
கப்பட்ட குழந்தைகள் சில இறக்க நேரிட்டது குறித்து அரசின்
கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. புலன் விசாரணை செய்த
பிறகு, 'பிப்மால்', '' பிப்மால்—சி '' ( Pipmol and Pipmol C )
மருந்துகள் தயாரித்த கம்பெனியின் உரிமம் செயல்படுவதை
ஓராண்டுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. மருந்துகள் தயாரித்த
நிறுவனத்தின்மீதும், மருந்துக்கான மூலப் பொருட்கள் வழங்கிய
நிறுவனத்தின்மீதும் புகார்கள் தாக்கலாயுள்ளன. இவ்வழக்குகள்
நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

இதைப் போன்ற நச்சுப் பொருள் '' கால்னியாசிட் பெப்ரி
டின்'', ''பெப்ரிடின்'' (Calniazid Febridin and Febridin)
மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தியதாகவும் கண்டு பிடிக்கப்
பட்டது. தயாரிப்பாளர்களிடமிருந்த மருந்துகள் யாவும்
மருந்து கட்டுப்பாடுதுறையினரால் கைப்பற்றப்பட்டன. ஏற்
கனவே கொடுக்கப்பட்டிருந்த மருந்துகள் யாவும் திரும்பப் பெறு
மாறு தயாரிப்பாளர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. ஏனைய மா
நிலத்திலுள்ள மருந்துக்கட்டுப்பாடு அதிகாரிகள் விழிப்புடன்
இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். ''கால்னியாசிட்'',
'' பெப்ரிடின் '' ( Calniazid Febridin ) மருந்துகள்
தயாரித்த நிறுவனங்களின் உரிமங்களும் ஓராண்டுவரை செயல்
படுவதனின்றும் நிறுத்தி வைக்கப்பட்டன. இந்த நிறுவனங்களின்
மீது 1940-ஆம் ஆண்டு மருந்துகள், ஒப்பனைப் பொருள்
சட்டத்தின்கீழ் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன, இவ் வழக்கு
கள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

### தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

1948-ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதி சட்டத்தின்
விதித்துறைகளின்படித் தயாரிக்கப்பட்ட தொழிலாளர் நலக்
காப்புறுதித் திட்டம், தமிழ்நாட்டில் 1955-ல் கோயம்புத்தூரில்
முதன் முதலாகச் செயல்படுத்தப்பட்டுப் பின்னர் பல்வேறு இடங்
களில் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டது. தருமபுரி, நீலகிரி
மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்கள் அனைத்திலும் தற்
போது இந்தத் திட்டம் செயலில் உள்ளது. இது தொடங்கப்பட்ட
நாள் முதலாக, காப்புறுதி செய்து கொண்டவர் 1,000மும்,
1,000 பேருக்கு மேற்பட்டுமுள்ள 39 பெரிய தொழிற்சாலை வட்டா
ரங்களில் விரைவான முன்னேற்றம் அடைந்துள்ளது.

காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர் தம் குடும்பத்
தினருக்கும் சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்,
மதுரை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்,
நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கோயம்புத்தூர்
துவமனையில் தங்கி மருத்துவம் பெறும் வசதி உட்பட இலவச
மருத்துவ பராமரிப்பு அளிக்கப்படுகிறது. இத்திட்டம் செயலில்
உள்ள எஞ்சிய பகுதிகளில், மருத்துவமனை வசதி உட்பட முழு
மருத்துவ பராமரிப்பு காப்புறுதி செய்து கொண்டோருக்கும்,
மருத்துவமனை வசதி நீங்கலான மருத்துவ பராமரிப்பு அவர்தம்
குடும்பத்தினருக்கும் அளிக்கப்படுகிறது.

காப்புறுதி செய்து கொண்டவருக்கு மட்டும் வசதியளிக்கப்
படுமிடங்களில் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகளுக்காகும்
செலவு, மாநில அரசுக்கும், காப்புறுதிக் கழகத்திற்குமிடையே
1 : 3 விகிதாச்சாரத்திலும் காப்புறுதி செய்து கொண்டவர்தம்
குடும்பத்தினருக்கும் சேர்த்து வசதியளிக்குமிடத்தில் இச் செலவு
1 : 7 எனும் விகிதாச்சாரத்தில் 1969-70 நிதியாண்டுவரையில்
பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் காப்புறுதிக் கழகம்
1—4—1970லிருந்து தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டத்தின்
கீழ் மருத்துவ வசதிச் செலவுகளுக்கு மேல் வரம்பு ஒன்றை முடிவு
செய்தது. இந்த மேல் வரம்புக்கு மேற்பட்ட செலவை மாநில
அரசு முழுவதும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தது.

| | ரூ. |
|---|---|
| (i) வரையறுக்கப்பட்ட மருத்துவ பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும். | 50 |
| (ii) நீட்டிக்கப்பட்ட மருத்துவ பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும், | 54 |
| (iii) முழு மருத்துவ பரா்மரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும். | 64 |



மாநில அரசு அடிக்கடி முறையிட்டுக் கொண்டதாலும், தனது
நிதி நிலை சீரடைந்ததாலும் காப்புறுதிக் கழகம், 1-4-72லிருந்து
மேல் வரம்பு அளவை மாற்றியமைத்தது.

(i) வரையறுக்கப்பட்ட மருத்துவப் பராமரிப்புக்கு ஆண்
டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 56.

(ii) நீட்டிக்கப்பட்ட மருத்துவப் பராமரிப்புக்கு ஆண்
டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 60.

(iii) முழுமருத்துவப் பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு
ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 70.

காப்புறுதிக் கழகம் முடிவு செய்து மேற்சொன்ன வரம்பை
யொட்டி மாநில அரசு பங்கு உட்பட 1972-73 ஆண்டுக்கு
இத்திட்டத்தின்கீழ் மருத்துவ பராமரிப்புக்கு ஏற்படக்கூடிய அதிக
அளவு செலவு ரூ. 2,61,17,000 என்று கணக்கிடப்படுகிறது,
ஆயினும், 1972-73 ஆண்டுத் திருத்த மதிப்பீட்டின்படி, செலவு
ரூ. 3,71,32,200 என்று கணக்கிடப்படுகிறது. இதனால் இத்
திட்டம் குறித்து இம்மாநில அரசுக்கு ரூ. 1,10,15,200 அதிகப்
படியாகச் செலவாகும். இத்திட்டத்தைப் புதிய பகுதிகளுக்கும்
கொண்டுவர இருப்பதால் செலவு அதிகரிக்கவே செய்யும். எனவே,
காப்புறுதிக் கழகம் முடிவு செய்த வரம்பு, மாநில அரசுக்கு ஏற்
புடையதாய் இல்லை. இதில் நமக்குள்ள நியாயத்தைச் செவ்வை
யாக எடுத்துச் சொல்லி, மேல் வரம்பை நீக்க வேண்டிய அவ
சியத்தை வலியுறுத்துவதற்காகப் பிற மாநில அரசுகளிடமிருந்து
தகவல்களை இவ்வரசு சேகரித்து வருகிறது.

காப்புறுதிக் கழகம் தனக்கிருந்த நிதி இக்கட்டு நிலையின்
காரணமாக, மூலதனப் பணிகளின் செலவுக்கு 1968-ல் தடை
விதித்தது. எனவே, பெரிய கட்டிடத் திட்டங்கள் பல கை
விட வேண்டியதாயிற்று. இருந்த போதிலும் இம் மாநில அரசு,
சைதாப்பேட்டை, அண்ணா சாலை, எழும்பூர் ஆகிய இடங்களில்
தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குப் புதிய கட்டிடங்
கள் அவசியமாகத் தேவைப்பட்டதை முன்னிட்டு மாநில அரசின்
செலவிலேயே, மொத்தம் ரூ. 14·30 லட்சம் செலவில் கட்டிடங்
கள் கட்டப்பட அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ நிறுவனங்கள் அவற்றில் செய்துள்ள படுக்கை வசதி
கள் முதலியவை பற்றிய தகவல்கள் இணைப்பு II-(ஈ)-ல் கொடுக்கப்
பட்டுள்ளன.

### நகராட்சி, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்று நடத்துதல்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பல ஆண்டுகளாக நடை
பெற்று வந்தவை, நான்காவது திட்டக் காலத்தில் அரசால்
படிப்படியாக ஏற்று நடத்தப்படுகின்றன. மருந்தகம் அல்லது

மருத்துவமனையை அரசு ஏற்று நடத்தும் போது, அங்குப் பணி
யாற்றும் பணியாளர்களை அரசுப் பணியில் ஏற்றுக் கொள்ளப்
படுகின்றனர். கிராம மக்களின் மருத்துவ வசதிகளின் அவசியத்திற்
கேற்ற வகையில் கூடுதல் பணியாளர் தேவைப்படின் அவர்கள்
நியமிக்கப்படவும் அனுமதி வழங்கப்படுகிறது.

1972–73-ல் நாற்பத்தைந்து ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்
அரசால் ஏற்று நடத்தப்படுவதற்கு ஆணையிடப் பட்டது.

1973–74-ல் 16 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை மட்டுமே,
ஏற்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம்
போதிய நிதி வசதியின்மையாகும்.

### தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்டம் செயல் படுத்துவது பற்றிய குறிப்பு.

குடும்ப நலத்திட்டப் பணிக்கு நான்காவது ஐந்தாண்டுத்
திட்டக் காலத்தில் (1969–1974) தலையாய முதலிடம் அளிக்கப்
பட்டு, இந்த மாபெரும் பிரச்சினையின் அவசியத்தை முன்னிட்டு,
போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்
பட்டுள்ளது. இதற்குத் தமிழ்நாட்டில் நான்காவது திட்ட
மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 29,22.01 லட்சம் ஆகும். இத்
திட்டத்தின் நோக்கம், 1,000 பேருக்குச் சுமார் 36 பேர் எனும்
பிறப்பு வீதத்தை, 1978–79 ஆண்டுக்குள் 1,000-க்குச் சுமார்
25 பேர் எனும் வீதத்துக்குக் குறைப்பது என்பதாகும். பல்
வேறு முறைகளுக்கு இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கையில், இத்
திட்டத்தை ஒன்று அல்லது இரண்டு முறைகளுக்கு மட்டுமே
வரையறுத்து நிறுத்திக் கொள்ளக் கூடாது என்பது வலியுறுத்தப்
பட்டுள்ளது. எனவே ஏற்புடைய எல்லா முறைகளுக்குமே
முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. வேண்டப்படாத தாய்மைச்
சுமையினின்றும் காத்துக் கொள்ளும் வகையில், குடும்பப் பெருக்
கினால் அவதியுறும் தம்பதியருக்குக் கருத்தடை செய்துக் கொள்ள
வேண்டியதின் அவசியத்தை எடுத்துச் சொல்லி அறிவுறுத்து
வதற்கு எல்லா வகையான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்
படுகின்றன. நான்காவது திட்டக் காலத்தில் இந்தப் பணியை
மேலும் விரிவுப்படுத்தும் திட்டத்தில், மக்கட்தொகை செறிந்
துள்ள பகுதிகளில், பேறுகாலத்திற்குப் பிந்திய அறுவை மருத்
துவம், நோய்க்காப்புத் திட்டங்கள், குழந்தைகள், கருவுற்றிருக்
கும் தாய்மார்கள் ஆகியோருக்குக் கூடுதலான சத்துணவு
ஆகியவை குறித்த பணிகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது.

### கிராம குடும்ப நலத்திட்ட நிலையங்கள்.

இம்மாநிலத்தில், கிராமப்பகுதிகளில் குடும்ப நலத்திட்டம்,
தொடக்கச் சுகாதார நிலையங்களுடன் இணைக்கப்பட்ட குடும்ப
நல நிலையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்



மாநிலத்தில், சராசரி 80,000 மக்கட் தொகை கொண்ட 374
வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. இந்த வளர்ச்சி வட்டாரங்
கள் அனைத்தும், குடும்ப நலச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ்
கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தச் சீரமைப்புப் பணியின் படி
ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் பின்வரும் பணியாளர்கள்
பணி புரிவர். ஒரு மருத்துவ அதிகாரி/வளர்ச்சி வட்டார நல
அறிவுரையாளர், பெண் சுகாதாரப் பார்வையாளர்/ஒரு துணைச்
செவிலி, மருத்துவச்சி, கணக்குப் பொறி, எழுத்தர்-பண்டகக்
காப்பாளர் ஆகியோர். இவர்கள் கிராமக் குடும்ப நல நிலையத்
தில் பணியாற்றுவர். குடும்ப நல மருத்துவத்திற்கு மட்டும்
பத்தாயிரம் மக்களுடைய ஒவ்வொரு பகுதியிலும் ஒரு மருத்துவச்சி
பணியாற்றும் ஒரு கிளை நிலையம் ஏற்பட்டுள்ளது. வளர்ச்சி
வட்டாரப் பகுதியில் குடும்ப நலத்திட்டம் சம்பந்தமாகக் கணக்கு
எடுத்து, மக்களைக் கருத்தடை செய்து கொள்ள நயமுடன்
எடுத்துச் சொல்லும் பணி செய்வதற்காக, 20,000 மக்கள்
கொண்ட ஒவ்வோரிடத்திலும் கூடுதலாகக் குடும்ப நல ஆய்வாளர்
ஒருவர் உண்டு. தமிழ்நாட்டில் 373 கிராமக் குடும்ப நல
நிலையங்கள் உள்ளன. நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு வட்
டார குடும்ப நலத்திட்டப் பயிற்சி நிலையங்கள் ஒன்றில் பயிற்சி
அளிக்கப்படுகின்றது.

### நகர்ப்புற (குடும்பநல) நிலையங்கள்.

குடும்ப நலத்திட்டப் பணி, தொண்டு நிறுவனங்களாலும்,
உள்ளாட்சி மன்றங்களாலும், மாநில அரசாலும் நடத்தப்படும்
நகர்ப்புற குடும்ப நலத்திட்ட நிலையங்கள் மூலமாக நடத்தப்
பட்டு வருகிறது. அரசு நடத்திவரும் நிலையங்கள் 149. உள்
ளாட்சி மன்றங்கள் நடத்தி வருபவை 7. தொண்டு நிறுவனங்கள்
நடத்தி வருபவை 17. அரசு நடத்திவரும் நகர்ப்புற நிலையங்
கள், மருத்துவ மனையில் மகளிர் நோயியல்-மகப்பேறு மருத்துவத்
துறையின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. இவை தாய்-
சேய் நலப் பணிகளுடன் இணைந்தவை.

### கருத்தடை

இம்மாநிலத்தில், 1971–72ஆம் ஆண்டு 173,888 பேருக்குக்
கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிட்ட இலக்
கத்திற்கு மாறாக, 245,784 'வாசக்டமி' அறுவைச்
சிகிச்சையும், 43,668 'சால்பின்ஜக்டமி' (Salphingectomy)
அறுவைச் சிகிச்சையும் நடத்தப்பட்டன. கருத்தடை அறுவை
மருத்துவத்தின் அளவு (41·4) சதவிகிதம் அதிகரித்துள்ள
தற்குக் காரணம், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக, தமிழ்
நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத் திட்டம் தீவிர
மாகத் தொடங்கி வைக்கப்பட்டதே ஆகும். 1971–72 குடும்ப
நலத்திட்ட தீவிர இயக்கத்தின்போது, சுமார் 2 லட்சம் கருத்தடை
அறுவை மருத்துவம் நிகழ்த்தப்பட்டன ; மற்றக் காலங்
களில் சுமார் 46,000 கருத்தடைச் சிகிச்சைகள் நடத்தப்பட்
டிருந்தன ;

தஞ்சாவூர் முறை, தமிழ்நாட்டில் பிறமாவட்டங்களில் பின் பற்றப்பட்டுள்ளதோடு ஏனைய மாநிலங்களிலும் வரவேற்கப்பட் டுள்ளது. 1972–73-க்கு 225,000 கருத்தடை அறுவைச் சிகிச் சைகள் என இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, ஆகிய 10 மாவட்டங்களில் குடும்ப நலத்திட்ட தீவிர இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது; இந்தத் தீவிர திட்டக் காலத்தில் வாசக்டமி, அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 செலவிடுவதற்கு இந்திய அரசு அனு மதி வழங்கியுள்ளது. ஆனால், இந்த இயக்கக் கால அளவில் ஒரு மாவட்டத்தில் குறைந்த அளவு 10,000 அறுவைச் சிகிச்சை களேனும் நடத்தப்பட வேண்டும். தஞ்சாவூர் முறையின்படி நல்வாழ்வு நிலையங்களை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். 1972–73-ஆம் ஆண்டில் 1973 ஜனவரி முடிய 263,423 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டன; இவற்றில் 237,613 வாசக்டமியும், 25,810 சால்பின்ஜக்டமி அறுவைச் சிகிச்சையுமாகும். (1972–73) குடும்ப நலத் தீவிர திட்டம் இயக்க காலத்தில் 1972 டிசம்பர் வரை செய்யப்பட்ட வாசக்டமி அறுவைச் சிகிச்சை மட்டும் 194,000 ஆகும்.

**கருத்தடை வளையங்கள்.**

கருத்தடை வளையங்களைப் பொறுத்தும் உத்தியில் வட்டார குடும்ப நலப் பயிற்சி நிலையத்தில் 30 நாள் கால அளவுக்குப் பெண் மருத்துவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. புண் இல்லாமல் நல்ல நிலையில் தாய்மார்கள் உள்ளனரா என்று கவன முடன் சோதித்துப் பிறகே பயிற்சி பெற்ற பெண் மருத்துவ அதிகாரிகளால் கருத்தடை வளையங்கள் பொருத்தப் படுகின்றன. கருத்தடை வளையங்களைப் பொருத்தியதில் சிக்கல்கள் ஏதும் ஏற் படவில்லை. 1971–72-ல் 37,419 கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டன.

1972–73-ல் 70,000 கருத்தடை வளையங்கள் பொருத்துவ தென்று இலக்கிடப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் ஜன வரி மாதம் வரை 17,611 கருத்தடை வளையங்கள் பொருத்தப் பட்டுள்ளன.

**மரபு வழி கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர்.**

மரபு வழி கருத்தடைச் சாதனங்களை உபயோகிப்பது நாளுக்குநாள் பெருகிவருகின்றன. மரபு வழிச் சாதனங்கள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 125,000 என்று இலக்கமிடப் பட்டுள்ளது. 1971–72, 1972–73 (1973 ஜனவரி வரை) ஆண்டு களில் மரபு வழி கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை முறையே 121,128-ம், 88,947-ம் ஆகும்.



**பேறு எய்தியவருக்குச் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் (Post-Partum Programme).**— மகப்பேறு மருத்துவ மனைகளில் மகப்பேற்றுக்காகப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது, குடும்ப நலத்திட்ட நடவடிக்கைகளைத் தொடங்கித் தீவிரப்படுத்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். பேறு காலத்தில் பெண்கள் மருத்துவமனையில் தங்கியிருக்கும் போதும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தபிறகு சோதனை நடக்கும் 4 முதல் 6 வார காலத்திலும், இந்தக் கருத்தடைச் சிகிச்சை பற்றிய தகவல்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. பட்ட வகுப்பு பயிலுபவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள், செவிலியர், துணை மருத்துவப் பணியாளர் ஆகியோருக்குக் குடும்பக் கட்டுப்பாட்டில் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு மருத்துவமனைகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. பேறு எய்திய வருக்குச் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் கீழ்க்காணும் மருத்துவமனைகளில்செயல்படுத்தப்பட்டுவருகிறது:—

1. அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை-5.

2. அரசு மகளிர்-சிறுவர் மருத்துவமனை, சென்னை-8.

3. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

4. அரசு ராஜா சர். ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை-13.

5. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை-10.

6. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

7. அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, கோயம்புத்தூர்.

8. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி.

9. அரசு செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, செங்கற்பட்டு.

10. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, சேலம்.

தமிழ்நாட்டில் உள்ள 11 மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளுக்குப் பேறு எய்தியவருக்கு மேற்கொள்ளும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை நீட்டிப்பதற்காகச் செயற் குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**கருத்தடை மாத்திரை முன்னோடித் திட்டம்.**—அரசால் நடத்தப் படும் 34 நிலையங்களிலும் ரயில்வே மருத்துவமனைகளிலும், தனி யார் தொண்டு நிறுவனங்களிலும் கருத்தடை மாத்திரை முன் னோடித்திட்டம் செயல்படுகின்றது.

தாய்-சேய் நலத் திட்டம்.—குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதில் காணப்படும் தவருன கருத்துக்களையெல்லாம் களைந்து, சமுதாயத்தில் அனைவருக்கும் இதன் நன்மையை அடையச் செய்வதற்காக, குடும்ப நலப் பணிகள் பொதுவாகச் சமுதாய நலத் திட்டங்கள் மூலமாகவும், குறிப்பாகத் தாய்-சேய் நலத் திட்டங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

முதற் கட்டமாக அரசு, உள்ளாட்சி மன்றங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்ருல் பேணப்பட்டுவரும் நகர குடும்ப நலத் திட்ட நிலையங்கள் மூலமாகவும், தாய்-சேய் நல விடுதி கள் மூலமாகவும், மேற்கூறிய திட்டம் செயற்படுத்தப்படுகிறது. கீழ்க்கண்ட பணிகளின்போது, தாய்-சேய் நலம் பேணும் முறை களுடன் குடும்பநலத் திட்ட முறைகள் பற்றியும் ஆலோசனை தரப்படுகிறது :—

(1) தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இழுப்பு நோய் ஆகியவற்றிற்கு எதிராக, சிசுக்கள், குழந்தைகள் ஆகியோருக்குப் பாதுகாப்பளித்தல்.

(2) இழுப்பு நோய்க்கெதிராக, கர்ப்பிணிகளுக்குப் பாதுகாப் பளித்தல்.

(3) தாய் மற்றும் குழந்தை ஆகியோரின் இரத்த சோகைக் கெதிராகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

(4) சிறுர்களின் பார்வை இழப்பு நோய் குறித்துத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

ஏற்கெனவே தாம் விரும்பிய அளவு குழந்தைகளைப் பெற் றுள்ள தாய்மார்கள், அவர்களுடைய குடும்பத்தை உரிய அளவில் வைத்துக் கொள்வதுபற்றி விவாதித்த பிறகு, கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கு தாமாகவே முன்வருவதற்கான மன நிலையை ஏற்படுத்துகிருர்கள்.

தாய்-சேய் நலத் திட்டத்தின்கீழ் மூன்று நோய்த் தடுப்பு ஊசி, இழுப்பு நோய் மருந்து, வைட்டமின் 'A' முதலியன இந்திய அரசால் வழங்கப்படுகின்றன. அவற்றிற்காகும் செலவு, கணக்கு மாற்றங்களுடன் மாநிலக்கணக்குகளில் காட்டப் படுகின்றது.

1972–73 ஆம் ஆண்டிற்கு மேற்கூறப்பட்ட திட்டத்தின்கீழ் பின்வரும் இலக்குகள் வரையறுக்கப்பட்டுள்ளன :—

(1972–73-ஆம் ஆண்டிற்கான இலக்கு.)

| | | |
|---|---|---|
| 1. தொண்டை அடைப்பான், கக்கு வான் இருமல், இழுப்பு நோய் ஆகியவற்றிற்கெதிராகக் கைக் குழந்தைகள், தாய்மார்கள் ஆகி யோருக்குப் பாதுகாப்பளித்தல். | 263,000 | கைக்குழந்தை கள். |



| | | |
|---|---|---|
| 2. இசிவு நோய்க்கெதிராகக் கர்ப் பிணிகளுக்குப் பாதுகாப்பளித்தல். | 36,000 | தாய்மார்கள். |
| 3. தாய் மற்றும் குழந்தை ஆகியோ ரின் இரத்த சோகைக்கெதிராகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத் தல். | 390,000 | தாய்மார்கள்—குழந்தைகள். |
| 4. சிறுர்களின் பார்வை இழப்பு நோய்க்குறித் தடுப்பு நட வடிக்கைகள் எடுத்தல். | 720,000 | கைக் குழந்தை கள். |

பயிற்சி.—தமிழ்நாட்டில் 3 வட்டார குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. 2 வட்டார குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்கள் (எழும்பூரில் ஒன்றும் சேலத்தில் ஒன்றும்) அரசால் நடத்தப்படுகின்றன. மூன்ருவது வட்டார குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையம் காந்தி கிராமம் (மதுரை மாவட்டம்), கிராமப்புறச் சுகாதாரம்—குடும்பநலத் திட்ட நிலையத்தால் நடத்தப்படுகின்றது.

மகளிர் மருத்துவ அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அறிவுரையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மகளிர் சுகாதாரப் பார்வையாளர்கள், ஏனைய மருத்துவத் துணைப் பணியாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. மேற் குறிப்பிட்ட 3 வட்டார குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங் களிலும் 1971–72 ஆம் ஆண்டில் 975 பேர் பயிற்சி பெற்றனர்.

இந்திய அரசின் பொறுப்பில் சென்னையில் உள்ள மத்திய குடும்பநலத் திட்ட நேரிடப் பிரிவில், உள்ளாட்சி மன்றங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் துணைச் செவிலியர்—மருத்துவ மாது ஆகியோருக்குப் பயிற்சி யளிக்கின்றது.

தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் கிராமத் தலைவர்கள் பங்குகொள்வதுடன் மாவட்ட ஆட்சித் தலைவரால் மறு பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 1971–72-ல் தமிழ்நாட்டில் 323 மறுபயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. ஒவ்வோராண் டிற்கும் இலக்காக 374 முகாம்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

கருத்தடையை நீக்குதல்.—கருத்தடைச் செய்துகொண்ட தந்தையர் கருத்தடை நீக்க அறுவைச் சிகிச்சை செய்துகொள் வதற்கான வசதிகள், சென்னை அரசினர் பொது மருத்துவமனை; சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை; மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதலிய மருத்துவமனைகளில் கிடைக்கின்றன. கருத்தடை செய்துகொண்ட தந்தை ஒருவர் அரசினர் மருத்துவ மனையில் கருத்தடை நீக்கம் செய்துகொள்ள விரும்பினுல்,

தொடர்பான செலவுகள், பயணப்படி முதலியவற்றிற்காக
அவருக்கு ரூ. 100 வரை செலவு செய்யப்பட ஒப்பளிப்பு வழங்கப்
பட்டுள்ளது. 1972-ஆகஸ்டு வரை, கருத்தடை நீக்க அறுவைச்
சிகிச்சை செய்துகொண்ட தந்தையர் 126 பேர் ஆவர்.

**ஊர்திகள்.**—தமிழ்நாடு குடும்ப நலத் திட்டத்திற்கு, இந்திய
அரசு 325 ஊர்திகளை இதுவரை வழங்கியுள்ளது. அவை பல்
வேறு மாவட்டங்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. பின்
வரும் மோட்டார் அடிச்சட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| F. C. 160 பணிவண்டிகள் | 4 |
| அம்பாசடர் டிரைவ் அவே .. .. .. | 13 |
| ஸ்டாண்டர்டு —20 .. .. .. | 32 |
| ஜீப் கார் (4 WD) .. .. | 20 |
| C. J. 2 வீல் டிரைவ் ஜீப்கள் .. .. | 10 |
| அம்பாசடர் கார் .. .. .. .. | 24 |
| மொத்தம் .. | 103 |

திட்டக் காலத்தில், திட்டங்களின்கீழ், தொடக்கச் சுகாதார
நிலையங்கள் 374-க்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஊர்தி என்ற
வீதத்தில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**குடும்ப நலத் திட்ட அச்சகம்.**—குடும்பநலத் திட்டப்
பிரசாரங்களுக்காக, அச்சு இயந்திரங்கள், காகிதங்கள் முதலிய
வற்றுடன் ஆப் செட் பிரிண்டிங் அச்சகம் (Offset Printing
Press ) ஒன்றை இந்திய அரசு, மாநில குடும்பநலத்
திட்டக் கழகத்திற்கு ஒதுக்கியுள்ளது. இந்த அச்சகமானது,
குடும்பநலத் திட்ட நேரிடைப் பணியாளர்களுக்கான மடிப்புப்
பிரதிகள், சிறு வெளியீடுகள், கையேடுகள், சுவரொட்டிகள்,
சிறு கைப்பிரதிகள், வழிகாட்டி நூல்கள் ஆகியவற்றையும்,
குடும்ப நலத் திட்டக் கணக்கெடுப்புப் பதிவேடு படிவங்கள்,
அழைப்பிதழ்கள், குடும்பநலத் திட்டத்துடன் தொடர்புடைய
ஏனையவைகள் அச்சிடும் பணியை மேற்கொண்டுள்ளது. இவை
யெல்லாம் தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற, நகர்ப்புற குடும்ப
நலத் திட்ட நிலையங்கள், வளர்ச்சி வட்டாரங்கள் ஆகியவற்றில்
வழங்கப்படுகின்றன.

**மக்களிடையே பிரச்சாரம்.**— சுகாதாரப் பணிகள் மற்றும்
குடும்பநலத் திட்ட (குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம்)
துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்பநலத்
திட்ட இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மாநில குடும்ப
நலத் திட்ட கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார். (குடும்பநலத்
திட்டப் பிரச்சாரம்) தகவல் ஆகியவற்றின் பொறுப்பினை



அவர், சுகாதாரக் கல்வி அதிகாரி, ஆசிரியர், முது நிலை ஓவியர்
முதலியோரின் உதவியுடன் கவனித்து வருகின்றார். மாவட்ட
அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட குடும்பநலத்
திட்ட கழகத்துடன் இணைந்துள்ள குடும்பநலத் திட்டப் பிரச்சார
தகவல் அதிகாரி ஒருவர் உள்ளார். மாவட்டத்தில் குடும்பநலத்
திட்டபிரச்சாரம் செய்யும்பொறுப்பு இவரிடம் உள்ளது. அவரைத்
தவிர மாவட்ட வளர்ச்சி ஆய்வுரையாளர் (District Extension
Educator) இருவர் (ஆண் ஒருவர், பெண் ஒருவர்) உள்ளனர். வட்ட
அளவில் வட்டார வளர்ச்சி ஆய்வுரையாளர் ஒருவர் உள்ளார்.
அவருக்குக் கீழ் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் 3 பேர் பணியாற்று
கின்றனர். மாநகர அளவில், மாநில குடும்பநலத் திட்டக்
கழகத்துடன் இணைந்துள்ள குடும்ப நலத் திட்ட பிரச்சார
தகவல் அதிகாரி ஒருவர் உள்ளார். பொதுமக்களுக்கு குடும்பக்
கட்டுப்பாடு பற்றிக் கல்வி புகட்டுவதும் தகுதியான தம்பதியரை
குடும்பக் கட்டுப்பாட்டு முறை எதனையாவது பின்பற்றும்படி
நயமாகக் கேட்டுக் கொள்ளுதல் ஆகியவை இந்த அதிகாரிகள்
அனைவருடைய பொறுப்பாகும். பெரிய விளம்பரச் சிலைகள்,
சுவர் ஓவியங்கள், நாடகங்கள், பாட்டுக்கள், வில்லுப்பாட்டு,
உலோக விளம்பரத் தகடுகள், திரைப்படங்கள், வானொலி விளம்
பரங்கள், செய்திப் பத்திரிகை, வாராந்திரப் பத்திரிகை இதழ்களில்
விளம்பரங்கள், பொருட்காட்சி இருவார விழாக்கள் முதலிய
வற்றின் மூலம் குடும்ப நலத் திட்டத்திற்கு விளம்பரம் செய்யப்
படுகின்றது. 1972–73 ஆம் ஆண்டிற்கு மக்களிடையே பிரச்
சாரம் செய்வதற்காக 32 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்
பட்டுள்ளது.

**குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை முறைகளைப் பரவச்
செய்வதற்கான மும்முரத் திட்டம்.**—மேற்படித் திட்டத்தின்கீழ்
தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் தனிப்பட்ட
குடும்பநலத் திட்ட நிலையங்களில் நடத்தப்படும் அறுவைச்
சிகிச்சைகள், சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலத் திட்ட
இயக்குநரால் ஏற்பளிக்கப்படுகின்றன. தொண்டு நிறுவனங்களால்
குடும்பநலத்திட்ட அறுவைச் சிகிச்சை செய்துக் கொண்ட
தாய்மார் தந்தையருக்கு கொடுக்கப்படும் ஈட்டுப்படி, நேரிடப்
பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்கள் ஆகியவை
மாநில நிதிகளிலிருந்து திருப்பித் தரப்படுகின்றன. இதைத்
தவிர வாசக்டமி, சால்பின்சக்டமி அறுவைச் சிகிச்சை செய்து
கொள்ளும் ஒவ்வொருவருக்காக முறையே ரூ.10, ரூ. 25 ஈடு செய்
தொகைகள் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கும் கொடுக்கப்
படுகின்றன. இவ்வாறு கொடுக்கப்படும் ஈட்டுத் தொகை குடும்ப
நலத் திட்டத்தின்கீழ் இந்திய அரசிடமிருந்து திரும்பப் பெற
முடியாதது.

**மாநிலச் சுகாதாரப் போக்குவரத்து அமைப்பு.**—பல கட்டங்
களில் மாநிலச் சுகாதார போக்குவரத்து அமைப்புக்காக பணி
மனைகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்று உள்ளது.

இம் மாநிலத்தில் சுகாதாரப் போக்குவரத்து அமைப்பு ஒன்று ஏற்படுத்தப் படுவதற்காக இவ்வரசால் மேலனுப்பப்பட்ட பெருந் திட்டத்திற்கு இந்திய அரசு தொழில்நுட்ப ஏற்பளிப்பு தெரிவித்துள்ளனர். சுகாதாரப் போக்குவரத்து துறை ஏற்படுத்துவதற்காக தேர்ந்துஎடுக்கப்பட்ட இடத்திற்குமாநிலஅரசு ஏற்பளித்துள்ளது. கிண்டி நவாப் தோட்டத்தில்இதற்கெனஒதுக்கப்பட்டுள்ள இரண்டு ஏக்கர்நிலத்தில் மத்திய நிர்வாக அலுவலகக் கட்டிடமும், கிடங்குக் கட்டிடமும் கட்டப்படும். மருத்துவ சுகாதார, மருத்துவக் கல்வி, குடும்பநலத் திட்ட துறைகளைச் சேர்ந்த ஊர்திகளை மட்டுமே பழுது பார்ப்பதற்காக திருச்சிராப்பள்ளியில் ஒரு மத்திய பணிமனை மோட்டார் வண்டிகள் பேணுதல் அமைப்பைச் சேர்ந்த சென்னை(வேளச்சேரி),மதுரை, சேலம் ஆகிய இடங்களில் தற்போதுள்ள அரசினர் பணிமனைகளுடன் இணைக்கப்பட்ட மூன்று வட்டாரப் பணிமனைகள் ஏற்படுத்தப்படும். நவாப் தோட்டத்தில் நிர்வாக அலுவலகம், கிடங்கு கட்டுமானபணி முடியும் தருவாயில் உள்ளது.

**உள்ளாட்சி மன்றங்கள் தொண்டு நிறுவனங்களுக்கு உதவித் தொகை வழங்கல்.**—நகர்ப்புற நிலையங்கள், கிராமப்புற நிலையங்கள், மாநகர குடும்பநலத் திட்டக் கழகம், வட்டார குடும்பநலத் திட்ட பயிற்சிநிலையம்,கருத்தடை அறுவைச் சிகிச்சை படுக்கைகள் ஆகியவற்றைப் பேணுவதற்காக உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு துணை நிலையத்தால் பயன்பெறும் மக்கட்தொகைஅடிப்படையில் மானியங்கள் வழங்கப்படுகின்றன. நகர்ப்புற நிலையங்கள் நான்கு வகையாகும். அவை யாவன :—

1. 10,000 வரையுள்ள மக்கள் தொகைக்கு.
2. 10,000 முதல் 25,000 வரையுள்ள மக்கள் தொகைக்கு.
3. 25,000 முதல் 40,000 வரையுள்ள மக்கள் தொகைக்கு.
4. 50, 000 அளவில் உள்ள மக்கள் தொகைக்கு.

ஒவ்வொரு நிலையத்திலும் அனைத்திந்திய அடிப்படையில் அமைக்கப்பட்ட பணியாளர்கள் உள்ளனர். இந்திய அரசால் வரையறுக்கப்பட்டுள்ள பணியாளர்கள் அமைப்பினை உதவித் தொகை பெறுபவர்கள் பின்பற்ற வேண்டும்.

1971-72ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட தொகை ரூ. 16·92 லட்சம் ஆகும். 1972-73 ஆம் ஆண்டிற்கு வழங்கவேண்டிய உதவித் தொகை ரூ. 25 லட்சமாகும்.

**கட்டிடங்கள்.**—374 கிராமப்புற குடும்பநலத் திட்ட நிலையங்களுக்காக ரூ. 344.83 லட்சம் செலவில் குடும்ப நலத் திட்ட கட்டிடங்களும் பணியாளர் குடியிருப்புக்களும் கட்டப்படுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1,395 துணை நிலையங்களில் மொத்தச் செலவு ரூ. 174·69 லட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சேலம், எழும்பூர் ஆகிய இடங்களிலுள்ள வட்டார குடும்பநலத் திட்ட பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடங்கள், சில அரசினர் மருத்துவமனைகளில் டியூபெக்டமி கூடங்கள், பேறு எய்தியவருக்குச் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கான கூடங்கள், அறுவைச் சிகிச்சையரங்கு முதலியவை கட்டப்படுவதற்காகவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



31–1–1973-ல் உள்ளவாறு பல்வேறு கட்டிடங்களின் கட்டுமானப்பணி—

1. முதன்மை நிலையங்கள்.

(மொத்தம் ஒப்பளிக்கப்பட்டவை—374.)

| | | |
|---|---|---|
| 1 | கட்டி முடிக்கப்பட்டு மருத்துவத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டவை. | 265 |
| 2 | கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்படாதவை. | 14 |
| 3 | முடியுந்தறுவாயிலுள்ள பணிகள் .. .. .. | 54 |
| 4 | நடந்து வரும் பணிகள் .. .. .. .. | 17 |
| 5 | முடிவு செய்யப்பட வேண்டிய ஒப்பந்தப் புள்ளிகள். | 1 |
| 6 | ஒப்படைக்கப்படாத மனைகள் .. .. | 19 |
| 7 | தள்ளி வைக்கப்பட்ட அல்லது எடுக்கப்படாத பணிகள். | 4 |
| | மொத்தம் .. | 374 |

2. துணை நிலையங்கள்.

(மொத்தம் ஒப்படைக்கப்பட்டவை—1,395.)

| | | |
|---|---|---|
| 1 | கட்டி முடிக்கப்பட்டு மருத்துவத் துறையிடம் .. ஒப்படைக்கப்பட்டவை. | 713 |
| 2 | கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்படாதவை .. | 163 |
| 3 | முடியுந்தறுவாயிலுள்ள பணிகள் .. .. .. | 197 |
| 4 | நடந்து வரும் பணிகள் .. .. .. .. | 129 |
| 5 | முடிவு செய்யப்படவேண்டிய ஒப்பந்தப் புள்ளிகள். | 38 |
| 6 | ஒப்படைக்கப்படாத மனைகள் .. .. .. | 55 |
| 7 | தள்ளிவைக்கப்பட்ட அல்லது எடுக்கப்படாத பணிகள். | 100 |
| | மொத்தம் .. | 1,395 |

**ஏனைய கட்டிடங்கள்.**

| | |
|---|---|
| வட்டார குடும்ப நலத் திட்ட பயிற்சி நிலையம், எழும்பூர். | கட்டி முடிக்கப்பட்டு பயன் படுத்தப்படுகிறது. |
| வட்டார குடும்ப நலத் திட்ட பயிற்சி நிலையம், சேலம். | பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. மின் இணைப்பு தரப்பட வேண்டும். |
| டியூபெக்டமி கூடம், திருவல்லிக்கேணி. | கட்டி முடிக்கப்பட்டு பயன் படுத்தப்படுகிறது. |
| டியூபெக்டமி கூடம், எழும்பூர் .. | ஷை |
| டியூபெக்டமி கூடம், மதுரை .. | ஷை |
| டியூபெக்டமி கூடம், சேலம் .. | ஷை |
| டியூபெக்டமி கூடம், நாகர்கோவில். | ஷை |
| அறுவைச்சிகிச்சை அரங்கு, உதக மண்டலம். | ஷை |
| அறுவைச் சிகிச்சை அரங்கு, பேராவூரணி | ஷை |
| அறுவைச் சிகிச்சை அரங்கு, மதுரை. | கட்டி முடிக்கப்படுகிறது. |

பேறு எய்தியவருக்கு மேற்கொள்ளும் கருத்தடை அறுவைச் சிகிச்சைக் கூடம், அறுவை சிகிச்சை அரங்கம்.

| | (ரூபாய்.) | |
|---|---|---|
| அரசினர் ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை. | 2,13,693 | கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டு விட்டது. |
| அரசினர் கே.எம். சி. மருத்துவமனை. | 2,99,075 | ஷை |
| அரசினர் ஆர். எம். மருத்துவமனை, தஞ்சாவூர். | 1,59,423 | ஷை |
| அரசினர் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. | 1,85,112 | ஷை |
| அரசினர் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. | 1,26,197 | பூச்சு வேலை நடைபெறுகிறது. |



| | |
|---|---|
| அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, சேலம். | திருத்தப்பெற்ற மதிப்பீடு. அனுப்பப்பட வேண்டியுள்ளது. |
| அரசினர் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை. | ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, வட்ட அலுவலகத்தில் ஆய்வில் உள்ளன. |

குடும்பநலத் திட்டத்தின்கீழ் 1971–72ஆம் ஆண்டிற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான மொத்த செலவு ரூ. 253·00 லட்சமாகும்.

**வரவு-செலவுத் திட்டமும் செலவும்.**—குடும்பநலத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசால் தற்காலிகமாக நான்காவது திட்ட ஒதுக்கீடு (1969–74) ரூ. 29,22·01 லட்சமாகும். குடும்பநலத் திட்டத்தின்கீழ் 1972–73ஆம் ஆண்டிற்கான மத்திய ஒதுக்கீடு ரூ. 620·00 லட்சம். குடும்பநலத் திட்டத்தின்கீழ் 1972–73 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 542·50 லட்சம். குடும்பநலத் திட்டத்தின்கீழ் (30A. குடும்பநலத் திட்டம்) அரசுக்குக் கருத்துரைக்கப்பட்ட மதிப்பீடுகள் 1972–73, 1973–74-ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூ. 659·22 லட்சம், ரூ. 687 லட்சமாகும். (கட்டிடங்களுக்காகும் செலவு நீங்கலாக).

1973–74 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருவனவற்றிற்குத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றினால் மேலும் பல நகர்ப்புற குடும்பநலத் திட்ட நிலையங்களைத் தொடங்குதல்.

2. பயிற்சித் திட்டத்தையும் மக்களிடையே பிரச்சாரத்தையும் மும்முரப்படுத்தல்.

3. சீரமைக்கப்பட்ட குடும்பநலத் திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள கிராமப்புற குடும்பநலத் திட்ட நிலையங்கள், துணை நிலையங்கள் ஆகியவற்றிக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

4. தாய்–சேய் நலத் திட்டத்தின்கீழ், நோய்களிலிருந்து தடுப்புப் பாதுகாப்பளிக்கும் திட்டத்தை மும்முரப்படுத்தல்.

5. தொடக்க சுகாதார நிலையங்களுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் கருத்தடை வளையத் திட்டத்தை நீட்டித்தல்.

6. வட்ட மருத்துவ மனைகளிலும் வட்ட மருத்துவ மனைகளல்லாத பிற மருத்துவ மனைகளிலும் கருச்சிதைவு செய்வதற்கான வசதிகள் செய்து தருதல்.

7. மாவட்டங்களில் மும்முர குடும்பநலத் திட்ட இயக்கம் நடத்துவது.

8. பேறுற்றவருக்கு மேற்கொள்ளும் கருத்தடைச்
சிகிச்சை செயலிலில்லாத கற்பிக்கும் மருத்துவ மனைகளில் P.A.P.
சோதனைகளைக் கொண்டு வருதல்.

இந்திய மருத்துவ முறைகள்.—தமிழ்நாடு நலத் துறைப்
பிரிவில் இந்திய மருத்துவ முறைகளுக்குத் தனியாக ஒரு
இயக்குநர் அலுவலகத்தை 1970 ஜூனில் ஏற்படுத்திச் சிறப்பான
இடத்தை அரசு தந்துள்ளது. மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்று
உள்ளது. சித்த வைத்திய முறையினைச் சீர்படுத்த, பின்வரும்
குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன:—

1. சித்த மருத்துவக் கல்வி—பாடநூல் குழு.

2. மூலிகைகள், கிடைத்தற்கரிய சுவடிகளைச் சேகரிப்பதற்கான குழு.

3. திருவருட்பா, திருப்புகழ் ஆகியவற்றை ஆய்வு செய்யும் குழு.

4. மூப்பூ மற்றும் தொடர்பான மருந்துகளைத் தயாரிக்கும் முறை ஆராயும் குழு.

முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பெயரில்
அரும்பாக்கத்தில் உள்ள இந்திய முறை மருத்துவ மனையில்
தற்போது 100 படுக்கைகள் உள்ளன. நடப்பு ஆண்டில்
கூடுதலாக 25 படுக்கைகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றை
ரூ. 1·32 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்
பட்டுள்ளது. மற்றும் 25 படுக்கைகளைக் கொண்ட கட்டிடம்
ஒன்றை கட்டுவதற்கு ரூ. 1·32 லட்சத்திற்கு 1973–74-ஆம் ஆண்
டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது.
ஆகவே 1973–74ஆம் ஆண்டு இறுதியில் அறிஞர் அண்ணா
அரசினர் மருத்துவ மனையில் 150 படுக்கைக்கான வசதியிருக்கும்.
அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசின் இந்திய முறை
மருத்துவ மனையில் மருந்தியலகத்திற்காகக் கட்டிடங்கள் கட்டு
வதற்கு இதுவரை ரூ. 2·08 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்
பட்டுள்ளது. தற்போது கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்
துவ மனையில் அமைந்திருக்கும் மருந்தகம் 1974–75 ஆம் ஆண்டின்
பிற்பகுதியில் புதிய கட்டிடம் அரும்பாக்கத்தில் முடிக்கப்பட்ட
பின்னர் அங்கு மாற்றப்படும். 1973–74ல் சென்னை, அறிஞர்
அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையுடன் இணைந்
துள்ள மூலிகைத் தோட்டத்தைச்சுற்றி, ரூ.0·79 லட்சம் செலவில்
சுற்றுச் சுவர் எழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி,
பி.ஐ.எம். படிப்புக்காகத் தொடர்ந்து ஆண்டுதோறும் 30 மாண
வர்களைச் சேர்த்து வருகிறது. கல்லூரியில் உள்ள சித்த வைத்
தியமுறை, குணபாடம், மருத்துவம் ஆகிய துறைகள் தரம்



பட்ட மேற்படிப்புப் பயிற்சி, ஆராய்ச்சி
உயர்த்தப்பட்டுள்ளன. இதன் நடைமுறைச்
ஆகியவை இத்துறைகளில் கற்பிக்கப்படும். 30—12—1972 லிருந்து இந்த
செலவினை மத்திய அரசு ஏற்கும். ஒவ்
பட்ட மேற்படிப்பு வகுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. சேர்க்கப்பட்டுள்ளார்கள்.
வொரு துறையிலும் 10 மாணவர்கள் மாணவர்
மூன்றாண்டுப் படிப்பை வெற்றியுடன் முடித்த பிறகு (இந்திய முறை
களுக்கு எம்.ஐ.எம். ( M. I. M. ) பட்டம் பல்கலைக்கழகத்தால்
மருத்துவத்தில் முதுநிலைப் பட்டம்) மதுரைப் அனைவரும் திங்க
வழங்கப்படும். இவ் வகுப்பில் சேர்ந்துள்ளவர் தொகை பெறத் தகுதி
ளொன்றுக்கு ரூ. 200 பயிற்சி உதவித் கொண்ட மருத்துவமனை
யுடையவர்கள். 100 படுக்கைகள் இணைக்கப்பட்டுள்ளது. கல்லூரி
யொன்று இக்கல்லூரியுடன் மருத்துவமனை ஆகியவற்றிற்குக்
100 படுக்கை வசதியுடைய 1972–73-ல் ரூ. 18·31 லட்சத்
கட்டிடங்கள் கட்டுவதற்காக 1973–74-ல் பணி முடி
திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவமனை
இம்மாநிலத்திலுள்ள மாவட்ட தலைமையிட சித்த மருத்து
10-ல் ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள் கொண்ட இந்திய முறை மருத்
வப் பிரிவு தொடங்கியதனால், இந்த அரசு, ஏற்றி வைத்துள்
துவத்தில் சித்த மருத்துவமான ஒளி விளக்கை இரண்டு மாவட்டங்
ளது. எஞ்சியுள்ள, நீலகிரி, தர்மபுரி ஆகிய தொடங்கப்படும்.
களில் சித்த மருத்துவப் பிரிவு 1973 ஏப்ரலில் ஆண்டில், சித்த
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 1973–74-ஆம் தனிக் கட்டிடம்
மருத்துவப் பிரிவுக்காக 1·50 லட்சம் செலவில் செலவு முழுவதை
ஒன்று கட்டப்படும். இக்கட்டிடத்திற்காகும் இசைந்துள்ளது.
யும் மாவட்ட நலக்குழு நன்கொடையாகத் தர ஒன்றும், சைதாப்
1973–74ஆம் ஆண்டில், திருவல்லிக்கேணியில் வைத்திய மருந்தகங்
பேட்டையில் ஒன்றுமாக இரண்டு சித்த மேலும் மாநிலத்தின்
களைத் திறக்க ஒப்பளிப்பு வழங்கப்படும். பிரிவு அல்லது
வட்ட மருத்துவ மனைகள் பத்தில் சித்த மருத்துவப் அரசினர்
மருந்தகம் திறக்கப்படும். இராமநாதபுரத்தில், சித்த மருத்துவப்
மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும் சித்த மருத்துவ மனை
பிரிவு தொடங்கப்படும். நடப்பாண்டில், ஒப்பளிப்பு வழங்கப்
கள் நான்கினை அரசு மேற்கொள்வதற்கு இந்திய முறை
பட்டுள்ளது. அரசால் நேரடியாக நடத்தப்படும் நகராட்சி
மருந்தகங்களைத் தவிர. தமிழ்நாடு முழுவதிலும், மருந்தகங்கள் நடத்
களாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் 367
தப்படுகின்றன,

| | | | |
|---|---|---|---|
| சித்த மருத்துவம் | .. | .. | 260 |
| ஆயுர்வேத முறை | .. | .. | 95 |
| யுனானி முறை | .. | .. | 12 |
| | | | 367 |

இந்திய முறை மருத்துவம் உரிய இடத்தைப் பெறும் பொருட்டு இம்மாநிலத்தில் தனியாரால் நடத்தப்படும் மருந்தகங்கட்கும் ஆண்டுதோறும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது.

சித்த மருத்துவ முறையில், மருந்தியல் வல்லுநர் (Pharmacists) வகுப்பு ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அது 1971, செப்டம் பரிலிருந்து பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி யில் 15 மாணவர்களுடன் தொடங்கப்பட்டுச் செயல்படுகின்றது.

1973–74-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், இந்திய முறை மருத்துவத்திற்கு மட்டும் தனியாக ரூ. 32·43 லட்சத் திற்கு வகை செய்கின்றது.

பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் தற்போது பணியிலுள்ள பி.ஐ.எம். பட்டதாரிகள் பத்துபேர் பட்ட மேற் படிப்புப் பிரிவில் சேர்ந்துள்ளனர். அவர்கள் இடங்களில் புதிய பி.ஐ.எம். பட்டதாரிகள் நியமிக்கப்படுவர். அறிஞர் அண்ணு அரசினர் இந்திய முறை மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி கள் நால்வர் பதவி உயர்த்தப்பட்டு இந்திய முறை மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்புத் துறைகளில் நியமிக்கப்பட்டதால், அறிஞர் அண்ணு மருத்துவ மனையில் ஏற்பட்டுள்ள இடங்கட்கு வேலையற்ற பி.ஐ.எம். பட்டதாரிகள் நால்வர் நியமிக் கப்படுவர். இதனுல் பி.ஐ.எம். பட்டதாரிகள் பதினுன்கு பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

'பி' வகுப்பு மருத்துவர்களாகப் பாளையங்கோட்டை யிலுள்ள மத்திய சித்த மருத்துவக் குழுவில் பதிவு செய்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு 'பி' வகுப்புப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதில் கணிசமான அளவு தாமதம் ஏற்பட்டு வந்ததைக் கண்டு இப்பணியை அரசு மேற்கொண்டது. முன்னர், 'பி' வகுப்பு மருத்துவர்களாக பதிவு செய்வதற்கென வாய்மொழி தேர்வு மட்டுமே நடத்தப்பட்டது.

வாய்மொழி தேர்வைத் தவிர, எழுத்துத் தேர்வும் இருக்க வேண்டுமென்று அரசு கருதியதனுல், அதற்கிணங்க விதிகளை அரசு மாற்றியமைத்துள்ளது. கடைசி வாய்ப்பாக, 'பி' வகுப்பு மருத்து வர்களாகப் பதிவு செய்வதற்கான திட்டத்தை 31—3—1973 வரையில் அரசு நீட்டித்துள்ளது. எழுத்துத் தேர்வைக் கொண்டு வரக் கருதியதை முன்னிட்டும், வரைமுறையின்றி அனைவரும் பதிவு செய்ய விண்ணப்பித்துக்கொள்வதைத் தடுக்கும் பொருட் டும், தற்போதுள்ள பதிவுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன :—

| | இருந்த கட்டணம். ரூ. | புதிய கட்டணம். ரூ. |
|---|---|---|
| 1. விண்ணப்பப் படிவங்களை அனுப்பு வதற்கான வேண்டுகோள். | 0·50 | 1·00 |



| | இருந்த கட்டணம். ரூ. | புதிய கட்டணம். ரூ. |
|---|---|---|
| 2. எழுத்துத் தேர்வுடன் வாய் மொழி தேர்வுக்கான தேர்வுக்கட்டணம். | 5·00 | 10·00 |
| 3. பதிவுக் கட்டணம் .. .. | 15·00 | 25·00 |
| 4. முத்திரைத்தாள் கட்டணம் .. | 2·30 | 2·30 |

சித்த, ஆயுர்வேத, யுனுனி மருத்துவ முறையில் பாளையங் கோட்டை, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் எழுத் துத் தேர்வை அரசு அண்மையில் நடத்தியுள்ளது. இத் தேர்வை சுமார் 1,600 பேர் எழுதியுள்ளனர். எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்கள் வாய்மொழி தேர்வுக்காக அழைக்கப்படுவர்.

பதிவு செய்யும் பணியை அரசு மேற்கொண்ட பின்னர், 1970 ஆம் ஆண்டில் விண்ணப்பித்துக் கொண்டவர்களில் 450 பேருக்கும், 1971 ஆம் ஆண்டில் விண்ணப்பித்துக் கொண்டவர் களில் 100 பேருக்கும் சான்றிதழ்களை அரசு வழங்கியுள்ளது.

### இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு.

புதிதாக அமைக்கப்பட்ட இந்திய மருத்துவத் துறைக்குத் தொடக்க நிலையில், இம்மருத்துவ முறை மேம்பாடு தொடர்பாக, தொழில் நுட்ப முறைகள் குறித்து, தக்கார் குழு ஒன்றினுல் ஆலோசனை வழங்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்து 1970-ஆம் ஆண்டில் அரசு ஒரு ஆலோசனைக் குழு அமைத்தது. ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை வகுப்பது குறித்த பணியும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி தொடர்பாகவும், இதன் தொடர்பான பிற நிலை யங்கள் குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் பணியும் இக்குழு விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இதற்குத் தலைவராவார். இக்குழுவில், இந்திய மருத்துவத் துறை இயக்குநர், மக்கள் நல்வாழ்வு குடும்ப நல திட்டத் துறை அரசுச் செயலாளர் ஆகியோர் உட்பட அரசு சார்புள்ள ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களைத் தவிர, அரசுச் சார்பற்றவர்களும், இந்திய மருத்துவ முறையில் தொடர்பு கொண்டவர்களுமான 18 பேரும் உறுப்பினர்களாக இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். ஆலோசனைக் குழு இது வரை 8 கூட்டங்களை நடத்தியுள்ளது.

### இந்திய மருத்துவ மத்தியக் குழு, பாளையங்கோட்டை.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவ முறை அரசி னர் கல்லூரி முதல்வரைத் தலைவராகவும் (அலுவல் முறையில்). அரசு நியமனம் செய்துள்ள 16 பேர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இந்திய மருத்துவ மத்திய குழு பாளையங்கோட்டையில் செயற்பட்டு வருகிறது. குழுவின் முக்கியமான அலுவல். L. I. M., B. I. M., 'பி' வகுப்பு மருத்துவர்கள், 'சி' வகுப்பு மருத்துவர்கள் போன்ற நாட்டு மருத்துவர்களைப் பதிவு செய்வதே

யாகும். இக்குழு, சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறை
மருத்துவர்களைப் பதிவு செய்கிறது. கீழ்க்கண்ட தகுதிகளில் ஏதே
னும் ஒன்றைப் பெற்றிருப்பவர்கள் பதிவு செய்து கொள்ள உரிமை
யுடையவராவர்.

1. தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட இந்திய மருத்துவத்
தேர்வாளர் குழுவால் வழங்கப்பட்ட நாட்டு மருத்துவ பட்டயம்.

2. இந்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இந்திய
மாநிலம் ஒன்று ஆகியவற்றால் அல்லது அவற்றால் அதிகாரமளிக்
கப்பட்டதன்கீழ் அல்லது ஏற்பளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்
றால் அல்லது இந்தியாவிலுள்ள தேர்வுக் குழு ஒன்றால் வழங்கப்
பட்ட இந்திய மருத்துவப் பட்டயங்கள். ஆனால், அத்தகைய
பட்டயங்களை ஏற்பளிப்பதற்கான விண்ணப்பங்கள் பாளையங்
கோட்டை மத்திய நாட்டு மருத்துவக் குழுவால் பரிவுரை செய்
யப்பட்டு, தமிழ்நாடு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல்
வேண்டும்.

3. வைத்திய ரத்ன, ஷிபா-உல்-முல்க் போன்ற மருத்துவத்
தொழில் புலமைக்காக வழங்கப்பட்ட அரசு பட்டங்களைப் பெற்
றவர்கள்.

மத்தியக் குழுவில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் மூன்று
வகைகளாகப் பிரிக்கப்படவேண்டும். அவை பின்வருமாறு :—

வகை—'A'—இந்த வகை மருத்துவம், அறுவை மருத்துவ
(மகப்பேறு இயல் உட்பட), சட்டஞ் சார்ந்த மருத்துவப் பணிகளை
மேற்கொள்வதற்கென குறைந்த அளவு தொழிற் பயிற்சியை
யுடைய மருத்துவர்களைக் குறிக்கிறது.

வகை 'B'.—மருத்துவப் பணியை மட்டும் மேற்கொள்ளுவ
தற்காக குறைந்த அளவு தொழிற் பயிற்சியைப் பெற்றுள்ள
மருத்துவர்களைக் குறிக்கிறது.

வகை 'C'.—கிராம வைத்தியர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட
பயிற்சியை மேற்கொண்டுள்ள மருத்துவர்களாகவும், பயிற்சி
முறையின் இறுதியில் நடத்தப்படும் தேர்வில் தேறியிருப்
பவர்களாகவும், அத்துடன் காலரா, பெரியம்மை ஆகிய கொள்ளை
நோய்கள் ஏற்படும்போது தடுப்பு மருந்து ஊசி குத்துவதற்கான
மருத்துவப் பணியை மேற்கொள்ள தேவையான பயிற்சியைப்
பெற்றிருக்க வேண்டும்.

மத்தியக் குழு, அது வகுத்துள்ள மருத்துவ விதி முறை கோவை
தொடர்பானவற்றைக் கவனித்துக்கொள்கிறது. தொழில்
தொடர்பான உறவுநிலையைத் தவறாகப் பயன்படுத்துவது உட்பட,
முறை தவறி நடக்கும் பதிவான மருத்துவர்கள் மீது நடவடிக்கை
எடுக்க அக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்திய
மருத்துவ முறை நிலையங்களுக்கு மருந்துகளை வழங்குவதற்காக
ஒரு மருந்துக் கடைக்கு அல்லது பண்டகசாலைக்கு அங்கீகாரம்
அளிக்க அக்குழு தகுதியுடையதாகும்.



## ஹோமியோபதி.

ஹோமியோபதி மருத்துவ முறைக்கு இம் மாநிலத்தில் சட்டப்
படி ஏற்பளிப்பு வழங்கப்படாத நிலையில், ஹோமியோபதி மருத்
துவ முறைக்கு ஏற்பளிக்க அரசு முடிவு செய்தது. மேலும்,
ஹோமியோபதி மருத்துவத் தொழிலை முறைப்படுத்த சட்டமியற்
றும் பணியை அரசு மேற்கொண்டது. அதற்கிணங்க, தமிழ்
நாடு 1971-ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ முறை—
ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம் (சட்ட எண் 5/1972)
நிறைவேற்றப்பட்டு, அச் சட்டம் 1972, மே 5-ஆம் நாள்
செயலுக்கு வந்தது. இச் சட்டத்திற்கிணங்க, ஹோமியோபதி
மருத்துவர்களைப் பதிவு செய்வதற்கு வகை செய்வதற்காக, இம்
மாநிலத்தில் ஹோமியோபதி மருத்துவக் குழு ஒன்று அமைக்கப்
பட்டுள்ளது. முதல் குழு 1972, மே திங்களில் அரசால் நியமனம்
செய்யப்பட்டது. இக் குழுவில் 14 உறுப்பினர்கள் உள்ளனர்.
புதியதாக அமைக்கப்பட்ட இந்தக் குழு 1972, ஆகஸ்ட் 1-ஆம்
நாளில் ராஜாஜி மண்டபத்தில் நடந்த விழாவில் முதலமைச்சரால்
தொடங்கப்பட்டது.

2. அரசின் ஒப்புதலுடன் ஹோமியோபதி மருத்துவ முறையைக்
கற்பிக்கும் நிலையங்களை அமைத்தல், அத்தகைய தனியார் நிலையங்
களுக்கு உதவியளித்தல், அத்தகைய நிலையங்கள் மீது கட்டுப்பாடு
அதிகாரத்தைச் செலுத்துதல், தேர்வுகள் நடத்துதல், பாட
முறைகளை வரையறுத்தல், அவசியமான தேர்வுகளில் தேறியுள்ள
வர்களுக்குப் பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் வழங்கு
தல், ஆகிய பணிகளை மேற்கொள்ள குழுவுக்கு அதிகாரமளிக்கப்
பட்டுள்ளது. ஏற்பளிக்கப்பட்ட தகுதிகளையுடையவர்கள் பதிவு
செய்துகொள்வதற்கும், ஏற்பளிக்கப்பட்ட தகுதியைப் பெறாமல்
ஆனால், 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில் புரிந்தவர்கள்,
4 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில் புரிந்திருந்து குழு நடத்
தும் எழுத்துத் தேர்வில் தேறியவர்கள் ஆகியோர் பதிவு செய்து
கொள்வதற்கும் இக்குழு வகை செய்யும்.

3. அரசு, தமிழ்நாடு ஹோமியோபதி சட்டத்தின்கீழ் தேவை
யான விதி முறைகளையும் 1972, டிசம்பர் திங்களில் செய்துள்ளது.
இதனால் ஹோமியோபதி குழு திறம்படச் செயலாற்ற முடியும்.
பதிவுக் கட்டணங்களை வசூலிப்பதிலிருந்தும், பிற வருவாய்
வாயில்களாகவும் கிடைக்கும் நிதிகள் இருக்கும் வரையில் குழு
தனது நடவடிக்கைகளை மேற்கொள்வது இயலும்பொருட்டு, தமிழ்
நாடு ஹோமியோபதி குழுவுக்கு 1972—73-ஆம் ஆண்டிற்கான செல
விற்கான ரூ. 1,000 மானியத்திற்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு
வழங்கியுள்ளது. அதற்கும் மேலாக, 1972—73-ஆம் ஆண்டில் பணி
யாளர் நியமனம், இன்றியமையாத மரச் சாமான்களை வாங்குதல்,
குழு அமைந்துள்ள கட்டிடத்திற்கான வாடகை போன்ற தொட
ரினச் செலவுகளைச் செய்தல், அஞ்சல், போக்குவரத்துக்கென
வண்டிகளை அமைத்துக்கொள்ளுதல், போன்ற சில்லறைச் செலவு
களைச் செய்தல் ஆகியவற்றிற்காக 1972—73-ல் செய்யப்பட்ட
செலவு இனத்துக்கு ரூ. 15,000 தற்காலிக முன் பணத்திற்கு
அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

4. அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததன் நோக்கம், இம் மாநிலத்தில் முறையாக நடக்கும் தனியார் ஹோமியோபதி நிலையங்களுக்கும், தனியார் கல்லூரிகளுக்கும் ஏற்பளிப்பு வழங்குவதற்கும், அரசினர் ஹோமியோபதி கல்லூரியை விரைவில் தொடங்குவதற்கு வழி செய்வதற்குமே ஆகும்.

5. ஹோமியோபதி மருத்துவத்திற்காகும் செலவுக்காக முதன் முறையாக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. மருத்துவ மனையுடன் கூடிய ஹோமியோபதி அரசினர் கல்லூரி ஒன்றை அமைப்பது குறித்து நடவடிக்கை மேற் கொள்வதற்காக ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுக்காக-ஒவ்வொரு மருத்துவ முறை மூலமும் ஒவ்வொரு முனைப்புத் திட்டத்தின் மூலமும், ஒவ்வொரு நோயையும் தடுக்கும் முயற்சி மூலமும், ஒவ்வொரு மட்டத்திலும் வளர்ச்சித் திட்டத்துக்கு வழி காணப்பட்டுள்ளது மூலமும்—அரசு —இத் துறையில் செலுத்திவரும் நாட்டத்தை அறிந்து கொள்வது கடினமாகாது.

இந்த நிதி ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு நான் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை வேண்டுகிறேன்.



## இணைப்பு II. (அ)

1972–73ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் மருத்துவ நிறுவனங்களில் நடத்தப்படும் பட்டப் படிப்பு பாட முறைகளின் விவரங்கள்.

### பட்டப் படிப்பு பாட முறை.

| பாட முறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| **பட்டப் படிப்பு.** | | |
| 1 ஒருங்கிணைந்த M.B.B.S. பட்டப் படிப்பு (மருத்துவப் பட்டப் படிப்பு). | 6½ ஆண்டுகள். | 1,015 |
| 2 ஒருங்கிணைந்த B.D.S. பட்டப் படிப்பு (பல் மருத்துவப் பட்டப் படிப்பு). | 5 ஆண்டுகள். | 35 |
| 3 I-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த B. பார்மசி பட்டப் படிப்பு. | 4 ஆண்டுகள். | 50 |
| 4 II-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த B. பார்மசி பட்டப் படிப்பு. | 3 ஆண்டுகள். | 10 |
| 5 B.Sc. (செவிலியர் பட்டப் படிப்பு) .. | 2½ ஆண்டுகள். | 10 |
| **பட்ட மேற்படிப்புப் பாட முறைகள்.** | | |
| 1 M.D. (பொது மருத்துவம்) .. .. | 3 ஆண்டுகள். | 59 |
| 2 M.S. (பொது அறுவை) .. .. | 3 ஆண்டுகள். | 58 |
| 3 M.D. (நோய்க் குறியியல்) .. .. | 3 ஆண்டுகள். | 5 |
| 4 M.D. (நுண்ணுயிர் இயல்) .. .. | 3 ஆண்டுகள். | 8 |
| 5 M.D. (மகப்பேறு துணைப் பணி) .. | 3 ஆண்டுகள். | 16 |
| 6 M.D. (உடலமைப்பியல்) .. .. | 3 ஆண்டுகள். | 8 |
| 7 M.D. (மருந்தாக்கியல்) .. .. | 3 ஆண்டுகள். | 8 |
| 8 M.D. (சிசுநோய்) .. .. .. | 3 ஆண்டுகள். | 16 |
| 9 M.D. (மயக்க மருந்து) .. .. | 3 ஆண்டுகள். | 4 |
| 10 M.D. (கதிரியக்க நோய்க் கூறு) .. | 3 ஆண்டுகள். | 4 |
| 11 M.D. (கதிரியக்க மருத்துவ முறை) .. | 3 ஆண்டுகள். | 2 |
| 12 M.D. (மேக நோய் மருத்துவம்) .. | 3 ஆண்டுகள். | 2 |
| 13 M.D. (தோல் நோய் மருத்துவம்) | 3 ஆண்டுகள். | 4 |
| 14 M.D. (உயிர் வேதியியல்) .. | 3 ஆண்டுகள். | 4 |
| 15 Ph.D. (உடல் குற்றியல்) .. .. | 2 ஆண்டுகள். | 6 |

| பாட முறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| **பட்ட மேற்படிப்பு பாட முறைகள்—தொடர்ச்சி.** | | |
| 16 M.S. (கண்நோய் மருத்துவம்) .. | 3 ஆண்டுகள். | 7 |
| 17 M.S. (காது, மூக்கு, தொண்டை நோய் மருத்துவம்). .. | 3 ஆண்டுகள். | 8 |
| 18 M.S. (முடவியல் மருத்துவம்) .. | 3 ஆண்டுகள். | 3 |
| 19 M.D.S. (Periodontia) .. .. | 3 ஆண்டுகள். | 3 |
| 20 M.D.S. (Oral Surgery) .. .. | 3 ஆண்டுகள். | 3 |
| **சிறப்புச் சிகிச்சைகள்.** | | |
| 1 M.Ch. (மூளை நரம்பு அறுவை மருத்துவம்) | 2 ஆண்டுகள். | 4 |
| 2 M.Ch. (சிசு நோய் அறுவை மருத்துவம்) | 2 ஆண்டுகள். | 4 |
| 3 M.Ch. (Genito Urinary Surgery) | 2 ஆண்டுகள். | 2 |
| 4 M.Ch. (பிளாஸ்டிக் அறுவை மருத்துவம்) | 2 ஆண்டுகள். | 2 |
| 5 M.Ch. (மார்புப் பகுதி அறுவை மருத்துவம்). | 2 ஆண்டுகள். | 2 |
| 6 D.M. (நரம்பு இயல்) .. .. | 2 ஆண்டுகள். | 2 |
| 7 M.Ch. (மகளிர் நோய் இயல்) .. | 2 ஆண்டுகள். | 2 |
| **அறிவியல் பட்டதாரிகளுக்கும் மருத்துவம் அல்லாத பட்டப் படிப்பில் மேல் பட்டப் படிப்பு பாடமுறை.** | | |
| 1 M.Sc. (உடல் கூற்றியல்) ..<br>2 M.Sc. (உடலமைப்பியல்) ..<br>3 M.Sc. (உயிர் வேதியியல்) ..<br>4 M.Sc. (நுண்ணுயிரியல்) ..<br>5 M.Sc. (மருந்தாக்கியல்) .. | 1971 ஆம் ஆண்டு முதல் இப் பட்டப்படிப்பு பாட முறைகள் நிறுத்திவைக்கப் பட்டுள்ளன. | 6 |
| 6 M.A. (குற்றவியலும் சட்டம் சார்ந்த அறிவியல் மேல் பட்டப் படிப்பு.) | 2 ஆண்டுகள். | 8 |



| பாடமுறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| **மேல் பட்டப் படிப்பில் தகுதிப்பட்டயப் படிப்பு.** | | |
| 1 D.G.O. .. .. .. | 2 ஆண்டுகள். | 36 |
| 2 D.C.H. .. .. .. | 2 ஆண்டுகள். | 24 |
| 3 D.M.R.D. .. .. .. | 2 ஆண்டுகள். | 14 |
| 4 D.M.R.T. .. .. .. | 2 ஆண்டுகள். | 2 |
| 5 D.O. .. .. .. | 2 ஆண்டுகள். | 12 |
| 6 D.L.O. .. .. .. | 2 ஆண்டுகள். | 12 |
| 7 D.A. .. .. .. | 2 ஆண்டுகள். | 10 |
| 8 D.Ortho .. .. .. | 2 ஆண்டுகள். | 6 |
| 9 D.V. .. .. .. | 2 ஆண்டுகள். | 6 |
| 10 D.C.P. .. .. | 2 ஆண்டுகள். | 4 |
| 11 D.C.D. (T.D.D.) .. | 2 ஆண்டுகள். | 12 |
| 12 தோல் நோய் மருத்துவத்தில் தகுதிப் பட்டயப் படிப்பு. | 2 ஆண்டுகள். | 6 |
| 13 குற்றவியல் & சட்டஞ் சார்ந்த அறிவியலில் தகுதி பட்டயப் பட்டப்படிப்பு. | 1 ஆண்டு. | 12 |
| **உள்ளாட்சி மன்ற மருத்துவ அதிகாரிகளுக்கு.** | | |
| மகப்பேறு & சிறுவர் சுகாதாரத்தில் தகுதிப் பட்டயப் படிப்பு. | 3 மாதங்கள். | 8 |
| **சுகாதார அதிகாரிகளுக்காக.** | | |
| B.S.Sc. .. .. | 1 ஆண்டு. | 10 |

| பாடமுறையின் பெயர். | | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | பகுதி மருத்துவ பாட முறைகள் | | |
| 1 | துப்புரவு ஆய்வாளர் பாட முறை. | 1 ஆண்டு. | 350 |
| 2 | மருந்தியல் தகுதிப் பட்டயப் படிப்பு. | 2 ஆண்டுகள். | 150 |
| 3 | எலும்பு முறிவுப் பாடமுறை (பெண்களுக்கு மட்டும்). | 2 ஆண்டுகள். | 6 |
| 4 | மூக்கு கண்ணாடி தயாரிப்பவர் பாட முறை (1970-ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது). | 2 ஆண்டுகள். | 30 |
| 5 | நற்சான்றிதழ் பெற்ற கதிர் வீச்சு உதவியாளர். | 1 ஆண்டு. | 40 |
| 6 | நிழற்படத் தயாரிப்பு உதவியாளர். | 6 மாதங்கள். | 4 |
| 7 | பல் மருத்துவர்கள் (Dental Hygienists). | 1 ஆண்டு. | 6 |
| 8 | பல் கட்டுபவர் (Dental Mechanics). | 2 ஆண்டுகள். | 60 |
| 9 | ஆய்வுக் கூடத் தொழில் நுட்ப இயல், தரம் I. | 1 ஆண்டு. | 90 |
| 10 | ஆய்வுக்கூடத் தொழில் நுட்பம். | 1 ஆண்டு. | 17 |
| 11 | ஆய்வுக்கூட தொழில் நுட்ப இயல், தரம் II. | 1 ஆண்டு. | 90 |
| 12 | மின் இயல் மருத்துவர் .. | 3 ஆண்டுகள். | 10 |
| 13 | செவிலியர் பயிற்சி பாடமுறை | 3½ ஆண்டுகள். | 150 |



## இணைப்பு II (ஆ).

### படுக்கைகளின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கும் விவர அறிக்கை.

| மருத்துவ மனையின் பெயர். | படுக்கைகளின் எண்ணிக்கை. 1971-72. | 1972-73. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| A. மாநகர மருத்துவ மனைகள். | | |
| 1. அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை. | 1,244 | 1,537 |
| 2. அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை. | 931 | 962 |
| 3. கீழ்ப்பாக்கம் அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை. | 300 | 300 |
| 4. இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனை, சென்னை. | 340 | 494 |
| 5. அரசினர் கண்நோய் மருத்துவ மனை, சென்னை. | 266 | 326 |
| 6. கஸ்தூரிபாய் காந்தி அரசினர் மருத்துவ மனை, சென்னை. | 615 | 635 |
| 7. மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம், மகளிர்-சிறுவர் மருத்துவமனை, சென்னை. | 474 | 474 |
| 8. இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு அரசினர் மருத்துவமனை, சென்னை. | 275 | 295 |
| 9. சிறார்களுக்கு சிறுவர் சுகாதார அரசினர் மருத்துவமனை, சென்னை. | 250 | 250 |
| 10. திருவொற்றீஸ்வரர் காசநோய் அரசினர் மருத்துவமனை, ஓட்டேரி. | 222 | 222 |
| 11. அரசினர் மனநோய் மருத்துவ மனை, சென்னை. | 1,800 | 1,800 |

| மருத்துவமனையின் பெயர். | படுக்கைகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | 1971–72. | 1972–73. |
| (1) | (2) | (3) |
| A. மாநகர மருத்துவ மனைகள்—தொடர்ச்சி. | | |
| 12. அரசினர் மார்புநோய் நிறுவனம், சென்னை. | .. | .. |
| 13. அரசினர் காசநோய் வேதியல் சிகிச்சை நிறுவனம், சேத்துப் பட்டு, சென்னை. | .. | .. |
| B. வெளியூர் மருத்துவ மனைகள். | | |
| 14. அரசினர் காசநோய் நலம்பேண் மருத்துவ மனை, தாம்பரம். | 618 | 620 |
| 15. செங்கற்பட்டு அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற் பட்டு. | 400 | 416 |
| 16. அரசினர் ராஜா மிராசுதார் மருத்துவ மனை, தஞ்சாவூர். | 636 | 636 |
| 17. தஞ்சாவூர் அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர். | 538 | 538 |
| 18. அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை. | 1,310 | 1,350 |
| 19. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி. | 325 | 407 |
| 20. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, கோயம் புத்தூர். | 785 | 785 |
| மொத்தம் .. | 11,329 | 12,047 |



## இணைப்பு II (இ).

### தமிழ்நாட்டில் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்.

| | | |
|---|---|---|
| 1. தமிழ்நாட்டிலுள்ள காசநோய் தனி மருந்தகங்களின் எண்ணிக்கை. | 827 | |
| 2. தமிழ்நாட்டில் மதிப்பிடப்பட்ட காசநோய் நேர்வுகள். | சுமார் 8 லட்சம். | |
| | 1971–72-ல். | 1972–73-ல் 30-9-72 வரை. |
| 3. இதுவரை நோய்க்குறி கண்டு பிடிக்கப்பட்ட காச நோய் நேர்வுகள். | 60,776 | 40,592 |
| 4. இதுவரையில் ஒரு முழுக்கால சிகிச்சை முடிக்கப்பட்ட காச நோய் நேர்வுகள். | 11,673 | 6,241 |
| 5. சிகிச்சையிலுள்ள காசநோய் நேர்வுகள் (நாளது தேதிவரை). | 70,000 (சராசரி). | 70,274<br>70,000 (சராசரி). |
| 6. மருந்துகள் சேகரிப்பதில் தவறிய வர்கள். | 25 சதவீதம். (சராசரி). | 25 சதவீதம் (சராசரி). |
| 7. மரணங்கள் (இதுவரை பதிவு செய்தது). | 546 | 234 |

I. பெருமளவு பி.சி.ஜி. (B. C. G.) ஊசி குத்தும் திட்டத்தின் சாதனைகள் (1954 முதல் 1964 வரை).

| | |
|---|---|
| 1. சோதனை செய்யப்பட்டது .. | 100,90,535 |
| 2. ஊசி குத்தப்பட்டது .. | 30,91,806 |

## தமிழ்நாட்டில் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்—தொடர்ச்சி.

II. பி.சி.ஜி. குழு, மாவட்ட காசநோய் நிலையங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர் பி.சி.ஜி. குழுவின் சாதனைகள் (அதாவது, 1964 ஆம் ஆண்டிற்குப் பின்னர்).

| | |
|---|---|
| (a) i. இதுவரை பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 56,55,998 |
| ii. அவர்களுள் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை. | 4,08,632 |

| (1) | 1971–72-ல். (2) | 1972–73-ல் 30-9-72 வரை. (3) |
|---|---|---|
| (b) 1. பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்ட பிறந்த குழந்தைகள். | 40,634 | 24,507 |
| 2. நேரடியாக ஊசி குத்தப்பட்டவர்கள் (பிறந்த குழந்தைகள் தவிர.) | 5,59,906 | 3,15,802 |
| 3. சோதனை செய்யப்பட்டவை ... | 72,382 | 48,972 |
| 4. பி.சி.ஜி. ஊசி குத்தியதனுல் நோய் இல்லையென்று கண்டு பிடிக்கப்பட்டவை. | 2,561 | 2,782 |
| 5. பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டதன் மொத்த எண்ணிக்கை. [பத்தி (1)+(2)+(4)]. | 6,03,101 | 3,44,041 |



## இணைப்பு II (ஈ):

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ நிலையங்கள், ஏற்படுத்தப்பட்ட படுக்கைகள் முதலியவற்றின் எண்ணிக்கை.

I. திட்டம் நிறைவேற்றப்பட்டவை—

| | |
|---|---|
| (i) திட்டம் நிறைவேற்றப்பட்ட பகுதிகளிலுள்ள நிலையங்களின் எண்ணிக்கை. | 10 |
| (ii) இத்திட்டத்தின்கீழ் நலம் பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 3,04,800 |
| (iii) இத்திட்டத்தின்கீழ் இதுவரை காப்புறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 3,90,000 |
| (iv) இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை (குடும்ப யூனிட்டுகளைப் போல் 4 மடங்கு) (குடும்ப யூனிட்டில் ஈட்டுறுதி செய்யப்பட்டவருடன் 4 உறுப்பினர்கள் அடங்குவர்). | 15,00,150 |

II. மருத்துவ நிலையங்கள்—

| | |
|---|---|
| (i) தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளின் எண்ணிக்கை (சென்னை மாநகரம், கோயம்புத்தூர், மதுரை). | 3 |
| (ii) ஈ.எஸ்.ஐ. மருந்தகங்களின் எண்ணிக்கை. | 94 |
| (iii) ஈ.எஸ்.ஐ. இயல் மருந்தகங்களின் எண்ணிக்கை. | 8 |
| (iv) தொழிலாளர் பயனுக்கான மருந்தகங்களின் எண்ணிக்கை. | 3 |
| (v) பகுதி நேர தனி மருந்தகங்களின் எண்ணிக்கை. | 2 |
| (vi) விரைவு மருத்துவ ஊர்திகளின் எண்ணிக்கை. | 21 |
| (vii) சென்னை, மதுரை, கோயம்புத்தூரிலுள்ள மத்திய மருந்து பண்டகசாலைகளின் (ஈ.எஸ்.ஐ.) எண்ணிக்கை. | 3 |

(viii) படுக்கை வசதிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ள மருத்துவ மனைகளின் எண்ணிக்கை— 3

அரசினர் மருத்துவ மனைகள் .. .. 54

தனியார் மருத்துவ மனைகள் .. .. 3

(ix) இதுவரையில் ஏற்படுத்தப்பட்ட/ஒதுக்கப்பட்ட படுக்கைகள் :—

| (1) | பொது. (2) | மகப் பேறு. (3) | காச நோய். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| 1. ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள். | 915 | 200 | 12 | 1,127 |
| 2. ஈ.எஸ்.ஐ. வார்டுகள்/சேர்க்கைகள். | 54 | .. | 101 | 155 |
| 3. அரசினர் மருத்துவ மனைகள். | 240 | 210 | 75 | 525 |
| 4. தனியார் மருத்துவ மனைகள். | 3 | .. | 95 | 98 |
| மொத்தம் ... | 1,212 | 410 | 283 | 1,905 |

## இணைப்பு III.

(37-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கோரிக்கை எண் 18

### மக்கள் நல்வாழ்வுத் துறை—1973-74.

பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வுத் துறை என்பதன்கீழ், ரூ. 17,53,30,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டுமென முன்மொழிகிறேன்.

நமது மக்களின் உடல்நலனை மேம்படுத்துவதே நமது அரசின் நாட்டமாக என்றும் இருந்து வருகிறது. மக்கள் நல்வாழ்வு என்பது நோயற்ற வாழ்க்கை என்பது மட்டுமல்ல. உடற்கட்டும் உளவன்மையும் சமூக நல்வாழ்வும் அமைந்த வாழ்க்கையே ஆகும். ஒவ்வொருவரும் தமது ஆக்கப் பணிகளின் மூலம் சமூகத்திற்குப் பணியாற்றுவதற்கு ஏற்ற வகையில் அவரது உடல் நலனை நன்கு பேணி வருவதற்கு அவருக்கு நியாயமான வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இதையே நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு சமுதாய நல்வாழ்வுப் பணிகளின் வளர்ச்சிக்காக பல்வேறு சமுதாய நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் தாய்-சேய் நலம், ஊட்டச் சத்து மேம்பாடு, தொற்று நோய்த் தடுப்பும் கட்டுப்பாடும், பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல், சுகாதாரக் கல்வியை மக்களிடையே பரப்புதல், சுற்றுப்புறத் தூய்மையை வளர்த்தல் ஆகியவை அடங்கும்.

நமது மாநிலம், 1,29,901 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. 1971 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 41,103,125. இதில் 28,656,265 பேர் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். 12,446,860 பேர் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். கிராமப்புறப் பகுதி, நகர்ப்புறப் பகுதி மக்களுக்கு இடையே உள்ள விகிதாச்சாரம் 70 : 30 ஆகும்.

இம் மாநிலத்தில் நகரமைப்புத் திட்டப் பணிகளின் நிர்வாகப் பொறுப்புடைய நகரமைப்புத் திட்டத் துறை இயக்குநர் அலுவலகம் தொடர்பான செலவு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மிகச் சிறப்பான கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

**I. தாய்-சேய் நலன் உட்பட (சமுதாய) மக்கள் நல்வாழ்வை மேம்படுத்துதல்.**

(A) தொடக்க நல்வாழ்வு நிலையங்கள்.—தொடக்க நல்வாழ்வு நிலையம் தனது ஆட்சிப் பகுதிக்குள் வசிக்கும் மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகளைச் செய்துவரும் ஒரு நிறுவனமாகும். இது சாதாரணமாக, வளர்ச்சி வட்டாரமாக அமைந்துள்ள (இப்போது ஊராட்சி ஒன்றியமாக உள்ள) பகுதியாக உள்ளது. நமது மாநிலத்தில் 374 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. சேலம் மாவட்டத்தில் இளைச்சிப்பாளையம், ராசிபுரம் வளர்ச்சி வட்டாரங்கள் நீங்கலாக எல்லா வளர்ச்சி வட்டாரங்களிலும் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கீழ்க்காணும் 7 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன :—

| மாவட்டங்களின் பெயர். | வளர்ச்சி வட்டாரத்தின் பெயர். | தொடக்க நல்வாழ்வு நிலையங்களின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வட ஆர்க்காடு .. | துரிஞ்சாபுரம் .. | மங்கலம் நார்த்தம் பூண்டி. |
| வட ஆர்க்காடு .. | கீழ் பெண்ணாத்தூர் | வேட்டவலம், கீழ் பெண்ணாத்தூர். |
| கோயம்புத்தூர் .. | மொடக்குறிச்சி .. | கணபதிபாளையம். மொடக்குறிச்சி. |
| கோயம்புத்தூர் .. | கொடுமுடி .. | கோலநல்லி, சிவகிரி. |
| கோயம்புத்தூர் .. | வெள்ளக்கோயில் | மூதூர் வெள்ளக் கோயில். |
| கோயம்புத்தூர் .. | தாக்கநாய்க்கன் பாளையம். | தாக்கநாய்க்கன் பாளை யம், காசிப்பாளையம். |
| மதுரை .. .. | ஆத்தூர் .. .. | ஆத்தூர், சின்னாளப் |



**ஆக, நமது மாநிலத்தில் 379 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன.**

மேலே சொல்லிய 7 வளர்ச்சி வட்டாரங்களில் ஒவ்வொன்றிலும் 2 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அமைய வழிவகுத்த சந்தர்ப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1948-ல் போருக்குப் பிற்பட்ட மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கிராம நல்வாழ்வு நிலையங்கள் பலவற்றைத் திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியது. மேற்சொன்ன திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்காணும் தொடக்கச் சுகாதார நிலையங்கள் வருகின்றன :—

(1) மங்கலம்,

(2) நார்த்தம்பூண்டி,

(3) வேட்டவலம்,

(4) கீழ்ப்பெண்ணாத்தூர்.

பின்னர் வளர்ச்சி வட்டாரங்கள் அமைக்கப்பட்டபோது, மங்கலம், நார்த்தம்பூண்டி தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் துரிஞ்சாபுரம் வளர்ச்சி வட்டார எல்லைக்குள் வந்தன. இவ்வாறாக, அந்த வளர்ச்சி வட்டாரத் தொடக்க நல்வாழ்வு நிலையங்களாக இருந்து வருகின்றன. இதைப்போலவே வேட்டவலம், கீழ்ப்பெண்ணாத்தூர் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் கீழ்ப்பெண்ணாத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த வளர்ச்சி வட்டாரங்களில் தொடக்க நல்வாழ்வு நிலையம் எதுவும் திறக்கப்படவில்லை. போருக்குப்பின் தொடங்கிய இந்த நிலையங்கள், 1958-ல் வளர்ச்சி வட்டாரத் திட்டத்தின்கீழ் தொடக்க நல்வாழ்வு நிலையங்களாக முறைப்படி கொண்டு வரப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் போருக்குப் பிந்திய மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கிராம நல்வாழ்வு நிலையங்கள் கணபதிபாளையம், கோலநல்லி, சிவகிரி, மூதூர், காசிபாளையம்.

தூக்கநாய்க்கன்பாளையம் ஆகிய இடங்களில் திறக்கப்பட்டன. தேசிய வளர்ச்சிப் பணி, சமுதாய வளர்ச்சி வட்டாரத் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் முறையே மொடக்குறிச்சி, வெள்ளக்கோவில் ஆகிய இடங்களில் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் திறக்கப்பட்டன. இதன் பின்னர் வளர்ச்சி வட்டாரங்களுக்கு எல்லை வரைந்தபோது மொடக்குறிச்சி, கணபதிபாளையம் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் மொடக்குறிச்சி நல்வாழ்வு நிலையத்துடன் சேர்க்கப்பட்டன. கோலநல்லி, சிவகிரி தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் கொடுமுடி வளர்ச்சி வட்டாரத்தில் சேர்க்கப்பட்டன. மூலனூர், வெள்ளக்கோவில் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் வெள்ளக்கோவில் வளர்ச்சி வட்டாரத்தில் சேர்க்கப்பட்டன. கணபதிபாளையம், தூக்கநாய்க்கன்பாளையத்தில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் தூக்கநாய்க்கன்பாளையம் வளர்ச்சி வட்டாரத்தில் சேர்க்கப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் வளர்ச்சி வட்டாரத்திற்கு மருந்தகம் திறக்கப்பட்டதோடு 1955-ல் சின்னாளப்பட்டிக்குத் தொடக்க நல்வாழ்வு நிலையம் திறக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் பின்னர் காந்தி கிராமத்தில் முன்னோடிச் சுகாதாரத் திட்டம் தொடங்கப்பட்டபோது அரசின் ஒத்துழைப்புடனும் இசைவுடனும் ஆத்தூரில் உள்ள மருந்தகம் இத்திட்டத்தின் சிறப்பு விதித்துறைகளின்படி தொடக்க நல்வாழ்வு நிலையமாக மாற்றப்பட்டது. ஆக மதுரை மாவட்டம், ஆத்தூர் வளர்ச்சி வட்டாரத்திற்கு 2 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன. இந்த நல்வாழ்வு நிலையங்கள் யாவும் நமது மாநில கிராம மக்களின் நலனிற்காகப் பணியாற்றுகின்றன.

தொடக்க நல்வாழ்வு நிலையம் அளித்து வரும் பணிகளில் பின்வருவன அடங்கும் :—

பொது மருத்துவப் பராமரிப்பு, தாய்-சேய் நல முன்னேற்றம், குடும்பநலத் திட்டம், மக்கள் கழிவுகளை நல்வாழ்வு முறைகளில் அப்புறப்படுத்துதல், குடிநீர்ப் பாதுகாப்பு, தகுந்த ஊசி மருந்துகள் மூலம் தொற்று நோய்க் கட்டுப்பாடு, அம்மை நோய், காலரா, மலேரியா போன்ற தொற்று நோய்கள் உண்டாவதைக் கண்டுபிடித்துக் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்துதல், சத்துணவு



அவசியம்பற்றிக் கல்வி அளித்தல்; சத்துணவுக் குறைவினால் ஏற்படும் நோய்களின் கட்டுப்பாடு, பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரித்தல், பிறப்பு-இறப்புப் பதிவு முறையைச் சீரமைத்தல், பள்ளிச் சிறார்களின் நல்வாழ்வு, நலப் பாதுகாப்பு, கல்வி ஆகியவை.

மருத்துவப் பராமரிப்புக்காக ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் புறநிலை நோயாளிப் பிரிவும், 6 படுக்கைகள் கொண்ட அகநிலை நோயாளிப் பிரிவும் உள்ளன. புறநிலை நோயாளிப் பிரிவில் நோயாளி பரிசோதனை செய்யப்பட்டு தக்க மருத்துவம் அளிக்கப் படுகிறார். வழக்கமான மருந்தகங்களிலும் மருத்துவ மனைகளிலும் மருந்து கொடுப்பதோடு பணி நின்று விடுகிறது. தொடக்க நல்வாழ்வு நிலையத்திலோ நோயாளிகளுக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் நோய் குணப்படுத்துவதோடுகூட தடுப்பு மருத்துவமும் அளிக்கப்படுகிறது. நோயின் தன்மை பற்றியும், நோய் பரவுதல், நோய் தொற்றக்கூடிய பொருள்களை நோய் நீக்கம் செய்யும் முறைகள் பற்றியும் நோயாளிக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் நாள்தோறும் வருகை தரும் புறநிலை நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை 70, புதிய நோயாளிகளும், 40 பழைய நோயாளிகளும் ஆகும். தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அனைத்திலும் நாள்தோறும் வருகை தருவோரின் சராசரி எண்ணிக்கை 42,000 ஆகும். ஆண்டுதோறும் வருகை தரும் சராசரி எண்ணிக்கை சுமார் 150 லட்சமாகும்.

இப்பொழுது செயல்பட்டு வரும் 379 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், சொந்தக் கட்டிடங்களிலேயே இப்போது இயங்கி வருகின்றன. 22 தொடக்க நல்வாழ்வு நிலையத் தொகுதிக்கு, அதாவது, மருந்தகமும் பணியாளர்க் குடியிருப்புகளும் சேர்ந்த கட்டிடத் தொகுதிக்கும் பணியாளர்க் குடியிருப்புகள் 21-க்கும் வேண்டிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மற்ற 157 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

1973 மார் 13]

வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கையும், அந்தந்த வட்டார மக்கள் தொகையின் வரிசை முறையும் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மக்கள் தொகையின் வரிசைபாடு. | வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. 80,000-க்கு குறைவாக | 128 |
| 2. 80,000-க்கு மேலும் 1 லட்சம் வரையிலும் | 120 |
| 3. 1,00,000-லிருந்து 1,20,000 வரை | 91 |
| 4. 1,20,000-லிருந்து 1,40,000 வரை | 24 |
| 5. 1,40,000-க்கு மேல் | 11 |

கிராம மக்களின் பெரும் பகுதியினர்க்குப் பணியாற்றும் பொருட்டு ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் இரண்டாவது தொடக்க நல்வாழ்வு நிலையம் ஏற்படுத்தப்படலாம் என்று இந்திய அரசு பரிவுரை செய்துள்ளது. வளர்ச்சி வட்டாரங்களில் இரண்டாவது தொடக்க நல்வாழ்வு நிலையங்களைப் படிப்படியாக ஏற்படுத்துவது குறித்து மாநில அரசு பரிசீலித்து வருகிறது. இரண்டாவது தொடக்க நல்வாழ்வு நிலையம் ஏற்படுத்துவதற்கு முதற்கட்டமாக 1 லட்சமும், 1 லட்சத்துக்கு மேற்பட்டும் மக்கள் தொகையுடைய வளர்ச்சி வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்படும்.

தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்குக் கடந்த இரு ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகையும், நடப்பு நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையும், 1973-74-ல் ஒதுக்கப்படவிருக்கிற தொகையும் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு | | தொகை (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1970–71 | | 127.57 |
| 1971–72 | | 177.10 |
| 1972–73 | திருத்த மதிப்பீடு | 176.48 |
| 1973–74 | திட்ட மதிப்பீடு | 181.15 |



1973 மார்ச் 13]

## (B) தாய்-சேய் நலப் பணிகள்.

தாய்-சேய் நலப் பணிகளில் நல்ல உடல் நலன் பெற்ற தாய்க்கு உடல் நலன் பெற்ற குழந்தை பிறப்பதை உறுதிப்படுத்தவும், தாய்-சேய் நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது இதற்காக, கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் தாய்மார்கள் முன்பேறுகாலப் பராமரிப்புக்காகப் பதிவு செய்து கொள்ளப்படுகின்றனர். இந்தப் பதிவுப் பணி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், மகப்பேறு நிலையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மகப்பேறு உதவியாளர்கள் துணைச் செவிலி-மருத்துவச்சிகளால் செய்யப்படுகிறது.

பேறு காலத் தாய்மார் ஒவ்வொருவருக்கும், அவரிடத்தில் அல்லது கருப்பை அமைப்பில் ஏதேனும் கோளாறு இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக மருத்துவச் சோதனை செய்யப்படுகிறது. பேறு காலத் தாய்மாரில் இரத்த சோகை, ரத்தத் திரிபு நோய், சத்துக் குறைவு உள்ளவர்கள் இருக்கின்றனரா என்றறிவதற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பேறு காலத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய உணவு, சொந்தப் பராமரிப்பு குறித்து அத்தாய்க்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. குழந்தைக்கு உணவிடுதல், நோய்த் தடுப்பு கால அட்டவணை, குழந்தைப் பருவ நோய்கள், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவை குறித்தும் அவருக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது.

பேறு காலப் பணிகள் முக்கியமாக தாயின் இருப்பிடத்திலேயே செய்யப்பட வேண்டியவையாகும். எனவே துணைச் செவிலி-மருத்துவச்சிகள், பிரசவத்தின்போது, பேறுகாலத் தாய்மாரின் வீட்டுக்குச் சென்று தோற்ற முறை உபாயங்களைக் கொண்டு பிரசவம் நடத்துகின்றனர். குழந்தை பிறந்த பிறகு 10 நாட்களுக்கு அவர் குழந்தையைக் கவனித்துக் கொள்கிறார்.

சுகாதாரப் பார்வையாளர், துணைச் செவிலி-மருத்துவச்சிகள் பணியை மேற்பார்வையிடுவதோடு, மகப்பேறு நிலையங்கள் பலவற்றில் பேறு காலத்துக்கு முந்திய பணிகளில் தீவிரப் பங்கு கொள்கிறார். மேலும் கவனிப்பு வேண்டியுள்ள தாய்மார்களை தொடக்கச் சுகாதார நிலையத்தின் மருத்துவ அதிகாரியிடம் அனுப்பி வைக்கிறார். நோய் குணமாக்கும் தடுப்பு முறைகளைக் குறித்துத் தாய்மார்களுக்கு அறிவுரை வழங்குவதுடன், முத்தடுப்பு ஊசி போடும் பணியிலும் பங்கு கொள்கிறார்.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, மகப்பேறு நிலையங்களைத் திறந்து பேணி வருவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். தற்போது மக்கள் தொகையில் பத்தாயிரம் பேருக்கு ஒரு நிலையம் வீதம் மகப்பேறு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1-1-72-ஆம் நாள் வரை, நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 3,801 ஆகும். ஊராட்சி ஒன்றியக் குழு வைத்து வரும் நிலையங்கள், தாங்கள் மேற்கொள்ளும் தொடரினச் செலவில் ஆன்றிலொரு பாகம் மானியமாக அரசிடமிருந்து பெறுகின்றன. 1971–72 மானியமாக ரூ. 39,74,766 அவற்றுக்குக் கொடுக்கப்பட்டது.

நகராட்சிகளில் 68 மகப்பேறு இல்லங்களும், 303 மகப்பேறு நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவை, தாங்கள் மேற்கொள்ளும் தொடரினச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அரசிடம் பெறுகின்றன.

மேற்சொன்ன மானியத்திற்காக 1971–72-ல் ரூ. 6,59,617-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நடத்தி வரும் மகப்பேறு நிலையங்களுக்குக் கூடுதலாக, அரசு, போருக்குப் பிந்திய மறுசீரமைப்புத் திட்ட வேலையில் ஒரு பகுதியாக 76 கிராமங்களில் மகப்பேறு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அப்போது கருதப்பட்ட தொலை தூரத்தில் உள்ள கிராமங்களில் இந் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந் நிலையங்களுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 1971–72-ல் ரூ. 5,31,556 ஆகும். 1972-73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இவற்றுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,27,500 ஆகும்.



### (C) குழந்தைகள் நோய்க் காப்புத் திட்டம்.

தொடக்கச் சுகாதார
1964 அக்டோபர் 1-ஆம் நாள் முதலாக, இம் மாநிலத்து கிராமப் பகுதிகளில் நிலையங்கள் மூலமாக, குழந்தைகள் நோய்க் காப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொண்டைப் புண், இசிவு நோய், கக்குவான் ஆகிய மூவகை நோய்த் தடுப்பு ஊசி போட்டு நோயினின்றும் 0–5 வயதுக் குழந்தைகளுக்குத் தற்காப்பு அளிக்கப்படுகிறது. ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு மிகுந்த நாட்டம் இவ்வகையில் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு முறை அளிக்கப்படும் மருந்துக்கு ஒரு மாதம் இடைவெளி விட்டு மும்முறை டி. பி. டி. மருந்து கொடுக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒவ்வொரு தொடக்கச் சுகாதார நிலையத்திலும் காப்பு அளிக்கப்பட வேண்டிய குழந்தைகள் 900 என்று இலக்கிடப்பட்டுள்ளது.

1969-70-லிருந்து 1972-73 வரை முத்தடுப்பு மருந்து கொடுத்துக் காப்பளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைபற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | தற்காப்பளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1969–70 | 87,239 |
| 1970–71 | 97,358 |
| 1971–72 | 103,667 |
| 1972-73 (1972 டிசம்பர் வரை) | 71,542 |

தவறான
குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதில் சமுதாயத்தினர் கருத்துக்கள் இருப்பதை எல்லாம் களைந்து, குடும்பநலப் எல்லோருக்கும் இதன் நன்மையை அளிப்பதற்காக, பணிகள் பொதுவாக சமுதாய நலத் திட்டங்கள் மூலமாகவும், குறிப்பாக தாய்-சேய் நலப் பணிகள் மூலமாகவும் கிடைக்குமாறு செய்யப்படுகின்றன.

முதல் நடவடிக்கையாக, கீழ்க்காணும் தாய்-சேய் நலப் பணிகள், அரசு, உள்ளாட்சி மன்றங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வரும் நகர்ப்புற குடும்ப நல நிலையங்கள்/தாய்-சேய் நல நிலையங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

(1) தொண்டைப் புண்—இசிவு நோய்—கக்குவான் (D.P.T.) நோயினின்றும் சிசுக்களுக்கும் பள்ளி செல்லும் வயது அடையாத சிறுர்களுக்கும் தற்காப்பு அளித்தல்.

(2) இசிவு நோயினின்றும் கருவுற்ற தாய்மார்களுக்குக் காப்பு.

(3) சத்துக் குறைவினால் ஏற்படும் இரத்தச் சோகை நோயினின்றும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் நோய்த் தடுப்பு மருத்துவம்.

(4) குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வை மந்த நோய்க்கு மருத்துவம்.

தாய்மார்களுக்கு மேற்சொன்ன சேவைகள் அளிக்கப்படும் போது, தாய்மார்களுக்கு, குழந்தை நலப் பராமரிப்பு பற்றி அறிவுரை அளிப்பதுடன் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் அறிவுறுத்தப்படுகின்றன. விரும்பிய குழந்தைகளை ஏற்கெனவே பெற்றுள்ள தாய்மார்களுடன், குடும்பத்தை உரிய அளவில் வைத்து வருவதன் அவசியம் பற்றிக் கலந்து பேசி அவர்கள் கருத்தடை செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேற்சொன்ன திட்டத்தின்கீழ் மூவகை நோய்த் தடுப்பு ஊசி, டெடனஸ் டாக்ஸாயிட், வைட்டமின் A முதலியவற்றை இந்திய அரசு வழங்குகிறது.

1972–73-ல் மேற்சொன்ன திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் திட்ட இலக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) டி. பி. டி. நோயினின்றும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் தற்காப்பு | 36,000 தாய்மார்கள், |
| (2) டெடனஸ் நோயினின்றும் பேறு காலத் தாய்மார்களுக்குத் தற்காப்பு. | 2,63,000 தாய்மார்கள், |



| | |
|---|---|
| (3) சத்துக் குறைவால் உண்டாகும் ரத்த சோகை நோய்க்கு தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் மருத்துவம். | 390,000 தாய்மார்கள், குழந்தைகள் |
| (4) குழந்தைகளுக்கு உண்டாகும் பார்வை மந்த நோய்க்கு மருத்துவம் | 720,000 குழந்தைகள் |

**II மக்கள் சத்துணவு பெறச் செய்வதற்கான மேம்பாட்டு பணிகள்.**

நமது மாநிலச் சத்துணவுக் கழகம் 1944-லிலேயே தொடங்கப்பட்டது. உணவு, உயிரியல் சோதனைகளில் ரசாயனப் பகுப்பாய்வு நடத்துவதற்கு உரிய சாதனங்களைக் கொண்டு இது அமைந்துள்ளது. இம் மாநிலத்தில் உள்ள உணவுப் பழக்கங்களையும், ஊட்டச் சத்துக் குறைபாடுகளையும் கண்டறியவும், முறையான உடற்கூறு வளர்ச்சி ஆய்வுகள் நடத்தி அதன் மூலம் உடற்கூறு நியதிகளை ஏற்படுத்தவும், சத்துணவுத் திட்டம் பற்றி அறிவுரை வழங்கவும் தனக்குரிய நோக்கங்களாகக் கொண்டு இந்தக் கழகம் அமைக்கப்பட்டது.

இருபத்து நான்கு மணி நேரக் கால அளவில் உட்கொள்ளும் உணவு வகைகளை அறிய வினா—விடை முறை மூலம் உணவு பற்றிய ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினரைக் கணிசமான அளவுடைய 4,000—5,000 பேருடைய (கிராம) மக்கள் தொகுதி தெரிந்தெடுக்கப்படுகிறது. பாலர்கள், மகப்பேறுக்கு முற்பட்ட, பிற்பட்ட தாய்மார்கள் குறித்த கணக்கெடுப்பு வேலை சுகாதாரப் பார்வையாளர்களால் நடத்தப்படுகிறது. பாலர்கள், மகப்பேறுக்கு முற்பட்ட, பிற்பட்ட தாய்மார்கள் குறித்து சத்துணவு-உணவு ஆய்வு வேலைகள் நடத்தப்படுகின்றன. 1971 ஜூலையிலிருந்து இதுவரை கீழ்க்காணும் வளர்ச்சி வட்டாரங்களில் மருத்துவ, உணவு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன :—

(1) ஆத்தூர் (மதுரை மாவட்டம்)

(2) எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்)

(3) அகஸ்தீஸ்வரம் (கன்னியாகுமரி மாவட்டம்)

(4) வில்லிவாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்)

(5) ஆலங்காயம் (வட ஆர்க்காடு மாவட்டம்)

(6) ஹஊர் (தருமபுரி மாவட்டம்)

(7) கோடைக்கானல் (மதுரை மாவட்டம்)

(8) குறிஞ்சிப்பாடி (தென் ஆர்க்காடு மாவட்டம்)

(9) அறந்தாங்கி (தஞ்சாவூர் மாவட்டம்)

2,044 குழந்தைகள் மகப்பேறுக்கு முற்பட்ட 142 தாய்மார்கள், மகப்பேறுக்குப் பிற்பட்ட 352 தாய்மார்கள் ஆகியோரிடையே ஆய்வு வேலை நடத்தப்பட்டது. ஆய்வு விவரங்கள் பின்வருமாறு :—

| | உட்கொள்ளும் கலோரி அளவு. | இருக்கவேண்டிய இயல்பான அளவு. | உட்கொள்ளும் புரதம் (ப்). | இயல்பான அளவு. | உட்கொள்ளும் வைட்டமின் I.U. | இயல்பான அளவு I.U. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| குழந்தைகள் .. | 712 | 1,200 | 18·2 | 19 | 311 | 2,500 |
| மகப்பேறுக்கு முற்பட்ட தாய்மார்கள். | 1,704 | 2,500 | 65·5 | 55 | 401 | 2,500 |
| மகப்பேறுக்குப் பிற்பட்ட தாய்மார்கள். | 1,854 | 2,900 | 48·3 | 65 | 426 | 3,833 |

புரதம் மிகுந்த நிலக் கடலைப் புண்ணாக்குத் தூள், வறுத்த கடலை, வறுத்த பயறு, வறுத்தக் கொள்ளு, கோதுமை மாவு, சி.எஸ்.எம். பட்டாணி, வெண்ணெய் இவற்றைக் கூட்டாகவோ அல்லது தனித் தனியாகவோ பயன்படுத்தி பல்வேறு மலிவான சத்துணவுத் தயாரிப்புகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. சத்துணவில் பயிற்சி பெறுபவர்களுக்கும் மகளிர் மன்ற உறுப்பினர் களுக்கும் பாலர் பள்ளி ஆசிரியைகளுக்கும் கிராமத்திலும் நகர்ப் புறத்திலும் உள்ள மக்களுக்கும் வலம்வரும் சமையல் ஊர்தி வசதியைப் பயன்படுத்தி சத்துணவு தயாரிப்பு கட்புல விளக்க முறைகள் மூலம் செய்து காட்டப்படுகின்றன.



சமையற்கூட விளக்கமுறை திட்டத்தின்கீழ் 1972 ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலத்தில் 86 கட்புல விளக்க முறைகள் செய்து காட்டப்பட்டன. நிலக்கடலைப் புண்ணாக்குத்தூள், மிட்டாய் தின்பண்டம், ரொட்டி, கேழ்வரகு பகோடா, கோதுமை பலகாரம், நிலக்கடலைப் புண்ணாக்குத் தூளுடன் பொங்கல், வறுத்தக் கடலை, வறுத்தக் கடலைக் கஞ்சி, கேழ்வரகு உருளைக்கிழங்கு பஜ்ஜி ஆகிய மலிவான உணவுத் தயாரிப்புகள் செய்து காட்டப்பட்டு வழங்கப்பட்டன. இவ்வாறாக, உள்ளூர் உணவுத் தயாரிப்புகளைப் பயன்படுத்துவதில் மக்கள் ஊக்குவிக்கப் பட்டனர். ஆக இதன் மூலம் 12,004 பேர் பயனடைந்தனர்.

**துணை உணவூட்டும் திட்டம் :**

துணை உணவூட்டும் திட்டம் இம்மாநிலத்தில் 1950-இல் தொடங் கப்பட்டது. மக்கள் தொகையில் எளிதில் நோய் பிடிக்கும் நிலையில் உள்ளோரில் பெரும் பிரிவினராயுள்ள குழந்தைகள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார் ஆகியோரிடம் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைபாட்டைப் போக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் 'கேர்' ( CARE ) நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந் நிறுவனம், தானியம்-சோயாபீன்-பால்மாவு ( corn-soya-milk ) 'சாலடு எண்ணெய்' போன்ற உணவுப் பண்டங்களைத் தேவைப் படும் அளவு நன்கொடையாக வழங்குகிறது. இவ்வாறு அளிக்கப் பட்ட உணவுப் பண்டங்கள் தற்போது 1972-ம் ஆண்டில், சுமார் 25 லட்சம் கிலோகிராம் உணவுப் பொருட்கள் 'கேர்' நிறுவனத் திடமிருந்து பெறப்பட்டது. இப்பொருட்கள், 114,004 பேர்கள் பயனடையும் பொருட்டு 3,327 உணவு அளிக்கும் நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டது. 3,327 உணவு நிலையங்களில், 378 தொடக்கச் சுகாதார நிலையங்களும், நகராட்சிகளால் நடத்தப்படுகிற 289 தாய்-சேய் நல நிலையங்களும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் நடத்தப் படுகிற 2,525 தாய்-சேய் நல நிலையங்களும், பின்தங்கிய பகுதித் திட்டத்தின்கீழ் நடத்தப்படுகிற 101 மகப்பேறு நிலையங்களும், 25 சமுதாயநல நிலையங்களும், 9 பிறவகை நிலையங்களும் அடங்கும்.

## III தொற்று நோய்களின் தடுப்பும், கட்டுப்பாடும்.

### காலரா.

கடந்த காலத்தில் காலரா தடுக்க முடியாத பேராபத்தான நோய்களில் ஒன்றாக இருந்தது. பைப்ரியோ காலரா என்னும்

நோய்க்கிருமி இந்த நோய் ஏற்படக் காரணமாகும். தொற்று நோய்க் கிருமி கலந்த நீர் அல்லது உணவு அல்லது அவ்விரண்டின் மூலமாக இந்த நோய் பரவுகிறது. வாந்தி அல்லது மலக் கழிவுப் பொருள்கள் மீது உட்காரும் ஈ, கொசு போன்றவை மூலம் நீரிலும், உணவிலும் அவை உட்காரும்போது இக்கிருமிகள் அவற்றில் கலந்துவிடுகின்றன. இந்நோய் கண்டுள்ளவர்கள் தாம் அறியாமலே வெளிப்படையாக எந்த அறிகுறியும் தோன்றும்போதே இந்தத் தொற்று நோயைப் பரவச் செய்கின்றனர். நமது மாநிலத்தில் இந்நோய் எங்கோ ஒவ்வோரிடத்தில் மட்டும் கண்டுள்ளது.

பாதுகாப்பான நீர் வழங்கல், துப்புரவான கழிப்பிடங்கள் முதலியவற்றிற்கு வகை செய்வது போன்ற நீண்டகால நடவடிக்கைகளுக்கு மேலாக, இந்நோயைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன :—

கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதற்காக 64 சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். இம்மாநிலத்தில் எப்பகுதியில் காலரா கண்டுள்ளதாக தகவல் கிடைத்தாலும், போதுமான எண்ணிக்கை உள்ள ஆய்வாளர்கள் அப்பகுதிக்கு அனுப்பப்படுகின்றனர். பெரும்பாலோருக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசி குத்துதல், குளோரின் கலந்த நீர் வழங்கல், மலத்தின் தொற்றுத் தன்மையை நீக்குதல் முதலான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ளூர் பணியாளர்களுக்கு அவர்கள் துணை புரிவர். மேலும், முக்கியமான திருவிழாக்கள் நடைபெறும் இடங்களில் திருவிழா நடைபெறுவதற்கு முன்பும், திருவிழாவின்போதும் குடிநீரில் குளோரின் கலத்தல் போன்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இந்த ஆய்வாளர்கள் அனுப்பப்படுகின்றனர். இது முக்கியமான பணியாகும். ஏனென்றால், திருவிழாக்கள் இத்தொற்றுநோயைப் பரவச் செய்வதற்கு ஏற்ற ஒரு வாயிலாக அமையக்கூடும் என்பதை அனுபவம் காட்டுகின்றது.

தற்போது கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் செயல்படுகின்றன. அவற்றிற்குத் தேவையான சுகாதாரப் பணியாளர்களுக்கும், விரைவு மருத்துவ ஊர்திகளுக்கும், ஜீப் வண்டிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரைவு மருத்துவ ஊர்தி உள்ளது. பூவிருந்தவல்லி, காஞ்சி



புரம், கடலூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், இராமநாதபுரம் கொள்ளைநோய்க் கட்டுப்பாட்டுப் பணியைக் கவனித்துக் கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜீப் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வண்டிகள் காலரா பரவியுள்ள பகுதிகளுக்குச் சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அனைவருக்கும் நோய்த்தடுப்பு ஊசிகள் குத்துதல், குடிநீரில் குளோரின் மருந்தைக் கலத்தல், நோய்க் கண்டுள்ளோரை மிக அண்மையிலுள்ள மருத்துவ நிலையத்திற்கு விரைவு மருத்துவ ஊர்தியில் எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளை அவை மேற்கொள்ளும். இந்நோய் பெருமளவில் பரவியுள்ள நிலைமைக்கிணங்க அப்பகுதிகளுக்கு இந்தப் பிரிவுகள் அனுப்பப்படுகின்றன.

### காலரா கட்டுப்பாடு திட்டம்.

தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் காலரா நோய் பரவியுள்ள இடங்களாகும். இந்நோய் பரவியுள்ள இந்த நான்கு மாவட்டங்களில் 150 வட்டாரங்கள் உள்ளன. நோய் பரவியுள்ள இந்த நான்கு மாவட்டங்களிலுள்ள 75 வட்டாரங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

காலரா கட்டுப்பாடு திட்டத்திற்காக நடமாடும் மருத்துவப் பிரிவு ஒன்றும் உள்ளது. இதில் மக்கள் நல்வாழ்வு அதிகாரி ஒருவர், செவிலியர் இருவர், செவிலி உதவியாளர்கள் இருவர், உடல்நல ஆய்வாளர் ஒருவர், வலவர் ஒருவர் ஆகியோர் பணி புரிகின்றனர். இப்பிரிவில் வண்டி ஒன்றும் உள்ளது.

தலைமையிடத்தில், அதாவது, சென்னையில் காலரா கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு பிரிவு உள்ளது.

மேற்குறிப்பிட்ட நோய் பரவியுள்ள நான்கு மாவட்டங்களிலுள்ள எஞ்சிய 75 வட்டாரங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்த செயற்குறிப்புகளை மக்கள் நல்வாழ்வு (பணிகள்—) குடும்பநலத்துறை இயக்குநர் பணிந்தனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

காலரா கட்டுப்பாடு திட்டத்திற்காகும் முழுச்செலவும் இந்திய அரசினால் ஈடுசெய்யப்படுகிறது.

[1973 மார்ச் 13

1972 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 16,69,731 காலரா நோய்த் தடுப்பு ஊசிகள் குத்தப்பட்டன.

1958 ஆம் ஆண்டில், 6,508 பேருக்கு நோய் கண்டதில், 3,298 பேர் இறந்தனர். ஆனால், 1972 ஆம் ஆண்டில் நோய் கண்டவர்களின் எண்ணிக்கை 3,670 ஆகவும், இறந்தவர்களின் எண்ணிக்கை 205 ஆகவும் குறைந்துள்ளது. அரசு மேற்கொண்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நோய் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிந்தது.

## பெரியம்மை.

பெரியம்மை நோய் நச்சுத் தொற்றுள்ள நோயாகும். இந்நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும் தன்மை வாய்ந்ததாகும்.

இக்கொடிய நோய், உலகத்தின் பல பாகங்களில் ஒழிக்கப்பட்ட போதிலும், இந்தியாவில் இன்னும் நிலவி வருகிறது. உலகத்தில் கண்டுள்ள பெரியம்மை நோயில் 1971 ஆம் ஆண்டில் இந்தியாவில் 31 சதவீதமும், 1972 ஆம் ஆண்டில் 42 சதவீதமும் பரவி இருந்தது.

"பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டம்" 1963-64 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. (அ) மக்கள்தொகையில் இந்நோயால் பீடிக்கப்படக்கூடிய அனைவருக்கும் முறையாக அம்மைப் பால் குத்துவதன் மூலமும், (இ) பெரியம்மை கண்டுள்ள ஒவ்வொருவரையும் கண்டுபிடித்து நோய்ப் பரவாமல் தடுப்பதற்குரிய சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் சமுதாயத்தில் பெரியம்மை நோய் பரவுவதைத் தடுப்பதைக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் பணியாளர்கள் நல்கிய உழைப்பாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும், நம் மாநிலத்தில் பெரியம்மை பெரும்பாலும் ஒழிக்கப்பட்டுள்ளது. நம் மாநிலத்தில் 1964 ஆம் ஆண்டில் 5,545 பேருக்கு பெரியம்மை நோய் கண்டது. ஆனால், 1972 ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் பெரியம்மை நோய் கண்டவர்கள் ஒருவருமில்லை. எனினும், 1972 ஆம் ஆண்டில் வெளிமாநிலத்திலிருந்து வந்த ஒருவருக்கு நோய் கண்டதால் அவர், சென்னை தொற்று நோய் மருத்துவ



1973 மார்ச் 13]

மனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டார். அவரிடமிருந்து நோய் பரவாமல் இருப்பதற்கு சிறந்த தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1969 ஆம் ஆண்டிலிருந்து நம் மாநிலத்தில் பெரியம்மை நோய் கண்டவர் ஒருவரும் இல்லையென்றாலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு வரும் ஒருவருக்கு பெரியம்மை நோய் இருந்தால் அதைத் தடுப்பதில் நாம் எப்பொழுதும் விழிப்பாயிருக்க வேண்டும். இந்தியாவில் 1972 ஆம் ஆண்டில் (ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) 27,500 பேர்களுக்கு இந்நோய் கண்டிருந்தது என்பதை நான் ஈண்டு குறிப்பிட விழைகிறேன். பிற மாநிலத்திலிருந்து அத்தகைய நோய் கண்டுள்ளவர் நமது மாநிலத்திற்கு ஏதேனும் காரியத்தை முன்னிட்டுவர நேர்ந்தால், அவர்கள் நம் மாநிலத்தில் இருக்கும் பட்சத்தில் அந்நோய் பெருகி பரவக்கூடும் என்ற அச்சம் நமக்கு எப்போதும் உள்ளது. அத்தகைய நேர்வுகளைக் கண்டுபிடிப்பது மிக முக்கியமானதாகும். அப்போதுதான் உள்ளூர் மக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க இயலும்.

பெரியம்மை கண்டுள்ளதாக சந்தேகப்பட்டால் அது குறித்து உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகளுக்கு மக்கள் தகவல் தெரிவிக்க ஊக்கப்படுத்தும் பொருட்டு, இந்நாள் வரை பெரியம்மை நோய் கண்டில்லாத இடத்தில் நோய் கண்டிருந்தால் அது குறித்து முதலாவதாக தகவல் தெரிவிக்கும் நபருக்கு ரூ. 10 ரொக்கப் பரிசு கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

"பெரியம்மை ஒழிப்பு தேசிய திட்டம்" குறித்த பணிகளை மேற்கொள்வதற்கு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் 1,410 அம்மை குத்துபவர்களும், 97 மேற்பார்வையாளர்களும், 35 தேர்வுத்தர உடல்நல ஆய்வாளர்களும் உள்ளனர். அம்மை குத்துதல், நோய் பரவாமல் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, கூடுதலாக 199 அம்மை குத்துபவர்கள், 50 மேற்பார்வையாளர்கள், 5 தேர்வுத்தர உடல்நல ஆய்வாளர்கள் ஆகியோரைப் பணிக்கமர்த்த அண்மையில் 1972 டிசம்பர் திங்களில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1971-72 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட செலவு ரூ. 20.82 லட்சமாகும். 1972 ஏப்ரல் திங்களிலிருந்து 1972 டிசம்பர் வரை செய்யப்பட்ட செலவு ரூ. 15.73 லட்சமாகும்.

[1973 மார்ச் 13

இத்திட்டத்திற்காக 1973-74 ஆம் ஆண்டிற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 21.28 லட்சமாகும்.

பிளேக்.

கடந்த காலத்தில் பிளேக் ஒரு மிகப் பெரிய கேடு விளைவிக்கும் பிரச்சினையாக இருந்தது. முன்னரெல்லாம் பிளேக் நோயால் தாக்கப்பட்ட மக்கள் ஏராளமான எண்ணிக்கையில் இறந்துபோவது வழக்கமாகும். பிளேக் முக்கியமாக மலை எலி போன்ற கொறிக்கும் பிராணிகளைத் தாக்குகின்ற ஒரு நோய் என்று குறிப்பிட வேண்டியுள்ளது. இந்நோய் மனிதர்களுக்கு எலிகளிடமிருந்து எலித் தெள்ளுப் பூச்சிகளால் பரவுகிறது. 1930 ஆம் ஆண்டில், நமது மாநிலத்தில் பிளேக் நோயைக் கட்டுப்படுத்த சைனோகாஸ் ( Cynogas ) புகையூட்டி கிருமிகளை ஒழித்து தூய்மைப்படுத்தும் முறை கொண்டுவரப்பட்டது. அதனால் நிலைமை பெரிதும் திருந்தியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிளேக் நோயைப் பரப்புகின்ற தெள்ளுப் பூச்சிகளைக் கொல்லுவதற்கு டி.டி.டி. (D.D.T.) மருந்து பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் தென்னிந்தியாவில் இக்கொள்ளை நோய் அடிக்கடி தோன்றிப் பரவும் இடமாகவுள்ள தருமபுரி மாவட்டம் ஹோசூர் பகுதியில் பிளேக் நோய் அவ்வப்போது தோன்றிப் பரவிக் கொண்டு இருந்தது. 1961-62-ல் தெள்ளுப் பூச்சிகள் டி.டி.டி. மருந்தை எதிர்த்துத் தாக்குபிடிக்கும் வன்மை பெற்றுவருவதாகக் கண்டறியப்பட்டது. எனவே தெள்ளுப் பூச்சிகளைக் கொல்ல பல்வேறு பூச்சி மருந்துகளைக் கொண்டு சோதனை செய்யப்பட்டது. இறுதியில் பீ.எச்.சி. என்னும் பூச்சிக் கொல்லி மருந்து தெரிந்தெடுக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டுக்குப் பிறகு இம்மாநிலத்தில் பிளேக் நோய் அறவேயில்லை.

22—10—71 முதல் 9—1—72 ஆம் நாள் முடிய 931 எலிகள் செத்து விழுந்ததாக செய்திகள் வந்தன. உடனடியாக பிளேக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, மனிதர்கள் யாருக்கும் பிளேக் நோய் காணப்படவில்லை.

பிளேக் நோய் பரவியுள்ள இடங்களாகிய தருமபுரி, நீலகிரி, வடஆர்க்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும், உதகமண்டலம், குன்னூர், வேலூர் ஆகியவற்றிலுள்ள நகராட்சிகளிலும்



1973 மார்ச் 13]

பிளேக் நோய்க்கட்டுப்பாட்டிற்காக வழக்கமாக எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

மலேரியா.

இம்மாநிலத்தில் மாநிலத் தலைமையிடத்தில் மலேரியா கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மலேரியாவையும், கொசுக்களினால் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துவது குறித்து இக்கழகம் கவனிக்கிறது. நன்கு தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் இதில் பணி புரிகின்றனர். தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரண்டு வட்டார மலேரியா அமைப்புகள் உள்ளன. அங்கு ஆய்வுக் கூடங்களும், பயிற்சி, ஆராய்ச்சி, ஆய்வு வசதிகளும் உள்ளன.

1958-59 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம் மாநிலம் 31.45 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

திட்டத்தின் முதல்நிலையில் "நுண்ணிய நோய்க் கிருமிகளின் நெருக்கம்" டி.டி.டி. ( D.D.T. ) மருந்து மும்முரமாக தெளிக்கப்படுவதன் மூலம் குறைக்கப்பட்டது. சமுதாயத்தில் பெருமளவில், நோய் கண்டுள்ளவர்களை, மலேரியா ஒழிப்பு தேசிய திட்டப் பணியாளர்கள் வீடுதோறும் சென்று கண்டுபிடித்தனர். நோய் கண்டுள்ளவர்களுக்கு முழு சிகிச்சை அளிக்கப்பட்டது. அத்தகைய மும்முர நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தற்போது பேணுதல் நிலையில் (Maintenance phase) உள்ள 28.75 பிரிவுகளில் மலேரியா ஒழிக்கப்பட்டது.

3.05 பிரிவுகளில், நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலை ( Consolidation phase ) குறித்த பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படுகிறது. அங்கு, மலேரியா நோய் கண்டுள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் பணி மும்முரமாக மேற்கொள்ளப்படுகிறது. நோய் கண்டுள்ளவர் கண்டுபிடிக்கப்பட்டதும் அவருக்கு முழு அளவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது வரையில், முக்கியமாக சேலம், தருமபுரி மாவட்டங்களிலும், சேலம், ராசிபுரம், தூத்துக்குடி, திருச்சி, வேலூர் ஆகிய நகரங்களிலும், சென்னை மாநகரத்திலும் 1,450 பேருக்கு மலேரியா நோய் கண்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

[1973 மார்ச் 13

நோய்க்கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலையின்கீழ், பொறுப்பேற்று செலவுத் தொகையான ரூ. 4.00 லட்சம் போக யூனிட்டுப் பகுதிகளுக்காகும் மொத்தச் செலவை இந்திய அரசு ஏற்கிறது. தலைமையிடம், மண்டல அளவிலுள்ள மேற்பார்வைப் பணியாளரைப் பொறுத்தமட்டில், இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவில் 25 சதவீதத்தை இந்திய அரசு ஏற்கிறது, 75 சதவீதத்தை மாநில அரசு ஏற்கிறது.

நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலைக்காக, 1972-73 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 30.19 லட்சமாகும், 1373-74 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில செய்த நிதி ஒதுக்கம் ரூ. 30.93 லட்சமாகும்.

மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பேணுதல் நிலையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பகுதிகளில் அடிப்படை சுகாதாரப் பணிகள் 1—4—69-லிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. 353 ஊராட்சி ஒன்றியங்கள் பேணுதல் நிலைப் பகுதிகளில் உள்ளன. அடிப்படை சுகாதாரப் பணிகளுக்கான பணியாளமைப்பு முறை பின்வருமாறு :—

10,000 மக்கட் தொகைக்கு ஓர் அடிப்படை உடல்நலப் பணியாளர்.

ஒவ்வொரு 4 அடிப்படை உடல்நலப் பணியாளர்களுக்கும் ஓர் அடிப்படை உடல்நல ஆய்வாளர்.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் ஓர் ஆய்வுக் கூட உதவியாளர்.

அடிப்படை உடல்நலப் பணியாளர்கள் பலநோக்குப் பணியாளர்களாவர். இவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளது போன்ற பல்வகைப் பணிகளை மேற்கொள்கின்றனர் :—

(a) மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளித்தல் ;

(b) நல்வாழ்வு செய்திகளைப் பரப்புதல் அதாவது காலரா, காசநோய், பெரியம்மை, பிளேக், தொழுநோய் போன்ற தொற்று நோய்கள் பற்றி அறிந்து அதனைத் தெரிவித்தல் ;



1973 மார்ச் 13]

(c) பிறப்புகள் தாய்மை சம்பந்தப்பட்ட நிகழ்வுகள், இறப்புகள், பெரியம்மைத் தடுப்பு ஊசி போடுதல் ;

(d) குடும்ப நலத்திட்டப் பணிகள் பற்றித் தகவல் அளித்தல்.

அடிப்படை சுகாதாரப் பணியாளர்களுக்காக யூனிசெஃப் நிறுவனத்திடமிருந்து இதுவரை 3,000 மருந்துப் பெட்டிகள் வந்துள்ளன. அவை, அடிப்படை சுகாதாரப் பணியாளர்களுக்கு பங்கிட்டு அளிக்கப்பட்டுள்ளன. இப்பெட்டிகள், மலேரியா நோய் கண்காணிப்புப் பணிக்காகவும் பெரியம்மை நோயுள்ளவர்களுக்கு தடுப்பு ஊசி குத்துவதற்காகவும் அடிப்படை சுகாதாரப் பணியாளர்களால் பயன்படுத்தப்படும்.

தென் ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் அடிப்படை உடல் நலப் பணியாளர்கள் முன்னோடித் திட்டமாக பெரியம்மை நோய் தடுப்பு ஊசி குத்தும் பணியை தற்போது மேற்கொண்டுள்ளனர். இத்திட்டம் செயல்புரிவது குறித்து, அத்திட்டம் பிற பகுதிகளுக்கு நீட்டிக்கப்படுவதற்கு முன்னர் விரிவாக ஆய்வு செய்யப்படும்.

" அடிப்படை உடல்நலப் பணி " மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். இப்பணிக்காகும் முழுச் செலவையும் இந்திய அரசு ஏற்கிறது. இப்பணிக்காக 1972-73 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 146.30 லட்சம் ஆகும். இப்பணிக்காக 1973-74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 162.81 லட்சமாகும்.

3,242 அடிப்படை உடல்நல ஊழியர்களும், 496 அடிப்படை உடல்நல ஆய்வாளர்களும் உள்ளனர். அடிப்படை உடல்நல ஊழியர்களின் பணிகளை முறைப்படுத்தும் பணியைக் கவனித்துக் கொள்வதற்காக மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தில் சிறப்புப் பணியாளர்களுக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அடிப்படை உடல்நல ஊழியர்களில் பலர் அடிப்படை உடல்நல ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள். அடிப்படை உடல்நல ஊழியர்கள் என்கின்ற பதவித் தரத்தில் அவர்களுடைய பணிகள் முறைப்படுத்தப்பட்டு அவர்களுடைய தகுதிகாண் காலம் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் அவர்களை அடிப்படை உடல்

நல ஆய்வாளர்கள் என்கின்ற பதவித் தரத்தில் முறைப்படுத்த இயலும். அடிப்படை உடல்நல ஊழியர்களில் பலர் தத்தம் பதவிகளுக்கான தகுதிகள் பெற்றவர் அல்லர். ஆகவே, பொருத்தமான விதிகளை அவர்களுக்கு ஆதாரமாகத் திருத்துமாறு மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் அரசுக்கு செயற் குறிப்புக்களை அனுப்பிக் கொண்டுள்ளார். அதற்கேற்ப, அவர்கள் அடிப்படை உடல்நல ஊழியர்களாக முறைப்படி நியமிக்கப்பட இயலும் வகையில் பொருத்தமான விதிகளை அவர்களுக்கு ஆதரவாக அரசு தளர்த்துகிறது. இதுவரை அரசு தம் பதவிகளுக்கு ஏற்ப தகுதி பெறாதவர், முறைப்படி அடிப்படை உடல்நல ஊழியர்களாக நியமிக்கப்படும் வகையில் 2,259 பேருக்கு விதி தளர்த்தும் சலுகை காட்டியுள்ளது. அவ்வாறு தகுதி பெற்றிராதவர்களின் தகுதிகள் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநரால் முறைப்படுத்தப்படுகிறது. மேற்சொன்ன தகுதி பெற்றிராதவர்களைத் தவிர, தகுதிபெற்றுள்ள 1,202 பேருடைய பணிகளையும் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் முறைப்படுத்தியுள்ளார். இவ்வாறு அடிப்படை உடல்நல ஊழியர்கள் என்ற வகையில் இதுவரை 3,461 பேர்கள் பணி முறைப்படுத்தப்பட்டுள்ளனர். அடிப்படை சுகாதார ஊழியர்கள் என்கின்ற வகையில் எஞ்சியுள்ள 277 பேர்களுடைய பணிகளையும் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் விரைவில் முறைப்படுத்துவார்.

## நகர்ப்புற மலேரியாத் திட்டம்.

1972-73-ல் இம்மாநிலத்திலுள்ள சேலம், இராசிபுரம், தூத்துக்குடி, இளம்பிள்ளை ஆகிய நான்கு நகரங்களை இந்திய அரசு நகர்ப்புற மலேரியாத் திட்டத்தில் சேர்த்துள்ளது. அந்த அரசால் விதிக்கப்பட்ட முறைக்கு ஏற்ப, 1971 எப்ரல் 1 ஆம் நாள் உள்ளவாறு பணியாளர்களுக்காக உள்ளாட்சி மன்றங்களால் செய்யப்பட்ட செலவினை இந்திய அரசு ஒப்புக்கொண்ட செலவாகக் கருதும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட செலவிற்கு மேல் பணியாளருக்காக செலவு செய்யப்பட்டால் (இந்திய அரசால் விதிக்கப்பட்ட முறைக்கு ஏற்ப இருக்க வேண்டும்). அச்செலவு முழுவதையும் இந்திய அரசு திருப்பித்தரும்.





1-4-71-ல் உள்ளவாறு பணியாளருக்காக ஏற்பட்ட செலவுகள் நீங்கலாக, இத்திட்டத்திற்குத் தேவையான பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவு முழுவதும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்திய அரசால் திருப்பித் தரப்படும். சேலம், இராசிபுரம், தூத்துக்குடி ஆகிய மூன்று நகரங்களுக்கு நகர்ப்புற மலேரியாத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இளம்பிள்ளை நகரத்திற்கு இத்திட்டத்திற்காக ஒப்பளிப்பு வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

மேற்சொன்ன நான்கு நகரங்களுக்கு 1972-73 ஆம் ஆண்டிற்கான மத்திய உதவி என்ற வகையில் இந்திய அரசு ரூ. 5.44 லட்சம் ஒதுக்கியுள்ளது. மேற்கூறப்பட்ட தொகை ரூ. 5.44 லட்சத்திற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| நகரம். | செய்முறைச் செலவு. | தொடரா இனச் சாதனங்கள். | தொடரும் இனப் பொருட்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| சேலம் .. | 0·64 | 0·36 | 1·37 | 2·37 |
| இராசிபுரம் .. | 0.28 | 0·02 | 0·17 | 0·47 |
| தூத்துக்குடி .. | 1·04 | 0·35 | 0·69 | 2·08 |
| இளம்பிள்ளை .. | 0·41 | 0·03 | 0·08 | 0·52 |
| மொத்தம் .. | 2·37 | 0·76 | 2·31 | 5·44 |

தற்போது இந்திய அரசு சென்னை மாநகரத்தையும் நகர்ப்புற மலேரியாத் திட்டத்தின்கீழ் சேர்ப்பது என்று முடிவு செய்துள்ளது. சென்னை மாநகரத்திற்கு நகர்ப்புற மலேரியாத் திட்டத்திற்காக ஒப்பளிப்பு அளிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**யானைக்கால் நோய்.**—1957—58-லிருந்து, தேசிய யானைக்கால் ஒழிப்புப் பிரிவுகள் நான்கு, செங்கற்பட்டு, வேலூர், சிதம்பரம், கும்பகோணம் ஆகியவற்றை முறையே தலைமையிடங்களாகக் கொண்டு, செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னார்க்காடு,

[illegible]ஊர் ஆகிய நான்கு மாவட்டங்களில் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பிரிவிலும் மாவட்ட சுகாதார அதிகாரி தரத்தில் யானைக்கால் ஒழிப்பு அதிகாரி ஒருவர், கிருமியியல் உதவியாளர் ஒருவர், உடல் நல ஆய்வாளர்கள் 6 பேர், ஆராய்ச்சிக் கூட உதவியாளர்களிலிருந்து களப்பணி உதவியாளர்கள் 6 பேர், மஸ்தூர்கள் 60 பேர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவும் [illegible] பொறியியல் சாதனங்களின் துணையோடு, கொசு முட்டைப்புழு ஒழிப்பு [illegible]ணையைத் தெளிப்பதால் முட்டைப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இதனால் யானைக்கால் [illegible] ஆபத்திலிருந்தும் தடுக்கப்பட்டு 3.75 லட்சம் பேர் பய[illegible]கள். இந்நான்கு பிரிவுகளுக்கும் கொசு, [illegible] ஒழிப்பு எண்ணெயை மத்திய உதவியாக இந்திய [illegible]கிறது. அவற்றிற்கான செய்முறைச் செலவு மாநில [illegible]ந்து சரிக்கட்டப்படுகிறது.

இத்திட்டத்தினால் ஒருமொத்தமாக 15 லட்சம் பேர் பலனடைகிறார்கள்.

**சீரமைக்கப்பட்ட தேசிய யானைக்கால் ஒழிப்புத் திட்டம்.**—மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டம், முழுக்க முழுக்க மத்திய உதவி பெறும் திட்டமாகும். மேற் கூறப்பட்ட நான்கு பிரிவுகள் ஒவ்வொன்றிலும், ஒரு கூடுதல் உடல்நல ஆய்வாளர், ஒரு கூடுதல் களப்பணி உதவியாளர், 15 கூடுதல் தலைமை மஸ்தூர்கள், 15 கூடுதல் மஸ்தூர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். சீரமைக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, சென்னை மாநகர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக 8 புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலுள்ள பிரிவு நீங்கலாக புதுப் பிரிவுகள் அனைத்தும் மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத் துறையின் பொறுப்பின்கீழ் இருக்கும். சென்னை மாநகரிலுள்ள பிரிவு பெரும்பிரிவு ஆனதால் அது சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் இருக்கும். இந்த எட்டு புதிய பிரிவுகளால் 30 லட்சம் பேர் பயன் பெறுவர்.

சீரமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் நகர்ப்புறப் பகுதிகளில் 'வெக்டார்' கொசு பெருகுவதை குறைப்பதற்காக முட்டைப் புழு



ஒழிப்புப் பணி தீவிரப்படுத்தப்படுகிறது. ஆதாரப் [illegible] விவரங்களைப் பெறுவதற்காக யானைக்கால் நோய் குறித்த [illegible] ஆய்வுகள் நடத்தப்படும்.

அனைத்தும் சேர்ந்து மொத்தமாக தற்போது இம்மாநிலத்தில் 12 பிரிவுகள் செயல்படுகின்றன. இவற்றால் நன்மை பெறும் மக்கட்தொகை 45 லட்சமாக இருக்குமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இப்பிரிவுகளின் மொத்தப் பொறுப்பு, மேற்பார்வை, இப்பிரிவுகளுக்கு கட்டளைகள் இடுதல் ஆகியவற்றிற்காக 18—2—1972-லிருந்து உதவி இயக்குநர் பொறுப்பில் தலைமையிடப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. [illegible] முதலியவற்றைக் குறுக்காய்வு செய்வதற்காக அவருக்கு இரண்டு தொழில் [illegible] உதவியாளர்கள் உதவி செய்கின்றனர்.

தற்போதுள்ள நான்கு பிரிவுகள் கூடுதல் பணியாளர்களின் முழுச் செலவு, புதிய எட்டு பிரிவுகளின் முழுச் செலவு, தலைமையிடப் பிரிவின் முழுச் செலவு ஆகியவை இந்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படும்.

1973–74 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இப்பிரிவுகளுக்காக எண்ணெய் பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றுக்கான செலவுகள், சில்லறைச் செலவுகளுக்கான ரூ. 7.50 லட்சம் உட்பட ரூ. 29.37 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**உதவி மானியத் திட்டம்.**—யானைக்கால் கண்டுள்ள சில பகுதிகளில், அரசால் [illegible] யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை [illegible]லுள்ள சில நகராட்சி மன்றங்கள் தம்முடைய ஆட்சி எல்லைக்குள் முட்டைப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. போர் [illegible] பரிந்துரைகளின் குழுவின் [illegible] (Bhore Comm[illegible]) அடிப்படையில், [illegible] ஒரு பகுதி உள்ளாட்சி [illegible] உதவி மானியத் திட்டம் அரசால் ஏற்கப்பட்டுள்ளது. 167 உள்ளாட்சி மன்றங்கள் இம்மாநிலத்தில் யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை [illegible] வருகின்றன. அத்தகைய திட்டங்களுக்கு உதவி மானியங் களுக்கென ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 1

இந்த உதவி மானியத் திட்டங்கள், வட்டார மலேரியா நோயில் வல்லுநர் இருவரால் ஆய்வு செய்யப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் எய்தியுள்ள முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக குறைந்தது ஆண்டிற்கு இரு முறையாவது இவர்கள் ஆய்வு நடத்துவர்.

## சரும நோய் (Yaws)

'யாஸ்' என்னும் நோய், மேக நோயைப் பரப்புகின்ற ட்ரபானிமா பாலிடா (Trepanema Pallida) என்னும் கிருமிகளைப் போன்ற "ட்ரபானிமா பெர்ட்டினுயி" (Trepanema Pertenui) என்னும் ஒரு வகைக் கிருமியினால் ஏற்படுகிறது. மேக நோயைப் போல் அல்லாமல், இச்சரும நோய் உடலுறவு அல்லாத பிற வகையில் பரவுகிறது. யாஸ் நோயின் தமிழ்ப் பெயர்கள் "பீகலிமாரியாயி, காட்டு மாரியாத்தா" ஆகும். சரும நோய் மலைவாழ் மக்களிடையே [illegible] அன்றி சமவெளிகளில் தங்கள் உடல்நலனை நன்கு கவனித்துக் கொள்ளாத மக்களிடையேயும் காணப்படுகிறது. இந்த நோயை பென்சிலின் மூலம் குணப்படுத்தலாம். சாதாரணமாக ஓர் முறை ஊசி குத்திக் கொண்டாலே போதுமானது. நோயாளரோடு ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் பரவும் நோய்களுக்கும் பென்சிலின் மருந்து மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதைத் தவிர மக்களிடையே நல்வாழ்வுக் கல்வியும் பரப்பப் படுகிறது. நோயாளிகளுக்கு சோப்பும் அளிக்கப்படுகிறது. மருத்துவப் பணியாளர் பிற வகையான சிறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்றனர்.

தற்போது தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் சரும நோய் ஒழிப்புத் திட்டம் செயல்படுகிறது. பெரியகுளம், பழனி, அரூர் [illegible] என்ற பிரிவுகளில் உடல்நல ஆய்வாளர்கள் மூவர் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் திண்டுக்கல்லிலுள்ள சிறப்பு சுகாதார அதிகாரி ஒருவரின் கட்டளைப்படி நடப்பர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஜீப் வண்டி ஒன்று கொடுக்கப்படுகிறது. 1972 ஆம் ஆண்டில் 617 கிராமங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நோயுற்றோர் 251 பேர் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களில் 122 பேர் களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.



1973 மார்ச் 13]

ஆய்வு, நோயுற்றோரைக் கண்டுபிடித்தல், நோயுற்றோர்க்கு சிகிச்சை அளித்தல் ஆகியவை 1973–74 ஆம் ஆண்டிற்கான இலக்காகும்.

**நரம்புச் சிலந்தி நோய்.**—இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ள மனிதனின் அடிப்புறத் தசையில் வாழ்கின்ற நரம்புச் சிலந்தியினால் இந்நோய் பரவுகிறது. அவர் தண்ணீரில் இறங்கும் போது, அவருடைய தோலில் உள்ள சீழ் புண்ணிலிருந்து நரம்புச் சிலந்தி இறங்கி தண்ணீரில் புழுக்களை விட்டுவிடுகின்றது. இந்த புழுக்களை 'சைக்லாப்ஸ்' என்னும் ஒரு நீர்க்கிருமி விழுங்கி விடுகிறது. மனிதர்கள் நீரை அருந்தும்போது இந்த சைக்லாப்ஸ்கள் மனிதனின் உடலில் சென்று விடுகின்றன. இவ்வாறாக, இந்த நோய் பரவுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்காக, இதனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து, 4 சதவிகிதம் கார்பாலிக் திராவகத்தில் தோய்த்த பஞ்சால் நோயினால் பாதிக்கப்பட்ட உடல் பகுதியைச் சுத்தம் செய்து துணியால் கட்டப்படுகின்றன. ஒரு மில்லியன் பாகம் நீரில் 5 பாகம் [illegible] 50 [illegible] நீர்நிலைகளில் தெளிக்கப்படுகிறது. இவ்வாறு 6 வாரத்திற்கு ஒரு முறை தெளிக்கப்படுகிறது. இதைத்தவிர, இந்த நோய் பரவுகின்ற விதம் பற்றி உடல்நலக் கல்வி அளிக்கப்படுகிறது. இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்ட நீர்நிலைகளிலிருந்து அல்லது வடிகட்டப்பட்டு, கொதிக்க வைக்கப்பட்ட நீரை அருந்தும்படி அவர்களுக்கு அறிவுரை கூறப்படுகிறது. கடந்த காலத்தில் கன்னியாகுமரி, நீலகிரி நீங்கலாகத் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இந்த நோய் பரவி இருந்தது. [illegible] மேற்கொள்ளப்பட்ட பொதுச் சுகாதார நடவடிக்கையின் விளைவாக உள்ளிடைக் கொடிய நோய் பரவும் தன்மை குறைக்கப்பட்டுள்ளது. அண்மையில் தென்னார்க்காடு மாவட்டம் கடலூர், விருதாச்சலம் வட்டங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டான், செந்துறை, அரியலூர் வட்டங்கள், கரூர், திருச்சிராப்பள்ளி வட்டங்களின் ஒரு பகுதியிலும் இந்நோய் பரவியுள்ளது. எனினும், இத்திட்டம் கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய இம்மாவட்டங்களைத் தவிர மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்படுகிறது. இவ்விரு மாவட்டங்களிலிருந்தும் அங்கு நோய் பரவியுள்ளதாகத் தகவல் ஏதும் வரவில்லையாதலால், இத்

திட்டத்திற்கு அங்கு அவசியம் இல்லை. இத்திட்டத்திற்காகப் போதிய பணியாளர்களுக்கு வகை செய்யப்படுகின்றது. செலவு நிதி வழங்கப்படுகின்றன.

1972 ஆம் ஆண்டில் 5,388 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 182 பேர் நோயுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 200 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

1973-74 ஆம் ஆண்டிற்கான இலக்கு, நரம்புச் சிலந்தி நோய் ஆய்வு, நரம்புச் சிலந்தி நோய் பரவியிருக்கும் பகுதியிலுள்ள குடிநீர் வாயில்களில் உள்ள நீரை இரசாயன முறையில் சுத்தம் செய்தல், நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்தல் முதலியனவையாகும்.

கருங்காய்ச்சல் ( Kala-Azar ).—'கருங்காய்ச்சல்', 'லேஸ்மான் டொனொவான்' (Leishman Donovan) என்னும் கிருமியினால் ஏற்படுகிறது. இது மணல் ஈக்களினால் பரப்பப்படுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு முறையற்ற கருங்காய்ச்சல் ஏற்படும். இது முற்றினால் இரத்தச் சோகை ஏற்படும். இதைக் கவனிக்காது விட்டால் மரணம் ஏற்படும். தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றும்போது, எல்லா வீடுகளிலும் D.D.T. மருந்து தெளிக்கப்பட்டமையால், மணல் ஈக்களும் ஒழிக்கப்பட்டு, இந்நோய் பல ஆண்டுகளாக ஏற்படவே இல்லை. மலேரியா ஒழிக்கப்பட்ட நிலையில், D.D.T. மருந்து தெளிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. மணல் ஈக்கள் மீண்டும் வரத் தொடங்கின.

இத்திட்டமானது, இராமநாதபுரத்திலுள்ள ஒரு பிரிவோடு 1969 முதல் இயங்கி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த நோய் முன்னதாக பரவியிருக்கக்கூடிய பகுதிகளில் நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிவதும், மணல் ஈ (Sand flies) என்ற ஈக்களைப் பற்றிய விவரம் சேகரித்து, அந்நோய்க் கிருமிகள் எந்த அளவிற்குப் பரவியுள்ளன என்பதைக் குறித்துத் தீர்மானிப்பதும் இதன் முக்கிய பணிகளாகும். இந்நோய் கண்டுள்ள நோயாளிகள், சிகிச்சை அளிக்கப்படுவதற்காக, அண்மையிலுள்ள அரசு மருத்துவமனைகள், தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். 1972-ஆம் ஆண்டில் 172 கிராமங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. நோயுற்றவர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டு, அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.



IV. பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.—சிறப்பாக பிறப்பு-இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள், ஆகியவை பிறப்புகள், இறப்புகள், குழந்தைகளின் இறப்பு நிகழ்வுகளாகும். சமுதாய சுகாதாரத்தைக் காட்டும் அடிப்படை கோலாக சமுதாய சுகாதாரத்தின் அளவினைக் காட்டும் அளவு பிறப்பு-அவை அமைகின்றன. சமுதாயத்தில் நிகழ்கின்ற உடல்நலப் இறப்பு பற்றிய புள்ளிவிவரங்களைப் பற்றிய அறிவு, பாதுகாப்புப் பணியாளர்களின் தேவைகளையும், தடுப்பு, தேவையையும் பணிகளைப் புரிவதற்கான சாதனங்களின் சமுதாய மதிப்பிடுவதற்கு அவசியம் என்பதோடு மட்டுமல்லாமல், முன்னேற்றத்தைக நலவாழ்வில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மதிப்பிடு கணிப்பதற்கும், பணித்திட்டங்களின் விளைவுகளை நிகழும் வதற்கும், அவை தேவையாகும். சமூகத்தில் சரி பிறப்புகள்-இறப்புகள் அனைவற்றையும் முழுமையாகவும், ஒரு வாவும் பதிவு செய்தால்தான், ஆண்டுக்காண்டு குறிப்பிட்ட குறித்தும், பகுதியில் நிகழும் பிறப்பு-இறப்பு விகிதங்களைக் ஒன்றை அவற்றின் போக்கைக் குறித்தும் தொடர்ந்து ஆய்வு இம்மாநிலத்தின் நடத்துவது சாத்தியமாகும். ஆனால், பல்வேறு பகுதியில் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் மூலம், முழுமை பிறப்புகள்-இறப்புகள் குறித்தப் பதிவு சரியாகவும், இம்மாநிலத்தில் யாகவும் இல்லை என்று தெரிய வந்துள்ளது. பணியை பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் மேற்கொண்டு மேம்படுத்த எல்லா நடவடிக்கைகளும் வருகின்றன.

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி, தமிழ் நாட்டின் மக்கள் தொகை 4,11,03,125 ஆகும். 1973-ல் அது 4,28,19,000 ஆக உயர்ந்திருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 1971 ஆம் ஆண்டின் இடையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 25.3 ஆகவும், இறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 8.7 ஆகவும் இருந்தது. குழந்தை இறப்பு வீதம் 1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 54.9 ஆக இருந்தது.

முந்திய ஆண்டுகளின் பதிவாகிய வீதங்களோடு ஒப்பிடும் போது 1971-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு வீதம் குறைவாகும். பிறந்த ஆண், பெண் குழந்தைகள் விகிதம் 1971-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 107 : 100 ஆக இருந்தது.

பிறப்பு-இறப்பு வீதங்களைப் பதிவு செய்தலை மேம்படுத்துவதற்கானப் பல திட்டங்கள் முன்னேற்றத்துடன் செயல்படுகின்றன.

V. உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தலைத் தடை செய்தல்.—இம்மாநிலத்தில் நீண்ட காலமாகவே உணவுப் பொருள் கலப்படத் தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கீழே குறிப்பிட்டுள்ளவாறு 1,088 உள்ளாட்சி மன்றங்களுக்கு மாறாக, உணவுப்பொருள் கலப்படத் தடைச் சட்டம் தற்போது, 306 உள்ளாட்சி மன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது :—

| | இம்மாநிலத்தில் தற்போதுள்ள உள்ளாட்சி மன்றங்கள். | சட்டத்தைச் செயல்படுத்தும் உள்ளாட்சி மன்றங்கள். |
|---|---|---|
| மாநகராட்சிகள் | 2 | 2 |
| நகராட்சிகள் | 91 | 89 |
| பேரூராட்சிகள் | 598 | 171 |
| நகரியக்குழுக்கள் | 19 | 10 |
| பாளைய வாரியங்கள் | 2 | 2 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 374 | 3 |
| ஏனையவை | 2 | 29 |
| | 1,088 | 306 |

உள்ளாட்சி மன்றம் ஒவ்வொன்றும், உணவுப்பொருள் கலப்படத் தடைச் சட்டத்தைச் செயல்படுத்த ஒப்புக் கொள்ளும் மன்றத்தின் தீர்மானத்துடன் தன் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, செயற் குறிப்புகளை, கிண்டி, கிங் நிறுவனம், அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். கிண்டி, கிங் நிறுவனம், அரசு பகுப்பாய்வாளர் அந்தச் செயற்குறிப்புகளை ஆய்வு செய்து பின்னர், அவை குறித்து மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநருக்குப் பரிந்துரை செய்கிறார். பின்னர், இவர் அச்செயற் குறிப்புகள் பற்றி அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். உள்ளாட்சி மன்றங்கள் பகுப்பாய்வு செய்வதற்காக அனுப்ப வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கையையும், உள்ளாட்சி மன்றங்கள் ஆண்டு தோறும் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையையும் அரசு முடிவு



செய்கிறது. உணவுப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு தற்போதுள்ள ஆய்வுக்கூட வசதிகள் போதுமானதாக இல்லை. இச்சட்டம், இம்மாநிலத்தில் இரு மாநகராட்சிகளிலும், அநேகமாக ஏனைய நகராட்சிகள் அனைத்திலும் செயலில் இருக்கும்போது, பல பேரூராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. பல பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் உணவுப்பொருள் மாதிரிகளை, கிண்டி, அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்ப அனுமதி கேட்டுள்ளன. ஆனால், ஆய்வுக்கூட வசதிகள் இல்லாததன் காரணமாக இவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

கிண்டி, கிங் நிறுவனத்தில் உள்ள உணவுப்பொருள் பகுப்பாய்வுத்துறையுடன் இணைக்கப்பட்ட ஆய்வுக்கூடம், சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் ஆகியவற்றின் உதவியோடு உணவுப் பொருள்கள் தற்போது பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கோயம்புத்தூர், தலைமைப் பொது உடல்நல ஆய்வுக்கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆய்வுக்கூடம் குறிப்பிட்ட அளவுக்கே செயல்பட்டு வருகிறது.

உணவுப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வுக்கூட வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உணவுப்பொருள் பகுப்பாய்வு மாவட்ட ஆய்வுக்கூடங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில், உணவுப் பொருள் சோதனையிடும் ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக மதுரை நகராட்சி, மதுரையில் தனக்குச் சொந்தமாகவுள்ள ஓர் இடத்தை ஒப்படைப்பதாக உறுதியளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட இடத்தில் மிகவும் சிரமமின்றி போதுமான அளவு தண்ணீர் கிடைக்குமா அல்லது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பது பற்றி அறிக்கை ஒன்று, மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநரிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்த பின்னர், மதுரையில் உணவுப்பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்படும். தஞ்சாவூரில் பார்ஸ்டல் பள்ளிக்குச் சொந்தமான ஓரிடத்தில் உணவுப்பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்ட வருவாய்த் துறை வாரியம் கருத்துத் தெரிவித்துள்ளது. மாவட்ட வருவாய் அதிகாரி, ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆய்வாளர் ஆகியோருடன்

சென்று தஞ்சாவூரிலுள்ள அந்த இடத்தைப் பார்வையிட்டு, ஆய்வுக்கூடம் கட்டத் தேவையான நிலத்தையும் எல்லை வரையறுக்குமாறும் தஞ்சாவூர் மாவட்ட உடல்நல அதிகாரிக்கு மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் கட்டளையிட்டுள்ளார். இந்நிலையில் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநராலும் மேலும் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூரில் குறிப்பிட்ட அந்த இடத்தில் போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்குமா அல்லது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பது குறித்தும் அறிக்கை தருமாறு மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அவரிடமிருந்து அறிக்கைகள் வந்த பின்னர், தஞ்சாவூரில் உணவுப் பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றை அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்படும்.

1972-ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ்ப் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 19,397 ஆகும். இவற்றில், 4,984 மாதிரிகள் கலப்படமெனக் கண்டறியப்பட்டது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்த குற்றத்திற்காக 3,939 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவர்களில், 3,092 பேர் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். 48 பேருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களுக்கு அபராதம் விதித்ததன் வாயிலாகக் கிடைத்த தொகை ரூ. 4,74,707 ஆகும்.

## VI பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வு.

பள்ளிக்குழந்தைகளை மருத்துவச் சோதனை செய்யும் திட்டம் ஒன்று 18 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்படி தெரிந்தெடுக்கப்பட்ட இந்தத் தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஆண்டுதோறும் 6-11 வயதுத் தொகுதியிலுள்ள பள்ளிக் குழந்தைகள் 2,000 பேரைச் சோதனை செய்கின்றனர். நோயுற்றிருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த மருத்துவ அதிகாரிகள் மருந்துகளையும், தேவையான சத்து உணவையும் வழங்குகின்றனர். சிறப்பாகச் சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகிற குழந்தைகள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் இத்திட்டத்தைச்



செயற்படுத்த இரு மருத்துவப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு பிரிவுகளிலும் இரு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 10,000 குழந்தைகளைச் சோதனை செய்கின்றனர். பிற்காப்பு நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்கின்றனர்.

### உடல்நலக் கல்விக் கழகம்.

மாநில உடல்நலக் கல்விக் கழகம் 1960-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இக்கழகம் ஒரே சீராக வளர்ந்து வந்துள்ளது. இந்திய அரசு பரிந்துரை செய்த ஐந்து பிரிவுகளைத் தற்போது இக்கழகம் கொண்டுள்ளது. இந்த நாட்டில் உள்ள மாநிலங்களில் உடல்நலக் கல்வி வளர்ச்சியில் இது I-ம் வகையாக இடம் பெற்றுள்ளது. மாநில உடல்நலக் கல்விக் கழகம் கீழ்க்காணும் பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது :—

**பணியிருப்புப் பயிற்சித் திட்டம்.**—13 மாவட்டங்களிலும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த 114 மருத்துவ அதிகாரிகள், 135 சுகாதார ஆய்வாளர்கள், 128 சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகியோர் 27 தொகுதிகளாக இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர். மாவட்ட நல்வாழ்வு அதிகாரிகள் 22 பேர், மாவட்ட நல்வாழ்வு உதவி அதிகாரிகள் 6 பேர், ஆராய்ச்சி-செயல் திட்டங்களைச் சேர்ந்த பொது உடல்நல உதவிப் பொறியாளர் 3 பேர் ஆகியோர் இப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

1972-73-ஆம் ஆண்டில், 2 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த 10 மருத்துவ அதிகாரிகள், 10 சுகாதார ஆய்வாளர்கள், 10 உடல்நலப் பார்வையாளர்கள் மாவட்ட உடல்நல உதவி அதிகாரி ஒருவர் 31—12—1972 வரை இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். நடப்பு நிதியாண்டில் மேலும் ஒரு தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**மாநிலப் பொது நல்வாழ்வு அச்சகம்.**—இது 1971 நவம்பர் முதல் செயல்பட்டு வருகிறது. பல்வேறு நல்வாழ்வு கூறுகள் பற்றி சுவரொட்டிகளையும், துண்டு வெளியீடுகளையும் இது வெளியிட்டுள்ளது. அச்சிடப்பட்ட வெளியீடுகளும், சுவரொட்டிகளும்

இம்மாநிலத்திலுள்ள பல்வேறு தொடக்க நல்வாழ்வு நிலையங்களிலும் மருத்துவ மனைகளிலும் வைப்பதற்காக அனுப்பப்பட்டன.

பொருட்காட்சி இயல் ஊர்திப் பிரிவு.—இம்மாநிலத்தில் சேலத்தில் நடந்த அனைத்து இந்திய கதர்-தொழில் சுதேசி பொருட்காட்சி, கோடைக்கானலில் நடந்த படகுப் போட்டி, பெரிய பாளையத்தில் நடந்த ஸ்ரீ பவானியம்மன் தேர்த் திருவிழா போன்ற பல பெரிய, சிறிய பொருட்காட்சிகளில் இப்பிரிவு பங்கு கொண்டது.

15—8—1972-ல் நடந்த விடுதலை நாள் ஊர்வலத்தில், கண் நோய்ச் சிகிச்சை முகாம் பற்றி விளக்கும் அலங்கார வண்டி ஒன்றுடன் இது பங்கெடுத்துக் கொண்டது. இந்த அலங்கார வண்டி பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

பொம்மலாட்டக் காட்சிப் பிரிவு.—சந்தைகள், திருவிழாக்களின் போது, குடும்பநலத்திட்டம், ஊட்டச்சத்து பற்றி பொது மக்களுக்குக் கற்பிக்க பொம்மலாட்டக் காட்சிகள் நடத்தப்பட்டன. 1972-ஆம் ஆண்டில் 80 பொம்மலாட்டக் காட்சிகள் நடத்தப்பட்டன. குடும்பநலத் திட்டம், ஊட்டச்சத்து, காலரா நோய்த் தடுப்பு ஆகியவை குறித்த புதிய கட்டுரைகளும் பொம்மலாட்டக்காரரால் தயாரிக்கப்பட்டன.

திரைப்படப் பிரிவு.—இவ்வாண்டில், உடல்நலக் கல்வி பற்றிய பல்வேறு திரைப்படங்கள் இம்மாநிலத்தில் மொத்தம் 146 இடங்களில் திரையிடப்பட்டன. பல்வேறு உடல்நலக் கூறுகள் குறித்து மொத்தம் 452 திரைப்படங்கள், இம்மாநிலத்தில் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகியவற்றுக்கும், மாவட்ட நல்வாழ்வு அதிகாரிகளுக்கும், நகராட்சி நல்வாழ்வு அதிகாரிகளுக்கும் கடனாகக் கொடுக்கப்பட்டன. 4 புதிய திரைப்படங்கள் வாங்கப்பட்டு பிரச்சாரப் பிரிவிலுள்ள திரைப்பட நூலகத்திற்கு வழங்கப்பட்டன.

ஆய்வுப் பிரிவு.—இப்பிரிவு இதுவரை ஏறக்குறைய 10 ஆய்வுகளை நடத்தியுள்ளது. தமிழ் நாட்டில் முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டம்பற்றி அண்மையில் இப்பிரிவு ஆய்வு நடத்தியுள்ளது. இந்த ஆய்வுக்காக, 394 தாய்மார்கள், 11 மருத்துவ அதிகாரிகள், 8 உடல்



நலப் பார்வையாளர்கள் ஆகியோரைப் பேட்டி காணப்பட்டது. மொத்தத்தில் 394 தாய்மார்களுக்கு 0-5 வயதுத் தொகுதியில் மொத்தம் 597 குழந்தைகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. 394 தாய்மார்களைப் பேட்டி கண்டதில், 164 தாய்மார்கள் (41.6 சதவீதம்) மட்டுமே முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டத்தைப்பற்றி அறிந்திருந்தனர். ஒரு மாதத்திற்கு ஒருதடவை ஊசி போடுவது என்பது பற்றி 79 தாய்மார்கள் (20.1 சதவீதம்) மட்டுமே அறிந்திருந்தனர்.

இத்திட்டத்தை வலுப்படுத்த கீழ்க்காணும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன :—

இத்திட்டத்திற்கு முக்கியமானவராக இருக்கும் உடல்நலப் பார்வையாளர் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒழுங்கான முறை ஒன்றைப் பின்பற்ற வேண்டும்.

முத்தடுப்பு ஊசிகுத்தும் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவது பற்றி வழிகாட்டி நூல் ஒன்று தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அனைத்திற்கும் வழங்கப்படலாம்.

உடல்நலக் கல்வியில் பணியிருப்புப் பயிற்சி நடந்து வருவது பற்றியும் இப்பிரிவு மதிப்பிட்டு வருகிறது. 27 தொகுதியினர் பயிற்சி பெற்றுள்ளது பற்றி இதுவரை மதிப்பிடப்பட்டுள்ளது.

உடல்நலக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.—பயிற்சிப் பள்ளி, பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சுகாதாரக் கல்வியால் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவர்கள் அவரவருடைய நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆசிரியர் அனைவருக்கும் பயிற்சியளிக்க முடியும்.

பயிற்சிக் கால அளவு 45 நாட்களாகும். இதில் நேரிடப் பயிற்சியும் ஒன்றாகும். நேரடியாகச் செயல்முறைப் பயிற்சி பெறும் பகுதி ஒன்று போளூரில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்கள், போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் உயர்தொடக்கப் பள்ளியில் உள்ள மாணவர்களின் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி அறிந்துகொள்கின்றனர். தாங்கள் பெறும் பயிற்சியில் ஒரு பகுதியாக, நேரிடப்பகுதியில் உடல்நலன் பற்றிக் கற்பிக்க அவர்கள் பயிற்சிபெறுகின்றனர்.

பள்ளிக்குழந்தைகளுக்கு 'மாண்டெக் சோதனை' (Montoux Test) செய்ததோடு B. C. G. ஊசியும் போடப்பட்டுள்ளது. நோயுற்றதாக அறிகுறிகள் காணப்படும் குழந்தைகளுக்கு நன்கு மருத்துவச் சோதனை செய்யப்பட்டது. பள்ளிக்குழந்தைகளிடையே காசநோய் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் சிகிச்சைக்காகத் தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். சிகிச்சைக்குப் பின்னர் அவர்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குழந்தைகளில் 48 சதவீதத்தினருக்கு வைட்டமின் 'A' சத்துக்குறைவின் அறிகுறிகள் காணப்பட்டன. வைட்டமின் 'A' சத்து செறிந்துள்ள சொட்டு மருந்துகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. சுமார் 30 சதவீதம் குழந்தைகளுக்கு இரத்த சோகை கண்டிருந்தது. அவர்களுக்கு இரும்புச்சத்துள்ள மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிபோடப்பட்டுள்ளது. ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு டெடானஸ் டாக்ஸைட் மருந்து வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 102 மாணவர்கள் ஆறு தொகுதிகளாகப் பயிற்சி பெற்றுள்ளனர். ஏழாவது தொகுதியினர் 12—2—1973 அன்று பயிற்சியைத் தொடங்கியுள்ளனர்.

இப்பயிற்சிக் கால அளவை 45 நாட்களிலிருந்து 30 நாட்களாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஓர் ஆண்டில் பயிற்சி பெறும் தொகுதிகளின் எண்ணிக்கை ஆறாக உயரும். இதன்மூலம் ஓராண்டில் பயிற்சிபெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 150 ஆக உயரும்.

பள்ளிகளில் நல்வாழ்வு குடும்பநலத் திட்டக்கல்வி கற்பிப்பது குறித்து மாநில அளவிலான பணிக்களறி ஒன்று, உலக நல்வாழ்வு நிறுவனம், புதுடில்லி உடல்நலக் கல்வி மத்தியக்கழகம் ஆகியவற்றின் உதவியோடு சென்னை, எழும்பூர் ஆவணக் காப்பக இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் 18—12—1972 முதல் 23—12—1972 வரை நடத்தப்பட்டது. கல்வி அமைச்சர் இந்தப் பணிக்களறியைத் தொடங்கி வைத்தார். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இதற்குத் தலைமை வகித்தார். சுகாதாரத் துறையிலிருந்தும், கல்வித் துறையிலிருந்தும் 32 பேர்



இப்பணிக்களறியில் பங்கெடுத்துக் கொண்டனர். இம்மாநிலத்தில் நல்வாழ்வுத் தொண்டு நிறுவனங்கள் போன்ற தொண்டு நிறுவனங்களிலிருந்தும், பாடப் புத்தகச் சங்கம், பெற்றோர்—ஆசிரியர் சங்கம் ஆகியவற்றிலிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்தும் அதிகாரிகள் மேற்சொன்ன பணிக்களறியில் பங்கெடுத்துக் கொண்டனர். அரிசன நலத் துறை அமைச்சர் முடிவுரையாற்றினார்.

மாணவர் நல்வாழ்வுக் கல்விப் பயிற்சிப் பிரிவு.—பள்ளிகள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் தற்போதுள்ள பாடத்திட்டத்தைப் பகுத்தாய்ந்து, மாணவர்களுக்குச் சுகாதாரம் பற்றிக் கற்பிப்பதைப் பாடத் திட்டத்தில் புகுத்துவதற்காக இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

1-ம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான பாடத்திட்டம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. 1-ம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிற்கும், ஒவ்வொரு பாடத்திட்டத்திலும் சுகாதாரம்பற்றிப் போதனை அளிப்பதற்கு வகை செய்யும் ஆசிரியர் வழிகாட்டி நூல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி நூல், பயனுக்காகக் கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பள்ளி நல்வாழ்வு குறித்து கீழ்க்கண்டவை தயாரிக்கப்பட்டுள்ளன :—

(1) 4, 5-வது வகுப்புகளின் பயனுக்காக "சுத்தம் சுகம் தரும்" என்ற துண்டு வெளியீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது மேடவாக்கம் பள்ளியில் பயன்படுத்தப்பட்டு பயனுள்ளதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

(2) ஆசிரியர்களுக்காகச் சுகாதாரம், குடும்பநலத் திட்டக் கல்வி குறித்து "மக்கள் தொகையியல் கல்வி" என்னும் வழிகாட்டி சிறுநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொது நல்வாழ்வு நிறுவனம், பூவிருந்தவல்லி.—இந்த நிறுவனம் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளைக் கொண்டது :—

(1) நல்வாழ்வுப் பிரிவு—பணிப் பிரிவு.

(2) மறுபயிற்சி நிலையம்—பயிற்சிப் பிரிவு.

(3) ஆராய்ச்சி-செயல் திட்டம்—செயல்பிரிவு பின்பற்றும் ஆராய்ச்சி.

இந்த நல்வாழ்வுப் பிரிவு, ராக்பெல்லர் நிறுவனத்தின் உதவியுடன் 1935-ல் தொடங்கப்பட்டது. பின்னர், மேற்சொன்ன நிறுவனத்தின் உதவி முடிவடைந்த பின்னர் இதனைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.

இப்பிரிவின் நோக்கங்களாவன :—

(1) சோதனை முயற்சியாக, முழுமூரச் சுகாதாரப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் குறிப்பிட்ட கிராமப்புறப் பகுதி ஒன்றில் பொது நல்வாழ்வினை மேம்படுத்துதல்.

(2) பொது நல்வாழ்வு தன் முயற்சியுடன், கிராம மக்களுக்கு நோய்த்தடுப்பு முறைகளைக் கையாள என்ன செய்யலாம் எனபது குறித்து விளக்குதல்.

(3) பொது உடல்நலக் கூறுகள் அனைத்திலும் மருத்துவப் பணியாளர்களுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்க வசதி அளித்தல்.

இப்பிரிவின் அலுவல்களாவன :—

(1) மகப்பேறு, குழந்தை நலப் பணிகளுக்கு வகை செய்தல்.

(2) குடும்பநலத் திட்டம்.

(3) தொற்று நோய்கள் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.

(4) சுற்றுப்புறத் துப்புரவு.

(5) உடல்நலக் கல்வி.

(6) பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைத் தொகுத்தல்.

(7) பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

(1) மகப்பேறு, குழந்தை நலப் பணிகள்.—கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் வீடுகளுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சையளிப்பதோடு மருத்துவ நிலையங்களிலும் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. கைக் குழந்தைகளுக்கும், பாலர்களுக்கும் 8 மகப்பேறு இல்லங்கள், நிலையங்கள் மூலமாக மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.



1972-ல் முன்னேற்றம்.

மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வரும் தாய்மார்களின் எண்ணிக்கை 5,145.

மகப் பேறுகாலத்திற்கு முந்திய நிலையில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை 4,630.

சுகாதாரப் பிரிவு இருக்கும் பகுதியில் பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3,029.

(2) குடும்ப நலத் திட்டம்.—மகப்பேறு குழந்தை நல நிலையங்களுடன் ஒருங்கிணைந்து இப்பணி நடத்தப்பட்டு வருகிறது. குடும்ப நலத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு தாய்மார்களுக்கு அறிவுரை கூறப்படுவதோடு வாசக்டமி அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுமாறு ஆடவருக்குத் தாய்மார்கள் மூலமாகவும் அறிவுரை கூறப்படுகிறது. நிரோத் உறைகளை இலவசமாக வழங்குதல், மகளிர்க்கு 'லூப்' வளையம் பொருத்துதல் ஆகியவை குடும்ப நலத் திட்டத்தின் முக்கியப் பணிகளாகும்.

(3) தொற்று நோய்களைப் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.—அம்மை குத்துதல், காலரா நோய்த் தடுப்பு ஊசி போடுதல், முத் தடுப்பு ஊசி போடுதல் முதலிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன.

(4) சுற்றுப்புறத் துப்புரவு.—112 குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள் அமைத்து அவற்றின் மூலமாக மக்களுக்குத் தூநீர் வழங்கப்படுகிறது. தனிப்பட்டோர் வீடுகளில் 4,000 கழிப்பிடக் குழிகளும் துளைக் கழிப்பிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(5) நல்வாழ்வுக் கல்வி.—திரைப்படக் காட்சிகள், பலர் கூடி உரையாற்றுதல், ஒவ்வொருவரோடு தனித்தனியாகத் தொடர்பு கொண்டு நல்வாழ்வு பற்றி உரையாடுதல், கிராமத் தலைவர்கள் பயிற்சித்திட்டம் ஆகியவை மூலமாக நல்வாழ்வு பற்றி முறையாகக் கற்பிக்கப்படுகிறது.

(6) பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்கள்.—பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைச் சுகாதார நேரிட ஆய்வாளர் பதிவு செய்கிறார். புள்ளி விவர உதவியாளர் ஒருவர், இந்தப் புள்ளி

விவரங்களில் எவையேனும் விட்டுவிடப் பட்டிருந்தால் அவற்றைக் கண்டு பிடிப்பதோடு புள்ளி விவரங்களைத் தொகுத்து வருகிறார்.

(7) பயிற்சித் திட்டம்.—பயிற்சித்திட்டங்கள் கீழ்க்காணும் பணியாளர்களுக்காக நடத்தப்படுகின்றன :—

(a) சென்னை மருத்துவக் கல்லூரி மனையிட மருத்துவர்கள்—பொதுச் சுகாதார நடவடிக்கைகளில் ஒரு மாதம் பயிற்சி அளித்தல், 1971-ல் 155 மனையிட மருத்துவர்களும், 1972-ல் 200 மனையிட மருத்துவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

(b) சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மகப் பேறு—குழந்தை நலம் தகுதிப்பட்டயப் பயிற்சி வகுப்பு பயிற்சிக் காலம் ஒரு வாரம்—ஆண்டொன்றுக்கு ஒரு தொகுதியினர் பயிற்சி பெறுதல்.

(c) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குத் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி வகுப்பு—பயிற்சிக் கால அளவு 15 நாட்கள்—ஓராண்டில் 3 தொகுதிகளாகப் பயிற்சி பெறுதல்.

(d) பொது நல்வாழ்வுப் பார்வையாளர் பயிற்சி (முறையானது ஒருங்கிணைக்கப்பட்டது)—15 முதல் 30 நாட்கள் பயிற்சி பெறுதல்.—ஓராண்டில் 4 தொகுதியினர் பயிற்சி பெறுதல்.

(e) பி.எஸ். எஸ்சி. மாணவர் பயிற்சி வகுப்பு பயிற்சிக் காலம் 15 நாட்கள்—ஓராண்டில் ஒரு தடவை பயிற்சி வகுப்பு நடத்துதல்.

(f) சென்னை, மகப்பேறு மருத்துவமனைகளைச் சேர்ந்த துணைச் செவிலி மாணவியர்—பயிற்சிக் காலம் 15 நாட்கள்—ஓராண்டில் நான்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

நல்வாழ்வுப் பிரிவு உள்ள பகுதி என்பது, மறு பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்கள் செயல்முறைப் பயிற்சி மேற்கொள்ளும் பகுதியாகும். காசநோய் தனி மருத்துவமனை, மனநோய் தனி மருத்துவமனை, குழந்தை நல தனி மருத்துவமனை ஆகியவை முறையாகச் செயல்பட்டு வருகின்றன. இரத்த சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு, கருவுற்றிருக்கும் போது இரத்தசோகை ஏற்படுதல் குறித்த



சிறப்பு ஆய்வு ஒன்று நடந்தேறி வருகிறது. இதுவரை 288 தாய்மார்கள் மருத்துவச் சோதனை செய்யப்பட்டுள்ளனர். பேறு காலத்திற்கு முந்திய நிலையில் 50 தாய்மார்களுக்கு மருத்துவர் சோதனை செய்ததில் புழுவினால் ஏற்படும் தொத்து நோயே இரத்த சோகைக்கு முக்கியக்காரணம் என்று தெரிய வந்துள்ளது.

**மறு பயிற்சி நிலையம்.**—இந்த நிலையம் 1954-ஆம் ஆண்டில், ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. மேற்படி உதவி நிறுத்தப்பட்டவுடன், இந்த நிலையத்தை அரசு மேற்கொண்டது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி புரியும் மருத்துவர்களுக்கும் மருத்துவ உதவியாளர்களுக்கும் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது 8 மாத காலப் பயிற்சியாகும்.

**இப்பயிற்சியின் நோக்கங்களாவன :—**

(1) ஆரம்பச்சுகாதார நிலையத் தொகுதியைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களிடையே ஒருங்கு சேர்ந்து உழைக்கும் தன்மையை வளர்த்தல், வேலைவாய்ப்பையே நோக்கமாகக்கொண்ட பயிற்சி அளித்தல்.

(2) ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் உடல்நலப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணியில் செய்முறைப் பயிற்சி அளித்தல்.

தற்பொழுது, ஆண்டு ஒன்றுக்கு, ஐந்து தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் 15 மருத்துவ அதிகாரிகள், 5 உடல் நல ஆய்வாளர்கள், 5 சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகியோர் உள்ளனர். 1972-ஆம் ஆண்டில் 98 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1972-ஆம் ஆண்டு இறுதிவரையில், 2,439 பேரைக் கொண்ட 97 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, 98-வது தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஆராய்ச்சி—செயல் திட்டம்.**—இத் திட்டம், 1956-ஆம் ஆண்டில், ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. கிராமச் சுகாதார மேம்பாட்டு பணிகள், அவற்றின் வரைமுறை ஆகியவை பற்றிய உத்திகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக இந்திட்டம் தொடங்கப்பட்டது. முதலில், கிராமப்புறக் கழிப்பிட வசதி திட்டம்

பற்றி 1956 முதல் 1960 வரையில் நான்கு ஆண்டுகளுக்கு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும், குறைந்த செலவிலும், எளிமையான முறையிலும் துப்புரவு வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான வழிவகைபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஃபோர்டு நிறுவனத்தின் உதவி நிறுத்தப்பட்டவுடன் 1961-லிருந்து இத்திட்டத்தை அரசு மேற் கொண்டது.

'கிராமப்புற கழிப்பிட வசதித் திட்டம்' தொடக்கத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் நான்கு வட்டாரங்களில் செயற் படுத்தப்பட்டு, பின்னர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த 15 வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 1972 இறுதி வரையில், 19 வட்டாரங்களில் 9,923 ஆராய்ச்சி-செயல் திட்டம் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டன. செங்கற்பட்டு மாவட் டத்தில் 4 பணிக் கூடாரங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பணிக்கூடாரத்திலும் மட்டும் தான் ஆராய்ச்சி—செயல் திட்ட கழிப்பிடங்களுக்கான பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(a) கல்கத்தாவில் உள்ள, அகில இந்திய சுகாதார மக்கள் நல்வாழ்வு நிறுவனம், காந்தி கிராமம், கிராம நல்வாழ்வு குடும்பக் கட்டுப்பாட்டு நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த சுகாதாரக் கல்வி பட்டைய வகுப்பு மாணவர்களுக்கு மேற்பார்வையுடன் கூடிய களப் பயிற்சி. இது 2 மாத காலப் பயிற்சியாகும்

(b) தேசியப் பணித் திட்டத்தின்கீழ் கல்லூரிகளுக்கான பயிற்சித் திட்டம். இது இரண்டு நாள் பயிற்சியாகும்.

(c) மணிப்பால் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த துப் புரவு உதவியாளர் பயிற்சித் திட்டம்--இது ஒருமாத காலப் பயிற்சி யாகும்.

1966-67 முதல் 1969-70 வரையிலான கால அளவில், ஆராய்ச்சி —செயல் திட்டப் பிரிவு, 91 தொடக்கப் பள்ளிகளில் பள்ளித் துப்புரவுகளை மேற்கொண்டது. 1969-70 ஆம் ஆண்டிலிருந்து, அதே திட்டத்தை கிராம வளர்ச்சி—ஊராட்சித் துறை நிறை வேற்றி வருகிறது. ஆராய்ச்சி—செயல் திட்டப் பிரிவு தயாரித்த திட்டத்தின்படி இத்துறை நிறைவேற்றி வருகிறது.



## VII. பல்வகை

### சந்தைகளும் திருவிழாக்களும்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏறத்தாழ 600 பெரிய சிறிய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்விழாக்கள் அனைத்திற்கும் போதுமான சுகாதாரத் துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய திருவிழாக்களுக்கு, ஏற்பாடு செய்யப்பட்ட துப்புரவுப் பணிகளை மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை உதவி இயக்குநர்களும்-கூட்டு இயக்குநரும் நேரில் பார்வையிட்டனர். விழாக்களின்போது தேவையேற்படுமென எதிர்பார்க்கப்பட்ட நேர்வுகளில் காலராத் தடுப்பூசி போடும் பணியைச் செய்ய கொள்ளை நோய்ப் பிரிவுச் சிகிச்சைக்கான இயங்கும் நிலையங்களின் வண்டிகளின் பணியாளர்களும் வண்டிகளும் அந்த இடத் திற்கு அனுப்பப்பட்டனர்.

பெருவாரியாகப் பரவக்கூடிய நோய்த்தடுப்புக்குப் பொறுப்பு வகிக்கும் உதவி இயக்குநர் சமீபத்தில் சேலம், தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, பெருவாரியாகப் பரவக் கூடிய நோய்த் தடுப்பு கட்டுப் பாட்டுப் பணிகளை மேற்கொள்வது பற்றித் தல அதிகாரிகளுக்குப் பொருத்தமான உத்தரவுகள் பிறப்பித்தார். இத்துடன் மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத் துறை கூடுதல் இயக்குநரும், கோயம் புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று அப்பகுதிகளில் பெருவாரி யாகப் பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த தல அதிகாரிகள் செய்த பணிகளை மேற்பார்வையிட்டார். அந்த மாவட்டங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காலரா கண்டுள்ளதாக மட்டுமே இதுவரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுற்றுப்புறத் துப்புரவு :

பள்ளி செல்லும் இளஞ்சிறார் உடல்நல வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கக் கற்கத் தக்கவகை இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பள்ளிகளில் கழிப்பிடங்கள், பாதுகாப்பான நீர் வழங்கல் ஆகிய வசதிகளை ஏற்படுத்தித் தர வகை செய்கிறது. இத்திட்டம் 1966-ல் கொண்டு வரப்பட்டு தொடர்ந்து செயற் படுத்தப்பட்டது. பின்னர், இத்திட்டத்தை தமிழ் நாடு முழுவதும்

நீட்டிப்பதென முடிவு செய்து, கன்னியாகுமரி நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பள்ளிகள் என்னும் விதத்தில், 120 பள்ளிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1970-ல் அரசு ரூ. 4 லட்சம் வழங்கியது. இத்திட்டத்தை மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை இயக்குநரும், கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் இணைந்து நிறைவேற்றி வருகின்றனர்.

## காற்றின் தூய்மை கெடுதல்

தமிழ்நாடு மேற்கொண்ட பல்வேறு தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக, இங்கு தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களும் கடிதே வளர்ந்து வருகின்றன. இங்கு, பெட்ரோல், டீசல் வண்டிகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவுக்கு உயர்ந்து விட்டது. பயன்படுத்தப்படும் பொருள்களின் எண்ணிக்கை மேலும் மேலும் பெருகிக் கொண்டே போவதால், கழிவுகளும் அதிகமாகின்றன. இவையெல்லாம் ஏதாவது ஒரு வழியில் காற்றின் தூய்மையைக் கெடுக்கின்றன. தமிழ்நாட்டில் காற்றின் தூய்மை பெரிதும் கெட்டு விடவில்லையாயினும், அரசு இதை உணர்ந்து முன்னதாக நடவடிக்கை எடுத்துள்ளது. இம்மாநிலத்தில் காற்றுத் தூய்மை கெடல் பிரச்சினைபற்றி நுணுக்கமாக ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் பற்றி அரசுக்குப் பரிவுரைக்க 1971-ல் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறையின் கூடுதல் இயக்குநரை அமைப்பாளராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. முதலில் மாநகரில் உள்ள நிலைமையை அறிந்து அறிக்கை அளிக்குமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. இம் மாநகரில், 2.5 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். மோட்டார் வண்டிகள் ஏராளம். பல தொழிற்சாலைகளும் இரண்டு பெரிய இரயில் நிலையங்களும் உள்ளன. இந்த இரயில் நிலையங்களில் லோக்கோ ஷெட்டுகளும் மார்ஷலிங் யார்டுகளும் உள்ளன. இதைத் தவிர நிலக்கரியைப் பயன்படுத்தும் மின்சக்தி நிலையங்கள் இரண்டும் உள்ளன. விமான நிலையம் ஒன்று உள்ளது. சில தொழிற்சாலை மோட்டார்கள், இரயில் இயந்திரங்களும் அனல் மின்சக்தி நிலையங்களும் சேர்ந்து அல்லது தனித் தனியே வெளியாகும் கழிவுப் பொருள்களினால் ஏற்படுகின்ற காற்றுத் தூய்மை பற்றி, மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம், கிண்டி பொறியியல் கல்லூரி, இந்தியன் தொழில் நுட்பக் கல்லூரி, மத்திய



பொது நல்வாழ்வு ஆராய்ச்சி நிலையம் ஆகிய இடங்களில் உள்ள தலைமை நீர் ஆய்வாளர் ஆய்வுக் கூடங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. கந்தக அமிலம், உரத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் காற்றுத் தூய்மை கெடல் பற்றியும், குறிப்பாகத் தலைமை நீர் ஆய்வாளர், மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறையின் கூடுதல் இயக்குநர் ஆகியோரால் ஆய்வு நடத்தப்பட்டு, இவற்றைக் கட்டுப் படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும் பரிவுரைக்கப்பட்டன. அரசு, இப் பரிவுரைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. காற்றுத் தூய்மை கெடல் பற்றிய குழு, மாநகரத்திலுள்ள இப் பிரச்சினைபற்றி விரிவாக ஆய்வு செய்த பின்னர் தொழிற்சாலைகள், மோட்டார் வண்டிகள், இரயில் இயந்திரங்கள், அனல மின் நிலையம், மற்றும் அவற்றின் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றினால் மாநகரத்தின் தூய்மை கெட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மாநகரின் பல்வேறு இடங்களில ஏற்படுகின்ற இவற்றின் விளைவுகள் வானிலைக் கூறுகளைப் பொருத்தவையே. விண்வெளியில் புகையை விடுவதை இயன்ற அளவுக்குக் குறைத்து அதன்மூலம், உடல் நலனிற்கும் பொருள்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற அளவுக்கு காற்றுத் தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கான சில நடவடிக்கைகளை அவர்கள் தெரிவித்துள்ளனர். காற்றுத் தூய்மை கெடுதலைக் கட்டுப்படுத்தல், இதற்காக சட்டப்படிக்கான வாரியம் ஒன்றை அமைத்தல் ஆகியவை தொடர்பான சட்ட விதித்துறைகள் சிலவற்றையும் இக் குழு தெரிவித்துள்ளது. காற்றின் தன்மை எவ்வாறு கெடுகிறது என்பது பற்றிக் கண்டறிய வேண்டியது அவசியம் என்றும், கிண்டி, கிங் நிறுவனத்தில் உள்ள நீர்—கழிவுநீர் ஆய்வுக்கூடங்களில் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தினால் விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும். இதற்கு, அந்த ஆய்வுக் கூடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். காற்றுத் தூய்மை கெடுவதினால் மனிதர்களிடையே எந்த அளவுக்குக் கொள்ளை நோய் பரவுகிறது என்பது பற்றி ஆய்வு செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

## நீரின் தூய்மை கெடுதல்

தொழில் மயமாதல், நகரப்புறமாக மாற்றப்படுதல் ஆகியவற்றினால் ஏற்படும் மற்றுமொரு சுற்றுப்புற தூய்மைக் கேடு நீரின் தூய்மை கெடுவதாகும். பெரும்பாலும் சாக்கடைகளாலும்

[1973 மார்ச் 18

தொழிற்சாலைகளின் கழிவுகளாலுமே நீரின் தூய்மை கெடுகிறது. தமிழ்நாட்டில், தோல் பதனிடு தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலை, வடிசாலைகள், எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலை, உர—அமிலத் தயாரிப்புத் தொழிற்சாலைகள், காகிதத் தயாரிப்பு ஆலைகள், துணி செய்முறைப் படுத்தும் தொழிற்சாலைகள், ரேயான் தயாரிப்புத் தொழிற்சாலை, சவ்வரிசி ஆலை, முலாம் பூசுதல் தொழிற்சாலைகள், புகைப்படச் சுருள் தயாரிப்பு தொழிற்சாலை, புரதச்சத்துப் பொருள்கள் தயாரிப்பு ஆலைகள் முதலியன போன்ற ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. இத் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு வகையான கழிவுப் பொருள்கள் வெளியேறுகின்றன. தமிழ்நாட்டில் பெரும் பகுதிகளில், கழிவுநீர் அகற்று வசதிகள் கிடையா. கழிவுநீர் அகற்று வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்ற இடங்களில், கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்கான பணிகள் இன்னும் நிறைவு பெறவில்லை. சில தொழிற்சாலைகள் கழிவுநீரை நிலங்களில் ஓட விட்டு விடுகின்றன. சில, ஆற்றில் கலக்க விட்டு விடுகின்றன. இன்னும் சில கடலில் கலக்க விட்டு விடுகின்றன. இவ்வாறு கழிவு நீரைப் அப்புறப்படுத்துவதனால், நீரின் தூய்மை கெடுகின்றன. இவ்வாறு நீர்த் தூய்மை கெடுவதைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தோல் பதனிடு தொழிற்சாலை கழிவுப் பொருள்களினால், குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசும். இந்திய அரசும் சேர்ந்து ஆராய்ச்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்தின் கீழ், மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தின் நீர்—கழிவுநீர் ஆய்வுக் கூடத்தின் விஞ்ஞானிகள், கழிவுநீரைத் தூய்மைப்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளைக் கண்டுபிடிக்க, விரிவான, முன்னோடி ஆய்வு ஒன்றை நடத்தினர். இந்த ஆய்வுகளிலிருந்து கண்டறிந்தவற்றைக் கொண்டு, கழிவுநீரைத் தூய்மைப்படுத்துவதற்கான இயந்திரங்களின் வடிவமைப்பு, அவற்றிற்கான நடவடிக்கை முறைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வடிவமைப்புகள் அச்சிடப்பட்டு, தோல் பதனிடு தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பதற்காகத் தயாராக உள்ளன. இம்மாநிலத்தில் உள்ள வேறு சில தொழிற்சாலைகளில் கழிவுநீரைத் தூய்மைப்படுத்துவதற்கான இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளின் கழிவுநீர்களினால் எந்த அளவுக்கு நீரின் தூய்மை கெடுகின்றது என்பது பற்றி



1973 மார்ச் 13]

நிலைமை நீர் பகுப்பாய்வு ஆய்வுக் கூடங்களினால் மதிப்பிடப் படுகின்றன. இவற்றின் தொடர் நடவடிக்கையாக, எவ்விதத் தீங்கும் ஏற்படா வகையில் கழிவு நீர்களை ஒருவகை செய்யுமாறு தொழிற்சாலைகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நீரின் தூய்மை கெடுவதுபற்றிக் கவனித்துக் கொள்ளவும், புதிதாகத் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளினால், நீரும், காற்றும் தூய்மை கெடுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அரசைக் கலந்தாலோசிக்கும் ஓர் அமைப்பாகச் செயல்படவும், 'நீர்—கழிவுநீர் தூய்மைப்படுத்தல் குழு' என்னும் பெயரில், உயர் அதிகார நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பொதுச் சுகாதாரத் திட்டங்களில் பணி புரியும் உடல் நல ஆய்வாளர்கள், தேர்வுத் தர உடல்நல ஆய்வாளர்கள் ஆகியோரின் பணிகள் முதலியவற்றை முறைப்படுத்தல் :

**உடல்நல ஆய்வார்கள்.**—தற்போது 3,033 சாதாரணத் தர உடல்நல ஆய்வாளர்கள் உள்ளனர். 1972-ம் ஆண்டுத் தொடக்கத்தில் மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் உடல்நல ஆய்வாளர்கள் தொடர்பாக முடிவுறு நிலையில் இருந்த பணிமுறைப்படுத்தல், நிலைப்படுத்தல், ஊதிய நிர்ணயம் முதலியன தொடர்பான பணிகளின் விவரம் வருமாறு :—

1. பணிகளை முறைப்படுத்துதல் 2,071
2. பணிகளை நிலைப்படுத்துதல் 270
3. தகுதிகாண் பருவக்காலத்தை அறிவித்தல் 274
4. கடந்த ஒரு தேதியிலிருந்து பணிமுறைப் படுத்தப்பட்டதை அடுத்து திருத்த வீதத்தில் ஊதியத்தை நிர்ணயித்தல். 141

மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை அலுவலகத்தில் மேற்படி வேலைகள் அதிக அளவில் முடிவுறு நிலையில் உள்ளதால் உடனடி நடவடிக்கை எடுத்து அப்பணிகளை முடிப்பதற்காக ஒரு மேற்பார்வையாளர், 2 உதவியாளர்கள், தட்டச்சர் ஒருவர் ஆகியோர் அடங்கிய பிரிவு ஒன்று 1972-ல் ஏற்படுத்தப்பட்டது.

இளநிலை உதவியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற செவிலியர்களிடையே உள்ள வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கவும், அவர்களின் பணியை குடும்ப நலத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும், பயிற்சி பெற்ற செவிலியர்களை, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் (Health Visitor) (உடல் நலக் கண்காணிப்பாளர்) உடல் நல பார்வையாளராக (மகளிர்) நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவர்களுக்கு அதிகப் படியான அடிப்படை ஊதியம் வழங்கப்படுகிறது.

மாவட்ட விளம்பரப் பிரிவுகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, அப்பிரிவில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளர்களில் சிலர் குடும்ப நலத் துறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் விளம்பரப் பிரிவில் ஆட்குறைப்பு செய்யப்பட்டதி லிருந்து மீண்டும் குடும்ப நலத்துறையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது வரையில் அவர்களது பணியில் இடை முறிவு ஏற்பட்டது. அவர்களது பணி இடைவிடாத ஒன்றாக இருப்பதற்காக அரசு அண்மையில் அவர்களது பணி இடை முறிவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இருக்க விலக்கு அளித்துள்ளது.

**ஏனைய சிறப்புச் சலுகைகள்.**—இதுகாறும், ஆண்களுக்கான அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அரசுப் பணியாளர் ஒருவருக்கு, 6 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்பு மட்டும்தான் அளிக்கப்பட்டது. தற்பொழுது அது 8 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளது. முன்னர், கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண் அரசுப் பணியாளர் ஒருவருக்கு 14 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்பு மட்டும்தான் வழங்கப்பட்டது. அது, தற்போது 20 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

மருந்தாக்குநர்களுக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பை அதி கப்படுத்தும் நோக்கத்துடன், மருந்தாக்குநர் பதவிகளில் 10 சத வீதத்தை தலைமை மருந்தாக்குநர் பதவிகளாக உயர்த்தப்பட வேண்டும் என்று ஒரு நபர் குழு பரிவுரைத்தது. இப்பரிவுரை யினை அரசு பரிசீலித்து வருகிறது.

அரசு, அண்மையில், மருந்தாக்குநர், தலைமை மருந்தாக்குநர், மருத்துவப் பண்டகசாலைக் காப்பாளர் ஆகியோரது ஊதிய விகி தத்தில் இருந்த குறையை நீக்கி திருத்தி அமைத்துள்ளது. அவை யாவன :—



மேலும், நகரமைப்புத் திட்டம் என்பது உள்ளாட்சி மன்றங்களின் சட்ட பூர்வமான வரம்பிற்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்பதல்ல. ஒன்று பெருநகர்ப் பகுதியை முழுவதும் அல்லது வட்டாரப் பகுதியை முழுவதும் அல்லது வளர்ச்சி வாய்ப்புக்கள், ஒருங்கிணைந்த மனித வாழ்க்கை ஆகியவற்றைப் பொருத்து நகர-கிராம பகுதி முழுவதும் இதில் அடங்கியதாக இருக்க வேண்டும்.

எனவே நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்தின் வட்டாரக் கொள்கையினை விரிவானதொரு சட்டவரைவு மூலமாகக் கொண்டு வருவது அவசியமெனக் கருதப்பட்டது. அதன்படி, திருத்தி யமைக்கப்பட்ட நகர-நாட்டுப்புறத் திட்டமைப்புச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. விரிவான நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டவரைவு, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவாறே தற்பொழுது குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றுள்ளது. புதிய சட்டத்தின்கீழ் நகர-நாட்டுப்புற அமைப்புத்திட்ட அதிகார மன்றம் ஒன்றை அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**வட்டாரத் திட்டங்கள் தயாரித்தல்**—திட்டமிட்ட முறை யிலேயே வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற, மாநிலம் 8 வட்டாரத் திட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சேலம்-கடலூர் வட்டாரத்திற்கும் திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் வட்டாரத் திற்கும் நீண்டகால வட்டார திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள வட்டாரங்களுக்கான நீண்டகால திட்டங்கள் 1973 மார்ச் திங்கள் இறுதிக்குள் தயாரிக்கப்பட்டு விடும். 1971-ஆம் ஆண்டு புதிய நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின்கீழ் அமைக்கப்படவிருக்கிற வட்டார திட்ட அமைப்பு-வளர்ச்சி அதிகார மன்றங்கள் மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்களுக்கும் வட்டார அளவிலான ஆய்வுகளுக்கும் இவை அடிப்படையாக அமையும்.

**சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றங்கள் அமைத்தல்**—சென்னைப் பெருநகர்த்திட்டம் 1971-1991-ல் குறிப்பிட்டுள்ளவாறு, பெருநகர் முறையாக வளர்ச்சியடைவதை உறுதிசெய்து கொள் வதற்காக, நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் தலைவராகவும் உள்ளாட்சித்துறை

அமைச்சரை துணைத் தலைவராகவும் கொண்டு 17 உறுப்பினர்களடங்கிய சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் என்னும் அதிகார மன்றம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வகுப்பதில, பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்கு ஆலோசனை நல்க, வாழ்க்கையின் பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் அதிகாரிகளல்லாதோர் ஆகியோர் அடங்கிய 27 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இந்த அதிகார மன்றத்திற்கு உதவி புரியும்.

**நகர்ப்புறப் பகுதி வளர்ச்சி**—பெருநகர்ப் பகுதி வளர்ச்சி வதற்கான வருங்காலத் தேவைகள் மாநகரிலிருந்து மூன்று நிலைகளில் தொடங்கும் மூன்று முக்கியத்துறைகளையொட்டியே அமையவேண்டும் என்று சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. முதற் கட்டத்தில், 30 லட்சம் மக்களுக்கு இடவசதி அளிக்கும் வகையில் மாநகர் மாற்றியமைக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு முதல் மூன்று லட்சம் வரை மக்கள் தொகையுடன் வசதிகள் அனைத்தும் நிறைந்த ஆறு நகர்ப்புறம் மாநகருக்கு வெளியே அமைக்கப்படும். மாநகரிலிருந்து தொடங்கும் மூன்று போக்குவரத்து இடைவழிகள் (Transportation Corridors) இவற்றுடன் அமைந்திருக்கும் நகர்ப்புறப் பகுதிகள், தகுந்த ரயில், சாலை வசதிகள் மூலம் மாநகருடன் இணைத்திருக்கும். மூன்றாவது கட்டத்தில், நகர்ப்புறப் பகுதிக்கும், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கும் இடையே ஒவ்வொரு போக்குவரத்து இடைவழிக்கும் ஒன்றாக மூன்று துணை நகரங்கள் அமைக்கப்பட்டு, அவை இடையே உள்ள கிராமங்களினால் பிரிக்கப்படும்.

பெருநகர்ப் பகுதியின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு, மணலி, எண்ணூர் ஆகிய பகுதிகள் மிக முக்கியமான நகர்ப்புறப் பகுதிகளாக அமையும் என்று பெருநகர்த் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மணலியில் தொழில்கள் விரைந்து வளர்ச்சியடைந்து வருவதைக் காணும்போது, பிற நகர்ப்புற பகுதிகளின் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளுவதற்கு முன்பு எண்ணூர்-மணலி நகர்ப்புறப்பகுதி குறித்து உடனடியாகத் திட்டமிட்டு அதனை வளர்ச்சிபெறச் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.



எண்ணூர்-மணலி நகர்ப்புற வளர்ச்சிக்கு விரிவான திட்டம் ஒன்றை வகுத்து, மாநில வீட்டு வசதி வாரியத்தின் முகவரமைப்பின் மூலமாக அதனை நிறைவேற்றுமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தைக் கேட்டுக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1973-74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**துணை நகரங்களை ஏற்படுத்துதல்**—வருங்காலத்தில் மாநகரில் ஏற்படக்கூடிய இடநெருக்கடியைக் கட்டுப்படுத்தும் முறையாக, சென்னை மாநகரிலிருந்து 25 முதல் 30 மைல் தொலைவு வரையுள்ள இடங்களில் துணை நகரங்களை வளர்ச்சியடைச் செய்யும் திட்டத்தை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள செங்குன்றத்தை துணை நகரமாக வளர்ச்சியடையச் செய்யும் திட்டத்தை முதலில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நகரம் "மறைமலை நகர்" என்று அழைக்கப்படும். இப்புதிய நகரத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான செயல் திட்டங்களை விரிவாக வகுக்கும் திட்டம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர்த்திட்ட அதிகார மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**பாதாள இருப்புப்பாதை அமைக்கும் திட்டம்**—வருங்காலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மக்களால் பெருமளவில் பயன்படுத்தப்படும் போக்குவரத்து ஏற்பாட்டை நிறுவுவது மிகவும் அவசியம்; இதனைக் கருத்திற்கொண்டு மாநகரத்தின் வட எல்லை, தென் எல்லையாக அமைந்துள்ள எண்ணூர், திருவான்மியூரை இணைக்கும் பாதாள இருப்புப்பாதையை சென்னையில் அமைப்பதற்கான திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்திய அரசின் ரயில்வே அமைச்சகத்தை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பாக நகரமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகம் தொழில் நுட்ப அறிக்கை ஒன்றை தயாரித்து ரயில்வே அமைச்சகத்துக்கு அனுப்பியுள்ளது. ரயில்வே அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள வாய்ப்புக்கூறு ஆய்வுக்கு இந்த தொழில் நுட்ப அறிக்கை அடிப்படையாக அமையும். இது காரியத்துக்காக ஐந்தாவது திட்டத்தில் போதுமான நிதியுதவி ஒதுக்குமாறும் மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 13

**நகரமைப்புத் திட்டப்பணியில் வல்லுநர்களுக்குப் பயிற்சி**—நகர-நாட்டுப்புறத் திட்டம் தனிப்பட்டதோர் தொழிலாகவே ஆகிவிட்டது. இப்பயிற்சிக்கு பொறியியல், கட்டிடக்கலை, பொருளியல், சமூகவியல் ஆகியவற்றில் தேர்ச்சி தேவை. இத்துறைக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் திட்டமிடுபவர்களின் தேவை அதிகரித்து வருகிறது. இத்தேவையை நிறைவு செய்ய, அதிகாரிகள் அளவிலும் தொழில் நுட்ப வல்லுநர்கள் அளவிலும் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டமொன்று செயல்பட்டு வந்துள்ளது.

1973–74 ஆம் ஆண்டில் நகர-நாட்டுப்புறத் திட்டம், போக்குவரத்துத் திட்டம், இயற்கை (நில)க் காட்சியைப் பேணும் பணி ஆகியவற்றில் பட்ட மேற்படிப்பு பயிற்சி, நகரமைப்புத் திட்டத்தில் தகுதிப்பட்டயச் சான்றிதழ் மேல்படிப்பு (Post-Licentiate Course) ஆகியவற்றில் பயிற்சியளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்காரியங்களுக்காக 1973–74 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுடன் மாநில வீட்டு வசதி வாரியமும் குடிசைப்பகுதி மாற்று வாரியமும் மேற்கொள்ளும் வீடு கட்டும் திட்டங்கள் குறித்து அவற்றிற்கு ஆலோசனை வழங்கும் பணியிலும் நகராட்சி அலுவலகக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், வருவாய் தரத்தக்க பேருந்து நிலையங்கள், அங்காடிகள் போன்றவற்றிற்கு வடிவமைப்பு தயாரித்தல் ஆகியவை குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆலோசனை கூறும் சிறப்புப் பணியிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது.

மாநிலம் முழுவதிலும் திட்டப்பணிக்கு வழிகாட்டும் இன்றியமையாப் பணியை மேற்கொள்ள இத்துறை விரைவுபடுத்தப்பட்டுள்ளது. வருமாண்டுகளில், சிறப்பான வகையில் திட்டமிட்ட வளர்ச்சி சகாப்தத்தை அடைவோம் என்று மக்கள் எதிர்பார்க்கலாம்.

**சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீர்த் திட்டங்கள்**—இந்தக் கோரிக்கையில், குடிநீர் வழங்கல்-கழிவு நீர்த் திட்ட



1973 மார்ச் 13]

களுக்காக, சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள் வழங்குதல் அடங்கும். இவை பின்வருமாறு:—

1973–74 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள்.

| | மானியம். | கடன். | மொத்தம். |
| --- | --- | --- | --- |
| குடிநீர்வழங்கல் .. | 73·08 | 71·84 | 144·92 |
| கழிவுநீர் அகற்றுதல் .. | 33·50 | 87·00 | 120·50 |

தொழில் நுட்பத் தகுதிபெற்று வேலையில்லாமல் இருப்போருக்கு பயிற்சியளிப்பதற்காக தொடங்கப்பட்ட தொழில் பழகுவோர் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவியும் இதில் அடங்கும்.

**குடிநீர் வழங்கு திட்டங்கள்**.—மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவைப் பெருக்குவதற்காக, நிலையான செயற்குறிப்பை, அதாவது காவிரி நீரை வீராணத்திலிருந்து மாநகருக்குக் கொண்டுவரும் திட்டத்தைச் செயல்படுத்தும் வரையில், மாநகரத்தின் பெருகிவரும் தேவையை நிறைவேற்ற பல்வேறு குறுகிய காலச் செயற்குறிப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல நிலைகளாக இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி அதிக அளவில் மாநகருக்கு குடிநீர் வழங்க முடிந்தது. மாநகராட்சியில் 1968-69 இல் நாளொன்றுக்கு 35 மில்லியன் காலன் (160 மெகா லிட்டர்) குடிநீர் வழங்கப்பட்டது; மேற்சொன்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் பயனாய் 1973 இல் 50 மில்லியன் காலனுக்கு அதிகமாக (230 மெகா லிட்டர்) குடிதண்ணீர் வழங்க முடிந்தது. வழக்கமான வடகிழக்குப் பருவமழை பொய்க்காமலிருந்தால், மாநகருக்கு காவிரி நீர் கிடைக்கச் செய்யும் வரை இதே அளவு குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டுவரும்.

மாநகருக்கு குடிநீரை அதிக அளவில் வழங்கி வருவதுடன், குடிநீர் அளவு சமமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக சில மண்டலத் திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன; சில மண்டலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், குடிநீர் சீராக வழங்கப்படும் என்றும், மாநகரின் கடைகோடிப் பகுதிகளுக்கும் குறைந்த அளவுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் குடிநீர் வழங்க இயலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1973–74 ஆம் ஆண்டில் ரூ. 144.92 லட்சம் நிதி ஒதுக்க (மானியமாக 73.08 லட்சமும், கடனாக 71.34 லட்சமும்) அரசு திட்டமிட்டுள்ளது.

**கழிவுநீர் அகற்று திட்டம்**—தற்போதைய தேவையை நிறைவு செய்வதற்கு போதுமான அளவில் ஏற்கெனவே உள்ள கழிவுநீர் அகற்று ஏற்பாடுகள் இல்லாததால் பெருந் திட்டத்தின் அடிப்படையில் மாநகரிலுள்ள கழிவுநீர் அகற்று ஏற்பாடுகள் அனைத்தையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. எனவே, இது காரியத்துக்காக அரசு கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதன்படி மாநகரம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. கழிவு நீரை அகற்றுவதற்குத் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இது தவிர, படிப்படியாக நிறைவேற்றும் முறையில் மழைநீர் வடிகால் திட்டங்களையும் தேவைப்படும் நேர்வுகளில் ஏற்கெனவே உள்ள நீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் தொடர்பான பணிகளையும் மாநகராட்சி மேற்கொள்கிறது. மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ள கழிவுநீர் அகற்று திட்டங்கள் அனைத்துக்குமான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,392.71 லட்சம் ஆகும். மழைநீர் வடிகால்களைக் கட்டுதல், நீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்கள் தவிர மற்ற திட்டங்கள் அனைத்தும் உதவித்தொகை மானியம் பெறும் பணித் திட்டமாக மாநகராட்சியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய திட்டங்களுக்காக கடனாகவும், மானியமாகவும் இதுவரை வழங்கப்பட்டுள்ள மொத்த நிதியுதவித் தொகை ரூ. 596.15 லட்சம் ஆகும். திட்டங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு மிகவும் விரைவாக நிறைவேற்றப்பட்டு முடியும் நிலையில் உள்ளன. அவை விரைவில் பயனுக்கு வரும். 1973-74 ஆம் ஆண்டில் கழிவுநீர் அகற்று திட்டங்கள் அனைத்துக்கும் ரூ. 120.50 லட்சம் (கடனாக ரூ. 87 லட்சமும், மானியமாக 33.50 லட்சமும்) நிதி ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**தொழில் நுட்பத் தகுதி பெற்று வேலையற்றிருப்போர்க்குப் பயிற்சியளித்தல்**—தொழில் நுட்பத் தகுதி பெற்றுள்ளவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, மாநிலத்திலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக 'தொழில் பழகுவோர்' திட்டமொன்றை அரசு தொடங்கி



யுள்ளது. இத்திட்டத்துக்காக 1973-74 ஆம் ஆண்டுக்காக அரசு ரூ. 3.25 லட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பல்வேறு தொழில் நுட்பத் தகுதி பெற்றுள்ள தேர்ச்சி பெற்றவர்கள், தேர்ச்சி பெறுபவர்கள் ஆகியோர் பயிற்சியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சிக்காலத்தின்போது பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

1962-63 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் இம் மாநிலத்தில் பொது நல்வாழ்விற்காக செலவிடப்பட்ட தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவிடப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1962-63 | 210.84 |
| 1963-64 | 241.41 |
| 1964-65 | 289.43 |
| 1965-66 | 362.07 |
| 1966-67 | 502.16 |
| 1967-68 | 519.25 |
| 1968-69 | 595.60 |
| 1969-70 | 748.06 |
| 1970-71 | 850.08 |
| 1971-72 | 11,46,07,495 |
| 1972-73 | 16,10,73,800 (1972-73 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு.) |
| 1973-74 | 17,53,30,000 (1973-74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.) |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

**புதன்கிழமை, 1973 மார்ச் 14.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

#### வந்தவாசி காவலர் இல்லங்கள்.

*356 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி பேரூராட்சி எல்லையில் தற்போது அமைந்துள்ள காவலர் இல்லங்களை வசதியான வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை. தற்போது வந்தவாசி காவலர் குடியிருப்புகள் நல்ல நிலையில் இருப்பதால் வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு எதும் அரசிடம் இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வந்தவாசியில் இருக்கும் அந்தக் குடியிருப்புக்கள் நல்ல நிலையில் இருந்தாலும், அவை ஜன நெருக்கமான பஜார் பகுதியில் இருக்கிறது. ஆகவே, அந்தக் குடியிருப்புகள், காவலர்களும் அவர்களுடைய குடும்பங்களும் தங்குவதற்கு வசதியில்லாதவையாக இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகள் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட இல்லங்களாக இருப்பதால், அவற்றைப் புதிய முறையில் ஊர் ஓரத்தில் கட்டிக்கொடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலும் புதிதாகக் காவலர் இல்லங்கள் கட்டிக்கொடுக்க அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில் ஏற்கெனவே இருப்பதை மாற்றியமைப்பது என்பது இப்பொழுது இயலாத காரியம்.

#### *Lighted belt and batons for Constables.*

*357 *Q.*—THIRU N. DENNIS: }
THIRU N. KITTAPPA : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether lighted belt and batons are to be provided to the Constabulary in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : இங்கிலாந்து நாட்டில் கொலை, கொள்ளைகளை விரைவாகக் கண்டுபிடிக்க பல நூதனமான முறைகளைக் கையாளுகிறார்கள். தேர்ச்சி பெற்ற நம்முடைய காவலர்களையும் காவல் அதிகாரிகளையும் அங்கு அனுப்பி நாம் அந்த நூதன முறைகளைக் கையாள அரசு வழி வகுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நூதனமான முறைகளைக் கையாளுவதில் நம்முடைய காவலர்கள் யாருக்கும் எப்போதுமே குறைந்தவர்கள் அல்லர். ஆனால், அந்த நூதனமான கருவிகளை வாங்குவதிலேதான் நிதி நிலை குறுக்கிடுகிறது.

திரு கே. எ. வகாப் : காவலர்களுக்கு அளிக்கப்படுகிற தடி, அடித்தால் இரத்தம் வருகிற அளவில் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, அடித்தால் வலி மட்டும் ஏற்படும் வகையில் மென்மையான தடிகளை வழங்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி அதை மாற்றியமைத்தாலும் வெளியில் சொல்லக் கூடாது.

திரு. ஆ. பரந்தாமன் : இரவு நேரங்களில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வெளிச்சம் பொருத்தப்பட்ட பெல்ட்களை, தலையிலே வைத்துக் கொள்ளும் சர்ச் லைட்களை கான்ஸ்டபிள்களுக்குக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விளக்குகளோடு காவலர்கள் இருந்தாலே குற்றவாளிகள் போலீஸ் இருப்பதைத் தெரிந்துகொண்டு தப்பித்துக்கொள்ளுவார்கள்.

திரு. நா. வீராசாமி : காவலர்கள் கையில் இருக்கிற தடிகள் இப்பொழுது பயன்படுத்தப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறதே அது உண்மைதானா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மையாகவும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

திரு. த. சோனையா : போலீஸ்காரர்களுடைய கையில் கொடுக்கப்பட்டிருந்த தடிகளில் இருந்த அந்த பித்தளைப் பூண்களெல்லாம் இப்பொழுது அகற்றப்பட்டிருக்கின்றனவே, அது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போலீசார் யாரும் அகற்றி விடுவதில்லை. ஏற்கெனவே இலாகா அளவில் அகற்றப்பட்டிருக்கக்கூடும்.

திரு. கு. காமாட்சி: அண்மையில் நடைபெற்ற கலவரங்களிலெல்லாம் போலீசார்கள் அதிகமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் பாதுகாப்புக்காக உடலுக்குக் கவசம் அளிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுக்கு கவசங்கள் அளிப்பதற்குப் பதிலாக இப்பொழுது பிரம்பினால் செய்யப்பட்ட கேடயங்களை வழங்க அரசு உத்தேசித்திருக்கிறது. அதற்காக இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் அந்தப் பிரம்பிலான கேடயங்கள் வழங்கப்படும். கல்வீச்சுக்களைத் தடுப்பதற்கு அவை மெத்தவும் பயன்படும்.

திரு ந. தருமலிங்கம் : வெளிச்சம் பொருத்தப்பட்ட பெல்ட்கள் மற்ற மாநிலங்களில் பயன்படுத்தப்படுகின்றனவா, அவை எந்த எந்த மாநிலங்களில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தியாவில் எங்கும் பயன்படுத்தப்படவில்லை. வெளிநாடுகளில் மேற்கு ஜெர்மனியில்தான் பயன்படுத்தப்படுகிறது. அதுபோல் இந்தியாவில் பயன்படுத்தலாமா என்று ஆராய்வதற்கு டில்லியிலிருந்து பம்பாய்க்கும் சென்னைக்கும் அதுபோன்ற சில கருவிகளை அனுப்பினார்கள். சென்னைப் போலீசார் அது அவ்வளவாகப் பயன்படாது என்ற குறிப்பினை டில்லிக்கு அனுப்பிவிட்டார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

திரு. கே. கந்தசாமி : இப்பொழுது நமது நாட்டில், குறிப்பாக நமது மாநிலத்தில் சட்ட அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அளவில் சமுதாய விரோதச் செயல்களில் ஈடுபட்டு இருக்கும் நேரத்தில் போலீசாருக்கு அவசியம் ஏற்படுகிறபோது தற்காப்புக்கு அல்லது அவைகளை அடக்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று கூறுகிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போலீசார் அவரவர்கள் இருக்கின்ற இடத்தில் சட்டம் ஒழுங்கு அமைதியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அதிகாரிகளிடத்தில் அனுமதி பெற்று ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

*Teachers Training School at Dindigul.*

*358 *Q.*— THIRU. N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Basic Training School at Dindigul has been closed from April 1972 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இரண்டாம் ஆண்டு பிரிவுகள் இல்லை என்பதாலும், 1972–73-ல் எல்லா முதலாண்டுப் பிரிவுகளிலும் அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாலும், திண்டுக்கல்லில் உள்ள பெண்களுக்கான அரசினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூடப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது தற்காலிகமாக மூடப்பட்டிருந்தாலும் இந்த நிறுவனத்தை மறுமுறையும் திறக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது ஆராய்ந்துதான் செய்யப்பட வேண்டும். மேலும் பல பிரிவுகளை நிறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை இன்னும் ஒரு மாத காலத்தில் கலந்தாலோசித்து பிறகுதான் அடுத்த ஆண்டு எத்தனை பேருக்குப் பயிற்சி தரலாம் என்பதைப் பொறுத்து அதுபற்றி முடிவு செய்ய வேண்டி வரும்.

Thiru. K. S. KOTHANDARAMIAH : Sir, though certain training schools are called basic training schools, attention is not given for basic training. Only general books are prescribed and questions are given as general text-books. May I know whether they will be considered as general training school and not basic training schools ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரக்குறிப்பு இல்லை. அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

புலவர் சி. பழனிச்சாமி : மூடப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு மாற்றுப்பணி அளிக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எவரும் வேலை இழக்காத அளவுக்கு அவர்கள் எந்த எந்த வகையில் பயன்படுத்தப்பட வேண்டுமோ அந்த வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மூடப்பட்டதற்குக் காரணம் அவர்கள் பயிற்சி பெற்றும் போதிய வேலை கிடைக்கவில்லை என்பதுதான் என்று கூறப்படுகிறது. அப்படியென்றால், பல இன்ஜினியர்கள், டாக்டர்கள் போன்றோரும் படித்து வேலை கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, வேலை கொடுப்பதாக இருந்தால்தான் பயிற்சிப்பள்ளிகளை நடத்த முடியும் என்று சொல்ல முடியுமா ? ஆகையால், உத்தியோகம் கொடுப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைக் கருதி எல்லாப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களையும் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்வி என்பது ஒன்று : பயிற்சி என்பது மற்றொன்று. கல்வி எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால், இது ஒரு குறிப்பிட்ட வேலைக்குத் தகுதி உடையவர்களாக ஆக்கும் ஒரு பயிற்சி ஆகும். எவ்வளவு வேலைவாய்ப்பு இருக்கிறதோ அதற்கேற்றபடிதான் நாம் பயிற்சியாளர்களை உருவாக்க முடியும். இப்போதே, 23,000 பேர் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பார்கள். 6,200 பேருக்குத்தான் 1972–73-இல் வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். அவ்வாறு கொடுத்தாலும் மேற்கொண்டு 16,800 பேர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பார்கள். 1973–74-இல் 8,000 பேர் பயிற்சி பெற்றுவர்



இருக்கிறார்கள். அப்படியென்றால், 24,800 பேர் வேலைவாய்ப்பின்றி இருப்பார்கள். 1973–74-இல் 6,300 பேருக்கு வேலை கொடுத்தாலும் மேற்கொண்டு 18,500 பேர் மிஞ்சக்கூடிய நிலையில் இருப்பார்கள். அந்த வகையில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும், வேறுபல இடங்களிலும் நான்காண்டுகள், ஐந்தாண்டுகளாகப் பயிற்சி பெற்றவர்கள் வேலை இல்லாமலிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கச் செய்ய வேண்டிய முயற்சியை எடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டாண்டுகளாகக் கேரளாவில் மாணவர்களைச் சேர்ப்பதை அறவே நிறுத்திவிட்டார்கள். 1970–71-இல் ஆந்திராவில் மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்தி விட்டார்கள். பயிற்சி பெற்றவர்கள் இருக்கும்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்த பிறகுதான் தேவையை அனுசரித்து அவர்களுக்கு பயிற்சி இடங்களை ஏற்படுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் இன்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய வயது வரம்பைச் சற்றுத் தள்ளிப்போட அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் ஓரளவு அவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தும் யோசனை அரசுக்கு இருக்கிறது. யார் யாருக்கு அப்படிப்பட்ட நிலைமையோ அவர்களைப்பற்றி மட்டும் கவனிக்கலாம். மொத்தமாக அப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்தாமல் எங்கே அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றனவோ அதைப் பரிசீலிக்கலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இப்போது ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சி பூரணமாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அதனால்தான் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, ஆசிரியர்களின் அந்தமாதிரியான செயல்களைத் தடுக்கின்ற வகையில் அவர்களுக்கு இன்னும் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவைகளை பயிற்சியின்போது போதிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அளிக்கப்படுகின்ற பயிற்சி பூரணமாக இருக்கிறதா இல்லையா என்று சொல்ல முடியாது. பூரணமாக இருக்க வேண்டும் என்பதுதான் நமது எண்ணம். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

திரு. த. சோலையா : ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில் நிறையப்பேர் வேலையில்லாமல் இருப்பதால் பயிற்சிப் பள்ளிகளை தற்காலிகமாக நிறுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் எவ்வளவு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை ? இன்னும் எத்தனை ஆண்டுகளில் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1968–69-ல் 269 பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவுக்கு 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள். அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டது. 1969–70-ல் 227 பிரிவுகள் இருந்தன. 1970–71-ல் 197 பிரிவுகள் இருந்தன. 1971–72-ல் 162 பிரிவுகள் இருந்தன. சென்ற ஆண்டு முதலாண்டு மாணவர்களை சேர்ப்பதை நிறுத்திவிட்டு, 2-வது ஆண்டு மாணவர்களை வைத்து பயிற்சி

அளிக்கப்பட்டது. அண்டை மாநிலமான கேரளத்தில் முதலிலே ஒரு பிரிவுக்கு 40 மாணவர்களாக இருந்து, அதன்பின் 30 மாணவர்களாக இருந்து, அதற்குப் பின்னால் 20 மாணவர்களாக குறைக்கப்பட்டு, இப்போது அறவே இல்லை என்று ஆக்கியிருக்கிறார்கள். நாமும் அப்படி அறவே மூடிவிட்டாலும் பின்னால் தேவைப்படும்போது பயிற்சி அளிப்ப தற்கு சற்று சிரமமாக இருக்கும். அதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கி றோம். எதற்கும் சிரமமில்லாத ஒரு நிலையைத்தான் கையாள வேண்டும். இந்த ஆண்டில் 6,500 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடித் தந்தி ருக்கிறோம். இன்னும் பதினாறாயிரத்துச் சில்லரை பேர் வேலை வாய்ப்புப் பெறாமல் இருக்கிறார்கள்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : முந்தைய ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் இருந்தாலும், அவர்களுக்குப் பின்னால் பயிற்சி பெற்றவர்கள் முதலில் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்னதாகப் பயிற்சிப் பெற்றவர்களுக்கு முதலிடம் தரவேண்டும் என்று ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் சில பல காரணங் களால் அதைக் கடைப்பிடிக்க முடியாது என்று சொல்லி, அவர்கள் விருப்பப்படி நியமனம் செய்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளிலும், ஊராட்சிகள், நகராட்சிகள் பள்ளிகளிலும் கூடுமானவரையிலும் அந்த உத்தரவுப்படி நியமனம் செய்கிறார்கள். தனியார் பள்ளிகளும் கூடுமான வரையிலும் அந்த உத்தரவை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

## சென்னை மாநகராட்சி திரைப்பட அரங்குகள் நடத்தல்.

*359 வினா—திரு கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி தம் சொந்தப் பொறுப்பில் சினிமா தியேட்டர் களைக் கட்டி நடத்த அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : நல்ல வருமானம் வரக்கூடிய ஒரு திட்டமாக இது இருப்பதால், சென்னை மாநகராட்சி தன் சொந்தப் பொறுப்பில் சினிமா தியேட்டர்களைக் கட்டி நடத்த அனுமதி கேட்டால், அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவுக்கு நிதிவசதி இருந்து, மற்ற காரியங்களுக்கு எல்லாம் குறைபாடுகள் எதுவும் இல்லாத அளவுக்கு வசதி படைத்திருந்தால், திரைப்பட அரங்குகளைக் கட்டி நடத்த அனுமதி கேட்டால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம். ஆனால் இப்போது சென்னை மாநகராட்சிக்கு போதுமான நிதிவசதி இல்லை.



கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சென்னை மாநகராட்சி நிதி நெருக்கடியில் இருப்பதால், பல காரியங்களுக்கு அரசாங்கம் கடனும், மானியமும் வழங்கிவருகிறது. அப்படி இருந்தாலும் சென்னை மாநக ராட்சியிடமிருந்து திரைப்பட அரங்குகளை சொந்தப் பொறுப்பில் கட்டி நடத்துவது பற்றிய விண்ணப்பம் ஒன்றும் அரசுக்கு வரவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சென்னை மாந கராட்சி கலை அரங்குகள் அமைக்க முன் வந்தால், அரசாங்கம் அதற்கு எந்த வகையில் உதவி செய்யும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. வீராசாமி : சென்னையிலே இருக்கக்கூடிய திரைப்பட அரங்குகளை மாநகராட்சி—அரசாங்கம் பல தொழில்களை தேசியமா மாக்குவதுபோல—எடுத்து நடத்துவதற்கு நம்முடைய அரசை அனுமதி கேட்டால், அரசு அதற்கு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது கொள்கைப் பிரச்சனை. அதுபற்றி முதலில் அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். அதன் பிறகு யார் யார் எடுத்து நடத்துவது என்பதைப் பார்க்கவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்குக் கிடைக்கின்ற கேளிக்கை வரியில் 20 சதவீதத்தை நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தியேட்டர்களைக் கட்டுவதற்குக் கொடுக்கலாம் என்று மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறார். அதன் அடிப்படையில் மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது எல்லாம் நிதிப் பங்கீடுகளை எப்படி செய்வது என்பதற்கான யோசனை. அதைப்பற்றி பின்னால்தான் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : இப்பொழுது கிடைக்கின்ற வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் எத்தனை சதவிகிதத்தை அரசாங்கம் ஒதுக்குகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் மூலக் கேள்விக்கு தொடர்புடைய கேள்விகளைக் கேட்கவேண்டும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: சினிமாத் தியேட்டர்களைக் கட்டி நடத்துவதற்கு போதுமான நிதி வசதி வேண்டும் என்று அமைச்ச வர்கள் சொன்னார்கள். மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும்

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பணியாளர்கள் 1969-லிருந்து மற்றொரு யூனியனுக்கு மாற்றப்படாது இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாற்றுவதற்கான அதிகாரம் இருந்தும், 2 யூனியன்களும் ஒரு பணியாளரை ஏற்றுக் கொள்ள இசைந்து தீர்மானம் போட்டால் தான் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்படுகிறார்கள். ஒரு பணியாளர் ஒரு ஒன்றியத்தில் தவறு செய்கிறபோது அவரை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்க அரசு வழிவகுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரை அந்த ஒன்றியத்திலிருந்து மாற்றுவதால் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் என்று கருதினால், அவரை மாற்றுவதற்கு இப்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, in many panchayat unions, the staff appointed at the beginning of the councils have not been transferred even though they have been there for more than 8 or10 years and on account of that many difficulties and troubles appear in the unions. May I know whether the officers even in panchayat unions would be transferred after three years ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நியமனக் குழு யார்யாரை எந்தெந்தப் பதவிகளில் நியமிக்கலாம் என்று தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் நியமிக்கிற அதிகாரம் ஆணையருக்கு வருகிறது. ஆகவே தான் மாற்றம் செய்வதில் இந்த வழி முறை இருக்கிறது. ஒரு பணியாளர் அந்த இடத்தில் பணியாற்றுவதால் நிர்வாகத்திற்குத் தீங்கு ஏற்படும் அல்லது சூழ்நிலை சீர்படும் என்று இருந்தால் மாற்றலாம் என்று இருக்கிறது. 3 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் இப்போது இருக்கும் சங்கடங்களை விட, பிரச்சினைகளும் அதிகமாக வளரும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, பல ஊராட்சி ஒன்றியங்களில் 10 ஆண்டு காலம் 20 ஆண்டு காலம் இருந்து கொண்டு இருக்கிற ஆசிரியர்கள் சிலர் அந்தப் பள்ளிகளை சரியாகக் கவனிக்காத சூழ்நிலை இருக்கிறது, ஆகவே, 3–4 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை அவசியம் அவர்களை மாற்றவேண்டுமென்ற விதிமுறையை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் அதைத்தான் முதலில் குறிப்பிட்டேன். ஆசிரியர்கள் காரணமாக தீங்கோ அல்லது வேறு பல சூழ்நிலைகளோ ஏற்பட்டால் அவர்களை மாற்றலாம். தவறுகள் ஏற்பட்டால் அவர்களை மாற்றலாம். அவசியமாக 3 வருடத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்று வைத்தால் அதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் ஆங்காங்கு ஏற்படும். தனியார் பள்ளிகளை எடுத்துக்



கொண்டால் 30 ஆண்டு காலம் 35 ஆண்டு காலம் ஒரே இடத்தில் ஒரே பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே மூன்று ஆண்டு காலத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டுமென்பது இல்லை. அவர்களாக விரும்பிக் கேட்டால், கணவன் மனைவி ஒரேயிடத்தில் சேர்ந்து இருக்கவேண்டுமென்று விரும்பினால் அவர்களை மாற்றம் செய்கிறோம். பள்ளியின் கட்டுப்பாடு அல்லது ஒழுங்கிற்கு தீங்கு ஏற்பட்டால் அப்படிப்பட்ட நிலையில் ஆசிரியர்கள் மாற்றப்படுகிறார்கள். அப்படிப்பட்ட முறை வைத்துக் கொள்வதுதான் நல்லது. மூன்றாண்டுக்கொருமுறை மாற்றும் நிலை வைத்துக்கொண்டால் அதிலே பல்வேறு சங்கடங்கள் வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு வை. பாலசுந்தரம், திரு கே. எஸ். கோதண்டராமையா இருவரும் இடம் மாறி உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, நகராட்சிகளில், ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்டவர்கள்-பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கு 17 சத வீதம்—31 சத வீதம் ஒதுக்கப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எங்கேயாவது அத்தகைய குறைபாடு இருக்கிறது என்று காணப்பட்டால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதை நிவர்த்திக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றுவதற்கு இப்போது இருக்கும் விதிமுறைகளில் கஷ்டம் இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன விளக்கம் தர இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றுவதற்கு விதிமுறைகளில் இடமிருக்கிறது. ஏற்கனவே ஒரு அட்-ஹாக் கமிட்டி போட்டோம். இப்போது இருக்கும் அதிகாரம், ஆணையர் கல்வித்துறை அதிகாரிகளோடு கலந்து கொண்டு மாற்றலாம் என்ற முறையில் இருக்கிறது.

## மதுராந்தகம் அரசு மருத்துவ மனை

* 361 வினா—திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவுக் (Out-patient block) கட்டடத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, மதுரையிலே இருக்கின்ற புற்று நோய் . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மதுராந்தகம் நகரிலுள்ள மருத்துவமனை பற்றிய கேள்வி. அடுத்த கேள்வியில் இதுபற்றி கேளுங்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு அந்த மருத்துவ மனைக் கட்டடத்தைப் புதுப்பிக்காவிட்டாலும், அடுத்த ஆண்டாவது புதுப்பிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓராண்டுக்கு முன்னர் அங்கே ஒரு கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமாக சில காரியங்கள் ஏற்கனவே நிறைவேறி விட்டன. ஆகவே, இப்போது பரிசீலனையில் இல்லை.

*Cancer Unit at Madurai.*

*362 Q.— Thiru J. James: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the Cancer Unit at Madurai is likely to be closed down due to non-availability of ethyl alcohol and rectified spirit ; and

(b) if so, the action taken by the Government to get over the difficulty and to run the unit ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, மதுரையிலுள்ள மாவட்ட மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவில் இயங்குகிற கதிர் சிகிச்சை இயந்திரம் பழுது அடைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அது பழுது பார்க்கப்பட்டு விட்டதா, இல்லையென்றால் இனிமேலாவது பழுது பார்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பழுதுபட்டதாகத் தகவல் இல்லை. ஆனால் அதற்குக் கிடைக்க வேண்டிய ஈதைல் ஆல்கஹால், ரெக்டிபைடு ஸ்பிரிட் கிடைக்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

Absolute alcohol has not been supplied from any sourse என்று சொல்லியிருக்கிறார்கள்.



அப்சலூட் ஆல்கஹால் கொடுப்பதற்கும் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஈதைல் ஆல்கஹால், ரெக்டிபைடு ஸ்பிரிட் இவைகளுக்கு இடையே என்னென்ன வேற்றுமை என்று எனக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அந்த சிகிச்சை வழங்குவதற்குத் தேவையான அவசியமான இவற்றைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அதற்கு அரசு உத்தரவிட்டு இருக்கிறது. இப்போது தொடர்ந்து அந்தத் துறை பணியாற்றுகிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இப்போது வெளி மார்க்கெட்டில் ரெக்டிபைடு ஸ்பிரிட் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதனால் மருத்துவர்கள் சாராய விளக்கு ஏற்றுவதற்குக் கூட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதை மார்க்கெட்டில் தாராளமாக கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது எனக்குரிய கேள்வி அல்ல. ஆனால் மருத்துவ மனைக்குக் கிடைக்க வேண்டிய the requirement of rectified spirit and mythilated alcohol for the college is 80 litres. அந்த 80 லிட்டர் தேவைப்படுவதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, கான்சர் போன்ற இப்படிப் பட்ட பயங்கரமான வியாதிகளுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்காமல் இருக்கின்றன. முன்பு கூட அறிஞர் அண்ணா அவர்களுக்கு சில அத்தியாவசியமான மருந்து தேவைப்பட்டது என்று அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்டது. அப்படிப்பட்ட அத்தியாவசியமான மருந்துகளை வெளிநாட்டிலிருந்து முன்கூட்டியே வரவழைத்து வைத்தால் பலருக்கு வியாதியைக் குணப்படுத்த வசதியாக இருக்கும். அதை அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வெளிநாட்டிலிருந்து மருந்துகள் மட்டுமல்ல, அந்த மருந்துகளை எப்படி உடலில் பயன்பெறச் செய்வது என்பதற்கும் போதுமான கருவிகள், வசதிகள் இல்லை. அதற்கு முக்கியமான காரணம் அந்த அளவுக்கு பொருளாதார வசதி இல்லாததுதான். அதனால்தான் அவற்றைப் பெற முடியவில்லை. வெளிநாட்டுச் செலாவணி பெறுவதில் பல்வேறு தடைகள் இருக்கின்றன. மத்திய அரசு அந்த அளவுக்கு வெளிநாட்டுச் செலாவணி அனுமதிப்பது இல்லை. கோபால்டு கருவி பெறுவதற்காக 4—5 ஆண்டு காலமாக மத்திய அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டு வருகிறோம். கிடைக்கவில்லை. இப்படி இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அண்மைக் காலத்தில் கதிர்வீச்சு முறையில் சிகிச்சை அளிப்பதற்காக பம்பாயில் அப்படிப்பட்ட சிகிச்சைக் கருவிகள் செய்து தரப்படுகின்றன என்று அறிகிறோம். இப்படிப்பட்ட உள்நாட்டில் தயாரிக்கும் கருவிகளைப் பயன் படுத்திக் கொள்ள அரசு முயற்சிக்கும்.

பகல் 30. திரு. எஸ். வடிவேல் : சித்த வைத்திய முறையில் புற்றுநோயைத் தீர்க்க மருந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அரசு ஆலோசனை செய்ததா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : புற்றுநோய், ஏற்படுகிற இடத்தினாலும், அதனால் ஏற்படுகிற விளைவுகளாலும் பலவகை. சித்த வைத்திய முறையில் சில வகையான புற்றுநோயைக் குணப்படுத்தி இருப்பதாக சித்த வைத்தியர்கள் சொல்கிறார்கள். நானும் அதற்கான படங்களைப் பார்த்திருக்கிறேன். அது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அலோபதி மருத்துவர்கள்—சித்த மருந்து சில வகையான புற்றுநோய்க்குத்தான் பயன்படும், எல்லா இடத்திலும் ஏற்படுகிற, உடலுக்குள்ளே வளர்ந்து நெருக்கடியை உண்டாக்குகிற புற்றுநோய் வகைகளுக்குப் பயன்படாது என்கிறார்கள். புற்றுநோய் வகை, அது வளர்கிற கட்டம் ஆகியவற்றைக் கொண்டு பார்க்கிறபோது எல்லா நிலையிலும் சித்த மருந்துகள் பயன்படவில்லை என்று கருத வேண்டியுள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கான்சர் மிகவும் கொடிய நோய். ஏற்கனவே மதுரையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பேசும்போது மிதிலேடெட் ஸ்பிரிட், டினேசர் ஸ்பிரிட், ரெக்டிபைட் ஆல்கஹால் போன்றவை கிடைக்காததுபற்றிச் சொன்னார்கள். இதைப் பற்றி எம்.எஸ்.டி.க்குத் (M. S. D.) தெரிவித்தார்களா ? அதற்கு பதில் M.S.D. யிலிருந்து என்ன வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவர்களுக்குத் தேவையான அளவு கிடைக்கச் செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

The D.M.E. has since reported that 15 litres of absolute alcohol and 15 litres of rectified spirit have been received from the Medical Stores Depot for use of Madurai College, Madurai.

என்பதாகக் கூறியதிலிருந்து அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளித்திருப்பதாகத்தான் செய்திகள் இருக்கின்றன.

திரு. கே. எ. வகாப் : புற்றுநோய்ச் சிகிச்சைக்கு மிகவும் தேவைப்படுகிற கோபால்டு பெறுவதற்கு மத்திய அரசாங்கம் அந்நியச் செலாவணியை விடுவிப்பதில் மிகவும் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியாக அதிகாரிகளை அங்கே அனுப்பியாகிலும் குறைந்த காலத்திற்குள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற நமது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய அரசு தமிழ்நாட்டின் தேவையை மட்டும் நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பைமட்டும் ஏற்கக் கூடிய நிலைமையில் இல்லை. பல்வேறு மாநிலத் தேவைகள் நெருக்கடிகள், அந்நியச் செலாவணி சங்கடம் ஆகியவற்றால் மறுத்துவிடுகிறார்கள்.



நம்முடைய தேவைக்கு தமிழக அரசும் அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. அண்மையில் உள்நாட்டிலேயே கிடைக்கும் என்று அறிந்தபோது அதை வாங்குவதற்கும் அரசு முயற்சி எடுத்திருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : நான் கடந்த வாரம் மதுரை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றபோது சாதாரண மருந்துகள் கூட கிடைக்கவில்லை, வார்டுகளில் மூட்டைப்பூச்சி தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்கிறார்களே..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வியை ஒட்டியது அல்ல. இதை நான் அனுமதிக்கவில்லை.

திரு. க. உரோ எட்மண்ட் : அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து சித்த வைத்திய முறையில்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சித்த வைத்திய முறைக்கு அமைச்சர் அவர்கள் முன்பே பதிலளித்திருக்க வேண்டியதில்லை. அந்தப் பதிலின் மேல் நீங்கள் இப்போது மூலக்கேள்வியோடு சம்பந்தப்படாத சித்த வைத்திய முறைபற்றி கேள்வி போடுவதை நான் அனுமதிக்கவில்லை. அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவோ விஷயங்கள் தெரிந்திருக்கலாம். மூலக்கேள்விக்கு சம்பந்தப்படாத கேள்விகளை எல்லாம் போட்டு அவற்றைத் தெரிந்து கொள்ள நான் அனுமதிக்க முடியாது.

Dr. H. V. HANDE : The Hon. Minister has said that now there is availability of ethyl alcohol. Is the Hon. Minister aware that in most of these cases it is because the indent is not placed sufficiently earlier even when the stocks are getting slowly depleted? At that stage itself if the indent is placed, this sort of difficulty can be avoided. Will it be possible for the Hon. Minister to give a blanket order to this institution to see that indents are placed sufficiently in advance to enable them to have adequate stock always?

The Hon. Thiru K. ANBAZHAGAN : The information given here is this. It is stated that the Board of Revenue has allotted 16,000 litres of rectified spirit/methylated spirit to the Medical Stores Depot during October, 1971. The two distilleries have also been instructed to continue to supply to the Medical Stores Depot as per rate contract. The Board has also set apart 2,000 litres of denatured spirit for sale, only to Registered Medical Practitioners in Madras City and the Collector of Madras has been authorised to allot the said quantity of 2,000 litres from Tiruchirappalli Distilleries and so on. Therefore the arrangement is there. The Medical Stores Depot is under the control of the Central Government. They should have purchased these things earlier and they should supply to the hospitals. Whenever it is found that the thing is not available or the drug is not available with the Depot, then the hospital authorities go to the outside agencies to purchase all those things.

சொந்தத்தில் தியேட்டர்களைக் கட்டி நடத்த அனுமதி அளிக்காவிட்டாலும், தியேட்டர்கள் மூலம் நல்ல வருவாய் கிடைப்பதால், தியேட்டர்களைக் கட்டி வாடகைக்கு விட அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவுக்கு நிதிவசதி இருந்து, வேறு பல பணிகளுக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் அதுபற்றி யோசனை செய்யலாம். இப்படிப்பட்ட கோரிக்கை எந்தெந்த உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வருகின்றனவோ, அவைகளின் நிதி வசதியைப் பார்த்து முடிவு செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : சென்னை மாநகராட்சி இப்படி திரைப்பட அரங்குகளைக் கட்ட முன்வந்தால் அரசாங்கம் அதற்கு உதவி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களிடத்திலிருந்து கோரிக்கை வர வேண்டும். அதற்குப் பின்னால் அதுபற்றி பரிசீலனை செய்யவேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போது சில பல பணிகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதிவசதி இல்லாததால் அரசாங்கம் மாநகராட்சிக்கு கடனும், மானியமும் அளித்து வருகிறது. ஆகவே, கோரிக்கை வந்தால் நிதிவசதியைப் பொறுத்து பரிசீலனை செய்யலாம்.

திரு. செ. காவேரிமணியம் : நகராட்சிகளும், ஊராட்சிகளும் நிதி வசதி இருக்கும்போது, திரையரங்குகளைக் கட்ட விரும்பினால் அரசாங்கம் அதற்கு மானியம் கொடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைகளிடம் இருந்து விண்ணப்பம் வந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம். திரையரங்கு கட்டுவதற்கு நிதி வசதி செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. த. சோணையா : சினிமாத் தியேட்டர்களைக் கட்ட மாநகராட்சிக்கு அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நகராட்சிகளும், மேஜர் பஞ்சாயத்துக்களும் தியேட்டர்களைக் கட்ட அனுமதி கேட்டால் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போடவும்.

**உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள்.**

*360 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் புதிதாகப் பணியாளர்களை நியமனம் செய்யும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் நியமனம் செய்யப்படுகின்ற ஊழியர்கள் நீண்ட காலமாக ஒரே இடத்தில் இருப்பதால் வேலை மந்தம் ஏற்படுகிறது. ஆகவே



அவர்களை ஒன்றியம் விட்டு ஒன்றியத்திற்கு மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே அந்த உரிமை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களை அரசு ஊழியர்களைப் போல கருதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குறைந்த சம்பளம் உள்ள ஊழியர்களை ஆணையர்களே நியமிக்கலாம். அதற்கு மேல் 300 ரூபாய்க்கு குறைந்த சம்பளம் அளிக்கும் பணிகளுக்கு நியமனக் குழு ஊழியர்களை நியமிக்கிறது. 300 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் அளிக்கப்படும் பணிகளுக்கு மாநில அளவில் அமைக்கப் பட்டிருக்கின்ற தேர்வுக் குழு பணியாளர்களை நியமிக்கிறது. அதைப் போலவே, நகராட்சிப் பணி, பொறியியல் நீர்ப்பணி, நகர அமைப்புப் பணி, பொதுசுகாதாரப் பணி, கல்விப் பணி போன்றவைகளுக்கு 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் அளிக்கப்படும் பணிகளுக்கு இந்த தேர்வுக்குழுவே ஊழியர்களை நியமிக்கிறது.

திரு. த. சோணையா : ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிறவர்களை மாறுதல் செய்கின்ற அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருக்கிறது என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியங்களால் நியமிக்கப்படும் அதிகாரிகளை மாற்றுவதற்கு அதிகாரம் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, அதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதி காரம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங் களால் நியமிக்கப்படும் ஊழியர்களை மாற்றுவதற்கு அவர்களின் இசைவைப் பெற்று மாற்ற வேண்டும். இசைவு கொடுக்காவிட்டாலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் இவைகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களை தேர்ந்து எடுக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியத் தேர்வுக் குழு ஏற்றுக் கொண்டிருக் கிறது. ஆனால் இப்போது கல்வி சம்பந்தபட்ட அதிகாரிகள் அதில் இல்லை. ஆகவே, அந்தக் குழுவில் கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் போட்டு அவர்கள் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதை ஊராட்சி ஒன்றி யங்களும் ஊராட்சி மன்றங்களும் சிறந்ததாக ஏற்றுக் கொள்ள மாட்டார் கள். ஏற்கெனவே இருக்கிற நியமனக் குழு விதிமுறைப்படி நடக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

Dr. H. V. HANDE: Sir, in view of the fact that there is lot of difficulty in getting rectified spirit and ethyl alcohol, will it be possible for the Hon. Minister to ensure with the help of the Hon. Minister for Revenue also to see that ethyl alcohol and rectified spirit are dispensed only for the exclusive purpose of units like X-ray for a medical purpose and not for other purposes, so that this problem can be completely solved.

The Hon. Thiru K. ANBAZHAGAN: On the occasion when the department found it difficult to get such alcohol, it was ordered through the Collector to supply the necessary quantity and I hope that it continues now.

### *Cross breeding of sheep.*

*363 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to develop cross breeding of sheep and goats of Russian and Indian origin: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உதகை சாந்தி நல்லாவிலுள்ள செம்மறி ஆட்டின் அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் ரஷ்ய உயரின செம்மறி ஆடுகளுடன் இந்திய நீலகிரி இன செம்மறி ஆடுகளைக் கொண்டு கலப்பினப் பெருக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 25 கிடாக்களையும் 100 பெட்டை ஆடுகளையும் கொண்ட 125 ரஷ்யன் மெரினோ செம்மறி ஆடுகள் ரூ. 1,82,495 செலவில் செப்டம்பர் 72-ல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலைக்கேற்றவாறு அதிக அளவு உயர்ரக கம்பளி ரோமம் தரும் ஒரு புது செம்மறி ஆட்டினத்தை அபிவிருத்தி செய்யப்படும். ரஷ்ய உயரின வெள்ளாடுகளுடன் இந்திய நீலகிரி வெள்ளாடுகளைக்கொண்டு கலப்பினப் பெருக்கம் செய்யும் உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: உதகையில் சாந்திநல்லாவில் அமைந்திருக்கிற ஆட்டுப்பண்ணையில் நல்ல ரோமம் தரக்கூடிய ஆடுகள் இருக்கின்றன. தமிழகத்தில் உள்ள மற்ற குளிர்ப்பகுதிகளிலும் இந்த இன ஆட்டுப் பண்ணையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ரஷ்யாவில் மிகவும் குளிர் நிலையில் வளர்ந்த ஆடுகள் மிக்க ரோமம் தருகிற ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. நீலகிரியில் நல்ல செம்மறி ஆட்டு இனம் இருக்கிறது. என்றாலும் ரஷ்யா ஆடுகள் 7 முதல் 10 கிலோ வரை ரோமம் கொடுத்தால் இவை 1.2 கிலோதான் கொடுக்கின்றன. ஆகவே இந்த ஆடுகளோடு ருஷ்ய இன ஆடுகளைச் சேர்த்து இனப்பெருக்கம் செய்து இந்த நாட்டின்



தட்ப வெப்ப நிலையில் வளர்வதற்கேற்ற ஒரு புது இனத்தை உண்டாக்கினால் அது அதிக அளவில் ரோமம் தரக்கூடும். அதுதான் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பண்ணையில் செய்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தப் பண்ணையில் இறக்குமதி செய்யப்படுகிற ஆடுகள் எல்லாம் இப்போது நல்லமுறையில் ஈல்டு தருகின்றனவா? முன்பு மார்க்கெட்டிங் விஷயத்தில் கஷ்டம் இருக்கிறது என்று சொன்னார்களே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இங்கே ருஷ்ய இன ஆடுகளைக் கொண்டு நம்முடைய செம்மறி ஆட்டு இனத்தை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிக்கிறோம். இவை விற்பனை நோக்கத்துடன் அல்ல. கிடைக்கக்கூடிய ரோமத்தை அவர்கள் எப்படி விற்பனை செய்யவேண்டுமோ அப்படி செய்கிறார்கள். அது முக்கியமான கேள்வி அல்ல.

திரு. கு. அ. பொம்மன்: கிராமங்களில் உள்ளவர்கள் செம்மறியாட்டு இனத்தை விருத்தி செய்து கொள்ள, ரஷியன் கடாக்களைக் கேட்டால் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நம் நாட்டில் நீலகிரி போன்ற குளிர் பிரதேசத்தில்தான் அவை நீண்டகாலம் வாழ்ந்து பயன் அளிக்க முடியும். அவற்றைக் கொண்டு நம்முடைய நாட்டு செம்மறியாடுகளிடையே இனப் பெருக்கம் செய்து, நம்முடைய நாட்டு தட்பவெப்ப நிலைக்கேற்ற ஆட்டு இனம் ஒன்றை பெருக்கி, அதன் கடாக்களை கிராமப்புறங்களில் உள்ளவர்கள் கேட்கிறபோது வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

Thiru K. S. KOTHANDARAMIAH: A small number of Russian sheep and goats are kept in Hosur cattle farm. They are developing well and also giving plenty of wool. Will the Hon. Minister kindly see that more such animals are supplied to this place, so that they can be distributed to other parts of the State also?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படுகிற இத்தகைய கால்நடைகள் நோக்கியதாக ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து வளர்க்கப்படுவதற்குத்தான் பயன்படுத்தப்படுவது முறையாகும். ஆனால், அதைத் தொடர்ந்து அதிலேயிருந்து இறக்கப்படுகிற புதிய இனங்கள் மூலமாக, பரவலாக ஆட்டுக்கடைகள் மூலமாக, இன விருத்திக்கு அவைகளைப் பயன்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, ரஷிய-இந்திய ஆடுகளுடைய இனப் பெருக்கம் செயற்கை முறையிலே நடைபெறுகிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இயற்கையாகவே நடைபெறுகிறது.

திரு. ந. தருமலிங்கம் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தருமலிங்கம் அவர்களுடைய கேள்வியைப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. த. சோலையா : தலைவர் அவர்களே, ரஷிய நாட்டிலிருந்து செம்மறி ஆடுகள் இங்கு இறக்குமதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், தமிழ்நாட்டிலிருந்தோ, இந்தியாவிலிருந்தோ வேறு எந்த நாட்டுக்காவது நமது ஆடுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நம்முடைய ஆடுகள் தரத்தில் உயர்ந்தவை அல்ல. பல்லாண்டுகளாக, அவைகள் தரம் குறைந்து போய், வலிவு குறைந்து போய் இருக்கின்றன. ஆகவே, வெளி நாடுகளுக்குத் தேவைப்படாது. இறைச்சிக்காக அனுப்புவதற்கும் நம்முடைய ஆடுகள் போதுமான இறைச்சியை, அதிக இறைச்சியைப் பெற்றுள்ளனவாக இல்லை.

(திரு. ந. தருமலிங்கம் இருக்கையிலிருந்து முன்பக்கமாக வந்து கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ந. தருமலிங்கம் தன்னுடைய இருக்கையிலே இருக்க வேண்டும். கேள்வி நேரத்திலே இங்கும் அங்கும் போகக்கூடாது.

திரு. எ. எம். இராஜா : இந்த ரஷிய ஆடுகளைக் கொண்டு வந்து கலப்பு முறைப்படுத்திய ஆடு உற்பத்தி செய்வது, ரோமத்திற்காகச் செய்யப்படுகிறதா, இறைச்சி தருவதற்கும் பயன்படுகிறதா என்பதைப் பற்றி, அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது முக்கியமாக கம்பளி ரோமம் அதிகமாகப் பெறுவதற்காகத்தான் செய்யப்படுகிறது. அவை உயர்ந்த வகையான கம்பளி தருகிறது என்று சொல்கிறார்கள். அந்தக் கம்பளியிலேயும் பல தரம் இருக்கின்றன. அதில் உயர்ந்த தரம் கொடுப்பது, அதிக அளவிலே கொடுப்பது ஆக உள்ள இனத்தை வளர்ப்பது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியிலே முக்கியமான கடமையாகும்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே இருக்கக்கூடிய செம்மறி ஆடுகள் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாச-

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாக இருக்கின்றன. அதே மாதிரி இந்தியாவில் இருக்கக்கூடிய செம்மறி ஆடுகளும் மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசமாக இருக்கின்றன. அவற்றிலே கலப்பின விருத்திக்கு முயற்சி எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி மைசூர் பகுதியிலே இருக்கிற மந்தியா ஆடுகளைக் கொண்டு தமிழ்நாட்டிலே இனப் பெருக்கம் செய்ய முயற்சி எடுக்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கிற கீழ்க்கரிசல் ஆடுகள் சற்று அதிகமான அளவுக்கு இறைச்சி தரக்கூடிய அளவில் இருக்கின்றன. அந்த இனம் இன்றைக்குப் பெருக்கப்படுகிறது. எந்த எந்த இனங்களில் அதிகப் பலன் கிடைக்கிறதோ அந்த அந்த இனங்களைத் தமிழ் நாட்டிலே பரவலாக வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : ரஷிய செம்மறி ஆடுகளை விட, ஹாலந்து நாட்டிலிருக்கிற ஆடுகளில் ரோமம் அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, ஆகவே, ஹாலந்து நாட்டிலிருந்து அப்படிப்பட்ட ஆடுகளை வரவழைத்து ரோமங்களைப் பயன் படுத்திக்கொள்ள அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த அளவு எனக்கு விவரம் தெரியவில்லை.

## கோழிப்பண்ணைகள்.

* 364 வினா—திரு. எ. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள வறட்சிப் பகுதிகளான பல்லடம், கோவை, அவினாசி வட்டங்களில் கோழிப்பண்ணைகள் அமைத்துக்கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## கும்முடிப்பூண்டித் துணைவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

* 365 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி துணை வட்டத்தில் உள்ள அரிசனக் காலனிகளான (1) புதூர், (2) எளாவூர், (3) பாலவாக்கம், (4) பழைய கும்மிடிப்

பூண்டி, (5) பெரிய சோழியம்பாக்கம், (6) நத்தம், (7) ஆயநல்லூர், (8) புதுவாயல், (9) தேர்வழி ஆகிய ஊர்களின் ஏழை அரிசன மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைகள் அளிப்பதில் மேன்மேலும் தாமதப்படுவதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : புதூர் :—4 (1) பிரிவின்கீழ் அறிவிப்பு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பர செயற்குறிப்பு வருவாய்த்துறை வாரியத் (நில வருவாய்) தின் பரிசீலனையிலிருக்கிறது.

எளாவூர், தேர்வழி—4 (1), 6 பிரிவுகளின் கீழ் அறிவிப்புகள் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. அவார்டு செய்து செங்கை மாவட்ட ஆட்சியர் அரிசனங்களுக்கு விரைவில் பட்டா வழங்குவார்.

பாலவாக்கம்—பிரிவு 4 (1) முன்மொழிவு ஏற்கப்பட்டு 4-11-1970-ல் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பர செயற்குறிப்பின் மீது மேலும் சில விவரங்கள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கேட்கப்பட்டுள்ளன.

பழைய கும்மிடிப்பூண்டி—பிரிவு 4 (1)-இன் கீழ் அறிவிப்பு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6-இன் கீழ் விளம்பல் அரசினால் ஏற்கப்பட்டுள்ளது.

பெரிய சோழியம்பாக்கம்—அவார்டு (Award) பாசாகி விட்டது. மனைப்பட்டாக்கள் விரைவில் கொடுக்கப்படும்.

நத்தம்—தற்பொழுது வீட்டு வசதி அளிப்பதற்கான குறிப்பேதும் அரசிடம் தேக்கத்தில் இல்லை.

ஆயநல்லூர், புதுவாயல்—1972 மார்ச் மாதத்தில் அவார்டு கொடுக்கப்பட்டது. விரைவில் மனைப் பட்டாக்கள் கொடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, விவரங்களுக்கு நன்றி. இப்படி 9 அரிசனக் காலனிகளிலும் மனைப்பட்டாக்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நல அதிகாரி அவர்கள் இந்த மாவட்டத்திற்கு அதிகமான தொகை அளிக்கப்பட்டால் நில ஆர்ஜிதம் செய்ய முடியும். ஆகவே சில தாமதப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆகவே, மிகுதியான தொகை அளிப்பதற்கும், 1973 இறுதிக்குள் இந்த 9 காலனிகளுக்கும் மனைப் பட்டாக்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் அரசு எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பணப்பற்றுக்குறை காரணமாகத் தாமதம் ஏற்படுகிறது. அடுத்த ஆண்டு நிச்சயமாக இந்த 9 காலனிகளுக்கும் பட்டாக்கள் வழங்கப்படும்.



திரு எ. க. துரைசாமி : அரிசனங்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதிலே நில உடமையாளர்களைச் சந்தித்து, அவர்கள் தருவதாகச் சொல்கிற நிலத்தை எடுத்துக் கொண்டால் தாமதம் ஏற்படாது. ஆனால், வெகு அருகாமையிலேயே இருக்கிற நிலங்களை விட்டுவிட்டு, ஒரு மைல், இரண்டு மைலுக்கு அப்பால்கூட இருக்கிற நிலங்களை, அதன் உடமையாளர்கள் தர மறுக்கிறபொழுது, அதனால் காலதாமதம் ஏற்பட்டு, நீதிமன்றத்திற்கு அவர்கள் செல்கின்ற அவல நிலையைத் தவிர்க்க இலாகாவுக்கு குறிப்பாக, தனித் தாசில்தாருக்கு அப்படிப்பட்ட ஆலோசனை வழங்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதிகாரிகளோ, சட்டமன்ற உறுப்பினர்களோ சந்தித்துப் பேசி, நிலம் வாங்குகின்ற முறையும் அரசாங்கத்திடம் இருக்கிறது. அதுவும் தவிர அரசே தேவையானது என்று கருதினால், அந்த அந்த இடங்களிலிருந்து எடுத்து விநியோகிக்கும் நிலையும் இருக்கிறது. ஆக, முதலில் குறிப்பிட்ட வழியிலும், இரண்டாவது குறிப்பிட்ட வழியிலும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது.

### *Transport of night soil.*

*366. *Q*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to prohibit the carrying of night soil on head ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) துப்புரவுப்பணி புரிவோர் கழிவுப்பொருட்களைத் தலையில் ஏந்திச் செல்லும் முறையை அறவே ஒழிக்கத் திட்டம் ஒன்றைத் இத்துறை பரிசீலித்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : இதுபற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில சர்க்கார் இம்மாதிரி, தொழில் வளர்ச்சியும், நாகரிகமும் ஏற்பட்டிருக்ககூடிய காலத்தில், செய்வது கேவலம் என்று, அதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று, இந்த சர்க்காரைக் கேட்டுக் கொண்டு ஆலோசனை வந்ததா ? அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, இந்த வெள்ளி விழா ஆண்டிலே அதை அடியோடு நீக்கிவிட வேண்டுமென்ற செயற்குறிப்பும் மத்தியஅரசுக்கு மாநில அரசினால் அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு அதை ஒத்துக்கொண்டு நிதி உதவி செய்தால், இந்த ஆண்டே இம்முறை அறவே நீக்கப்பட்டுவிடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இது சமுதாயத் திற்கே ஒரு இழுக்காக இருக்கிற காரணத்தால், உடனடியாக இதை நீக்குவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது? உடனடியாக இதை நீக்க ஆணை பிறப்பிக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதை அடியோடு நீக்க வேண்டுமென்று சொன்னால், பூமிக்கடியிலே சாக்கடை, பிளஷ்-அவுட், லெட்ரீன் எல்லாம் கட்டப்பட வேண்டும். இதற்கு நிறையப் பணம் செலவாகும். அந்த செயற்குறிப்பும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. 14 கோடி இதற்காக ஆகும் என்று சொல் கிறார்கள். மத்திய அரசு நிதி உதவி கொடுத்தால், பிரச்சினை தீர்ந்து விடும். ஒவ்வொரு வீட்டிற்கு ஒவ்வொரு பிளஷ்-அவுட் என்று இல்லாவிட்டாலும், 5, 6, வீடுகளுக்கு ஒரு பிளஷ்-அவுட், அல்லது செப்டிக் டாங்க் (Septic tank) கட்டி, எப்படியாவது இதைச் செய்யலாம் என்று மாநில அரசு இப்பொழுது பரிசீலனை செய்து வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தக் கேள்வி, நைட்சாயிலை தலையில் கொண்டுபோகிற முறையை எடுத்துவிட வேண்டுமென்பது. நம் அமைச்ச ரவர்கள் கூறிய பதிலிலிருந்து, இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்று தெரிந்தாலும்கூட, இப்பொழுது இருக்கிற முறையையாகிலும் மாற்றி அமைப்பதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்த முறை நீக்கப்பட வேண்டுமென்ற முறையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தி லிருந்து அவர்களுக்கு கரண்டிகள் கொடுக்கப்படுகிறது தள்ளு வண்டிகள் கொடுக்கப்படுகின்றன. கையிலே அணிந்துகொள்ள கிளவுஸ் கொடுக்கப்படுகிறது. காலிலே அணிந்துக்கொள்ள கம்பூட்ஸ் கொடுக்கப்படுகிறது. கையிலோ, காலிலோ தொடாமல் இருக்க, கரண்டியாலே அள்ளிப் போடவும், தலையிலே தூக்காமல் இருக்க தள்ளு வண்டி கொடுக்கப்பட்டும், அவைகளை ஊருக்கு ஒதுக்குப்புறமாக கொண்டு சென்று போடுகிற அளவுக்கு, அதற்கென்று லட்சம் ரூபாய்க்கு மேல் ஒதுக்கி, இந்த சாதனங்கள் வழங்கப்பட்டன. அதை அறவே ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் மாநில அரசு இந்தப் புதிய திட்டத்தை இப்பொழுது ஆலோசித்துக் கொண்டுவருகிறது.

திரு சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த தள்ளுவண்டிகள் மற்ற உபகரணங்கள் எல்லாம் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அவை எல்லா இடங்களுக்கும் கொடுக்கப்படுவது கிடையாது. டவுன் பஞ்சாயத்து போன்ற இடங்களிலே இப்பொழுதும் தலையிலே தூக்குவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, தள்ளு வண்டிகளாவது எல்லா இடங்களுக்கும் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்,



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்பொழுது எல்லா முனிசிபாலிட்டிகளிலும் இந்தத் தள்ளு வண்டிகள் இருக்கின்றன. மற்ற கிராமங்களில், அவர்கள் கொல்லைப்புறங்களில் போகிற பழக்கம் இருக்கிற காரணத்தால், கிராமங்களுக்கோ, மற்ற இடங்களுக்கோ கொடுப்பதற்கு இல்லை. தற்சமயம் பெரிய பெரிய முனிசிபாலிட்டிகளுக்குத்தான் இந்தத் தள்ளு வண்டிகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

### ஸ்டான்லி மருத்துவ மனை கட்டட பராமரிப்பு மானியம்

*333 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனைக்காக ஒதுக்கப்பட்ட பராமரிப்பு தொகையும், கட்டட விஸ்தரிப்பு தொகையும், சென்னை கால்நடைக் கல்லூரியின் அபிவிருத்திக்காக செல விடப்பட்டதா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### ஆண்டிப்பட்டித் தொகுதியில் கண்மாய்கள்.

*334 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதியில் லட்சுமிபுரத்தில் கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

*335 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த தெப்பம் பட்டியில் ஓர் கண்மாய் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டது.

### மணல்மேட்டிற்கருகில் தரையடிப்பாலம்

*336 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி மணல்மேட்டையும், தென்னார்க்காடு மாவட்டத் தையும் இணைக்க தரையடிப்பாலம் ஒன்று அமைக்கும் திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்ற திட்டம் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தென் ஆற்காடு மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய ரோடுகள் ஒன்று மீன்சுருட்டி லோயர் அணைக்கட்டிலும், இன்னொன்று மாயூரத்தி லேயும்தான் இருக்கின்றன. இடையிலே நூற்றுக்கணக்கான கிராமங்கள் கொள்ளிடத்தினால் பிரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் இடையே உள்ளவர்கள் விவசாயப் பொருட்களைக் கொண்டு போவதற்கு வசதியாகவும், காட்டுமன்னார் கோவிலில் கட்டப்படும் மார்க்கெட் காம்ப்ளெக்சுக்கு உதவியாக இருக்கக் கூடிய வகையிலேயும் தஞ்சை ஜில்லாவிற்கும் தென் ஆற்காடு ஜில்லாவிற்கும் இடையிலே மணல்மேட்டுக்கருகில் ஒரு தரைப்பாலம் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த தரையடிப்பாலம் கட்டுவதற்கும், இணைப்புச்சாலை போடுவதற்கும் 65 லட்சம் ரூபாய் செல வாகும் என்று மதிப்பிடப்படுகிறது. ஒன்று ஆணைக்கரை சத்திரம், மற் றொன்று அணைக்கட்டிலும் என்ற முறையிலே இரண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

## கோட்டூர்புரத்தில் நிலம் கையகப்படுத்துதல்

*367 வினா—திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அடையாறு ஆற்றங்கரையில் உள்ள கோட்டூர்புரத்தில் வீடு கட்டும் வாரியம் நிலம் வாங்கியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், யார் யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். 400 கிரவுண்டும் 2,159 சதுர அடியும் நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டது.

(இ) மேற்கூறிய நிலமானது எம்.ஏ.சி. (M.A.C.) அறக்கட்டளை யிடமிருந்து ரூபாய் 50,34,691·51 அளிக்கப்பட்டு நில ஆர்ஜித தனித் துணை ஆட்சியாளர் மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டது.

DR. H. V. HANDE : May I know the total amount paid to various other persons from whom this amount was collected? The Hon. Minister mentioned the name of one individual. The total amount paid is said



to be Rs. 50 lakhs. May I know whether it is possible to say that the entire area will be allotted only to the lower middle class and poor class and not for upper and upper middle class ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்த நேரத்திலேயே அது உயர்நீதிமன்ற நீதிபதி களுக்கும், அதிக வருவாய் உள்ளவர்களுக்கும், மத்திய வருவாய் உள்ள வர்களுக்கும் வீடு கட்டுவதற்காகத்தான் என்ற முறையிலேதான் ஆர்ஜிதப் படுத்தப்பட்டிருக்கிறது. எக்னமிக்கலி வீக்கர் செக்ஷன்பற்றி டாக்டர் ஹண்டே அவர்கள் கேட்கிறார்கள். அதற்கும் 625 பிளாட்கள் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆத்தூரில் மின்வாரியத்தின் வருவாய்ப் பிரிவு

*368 வினா—திரு. மூ. மாரிமுத்து : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூரில் மின்சார வாரியத்தின்கீழ் உள்ள இரண்டு வரு வாய்ப் பிரிவுகளில் ஒன்றினை தம்மம்பட்டிக்கு மாற்றித்தர கோரிக்கை ஏதேனும் அண்மையில் பெறப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஆத்தூரிலுள்ள இரண்டாவது வருவாய்ப் பிரிவை ஆத்தூரி லேயே வைத்திருக்க வேண்டுமென்று கடைசியில் மின்சார வாரியம் முடிவு செய்துள்ளது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, அந்த வருவாய்ப் பிரிவை ஆத்தூரிலேயே வைக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருப்ப தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தம்மம்பட்டியிலே வைக்கப் படப்போவதில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டிற்கும் இடை யிலே வாளப்பாடியிலே அதை வைக்கவேண்டுமென்று சட்ட மன்ற உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். கீழ்மட்டத்திலே உள்ள அதிகாரிகளும் அதுபற்றி சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆகவே வாளப்பாடியிலே அதை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வாளப்பாடியில் வைக்க வேண்டும் என்றும், தம்மம்பட்டியில் வைக்க வேண்டும் என்றும் இரண்டு பக்கத்தி லிருந்தும் சட்ட மன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விட்டார்கள். அதனால்தான் இரண்டிற்கும் இடையிலே ஆத்தூரிலே வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

### மலைக் கோட்டாலத்திலுள்ள வனத்துறை நிலங்கள்

*369 வினா—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மலைக்கோட்டாலம் பகுதியிலுள்ள விவசாயத்திற்கேற்ற காட்டு நிலங்களை விவசாயிகளுக்கு வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்தும், வருவாய்த் துறை வாரியத்திலிருந்தும் பரிந்துரைக் குறிப்புகள் வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று ரிஷிவந்தியம் தொகுதியிலே பல காட்டு நிலங்களை நில ஒப்படைவு செய்யவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக்கொண்டுவந்தும்கூட இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து என்னுடைய பகுதியிலே உள்ள—என்னுடைய பகுதி காட்டுப் பகுதியாக இருப்பதால் நிலங்களை எடுத்து நிலம் இல்லாத ஏழை எளியவர்களுக்கு நிலம் ஒப்படை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்குத்தான் வருவாய்த் துறை வாரியத்திலிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்தும் பரிந்துரைக் குறிப்புகள் வந்த பிறகு முடிவு எடுக்கலாம் என்று சொன்னேன்.

திரு. எ. க. துரைசாமி: காட்டு நிலங்கள் கூட ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அந்தப் பகுதியிலே உள்ள காட்டு நிலங்களைக் கொடுக்கவேண்டுமென்று வட்ட ஆட்சித் தலைவர், துணை ஆட்சித் தலைவர் ஆகியவர்கள் தெரிவித்திருந்தும்கூட, அந்த நிலங்களை வனத் துறையைச் சேர்ந்தவர்கள் கொடுப்பதற்கு மறுத்து வருகிறார்கள். எனவே அப்படிப்பட்ட நிலங்களை உடனடியாகத் தருவதற்கு ஏற்ற முறையிலே அரசாங்கம் ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, எந்த எந்த வகையான நிலங்களைக்கொடுக்க வேண்டுமென்று வருவாய்த் துறையும் காட்டு இலாகாவும் முடிவு செய்துகொண்ட ஒப்பந்தப்படிதான் நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன. மேற்கண்ட நிலங்களைக் கொடுப்பதற்கு இப்பொழுது செயற்குறிப்பு இல்லை.



### *Diamond Crown for Goddess Meenakshi, Madurai.*

*370 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether a New Diamond Crown has been provided for Goddess Meenakshi Amman at Madurai; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ரூ. 14 லட்சம் மதிப்புள்ள வைரக் கிரீடம் ஒன்று திருப்பணிக் குழுவினராலும், ரூ. 2 லட்சம் மதிப்புள்ள தங்கக் கவசம் ஒன்று மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுவாலும், பொது மக்களிடமிருந்தும், கோயிலிலிருந்தும் வசூலான நன்கொடையால் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன வேலைகள் முடிவடைந்து அவ்வாபரணங்கள் தெய்வத்திற்கு 11—12—1972 அன்று அணிவிக்கப்பட்டன.

திரு ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பெரிய கோயில்களிலேயெல்லாம் வருமானத்தைச் சேர்த்து ஒரே இடத்திலே குவித்துக்கொள்கின்ற அந்த முறையை மாற்றி, அனாதை விடுதி, கல்லூரி, மருத்துவமனை போன்றவற்றிற்கு ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர் கோவில் வருமானத்திலிருந்து நிதியை ஒதுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்த வைரக்கிரீடம், கவசம் செய்தது கோவில் வருமானத்திலிருந்து செய்ய வில்லை. தனிப்பட்ட முறையிலே பக்தர்கள் கொடுத்த காணிக்கையிலிருந்து செய்து இருக்கிறார்கள். செய்தது போக மீதியிருந்தால் மற்றக் காரியங்களுக்குச் செய்கிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் செல்கின்றவர்கள், வைரக் கிரீடத்தையும், வைர மூக்குத்தியையும், வைரத் தோடையும் பார்த்துவிட்டு, அதைப்போன்று நமக்குக் கிடைக்கவில்லையே என்று நினைத்துக்கொண்டு கோவிலிலிருந்து வீட்டிற்குச் சென்றவுடன் வீட்டிலே சண்டைபோடுகிறார்கள். எனவே, ஆண்டவனுக்கு இதுபோன்ற அணிகலன்கள் போடுவதை நிறுத்துவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களின் துணைவியாரை மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு அனுப்பாமல் இருப்பது நல்லது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஆண்டவன் ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர் என்று கூறப்படுகிறது நாத்திகர்களால்.........

[1973 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பெண் தெய்வம் பற்றிய வினு .

திரு. எ. எம். இராஜா : அப்படிப்பட்ட ஆண்டவனுக்கு 10 லட்சம் ரூபாயைக் கொண்டுபோய்ப் போட்டு நகைகளாகப் போடுகிறோம். ஒரு தனிப்பட்டவர் 40 பவுனுக்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாது, குறை வாகத்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆகவே ஆண்டவனுக்கும் அந்தச் சட்டத்தைக்கொண்டுவந்து இவ்வளவுதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உச்சவரம்புகொண்டுவந்து, அந்தப் பணத்தையெல்லாம் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆண்ட வனேகூட 10, 20 லட்சம் ரூபாயில் வைரக்கிரீடம் செய்வதை விரும்ப மாட்டார் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டத்தால் அதைத் தடுக்க முடியாதா என்று கேட்டார்கள். இப் பொழுது சட்டத்தால் தடுக்கிற சூழ்நிலை இல்லை. சட்டங்களும் அதற்குக் கிடையாது. சமுதாயத்தின் நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அறங்காவலர்கள் நிறைய வருகிற பணத்தை, ஆண்டவனும் திருப்தி யடைகிற முறையிலே, மதுரை மீனாட்சியம்மன் மனம் குளிரத் தக்க வகையிலே ஏழை எளியவர்கள் நல்வாழ்விற்கான காரியங்களைச் செய்யலாம் என்று அவர்கள் யோசித்து இருக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய பாதுகாப்பிற்கும், மற்றும் சில நாட்டின் நல்ல காரியங் களுக்காகவும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து அதிகப்படியாக தங்கம் கிடைத்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாட்டினுடைய பாதுகாப் பிற்காக மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து நிறைய தங்கம் கொடுத்திருக்கலாம். இப்பொழுது கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை. ஆனால் சென்ற யுத்தத்தின்போது 1965 ஆம் ஆண்டிலே கொடுத்ததாக எனக்கு நினைவு. மதுரை மீனாட்சியம்மனேகூட இப்படிப்பட்ட ஆபரணங் களை விரும்பமாட்டார்கள் என்றுதான் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன்.

திரு. சொ. சுாவேரிமணியம் : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி யம்மன் கோயிலும், திருப்பரங்குன்றம் கோயிலும் ஒரே தேவஸ்தா னத்தைச் சேர்ந்தவை என்பது அனைவருக்கும் தெரியும். வசூலிக்கப் பட்ட தொகையிலே தாய்க்குமட்டும் வைரக் கிரீடம் வைத்துவிட்டு தன யனைத் தவிக்க விடுவதின் மர்மம் என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதிலே எந்த மர்மமும் கிடையாது. தாய்க்குச் செய்துவிட்டு மகனுக்கும் செய்யலாம்.



1973 மார்ச் 14]

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்ம னுக்கு வைரக் கிரீடமும், கவசமும் செய்யப்பட்டிருக்கிறது. அறங்காவலர் கள் வசூலித்து செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் வசூலிப்பதற்கு முன்னால், அரசாங்கத்திடம் அனுமதி பெற்றார் களா ? அல்லது அவர்களே குழுவை அமைத்து வசூலிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன். : தலைவரவர்களே, மூன்று வகைகளில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைக்கப்பட் டிருந்த திருப்பணிக் குழுவினரும், அறங்காவலர் குழுவினரும், கோவி லுக்கு வருகின்ற பக்தர்கள் இந்தத் திருப்பணிக்காக வைக்கப்பட்ட உண்டி யல் வசூலும் ஆக இந்த மூன்று வகையான வசூல்கள் செய்திருக் கிறார்கள். இந்த வசூல்கள் அரசாங்க அனுமதி பெற்று, தணிக்கைக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு செய்யப்பட்டுள்ளன.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மனுக்கு இது போல் வேறு கிரீடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அது பற்றி விவரம் எனக்குத் தெரியாது.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, மதுரை மீனாட்சிக்கு வைரக் கிரீடமாக, வைர அட்டிகையாக, இன்னும் பல கோவில்களுடைய சாமிகளுக்கு இருக்கின்ற நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு கோடி இருக்கும். இதைப் பற்றி பொருளாதார நிபுணர்கள் குழு ஏதாவது அமைத்து அதன் கருத்து அறிய இந்த அரசு முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மீனாட்சிக்கு இருக்கின்ற சொத்தின் மதிப்பைச் சொன்னால் காமாட்சிக்குப் பொறாமை ஏற்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, கோவில்களில் இப்படிப் பட்ட விலை மதிப்புள்ள நகைகள் இருப்பதால், குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, இதைத் தவிர்க்க விலை மதிப் புள்ள நகைகள் செய்யாமல் இருக்கக்கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, விலை மதிப் புள்ள நகைகள் செய்யலாமா என்பது சமுதாய ரீதியில் எழுந்துள்ள பிரச்னை. பாதுகாப்பு ரீதியில் அப்படிப்பட்ட நகைகள் ஒழுங்காக பாது காக்கப்பட்டு வருகின்றன.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, நாஸ்திகர்களை அறங்காவலர்களாக நியமிப்பதால் ஆண்டவனுக்குக் கோபம் வந்து, தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாற்றப்பட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நாஸ்திகர்களை எங்கும் அறங்காவலர்களாக நியமிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த மாதிரி நகைகள் பித்தளையாகவும் மாறவும் இல்லை.

திரு கே. எம். சுப்பிரமணியம் :

* * * *

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is a belief and fact that Goddees Meenakshiamman in Madurai has been the presiding diety of the State, showering her blessings and keeping the State in the fore front of Indian States in all walks of life. May I know whether special pujas will be arranged there for this reason ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது இங்கே கேட்கப்பட்ட கேள்விகளால் எந்த தோஷமும் ஏற்படவில்லை. ஆகவே சிறப்புப் பூசை எதுவும் தேவையில்லை.

டக்டர் ச. மு. பழனியப்பன் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி குறிப்பிட்ட சிலரை புண்படுத்தும்படியான கேள்விகளைக் கேட்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். திரு. பழனியப்பன் கேட்ட கேள்வியையும், திரு. சுப்பிரமணியம் கேட்ட கேள்வியையும் அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்திரவிடுகிறேன்.

திரு எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற கோவில்களில் எல்லாம் லட்சக்கணக்கான ரூபாய்கள் உண்டியல் மூலமாகவும், அறங்காவலர்கள் மூலமாகவும், பக்தர்கள் மூலமாகவும் வசூலிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படி வசூலிக்கப்படுகின்ற தொகையிலிருந்து தங்கக் கிரீடம், அட்டிகை போன்ற நகைகளைச் செய்யக்கூடிய நேரத்தில், மற்ற நல்ல காரியங்கள், ஆஸ்பத்திரிகள், வாசகசாலைகள் போன்றவற்றையும் சேர்த்து அமைக்க அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது போன்று ஆலயங்களில் பக்தர்கள் கொண்டு வந்து குவிக்கின்ற உண்டியல் காணிக்கை இவைகள் மூலமாகப் பெறுகின்ற பணத்தைக் கொண்டு அந்த ஆலயங்கள் சார்பில் மருத்துவ மனைகள், தங்குகின்ற விடுதிகள், கல்லூரிகள் இவைகள் எல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிலும் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, அந்தக் காரியங்கள் மிக அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், நமது

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



தமிழ் நாட்டில் இருக்கின்ற இப்படிப்பட்ட பல்வேறு ஆலயங்களுக்கு மக்கள் செல்லுகின்ற காரணத்தால், அவர்கள் ஆலயத்திற்கு காணிக்கையாகத் தருகின்ற தொகை குறைவாக இருந்தாலும், அந்த வட்டாரங்கள் அவர்கள் வருகை தருவதன் மூலம் நல்ல வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அமைச்சர் அறிக்கை.

### மருத்துவக் கல்லூரி பார்மஸி மாணவர்கள் வேலை நிறுத்தம் குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரது அறிக்கை.

Mr. DEPUTY SPEAKER : The Hon. Minister for Health will now make a statement under rule 82.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நேற்று நலத்துறை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றபோது மருத்துவக் கல்லூரியில் உள்ள பார்மஸி மாணவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்று நான் தெரிவித்தேன். இன்னும் கைவிடவில்லை என்று அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் தெரிவித்தார்கள். நேற்று முன்னாள் வேலைநிறுத்தம் செய்திருந்த பார்மஸி துறையில் உள்ள மாணவர்கள் நலத்துறை செயலாளரைச் சந்தித்து தங்கள் குறைகளைப் போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என்று கேட்டார்கள். எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அவர்களுக்கு விளக்கப்பட்டன. அதற்குப் பின்னர் என்னையும் சந்தித்து, தங்களுடைய குறைகளை அரசாங்கம் நீக்குவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கின்ற இந்த நிலைமையில் நாங்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டுவிட எண்ணுகிறோம், கைவிட்டு விடப்போகிறோம் என்று தெரிவித்துவிட்டுச் சென்றார்கள். அதற்கு பின்னர் அவர்கள் தாங்கள் பேசியது பற்றி அறிக்கை வர வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும், அந்த அறிக்கை வெளிப்படையாகப் பத்திரிகையில் வந்தவுடன் வேலை நிறுத்தத்தை விட்டு விடலாம் என்று அவர்களிடையே பேச்சு இருப்பதாகவும் நேற்று அறிந்தேன்.

நேற்று பகலில் நம்முடைய நலத்துறை செயலாளரைச் சந்தித்து மறுபடியும் அதற்கான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர்களிடத்தில் பேசப்பட்ட செய்திகளை நான் இங்கே மன்றத்தில் நேற்று எடுத்துச் சொல்லியிருக்கலாம். நேரம் இல்லாத காரணத்தால் அவற்றைச் சொல்ல முடியவில்லை. அதில் ஒன்று ஹாஸ்பிடல் பார்மசி ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டார்கள்.

ஹாஸ்பிடல் பார்மஸி ஏற்படுத்துவது என்பது ஒத்துக்கொள்ளப்பட்டு,
இரண்டு நாட்டுகளுக்கு முன்னர் நிதித்துறையாலும் ஒத்துக்கொள்ளப்
பட்டு, நலத்துறை சார்பில் டி. எச். எஸ். துறையில் திருச்சியில் உள்ள
மாவட்ட மருத்துவமனையில் தேவையான அடிப்படை மருந்துகளைத் தயாரிக்
கும் நிலையம் ஒன்று ஏற்படுத்துவது என்றும், அதே போல் மருத்துவக்
கல்வித் துறை சார்பாக சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவக்
கல்லூரி இடத்தில் அல்லது வேறு தகுந்த இடத்தில் மருத்துவக்
கல்வித் துறை சார்பாக மருத்துவ மனைக்குத் தேவையான அடிப்படை
மருந்துகள் தயாரிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது என்றும் முடி
வெடுக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13-ஆம் தேதி காலையில்
அதற்கான கையொப்பமிட்டு, அது உறுதி செய்யப்பட்டது. அதற்கு
செலவாக வேண்டிய தொகை, கட்டிடம் கட்ட ஏறக்குறைய மூன்று லட்ச
ரூபாய் ஒவ்வொரு இடத்திற்கும், அதற்குத் தேவையான கருவிகளை வாங்க

for manufacturing of equipment required, manufacturing tablets
capsules and ointments and for control of laboratory.

அதற்கு ரூ. 5,59,400-ம் பர்னிசர் முதலியவற்றிற்கு
40 ஆயிரம் ரூபாயும், ஆக ஏறத்தாழ ரூ. 8,99,000 செலவிலும்,
ரெகரிங் எக்ஸ்பெண்டிசர் நடைமுறைச் செலவு ரூ. 1,14,000 அளவிலும்,
ஓர்கிங் காபிடல் 2 லட்ச ரூபாயும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதற்
கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கப்படுவதற்கும், டீடெயில்டு
பிராஜக்ட் ரிப்போர்ட், நடைமுறைப்படுத்த நுணுக்கமாக ஆராய்ந்து செய்
வதற்கு 2 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, 6 திங்களுக்குள் செயல்படும் வகையில், கட்டிடம் கட்ட
முடியாமல் இருந்தாலும், தாற்காலிகமாக வாடகைக் கட்டிடத்
திலாவது செய்ய வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டு, ஆஸ்பத்திரி பார்மஸி
என்பது 1 ஆண்டுக்குள் செயல்முறையில் பயன்தரும் வகையில்
உருவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் ஸ்டிரைக்கை
கைவிட இந்த அறிக்கை வரவேண்டும் என்று நேற்று பகலில் செய
லாளரைச் சந்தித்துச் சொல்லிவிட்டுச் சென்றதாக அறிகிறேன். நேற்று
முன்தினம் ஸ்டிரைக் நீடிக்கக்காரணமில்லை என்று தெரிவித்தார்கள்.
அப்படித் தெரிவித்ததற்கு இன்னும் அரசு செய்திருக்கிற காரியங்கள்
உறுதுணையாக அமைந்துள்ளன. பார்மசி அசிஸ்டெண்டுகள் என்ற
பொறுப்பிலே இருப்பவர்களுக்கு கெஜட்டெட் தகுதி தர வேண்டுமென்று
அவர்கள் கேட்டிருந்தார்கள். பார்மசி அசிஸ்டெண்டுகளாகப் பணியாற்று
கின்றவர்களின் ஊதிய விகிதம், அளவு வேறு சிலருக்கு கெஜட்டெட் தகுதி
கிடைத்திருக்கிறது. கெஜட்டெட், அதாவது அரசு பதிவிதழில் இடம் பெறு
கின்ற நிலை அவர்களுக்கும் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டு
அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் குறையும்
ஒருவகையிலே நீங்குகிறது.

மற்றொன்று, பார்மசி மாணவர்களாகப் படித்து வெளிவரும்பொழுது
ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் பயிற்சி பெற வேண்டுமென்று கேட்கிறார்கள்.
ஒரு ஆண்டுக்காலப் பயிற்சி ஏற்கெனவே அரசால் ஒத்துக்கொள்ளப்பட்டது.
மினிமம் ரிக்கொயர்மெண்ட் என்று சொல்லி ஒரு ஆண்டுக் காலத்திற்கு



உதவித் தொகை அளிக்கப்பட்டு தனியார் மருத்துவ நிறுவனங்களிலே
பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். அதை $1\frac{1}{2}$ ஆண்டுக் காலம் என்று ஆக்க
வேண்டுமென்பதை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஏற்கெனவே உள்ள
விதிமுறைகளில் ஒரு ஆண்டு இருந்தால் போதும் என்று இருக்கிறது.

ஆனால் பிரைவேட் பார்மசிகளில் தனியார் ஃபார்மசூடிகல் இண்டஸ்ட்ரீ
களில், $1\frac{1}{2}$ ஆண்டுக் காலப் பயிற்சி பெற்றவர்களைத்தான் எடுப்போம் என்று
தெரிவிப்பதாகக் கூறுவதால், அதையும் அரசாங்கம் எவ்வளவு விரைவாகப்
பரிசீலனை செய்ய வேண்டுமோ அவ்வளவு விரைவாகப் பரிசீலனை செய்து,
ஏதாவது திருத்த வேண்டுமானால் சட்டத்தை அல்லது விதிமுறைகளைத்
திருத்துவதற்கு முயற்சிக்கும் என்றும் இப்பொழுது தெரிவித்துக்கொள்
கிறேன்.

அதேபோல ஏற்கெனவே அதிக எண்ணிக்கை உள்ளவர்கள் பயிற்சி
பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்தார்கள். ஏற்கெனவே
29 பேர்களுக்குத்தான் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால். புதி
தாக இப்பொழுது "டெபுடி ட்ரக்ஸ் கண்ட்ரோலர்" மூலமாக 34 பேர்
களுக்குப் பயிற்சியளிக்க வாயில்கள் உருவாக்கப்பட்டு, தனியார் மருத்துவ
நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டன. அதுமட்டுமல்ல, நானும் பேசிய நேரத்
தில் 38 பேர் அளவிற்கு ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

The Deputy Drugs Controller has reported that there are at present
34 candidates in various pharmaceutical concerns under training and
that the firms have informed their willingness to take up 38 more
candidates for training, என்று விவரம் உள்ளது.

இன்னும் 38 பேர்களை எடுத்துக் கொள்வதற்கு இசைந்திருப்பதால்
பெரும்பாலோருக்கு அந்த வாய்ப்பு ஏற்படும் என்று உறுதி செய்யப்பட்
டிருக்கிறது. ஆகவே, இந்த உறுதிகளின்மீது நல்லெண்ணத்தோடு வேலை
நிறுத்தத்தைக் கைவிடுவதாகச் சொன்னதை, நான் உள்ளபடியே முடிவுகள்
எடுத்துவிட்டார்கள் என்ற கருத்தில்தான் தெரிவித்தேன். இந்த அறிக்கை
வர வேண்டுமென்று செயலாளரிடத்திலே கேட்டுவிட்டுச் சென்றிருப்பதால்
இன்றைக்கு அதையும் நான் முன் வைத்திருக்கிறேன்.

ஆகவே, நேற்றைய தினமே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது என்று
சொன்ன அளவில் கைவிட்டதாக இன்று காலைவரையில் உறுதியாகவில்லை.
ஆகவே, நான் சொல்லிய வார்த்தைகளை வைத்துக்கொண்டு, அதனால்
தவறான கருத்து ஏற்பட்டிருக்குமானால், அதைத் திருத்தவும், அந்த
பார்மசி மாணவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு அரசு தன்னால்
இயன்ற முயற்சிகளைச் செய்திருக்கிறது என்பதை அவர்களுக்கும்
மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதற்கும் இந்த
அறிவிப்பை நான் இங்கே வழங்குகின்றேன்.

## 3. நடைமுறை கேள்விகள்.

(அ) பேரவைக்கு அமைச்சர்கள் தவருன தகவலைத் தருவதாகக் கூறியது குறித்து.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், விவாதம் கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரு வேலிட் பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புகிறேன். அதைக்கேட்டுவிட்டு அதற்குபிறகு அதைப்பற்றிசொல்லுங்கள். நான் பாதுகாப்பு கேட்கிறேன். On a point of order, Sir. I am asking a protection. I am requesting the Hon. Deputy Speaker to give us specific protection when this sort of persistent habit on the part of the Hon. Ministers continues. The Hon. Member specifically says that they have not withdrawn the strike. The Hon. Minister has specifically said that they have withdrawn the strike. The hon. Member has to acquant herself with facts and figures before she makes a statement. Therefore, what actually happens is, the Member is put into a tremendous disadvantage because on this particular issue she was not able to go back and reply. This is happening very often. I want specific protection. was not able to refute the Hon. Minister, as the Minister has the last The hon. Member word. And then after the whole thing was over, then the Hon. Minister comes..................(Hon. Minister Thiru K. Anbazhagan rose). I want to explain. நான் முடித்துவிடுகிறேன். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த மாணவர்கள் சொல்லி விட்டுப் போனதைக்கூட நான் சொல்லக்கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ருல் எவ்வளவு சுருக்கமாக இருக்கவேண்டுமோ அவ்வளவு சுருக்க மாக இருப்பது நல்லது. டாக்டர் ஹாண்டே அவர்கள், ஸ்பீச்சைப்போல் ஆரம்பிக்கிறீர்களே.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: ஸ்பெசிஃபிக்காக ரூல் 82 ஸ்டேட்மெண்ட் எதற் காக வரலாம் என்ருல், ஏதாவது இன்-ஆக்குவஸ் ஸ்டேட்மெண்டாக இருந்தால், 4 கோடி என்று சொல்வதற்குப் பதில் 40 இலட்சம் என்று சொன்ஞல் அதை ரூல் 82-ன் கீழ் தரலாம். ஆனுல் ஒரு டெலிபிரேட் பாயிண்டை அப்போஸ் செய்துவிட்டு, மெம்பர்களை சைலன்ஸ் பண்ணு கிருர்கள். அதற்குப்பிறகு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிருர்கள். அதை ரூல் 82-ன் கீழ் கொண்டு வருவதால் எங்கள் வாய் கட்டப்படுகிறது. நான் உங்களை 'இரிடேட்' பண்ணுவதற்காகச் சொல்லவில்லை. உதாரணமாக கிராஜுவேட் டீச்சர்களைப் பற்றிச் சொன்ஞர்கள். பாண்டிச்சேரியைப்பற்றிச் சொன்ஞர்கள்.

The same thing happened with regard to graduate teachers also. Because under Rule 82 our mouth is gagged. What I request is this. If an hon. Member wants to raise a privilege motion on such sort of things, he should



be given permission. It is not at all a healthy practice constantly for the Hon. Ministers to come forward with a Rule 82 statement. That is my humble submission. We are at a tremendous disadvantage.

ஏதாவது இன்-ஆக்குவஸ் ஸ்டேட்மெண்டாக இருந்தால் ரூல் 82-ன்கீழ் கொண்டுவரலாம். ஆனுல் ஒரு மெம்பர் சொல்கிறபோது அதை இல்லை என்று சொல்லி தெரிந்துதான் பேச வேண்டுமென்று சொல்லிவிட்டு பிறகு இந்த முறையில் சொல்கிருர்கள்.

This is a great disadvantage, I am making a request to the Hon. Deputy Speaker to put a blanket order that only very innocuous wrong statements of facts and figures should be covered by Rule 82 Statement.

நாங்கள் பேசும்பொழுது, தெரிந்து பேசவேண்டுமென்று சொல்லி எங்கள் வாயை அடைத்துவிடுகிருர்கள்.

" You must know the facts and then speak " என்று சொல்கிருர்கள். We are completely silenced before the public eye. It looks as though we are fools and we have not been posted with facts and figures.

இதனுல் எங்கள் உரிமை பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, விளக்கங்கள் அளிப்பதை விவாதம் நடத்த இடமில்லாத வகையிலேதான் கொண்டு வந்துள்ளோம். ஆனுல் அவர்கள் எழுப்பிய காரணத்தால் விளக்கு கிறேன்.

பிரதிநிதிகளாக நான்கு மாணவர்கள், மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த சேர்ந்தவர்கள் மூன்றுபேர்களும், சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஒருவரும், நேற்று முன்னுள் பகல் சுமார் 2 மணிக்கு என்னைச் சந்தித்து அரை மணி நேரம் பேச்சு நடத்திஞர்கள். நாங்கள் ஏற்கெனவே வேலை நிறுத்தத்தைக் கைவிடுவது என்று முடிவெடுத்துவிட்டோம் என்று என் னிடத்திலே சொல்லிய நேரத்தில், சென்னை மருத்துவக் கல்லூரி பார்மசி மாணவர்கள் என்ன செய்யப் போகிருர்கள் என்று நான் கேட்க அங் கிருந்தும் ஒருவர் வந்திருக்கிருர். அவர்களும் கைவிட்டுவிடுவார்கள் என்ற உறுதிமொழியைக் கொடுத்தார்கள். அந்த விளக்கங்களெல்லாம் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தெரியாது, ஏனென்ருல் அவர்களிடத்தில் அதைச் சொல்வதற்குச் சந்தர்ப்பமில்லை.

ஆகவே, அவர்கள் என்னிடம் பேசிச்சென்ற கருத்துக்களின் அடிப் படையில் சொன்னேனே தவிர, அவர்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்த வில்லை, அப்படி அறிவிக்கவில்லை என்ற செய்தி எனக்குத் தெரியாது. மாணவர் பிரதிநிதிகளை ஒவ்வொருநாளும் ஒவ்வொரு தடவையும் சந்தித்ததில், வேலைநிறுத்தத்தைக் கைவிடுகிறேும் என்று சொல்லிய செய்தியை உறுதிப்படுத்திக்கொண்டு சொன்னேன். நேற்று மறுபடியும் அவர்கள். அறிக்கை வந்ததும் நிறுத்துவதாகக் சொன்னேும், ஆனுல் அறிக்கை வரவில்லை என்று சொன்ஞர்கள். அந்த அறிவிப்பை அந்த

விவாதத்திலே சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்திருந்தார்கள் என்று நினைக்கிறேன். இந்த அறிவிப்பைத் தனித்தனியாக எடுத்துச் சொன்னால் காலதாமதம் ஆகும் என்பதாலும், மாணவர்களுடன் பேசியதாலும், அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டதாலும் மனநிறைவு பெற்றிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அதை அறிக்கை மூலம் சொல்ல வேண்டுமென்று நேற்று மாலை 4 மணிக்குச் சொன்ன காரணத்தால் இன்று காலை கூடும் சட்டசபைக்குக் கொண்டுவந்து சொன்னேன். ஆகவே, மாணவர்களின் உறுதிமொழியை நம்பித்தான் நான் சொன்னேனே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தவறான தகவல்களைத் தர வேண்டுமென்பதற்கோ, உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை வேண்டுமென்றே மறுப்பதற்கோ எவ்வித காரணமும் இல்லை. அதற்கு முதல் நாளே என்னிடம் தெரிவித்த உறுதிமொழிப்படி, ஏற்கெனவே கைவிட்டு விடுவதாக மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தீர்மானித்து விட்டோம் என்று சொன்ன நேரத்தில், சென்னையிலும் கைவிட்டுவிடுவார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டேன், நான்கு பேர்கள் வந்திருக்கிறீர்கள், இதில் சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்தவர் இருக்கிறார்களா என்று கேட்ட நேரத்தில், ஒரு மாணவரைக் காட்டி இவர் சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்தவர்தான் என்று சொல்லி, அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையின் காரணமாக நிறுத்திவிடுகிறோம் என்று சொன்னார்கள். ஏன் அவ்வாறு அந்த உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்று நேற்று மத்தியானம்தான் விசாரிக்க முடிந்தது. அவர்கள், அறிக்கை வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம், மற்றவர்களுக்குச் சொல்வதற்காக என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அரசு செய்திருக்கும் காரியங்களை அறிவிப்பாகத் தந்தேன். எனவே, எந்த விதத்திலேயும் அங்கத்தினர்களுக்குத் தவறான, உண்மைக்கு மாறான தகவல்களைக் கொடுப்பதற்குக் காரணமாக இருக்க மாட்டோம் என்பதைச் சொல்லி, ஆனால் உண்மையிலேயே ஒரே நேரத்திலே சொல்லப் படக்கூடிய உண்மைகள் யாவும் எல்லோருக்கும் தெரியாமல் இருக்கும் என்பதால் அதன் காரணமாக ஏற்படும் மாறுபாட்டைப் போக்குவதற்காக இந்த விளக்கத்தை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் அன்றைக்கே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அடிப்படைச் சம்பளம் 250, அகவிலைப்படி 146, அதைத் தவிர மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இப்பொழுது தரப்படும் இடைக்கால நிவாரணத்தையும் தந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். என்னுடைய பேச்சை மறுபடியும் டாக்டர் ஹாண்டே அவர்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகையைச் சொல்லவில்லையே தவிர, இடைக்கால நிவாரணம் தந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு அந்தத் தொகை 50 ரூபாய் என்று விசாரித்ததிலிருந்து தெரிகிறது. எனவே, இடைக்கால நிவாரணம் தந்திருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டர் மிகப் பெரிய பிரச்சினை அல்ல. வேண்டும் என்றே பேரவையை தவறான வழியில் நடத்திச் செல்ல வேண்டுமென்



நோக்கத்தில் அமைச்சரவர்கள் அப்படி தெரிவித்திருந்தால் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இப்போது அப்படி அல்ல. அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள்.

## 4 அவையுரிமைப் பிரச்சினை.

### கூட்டுறவுத் துறை அமைச்சர் அலையோசை பத்திரிகையின்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதாக பேரவைக்கு அறிவித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் அவர் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்கள் :—

"On 9th March 1972, during the discussion on the Budget for the year 1972–73 intervening the Hon. Member, Thirumathi T N. Anandanayaki, the Hon. Minister for Co-operation has stated as follows :—

"அம்மையார் ஏதாவது குற்றம் சாட்டுவதாக இருந்தால் பத்திரிகை மூலமாகக் குற்றம் சாட்டினால் வழக்குத் தொடரத் தயாராக இருக்கிறேன். 'அலை ஓசை' என்ற பத்திரிகைமீது அவதூறாக எழுதியதற்காக வழக்குத் தொடர்ந்திருக்கிறேன். அம்மையார் மீதும் வழக்குத் தொடர தயாராக இருக்கிறேன்.......அப்படி தவறாகச் சொல்வதை வெளியில் சொல்லி பத்திரிகையில் வெளியிடுங்கள். அலை ஓசை உங்கள் பத்திரிகை. நவசக்தியும் இருக்கிறது. அப்போது எது உண்மை, பொய் என்பது நீதிமன்றத்தில் தீர்ப்பாகும். ஏற்கனவே நாத்திகம் பத்திரிகை மீது வழக்குத் தொடர்ந்து ஆறு மாதம் அந்த ஆசிரியர் தண்டனை பெற்றிருக்கிறார். சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் மீது வழக்கு தொடர்ந்து அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதால் அந்த வழக்கு மேற்கொண்டு தொடரப்படாமல் இருக்கிறது. அதே போன்று அம்மையார் அவர்களும் வெளியிலே பேச வேண்டும். இங்கே பேச்சுரிமை இருக்கிறது. அதை வீணாகப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.".

This has been published in the Tamil Nadu Legislative Assembly Debates, Official Report in Volume XVII No. 2, issued on 30th June 1972 on page 210.

But the Hon. Minister had not filed any such case against Alai Osai at that time. The Hon. Minister himself has admitted this fact during the Cross-examination before the VI Presidency Magistrate, Saidapet. The Cross-examination and the answer given by the Hon. Minister has been published in 'Alai Osai' on 1st March 1973 in Madras.

Thus the Hon. Minister has knowingly furnished false information before this House purposely for misleading the House and the public. Since the act of the Hon. Minister amounts to breach of privilege and prima facie case is made out for proceeding against him.

I submit to the Hon. Deputy Speaker for referring the matter for the Committee '.

Now the hon. Member, Thiru Suppu, shall briefly explain how this comes under breach of privilege, under rule 184.

*திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, ஒரு கிரிமினல் நீதி மன்றத்தின் ஒரு அவதூறு வழக்கில் இருக்கிற நடைமுறை என்பது, அதில் பிராது கொடுக்கக் கூடியவர் கோர்ட்டுக்கு நேரடியாகச் சென்று சாட்சிக் கூண்டில் ஏறி, பிரமாணம் எடுத்துக் கொண்ட பின்னுல், வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிரிக்குச் சம்மன் போகும். அதுதான் அவதூறு வழக்கில் இருக்கிற நடைமுறை. வாதிக்குத் தெரியாமல் வழக்கு நடைபெற முடியாது. சிவில் கோர்ட்டில் சிவில் வழக்கில் பார்த்தாலும், சம்பந்தப்பட்ட வாதி பிராதில் கையெழுத்திட்ட பிறகு தான் பிராது கோர்ட்டில் தாக்கல் செய்யப்படுகிறது. ஆனுல், இந்த சட்ட மன்றத்தில், திருமதி அனந்தநாயகி பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை விமரிசனம் செய்து கொண்டிருந்த நேரத்தில் அமைச்சர் எழுந்து ஒன்றைச் சொன்னுர்கள். " நீங்கள் பேசுவதானுல் வெளியே பேசுங்கள். வழக்குத் தொடருவதற்குத் தயாராக இருக்கிறேன். நான் ஏற்கெனவே வழக்குகள் தொடர்ந்திருக் கிறேன் " என்று கூறினுர்கள். ஒரு வழக்கு கோர்ட்டில் இருப்பதாக இருந் தால் அதன்மீது இங்கே விவாதம் நடத்தக்கூடாது. வக்கீல் நோட்டீஸ் மாத்திரம் அனுப்பப்பட்டிருந்தால் விவாதிக்க தடையில்லை. ஆகவே, வழக்கு கோர்ட்டில் இருக்கிறது என்ற கருத்தை இங்கே இருப்பவர்களை நம்ப வைத்து, வெளியே இருப்பவர்களையும் நம்பவைத்து, அதன்மீது விமரிசனம் செய்ய முடியாத ஒரு நிலையில் " வழக்குத் தொடர்ந்திருக்கி றேன் " என்று மாண்புமிகு திரு. ஆதித்தனுர் அவர்கள் சட்ட மன்றத் தில் கூறினுர்கள். அதன் விளைவாக, திருமதி அனந்தநாயகி அவர்கள் மேலும் தன்னுடைய கருத்தைக் கூற, தொடர முடியாதபடி தடுத்து விட்டார்கள். உண்மையில் என்ன நடந்தது என்று சொன்னுல், அப்படி வழக்கேதும் தொடரப்படவில்லை. வழக்கு தொடருவதற்கு முன்னுல் நோட்டீஸ் அனுப்புவது என்ற ஒரு முறை இருக்கிறது. அந்த நோட்டீசி லேயே என்ன குறிப்பிடப்படுகிறது என்ருல், " நோட்டீசில் கூறப்பட்டுள் ளதை ஒப்புக்கொள்ளாவிட்டால், வழக்குத் தொடரப்போகிறேன் " என்று குறிப்பிடப்படும். ஆகவே, அன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர் கள் செய்திருந்த வேலையெல்லாம் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது நோட்டீஸ் அனுப்பியிருக்கிருர்கள் கோர்ட்டில் வழக்குத் தொடர் கிறேன் என்று. நோட்டீஸ் அனுப்புவதற்கும், வழக்குத் தொடரு வதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.

இங்கே மற்ற உறுப்பினர்களைவிட மாண்புமிகு திரு. ஆதித்தனுர் அவர்கள் மிகுந்த சட்ட அறிவு படைத்தவர். பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். சட்ட மன்றத்தில் தலைவராகப் பணியாற்றியவர். எனவே, ஒரு நோட் டீஸ் அனுப்பிவிட்டு " அலை ஓசை " மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறேன்;



வெளியே பேசுங்கள், உங்கள் மீதும் வழக்குத் தொடரத் தயாராக இருக்கிறேன்" என்று கூறி, நிலைமையை மாற்றி, அதன் மூலம் அவர் அந்தப் பிரச்சினை மீது விவாதம் நடத்த விடாமல் உறுப்பினரைத் தடுத்தது மட்டுமல்ல, அச்சுறுத்தலாகவே இருக்கிறது. நான் நாத்திகம் மீது வழக்குத் தொடர்ந்து ஆறு மாதம் உள்ளே தள்ளியிருக்கிறேன். நீங்கள் வெளியே வந்து பேசுங்கள். அலை ஓசை உங்கள் பத்திரிகை. வெளியே வந்து பேசுங்கள். உள்ளே தள்ளுகிறேன் என்று கூறி, அதன் மூலம் திருமதி அனந்தநாயகியை பேச முடியாமல் தடுத்தது மாத்திர மல்ல, சட்டப் பேரவையை தவருன வழிக்கு இட்டுச் சென்று விட்டார் என்பதை மறுக்க முடியாது. இங்கே பேசிய நேரத்தில் வெளியே நீதி மன்றத்தில் வழக்குகள் எதும் தொடரப்படவில்லை என்பது "அலை ஓசை" வழக்கில் அமைச்சர் குறுக்கு விசாரணை செய்தபோது புலனுகியிருக்கிறது. எனவே, வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பதை அவரே ஒப்புக்கொள்வார். ஏற்கெனவே அவர் பேரவைத் தலைவராக இருந்தபோது அடிக்கடி அவர் குறிப்பிடுகின்ற வழக்கின் தீர்ப்பைப் பற்றிக் கூறும்போது, அந்த தீர்ப்பை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

In Erskine May's Parlimantary Practice, on page 138 (18th Edition), it is stated—

"Misconduct of Members.

The House may treat that making of a deliberetely misleading statement as a contempt............ "

This is a deliberately misleading statement.

"In 1963 the House resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true........"

He has admitted in the Presidency Magistrate Court:—

"a former member had been guilty of a grave contempet (Profuma's Case, C.J. (1962-63)—Page 246."

Here a deliberately misleading statement has been made by a responsible Hon. Minister on the floor of the House.

ஆகவே, பிரைமா பேசி கேஸ் இருக்கிறது. எனவே, உரிமைக் குழு விற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, before the Chair comes to a decision, I would like to offer a few remarks. So far as the right to speak inside the House in concerned, it has been the right which has been guaranteed under the Contitution. Of course, it may be stated that we have got only a qualified privilege. But what is the privilege that is available to the hon. Members is a matter which has to be exercised with due care and caution. In the instant case, I have

often been noting that the Hon. Minister for Co-operation very often intervenes and says, "if you want to make statement do it outside." It is open to a hon. Member whether to speak inside the House or to speak outside. So that request cannot be made or that gratuitous advice cannot be tendered by any Minister or any Member to another Member of the House. It is better that this sort of thing avoided. In the present case, it affects the freedom of speech of the hon. Member. When there is no case pending in the court, it is improper and highly irregular on the part of the Hon. Minister to say that a case is pending and as such I think a *prima facie* case has been made out and this is a fit case for the Committee of Privileges to consider so that they may come to a conclusion. Sir, very often we come with such threats and counter-threats. There should be an end to this sort of threat and that is the reason why I say that, coming as it does from the Hon. Minister who is also a barrister and a lawyer and who was also the former Speaker of this Assembly, it is advisable that the whole matter be considered in the light of the discussion and the rulings that are available in other Hours and also in the Parliament. So I strongly commend that this matter be referred to the Committee of Privileges by the Hon. Deputy Speaker.

DR. H.V. HANDE: Sir, I fully support the contentionof the Hon. Member, Thiru Ponnappa Nadar that this matter has to be reffered to the Committee of Privileges. There are two issues involved in the matter. Firstly, the point is whether it is right on the part of one hon. Member to adopt threatening tactics against another hon. Member by saying, "you speak outside and we will deal with it". The question is whether this devious method of trying to demoralise an hon. Member should be adopted..........................

MR. DEPUTY SPEAKER: Does not the hon. Member think that it is a legal fight that the Hon. Minister has challenged. But the contention of the hon. Member gives the meaning that the Hon. Minister threatened the hon. Lady Member.................

DR. H. V. HANDE: Sir, when an hon. Member speaks, another hon. Member or Hon. Minister gets up and says whether the former can prove an allegation. The Hon. Deputy Speaker says, "can you prove it". Then it is left to the hon. Member to say whether he can prove it or not. If I say I am not able to prove, the Deputy Speaker will either expunge the words or ask me to withdraw the words. That method could have been adopted. But another dubious method was adopted. Mr. Suppu was trying to say something. The Hon. Minister said "you can make the speech outside and then I will take action. I have taken action



against Nathigam.' This is an indirect and clever method of trying to frighten a Member. Normally we Members are not frightened by such things. But an attempt is being made.

There is another important thing. The statement could have been made in Court of Law or on the floor of the House. If the statement made on the floor of the House is at variance with the statement made in the Court of Law and if the statement made on the floor of the House is incorrect, then there is a clear breach of privilege. An incorrect statement made on the floor of the House constitutes breach of privilege. If the statement made here is correct and the statement made in Court of Law is incorrect, then it is the look-out of the Courts. The point here is whether statement made on the floor of the House is correct or the point made in Court of Law is correct. If the Hon. Minister says the point made on the floor of the House is not correct and statement made in Court of Law is correct, then there is matter of privilege. That is why I say let the matter be looked into by the Privileges Committees. There is nothing wrong in such reference. On a previous occasion, I myself agreed to go before the Privileges Committee. So what I say is let the whole thing be referred to the Privileges Committee.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினைக்கு இந்த அவையின் உறுப்பினர் பாதிக்கப் பட்டிருக்கிறார் என்பதற்கு முகாந்திரம் இருக்கிறது, ப்ரைமா ஃபாசி கேஸ் இருக்கிறது என்று சொல்லப்படுவதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அதை நான் மறுக்கிறேன். இதற்குக் காரணம் இருக்கிறது.

அமைச்சர் அவர்களுடைய பேச்சினால் உறுப்பினருடைய பேச்சு தடைப் பட்டது. சில விவரங்களை அவர்கள் கொடுப்பதிலிருந்து தடுக்கப்பட்டார்; தவறான தகவல்களை அமைச்சர் அவர்கள் தந்த காரணத்தால் அந்த உறுப்பினர் கொடுக்க வேண்டிய தகவல்களைக் கொடுப்பதிலிருந்து தடுக்கப் பட்டார் என்று சொல்வது அந்த உறுப்பினருடைய மனோ நிலையைப் பொருத்தது. அந்த மனோ நிலையைச் சொல்லவேண்டுமானால் அதை திரு. சுப்பு அவர்கள் சொல்லுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. குறிப்பிட்ட உறுப்பினர் அதை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்து இந்த ஒரு வாதத்தினால் நான் என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டி வந்ததென்று சொல்ல வேண்டும்.

இரண்டாவது, அமைச்சர் அவர்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் என்று சொல்லிய காரணத்தால் அவர்கள் வழக்குத் தொடருவதற்கும் நோட்டீஸ் கொடுப்பதற்கும் இருக்கிற வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டு மென்று மாண்புமிகு சுப்பு அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். நான் கூட வழக்கறிஞர் என்ற முறையில் இதை ஆராயக் கடமைப் பட்டிருக்கிறேன். வழக்குத் தொடருவது, வழக்குப் போடுவது, வழக்கு ஆடுவது ஆகியவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை வழக்கறிஞர்

களாக இருப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வழக்குத் தொடருவது—

Institution of legal proceedings means, the first step is notice. So, the Hon. Minister was correct.

என்று பார்க்கும்போது அமைச்சர் அவர்கள் சரியாகச் சொல்லி இருக்கி ருர்கள். . . . . . . .

(திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் எழுந்தார்கள்.)

திரு. எம். ஏ. லத்தீப் : நான் முடித்து விடுகிறேன். பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய வாதங்கள் பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொல்ல உதவியாக இருக்க வேண்டும். குழப்பு வதாக இருக்கக்கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப் : இருக்கிற பிரச்சினை, நோட்டீஸ் கொடுக்கப் பட்டது என்று சொல்லுவதற்குப் பதிலாக வழக்குத் தொடர்ந்திருக்கி றேன் என்று சொல்லிய காரணத்தால் ஏற்கெனவே கிரிமினல் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது என்ற எண்ணத்தை அமைச்சர் அவர்கள் உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் அதன் வாயிலாக அந்த உறுப்பினரை மேலும் பேச விடாமல் தடுத்தார்கள் என்று உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்திருக்கிருர்கள். அமைச்சர் அவர்கள் வழக் குத் தொடர்ந்திருப்பதாகத்தான் சொன்னுர்.

Institution of legal Proceedings

வழக்காடிக் கொண்டிருக்கிறேன், வழக்குப் போட்டிருக்கிறேன் என்று சொல்லவில்லை.

Institution of legal Proceedings

அதனுடைய முதல் கட்டம் நோட்டீஸ் கொடுப்பது. அந்த வகையில் அமைச்சர் அவர்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் என்று சொன்னது வழக்குப் போட்டுவிட்டேன் என்று பொருளாகாது என்று சொல்ல விரும்புகிறேன். நானும் பத்து வருஷ காலமாக வழக்கறிஞராக இருக்கி றேன். ஆகவே, பிரைமா ஃபேசி கேஸ் இதிலே இல்லை.

இன்னென்றையும் நான் ஆட்சேபிக்கிறேன். இந்த அமைச்சர் சபை யில் பேசிய கருத்துக்களையும், ஏற்கெனவே ஏதோ ஒரு நீதி மன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்ற சாட்சியத்தில் சொல்லப்பட்ட சில கருத்துக்களையும் இணைத்துப் பார்த்து இரண்டையும் கம்பேர் செய்து பேசுவது—

It is a deliberate attempt to influence the course of judgment in the Court because the case is pending in the Court. It will certainly attract the provisions of sub-judice. Therefore what I submit is

அவ்வாறு ஒப்பிட்டுப் பேசுவது முறையல்ல; அது அங்கிருக்கின்ற நீதி மன்றத் தின் செயல்களிலே நாம் தலையிடுவதற்கு ஒப்பாகும் என்று கூறி, அமைச்சர்



அவர்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் என்று சொன்னது தவறில்லை. வழக்காடுகிறேன் என்று சொல்லாததால் இதிலே உரிமைப் பிரச்சினைக்கு முகாந்திரம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : May I make one clarification? So far, as the subject is concerned, according to the Civil Procedure Code every suit shall be instituted by presentation of a plaint. That is Section 26. என்று செக்ஷன் 26-ல் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, கிரிமினல் கோர்ட்டில் வழக்குத் தொடர வேண்டுமானுல் கம்ப்ளெயின்ட் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குற்ற முதல அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அப்படி இருந்தால்தான் இன்று இருக்கும் சட்ட முறைப்படி கேஸ் தொடரப்பட்டது என்று சொல்லக் கூடும். அது அல்லாமல் நோட்டீஸ் வழங்கி விட்டார்கள்; நோட்டீஸ் வழங்குவது ஆரம்ப கட்டமாகும், வழக்குத் தொடர்ந்ததாகச் சொன்னது சரி என்று பத் தாண்டுக் கால வழக்கறிஞர் அனுபவம் பெற்ற உறுப்பினர் கூறுவது பொருத்தமானது அல்ல என்று கூற விரும்புகிறேன். இந்த மாதிரி யான சட்டப் பிரச்சினையில் நாம் இருக்கிற சட்டத்தைத் தெரிந்து, புரிந்து நல்ல முறையில் இந்த மன்றத்தில் கூறுவது சாலச்சிறந்ததாக, பொருத் தமாக இருக்கும். ஆகையால் வழக்குத் தொடராமல் தொடர்ந்ததாக இந்த மன்றத்தில் கூறுவது பொருத்தமல்ல. ஆகையால் தான் இது உரிமை மீறிய செயலாக இருக்கிறது என்று வாதிடுகிருேம்.

தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ, வேறுவிதமான காரண மாகவோ அல்ல. அதிலும் குறிப்பாக அன்றுரைப் போன்ற சிறந்த பாரிஸ்டர் அவர்கள் உணர்ச்சிவயப்பட்டு ஏதாவது சட்டமன்றத்தில் கூறினுர் கள் என்ருல் அதை நல்ல உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளத் தயங்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, மேலும் இந்த மாதிரி நிகழ்ச்சி நடக்கக் கூடாது என்ற காரணத்தால், இது உரிமை மீறிய செயல், இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கோரு கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "பத் தாண்டுக்கால அனுபவம், விஷயம் தெரியவில்லை" என்று சூசகமாகத் தெரிவித்தார்கள். அவர்கள் என்னைவிட சீனியர், என்னைவிட அதிக மாகத் தெரிந்தவர்கள். நான் சொல்லுவது—வழக்கறிஞர் வேலை— to find out the import of the word that is used அந்த வார்த்தைகளுக்கு உரிய பொருளை வெளிப்படுத்திக் காட்டுவது தான். ஆகவே, வழக்கறிஞர் என்ற முறையில் உண்மையாக நம்பி நான் சொல்லுகிறேன். வழக்குத் தொடருவது என்பது வழக்குப் போட்டதாக ஆகாது என்று பொறுப்பற்ற முறையில் சொல்லவில்லை. பொறுப்புணர்ச்சியோடு சொல்லுகிறேன். ஆகவே, இதிலே உரிமைப் பிரச்சினைக்கு முகாந்திரம் இல்லை என்று மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் அழகாக வீக் கேசுக்கு வாதாடுகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் விவாதத்திற்குப் பதில் சொல்லக்கூடாது. புதிய கிளாரிபிகேஷன் இருந்தால் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு : வழக்கறிஞர்கள் இரண்டு தரப்பிலும் வாதாடலாம். நான் சொல்லுவது நோட்டீஸ் போடாமலே கூட வழக்குப் போடலாம். வழக்கு என்பது கோர்ட்டுக்கு வந்த பிறகு நான் வழக்கு ஆகும். நோட்டீஸ் அனுப்பியது வழக்காகாது. நீதிமன்றத்துக்குப் போன பிறகு தான் வழக்கு ஆகும்.

திரு. கே. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த சபையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் மீது .. .. .. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரடியாக வாருங்கள்.

திரு. கே. கந்தசாமி : நேரடியாக வருகிறேன். இந்த மாமன்றத்தின் கௌரவமிக்க.. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று ரெவன்யூ டிமாண்ட் இருக்கிறது. நிறைய சப்ஜக்ட்ஸ் இருக்கின்றன. முடிவை நாளை சொல்கிறேன். இந்தப் பிரச்னை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுதியுள்ள விளக்கத்தில் ஒன்றை சுட்டிக்காட்டியிருக் கிறார்கள். 9—3—1972-ல் வழக்கு தொடர்ந்திருக்கிறேன் என்று தமிழில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு சந்தர்ப்பத்தில் 29—3—1972-ல் "action has been taken against the paper" என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆக, இதையும் உறுப்பினர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : மிக்க நன்றியுணர்வோடு இதைச் சொல்லிக் கொள்கிறேன். இப்போது கூட இந்த உரிமைப் பிரச்சினை மீது கிளாரிபிகேஷன் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சொல்லும்போது வழக்கு என்றால் கோர்ட்டு என்ற பொருளை இம்போர்ட் செய்து சொன்னார்கள். அது பொருத்தமற்றதாகும். அமைச்சர் அவர் கள், அலை ஓசை என்ற பத்திரிகை அவதூறாக எழுதியதற்காக வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோர்ட் என்ற வார்த்தை எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அதுபற்றிச் சொல்லும்போது கோர்ட்டில் வழக்கு தொடர்ந்த தாக சபை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற முறையில் குறிப்பிட்டது வருந்தத்தக்கது என்று தெரிவித்துக் கொள்கிறேன். "ஆக்ஷன் டேக்கன்" என்பதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதை உற்று நோக்கும்போது—வழக்கு என்றால் கிராமப் புறங்களில் வழக்கு



வந்து அதன் மீது வாதப்பிரதிவாதங்கள் செய்து தீர்த்துக் கொள்ளும் மரபு தமிழ் நாட்டில் உண்டு. மாண்புமிகு துணைத் தலை வர் அவர்களே, இந்த விளக்கத்திற்குப் பின்னால் இதுபற்றி நடவடிக் கைகள் எதுவும் தேவையில்லை என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

Dr. H. V. HANDE ; Sir, may we know the views of the Hon. Minister who is present here. Why is the Hon.Minister sitting glum and quiet? When the matter pertains to the Hon.Minister he could give his views . And then all this discussion could be avoided, and we can straightaway come to the point.

திரு க. சுப்பு : 'ஆக்ஷன் டேக்கன்' என்பதைப் பற்றி சொல்லி யிருக்கிறார்கள் என்று தாங்கள் குறிப்பிட்டீர்கள். இது பின்னால் 'ஆட்' செய்திருப்பது. தவறாகச் சொல்லிவிட்டேன் என்று சொல்லிவிட்டால் பின் பிரச்னை இல்லை. குறிப்பிட்ட தேதியில் இங்கு பேசிவிட்டு, உறுப் பினர்கள் உரிமை பறிக்கப்பட்டு விட்டது என்று வரும்போது, இன்னொரு இடத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று சொல்வது பொருந்தாது. இதை தீர்ப்பு அளிக்கும்போது தாங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. திருப்பதி : திரு பொன்னப்ப நாடார் அவர்கள், காஸ் ஆப் ஆக்ஷன் கோர்ட்டில் தாக்கல் செய்த பின்னால்தான் வரும் என்று சொன்னார்கள். ஒரு சிவில் கேஸை எடுத்துக்கொண்டால் ஒரு ப்ரோ நோட்டுக்கு நோட்டீஸ் கொடுத்தால், இத்தனாம் தேதி நோட்டீஸ் கொடுத் தது என்று ஆரம்பித்துத்தான் பிறகு தாக்கல் செய்த தேதி என்றெல் லாம் குறிப்பிடுவார்கள். ஆக, சிவில் கேஸில் காஸ் ஆப் ஆக்ஷன் என்று வரும்போது நோட்டீஸ் கொடுத்த தேதியில் இருந்துதான் குறிப்பிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இது உரிமைப் பிரச்னையில் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கள் தந்த விளக்கங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Interruption by Dr· Hande)

தீர்ப்பு கொடுக்கும்போது அதைப் பற்றி ரெபர் செய்கிறேன். சொல்லக் கூடாத ரகசியங்கள் எதுவும் இல்லை.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : நான் 'காஸ் ஆப் ஆக்ஷன்' பற்றிச் சொல்லவில்லை. 'இன்ஸ்டிட்யூஷன் ஆப் ஸூட்' பற்றித்தான் சொன்னேன். ஆகவே, என் விளக்கத்தையும் எடுத்துக்கொள்ளவேண் டும்.

திரு கு. திருப்பதி : 'இன்ஸ்டிட்யூஷன் ஆப் ஸூட்' பற்றி திரு லத்தீப் அவர்கள் சொன்னார்களே தவிர அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

திரு க. உரொ. எட்மண்ட் : அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். விளக்கம் எப்படிக் கொடுத்தார்கள், விளக்கம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை எப்படி உருவாகியது என்பதையும் தயவு செய்து தெரிவிக்கலாமா ?

திரு ஜி. ராஜாராம் : இந்தப் பிரச்னையில் 'மிஸ்லீடிங்காக' ஏதாவது இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள், சட்டசபைக்கு வெளியே வந்து இதைச் சொன்னால் வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார்கள். சில பத்திரிகைகள் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறேன் என்றால்—இந்தப் பத்திரிகை மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருந்தால் அம்மையார் அவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்வது என்பதை வழக்கு தொடர்ந்திருக்கிறேன் என்றால் எப்படி மிஸ்லீடிங் ஆகும்? வழக்கு போடப்பட்டிருக்கிறது, தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஹௌஸை அவர்கள் மிஸ்லீட் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விளக்கங்களை எல்லாம் பரிசீலித்து நாளையதினம் முடிவு சொல்வதாக இருக்கிறேன்.

5. அறிக்கை—அளித்தல்.

தீயணைப்புப் படையினர் துறை' குறித்து மதிப்பீட்டுக்குழுவின் தலைவரது அறிக்கை.

திரு மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு பழனிவேல் ராஜன் அவர்களின் சார்பாக அக்குழுவின் 'தீயணைப்புப் படையினர் துறை' சம்பந்தமான அந்த அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்டப் பேரவை அ.தி.மு.க. செயலாளர் பேரவைத் துணைத் தலைவருக்கு எழுதிய கடிதம் குறித்து

*Thiru G. R. EDMUND : On a point of order, Sir.. Hon. Deputy Speaker, Sir, on 12th March 1973, that is on Monday, the Chair made an announcement in this House that the Deputy Speaker has received a letter from my party leader appointing Thiru K.M. Subramaniam as the Whip of our party and myself as the secretary of the Anna Dravida Munnetra Kazhagam in the Legislative Assembly. Under the powers given to me by our leader, I have presented a letter yesterday to the Hon. Deputy Speaker that the hon. Member, Thiru K.A. Mathialagan has been enrolled as a member of our party in the Legislative Assemb and that he has been appointed... ..



Mr. DEPUTY SPEAKER : No. no.. .. .. ..

Thiru G. R. EDMUND ; Sir, let me finish it.. .. ..

Mr. DEPUTY SPEAKER : No, it is not a point of order.. ..

Thiru G. R. EDMUND : Sir, I have also given a letter.. ..

Mr. DEPUTY SPEAKER : No, no. I am concerned with the procedure. I will give a decision at the earliest possible opportunity. But the hon. Member cannot discuss the matter here. Hon. Members write so many letters to me, but they cannot go on discussing about them, about the letters written, about the replies received and their contents and the validity of the letter and the validity of the replies and all those things. I do not think there is any point of order in that..

Thiru G.R. EDMUND : Sir, one word.. .. ..

Mr. DEPUTY SPEAKER : No, no. There is no point of order.

Thiru G.R. EDMUND : Sir, this is a clear case of a point of order. I will explain. Yesterday, I have.. .. ..

Mr. DEPUTY SPEAKER : Yes, I have received a letter yesterday from the hon. Member Thiru Edmund regarding the allotment of a seat to the hon. Member, Thiru Mathialagan. I have to consider so many points in that connection. Already I have allotted a seat to him, but that allotment created so much of noise and so many problems in this House. I have now to consider very carefully the whole matter. I will give my reply to the hon. Member and he will receive it in proper time.

*Thiru G.R. EDMUND : Sir, my point is this. The Chair even after receipt of a letter from the Secretary of the Party.. .. ..

Thiru N. Veerasami : Who has authorised ? We do not know whether the party leader has authorised the hon. Member and..........)
The Hon. Deputy Speaker has announced on Monday, the 12th March 1973 on the floor of the House that a letter has been received from Thiru M. G. Ramachandran appointing Mr. K. M. Subramaniam as the party whip and myself as the Secretary of the A.D.M.K. Legislature party and on that authority given to me, I have sent a letter to the Hon. Deputy Speaker requesting him to allot a seat to Mr. Mathialagan and that Mr. Mathialagan has been enrolled as a member in our party and that he has been appointed the Deputy leader of our party. When I have given the letter to the Hon. Chair that Mr. Mathialagan has been appointed as the Deputy leader of our party, I am really surprised why a seat in this House has not been allotted to him. Sir, it is well known that only after allotting a seat to him the member can take part in the proceedings

of this House along with the Members of the Anna Dravida Munnetra Kazhagam in this House. The member cannot have an opportunity to speak on the floor of the House because so far no seat is allotted to him even after 24 hours. That is rather indirectly preventing the member from entering the House and taking part in the discussion. I want a ruling, Sir, whether a seat will be allotted to Thiru K. A. Mathialagan, taking into consideration that he has been appointed as the Deputy Leader of the party, at least today itself.

*Thiru V. KRISHNAMOORTHI (NELLIKUPPAM): Sir, I want to make a submission. The normal practice adopted in admitting a member in a particular party or group is this. The leader of the party has to admit a member. The Leader of the party has to admit Thiru Mathialagan. Anybody writing from outside to the Deputy Speaker should not be taken into account. The Leader of the A.D.M.K. Group, I presume, is Thiru M. G. Ramachandran. If at all he wants to admit Thiru Mathialagan to his party and also nominate him as Deputy Leader of the party, he has to write to the Deputy Speaker. Then only it has got valid substance. He appoints somebody as Secretary and then the Secretary writes as if he has admitted Thiru Mathialagan to his party and made him as Deputy Leader. It cannot be taken as valid in the normal functioning of the Legislature. That is my submission.

திரு. நா. வீராசாமி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே திரு. எட்மண்ட் அவர்களையும், மற்றவர்களையும் தங்கள் கட்சியில் அனுமதித்து இருப்பதாகவும் கடிதம் எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள். இந்த மன்றம் செத்து விட்டது என்று சொன்ன அந்தத் தலைவர், இந்த மன்றம் உயிரோடு இருக்கிறது என்று தெரிந்து கொண்டதற்குப் பிறகு கடிதம் எழுதி இருக்கிறார்களா அல்லது இந்த மன்றம் செத்து விட்டது என்ற எண்ணத்திலேயே அந்தக் கடிதத்தை எழுதி (சிரிப்பு) யாராவது உயிரோடு இருந்தால் அவர்களுக்கு அந்தக் கடிதம் போய்ச் சேரட்டும் என்று எழுதியிருக்கிறார்களா? எந்த அடிப்படையில் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்று தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

*Thiru K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker. Sir, I cannot understand this argument at all. Our Leader might have said some time ago that the Assembly is dead. But nothing prevents him from giving it life because the High Court decision has come afterwards and he has accepted it. Now the party has elected Thiru Edmund as the Secretary and intimation has been sent to the Hon. Deputy Speaker about the election of Thiru Edmund. Thiru Edmund has got every right to act on behalf of the party as the Secretary of the party. I cannot understand the argument that the Leader has not written and the Leader has not admitted Thiru Mathialagan to the party. The party has admitted him. The party has elected Thiru Mathialagan as the Deputy Leader. Therefore, what is wrong there, I do not understand.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த அவையிலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் திரு. மதியழகன் அவர்களை தன்னுடைய கட்சியில் ஒரு உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டுள்ளேன் என்று மாண்புமிகு தலைவரவர்களுக்கு நேரடியாகவே எழுதியிருந்தால் இந்தப் பிரச்னைக்கு இடம் இல்லாமல் இருக்கும். அவர் செயலாளருக்கு எழுதி, அவர் இங்கே அதைத் தெரிவித்து இருக்கிறார். அதனால்தான் யார் எழுத வேண்டுமென்ற பிரச்னை எழுப்பப்பட்டது. முறையாக அவர்கள் கடிதத்தை நேரடியாக தங்களுக்கு எழுதியிருப் பார்களானால், இந்த அவையிலுள்ள அந்தக் கட்சியின் தலைவர் எழுதியிருப்பாரானால், இந்தப் பிரச்னைக்குத் தீர்வு அன்றே எடுக்கப்பட் டிருக்கும், அல்லது நேற்றே கூட கண்டு இருக்கலாம்.

(திரு. எட்மண்ட் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதுமான அளவுக்கு பேசியாகிவிட்டது. இவ்வளவு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறீர் கள். நான் பேச வேண்டாமா? நான் பேசிமுடித்த பிறகு வேண்டு மானால் நீங்கள் பேசலாம்.

திரு. க. உரொ எட்மண்ட்: நான் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பிறகு பேசலாம்.

Thiru G.R. EDMUND: I will not be doing my duty, if I do not reply to the Hon. Minister for Education. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். முறை யாக கடிதத்தைக் கட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் சபையின் தலைவருக்கு எழுதவில்லை என்று சொன்னார்கள். கடந்த 4 நாட் களாக எங்கள் தலைவர் சுற்றுப்பயணத்தில் இருக்கிறார்கள். (சிரிப்பு) இதிலே சிரிப்பதற்கு இடம் இல்லை. உங்களைப் பார்த்து ஊரே சிரிக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் மரியாதையாகப் பேசவேண்டும். இந்த மன்றத்தில் மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டும். இங்கேயுள்ள யாரைப் பார்த்தும் ஊர் சிரிக்க வில்லை. யாரைப் பார்த்து ஊர் சிரித்துக் கொண்டிருக்கிறது என்பது ஊருக்குத் தெரியும். சுற்றுப் பயணத்தில் இருக்கிறவர் கட்சி செயலாளருக்கு எழுத முடிகிறது, பேரவைத் தலைவருக்கு எழுத முடியவில்லை என்பது வேடிக்கையாக இருக்கிறது.

(திரு க. உரொ. எட்மண்ட் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எட்மண்ட் அவர்கள் அமர வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

(திரு. எட்மண்ட் நின்று கொண்டிருந்தார்.

Mr. DEPUTY SPEAKER: I am not going to allow the hon. Member to speak. I do not like to encourage argument.

THIRU G. R. EDMUND: I am on a point of self-explanation.

Mr. DEPUTY SPEAKER: There is no question of argument. When the Chair is not allowing you, you cannot speak. You kindly resume your seat. Let me speak. Then you can make a request.

THIRU G.R. EDMUND: On a point of self-explanation.

Mr. DEPUTY SPEAKER: I have already given you an opportunity. You have misused that opportunity.

THIRU G. R. EDMUND: Every member has got a right........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எட்மண்ட் நீங்கள் உட்காருங்கள். இங்கே எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினையில் பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒழுங்குப் பிரச்சினையில் பேசினாலும் சரி, விவாதத்தில் பேசினாலும் சரி, எதிர்வரிசையில் இருப்பவர்கள் தங்களுடைய விவாதத்தில் பேசுகிறபொழுது மற்றவர்களை ஒரு கோதாவில், சண்டைக்கு இழுக்க வேண்டுமென்று பேசுவது சரியல்ல. நேற்றைய தினம் உள்ளபடியே முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் அவர்களிடம்—அவர்கள் வருவதற்கு முன்னாலேயே—இந்தப் பேரவைக்கு வருவதற்குத் தடையில்லை என்று சொல்லியிருந்தேன். நான் அவர்களை வரவேற்கிறேன் என்று கூடச் சொல்லியிருந்தேன். என்னுடைய துரதிருஷ்டமோ என்னவோ நாள் தவறாமல் புதுப்புதுப் பிரச்சினைகள் இந்தச் சட்டமன்றத்தில் உருவாகின்றன.

நண்பர் வீராசாமி அவர்கள் புதுமாதிரியாக ஒரு பிரச்னையை எழுப்பி இருக்கிறார். பேரவை செத்து விட்டது என்று சொன்னவர் கடிதம் எழுதலாமா என்று கேட்டார். அது குறித்து ஏற்கனவே பேரவையில் விவாதித்து இருக்கிறோம். பேரவை செத்து விட்டது என்று அவர் சொல்லியிருக்கலாம். கடிதம் எழுதத் தடையில்லை. எனக்கு எழுத சன்லை. நான் பிழைக்கவில்லை என்று அவர் கருதியிருந்தாலும் இருக்கக் கூடும். அதற்குக் கூட நான் மெடிகல் சர்டிபிகேட் அனுப்பவேண்டுமோ என்னவோ தெரியவில்லை. கோபத்தில் அவர் பேரவை செத்து விட்டது என்று சொல்லியிருக்கலாம். இன்றைய தினம் கோபம் தணிந்து, அவருடைய கட்சியின் செயலாளரிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது.

திரு. எட்மண்ட் அவர்கள் ஏன் இன்னும் இடம் ஒதுக்கவில்லை என்று கேட்டு இருக்கிறார்கள். நேற்றை தினம் கடிதம் எழுதியிருக்கிறார்கள். திரு. மதியழகன் அவர்கள் எங்கள் கட்சியில் சேர்ந்திருக்கிறார். எங்கள் 'பிளாக்கில்' இடம் ஒதுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே எட்மண்ட் அவர்களைக் கலந்துகொண்டு, உங்கள்



பிளாக்கில் ஒதுக்கவேண்டுமானால் அந்த இடம் கிடைக்கும், முன் வரிசையில் வேண்டுமானால் இந்த இடம் கிடைக்கும் என்று சொன்னேன். இருந்த நிலைமையை எடுத்துச் சொல்லி. அதற்குப் பின் தான் 135-வது இடத்தை ஒதுக்கினேன். பரவாயில்லை என்று சொல்லிவிட்டு, பிறகு அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். நான் அந்தப் பிரச்னைக்குள் போக விரும்பவில்லை. அதை அப்படியே விட்டு விடுகிறேன்.

ஒரு உறுப்பினர் அவைக்கு வருவதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக நான் ஒரு முடிவு எடுப்பதை ஒத்திப் போட்டுக்கொண்டு போகவில்லை. வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் கூட துணைத் தலைவராக இருந்திருக்கிறார். அவருக்குக் கூட தெரியும் என்று நினைக்கிறேன். ஆனால் அப்போது இருந்ததை விட இப்போது வேலைகள் எவ்வளவோ அதிகரித்து விட்டன. ஏராளமான வேலைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்து இருக்கிறார்கள். அது குறித்து முடிவு சொல்வதற்காக நான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன்.

சட்டமன்ற கட்சித் தலைவர் சுற்றுப் பயணத்தில் இருக்கிறார் என்று சொன்னார்கள். சுற்றுப் பயணத்தில் இருந்தால் கடிதம் எழுதியிருக்கலாம். அல்லது தொலைபேசி மூலம் கூடச் சொல்லியிருக்கலாம். இந்தப் பிரச்னை இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காது. இருப்பினும் இதற்கு செயலாளரை டெப்யூட் செய்து, அவர் எனக்கு எழுதி எப்படியோ சுற்றி வளைத்து தூரமாக வந்திருக்கிறது. இதில் தீர்மானம் எடுப்பதற்கு அவகாசம் தேவைப்படுகிறது. அது வரை திரு. மதியழகன் அவர்கள் இங்கே வருவதற்குத் தடை ஒன்றும் இல்லை. அவர் வருவதைத் தடைசெய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இன்னும் சீட் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். 135-வது இடம் இருக்கிறது. அதிலே அவர் வந்து உட்காரலாம். தங்கள் கட்சியின் பிளாக்கில் அந்த இடத்தை ஒதுக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். எவ்வளவு சீக்கிரமாக மாற்றமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக மாற்றுவேன். அதைப் பெரிய பிரச்னையாக்கவேண்டாம். இதிலே எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வந்து பேசுவதற்கு யாராலும் தடை விதிக்க முடியாது. யாராவது தடுத்தால் அதைத் தடுத்து நிறுத்த அதிகாரம் எனக்கு இருக்கிறது. நானே அந்தத் தடையை நிச்சயமாக ஏற்படுத்த மாட்டேன் என்று தெரிவித்துக் கொண்டு இந்த ஒழுங்குப் பிரச்னையை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

THIRU G.R. EDMUND: On a point of clarification. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நேரம் இல்லை. ரெவின்யூ டிமாண்ட் மீது விவாதம் நடைபெற வேண்டும்.

[1973 மார்ச் 14

(6) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 1.—நிலவரித் துறை

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 1 :—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,92,42,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,92,42,500 under Demand No. 1 Land Revenue Department—be reduced by Rs. 100."

THIRU K. H. BOMMAN : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,92,42,500 under Demand No. 1— Land Revenue Department—be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHADARAMIAH : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,92,42,500 under Demand No. 1— Land Revenue Department—be reduced by Rs. 100."

முற்பகல் 11-00 திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கோவில், மடம், அறக் கட்டளைகள் சம்பந்தமான நிலங்களை உழுபவனுக்கே உரிமையாக்கத் தவறி யிருப்பதைக் குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,92,42,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, நிலவரியில் ஊராட்சிகள் பங்காக வழங்கப்படும் மூன்றில் ஒரு பாகம் தொகையை பேரூராட்சி களுக்கு அதிகப்படுத்தி வழங்கவேண்டுமென்பது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,92,42,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1973 மார்ச் 14]

நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப் பின் கீழ் ரூ. 89,05,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 89,05,300 under Demand No. 2—State Excise Duties—be reduced by Rs. 100.'

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வடிசாலைச் சாராயம், கள் இவைகளுக்கு விதிக்கப்படும் தீர்வை, உரிமைக் கட்டணத்தை மேலும் உயர்த்தி வசூலிக்க வேண்டுமென்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 89,05,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

நிதிக் கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழி கிறேன்.

" நிதிக் கோரிக்கை எண். 5 முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 34,76,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

' That the allotment of Rs. 34,76,900 under Demand No. 5—Stamps —Administration be reduced by Rs. 100.'

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need to make necessary arrangements for easy availability of stamp papers in a number of places—

' That the allotment of Rs. 34,76,900 under Demand No. 5—Stamps —Administration be reduced by Rs. 100.'

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள் போதிய அளவு கிடைக்காமல் இருப்பதால் ஏற்படும் சிரமங்கள் குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 34,76,900-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,07,53,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 13,07,53,700 under Demand No. 11—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100.'

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy and to stress the need to impress upon the District Administration not to be swayed by political interference of any kind—

'That the allotment of Rs. 13,07,53,700 under Demand No. 11—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100.'

திரு. சே. அழகர்சாமி : தலைவரவர்களே, காலதாமதத்தைத் தவிர்த்து மக்களுடைய குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அதிகாரங்களை விரிவுபடுத்த வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,07,53,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்களில், மாவட்ட போலீஸ் அதிகாரிகளும் கட்டாயம் பங்குகொள்ள வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,07,53,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.



THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss about the backwardness of Hosur and Denkanikota taluks in the matter of development and the need for change in the Revenue administration—

'That the allotment of Rs. 13,07,53,700 under Demand No. 11—District Administration and Miscellaneous—be reduced by R. 100.'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவையின் முன் விவாதத்திற்கு வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மான்ய கோரிக்கைமீது அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற விவரக் குறிப்பை (எ) நான் படித்ததாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மான்ய கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு முன் வருகிறேன்.

மான்யக் கோரிக்கையில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இந்த மன்றத்திலே ரெவின்யூ போர்டை எடுத்துவிட வேண்டுமென்று பல அங் கத்தினர்கள் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக வருவதற்கு முன்னால் ரெவின்யூ போர்டால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள், இடையூறுகள் எல்லாவற்றையும் விவரமாகப் பேசியிருக்கின்றார்கள். எங்களுடைய ஆலோசனையெல்லாம், ரெவின்யு போர்டிலிருந்து எல்லாவற்றிற்கும் அனு மதி பெற்றுச் செல்ல வேண்டுமென்பதால் ஏற்படும் காலதாமதத்தை தடுக்கின்ற வகையில், மாவட்ட கலெக்டர்களுக்கு அதிகமான அதிகாரங் களை வழங்க வேண்டுமென்பதுதான். ஆகவே மாவட்ட கலெக்டர் களுக்கும் அதிக அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக முன்னாலிருந்த அரசு செய்திருக் கின்ற சட்டங்களையெல்லாம் திருத்துகின்ற வகையில் பல்வேறு திருத்தச் சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அவற்றையெல்லாம் ஒருமுகப்படுத்தி, ஒருங்கிணைந்த சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று இதற்கு முன்னால் நடந்த அவையின் கூட்டத்தில் அவையின் உறுப்பினர் உயர்திரு மணலி கந்தசாமி அவர்கள் மசோதா ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் அனைத்தையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதை சட்டமாக்குகின்ற

(எ) 339—363....ம் பக்கங்களில் இணைப்புகள் I, II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

முறை வருகின்றபோதுதான் தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகள், நேரடியாக சாகுபடி செய்கிற உழவர்களுக்குச் சாதகம் அளிக்கின்ற சட்ட மாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன் றைய தினம் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. இனும் ஒழிப்புச் சட்டத்தை எடுத்துக் கொண்டாலும், இனமை ரயத்துவாரியாக மாற்று கின்ற சட்டத்தை எடுத்துக்கொண்டாலும், குறைபாடுகள் இருக்கின்ற நிலை யைப் பார்க்கின்றோம். அதையெல்லாம் போக்குகின்ற முறையில் நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் இருக்கின்ற ஓட்டை உடைசல்களை கவனித்து, திருத்துவதற்கு வகை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் சட்டத்தைத் தீவிரமாகக் கொண்டு வரக்கூடிய நிலை ஏற்பட்டு, குடும்பத்தின் அடிப்படையில்தான் வரம்பு நிர்ணயிக்க வேண் டுமே தவிர, நபர்கள் அடிப்படையில் இருக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தரிசு நிலம் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், இன்றைய தினம் நேரடியாக நிலத்தில் சாகுபடி செய்கின்ற ஏழை விவசாயத் தொழி லாளிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு நிலம் அளிக்க வேண்டும். அரி சன மக்கள் அனேகமாக இதே தொழிலைப் பிரதானமாகக் கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு முன் சலுகை அளிக்கவேண்டும். 5 ஆண்டு காலத்தில் 5,29,000 ஏக்கர் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒப்படைக்கப்பட வேண்டிய நிலங்கள் அதிகமாக இருந்து கொண்டிருக் கின்றன. அதையும் தீவிரமாக செயல்படுத்துகின்ற முறையில் அர சாங்கம் இன்றைய தினம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நிலம் வழங்குகின்ற முறையில் சில புகார்கள் வருகின்றன. வேண்டியவர்களுக்கு கொடுக்கிறார்கள், வேண்டாதவர்களுக்குக் கொடுக் கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இந்த புகார்களை போக்க, கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும், அந்தக் கட்சிகளை ஒன்றாகச் சேர்த்து சர்வ கட்சி கமிட்டிகள் அமைத்து அவற்றின் மூலமாக நிலம் விநியோகிக்கத்தக்க நடவடிக்கை எடுத்தால், எந்தவிதமான குறைபாடும் இல்லாத அளவுக்கு அதிகாரிகள் விருப்பு வெறுப்பாக நடந்துகொள்ளுகிறார்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நிலம் கொடுக்கிறார்கள் என்று சொல்லு கின்ற புகார்கள் எல்லாம் வராமல் தடுக்கமுடியும் என்பது எங்களுடைய அபிப்பிராயம்.

நிலவரி ரத்து சம்பந்தமாக, 5 ஏக்கர் நஞ்செய் நிலங்களுக்கு அடிப் படைத் தீர்வைதான் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மற்ற வகைகளில் அதிகப்படியான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து கூட்டு மன்றங் கள் வரி விதித்திருக்கின்றன. அதே போல் தண்ணீர் தீர்வை, மற்றத் தீர்வைகள் சேர்ந்து அதிகமான வரியைச் செலுத்த வேண்டியவர் களாக விவசாயிகள் இருக்கின்றார்கள். 5 ஏக்கர் நிலம் உள்ளவர் களுக்கு சகல விதிகளையும் ரத்து செய்யக் கூடிய முறையை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளு



கிறேன். அரசாங்க நிலமாக இருந்தாலும், பட்டா நிலமாக இருந் தாலும், பாசன வசதி இல்லாத நிலங்களுக்கு தண்ணீர் எடுத்து விவசாயம் செய்தார்கள் என்பதற்காக அதிகமான தொகையை தண்டத் தீர்வையாக விதிக்கிறார்கள். அப்படி விதிக்கும் தண்டத் தீர்வையை அறவே அரசு ரத்து செய்யவேண்டும். அதன் மூலமாக விவசாயிகள் பெருமளவுக்குக் பாதிக்கப்படுகிறார்கள். இந்த விஷயத்தையும் அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைய தினம் நிலச் சொந்தக்காரர்களுக்கு பட்டா புத்தகம் வழங்கு கின்ற முறையை கையாண்டு வருகிறார்கள். அதே போல் குத்தகை தாரர்களுக்கும் பட்டா புத்தகம் வழங்கினால் அது உதவியாக இருக்கும். சாகுபடியாளர்கள், தங்களுக்குத் தேவையான கடன் வாங்குவதற்கும், உரம் போன்றவைகளை வாங்குவதற்கும் அத்தாட்சியாக இந்தப் புத்தகத்தை பயன்படுத்திக் கொள்வார்கள். ஆகவே பட்டா புத்தகம் வழங்கும் முறையை சாகுபடிதாரர்களுக்கும் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதுக்கோட்டையை மாவட்டமாக ஆக்கியது அந்த மாவட்ட மக்களின் ஆர்வத்திற்கும் கிளர்ச்சிக்கும் ஏற்பட்ட வெற்றியாகும். அதேபோல் ராமநாதபுரத்தில் இருக்கின்ற மக்கள் எதற்கெடுத்தாலும் மதுரைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே ராமநாதபுரத்தை ராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகராக ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். அதில் ஏதாவது சிரமம் இருந்தால், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து வைத்துப் பேசி ராமநாதபுரத்தை அந்த மாவட்டத்தின் தலைநகராக ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வறட்சி நிவாரணம் தொடர்ந்து நடைபெறவேண்டும். நம்முடைய மாநிலத்தில் தொடர்ந்து வறட்சி இருந்து கொண்டேதான் இருக்கிறது. வறட்சி இனிமேல் ஏற்படாது என்று சொல்ல முடியாது. வறட்சி ஏற்படும்போதெல்லாம் அதற்கு வேண்டிய நிவாரணங்களை அளிப்பதற்கு முன்னால் ரெவின்யூ அதிகாரிகள் வந்து பார்வையிட்டு, அவர்கள் அறிக்கை அளித்த பின்னால் அதன் அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய அரசாங்கத்தில் உதவி கேட்டால் அவர்களும் அதிகாரிகளை அனுப்பி, பார்வையிட்டு அவர்களின் அறிக்கை யின் அடிப்படையில்தான் உதவி செய்கிறார்கள். அதற்கு காலதாமதம் அதிகமாகிறது. நிவாரணப் பணி என்பதே உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே, அதிகாரிகளின் அறிக்கை வரும் வரையில் காத்திருக்காமல் அரசாங்கம் உடனடியாக பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். அதற்கு அரசாங்கம் தொடர்ந்து தனியாக ஒரு நிதியை ஒதுக்கி வைத்திருக்க வேண்டும். அதிகாரி களின் அறிக்கை வருவதற்கு ஆறு மாதங்கள் கூட ஆகும். அது வரையும் காத்திருக்காமல், அதற்கென்று தனி நிதி இருந்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே அரசாங்கம் அதற்கு நடவடி கை எடுக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற புயல்—வெள்ளச் சேதம் 40 கோடி ரூபாய்க்கு மேல் ஆகியிருக்கிறது. வெள்ளம், புயல் இரண்டுமாக சேர்ந்து விவசாயத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. விவசாயிகள் அதனுல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; வீடுகளை இழந்திருக்கிறார்கள். வீடு இழந்தவர்களுக்கு, வீடுகளைக் கட்டிக்கொள்வதற்காக; அரசாங்கம் 250 ரூபாய் கடன் கொடுக்கிறது. இப்போது இருக்கின்ற விலைவாசியில் அந்தப் பணத்திற்கு வீடு கட்டிக்கொள்ள முடியாது. குறைந்தது வீடு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும். இல்லையென்றல் நிரந்தரமாக புயல், வெள்ளம் இவைகளால் பாதிக்கப்படாத வீடுகளை கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நிலம் இல்லாதவர்களுக்கு அரசாங்கம் குடியிருப்பு மனைகளை வழங்கிவருகிறது. குடியிருப்பு மனைகள் வழங்கும்போது குறைந்தது 5 செண்ட் நிலமாவது கொடுக்க வேண்டும். 5 செண்டுக்குக் குறைவாக யாருக்குக் கொடுத்தாலும் அது போதுமானதாக இருக்காது. அதிலும் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு 5 செண்டுக்குக் குறைவாக நிலம் கொடுத்தால், அவர்களால் அதில் விஸ்தாரமாக வீடுகட்டி குடியிருக்க முடியாது; மற்றும் ஆடு மாடுகளைப் பராமரிப்பதற்கும் முடியாது. ஆகவே, குடியிருப்பு மனைகளுக்கு குறைந்தது 5 செண்டு நிலமாவது கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பாமினி ஆறு உடைப்பெடுத்து விட்டது. அந்த உடைப்பைப் பார்ப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அந்த உடைப்பினுல் ஒரு கிராமமே பாழாகிவிட்டது. 60 குடும்பங்கள் வீடுவாசலின்றி தவித்தார்கள். 100 ஏக்கர் நிலம் மண் மேடிட்டு போய்விட்டது. அந்த பட்டுக்கோட்டை பகுதி முழுவதையுமே அபிவிருத்தி செய்யவேண்டியிருக்கிறது. அரசாங்கம் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில், குத்தகையை தள்ளிப்போட வேண்டும் என்றும், நில வரியை வஜா செய்யவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்தப் பகுதியில் வரி வசூலிப்பதற்காகவும், குத்தகை கட்டுவதற்காகவும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகவும் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு, நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனைகள் வழங்குவது மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். பெரிய கிராமங்களைத்தான் மேஜர் பஞ்சாயத்து என்று சொல்கிறார்கள். அங்கேயும் ஏழை எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டும்.

இப்போது பல பகுதிகளில் குத்தகைப் பதிவு அதிகாரிகளை வாபஸ் பெற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. இன்னும் குத்தகைப் பதிவு வேலை பூர்த்தியாகவில்லை; குத்தகைத் தகராறுகள் தீர்ந்தபாடில்லை. ஆகவே



குத்தகைப் பதிவு அதிகாரிகள் தொடந்து இருந்து பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குத்தகை நெல் சம்பந்தமாகவும், இன்னும் மற்ற விஷயங்கள் சம்பந்தமாகவும் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற பாதகத்தைப் போக்குகின்ற வகையில் அரசாங்கம் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குத்தகைதாரர்கள் குத்தகை நெல் அளக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆண்டு குத்தகை நெல் அளக்கவில்லை என்றால் சட்டப்படி அவர்களை வெளியேற்றிவிடுவார்கள். அதற்கும் அமைச்சரவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, ஆவனச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, இந்த வருவாய்த்துறை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வருவாய்த்துறை நமது அரசுத் துறைகளின் தாய் போன்றது. அரசுத் துறைகள் பல்வேறு இருந்தாலும் அந்தத் துறைகள் எல்லாம் ஒன்று கூடி, இணைந்து செயல்படுவதற்கு காரணமாயிருப்பது வருவாய்த்துறை. எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் — சகோதரர் சுப்பையா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வருவாய்க் கழகத்தை (ரெவின்யூ போர்டு) ஒழித்துவிட வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்ததே; அதை திராவிட முன்னேற்றக் கழகமும் எடுத்துவிட வேண்டுமென்று சொல்லி வந்ததே; இப்போது ஏன் எடுக்கவில்லை என்று கேட்டார்கள். எல்லோருக்கும் அந்த எண்ணம் இருந்தாலும் வருவாய்த்துறை கழகம் இல்லாவிட்டால் அந்தப் பொறுப்பை யாரிடம் கொடுப்பது என்ற கேள்வி எழுந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கொடுத்துவிடலாம் என்றதிலும் வருகிறது. வருவாய்த்துறை கழகத்தை ஒழிப்பது சரியாகத் தெரியவில்லை. காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இப்போது எவ்வளவு பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது நமக்கு எல்லாம் நன்ருகத் தெரியும். ஆண்டுக்காண்டு, நாளுக்கு நாள் அவர்களுடைய பொறுப்பு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருந்த பொறுப்பு எப்படி படிப்படியாக உயர்ந்திருக்கிறது, எவ்வளவு வேலைகளை — எத்தகைய வேலைகளை அவர்கள் கவனித்து வருகிறார்கள் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்ப்போமானுல் மேலும் அவர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டாம் என்பது நமக்குக் தெரியும். இந்தப் பொறுப்பையும் அவர்களிடம் கொடுத்தால் அவர்களால் சரியாக பணியாற்ற முடியாது. அப்படியானுல் இந்தப் பொறுப்பை அமைச்சர்களிடம் — அரசாங்கத்திடம் கொடுத்துவிடலாம் என்று சொல்லக்கூடும். அங்கே மட்டும் என்ன வேலை குறைந்துவிட்டது? மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருப்பதைவிட அதிகமான பொறுப்புக்களும் கடமைகளும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் நாம் நன்ருக எண்ணிப் பார்ப்போமானுல் இவர்கள் இரண்டு பேருக்கும் சிரமம் இல்லாத வகையில் இந்தப் பொறுப்பை தொடர்ந்து வருவாய்த் துறை கழகமே வகித்துவரலாம். ஆகவே, அதை ஒழிக்கவேண்டிய அவசியம் இல்லை.

[திரு. என். இராஜாங்கம்] [1973 மார்ச் 14

வருவாய்த்துறை கழகத்தில் இருக்கக்கூடிய வேலைகளைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. இந்த நாட்டிலே வெள்ளம், காற்று, புயல், எது வந்தாலும் நிவாரணப் பணிகளில் முன்னணியில் நிற்பது இந்த வருவாய்த்துறை கழகம்தான். அதனால் நான் மற்றத் துறைகளை குறைகூறுகிறேன் என்று யாரும் எண்ணவேண்டாம். ரெவின்யூ துறைக்குத்தான் அந்த பொறுப்பிருக்கிறது. சமீபத்திலே ஏற்பட்ட நிலைமைகள் நமக்குத் தெரியும். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், ஆர்.டி.ஓ.க்களும், தாசில்தார்களும் அவர்களைச் சேர்ந்த சிப்பந்திகளும் இதரத் துறைகளும் உடனடியாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு, எப்படி பணியாற்றினார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள், நாமும் அறிவோம். இப்போது கூட ஒவ்வொரு பகுதியிலும் 30, 40 தாசில் தார்களைப் போட்டு, வேலைகளை செய்து வந்தாலும் இன்னும் ஒரு கிராமத் தைக்கூட சரியாக சர்வே செய்ய முடியவில்லை. காரணம் கிராமங்களிலே இருக்கின்ற பல்வேறுவிதமான மக்களின் கருத்து வேறுபாடுகள்தான். அதிகாரிகளோடு மக்கள் சரியாக ஒத்துழைக்காமல் இருக்கிறார்கள். 80 ரூபாய் உதவித் தொகை என்றால் 100 ரூபாய் கொடு என்கிறார்கள். 250 ரூபாய் வீடு கட்ட என்றால் 400 ரூபாய் கேட்கிறார்கள். அப்படிக் கேட்டால் கொடுப்பார்கள். இவர்கள் வைத்துக்கொண்டு நமக்குக் கொடுக்க மறுக்கிறார்கள் என்று கிராம மக்கள் நினைக்கிறார்கள். இவைகளினால் அதிகாரிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தச் சிரமங்களையும் பொருட் படுத்தாமல் திறமையாக அதிகாரிகள் செயல்படுகிறார்கள். அதற்காக அவர்களை நாம் பாராட்ட வேண்டும்.

சில புகார்கள் கற்பனையாக வந்தால் கூட, அதிலே கூட எவ்வளவு சிரமப்பட்டு காரியங்களை செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற பொறுப் பில் மேலும் பொறுப்புக்களைக் கொடுத்தால் அவைகளை அவர்களால் சரியாக நிறைவேற்ற முடியாது. ஆட்சி என்று சொன்னால் உடனே மாவட்ட ஆட்சித் தலைவரைத்தான் சொல்கிறார்கள். அவர்கள் செய் கின்ற வேலைக்கு சரியான பெயர்தான் கொடுத்திருக்கிறார்கள்.

ரெவின்யூ துறையிலே கீழ்மட்டத்தில் இருந்து பார்த்தோமானால், இந்தத் துறைக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுப்பவர்கள் தோட்டி, தலையாரி என்பதை யாரும் மறந்துவிட மாட்டார்கள். பழைய காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையில் எந்தக் காலமாக இருந்தாலும் வரி ஒழுங்காக வசூல் செய்யப்பட்டு கஜானாவிக்குப் போய்ச் சேருவதற்கு இவர் கள்தான் காரணமாக இருக்கிறார்கள். நான் அவர்களுக்காக — ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்காக—தாழ்த்தப்பட்ட சமூகத்திற்காகச் சொல்கிறேன் என்று யாரும் எண்ண வேண்டாம். இதுவரையில் அவர்களால் எந்த இடத்திலும் பணம் கையாடல் செய்ததாகத் தகவல் இல்லை. அப்படி எங்காவது கையாடல் நடந்திருக்கும் என்று உறுப்பினர்கள் யாராவது சொல்வார்களேயானால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால், என்னுடைய கணக்கில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்றுதான் பொருள். அப்படிப்பட்டவர்களுக்கு பல குறைகள் இருப் பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கம் அவர்கள் குறைகளையும் போக்கு கின்ற முறையிலே நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும், குறிப்



1973 மார்ச் 14] [திரு. என். இராஜாங்கம்]

பாக அவர்களுடைய கோரிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நகரப் புறத்திலே இருந்தாலும் அவர்களுக்கு கிராமப்புற வாழ்க்கை, அங்கே இருக்கின்ற நிலைமைகள் எல்லாம் நன்கு தெரியும். அவர்கள் இந்த தோட்டி, தலையாரிகளின் குறைகளை நிச்சயமாகப் போக்குவார் கள் என்று நம்புகிறேன்.

அவர்களுக்கு அடுத்து, கிராம அதிகாரிகளான கர்ணம், மணியம் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பொறுப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் கோரிக்கைகளையும் அரசாங்கம் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது. மேலும் அவர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளையும் அரசாங்கம் பரிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது நில ஆர்ஜிதம். இப்போது ஒரு 4, 5 ஆண்டு காலமாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் அதிக மான வேலைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒரே இடத்தில் பல் வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள், பல்வேறு ஜாதியினர் இருக்கிறார் கள். அவர்களுக்கு அரசாங்கம் அளிக்கின்ற சலுகைகளிலே சில குறைபாடுகள் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கப்படுகிறது. அதிலே கூட அவர்கள் குறைபாடுகளை பொறுமையோடு எழுப்புகிறார்கள். கிராம அதி காரிகளின் நிலைமையை கவனிப்பது பற்றியும், மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு இருக்கிற அதிகாரம் போதும், அதிகாரம் மேலும் கொடுக் காமலிருப்பது பற்றியும், வருவாய்த் துறையில் சிரமங்களைக் குறைப்பது பற்றியும் கூறினேன்.

[திரு. நா. வீராசாமி தலைமை]

அடுத்து, தாசில்தார்களின் பதவிகளை அதிகப்படுத்த வேண்டும். முன் பெல்லாம் 50 பேர்கள்தான் சர்டிபிகேட் வாங்க வருவார்கள், பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதற்கு, வேலையில் சேர்ப்பதற்கு என்று, எனக்குத் தெரிந்த வரையில். ஆனால், இன்றைக்கு பல்லாயிரக் கணக்கானவர் களுக்கு தாசில்தார்கள் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டிய நிலை இருக் கிறது. சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு என்றே ஒரு தாசில்தார் இருந்தாக வேண்டிய நிலை இருக்கிறது.

அடுத்து, தாலூகா ஆபீஸ் கட்டடங்கள். பிரிட்டிஷ்காரன் காலத்தில் கட்டப் பட்ட பழைய கட்டிடங்களிலேயே இப்போதும் பல இடங்களில் இருக் கின்றன. அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை கவனிக்க வேண்டும். தாலூகா அலுவலகங்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அலுவலகங்கள், யாரோ தங்குகின்ற குடிசை வீடு மாதிரி இருக்கிறது. இவற்றை விஸ்தரிக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது). இதற்கு இந்தத் துறையில் பணம் இல்லாவிட்டால் வேறு துறையிலிருந்தாவது பெற்று இந்த அலு வலகங்களை புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மணி அடிப்பதற்கு முன்னதாக நான் முடித்து விடுகிற வழக்கம்—இப்போது மணி அடித்து விட்டார்கள்—எனவே, முடித்துக்கொள்கிறேன்.

*Thiru K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, coming to the Demand 'Revenue' the first thing I have to say is that our system of land revenue is based on an outmoded system. When land tax was first introduced in the country, there was no ceiling, no agricultural income-tax, no cess, no surcharges and many items that go with land revenue now. Land tax was the main revenue meant in those days. Today sales tax has become the main source to carry on the administration. We must see that the persons who cultivate are given the maximum facilities possible.

Secondly land revenue should be fixed in such a way that it will give minimum trouble for collection. If you go through the land tax revenue, we find in spite of the measures taken, there are still heavy arrears. There are various factors for the arrears. What I say is that the basic land revenue be abolished. My point is that there is now excess revenue due to lifting of prohibition. Mostly it comes from the poor people in rural areas. If you abolish land revenue, it will help the cutlivators.

Now I come to allotment of plots. Instead of the previous promises, I find that even within city suburban limits, government had decided to give 3 cents plots for allotment. The G.O. had been passed a month ago. Demarcation has not been done but the G.O. had come.

## (3) நடைமுறைக் கேள்விகள்.—தொடர்ச்சி

## (இ) எதிர்க்கட்சித் தலைவர்களில் யாரும் பேரவையில் இல்லாதது குறித்து.

திரு. டி. வி. சம்பத்: தலைவரவர்களே. எதிர்க் கட்சித் தலைவர்கள் முதல் வரிசையில் இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால், இப்போது சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் யாரும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி): தலைவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர்கள் இப்படிப்பட்ட முக்கியமான ரெவின்யூ துறை போன்ற மானியங்கள் வரும்போது, அக்கறையோடு இங்கே இருக்க வேண்டும். ஒருவேளை காப்பி குடிக்கப் போயிருப்பார்கள். அதை அனுமதித்து விடுவோம்.

திரு கே. எம். சுப்பிரமணியம்: புரபோர்ஷனேட்டாகப் பார்த்தால் நாங்கள் பரவாயில்லை என்று தோன்றுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, எதிர்க் கட்சி வரிசையில் யாரும் இல்லை என்று சொன்னார்கள். அமைச்சர்கள் ஒழுங்காக சீட்டில் இருந்தால் நாங்களும் பாராட்டுவோம்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு நா. வீராசாமி): அமைச்சர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சி வரிசையில் தலைவர்கள் ஒருவராவது உட்கார்ந்திருக்க வேண்டும். டாக்டர் ஹாண்டே வெளியே போனால் திரு பொன்னப்ப நாடார் இருக்கலாம். திரு பொன்னப்ப நாடார் வெளியே போனால் ஹாண்டே இருக்கலாம். இப்படி மாற்றி மாற்றி இருந்தால் மன்றத்திற்கு நல்ல மதிப்பு அளித்த மாதிரி இருக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் மன்றத்தின் பின்னால் உட்கார்ந்துகொண்டு தீர்மானத்தைப்பற்றி டிஸ்கஸ் பண்ணிக்கொண்டிருந்தேன்.

## (6) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

## கோரிக்கை எண் 16—மாவட்ட நிர்வாகவும் பலவகையும்—தொடர்ச்சி.

*Thiru K. M. SUBRAMANIAM: May I now proceed. Regarding allotment of plots, I want to say this. Inside the city, there are many poramboke lands and many persons had been occupying those lands for two or three decades. Why not allot them to these people? There is Dharmapuram wherein the persons had been living for more than 50 years. Let them be allotted those lands. During every general election, promise is made that the land would be allotted to them but after election, the promises are forgotten.

Now I come to Exemption Board for land ceiling. Therein you find vested interests had been given representation. There is Mr. Rajesh, Tea Estate Owner and Thiru M.A. Muthiah Chettiar, a landlord. They are persons with vested interest. The previous Chairman, a retired district Judge has been drawing Rs. 2,500. Now the present Chairman is drawing a salary of Rs. 1,800. The total expense on this board is Rs. 46,000 They meet sometimes in Ooty, sometimes in Kodaikanal and wherever it is convenient for the rich persons. Government have a curious way of appointing retired District Judges on some excuse or other. Now one Mr. T.S. Anavaratham Pillai is the Chairman of the Board. He is a retired District Judge, I think. What I say is why appoint retired people when there are qualified young B.A.B.L's with good practice available. Similar is the practice in Corporation of Madras. Therein old persons had been there as Chairman of Taxation and Appeals Committee.

Thiru N. GANAPATHY: Mr. Chairman, Sir, I wish to correct the முற்பகல் 11-30
Hon. Member. The Chairman of the Taxation Appeals Committee is a Subordinate Judge in the list of the Government of Tamil Nadu and he is not a retired person; he is only deputed to the Corporation. The Hon. Member is giving a wrong information to the House.

Thiru K. M. SUBRAMANIAM: I can assure the Hon. Member that I have been in the Corporation for about 20 years and the last Chairman of the Taxation Appeals Committee was a retired person. He

[Thiru K. M. Subramaniam] [1973 மார்ச் 14

has retired and after he was 62 or 63 he was appointed. I can assure him on that. That is why I am saying this. Perhaps the present Chairman is on deputation. But that is not always the case and true also.

Now, Sir, coming to the most important aspect, that is with regard to District Administration. I find the district collectors are burdened with very heavy work. Atleast in the matter of development and planning it needs a very expert service and there must be therefore a separate officer in the grade of the collector to look after this work. It is an expert job. With all the work of the collector on the revenue side, it is almost impossible for him to give any spare time to that aspect of development and then look to district work also. I think that work should be in the hands of a separate officer.

Regarding water supply, that is the most difficult part. Previous speakers also have referred to it. I think in the matter of supply of water there is penalty for the water taken and misused or misappropriated by the people for purposes other than for which it is intended and the penalty ranges from 10 times to 20 times and I am told the Revenue Authorities take a pride in allowing misuse, for if they misused or diverted water for other purposes they get more collection for the Government. It is the paramount duty of the Government to supply water equitably and more than money or manure or other things, the supply of water to the cultivators should be equitable and reasonable. If there is anything going wrong, in one place, there will be abundance of crop in that place while in the other place there will be scarcity. I find no action is taken by the Government which says that they are for green revolution, a socialistic society and all that. Actually they forget many things. In making promises they are very good, but in the matter of performance, they forget many many things. I hope the Government would take action to set right diversion of water, and exemptions to various purposes and all these things would be rectified soon, by the Government.

* திரு. டி. கணபதி : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, இந்த மானியத்தை வரவேற்று நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றப் பகுதியும், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியும் பஞ்சப் பிரதேசமாக தொடர்ந்து பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு வந்திருப்பதை பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும்படி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன். மழை இல்லாததால் கிணறுகள் எல்லாம் வற்றி, ராதாபுரம், வள்ளியூர் ஊராட்சிப் பகுதிகள் பஞ்சத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. வறட்சிப் பணிகளுக்காக 1972–73 செப்டம்பர், அக்டோபரில் ஒதுக்கப்பட்ட 125 லட்சம் ரூபாயில் நெல்லைக்குமட்டும் 10 லட்சம் வழங்கப்பட்டது. அதே போல மத்திய அரசால் தொடங்கப்பட்ட தொடர்ந்து வறட்சியுள்ள பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டமாக இராமநாதபுரம், தர்மபுரிக்கு 1972–73-இல் 131·31 லட்சம் ஒதுக்கப்பட்டு இந்திய அரசாலும் ஒப்புதல்



1973 மார்ச் 14] [திரு. டி. கணபதி]

அளிக்கப்பட்டுவிட்டதாக அறிகிறோம். அதேபோல ராதாபுரம், வள்ளியூர் பகுதி தொடர்ந்து வறட்சிக்குட்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொண்டதாக அறிவிக்கப்படவேண்டும் என்பதாக வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு 1973–74-இல் வறட்சி நிவாரண நிதிக்கு டாக்டர் முதல்வர் அவர்கள் ரூ. 12,24,47,900-ஐ மானியக்கோரிக்கை 36-இன் கீழ் ஒதுக்கியிருக்கிறார்கள். எங்களுடைய பகுதிக்கு நிரந்தரமாக நிவாரணம் அளிக்க பெரிய தொழிற்சாலைகள் வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தவில்லை. அந்தப் பகுதியில் உள்ளவர்கள் விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குமரி மாவட்டத்தில் உள்ள ஆற்றில் உபரியாக உள்ள தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலந்து கொண்டிருக்கிறது. அதை இந்தப் பகுதிக்குக் கால்வாய்மூலம் கொண்டு வரலாம். அதற்காக ராதாபுரம் தொகுதியை கன்னியாகுமரியோடு சேர்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்கவில்லை. இரண்டு மழைக் காலங்களிலும் அதில் ஏராளமான தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலந்து கொண்டிருப்பதை, இந்தப் பகுதியில் உள்ளவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ள கால்வாய் கட்டிக் கொடுத்தால் மிகவும் உபயோகமாக இருக்கும் இதற்கு அதிகம் செலவாகாது. பஞ்ச நிவாரண வேலையாகவே இதைச் செய்யலாம்.

அதோடு 16,17 லட்சம் செலவில் ஆலத்துறையாறு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதிகாரிகள் எல்லாம் அதற்கு ஒப்புதல் அளித்துவிட்டார்கள். எங்கெங்கோ வறட்சிப் பணிக்காக கோடி கோடியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் 16, 17 லட்சம் இதற்கு ஒதுக்கி இவ்வருடம் ஓரிரு லட்சம் ஒதுக்கி அடிக்கல் நாட்ட கோருகிறேன். இந்தத் திட்டத்தின்மூலம் அந்த வட்டாரத்திலுள்ள விவசாய மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள். வருமுன் காப்பது போல் அந்தப் பகுதியில் நிரந்தரமாக இருந்து வரும் பஞ்சத்தைப் போக்கவும் மிகவும் உதவியாக இருக்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க அவர்கள் துயர் துடைக்க பஞ்ச நிவாரண வேலையாக வள்ளியூர் பெரியகுளம் தூர் எடுக்கப்படவேண்டும். அதைத் தூர் எடுப்பதோடு கூட அதற்குத் தண்ணீர் வரும் ஏற்பாடாக குடமாடி அணையைக் கட்டித்தர வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒரு கோடிக்குள் அடங்கின திட்டம். இந்த இரண்டும் நிறைவேற்றப்பட்டால் மக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள். பஞ்ச நிவாரணப் பணியாக, துயர் துடைப்பு நடவடிக்கையாக சிறுபாசனத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், சாலைப் பணிகள் ஆகியவற்றோடு பெரியகுளம் தூர்வாரும் திட்டம், குடமாடி அணைத்திட்டம் ஆகியவற்றையும் அந்தப் பகுதியில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் கடன்கள், தீர்வை வசூலை முடுக்கி விட்டிருப்பதாகத் தெரிகிறது. தொடர்ந்த வறட்சியினால் அந்தப் பகுதி பாதிக்கப்பட்டு வந்திருப்பதனால் அதனை ஒத்திவைத்து வரி வஜாவுக்கு உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன்.

சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் மூலம் இராதாபுரம் சானலை சுற்றியுள்ள கிராமங்களுக்கு சீராகத் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கே தண்ணீர் தீர்வையைக் குறைக்க வேண்டும். அதன்மேலுள்ள லோகல் சர்சார்ஜையும் செஸ்ஸையும் ரத்துச் செய்வதே முறையாகும், பொருத்தமும் ஆகும். மறுபரிசீலனை செய்து அவற்றை ரத்து செய்ய வேண்டும்.

உரங்கள் வாங்க, கடன்கள் வாங்க விநியோகிக்க இருக்கிற ரயத் பாஸ் புக்கை திருநெல்வேலி மாவட்டத்திற்கும் துரிதமாக விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1—9—1972-ல் இருந்து கிராம அதிகாரிகளுக்கு ரூபாய் 7 ஊதியம் தனி உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். வீட்டுவரியை இவர்கள் வசூலிக்காது, தனி பில் கலெக்டர்கள் மூலம் பஞ்சாயத்துக்களில் வீட்டு வரி வசூல் செய்வது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

The educated are the most non-participants in things around them and bureaucrats are experts without local knowledge

என்ற இந்த இரண்டும் அறிஞர்கள் தம் அனுபவத்தால் சொல்லப்பட்டது. இன்றைக்கு எம்.பி.பி.எஸ்., பி.ஏ., பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர் ஆகிய அனைவருக்கும் படித்துவிட்டு வந்தவுடன் கொடுக்கிற போஸ்டே கெஜெடெட். இப்படி கெஜெடெட் என்பதற்கே மரியாதை இல்லாமல், மதிப்பு இல்லாமல் செய்கிறோம். ஆனால் இன்று கூட பி.பார்மஸியாளரையும் கெஜெடெட்டாக நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவித்தார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டில் 25, 30 வருட அனுபவங்களுக்குப் பிறகு தாசில்தாராக வந்து பணியாற்றுகிறார்கள். என்றென்றும் அரசு திட்டம், சமூக திட்டங்களுக்கு ஒத்துழைக்கும் முதுகெலும்பானவர்கள், அந்த தாசில்தார் போஸ்டை நாம் கெஜெடெட் ஆக்கவில்லை. அதை கெஜெடெட் ஆக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பல கெஜெடெட்களை இயக்குபவராக இருப்பதால் அப்பதவிகளையும் கெஜெடெட் ஆக்க வேண்டும். இராதாபுரம் துணை தாலுகாவை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பஸ் டிரான்ஸ்போர்ட்டை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. எங்கெங்கு பஸ் போகிறது, அதை எப்படி நிர்வகிக்க வேண்டும், சிறு கிராமங்களுக்கு எப்படி செலுத்த வேண்டுமென்று அதைக் கவனிக்க அரசு நிர்வாகப் பஸ்ஸைப் பொறுத்து, கன்னியாகுமரி மாவட்ட ஜாயின்ட் டைரக்டர் ஆப் டிரான்ஸ்போர்ட்டை திருநெல்வேலி மாவட்ட டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு உறுப்பினராக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கிறார். அவருடைய வேலைப் பளுவைக் குறைத்து, அங்கங்கே டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கென்று தனி அதிகாரியை அமைத்து, நல்லவிதமாக முன்னேற்றம் காணவேண்டுமென்று சொல்லிக்கொண்டு அவரே மாவட்ட பொறுப்பில் இருப்பதால் நாங்குநேரி ஊரில் மருத்துவ மனையொன்று இருக்கிறது



நிலம் இலவசமாகக் கிடைத்ததன் காரணமாக அந்த ஊருக்கு வெளியே கட்டடம் கட்ட நினைக்கிறார்கள். மக்கள் வசதியைக் கவனித்து அதனை ஊருக்குள்ளேயே அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிலவரி, மாநில ஆயத் தீர்வை, முத்திரைத்தாள்கள்—நிர்வாகம், மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் ஆகியவற்றிற்காக அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்கும் முகத்தான், தமிழகம் என்ற இந்த ஆட்சிக் குடும்பத்திலே வருவாய் சம்பாதிக்கின்ற பிள்ளையாக விளங்குகின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். ஒரு வீட்டில், எப்படி சம்பாதிக்கிற பிள்ளையை செல்லப் பிள்ளையாக ந[illegible]ோமோ, அப்படி செல்லப் பிள்ளையாகிய வருவாய்த் துறை அ[illegible]சர் அவ[illegible] சம்பாதிக்கின்ற பணத்தைக் கேட்கும்போது, இ[illegible] அதிகம் [illegible] அரசு தயாராக இருக்கும் நிலையிலே, நிச்சயம[illegible] இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற [illegible] வளர்ச்சிகளையும் முன்னேற்றங்களையும் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர்களும் முதலமைச்சர் அவர்களும் மு[illegible] ஒருமுறை குறிப்பிட்டது [illegible]ால பந்தயக் குதிரை வேகத்திலே இந்த அரசும் அமைச்சர்களும் [illegible]பட்டு முன்னேற்றம் காண விழைகின்ற நேரத்திலே, அலுவலாளர்கள் அந்த வேகத்திலே அவர்களோடு ஒத்து வருகிறார்களா என்ப[illegible] சந்தேகமாகத்தான் இருக்கிறது. அதுவும் வருவா[illegible] துறை அமைச்சர் அவர்கள் இதிலே ஈடுபடுகிற நேரத்திலே, அதிகா[illegible]ரை உள்ள வேகத்தை விட அதிகம் தேவைப்படுகிறது, நிச்சய[illegible] தாலுக்கா மட்டத்திலே, என்று அன்றாடம் சென்று வருகின்றவர்கள் என்ற முறையிலே உணர்ந்து கூறுகின்றேன். ஆகவே, அமைச்சரவர்கள் செல்கின்ற வேகத்திலே, அவருக்கு ஈடுகொடுத்து, அதிகாரிகளும், பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் பொதுமக்களுடைய குறைகள் நீங்கி பொதுமக்களுடைய நன்மைகள் பேணிக் காக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பட்டா வழங்குகின்ற விஷயத்தைப் பற்றி இங்கே பேச வேண்டுமென்றால், அதைப் பாராட்டுவதற்கு எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்ற முறையிலே, இந்த நாட்டை ஆளுகிற மக்களெல்லாம் தெரு ஓரங்களிலும், குப்பை மேடுகளிலும், மாண்புமிகு பரம்பரையினுடைய மக்கள் எல்லாம் வாழ்வதற்குக் கூட, வசிப்பதற்குக் கூட இடம் இல்லாத நிலையை மாற்றி, இந்த நாட்டு ஏழைகள் எல்லாம் கைகட்டி வாழவேண்டிய நிலையைமாற்றி, அவர்களுக்குத் தேவையான இடமாவது தரவேண்டுமென்ற அடிப்படையிலே இன்றைய தினம் பட்டா வழங்குகின்ற திட்டம் செயல்படுகிறது. பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பட்டா வழங்கப்படுவதை நான் மனதார வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1973 மார்ச் 14

அனாதைக் குழந்தைகளை ஆதரிக்கின்ற தாய் போல், நீட்டப்படுகின்ற அன்புக் கரங்களைப் போல், இந்தத் தமிழக அரசு பட்டா திட்டத்தையும் மனுநீதித் திட்டத்தையும் செயல்படுத்துகின்றது. அதை நிச்சயமாக தமிழக மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லா மல், நிலவரித் துறையிலே இன்றுவரையிலே ஈடுபட்டிருந்த விவசாயிகள் தங்களுடைய வருமானத்தைப் பரிசீலித்துச் செய்யமுடியாத நிலையிலே, அதை அறிவிக்க இயலாத நிலையிலே, இருந்ததை மாற்றி அருமை யான திட்டம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைய தினம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த பாஸ் புக் வழங்குகின்ற திட்டத்தை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கண்ணிழந்தவர் களுக்குக் கண்ணாடி அளிப்பது போல், ஒளி இழந்தவர்களுக்கு ஒளி அளிப்பதுபோல், இந்த பாஸ் புக் திட்டம் இன்றையதினம் உதவியாக இருக்கிறது. அதனால், அவர்கள் தங்கள் நிலம் பற்றிய விவரம் மட்டு மல்லாமல், வரவு செலவுகளையும் பார்த்துக் கொள்வதற்கு, இந்த நாட் டிலே இருக்கிற அத்தனை விவசாயிகளுக்கும் ஒரு நல்ல அம்சத்தை இந்த அரசு ஏற்படுத்தி கொடுப்பதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமை பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் விவசாயிகளைப் பற்றி பேசுகிற நேரத்திலே, மின்சார வெட்டைப்பற்றி எல்லோரும் அறிந்து இருக்கிறோம். விவசாயிகள் நிச்சய மாக அவர்களுடைய விளைச்சல் குறைவாக இருக்கிற காரணத்தால் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, வெட்டின் காரணமாக, பஞ்ச நிலைகளை அனுசரிப்பது போன்று, இந்த நிலைமைகளையும் அனுசரணையோடு கவ னித்து, அவர்களுக்கு வரியிலிருந்து ஓரளவாவது, விலக்கு தரவேண்டும். ஒரு நாளைக்கெல்லாம் அவர்களுக்கு 5 மணி நேரம் 4 மணி, நேரம்தான் என்றால், அந்த அளவிலே வரியைக் குறைத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். இது விவசாயிகளுக்குச் செய்கின்ற பெரிய நன்மை யாக இருக்கும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நிலவரியிலிருந்து வருகிற வருவாயிலே ஒரு பகுதி பேரூ ராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இன்றையதினம் நகராட்சிகள், பேரூ ராட்சிகள், மாமன்றங்கள் என்று பார்க்கின்ற பொழுது, அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாமன்றங்களுக்கும்தான் கடன் கொடுக்கிறது. பேரூ ராட்சிகள் தங்களுடைய கால்களிலேயே நிற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட வரிகளில் மட்டுமல்லாமல், கேளிக் கை வரி, முத்திரைத்தாள் வரி போன்றவற்றில் கொஞ்சம் அதிகப் படுத்தி, பேரூராட்சிகளுக்குக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டு மென்று கெட்டுக்கொள்கிற நேரத்தில், மற்றொன்றையும் குறிப்பிட விரும்பு கிறேன்.

அரசுப் புறம்போக்கு நிலங்களிலே பலவிதமான சுறுசுறுப்பான வகை யிலே முன்னேற்றங்கள் இருந்தால்கூட, சில இடங்களிலே சிக்கல்கள் ஏற்படுகிற நேரத்திலே, அதைத் தீர்க்கின்ற கடமையும் அரசுக்கு இருக் கிறது. குறிப்பாக, பள்ளிபேட்டையிலே அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே 20, 30 ஆண்டுகளாக குடும்பத்தோடு மக்கள் வாழ்கின்ற காரணத்



1973 மார்ச் 14] [திரு. கே. எ. வகாப்]

தினால் அங்கே இருக்கிற வீடுகளைப் பிரித்த பிறகுதான் பட்டா கொடுக்க வேண்டும். ஓட்டு வீடுகள் போட்டுவிட்டால், அதை எடுத்துவிட்டுத்தான் பட்டா கொடுக்கவேண்டுமென்று அங்கே கூறப்படுவதாக, அந்தத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் கூடக் கூறினார்கள். ஆகவே, அந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்து, அந்த வீடுகள் இருக்கிற இடங்களிலே பட்டா கொடுக்க வேண்டும். அவர்களுடைய அனுபவ உரிமைகள், அவர்களுக்கு நிலம் இல்லாத தன்மைகள், ஆகியவற்றை யோசித்து, இதைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வந்தவாசிப் பிரிச்சினையைப் பற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே வாழ்கிற முஸ்லீம் விவசாயிகள் 50 சென்ட்டிலே 10, 15 குடிசைகள் போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். அங்கே அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே, உழுகிற நிலத்தைத் தவிர வேறு எந்தவிதமான நிலமும் இல்லாத ஏழைகளாக அவர்கள் இருக்கிறார்கள். அந்த வந்தவாசிப் பிரச்சினையையும் அனுசரணையோடு கவனித்துப் பட்டா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இப்படி நிலப் பட்டா வழங்குவதிலே ஏழைகளுக்கு, முன்னுரிமையும், அதிலும் பின்தங்கியவர்களுக்கு முன்னுரிமை யும், அதிலும் அரிசனங்களுக்கு அதைவிட முன்னுரிமையும் கொடுக்கப் படுகிறது என்பதை நல்ல விதத்திலே உணர்ந்த காரணத்தால்தான், பல சம்பவங்கள் அரசின் கவனத்திற்கு வராமல் இப்படி இருக்கின்றன என்பதால்தான், இதை அரசின் முன் வைக்க நான் கடமைப்பட் டிருக்கிறேன்.

மதுவிலக்கை ரத்து செய்ததால் நாட்டிலேயுள்ள நிலைமையைப்பற்றி அரசு நன்றாக உணர்கிறது. இந்த நாட்டிலே வியாபாரத்திலே மந்தம் ஏற்பட்டிருக்கிறது. குடும்பங்களிலே சண்டைகள் பெருகியிருக்கின்றன. கண்ணியமான வாழ்க்கையிலே சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற சூழ்நிலையெல்லாம் இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னால் மதுவிலக்குப் பிரச்சாரக் குழு ஒன்று இருந்தது. அந்தக் குழு என்ன ஆயிற்று ? அதனுடைய தலைவர் எங்கே போய்விட்டார் என்று தெரியாத நிலையிலே நாம் இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு குழுவை மறுபடியும் இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். கள் குடிப்பது கெடுதல் என்று அறிவிக்கின்ற நிலையிலே, அப்படிப்பட்ட பிரச்சாரத்தைத் தீவிரமாக ஆக்குகின்ற நிலையிலே, கள் குடிப்பதை, அவர்களுடைய உற்சாகத்தைக் குறைக்க, வரிகளை அதிகப்படுத்த வேண்டும். நாம் எதற்கும் வரிகளை அதிகமாகக் கேட்பதில்லை. ஆனால், நீங்கள் செய்வது மனிதாபிமான மற்ற காரியம் என்பதாலே, லைசென்ஸ் பீஸ், மற்றும் சாராயம், கள் காய்ச்சுவதற்கான எல்லாவிதமான கட்டணங்களையும் உயர்த்த வேண்டும். அதனால் மது அருந்துபவர்கள், கள் குடிப்பவர்கள் இந்த நாட்டிலே குறைவார்கள் என்றும், ஆகவே, அதனைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலே மதுவிலக்கினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் போலீஸ்காரர்கள், மதுவிலக்கு ரத்தானதாலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக, பஸ் டிரைவர்கள், போலீஸ்காரர்கள், போன்றவர்கள் குடிக்கக் கூடாது என்று ஒரு சட்டம் போட்டால் கூட நல்லது என்று நினைக்கிறேன். இதற்கு சமீபத்திலே ஏற்பட்ட அனுபவங்களை நான் விளக்க முடியும். ஆகவே, இப்படிப்பட்ட முறையிலே அரசு இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் சரியான முறையிலே நடந்து வருகின்றபொழுது, அவற்றிலிருந்து அனுசரணையாகச் செய்யப்படுகின்ற சிபாரிசுகள் அரசால் காலதாமதம் செய்யப்படுகிறது என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட தாமதம் ஏற்படாமல், மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் சிறிய, மினி சட்டசபை போல் நடந்து கொண்டிருக்கின்றன என்ற அளவில், அவை சொல்கின்ற கருத்துக்களின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டங்களுக்குப் போலீஸ் அதிகாரிகள் வருவதில்லை. மாவட்ட நிர்வாகத்திலே அவர்களுக்கு பங்குப் இருக்கிறது. பலவிதமான சிக்கலைத் தீர்க்கவேண்டியவர்களாக, பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், போலீஸ் அதிகாரிகளும் இதிலே பங்கு பெற வேண்டுமென்ற முறையை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏற்படுத்தித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, பல திட்டங்களைச் செயல்படுத்துகிற அமைச்சரவையையும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டி, நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

*திரு. கு. அ. பொம்மன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டு இருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

முதன் முதலாக, விவசாய வருமான வரி மாநில சர்க்காருடைய விஷயம். நம் மாநிலம் அதை வசூல் செய்துகொண்டு வருகிறது. இருப்பினும் மத்திய சர்க்கார் இப்பொழுது மறைமுகமாக, நேரடியாக இல்லாமல், விவசாயிகளிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. மாநிலத்திலே ஒரு வரியும் மத்தியிலே ஒரு வரியும்—இப்படி இரண்டு வரிகளை விவசாயிகள் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் மாநிலத்தினுடைய கஜானாவுக்குப் பெரும் இழப்பு ஏற்படும் என்பதுதான் என்னுடைய கருத்து. இதனால் இன்னொன்றும் ஏற்படுகிறது. நிலத்திற்காக கம்பவுண்டிங் விதிக்கப்பட்டிருக்கின்றது. கம்பவுண்டிங் சிஸ்டத்திலும் இதனால் பெரிய பாதகம் ஏற்படும் என்பது என்னுடைய கருத்தாகும். அமைச்சர் அவர்கள் இதைப் பற்றித் தீவிரமாகப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்மையிலே, ஏற்பட்ட பெரிய புயல், மழை காரணமாகப் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மாவட்டங்



களிலே நிவாரண வேலைகள் செய்வதற்காக 125 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் எல்லாம் நடந்து கொண்டு வருகின்றன. அதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன், இருப்பினும் அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு—விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகிறது—உதவிகள் போதிய அளவு செய்யப்படவில்லை. குறுகிய காலக் கடனை நீண்டகால கடனாக நிர்ணயித்திருக்கிறார்கள். அது மட்டும் போதாது. விவசாயிகளுக்குக் கொடுத்த கடனுக்காக உள்ள வட்டியை வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே ஜன்மி எஸ்டேட் சட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திலே காட்டு நிலத்தைப்பற்றிப் பாதகமாகத் தீர்ப்பாகியிருக்கிறது. எனவே காட்டு நிலங்களைத் தவிர்த்து மற்ற இடங்களிலே உள்ள நிலத்தைப் பொறுத்தவரையிலே மக்களுக்கு அவற்றை ரயத்வாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1380-ஆம் பசலி ஆண்டு வரையில் செலுத்த வேண்டிய பழைய நிலுவை பாக்கிகளைக் கொடுக்கவேண்டாம் என்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. ஆனால் கூடலூர் ஜன்மியைப் பொறுத்தவரையிலும் அவர்கள் இரண்டு முறை வரியைக் கட்டுகிறார்கள். ஒன்று மாநில சர்க்காருக்குத் தருகிறார்கள். மற்றொன்று பாட்டம் என்ற முறையிலே நெல்லாகவோ அல்லது அதற்குரிய பணமாகவோ ஜென்மி கோயலகத்துக்கு கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்காதவர்கள் மீது ஜன்மிகள் வழக்குத் தொடருகிறார்கள். தற்போது சில வழக்குகள் கூடலூர் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது. அதை வாபஸ் வாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அவற்றைக் கேட்காமல் இருக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கூடலூர் தொகுதியைப்பற்றி இரண்டு ஒரு வார்த்தைகளை கூறவேண்டுமென்று நினைக்கிறேன். கூடலூரில் நிலம் வழங்கவேண்டுமென்று கேட்டு கிளர்ச்சி ஏற்பட்டது. 1970 ஆண்டுக்கு முன்னாலே ஏற்பட்டபொழுது இந்த அரசு பெருமுயற்சிகள் எடுத்து அங்கேயுள்ள மக்கள் ஆக்கிரமித்திருந்த நிலத்தை அவர்களுக்கே மூன்று ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டுமென்று முடிவிற்கு வந்தது. ஆனால் கொடுக்கப்பட்ட நிலத்தைப் பார்த்தால் மிகக் குறைவாக இருக்கிறது. பரப்பளவு ஏக்கரில் 11,352 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குடும்பங்களின் எண்ணிக்கை 7,902 ஆகும். அதைப்போன்றே பரப்பளவு, ஏக்கரில் 9,060; ஆனால் குடும்பங்களின் எண்ணிக்கை 5,573 ஆகும். இப்படிக் கணக்குப் பார்க்கும் பொழுது ஒரு குடும்பத்திற்கு அரை ஏக்கர்தான் வந்திருக்கிறது. சிலருக்கு வேண்டுமானால் 2 ஏக்கர் மூன்று ஏக்கர் வந்திருக்கலாம். இந்தவகையில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக அரிசனங்களும் மலைவாசிகளும் இருக்கிறார்கள். அங்கே நிலம் காலியாக இருப்பதால்தான் அன்னியர்கள் வந்து புகுந்து கொள்கிறார்கள். இதனால் தான் தற்போது கூடலூரில் ஒரு நெருக்கடியான கட்டம் ஏற்பட்டுள்ளது. எனவே இருக்கக்கூடிய நிலத்தை விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். தற்போது கூடலூரில் உள்ள சூழ்நிலையைக் கண்டறிய வருவாய்த்துறை அதிகாரியை அரசு அனுப்பியிருக்கிறது. அவர் வெளியிட்டிருக்கிற அறிக்கைபற்றி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதை நான் பேரவைத்

தலைவரின் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். கூடலூர் தாலூக்காவில் 1971-ஆம் ஆண்டு ஜூன் 30-ந் தேதிக்கு முன் குடியேறி வசித்து வந்த எந்த நபரையும் நிலமற்றவராக ஆக்காமலிருப்பது தமிழ்நாடு அரசின் கொள்கையாகும் என்று நம்பியார் கூறினார். வெளியேற்றப்பட்டவர்களுக்கு மாற்று இடங்கள் அளிக்கப்பட்டுள்ளன. யாருக்காவது மூன்று ஏக்கர்களுக்குக் குறைவாகக் கிடைத்திருந்தால் அவர் கலெக்டருக்கு மனுச் செய்து பாக்கி நிலத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார் என்று போடப்பட்டிருக்கிறது. எனவே அந்த முறையிலே இவர்களுக்கு எல்லாம் மூன்று ஏக்கர் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மண் அரிப்புத் திட்டம் 1958-லே நீலகிரி ஜில்லாவிலே விரும்பாத திட்டமாகக்கொண்டு வரப்பட்டது. 1960-லிருந்து பூசனநோய் ஏற்பட்டு உருளைக் கிழங்கு மிகவும் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் வாங்கிய கடனுக்காக வட்டிக்கு வட்டி போடுகிறார்கள் வட்டி ஏறிக்கொண்டே போகிறது. இதைக்குறித்து நானும், சட்ட மன்ற உறுப்பினர்களான கருணைநாதன், தேவராசன் ஆகியோரும் சேர்ந்து அமைச்சர்களிடம் அதை வஜா செய்ய வேண்டுமென்று கேட்டோம், அதற்காக மனுக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1950-ஆம் ஆண்டிலே விதிக்கப்பட்ட தடையுத்தரவு கூடலூருக்குக் கிடையாது. குன்னூர், உதகை ஆகிய தாலூக்காக்களுக்கு விதிக்கப்பட்டது. இப்போது அந்தத் தடை உத்திரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. அந்த இடங்களிலே மக்களுக்கு நிலம் கிடைப்பது கிடையாது. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஏன் நாள் ஆகிறது என்று கேட்டால் எங்களிடத்திலே போதுமான சிப்பந்திகள் தாசில்தார்கள் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். எனவே கூடலூரிலே போட்டிருப்பதைப் போன்று அந்த இடங்களுக்கும் தாசில்தார்களையும் மற்ற சிப்பந்திகளையும் போட்டு நிலங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கைப்பற்றி ஒரே ஒரு வார்த்தை. 36 கோடி ரூபாய் நமக்கு வருவதாகத் தெரிகிறது. அது பெரும்பாலும் கிராமங்களிலிருந்துதான் வசூலாகிறது. எனவே அந்தப் பணத்தைக் கல்வித் துறைக்கோ மற்ற துறைக்கோ செலவழிக்காமல், கிராமங்களின் முன்னேற்றத்திற்காக செலவழித்தால் அது வரவேற்கத்தக்கது. அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மலைப் பிரதேசங்களிலே இருக்கின்ற மக்கள் விவசாயம் செய்வதற்கு உதவியாக அவர்களுக்கு டிராக்டர்கள் வழங்க வேண்டும். நீலகிரி, கோவை போன்ற மலைப் பிரதேசங்களிலே உள்ளவர்களுக்கு விவசாயம் செய்வதில் கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே போதுமான டிராக்டர்களையும் கொடுத்து பணிமனைகளையும் அமைத்துக்கொடுக்கவேண்டும்மென்று கேட்டுக் கொள்கிறேன்.





அரிசனங்களுக்குப் பட்டா வழங்கப்படுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து ரெவின்யூ போர்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. பிறகு அங்கிருந்து உத்திரவு வந்ததற்குப் பிறகு தான் நிலப்பட்டா வழங்க வேண்டியிருக்கிறது. இதனால் அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டால் உடனடியாக மக்களுக்குப் பட்டாக்களை வழங்குவதற்கு வசதியாக இருக்கும். எனவே கலெக்டர்களுக்கு அதிகமாக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த வருவாய்த்துறை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரசுச் சக்கரத்தின் அச்சாணி இந்தத் துறை என்றுகூடச் சொல்லலாம். தம்முடைய மாநிலத்திலே பலவிதமான சங்கடங்கள் வருகின்ற பொழுதெல்லாம் அவற்றைப் போக்குவதற்கு—"யதா யதாஹிதர்மஸ்யக் லானிர்பவதி பாரத அப்யுத்தானம் அதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்" என்று ஒரு சுலோகம் உண்டு. அதாவது தர்மத்திற்கு எப் பொழுது எப்பொழுது கஷ்டம் வருகிறதோ அப்பொழுது எல்லாம் பகவான் வந்து காப்பாற்றுவார் என்று சொல்வார்கள். வருகிறாரோ இல்லையோ அது வேறு விஷயம். அதைப்போன்று—நாட்டிலே மக்களுக்குக் கஷ்டங்கள் வந்துவிட்டால் உடனடியாக இந்த வருவாய்த்துறைதான் முயற்சிகள் எடுத்துக்கொண்டு அவற்றைப் போக்குவதற்கான நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. வெள்ளத்தால், புயலால் சமீபத்திலே பாதகம் ஏற்பட்ட பொழுது கஷ்டங்கள் வந்தபொழுது இந்த இலாக்காதான் பல காரியங்களை விரைவாகச் செய்துகொண்டிருக்கின்றது. குடும்பத்தில் சம்பாதிக்கக்கூடியவர்கள் இறந்து, வேறு யாரும் சம்பாதிக்கக்கூடியவர்கள் இல்லாத நிலையில் அத்தகைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்துள்ளோம். வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட தொழில் சம்பந்தப் பட்டவர்களுக்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு 100 ரூபாய் கொடுத்தோம். இம்மாதிரி ஏராளமான காரியங்களை வருவாய்த்துறை இலாக்காவானது நல்லமுறையிலே செயலாற்றிவருவது பெருமைப்படக்கூடிய விஷயமாகும். அதேபோல, புயல் வந்தபொழுது, பஞ்சம் வந்தபொழுது இந்த இலாக்கா நல்லவிதத்தில் செயல்பட்டிருக்கிறது. தவிர, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை அனுசரித்து, ஏழைகளுக்குப் புரிந்த பணிகள் ஏராளம் இருக்கின்றன. கடந்த இருபதாண்டுக் கால காங்கிரஸ் அரசாங்கத்தில் ஏழைகளுக்குச் செய்த மனைப்பட்டா வகையில் அதைவிட சுமார் 10 மடங்கு அதிகமாக 5 ஆண்டுகளில் ஏழைகளுக்கு நிலம் கொடுத்து பட்டா வழங்கியது மிகமிகப் பாராட்டுதற்குரியது. அந்த ஏழைகளின் மனத்திலேயிருந்து இந்த அரசு அன்பைச் சம்பாதிக்க முனைந்திருப்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம், அந்தப் புள்ளிவிவரங்களை யெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் ஏராளமாக இருக்கிறது. இன்னும் இம்மாதிரி பட்டா கொடுப்பதிலே சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும். மதுரை போன்ற பல பகுதிகளிலே ஏராளமான ஜனங்கள் மிகமிக சுகாதாரக் கேடான இடங்களில் வசிப்பது மாநகராட்சிக்குப்

நண்பகல் 12—00

பெருமை அளிப்பதாக இல்லை. அப்படிப்பட்ட பகுதிகளை, குறிப்பாக காமராஜபுரம் போன்ற பகுதிகளிலே நிறைய ஏழைகள் வசிக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 5 ஏக்கராவிற்கு உட்பட்ட நிலங்களுக்கு வரியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும், ஏழைகளின் வருமானத்தை 150-லிருந்து 250-ஆக மாற்றி அவர்களெல்லாம் ஏழைகள், அவர்களெல்லாம் காலி இடம் பெறுவதற்கு அருகதை உள்ளவர்கள் என்று இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பல ஏழைகளுக் கெல்லாம் மனைப்பட்டா கொடுத்தாலும் இன்னும் பலருக்குக் கிடைக்கவில்லை. அந்த ரீதியிலே பெரிய நகரங்களிலே மக்களுக்கு விநியோகிக்கும் இடங்கள் எல்லாவற்றில் ஏழைகள் மனுச் செய்தால் தாமதமில்லாமல் வழங்க வேண்டும். சிலருக்கு ஒரு ஆண்டுக் காலமானாலும் கிடைக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு போட்டவர்கள் சிலருக்குக் கிடைக்கிறது. அது வருந்துவதற்குரிய விஷயம். நிலம் எவ்வளவு இருக்கிறது என்று சர்வே செய்து, புறம்போக்காக அங்கே கிடைக்கும் நிலங்களைக் கணக்கெடுத்து, ரிஜிஸ்தர் புத்தகங்களை வைத்து, மனுக்கள் வந்தவுடன், கிடைக்கச் செய்தால் நல்ல முறையில் அந்த மக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்க முடியும். அந்த ரீதியில் முதலில் பல கைத்தறி நெசவாளர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதைக் கவனித்து அவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும்.

அரசு ஏழைகளுக்குப் பல பணிகளைச் செய்கிறது. முக்கியமாக அவர்களெல்லாம் அரசின் அதிகாரிகளை அணுகி, தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ள மனுநீதி நாளிலே தங்கள் குறைகளை நீக்கிக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்தக் காரியத்தை அரசு செய்திருக்கிறது. இன்னும் ஏழைகளுக்குப் பலவிதமான சலுகைகளைச் செய்யும்பொழுது பத்திரப் பதிவு விஷயமாகச் சலுகைகள் செய்ய வேண்டுமென்று 6 வகையிலே உள்ளவர்களுக்குச் சலுகைகள் செய்திருக்கிறார்கள். ஆனால், இன்னொன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைபடுகிறேன். ஆறுவதோடு இன்னும் ஒரு வகுப்பாரையும் சேர்க்கவேண்டும். எல்லா ஜனங்களையும் யார் யார் ஏழைகள் என்று சர்வே செய்து, யாருக்கெல்லாம் சொத்தே யில்லையோ, 5,000 ரூபாய் சொத்து இல்லை என்று இருந்தாலும் அவர்கள் சொந்தத்திலே வசிப்பதற்கு ஒரு வீடு வாங்கினால் அதற்குப் பதிவு கட்டணத்தில் விதிவிலக்குக்கு ஏற்பாடு செய்தால் உண்மையிலேயே எல்லா ஏழைகளும் ஆதரிப்பார்கள் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தவிரவும், இப்பொழுது மக்களுக்குப் பலவித கஷ்டங்கள் வருகிறது என்று ஏற்கெனவே சொன்னோம். அதைச் சமாளித்துக் கொண்டு வரும் பொழுது விலைவாசி உயர்வு ஏற்பட்டு பல ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கஷ்டங்களைப் போக்குவதற்காகவும், மற்ற வியாபாரிகள் அதிக விலைக்கு விற்காமல் தடுக்கவும் இந்த ரெவின்யூ இலாக்கா பல இடங்களில் நியாய விலைக் கடைகளைத் திறக்கிறார்கள். அது இப்பொழுது மிகக்





கம்மியாக இருக்கிறது. அதை அதிக அளவிலே ஆங்காங்கே திறந்து ஏழைகளுக்குக் குறைந்த விலையில் முக்கியமான உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். இல்லையென்றால் இப்பொழுது விலைவாசியில் காணப்படும் ஏற்றத்தால் ஜனங்களுக்கு இன்னும் கஷ்டம் அதிகமானால் அதைச் சமாளிக்க முடியாமல் போகும். ஆகவே, இந்தச் சமயத்தில் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்து, நியாயவிலைக் கடைகளை அதிகமாகத் திறக்க வேண்டியது அவசியம், அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிரவும், இப்பொழுது கிராமங்களிலேயுள்ள ஜனங்களுக்கு நல்ல நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. கிராம மக்கள் தாங்கள் இருக்கும் வீடுகள் தங்களுக்கே சொந்தமாகப் போகிறது என்ற உற்சாகத்தோடு, வீடில்லாமல்தான் பிறந்தாலும், வீடில்லாமல் செத்துப் போக வேண்டிய நிலைமை இருக்காது, இந்த ஆண்டிலேயில்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலேயாவது ஜாரியாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

எனவே ஒரு டார்ஜெட் போட்டு, 4, 5 ஆண்டுக் காலங்களில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் கொண்டிருக்கின்ற அந்த நம்பிக்கை நமது அரசுக்குப் பக்க பலமாக இருக்கிறது. விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்தது, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் சட்டம் இயற்ற இருப்பது ஆகியவைகளை அறிந்த விவசாயிகள் அரசைப் பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டுதலை இன்னும் பெரும் ரீதியிலே இன்னும் நிலங்களைக் கொடுக்கவும், அவர்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்யவும், இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அடிப்படைக் கொள்கையில் இயங்கி, பல நல்ல காரியங்களைச் செய்யும் என்ற நம்பிக்கையோடு நான் இதை ஆதரிக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை வரவேற்றுப் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுவாகவே, இந்தத் துறையை ஏற்றிருக்கின்ற அமைச்சரவர்கள், நல்ல வணிகராகவும், நகராட்சித் தலைவராகவும் இருந்து மிக்க திறமை படைத்தவர்கள். அதைப்போலவே, அவருக்கு ஏற்பட்டிருக்கும் அந்தத் துறையை வகிக்கும் அதிகாரிகளும் நல்ல அனுபவமிக்கவர்களாக, மிகுந்த நேர்மையாளர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் ஒரு சில விஷயங்களிலே பார்த்திருக்கிறேன். இன்றையதினம், வெளியிலே, நிலம் கொடு, வேலை கொடு, உணவு கொடு, இல்லையென்றால் வெளியேறு என்றெல்லாம் இந்த அரசைப் பார்த்து பெரிய தலைவர்கள் ...க்கொண்டிருக்கிறார்கள். பெரிய தலைவர்கள் மட்டுமல்லாமல், இந்த நாட்டை ஆண்ட தலைவர்களே அப்படிப் பேசுகிறார்கள். ...னால், அவர்கள் ஆண்ட காலத்தில் என்ன செய்திருக்கிறார்கள் என்று ...ார்க்கும்பொழுது நம்மை எதற்காக வெளியேறச் சொல்லுகிறார்கள் என்பது நியாயத்திற்குப் பொருந்தாமல் இருக்கிறது. அவர்கள் காலத்திலே,

1947-இலிருந்து 1967-வரையிலே நிலப்பட்டா பெற்றவர்கள் 1,11,433 பேர்கள். இந்த ஐந்தாண்டுக் காலத்திலே நாம் நிலப்பட்டா கொடுத்திருக்கிறோம். 2,72,235 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதேபோல் மனைப்பட்டா, 1947-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் இருபதாண்டுக் காலத்தில் அவர்கள் கொடுத்திருப்பது 63,770 பேர்களுக்குத்தான். அதே நேரத்தில் ஐந்தாண்டுக் காலத்திலே நாம் 3,52,000 பேர்களுக்கு மனைப்பட்டா கொடுத்திருக்கிறோம். இந்த நேரத்தில் நம்மை வெளியேறு என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது ?

தஞ்சை மாவட்டத்திற்குத் தனிச் சட்டம் கொண்டு வந்து, அங்கேயுள்ள பண்ணையாட்களுக்கு 1,54,224 பேர்களுக்கு குடியிருப்பு மனைக்கு வகை செய்திருக்கிறார்கள். இது பாராட்டக்கூடிய ஒன்று, நகரங்களிலே ஏற்படும் வசதிகளை ஒப்பிட்டு, சென்னைக்குச் சுற்றுப்புறத்திலேயிருக்கும் 20 மைல்களைச் சுற்றியுள்ள அரசாங்க நிலங்களை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் அரசாங்க நிலங்களையெல்லாம் தனிப்பட்டவர்கள் யாருக்கும் ஒப்படை செய்யக் கூடாது, லீசுக்கு விடக் கூடாது என்ற நல்ல சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தகுந்தது.

அதுமட்டுமல்லாமல், நான் சொல்லிக் கொள்வேன். ஒரு நகரத்திலேயிருக்கும் தனிப்பட்டவர்கள் மனைகளையெல்லாம் அவர்களே விற்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து. காரணம், பலருக்கு அதைக் கொடுப்பதன் மூலம் அவர்கள் வேறு விதத்திலே பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவற்றை யெல்லாம் அரசாங்கமே கையகப்படுத்தி நிலமில்லாதவர்களுக்கு, வீடு கட்ட இடம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். என்ன காரணமென்றால், திருச்சி நகரத்திலே புதுக்கோட்டை மகாராஜாவிற்குத் தனிப்பட்ட நிலம் ஏற்பட்டது இருக்கிறது. அந்த நிலங்களை இன்றைக்கு விற்றுவிட்டார்கள். யார் வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுதுதான், உழைத்துத்தான் சாப்பிட வேண்டும், உழைப்புதான் முக்கியம் என்ற சித்தாந்தங்களைக் கொண்டிருக்கும் அருமை கம்யூனிஸ்ட் நண்பர், திருச்சி கம்யூனிஸ்ட் நண்பர் அந்த நிலத்தை, புதுக்கோட்டை அரசரிடத்திலேயிருந்து வாங்கி அதைப் பலருக்கு மனைப்பட்டாவாகக் கொடுத்து பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அதிலிருந்து லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று குற்றச்சாட்டுகளை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்டபொம்மன் காலத்தில் "வானம் பொழியுது, பூமி விளையுது, எதற்காக வரி கட்ட வேண்டும் ?" என்று கேட்டதாகக் கதை. அதை நிறைவேற்றி இருப்பது நம்முடைய அரசுதான். இன்றைக்கு புஞ்சைக்குத் தீர்வையை ரத்து செய்திருக்கிறார்கள். நஞ்சை நிலத்திற்கு, ஐந்து ஏக்கருக்குக் குறைவாக இருக்கும் நிலத்திற்கெல்லாம் தீர்வையை ரத்து செய்திருக்கிறார்கள். புதுக்கோட்டையை நிர்வாக சவுகரியத்திற்காக தனி மாவட்டமாக ஆக்கியிருக்கிறார்கள். அதற்காக மிகுந்த நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். துறையூர் வட்டத்தைப் பிரித்து தனியாக அலுவலகம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் நன்றி செலுத்தக்





கடமைப்பட்டிருக்கிறேன். ஆற்காடு தனி வட்டமாக பிரிக்கப்பட்டிருப்பதற்கும் நன்றி. அங்கு அலுவலகம் இல்லை யென்ற குறை இருக்கிறது. அதைத் தயவுசெய்து தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு டிரஷரி ஆபீஸ் இல்லாமல் வாலாஜாவுக்குப் போக வேண்டியிருக்கிறது. அந்தக் குறையைத் தீர்த்து அங்கு டிரஷரி ஆபீஸ் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில உச்சவரம்பைப் பொறுத்தவரையில் மிகுந்த அக்கறையோடு, நிதானமாகச் செயல்படுத்தி நிலம் இல்லாதவர்களுக்கெல்லாம் நிலம் கிடைக்கக்கூடிய அளவுக்கு நல்ல முறையில் சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். விவசாயக் கூலிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. இப்போது அதை அதிகமாக்கி இருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அதை வரவேற்கிறார்கள். 54 லிட்டருக்கு ஆறு லிட்டர் நெல் கூலியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு மாற்றம் செய்ய வேண்டும். சில இடங்களிலே வயலுக்கும் களத்திற்கும் அதிக தூரம் இருக்கிறது. அந்தத் தூரத்தையும் கணக்கிட்டு கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த் துறையில் பெரிய மாறுதல்களைச் செய்ததன் காரணமாக இன்றைக்கு மதுக் கடைகளின் ஏலம் விட்ட வகையில் மிகுந்த வருவாயை அடைந்திருக்கிறோம். அந்த வகையில் வருவாய்த் துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஏலம் விடும்போது இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்ல வேண்டும். அவர்கள் எல்லாம் சென்ற ஆண்டு ஆண்டுக் குத்தகையாக எடுத்தார்கள். இந்த ஆண்டு மாதக் குத்தகை, கிஸ்தி கட்ட வேண்டுமென்ற நிலையில் அவர்கள் ஆண்டுக் குத்தகையை மனத்தில் கொண்டு இஷ்டப்படி ஏலம் எடுத்துவிட்டு இப்போது ரொம்பப் பேர் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளும், அமைச்சர்களும் மிக நேர்மையாக இருக்கிறார்கள். இருந்தாலும் கொஞ்சம் கருணையும் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரைப்பட அரங்குகளுக்கு வரி போட்டு வசூல் செய்கிறோம். தியேட்டராகக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் ஓரளவு 90 சதவிகிதம் ஒழுங்காக வரி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் டூரிங் தியேட்டா வைத்திருப்பவர்கள் அதிகாரிகள் அடிக்கடி சென்று செக் பண்ண முடியாத நிலையிலே அதிகமாகத் திருடுகிறார்கள். அவர்களை மிக உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு காட்சிக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து நமக்கு வர வேண்டிய அளவு வசூலித்து விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் மானியத்தை மனப் பூர்வமாக வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின் பேரில் பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதை வரவேற்கக் காரணம்— 1948 முதல் 1967 வரை ஆட்சி செய்தவர்கள் நிலம் இல்லாத

ஏழைகளுக்கு 2·88 லட்சம் ஏக்கர் நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு 1968 முதல் 1972 வரை $5\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு ஐந்தே ஆண்டுகளில் கொடுத்திருப்பதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அதேபோல் வீடு இல்லாதவர்களுக்கு மனை வழங்குவதில் கடந்த ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டதைவிட இந்த ஐந்தாண்டுக் காலத்தில் லட்சக்கணக்கான மக்களுக்குக் கொடுத்திருப்பதை வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை ஜில்லாவைப் பொறுத்தவரை கண்டமனூர் என்ற ஏரியா இருக்கிறது. அங்கே மலைப் பிரதேசம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதிலே 18,000 ஏக்கர் வரையிலே ஏழை நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம் என்ற முறையில் 1973 ஜனவரி வரை கொடுக்கப்பட்டது 13,874 ஏக்கர். இன்னும் ஐயாயிரம் ஏக்கர் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட நிலங்களில்கூட நடைமுறைச் சிக்கல் இருப்பதாக அங்கிருக்கக்கூடிய ஏழை மக்கள், நிலங்களை உழுபவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அந்தப் பகுதி ஏழை மக்களுக்கு விரைவில் பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெவின்யூ ரிலீபை பொறுத்தவரை பேசிக் அஸெஸ்மெண்ட் என்று சொல்லக் கூடியதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் வறண்ட காட்டு நிலங்களுக்கு வரியைத் தள்ளுபடி செய்ததும், ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நஞ்சை நிலங்களுக்கு வரியைத் தள்ளுபடி செய்ததும் பாராட்டுக்குரியது. ஏழைகள்பால் அரசு கொண்டிருக்கின்ற அன்பைத்தான் இது காட்டுகிறது என்று மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

விவசாயக் கூலிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்ததையும் நான் வரவேற்கிறேன். ஆனால் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் தாங்கள் வாங்கக்கூடிய பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை இருக்கிறது. கரும்புக்கு ஓரளவு விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். மற்ற உற்பத்திப் பொருள்களுக்கு, உணவு தானியங்களுக்கு விவசாயி விதைக்காக வாங்கும்பொழுது இரட்டிப்பு மடங்கு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் அறுவடைக் காலத்தில் அவர்கள் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் அதை ஸ்டாக் செய்து கொண்டு விலை உயருகின்ற நேரத்தில் விற்க முடிவதில்லை. ஏற்கனவே கடன் தொல்லைகளால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த விவசாயிகளிடமிருந்து நடுத்தரகர்கள், வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். இந்த துர்ப்பாக்கியமான நிலைமைக்கு லட்சக்கணக்கான ஏழைகள் உள்ளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் இதுபற்றிக் கண்காணித்து நிர்ணயிக்கப்பட்ட விலையை, பாதகம் இல்லாத விலையைப் பெற்றுத் தர வேண்டும். அந்த உணவுப் பொருள்களை அரசே வாங்கி ஸ்டாக் செய்யலாம், அல்லது வேறு முறைகளைக் கையாண்டு நியாயமான விலையை உற்பத்தி செய்பவர்களுக்குப் பெற்றுத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இன்றைக்கு நம்முடைய சமுதாயத்தை எடுத்துக் கொண்டால், இந்தியாவை எடுத்துக் கொண்டாலும், அல்லது தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும் நூற்றுக்கு 80 பேர் விவசாயிகள். அந்த 80 சதவிகிதத்திலும் 100-க்கு 99 பேர் நடுத்தர, ஏழை விவசாயிகளாக இருக்கிறார்கள் என்ற நிலையை அரசு நன்றாக அறியும். குறிப்பாக—

'Indian economy is essentially a rural economy based on agriculture'.

என்றுதான் சொல்லுவார்கள். நம்முடைய பொருளாதாரம் கிராமப் பொருளாதாரத்தை, விவசாயிகளின் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டிருக்கும் நிலையில் நம்முடைய பொருளாதாரம் வளர வேண்டுமானால் ஏழைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள விவசாயச் சமுதாயத்திற்கு ஒரு பெருத்த பாதுகாப்பைச் சட்டரீதியாகக் கொடுக்க வேண்டும். இன்று அந்த ஏழை விவசாயிகள் கடந்த ஐந்து வருஷம், பத்து வருஷ காலமாக வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில் பெரும்பாலான பகுதிகளில் உள்ள மக்கள் வான் மழையையே நம்பியிருப்பதால் வான் பொய்த்துவிட்டால் அவர்கள் விளைவித்திருக்கும் பொருளை எடுக்க முடியாமல், அதற்காக செலவு செய்திருக்கும் தொகையையும் ஈடுகட்ட முடியாமல் குடும்பமே சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் முன்பு அரசாங்கத்திலிருந்து வாங்கிக் கடன் தொகையைக் கட்ட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அந்த நிலையில் அவர்கள் வாடிக் கொண்டிருக்கும்போது அரசாங்கச் சட்டப்படி என்ன செய்கிறார்கள் என்றால், வாங்கிய கடனுக்கு வட்டி போடுகிறார்கள். வட்டிக்கு வட்டி போட்டு அந்த வட்டியோடு பீனல் இன்டரெஸ்ட் என்றும் போடுகிறார்கள். அதற்குரிய அபராதத் தொகையும், அந்த வட்டியும், முதலும் சேர்ந்து வரும்போது, அது மிகவும் அதிகமாக, வைக்கோலைத் சுமந்து செல்கிற கழுதை தண்ணீரில் விழுந்து சுமையை மாற்றிக் கொள்ளலாம் என்று முயற்சி செய்து தண்ணீரில் நனைந்து வைக்கோலின் சுமை இரண்டு மடங்காகப் பெருகி கீழே விழுந்து அடிபட்டது போல் அவர்களின் கடன் சாதாரணச் சுமையாக இருக்கும்போது வட்டி, வட்டிக்கு வட்டி, பீனல் இன்டரஸ்ட் என்று இப்படி சுமை அதிகமாக ஆகிறது. ஆகவே அதைக் கட்ட முடியாத நிர்ப்பந்த நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு ரெவின்யூத் துறை அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து—சிறிய விவசாயிகள் சார்பாக நான் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்—விவசாயிகள், குறைந்தது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கி உள்ள கடன்களை அரசாங்கம் வஜா செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாகயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பீனல் இன்டரஸ்ட் என்ற சுமையை, வட்டிக்கு வட்டி போடும் நிலையை உடனடியாக மாற்றி அவர்களுக்கு நல்லதொரு சட்டத்தினை ஏற்படுத்துவதன் மூலம் ஏழைகளுக்கு ஒரு நிவாரணம் கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளின் குறைகளை உடனடியாகத் தீர்க்க முடியாத வகையில் ஆண்டுக்கு ஒரு முறை நடந்து வந்த ஜமாபந்தி முறையை மாற்றி இப்போது மனு நீதி நாள் என்று, மனுநீதி சோழன் காலத்தில் எப்போது வேண்டுமானாலும் மன்னனைக் கண்டு குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நிலைமை இருந்ததுபோல், மக்களை ஆளக் கூடிய அமைச்சர்களின் பிரதிநிதியாக மாவட்டத்தில் உள்ள ஆட்சித் தலைவர் கிராமங்களுக்குச் சென்று, முக்கியமான கிராமங்களுக்கு மாதத்திற்கு சில நாட்களைக் குறிப்பிட்டு மனு நீதி நாள் என்று அவர்களோ அல்லது அவர்கள் கீழ் உள்ள ஆர்.டி.ஓ. அல்லது தாசில்தார் இவர்களை அனுப்புவதன் மூலம் மக்களின் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி கிராம மக்களைச் சந்தித்து அவர்கள் குறைகளை நீக்குவதோடல்லாமல் அவர்களிடமிருந்து நல்ல பல கருத்துக்களைத் தெரிந்து கொண்டு ஆட்சியில் சீர்திருத்தங்கள் செய்வதற்கும் அது உதவுகிறது என்பதற்காக அத் திட்டத்தை நான் பாராட்டுகிறேன். அந்த முறையை இன்னும் சிறப்பாக நடைமுறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய வருமானவரி என்று வரும்போது மாக்ஸிமம் லிமிட் 5,000 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி ரூ. 5,000-க்கு அதிகம் வருவாய் உள்ளவர்கள் வருமான வரி கட்ட வேண்டும் என்று வைத்திருப்பது உள்ளபடியே விவசாயிகளைப் பாதிப்பதாக இருக்கிறது. என்னைப் போன்றவர்கள் கூட விவசாயம் செய்யும்போது வரவு செலவுக் கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்ள இயலவில்லை என்றால் பேனவைத் தொட்டு கும்பிட்டு என்ன வேண்டுமோ அதை எழுதிக் கொள்ளுங்கள் என்று சொல்கிற மக்களை மெஜாரிடியாக வைத்துக் கொண்டு இப்படி ரூ. 5000-க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் வருமான வரி கட்ட வேண்டுமென்று சொன்னால் நிலைமை என்னவாகுமென்றால் உழுபவன் கணக்குப் பார்த்தால் தார் கம்பு கூட மிஞ்சாது என்ற கிராமீயப் பழமொழிக் கிணங்க ஏழை விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள், கஷ்டப்படக்கூடிய ஒரு நிலைதான் ஏற்படும். ஆகவே இதற்காக ஒரு தனிக் குழு, பெரும்பாலும் விவசாயிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து அந்தக் குழு கிராமங்களுக்குச் சென்று, ஸ்டடி டூம் என்று சொல்வார்களே அதேபோல், நேரிடையாக விசாரித்து இருக்கக் கூடிய சிக்கல்களைத் தெரிந்து கொண்டு இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவரை தயவு செய்து இதை நிறுத்திவைத்தால் கூட பரவாயில்லை என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன்னால் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றிருந்ததை இப்போது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது. இன்று அரசியலில் சூழ்ச்சி செய்து கலைஞர் அவர்களுடைய அரசை, தமிழக அரசை கவிழ்த்துவிடலாம், தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ளலாம் திண்டுக்கல்லில் என்று அதைச் சுற்றி வருகிறபொழுது பதவியை துச்சமென மதித்து நமது அரசு பஸ் நாஷனலைசெஷன் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. பணக்காரர்கள் எதிர்ப்பு வந்தாலும் அதை துச்சமென மதித்து சாதனைகளைச் சொல்லி வெற்றி பெறலாம் என்று மிராசுதார்கள், மிட்டாதாரர்கள் எதிர்ப்பு இருந்தாலும், அதை





சமாளித்து சமுதாயத்தில் உள்ள ஏழை எளியவர்கள் நன்மைக்காக 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக மாற்றியிருக்கும் திட்டத்தை நான் மிக மிகப் பாராட்டுகிறேன். அதே போல் இன்னும் பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவைகளைப் பற்றி யெல்லாம் சொல்ல நேரம் இல்லை என்பதால் ஒரு பாயிண்டை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

குத்தகைதாரர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு மிக அதிகமான பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் ஒருவரை சென்ற வாரம் சென்னை ஆஸ்பத்திரியில் சந்தித்தேன். வத்தலகுண்டு டாக்டர் ஒருவர் சொன்னார். ஒருவர், அவருக்கு முக்கால் ஏக்கர் கொடிக்கால் இருக்கிறது. அவர்கள் இரண்டு அண்ணன் தம்பிகள். இவர்கள் அதிலிருந்து கிடைப்பதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதை குத்தகைக்கு எடுத்திருக்கும் குத்தகைதாரர் சென்ற ஐந்தாண்டுகளாக வேண்டுமென்றே ஒன்றும் கொடுக்காமல் இருக்கக்கூடிய நிலையில் நான் எப்படி அதைக் கைப்பற்றி உழப் போகிறேன் என்று சொல்லி, நீங்கள் பேசும்போது இதைச் சட்டமன்றத்தில் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். முக்கால் ஏக்கர், அல்லது ஒரு ஏக்கர் என்று வைத்திருக்கும் சிலர் வெளி ஊர்களுக்கு உத்தியோகம் அல்லது வேறு காரியங்களுக்காக சென்று தங்கியிருக்கும் நிலையில் அவர்கள் ஆப்ஸென்டி லாண்ட் லார்ட்ஸ் ஆக கருதப்பட்டு அவர்கள் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் இந்தச் சட்டத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு குறைந்த அளவில்தான் இருக்கிறது. அதனால் அவர்கள் கடுமையாகப் பாதிக்கக்கூடிய நிலையில் இருப் இருக்கிறார்கள். குத்தகைதாரர்களுக்கு அதிகப்படியான பாதுகாப்பு இருந்தும் கூட பதன் காரணமாக குத்தகை கொடுப்பதற்கு வாய்ப்பு இருந்தும் கூட அவர்கள் வேண்டுமென்றே குத்தகை கொடுப்பதை நிறுத்தி சட்டப் பாதுகாப்பைத் தேடிச் செல்லும் துர்ப்பாக்கியகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து கவனித்து லாண்ட்லார்ட் என்ற வார்த்தையை ரிமூவ் செய்துவிட்டு லாண்ட் ஓனர் என்ற வார்த்தையை இன்ட்ரட்யூஸ் செய்தால் சிறப்பாக இருக்கும்.

The word 'landlord' is a misnomer and it is likely to mislead the public. Therefore, I request that the word may be substituted by the word 'landowner'.

ஆக, இப்படிப்பட்ட நல்லதொரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு சாதனைகள் செய்தமைக்காக இந்த தமிழக அரசைப் பாராட்டி அமர்கிறேன்.

திரு. டி. வி. சம்பத்: துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் துணிச்சலாக இந்த மானியக் கோரிக்கையை சமர்ப்பித்தமைக்கு அவர்களைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 1,57,000 குடியிருப்பு மனைகளுக்கான

பட்டாவை நம்முடைய தமிழக அரசின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருப்பதற்காக உள்ளபடியே தமிழக அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாகுபடியாளர்களின் நிலையைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் அவர்களின் சாகுபடி நிலம் எந்த இடத்தில் இருக்கிறது என்றுகூடத் தெரியாமல், சர்வே நம்பர் என்ன என்பதுகூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கக்கூடிய சாகு படியாளர்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்பதைத் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிலத்திற்கு ஒரு பெயரைச் சொல்வார்களே தவிர எந்த சர்வே நம்பரில், எவ்வளவு ஏக்கர்களில் சாகுபடி செய்கிறார்கள் என்ற விளக்கங்கள் அவர் களுக்குத் தெரியாது. ஆனால் இன்றைய தினம் நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விவரங்களுக்கு சாகு படியாளர்களுக்கு நற்சான்றிதழ் வழங்க முன்வந்ததற்காக அவர்களைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். நானே கூட விவசாயியாக இருந்தாலும் என் சாகுபடி நிலத்தின் சர்வே நம்பரைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையிருக்கிறது. விவரங்கள் வேண்டு மென்றால் கணக்குப் பிள்ளையிடம் சென்று கேட்டால் ஐந்து, பத்து கொடுத்தால் தான் சர்வே நம்பர் போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய துர்பாக்கிய நிலை தஞ்சை மாவட்டத்தில் இருந்தது. அதை மாற்றி இன்றைய தினம் அரசு ஏழைகளுக்கு வாழ்வளிக்கிற திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நல்ல உள்ளம் படைத்த அனைவரும் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட ஒரு நல்ல அரசு ஏழைகளுக்குச் செய்கின்ற சாதனைகளை உள்ளபடியே விவசாயிகள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நான் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில், எங்கள் மாவட்டத்தில் ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்சம் மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருந்தாலும், லட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு இன்னும் குடியிருப்பு பட்டாக்கள் வழங்காமல் இருக்கின்றது. அது சம்பந்தப்பட்ட அதி காரிகளிடத்தில் கேட்டால், எங்களுக்கு சர்வே செய்யப் போதுமான அலு வலர்கள் இல்லாததால் எங்களால் விரைந்து சர்வே செய்து மனைப் பட்டா வழங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, தஞ்சை மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு விரைந்து மனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாக இருக்கும் தரங்கம்பாடியில், மாயவரம் வட்டத்தில் துணை வட்ட அலுவலகம் செயல்படுகிறது. தரங்கம்பாடி யிலிருந்து மாயவரத்திற்கு வர வேண்டுமானால், வட்ட ஆட்சித் தலைவரைப் பார்க்க வேண்டுமானால் ஏறத்தாழ 25 மைல் வந்து பார்க்க வேண்டி



*இருக்கிறது. ஆகவே, துணை வட்டமாக இருக்கும் தரங்கம்பாடியை தனி வட்டாட்சியாக ஆக்க வேண்டுமென்று வருவாய்த்துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு இந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டு வீடு இழந்தவர்களுக்கு, இந்த அரசு தக்காலிக் கடனாக ரூ. 250 வழங்குவது என்று ஆணையிட்டு, அதைத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தரவேண்டுமென்று கோரிய நேரத்தில் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு—இந்த அரசு ஏழைகளுக்கு உதவ வேண்டு மென்று இதைக் கொண்டு வந்திருந்தாலும் — அங்கே உள்ள கணக்குப் பிள்ளைகள் அவர்களிடத்தில் வந்து விண்ணப்பம் தந்து, அதற்கு காணிக்கை தந்தால் தான் அவர்கள் சிபார்சு செய்கிற நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பொதுவான குற்றச் சாட்டை சாட்டுவது சரியல்ல. இதற்கு முன்னாலே கூட அந்த மாதிரி பேசியிருக்கிறீர்கள். அரசாங்க அதிகாரிகளைப் பற்றி இப்படிப் பேசுவது சரியல்ல. ஆதாரத்தோடு பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

திரு டி. வி. சம்பத் : மன்னிக்கவும். இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் கிராம மக்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படி கணக்குப்பிள்ளைகள், மணியக்காரர்கள் குறுக்கிடாமல், ஏழைகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் தொகைகளை சரிவரக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஆதாரத்தோடு சொல்ல வேண்டு மென்று குறிப்பிட்ட காரணத்தால் நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். என்னுடைய தொகுதியில் மணி கிராமத்தில், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் மாடல் வில்லேஜ் கட்டுவதற்காகப் பணம் தரப்பட வேண்டுமென்று சொல்லி ரூ. 4,000 அரசாங்க பணம் கொடுத்த பிறகும் ஒன்றியத்தின் ஆணையர் அதைத் தருவதற்கு முன் வந்த நேரத்தில், மணியக்காரர்கள், கிராமத் தலைவர்கள் குறுக்கிட்டு இன்னாருக்கு கொடுக்க இயலாது, இன்னாருக்குத்தான் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சங்கடங்கள் கிராம மக்களுக்கு ஏற்படாத வகையில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு நல்ல பணிகளைச் செய்து வருகிற நேரத்தில் கிராமப்புறத்தில் இருப்பவர் கள் குறுக்கிடுவதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன, அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, வர வேற்று முடித்துக்கொள்கிறேன். நன்றி.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I take this opportunity to say a few words on Demand No. 11 District Administration and Miscellaneous and the following cut motion which I have moved to this Demand :—

'To disouss about the backwardness of **Hosur and Denkanikota** taluks in the matter of development and the need to change in the Revenue administration.'

[THIRU K. S. Kothandaramiah] [14th March 1973

At the outset, I wish to point out that these two taluks were one about two or three years ago. The entire area is about 1,200 sq. miles and two-thirds of it were under zamindar administration and one-third was under the Government for more than 150 years. The zamindars had neglected the entire area and this is known to the Hon. Minister. The eastern, northern and a part of the western portion of the district has not improved at all during the last 150 years and only the Government villages have been able to get attention and even that attention has not been satisfactory. Only in the last four or five years, we find that some attention has been given to the villages there. After the abolition of the zamindaris, all those were clubbed together. In this connection, I wish to point out that these villages and firkas were carved out by the then British Government about 150 years ago in a haphazard manner. A village very close to the head village was included in a firka which is far away. Therefore, there is necessity for re-organisation of certain firkas so that they can be brought very near to the head village and the administration can be carried on efficiently.

Secondly, five years ago the Dharmapuri district was formed and subsequently the Hosur taluk was bifurcated. The Dankanikota taluk which was only a sub-taluk was made into a separate taluk consisting of an area of about 800 sq. miles. Hosur taluk has been reduced to have only 400 sq. miles. Some of the villages very close to the Hosur town has been purposely added on to the Denkanikota taluk. I will quote one or two instances. One group of six villages including Belagondapalli and Kallukondapalli villages which are only five or six miles from Hosur have been clubbed with the Denkanikota taluk which is 25 miles away. Of course, officers get excellent T.A. because they have to travel 20 miles for going and 20 miles for coming back. With regard to administration of these villages, the people there and the panchayats have represented to the Government a number of times that these villages should be added on to the Hosur taluk for administrative convenience and the Government also can save money. I also represented the matter to the Hon. Minister and I hope and trust that he will look into the matter and see that those villages are added on to the Hosur taluk so that the officers at Hosur can give attention to them more properly and quickly.

A second group of six villages including Kundumaranpalli, Aggondapalli and Byramangalam, Bodichipalli villages which were in the Hosur taluk some time ago have been added into the Denkanikota taluk. The people and the panchayats there passed a resolution requesting the Government to transfer them to the Hosur area, but still it is pending.

Secondly, as regards the District Development Council, they are not given full powers. They should be brought under the control of the non-official members so that more democratic development can take place in the district.



14th March 1973] [THIRU K. S. Kothandaramiah]

With regard to officers, now we have got Revenue Inspectors and Tahsildars and especially in the Hosur taluk there is a Sub-Collector, I have consulted the people there and also my Hon. friend and M.L.A., Thiru Venkataswamy and they also feel that there is a need for an R.D.O. between the Sub-Collector and the Tahsildar. Now the officers in the lower cadre, Tahsildars and Revenue Officers are not clearly informing the situation in the taluk to the Sub-Collector and therefore he is not able to do good and justice and he is not able to understand the difficulties of the people. So, especially in the Hosur division the Hosur and in the Krishnagiri taluk, there is need to appoint one R.D.O. so that he can express the difficulties of the people more precisely and correctly to the Sub-Collector and carry out the administration efficiently.

Thirdly, as it is a Telugu area, the Officers who come there including the Collector and the Sub-Collector should have knowledge or know Telugu to some extent. But the difficulty is that since the Government have not permitted them to talk in Telugu, even in seminars, because same can speak they do not speak in Telugu. Since the object of the Government is to make the people understand the progressive measures undertaken by them, I hope the Hon. Minister will permit those officers who know Telugu to talk to them in Telugu so that they can understand them.

The Minority Commissioner recommended that all documents and important orders be made in local language. But now they are not made in Telugu. With regard to issue of receipts for revenue payment the village officers commit so many mistakes. Some make two kinds of entries, one is given to the person who pays and the other is given to Government. If it is made in Telugu and Tamil then it will be of great convenience to the local population. Because of paucity of time, I am not touching upon other things.

This Hosur had been headquarters of the entire Salem district from 1800 A.D. Then the district comprised of Talagat, Baramahal and Balaghat areas. Government at that time did not know what name to give and they called in Talagat, Baramahal and Balaghat District. From 1838 to 1861 Hosur was headquarters of entire district. After Salem came into being, it became district headquarters and because it is headquarters, its population increased to two lakhs and more now. Head quarters has that advantage. Just as the representative of Pudukotta people has been conceded and it has been decided to form into a separate district, I request that the long standing request of people of Hosur and Denkanikota taluks may be conceded and that the two taluks may be combined into a separate revenue district. With these words I conclude my speech.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த முக்கியமான மான்ய கோரிக் கையில் எங்களுடைய கட்சி சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற முற்படு கிறேன். முதன் முதலில் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இன்றிருக்கின்ற வளர்ச்சி மன்றங்களுக்கு எல்லாம் குறைந்த அதி காரம் தான் இருக்கின்றது. அவை கேவலம் ஒரு அட்வைசரி பாடி என்ற முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் அதிக அதிகாரம் அந்த மன்றங்களுக்குத் தேவை என்பதை முதலில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவற்றின் தலைவர்களாக இருக்கின்றார்கள். இந்த அமைப்பு சரியல்ல. ஜனநாயக முறைப்படி ஒரு நான்அபிஷியல் (Non-official) தான் அவற்றின் தலைவர்களாக இருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் நடக்கின்ற விவாதங்கள் எல்லாம் நல்ல முறையில் நடக்க வேண்டு மென்றால், ஒரு நான்-அபிஷியல் தலைமையில் நடந்தால் தான் சீராகவும், சிறப்பாகவும் இருக்கும். வேறு பல மாநிலங்களில் இந்தக் கருத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் நமது அரசும் இதைப் பரிசீலித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பட்டாக்கள் வழங்குவதைப் பற்றி பல காரியங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு வந்த ஒரு புகாரை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் அதிகமான பட்டாக்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. பட்டாபிராம் நமது சென்னை நகரத்திற்கு அருகாமையில் இருக்கிறது. அங்கு பலருக்கு குடிமனைக்கு தற்காலிகப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. நிரந்தரப் பட்டா கொடுக்கப்படவில்லை என்று புகார் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக வீடு வைத்திருக்கிறார்கள். வேறு விதமான அபிவிருத்திகளும் (இம் புரூவ்மெண்டு) செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரப் பட்டா கொடுக்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு புகார் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தது. அதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை அவர் நல்ல முறையில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம்பாளையம் கிராமத்திலிருந்து வந்த புகார். அங்கே அருணசலம் என்பவரும் ரங்கசாமி என்பவரும், சர்வே எண் 439-ல் 6 ஏக்கர் நிலத்தை 20 ஆண்டுக்காலமாக சீர்திருத்தம் செய்து புஞ்செய் பயிர் செய்து வந்திருக் கிறார்கள். அவர்கள் முன்னாள் ராணுவத்தினராக இருந்த காரணத் தால், அவர்களுக்கு அந்த நிலத்தை 26—3—1972 அன்று பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படி பட்டா செய்து கொடுக்கப் பட்ட நிலத்தை திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் என்று கூறப்படுகின்ற ஒரு சிலர் — அவர்களுடைய பெயர் என் கையில்





இருக்கிறது — வி. கே. நாச்சிமுத்து, கருப்பண்ணன், திருமலை போன்ற வர்கள் ஆக்கிரமிப்புச் செய்து, நிலத்திற்குச் சொந்தமான பட்டாதாரர்களை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு சிவில் கேஸ்கூட ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் முழு விவரத்தை நான் சொல்ல விரும்பவில்லை. அதற்குப் பின்னால், திராவிடமுன்னேற்ற கழகச் செயலாளரும், எம்.எல்.ஏ.-யும் சேர்ந்து 14—5—1972 அன்று சுமார் 10 பேர்களை தங்களுடன் சேர்த்துக் கொண்டு, தடி, அரிவாள், கடப்பாறை, கயிறு, மூங்கில் போன்ற சாமான்களை எல்லாம் கொண்டு சென்று வீடு அமைக்க பலாத்காரமான முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதைக் கண்டு பட்டாதாரர்கள் அஞ்சி வெளியேறி ,அந்த நிலத்தை எல்லாம் சுட்டிக்காட்டி எனக்கு மனு தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். உடனடியாக இந்தச் சம்பவத் திற்கு அவர்கள் கிரிமினல் வழக்கும் தொடர்ந்திருக்கிறார்கள் என்ற விவரமும் என்னிடத்தில் இருக்கின்றது. ஆதலால் இது பற்றி இன்னும் விவரமாக எடுத்துக் கூற வேண்டுமென்று நான் நினைக்கவில்லை.

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி இந்த நிலத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென்று திட்டமிட்டு காரி யங்கள் செய்திருக்கிறார்கள். அதன் பயனாக கலெக்டர் அவர்களின் உத்திரவின் பேரில், கரூர் தாசில்தார் அவர்கள், இந்தப் பட்டாதார்களுக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதில் கூறப்பட்டிருக்கின்ற முக்கியமான காரியம் என்ன வென்றால், அரசாங்கத்தால் பட்டா கொடுக்க பட்ட அந்த நிலம் சாகுபடிக்கு லாயக்கற்றது, வீடு கட்டலாயக்கானது. ஆகவே இதைத் திரும்பப் பெற்று வீட்டு மனைக்கு ஆர்ஜிதம் செய்து கொடுக்கக் கூடாதா என்பதற்குத் தகுந்த காரணம் இருந்தால் 7 தினங்களுக்குள் தெரியப்படுத்த வேண்டும்; அப்படிக் காரணம் கூறாமல் இருந்தால், எந்த விதி முகாந்திரமும் இல்லை என்று கருதி நிலத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளுவதாக நோட்டீஸ் கரூர் தாசில்தார் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக வழக்கறிஞர்கள் உரிய பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். 26—3—1972 அன்று பட்டா போட்டுக் கொடுத் திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிற்பாடு இரண்டு மாதத்திற்குள், புதிதாக எந்த வித நிகழ்ச்சியும் நிகழவில்லை. வேண்டுமென்றே இந்த மாதிரியான காரியங்கள் நடந்திருக்கிறது. அரசியல் காரணத் தால் ஏற்பட்டிருக்கிறது என்று நான் கரூர் சென்றிருந்த போது கூறி புகார் மனுவை என்னிடம், தந்திருக்கிறார்கள். இந்த மாதிரி அரசியல் காழ்ப்பு உணர்ச்சியோடு, பட்டா கொடுக்கப்பட்டுள்ள முன்னாள் ராணுவத் தினர் கையில் இருக்கின்ற நிலத்தை திரும்பப் பெறுவதென்றால், இது அக்கிரமம், அநீதி. இந்த மாதிரியான அக்கிரமங்களுக்கு அரசாங்கம் வழிவகை செய்து கொடுக்கக் கூடாது, பலமாகக் கண்டிக்க வேண்டுமென் பதற்காகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்பு கிறேன். பட்டாக்கள் வழங்குவது பற்றி நாங்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொள்ளுகிறோம். எங்களுடைய பகுதியில் குத்தகை பாட்டம் விதியை ரத்து செய்து ஒரு நோட்டிபிகேஷன் அரசாங்கம் போட்டிருக்கிறது.

அந்த நோட்டிபிகேஷன் அரசு உத்திரவு எண் 3369, ரெவின்யூ, 1972ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருவாங்கூர் கொச்சி ஸ்டேட்டால போடப்பட்ட லாண்டு அசைன்மெண்டு ஆக்டு, 1950 என்ற சட்டத்தின் அடிப்படையில் கவர்னர் பெருமான் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தை உபயோகப்படுத்தி அந்தக் குத்தகைப் பாட்டம் விதியை ரத்து செய்திருக்கிறார்கள். என்னுடைய சட்ட அறிவுக்கு எட்டிய வரை திருவாங்கூர்—கொச்சி 1950-வது வருட சட்டத்தின் அடிப்படையில் எந்தவிதமான விதிகளும் பிறப்பிக்கப்படவில்லை. மூன்றாவிருந்த 97 எஸ். இ. சட்டத்தின் அடிப்படையில் விதிமுறைகள் அன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆதலால் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் விதிமுறைகளை ரத்து செய்ய அதிகாரம் வழங்க முடியாமல் இருந்தாலும், அது பொருந்துமா என்று இதைக் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால் இந்த குத்தகை பாட்டம் என்ற முறையில் பலர் நிலத்தை வாங்கி இருக்கிறார்கள். அபிவிருத்தியும் செய்திருக்கிறார்கள். ரப்பர் தோட்டம் போட்டிருக்கிறார்கள். ஆதலால் இந்த நோட்டிபிகேஷன் அடிப்படையில் என்ன காரியங்கள் நிகழப் போகின்றது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இப்போது போர்ட்ஸ் ஸ்டான்டிங் ஆர்டரை அந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆனால் அங்கே தொன்று தொட்டு இருந்து வந்த நிலச் சட்டங்கள் வேறாக இருந்த காரணத்தினால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. முன்பு அங்கு யாருக்காவது நிலம் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு தனிச் சட்டம் இருந்தது. அந்த அடிப்படையிலே அவர்கள் நிலத்திற்குரிய விலையைக் கொடுத்துவிட வேண்டும். ஏழைகளாக இருந்தால் இலவசமாக அளிக்கப்படும்; விலை கொடுக்க வேண்டியதில்லை. இப்போது இருக்கின்ற முறையைப் பார்க்கிற போது அதிகமாக நிலம் வைத்துக்கொள்ள வழி ஏற்படுகிறது. சிலர் சீலிங் ஏரியாவை விட அதிகமாக புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்தி ரப்பர் தோட்டம் வைத்திருக்கிறார்கள். இதுபற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அவர்கள் வேறு நிலம் இல்லாதவர்களாக இருந்தால் பரவாயில்லை. ஏற்கெனவே நிலம் உள்ளவர்கள் தங்கள் நிலங்களுக்குப் பக்கத்தில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து, ரப்பர், தேயிலைத் தோட்டங்களை வைத்திருக்கிறார்கள்.

(திரு. என். கணபதி தலைமை)

இந்தமாதிரியான நிலங்களை எல்லாம் சரியாக சர்வே செய்து, மிகுதியாக நிலம் இருந்தால் அதை ஏழை எளிய மக்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். கொஞ்சம் நிலம் வைத்திருக்கிறவர்களிடம் இருந்து நிலத்தை எடுக்க வேண்டுமானால், அந்த நிலத்திற்கு மார்க்கெட் நிர்ணய விலையைப் போல் இரண்டு மடங்கு வேண்டுமானால் கொடுத்து அல்லது அதற்கு ஒரு ஸ்லாப் ஸிஸ்டத்தை வைத்து அதிகமாகவே பணம் கட்டி பெற்றுக்கொள்ள வழிவகை செய்யவேண்டும். இல்லை என்றால் கோர்ட்டிலே சென்று வழக்குப் போடுவார்கள். எனவே, அந்த முறையை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் செய்வது பொருத்தமாக இருக்கும் என்ற என்னுடைய ஆலோசனையை அரசாங்கத்திற்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இன்னொரு விஷயம். இப்போது பட்டா புஸ்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலம் சம்பந்தப்பட்ட நமது சட்டங்கள் எல்லாம் விஸ்தரிக்கப்பட்டு ரயத்வாரி முறை அங்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த மாதிரியான முறையை அங்கும் புகுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ஜில்லா நிர்வாகத்திற்கு எல்லைக் கோடு நிர்ணயம் செய்வது பற்றிக் குறிப்பிட வேண்டும். நீண்ட நாளைய கோரிக்கையின் அடிப்படையில் இப்போது புதுக்கோட்டை தனி ஜில்லாவாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இன்று பல ஜில்லாக்கள் பெரிதாக இருக்கின்றன. அவைகளையும் பிரிக்க வேண்டும். இப்படி பெரிய ஜில்லாக்களை எல்லாம் பிரிக்க வேண்டுமென்று முன்பு ரெவின்யூ போர்டிலே ஒரு திட்டம் இருந்தது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. நிர்வாக வசதிக்கு ஏற்றபடி பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரிக்க வேண்டும்; அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டம் மிகப் பெரிது. கன்னியாகுமரி மாவட்டம் மிகச் சிறிய மாவட்டம். அதனால் ராதாபுரம் சப் தாலுக்காவை கன்னியாகுமரி மாவட்டத்தோடு சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். அது இன்னும் நிறைவேறவில்லை. முன்பு காங்கிரஸ் ஆட்சியின்போது நாங்குனேரி தாலுகாவில் கன்னியாகுமரி மாவட்டத்தோடு ஒட்டியிருக்கிற ஒரு பகுதியை கன்னியாகுமரியோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டோம். ஆனால் அதற்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியதால், அந்த முயற்சி கைவிடப்பட்டது. இப்போது ஜில்லா நிர்வாகத்தைப் பிரித்து, எல்லைக் கோடுகளை வரையறை செய்யும்போது இந்தப் பகுதிகளை கன்னியாகுமரி ஜில்லாவுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் உபரியாக உள்ள தண்ணீரைக் கொடுப்பதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அங்கு இருக்கின்ற விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல், ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட விரயம் செய்யாமல் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. உரிய முறையில் எல்லைக் கோடுகளை வரையறை செய்து கொண்டால் இந்தமாதிரியான பிரச்சனைகள் எழுவதற்கு வழி இருக்காது. அதற்கு அந்த ஜில்லாவிலே இருக்கக்கூடியவர்கள் குறுகிய எண்ணம் கொண்டவர்கள் அல்லாமல் விசாலமான எண்ணம் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல இராமநாதபுரம் மாவட்டத்தைப் பார்த்தால் மலையடிவாரத்திலிருந்து கடலோரம் வரை இருக்கிற ஒரு நீண்ட ஜில்லாவாக இருக்கிறது. மேற்கு இராமநாதபுரம், கிழக்கு இராமநாதபுரம் என்று இரண்டாக அந்த மாவட்டத்தைப் பிரிப்பது பொருத்தமாக இருக்கும். இது சம்பந்தமாக முன்பு ஒரு முயற்சி இருந்தது. அதற்குத் தலைமையிடம்

எங்கே இருக்க வேண்டும் என்ற கருத்து வேறுபாட்டினுல் அந்த முயற்சி அப்போது கைவிடப்பட்டது. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது சிறு சிறு ஜில்லாக்களாக இருக்கின்றன. நமது அண்டை மாநிலமான கேரளத் தில் கூட சிறு சிறு ஜில்லாக்களாகத்தான் இருக்கின்றன. அதுதான் நிர்வாகத்திற்குப் பொருத்தமாக இருக்கும். சிறு சிறு ஜில்லாக்களாக இருந்தால் கலெக்டர், ஆர். டி. ஓ.—இவர்கள் ஜில்லா நிர்வாகத்தை நல்ல முறையில் கவனித்துக் கொள்ள வசதியாக இருக்கும். ஆகையால் பெரிய மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாக பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை எப்படி பிரிக்க வேண்டுமென்று நான் ஆலோசனை கூறுவது பொருத்தமாக இருக்காது. மாவட்டங்களை எல்லாம் எப்படிப் எப்படிப் பிரிக்க வேண்டும்—இரண்டு மாவட்டங்களை மூன்ருகப் பிரிப்பதா, அல்லது ஒன்றை இரண்டாகப் பிரிப்பதா என்பதற்கு ரெவின்யூ போர்டு மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்ஞெரு விஷயம். இப்போது விவசாய வருமான வரிக்கு 5,000 ரூபாய்தான் நமக்கு குறைந்த லிமிட்டாக இருக்கிறது. இப்போது இருக் கின்ற விலைவாசி நிலவரங்களைப் பார்த்தால் 5,000 ரூபாய் என்றிருப்பது போதாது. குறைந்தது 7,000 ரூபாய் என்ருவது ஆக்க வேண்டும். நான் இதைச் சொல்வதற்கு இன்ஞெரு காரணம், இன்றைக்கு விவசாயத் திலே வருகின்ற வருமானத்தையும் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சட்டம் கொண்டுவருவது பற்றி ஆலோசிப்பதாகத் தெரிகிறது. ஆகையால் இந்த வருமானத்தை 7,000 ரூபாயாக உயர்த்துவது பொருத்தமாக இருக்கும். கொஞ்சம் வருவாய் உள்ளவர்களுக்கு அது ஒரு "ரிலீஃபாக" இருக்கும். அதிகமாக வருமானம் வரக்கூடியவர்களைப் பற்றிப் பேசுவதற்கு நான் இங்கே வரவில்லை.

"டிரவுட் ரிலீஃப்" பற்றி ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிவாரண நிதியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு கொடுத்திருக்கிருர்கள் என்பதற்கான விவரம் இந்த மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்திற்கு 2 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவாக இருக்கிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது கன்னியாகுமரி மாவட்டம் செழிப்பானதாகத் தெரிந்தாலும் குடி தண்ணீருக்குக் கூட கஷ்டமான வறட்சிப் பகுதிகளும் அங்கே இருக்கின்றன என்பதை மறந்து விடக் கூடாது. இந்த வறட்சிப் பகுதிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டும். 2 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பது போதவே போதாது. மற்ற மாவட்டங்களைப் பார்க்கிறபோது 11 லட்சம், 12 லட்சம், 15 லட்சம் என்று ஒதுக்கியிருக்கிருர்கள். ஒருவேளை சின்னஞ்சிறிய மாவட்டமாக இருப்பதால் இப்படி 2 லட்சத்தோடு விட்டுவிட்டார்களோ என்று நினைத்தால் அதற்கும் இடமில்லை. ஏனென்ருல் சிறிய மாவட்டமாகிய நீலகிரி மாவட்டத்திற்குக் கூட 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிருர்கள். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, வெள்ள நிவாரணம். பல ஜில்லாக்கள் வெள்ளப் பெருக்கினுல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நிவாரணப் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது. அதை பற்றி நான் குறை சொல்லவில்லை. அதற்குப் போதிய பணமும் மத்திய அரசாங்கத்திலிருந்து பெற்றிருக்கிருர்கள். ஆனுல் இந்த வெள்ள நிவாரண உதவிப் பணத் தைப் பெறுவதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. அது பற்றி சேலம், கோயம்புத்தூர், பவானி பகுதிகளிலிருந்து எனக்கு மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்குக் கொடுக்கின்ற உதவிப் பணம் காலா காலத்தில் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல, அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை—சத்தியமங்கலத்தில் என்று நினைக்கிறேன்—இங்கே கூற விரும்புகிறேன். அங்கு இருக்கக்கூடிய மக்கள் இந்த உதவிப் பணத்தைப் பெறுவதற்காகச் சென்றதாகவும், அப்போது ஆளும் கட்சியைச் சேர்ந்த எம். பி. ஒருவர் அங்கே இருந்து கொண்டு அவர் களுடைய கட்சிக்காரர்களுக்குப் பணத்தை வாங்கிக் கொடுத்ததாகவும், மற்றவர்கள் பணம் கேட்டபோது கிடையாது என்று சொல்லி, அதனுல் தர்க்கம் ஏற்பட்டு, பின் லத்தி சார்ஜ் நடத்தியதாகவும் அந்தப் பகுதி மக்கள் சொன்ஞர்கள். அதுபற்றி நான் ஒரு அவசரத் தீர்மானம் கொடுத் திருந்தேன். ஆனுல் அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனுல் அந்த மானியக் கோரிக்கையின்போது அதைச் சொல்கிறேன். இந்த மாதிரி ஆளும் கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க் கட்சிக்கு ஒரு நியாயம், என்று இல்லாமல் எல்லோருக்கும் சம நீதியும், சம வாய்ப்பும் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல பகுதி கள் இருக்கின்றன. ஆனுல் அரசாங்கம் அளிக்கின்ற நிவாரணத்தில் உரிய பங்கு எங்களுக்குக் கிடைக்கவில்லை. என்னுடைய தொகுதியிலே இரண்டு சிற்ருறுகள்—புன்னகிரி, முல்லையாறு—ஓடுகின்றன ; விளவங்கோடு தாலுகாவில் இருக்கின்றன. அந்த சிற்ருறுகளில் பல இடங்களில் உடைப்பெடுத்து, வாய்க்கால்கள் எல்லாம் உடைப்பெடுத்து, அந்தப் பகுதி நிலங்கள் எல்லாம் மணல்மேடிட்டு, தரிசு நிலங்களாகக் காட்சி யளிக்கின்றன. இது சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தி லும் தெரிவித்திருக்கிரும் ; அரசாங்கத்திற்கும் மனுக் கொடுத்தோம். அங்கே இருக்கிற இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் எல்லாம் அதற்காக ஆர்ப்பாட்டம் கூட நடத்திஞர்கள். ஆர்ப்பாட்டம் நடத்தியதற் காகவோ என்னவோ அதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் மேற் கொள்ளாமல் விட்டிருக்கிருர்கள். ஒரு உடைப்பை சரிப்படுத்துவதற்கே கிட்டத்தட்ட 25,000 ரூபாய் செலவாகும். இப்படி 20, 25 உடைப்புகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் சீர் செய்ய அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அங்கே இருக்கின்ற பிற்பகல்
அதிகாரிகள் எங்கள் மாவட்டத்தைச் சரியாக கவனிக்கவில்லை என்ற உணர்வு 1-00
பொது மக்களிடம் இருந்துகொண்டிருக்கிறது.

இதிலே அரசு போதிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்ருல், மாவட்ட ஆட்சித் தலைவரும், ஏனைய அதிகாரிகளும் காலாகாலங்களில்

அரசுக்குப் போதிய ரிப்போர்ட்டுகள் கொடுக்கவில்லை என்ற காரணத்தாலோ என்னவோ தெரியவில்லை, அந்த ஜில்லா பாதிக்கப்பட்டிருக்கிறது, புறக் கணிக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குடியிருப்பு சம்பந்தமாக, குடியிருப்பு அக்ரிகல்சரிஸ்ட் என்ற தலைப்பில் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். மனப் பூர்வமாக வரவேற்கிறேன். ஏழையெளிய மக்களுக்கு குடியிருப்பு கொடுக்க வேண்டியதுதான். இதிலே ஒரு கஷ்டம்—லீகல் பிராப்ளம்—இருக்கிற காரணத்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு பகுதியிலே, **Government have decided to extend the Act to parts excluding the hill areas** என்று சொல்லப்பட்டிருக்கிறது. விஸ்தரிப்பதில் சட்டச் சிக்கல் இருக்கிறது. திருவிதாங்கூர்–கொச்சின் பகுதியில் ஒரு சட்டம் இருந்தது. அதிலே குடியிருப்பு மனை இருந்தால் அதிலே யாராவது, அது யாருடையது நிலத்திலேயாவது இருந்தால், அதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற ரூல்கள் எல்லாம் போட்டு தாசில்தார் அளவிலேயும், ஆர். டி. ஓ. அளவிலேயும் பதிவு செய்து ரெஜிஸ்டர் தயாராக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்திலே இன்னொரு அம்சமும் இருக்கிறது. அது என்னவென்றால், ஒரு பெரிய தோட்டத்திலே நடுவிலே ஒருவருக்கு வீடு இருந்தால் அந்தத் தோட்ட உடமையாளர் விரும் பினால் ஒரு பகுதியிலே சௌகரியமாக இடம் ஒதுக்க வழிவகை இருந்தது. நடுவில் இருக்கிறது என்ற காரணத்தால் அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாத வகையில் குடியிருப்புகளை மாற்றி அமைப்பது என் பதில் ஆட்சேபணை இருக்க முடியாது. அதே சர்வே நம்பரிலோ, அல்லது அருகாமையிலோ கொடுக்கலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. அந்தச் சட்டம் இதுவரையில் ரத்து செய்யப்பட வில்லை என்று கருதுகிறேன். ஆனால் அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டால் அந்த மாதிரி சிக்கல்களுக்கு என்ன வழி வகை என்று தெரியவில்லை. எனவே, இந்தச் சட்டம்—திருவிதாங்கூர்–கொச்சி குடியிருப்பு மனைகள் சட்டம் பற்றி வேண்டிய விளக்கத்தைத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த டெனன்சி ரைட்சைப் பொறுத்த வரையில் பல இடங்களில் நல்ல முறையில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ரெஜிஸ்டர்களை எல்லாம் தயாராக்கிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் பல சிக்கல்கள் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. தஸ்தாவேஜுகள் கிடைக்க முடியாத காரணத்தால் அவர்களை பதிவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. "ஓரல் எவிடன்ஸ்" போதும் என்று இருக்கிறது. ஆனால் அப்படி ஓரல் எவிடன்ஸ் கொடுத்தால் சிலர் ஏற்றுக்கொள்வதில்லை. வில்லேஜ் ஆபீசர்கள் ரிப்போர்ட் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வதற் கில்லை என்று இந்த மாதிரி காரியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால், இதைப் பற்றி பொதுவாக எல்லா டிஸ்டிரிக்ட்களிலும் பெரிய புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. நல்ல காரியங்கள் செய்யப்படு கின்றன. இல்லை என்று சொல்லவில்லை. என்றாலும் புதிய சட்டத்தில் சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லை என்ற ஷரத்தை அமைத்திருக் கிறார்கள். அந்த ஷரத்தின் அடிப்படையில் அதிகாரம் இருக்கிறது. அப்படி



அதிகாரங்கள் இருக்கிறது என்று வழக்கு மன்றத் தீர்ப்புகள் இருக்-
கின்றன. இதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. ஏழை எளிய விவசாயி-
கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு சிக்கல்.

பப்ளிக் டிரஸ்ட் என்ற முறையிலே 20 ஏக்கருக்கு மேலாக விளைச்சல்
நிலங்களை வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது.
அந்தச் சட்டம் நடைமுறையில் ஒழுங்காக நடைபெறவில்லை என்பது
தான் என்னுடைய குற்றச்சாட்டு. பல டிரஸ்டுகள் நிலம் வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். இதை ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்க
வேண்டும். திருவாடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் போன்ற
பெரிய ஆதீனங்கள் இருக்கின்றன. இவர்கள் வேறு பல காரியங்களில்
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலத்தில் உழுகிறவர்களுக்கு
இன்றும் போதிய நிலம் கொடுக்காத அவல நிலைமை இருக்கிறது.
லைசன்சீஸ் என்று சொல்கிறார்கள். அந்தக் காரணத்தால் அவர்களை
அப்புறப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் வந்த வண்ண
மாக இருக்கின்றன. இந்தமாதிரியான அதிகமான நிலங்களில், 20
ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் இருந்தால், ஆதரைஸ்ட் ஆபீசர்களை வைத்து
கைப்பற்றி யார் உண்மையாக நிலத்தில் உழுகிறார்களோ அவர்களுக்கு
அந்த நிலங்கள் கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நமது சட்டத்திலே சிறப்பான அம்சமாக இருக்கின்ற
சட்டம் நிலச் சீர்திருத்தச் சட்டம். இந்தச் சட்டத்தில் இதுவரையிலும்
ஓட்டை உடைச்சல்கள் இருந்தன. அதை, நமக்குத் தந்திருக்கிற ஆய்
வுரையில், பக்கம் 23-இல் பின்வருமாறு எடுத்துக் கூறியிருக்கிறார்கள் :—

However, since it takes sometime for the Government to issue a notifi-
cation under section 18 of the Act, enabling the actual take-over of all
the surplus lands after following the procedure laid down the owner
continues to enjoy the lands even after the date of commencement of the
Act. The Amendment Bill provides that the land should vest in the
Government even from the date of commencement of the Act and that
the owner of the land or any person deriving benefit therefrom should
pay to the Government an amount as compensation, for the use and
occupation of the land during the period he was in possession of the land"
என்ற ஒரு நல்ல புரட்சிகரமான கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இந்த
அடிப்படையில் யார் யார் நிலம் வைத்திருந்தாலும் அவர்கள் அனுப
விக்கின்ற காரணத்தால் பணம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.
இதை உடனடியாக அமுல் செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.
ஏனென்றால், இதில் அரசுக்கு வருகின்ற வருமானம் குறைவாக இருக்
கிறது. நிலமற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். மிகுதி நிலத்தை உட
னடியாக கைப்பற்றி நிலமில்லாதவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஸ்ரீபாதம் லேண்ட்ஸ், 27-ஆம் பக்கத்தில் கூறியிருக்
கிறார்கள். இந்த ஸ்ரீபாதம் நிலங்கள் 588.39 ஏக்கர் இருக்கிறது. இது
மகாராஜாவின் சொந்த நிலமாக இருந்தது என்ற காரணத்தால் இதிலே

லேசென்ஸ் என்று கூறியிருக்கின்றது. இந்த நிலங்களை அனுபவித்த
வர்கள் எல்லாம் ராஜாக்களின் குடும்பத்தினர்களுக்குப் பணம் கொடுத்
திருக்கிறார்கள். இந்த விதியை ராஜபோகம் வாங்கியவர்களின் மேல்
அமுல் செய்யக் கூடாது என்று இருக்கிறது.
heritable என்று இருக்கிறது. They are alienable and
உரிமை இருக்கிற காரணத்தால் ஆகவே, அவர்களுக்குப் பரம்பரை பாத்தியம்
இடுவது சரியல்ல. இவற்றை அரசு நிலங்களாகக் கணக்
அவர்களுக்கு எனவே, இந்த நிலம் யார் கைவசம் இருக்கிறதோ,
செய்ய வேண்டும் அந்த நிலங்கள் கொடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகளைச்
கிறேன். என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்பு

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினையைக் கூற விரும்புகிறேன்.
திருநெல்வேலி ஜில்லாவிலே ரெவின்யூ இலாக்காவிற்குச் சொந்தமான
காடுகள் இருக்கின்றன. அங்கே குட்டம் என்ற கிராமத்தில் இருக்கின்றன.
சர்வே நம்பர்கள் : 610, 646, 647, 648 ஆகியவற்றில் அவை இருக்
கின்றன. இவையெல்லாம் ரெவின்யூ இலாக்காவின் சொந்தமான நிலங்
கள். அங்கே உள்ள கர்ணம், கிராம முன்சீப் ஆகியவர்கள் சேர்ந்து
அங்கே இருக்கின்ற உடைமரங்களையெல்லாம் வெட்டி விட்டார்கள் என்பது
கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை சஸ்பெண்டு செய்தார்கள். ஆனால், அரசி
யல் காரணத்தினால், அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு வேண்டி
யவர்களாக இருந்த காரணத்தால் அவர்களுடைய சஸ்பென்ஷன் எல்லாம்
செட்-அசைட் செய்ய நடவடிக்கைகள் எடுத்தார்கள். அந்தக் காடுகளில்
தாராளமாக உடைமரங்கள் இருக்கின்றன. பத்து வருஷங்களுக்கு ஒரு
முறை வெட்டி எடுக்கப்படுகிற நல்ல உடைமரங்கள். ஆனால், அத்தனை
மரங்களையும் வெட்டுவதற்கான விசித்திரமான திட்டத்தை இன்று காட்டி
லாக்காவில் புகுத்தப் போவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
இந்தப் பகுதியானது நமது ரெவின்யூ இலாக்காவைச் சேர்ந்தது. இது
சேரி புறம்போக்காக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதில் உடைமரம்
தான் வளரும்.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குட்டம் என்ற ஊரில்
எனக்குச் சொந்தமானவர்கள் என்று சொல்வது தவறு. அது விஷயத்
தில் நான் தலையிட்டதாகச் சொல்வதும் தவறு. அதற்கு ஏதாவது
ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். இல்லையென்றால் அதை நடவடிக்கைக்
குறிப்பில் இருந்து அகற்றி விடுவதுதான் சரியானதாக இருக்கும்.
தென்னை மரம் வளர்க்க கன்னியாகுமரி மாவட்டம், கடலோரப் பகுதி
களுக்கு எல்லாம் நல்ல திட்டம் இருக்கிறது. நாலாயிரம் ரூபாய் கொடுக்
கிறோம். ஐந்தாண்டுகளுக்குக் கொடுக்கிறோம். இது கடலோரமாக இருப்
பதனால் தென்னை மரம் வளர்ப்பதற்கு நல்ல இடமாக இருக்கும் என்ற
குறிப்பு இருக்கிறது. ஆனால் யாரோ தப்பிப் போவதற்கு நான் உடந்தை
யாக இருந்ததாகச் சொல்வது தவறு. ரெக்கார்டில் இருக்கிறது. அந்தக்
காட்டைச் சுற்றியுள்ள மக்கள் விறகுக்காக மரங்களை வெட்டிக் கொண்டு
போகிற பழக்கம் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அதுபோலத்தான்
இங்கும் இருந்திருக்கிறது. அதை கிராம அதிகாரி மேலே உள்ளவர்
களுக்குத் தெரிவிக்கவில்லை என்பது குற்றச்சாட்டு. ஆனால் அந்த கிராம
அதிகாரி 6 முறைகள் மேலே தெரிவித்து எழுதியிருக்கிறார்கள்.





ரெக்கார்டு இருக்கிறது. ஆக எனக்கு இதில் சம்பந்தமே இல்லாதபோது என்னைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் குறிப்பிட்டதை பெருந்தன்மையோடு திரும்பப் பெற்றுக் கொள்வதுதான் நல்லது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : எதிர்க்கட்சித் தலைவர் 31 நிமிடங்கள் பேசியிருக்கிறார். தினமும் ஓவர்டைம் ஆக நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருப்பது நன்றாக இருக்காது. அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருப்பதால் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அமைச்சர் அவர்கள் குறிக்கிட்டதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டும். ஆதாரம் இல்லாமல் நான் எதையும் இங்கே கூறவில்லை. பெயர்களோடு தக்க ஆதாரம் நம்பகமான இடத்தில் இருந்தே எனக்கு அனுப்பப்பட்டிருப்பதை நான் வைத்திருக்கிறேன். ஆறுமுக பாண்டிய மார்த்தாண்டன்—கிராம முன்சீப்—இப்படி மரம் வெட்டிக் கொண்டு போவதற்கு அவர் உடந்தையாக இருந்தவர்.

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : ஆறுமுக பாண்டியன் என்பது என் பெயர் இல்லை. அவர் ஏதோ தவறு செய்தார் என்றால் அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. காட்டில் உள்ள மரங்களை வெட்டிக் கொண்டு போவதற்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் உடந்தையாக இருந்தார் என்று குற்றம் சாட்டுவது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் உடந்தையாக இருந்தார் என்று சொல்லவில்லை. ஆனால் தவறு செய்தவர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அவர்கள் இவருக்கு வேண்டியவர் என்ற காரணத்தினால் அவரை விடுவிக்க முயற்சித்திருக்கிறார் என்று தெரிவித்தேன். மெமாரண்டம் இருக்கிறது. வேண்டுமானால் நம்பர் தருகிறேன். 146754/இ2/72-5, டேடெட் 26—2—1973. எனக்கு அதுபற்றி டெலிகிராம்கள் வந்திருக்கின்றன. சிதம்பரநாதன் 3—1—1973-ல் தந்தி கொடுத்திருக்கிறார். 5—1—1973-ல் கடிதம் எழுதியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னமும் இதில் நடந்த தவறு என்ன என்று சொல்லவில்லை. என்ன தவறு நடந்திருக்கிறது என்பவை விளக்கமாகச் சொன்னால் நான் பதில் கூறுகிறேன்.

(Dr. Hande stood up in his seat)

MR. CHAIRMAN (THIRU N. GANAPATHY): Let Dr. Hande resume his seat. This is not the time to interrupt.

DR. H. V. HANDE: I am on a point of order, Sir, Why should the Co-operation Minister interrupt when the Hon. Thiru Ponnappa Nadar has stated the facts fully ...............(Interruption)

MR. CHAIRMAN (THIRU N. GANAPATHY : This is not a piont of order.

இன்றியமையாப் பொருள்கள் பலவற்றின் விலைவாசிகளின் உயர்வு அரசுக்குக் கவலையைத் தருகிறது. அரிசி வாணிபத்தை முறைப்படுத்தும் பணி முழுவதும் மாநில அரசின் வரம்பிலேயே இருப்பதால்; அரிசி விலை கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், பிற பொருள்கள், குறிப்பாக பருப்பு வகைகள் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், அவற்றின் விலை உயர்வை நாம் தடுக்க முடியாத நிலையில் உள்ளோம். எண்ணெய் நிலையும் பெரும்பாலும் இதே தான். இம் மாநிலத்தில் வேர்கடலை போதுமான அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டாலும் கூட, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற பிற உணவு எண்ணெய்களை வெளி மாநிலங்களிலிருந்தே நாம் பெற வேண்டியுள்ளது. இவை உற்பத்தியாகும் பகுதிகளில் வறட்சி பரவலாக நிலவியிருந்ததன் காரணமாக, நடப்பாண்டில் இவை மிகக் குறைந்த அளவுக்கே கிடைத்து வருகின்றன. இதன் விளைவாக வேர்கடலைக்கு அதிகத் தேவை ஏற்பட்டது. நமது மாநிலமும் வறட்சியின் பிடியிலிருந்து முழுவதுமாக விடுபடவில்லை. தென் மேற்குப் பருவ மழை ஓரளவு பொய்த்ததன் காரணமாக, வேர்கடலை உட்பட கோடைகாலப் பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மற்றும், அது காரணமாகவே மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டு, நடப்பாண்டில் உழவு வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய இன்னல்கள் இருப்பினும், மத்திய அரசு இருப்பிற்கு ஒரு லட்சம் டன் அரிசி கொடுத்துதவ நாம் முன்வந்துள்ளோம். தவிர, குஜராத் அரசின் அனுமதி பெற்ற முகவர் அமைப்புகள் நமது மாநில வெளி அங்காடிகளில், கம்பு, மக்காச்சோளம் இவற்றைக் கொள்முதல் செய்யும் அளவிலிருந்து, குஜராத் மாநிலத்திற்கு அவற்றை 15,000 டன்னுக்கு மேல் ஏற்றுமதி செய்யவும் நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். நாட்டில் இக்கட்டான நிலைமை நிலவி வருவதைக் கருதி, பற்றுக்குறையாகவுள்ள பருப்பு வகைகள், உணவு எண்ணெய்கள் போன்ற பொருள்களைப் பயன்படுத்துவதில் ஓரளவு ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். உள்ளூரில் போதுமான அளவுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களையும்கூட, நாடு முழுவதின் நலனைக் கருதி நாம் அத்தகைய ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். விளைச்சல் குறைந்து விடுவதனாலும், பயிர்கள் சேதமடைவதாலும் உற்பத்தியாளரும் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளார். விலைகளைக் கட்டுப்படுத்துவதனால் உற்பத்தியாளர் மேலும் பாதிக்கப்படுவார். சில பொருள்கள் மீது பற்பல பகுதிகளில் வெவ்வேறு வகையில் தனிக் கட்டுப்பாடுகள் விதிப்பதனால், அப் பகுதிகளிலுள்ள மக்கள் அதிருப்தியடைகின்றனர். இத்தகைய இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்வதிலும், பற்றுக்குறைக் காலங்களில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அவற்றை, உற்பத்திப் பகுதிகளிலிருந்து, பற்றுக்குறைப் பகுதிகளுக்கு அனுப்புவதிலும் நாடு முழுவதற்குமான ஒரு கொள்கை வகுக்கப்படவேண்டும். பொதுப் பொருளாதார நிலையின் அடிப்படையிலேயே விலைவாசிகளை நிச்சயிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் விவசாயிக்கு நியாயவிலை கிடைக்கும்; பணவீக்கம் காரணமாக அவ்வப்போது ஈட்டுத்தொகைகள் பெறும் நகர மக்களோடு அவரும் நியாயம் பெற முடியும். எனவே, நாடு முழுவதுக்கும் பொருந்தும் விலைவாசி—ஊதியக்கொள்கையொன்று வகுக்கப்பட்டால் தான், இடைவிடாமல் ஏற்பட்டு வரும் இந்த விலைவாசிச் சிக்கலுக்கு நாம் நிலையான தீர்வு காண முடியும்.



1973 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தவறு செய்தவர்களின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஒருபோதும் தயங்காது என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இப்போது கொடுக்கப்பட்டுள்ளது ஸ்டே தான். தவறு நிரூபிக்கப்பட்டால் கண்டிப்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. நா. வீராசாமி : சார், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது அங்கே தவறு நடப்பதற்கு கணக்குப்பிள்ளை உடந்தையாக இருந்ததாகக் குறிப்பிட்டார். தமிழ்நாடு பூராவும் கணக்குப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அப்படி இருக்க நமது ஆதித்தனார் அந்த கணக்குப் பிள்ளை சாதியைச் சேர்ந்தவரா ? எப்படி அவர் அவருக்கு வேண்டியவர் என்பவை விளக்கினால் நன்றாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் உறவுமுறைக்குச் செல்ல விரும்பவில்லை. கூட்டுறவுத்துறை அமைச்சரே எங்கள் பகுதியில் சொல்வதைப் போன்று ரத்தத்தின் ரத்தம், தசையின் தசை என்றெல்லாம் உறவுமுறைபற்றிச் சொல்ல வரவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறவு முறையை விட்டு விட்டார். அங்கேயுள்ள கிராம முனசீப், அவர்களுக்கு எப்படிப்பட்ட உறவோ அப்படிப்பட்ட உறவுதான் எனக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தங்களுக்கு உறவு இல்லை என்று மறுக்கிறார்கள். உறவு உண்டா இல்லையா என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்வார்கள்.

அடுத்தபடியாக, இதிலே இன்டரிம் சஸ்பென்ஷன் போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த மாதிரியான தப்புகள் நடந்திருக்கின்றன. இந்தத் தப்பு நடக்கக் கூடாது என்ற காரணத்தினால் தான் நான் இதை எடுத்துக் கூறினேன். இதிலே இருக்கிற தொகை ரூ. $1\frac{1}{2}$ லட்சம் என்று சொல்கிறார்கள். ஆதலால் தான் நான் அதை இந்த மன்றத்திலே கொண்டு வருவதற்கு முற்பட்டேன்.

எக்ஸைஸ் இலாகாவைப் பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டுமென்று நினைக்கிறேன். அதிலே இன்று பிராஞ்ச் ஷாப்ஸ், சப்-ஷாப்ஸ் திறப்ப தற்கு வழிவகைகள் செய்திருக்கிறார்கள். அதாவது, ஒரு மைல் அகலத் திற்குள்ளே பிராஞ்ச் ஷாப்புகள் திறக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நீட்டிக்கக் கூடாது என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது தாராளமாக ஷாப்புகள் திறக்கப்பட்டிருக் கின்றன. இப்பொழுது இருக்கிற ஷாப்புகளை விட இன்னும் அதிகமாக எல்லா கிராமங்களிலும் சப்-ஷாப்புகள் திறந்தால் நாட்டிலே அமைதி வெகுவாக குறையும். அது மட்டுமல்லாமல், இந்த குத்தகை எடுத்தவர் கள் இதுபற்றி ஆட்சேபனை தெரிவித்திருக்கிறார்கள். பிராஞ்ச் ஷாப்புகளைத் திறக்கக் கூடாது. குறிப்பிட்ட இடத்திலே எல்லைக் கோடுகள் போடப்பட்டு, அந்த இடத்திலேதான் ஷாப்புகள் வைக்கப்பட வேண்டும். அதல்லாமல் 3 இடத்திலே, 4 இடத்திலே பிராஞ்ச் ஷாப்புகளை திறக்கிறார்கள் என்று

சொன்னால் அது நாட்டு அமைதியைப் பாதிக்கும். அது ரூ. 35 கோடி வருவாய் அளிக்கிறது என்று நினைத்தாலும் இது மாதிரியான இன்னும் நீடிக்கக் கூடாது என்ற கருத்தினை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வாரியத்தின் சார்பில், வருவாய்த் துறைக்காக பிரேரேபிக்கப்பட்ட மானியங்கள் குறித்தும் அங்கத்தினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் குறித்தும், கருத்துரை வழங்கினார்கள். இதிலே பேசிய அத்தனை பேரும், அமைச்சர்கள் யாரும் குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லாமலே பேசி வந்தார்கள். கடைசியிலே கூட்டம் என்ற கிராமத்தைப் பற்றிக் குறுக்கீடு ஏற்பட்டது. இந்த விவாதத்திலே கலந்து கொண்ட அங்கத்தினர்கள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இலாகாவை குறை சொல்லாமலே பேசினார்கள். ரொம்பவும் நன்றி கடன்பட்டிருக்கிறேன். அதிலே அலட்சியம் காட்டினார்கள் என்று நான் கருதவில்லை. அதிகம் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்றால் ரெவினியூ இலாகா அவ்வளவு சிறப்போடு நடக்கிறது என்று எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும்பொழுது, உழுவனுக்கு நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது, உழுபவன் நிலத்தை வாங்கிக் கொள்கிற அளவிலே சட்டம் வர இருக்கிறது என்று சொன்னார்கள். சட்டம் வர இருக்கிறது. அதைப் பார்க்க போகிறீர்கள். அந்தச் சட்டம் வரும்போது அதுபற்றி விரிவாகப் பேசலாம்.

நிலம் வழங்குவதிலே குறைபாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. சாதாரணமாக, புறம்போக்கு நிலத்தைக் கொடுக்கும்போது தவறு நடந்திருக்கிறது என்று சொல்கிறார்களா அல்லது 1 லட்சத்து 57 ஆயிரம் பேருக்குக் குடியிருப்பு மனை கொடுத்ததில் தவறு ஏற்பட்டது என்று கருதுகிறார்களா என்று தெரியவில்லை. 1 லட்சத்து 57 ஆயிரம் பேருக்கு மனை கொடுத்ததும்கூட, சிலருக்கு வழங்கியதில் தகராறு இருக்கிறது. தோப்பு நடுவிலே இருப்பவர்கள் வேறொரு மனைக்குப் போக வேண்டுமென்று கருதுகிறேன். மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். தோப்பு நடுவிலே குடிசை போட்டிருந்தால் கஷ்டமாக இருக்கும். சர்வே நம்பர் போட்டிருந்தாலும்கூட, வேறு ஓரமாக குடிசை போடுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தச் சங்கடம் இருக்கிற இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் சமாதானம் செய்து ஏற்பாடு செய்வார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை பகுதியில் அப்படி இருக்கிறது. தொந்தரவுகள் சீக்கிரம் நீங்கிவிடும் என்று நம்புகிறேன்.





பேசிய அத்தனை பேரும் குடியிருப்பு மனைக்கு 5 செண்ட் வேண்டு
மென்று கேட்டார்கள். 3 செண்ட்டுக்கு மேல் குடியிருப்பு மனை தேவை
யில்லையென்று அரசு கருதுகிறது. இப்பொழுதே ஏராளமாக கொடுக்க
வேண்டியிருக்கிறது. இப்படி சொல்வதால், குடியிருப்பு சட்டத்தின்கீழ்
எவ்வளவு நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்களோ,
அது முழுவதுமே பட்டா செய்து கொடுக்கப்படும். அது 10 செண்ட்டாக
இருந்தாலும், 5 செண்ட்டாக இருந்தாலும், 3 செண்ட்டாக இருந்தாலும்,
2 செண்ட்டாக இருந்தாலும், 1 செண்ட்டாக இருந்தாலும், முழுவதும்
பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம்.
ஆனால், புறம்போக்கு நிலத்திலே 3 செண்ட் கொடுத்தால் போதும் என்று
விதி வைத்து அதற்கேற்றவாறு பிரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கி
றோம்.

தாலுகா அலுவலகங்களைப் புதுப்பிக்க யோசனை தெரிவித்தார்கள்.
அதற்குப் புதுக் கட்டடங்கள் கட்டவேண்டி இருக்கின்றன. அதற்குப்
பிறகுதான் பழைய கட்டடங்களைப்பற்றி ஆராயவேண்டும். இப்பொழுது
அரசாங்கம் அந்த உத்தேசத்தில் இல்லையென்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

பொதுவாக, பீனல் வாட்டர் ரேட் கூடாது என்று சொன்னார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா கூடப் பேசினார்கள். தண்டத் தீர்வை
இருக்கக்கூடாது என்று பேசினார்கள். அதை விதிக்காமல் இருக்க முடி
யாது. அது தேவையில்லையென்று சொன்னால், கீழ் ஆயக்கட்டுகளுக்கு
தண்ணீர் பாயாது. ஒரு அணை கட்டும்பொழுது, மேல் ஆயக்கட்டு எவ்வள
வுக்குத் தண்ணீர் கிடைக்கும், கீழ் ஆயக்கட்டு எவ்வளவுக்கு தண்ணீர்
கிடைக்கும் என்று திட்டம் போட்டு கட்டுகிறோம். தண்டத் தீர்வை விதிக்க
வில்லையென்றால், கீழ் ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் போகாமல், மேல்
ஆயக்கட்டில் வைத்திருப்பவர்களுக்கே தண்ணீர் போகும். ஆகவே, கீழ்
ஆயக்கட்டிலிருப்பவர்கள் பயன்படுத்தாமல் மேல் ஆயக்கட்டிலிருப்பவர்
களே பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்வது நியாயம்
அல்ல. இது நீதிமன்றத்திற்குச் சென்றால், கீழ் ஆயக்கட்டை வைத்
திருப்பவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகும். ஆகவே, தண்டத் தீர்வையை
எடுக்க வேண்டுமென்று சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்
கிறேன். தவறாக தண்ணீரை யார் எடுத்தாலும் நிச்சயமாகத் தண்டத்
தீர்வை விதிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதில் யாருக்கும்
ஆட்சேபணை தேவையில்லையென்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் ராதாபுரம் பகுதியில்
பெரும் பகுதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் வரியையெல்
லாம் நீக்கவேண்டும், ரத்து செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள்.
பொதுவாக, தமிழ் நாட்டிலே இப்படி இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்
கிறோம். எந்த எந்தப் பகுதியிலே வறட்சி நிலைமையினாலும் சரி, மின்சார
வெட்டினாலும் சரி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், முதலமைச்
சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள், பஞ்சமோ வெள்ளமோ
வந்தால், எப்படி விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்கப்படுகிறதோ, அந்த
சலுகைகள் மின்சார வெட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும்,
என்று.

கடன் ஒத்திவைப்பு பற்றி வலியுறுத்தி சொல்கிறார்கள். கடனைத் திருப்பிச் செலுத்த வசதியிருந்தாலும் அவர்களுக்கு கடன் வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஆனால், கெடுபிடி செய்து வசூலிப்பதாக இல்லை. கெடுபிடி செய்வதாக இல்லையென்ற காரணத் திற்காக, கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம், கொடுக்கத் தேவை யில்லையென்று அளவுக்கு வந்துவிடக் கூடாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் பேசும்பொழுது, 5 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த, வசூலிக்க முடியாமல் இருக்கிற வரிகள் அத்தனையையும் ரத்து செய்யவேண்டுமென்று சொன்னார்களென்று கருது கிறேன். அப்படி சொல்வது சரியல்ல. அவர்கள் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். 5 பசலி, 6 பசலி செலுத்த வேண்டியிருக்குமானால், பாக்கி இருக்குமானால், இப்பொழுது நடை முறைக்கான வரியையும், பழைய பாக்கியில் ஒரு பசலிக்கான வரியையும் சேர்த்து வசூலிக்க வேண்டு மென்று உத்தரவு போட்டிருக்கிறோம். முதலிலே இருக்கிற பாக்கியில் ஒரு பசலி வரி, காண்ட் பசலிக்கான வரி, இரண்டையும் சேர்த்து தொகை வசூலித்தால் போதும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எல் லாவற்றையும் சேர்த்து வசூலிக்க வேண்டாமென்று சொல்லியிருக் கிறேன். இது விவசாயிகளுக்கு சலுகையாக இருக்கும். ஆகவே, அவர் அதை வற்புறுத்தத் தேவையில்லையென்று சொல்லிக் கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் போலீசையும் வரவழைக்க வேண்டுமென்று சொன்னார்கள். போலீசுக்கும் மாவட்ட வளர்ச்சி மன் றத்திற்கும் சம்பந்தம் இல்லை. அங்கு வந்து அவர்கள் ஒன்றும் செய் வதற்கில்லை. எனவே, இது தேவையில்லையென்று தெரிவித்துக் கொள் கிறேன். ஆகவே, அதை ஒத்துக்கொள்வதற்கில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

கடனுக்கு வட்டிக்கு வட்டி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை. இதை திரு. பொம்மன் அவர்கள் தெரிவித் தார்கள். வட்டிக்கு வட்டி கேட்பதில்லை. ஐ.எம்.எஸ். லோனோ, தக்காவி லோனோ வாங்கி இருப்பார்களானால், அந்த குறிப்பிட்ட தேதியன்று அதைக் கட்டியாகவேண்டும். அடுத்த நாள் கட்டினால் கூட ஒருவருடத் திற்கான வட்டியையும் சேர்த்து கட்ட வேண்டுமென்று முன்பு ஏற்கெனவே உத்தரவு இருந்தது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதனால், அதை மாற்றி எத்தனை மாதம் பொறுத்து கட்டுகிறார்களோ, அத்தனை மாதத்து வட்டியை வாங்கினால்போதும், ஒரு நாளைக்காக ஒரு வருடத்து வட்டியை வாங்க வேண்டாம் என்று தெரிவித்து இருக் கிறோம். அது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும் என்று தெரிவித் துக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரியை, ரூ. 5,000–மாக இருப்பதை மேலும் அதிகமாக்கிக் கொடுக்கவேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையை ஒத்துக்கொண்டு ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே இருந்த அரசு விவசாய வருமானத்தின் மூலமாக எவ்வளவு வரும் என்று எதிர்பார்த்தார்களோ, அதைவிட குறைவாகத்தான் இப் பொழுது வருமானம் வருகிறது. அவ்வளவு சலுகைகளைக் கொடுத்திருக் கிறோம். நாம் கொடுத்திருப்பது ஏராளம்.





திரு. பொம்மன் அவர்களும் மற்ற நண்பர்களும் பேசும்பொழுது மத்திய அரசினுடைய விவசாய வருமான வரியைப் பற்றிக் குறிப்பிட்டார் கள். அந்த விவசாய வருமானத்தை, இன்கம்-டாக்ஸ்க்கு ஸ்லாப் ரேட்டுக்கு கணக்கில் சேர்க்கப்போகிறோம் என்று அவர்கள் சொன்னால் மறை முகமாக விவசாய வருமானத்திற்கு வரிபோல் ஆகும் என்று ஒத்துக் கொள்கிறேன். ஆனால், பெரும்பாலும் இன்கம்-டாக்ஸ் கொடுப்பவர்களைத் தான் பாதிக்கும். ஆனால், அவர்கள் கணக்கு வைக்கவேண்டும். கணக்கை வைக்கவேண்டாம் என்று தமிழக அரசு சொல்லிற்று. ஆனால் மத்திய அரசு உத்திரவுப்படி கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும். எவ்வ ளவு வருமானம் என்பதற்குத் தமிழ் நாடு அரசைப் பொறுத்தவரை யில் கணக்கு வைக்கவேண்டியதில்லை. என்ன பயிர் வைக்கிறார்களோ, அதற்கு ஏற்றவாறு, ஸ்டாண்டர்ட் ஏக்கர்களாக மாற்றி, அதன்மீது வரி கட்டினால் போதும் என்று சொன்னோம். ஆனால், மத்திய அரசு போட்டிருப்பதில் கணக்கு வைக்க வேண்டுமென்பது இப்பொழுதிருக்கிறது. முன்பு விவசாயிகள் போராட்டத்தின்போது, தமிழக அரசு கணக்கு கேட்கலாமா, இதைச் செய்யலாமா, என்று சொன்னவர்கள் இப்பொழுது என்ன சொல்லப் போகிறார்களோ எனக்குத் தெரியாது. தலைவர் அவர்களே உங்கள் மூலம் நான் அவர்களிடம் விட்டு விடுகிறேன் அதை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதி பிற்பகல் 1–30
யோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிரந்தரமாகப் பட்டா வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது புரவிஷனல் பட்டா அளித் திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விரைவிலே நிரந்தரமான பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் குறிப் பிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டு மென்று சொன்னார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற கோரிக்கை. இதிலே அரசியல் புகுந்து விடுகின்ற காரணத்தினால் யார் ஆட்சியிலே இருந்தாலும் பிரிப்பது கஷ்டமாகப் போய்விடுகிறது. எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொண்டால் செய்வதிலே கஷ்டம் இருக்காது. இராம நாதபுரத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் சிலர் விருதுநகர் தான் தலைநக ராக இருக்க வேண்டுமென்று சொல்வார்கள், சிலர் சிவகெங்கைதான் இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். இப்படி அது அரசியலாக ஆகிவிடும்.

பப்ளிக் டிரஸ்ட்களின் கீழ் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் பயிர் செய்யக்கூடாது என்று இருந்தாலும் சிலர் அதற்கு மேல் பயிர் செய் கிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு நிலம் பயிர் செய்யலாம் என்று ஏற்கெனவே உத்திரவு இருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு புதியதாக எதையும் அனுமதிக்கவில்லை. பழைய அரசு இருந்த பொழுது இரண்டுபேர்களுக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். அவர்கள் அதிகமாக உழுதுகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிக்கூட அரசு இப் பொழுது ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு ப. உ. சண்முகம்] [1973 மார்ச் 14

பப்ளிக் டிரஸ்ட்களின்கீழ் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் இருந்தாலும் அதை ஆதரைஸ்டு ஆபீசர்ஸ் எடுத்துக் கொடுப்பதற்குச் சட்டத்தின் மூலமாக வழி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீபாதம் பற்றிச் சொன்னார்கள். அதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது புறம்போக்கு நிலமில்லை. ஸ்ரீபாதம் நிலம் யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கே அடமானம் செய்து கொடுக்கிறோம். அடுத்த நாளே நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அதனால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக்கொடுப்பதைப் பொறுத்தவரையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்தவிதத் தகராறும் இல்லாமல் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். எங்காவது தகராறு இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அதிக நேரம் பதில் சொல்ல விரும்பவில்லை. எல்லா உறுப்பினர்களும் பாராட்டியிருக்கிறார்கள். எனவே, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. நிதிக் கோரிக்கை எண். 1-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கு. ஆ. பொம்மன், திரு. கே. எஸ். கோதண்டராமய்யா, திரு ஆ. கு. சுப்பையா, திரு. கே. எ. வகாப், ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 1-நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,92,42,500-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 2-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கே. எ. வகாப், ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூ. 89,05,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



1973 மார்ச் 14]

நிதிக் கோரிக்கை எண் 5-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. எ. வகாப் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதித் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 34,76,900-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதி கோரிக்கை எண் 11-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச்.வி. ஹாண்டே, திரு. சோ. அழகர்சாமி, திரு. கே.எ. வகாப், திரு. கே. எஸ். கோதண்டராமய்யா ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,07,53,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுறு மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·35 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

76. Notification issued with G.O. Ms. No. 3110, Home, dated the 6th December 1972, in regard to an amendment to Rule 96-A of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

### B. Reports, Notifications and Other Papers

@ 84. A Review on Industrial Growth in Tamil Nadu—Industrial Finance 1972–73 (Tamil).

+85. Speech by Honourable Thiru K. Anbazhagan, Minister for Public Health on the Demand for Medical Grants, 1973-74 (English and Tamil).

+86. Speech by Honourable Thiru K. Anbazhagan, Minister for Public Health on the Demand for Public Health Grants 1973-74 (English and Tamil).

+87. A Review on the Administration and Enforcement of Excise and Prohibition Acts in Tamil Nadu State during 1972-73 (English and Tamil).

£88. Performance Budget on Medical Education 1973-74.

£89. Performance Budget on Health Services and Family Planning 1973-74.

+90. Speech by Honourable Thiru K. Anbazhagan, Minister for Public Health at Salem (A Guide for Regional Development) (Tamil).

+91. A Summary of the Madras Metropolitan Development Plan 1971-1991 (English).

92. Report of the Committee on Estimates on Fire Service Department.

---

@ Circulated to Members on 12th March 1973.

\+ Despatched to Members on 12th March 1973.

£ Laid on the Table of the House on 13th March 1973.



## இணைப்பு I

[289-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### நிலவரி மானியக் கோரிக்கை

இக்குறிப்பு, முக்கியமாக, "கோரிக்கை எண் 1. நிலவரி," "கோரிக்கை எண் 11. மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்" பற்றி விளக்குகிறது. இது தொடர்பான பிற மானியக் கோரிக்கைகள், "36. பஞ்சத் துயர் தணிப்பு," "41. ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒப்படைகளும்," "42. ஜமீன்தார் களுக்கு இழப்பீடு," "52. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்," "5. முத்திரைத்தாள் நிர்வாகம்" ஆகியவையாகும்.

2. <u>பயிரிடுவதற்காக நிலங்கள் ஒப்படை செய்தல்.</u>—நாட்டு மக்களில் பெரும்பகுதியினருக்குச் சமூக நீதியும், பொருளாதார மறு மலர்ச்சியும் மலரச் செய்யும் பெரும் பணியில் அரசுக்கு உதவியாக, நிலவரித் துறை 1972-73 ஆண்டிலும் தொடர்ந்து தனது ஆதிக்கத்தில் உள்ள சாதனங் கள் அனைத்தையும் இடைவிடாமலும் அறிவுசால் திறமையுடனும் தொடர்ந்து பயன்படுத்தி வந்தது. நிலமற்ற ஏழை மக்களுக்குப் பயிரிடு வதற்கான நிலங்களை இயன்ற அளவுக்கு ஒப்படை செய்து கொடுப்பதை நோக்கமாகக் கொண்ட இவ்வரசின் கொள்கையைச் செயல்படுத்துவதில் 1972-73-லும் இவ்வரசு பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. 1967-68-லிருந்து 1971-72 வரையுள்ள ஐந்தாண்டுக் காலத்திலேயே, 2·65 லட்சம் மக்கள் பயனுறும் வகையில் 5·30 லட்சம் ஏக்கர் நிலம் ஒப்படை செய்துகொடுக்க அரசால் முடிந்ததென்பது பெருமிதத்திற்குரிய வொன்றாகும். இந்தச் சாதனையின் பெருமை, முந்திய இருபது ஆண்டு களில் அதாவது, 1947-48-லிருந்து 1966-67 வரையில் 1·15 லட்சம் மக்கள் பயனுறும் வகையில் 2·88 லட்சம் ஏக்கர் மட்டுமே ஒப்படைக்கப் பட்டிருந்தது என்பதை கூர்ந்து நோக்கும்போது இது நன்கு புலனாகும். 1967-க்கு பின்னர் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் விவரங்கள் ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கால அளவு. | பரப்பளவு (ஏக்கரில்). | பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967-68 .. .. | 22,849 | 7,019 |
| 1968-69 .. .. | 51,852 | 24,604 |
| 1969-70 .. .. | 1,55,813 | 71,738 |
| 1970-71 .. .. | 1,73,558 | 99,138 |
| 1971-72 .. .. | 1,25,414 | 62,643 |
| மொத்தம் .. | 5,29,486 | 2,65,142 |

1—4—1972 நாள் நிலவரப்படி, ஒப்படை செய்வதற்கு 1,52,745 ஏக்கர் நிலம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் 50 சத வீத நிலம் 1972–73-ல் கொடுக்கப்படலாம் என்று கருதப்பட்டது. இதன்படி அரசு இவ்வாண்டில் 75,000 ஏக்கர் விளை நிலம் ஒப்படை செய்யப்படவேண்டுமென இலக்கிட்டுள்ளது. இந்த இலக்கினை 31—3—1973-க்குள் அடைவதற்கு ஒவ்வொரு பிரிவும் தாசில்தார் ஒருவரையும், துணைப் பணியாளரையும் கொண்ட சிறப்புப் பணியாளர் பிரிவுகள் 27-க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது. இவ்வாண்டில் 1972 டிசம்பர் முடிய, 63,700 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. பதினொரு மாவட்டங்களில் பரவலாக உள்ள 32,000 ஏக்கர் முட்காடு நிலங்களை நிலமற்ற ஏழை மக்களுக்கு ஒப்படைப்பதற்கு 1971 டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 28—2—1973 நாள்வரை இதில் 7,127 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டு, 3,306 பட்டாக்கள் வழங்கப்பட்டன.

4. மதுரை மாவட்டம், கண்டமநாயக்கனூரில், 18,000 ஏக்கர் முட்காடு நிலம் ஒப்படைக்கப்படுவதற்காக 1971 செப்டம்பரில் ஆணை பிறப்பிக்கப் பட்டது. இதில் 31—1—1973 நாள் வரை 13,874 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டு, 7,471 பட்டாக்கள் வழங்கப்பட்டன.

5. மதுரை மாவட்டம், கோடைக்கானல் வட்டத்தில் 20,000 ஏக்கர் நிலம் ஒப்படைப்பதற்கான ஆணை 1971 அக்டோபரில் பிறப்பிக்கப்பட்டது. இதில் 31—1—1973 நாள் நிலவரப்படி, 4,173 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப் பட்டு, 2,687 பட்டாக்கள் வழங்கப்பட்டன.

6. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங் களில் முன்னுள் எஸ்டேட்டு நிலங்களில், பெருவாரியான நபர்கள் குளம் கோர்வை நிலங்களை, அதாவது, நீரில் மூழ்கிவிடக்கூடிய குளத்துப்படுகை நிலங்களை அனுபவித்து வந்துள்ளனர். சட்டவிதி நுட்பக் காரணங்களைக் கருதி நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகள் அவர்களுக்கு அந்த நிலங்களுக்கான பட்டா வழங்கவில்லை. இவற்றை மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளு மாறும் அதன்மீது பட்டா வழங்கக் கருதுமாறும் நிலவரி ஏற்பாட்டு லுவலர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. இதன்படி, 59,108 ஏக்கர் பரப்பள வுள்ள நிலத்தை 59,990 நபர்களுக்குப் பட்டாவாக வழங்கப்பட்டது.

7. நீலகிரி மாவட்டத்தில் விளைநிலங்கள் ஒப்படை குறித்து 1950-ல் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, 1972 ஆகஸ்டில் ஆணை பிறப்பிக்கப் பட்டது. இருப்பினும், முதுமலை வனவிலங்கு உய்விடத்தின் நலனை கருதியும், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தவும் தகுந்த நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

8. மாற்றப்பட்ட பகுதிகளில், அதாவது, கன்னியாகுமரி மாவட்டத்தி லும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும், அரசு நிலங்களின் அனுபோகம் குறித்து குத்தகப்பாட்டம் விதிகள், கண்டுக்ரிஷிபாட்டம் கண்டுக்ரிஷி தனது குத்தகை விதிகள் ஆகியவை பொருந்தி வந்தன. முன்னுள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் பகுதி



யாக இந்தப் பகுதி இருந்துவந்த காலத்தில் இந்தக் குத்தகை விதிகள் வழக்கில் இருந்தன. இந்த விதித்துறைகள் பொருந்துகிற உச்ச அளவு நிலங்களை ஒப்படைக்கும் கருத்துடன், அரசு, குத்தகப்பாட்டம் விதிகளையும் கண்டுக்ரிஷி பாட்டம் நில ஒப்படை விதிகளையும் ரத்து செய்து, மாற்றப் பட்ட பகுதிக்கு வருவாய் வாரிய நிலை ஆணைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. மாற்றப்பட்ட பகுதியில் நில ஒப்படை மூலம், இந்த அனுபோகங்களை முறைப்படுத்துவதில் தாராளக் கொள்கையைப் பின் பற்றி அரசு 1973 மார்ச்சில் ஆணை பிறப்பித்தது. இந்நாள் வரை இந்த நிலங்களில் குத்தகை உரிமை மட்டுமே கொண்டிருந்த பெருவாரியான குடியானவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும். இப்பணியை விரைவில் முடிக்க சிறப்புப் பணியாளர் பிரிவுகள் இரண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

9. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் பெருவாரியான அரசு நிலங்களை ஆக்கிரமித்திருந்தவர்கள் படும் தொல்லையைக் குறைக்கும் பொருட்டு, 1971-ல் அரசு தாராள முடிவு ஒன்று எடுத்தது. இதன்படி, 1971 ஜூன் 30-ம் நாளுக்கு முன்பு இருந்த ஆக்கிரமிப்புகள் யாவும் வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்படும். இதுபற்றி இதுவரை அடைந்த முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களி லிருந்து அறியலாம்.—

| | ஆக்கிரமிப்பின் மொத்த பரப் பளவும், சம் பந்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யும். | 28–2–1973 நாள் நிலவரப்படி வழங்கப்பட்ட பட்டாக்கள். | வழங்கப்படவிருக் கிற பட்டாக்கள். | வெளியேற்றப் பட்டவை. |
|---|---|---|---|---|
| பரப்பளவு ஏக்கரில் .. | 11,352 | 9,060 | 737 | 1,555 |
| குடும்பங்களின் எண்ணிக்கை. | 7,902 | 5,573 | 806 | 1,523 |

10. நில ஒப்படை காரியமாக, "ஏழை" என்று கருதப்படுவதற்கான வருமான வரம்பை உயர்த்தி, அரசு, 1972 ஜூலையில் ஆணை பிறப்பித்தது. வருமான வரம்பு பல ஆண்டுகளுக்கு முன் முடிவு செய்யப்பட்டதாலும், அதன் பின்னர் பணத்தின் மதிப்பு படிப்படியாகக் குறைந்துவிட்டதாலும், வருமான வரம்பு இவ்வாறு உயர்த்தப்பட்டது. அதற்கிணங்க, ஐந்தும், ஐந்திற்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தை உடைய நபரைப் பொறுத்த மட்டில், ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆகவும், ஐந்துக்கு மேற்பட்ட நபர்களையுடைய குடும்பத்தையுடைய நபரைப் பொறுத்த மட்டில் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆகவும் மாத வருமான வரம்பை அரசு உயர்த்தியுள்ளது.

11. வீட்டு மனைகளை ஒப்படை செய்தல்.—இம் மாநிலத்தில் நகர்ப் புற, இராமப்புறப் பகுதிகளில் வீடற்றவர்களுக்கு, வீட்டு மனைகளை இயன்ற அளவுக்கு ஒப்படை செய்வதற்காக 1969-ஆம் ஆண்டில் தொடங்கப்

பட்ட சிறப்பு இயக்கம் 1972–73ஆம் ஆண்டிலும் இயங்கி வந்தது.
முறைப்படுத்தப்பட வேண்டிய மறுப்புக்குட்படாத 498,718 ஆக்கிரமிப்பு
களுக்கு மாறாக, 1972ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் வீட்டுமனைப்
பட்டாக்கள் வழங்கப்படுவதன் மூலம் 350,706 ஆக்கிரமிப்புகள் முறைப்
படுத்தப்பட்டுள்ளன. 1972–73ஆம் ஆண்டில் மட்டும் (அதாவது 1972
ஏப்ரல் முதல் 1972 டிசம்பர் வரை) 34,839 வீட்டு மனைப் பட்டாக்கள்
வழங்கப்பட்டன.

12. 1971ஆம் ஆண்டில், அரசு, சென்னை மாநகரத்திலும், சென்னை
மாநகர எல்லையிலிருந்து 20 மைல் புறப்பரப்பிற்குள்ளும், மேலும் மதுரை
மாநகரம், திருச்சிராப்பள்ளி மேலும் கோயம்புத்தூர் நகரங்களின்
எல்லைக்குள்ளும் அமைந்துள்ள அரசு நிலங்களை ஒப்படை செய்வதற்குக்
குத்தகைக்கு விடுவதற்குத் தடை விதித்தது. குடிசைப்பகுதி மாற்று
வாரியத்தின் வீட்டு வசதித் திட்டங்களுக்கு அரசுக்குச் சொந்தமான
எல்லா நிலங்களையும் பயன்படுத்துவதற்காக இத்தடை விதிக்கப்பட்டது.

நீண்ட காலமாக வீட்டு மனைகளை அனுபவித்து வருபவர்களுக்குத் தொல்லை
ஏற்பட்டதால் இத்தடை தொடர்ந்து முழுமையாக நீடிக்க வேண்டியதின்
அவசியத்தை அரசு அண்மையில் ஆய்வு செய்தது. குடிசை மாற்று
வாரியத்தின் பணிகளுக்கு இந்த நிலங்களில் சில தேவைப்படாமல் இருக்கக்
கூடுமென்றும் அரசு கருதியது. அதற்கேற்ப, மேற்கூறிய பகுதியில், அரசு
புறம்போக்கு நிலங்களில் செய்யப்பட்ட மறுப்புக்குட்படாத ஆக்கிரமிப்புகள்
அனைத்தும், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் நலனுக்குப் பாதக
மின்றி முறைப்படுத்தப்பட வேண்டுமென்று 1973, ஜனவரியில், அரசு
ஆணையிட்டுள்ளது. வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவதன் மூலம்
இந்த ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதை விரைவுபடுத்துவதற்கு,
சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் சிறப்புப் பணியாளர்கள் அடங்கிய
11 பிரிவுகளை அமைக்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

13. <u>வரி நிவாரணம்.</u>—புன்செய் நிலங்கள் அனைத்திற்கும் தீர்வையி
லிருந்து தள்ளுபடி வழங்குவது என்றும், ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக்
குறைவான பரப்பளவுள்ள நன்செய் நிலங்கள் அனைத்தின்மீதும் நிலங்களின்
மொத்தப் பரப்பளவு எதுவாயிருந்தபோதிலும் உள்ள ஒருங்கிணைந்த
நன்செய் தீர்வையில் அடிப்படை நிலவரியைத் தள்ளுபடி செய்வ
தென்றும் இந்த அரசு எடுத்த முந்தைய முடிவைத் தொடர்ந்து,
1972, ஜூலையில், மானவாரி என்று பதிவு செய்யப்பட்டுள்ள எல்லா
நிலங்கள்மீதும் அடிப்படைத் தீர்வையைத் தள்ளுபடி செய்ய அரசு ஆணை
பிறப்பித்துள்ளது. இந்த ஆணை 1—7—1972-லிருந்து தொடங்கும் பசலி
ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது.

14. மாற்றப்பட்ட பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்திலும், திரு
நெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும், 1374ஆம்
பசலி ஆண்டிலிருந்து, அதாவது, 1—7—1964-லிருந்து நிலவரி ஏற்பாடு
செயலுக்குக் கொண்டுவரப்பட்டதன் விளைவாக, நிலவரி நிலுவையை



வர்கள் செலுத்த வேண்டுமென்று கேட்கப்பட்டால் இது அவர்களுக்குத்
தொல்லை தருமென்று 1971–72-ல் அரசுக்கு முறையீடுகள் செய்யப்
பட்டன. அரசு இந்த முறையீடுகளை ஆய்வு செய்து, வரி நிவாரண நடவடிக்
கையாக, ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டு வீதத்தில் செலுத்தவேண்டிய
தொகைக்கும், ரயத்துவாரி நிலவரி வரியைக் கொண்டு வருவதற்கு
முன்னர் நிலவிய வீதத்தில் செலுத்தக்கூடிய தொகைக்கும் உள்ள
வேறுபாட்டை, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, 1374 ஆம்
பசலி ஆண்டிலிருந்து 1380 ஆம் பசலி ஆண்டு (உட்பட) வரையிலும்,
செங்கோட்டை வட்டத்தைப் பொறுத்தவரை, 1374 ஆம் பசலி ஆண்டு முதல்
1377 ஆம் பசலி ஆண்டு (உட்பட), தள்ளிவிட முடிவு செய்தது.

15. <u>பட்டா விவரக் குறிப்பேடு</u>—நடப்பு ஆண்டில் அரசினால் கொண்டுவரப்
பட்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் "பட்டா விவரக் குறிப்பேடுகளை" வழங்கு
வதற்கான திட்டமாகும். தங்களது நிலங்கள் குறித்த விவரங்கள், அவை
மீது விதிக்கப்பட்ட தீர்வை, சம்பந்தப்பட்ட குறிப்புகள் ஆகியவை
குறித்து, உரிய காலத்தில் தகவல் அறிவதில் உழவர்களுக்கு ஏற்படும்
தொல்லைகள் தெரிந்ததே. இந்தத் தொல்லைகளை நீக்குவதற்காக,
ஒவ்வொரு உழவருக்கும் "பட்டா விவரக் குறிப்பேடு" வழங்கும்
திட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது. இந்தக் குறிப்பேடுகளில்,
ஒவ்வொரு உழவருக்கும் சொந்தமான நிலங்கள் குறித்த சான்றுபெற்ற
விரிவான விவரங்கள், அவைமீது விதிக்கப்பட்ட தீர்வை, அவ்வப்
போது குடியானவர் செலுத்திய தொகைகள், அவர்களுக்கு வழங்கப்
பட்ட கடன்கள், அவர்கள் திருப்பிச் செலுத்திய தொகை ஆகிய
விவரங்கள் அடங்கியிருக்கும். இவ் விவரக் குறிப்பேடு ஒன்று 50 காசு
என்ற சலுகை விலையில் வழங்கப்படவிருக்கிறது. இத் திட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் 9—10—1972-ல்
கொண்டுவரப்பட்டது. ஏனைய மாவட்டங்களில் படிப்படியான
திட்டத்தின்கீழ் இது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 17 லட்சம்
பட்டா விவரக் குறிப்பேடுகள் அச்சிடப்பட்டு, அவை வழங்கப்படுவதற்காக
மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

16. <u>ஜமாபந்தி முறையை நீக்குதல்.</u>—ஜமாபந்தி முறையைப் படிப்படி
யாக நீக்குவது குறித்த அரசின் முடிவையொட்டி, 1—7—1972-லிருந்து
தொடங்கும் பசலி ஆண்டிலிருந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு
வட்டத்தில் ஜமாபந்தி முறையை நீக்கியதற்குப் பதிலாக, கிராம வட்டக்
கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான துறைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும்
திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கோட்டத்திற்கு அரசு
நீட்டித்துள்ளது. இந்த நடவடிக்கை பலனளிப்பது குறித்து கவனிக்கப்பட்டு,
அதனை மேற்கொண்டும் நீட்டிப்பதற்கான முடிவு எடுக்கப்படும்.

17. <u>புதுக்கோட்டை மாவட்டம்.</u>—புதுக்கோட்டைப் பகுதி மக்களின் நீண்ட
கால வேண்டுகோளுக்கிணங்க இப்பகுதிக்காக தனி வருவாய் மாவட்டம்
ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய
மாவட்டத்துடன் சேர்க்கப்பட வேண்டிய ஆட்சிப் பகுதிகள் குறித்தும்
அவை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், ஆய்வு செய்து
பரிந்துரைகளை அனுப்புமாறு வருவாய் வாரியம் கேட்கப்பட்டுள்ளது.

18. துணை வட்டங்களை வட்டங்களாக்குதல்.—நிர்வாகத்திற்கு வசதியாய் இருக்கும் பொருட்டும், பொதுமக்களுக்கு மேலும் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டும் துணை வட்டங்களை தனி வட்டங்களாக உயர்த்தும் படிப்படியான திட்டத்தின் ஒரு பகுதியாக 1973-74-ல் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு துணை வட்டத்தையும், இராமநாதபுர மாவட்டத்திலுள்ள காரைக்குடி துணை வட்டத்தையும் தனி வட்டங்களாக்க அரசு முடிவு செய்துள்ளது.

19. கட்டிடம் கட்டும் திட்டங்கள்.—வருவாய்த்துறை அலுவலகங்கள் பலவற்றில் காணப்படும் இடவசதிப்பற்றாக் குறையைச் சரிப்படுத்தும் நோக்கத்துடன், அத்தகைய 24 அலுவலகங்களுக்குக் கூடுதல் இடவசதி அளிப்பதற்கு வகை செய்வதற்காக 1973-74-ல் இடவசதிப் பணிகளை அரசு மேற்கொள்ளக் கருதியது. 1972 நவம்பர் திங்களில், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

20. கிராம அதிகாரிகளுக்கு நிவாரணம்.—இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளுக்கு ஏற்ப கிராம அதிகாரிகளுக்கும், கிராமப்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 2—10—1970-லிருந்து உயர்ந்தது. கிராமப் பணியாளர்களுக்கு மேற்கொண்டும் நன்மை செய்யக் கருதி, அரசு 1—9—1972-லிருந்து கிராம அதிகாரிகளுக்கும், கிராமப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் மதிப்பூதியத்தில் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 7 வீதம் அரசு தனி உயர்வு அளித்தது.

21. வேளாண்மை வருமான வரிச் சலுகை.—1972 ஆம் ஆண்டின் 18ஆம் எண் சட்டத்தின் மூலம், தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டம், மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது. அதன் விளைவாக, அப்பகுதியில் செயலிலிருந்த 1955 ஆம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி வேளாண்மை வருமான வரிச்சட்டம் ரத்து செய்யப்பட்டது. உழவர்களுக்கு கணிசமான அளவு நிவாரணம் அளிப்பதற்கு, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு 4-ம் எண் சட்டத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. பாக்கு, திராட்சை, கரும்பு, வாழை, வேர்க்கடலை (பாசனம் பெறுவது), பருத்தி (பாசனம் பெறுவது), தென்னை ஆகியவை பயிரிடப்படும் நிலங்களை ஸ்டாண்டர்டு எக்காராக மாற்றுவது தொடர்பாக இந்தத் திருத்தச் சட்டத்தில் சலுகைகள் வழங்கப்பட்டன. வரிவிதிப்பு விலக்குக்கான வரையறை, 7½ ஸ்டாண்டர்டு எக்கரிலிருந்து 10 ஸ்டாண்டர்டு எக்கருக்கும், ஆண்டு நிகர வருமானம் ரூ. 4,000-லிருந்து ரூ. 5,000-க்கும் உயர்த்தப்பட்டது. எந்தப் பயிர் விளைவித்தாலும் 30 ஸ்டாண்டர்டு எக்கருக்குத் தீர்வை இணக்க அடிப்படையில் வரி செலுத்துவதற்கான விருப்ப உரிமையை வரையறுக்கும் ஏற்பாட்டுக்குப் பதிலாக, மலைத் தோட்டப் பயிர்களல்லாத பயிர்களைப் பொறுத்தவரையில், பரப் ... எந்த வரையறையுமின்றி தீர்வை இணக்கம் செய்துகொள் ... மலைத் தோட்டப் பயிர்கள் தொடர்பான தீர்வை ... ண்டர்டு எக்கரிலிருந்து 50 ஸ்டாண்டர்டு



எக்காராக உயர்த்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் திருத்தங்களுக்கு 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளிலிருந்தே செல் திறன் அளிக்கப்பட்டுள்ளது.

22. நகர்ப்புற நிலவரி—சலுகைகள்.—நகர்ப்புற நிலவுடைமையாளர்களில் தகுதியானவர்களுக்கு நிவாரணமளிப்பதற்காகத் தமிழ் நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தினைத் திருத்தும் சட்டப்பேரவை சட்டவரைவு எண் 51/1972 மாநிலச் சட்டமன்றத்தால் நிறை வேற்றப்பட்டது. இச்சட்டவரைவிற்கு குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப் படுகின்றது. இச்சட்டவரைவின் கீழ், வரிவிதிப்பதற்காக, விலக்கு எல்லை ஒரு மனையிலிருந்து இரண்டு மனையாக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு மனைகளுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரையில் இரண்டு மனை நிலத்திற்கு மேல் எஞ்சியுள்ள நிலத்திற்குத் தான் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்பதற்காக நிலச் சொந்தக்காரர்களே முழுமையாக அனுபவித்து வரும் கட்டிடங்களுடன் கூடிய நிலங்களுக்கு வரித் தள்ளுபடி 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வரிவிலக்கு அளிக்கப்படக் கூடியவை என அறிவிக்க அரசுக்கு இயலச் செய்கிற ஏற்பாடு அற நிறுவனங்கள் பயன் படுத்தும் நிலங்களுக்கு மட்டும் பொருந்தும் என்றிருந்ததற்குப் பதிலாக சமய நிலையங்கள் அறநிறுவனங்கள் அல்லது அறநிலையங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திருத்தங்கள் 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

23. வறட்சி நிவாரணம்.—1972இல், தென் மேற்குப் பருவ மழை தவறியதின் விளைவாக, மாநிலத்தின் பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவியது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தபின், வருவாய் வாரிய உறுப்பினர்கள் அறிக்கை அனுப்பினர். அதன் அடிப்படையில், மாவட்டங்களில் நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்காக 1972 செப்டம்பர்-அக்டோபரில் ரூ. 125 லட்சத்துக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. நிவாரணப் பணிகளாவன—தற்போதுள்ள பொது மக்களுக்குப் பயன்படும் ஊரணிகள் உள்ளிட்ட குடிநீர் துறைகளை ஆழப்படுத்தல், குழாய்க் கிணறுகள் உள்ளிட்ட புதிய பொதுக் குடிநீர்க் கிணறுகளைத் தோண்டுதல், சிறுபாசனப் பணிகளை மேம்படுத்தல், சாலைப் பணிகள் முதலியன. பல்வேறு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் பின் வருமாறு :—

| மாவட்டம். | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தருமபுரி .. .. .. | 11·00 |
| சேலம் .. .. .. .. | 11·50 |
| கோயம்புத்தூர் .. .. | 15·50 |
| வடார்க்காடு .. .. .. | 12·50 |
| செங்கற்பட்டு .. .. | 8·50 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 12·00 |

| | | | |
|---|---|---|---|
| மதுரை | .. | .. | 12·00 |
| தென்னார்க்காடு | .. | .. | 7·00 |
| இராமநாதபுரம் | .. | .. | 12·00 |
| திருநெல்வேலி | .. | .. | 10·00 |
| தஞ்சாவூர் .. | .. | .. | 6·00 |
| கன்னியாகுமரி | .. | .. | 2·00 |
| நீலகிரி .. | .. | .. | 5·00 |
| மொத்தம் | .. | | 125·00 |

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை, அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலவரி நிலுவைகள், கடன்கள், வேளாண்மை வருமானவரி ஆகியவற்றினை வசூலிப்பதை அரசு தள்ளிப் போட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிவாரண வேலைகளுக்கு உதவி செய்யுமாறு மாநில அரசு இந்திய அரசினைக் கேட்டுக் கொண்டதன் மேலும் இந்திய அரசால் இம்மாநிலத்தைப் பார்வையிட அனுப்பப்பட்ட ஆய்வுக் குழுவின் பரிவுரை களின் அடிப்படையிலும், நிதியுதவி வழங்க இந்திய அரசு ஒப்புக் கொண்டதுடன் இம்மாநிலத்தில் 1972, அக்டோபர்-நவம்பர் ஆகிய இரண்டு திங்களுக்கும் வறட்சித் துயர் தணிப்பின்கீழ், செலவுக்காக ரூ. 150 லட்சம் என உச்ச வரம்பும் வரையறுத்துள்ளது.

24. மத்திய அரசால் தொடங்கப்பட்ட "தொடர்ந்து வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்" இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் 1972–73ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 1972–73ஆம் ஆண்டிற்கு ரூ. 131·31 லட்சத்துக்கு மேற்படாத (ராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 66·03 லட்சம், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 65·28 லட்சம்) செலவினத்திற்கு இந்திய அரசு தனது நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் தொடர்ந்து வறட்சிக் குட்பட்ட பகுதி திட்டத்திற்குத் தருமபுரி மாவட்டத்தை இந்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டத்தை, 1973–74-ல் தொடங்கி, ஐந்தாவது திட்டத்தின் பகுதியாக 3 முதல் 4 ஆண்டுகளுக்கு செயல்படுத்தி வர வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இம்மாவட்டத்திற்குத் தற்காலிகமாக சுமார் ரூ 584 லட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

25. <u>வெள்ள நிவாரணம்.</u>—1972, டிசம்பரில் இம்மாநிலத்தின் கடற்கரைப் பகுதிகளைப் புயல் தாக்கியதன் விளைவாக, பெண்ணையாறு, கடிலம், மலட்டாறு, பாலாறு, வெள்ளாறு, பாமினியாறு, திருமணி



முத்தாறு, ஐயாறு, பவானி ஆகிய ஆறுகளில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கேற்பட்டு, 2,900 பெரும்பாசன, சிறுபாசன ஏரிகளில் பல இடங் களில் உடைப்பேற்பட்டது. அதன் விளைவாக நெடுஞ்சாலைகள், கிராமப் புறச் சாலைகள் ஆகியவற்றில் 5,800 இடங்களில் உடைப்பேற்பட்டது. புயற்காற்று, வெள்ளப் பெருக்கின் காரணமாக 82 பேர் வரை உயிரிழந்தனர். 28,000 ஏக்கர் நிலங்களில் முழுமையாகவும், 1,70,000 ஏக்கர் நிலங்களில் பகுதியும் நெற்பயிருக்குச் சேதமேற்பட்டது. ஏறத்தாழ 90,000 ஏக்கரிலிருந்த கரும்பு, வெற்றிலைக் கொடிக்கால்கள், பருத்தி, துவரை போன்ற பயிர்களில் ஒரு பகுதிக்குச் சேதமேற்பட்டது. 1,70,000 குடும்பங்கள் வீடிழந்தன. தென்னார்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வடார்க்காடு, செங்கற்பட்டு, தருமபுரி, சென்னை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில், மேற்கூறப்பட்ட வரிசை முறையில் சேதங்கள் கடுமையாகவிருந்தன. புயற்காற்று, வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சொத்து இழப்பு ரூ. 40 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. பின் வரும் உடனடி நிவாரண வேலைகளை மேற்கொள்ளும்படி அரசு ஆணை யிட்டுள்ளது :—

(i) புயற்காற்று, வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வருக்கும் பழுதடைந்த வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கும், உடைகளுக்கு மான மானியம், வழக்கமான ரொக்கத் தொகை ரூ. 40-லிருந்து ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டது. இந்த வீதத்தில் ரொக்க மானியம் சுமார் 1,70,000 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ii) பொருளீட்டுபவர்களை இழந்த குடும்பங்களுக்குக் கருணை இடருதவித் தொகை ரூ. 2,000 வீதம் கொடுக்கப்பட்டது.

(iii) ஏனைய இறப்புகளைப் பொறுத்த வரையில் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை ரொக்கத் தொகை நிவாரணமாகத் தரப்பட்டது.

(iv) வெள்ளத்தில் தனது தந்தையையும் தாயையும், தந்தையை அல்லது தாயை இழந்து அனாதையாகிவிட்டிருந்தால், அக்குழந்தையை வளர்ப்பதற்கும், அதன் கல்விக்குமான நிதிப் பொறுப்பினை அரசு மேற் கொண்டது.

(v) வெள்ளத்தில் மடிந்து போன உழவு மாடுகள், கறவைமாடு களுக்குப் பதிலாக வேறு மாடுகளை வாங்குவதற்காக தக்காவி கடன்கள் வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(vi) வெள்ளத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், நடப்புப் பசலிக்கான, அதாவது 1382ஆம் பசலிக் கான நிலவரிகள், தண்ணீர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வைகள், உள்ளூர் தீர்வை மேல்வரிகள் ஆகியவற்றிற்கு முழுத் தள்ளுபடி அளிக்கப்பட் டுள்ளது.

(vii) பழுதடைந்த வீடுகளைத் திரும்பக் கட்டிக் கொள்வதற்காக, தகுதியான ஏழைக் குடும்பங்களுக்கு, பழுதடைந்த வீடு ஒன்றிற்கு ரூ. 250-க்கு மேற்படாமல் தக்காவிக் கடன்கள் வழங்கப்பட்டன.

(viii) வெள்ளப் பெருக்கினால் மணல் மேடிட்ட நிலங்களைப் பண் படுத்திப் பயிரிடுவதற்குத் தகுதியுடையனவாக மாற்றும் பொறுப்பினை அரசு மேற்கொண்டுள்ளது. பண்படுத்தலுக்கான முழுச் செலவையும் அரசு ஏற்கும்.

(ix) வெள்ளத்தில் தமது சாதனங்களை இழந்து பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் அவற்றைத் திரும்ப வாங்குவதற்காக ரூ. 100 ரொக்க உதவி அளிக்கப்பட்டது.

பழுது பார்த்தல் நிவாரண இனங்களுக்காகப் பின் வரும் அடிப்படை யில் ரூ. 731·125 லட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| ஏழைகளுக்கு இலவச உணவளிப்பது, வெள்ளத்தில் சிக்கிய மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லுதல் முதலிய செலவினங்கள் உட்பட கருணை இடர் உதவி. | 165 |
| பெரும்பாசன ஏரிகளைப் பழுதுபார்க்க .. .. .. .. | 100 |
| சிறுபாசன துறைகள் பழுது பார்க்கப்பட, நெடுஞ்சாலைகள் —கிராமப்புறப் பணிகள் துறையின் பொறுப்பின்கீழ் உள்ள சாலைகள், ஊராட்சி ஒன்றிய, ஊராட்சிகளின் சாலைகளைப் பழுதுபார்க்க. | 250 |
| நகராட்சிகளிலும் சென்னை மாநகராட்சியிலும் சேதமடைந்த சாலைகளின் பழுதுபார்க்கும் பணிகளுக்காக. | 60 |
| ஆரணி, திருவண்ணாமலை நகராட்சிகளைச் சேர்ந்த சேதமுற்ற நீர்த் துறைகளைப் பழுதுபார்ப்பதற்காக. | 1·125 |
| தக்காவிக் கடன்கள் .. .. .. .. .. .. | 125 |
| மணல் மேடிட்ட நிலங்களைப் பண்படுத்துதல். .. .. | 30 |
| மொத்தம் .. | 731·125 |

இம்மாநிலத்தில் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்காக இங்கு வந்த மத்தியக் குழுவின் பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு மத்திய உதவிக்கான செலவு ரூ. 14·25 கோடி என இந்திய அரசு மொத்த உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. இத்துடன், திருக்கோயிலூர் அணைக் கட்டு, கோமுகி அணை ஆகியவற்றைத் திருத்தி அமைப்பதற்காக, இந்திய அரசிடமிருந்து மேற்கொண்டும் உதவி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. மேற்சொன்ன உச்சவரம்புத் தொகையாகிய ரூ. 14·25 கோடி யில், 1972–73ஆம் நிதி ஆண்டில் ரூ. 7·25 கோடி செலவு ஏற்பட்டது. 1973–74ஆம் ஆண்டில் ரூ. 7 கோடி செலவிடப்படும். புயல் வெள்ள நிவாரணச் செலவுக்காக நடப்பு ஆண்டில் ஏற்கெனவே இவ்வரசுக்கு ரூ. 3·50 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு



பழுது பார்த்தல், நிவாரணப் பணிகளுக்காக ஏற்பளிக்கப்பட்ட உச்ச வரம்பு தொகைக்குமேல் செலவு அதிகரிக்குமானால், மேலும் கடன் வழங்கப்படும்.

26. முத்திரைத்தாள் தீர்வை.—1899ஆம் ஆண்டு இந்திய முத்தி ரைத்தாள் தீர்வைச் சட்டத்தில் 47–A புதிய பிரிவை அமைத்துக் கொள்வதற்காக, இச்சட்டம் 1967–ல் திருத்தப்பட்டது. இப்புதிய பிரிவின்படி, ஒரு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பிற்குப் பதிலாக, அச்சொத்தின் நடைமுறை மதிப்பின்மீது முத்திரைத்தாள் தீர்வை செலுத்தவேண்டும். சென்னை, உயர்நீதி மன்றம் (ஒரு நீதிபதி ஆயம்) 1972–ல் இந்த ஏற்பாடு அரசியலமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. எனினும், இவ்வரசு ரிட் மேல் முறையீடு செய்துகொண்ட தன்மேல் உயர்நீதி மன்றம் (ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதி ஆயம்) மேற்படி தீர்ப்பை ரத்து செய்து, 47–A பிரிவை மீண்டும் சட்டத்தில் திரும்பச் சேர்த்தது.

பத்திரங்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடும் குற்றத்திற்காக ஒரு வரைத் தண்டித்து, இச்சட்டத்தின் கீழ்ச் சேரவேண்டிய தீர்வைத் தொகையை வசூலிக்க மாஜிஸ்ட்ரேட் ஒருவருக்கு அதிகாரம் அளித்து 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தை திருத்துவதன் மூலம், 1972ஆம் ஆண்டு டிசம்பரில் அரசு ஒரு ஏற்பாட்டைச் செய்தது. இக்குற்றத்திற்காக விதிக்கப்படக்கூடிய தண்டனையைத் தவிர, தீர்வைத் தொகையையும் வசூலிக்க இது வகை செய்தது.

27. மாநகரக் குடியிருப்பவர்கள் பாதுகாப்புச் சட்டம்—நீட்டித்தல்.—1921ஆம் ஆண்டு சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்புச் சட்டம் இம்மாநிலத்தில், நகராட்சி நகரங்களிலும் அவற்றிற்கு அருகில் உள்ள பகுதிகளிலும் வசிக்கின்றவர்களும் மற்றவர்களின் நிலங் களில் கட்டிடங்கள் கட்டியுள்ளவர்களுமாகிய குடியிருப்பவர்களுக்கு, அவர்கள் அந்த நிலத்திற்கான நியாயமான வாடகையைச் செலுத்து கின்ற வரையில் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளிப்பதற்காக இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் தொடக்கத்தில். சென்னை மாநகருக்கு மட்டும் பொருந்தியது. அவ்வப்போது இச்சட்டத்தை நகராட்சி நகரங்களுக்குத் தேவையாய் இருப்பதை ஒட்டி அவற்றிற்கும் அரசு நீட்டித்துள்ளது. 1973 ஜனவரியில் இம்மாநிலத்தில் உள்ள எல்லா நகராட்சி நகரங்களுக்கும் இச் சட்டத்தை அரசு நீட்டித்துள்ளது.

28. உழவர்களுக்கு குடியிருப்பு உரிமை வழங்கல்.—பயிரிடு பவர்களாக அல்லது உரிமம் பெற்றவர்களாகக் குடியிருப்பு அனுபோ கத்தைப் பெற்றுள்ள உழவர்கள் அல்லது வேளாண்மைத் தொழி லாளர்களுக்கு உரிமை வழங்குவதற்காக நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தின்கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரையில் 1,57,000 பேருக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில், 1,00,000 பேர் அரிசன இனத்தைச் சேர்ந்தவர்கள். 47,000 பேர்,

பின்தங்கிய வகுப்பினர். இச் சட்டம் தொடக்கத்தில் 15—1—1972 முதல் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமுலாக்கப்பட்டது. இச் சட்டம், 20—12—1972 முதல் செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, சேலம் (ஏற்காடு துணை வட்டம் நீங்கலாக) மேலும் இராம நாதபுரம் (இராஜபாளையம் துணை வட்டம் நீங்கலாக) ஆகிய மாவட்டங் களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதிகள் நீங்கலாக எஞ்சியுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் இச் சட்டத்தை நீட்டிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. குடியிருப்பவர்களிடமிருந்து, குடியிருப்பு நிலங்களின் விலையை வசூலிப்பதைக் கைவிடவும், குடியிருப்புகளின் சொந்தக்காரர் களுக்குச் செலுத்த வேண்டிய வீட்டு மனைகளுக்கான இழப்பீட்டுத் தொகை முழுவதையும் மாநில நிதியிலிருந்து செலுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

29. எஸ்டேட்டுகள் ஒழிப்பு.—நிலங்களில் இடையாளர்களை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் அண்மைக் காலத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(அ) தமிழ் நாடு 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

5,092 ஜமீன்கள், இனம், கீழ்க் குத்தகை எஸ்டேட்டுகள் ஆகியவை அறிவிக்கப்பட்டு இச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்). |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 5,092 | 11,439·28 |
| 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை நில வரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி. | 5,091 | 11,438·79 |
| எஞ்சியவை .. .. .. .. | 1 | 0·49 |

(இ) தமிழ் நாடு 1963ஆம் ஆண்டு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

இரு வாரங்களும் பகுதிக் கிராம இனம் எஸ்டேட்டுகளும் இச் சட்டத்தின் கீழ் ஒழிக்கப்பட்டுள்ளன:—

| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்). |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 2,107 | 1,611·59 |



| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்). |
|---|---|---|
| 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை நிலவரி ஏற்பாடு செய்யப் பட்ட பகுதி. | 1,998 | 1,280·96 |
| எஞ்சியவை .. .. .. .. .. | 109 | 330·63 |

இன்னும் இச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாத 109 நேர்வுகளில், 101 நேர்வுகள் தடை ஆணைகளின் கீழும், ஏனைய சட்ட நடவடிக்கைகளின் கீழும் உள்ளன. எஞ்சிய 8 நேர்வுகளில் (7·42 சதுர மைல்) நடப்பு பசலி ஆண்டு நிலவரி ஏற்பாடு கொண்டுவரப்படும்.

(உ) தமிழ் நாடு 1963ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்). |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட மொத்த பகுதி .. | 13 | 32·11 |
| 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை நிலவரி ஏற்பாடு செய்யப் பட்ட பகுதி. | 13 | 32·11 |
| எஞ்சியவை .. .. .. .. .. | இல்லை. | இல்லை. |

(எ) தமிழ் நாடு 1963ஆம் ஆண்டு சிறு இனங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

| | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்). |
|---|---|---|
| நிலவரி ஏற்பாட்டுக்கான மொத்தப் பகுதி .. | 13,578 | 1,554·28 |
| 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி. | 13,568 | 1,546·89 |
| எஞ்சியவை .. .. .. .. .. | 10 | 7·39 |

எஞ்சிய கிராமங்களில், ஐந்து கிராமங்கள் (2·79 சதுர மைல்) தடை ஆணைகளின் கீழ் உள்ளன. எஞ்சிய 5 கிராமங்களில் நிலவரி ஏற்பாடு கொண்டுவரப்பட்டு வருகின்றன.

**(ஐ) 1969-ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.**

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் உள்ள சிறப்புக் குத்தகை (80,087 எக்கர்) முறையை ஒழிப்பதற்கு வகை செய்யும் இச்சட்டம், தலைமை உயர் நீதிமன்றம் பிறப்பித்த தடை ஆணையின் விளைவாக, செயல்படுவதனின்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30. குத்தகை உரிமை.—1969-ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவேடுகள்) சட்டம் குத்தகை உரிமம் குறித்த முழுமையான நம்பகமான பதிவேட்டைத் தயாரித்துப் பேணிவர வகை செய்கிறது. இந்தப் பதிவு முறை, குத்தகை உரிமை குறித்த எழுத்து மூலமான ஆவணமாகும். வாய்மொழி வடிவில் உள்ள குத்தகை ஒப்பந்தங்களால் ஏற்படும் பல தீங்குகளை இதன் மூலம் தவிர்க்கலாம். இச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் எண்ணிக்கையும், ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட பரப்பளவும் வருமாறு :—

| மாவட்டம். (1) | பதிவு செய்யப்பட்ட குத்தகை தாரர்களின் எண்ணிக்கை. (2) | பரப்பளவு (எக்கரில்). (3) |
|---|---|---|
| 1 தஞ்சாவூர் .. .. .. .. .. | 1,24,393 | 2,49,997 |
| 2 திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 57,909 | 67,086 |
| 3 மதுரை .. .. .. .. .. | 35,880 | 40,893 |
| 4 செங்கற்பட்டு .. .. .. .. | 11,738 | 18,088 |
| 5 இராமநாதபுரம் .. .. .. .. | 15,146 | 14,444 |
| 6 கோயம்புத்தூர் .. .. .. .. | 12,574 | 34,066 |
| 7 திருநெல்வேலி .. .. .. .. | 64,891 | 41,185 |
| 8 கன்னியாகுமரி .. .. .. .. | 3,891 | 3,364 |
| 9 வட ஆர்க்காடு .. .. .. .. | 31,559 | 55,279 |
| 10 நீலகிரி .. .. .. .. .. | 1,189 | 4,652 |
| 11 சேலம் .. .. .. .. .. | 8,883 | 18,712 |
| 12 தருமபுரி .. .. .. .. .. | 8,804 | 25,646 |
| 13 தென் ஆர்க்காடு .. .. .. .. | 11,626 | 16,752 |
| | 3,88,483 | 5,90,164 |



31. நிலச் சீர்திருத்தம்.—சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்தவும், நிலக்கிழார்கள் குத்தகைதாரர்களைச் சுரண்டுவதைத் தடுத்தல், உழுபவர்களுக்கு மிகுந்த பாதுகாப்பு அளித்தல், நிலங்கள் ஒரு சில நிலக்கிழார்களிடமே குவிந்துகிடப்பதைத் தடுத்தல் ஆகியவற்றின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் அண்மையில் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றியது குறித்து நாம் பெருமைப் படுகிறோம். தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு சட்டம்) சட்டத்தின்கீழ், 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ஆம் நாள் வரை, உபரி நிலங்கள் என்று அறிவிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு, உடைமையாக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பு முதலியவற்றைக் கீழ்க்காணும் விவர அறிக்கை காட்டுகிறது :—

| | |
|---|---|
| (i) உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு .. .. .. .. .. | 39,253 எக்கர். |
| (ii) இனம் (i)-லிருந்து உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பளவு .. .. | 30,916 எக்கர். |
| (iii) இனம் (ii)-லிருந்து ஒதுக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு .. .. .. .. .. | 23,557 எக்கர். |
| (iv) ஒதுக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை .. .. | 12,000 பேர். |

தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பைக் குறைத்தல்) சட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (i) சரிபார்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நேர்வுகளின் மொத்த எண்ணிக்கை .. .. | 75,104 |
| (ii) (i) இனத்திலிருந்து இதுவரை சரிபார்க்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை .. .. .. | 54,394 |
| (iii) (ii) இனத்திலிருந்து நில உச்ச வரம்பு மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை .. .. .. .. .. .. | 6,508 |
| (iv) (iii) இனத்திலிருந்து, உபரி நிலத்தைக் காட்டும் வரைவு விவர அறிக்கை தயாரிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை .. .. .. .. | 1,617 |
| (v) மேலே குறிப்பிடப்பட்ட (iv) இனத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலத்தின் பரப்பளவு. | 20,476 எக்கர். |

32. தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தை மேலும் செவ்விய முறையில் செயற்படுத்த இவ்வாக முன் அறிவிப்பு ஏதும் கொடுக்காமல், 1970-ல், 30 ஸ்டாண்டர்டு எக்கரை 15 ஸ்டாண்டர்டு எக்கராகக் குறைப்பதற்குத் தேவையான சட்டம் ஒன்றைச் செயலுக்குக் கொண்டு வந்தது. இச்சட்டம் 15—2—1970

முதல் அமுலுக்கு வந்தது. கரும்பு பயிராகும் நிலங்களுக்கும், மேய்ச்சல் நிலங்களுக்கும் அளிக்கப்பட்ட விலக்குகளை அரசு 15—1—1972-லிருந்து ரத்து செய்தது.

1972–73ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட முக்கியமான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளாவன:—

(i) தமிழ் நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் 59-வது பிரிவு, பயிரிடும் குத்தகைதாரர்களுக்கான உச்சவரம்புப் பரப்பளவு தொடர்பான, இச்சட்டத்தின் VIII-வது அத்தியாயத்தைச் சேர்ந்த ஏற்பாடுகள், இச்சட்டம் வெளியிடப்படும் நாளிலிருந்து, அதாவது 2—5—1962-லிருந்து மூன்று ஆண்டுகளுக்குச் செயலில் இருக்க வேண்டும் என்பதற்கு முதலில் வகை செய்தது. இந்த அத்தியாயத்தின் செல்திறன் காலம் அவ்வப்போது சட்டத்தின் மூலம் நீட்டிக்கப்பட்டது. தமிழ் நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டத்தின் மூலம் இந்த அத்தியாயத்தின் செல்திறன் நிலையானதாக்கப்பட்டுள்ளது.

(ii) மலைப்பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த விலக்கு தமிழ் நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டத்தின் மூலம் 1—3—72 முதல் திரும்பப் பெறப்பட்டது. 5 பேருக்கு மேற்பட்ட ஒரு குடும்பத்திற்கான மொத்த நில உச்சவரம்பு 1—3—1972 முதல் 60 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 40 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கப்பட்டது.

(iii) பொதுத்தன்மை வாய்ந்த பலவகை அற நிறுவனங்களுக்கு அல்லது கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்களுக்கும் தமிழ் நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் தனியாக உச்சவரம்பு வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள், 1—3—1972 அன்றும் அந்நாளுக்கு முன்னரும் வேளாண்மை நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும் இச்சட்டம் தடை விதிக்கிறது. சமய நிறுவனங்களும், சமய நம்பகங்களும் 1—3—72 அன்று சொந்தமாக வைத்திருக்கும் நிலங்களுக்குத் தொடர்ந்து சலுகை அளிக்கப்பட்டு வந்தாலும் 1—3—1972 அன்று அல்லது அந்நாளுக்குப் பின்னர் இந்த நிறுவனங்கள் வேளாண்மை நிலங்களைக் கையகப்படுத்துவது தடுக்கப்பட்டது.

(iv) தமிழ் நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு கட்டுதல்) நான்காவது திருத்தச் சட்டம், கீழ்க்காணும் முக்கிய மாற்றங்களுக்கு வகை செய்தது:—

(a) ஐந்து பேருக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் வைத்திருக்கும் நிலத்திற்கான மொத்த உச்சவரம்பு 1—3—1972 முதல் 40 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 30 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கப்பட்டது.

(b) கால் நடை வளர்ப்புக்காகவும், பாற் பண்ணைக்காகவும் பயன்படுத்தப்படும் நிலங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த விலக்கு 1—3—1972 முதல் திரும்பப் பெறப்பட்டது.



(c) இச்சட்டத்தின் 111ஆம் விவர அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. இதன்படி, நில உடைமையின் அளவு உயர உயர அதற்கான இழப்பீட்டுத் தொகை அளவு குறையும்.

(d) விவரக் கணக்குகள், மறுப்புகள் முதலியவற்றைத் தாக்கல் செய்வதற்காகப் பல்வேறு பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள கால வரையறை 30 நாட்களாகக் குறைக்கப்பட்டது. நிலத்தின் அடைமானதாரர்கள் இழப்பீட்டுத் தொகை பெறுவதற்காக உரிமை கோரிக்கைகள் கொடுத்துக் கொள்ள 51 (1) பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட கால வரம்பு 60 நாட்களாகக் குறைக்கப்பட்டது. சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் தாமதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் இவ்வாறு கால வரம்பு குறைக்கப்பட்டது.

(v) தமிழ் நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் 73 (iii) பிரிவின்கீழ்க் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த விலக்கு தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்தச் சட்ட வரைவின் மூலம், அரசினால் கையகப்படுத்தப்பட்டு நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று வைத்திருக்கும் நிலத்திற்கு மட்டுமே பொருந்தும். இச்சட்ட வரைவிற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

(vi) தமிழ் நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) ஆறாவது திருத்தச் சட்ட வரைவின் மூலம், கீழ்க்காணும் நோக்கங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(a) தற்போதுள்ள ஏற்பாடுகளின்கீழ் இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று அல்லது அந்நாளுக்குப் பின்னர், வரையறுக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மேற்பட்டு நிலம் எதனையும் எவரும் வைத்திருக்கலாகாது. ஆயினும், கொடுத்துள்ள நடைமுறையைப் பின்பற்றி உபரியாக இருக்கும் நிலங்களை மேற்கொள்ள இயலும் வகையில், சட்டத்தின் 18-வது பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிட அரசுக்குச் சிறிது காலம் ஆவதால், சட்டம் செயலுக்கு வரத் தொடங்கிய பின்னரும், உபரி நிலங்களை நில உரிமையாளர் தொடர்ந்து அனுபவித்து வருகிறார். சட்டம் செயலுக்கு வரத் தொடங்கிய நாள் முதற் கொண்டே உபரி நிலங்கள் அரசிடம் நிலைபெற வேண்டுமென்பதற்கும், நில உரிமையாளர் அல்லது நிலத்திலிருந்து பலனை அடைபவர் அந்த உபரி நிலத்தைத் தம்மிடம் வைத்திருந்த காலத்திற்கு நிலத்தைப் பயன்படுத்தி அனுபவித்து வந்தமைக்கு ஈடாக ஒரு தொகையை அரசுக்குச் செலுத்த வேண்டுமென்பதற்கும் திருத்தச் சட்டம் வகை செய்கிறது.

(b) பல நேர்வுகளில், 22-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள கால அளவில் நிலமாற்றம் செய்துள்ள நில உடைமையாளர்கள், அவ்வாறு மாற்றப்பட்டதும், அந்த மாற்றம் செல்திறனற்றதென்று அறிவிக்கப்பட்டதுமான நிலத்தை உபரி நிலமாக அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்கிற தங்கள் விருப்பத்தைத் தங்கள் விவரக் கணக்குகளில் சுட்டிக் காட்டியுள்ளனர். இதனால் நிலச் சொந்தக்காரருக்கு இரு

வகையில் அனுகூலம் ஏற்படுகிறது. அதாவது, கிரயதாரரிடமிருந்து பெறும் பெருமானத் தொகையோடு, அரசிடமிருந்து உபரி நிலத்திற்கான இழப்பீடும் அவர் பெறுவதற்குரியவராகிறார். இவ்வாறு விரும்பாத பலன் நிலச் சொந்தக்காரருக்குப் போய்ச் சேரக்கூடாது என்றும், செல்திறனற்ற தென்று அறிவிக்கப்பட்ட நிலங்கள், நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கியவர் பாதிக்கப்படாத வகையில், நிலம் மாற்றுமுறையானது உச்சவரம்பு நிலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அரசு முடிவு செய்தது.

33. குத்தகை நிவாரணம்.—1966 ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி நிலவியதால், குத்தகை செலுத்த முடியாமற் போனதன் காரணமாக நிலத்திலிருந்து குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுவதை அரசு தடை விதித்தது. 19—4—1968-ல் இத்தடை நீக்கப்பட்டபோது, அரசு, தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு குத்தகைக்காரர்கள் (சிறப்பு வகைமுறைகள்) அவசரச் சட்டத்தைச் சாற்றுரைத்தது. (பின்னர் இந்த அவசரச் சட்டம் ஒரு சட்டமாக மாற்றப்பட்டது). இந்த அவசரச் சட்டத்தின்படி 20—4—1968 வரை நிலுவையாயிருந்த குத்தகைத் தொகைகள் அனைத்தும், நடப் பாண்டில் செலுத்தவேண்டிய தொகைகளுடன் 1—4—1969, 1—4—1970, 1—4—1971, 1—4—1972 ஆகிய நாட்களில் அல்லது அந்த நாட்களுக்கு முன்னர், வட்டியின்றி நான்கு சம ஆண்டுத் தவணைகளில் நிலச் சொந்தக் காரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டும். குத்தகைக்காரர்கள் பலர் இந்த நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்க்கப் பெரிதும் பாடுபட்டனர். இந்த குத்தகைக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லையைக் குறைக்கும் பொருட்டு, 1381ஆம் பசலி ஆண்டுக்கான குத்தகைகளைக் கொடுத்துத் தீர்த்த குத்தகைக்காரர்கள் 1380ஆம் பசலி ஆண்டு (30—6—1971) இறுதிவரை செலுத்த வேண்டிய பழைய நிலுவைத் தொகைகள் அனைத்தையும் கொடுக்க வேண்டாமென்று அரசு முடிவு செய்தது. பின்னர், தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவைகள் (நிவாரணச்) சட்டத்தை அரசு இயற்றியது. முந்திய நிலுவைத் தொகைகளைச் செலுத்த வேண்டிய கட்டுப்பாட்டினின்றும் விடுபடத் தகுதி யுடையவராக வேண்டுமாயின், 1381 ஆம் பசலி ஆண்டுக்குச் செலுத்தப்பட வேண்டிய குத்தகையை அவர்கள் செலுத்த, இச்சட்டம் செயலுக்கு வந்த நாள் முதல் அதாவது 11—8—1972 முதல் ஆறு திங்கள் கால அளவைச் சட்டம் அனுமதித்தது.

34. விவசாயிகளுக்கு நியாய ஊதியங்கள்.—1968 ஆம் ஆண்டில், கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்கள் குறித்து வேளாண்மைத் தொழிலாளர் களிடையே அமைதியின்மை நிலவியது. இது தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்ய, அரசினால் நியமிக்கப்பட்ட குழு செய்த பரிந்துரைகளின்படி, அரசு, தமிழ் நாடு 1969ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம், கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, மாயூரம், சீர்காழி, நாகப்பட்டினம், நன்னிலம் ஆகிய ஆறு வட்டங்களுக்குப் பொருந்தும். இச் சட்டத்தின் செல்திறன் 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு



திங்கள் 4ஆம் நாள் வரை முதற்கண் முடிவு செய்யப்பட்டது. இப்போது இச்சட்டம், தமிழ் நாடு 1972ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் நிலையான சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஊதிய வீதங்களை மாற்றும் அதிகாரங்களையும் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. அரசு, 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாளன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு அந்த ஊதிய வீதங்களைத் திருத்தியமைத்துள்ளது. இச் சட்டத்தின் கீழ் முதற்கண் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய வீதங்களும், அறிவிப்பு வெளியிட்டு அதன் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய வீதங்களும் பின்வருமாறு :—

| | | முதற்கண் நிர்ணயிக்கப்பட்ட வீதங்கள். | திருத்தியமைக்கப் பட்ட வீதங்கள். |
|---|---|---|---|
| ஆண் .. | பயிரிடும் காலத்தில் எல்லா வகைப் பணிகளும். | நாள் ஒன்றுக்கு ரூ. 3 அல்லது ரூ. 1·25 உடன் ஆறு லிட்டர் நெல். | நாள் ஒன்றுக்கு ரூ. 3·70 அல்லது ரூ. 1·50 உடன் ஆறு லிட்டர் நெல். |
| பெண் .. | டிை | நாள் ஒன்றுக்கு ரூ. 1·75 அல்லது 25 காசுடன் ஐந்து லிட்டர் நெல். | நாள் ஒன்றுக்கு ரூ. 2·25 அல்லது 50 காசுடன் ஐந்து லிட்டர் நெல். |
| அறுவடை. | | அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லிற்கும் ஆறு லிட்டர் நெல். | மாற்றம் இல்லை. |

35. பொது நம்பகங்களை நிர்வகித்தல்.—பொது நம்பகங்கள் வைத்திருக்கும் வேளாண்மை நிலங்களைச் சிறந்த முறையில் நிர்வகிக்கவும், பொது நம்பகங்களுக்குச் சொந்தமான வேளாண்மை நிலங்களைப் போலி குத்தகைக்கு விடுவதைத் தடுக்கவும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தில் கீழ்காணும் விதித் துறைகளைச் செய்து 1972 ஆம் ஆண்டு 44-வது சட்ட வரைவினால் மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

(a) சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, பொது நம்பகங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டிராதபோது அல்லது பொது நம்பகங்கள் நேரடி சொந்த சாகுபடியில் உள்ள நிலங்கள் முறையாக நிர்வகிக்கப்படாத போது அல்லது ஒரு பொது நம்பகம் நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருந்து, ஆனால் அந்தக் குத்தகை உண்மையானதாயிராதபோது அந்த நிலங்களை

வகையில் அனுகூலம் ஏற்படுகிறது. அதாவது, ஒப்பந்தாரரிடமிருந்து பெறும் பெறுமானத் தொகையோடு, அரசிடமிருந்து உபரி நிலத்திற்கான இழப்பீடும் அவர் பெறுவதற்குரியவராகிறார். இவ்வாறு விரும்பாத பலன் நிலச் சொந்தக்காரருக்குப் போய்ச் சேரக்கூடாது என்றும், செல் திறனற்றது என்று அறிவிக்கப்பட்ட நிலங்கள், நிலத்தை ஒப்பந்தத்துக்கு வாங்கியவர் பாதிக்கப்படாத வகையில், நிலம் மாற்றுவதற்கு உச்சவரம்பு நிலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அரசு முடிவு செய்தது.



திங்கள் 4-ஆம் நாள் வரை முதற்கண் முடிவு செய்யப்பட்டது. இப்போது இச்சட்டம், தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் நிலையான சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஊதிய வீதங்களை மாற்றும் அதிகாரங்களையும் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. அரசு, 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு அந்த ஊதிய வீதங்களைத் திருத்தியமைத்துள்ளது. இச் சட்டத்தின் கீழ் முதற்கண் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய வீதங்களும், அறிவிப்பு வெளியிட்டு அதன் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய வீதங்களும் பின்வருமாறு :—

| | | முதற்கண் நிர்ணயிக்கப்பட்ட வீதங்கள். | திருத்தியமைக்கப் பட்ட வீதங்கள். |
|---|---|---|---|
| ஆண் .. | பயிரிடும் காலத்தில் எல்லா வகைப் பணிகளும். | நாள் ஒன்றுக்கு ரூ. 3 அல்லது ரூ. 1·25 உடன் ஆறு லிட்டர் நெல். | நாள் ஒன்றுக்கு ரூ. 3·70 அல்லது ரூ. 1·50 உடன் ஆறு லிட்டர் நெல். |
| பெண் .. | ஷை | நாள் ஒன்றுக்கு ரூ. 1·75 அல்லது 25 காசுடன் ஐந்து லிட்டர் நெல். | நாள் ஒன்றுக்கு ரூ. 2·25 அல்லது 50 காசுடன் ஐந்து லிட்டர் நெல். |
| அறுவடை. | | அறுவடை செய்யப் பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல் லிற்கும் ஆறு லிட்டர் நெல். | மாற்றம் இல்லை. |

35. பொது நம்பகங்களை நிர்வகித்தல்.—பொது நம்பகங்கள் வைத்திருக்கும் வேளாண்மை நிலங்களைச் சிறந்த முறையில் நிர்வகிக்கவும், பொது நம்பகங்களுக்குச் சொந்தமான வேளாண்மை நிலங்களைப் போலி குத்தகைக்கு விடுவதைத் தடுக்கவும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தில் கீழ்காணும் விதித் துறைகளைச் செய்து 1972 ஆம் ஆண்டு 44-வது சட்ட வரைவினால் மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

(அ) சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, பொது நம்பகங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டிராதபோது அல்லது பொது நம்பகங்கள் நேரடி சொந்த சாகுபடியில் உள்ள நிலங்கள் முறையாக நிர்வகிக்கப்படாத போது அல்லது ஒரு பொது நம்பகம் நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருந்து, ஆனால் அந்தக் குத்தகை உண்மையானதாயிராதபோது அந்த நிலங்களைப்

பயிரிடு குத்தகைக்காரர்களுக்குப் பொது நம்பகம் சார்பாகத் தாமே குத்தகைக்கு விட அதிகார உரிமை பெற்ற அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்;

(b) பயிரிடும் குத்தகைக்காரரின் நில உச்சவரம்புக்கு அதிகமாக அவர் வைத்திருக்கும் நிலங்களின் உடைமையைப் பயிரிடும் குத்தகைக்காரர் களிடமிருந்து எடுத்துக் கொண்டு, அதனைப் பிற குத்தகைக்காரர்களுக்குக் குத்தகைக்கு விடுவதற்காகப் பொது நம்பகத்திடம் அதனை ஒப்படைக்க அதிகார உரிமை பெற்ற அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும்.

(c) இச் சட்டத்தின் காரியத்திற்காக, பயிரிடும் குத்தகைக்காரராக அல்லது நில உடைமையாளராக அல்லது நில அனுபோகஅடைமானதாரராக ஒருவா, அவரது மனைவி, உரிய வயது வராத மகன், திருமணமாகாத மகள் ஆகியோர் வைத்திருக்கும் மொத்த நிலப்பரப்பு ஐந்து ஸ்டாண் டர்டு ஏக்கருக்கு மேற்படக் கூடாது. அதாவது ஒரு குடும்பத்திலுள்ளோர் அனைவரும் வேறு ஒரு நிலத்தின் உடைமையாளராக அல்லது நில அனுபோக அடைமானதாரராக அவர்கள் வைத்திருக்கும் நிலத்துடன் ஒரு பொது நம்பகத்தின் பயிரிடும் குத்தகைக்காரராக அவர்கள் வைத் திருக்கும் மொத்த நிலப்பரப்பு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற படக் கூடாது.

மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றியுள்ள இந்தச் சட்ட வரைவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

36. ஸ்ரீபாதம் நிலங்களுக்கு வரி விதிப்பு.—மாற்றப்பட்ட பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவாங்கூர் மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமாகவுள்ள 588·39 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் ஸ்ரீபாதம் நிலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நிலங்கள் அடிப்படை நிலவரி விதிப்பினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளன. ஆனால் ராஜபோகம் எனப் படும் சாதகமான வரிவிதிப்பு வீதங்களில் இவற்றிற்கு வரி விதிக்கப்படு கிறது. இந்த வரியினை, அந்த நிலம் வைத்திருப்பவரே செலுத்த வேண் டும். இந்த நிலங்களை வைத்திருப்பவர் ராஜபோகம் செலுத்துவதுடன், ஸ்ரீபாதம் நில உடைமையாளருக்கு ரொக்கமாகக் குத்தகையும் செலுத்துகின்றனர். ஸ்ரீபாதம் குத்தகையை நீக்கிவிட்டு, இந்த நிலங்களை நில அளவை செய்து, நிலவரி விதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்த பின்னர், அந்த நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்குவதென்று அரசு முடிவு செய்தது. இந்த நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கத் தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட வரைவு மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச் சட்ட வரைவிற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

37. நிலவரியில்லா நில உடைமைகளுக்கு வரி விதிப்பு.—சில நிலங் கள் குத்தகை இன்றியோ, சாதகமான குத்தகையுடனோ கைப்பற்றில் உள்ளன. வரியில்லா இந்த நில உடைமைகள் குறித்த இந்தச் சலுகையை நீக்கிவிட்டு அந்த நிலங்களை ரயத்துவாரி வரி விதிப்பு முறையின்கீழ்க்



கொண்டுவருவதென்று அரசு முடிவு செய்தது. இந்த நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கத் தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு வரியில்லா நில உடைமைகள் குறித்து ரயத்துவாரி வரி விதிப்புச் சட்ட வரைவு மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்ட வரை விற்குத் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

38. குத்தகைக்காரர்களுக்கு நிலங்கள் சொந்தமாக்க வேண்டுமென் பது.—குத்தகைக்காரர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக இவ்வரசு படிப்படியாகச் சட்டங்கள் பலவற்றைக் கொண்டுவந்துள்ளது. இதற் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், இந்தக் குத்தகைக்காரர்கள் தாங்கள் பயிரிடும் நிலங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள அவர்களுக்கு உரிமை வழங்கும் வகையில் சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. வறிய சிறு அளவே நிலங்களை வைத்துள்ள நிலச் சொந்தக்காரர்கள் இச் சட்டத்தினால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதும் உறுதி செய்யப்படும். இந்த நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் சட்டம் சட்டமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும். இந்தக் குத்தகைக்காரர்கள் தாங்கள் பயிரிடும் நிலங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள உதவி செய்யும் பொருட்டு குத்தகைக்காரர் நிதியுதவிக் கழகம் (Tenants Financing Corporation) ஒன்றை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### வியாழக்கிழமை, 1973 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Film Studio in the Institute of Film Technology.*

*371 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether there is any proposal to expand the Film Studio in the Institute of Film Technology, Adyar ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) அது குறித்து அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் இன்னும் ஒரு 'ஃப்ளோர்' கட்டப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு ஃப்ளோர் கட்டினால் மட்டும் போதாது. சிறு சிறு படத் தயாரிப்பாளர்கள் இரண்டு ஃப்ளோர்கள் அங்கே இருந்தால் அங்கே வந்து படம் பிடிக்க வசதியாக இருக்கும். அதன்மூலம் அங்கே பயிலுகின்ற மாணவர்களுக்கும் ப்ராக்டிகல் எக்ஸ்பீரியன்ஸ் ஏற்பட வழிவகை இருக்கும். ஆகவே, அங்கே இன்னும் மூன்று ஃப்ளோர்கள் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அங்குள்ள படம் எடுக்கும் அரங்கம் வெளியார்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தாலும், மாணவர்கள் அதைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற காரணத்திற்காக வெளியார்களுக்குக் கொடுக்கப்படுவது தடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இன்னொரு ஃப்ளோர்-படம் எடுக்கும் அரங்கம்—

---

@477-ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## இணைப்பு II

[289-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாடு மாநிலத்தில் ஆயத்தீர்வை மதுவிலக்கு சட்டங்களின் நிர்வாகம் செயல்படுத்தல் குறித்த 1972–73-ஆம் ஆண்டிற்கான ஆய்வுரை:

1. முன்னுரை:—

மதுவிலக்குக் கொள்கையில் நாம் ஆழ்ந்த நம்பிக்கை
கொண்டிருந்த போதிலும், நமது மாநிலம் மதுவிலக்குக்
கொள்கையைப் பின்பற்ருத மாநிலங்களால் சூழப்பட்டிருப்ப
தால் மதுவிலக்கினை நமது மாநிலத்தில் செயற்படுத்துவது
ஏலாததாகி விட்டது. இது போன்ற உண்மைகளை ஆழச்
சிந்தனை செய்ததன் விளைவாக, அரசு 1971 ஆகஸ்டு 30-
லிருந்து மது விலக்கினை ஒத்தி வைப்பது என்ற கொள்
கையை உருவாக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. எனினும்,
இந்திய அரசியல் அமைப்பின் பொது பட்டியலின் 19-ம்
பதிவின் செயற்வரம்பிற்குள் வருகிற போதையூட்டும்
மருந்துகள் பட்டியலைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு
1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் தொடர்ந்து செயலில்
உள்ளது. போதையூட்டும் மருந்துப் பொருட்களுக்கும்
பொருந்துகிற அடங்கல் சட்டமொன்றை இயற்ற நாம் விரும்
பினேம். ஆனல், அது இயலவில்லை. தமிழ்நாடு மது
விலக்குச் சட்டம், அரசியலமைப்பின் பொதுப் பட்டியலி
லுள்ள இனங்களுக்குச் சம்பந்தப்படுகிற வரையில் மத்திய
அரசு அச்சட்டம் ரத்து செய்யப்படுவதை ஒப்புக் கொள்ள
மறுத்து விட்டது. சட்ட மன்றப் பேரவையில் பிப்ரவரி 3-ஆம்
நாள் இராஜாஜி அவர்கட்கு அஞ்சலி செலுத்துகையில்,
மாண்புமிகு முதலமைச்சர் குறிப்பிட்டது போல், மதுவிலக்
கினைச் செயல் படுத்துவதில் அனைத்திந்திய அடிப்படையில்
மத்திய அரசு அணுகினல், மதுவிலக்கை மீண்டும் கொண்டு
வருவதில் நமது மாநிலமே முன்னணியில் நிற்கும்.

ஆயத்தீர்வைச் சட்டத்தைச் செயல்படுத்துவது:—

தமிழ்நாட்டில் போதையூட்டும் மதுவினை உற்பத்தி
செய்தல், தயாரித்தல், கைவசம் வைத்திருத்தல், இறக்குமதி
செய்தல், ஓரிடத்திலிருந்து மற்ரேரிடத்திற்கு அனுப்புதல்,
வாங்குதல், விற்றல் ஆகியவற்றைக் குறித்து முறைப்படுத்த
விழையும் தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டம்,
1972-ம் ஆண்டு 26-ஆம் எண் திருத்தச் சட்டத்தினல்
சில மாறுதல்களைப் பெற்றது; அந்த மாறுதல்களா
வன :—(1) சில குற்றங்களைப் பொறுத்த வரையில் தண்
டனையை உயர்த்தி 3 திங்களுக்குக் குறையாமல் குறைந்த



அளவு சிறைத் தண்டனை விதித்தல்; ரூ. 500-க்குக் குறை
யாத அபராதத் தொகை விதித்தல்; (2) சில குற்றங்களைச்
செய்தவர்களைப் பிணையத்தில் விடுவிக்க இயலாதவாறு செய்
தல்; (3) தொடர்ந்து குற்றம் புரிபவர்களிடமிருந்து பிணைப்
பத்திரங்களைப் பெறுதல் என்பவை போன்ற மாறுதல்களா
கும். ஆயத் தீர்வை வருவாயில் நமக்கு இழப்பு விளைவிக்கும்
சில ஒழுங்கீனங்கள் ஆயத்தீர்வைச் சட்ட நிர்வாகத்தில்
காணப்படுவதால், அவற்றை ஒடுக்கும் நோக்கத்தில் இம்
மாறுதல்கள் தேவையென்று கருதப்பட்டன.

2. சாராய—கள்ளுக்கடை ஏலங்கள்:—

கடைகளில் கள்ளையும் சாராயத்தையும் விற்பனை செய்
யும் உரிமை குத்தகையாண்டு 1972–73-ற்கும் (அதாவது,
1–9–1972 முதல் 31–8–1973 வரை) தொடர்ந்து ஏல
ஏற்பாட்டின் மூலம் முறைப்படுத்தப்படுகிறது. ஏலங்
களில் மிகுந்த ஆர்வம் காணப்பட்டது. நடப்புக் குத்
தகைக் காலத்தில் இக்கடைகளின் முக்கியமான சிறப்புத்
தன்மை, அவை ஒவ்வொன்றும் கிளைக் கடையொன்றைத்
திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகும். இது கிளைக்
கடைக்கும், அருகிலுள்ள தலைமைக் கடைக்கும் இடையி
லுள்ள தொலைவு 1·6 கிலோ மீட்டருக்குக் குறையாதிருக்க
வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும். சாராயம்,
கள் வழங்கும் ஏற்பாட்டில் ஒழுங்கீனங்கள் ஏற்படுவதைக்
குறைக்கும் நடவடிக்கையாக, சாராயம் உற்பத்தி செய்யும்
வடிசாலைகள்/சாராயக் கலவைச் சாலைகள் 1–9–1972 முதல்
தனிப்பட்ட மொத்த விற்பனையாளர்கள் மூலமாக வழங்கு
வதற்குப் பதிலாக, தத்தம் பகுதிகளில் மொத்த விற்பனைக்
கிடங்குகளைத் திறந்து, அவற்றின் மூலம் அப்பகுதிகளிலுள்ள
சில்லறைக் கடைக்காரர்களுக்கு சாராயம் வழங்கும்
பொறுப்பு அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாராயம் தயாரித்து வரும் ஏற்கெனவேயுள்ள இரண்டு
வடிசாலைகளைத் தவிர, தென்ஞர்க்காடு மாவட்டத்தில் அண்
மையில் தொடங்கப்பட்ட வடிசாலையும், ஈரோட்டிலுள்ள
சாராயக் கலவைத் தொழிற்சாலையும் சாராயம் வழங்குவதை
மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. தேவையைப்
பூர்த்தி செய்ய நாள்தோறும் சாராயம் வழங்கப்படும்
அளவு உயர்த்தப்பட்டு, 1·25 லட்சம் லிட்டராக வரை
யறுக்கப்பட்டுள்ளது. சில்லறைக் கடை ஒவ்வொன்றிற்கும்
வழங்கப்படவிருக்கும் சாராயத்தின் அளவு 1972–73 குத்
தகை ஆண்டிற்காக அதனிடமிருந்து பெறப்பட்ட ஏலக்குத்
தகைத் தொகையை வைத்து முடிவு செய்யப்படும்.

கட்ட முயற்சி இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது தொடங்கிய பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை நாம் நிறைவேற்றலாம். ஏனென்றால், இப்பொழுது வேறு திரைப்படம் எடுக்கும் அரங்குகளில் கூட வாடகை அதிகமாகக் கேட்கிற நிலைமை இருப்பதாக ஒரு பிரச்சினை இருந்துவருகிறது. ஆகவே, நாம் அதிகமாகக் கட்டுகிற படம் எடுக்கும் ஃப்ளோர்களின் மூலமாக வருகின்ற வருவாயைக் கொண்டு இந்தக் கல்லூரியைச் செம்மையாக நடத்த முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவர அறிக்கையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 11,85,000 ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஸ்டுடியோவை விரிவுபடுத்துவதற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், பூனாவில் இருக்கக்கூடிய ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் மாதிரி இங்கே நடிகர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறதா ? அப்படியானால் அதிலிருந்து சிறப்பாக நடிப்பவர்களைக்கொண்டு 'தோ ரகா' படம் எடுத்ததைப்போல், இங்கேயும் அப்படிப்பட்ட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சினிமாத் துறைக் கருவிகள் வாங்குவதற்காக, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போல், ரூ. 11,85,000 ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கப்பட்ட தொகையில் இதுவரையில் ரூ. 3 இலட்சம் செலவிட்டு கருவிகள் வாங்கப்பட்டு விட்டன, ரூ. 8 இலட்சத்திற்கு மற்ற கருவிகளை வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தேவையான அன்னியச் செலாவணி ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். அதுகூட 1973-74-ம் ஆண்டில் வாங்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பூனாவில் உள்ளதுபோன்று இங்கும் நடிப்புக் கல்லூரியில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்று திரு தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். பூனாவுக்குச் செய்தித் துறையினுடைய இயக்குநர் அவர்கள் சென்று பார்த்து, அதைப்போல இங்கேயும் அந்தப் பயிற்சி நடைபெறவேண்டும் என்பதற்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுபோலவே இங்கும் நடிப்புத் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அப்படி நல்ல நடிப்புத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் வரும் நேரத்தில் இங்கும் ஒரு 'தோ ரகா' பார்க்கலாம்.

திரு. கு. காமாட்சி : இப்போதெல்லாம் கலர்ப் படங்களை மக்கள் அதிகமாக விரும்பிப் பார்க்கிறார்கள். ஆகவே, உருவாகும் லாபரட்டரியில் கலர்ப் படங்களைக் கழுவுவதற்கும், தயாரிப்பதற்குமான சாதனங்கள் பொருத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலில் ப்ளாக் அண்டு ஒயிட் படங்களுக்கான லாபரட்டரி தயாரானாலும், தொடர்ந்து விரைவில் கலர்ப் படங்களும் அங்கே தயாரிப்பதற்கு வசதியாக அதை ஆக்குவதற்கும் ஒரு முயற்சி இருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, அரசுத் துறையில் சினிமாப் படங்களைத் தயாரிப்பதற்கு நம்முடைய அரசு உத்தேசித்திருக்கிறதா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; இப்பொழுது தயாரிக்கப்படுகிற செய்திப் படங்களன்னியில் தொடர்ந்து சில கருத்துப் படங்களும் இப்பொழுது எடுக்கப்படுகின்றன. குடும்ப நலத் திட்டம், சுகாதாரத் திட்டம், இன்னும் இதுபோன்ற சமுதாயத்திற்குத் தேவையான சில அறிவுரைகள் கூறும் படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. முழு நீளப் படம் எடுப்பதாக இப்பொழுது எதும் பரிசீலனையில் செயற்குறிப்பில் இல்லை.

திரு. செ. கந்தப்பன் : பூனாவில் இருக்கிற படத் தயாரிப்பு நிறுவனம் முழுக்க முழுக்க மத்திய அரசினுடைய பொருளாதார உதவியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இயல்பாகவே அதில் இந்தி மொழி வாயிலாக யாவும் கற்பிக்கப் படுகின்றன. அதனால், தென்னவர்கள் அதிலே சேர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இங்கு இருக்கும் படத் தயாரிப்பு நிறுவனத்திற்கும் மத்திய அரசு பெருமளவுக்கு மானியம் அளிக்க வேண்டும் என்று நமது அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது மத்திய அரசினுடைய மானியம் எவ்வளவு என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையும் பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : அடையாற்றிலுள்ள இந்த அரங்கத்தினை சினிமாத் தொழில் அதிகமாக நடைபெறும், அதிகமான ஸ்டூடியோக்கள் இருக்கும் கோடம்பாக்கம் பகுதிக்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. கே. எ வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் திரைப் படத் தொழில் கல்லூரியில் இப்பொழுது பயிற்சி பெற்று வருகிற மாணவர்களுக்கு எதிர் காலத்தில் நடிப்பதற்குப் போதிய வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு என்ன என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன ? அல்லது, தனிப்பட்டவர்கள் ஸ்டூடியோக்களில் அவர்களுக்கு வாய்ப்பு வாங்கித்தர அரசு முயற்சிக்குமா ? அப்படி இல்லாத நேரத்தில் அவர்களை வைத்து அரசாங்கமே படம் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கல்லூரியில் பயிற்சி பெறுகிற தொழில் நுட்ப வல்லுநர்கள், நடிகர்கள் இவர்களெல்லாம் வேறு தனியார்த் துறையில் எடுக்கப்படுகிற படங்களிலும் நிறுவனங்களிலும் இப்போதே பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : இந்த சினிமாத் தொழிற் கல்லூரியில் என்ன என்ன பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன ? நடிகர்களுக்கு மேலை நாட்டு நாகரிகங்கள் போன்று நடிக்கச் சொல்லிக் கொடுக்கப்படுகிறதா ? அல்லது, சில காட்சிகளில் கண்ணோடு கண் நோக்கின் வாய்ச் சொல்லில் என்ன பயன் என்ற அடிப்படையில் நம்முடைய நாட்டு நாகரிகத்திற்கேற்றாற்போல் அங்கே சொல்லிக் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கே எப்படி அந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதை இது வரையில் நேரில் நான் காணவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பிய பிறகு வேண்டுமானால், எப்படி அந்தப் பயிற்சிகள் அங்கு கற்றுத் தரப்படுகின்றன என்பதை அறிந்து, அடுத்து ஒரு முறை தனிக் கேள்வி அக்கறை இருந்து கேட்பாரானால் நான் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எ. எம். இராஜா : வருங்காலத்தில் டெலிவிஷன் பில்ம்தான் இந்த நாட்டில் அதிகமாக வர இருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சி களை மத்திய சர்க்காரும் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய பிலிம் இன்ஸ்டிட்யூட்டிலும் டெலிவிஷன் பில்ம் எடுப்பதற்கும், டெலி விஷன் பில்ம்களைப் போட்டுக் காட்டுவதற்குமான கருவிகளும் அதற்கு வேண்டிய அரங்கங்களையும் தற்போது கட்டவிருக்கிற அரங்கத்திலேயே இதையும் கட்டுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டெலிவிஷன் இங்கே வருவ தற்கு இன்னும் நீண்ட நாட்கள் ஆகும். ஏனென்றால், டெலிவிஷன் வந்து விட்டால்கூட, டெலிவிஷன் மூலம் படத்தைப் பார்த்தால் திரைப்படங்கள் பார்க்கத் தேவையில்லை என்ற எண்ணம் வெளிநாடுகளில் வந்திருப்பதைப் போல் நம் நாட்டுக்கு வருவதற்குச் சற்றுத் தாமதம் ஆகும் என்று கருது கிறேன். ஆனால், இப்போதே இந்தப் பட அரங்கினை நிர்மாணிக்கிற நேரத் திலேயே டெலிவிஷன் படங்களையும் எடுப்பதற்கு ஏற்ற வகையில் அமைப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

திரு. மே. சி. தாயமணி : அடையாறில் உள்ள திரைப்படத் தொழில் நுட்ப கல்லூரியில் இருக்கும் திரைப்படப் பிரிவை பயன்படுத்தி படம் எடுப்பவர்கள் தனியார் யாராவது திரைப்படம் எடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனியார் சென்ற ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும் அங்கே திரைப்படங்கள் எடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : இந்தக் கல்லூரியில் நடிப்பிற்காக நியமிக்கப் பட்டிருக்கிற ஆசிரியர்கள் சினிமா புகழ் பெற்ற நடிகர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்பமிகு டாக்டர் மு. கருணாநிதி : இனிமேல் திரைப்படத்தில் புகழ் பெறுவார்கள்.

திரு. க. நாகராஜன் : இந்தக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அறுபது வயதுக்கு மேல் நடிக்க மாட்டேன் என்று உறுதி மொழி கொடுத்தால் அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த வகையிலும் பொருத்த மான பாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கு எந்தத் தடையும் இடையாது.



திரு. வை. பாலசுந்தரம் : இந்தக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப் படுகிற மாணவர்கள் எந்தெந்தத் தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் ? இதற்கு ஏதாவது வயது வரம்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரைப்பட அரங்கத்தினை விரிவு படுத்துவது என்பது மூலக் கேள்வி. இந்தத் துணைக் கேள்விகள் எல்லாம் அதைவிட்டு அதிகம் விலகிச் சென்றுவிட்ட காரணத்தினால் தனிக் கேள்வி போட்டால் இவைகளுக்கு பதில் அளிக்க முடியும்.

## கூட்டுறவுத் துறையில் திரைப்படமெடுப்பு அரங்கம்.

*372 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு முறையில் திரைப்பட ஸ்டூடியோ அமைக்க நமது மாநிலத்தில் யாரேனும் தற்போது முன் வந்துள்ளனரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. கு. காமாட்சி : அப்படி யாராவது முன் வந்தால் அரசு கடன் உதவி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது நம்முடைய தென் இந்தியாவிலே மாத்திரம் 32 ஸ்டூடியோக்கள் இருக்கின்றன. அதில் 22 ஸ்டூடியோக்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. ஆகவே, மேலும் அதிகப் படியான ஸ்டூடியோக்களை கட்ட வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

## *Tamil Pandits in Schools.*

*373 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a few Government High Schools and Secondary Schools in the State are not provided with sufficient number of Tamil Pandits ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட உயர் துவக்கப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் தமிழ் ஆசிரியர்களை நியமித்தால் சிறப்பாக தமிழ் பயிற்சி அளிக்க இயலும். அதே போல் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்தால் சிறப்பாக உடற் பயிற்சி அளிக்க இயலும். எனவே இப்படி உயர் துவக்கப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் களையும் உடற் பயிற்சி ஆசிரியர்களையும் நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. க. சுப்பு : தமிழ் ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கிற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடியதன் அடிப்படையில் தலைமை ஆசிரியர் தகுதி பெறுவதற்குரிய துறைத் தேர்வுகள் எழுதி வெற்றி பெற தமிழ் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைமை ஆசிரியர்களாக ஆக்குவதற்கு எந்தத் தகுதியை நிர்ணயிப்பது, எந்தத் தகுதியின் அடிப்படையில் வைப்பது என்பதைப் பற்றி இப்போது அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அப்படி ஆராய்ந்து முடிவு எடுத்த தற்குப் பிறகு அதில் எப்படி நியமிப்பது என்பது பற்றி நடைமுறைப் படுத்த வேண்டிவரும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Not only Tamil Pandits, in Hosur and Denkanikota taluks in many high schools even Telugu Pandits have not been appointed. May I know from the Hon. Minister whether he will give his attention to this ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்வித் துறை அதிகாரி களிடத்தில், அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கச் சொல்லலாம்.

## பள்ளி, கல்லூரிகளில் ஆங்கில கல்வித்தரம்.

*374 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளி, கல்லூரிகளில் ஆங்கில கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) இதற்கான திட்டங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன.



திரு ஆ. பரந்தாமன் : பொதுவாகவே, பழைய எஸ். எஸ். எல். ஸிக் களைப் பார்த்து அவர்கள் இப்போது இருக்கிற எம். ஏ.க்களுக்குச் சமம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. அதற்குக் காரணம் ஆங்கிலக் கல்வித் தரம் குறைந்திருப்பதுதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்பெல்லாம் ஆறாவது வகுப்பிலிருந்து தமிழ்ப் பாடம் ஒன்றைத் தவிர மற்ற எல்லாப் பாடங் களும் ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்பட்டு வந்த நிலையில் எஸ். எஸ். எல். ஸி. வரை எல்லாத் துறைகளிலும், எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்பட்டு வந்த காரணத்தினால் ஆங்கிலத்தில் அவர்கள் கொஞ்சம் வல்லவர்களாக இருந்தார்கள். இப்போது ஆங்கில மொழி ஒன்றைத் தவிர எல்லாப் பாடங்களும் தமிழில் சொல்லிக் கொடுக் கப்படுவதால் முன்பு எஸ். எஸ். எல். சி. படித்தவர்களிடம் எதிர்பார் கப்படுகிற ஆங்கில அறிவை இப்போது இவர்களிடம் எதிர்பார்ப்பதற்கில்லை. முன்பு ஆங்கிலத்தில் பயின்றவர்களிடம் இப்போது உள்ளதைப்போல் தமிழ் அறிவை எதிர்பார்க்க முடியாது இப்போது படிப்பவர்களிடம் தமிழ் அறிவை தெளிவாகவும் திட்பமாகவும் எதிர்பார்க்கலாம்.

திரு என். கே. பழனிசாமி : கல்லூரிகளில் முன்பெல்லாம் ஷேக்ஸ் பியரில் இரண்டு ப்ளேஸ் படிக்கவேண்டும். ஆனால் அது போய் இப்போது ஒரு ப்ளேதான் படிக்கிறார்கள். கீழ் மட்டத்தில் மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதாக சர்க்கார் திட்டம் இருக்கிறது. மூன்றாவது வகுப்பு படிக்கும் பையன் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள ஆறாவது வரை படிக்க வேண்டும். இப்படி முன்னுக் குப் பின் முரணாக இருக்கிறது. மேலே போகப் போக ஆங்கில லிட்டரேச்சர் அதிகம் படிக்கக் கூடிய நிலை இல்லை. எனவே இதை மாற்றியமைக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளில் பாடத் திட்டங்கள் வகுப்பது பல்கலைக்கழகங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அரசு அதில் தலையிடுவதற்கில்லை. எந்தெந்தப் பாடங்கள் வைப்பது என்பதைப்பற்றி பல்கலைக்கழகங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஆங்கிலத்தில் பயிற்சி அளிக்க, அதிகமாக அளிக்க பல்வேறு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1967-ம் ஆண்டில் 6, 7, 8 வகுப்பு களில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளிப்பதற்காக, 4 வார கால பயிற்சி வகுப்பு நடத்தும் 4 மையங்கள் முறையே கடலூர், கோவை, தஞ்சை, நெல்லை ஆகிய இடங்களில் ஏற் படுத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகளில் 1967-ம் ஆண்டிலிருந்து 1971-72 முடிய உள்ள ஐந்தாண்டுகளில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 5,204. நடப்பாண்டிலும் பயிற்சி வகுப்புகள் 4 மையங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு இந்த ஆண்டு 1,800 ஆசிரியர்கள் பயிற்சி பெறுவர். 3, 4, 5 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் நவீன உத்திகளில் பயிற்சியளிப்பதற்காகவும், மேற்படி வகுப்புகளுக்கு வேண்டிய துணைக் கருவிகள் தயாரிப்பதற்காகவும் 15 கருத்தரங்கு பண்ணைகளை நடத்த அரசு அனுமதி அளித்தது. இதன்படி 675 ஆசிரியர்கள் பயன் பெற்றனர். பல்வேறு கருத்தரங்குகள் நடத் தப்பட்டு ஆங்கிலப் பயிற்சியை மேலும் வலுப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : பல தனியார் பள்ளிகளில் ஆங்கில மீடியம் என்று வைத்து பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். தங்கள் குழந்தைகள் ஆங்கிலத்தில் படிக்க வேண்டுமென்று அப்பள்ளிகளுக்கு அனுப்பும் போது அப்பள்ளிக் கூடங்களில் மாணவர்களிடமிருந்து அதிகக் கட்டணம் வாங்குகிறார்கள். ஆகவே, தனியார் நடத்தக் கூடிய ஆங்கில மீடியம் பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு இவற்றிற்கு இவ்வளவுதான் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குரிய விதிமுறைகள் என்ன என்ற விவரக்குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. மே. சி. தாயமணி : அரசு ஒப்புதல் பெறாத குழு ஒன்று தமிழ்நாடு பள்ளிகளின் தரத்தைப் பற்றி ஒரு தவறான கருத்தை பரப்பியது அரசுக்குத் தெரியுமா ? அந்தத் தவறான கருத்தைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திட்டக் குழுவினர் அதுபற்றி ஒரு குழுவிடம் அறிக்கை கேட்டார்கள். திட்டக் குழுவினர் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நம்மாநிலத்தில் இரு மொழி கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலத்திற்கு ஊக்கம் அளிக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையில் மாணவ சமுதாயத்தினரிடத்தில் அவர்கள் சரியாக ஆங்கிலம் எழுதவும் பேசவும், பழக்கம் ஏற்படும் வகையில் அவ்வப்போது பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் இவைகளை அரசு ஏற்படுத்தி தேர்வு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சிகள் ஒவ்வொரு பள்ளியிலும் இப்போதே இருந்து வருகிறது. எல்லாப் பள்ளிகளிலும் அதற்கான ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகிறார்கள். இறுதி வகுப்பு படித்து தேறி வருகிற மாணவர்கள் பேசவும், எழுதவும், புரிந்துகொள்ளவும், ஆற்றல் பெறவும், அதே போல் தமிழில் எழுதவும், பேசவும், புரிந்து கொள்ளவும் ஆற்றல் பெற வேண்டுமென்ற நோக்கோடு அதற்கேற்றபடி பாடத் திட்டங்கள் எல்லாம் அமைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பாடத் திட்டங்கள் இப்போது வகுக்கப்பட்டிருக்கின்றன. தக்க ஆங்கிலப் பயிற்சி பெறவும் பாடத் திட்டங்கள் எல்லாம் வகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. இப்போது புதிய முறையில் பாடத்திட்டங்கள் எல்லாம் மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன.

புலவர் சி. பழனிச்சாமி : உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற பி.ஏ., பி.டி. ஆசிரியர்கள், பீ. எஸ்ஸி., பி.டி. ஆசிரியர்கள்தான் மாணவர்களுக்கு ஆங்கிலத்தையும் கற்றுத் தருகிறார்கள். ஆனால் அவர்கள் தமிழ் ஆசிரியர்களைப் போல் சிறப்பு மொழி அறிவு பெற்றவர்கள் அல்ல. ஆகவே உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலப் பாடம் கற்றுக்



கொடுப்பதற்காக ஆங்கில இலக்கியம் கற்ற, லிட்டரேச்சர் பாடம் கற்றவர்களை பி.ஏ., பி.டி., ஆசிரியர்களாக நியமிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரியில் பயிற்றுவிப்பதற்கே போதுமான அளவிற்கு ஆங்கில மொழியில் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் அல்லது ஆசிரியப் பெருமக்கள் கிடைப்பதில்லை. அங்கேயே பொருளாதாரம், வரலாறு படித்த மேல் பட்டதாரிகளை வைத்து தான் ஆங்கிலம் கற்பிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே எம்.ஏ., வகுப்பில் ஆங்கிலம் எடுத்துப் படிப்பவர்களுக்கு மாதம் ரூ. 100 இன்ஸெண்டிவாகக் கொடுத்து—சிறப்பூதியமாகக் கொடுத்து—படிக்கவைத்தாலும் கூட போதுமான அளவு ஆங்கில ஆசிரியர்கள் கல்லூரிகளுக்கே கிடைக்காத நிலையில் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கிடைப்பது என்பது அரிது.

திரு. கே. ஏ. வகாப் : ஆங்கிலம் உலக மொழியாக, விஞ்ஞான வளர்ச்சியை அறிந்து கொள்ளுவதற்கு ஏற்ற மொழியாக இருப்பதால் அதிலே மாணவர்கள் நல்ல அறிவு பெற்று வளர்ச்சியுற அரசாங்கம் அக்கறை செலுத்தி வருகிறதா ? ஐ.ஏ.எஸ். பரிட்சைகளில் எல்லாம் கான்வெண்டில் படித்து வெளி வந்தவர்கள் அதிக வாய்ப்புப் பெறும் அளவுக்கு இருக்கிறது. ஆகவே, நம்முடைய பள்ளிகளின் தரத்தையும் கான்வெண்ட் பள்ளிகளின் தரத்திற்கு உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் பள்ளிகளில் ஆங்கில அறிவைப் போதிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஐ.ஏ.எஸ். பரிட்சை எழுதி வெற்றி பெறுவதற்கேற்றவாறு பயிற்சி தர பிற்பட்ட மாணவர்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகவும் தனிப் பயிற்சி நிறுவனம் அமைக்கப் பெற்று அதன்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : மாணவர்கள் ஆங்கிலத்தின் தரத்தில் உயர்ந்து நிற்பதற்கு முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்றுத் தரும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இவற்றை எல்லாம் கல்வி வல்லுநர்கள் முடிவு கட்டுகிறார்கள். இப்போது மூன்றாவது வகுப்பில் இருந்து கட்டாயமாக ஆங்கிலப் பயிற்சி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கு. காமாட்சி : ஆங்கில அறிவு நல்ல முறையில் பெருகவும் கல்வியினுடைய தரம் உயரவும் நம் நாட்டில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் கிண்டர் கார்டன்—பாலர் பள்ளிகள் அமைத்து ஐந்து வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கு மூன்று, நான்கு வயதுக் குழந்தைகளுக்கு நல்லபடி போதிக்க அரசு செயற்குறிப்பு வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சியில் அரசு ஈடுபடுவதில்லை. தனிப்பட்டவர்கள் பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டு அப்படிப்பட்ட பள்ளிகளைத் திறந்து நடத்தி வருகிறார்கள்.

## மன்னியாற்றின் குறுக்கே பாலம்.

* 375 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலூகாவில் கடலங்குடி, பூதங்குடி, ஆகிய கிராமங்களை இணைக்க, மன்னியாற்றுக்குக் குறுக்கே foot bridge ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. எஸ். வடிவேல் : மாயூரம் தாலூகாவுக்கும் சீர்காழி தாலூகாவுக்கும் இணைப்பாக உள்ள இடம் இந்த மன்னியாற்றுப் பாலம். அந்தப் பாலம் இருந்தால் அரை மணியில் செல்லலாம். இப்போது ஒன்றரை மணி ஆகிறது சுற்றிப் போவதற்கு. ஆகவே, துரிதமாக அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கடலங்குடி பூதங்குடி கிராமங்களை இணைக்க திருப்பனந்தாள் என்ற ஊரின் தெற்குச் சாலையில் பூதங்குடி என்று ஊரிலே ஓடுகின்ற மன்னியாற்றில் தரைப் பாலம் கட்ட தோராயமாக 30,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. 40,000 ரூபாய்க்கு உட்பட்டு இருக்கும் காரணத்தால் இந்தப் பணியை ஊராட்சி ஒன்றியந்தான் செய்ய வேண்டும் என்று பொதுப் பணித் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி அரசினுடைய பரிசீலனைக்கு எதும் செயற்குறிப்பு வரவில்லை.

திரு. எஸ். வடிவேல் : ஊராட்சி ஒன்றியமே இதைத் கட்ட வேண்டுமென்றால் கையில் பணம் இல்லையென்று சொல்லுகிறார்கள். இதனால் ஜனங்களின் போக்குவரத்துக்குத்தான் தடையாக இருக்கிறது. ஆகவே, அரசு எப்படியாவது நடவடிக்கை எடுத்து அந்தப் பாலத்தைக் கட்டித்தர முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியம் செய்கின்ற பணிகளில் இதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வட்டார வளர்ச்சிக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வேண்டுமானால் சொல்லலாம்.

## வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள்.

* 376 வினா.—திரு கே. எ. வகாப்):<br>திரு. என். கிட்டப்பா) : } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காட்டில் உள்ள பீடித் தொழிலாளர் குறைகளை கவனிக்க குழு எதும் நிறுவப்பட்டுள்ளதா ?

(இ) ஆம், எனில், அதில் அங்கம் வகிப்பவர் யார், யார் ?



மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் பரிசீலிக்க குழு எதும் நியமிக்கவில்லை. என்றாலும் பீடித் தொழில் மற்றும் உணவகங்கள், தோல் பதனிடுதல், திரைப்படத் தொழில் மற்றும் சில முறையான அடிப்படையில் தொழிற்சங்கம் அமையாத தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளைப் பரிசீலனை செய்ய பொதுக்குழு ஒன்றை 1—2—1973-ல் அரசு நியமித்துள்ளது.

(இ) அதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கின்றனர் :

தலைவர் :

தொழிலாளர் துறை ஆணையாளர், சென்னை.

அங்கத்தினர்கள் :

1. திரு. கே. சுப்பு, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், துரைசாமிபுரம், ராசபாளையம்.

2. திருமதி. டி. என். அனந்தநாயகி, எம். எல். எ., சென்னை.

3. திரு. எம். வி. நாராயணசாமி, எம். எல். எ., சென்னை.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

4. திரு. வி. கண்ணன், பொதுச் செயலாளர், வட ஆர்க்காடு பீடித் தொழிலாளர் சங்கம்.

5. திரு. தொழிலன் (வைரவன்), தமிழ்நாடு பொதுப்பணித்துறை, வேலை நிதி ஊதிய பணியாளர் சங்கம், திருநெல்வேலி.

6. திரு. எம். எஸ். சிவசாமி, எம். பி., தூத்துக்குடி.

7. செயலாளர், தீப்பெட்டி தொழிலாளர் சங்கம், சிவகாசி.

8. திரு. வி. நடராஜன், தலைவர், விஸ்வகர்மா தொழிலாளர் சங்கம், கடலூர்.

9. திரு. வி. பாலகிருஷ்ணன், மதுரை கைத்தறித் தொழிலாளர் சங்கம்.

வேலை தருவோர் பிரதிநிதிகள் :

10. திரு. மொகமட் யாகூப், தலைவர், சென்னை மாகாண பீடித் தொழிலதிபர்கள் சங்கம், சென்னை.

11. திரு. எம். நீலகண்டன், சென்னை-18.

12. திரு. எஸ். எஸ். பி. ரங்கசாமி நாடார், தூத்துக்குடி உப்பு உற்பத்தியாளர்-விற்பனையாளர் சங்கம்.

13. திரு. என். சோமசுந்தரம், தென்னிந்திய சுதேசி தீப்பெட்டி தொழிலாளர் சங்கம், சாத்தூர்.

14. திரு. ஹரீந்த்ர எம். மேத்தா, தமிழ்நாடு வெள்ளி, வைரம் நகை வியாபாரிகள் சம்மேளனம், சென்னை.

15. திரு. ஈ. எ. ஆர். மாரியப்பன், அம்மாபேட்டை கைத்தறி நெசவுத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி-விற்பனை சங்கம், சேலம்.

திரு. கே. எ. வகாப்: பீடித் தொழிலாளர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கும் காரணத்தால் அவர்களுக்கென்று தனிக் குழு அமைக்க அரசு முன்வருமா? அந்தப் பீடித் தொழிலாளர்கள் விஷயமாக வழக்கு ஒன்று இருப்பதாக சொல்லப்படுகிறது. அதையும் காம்ப்ரமைஸ் செய்ய குழுவை ஏற்படுத்தி வழக்கை வாபஸ் பெற அரசாங்கம் முயற் சித்து தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு போன்ற வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி ஏற்கெனவே ஒரு குழு அமைக்கப்பட்டிருக் கிறது. அதிலே அங்கம் வகிப்பவர்கள் —

*Chairman—*

Deputy Commissioner of Labour, Madras.

*Independent Member—*

Assistant Director of Statistics (Marketing and Intelligence).

*Employers' representatives.—*

1. V. J. Abdul Kareem, Partner, Goat Mark Beedi, Vellore.
2. M.I. Yacoob, Proprietor, Rustum Beedi, Madras.
3. Mr. Amrudeen, Managing Partner, Hateen Beedi, Tiruchirappalli.
4. T.P. R. C. Kannan, Chain Mark Cigar, Tiruchirappalli.
5. Manager, T. P. Chockalal Ram Sait Beedi, Mukkudal.



*Employees representatives—*

1. Aladi Aruna, M.L.A.
2. M. P. Sarathy, M.L.A.
3. V. Kannan, Secretary, North Arcot District Beedi Workers' Association, Vellore (N.A. District).
4. R. Karuppiah, President, Tiruchi District United Beedi Workers' Union, Tiruchirappalli.
5. A. M. Govindarajan, Thanjavur.

The last meeting was held on 9th and 10th March 1973 at Tirunelveli.

The next meeting will be held on 10th and 11th at Madras.

இவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும் நிர்ணயிப்பார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்தத் தொழிலாளர்களுக்குக். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டு ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது. எப்போது அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை வெளியிடும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: சென்ற கூட்டம் மார்ச் 9, 10 தேதிகளில் திருநெல்வேலியில் நடைபெற்றிருக்கிறது. வருகிற 10, 11 தேதிகளில் அடுத்த கூட்டம் சென்னையில் நடைபெற இருக்கிறது. விரை வில் அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எ. க. துரைசாமி: பீடித் தொழிலாளர் மத்தியில் இப்போது ஏற்பட்டிருக்கும் கூலி விகிதம் மிகுந்த மனக்குறையை ஏற்படுத்தி இருக் கிறது. வெகு சீக்கிரமாக அந்த விகிதாசாரத்தை உயர்த்தி அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நான் ஏற்கனவே சொன்னது போல் விரைவில் அந்தக் குழு தனது அறிக்கையைத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: ஏற்கனவே சட்ட சபையில் நிறைவேற்றிய பீடித் தொழிலாளர்கள் சட்டத்தில் செக்ஷன்கள் 6, 7 செல்லாது என்று ஹைகோர்ட் தீர்ப்பளித்து ஆறு மாதமாகியும் சர்க்கார் சட்டத்தையும்

திருத்தவில்லை, சுப்ரீம் கோர்ட்டுக்கும் அப்பீல் செய்யவில்லை. இது இரண்டும் செய்யாததற்குக் காரணம் என்ன ? மேலே என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நீதிமன்றத்திலே வழக்கு இருக்கும் போது அதைப் பற்றி ஒன்றும் செய்வதற்கில்லை. இப்போது அந்தக் கருத்தை விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யும்.

திரு. கே. ஏ. வகாப் : இப்போது பீடித் தொழிலாளர்களுக்கு நம்முடைய மாநிலத்தில் கொடுக்கக்கூடிய ஊதியம் ரூபாய் 3·50 தான். கேரளாவில் ஐந்து ரூபாய்க்கும் அதிகமாகக் கொடுக்கிறார்கள். மைசூரில் 4·50 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்தக் குழுவிற்கு மற்ற மாகாணங்களின் நிலவரத்தையும் அறிந்து ஊதிய விகிதத்தை நிர்ணயித்து அறிக்கை அனுப்புமாறு ஆலோசனை கூறப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாட்டில் குறைந்த பட்ச ஊதியம் என்ன என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதுதான் ரூபாய் 3·25-யிலிருந்து ரூபாய் 3·50 ஆக ஆயிரம் பீடிகளுக்குத் தரவேண்டும் என்பதாகும். அது குறைந்தபட்ச ஊதியம். அதற்கு மேல் தருவதற்கு இந்தக் குழு விரைவில் பரிந்துரை அனுப்பினால் அதற்கேற்ற நடவடிக்கை அரசு மேற்கொள்ளும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மத்திய அரசு வரிகளைப் போடும் போதெல்லாம் சிகரெட்டுகளின் விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. பீடிகள் விலை கூடவில்லை. பீடிகளின் விலையைச் சற்றுக் கூட்டியாவது இவர்களுக்கு அதிக ஊதியத்தைத் தர முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தையும் அரசு நினைவில் கொண்டு ஆவன செய்யும்.

*Labour dispute in Devi, Devi Paradise Theatres.*

*377 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(*a*) Whether it is a fact that there were labour troubles at Devi and Devi Paradise Theatres in Madras City during November 1972 ; and

(*b*) if so, the details thereof ?



மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள தேவி, தேவி பாரடைஸ், தேவி பாலா திரைப்பட அரங்குகளை, சென்னை திருவாளர்கள் தேவி பிலிம்சுக்கு குத்தகைக்கு விட்டதன் விளைவாக 21 தொழிலாளர்கள், 12—11—72-ம் நாள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். புதிய நிர்வாகத்தினர், அவர்களை புதிதாக 13—11—1972-ல் நியமித்தனர். இதற்குச் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறது. சங்கம், தொழில் தகராறு ஒன்றை எழுப்பியது. எனவே சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் நல அதிகாரியால் இணைக்கப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதற்கிடையில் தொழிலாளர்கள் 13—11—1972-லிருந்து தொடர் உண்ணுநோன்பைத் தொடங்கினர். பேச்சுவார்த்தைகளின் வெற்றியாக அந்தத் தொடர் உண்ணு நோன்பு கைவிடப்பட்டு, தகராறு இல்லாமல் வேலை செய்து வருகின்றனர்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, இப்படி குத்தகைக்கு விடுகிற போது தொழிலாளர்களை அனாதைகளாக்கி விடுகிறார்கள். இனிமேல் இது போன்ற ஸ்தாபனங்கள், அல்லது 10 பேர் வேலை செய்யும் இடங்களை குத்தகைக்கு விடும்போது, அல்லது கிரயத்திற்கு விற்கும் போது, அதில் இருக்கும் தொழிலாளர்களையும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினரின் கருத்துபபடி அது தொழிலாளர்கள் நீதி மன்றத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*Mechanised boats for fishermen.*

*378. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to supply mechanised boats to fishermen with the financial assistance of Agricultural Refinance Corporation ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட திட்டங்களுக்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(1) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியோடு தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

(2) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியோடு சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களில் மீன் தொழிலை அபிவிருத்தி செய்யும் ஓர் ஒருங்கிணைந்த திட்டம்.

மேற்கண்ட இரு திட்டங்களின் கீழ் முறையே 100, 210 எண்ணிக்கையுள்ள விசைப் படகுகளைக் கட்டி அவற்றை மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தென் ஆற்காடு, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கான சில திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, விசைப் படகுகள் வழங்குவதில் அரசு தற்போது என்ன முறையை கையாள்கிறது ? விசைப்படகுகள் அதிகமாக மீனவர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கேள்வி வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் மூலம் மீனவர்களுக்குச் செய்யும் உதவி பற்றியது. விசைப் படகுகள் இப்போது குலுக்கல் சீட்டு முறைப்படி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் கொடுத்து வருவதால் எந்தத் தவறும் நடப்பது இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து இந்தத் திட்டம் குமரி, நெல்லை மாவட்டங்களில் விஸ்தரிக்கப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன். அந்த மாவட்டங்களுக்கும் அது விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் சொன்னது, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் அந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதாகும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திடமிருந்து நமக்கு அதிகமான அளவுக்குப் பண வசதி கிடைக்கவில்லையென்றாலும், அனைத்துலக வளர்ச்சியின் நிறுவனத்தின் மூலமாக அந்தக் கடன், உதவியைப் பெற முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம் கேட்கிற அளவுக்குக் கடன் கொடுத்து வருகிறது. ஆகவே வேறு இடத்தில் கேட்க வேண்டிய அவசியமில்லை.

திரு. ஆர். இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மீனவர் சங்கத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ரூபாய் 78·700 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரூபாய் 59·025 இலட்சம் வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திடமிருந்து கடனாகவும், மாநில அரசிடமிருந்து ரூபாய் 5·425 இலட்சம் கடனாகவும், படகு, கட்டுமானப் பகுதிகள், பொறிகள், நைலான் வலைகள் ஆகியவற்றிற்காக ரூபாய் 14·250 இலட்சம் கடனாகவும் தந்து, ஆக மொத்தம் ரூபாய் 78·700 இலட்சம் அளவில் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.



வேளாண்மை மறுநிதி

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மாவட்டத்திற்கு விசைப் யுதவிக் கழகத்தின் சார்பில் இராமநாதபுரம் அமைச்சர் அவர்கள் படகுகள் வழங்கும் திட்டம் இருக்கிறது என்று வழங்க இருக்கிறார்கள், சொன்னார்கள். எங்கே, எத்தனைப் படகுகள் அது எப்போது தொடங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு தான் எத்தனை படகுகள் தருவது, அதில் மாநில அரசு எந்த அளவுக்கு பங்கு கொள்வது என்று அறிவிக்க முடியும்.

*Fish Ponds*

*379. *Q*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the details of the places where fish ponds are now located in this State ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே தனியார் துறையில் இவ்வாறு மீன் வளர்ப்புக் குட்டைகள் அமைக்க முன்வந்தால், அரசு நிதி உதவி அளிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுவரையிலும் அந்தத் திட்டம் இல்லை. ஊராட்சி மன்றங்களின் மூலமாகவும், அரசாங்கத்தின் மூலமாகவும் தான் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மீன் நல்ல சத்துள்ள உணவு என்று சொல்கிறார்கள். அது கடலோரப் பகுதிகளில் இருக்கிறவர்களுக்கு நிறையக் கிடைக்கிறது. ஆனால், வடாற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் ஆரணி தவிர, மற்ற இடங்களில் இப்படிப்பட்ட குட்டைகள் இல்லை. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு மீன் வகைக்கும் குட்டைகள் அமைத்து, அதன் மூலம் எல்லோருக்கும் மீன் கிடைக்கச் செய்ய வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன் வளர்ப்பைச் சைவம் என்று கேள்விப்படுகிறேன். அது உள்நாட்டில் மீன் இன ்தை பற்றி அக்கறையாகக் கேட்கிறார்கள். நிச்சயமாக அது பரிசீலிக்கப் அபிவிருத்தி செய்யும் திட்டங்களில் வரும். படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் வைகை அணைக்கட்டு, மஞ்சளார் அணைக்கட்டு, சாத்தனூர், கொடைக் கானல் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் மீன் வளர்ப்பு குளங்கள் மிகவும் நல்ல முறையில் இருக்கின்றன. இருந்த போதிலும்,

*478–ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

போதுமான நிதி வசதி இல்லாததால் அபிவிருத்தி செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதை அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவைகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் நிதி உதவி கேட்டு இருக்கிறது. 100 ஹெக்டேர் பரப்புள்ள இடங்களை ஒதுக்கித் தந்தால் மத்திய அரசு நிதி உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு பெரிய நீர்ப் பரப்புக்களை ஒதுக்கித் தந்தால் மத்திய அரசு நிதி உதவி செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, சாத்தனூர் அணைக் கட்டில் ஏராளமான மீன்கள் கிடைக்கின்றன. அவை அத்தனையும் கல்கத்தாவிற்கு அதிகமாகக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். ஒரு நாளைக்கு 2,000 கிலோ எடுத்துச் செல்கிறார்கள். இதனால் வடாற்காடு மாவட்டத்தில் மீன் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, இவற்றை வடாற்காடு மாவட்டத்திற்கு வேண்டிய அளவுக்கு பகிர்ந்து அளிக்க அரசு ஏதாவது வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னும் அதிகமாக மீன் வேண்டுமென்றால், ஊராட்சி மன்றங்கள் அந்த மீன் வளர்ப்புப் பண்ணைகளை, குட்டைகளை ஏற்படுத்த அக்கறை எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு உதவி செய்ய அரசு தயாராக இருக்கிறது. இதனால் நாம் மேலும் மீன்களை உற்பத்தி செய்து, நமக்குத் தேவை போக மற்றதை கல்கத்தாவிற்கு மட்டுமல்ல, பம்பாய் போன்ற இடங்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

திரு. மு. நல்லசாமி : தலைவரவர்களே, இந்த மீன் வளர்ப்புக் குட்டைகள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஆகியவை நடத்துவதாகச் சொன்னார்கள். அவை லாபகரமாக நடத்தப்படுகின்றனவா ? எத்தனைக் குட்டைகளில் தண்ணீர் இருக்கிறது, தண்ணீர் இல்லாமல் காய்ந்து இருக்கும் குட்டைகள் எத்தனை, என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பற்றிய விவரம் இல்லை என்றாலும், 150 ஊராட்சி மன்றங்களின் சார்பில் பண்ணைகள் நடத்தப்படுகின்றன. அந்த 150 குட்டைகளையும் அரசே எடுத்துக்கொள்ளலாமா என்ற நோக்கம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்றக் குட்டைகள் உண்மையிலேயே சரியான முறையில் செயல்படவில்லை. வடாற்காடு மாவட்டத்தில் பாசன ஏரிகள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பாசன ஏரிகளில் மீன் குஞ்சுகளை விட்டு, அதன் மூலம் மீன் வளர்ப்பு செய்ய அரசு முன்வருமா ?





மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த வளர்ப்புக் குட்டை
கள் ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு குட்டை கட்டுவதற்கு
ரூ. 2 லட்சம் செலவிடப்படுகிறது. இயற்கையாக இருக்கின்ற ஏரிகளில்
மீன்களை விட்டு வளர்க்கும் முறை சரியான முறையாக இல்லை. நமக்கு
லாபம் தரும் வகையில் அங்கே குஞ்சுகள் சரியாக பராமரிக்க முடியாது
என்பதால்தான் அரசாங்கம் குட்டைகளின் மூலம் மீன் வளர்ப்புச்
செய்யும் முறையைக் கையாளுகிறது. சின்னம் சிறு குட்டைகள் ஊராட்சி
மன்றங்களால் பராமரிக்கும் குட்டைகள் நல்ல முறையில் இருக்கின்றன.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சி ஆவணியாபுரத்தில் பெரிய டாங்க் இருக்கிறது. தற்சமயத்தில் அது பெரிய பிஷ்ஷிங் பாயிண்ட் இல்லை என்றாலும், அதை அபிவிருத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவா அறிக்கையில் நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய 3 மாவட்டங்களில் பிஷ்ஷிங் டாங்க் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அங்கே பிஷ்ஷிங் டாங்க் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நீலகிரியில் பெரிய மீன் பார்ம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு இருக்கிறது. ஜப்பான் வகை மீன் வளர்க்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. சேலத்திற்கான விவரம் இல்லை.

திரு. ஆ. பாந்தாமன் : கிராமப் புறங்களிலே இருக்கின்ற எங்களுக்கு எல்லாம் சுறா, வஞ்சிரம் போன்ற மீன் வகைகள் கிடைப்பதில்லை. ஆகவே, அங்கே இருக்கின்ற குட்டைகளில் அம்மாதிரியான மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதிலே வஞ்சனை வளர்க்க வேண்டாம். வஞ்சிரம், சுறா, மீன் வகைகளில் கடலிலே உள்ளவை. அவைகளைக் குட்டைகளில் வளர்க்க முடியாது. கட்லாத்தி, கெண்டை போன்ற மீன் வகைகளைத்தான் குட்டைகளில் வளர்க்க முடியும்.

திரு. த. சோனையா : மதுரை மாவட்டத்திலே மீன் வளர்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். மதுரை நகரில் தெப்பக்குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அதிகமான மீன்கள் அதில் வளர்க்கப்பட்டன. . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதுரை நகரில் தெப்பக்குளம் என்று ஏதோ புதிதாக மர்ம நாவல்களில் வருவதுபோல் சொல்ல வேண்டாம். மதுரையும், அங்கேயுள்ள தெப்பக்குளமும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதனால் மதுரை தெப்பக்குளம் என்று நேரடியாகவே சொல்லுங்கள்.

திரு. த. சோனையா : அங்கே அதிகமான மீன்கள் வளர்க்கப்பட்டன. அந்த மீன்களை ரசிப்பதற்கு சில ரசிகர்கள் மாலை வேளைகளில் பொழுது போக்கிற்காக அங்கே சென்று வருவார்கள். இப்போது அங்கே மீன் வளர்க்கப்படவிலை. அந்த ரசிகர்களின் திருப்திக்காக மீண்டும் மீன் வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தெப்பக்குளத்திலே சில சமயங்களில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. அதனால்தான் அங்கே மீன் வளர்க்கும் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இந்த ஏரி, குட்டைகளில் மீன்களை வளர்ப்பதைப் போலவே கோயில் வாயில்களி லுள்ள நீர்நிலைகளிலும் மீன்களை வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போதும் குற்றாலம் போன்ற கோயில் குளங்களில் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. ஆனால் அவைகளை பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. யாரும் பிடிப்பதற்கு முன்வரவும் இல்லை.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : எங்கள் பகுதியில் உள்ள ஏரிகளில் மீன் வளர்க்கிறார்கள். பிறகு அந்த மீன்களைப் பிடிப்பதற்காக ஏரிகளை கூடிய விரைவில் வடிய வைக்க முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுப்ப தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைப் பற்றி அரசுக்கு தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பகுதி எது என்றே நீங்கள் சொல்லவில்லையே. எங்கே, என்ன என்று தெரியாமல் எப்படி பதில் சொல்ல முடியும் ?

திரு. ரா. ரா. முனுசாமி : வடாற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் டாமில் மீன் வளர்க்கப்படுகிறது. அந்த மீன் வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களுக்குப் போதவில்லை. ஆகவே, பி.டபிள்யூ.டி., ஹைவேஸ் துறைகளுக்குச் சொந்தமான ஏரிகளிலும் மீன்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது கூட பி.டபிள்யூ. டி., பொறுப்பிலே இருக்கின்ற குட்டைகளிலும், ஏரிகளிலும், மீன் வளர்ப்பு நடந்துகொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத் தில் ஜிலேபி கெண்டை என்ற மீன் அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால் அது ருசியாக இல்லை. ஆகவே, அதன் ருசியை அதிகப்படுத்த முயற்சி செய்யப்படுமா ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஜிலேபி என்பது நல்ல பெயராக இருக்கிறது. அதனால் பெயரை மாற்றிக்கொள்ளலாம்.

### *Water-supply for Palathuluvu tank.*

*380 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received the necessary estimates for sanction to divert the water from the River Noyyal to Palathuluvu tank in Erode taluk by constructing an anicut near Anaikadu in Tiruppur; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இடைத்தேர்தல் நடைபெற்ற போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே வந்து, 9 பஞ்சாயத்து தலைவர்களையும் அழைத்து, எங்கள் கட்சியில் வேலை செய்யுங்கள் ; இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருகிறேன் என்று வாக்குறுதி கொடுத்தார் கள். வாக்குறுதி கொடுத்து இவ்வளவு நாட்கள் ஆகியும்கூட இன்னும் அதற்கான வேலைகள் துவங்காததன் காரணம் என்ன ? இந்தத் திட் டத்தை நிறைவேற்ற சுமார் 30 லட்சம் செலவாகும் என்று தெரிகிறது. அதில் பாதித் தொகையை அந்தப் பகுதி மக்களிடம் இருந்து பிரித்துத் தருவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் சுமார் 20,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசனம் பெறும். அப்படி இருந்தும் இந்தத் திட்டத்திற்கான வேலை இன்னும் ஏன் துவங்கப்படவில்லை என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவரவர்களே, நான் தேர்தலுக்காக வாக்குறுதி கொடுக்கவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். அதுபற்றி பரிசீலிப்பதாகச் சொன்னேன். அது இப்போது விரிவான பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 68 லட்சம் ரூபாய். நொய்யல் ஆற்று நீரைத் திருப்பிவிடும் திட்டம் நிறைவேற்றப்பட்டால் இப்போது இருக்கின்ற மூன்று ஏரிகளுக்கும் புதிதாக 6 ஏரிகளுக்கும் நீர் நிரப்ப முடியும். இந்தத் திட்டம் இப்போது ரெவின்யூ போர்டு மூலம் பரிசீலிக்கப்படுகிறது. அவர்கள் அறிக்கை வந்த பின்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தத் திட்டம் பல ஆண்டு காலமாக சொல்லப்பட்டுக்கொண்டே இருக்கிறது. சென்ற ஆண்டுகூட இதே பதிலைத்தான் அமைச்சரவர்கள் சொன்னார்கள் என்பது என்

ஞாபகம். அந்தத் திட்டம் நடைமுறையில் கொண்டுவரப்படுமா? அல்லது அதில் ஏதாவது சிக்கல் இருக்கிறதா? அப்படியானால் அதை நிவர்த்திக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது ஈரோடு தாலுகாவிற்கு பாசன வசதி அளிக்கின்ற திட்டம். அவர்கள் கரூர் தாலுகாவைப்பற்றிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றிய விபரம் இப்போது என்னிடம் இல்லை. திட்டங்கள் எல்லாம் பரிசிலனையில் இருக்கின்றன. ரெவின்யூ போர்டு மூலம் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை வரவேண்டும். அதன் பின் அவைபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : துணைத் தலைவரவர்களே, பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திலே கட்டப்படக்கூடிய நொய்யல் ஆற்றுத் திட்டத்தினால் செழிப்பான பகுதியாக இருக்கக்கூடிய ஈரோடுக்கு ஏதாவது பாதகம் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா? இல்லையென்றால் பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திலே பாசன வசதி செய்யப்படும் அணைக்கட்டுத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் விரிவான பரிசீலனை செய்யப்படுகிறது. எல்லாவற்றையும் பரிசீலித்த பின்னால் ரெவின்யூ போர்டு அறிக்கை வரும். அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் கனம் உறுப்பினர் அவர்கள் அஞ்சவேண்டிய தேவையில்லை.

## சிறுவாணித் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை

*381 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கேரள மாநிலங்களுக்கிடையே சிறுவாணி திட்டம் குறித்து உடன்பாடு காணும் பேச்சு 1972 ஜூன் மாதக் கடைசியில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : 1972ஆம் ஆண்டு ஜூன் திங்களில் பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறவில்லை. எனினும், 1972 அக்டோபர் 3, 4, 5 தேதிகளிலும் 1973 பிப்ரவரி 23, 24 தேதிகளிலும் திருவனந்தபுரத்தில் தமிழ்நாடு, கேரள அதிகாரிகளிடையே பேச்சு வார்த்தை நடந்தது. சம்பந்தப்பட்ட இரு மாநில அமைச்சர்களும் கலந்து கொண்டனர். இவ்விவாதத்தின்போது தீர்வுகாண வேண்டிய பெரும்பான்மையான பொருள்களுக்குத் தீர்வு காணப்பட்டது. இன்னும் ஓரிரு பொருள்கள் குறித்துத் தீர்வு காண வேண்டியுள்ளதால், மற்றுமொரு பேச்சுவார்த்தை நடத்தக் கருதப்பட்டுள்ளது.



திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவரவர்களே, தீர்வு காணப்பட வேண்டிய பெரும்பான்மையான பொருள்களுக்கு தீர்வு காணப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படித் தீர்வு காணப்பட்ட பொருள்கள் எவை எவை? கோவை குடிதண்ணீர் திட்டத்தில் இது முக்கிய பங்கு வகிப்பதால் ஏதாவது நிபந்தனைகள் விதித்துள்ளார்களா? அண்மையிலே அமைச்சரவர்கள் சென்றிருந்தபோது இதுபற்றி விவாதித்தார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினையில் ஒரு முக்கியமான சிக்கல் இருக்கிறது. கேரள அரசு அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்கு ஏற்கெனவே பவானியிலிருந்து நாம் கொடுத்திருக்கிற 2·5 டி.எம்.சி. தண்ணீரோடு மேலும் 2.5 டி.எம்.சி. தண்ணீர் அதாவது 5 மில்லியன் கன அடி தண்ணீர் திருப்பிவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுதான் சிக்கல். அதைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

திரு. மே. சி. தூயமணி : கோவை நகர மக்கள் குடிதண்ணீர் திட்டத்திற்கு பெரு முயற்சிகள் எடுத்தும், கேரள அரசு உடன்பாட்டிற்கு வருவதாகத் தெரியவில்லை. ஆகையால் அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாற்றுத் திட்டங்களும் இருக்கின்றன.

திரு. மு. சுருளிவேல் : கேரள மாநிலத்திலிருந்து சிறுவாணி தண்ணீரைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தது போல, கேரளத்திலுள்ள இடுக்கி மாவட்டத்திலிருந்து கல்லாற்றுத் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இடுக்கி போடவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ் நாட்டுக்கும் மற்ற மாநிலங்களுக்கும் இருக்கின்ற தண்ணீர் தகராறுகளுக்கு மத்திய அரசு சரியான நேரத்தில் தலையிட்டு தீர்வு காணாததன் காரணமாக திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. இந்தக் குறைபாட்டை நீக்க, மத்திய அரசை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்த நமது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்வப்போது வற்புறுத்தி வருகிறோம். நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே. எல். ராவ் அவர்களிடமும் பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : தமிழ்நாடு அரசும் கேரள அரசும் பேச்சு
வார்த்தை நடத்தி, ஒப்புக்கொண்ட பின்னர் திட்டத்தை நிறைவேற்றும்
சமயத்தில், இப்போது ஏற்படுகின்ற சங்கடங்கள் என்னென்ன என்பதை
அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே ஏற்பட்ட
ஒப்பந்தத்தின்படி 1,300 கன அடி தண்ணீர் கேவை குடிநீர் திட்டத்
திற்காக விடவேண்டும். அதற்கு விரிவான பரிசீலனை செய்து, அக்ரி
மெண்ட் செய்யவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்
படையில் பரிசீலனை செய்து, ஒப்பந்தம் செய்கின்ற நேரத்தில் சில
பிரச்சினைகள் எழுந்தன. அவை பற்றி பேச்சு வார்த்தைகள் நடை
பெற்று வருகின்றன.

*Staff of Agriculture Department in Nilgiris district*

*382—Q. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Tamil Nadu Agriculture Department Ministerial Staff Association, Nilgiris Centre, Ootacamund, has requested the Government for the grant of project allowance ; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது போன்ற கோரிக்கை
ஏதும் அரசுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால் நீலகிரி மாவட்ட (உதக
மண்டலம்) தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர்கள்
சங்கத்தினரால் "திட்டப் படி" (Project Allowance) அளிக்கும்
படி ஒரு கோரிக்கை வேளாண்மை இயக்குநருக்கு அனுப்பப்பட்டது.
இந்திய-ஜெர்மானிய நீலகிரி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்
களுக்கு "திட்டப் படி" அளிப்பதற்கு அரசு ஒப்புதல் அளிக்காததால்
அத்திட்டப் பகுதியில் உள்ள மற்ற அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு
"திட்டப் படி" அளிப்பதற்கான கோரிக்கைக்கு இடமில்லை என்று
வேளாண்மை இயக்குநர் நீலகிரி மாவட்ட வேளாண்மைத் துறை அமைச்சுப்
பணியாளர்கள் சங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நெல் உலர்த்தும் இயந்திரங்கள்.

*383 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில், நெல் உலர்த்தும் இயந்திரங்கள் எத்தனை
உள்ளன.

(இ) இவைகளில் இந்திய உணவு கார்ப்பரேஷன் ஏற்படுத்தியவை
எத்தனை?

(உ) தமிழ்நாடு உணவு கார்ப்பரேஷன் எத்தனை ஏற்படுத்தியுள்ளது?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ)—28.

(இ)—23

(உ) தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழகம் அண்மையில்
கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வந்த சில நவீன அரிசி ஆலைகளை
எடுத்துக் கொண்டது. தஞ்சையிலிருந்து மேற்படி கழகம் எடுத்துக்கொண்ட
ஆறு நவீன ஆலைகளில் ஐந்தில் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் உள்ளன

திரு துரை கோவிந்தராசன் : தஞ்சை மாவட்டத்தில் நிறுவப்பட்டிருக்
கும் நவீன நெல் உலர்த்தும் மெக்கானிகல் ட்ரையர்ஸ் ஆலைகள் குறுவை
சாகுபடியின்போது, நெல் உலர்த்த வேண்டிய நேரத்தில் உலர்த்த
முடியாதவாறு பழுதடைந்து கிடைப்பது பற்றி அரசாங்கத்திற்கு தகவல்
ஏதும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி ஒன்றும்
இருந்ததாகத் தெரியவில்லை.

திரு. கே. எ. வகாப் : இந்த ஆலைகள் ஆங்காங்கே வேலைசெய்யாமல்
பழுதுபட்டிருப்பதாக சொல்லப்படுகிறதே, அப்படி எவ்வளவு ஆலைகள்
இருக்கின்றன?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : மொத்தம் உள்ள
30 ஆலைகளில் 20 ஆலைகள் சரியாக வேலை செய்துக்கொண்டிருக்கின்றன.
7 இடமாற்றம் செய்கிற காரணத்தினால் இயந்திரங்கள் பிரிக்கப்பட்ட நிலை
யில் இருக்கின்றன. 3 மாடர்ன் ரைஸ் மில்லோடு இணைக்கப்பட்டிருக்
கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசாங்கத்தின் புட் கார்ப்ரேஷன்
23 மெக்கானிகல் ட்ரையர்ஸ் வைத்திருக்கிறதே, அவை பூராவும் பயன்
படுத்தப்படுகிறதா? அப்படி பயன்படுத்தப்படவில்லை என்றால் காரணம்
என்ன? அவற்றைப் பூராவும் பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கை
எடுக்குமா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : ஏழு இடமாற்றம் காரண
மாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 3 மாடர்ன் ரைஸ் மில்லோடு இணைக்கப்
பட்டிருக்கிறது. பாக்கி பூராவும் பயன்படுத்தப்படுகிறது.

அரசுப்போக்குவரத்துத்துறை பணியாளர்களுக்கு
நிகராடைகள்.

*384 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும்
ஊழியர்களுக்கு உடைகள் (Uniforms) இலவசமாக வழங்கப்படு
கின்றனவா?

(இ) ஆம் எனில், எந்தெந்த பிரிவினருக்கு வழங்கப்படுகின்றது?

(உ) ஒருவருக்கு எத்தனை செட் உடைகள் வழங்கப்படுகின்றது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ)—(இ) தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த எல்லா வகைத் தொழிலாளர்களுக்கும் நிகராடைகள் தைத்துக் கொள்வதற்கான துணி இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

(உ) ஓராண்டில் மூன்று தொகுதி நிகராடைகள் வழங்கப்படுகின்றன.

திரு சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த நிகராடைகளுக்கு கைத்தறித்துணி வழங்கப்படுகிறதா? கதர்துணி வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கைத்தறித்துணியாக வழங்கப்படுகின்றன.

திரு நா. வீராசாமி : இந்தமாதிரி இலவசமாக போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு துணிகள் வழங்குவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலும் ஆண்டுக்கு 13 லட்சம் ரூபாய் கைத்தறித்துணிகள் வழங்குவதன் மூலம் செலவாகிறது. இதர போக்குவரத்துக் கழகங்களை பற்றிய தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு எம். ஏ. லத்தீப் : இங்குள்ள தொழிலாளர்களுக்கு கைத்தறித் துணிகளை வழங்குவது போல குளிர்பிரதேசங்களில் பணியாற்றும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு கம்பளி நிகராடை வழங்கப்படுகிறதா? அதற்கு என்ன செலவாகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : செலவு பற்றிய விவரம் என்னிடம் இல்லை. மலைப்பிரதேசங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு அந்த இடத்திற்கேற்ற துணிகள் தான் வழங்கப்படுகின்றன. அதற்கான செலவையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. பொதுவாக எல்லா ஆடைகளும் கைத்தறித் துணிகளினால் தரப்படுவதற்கு தொழிலாளர்கள் ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : இவர்களுக்குக் கொடுக்கிற காக்கி டிரஸ் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, ஒயிட் டிரஸ் அளிக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வெள்ளை உடை உயர்வு மனப்பான்மையை எப்படி ஏற்படுத்தும் என்று எனக்குத் தெரியவில்லை.



திரு. மா. வே. நாராயணசாமி : இப்போதெல்லாம் தொழிலாளர்களுக்கு தனியார் துறையில் 2 செட் யூனிபார்ம் கொடுக்கப்படுகிறது. அதைப்போல நமது பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிற யூனிபார்ம் செட்டை அதிகப்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதைப் பொறுத்த வரையில் அரசு எல்லோருக்கும் முன்மாதிரியாக 3 தொகுதி நிகராடைகளை வழங்கி வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றுகிற சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு கம்பளி ஆடைகளை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்களுடைய யோசனை சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, will the Hon. Minister be pleased to tell us if drivers and conductors are taught good manners as part of their training?

THE HON. THIRU S. RAMACHANDRAN : This is a matter involving the courtesy on the part of the staff and I suppose they are already trained on these lines.

THIRUMATHI ALDA M. FOWLER : It is a well-known thing to passengers that very little courtesy is shown to them, especially to ladies; when they put their foot on the board, the bus starts.

MR. DEPUTY SPEAKER : General accusation should not be levelled.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Courtesy is not one way traffic. It is a two way traffic.

திரு. எம். ஏ. லத்தீப் : இப்போது சீருடைகள் அளிக்கப்படுவது போல அந்தத் தொழிலாளர்களுக்கு பாட்ஜுகள் வழங்கப்படுமா? உதாரணமாக சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு மீன் சின்னம் பொறித்த பாட்ஜுகள் வழங்கப்பட்டால் அவர்களைப் பார்த்தவுடன் இங்கே வேலை செய்கிறவர்கள் என்று தெரிந்து கொள்ளலாமே.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பஸ்ஸிலேயே பெயர்கள் இருப்பதன் காரணத்தால் பாட்ஜுகள் தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. லத்தீப் அவர்கள் பேசும் போது சேரன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு மீன் சின்ன பாட்ஜுகள் வழங்கவேண்டும் என்கிறார்கள். சேரனுக்கு மீன் சின்னம் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (சிரிப்பு)

வலியுறுத்திக் கூறினார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் திரு. சுப்பு அவர்களும் சொன்ன கருத்தை ஆதரித்து "நீதி மன்றத்தில் முறையாக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டதற்குப் பின்னால்தான் சட்டப்படி வழக்குத் தொடர்ந்ததாக ஆகும்" என்று வாதிட்டு இருக்கிறார்கள்.

இது குறித்து நான் விளக்கம் கேட்டு எழுதியதற்குப் பதிலாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்து இருக்கிறார்கள். தான் வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன் என்று சொன்னபோது "கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன்" என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை என்றும் தன்னுடைய வழக்கறிஞரிடம் வழக்கை ஒப்படைத்து அவரும் தொடர்பு உடையவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து, அதன் பின்னால் ஒரு வழக்கு முறையாக 6-வது மாகாண மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டில் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் அதே கருத்தில் 29—3—1972-ம் நாளன்று பேரவையில் குறிப்பிடும்போது action has been taken against the paper என்றே குறிப்பிட்டு இருப்பதாகவும், ஆகையால் "வழக்குத் தொடர்ந்திருக்கிறேன்" என்றுதான் 9—3—1972-ல் குறிப்பிட்டது "நடவடிக்கை எடுத்து இருக்கிறேன்" என்ற பொருளையே குறிப்பிடுவதாகும் என்றும், பேரவையில் வேண்டுமென்றே ஒரு தவறான கருத்தைத் தாம் சொல்ல எண்ணியதும் இல்லை என்றும் அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து இருக்கிறார்கள்.

இத்தகைய உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்த அளவில் 1963-ம் ஆண்டு லண்டன் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட "பிரோப்யூமா வழக்கில்" (Profumo case) குறிப்பிட்ட சில கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக ஆகுமென்று கருதுகிறேன்.

"That not all incorrect statements can be construed as wrong statements, and that not all wrong statements could be held to have been made to mislead the House and as such constitute contempt of the House. It is now well established that the statement must not only be wrong, but it must be wrong to the knowledge of the maker and that the wrong statement must be made will-fully and with the knowledge that it is wrong and with a view to mislead the House.

இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் "வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன்" என்று 9—3—1972-ல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது சம்பந்தமாகத் தொடர்புடைய வழக்கும் நீதிமன்றத்திலே அவர்களால் தொடரப்பட்டு நடந்துகொண்டு இருக்கிறது. "நான் சட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்துக்கொள்வதை வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன்" என்று குறிப்பிட்டேன் என்று அமைச்சருடைய கூற்றைக் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் 29—3—1972-ம் நாள் இப்பேரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் I have taken action against the paper என்று குறிப்பிட்டு இருப்பதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



எனவே, வேண்டுமென்றே தவறான கருத்து என்று தெரிந்தும், பேரவையைத் தவறான பாதையில் நடத்திச் செல்லும் நோக்கத்தோடு அமைச்சர் அவர்கள் பேரவையில் "வழக்குத் தொடர்ந்திருக்கிறேன்" என்று சொன்னார் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன்.

இந்த நேரத்தில், ஒன்றிரண்டு நாட்களுக்கு முன், இந்தியப் பாராளுமன்றத்தில், மாண்புமிகு மக்கள் அவைத் தலைவர் குறிப்பிட்ட ஒரு கருத்தினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் :—

"If questions of privilege were allowed on the basis of a statement being inaccurate, everyday these motions will be coming One day one Member and another day another would be in trouble.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கூற்று பேரவையின் உறுப்பினரை அச்சுறுத்தக்கூடியதாக இருக்கிறது என்ற கருத்தையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினர், திருமதி அனந்தநாயகி அவர்கள் மிகச் சிறந்த வழக்குரைஞர். தம்மேல் வழக்குத் தொடர்வேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதால் எந்த வகையிலும் அவருடைய தன்னம்பிக்கையும் பேச்சுரிமையும் பாதிக்கப்பட்டிருக்கும் என்று நான் கருதவில்லை.

வேண்டுமென்றே தவறான செய்தி என்று தெரிந்தும், பேரவையைத் தவறாக வழி நடத்திச் செல்வதற்குத்தான் எண்ணவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து இருப்பதாலும் தொடர்ந்து வந்த நாட்களில் இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழக்குத் தொடரப்பட்டு நீதி மன்றத்தில் அது வழக்காக நடந்துகொண்டு இருப்பது உண்மை என்பதாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எழுப்பியுள்ள உரிமை மீறல் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

Now, the Hon. Member, Thiru Suppu will call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance.

**Thiru K. T. K. THANGAMANI**: Sir, I have given notice under Rule 42......This is the time to take it up, I think.

**Mr. DEPUTY SPEAKER**: Let this be finished.

மணல்மேடு—திருத்துறைப்பூண்டி பேருந்து வழித் தடம்.

* 385 வினு திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

(மாயூரம்) மணல்மேட்டிலிருந்து திருவாரூர் வழியாக திருத்துறைப் பூண்டி செல்வதற்குப் பேருந்து வசதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் ள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. நா. வீராசாமி : திருத்துறைப்பூண்டியில் இருந்து மணல் மேட்டுக்கு பஸ் விடாத காரணம் அது மணல்மேடாக இருக்கிறது என்பதா, அல்லது மணல் மேடு என்கிற ஊர் என்றால் பஸ்விடாத காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் முன்னால் சொன்னதும் ஒரு காரணமாக இருக்கலாம். ஏற்கெனவே இந்த வழித் தடங்களில் பல பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மு.ப. 10-00

## (2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவை உறுப்பினர்கள் பேரவைக்கு வராததை முன்கூட்டியே தெரிவிப்பது குறித்து.

திரு. என். கணபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையின் மரபுப்படி, யாராவது சட்டமன்றத்திற்கு வரவில்லையென்றால், அவைத் தலைவ ரிடத்திலே தெரிவித்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறை நம்மிடத்திலே இருக்கிறது. இன்றையதினம் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்களும் நம்முடைய அவையிலே ஒட்டு மொத்தமாக இல்லை. அவர்கள், தங்களிடத்திலே வராததற்குக் காரணம் ஏதாவது தெரிவித்திருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : There is no point of order. நமக்கன்றும், மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் வராததைத் தெரிவிக்க வேண்டுமென்ற நியதி இல்லை. குறிப்பிட்ட சில நாட்கள் பேரவைக்கு வராவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் தெரிவித்து இருக் கிறார்கள். இது ஒரு ஸ்கூல் அல்ல. பள்ளிக் கூடத்திலே கொடுப்பதைப் போல மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்க வேண்டுமென்று எதிர் பார்க்கக்கூடாது. ஏற்கெனவே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சில குறிப்பிட்ட மானியக் கோரிக்கைகளைக் கூட, இதற்காகத் தள்ளி வைத்திருக்கிறோம்.

## (3) அவையுரிமைப் பிரச்சினை.

கூட்டுறவுத் துறை அமைச்சர் அலையோசைப் பத்திரிகையின்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதாகப் பேரவைக்கு அறிவித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது கொண்டுவந்த அவை உரிமை மீறல் பிரச்சினை மீது என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

இப்பேரவையில் 9—3—1972-ம் நாளன்று திருமதி அனந்தநாயகி அவர்களின் பேச்சைக் குறுக்கிட்டு "அம்மையார் ஏதாவது குற்றம் சொல்லு வதாக இருந்தால் பத்திரிகை மூலமாகக் குற்றம் சாட்டினால் வழக்குத் தொடரத் தயாராக இருக்கிறேன். 'அலை ஓசை' பத்திரிகைமீது அவ தூறு வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன்" என்று குறிப்பிட்ட வார்த்தைகள் கீழ்க்கண்ட காரணங்களால் அவையுரிமை மீறல் ஆகும் என்று திரு. சுப்பு அவர்கள் வாதித்தார்கள்—

(1) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 9—3—1972-ம் நாளன்று "அலை ஓசை" பத்திரிகை மீது வழக்குத் தொடரவில்லை. எனவே, இது வேண்டுமென்றே பேரவைக்குத் தவறான ஒரு தகவலைத் தெரிவித்தது ஆகும்.

(2) பேரவையில் திருமதி அனந்தநாயகி அவர்கள் தமக்குள்ள உரிமையைப் பயன்படுத்த முடியாத அளவிற்குத் தவறான தகவல்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அச்சுறுத்தி இருக்கிறார்கள்.

திரு. சுப்பு அவர்களைத் தொடர்ந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு விளக்கங்களைத் தந்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய வழக்கறிஞருக்கு வழக்குத் தொடரும்படிக் குறிப்பிட்டு அனுப்பியதை "வழக்குத் தொடர்ந் ததாக" ஆகுமென்று திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதே கருத்தை திரு. ராஜாராம் அவர்களும் திரு. கந்தசாமி அவர்களும்

4. கவன ஈர்ப்பு.

THIRU K. SUPPU : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the situation arising out of the indefinite fast by the unemployed teachers of Tirunelveli District in Tirunelveli Town from 12th February 1973 and the failure of the Government to accept the demands and settle the problems.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வேலை வாய்ப்பில்லாத ஆசிரியர்கள் சிலர் 12—2—1973 முதல் தொடர்ந்து தொடர் உண்ணு நோன்பு கிளர்ச்சி நடத்தி வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டிலும் பள்ளிகளில் அதிகப்படியாகச் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், நிதி நிலை இடந்தருவதற்கிணங்கவும் அரசு கூடுதலான ஆசிரியர் பதவி களுக்கு ஒப்பு அளித்து வருகிறது. இவ்வாறு சென்ற ஆறு ஆண்டுகளில் மட்டும் ஏறக்குறைய 33 ஆயிரம் கூடுதல் ஆசிரியர் பதவிகள் புதியதாக ஏற்படுத்தப்பட்டன. 1972–73 ஆம் ஆண்டிலும் ஏறக்குறைய 3,600 புதிய பதவிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. மாநிலம் முழுவதற்கும் வழங்கப் பட்டுள்ள இப்பதவிகள உரிய அளவில் திருநெல்வேலி மாவட்டத் துக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

கிளர்ச்சி செய்யும் ஆசிரியர்கள் கோருவது போல ஆசிரியர்கள் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்காக உடனடியாக ஆசிரிய மாணவர் விகிதத்தைக் குறைத்திட, மாநில அரசு நிதி நிலை இடந்தரவில்லை. அவர்களுடைய பிற கோரிக்கைகள் : வேலை வாய்ப்பில்லாத ஆசிரியர் களுக்கு மாதம் ரூ. 100 உதவிப் பணம் அளிக்க வேண்டும் ; அனைத்து நிர் வாகப்பள்ளிகளையும், அரசே ஏற்று நடத்திட வேண்டும் ; என்பன போன்றவையாகும். அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது என்பது வெளிப்படை. அனைத்து ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும் வயதை 55 ஆகக் குறைத்திட வேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை ; பணியிலுள்ள ஆசிரியர்கள் குறைக்கக்கூடாதென்று கிளர்ச்சி செய்கின்றனர்.

கூடுதல் ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி களில் மாணவர் சேர்க்கையை தேவையான அளவுக்கு மிகாது பார்த்துக்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளில் மூலம் வரும் சில ஆண்டுகளில், வேலை வாய்ப்பு இன்றியுள்ள ஆசிரியர்கள் பிரச்சினை தீரும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்நிலைமைகளை விளக்கி, திருநெல்வேலிக் கோட்ட வருவாய்த்துறை அலுவலர் கிளர்ச்சி செய்து வரும் ஆசிரியர்களிடம் எடுத்துக் கூறிய பின்பும் இக்கிளர்ச்சி தொடர்ந்து நடந்து வருவது வருந்தத் தக்கது. இந்நிலைமைகளை மனத்திற் கொண்டு கிளர்ச்சி நடத்தி வரும் ஆசிரியர் கள் தங்கள் கிளர்ச்சியை உடனடியாக நிறுத்தி விட்டு சுமுகமான சூழ்நிலை யில் முடிவு காண ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்.



திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் ஏற்கனவே ஒரு கிளர்ச்சியை நிறுத்தி விட்டார்கள். உண்ணுவிரதத்தையும் நிறுத்தி விட்டார்கள். எல்லோருடைய வேண்டுகோளின்படி, உண்ணுவிரதத்தை நிறுத்தி விட்டார்கள். இப்பொழுதிருக்கிற வேலையில்லா திண்டாட்டத்தின் கொடூரத்தைக் கணக்கிலே கொண்டு, அவர்களுடைய எண்ணிக்கையை கணக்கிலே கொண்டு, முதலிலே தேறியவர்களுக்கு முதலிலே வேலை அளிக்க வேண்டுமென்ற பிரையாரிட்டி அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அதற்குள் திண்டாட்டத்தின் கொடூரத்தை உணர்ந்து அவர்களுக்கு சப்சிஸ்டன்ஸ் அலவன்சாவது கொடுத்து, அவர்களை கொடூரத்திலிருந்து மீட்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுதலான ஆசிரியர்களை நியமிப்பது, நிதி வசதியைப் பொறுத்து எந்த வகையிலே முடிவுசெய்யலாம் என்பது பற்றி அந்தத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், பயிற்சி பெற்று நீண்ட காலமாக இருக்கிற ஆசிரியர்களுக்கு முதல் சலுகை தரவேண்டு மென்ற எண்ணத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது. அந்த வகையில் கூடுமான வரையில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் அரசுப் பள்ளிகளிலும் அந்த முறையைக் கடைப்பிடிப்பதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. தனியார் பள்ளிகளிலும் அந்த முறையை மேற்கொள்ள வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஆனால், அவர்களை மேற்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்த முடியாது.

அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தங்களைக் கட்டுப் படுத்தக் கூடாது என்ற தீர்ப்பையும் வாங்கியிருக்கிறார்கள். முதலில் தேறிய வர்களுக்கு முதல் சலுகை தர வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். ஆனால், அந்த வகையிலே கூடுதலான அளவுக்கு, எந்த அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று 1,500 ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை எந்த அளவுக்குக் கூட்டலாம் என்பது பற்றியும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதுவரையிலே இடைக்கால நிவாரணம் தரலாம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு இடம் தருகின்ற நிலையில் நிதி இல்லை. வேலை வாய்ப்பை எந்த அளவுக்குத் தரலாம் என்பதிலே அரசு கவனம் செலுத்துகிறது என்று கூற விரும்புகிறேன்.

(5) அறிவிப்புகள் :

நடைமுறைக் கேள்விகள் எழுப்புவது குறித்து :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே, விதி 41-ல், 42 ல் அவை உரிமை மீறல் பிரச்சினைமீது அங்கத்தினர்கள் தரும் பல கடிதங் கள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தருகிறார்கள். அவைகளை

சட்டப் பேரவை விதிகளுக்கிணங்கி வருகின்ற ஏராளமான பிரச்சினை களை எடுத்துக்கொண்டும், அனுமதி மறுத்தும் மாண்புமிகு உறுப்பினர் களுக்கு நேரடியாகத் தகவல் தெரிவிக்கிறேன். அவைகளில், அனுமதி மறுக்கப்பெற்றவைபற்றி, நம்முடைய பேரவையிலே என் அதை அனுமதிக்கவில்லையென்ற பிரச்சினையை இங்கே எழுப்புவது முறையல்ல. அது நம்முடைய பேரவையின் காலத்தை வீணகச் செலவழிப்பது என்பதோடு மட்டுமல்லாமல், இங்கே நாமே வகுத்துக்கொண்ட செயல் முறைகளுக்கு முரணாக விவாதித்து அதை நடைமுறைக் குறிப் பேட்டிலே ஏற்றுவது, நாளையதினம் பின்பற்றுகிறவர்களுக்குத் தவறான முன்மாதிரியான நிலைமைகளை உருவாக்கும் என்று தெரி வித்துக்கொள்கிறேன். பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிற நேரத்தில், அது உண்மையிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் தானு என்ற தன்மையை நீதிபதியாக இருந்த ஆராய்ந்து கொள்வது நல்லது என்று கருது கிறேன். இங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் பல்வேறு பிரச்சினைகளில் கிளப்பி யிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இந்தப் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதைப் பற்றி ஒரு விதிமுறை வைக்க லாம் என்று கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பி னர்கள் அவரவர்களை பாதிக்கும்பொழுது பாயிண்ட் ஆப் ஆர்டர் உடனே எழுப்புகிறார்கள். பேரவை நடவடிக்கைகளில் விதிகளுக்கு விரோத மாக தவறுகள் நடந்தால் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளப்பலாம். ஆனல் அதற்கு மாருக, விதிமுறைகளுக்கு மாருக பாயிண்ட் ஆப் ஆர்டர் கொண்டு வந்தால் அது சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டி வரும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நான் எழுப்புவது வீணக எழுப்பும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஒரு முடிவைத் தெரிவித்த பிறகு, அதற்கு மாண்புமிகு உறுப்பினர் சமாதானம் சொல்ல முற்பட்டு, அந்தச் சமாதானத்திற்கு நான் மீண்டும் பதில் தெரிவிப்பது என்றல், நான் என்னுடைய முடிவையே மதிக்கவில்லை என்றாகும். ஆகவே அது தவருன முறையாகும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : சபாநாயகர் அவர்கள், போலீஸ் மான்யத்தில் பேசலாம் என்று சொன்னார்கள். போலீஸ் மான்யம் இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுவதாக இருந்தது, 23-ம் தேதிக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்னும் 8 தினங்கள் காத்துக்கொள்ளும் அளவிற்கு நான் சொல்லப்போகும் பிரச்சினை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு மாற்று வழி சொல்லுகின்றேன். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் அமரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி : நான் எழுப்ப விரும்புவது மிக முக்கியமான பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் எழுப்ப விரும்பிய பிரச்னையின் முக்கியத்துவத்தை நான் மதிக்கவில்லை என்று கருத வேண்டியதில்லை. ஆனல் இந்தப் பேரவையில் அதைக் கிளப்புவதைத் தவிர வேறு வழியில்லையா என்றால் இல்லை என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னால் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகவே அவரிடம் நேரடி யாகச் சொல்லலாம். போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களிடம் சொல்லலாம். பேரவையில் சில விதிமுறைகள் வைத்திருக்கிறோம். நாள் தவறாமல் பல முக்கிய பிரச்னைகள் எழக்கூடும். அவற்றை எல்லாம் பேரவையின் முன் கொண்டுவந்து, அவற்றை விவாதிக்க பேரவையின் அலுவல்களை ஒத்திவைப்பது என்றால், பேரவையின் மற்ற நடவடிக்கைகளை அது பாதிக்கும். ஆதலால், சில விதி முறைகளை வைத்திருக் கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த பிரேரணை டிஸ்அலவ் (தள்ளுபடி) செய்யப்பட்டது என்ற முடிவு கொடுக்கப்பட்ட பிறகு, முடிவு கொடுக்கப்பட்ட ஒன்றை மீண்டும் அவையில் கிளப்புவது சரியில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டரை மறுக்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : I am only trying to persuade the Hon. Deputy Speaker to reverse it. This matter may be taken up tomorrow.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய அறையில் வந்து விவாதிக்கலாம்.

திரு. க. உரா. எட்மண்ட் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு ரூல் 42-ன்படி கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கொடுத்தவர் தவிர, மற்ற வர்கள் அதன்மீது பேசக் கூடாது.

## (2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவையில் உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்குவது குறித்து.

கே. டி. கே. தங்கமணி : I am raising another point of order. இன்றைக்கு காலையில் சட்டமன்ற விதி 62-ன் படி ஐந்து உறுப்பினர்களுக்கு எந்தெந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஏற்கனவே பல விவாதங்கள் நடைபெற்றிருக்கிறது. இதில் தாங்களே எல்லா கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசி முடிவுக்கு வரலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எங்களுடைய கட்சியின் கருத்து என்னவென்றால், மாஜி அமைச்சர்கள், மாஜி சபாநாயகர்கள், மாஜி உதவி சபாநாயகர்கள் இவர்களுக்கெல்லாம் முதல் வரிசையில் இடம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது தான். ஏனென்றால் அப்படிக் கொடுத்தால், அம்மாதிரியான பல

பேருக்கு முதல் வரிசையில் இடமளிக்கப்பட்டு, எதிர்க்கட்சி சிறிய கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களுக்கு முதல் வரிசையில் இடம் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அந்த மாதிரியாக இருக்கும்போது, மாஜி அமைச்சர்கள், மாஜி சபாநாயகர்கள், மாஜி உதவி சபாநாயகர்கள் இவர்களுக்கெல்லாம் முதல் வரிசையில் இடம் இருக்க வேண்டாம் என்பதை சுற்றறிக்கையிலிருந்து எழக்கூடிய பிரச்னையாக கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த இடம் ஒதுக்கும் பிரச்னை குறித்து எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்தாலோசிக் கிறேன் என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் இடம் ஒதுக்கும் சிக்கல் கிளப்பப்பட்டபோது, இதற்கு தெளிவாக முடிவு எடுக்கலாம் என்றார்கள். அசெம்பிளி ரூல்ஸ் கமிட்டி கூடும்போது, கட்சித் தலைவர்கள் கமிட்டிகளில் கூடும்போது இப் பிரச்னையை விவாதித்தால் பொருத்தமாக இருக்கும். இன்றைக்கு இருக்கின்ற முறையில், ஸ்பீகர்ஸ் டிஸ்கிரீஷனரி பவர்ஸை வைத்து அலாட் செய்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி தெரிவித்த கருத்து கவனத்தில் வைத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நாடாளு மன்றத்தில் மாஜி அமைச்சர்களுக்கு முதல் வரிசையில் இடம் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மக்கள் சபையில் முன் வரிசையில் மாஜி அமைச்சர்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். இதற்காக ரூல்ஸ் கமிட்டியை வேண்டு மானால் மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம்.

(திரு. செ. கந்தப்பன் எழுந்தார்.)

திரு. நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் நாடாளு மன்றத்தில் உறுப்பினராக இருந்தவராதலால், அவர் என்ன விளக்கம் சொல்லுகிறார் என்பதைக் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, மாறுபட்ட கருத்துக்களை அனுமதித்தால்தான், குறிப்பேடுகளிலிருந்து சரியான நிலையை நாம் தெரிந்துகொள்ள முடியும். நாடாளு மன்றத்தில் மாஜி மந்திரிகள், முக்கியஸ்தர்கள் மட்டுமல்ல, சபாநாயகர் பார்த்து நாடாளு மன்றத்திற்கு பெருமை தரக்கூடியவர் என்று யாரை நினைக்கிறார்களோ, அவர் எந்தப் பொறுப்பிலும் இல்லாமல் இருப்பவராக இருந்தாலும், அவருக்கு முன் வரிசையில் இடம் கொடுத்திருக்கிறார்கள். இந்த அடிப்படையை மனதில் வைத்துக்கொண்டுதான் இடம் ஒதுக்கும் அதிகாரம் நாடாளு மன்றத்திலும், சட்ட மன்றத்திலும் சபாநாயகருக்குத் தரப்பட்டிருக் கிறது. இடம் ஒதுக்குவதில் சில சிரமங்கள் இருக்கின்றன, சிக்கல்கள் இருக்கின்றன என்பதைக் கருதி, அந்த அதிகாரம் தமக்கு வேண்டாம்



என்று இந்த பேரவையில் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்து, சர்வகட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கிறேன் என்று சொன்னார்கள். இந்த அதிகாரம் பேரவைத் தலைவராகிய தங்களுக்குத்தான் இருக்கவேண்டும். அதுதான் நியாயமானது, ஒழுங்குக்கு நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். (ஆரவாரம்).

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர்வரகளே, இங்கே அமர்ந் திருக்கின்ற தாங்கள் இந்த சபைக்கு பெருமை தரக்கூடியவர்கள் யார் என்பதைக் தேர்ந்தெடுக்க முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவையில் யார் யாருக்கு எங்கே இடம் அளிக்கப்பட வேண்டுமென்ற பிரச்னையில், முன்னாள் அமைச்சர்களுக்கும், முன்னாள் அவைத் தலைவர் களுக்கும் அவையின் முன் வரிசையில் இடமளிக்கவேண்டும் என்பது மரபாகக் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர், திரு. கே. டி. கே. தெரிவித்தது போன்று சட்ட விதியில் இல்லை. இடம் ஒதுக்குகின்ற முழு பொறுப்பு, அதிகாரம் அவைத் தலைவ வருக்குத்தான் இருக்கிறது. அதைத்தான் அவைத் தலைவரவர்கள் கடைபிடித்து வருகின்றார்கள். அந்த முறையை ஒழுங்குபடுத்த மாண்பு மிகு உறுப்பினர் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி நடக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபாநாயகர் அந்த அதிகா ரத்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அந்த அதிகா ரத்தை நான் விட்டுவிடப்போவதில்லை. தகுதி அடிப்படையில் இடம் ஒதுக்குவது என்பது சிக்கலான பிரச்னையாகும். அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். பின் பெஞ்சுகளில். இருக்கின்ற உறுப்பினர்கள் வசதியாக வரலாம், போகலாம். உறுப்பினர்கள் எந்த இடத்தில் இருந் தாலும் ஒரே மாதிரியான பார்வைதான் அளிக்கப்படுகிறது. அவையில் "All are equals.".

## (6) அமைச்சர் அறிக்கை.

### திரைப்பட அரங்குகளுக்கு அனுமதிக்கப்படும் மின் விநியோகம் குறித்து, மின்சாரத்துறை அமைச்சரது அறிக்கை.

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் : பேரவையின் 82-வது விதியின் கீழ் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பார்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மின் விநியோ கத்தில் தற்பொழுது இருக்கின்ற விதியின்படி திரைப்பட அரங்குகளில் ஒரு காட்சி தான் நடத்த வேண்டுமென்பது, திரைப்படத் தொழில் பாதிக்கப்பட்டு அதிக இழப்பு ஏற்படும் என்றும் சாதாரணமாக ஒரு

காட்சிக்கு தேவையான மின்சாரம் வழங்கினால் அதைக் கொண்டு சிக்கனத்தைக் கடைப்பிடித்து, அதிகப்படியான காட்சிகள் நடத்த அனுமதிக்கும் படியும் அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. இதுபற்றி அரசு மேலும் ஆராய்ந்து கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :—

ஒரு திரைப்பட அரங்கிற்கு நாள் ஒன்றுக்கு 25 யூனிட் மின்சாரம் வழங்கப்படும். இதைக் கொண்டு ஒன்று அல்லது அதிகப்படியான காட்சிகள் நடத்த முடிந்தவர்கள் நடத்திக்கொள்வதற்கு தடையேதுமில்லை. டீசல் ஜெனரேட்டர் வைத்திருக்கும் அரங்குகளில் அதைக் கொண்டு அதிகப்படியான காட்சிகள் நடத்திக்கொள்ளலாம். இதன் மூலம் விதி முறைதான் சற்று மாற்றப்படுகிறதே தவிர, வாரியத்திற்கு மின் விநியோகத்தில், திரை அரங்குகளுக்கு அதிகப்படியான மின்சாரம் ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவு.

## தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு, 1972-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அளிப்பார் :

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 1972-ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## (8) 1973-74—ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 30—பின் தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"நிதிக் கோரிக்கை எண் 30—பின் தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,56,27,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

*15—3—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



THIRU SOVDI S. SUNDARABHARATHY : Sir, I move the following cut motion to discuss about the implementation of the recommendations made by the Commission of the Backward Classes—

"That the allotment of Rs. 5,56,27,100 under Demand No. 30—Welfare of the Backward Classes, etc., be reduced by Rs. 100."

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பின் தங்கிய வகுப்பினர்களுக்குக் கால்நடைகள் வாங்கி, விற்று வாழ்க்கை நடத்தும் முறையில் வட்டியில்லாக் கடன் வசதி கிடைக்க அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதி கோரிக்கை எண் 30—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,56,27,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, முஸ்லீம்கள் அனைவரையும் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 30—பின் தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,56,27,100 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion to discuss about the increase of income limit eligible for scholarship to Rs. 5,000 a year :—

"That the allotment of Rs. 5,56,27,100 under Demand No. 30—Welfare of the Backward Classes, etc., be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை மானியம் கோரிக்கை எண் 30— கொள்கை விளக்கக் குறிப்பு ஏடு * ஒன்றினை பேரவையின் முன் வைத்திருக்கிறேன். அதை பேரவை பதிவேடுகளில் குறித்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*119-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மணலி கந்தசாமி
அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

திரு மணலி சி. கந்தசாமி : உதவி சபாநாயகர் அவர்களே, பின்
தங்கிய மக்கள் ந..த்துறை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை
சொல்ல முன்வந்திருக்கிறேன்.

இது ஒரு தனி மானியமாக இன்றைய தினம் ஒரு தனி அமைச்சர்
கீழ் இயங்கக்கூடிய விதத்தில் முக்கியத்துவம் பெற்றிருப்பது பாராட்டத்
தக்கது. அப்படிப்பட்ட துறைக்கு இன்றையதினம் ரூ. 5 கோடிக்கும்
அதிகமாக ஒதுக்கியிருப்பது முற்றிலும் பொருத்தமான விஷயம் என்
பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ரூ. 5½ கோடியை பயன்
படுத்தக் கூடிய முறையில் பின் தங்கியவர்களுக்கும் குற்றப்பரம்பரை
யிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது
என்பதை புள்ளி விவரங்கள் சொல்கின்றன. இன்றைக்கு, மாணவர்
களுக்கு கொடுக்கக்கூடிய பணமானது அவர்கள் பூரா கல்வியையும் பெறக்
கூடியவகையில், நல்ல பலன் அளிக்கக்கூடிய முறையில் இருக்கவேண்டும்.
அப்படியில்லாமல், அரைகுறைப் படிப்பு படிக்கக் கூடிய முறையில்
வைத்திருப்பது அவர்களுடைய கல்வியை பாதிக்கிறது என்பதை மாண்புமிகு
அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அவர்
களுக்கு தற்போது கொடுக்கப்படுகிற பணம் கல்லூரிப் படிப்பை முழுமை
யாக முடிக்கக் கூடிய அளவுக்கு இல்லை என்று பல்வேறு இடங்களி
லிருந்து தகவல்கள் வந்துக்கொண்டிருக்கின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member's seat
is somewhere. How can he speak from a seat other than his ?

THIRU MANALI S. KANDASWAMY : Because the seat is vacant,
I have come here..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :-- உறுப்பினர்கள் அவரவர்
கள் இடத்திலிருந்து பேசுவது தான் நல்லது. திரு. சௌடி சுந்தர
பாரதி அவர்கள் கொஞ்சம் இடம் கொடுத்து அவரை அவருடைய
இடத்திலிருந்தே பேசவிட்டால் நல்லது......அவருடைய வயதைக் கருதி
தற்போது அவர் அந்த இடத்திலிருந்தே பேச அனுமதிக்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி :—அடுத்தபடியாக, இந்த ஸ்காலர்ஷிப் வழங்
வதில் ரூ. 1,500 குறைந்தபட்ச வருமானமாக இருக்க வேண்டும் என்று
வைத்திருக்கிறார்கள். இதில் ஒத்துக்கொள்ள முடியாத நிலை இருக்
கிறது. விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. ஒரு பியூனுக்குக்
கூட ரூ. 1,500-க்கு அதிகமாக ரூ. 2,000, ரூ. 2 100 என்று வருகிறது.
எனவே, அவர்களுடைய பிள்ளைகள் இந்தச் சலுகையைப் பெற முடியாத
வர்களாக இருக்கிறார்கள். எனவே, இந்த தொகையை உயர்த்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக, இன்றைக்கு கல்லூரி ஹாஸ்டல்களில் பணக்காரர்
களின் வீட்டுப் பிள்ளைகள்தான், வசதி உள்ளவர்கள்தான் வசதியாக
தங்கிப் படிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. பின் தங்கிய வகுப்பினர்
பிள்ளைகள் அவ்வளவு வசதியாக படிக்க முடியாமலிருக்கிறார்கள்.
இன்றையதினம் ஹாஸ்டல்கள் வியாபார ஸ்தாபனங்களாக இருப்பதால்,
பிற்பட்ட வகுப்பினர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்தை வைத்துக்
கொண்டு நிச்சயமாக படிக்க முடியாத நிலை இருக்கிறது. இத்தகைய
நிலைமை சென்னை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களிலே இருக்கிறது.
அதிகப் படியான பணம் கொடுக்க முடியாத காரணத்தால் இந்த
ஹாஸ்டல்களில் சேர்ந்து படிக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன.
எனவே, கூடிய வரையில் ஹாஸ்டல்களை அரசாங்கமே நடத்துவது நல்லது.
இப்போது அவை தனியாரிடமும், பிரபலஸ்தர்களிடமும் விட்டுவிடுவதால்
சில சிரமங்கள் இருக்கின்றன. எனவே, அரசாங்கமே இந்த ஹாஸ்டல்களை
நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பின் தங்கிய வகுப்பினர் என்று சொல்லும்போது ஸ்தானங்கள்
ஒதுக்குவது, ஸ்காலர்ஷிப் கொடுப்பது ஆகியவற்றில் எல்லாப் பகுதியினருக்
கும் கிடைக்கக் கூடிய முறையில் சரியான வகையில் டிஸ்டிரிப்யூட்
பண்ண வேண்டும் என்பது என் கருத்து. இதிலே சில வெஸ்டட்
இண்டரஸ்ட் இருக்கின்றன என்றெல்லாம் கூறப்படுகிற வகையில் சம்பவங்
கள் நடந்திருக்கின்றன. எனவே, அத்தனை பேருக்கும். சமமான
முறையில் ஸ்காலர்சிப்கள் அல்லது சீட்டுகள் கிடைக்கக் கூடிய அளவுக்கு
பார்க்க வேண்டும் என்று மந்திரி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்த படியாக, சில பின் தங்கிய வகுப்பினர்கள் இருக்கிறார்கள்.
கம்பளத்தார்—இவர்கள் கட்டபொம்மன் பரம்பரையைச் சேர்ந்தவர்
கள். பிரிட்டிஷ் அடக்கு முறையினால் சிதற அடிக்கப்பட்டவர்கள்.
பெரும் அளவில் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்
கள், படிப்பு, வேலை வாய்ப்பு, முன்னேற்றம், ஆகிய எல்லாத் துறை
களிலும் ரொம்ப பின் தங்கியிருக்கிறார்கள் — கவனிக்கப்படாத ஜாதி
யாக இருக்கிறது. அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கவேண்டு
மென்ற வகையில், ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பின் தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்கான ஒரு
தத்துவத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையில், பிற்
பட்ட நல மக்களுக்கு, படிப்பு, தொழில் என்று சொல்லக் கூடிய
வகையில் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள், வளர்ந்து வரு
கின்ற நவீன காலத்திலுள்ள கலாசார அமைப்புக்கேற்ப தங்கள் வாழ்க்
கையை அமைத்துக்கொள்ள வாய்ப்புத் தரப்படவில்லை. நிலப் பிரபுத்துவ
அமைப்பிலிருந்து அவர்களை மாற்றிக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட
வில்லை. எனவே, அவர்களை தொழிலாளர் வர்க்கத்தில் கொண்டு
வரவேண்டும். பலதரப்பட்ட மக்களுடன் சேர்ந்து வாழக் கூடிய வாய்ப்பை
ஏற்படுத்தித் தர வேண்டும். தொழிற் சாலைகளில் அவர்களை நியமிப்ப
தின் மூலம் பலதரப்பட்ட மக்களுடன் — தொழிலாளர்களுடன்—சேர்ந்து

மு.ப. 10-30 வாழ்வதன் மூலம், அவர்கள் ஒரு மெஷின் எஜில் வசிக்கிறார்கள்
என்ற உணர்வை ஏற்படுத்த முடியும். அப்படி ஒரு உணர்வை ஏற்
படுத்துவதன் மூலம் அவர்களை முன்னேற்ற முடியும். அதன் மூலம்
தாங்களும் மற்றவர்களுக்குச் சமமானவர்கள், என்ற ஒரு உணர்வை
ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம்தான் அவர்களை
முன்னேற்றுவதற்கான ஒரு சரியான படியாக அமையும் என்பதை
நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறை
யிலே அது கல்வியிலே இருந்தாலும் சரி அல்லது பாலிடெக்னிக் அல்லது
எஞ்சினியரிங் கல்லாரியிலே வாய்ப்புக் கொடுப்பதாக இருந்தாலும்சரி—
தொழிற் சாலைகளிலே வேலைவாய்ப்புக் கொடுப்பதாக இருந்தாலும்சரி—
அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் வாழக்கூடிய சூழ்
நிலையை ஏற்படுத்துவதுதான் பின்தங்கிய நிலையிலே உள்ள மக்களைக்
கைதூக்கி விடுவதாகும். எனவே இந்தத் துறையிலே அப்படி ஒரு
பாலிசி டெஷிஷன் எடுக்கவேண்டும். பல தொழிற் துறைகளை நாம்
ஆரம்பிப்பதாக இருக்கிறோம். அப்படிப்பட்ட தொழிற் சாலைகள் ஆரம்பிக்
கின்றபொழுது அப்படிப்பட்ட மக்கள் இருக்கக்கூடிய இடங்களிலே, அவர்களை
யெல்லாம் தொழிலிலே ஈர்க்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்யவேண்
டும்.

டோபி கானுக்கள் நகரப் புறங்களிலே உள்ளவர்களுக்குத்தான் கட்டிக்
கொடுக்கிறோம். ஆனால் கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு நாம்
கட்டிக் கொடுப்பது கிடையாது. கிராமத்திலே உள்ளவர்கள் சுதந்திரமாக
குளத்திலோ அல்லது ஆற்றிலோ குறிப்பிட்ட துறையிலே துணிகளைத்
துவைத்துக் கொள்வதற்கான லைசென்ஸ்கள் வழங்கக்கூடிய முறையை
ஏற்படுத்த வேண்டும். என்னென்றால் சில இடங்களிலே அவர்களை
மிராசுதாரர்கள் ஆட்சேபிக்கிறார்கள், அவர்களை மிரட்டுகிறார்கள் என்றெல்
லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராமங்
களிலே உள்ளவர்கள் துணிகளை வெளுப்பதற்குத் தேவைப்படுகின்ற
இடத்தை அவர்களுக்கு அசைன் பண்ணிக் கொடுக்கவேண்டும் அல்லது
அவர்களுக்கு அதைப் பயன்படுத்துவதற்கு உரிமை கொடுக்கப்பட
வேண்டும்.

சலூன் கடைவைத்திருக்கின்ற முடித்திருத்துகின்றவர்கள் பல இடங்
களிலே தங்களுடைய கடைகளையெல்லாம் மிராசுதார்களின் கட்டடங்களிலே
வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதற்கு அதிகமான வாடகை
கேட்கிறார்கள். அவர்களுடைய ஜபர்தஸ்துக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டு
மென்று மிரட்டுகிறார்கள். இல்லையென்றால் அவர்கள் அந்த இடங்களைக்
காலிசெய்துவிடவேண்டுமென்று தொல்லைகள் கொடுக்கிறார்கள்.
அவர்களுக்குத் தேவைப்படுகின்ற இடங்களைக் கொடுக்கக்கூடிய முறையிலே
—குடியிருப்பு மனைகள் வழங்குகின்ற திட்டத்தின் கீழே கொண்டுவந்து
—சிறிய சிறிய இடங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பது நல்லது,
அப்படிச் செய்தால் அவர்கள் தன்மானத்தோடு வாழ்வதற்கு வழி
செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். அவர்களுடைய வருமானத்தை
உயர்த்துவதற்கு அரசாங்கம் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்





கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கின்ற மானியம்
குறைவானது, அதை அதிகப்படுத்த வேண்டும். அவர்கள் தொழிலாளர்கள்
வர்க்கம் என்ற மனப்பான்மை ஏற்படக்கூடிய முறையிலே ஒரு புதிய
மனப்பான்மையை மற்றவர்களோடு சமமாக வாழ வேண்டுமென்ற ஒரு
புதிய நோக்கத்தை கண்ணோட்டத்தை அளிக்கக்கூடிய முறையிலே
காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் துறைக்கு
5¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை செம்மையாகப் பயன்படுத்தி
செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு பின்தங்கிய நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்
களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதன்முதலாக தங்கக்கட்டுப்பாடு சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற்
கொல்லர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்கக்கூடிய வகையிலே
நம்முடைய மாநில அரசும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு
அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மான்புமிகு முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்களையும் மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை
அமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட இலாகாவினரையும் நான்
பாராட்டுகிறேன்.

1963 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட தங்கக் கட்டுப்பாடு சட்டத்
தினால் அதிகமாக பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்கள் ஏறத்
தாழ பத்தாண்டுகாலம் வரையில் காத்திருந்து, தங்கள் குறைகள்
நீங்குவதற்காக காத்திருந்து, அந்த நிவாரணத்தை நம்முடைய
கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்கிக்கொண்டிருக்கிற
அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினர்களுக்காக
இருக்கின்ற இந்த அரசு அவர்களுடைய உரிமைகளை என்றென்றைக்கும்
கண்ணும் கருத்துமாகக் காத்து அவர்களின் குறைகளைக் களைந்து முன்
னேற்றிவிடும் என்ற உண்மையை எல்லோரும் கண்டிருக்கிறார்கள்.

பிற்பட்டோர் நலத்துறைக்கு என்று தனியிலாகா சென்னையிலே
இருக்கிறது, அந்த இலாகாவின் தலைமை இடம் சென்னையிலே இருக்
கிறது. ஆனால் மாவட்டத் தலைநகரங்களிலும், மற்ற இடங்களிலும்
அரிசன நலத்துறை இலாகாவைச் சேர்ந்தவர்கள்தான் அந்த இலாகாவையும்
நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு இருப்பதால், கூடுதல் பொறுப்பாக அது
அமைந்து விடுகிற காரணத்தினால் பிற்பட்ட நலத் துறையிலே செய்யப்
படுகிற நல்ல காரியங்கள் தனிப்பட்ட அளவுக்கு இயங்கினால் எந்த வகை
யிலே நல்ல முறையிலே செயல்படமுடியுமோ அந்த அளவுக்கு சில
இடங்களிலே இயங்கவில்லை என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே
நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மாவட்ட அளவிலேயும்
பிற்பட்ட நலத்துறைக்காகத் தனிப்பட்ட அலுவலர்களை நியமிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக நம்முடைய நாட்டிலே கிராமங்களிலே தொழில்கள் செய்து வாழ்ந்துவந்தவர்கள்தான் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால், முடி திருத்துவோர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார், சலவை செய்கிறவர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார், பொற்கொல்லர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார், இரும்பு வேலை செய்கின்ற கொல்லர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார். தச்சர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார், குயவர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார். கல் தச்சர் கிராமத் தொழிலாளியாக இருந்திருக்கிறார், இப்படி 11 வகை கிராமத் தொழிலாளர்கள் அடங்கிய சமுதாயமாகத்தான் நம்முடைய சமுதாயம் இருந்து வந்திருக்கிறது.

இன்றைக்கு பொற்கொல்லர், கொல்லர், தச்சர், கருமார் போன்றவர்கள் வேலைகளை மற்றவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற தொழில் புரட்சியின் காரணத்தினால் அவர்கள் தங்கள் தொழிலைச் செய்து போதுமான வருமானம் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் மரவேலையைப் பெரிய அளவிலே செய்கின்ற பட்டறைகள் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதே போன்று இரும்பு வேலைசெய்வதற்கு எஞ்சினியரிங் ஒர்க்ஷாப் அதிகமான அளவுக்கு செய்வதற்கு வந்து விட்டதால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதேபோன்று பாத்திர வேலைகள் செய்பவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகக் கூடிய முறையிலே அத்தனையும் தொழில் மயமாகிவிட்டது. இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டு விட்ட காரணத்தினாலே மிகவும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு விஸ்வ கர்ம வகுப்பைச் சேர்ந்தவர்கள் தான். எனவே இதையெல்லாம் கருத்திலே கொண்டு நம்முடைய பிற்பட்டோர் நலத்துறையிலே நாம் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவும் மிகவும் சிறப்பான ஒரு அறிக்கையை அளித்திருக்கிறது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே அவர்கள் செய்துவந்த தொழிலின் அடிப் படையிலே ஏற்படுத்தப்படுகின்ற தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அதாவது கொல்லர்களுக்கு எஞ்சினியரிங் ஒர்க்ஷாப்புகளி ல முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். கருமார்களுக்கு பாத்திரங்கள் செய்கின்ற தொழிற் சாலைகளிலே முன் னுரிமை அளிக்கப்பட வேண்டும். தச்சர்களுக்கு மரவேலை செய்கின்ற தொழிற்சாலைகளிலே முன்னுரிமை கொடுக்கவேண்டும். இப்படி ஏதேனும் ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய அரசு நிறைவேற்றினால் தான் பரம்பரை பரம்பரையாக அவர்கள் செய்துவந்த தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும், அந்த ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கை யிலே முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைத் தொழில் மிகச் சிறப்பான ஒரு தொழிலாகும். அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு நிறையப் பேர்கள் இருக்கிறார் கள். இன்றைக்கும் அவர்கள் கலை அழிந்துவிடவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் மண்டபம் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பான சிற்பிகள் எல்லாம் நம் நாட்டிலே இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான் அது காட்டுகிறது. முன்னாலே இருந்த சிற்பிகளால் செய்யப்பட்ட சிலைகள் இன்றைக்கு



பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு வாங்கப் படக்கூடிய பொக்கிஷமாக இருக்கின்றன. அவர்களுடைய திறமை அழிந்து விடாத வண்ணம், அவர்களுடைய பெருமை சிதைந்துவிடாத வண்ணம் அவர்களுடைய திறமையை மேலும் உயர்த்தி விடக்கூடிய அளவிற்கு நாம் புதிய திட்டத்தைத் தீட்டி அவர்களுக்குப் போது மான வாய்ப்பு அளிக்கவேண்டும். நம்முடைய நாட்டிலே பல கோயில் களிலே பழங்காலச் சின்னங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைப் புதுப்பிக்கின்ற வேலைகள் நடைபெறுகின்றன. அந்த வேலைகளுக்கு இப்படிப்பட்ட சிற்பிகளையும், கல் தச்சர்களையும் பயன்படுத்தி நம்முடைய பாரம்பரியமான கலைப் பொருட்கள் அழிந்துவிடாத வண்ணம், சிதைந்து விடாத வண்ணம் அவைகளுக்கு புது மெருகு ஊட்டக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அதேபோல், ஆந்திர மாநிலத்தில் ஆஸ்தான சிற்பி என்று வைத் திருக்கிறார்கள் அரசாங்கத்தின் சார்பில். நம்முடைய தமிழ் நாட்டில் கூட அதே போல் ஆஸ்தான சிற்பி என்று வைத்துக் கொள்ளலாம்.

அடுத்து, பல்வேறு கலைத் தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. சுவாமி மலையில் விக்கிரகங்கள் செய்கிற தொழிற்கூடம் இருக்கிறது. தஞ்சையில் ஆர்ட் ப்ளேட் செய்வதில் சிறந்த வல்லுநர்கள் இருக்கிறார்கள். அதற்கு இன்ஸ்டிடியூட் கூட இருந்தது. இப்படிப்பட்ட தொழிற்கூடங் களில் பொறுப்புள்ள பதவிக்கு வர கல்வித் தகுதியை அடிப்படையாக வைத்திருப்பதால் சில நேரங்களில் திறமையும், தகுதியும் வாய்ந்தவர்கள் தள்ளப்படுகிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். சாதாரணமாக, பிறப்பில் இருந்து பரம்பரையாகத் தொழில் செய்து இதிலே ஈடுபட்டவர்கள் கல்வித் தகுதி அதிகம் இல்லாவிட்டா லும் தொழிலிலே, தொழிற் பயிற்சி கொடுப்பதிலே திறமையும், ஆர்வ மும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை சூப்பரின் டெண்டுகளாகப் போடவும், இன்ஸ்ட்ரக்டர்களாகப் போடவும் அரசாங்கம் எக்ஸம்ப்ஷன் கொடுத்து பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட கிராமத் தொழில்களின் அடிப்படையில் இருக்கும் சமூகத்தைப் பிற்பட்ட சமூகம் என்று குறிப்பிட்டு பல்வேறு சலுகைகளும் முன்னுரிமைகளும் அளிக்கப்படுகின்றன. விஸ்வகர்மா சமூகம் மதி நுட்பத்தில் சிறந்தவர்கள், கலைத் தொழிலில் சிறந்தவர்கள் என்று பிற்பட்டோர் நலக் குழு அறிக்கையில் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார் கள். கலைத் தொழில் சிறப்பு மிக்க சமூகம் பொருளாதாரத்திலும் கல்வித் தகுதியிலும் முன்னேற்ற தகுதியும் திறமையும் வாய்ந்த அந்தச் சமூகத்தை முன்னேற்ற பல்வேறு முயற்சிகளை நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் அறிந்தாலும் அவர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து மேலும் முன்னுரிமைகளும் சலுகைகளும் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. என். கணபதி] [1973 மார்ச் 15

நம்முடைய பிற்பட்டோர் நலத்துறை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது
என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டு காட்ட விரும்புகிறேன். பிற்
பட்டோர் நலக் குழு சிபாரிசில் பிற்பட்டோர் யாரும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.
தகுதி பெற்றவர்கள் அதிகமாக இல்லையென்ற நிலைமையில் அவர்களுக்குப்
பயிற்சியளிக்க தனிப் பள்ளிக்கூடத்தை அமைக்க வேண்டுமென்று
சிபாரிசு செய்தார்கள். அதை உடனடியாக மாண்புமிகு கலைஞர் அவர்
களும், மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர் அவர்களும் நடை
முறைப்படுத்தி சென்ற ஆண்டில் அந்தகைய பயிற்சிப் பள்ளியை
ஆரம்பித்து அதிலே பயிற்சி பெற்றவர்களில் எட்டுப் பேர் ஐ.ஏ.எஸ்.
தேர்வுக்கு அகில இந்திய அளவில் போட்டியிட்டு 3 பேர் தேர்வு
பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் இப்போது நேரடித் தேர்வுக்குப்
போகப் போகிறார்கள், அவர்கள் நிச்சயமாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக
வரப் போகிறார்கள் என்பதை முழு மனதோடு வரவேற்கிறேன். அந்தப்
பயிற்சிப் பள்ளி இந்த ஆண்டு அதிகமான மாணவர்களைச் சேர்த்து
பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.
தகுதி பெற வழி செய்து அதிகாரிகளை உற்பத்தி செய்து தரவேண்டு
மென்று கோருகிறேன்.

நம்முடைய பிற்பட்டோர் நலத் துறையில் பல்வேறு ஸ்காலர்ஷிப்புகள்
வழங்கப்படுகின்றன. மாணவர்கள் அவற்றை நன்றாகப் பயன்படுத்தி
மேலும் மேலும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வேண்டு
மென்ற அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படு
கின்ற நேரத்தில் ஒருசில நேரங்களில் தகுதியான சில மனுதாரர்கள்கூட
சில நேரங்களில் ஒதுக்கப்படுகின்றனர். நூற்றுக்கணக்கான மனுக்கள்,
ஆயிரக்கணக்கான மனுக்கள் வருகின்ற நேரத்தில் ஒருசில தவறுகள்
தான் இருக்கின்றன என்றாலும் மிகக் குறைவாகவேதான் தவறுகள்
இருக்கின்றன என்றாலும் அதை மேலும் குறைக்கவேண்டுமென்று
சம்பந்தப்பட்ட இலாகாவினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கல்வித் தகுதி
அடிப்படையிலோ அல்லது வேறு தகுதி அடிப்படையிலோ ஒருவர் கல்விக்
கூடத்தில் சேரவேண்டுமென்றால் அரசாங்க உத்தியோகத்தில் சேரவேண்டு
மென்றால் அவர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு சிக்கலை
மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டுப்புறத்திலே பயிலுகிற பிற்
பட்டோர் அதிகமாக தேர்வில் மார்க்குகள் வாங்க முடியாது. அதற்கு
முக்கியமான காரணம் அவர்கள் வளர்கின்ற சூழ்நிலை, வாழ்கின்ற
சூழ்நிலை; அவர்கள் படிக்கின்ற சூழ்நிலை, அவர்கள் அறிவு பெறுகின்ற
சூழ்நிலை கிராம சூழ்நிலைக்கேற்ப இருக்கிறது. அதிலே ஒருவன் நூற்
றுக்கு 45 மார்க் வாங்கினாலே அதை அதிகமாகக் கருதவேண்டும்.
ஆனால் நகரத்திலே இருக்கும் அதே பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவன்
இங்கு இருக்கும் சூழ்நிலை காரணமாக நூற்றுக்கு 60 மார்க் வாங்கி
விடுகிறான். ஆகவே, இவர்கள் இருவரும் ஒரு தேர்வுக்குச் செல்லு
கின்றபோது 60 மார்க் வாங்கிய மாணவனைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள்.
45 மார்க் வாங்கிய கிராமத்தில் படித்த மாணவனைத் தேர்ந்தெடுப்பதில்லை.
நம்முடைய குழு இதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து சூழ்நிலைக்கேற்ப
ஒருவனுக்குக் கிடைக்கின்ற மார்க்குகளை வைத்து அந்த அடிப்படையில்



1973 மார்ச் 15] [திரு. என். கணபதி]

சூழ்நிலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நம்முடைய அரசாங்கம்
திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்த
வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமானால் நிச்சயமாக கிராமத்தில் இருக்
கும் பிற்பட்ட மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்கும். இல்லாவிட்டால் கிரா
மத்தில் இருக்கக்கூடிய பிற்பட்டவர்கள் என்றுமே பிற்பட்டவர்களாக
இருக்க வேண்டுமென்று நிலைமை ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட நிலைமை
யில் நகரம், கிராமம் என்ற ஏற்றத் தாழ்வு என்றைக்குமே இருக்கும்
என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்து சூழ்நிலையும் கருத்தில்
கொண்டு அந்த அடிப்படையில் பிற்பட்டோர் நலக் குழு வால்யூம் 1—
பக்கம் 109-ல் சொல்லப்பட்டிருக்கும் கருத்தை அரசாங்கம் ஏற்று தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு
தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு
வழங்கப்பட்ட சலுகைக்காக நன்றியைத் தெரிவித்து உரையை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

திரு. குழ. செல்லையா: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டு
மக்களைப் பொறுத்தவரை நாலைந்து பகுதிகளாக நாம் பிரித்திருக்கிறோம்.
பிற்பட்டோர் என்றும், மிகவும் பின்தங்கியவர்கள் என்றும், தாழ்த்தப்
பட்டோர் என்றும் பல்வேறு வகையாப் பிரித்திருக்கிறோம். கல்வியின்
நிலைமையைப் பொருத்தும், பொருளாதார அடிப்படையிலும், செய்கின்ற
தொழிலின் அடிப்படையிலும் இப்படிப் பிரித்திருக்கிறோம். 1969–70-ல்
இந்தத் துறைக்கு 2 கோடி 48 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1973–74-க்கு
5 கோடி 56·27 லட்சம் ஒதுக்கப்பட்டு அந்த அடிப்படையில் திட்டங்கள்
உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே நாட்டில் இருக்
கும் பின்தங்கிய மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் சரியான
முறையில் கிடைத்திருக்கிறதா என்பதைக் கவனமாகப் பார்க்க வேண்
டும்.

பிற்பட்டோர் நல ஆணைக் குழு தமிழ்நாடு முழுவதும் சுற்றிப்
பார்த்து, அவர்களை எல்லாம் நேரடியாகச் சந்தித்து கேட்டறிந்த தகவல்
களைக் கொண்டு அரசுக்கு அனுப்பிய பரிந்துரையில் 110 விதமான
திட்டங்களை கூறியிருக்கிறது. அந்த 110 வகையான
திட்டங்களிலே 17 வகையான திட்டங்களைத்தான் அரசு ஏற்றுக் கொண்
டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்கள் சொன்ன மற்றத் திட்டங்களை
யும் அரசு ஏற்று செயல்படுத்த முன்வரவேண்டுமென்று கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன். அப்படி எல்லாவற்றையும் ஏற்று செயல்படுத்தினால்தான்
உண்மையிலேயே அந்தப் பின்தங்கிய மக்களுக்குப் பலன்கள் போய்ச்
சேரும். இதிலே உண்மையிலேயே மிகப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த
மக்கள் விடப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் அந்தப்
பகுதியில் முத்துராஜா வகுப்பைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல்
எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். திருச்சி
மாவட்டத்தில் வல்லம்பர் இனத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள்.
அவர்கள் தஞ்சையிலும் அறந்தாங்கி பகுதியில் இருக்கிறார்கள். இவர்கள்
அந்தப் பட்டியலிலே சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள்.

தாரத் துறையில், தொழில் துறையில் மற்றச் சமுதாயத்தினரோடு வாழத்
தக்க முறையில், அவர்களின் நிலைக்கு உயர்த்தத் தக்க முறையில் இந்த
முத்துராஜா குல மக்களுக்கு அத்தனைச் சலுகைகளையும் வழங்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு விடுதிகளை எடுத்துக்கொண்டால் தனியார்கள் தனிப்பட்டமுறையில்
பல்வேறு இனங்களின் அடிப்படையில் விடுதிகளை நடத்திக் கொண்டு
வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக்கூறியதுபோல்
தனிப்பட்டோர் விடுதிகள் நடத்துகிற முறையை ஓரளவிற்கு நீக்கிவிட்டு
அரசாங்கமே பூர்ணமாக அந்த விடுதிகளை ஏற்று நடத்துவது சாலச்
சிறப்புடையதாகும் என்று தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்
கிறேன். தனிப்பட்டோர் அந்த விடுதிகளை ஒரு பிஸினஸ் போல், வியா
பார நோக்கோடு நடத்துகிறார்களே தவிர பொது நோக்கோடு, மக்க
ளுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற மனோபாவத்தோடு அந்த
விடுதிகளை நடத்துவதாகத் தெரியவில்லை. அவர்கள் அவற்றை வியாபார
நோக்கோடு நடத்துவதால் அவற்றை தனியார் நடத்தாமல் அரசே
அவைகளை மேற்கொண்டு எந்த அளவிற்கு நடத்த முடியுமோ அந்த
அளவிற்குச் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முகவை மாவட்டம், நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி
மாவட்டம் இவற்றில் பரவர், முக்குவர் என்று இரண்டு மூன்று இனங்க
ளாக இருக்கிறார்கள். முக்குவர் என்று சொல்லப்படுகிற இனம் வலைஞர்
என்பதன் ஒரு உட்பிரிவாக இருப்பதாகத் தெரிகிறது. அவர்களில்
நூற்றுக்கு நூறு பேர் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்
கிறார்கள். குமரி மாவட்டத்திலும், செங்கோட்டை வட்டத்திலுமுள்ள இந்த
மீனவ சமுதாய மக்களை, அவர்கள் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்களாக
இருப்பினும் அவர்களைப் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்து
அவர்களுக்குண்டான எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுவதாக அறிகிறேன்.

ஆனால் அதே நேரத்தில் முகவை, நெல்லை மாவட்டங்களில் இந்த
மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்
களாக இருந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்குவதாகத்
தெரியவில்லை. ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள், ஒரே உறவினர்கள்,
ஒரு பகுதியில் உள்ளவர்கள் சலுகை பெறுகிறார்கள், இன்னொரு பகுதியில்
இருப்பவர்களுக்கு அந்தச் சலுகைகள் இல்லை என்ற நிலைமையை மாற்றி
குமரி மாவட்டத்தில் உள்ள இந்த இன மக்களுக்கு என்னென்ன சலுகை
கள் வழங்கப்படுகின்றனவோ அதேபோல் மற்ற மாவட்டங்களிலும் உள்ள
இவர்களைப் பின்தங்கியோர்ப் பட்டியலில் சேர்த்து இவர்களுக்குள்ள சலுகை
கள் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். செல்வாக்கை வைத்துக்கொண்டு உயர்ந்த வகுப்பார்கூட இத்
தகைய சலுகைகளைப் பெறக்கூடிய தன்மை பல்வேறு பகுதிகளில் காணப்
படுகிறது. அந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட
வகுப்பு மக்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றனவோ
அத்தகைய சலுகைகள் எல்லாம் இந்த முத்துராஜா குல மக்களுக்கும்
ஒதுக்கி தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்
கிறேன். வணக்கம்.



*திரு பூ. எட்டியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்
களே, பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியத்தை மிகத் மு.ப.
தூய்மையாக வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல 11-0(
விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய மக்களுக்காக உணவு விடுதிகள்
ஆங்காங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக 7,668 மாணவர்கள்
இன்றைக்கு ஹாஸ்டலில் இருந்து வருகிறார்கள். ஆனால் வடார்க்காடு
மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 380 மாணவர்கள் தான் இருக்கிறார்
கள். அப்படிப்பார்த்தால் 3 சதவீதம் மாணவர்கள் தான் வசிக்கிறார்கள்.
வடார்க்காடு மாவட்டத்தில் மிக மிகப் பின் தங்கிய மக்கள் ஏராளமாக
இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மிகவும் பின்தங்கிய மக்கள் ஏராளமாக
வாழ்கிறார்கள். அவர்கள் உண்ண உணவுக்குக் கூட வகையில்லாத நிலை
யில் இருக்கிறார்கள். அப்படியிருக்கும் பகுதியில் படிக்கும் மாணவர்கள்
3 சதவீதம் இருக்கிறார்கள் என்றால் அந்தப் பகுதி கவனிப்பார் அற்றுக்
கிடக்கிறது என்பதைத் தான் எடுத்துக்காட்டுகிறது. என்று கூறிக்கொள்
கிறேன். ஏனெனில் எந்தத்திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் எந்தத்
திட்டங்கள் வந்தாலும், பிற மாவட்டங்களுக்குச் செய்வது போல், வடார்க்
காடு மாவட்டத்தைச் செய்யவேண்டுவதில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது.
அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிற்பட்டோர் கல்வித் துறைக்காக ரூ. 433 லட்சம் கேட்டு
இருக்கிறார்கள். அதிலே 309 லட்சம் குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்
பட்டோர் நலனுக்காக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மீதியுள்ள
24 லட்சம் தான் மற்றப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செலவிடப்படுகிறது.
இது மிகவும் குறைவாக இருக்கிறது. பின் தங்கிய மக்களுக்காக,
குறிப்பாக ஹரிஜனங்களுக்காக வீட்டு மனைகள் வழங்கப்படுகிறது. கூலி
வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைகள் வழங்குவதோடு
மட்டுமல்லாமல், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கும் வழி
வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்கு மானியம் கொடுக்கிறார்கள். 1–2 ஏக்கர் நிலம்
வைத்திருக்கும் பிற்பட்ட மக்களுக்காகக் கிணறு வெட்ட மானியத் தொகை
யில் கணிசமான தொகையை மானியமாக ஒதுக்கித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பெருவாரியாக உயர்நிலைப் பள்ளிகள், உயர் ஆரம்பப்
பள்ளிகள் இருக்கின்றன. மிகவும் பின்தங்கிய மக்கள் ஒரு உயர் நிலைப்
பள்ளிக்கு வருவது என்றால் 2–3 மைல் நடந்து வரவேண்டியிருக்கிறது.
அவர்கள் புத்தகம் மட்டும் தான் கையில் எடுத்து வருகிறார்கள். திரும்பிச்
செல்கிறபோது பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. ஆகவே,
அவர்களுக்குப் பள்ளியிலேயே மதிய உணவு தருவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில்

அவர்களையெல்லாம் இந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கான தன்மையில்
அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களுக்கு வேண்டியவர்கள்
வெளியே அந்த ஆணைக் குழுவிடம் சொல்வதற்கான வாய்ப்பில்லை.
அந்த வகுப்பைச் சார்ந்த மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் அன்றாடக்
கூலிகளாக கூலிவேலை செய்து வாழக் கூடிய மக்களாக இருக்கிறார்கள்
இந்த வல்லம்பர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். எனவே அவர்களையும்
பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1957-ல் குளித்
தலைப் பகுதியில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களை அனுப்
பிய அந்த மக்களில் முத்துராஜா சமுதாயத்தைச் சார்ந்த மக்கள்தான்
அதிகமாக வாக்களித்து மாண்புமிகு முதல்வர் அவர்களை அனுப்பினார்கள்
என்பதில் பெருமையும் பூரிப்பும் கொள்கிறோம். அந்த மக்களைப் பற்றி
முதல்வர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த மக்கள் தமிழகத்தில் 80
லட்சத்திலிருந்து ஒரு கோடி வரையில் இருக்கிறார்கள் என்பதை இங்கு
எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக தஞ்சை, இராமநாதபுரம், கோவை, வட ஆர்க்காடு போன்ற
மாவட்டங்களில் உள்ள பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களைக்
கொண்டு இந்த முத்துராஜா குல மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.
திருச்சியைப் பொறுத்தவரையில் முத்துராஜா என்றும் முத்தரையர்
என்றும் இப்படி பல்வேறு பெயர்களில் வாழ்ந்துவருகிறார்கள். தஞ்சை
மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் முத்துராஜா என்றும், அம்பலக்காரர்
கள் என்றும், சேர்வை என்றும், வலயர் என்றும், மீனவர் என்றும்,
பூசாரிகள் என்றும் இப்படிப் பல்வேறு பட்டப் பெயர்களில் இருந்து
கொண்டிருக்கிறார்கள். சென்னையை எடுத்துக்கொண்டால் அவர்கள்
வெளியே நாயுடு என்று போட்டுக் கொள்கிறார்கள். அவர்களது சர்டிபிக்
கேட்டுகளைப் பார்த்தால் முத்துராஜா என்று போடப்பட்டிருக்கும். மதுரை
மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கண்ணப்பர் குல மக்கள் என்று
போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு பெயர்களில் பல்வேறு
மாவட்டங்களிலே பல்வேறு பகுதிகளில் இந்த முத்துராஜா குல மக்கள்
வாழ்ந்து வருகிறார்கள் பல உட்பிரிவுகளாக. இந்த சமுதாய மக்கள்
80 லட்சத்திற்கு மேல் ஒரு கோடி வரையில் தமிழ்நாட்டில் இன்றைய
தினம் வாழ்ந்துவருகிறார்கள்.

இப்போது பின்தங்கிய வகுப்பினர் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்
என்று பிரிக்கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட
சலுகைகள் வழங்கும்போது நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல்,
மிகவும் பின்தங்கிய பொருளாதாரத் துறையில், கல்வித் துறையில்,
தொழில் துறையில் மிக மிகப் பின்தங்கிய மக்களுக்குத்தான் அவர்
களுக்கான சலுகைகள் கொடுக்கப்படவேண்டும். ஆகவே இன்று அரசு
சலுகைகள் வழங்குகின்றன என்றால் உயர்ந்த வகுப்பார்கூட
தங்களை எந்தவிதத்திலாவது பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்து
விடக்கூடாதா என்று எப்படியோ தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி,
தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி பின்தங்கிய வகுப்பினர்பட்டியலில்
சேர்க்கப்பட்டு அந்தச் சலுகைகளை பெற்று வந்துவிடுகிறார்கள்.





தமிழ்நாட்டில் 80 லட்சத்தில் இருந்து ஒரு கோடிவரை முத்துராஜா
குல மக்கள் இருக்கிறார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.
அவர்களில் 10 சதவீதம் தவிர மற்ற அத்தனைபேர்களும் கூலி வேலை
செய்து பிழைக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். குறிப்பாக ஆதி
திராவிட மக்களை எந்த அளவிற்கு மதிக்கிறார்களோ அந்த அளவிற்குத்
தான் இவர்களையும் மதிக்கிறார்கள், அவர்களை எந்த அளவிற்கு வைத்
திருக்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் இவர்களும் வைக்கப்பட்டிருக்
கிறார்கள். தஞ்சை மாவட்டமானாலும் சரி, மதுரை மாவட்டமானாலும்
சரி, திருச்சி மாவட்டமானாலும் சரி, கோவை மாவட்டமானாலும் சரி, வட
ஆர்க்காடு மாவட்டமானாலும் சரி, இந்த முத்துராஜா இன மக்கள் மிகப்
பின்தங்கிய முறையில் நல்ல உடை உடுக்கக்கூட முடியாமல், நல்ல
தொழில் செய்து பிழைக்க வழியில்லாமல், தனியார் நிலங்களில் கூலி
வேலை செய்து நிலத்தை குத்தகைக்கு உழுது கொண்டிருக்
கிறார்கள், பண்ணையார்களிடம் பரம்பரையாக அடிமைகளைப் போல் இருந்து
பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்
என்பதை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனவே, இந்த முத்துராஜா குல மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்க
ளுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள், மருத்துவக் கல்லூரியில் இடங்கள்
ஒதுக்குவது, என்ஜினியரிங் கல்லூரியில் இடங்கள் ஒதுக்குவது, கால்நடை
மருத்துவக் கல்லூரியில் இடங்கள் ஒதுக்குவது போன்ற பிற சலுகைகளை,
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படுகின்ற எல்லாச் சலுகைகளையும்
இந்த முத்துராஜா குல மக்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல்
ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் பின்தங்கிய வகுப்பைச்
சார்ந்த மக்களுக்கு வெற்றி கிடைப்பது முடியாத காரியமாக இருக்கிறது.
பரம்பரையாக வந்துகொண்டிருக்கிறார்களே தவிர, ஜில்லாக் கலெக்டர்,
ஐ.ஏ.எஸ். தேறியவர்கள் பிள்ளைகள் என்று பாரம்பரியமாக வருகிறதே
தவிர பின்தங்கிய வகுப்பினருக்கு கிடைப்பதில்லை. கடந்த ஆண்டு அந்தக்
குழு பரிசீலனை செய்து ஒரு பட்டியலை வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு கோடி
மக்கள் தொகை கொண்ட இந்த முத்துராஜா குல மக்களில் மொத்தம்
இதுவரை படித்து பட்டம் பெற்றுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை 50
பேர்கள்தான் என்று எடுத்துக் கூறியிருக்கிறகள். என்ஜினியர்கள் ஒரு
லட்சம் பேர்களில் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பத்து பேர்கள்
தான் இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். டாக்டர்கள்
ஐந்து பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று காட்டியிருக்கிறார்கள். கால்
நடை மருத்துவர் ஒருவர்தான் இருக்கிறார். இப்படி மொத்தமாக 68
பேர்கள்தான் பல்வேறு துறைகளில் இருக்கிறார்கள். இதை அமைச்சர்
பெருமக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு கோடி மக்கள் தொகை
யைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் இருந்து இவ்வளவு பேர்கள்தான்
பல்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எந்த
அளவிற்கு பிற்போக்கான தன்மையில் இந்த மக்கள் இருக்கிறார்கள்
என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கல்வித் துறையில், பொருளா

[திரு. பூ. எட்டியப்பன்] [1973 மார்ச் 15

பெரியகொழப்பலூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில்
ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. கிட்டதட்ட 700 மாணவர்கள் படிக்
கிறார்கள். அவர்களுக்கு உணவு விடுதி கட்டித் தரவேண்டுமென்று கேட்
கிறோம். மாவட்ட அதிகாரிகள் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள்.
சென்னை இயக்குனர் அதைக் கவனிக்கவில்லை. பெரணமல்லூரிலும் உள்ள
உயர்நிலைப் பள்ளி இந்தப் பள்ளி 1950-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்தப்
பள்ளிக்கு ஒரு விடுதி உடனடியாகக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பாசனக் கிணறுகள்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். 2—1—71-ல்
சட்டநாதன்பிள்ளை பரிந்துறைக் குழு 110 திட்டங்களைக் கொடுத்து
அதைப் பற்றிக் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள் 17
எண்கள் மட்டும் தான் தற்போது அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. மேலும் பல இடங்களில் நடத்த வேண்டுமென்றால் நிதிப்
பற்றாக்குறை என்று சொல்லுகிறார்கள். பின் தங்கிய மக்களின் நலன்
கருதி, இந்த ஆண்டு ஒரு 20 பரிந்துரைகள்மீது அதை நிறைவேற்றித்தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் பின்தங்கிய
வகுப்பைச் சார்ந்தவராக இருக்கிறார் என்பதைச் சொல்லிக் கொள்ள
பெருமைப்படுத்துகிறேன். அவர் அதற்காகத் தனி இலாகாவை ஏற்படுத்தி,
ஒரு தனி அமைச்சரைப் போட்டுக் கொடுத்ததற்காக நான் நன்றி தெரி
வித்துக்கொள்கிறேன். அவரை எவ்வளவு பாராட்டினால் அது மிகை
யாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்தச் சட்டநாதன்பிள்ளை அறிக்கையை வற்புறுத்திக்
கூறுவது எல்லாம், பரிந்துரை, 49-59 உன்னிப்பாக கவனிக்கப்படவேண்
டும். மேலும், பரிந்துரை 43, 45, 91 ஆகியவையும் கவனிக்கப்பட
வேண்டும். 55-ல் குறிப்பிட்டு இருப்பதும் கவனிக்கப்படவேண்டும். இந்தத்
திட்டங்கள் எல்லாம் அமல் நடத்தப்பட்டால் மேலும் பிற்படுத்தப்பட்ட
மக்கள் பயன் அடைவதற்கு வழிகோலும் என்று தெரிவித்துக்கொள்
கிறேன். அவர்கள் நல் வாழ்வை அடைவதற்கு, நல் வசதிகளைப் பெறு
வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, இந்த அரசாங்கம் அவர்கள்
வாழ்வில் அக்கறை கொண்டு செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அவர்கள்
பாராட்டாமல் இருக்க முடியாது என்று தாழ்மையோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் குறிப்பாக முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த சகோதரர்
கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்வதைப் பார்க்கிறோம். அவர்
கள் வெற்றிலை வியாபாரம் செய்பவர்களாக, கருவாட்டைத் தலையில்
தூக்கிக்கொண்டு விற்பவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களையும்
பின் தங்கிய சமுதாயத்தினர் பட்டியலில் சேர்த்து, ஆவன செய்ய
வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, பின் தங்கிய நலத் துறை அமைச்
சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் இது குறித்து பரிசீலனை
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் விடை பெறுகிறேன்.
வணக்கம்.



1973 மார்ச் 15]

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு துணைத் தலைவரவர்
களே, இந்தப் பின் தங்கிய நலத் துறை மானியத்தின் மீது ஒரு சில
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உண்மையிலேயே, மனிதாபிமானத்தோடு பணியாற்றிவரும் இந்தத்
துறை மானியத்தை நான் முழு மனதுடன் வரவேற்று, ஆதரித்து,
பாராட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய அரசு
பின் தங்கியவர் நலனில் அக்கறை கொண்டு அவர்கள் முன்னேற்றத்திற்
காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி ஒரு தனி அமைச்சரைப் போட்டு
அதற்காக ரூ. 5! கோடிக்கும் மேலாகத் தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள்.
இத்தனை தூரம் இந்த அரசு செய்கிறபோது மத்திய அரசாங்கம் 1969-70-ல்
பிற்பட்டோர் நலனுக்காகக் கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்திக்
கொண்டார்கள் என்று கேள்விப்படுகிறபோது உண்மையிலேயே கஷ்டத்திற்
குரிய ஒன்றாக இருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால் இந்தப்
பிற்பட்ட மக்களின் நலனில் மத்திய அரசு அக்கறை காட்டவில்லை என்
பதைத்தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்தச் சபை
மூலமாக மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். மீண்டும்
அந்தத் தொகை மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கவேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய மக்களுக்காகக் கடன் சலுகைப் பள்ளிகளில் கல்லூரிகளில்
கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதைப் பெறுவதற்காகப் பல அத்தாட்சிகள்
சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. அந்த அத்தாட்சிகள் பெறுவதில் பல
சங்கடங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்
நண்பர் லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் லப்பை வகுப்பைச்
சார்ந்தவர்கள். நாங்கள் முஸ்லீம்கள் சாதிப்பிரிவினைப் பேசுவது இல்லை.
நாங்கள் அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வது இல்லை. ஆங்கிலேயர்
ஆட்சிக்காலத்தில் லப்பைகள், டக்னிகள் என்ற அடிப்படையில் பிரித்
தார்கள். அவர்கள் 2-3 தலைமுறையாக தாய் மொழி உருது என்று
மாற்றிக்கொண்டு விட்டதனால் அவர்களுக்குச் சலுகை கிடையாது என்று
சொல்கிறார்கள். அந்த வாதத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிய
வில்லை. அதை எந்த அடிப்படையில் உள்ளது, எந்த நியாயத்திற்கு
அப்பாற்பட்டது என்று தெரியவில்லை.

லப்பைகளுக்குச் சலுகை வேண்டும் என்று சொல்லும்போது, லப்பை
வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் உருது மொழி பேசுவதால் சலுகை மறுக்கப்
படுவது எந்த நியாயத்தின் அடிப்படையில் வந்துள்ளது என்று தெரிவிக்க
வேண்டும். குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி கல்லூரி
யில் மாணவர்களைச் சேர்க்கும்போது ஏராளமான குறைபாடுகள் ஏற்
படுவது எங்கள் கவனத்திற்கு வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த
மாதிரியான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாத வண்ணம் அரசாங்கம்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளின் விவரங்களைப் பார்க்கின்றபோது, மதுரை மாவட்டம் தான் முதலில் நிற்கின்றது. அதைப் பாராட்டும் அதே நேரத்தில், திருச்சி மாவட்டத்தில் ஏதேனும் ஒரு பள்ளிக்கூடமாவது, மேல்மட்டத்திலாவது, கீழ்மட்டத்திலாவது அல்லது நடுநிலைப் பள்ளிகளாவது ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால், திருச்சி மாவட்டம் முழுவதற்கும் ஒன்றுகூட ஏற்படுத்தப்படவில்லை. இது நியாயத்தின்பால் பட்டதாகத் தெரியவில்லை. திருச்சி மாவட்டத்தில் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் அறவே இல்லை என்று சொல்லமுடியுமா என்றால் முடியாது. ஆகவே, அந்த மாவட்டத்திலும் அம்மாதிரி பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக புகுமுக வகுப்பிற்கு மேல் ஒரு மாணவன் சலுகை பெறவேண்டுமென்றால், அந்த மாணவனின் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ரூ. 1,500-க்கு குறைவாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் கூலி என்றாலும், அவருடைய வருமானம் ஆண்டுக்கு ரூ. 1,500-ஐ தாண்டிவிடும். ஆகவே இது நியாயமான வரம்பு அல்ல. ஆண்டு வருமானம் ரூ. 1,500-க்கு குறைவாக இருக்க வேண்டுமென்பதை மாற்றி, இன்னும் கூடுதலாக வரம்பை ஆக்கவேண்டும், ரூ. 5,000 என்று ஆக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

மாணவர் இல்லங்களுக்காகப் புதிதாக 85 கட்டிடங்கள் கட்டப்படப் போவதாக அறிகிறேன். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் ஒரு மாணவர் இல்லம் கூட இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். பின்தங்கிய பகுதி என்பது, பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள் என்பதால் மட்டுமல்ல, மார்க்கத்தால் மட்டுமல்ல, வாழ்க்கைத் தரத்திலும், நீர்வளம், நிலவளம் ஆகியவற்றிலும் பின்தங்கியதாகும். ஆகவே என்னுடைய தொகுதியில் பாமதியில் ஒன்றும், அரவக்குறிச்சியில் ஒன்றும் மாணவர் இல்லங்கள் கட்டித் தரவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

மதிய உணவுக்காக 15 காசு ஒரு மாணவனுக்குச் செலவு செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. 15 காசுக்கு உணவு என்றால், அதில் என்ன சத்துள்ள உணவு இருக்கும். எப்படிச் சிறுவர்களின் வயிறு நிறைய முடியும் என்பதையும் பார்க்க வேண்டும். ஏதோ ஓரளவுக்கு ஊக்கம் தரும் முறையில், ஒன்றும் இல்லாததற்கு இதுவாகிலும் இருக்கிறதே என்ற முறையில் இதற்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இந்த 15 காசு என்பதை இன்னும் கூடுதல் ஆக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, உண்மையிலேயே நியாயத்திற்கு விரோதமான ஒரு கொடுமை இருந்து வருவதைக் காண்கின்றேன். ஒரு அரிசன் பிற்படுத்தப்பட்டவன் என்ற முறையில் சலுகைகள் பெறுகிறான். ஆனால் அதே மனிதன் கிறிஸ்தவனாக மாறி அதே சேரியில், தாழ்த்தப்பட்ட நிலையில் வாழ்ந்தாலும், கிறிஸ்துவ மதத்தை ஏற்றுக்கொண்ட காரணத்துக்காக அவனுக்கு சலுகை இல்லை என்று சொல்லுவது மதங்களுக்கிடையே வித்தியாசம் காட்டுவதாகும். மத சார்பற்ற அரசு நடைபெறுகிறது என்று சொல்லும்போது நாட்டில் ஒரு தாழ்த்தப்பட்டவன் கிறிஸ்தவனாக மாறினால் அவனுக்கு சலுகை மறுக்கப்படுகிறது என்றால் அது மத சார்பற்ற அரசின் நேர்மையான தன்மைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு தொழில் கருவிகள் வாங்கித் தருவதாகச் சொல்லப்படுகிறது. இந்த மருத்துவ சமுதாயம் வாழ்க்கைத் தரத்தில் போதுமான அளவுக்கு முன்னேற்றம் காணமுடியாத பின்தங்கிய சமுதாயம். குறைந்த வருவாய் பெற்று வாழ்கின்ற சமுதாயம். அவர்களுக்கு வீட்டு வசதியில்லை. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக, தள்ளப்பட்டவர்களாக, வெறுக்கப்பட்டவர்களாக, மற்றவர்களோடு தொடர்பு இல்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முறையில் கல்வியளிப்பதிலும், தொழிற்கருவிகள் அளிப்பதிலும், வீட்டு வசதிகள் செய்வதிலும் அமைச்சர் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக என்னுடைய சமுதாய பிரச்னைக்கு வருகிறேன். முஸ்லீம்களின் மதத்தில் முன்பு சொன்னதுபோல உருது பேசுவோர், வங்காளி பேசுவோர், அரபு மொழி பேசுவோர் என்ற பிரிவினை கிடையாது. எங்களுடைய மதத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் கிடையாது. எல்லோரும் ஒரே இறைவனை, நபியை ஒப்புக்கொண்டவர்கள். எங்களிடத்தில் எந்தவித பாகுபாடும் இல்லை. துரதிருஷ்ட வசமாக சட்டத்தில் உருது பேசுவோர் தமிழ் பேசுவோர் என்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறோம். இந்த அநீதியை நீக்க வேண்டுமென்று குறிப்பாக இந்த சட்டமன்றத்தில் பலமுறை கேட்டிருக்கின்றோம். இந்த இரண்டு ஆண்டுகளில் எங்களுடைய முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் உருது பேசக்கூடிய முஸ்லீம் மக்களையும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று தவறாது எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம், ஆனால் யாது காரணமாகவோ எங்கள் மீது இரக்கம் காட்டாமல், அக்கறை காட்டாமல் அரசாங்கம் இருந்து வருவது கண்டு வருந்துகிறேன். சென்ற ஆண்டு இதே மன்றத்தில் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள் நாயுடுகளை பின்தங்கிய வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோள், கோரிக்கை ஏற்கப்பட்டு அந்த வகுப்பு பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதற்காக அந்த சமுதாயம் நன்றியுடையவர்களாக இருக்கின்றது. மற்றவர்களைப் பற்றி முஸ்லீம்களாகிய நாங்கள் அறைகூவல் விடுகின்றோம். ஆனால் எங்களைப்பற்றி மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அக்கறை

காட்டாது இருப்பது வருத்தத்தை அளிக்கின்றது. இன்று தான் முதன் முதலாக ஒரு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இந்த அவையில் முஸ்லீம் சமுதாயத்திற்கு, உருது பேசும் மக்களுக்கு வக்காலத்து வாங்கி பேசியிருக்கிறார். எத்தனையோ எதிர்க் கட்சிகள் இருக்கும் இந்த அவையில் முஸ்லீம் சமுதாயத்துக்காக பரிவு காட்டிப் பேசி, திருவாய் மலர்ந்தருளி அரசிற்கு வற்புறுத்த இனியாவது அவர்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆலிவர் கோல்டுஸ்மித் ஒரு பாடலில் சொல்லியிருக்கிறார்கள். ஏழை யாகப்பட்டவன், எப்படி ஒரு பொருள் தண்ணீரில் மூழ்கும்போது, அதன் மீது அமுக்கும் சக்தி அதிகமாகி மேலும் மூழ்குகிறதோ, அந்த முறையில் ஏழை மனிதன் மூழ்கும்போது, மேலும் அமுக்கும் சக்தி அதிகரித்து மிகவும் மூழ்கிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட சமுதாயத்தில் இருந்து கொண் டிருக் கிறது முஸ்லீம் சமுதாயம். 25 ஆண்டுகளுக்கு முன்பாக அவர்கள் எந்த நிலைமையில் இருந்தார்களோ, அதைவிட இன்னும் மிக அதிகமாக கீழே வீழ்ந்து விட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை பரிதாபத்திற்கு உரியதாக இருக்கிறது. பிச்சை எடுக்கிறவர்களாக பலர் மாறியிருக்கிறார் கள். அந்த சமுதாயத்தின் மீது இரக்கம் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அவர்களையும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் நண்பர் வகாப் கோரிக்கையாக ராணிப்பேட்டை தொகுதியில் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில் படிக்க வருகிறவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொண்டு பேச்சை முடிக்கின்றேன்.

திரு சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பிற் பட்டோர் நல அமைச்சர் மன்றத்தில் கொண்டு வந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

நமது நாடு 1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. 1947-லிருந்து 1969-ஆம் ஆண்டுவரை தமிழகத்தில் இருக்கின்ற பிற்பட்ட மக்களுக்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்ற இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் தவறிவிட்டது என்பதை நாம் தெளிவாகப் பார்க்க முடியும். 1969 மே திங்கள் 2-ஆம் நாள் நமது அரசு பிற்பட்டோர் நலத்துறை என்ற அடிப்படையில் தனியாக ஒரு இயக்குநரை நியமித்து இன்றைக்கு மிகச் சிறப்பாக பிற்பட்ட நலத்துறை செயல்பட்டு வருவதைப் பார்க் கின்றோம். தனியாக டைரக்டர் இருந்தாலும், பிற்பட்டோர் நலத்துறை இன்றைக்கு அரிசன நலத்துறையுடன் சேர்க்கப்பட்டு, அரிசன நலத் துறைக்கும், பிற்பட்டோர் நலத்துறைக்கும் சேர்த்து ஒரு செயலாளர்தான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். பிற்பட்ட மக்கள் நிறைந்திருக் கின்ற தமிழகத்தில், பிற்பட்டோர் நலத்துறைக்கும் அரிசன நலத்துறைக் கும் சேர்த்து ஒரு செயலாளர் என்பதற்கு பதிலாக, பிற்பட்டோர் நலத் துறைக்குத் தனியாக ஒரு செயலாளரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



அதேமாதிரி மாவட்ட அளவில் மாவட்ட நல அதிகாரி என்ற அளவில் அரிசன நலத் துறைக்கும், பிற்பட்டோர் நலத் துறைக்கும் சேர்ந்து ஒருவர்தான் இருக்கிறார். முக்கியமான இந்தத் துறைகளை சிறப்பாக நிர்வகிக்கின்ற முறையில் மாவட்ட அளவிலும், பிற்பட்டோர் நலத் துறைக்கும், அரிசன நலத் துறைக்கும் தனித்தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் வந்த பிறகு இன்றைக்கு கல்வித் துறையிலே பிற்பட்டோர் நலனுக்காக செலவழித்திருக்கிறப் பணம் அதிகமாக இருக் கிறது. 196768-ஆம் ஆண்டில் பின்தங்கிய வகுப்பினருக்கு செலவழித்தப் பணம் 1,61,40,000 ரூபாய். இன்றைக்கு 1972–73-ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டின் அடிப்படையில் பார்த்தால் 5,01,63,000 ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள். அதிலே கூட இந்த ஆண்டு அதாவது 1973–74-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 5,56,27,000 ரூபாய். தமிழ் நாட்டில் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு பிற்பட்டோர் நலத்திற்காக 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் ஒரு கோடி ரூபாய் செலவழித்த தற்குப் பதிலாக இன்றைக்கு 1,56,27,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இந்த மானியத்தின் மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும்போது பெரியவர் மணலி அவர்கள் இந்த அறிக்கையை வரவேற்று, சிறப்பாகப் பாராட்டிப் பேசினார் கள். இந்த அறிக்கையில் ஒரு குறைபாட்டையும் காணமுடியவில்லை என்று பாராட்டி இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு கல்விக்காக பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விச் சலுகை அளிப்பதற்காக செய்யப்பட் டிருக்கிற சலுகைகளையும் நான் அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1966–67-ஆம் ஆண்டில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக் காக இருந்த இல்லங்கள் 11 தான். இந்த 11 இல்லங்களில் தங்கி யிருந்து பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 979. இது 1966–67-ஆம் ஆண்டில். இன்றைக்கு 1972–73-ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாண வர்களுக்காக ஏற்படுத்தியிருக்கின்ற மாணவர் இல்லங்களின் எண் ணிக்கை 123. 1966–67-ல் இருந்த எண்ணிக்கை 11. இந்த ஆறு ஆண்டு காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை 123 ஆக உயர்த்தியிருக்கிறது. அதிலே பயன்பெறுகின்ற பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 7,608 பேர். இதைப் பார்க்கக் கூடிய பின்தங்கிய சமுதாய மாணவர்களும் மற்றவர்களும் இந்த அரசை நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்பதில் எந்தவிதம ஐயப்பாடும் இல்லை.

அதுமட்டுமல்ல. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்காக 1966–67-ல் ஏற்படுத்தப்பட்ட இல்லங்கள் 37. அதிலே பயன் பெற்றோர் எண்ணிக்கை 3,619. இன்றைக்கு 1972-73-ல் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இல்லங்கள் 46. அதிலே பயன்பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 4,369. திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னுல் பின்தங்கிய சமுதாய மாணவர்களுக்கும், குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட சமுதாய மாணவர்களுக்கும் கல்விக்காக இந்தகைய சலுகைகளை அளித்திருக்கிறது. அது மட்டுமல்ல. 34 இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவிகளுக்காக இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், 1966–67-ஆம் ஆண்டில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட சமுதாய மாணவர்களுக்கும் திறக்கப்பட்டிருந்த இல்லங்கள் மொத்தம் 48. அதிலே பயன்பெற்றோர் எண்ணிக்கை 4,598. இப்போது 1972–73-ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் மொத்தம் 169 இல்லங்கள் இருக்கின்றன. அதிலே பயன் பெறுவோரின் எண்ணிக்கை 11,977 ஆக இருக்கிறது. அந்த அளவுக்கு இந்த அரசாங்கம் ஏழை எளிய மாணவர்களுக்கு, பின்தங்கிய வகுப்பினருக்கு, குற்றபட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு நல்ல பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டிலே கூட பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான இல்லங்கள் 20, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சமுதாய மாணவர்களுக்கான இல்லங்கள் 8—ஆக மொத்தம் 28 இல்லங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு அந்த மாணவர்களுக்கு உதவித் தொகையும் கொடுக்கப்படுகிறது. உதவித் தொகைக்காக 1948–49-லே செலவழிக்கப்பட்ட பணம் ஒரு லட்சம் ரூபாய். இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சியினரும் இதை சற்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய விடுதலைக்குப் பிறகு 1948–49-லே செலவழிக்கப்பட்டது ஒரு லட்சம் ரூபாய். 1972–73-லே திராவிட முன்னேற்றக் கழக அரசு செலவழித்திருக்கின்ற பணம் 3,09,38,000 ரூபாய். அதனுல் பயன்பெற்றோர் எண்ணிக்கை 1,89,466 பேர்கள். இந்த பிற்பட்ட சமுதாய மாணவர்களின் முன்னேற்றத்திற்காக இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு முயற்சி செய்திருக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல. இன்று குறிப்பாகப் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தினுல் இன்னும் ஓரிரு கருத்துக்களை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே வாழக்கூடிய மக்களில் நூற்றுக்கு எழுபது பேர் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதே போன்று சேலம் மாவட்டத்திலே குறிப்பாக ராசிபுரம், கரூர் போன்ற பகுதிகளிலும் மதுரை மாவட்டத்திலே பழனி, ஒட்டஞ்சத்திரம் போன்ற பகுதிகளிலும் இருக்கின்ற மக்களில் 70 சதவிகிதம் பேர் வேளாண்மை





யில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கவுண்டன்மார்கள். அவர்கள் முக்கியமாகச் செய்யக்கூடிய தொழில் விவசாயம், மற்றும் சலவைத் தொழில், நெசவுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். நிறைய பேர் தினக் கூலிகளாக இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இந்த ஏழை கவுண்டன்மார்களிலே பெரும்பாலோர் கோவையிலே பஞ்சாலைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் சலவைத் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள்; மூட்டை சுமப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்த கவுண்டன் இனத்து மக்களுக்கு கல்விச் சலுகைகளுக்காக பின்தங்கிய இனத்தவர்களுக்கு அளிக்கப்பட்டும் சலுகைகள் அளிக்கப்படுகிறதே தவிர வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு போதிய இடம் அளிக்கப்படவில்லை. வேலைக்கு மனு செய்தாலும் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அந்த இனத்தைச் சேர்ந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இரண்டுபேர்கள் தான் இருக்கிறார்கள். இன்றைக்கு குரூப் ஒன் சர்வீசில் ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. செக்ரெட்டேரியேட்டிலே பணியாற்றும் 4,000-க்கு மேற்பட்ட ஊழியர்களில் மூன்று பேர்தான் கெஜட் பதிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள்; கிளார்க்குகளாக ஒரு 10 பேர்தான் இருப்பார்கள். இந்த அளவுக்கு அவர்கள் பின் நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்லூரிகளில் சேருவதற்கு என்று தனி சலுகைகள் ஒன்றும் இல்லை.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கோவைக்கு வந்தபோது, கவுண்டன்மார்களை பிற்பட்ட சமுதாயத்தில் சேர்ப்பதற்கு உறுதி தெரிவித்திருந்தார்கள். இவ்வளவு நாட்களாகியும் அவர்கள் பிற்பட்ட சமுதாயத்தில் இன்னும் சேர்க்கப்படவில்லை. அவர்கள் எல்லாத் துறைகளிலும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். மிகவும் ஏழைகள்; கூலிகள்-நெசவாளர்கள்—தொழிலாளர்கள்—சலவைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை பிற்பட்ட சமுதாயத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

இன்னும் ஒன்றை மட்டும் கூறி முடித்துவிடுகிறேன். அருமை நண்பர் திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் முஸ்லீம் சமுதாயத்தை பிற்பட்ட சமுதாயமாகக் கருதவேண்டும் என்று தெரிவித்தார்கள். முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் -அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை எல்லாம் பிற்பட்ட சமுதாயத்தில் சேர்க்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, இங்கே வந்திருக்கின்ற இந்த பிற்பட்டோர் நலத்துறை மானியத்தைப்பற்றி நான் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட்டு நான்காண்டு காலமாக நன்றாகச் செயல்பட்டுவருவது வரவேற்கத்தக்கதாகும். நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் இந்த பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்; அவர்களுக்கு சலுகைகள் அளித்து, அவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற முறையில் பணியாற்ற இருக்கின்ற காரணத்தால் இந்தத் துறை தனியாக்கப்பட்டதை நான் வரவேற்கிறேன். இருப்பினும் இப்போது இந்தத் துறை முக்கியமாக பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி சலுகைகளை அளித்து, அதிலே மேம்பாடு செய்யவேண்டுமென்ற முறையில்தான் முக்கியக் கவனம் செலுத்துகிறது. மற்றபடி இந்த பிற்பட்டோர் நலத்துறையினால் இப்போது மற்ற வசதிகளை பிற்பட்ட சமுதாயத்திற்கு செய்வதில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இந்தத் துறைக்கு இனிதான் முழு நேர வேலை இருக்கப்போகிறது. பிற்பட்ட சமுதாய மக்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அவைகளை எல்லாம் செய்வதற்கு இந்தத் துறை இனிதான் தன்னுடைய காலத்தையும் நேரத்தையும் ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தத் துறைக்கு வேலை பளு போதாது
மு.ப. 11·30 என்று கருதுகிறேன்.

இந்தத் துறை கல்விக்காக மட்டும் அதிகம் கவனம் செலுத்தி வருகிறது. படிப்பு, மாணவர் இல்லங்கள், ஐ.ஏ.எஸ்., ஐ. பி.எஸ். ஆகியவற்றில் பயிற்சி, தொழில் கல்வித் திட்டம் ஆகிய இவைகள் எல்லாம் கல்வி மேம்பாட்டை அதிகப்படுத்துவதற்கு வேலை செய்கிறோம். தொழில் மேம்பாட்டிற்கு அதிக கவனம் செலுத்துகிறோமா என்று பார்த்தால், இல்லை என்று சொல்ல முடியும். சின்னச் சின்ன தொழில் செய்கிறவர்களுக்கு கருவிகள் வாங்கிக் கொடுக்கிறோம். வீட்டு வசதிக்கு, ரூ. 1,200 என்றால், அதில் ரூ 900 மானியம், ரூ. 300 கடன் என்ற வகையில் இந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறதே தவிர, மேற்கொண்டு தொழில் மேம்பாட்டிற்கு எதுவும் செய்யப்படவில்லை. இந்தத் துறைக்கு இந்தப் பளு போதாது. அதிகம் வேலை கொடுக்க வேண்டும்.

இதிலே ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பிற்பட்ட நலத் துறையிலிருக்கிறவர்கள் என்னென்ன தொழில்கள் செய்கிறார்கள் என்று பார்க்கிறபோது முன்பு பேசிய திரு. கணபதி அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். சிற்பக் கலைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். சிற்பக் கலை வெளி நாடுகளில் நல்ல மதிப்பைப் பெற்றிருக்கின்றது. அதை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால், சிலைகளைத் திருடி அதை அதிக விலைக்கு விற்கக் கூடிய நிலை தான் இருக்கிறது. எனவே, இந்த சிற்பக் கலைத் திறன் படைத்தவர்களையெல்லாம் சேர்த்து, அவர்களுக்கு நல்ல பயிற்சி நிலையங்கள் மூலமாக தொழில் வாய்ப்பை அமைத்து, மேலும் தமிழ்நாடு போன்ற ஒரு பெரிய நாட்டிலே "சேல்ஸ் சென்டர்கள் மற்றும் ஷோ ரூம்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் வெளி நாட்டிலிருந்து வரக்கூடியவர்கள் அங்கே போய்ப் பார்த்து, சிற்பங்களுக்கு விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போகின்ற நிலை" ஏற்படும்.



அதன் மூலம் அரசாங்கத்திற்கும் அதிகமான பணம் கிடைக்கும். ஏராளமான பணத்தை வருவாயாக சேர்த்துக்கொள்ள இந்தத் துறைக்கு வாய்ப்பு ஏற்படும். இப்படிச் செய்வதன்மூலம், அந்தத் தொழில் செய்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பும், அந்தச் சிற்பக் கலை போற்றப்படக்கூடிய முறையிலும், செத்துப்போகாத முறையில் நல்ல முறையில் இருக்க வாய்ப்பு ஏற்படும்.

இன்னுமொரு சிறு உதாரணம். சிறு தொழில் செய்கிறவர்களுக்கு உதவி செய்கிறோம். இந்த கைத்தறித் தொழில் இருக்கிறது. அதற்கு கருவிகள் எல்லாம் கொடுக்கிறோமா என்றால் இல்லை. இப்படி, பிற்பட்டோர் அந்தந்தத்துறையிலேயே தான் இருக்க வேண்டுமா, அல்லது மற்ற துறைகளுக்கு செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த முறையில் இந்தத் துறைக்கு அதிக வேலை பளுவைக் கொடுக்க வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் ஆடு மாடுகளை வளர்க்கிறார்கள். குறிப்பாக, நாற்பது ஆடுகள், ஐம்பது ஆடுகள் என்று வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தக்கூடியவர்கள் இருக்கிறார்கள். இதில் அதிகமாக மூலதனத்தைப் போட வசதி அற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்குக் கடன் கொடுத்தால் நல்ல முறையில் அவர்கள் அதைப் பயன்படுத்தி முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

இந்த மாதிரி உதாரணங்கள் நிறைய சொல்ல முடியும். பிற்பட்ட மக்களுடைய தொழில் வளர்ச்சிக்கு காரியங்களில் கவனத்தை செலுத்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்த குற்றப்பட்டியல் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோர் என்று எடுத்துக்கொண்டால், இதிலே முக்கியமாக வருகிறவர்கள், முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இதிலே ஒரு வேண்டுகோள். ஒரு கமிஷன் போடவேண்டும். இதுவரையில் எந்த அளவுக்கு அரசு செய்த உதவிகளை இவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், இன்னும் எந்தெந்த முறையில் இவர்களுக்கு உதவி செய்யலாம் என்பதைப் பற்றியெல்லாம் ஆலோசிப்பதற்கு ஒரு கமிஷன் போட வேண்டும். ஏனென்றால், நாம் போட்ட கமிஷன்கள் எல்லாம் பிற்பட்டோர் நலத்தைப் பொறுத்த பேக்வேர்டு கிளாசுக்கு மட்டும் தான். பிற்பட்டோர் நலத்தைப் பொறுத்த மட்டில், இவற்றைப் பரிசீலிப்பதற்காக, ஒரு கமிஷன் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்த கள்ளர்கள், "தேவர் இன்னும் சிலருக்கு சலுகைகள், ஸ்காலர்ஷிப்புகள் கிடைப்பதில்லை. இந்தச் சலுகைகள் கிடைப்பதில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சலுகைகள் ஒரே மாதிரியாக கொடுக்கப்படுவதில்லை. எனவே, ஒரே மாதிரியாக என்று கொடுத்து விட்டால் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கக்கூடிய வகையில் இந்தச் சலுகைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று எனது நண்பர் சொன்ன ஒரு கருத்திற்கு மாறுபாடான கருத்தைச் சொன்னேன். ஏனென்றால், மதத்தினுடைய அடிப்படையில் ஒரு கோரிக்கையை வைப்பது சரியல்ல என்று சொன்னேன். இப்போது பிற்பட்டோர் என்ற முறையில் கோரிக்கை இருக்கிறது. உருது பேசும் முஸ்லிம்கள் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. நான் பல முஸ்லிம்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட தகுதி உடையவர்களாக நிச்சயமாக இருக்கிறார்கள். எனவே, அவர்களை இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என். ஜி. ஓ-க்கள், ஆசிரியர்கள், போலீஸ்காரர்கள்—இவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் ஸ்காலர்ஷிப் வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது என்ற முறையில் செயல்படுகிறது என்று நினைக்கிறேன். "பிற்பட்ட வகுப்பு மாணவர்களின் தகப்பனார் ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கு மேல், ரூ. 3,000 வரையில் உள்ள மாணவர்களுக்குத் தகுதி வசதி உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது" என்று அமைச்சரவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்கப் பணிவோடு தெரிவித்துக் கொள்வதெல்லாம் என்னவென்றால், போலீஸ்காரர்கள், ஆசிரியர்கள், என். ஜி. ஓ-க்கள் பிள்ளைகள் ஸ்காலர்ஷிப் பெற முடியாத நிலை இருக்கிறது. நாம், எந்த அளவுக்கு இந்த வருவாய் வரம்பை உயர்த்தி அவர்களுக்கும் எந்த அளவுக்கு இந்தச் சலுகைகளை அளிக்க முடியுமோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு சலுகைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கை பல்லாண்டுகளாக வைக்கப்பட்டிருந்தும், சென்ற ஆண்டு கூட இது பேசப்பட்டிருந்தும் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில், இந்த ஆண்டிலாவது—அதுவும் இந்தக் கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்பே அறிவித்துவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. க. வடிவேலு: சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

பொதுவாக டாக்டர் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் "நான் மிகமிக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். பிற்பட்ட இனத்தவர்களின் மேம்பாட்டிலே என் கவனம் செலுத்தப்படும்" என்று சொன்னார்கள். அதற்கேற்ப கழக ஆட்சி வந்தபிறகுதான் இந்தத்துறை ஒரு தனி அமைச்சரின் நேரடி கவனத்தில் இயங்கிவருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.





பொதுவாக திரு. செல்லையா அவர்கள் குறிப்பிட்டதைப் போல முத்து ராஜா என்ற இனத்தை முன்னால் காங்கிரஸ் ஆட்சியில் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கவில்லை. முத்துராஜா, முத்தரையன், அம்பல வாணர்கள் என்பதாக உள்ளவர்கள் எல்லாம் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களே, முத்துராஜா என்ற பெயரில் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். நானும் கூட அந்த வகுப்பைச் சேர்ந்தவன் தான். திருச்சி மாவட்டத்தில் நூற்றுக்கு 40 சதவீதம் முத்துராஜா பிரிவினைத் தான் சேர்ந்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் நல்லமுறையில் வளர்ச்சி அடைய அவர்களை டாக்டர் கலைஞர் ஆட்சியில் பிற்பட்ட இனத்தில் சேர்ந்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் அருகிலே நாட்டார், இராமிணியார் என்று இருக்கிறது. அவர்களும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களையும் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக மத்திய அரசு இதுபோல உண்மையிலேயே மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களை அந்தப் பட்டியலில் சேர்க்க சிபாரிசு செய்தாலும் ஏற்றுக் கொள்ள மறுப்பதற்கு நான் மிகவும் வருத்தம் தெரிவிக்கிறேன். எங்கள் பகுதியில் முதலியார் என்ற பெயரிலேயே நெசவாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் மிகமிக பிற்பட்டவர்கள். அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்த்து அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இந்த அரசு ஆவன செய்யவேண்டும்.

சேலம் திருச்சி பகுதியில் படையாச்சிகள் கவுண்டர்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் மிகவும் பிற்பட்டவர்கள் தான்.

முஸ்லிம்களில் லப்பை என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற வேண்டுமென்றால் பிற்பட்ட இனத்தவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

கொடிக்கால் தொழில் செய்பவர்கள் பிள்ளை என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களையும் பிற்பட்ட இனத்தவர்கள் பட்டியலில் சேர்க்கவேண்டும். காரணம் பிள்ளை என்பதனாலே அவர்கள் உயர்ந்த வகுப்பைச் சாரவில்லை. பொருளாதாரத்தில் அவர்கள் பின்னடைந்த நிலையிலேயே இருக்கிறார்கள்.

முத்து ராஜாக்கள் என்கிற வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒரு ஆர்.டி.ஓ. ஆகவோ டி. எஸ். பி. யாகவோ இன்றைக்கு இருக்கவில்லை. அருமை நண்பர் செல்லையா அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபோன்ற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் முன்னேற வேண்டுமென்றால் ஆங்காங்கே நிறைய மாணவர்கள் இல்லங்கள் திறக்கப்படவேண்டும். குறிப்பாக என் தொகுதியில் தொட்டியம், மேக்கல்நாயகன்பட்டி போன்ற இடங்களில் மாணவர் இல்லங்களைத் திறக்க முன் வரவேண்டும். இந்த அரசு பத்தாயிரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித்தரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்போல இந்த பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு என் நன்றி.

*திரு இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து, என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சுமார் 6 கோடி கோரியிருக்கிறார்கள். அதை உண்மையில் நான் வரவேற்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பின்புதான பிற்பட்ட வர்களின் நலனை கவனிக்க ஒரு அமைச்சரையே ஏற்படுத்தினார்கள். உண்மையில் இன்றையதினம் சமுதாயத்தின் அடித்தளத்தில் இடக்கிற லட்சக்கணக்கான பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதற்காக அவரைப் பாராட்டுகிறார்கள்.

இன்றையதினம் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் படிக்க அரசு அளிக்கிற சலுகை--அவர்களது தாய் தந்தையர்களது வருமானத்தை அடிப்படை யாகக் கொண்டிருக்கிறது. இரண்டாயிரம் ரூபாய்க்குள் வருமானம் உள்ளவர்களுக்கு சலுகை என்கிறார்கள். கடைநிலை ஊழியர்களாக இருக் கக்கூடியவர்களது வருமானம் கூட ஆண்டுக்கு இரண்டாயிரத்துக்கு வந்து விடும். ஆகவே, இந்த எவருமான வரம்பை மூவாயிரமாகவாவது உயர்த்தித் தர வேண்டும்ன்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் பிற்பட்ட மாணவர்களுக்காக 123 இல்லங்கள் அமைக்கப்படுவதை நான் பாராட்டுகிறேன். என் தொகுதியிலும் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இரண்டு இல்லங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருத்தணியில் கல்லூரி மாணவர்களுக்காக ஒரு உணவு இல்லம் கடந்த ஆண்டு துவக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் ஏழை எளியவர்கள் வாழ்கிற பகுதி. பல நாட்கள் ஆந்திராவுடன் சேர்ந்திருந்த பகுதி. அந்தக் கல்லூரி மாணவர்கள் இல்லத்தில் 50 பேர்களைத்தான் சேர்த்துக்கொள்ள வசதி இருக்கிறது. சென்ற ஆண்டு மட்டும் வந்த விண்ணப்பம் 150. அதில் சேர 120 பேர்களுக்குத் தகுதி இருந்தும் நாங்கள் 50 பேர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டியதாக இருந்தது. அந்த இல்லத்தில் இந்த ஆண்டு 100 பேர்களைச்சேர்த்துக் கொள்ள அரசு உத்திரவிட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு என் தொகுதியில் ராமகிருஷ்ணராஜுபேட்டையில் பெரிய ஹைஸ்கூல் இருக்கிறது. அந்த ஹைஸ்கூல் மாணவர்களுக்கு ஒரு உணவு விடுதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.



பொதட்டூர்பேட்டையில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் அதிகமான பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறார்கள். அந்தப் பெண்களுக்காகவும், ஒரு மாணவிகள் இல்லத்தைத் திறந்து தரும்படி யாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், அத்திமாஞ்சேரிப் பேட்டையிலும் வெடியங் காடு ஆகிய இரண்டு மாணவர்கள் இல்லங்களுக்குக் கட்டடம் ஏற்படுத்தித் தர வேண்டும். இந்த ஆண்டு பின்தங்கிய மாணவர்களுக்காக இந்த மானியத்திலே, 80 இல்லங்கள் கட்டப்படும் என்று நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் உத்திரவிட்டிருப்பதற்காக நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். இதிலே, இரண்டு மாணவர் விடுதிகளை அத்திமாஞ் சேரிப்பேட்டையிலும் வெடியங்காட்டிலும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கிராமத்து மக்கள் அதற்கு வேண்டிய நிலங்களை இலவசமாகத் தரத் தயாராக இருக் கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நினைவுபடுத்தித் தெரிவித்துக் கொண்டு, அந்தக் கட்டடங்களை அங்கு கட்ட துணைபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திருமதி த. ந. அனந்தநாயகி : துணை சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே நான் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த அரசுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

இந்த பிற்படுத்தப்பட்டோர் நல இலாகாவிற்காக ரூ. 5½ கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 465 கோடி வரவு-செலவுத் திட்டத்திலே, ரூ. 5½ கோடிதான் இந்த இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது 1½ சத வீதம்தான் இந்த இலாகாவிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மிக வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல துறைகளில் நீங்கள் செலவழிப்பதைக் காட்டிலும், பிற்படுத்தப் பட்டவர் நலனுக்காக அதிகம் செலவழிப்பீர்களானால், அதனுடைய முழுப் பலனையும் பெற வாய்ப்பிருக்கும். வேறு துறைகளில், செலவழித் தால், ¾ பங்கு அல்லது 3/4 பங்குதான் பலன் கிடைக்கும். ஆனால், இந்தப் பிற்படுத்தப்பட்டோர் இலாகாவில் குறிப்பாக அவர்களுடைய கல்வி வசதிக்காகச் செலவழிக்கிறீர்கள் என்று சொன்னால், அதனுடைய முழுப் பலனையும் பெறுகிறீர்கள் என்பது மட்டுமல்லாமல், அந்தக் குடும்பங்களை முன்னுக்கு வருவதை நீங்கள் பார்க்க முடியும். அந்த பணியிலே நீங்கள் தாராளமாக இருக்க வேண்டும். இந்த அரசு தாராளமாக இருக்கிறது. இருந்தாலும் அது போதாது. எந்த அளவுக்கு என்பது எனக்குத் தெரியும். இன்னும் அதிகம் செலவழிக்க வேண்டும் என்று உரிமையோடு தாங்கள் அவர்களை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

நீங்கள் பட்டியல் கொடுத்திருக்கிறீர்கள். குற்றப் பாரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோருக்கான வசதிகளைப் பார்ப்பீர்களானால், அதைப் பெற்றவர்கள் மெட்ரிக்குக்கு முன் 67,565 பேர். மெட்ரிக்குக்குப் பின் 4,330 மாணவர்கள்தான். எவ்வளவு குறைவான தொகை? [நாட் ஈவன் 7 பர்செண்ட் ஆர் 8 பர்செண்ட்]. 7 பர்செண்ட், 8 பர்செண்ட்கூட கல்லூரிக்குப் போவதற்கு ஒரு உற்சாகம் இல்லாமல் விளங்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்றால், அங்கே என்ன தயக்கம்? நாம் பி.யூ.சி. வரை இலவசமாக வைத்தாலும் கல்லூரியில் ஸ்பெஷல் பீஸ் கட்டச் சொல்கிறார்களோ, என்னவோ? அதற்குப் பணம் கொடுக்க முடியாமல் இருக்கலாம். ஏன் மெட்ரிக்குக்குப் பின்னால் அவர்களுக்குக் கல்லூரிக்குப் போக முடியவில்லை? ஆறு மாதத்திற்கு ஒரு தரம் இப்பொழுது ஒரு அட்வைசரி கமிட்டி கூடுகிறது, பிற்படுத்தப்பட்டோர் நலனைப்பற்றி ஆராய. ஆனால், ஒரு சின்னக்குழுவைப் போட்டு, மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடுகின்றவகையில், இப்படிப்பட்ட ஸ்பெஷல் பிராபிளம்ஸ்-ஐ, அங்கே ஏன் அந்த தயக்கம் என்பவை போன்றவற்றை ஆராய்ந்துசொல்ல, அக்கறை காட்டினால், அந்தச் சமுதாயத்திற்கு அதிகமான வசதி இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதே மாதிரிதான் கல்லூரிப் படிப்பிலே, பி.யூ.சி.க்குப் பிறகு, பட்டப் படிப்புக்கு, பி.காம்., போன்றவற்றை எண்ணிப் பார்க்கும்போது, எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. நாம், இப்பொழுது உதவிப் பணத்தை இரண்டு அடிப்படைகளிலே தருகிறோம். ஒன்று 40 சதவீதம் மார்க்குகளைப் பெற வேண்டும். மற்றொன்று 2,000 ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் இருக்கக் கூடாது என்று வைத்திருக்கிறோம். இப்படி ரூ. 2,000 என்று வைத்திருப்பதால், என்.ஜி.ஓ.வினுடைய பிள்ளை, உத்தியோகத்தில் இருக்கிறவர்களுடைய பிள்ளைகள் இந்தப் படிப்புக்குப்போக முடியாது. இந்த ரூ. 2,000 என்று இருப்பதை ரூ. 5,000 என்று மாற்றினால்தான் பேசிக் பே ரூ. 400 வரை எட்டிப்பிடித்தால்கூட அவர்களுடைய பிள்ளைகள் பட்டிக்காட்டிலே இருக்கிறவர்களைவிட, அதிகமாகப் பயன் பெறலாம். ஏனென்றால், என்.ஜி.ஓ. க்களின் மகன்கள் படிப்பதற்கு, பட்டிக்காட்டில் இருப்பவர்களை விட அதிக புறச் சூழ்நிலைகளை ஏதுவாகப் பெற்றிருக்க முடியும். ஒன்றுமே தெரியாத ஒருவன், பட்டிக்காட்டிலே இருக்கிற ஒருவன் வசதியைப் பெறுவதற்கும் இப்படிப்பட்ட போலீஸ்காரன், மற்றவர்கள் மகன்கள் நகரத்திலே இருப்பதால், அவர்கள் கல்வி கற்க வாய்ப்புகள் அதிகம் இருக்கும். இப்பொழுது ரூ. 2,000 என்று இருப்பதால், அப்படி கட்டுப்பாடு விதித்திருப்பதால், கொஞ்சநஞ்சம் படித்து மேலே வந்திருக்கிறார்களே, போலீஸ்காரர்கள், என்.ஜி.ஓ.க்கள், ஆசிரியர்கள் அவர்களுக்கு 4, 5 பிள்ளைகள் இருந்தால், இதன் காரணமாக, அவர்கள் கட்டாயமாக கல்வியை நிறுத்த வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள், காரணம், அவர்களுடைய வருமானம் ரூ. 2,000-க்கு மேல் போய்விடுகிறது. இதனால், இரண்டு பிள்ளைகளுக்கு மேல் சம்பளம்கட்டி படிக்கப் வைக்க முடியாத அவல நிலை இருக்கிறது. ஏன் இந்த நிலை?

நாம் பள்ளியில் 11-வது வகுப்பு வரை இலவசப் படிப்பு அளிக்கிறோம் என்று சொன்னாலும், ஸ்பெஷல் பீஸ் போன்ற சின்ன தொகையைக் கூட கட்ட முடியாமல் இன்னல்படுகிறார்கள் என்பதனையும் சுட்டிக்காட்ட





விரும்புகிறேன். ஆகவே, தயவுசெய்து, ரூ. 2,000 என்று இருப்பதை
எடுத்துவிடுங்கள். அது எப்பொழுதோ, எந்தக் காலத்திலோ வைக்கப்
பட்டது. அன்றாடம் கூலி வேலை செய்தால்கூட ரூ. 10 சம்பாதித்தால்
இந்த வருமானம் மேலாக வந்துவிடும். ஆண்டிற்கு ரூ. 4,000 சம்பாதித்
தால்கூட விலை உயர்வு எக்கச்சக்கமாக இருக்கிற காரணத்தால், அவர்கள்
பிள்ளைகளை எப்படிப் படிக்க வைக்க முடியும். ஆகவே, பிற்படுத்தப்
பட்டோரை உண்மையிலேயே உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கு
மானால், அந்த ரூ. 2,000 என்பதை நீக்கிவிட்டு, ரூ. 5,000 என்று வைக்க
வேண்டும். இல்லையென்றால், பிரயோஜனம் கிடையாது. ரூ. 5,000
என்று வைத்தால், அதிகமான மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து
படிக்க வசதி இருக்கும். Economically backward, not socially
backward என்ற முறையிலே, அதாவது வெறும் பொரு
ளாதாரத் துறையிலே மாத்திரம் பிற்பட்ட சிலருக்கு உதவி தர
வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு ஒரு சில லட்சம் ரூபாயை
நமது அரசு ஒதுக்கி செலவழித்து வந்தது. இந்திய அரசாங்கம் ரூ. 14
இலட்சம் இதற்காகக் கொடுத்து வந்தது. அந்த உதவித் தொகை
நிறுத்தப்பட்டுவிட்டது என்று இதிலே போடப்பட்டிருக்கிறது. நான் கேட்
கிறேன். பிற்பட்ட இலாகா அமைச்சர் டெல்லியோடு நீண்டகாலத்
தொடர்பு கொண்டவர், டெல்லியிலே இருந்தவர், அங்கு அதிகப் பழக்கம்.
அவர் அந்த ரூ. 14 லட்சத்தினை விட்டுவிடாமல் முடிந்தால், அதிகப்படி
யாக வாங்க முயற்சிகளை எடுக்கவேண்டுமேயொழிய இவ்வாறு கூறக்
கூடாது. வேண்டுமானால், நானும் ஒத்துழைக்கத் தயாராக
இருக்கிறேன். அந்த ரூ. 14 லட்சத்தை அதிகப்படுத்தி வாங்க வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே அர்ச்சகர்களாக இருக்கிற அந்தணர்கள்
பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். பொருளாதாரத் துறையிலே மிகப்
பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். 1952-ம் ஆண்டிலே நான் காகா கலேல்
கருடைய குழுவிலே உறுப்பினராக இருந்தேன். அர்ச்சகர்களோடு இவர்
களுக்குத் தொடர்பு கிடையாது. வசதி படைத்த அந்தணர்கள் இருக்கிறார்
கள். அந்தணர் என்று அழைக்கப்படுகின்ற ஒரே காரணத்திற்காக, குற்
றத்திற்காக அவர்களுக்கு ஏன் வசதியைக் கெடுக்க வேண்டும். அந்தணர்
களிலே....................

திரு இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இந்த அரசு ஏற்
பட்ட பிறகு பிராமணப் பிரிவிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்குக்
கல்விச் சலுகை தரப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு துரை முருகன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள்
அந்தணர்களையும், பிற்படுத்தப்பட்ட இனத்திலே சேர்க்க வேண்டுமென்று
வாதாடுகிறார்களா என்று தயவுசெய்து தெளிவாகச் சொல்ல வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : புரிந்துகொள்ளவில்லை நீங்கள். சேர்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. மத்திய அரசு பொருளாதாரத் துறையிலே பின்தங்கியவர்கள் என்பதற்காக ரூ. 14 லட்சம் தந்து வந்தது. இப்பொழுது அதை நிறுத்திவிட்டது.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோயிலிலே இருக்கிற அர்ச்சகர்கள் குறிப்பாக மைலாப்பூரிலே இருக்கிறவர்கள் மிகவும் குறைவான சம்பளம் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய மற்ற கோயில்களைவிட அதிகமாக வருமானத்தைப் பெறக்கூடிய அர்ச்சகர்கள் கபாலீஸ்வரர் கோயிலில் இருக்கிறார்கள் என்பதை அம்மையார் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மைலாப்பூர் என்று சொல்லவில்லை. தமிழ் நாட்டிலே பல கோயில்களிலே அர்ச்சகர்களுக்கு வருமானம் குறைவு. எங்கோ, ஒன்றிரண்டு கோயில்களிலே அதிக வருமானம் இருக்கலாம். நான் அதுதான் இந்த இலாகாவைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், பணத்தை மற்றத்துறைகளுக்குக் கொடுக்கிறவர்கள்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் மைலாப்பூர் தொகுதி வாக்குகளைப் பெற்று அவர்களுக்காகப் பரிந்து பேசுவதை இதோடு நிறுத்திக்கொண்டு, தயவுசெய்து பின்தங்கியவர்களுக்காகப் பரிந்து பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நானும் அந்த இனத்தைச் சேர்ந்தவள் என்பதை மறுக்கமுடியாது. அதை மறந்துவிட வேண்டாம். பொருளாதாரத் துறையிலே பின்தங்கியவர்களாக இருக்கிறவர்களுக்கு, மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் பெற்றுவது அல்லது, ஸ்பெஷல் பண்ட் ஒன்றுவது ஏற்படுத்தி, அவர்கள்பற்றிய முக்கியமான அக்கறை காட்ட வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விடுதிகளுக்காகப் பல லட்சம் ரூபாய்கள் செலவழிக்கப் போகிறார்கள். நான் இது சம்பந்தமாக ஒரு யோசனையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பிற்பட்ட வகுப்பினரிலும் செல்வம் படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் செல்வத்தை எப்படிச் செலவழிப்பது, பிறபடுத்தப் பட்டவர்களுக்காகச் செலவழித்தால் ஒழுங்காகப் போய்ச் சேருமா என்ற சந்தேகம் இருக்கிறது. அவர்களைப் பார்த்து, உங்கள் பெயரிலே விடுதியைக் கட்டுகிறோம், விடுதியைக் கட்டுவதற்கான செலவை நீங்கள் கொடுங்கள், ஒவ்வொரு ஆண்டும் நிர்வகிக்கின்ற செலவை நாங்கள் தந்துவிடுகிறோம் என்று சொல்ல வேண்டும். குறிப்பாக, சினிமாத் துறையிலே பிற்பட்டவர்கள், செல்வம் படைத்தவர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அது ஒரு அட்வர்டைஸ்மெண்ட்டாக இருக்கும். முதலமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை சொன்னால்கூட அவர்கள் கட்டிக் கொடுத்து விடுவார்கள். விளம்பரத்திற்காகச் செய்வார்கள். அது ஒரு சினிமா அட்வர்டைஸ்மெண்ட், விளம்பரத்திற்காகச் சற்று வசதி படைத்தவர்களை





யெல்லாம், அவர்களுடைய பெயரிலே விடுதியைக் கட்டிக் கொடுக்கச் சொல்லுங்கள். வருஷா வருஷம் ஆகின்ற செலவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னாலே, அவர்கள் செய்வார்கள், அது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தனியார் நடத்தக்கூடிய விடுதிகளை ஏற்றுக்கொள்ளலாமா இல்லையா ந. ப. 12·00
என்பதற்குச் சில விதிமுறைகளைக் கொடுத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடத்
தோடு அது இணைத்து இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது பிரபல
மான தனியார்கள் ஹாஸ்டலாக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம் என்ற
விதிமுறைகளைப் போட்டிருக்கிறார்கள். தனியார் ஹாஸ்டல்களிலே பிள்ளை
களை அவர்கள் பட்டினி போடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதால்தான் அவற்
றையும் அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. நல்ல
முறையிலே நடத்துவதற்குச் சில தனியார்கள் முன்வந்தால் அவர்களை
ஒதுக்கிவிடாது, அவர்களையும் பயன்படுத்திக்கொண்டு, அந்த விடுதிகளை
கண்ட்ரோல் செய்வதற்கும், நிர்வாகம் சரியாக இருக்கிறதா இல்லையா
என்று கண்காணிப்புச் செய்வதற்கும், பிற்பட்ட நலத்துறைக்காக ஏற்படுத்
தப்பட்டுள்ள குழுவில் உள்ளவர்களில் இரண்டொருவரை நியமித்து அவர்
களிடம் அந்தப் பொறுப்புக்களைக் கொடுத்தால் அந்த அதிகாரத்தை
அவர்களுக்குக் கொடுத்தால் சரியான முறையில் அந்த விடுதிகளும்
நடைபெறும். ஆகவே பிற்பட்ட மக்களுக்காக ஹாஸ்டல்கள் நடத்துவதற்குத்
தனியார்கள் யாராவது முன்வருவார்களானால் அவர்களுடைய ஊக்கத்
தைக் குறைத்துவிடாமல் அவர்களுக்குப்போதுமான வாய்ப்பைக் கொடுத்து
அவற்றைக் கண்காணிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்
கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீங்கள் இப்பொழுது கொடுக்கக்கூடிய 20 ரூபாய் மிகக் குறைவு. இன்றைக்கு உப்பு, மிளகாய், புளி விலையென்ன ? இன்றைக்கிருக்கிற விலைவாசிகளையும் கணக்கில் எடுத்து ஆராய்ந்து பார்த்து—ஹாஸ்டல்களுக்கு 70 ரூபாய் வீதம் கொடுத்து அவர்கள் செலவழித்துக் கொண்டிருக்கின்ற பொழுது—தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற விடுதிகளில் உள்ள மாணவர் களுக்கு 20 ரூபாய் வீதம் கொடுத்தால் அவர்கள் என்ன செய்யமுடியும் ? 20 ரூபாயைக் கொடுத்துவிட்டு 50 ரூபாய் எப்படியாவது நீங்கள் சம்பாதித்து சோறு போடு என்று சொன்னால் கஷ்டமாகத்தான் இருக்கும். இந்தப் பிற்பட்ட நலத்துறை 276 பள்ளிகளைப் பராமரிப்புச் செய்து வருகிறது. அதையும் கல்வி இலாகாவிலே கொடுத்து விடுங்களேன். அரிசன நலத் துறையிலே பள்ளிக்கூடங்கள், அங்கே பள்ளிக்கூடங்கள், இங்கே பள்ளிக் கூடங்கள் என்று தனித்தனியாக நடத்துவதை விட்டுவிட்டு எல்லாவற்றை யுமே அரசாங்கம் ஏற்று நடத்தலாம், அந்த முறையிலே இந்த 276 பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தலாம். அப்படிச் செய்தால் அதிலே மிச்சப்படுகிற பணத்தை ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கும் மற்றக் காரியங்களுக்கும் பயன்படுத்த வேண்டும். இப்பொழுது பேக்வார்ட் கிளாஸ்க்கு நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்கள், அரிசன நலத்துறையின்மூலம் நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்கள், சாதாரண மற்றப் பள்ளிகளின் தரத் தோடு போகிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. எனவே கல்வி இலாகாவிலே அந்தப் பள்ளிக்கூடங்களையும் சேர்த்துவிட்டு அதன் மூலம்

மிச்சப்படுகிற பணத்தை அதிகமான அளவில் பிற்பட்ட மக்களுக்காகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வீட்டு வசதி. சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் அரிசனங்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ சம அளவிற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களும் இருக்கிறார்கள். வன்னிய குல க்ஷத்திரியர்கள், மற்றைய பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக போட்டோ எடுத்து வீடு கொடுக்கிறார்களே அதைப் போன்று இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டம் மிகப் பிற்படுத்தப்பட்ட மாவட்டம். அதிலேயுள்ள முதுகுளத்தூர் பஞ்சப் பகுதி. அதை பஞ்சப் பகுதியென்று டிக்ளேர் செய்ய வேண்டுமென்று இங்கே கேட்பதற்குக்கூட ஆள் இல்லை. கேட்க வேண்டுமென்றால் திரு. பெருமாள் அவர்கள் தான் கேட்டாக வேண்டும். என்னவோ கேட்கவில்லை. டிக்ளேர் இட் ஆஸ் ய ஃபாமின் ஸ்ட்ரிக்கன் ஏரியா என்று சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவசர நடவடிக்கைகளை எடுத்து அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும். அங்கே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம் என்ன நிலைமையிலே இருக்கின்றன, மழைக்கும், புயலுக்கும் உட்பட்டு இடிந்த நிலைமையிலே இருக்கின்றன . . . . . . . . . . . . .

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : அம்மையார் அவர்கள் முதுகுளத்தூர் பஞ்சப் பகுதி என்று அறிவிக்கப்பட வேண்டுமென்று இங்கே கேட்பதற்கு ஆள் இல்லை என்று சொன்னார்கள். எத்தனையோ முறைகள் இந்த மன்றத்திலே கேட்டிருக்கிறோம். அதை மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே கேட்காமல் இல்லை, கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்குத் தெரிந்து அவர்கள் பேசவில்லை. நான் வராத அன்றைக்குப் பேசினார்களோ என்னவோ தெரியவில்லை, பேசியிருந்தால் நன்றி. அரசாங்கம் உடனடியாக அதைப்பஞ்சப் பகுதியாக டிக்ளேர் செய்ய வேண்டும். அங்கேயுள்ள வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக என்று அரசாங்கம் 1,600 ரூபாய் கொடுக்கிறது என்று இந்த மானியக் கோரிக்கையிலே கொடுத்து இருக்கிறார்கள். அது போதாது. குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக 3 அடுக்கு மாளிகைகள் கட்டப்படுவதுபோல், அங்கே மாளிகைகள் கட்டி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். நல்ல கட்டடங்களாக அவர்களுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுக்கிற 1,600 ரூபாயில் என்ன செய்ய முடியும். சிமிண்ட் விற்கிற விலையிலே, மற்றப் பொருட்கள் விற்கிற விலையிலே அந்தத் தொகை போதாது. எனவே அவர்களுக்கு நல்ல வீடுகளாகக் கட்டிக் கொடுக்க வேண்டும்.





அரிஜன் கிறிஸ்டியன் கன்வெர்ட்ஸ் அண்ட் பேக்வர்ட் கிளாஸ் கிறிஸ்டியன் கன்வெர்ட்ஸ் ஆகியவர்களுடைய நிலைமையும் மோசமாக இருக்கிறது. அவர்கள் பொருளாதார நிலைமையிலே மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டும். அதோடு உருது முஸ்லீம்களுக்கும் சலுகைகளைக் கொடுக்க வேண்டும். அவர்கள் எல்லாம் பெரிய இடங்களிலே, தொழிற்சாலைகளிலே வேலை செய்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். முக்குலத்தோரிலே ஒரு ஹைகோர்ட் நீதிபதிகூட கிடையாது. எனவே உயர்நீதி மன்ற நீதிபதியொருவரை அவர்களிலிருந்து போடுவதற்கு அரசு முன்வர வேண்டும். எங்கே கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கிறார்கள் என்றால் அவர் முதலியார், அகமுடியர் என்று சொல்லி இதிலே வந்து சேர்ந்துவிடுகிறார்கள். அகமுடியர் வித்-இன் பிராக்கட்ஸ் “ துளுவ வெள்ளாளர் ” என்று போட்டுக் கொண்டு இங்கே வந்துவிடுகிறார்கள். ஒன்று முதலியார் என்று போட்டுக் கொள்ளட்டும், இல்லாவிட்டால் அகமுடியர் என்று போட்டுக் கொள்ளட்டும், முக்குலத்தோரிலே வந்து சேர்ந்தால் சேரட்டும், அப்படியில்லாமல் சலுகைகளுக்கு என்று இப்படிப் போட்டுக்கொள்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. முதலியார் என்றால், ஏ. எல். முதலியார், ஏ. ஆர். முதலியார் என்று இருக்கிறார்கள், அவர்கள் மற்றவர்களோடு கனக்‌ஷன் வைத்துக் கொள்வதில்லை. வசதிகள் கிடைக்கின்றன என்பதற்காக இதிலே சேர்ந்து கொள்கிறார்கள் என்றால் அதையெல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து உண்மையிலேயே அவர்கள் முக்குலத்தோர் என்றால் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். வசதியைப் பெறுவதற்காக மாத்திரம் வருவது என்றால் அதுதான் கேள்வியாக இருக்கிறது. அதையும் இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

26 வயது வரைதான் எம்.பி.எஸ்.ஸி.க்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பிற்பட்ட வகுப்பினர்கள் எல்லாம் மெதுவாகத்தான் படிக்கிறார்கள். அவர்களுக்கு வேலையும் விரைவிலே கிடைப்பதில்லை. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்துகொண்ட பிறகு 5, 6 வருடம் ஆகியும்கூட அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. எனவே ஸுன் ஆப்டர் தி ஸ்கூல் ஆர் காலேஜ், என்றைக்கு அவர்கள் தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்கிறார்களோ அதைத்தான் வயதாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் வேலையில்லாத நிலைமை நீண்ட நாள் போவதைத் தடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பேரவையின்முன் இருக்கிற பின்தங்கிய நலத்துறை மானியத்திலே சில கருத்துக்களைச் சொல்வதற்கு ஆன வாய்ப்பை எனக்கு அளித்ததற்காக நான் முதலிலே உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, பின்தங்கிய வகுப்பினர் நலம் என்று சொல்கிற நேரத்
திலே ஒவ்வொரு கட்டத்திலேயும் ஒவ்வொருவரும் பின்தங்கியவர்களாக
இருக்கிறோம். உலக மன்றத்தின் முன்னாலே இந்தியாவை எடுத்துக்
கொண்டால் பின்தங்கிய நாடு என்று சொல்கிறோம். இந்திய பூபாகத்தில்
நம்முடைய மாநிலத்திற்காகப் போராடுகிற நேரத்திலே நம்முடைய
மாநிலம் பின்தங்கிய மாநிலம் என்று பேசுகிறோம். மாநிலத்திற்குள்
ளேயே எடுத்துக் கொண்டால் ஒரு மாவட்டம் முன்னாலே இருக்கிற
மாவட்டம், இன்னொரு மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்று சொல்
கிறோம். இதே மாதிரியாக மக்கள் தொகுதியிலே, சில பேர்கள் சமு
தாயத்தினுடைய மேல் தளத்திலே இருக்கிற காரணத்தினால் முன்னாலே
இருக்கிறார்கள் என்பதும், மற்றவர்கள் பின்னாலே இருக்கிறார்கள் என்ப
தும் நம்முடைய சமுதாயத்தினுடைய கோரமான நிலைமையைத்தான்
படம் பிடித்துக் காட்டுகிறது. பொதுவாகத் தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையிலும் எல்லோரும் பின்தங்கியவர்கள் என்றுதான் சொல்ல
வேண்டும்.

இருந்தாலும், தமிழக சமுதாயத்தினுடைய அமைப்பில் நம்முடைய
மாண்புமிகு பின்தங்கிய நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும்
அறிக்கையைப் படித்துப் பார்த்த நேரத்திலே எனக்குத் தோன்றிய
தெல்லாம் நான்கு கோடி மக்களுடைய நல்வாழ்வை அவர்களுடைய
வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களைக் கொண்டதாக
இல்லை. ஏதோ சில பேருக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்தோம், ஆயிரம்
பேருக்கு ; பத்தாயிரம் பேருக்கு பள்ளிக்கூடத்தில், கல்லூரியில் படிக்க
வசதி செய்து கொடுத்தோம். விடுதிகள் கட்டிக் கொடுத்தோம், வீடு
கட்டிக் கொள்ள இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தோம் என்பதெல்லாம்
பார்க்கும்போது நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற சமதர்ம சமுதாயத்தை
உருவாக்குவதில் நாம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறோம் என்பதைத்தான்
காட்டுவதாக இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேதனைப்பட்டுக் கொள்ளக்
கூடாது. உண்மையான நிலைமைகளைப் பகிரங்கமாக விமர்சனம் செய்வது
யாரையுமே குற்றம் சாட்டுவதாகாது. நாம் மேற்கொள்ள வேண்டிய
நல்ல பணிகளுக்கு நல்ல அடித்தளமாக அமைய வேண்டுமென்ற வகை
யில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்றால் நாம் செய்
திருக்கும் காரியங்களை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது நாம் போய்ச்
சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர இன்னும் 100 ஆண்டுகள்
ஆகும் என்று தோன்றுகிறது. பின் தங்கியவர்களுக்கு ஸ்காலர்ஷிப்
கொடுத்தோம், பள்ளிகளில் படிக்க, கல்லூரிகளில் படிக்க வசதி செய்து
கொடுத்தோம், முன்பு இருந்த அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்தான்
செலவு செய்தது, நாங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவு செய்கிறோம்
என்று சொல்லுவதெல்லாம் இந்தப் பிரச்சினையின் சாதாரண விளிம்பைக்
கூடத் தொட முடியாது என்பதுதான் என்னுடைய பணிவான கருத்
தாகும்.



பின்தங்கிய நலத்துறைக்கு என்று தனியாக ஒரு அமைச்சர் இருக்கிறார்.
அவர் அமைச்சராக இருக்கிறார் என்பதற்காக நான் பொறுமைப்படவில்லை.
அதனுடைய நடவடிக்கைகள் சாதாரணமான நடவடிக்கைகளாகத்தான்
இருக்கின்றன. அது ஒரு சாதாரண டைரக்டரேட் போல் ஸ்காலர்ஷிப்
கொடுப்பது, வீடுகள் கட்டிக் கொடுப்பதுபோன்ற காரியங்களைத்தான்
செய்து கொண்டிருக்கிறதேதவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
நான்கு கோடி மக்கள் முன்னால் எதைச் சொல்லிவிட்டு வந்தாரோ,
அந்தக் காரியத்தைச் செய்வது ரொம்பத் தூரத்தில் இருக்கிறது என்று
பணிவாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினர் நலன் என்று சொல்லும்போது வருணசிரம
காலத்தில் இருந்ததுபோல் இவர்கள் எல்லாம் பின் ஜாதி, இவர்கள்
எல்லாம் முன்னால் இருக்கும் ஜாதிக்காரர் என்ற நிலையில் பின்தள்ளப்
பட்டவர்கள் பீறிட்டுக் கிளம்பிப் பொருளாதாரப் போராட்டமாக உருவாகிறது.
ஒவ்வொருவருக்கும் உணவு வேண்டும்; ஒவ்வொருவருக்கும் உடை வேண்
டும் ; ஒவ்வொருவருக்கும் வீடு வேண்டும் ; ஒவ்வொருவருக்கும் வேலை
வாய்ப்பு வேண்டுமென்று கோருகின்ற நிலையில் அந்த அடிப்படையில்
நாம் செய்திருக்கின்ற காரியங்கள் கடலில் கரைத்த பெருங்காயந்தான்
என்று சொன்னால் தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்திலே மிகவும்
திறமையான கலைஞர். மேடைகளி ல பிரசாரம் செய்வதில், வசீகரமாகத்
தலைப்புகள் அமைப்பதில் அவருக்கு நிகரான பாண்டித்தியம் உலகத்தி
லேயே வேறு யாருக்கும் கிடையாது. "பின்தங்கியவர்கள் நலனில்
நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம், நானே பின்தங்கிய வகுப்பில்
பிறந்திருக்கிறேன், பின்தங்கியவன் பெருமையான இடத்திற்கு வந்தி
ருக்கிறேன் ; அவர்கள் நலனில் எனக்கு அக்கறை இருக்கிறது" என்று
விளம்பரப்படுத்திக் கொள்ளத்தான் இந்தத் துறை பயன்பட்டிருக்கிறதே
தவிர, உண்மையிலேயே நடைபெற்ற சம்பவங்கள் இந்தப் பிரச்சினையின்
விளிம்பைக்கூடத் தொடவில்லை என்றுதான் சொல்வேன்.

நான் ஏதோ சொல்லுகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. பின்
தங்கியவர்கள் நலன்பற்றிய வேலை முழுவதும் அந்த அமைச்சருக்கு
இருக்குமானால் அந்த அமைச்சருக்கு, ஹரிசம், வீட்டு இலாகா போன்ற
வற்றைக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. எவ்வளவோ பளுவான
நிலைமைகளுக்கிடையே முதலமைச்சர் அவர்கள் சங்கடமான நிலைமையில்
கழகத் தலைவர் பொறுப்பையும் வைத்துக்கொண்டு நிதி இலாகாவையும்
வைத்துக்கொண்டு மற்றப் பல இலாகாகளையும் வைத்துக் கொண்டிருக்க
பத்தாவது பதினோராவது வரிசையில் வரக்கூடிய மந்திரியிடம் சாதாரண
மான நிலையில் பின்தங்கிய மக்களது, மாநிலத்தின் ஜனத்தொகையில்
40 சதவிகிதம், 50 சதவிகிதம், உள்ள மக்களது நலன்கள் தள்ளப்பட்டி
ருக்கின்றன என்று சொன்னால் அதிலே இரண்டு விதமான அபிப்பிராய
ங்கள் இருக்க முடியாது.

எனக்கு ஜாதியைப்பற்றி பேசப் பிடிக்காது. ஜாதியிலே நம்பிக்கை இல்லாதவன். எல்லோரும் நாட்டின் பிரஜைகள். எல்லோருக்கும் சம வாய்ப்பு, சம முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ற கருத்துக் கொண்டவன். இருந்தாலும் இந்த அமைச்சரவையிலே இருக்கும் அமைச்சர்களில் எத்தனை பேர் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் ? சொல்ல முடியுமா? திண்டுக்கல்லைத் தாண்டி தென்பாண்டி மண்டலத்தில் உள்ள முக்குலத்தோர், மறவர் குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மந்திரிசபையிலே இடம் பெற்றதுண்டா? ஹைகோர்ட் ஜட்ஜாக யாரையும் போடவில்லை என்று சொன்னார்கள். அப்படிப் போடுவதை நான் வரவேற்கிறேன். இந்த அமைச்சரவையிலே மிகப் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் யார் இருக்கிறார்கள் ? பிற்பட்ட நலத்துறை அமைச்சராக இருக்கக்கூடியவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நண்பரை இங்கே காணோம். அவரும் முதலியார் வகுப்புதான். கழகத்தோடு நெடு நாட்களாகச் சம்பந்தப்பட்ட தலைவர் நடராசன் அவர்களும் முதலியார்தான். அவர் செங்கற்பட்டு முதலியார். அடுத்தபடியாக சென்னை மாவட்டத்தில் இருக்கக் கூடிய நாவலர் அவர்களும் முதலியார்தான். சேலத்திலே தொடங்கி—சேலத்து முதலியார், வடஆற்காடு முதலியார், செங்கற்பட்டு முதலியார், சென்னை முதலியார் என்று முடிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு முதலியார்தான். அடுத்து அமைச்சர் கண்ணப்பன் முற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். ஆதித்த நாடார் இருக்கிறார், மாதவன் இருக்கிறார், அன்பில் தர்மலிங்கம் இருக்கிறார். ராமச்சந்திரன் இருக்கிறார். ஆக 15 அமைச்சர்களில் இவர்கள்தான் பிற்பட்ட அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் மதியழகன் என்னை "முதலியார்" என்றார். நான் கேவலம் இசை வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : I want that word "Kevalam" to be expunged. யாரும் சமுதாயத்திலே கேவலமானவர்கள் அல்ல. முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட வார்த்தையைச் சேர்த்துக் கொள்வது சரியல்ல. அந்த வார்த்தையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் "கேவலம்" என்று பயன்படுத்தியது அந்தச் சமுதாயத்தை உயர்த்துவதற்காகத்தான்.

திரு. கே.ஏ. மதியழகன் : அந்தச் சமுதாயத்திற்கு உயர்வளிக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் இரண்டு விதமான அபிப்பிராயம் இல்லை. திரு. கோவிந்தசாமி அவர்கள் 1969-ல் மறைந்தார்கள். அதற்குப் பிறகு இந்த மந்திரி சபையில் பொதுத் தேர்தல் வருகிற வரையில் வன்னிய சமூகத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சராவது உங்களுடைய அமைச்சரவையில் இருந்தது உண்டா? நான் இசைவேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவன், பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவன் என்று சொல்வதெல்லாம் பரிதாபப்படவேண்டுமென்பதற்காகச் சொல்வதேதவிர......................





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவனை என்று உண்மைக்கு மாறாகச் சொன்னதால் அதற்குப் பதில் சொன்னேன். யாரும் என்னைக் கண்டு பரிதாபப்படவேண்டிய அவசியம் இல்லை. யாரைக் கண்டு பரிதாபப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அவர் முதலியார் அல்ல என்று சொன்னால் திருத்துக் கொள்கிறேன். ஐந்து முதலியார்கள், மற்றவர்கள் முற்போக்கானவர்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் 1969-ம் ஆண்டில் இருந்து 1971-ம் ஆண்டுவரை பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அமைச்சராக வரமுடியவில்லை. அதற்குக் காரணம் என்ன ? உங்களுக்கு வேண்டியவர்கள், உங்களுக்கு ஆமாம் சாமி போடக்கூடியவர்கள் யாரையும் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்பதைத்தவிர வேறு என்ன காரணம் ? இதற்குத்தான் பிற்பட்ட மக்களிடம் அக்கறை காட்டுவது என்று பொருளா ? இன்னமும் கேட்கிறேன்.

முக்குலத்தோர், முக்குலத்தோர் என்று சொல்லப்படுகிறது. திண்டுக்கல் தேர்தலை எதிர்நோக்கித்தான் தேர்தலுக்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. நான் தெளிவாகச் சொல்வேன். திண்டுக்கல்லில் முக்குலத்தோர் அறுபது சதவிகிதம் மக்கள் இருக்கிறார்கள். பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களைப்பற்றிப் பேசினார்கள். மறவர் குல மக்கள்பற்றி ஏராளமாக வர்ணனை எல்லாம் எழுதியிருக்கிறார்கள். குற்றப்பிரிவினர் பட்டியலில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இப்போது தான் திடீரென்று பிரமலைக் கள்ளர்கள்பற்றி அக்கறை ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் 22-வது பக்கத்தைப் பாருங்கள். 'மதுரை மாவட்டத்தில் வாழும் பிரமலைக் கள்ளர்கள் முன்னேற்றத்தை விரைவுபடுத்த பணிந்துரைகள் வழங்க, மாவட்ட அளவில் ஆலோசனைக்குழு ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டது.' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா ? இது அந்த மக்களின் நலனுக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது திண்டுக்கல் தேர்தலுக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

திருமங்கலத்திலும், உசிலம்பட்டியிலும் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு கருதியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 20 பின்தங்கிய வகுப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்போவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலை, திண்டுக்கல் தேர்தலைக் கண்ணோட்டமாக வைத்துதான் பிரமலைக் கள்ளர்களுக்காக இந்த ஆலோசனைக் குழு, நான்கு ஆண்டுகளாக இல்லாத அக்கறை இப்போது வந்திருக்கிறது. திண்டுக்கலுக்குத் தெற்கே இருந்து யார் மந்திரியாக வந்திருக்கிறார்கள்? பின்தங்கிய மக்கள் பகுதியில் ராஜாங்கம் இருந்தார்கள், அவர்களின் பெயரால் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆரம்பித்திருக்கிறார்கள்.

[திரு. கே. அ. மதியழகன்] [1973 மார்ச் 15

எனக்கு ஜாதியைப்பற்றி பேசப் பிடிக்காது. ஜாதியிலே நம்பிக்கை இல்லாதவன். எல்லோரும் நாட்டின் பிரஜைகள். எல்லோருக்கும் சம வாய்ப்பு, சம முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ற கருத்துக் கொண்டவன். இருந்தாலும் இந்த அமைச்சரவையிலே இருக்கும் அமைச்சர்களில் எத்தனை பேர் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் ? சொல்ல முடியுமா? திண்டுக்கல்லைத் தாண்டி தென்பாண்டி மண்டலத்தில் உள்ள முக்குலத்தோர், மறவர் குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மந்திரிசபையிலே இடம் பெற்றதுண்டா? ஹைகோர்ட் ஜட்ஜாக யாரையும் போடவில்லை என்று சொன்னார்கள். அப்படிப் போடுவதை நான் வரவேற்கிறேன். இந்த அமைச்சரவையிலே மிகப் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் யார் இருக்கிறார்கள் ? பிற்பட்ட நலத்துறை அமைச்சராக இருக்கக்கூடியவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நண்பரை இங்கே காணோம். அவரும் முதலியார் வகுப்புதான். கழகத்தோடு நெடு நாட்களாகச் சம்பந்தப்பட்ட தலைவர் நடராசன் அவர்களும் முதலியார்தான். அவர் செங்கற்பட்டு முதலியார். அடுத்தபடியாக சென்னை மாவட்டத்திலே இருக்கக் கூடிய நாவலர் அவர்களும் முதலியார்தான். சேலத்திலே தொடங்கி—சேலத்து முதலியார், வடஆற்காடு முதலியார், செங்கற்பட்டு முதலியார், சென்னை முதலியார் என்று முடிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு முதலியார்தான். அடுத்து அமைச்சர் கண்ணப்பன் முற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். ஆதித்த நாடார் இருக்கிறார், மாதவன் இருக்கிறார், அன்பில் தர்மலிங்கம் இருக்கிறார். ராமச்சந்திரன் இருக்கிறார். ஆக 15 அமைச்சர்களில் இவர்கள்தான் பிற்பட்ட அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் மதியழகன் என்னை "முதலியார்" என்றார். நான் கேவலம் இசை வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : I want that word "Kevalam" to be expunged. யாரும் சமுதாயத்திலே கேவலமானவர்கள் அல்ல. முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட வார்த்தையைச் சேர்த்துக் கொள்வது சரியல்ல. அந்த வார்த்தையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் "கேவலம்" என்று பயன்படுத்தியது அந்தச் சமுதாயத்தை உயர்த்துவதற்காகத்தான்.

திரு. கே.அ. மதியழகன் : அந்தச் சமுதாயத்திற்கு உயர்வளிக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் இரண்டு விதமான அபிப்பிராயம் இல்லை. திரு. கோவிந்தசாமி அவர்கள் 1969-ல் மறைந்தார்கள். அதற்குப் பிறகு இந்த மந்திரி சபையில் பொதுத் தேர்தல் வருகிற வரையில் வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சராவது உங்களுடைய அமைச்சரவையிலே இருந்தது உண்டா? நான் இசைவேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவன், பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவன் என்று சொல்வதெல்லாம் பரிதாபப்படவேண்டுமென்பதற்காகச் சொல்வதேதவிர.........



1973 மார்ச் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவன் என்று உண்மைக்கு மாறாகச் சொன்னதால் அதற்குப் பதில் சொன்னேன். யாரும் என்னைக் கண்டு பரிதாபப்படவேண்டிய அவசியம் இல்லை. யாரைக் கண்டு பரிதாபப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. அ. மதியழகன் : அவர் முதலியார் அல்ல என்று சொன்னால் திருத்திக் கொள்கிறேன். ஐந்து முதலியார்கள், மற்றவர்கள் முற்போக்கானவர்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் 1969-ம் ஆண்டில் இருந்து 1971-ம் ஆண்டுவரை பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அமைச்சராக வரமுடியவில்லை. அதற்குக் காரணம் என்ன ? உங்களுக்கு வேண்டியவர்கள், உங்களுக்கு ஆமாம் சாமி போடக்கூடியவர்கள் யாரையும் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்பதைத்தவிர வேறு என்ன காரணம் ? இதற்குத்தான் பிற்பட்ட மக்களிடம் அக்கறை காட்டுவது என்று பொருளா ? இன்னமும் கேட்கிறேன்.

முக்குலத்தோர், முக்குலத்தோர் என்று சொல்லப்படுகிறது. திண்டுக்கல் தேர்தலை எதிர்நோக்கித்தான் தேர்தலுக்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. நான் தெளிவாகச் சொல்வேன். திண்டுக்கல்லில் முக்குலத்தோர் அறுபது சதவிகிதம் மக்கள் இருக்கிறார்கள். பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களைப்பற்றிப் பேசினார்கள். மறவர் குல மக்கள்பற்றி ஏராளமாக வர்ணனை எல்லாம் எழுதியிருக்கிறார்கள். குற்றப்பிரிவினர் பட்டியலில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இப்போதுதான் திடீரென்று பிரமலைக் கள்ளர்கள்பற்றி அக்கறை ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் 22-வது பக்கத்தைப் பாருங்கள். 'மதுரை மாவட்டத்தில் வாழும் பிரமலைக் கள்ளர்கள் முன்னேற்றத்தை விரைவுபடுத்த பணிந்துரைகள் வழங்க, மாவட்ட அளவில் ஆலோசனைக்குழு ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டது.' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா ? இது அந்த மக்களின் நலனுக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது திண்டுக்கல் தேர்தலுக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

திருமங்கலத்திலும், உசிலம்பட்டியிலும் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு கருதியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 20 பின்தங்கிய வகுப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்போவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலை, திண்டுக்கல் தேர்தலைக் கண்ணோட்டமாக வைத்துதான் பிரமலைக் கள்ளர்களுக்காக இந்த ஆலோசனைக் குழு, இப்போது வந்திருக்கிறது. நான்கு ஆண்டுகளாக இல்லாத அக்கறை இப்போது வந்திருக்கிறது. திண்டுக்கலுக்குத் தெற்கே இருந்து யார் மந்திரியாக வந்திருக்கிறார்கள்? பின்தங்கிய மக்கள் பகுதியில் ராஜாங்கம் இருந்தார்கள், அவர்களின் பெயரால் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆரம்பித்திருக்கிறார்கள்.

திரு. துரை முருகன் : ஸார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.
தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியத்தின்மீது
நடைபெறுகிற விவாதத்தில், இந்தத் துறையில் என்னென்ன செய்யப்
பட்டிருக்கின்றன, என்னென்ன செய்யப்பட இருக்கின்றன என்பதைப்
பற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருக்கிறார்கள்.
அந்த அறிக்கையைப்பற்றிதான் என்னென்ன செய்ய வேண்டும்,
செய்ததில் எது தவறு என்று சுட்டிக்காட்டலாமே தவிர தேர்தலுக்காகப்
போடப்பட்ட அறிக்கை, இது என்று சொல்கிறார்கள். இவர் பேசுவதைப்
பார்த்தால் தேர்தலுக்காகத்தான் இதைப் பேசுகிறார்களா என்பதை
அருள்கூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

MR. DEPUTY SPEAKER This is not a point of order. This is
a suggestion.

திரு. கே.எ. மதியழகன் : ராஜாங்கம் அவர்கள் இங்கு உறுப்பினராக
இருந்தார்கள். உயர்நிலைப்பள்ளிக்கு அவர் பெயர் போடப்பட்டிருக்கிறது
இன்று. அப்படி அக்கறை இருந்தால் அவரை அமைச்சராக ஆக்கி
யிருக்கக்கூடாதா, அவர் உயிரோடு இருக்கும்போது என்று கேட்கிறேன்.
இப்போது அனுதாபப்படுவார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பிரமலைக் கள்ளர்கள்பற்றி திண்டுக்கல் தேர்தலுக்குப் பிறகுதான் எங்க
ளுக்கு எண்ணம் வந்திருக்கிறது என்று தவறான கருத்தை வைத்துக்
கொண்டு அவர்கள் தம் கன்னிப் பேச்சைத் தொடங்கியிருக்கிறார்கள்.
ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்தக் குழு போடப்
பட்டது. அப்போது ராஜாங்கம் உயிரோடு இருந்தார்கள். அப்போது
திண்டுக்கல் தேர்தல் வரும் என்று யாருக்கும் தெரியாது. பிரமலைக்
கள்ளர்களின் மறுவாழ்வில் அக்கறைகொண்டுதான் இந்தக் குழு
போடப்பட்டது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்கு தங்கள்மூலம்
கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. கே. எ. மதியழகன் : இது என் கன்னிப் பேச்சல்ல. இது
கிழட்டுப் பேச்சு. பதினைந்து ஆண்டுகளாக நான் இந்தச் சபையில் இருந்து
வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் புது மந்திரி,
இதில் கொட்டையாகத்தான் போடப்பட்டிருக்கிறது, ஆலோசனைக் குழு
இவ்வாண்டுதான் நிறுவப்பட்டது என்று.

முக்குலத்தோர் யாரையும் போடக்கூடாது என்று மதுரை மாவட்டத்தி
லுள்ள ஒரு பெரிய பிரமுகர் சொல்லவில்லையா? இங்கு சத்தியவாணி
முத்து அவர்கள் அமைச்சராக இருக்கிறார்கள். அதற்கு ஒரு போட்டியாக
இருக்கிற மாதிரி முக்குலத்தோர் அதிகம் உள்ள மாவட்டத்திலிருந்து
ஓ.பி. இராமன் அமைச்சராக நியமிக்கப்பட்டார். நான் விவரங்களோடு
பேசுகிறேன். இன்று அக்கறை இருந்தால், தங்கபாண்டியன் என்று
ஒருவர் இருக்கிறாரே, அவரைப் போடக்கூடாதா? ரத்தினவேல் பாண்டியன்
கழகத்திற்காக வேலை செய்தவர் இன்று அவருக்கு ஒரு உத்தியோகத்தைக்
கொடுத்துவிட்டு அங்கே வைத்துவிட்டார்கள். என் நான் அமைச்சரவையைப்
பற்றிச் சொல்கிறேன் என்றால் யாரைப் போடுகிறார்கள், யாரை விடு





கிறார்கள் என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. கோவிந்தசாமி அவர்
கள் இறந்தபோது அவர்களது துணைவியாரை எம்.எல்.எ. தேர்தலுக்கு
நிறுத்த என்ன பாடுபட்டார்கள்! கிருஷ்ணமூர்த்தியிடம் சண்டை போட்ட
காரணத்தால். கிருஷ்ணமூர்த்தி வேண்டுமானால் மறுப்பார். இது எதைக்
காட்டுகிறது என்றால் அவர்களுக்கு இவர்கள் மேல் உண்மையான அக்கறை
இல்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இன்னொன்றும் நான் கேட்க விரும்புகிறேன். ஐ.எ.எஸ்.-க்கு பயிற்சி
அளிக்க பயிற்சி நிலையம் இருக்கிறது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு,
பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்றெல்லாம்
சொல்லப்படுகிறது. இந்த மாநிலத்தின் தலைமைச செயலாளராக—பல
ஆண்டுகளாக நாம் பார்த்ததில்லை—பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த
ராயப்பா அவர்கள் தலைமைச் செயலாளராக ஆக்கப்பட்டார்கள். என்ன
குற்றம் செய்தார், என்ன தவறு செய்தார்.

* * * * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ராயப்பா சமாசாரம் நீதி
மன்றத்தில் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. ஆதலால் அது
பற்றிப் பேசுவது நல்லதல்ல. அதுபற்றிப் பேசியவற்றை நடவடிக்கைக்
குறிப்பிலிருந்து எடுத்து விடுவது நல்லது.

திரு. கே. எ. மதியழகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
சட்டசபை அனுபவம் உடையவர்கள். ராயப்பாபற்றி விமர்சனம் செய்ய
வில்லை. அதைப்பற்றி மேலோட்டமாகச் சொல்லலாம். அப்படித்தான்
சபை விதிகள் இருக்கின்றன. அவர்கள் தலைமைச் செயலாளராக இருந்
தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைமைச் செயலாளர் பதவியி
லிருந்து நீக்கப்பட்டது சரியா தவறு என்ற விவாதம் இன்று சுப்ரீம்
கோர்ட்டில் இருக்கிறது. எனவே, அவர்கள் நீக்கப்பட்டது சரி அல்ல
என்று நீங்கள் சொல்வதும் அரசாங்கம் சரியென்று வாதாடும் நிலை
இருக்கிறது. **என்ற வார்த்தைகளை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து
நீக்குகிறேன்.

திரு. கே. எ. மதியழகன் : எனது வாதம், பிற்பட்ட வகுப்பைச்
சார்ந்த அவர் சீப் செகரட்டரியாக. . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர் யார் காலத்தில் சீப்
செகரட்டரி ஆனார் என்று சொன்னால் பரவாயில்லை.

* மாண்புமிகு பேரவைக் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : யார் காலத்தில் ? எல்லாம் நம்முடைய காலத்தில்தான். நான் அதைப்பற்றிச் சொல்ல வில்லை. ஏன் எடுத் தார்கள், யாருடைய காலத்தில் என்று சொல்லுங்கள். ஒருவர் சீப் செகரட்டரியாக இருக்கிறார். பிற்பட்ட வகுப்பினர்மீது அக்கறை இருக் கிறது என்று சொல்கிறீர்கள். ராயப்பாவை நீக்கியது நியாயமாகக்கூட இருக்கலாம், நியாயம் இல்லாமலும் இருக்கலாம். அந்த வாதத்திற்குள் நான் இறங்கவில்லை. நெடுநாட்களுக்குப் பிறகு அப்படி ஒருவர் வந்தார். அவர் போய் விடுகிறார். ஹைகோர்ட் ஜட்ஜுகளைப் போடு கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை ஜட்ஜுகள் பெயர்கள் வரு கின்றன. எனக்கு எந்த ஜாதியின்மீதும் கோபம் இல்லை. யார் மீதும் எந்தவிதமான பகை உணர்வும் எனக்கு இல்லை.

இன்று அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்கள் உணவு உற்பத்தி செய்கிறார்கள். 70 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்துவிட்டோம் என்று சொல்லும்போது இந்த ஏழை மக்களுக்கு ஒரு சில ஸ்காலர் ஷிப்ஸ் மட்டும் கொடுத்தால் போதாது. நான் குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இன்னும் அதிகப்படியான அளவில் அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பணம் ஒதுக்க வேண்டும். 400, 500 கோடி ரூபாய் செலவு செய்கிற பட்ஜெட்டில் ஐந்து கோடி ரூபாய் என்பது பெரிதல்ல. இது கண்துடைப்புக் காரியமாக நடக்கிறது. இந்த மந்திரி அவர்களிடமிருந்து மற்ற இலாக்காக்களை எடுத்து விட்டு இதில் விரிவான அக்கறை செலுத்த வழிசெய்து மேலும் அதிகத் தொகையும் ஒதுக்க வேண்டும்.

ஹாஸ்டல்கள் கட்டுவதைப்பற்றிச் சொல்ல வில்லை. எல்லா மக்களையும் ஈர்க்கக்கூடியதாக இல்லை. எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தக்கூடிய எல்லோரும் விரும்புகிற ஒரு சமதர்ம சமுதாயத்திற்கு, ஏற்றத்தாழ் வற்ற சமுதாயத்திற்கு வழிகோலுகிற காரியத்திற்கு எதுவும் சொல்லப் படவில்லை. இவைகளெல்லாம் நான் முதலில் சொன்னதுபோல் வாக்கு
பி.ப. 12.30 களைச் சேகரிப்பதற்கு, இவற்றைச் சொல்லிக்கொண்டே ஆட்சி பீடத்தில் அமர்ந்து தம்முடைய நலன்களுக்கு உகந்த காரியங்களைச் செய்வதற்குத் தான் பயன்படும் என்று வருத்தத்தோடு சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : On a point of Clarification Sir.

எனக்கு முன்பு பேசியவர்கள் முக்குலத்தோர்பற்றிக் குறிப்பிடும்போது தேர்தல் கண்ணோட்டத்தோடு ஒரு சில காரியங்கள் இதிலே சொல்லப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கண்ணோட்டத்தில் அவர்கள் அதைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது......

THIRU K. A. MATHIALAGAN : The Hon. Member is making a second speech. Can he make a second speech ?



THIRU SOWDI S. SUNDARA BHARATHI : This is not a speech. This is only a clarification on an issue.

MR. DEPUTY SPEAKER : Clarification should be limited to one sentence. That will always be better. That will be left to your cleverness.

திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி : இதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் எப்படி பிரிட்டிஷ்காரர்களால் அந்த முக்குலத்தோர் நசுக்கப்பட்டார்களோ, அதே மாதிரி நிலையில்தான் அவர்கள் வைக்கப் பட்டிருந்தார்கள். இப்போது நல்ல நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். ராஜாங்கம் : தலைவரவர்களே, ராயப்பா அவர்களைபிற்படுத் தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர் என்று சொல்கிறார்கள். ஹிந்து மதத்தில்தான் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமயத்தினர் ஹிந்து சமயத்தை விட்டுச் சென்ற உடன், வேறு மதத்திற்கு மாறிய உடன், பிற்படுத்தப்பட்டவர் என்ற நிலையில்லை. அவர் ஹிந்து மதத்தைச் சார்ந்தவர் அல்ல. அந்த வாதம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1973–74-ம் ஆண்டு பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை மானியக்கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறை பிற்பட்டோர் நலத்துறை என்றுதான் அழைக்கப் பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டாவது இந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்கிறபோது பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை என்பதற்குப் பதிலாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியம் என்று வைக்கவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

1952-ம் ஆண்டில் மத்திய அரசால் பிற்படுத்தப்பட்டோர் நல மேம் பாட்டுக் குழு என்று அமைத்து, அந்தக் குழு இந்தியா பூராவும் சுற்றுப் பயணம் செய்து, அந்தக் குழு ஒரு அறிக்கையை மத்திய அரசிடத்திலே கொடுத்தது. அந்த அறிக்கையிலே மத்தியிலே ஒரு தனி இலாகாவும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தனி பிற்படுத்தப்பட்டோர் நலனைக் கவனிக்க இலாகா அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. மத்திய அரசு அந்த அறிக்கையை எடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் இந்த மாநிலத்தில்தான் அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒரு தனி இலாகா அமைத்து இருக்கிறது. தமிழ்நாட்டில்தான் இது நடந் திருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும், எந்த அரசும் பிற்படுத்தப் பட்டோர் நலனைக் கவனிக்க தனி இலாகா அமைக்கவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் இனத்தில்

பிறந்ததாலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நல் ஆதரவைப் பெற்றும் பாட்டாளி மக்களின் ஆதரவை பெற்றும், இந்த இயக்கத்தில் வளர்ந்து இந்த இயக்கத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத் தால் இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோர் நல இலாகாவை ஏற்படுத்தி, அந்த இலாகா அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக இன்று பாடுபட்டு வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசை எதிர்ப்பவர்கள் ஆண்டு அனுபவித்தவர்கள், செல்வந்தர்கள், நிலபிரபுக்கள்தான் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பலர் பல விதமாகப் பேசினாலும், நாம் ஒன்றைப் பார்க்க முடியும். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னாலே 19,000 மாணவர் கள்தான் உதவித் தொகை பெற்று இருந்தார்கள். ஆனால் இந்த அரசு 1972–73-ல் மட்டும் 1,89,466 மாணவர்களுக்கு ரூ. 309.38 லட்சம் உதவித் தொகை கொடுத்து, அந்த மாணவர்களுக்கு நல்ல வழிவகை செய்திருக்கிறது என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சியின் லட்சியமே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண் பதுதான். ஆனால் இங்கேகூட சிலர் ஊர் சிரிக்கிறது, உலகம் சிரிக்கிறது என்று சொன்னார்கள். அதைக்கூடச் சொந்தமாகச் சொல்லவில்லை. கலைஞர் அவர்கள் எழுதிய "மனோகரா" சினிமா வசனத்தைப் பார்த்து விட்டுத்தான் சொன்னார்கள் என்று தெரிவித்துக் கொள் கிறேன். ஊரும் உலகமும் சிறக்க வேண்டும், செழிக்க வேண்டும் என்றுதான் எங்கள் கட்சியின் ஆட்சி பாடுபடுகிறது. அதைப் பார்த்து ஆணவச் சிரிப்புச் சிரிப்பவர்கள் யார் என்பதை இன்றைய தினம் மக்கள் அறிந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துத்தான் நாடும் சிரிக்கிறது, நியாயமும் சிரித்து நீதியும் சிரித்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் உயர்ந்துவிடக் கூடாது என்ற ஆதிக்க வாதி களின் முயற்சி பலிக்காது என்பதை நான் தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆதிக்க வாதிகள் மேட்டுக்குடியினருக்கு இன்றைய தினம் வக்காலத்து வாங்கிக்கொண்டு செய்து வருகின்ற பிரசாரங்கள் நாட்டு மக்கள் மத்தியில் எடுபடாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். உலக மகா யுத்தத்தின் போது ஏற்பட்ட "அட்லாண்டிக் சாசனம்" எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ உலக அரங்கில், மனித உரிமை வரலாற்றில் "மேக்னா கார்ட்டா" எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது தமிழக வர லாற்றில இந்த "பின் தங்கிய துறை" தனியாக ஆரம்பித்து இருப்பது என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைச் சொல்லிக் கொண்டு வந்த போது "புள்ளிமான் குட்டிக்குப் புலியா பால் கொடுக்கும் பால் தராது"— என்று சொல்வார்கள். அதே போல் செல்வந்தர்கள் இந்த நாட்டின் பொறுப்பில் இருந்தபோது பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறை





காட்டாமல் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த மக்களுக்கு நல் வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பட்ட மக்களின் துயர் துடைக்கும் கலைஞர், அம்மக்களைப் பொருத்த மட்டில், அவர் எங்களுக்குக் கிடைத்த "ஆல்பர்ட் சுவீட்சர்", அவர் எங்க ளுக்கு கிடைத்த "ஆப்பிரகாம் லிங்கன்", அவர் எங்களுக்கு கிடைத்த "சன் யாட் சன்", அவர் எங்களுக்கு கிடைத்த "கமால் பாட்சா" அவர் எங்களுக்கு கிடைத்த அண்ணல் "காந்திஜி" அவர் எங்களுக்குக் கிடைத்த "காமதேனு, கற்பகத்தரு", என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி பிற்படுத்தப்பட்டமக்களுக்காக ஆட்சி நடத்தி வரக் கூடிய கலைஞர் அவர் கள் இன்றையதினம் அந்த இலாகாவிற்குத் தனியாக ஒரு அமைச்சரைப் போட்டு, அதை நிர்வகித்து வருகிறார்கள். இவ்வளவுக்கும் மேலாக * * * * இன்றைக்கு கூட பேசுகிறபோது மதி அவர்கள் இங்கே உணர்ச்சி வசப்பட்டு ஏதோ தமிழ் * * * நாட்டில் இருக்கும் வன்னியபெருமக்களுக்கு எல்லாம்............ * *

திரு. கே. எ. மதியழகன் : துணைச் சபாநாயகர் அவர்களே, * * * *

திரு. எஸ். ஆறுமுகம் : **தமிழ்நாட்டில் வன்னியப் பெருமக்களுக்கு முன்னேற்றம் என்று குழு அமைத்து, அந்த மக்களின் நல்வாழ்வில் திட்டவட்ட காணவேண்டுமென்று பாடுபடும் அரசு இது தான் என்பதை மாகச் சொல்லிக்கொள்வேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பர்சனல் ரிமார்க்ஸ் எந்த அளவுக்குத் தாங்கள் அனுமதிக்கப்போகிறீர்கள் என்று தெரிய வேண்டும். அப்படியானால் ஒவ்வொரு உறுப்பினரும், மற்ற வர்களைப் பற்றி பர்சனல் ரிமார்க்ஸ் கொடுப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

Mr. DEPUTY SPEAKER : Generally I do not encourage personal remarks. I expunge the words * * * * * * *

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. When an hon. Member raises a point of order while another hon. Member is speaking, the latter must yield. It is only the Hon. Ministers who have got the privilege to say that they are not yielding............

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

(பல உறுப்பினர்கள் இருக்கையிலிருந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருக்கையில் இருந்து கொண்டே பேசவேண்டாம். மினிஸ்டர் என்றால் கூட பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் எழுந்து செய்யவேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம் : தமிழ் நாட்டிலுள்ள வன்னிய பெருங்குடி மக்களுக்கு கழக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், இன்றைக்கு அந்த மக்களுடைய வாழ்வில் நல்லதொரு முன்னேற்றம் காணக்கூடிய அளவுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக நல்வாழ்வினை பெற்றுக்கொண்டிருக் கிறார்கள் என்பதை நான் ஒரு வன்னியன் என்ற முறையில் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப்போல், உள்ளவர்கள், வன்னிய சமுதாயத்தில் இருப்பவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக இருப்பவர்கள், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நின்றுதான் சட்டமன்ற உறுப்பினராக இங்கே 27 பேருக்கு மேல் வர முடிந்ததே தவிர காங்கிரஸ் கட்சிக்கோ, அல்லது புதிதாக ஆரம்பித்திருக்கின்ற புதிய கட்சிக்கோ அந்த தகுதி வராது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன் (ஆரவாரம்).

இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டுக்காக, பிற்படுத்தப் பட்ட மக்களுடைய மேம்பாட்டுக்காக பாடுபடும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதனுடைய ஆட்சிதான், டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமர்ந்துள்ள ஆட்சி என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின் றேன். இவ்வளவு ஏன்? வன்னிய சமுதாயத்தில் இருக்கிற மக்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ளுவேன். இன்றைக்கு உள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான் இந்த சமுதாயத்திற்கு, இந்த சமுதாய மக்களுக்காக பாடுபடக்கூடிய தானைத் தலைவன் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; நமது குல தெய்வமாகக் கூட ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (ஆரவாரம்).

முஸ்லீம் அங்கத்தினர் தெரிவித்ததுபோல் உருது பேசும் முஸ்லீம் களையும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுவதுடன், கொங்கு வேளாளரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படியெல்லாம் சேர்த்து, இந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடக்கூடிய இந்த ஆட்சியை நாங்கள் கட்டிக் காப்போம், எதிர்ப்பவர்களுடைய எதிர்ப்பை தூள் தூளாக்குவோம் என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன். நன்றி, வணக்கம்.

**Dr. H. V. HANDE** : Hon. Deputy Speaker, Sir, I really wonder why so much of excitement and heat has to be produced on a very important Demand on which there can be no controversy. I think all of us are agreed that backward classes have to be fully looked after and the



quantum of assistance that is given to the backward classes is woefully inadequate. Whether it is this Government or the previous Government everyone in this House will agree that the amount spent on the backward classes is far from satisfactory and it has to be doubled two or three times.

In this connection, I wish to point out that when the report of the Sattanathan Committee was published, I told this House that the Government should immediately take out a few recommendations and see that they are properly implemented. Of course, there is some satisfaction that they have decided to implement 17 recommendations. But I was suprised to find that out of the 17 recommendations, only 10 recommendations have already been considered and another 5 recommendationt would be considered when the financial position improved. What abous the other two recommendations. I do not know why that is left out of the purview of the Government. Whatever it is, even these 17 recommendations are totally inadequate to improve the lot of the backward classes.

What is the crux of the Sattanathan Committee's report? The crux is that quite a number of people are at the bottom of economic depravity and they have to be brought up. That Committee has also recommended that whichever families are brought up from the economic depravity to a higher position, those families can be left out. The Government can spend the amount incurred on them for the persons who are still backward and who are most backward. The first step should be to bring the most backward people to the higher level. Are we spending enough money on the most backward people? What is the use of trying to give an impression to the people that the Government are looking after the backward people when the most backward people are not properly looked after and they are totally denied economic benefits. To-day they are almost outcastes in the society and this should be completely done away with or demolished.

We should have a society where no one is different from another just because of the accident of birth and this can be done only if the most backward people are brought up to the level of other people. Now, what is the position? Even though a sum of about Rs. 5 crores has been allotted, nearly half of it is spent on some selected families and the Sattanathan Committee has referred to it with great grief. Have this Government found out a solution to this aspect of the matter. Something must be done by this Government.

Now I come to dhobi khanas. Its number has been increased to 1,400 or 1,600. In the last six years of the D.M.K. rule, the increase is only about 1,000. Could not the Governmnet give more facilities

not only implements like financial assistance to enable them to buy power laundries? Should they not go about in the society as other high class people? In fact such assistance is given in Japan and Malayasia and why not we do it here and make them top-class people.

Then, my hon. Friend, Thiru Latheef had mentioned on a former occasion about the need for the inclusion of the Urdu-speaking Muslims in the list of Backward Classes. In my constituency, there are about 2,000 Urdu-speaking Muslims. I would like to know why they have been left out in the list and denied financial benefits. I think something should be done to them.

Once again, I would like to ask how the Hon. Minister is going to bring up the most backward classes to the higher level and how he is going to see that only people who are really backward get benefits and not some selected families. I hope and trust that he will reply to the points raised by me.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே,
பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள நமது
அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு பல நன்மைகளைச் செய்
திருக்கிறார்கள். அதை இல்லை என்று யாராலும் மறுக்க முடியாது.

பொதுவாக வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை மாவட்டங்களில்
ஒரு பகுதி, சென்னை மாவட்டம் ஆகியவற்றில் இருக்கக்கூடிய மிகவும்
பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று சொல்லக்கூடிய வன்னியர்கள், மிகவும்
பிற்படுத்தப்பட்ட மக்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்களே தவிர,
வேலை வாய்ப்புகள் தருகின்ற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற
வகையில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அநேகமாக எல்லா வகுப்
பினரும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்ந்துவிட்டார்கள்.
இன்னும் இருப்பவர்களும் சேர வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.
ஒரே ஒரு சமுதாயம் மட்டும் ஏன் விடுபட்டிருக்க வேண்டும்? பிராமண
சமுதாயத்தினராகிய அவர்களையும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில்
சேர்த்துவிட்டால் எல்லோரும் (At par) ஆகிவிடும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்பது ஒரு பெரிய சமுத்திரம். பெண்
கொடுக்கும் சமயத்தில் தொண்டை மண்டலம், துளுவ வேளாளர் என்
கிறார்கள். ஆனால் ஸ்காலர்ஷிப் என்று வரும்போது நாங்கள் மிகவும்
பிற்பட்டவர்கள் என்கிறார்கள். ஒரு ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் வேலை
காலி என்றால், அதற்கு சர்வீஸ் கமிஷனிடத்தில் அப்ளிகேஷன் கொடுக்கும்
சமயத்தில் கணக்குப்பிள்ளையிடம் சர்டிபிகேட் வாங்கினால் போதும். மிகச்
சுலபமாக கணக்குப் பிள்ளையிடம் பிற்பட்டவன் என்று சர்டிபிகேட் வாங்கி
விடலாம். அந்த சர்டிபிகேட் இருந்தால் தாசில்தாரும் "எஸ்" என்று
சொல்லிவிடுகிறார். கலெக்டரும் ஆமாம், இவர் பிற்படுத்தப்பட்டவர் என்



கிறார். இங்கே வந்தால் பெரிய முதலியார் என்று சொல்லிக்
கொள்ளுபவர்கள், வேலை வாய்ப்பு என்று சொன்னால் பிற்பட்ட வகுப்பாக
மாறிவிடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
பேசுவது முதலியார்களை தாக்குவது மாதிரி இருக்கிறது. அப்படிச்
சொல்லவேண்டாம்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இன்றைய தினம் சாதியில் முற்
பட்டவர்களாக இருப்பவர்கள் தான் பிற்பட்டோருக்கு கொடுக்கப்படுகின்ற
சலுகைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுடைய துணைவியார் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை
நினைவுபடுத்துகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சலுகைகளைப் பெறுவதற்காக முற்
பட்ட ஜாதியினர் தங்களை பிற்பட்ட ஜாதியினர் என்று சொல்லிக்கொண்
டிருக்கிறார்கள். அதனால் பிற்பட்டவர்களுக்கு செய்யவேண்டிய சலுகை
களை நாம் செய்ய முடியவில்லை. ஆகவே, முற்பட்டவர்கள், தாங்கள்
பிற்பட்டவர்கள் என்று வருவதை தடுக்க வேண்டும் என்பதுதான்
என்னுடைய குறிக்கோள்.

சட்டநாதன் கமிட்டியைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியினர் சிறந்த திட்டங்களைத்
தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புகளில் பிற்பட்டவர்
களுக்கு 25 சதவிகிதம் என்று இருப்பதை 31 சதவிகிதம் ஆக்க வேண்டு
மென்று சொல்லியிருக்கிறார்கள் நமது அரசாங்கம் அதை ஒப்புக்
கொண்டுள்ளது. முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் பிற்
பட்ட வகுப்பு லிஸ்டில் வந்துவிட்டதால் இந்த பிற்பட்ட வகுப்பை
"மோஸ்ட் பாக்வர்டு "பாக்வர்டு" என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும்.
இசை வேளாளர்கள், மீனவர்கள் இவர்கள் எல்லாம் மிகவும் பிற்
பட்டவர்கள். வன்னியர்களும் மிகவும் பிற்பட்டவர்கள். (குறுக்கீடு)
எல்லோரும் பிற்பட்டவர்கள் என்று சொல்லும்போது நான் என்னைப்பற்றி
யும் சொல்லிக்கொள்வது இயற்கைதானே !

இன்றைக்கு அநேகமாக பிற்பட்ட வகுப்பில் இல்லாதவர்களே
இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு—இன்னும் ஒரு சில வகுப்பினை
ரைத் தவிர—வந்துவிட்டார்கள். கள்ளர்கள் வந்துவிட்டார்கள்; மறவர்
கள் வந்துவிட்டார்கள்; நாடார்கள் வந்துவிட்டார்கள்; முதலியார்கள்
வந்துவிட்டார்கள்; நாயுடுகள் வந்துவிட்டார்கள். இப்படி பல வகுப்
பினர் பிற்பட்ட இனத்திற்கு வந்துவிட்டார்கள். கல்வி, வேலை வாய்ப்பு
போன்றவைகளில் சலுகைகளைப் பெறுவதற்கு பிற்பட்டவர்கள் என்று

சொல்லக்கூடியவர்கள்—பிற்பட்ட நாயுடு என்பவர்கள் பெண் கொடுக்கும் நேரத்தில் நாங்கள் கம்மாள நாயுடு என்கிறார்கள் . ஒரு இடத்திலே நான்கு வேலைகள் காலி இருக்கிறது என்றால் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், "நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன், வேலை கொடுங்கள்" என்று சொல்லி உள்ளே வந்துவிடுகிறார். அங்கே செலக்ஷன் செய்பவர் களும் அப்படிப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனால் உண்மை யிலேயே பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகளிலும் சர்வீஸ் கமிஷன் மெம்பர் களிலும் பலர்—முற்பட்ட வகுப்பினர் தங்களை பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்லி—இருக்கிறார்கள். அவர்கள் வேலைகளுக்கு செலக்ஷன் செய்யும் போது அவர்களைப் போன்றவர்களைத்தான் செலக்ட் செய்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்களைப் பற்றி குறை கூறுவதாக நினைக்கிறேன். அவரவர் ஜாதிக்காரர்களைப் பார்த்து தேர்வு செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது சட்டப்படி சரியா? சர்வீஸ் கமிஷன் தேர்வைப்பற்றி குறை சொல்வது பொருத்தமுடையதா என்பதற்கு தீர்ப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் ஒரு வக்கீல். எனக்கு அதைப் பற்றித் தெரியும். சட்டத்திற்கு முரணான கருத்துக்களை நான் சொல்ல வில்லை. முஸ்லீம் மெம்பர் ஒருவர் செலக்ஷன் கமிட்டியில் இருந்தால், அவர் தேர்வுக்கு வருகிற முஸ்லீமை விட்டுவிட்டு வேறு ஒருவரையா செலக்ட் செய்வார்! மேலே இருக்கக்கூடியவர்கள் தேர்வுக்காக வரக் கூடியவர்களின் எஸ். எஸ். எல். சி. புத்தகத்தைப் பார்க்கிறார்கள். அதிலே என்ன வகுப்பைச் சேர்ந்தவர் என்று போட்டிருக்கிறது என்று பார்க்கிறார்கள். அதற்குப் பின்னால் மற்ற விஷயங்களைப் பார்க்கிறார்கள். தேர்வுக்கு வந்திருக்கிறவர் தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவராக இருந் தால், அவருக்கு மூன்று மார்க்கு போடவேண்டுமானால் 30 மார்க்கு போட்டு வைக்கிறார்கள். அது கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். யாரையும் குறைத்துக் கூறவேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. அதனால் உண்மையிலே தகுதி படைத்தவர்களுக்கு மிகவும் பிற்பட்டவர் களுக்கு இடம் இல்லாமல் போய்விடுகிறது. கலைஞர் இதையெல்லாமா பார்த்துக்கொண்டிருக்க முடியும்? யார் யாருக்கு என்னென்ன சலுகை களைச் செய்யவேண்டுமென்று சொல்கிறோம். இப்படிப்பட்ட அதிகாரி களால் அந்தச் சலுகைகள் உரியவர்களுக்கு கிடைக்கவில்லை. அதைச் சுட்டிக் காட்டுவதில் தவறு இருக்காது என்று கருதுகிறேன்.

சட்டநாதன் கமிட்டியினர் 31 சத விகிதம் பிற்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்டிருக்கிற நமது அரசு, இவர், இவர் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் இவர், இவர் பிற்பட்ட வகுப்பினர் என்று பிரித்து, மிகவும் பிற்பட்டவர் களுக்கு 15 சதவிகிதம் என்றும், பிற்பட்டவர்களுக்கு 16 சதவிகிதம் என்றும் நிர்ணயித்து குறுக்கே ஒரு சிறிய வேலி போட்டுவிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்றால் 31 சதவிகிதத்தையும்



சேர்த்து வைத்திருந்தால், முற்பட்டவர்கள் எல்லாம் தாங்கள் பிற்பட்டவர் கள் என்று சொல்லி எல்லாவற்றையும் மேய்ந்துவிட்டு போய்விடுவார்கள். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அதைத் தடுக்க வேண்டுமானால் நான் சொன்னமாதிரி ஒரு வேலி போட்டுவிட வேண்டும். ஏற் கெனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாணவர்கள் கூட்டத்தில் இந்த மாதிரியான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வேலி கண்டிப்பாக போட்டாகவேண்டும். அப்படி வேலி போட்டு விட்டால் அம்மையார் அவர்கள் கூட அதைத் தாண்ட முடியாது என்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வேலி போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த வேலியை இப்போதே போட்டுவிடக்கூடாது. முக்குலத்தோர் மோஸ்ட் பாக்வர்டாக இருக்கிறார்கள். இன்னும் யார் யார் மோஸ்ட் பாக்வர்டு என்று முடிவு செய்து, திட்டவட்டமாக இவர்கள் மோஸ்டு பாக்வர்டு, இவர்கள் பாக்வர்டு என்று முடிவு செய்துவிட்டு, அதற்குப் பின்னால் கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன வேலியைப் போடுங்கள் அதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சர்வீஸ் கமிஷனிலே இருப்பவர்கள் எந்த ஜாதிக்காரர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் அந்த ஜாதிக்காரர் களைத் தேர்ந்தெடுப்பதாக கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த கருத்து சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்கள் மனதைப் புண்படுத்துவ தாக இருக்கும். எனவே, சர்வீஸ் கமிஷன் தேர்வு முறையைப்பற்றி அவர்கள் இங்கே குறிப்பிட்டவற்றை எக்ஸ்பஞ்ச் செய்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன். தாங்கள் அதைப்பற்றி முடிவு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சர்வீஸ் கமிஷனைப்பற்றி மட்டும் நான் கூறவில்லை. பொதுவாக தேர்வு செய்கிறவர்கள் தேர்வுக்கு வருகிறவர்களை தேர்ந்தெடுக்கும்போது, அவர்கள் ஜாதிக்காரர்களாக இருந்தால் முதலிடம் கொடுக்கிறார்கள் என்பதை விளக்குவதற்காகச் சொன்னேன். அதனால் எல்லோரும் அப்படித்தான் செய்கிறார்கள் என்பதல்ல. அது சர்வீஸ் கமிஷனாக இருந்தாலும் சரி, மற்ற இடங்களாக இருந்தாலும் சரி எங்கும் அப்படிப்பட்டத் தவறு நடக்கக்கூடாது என்பதற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சர்வீஸ் கமிஷனைப்பற்றி இங்கே பேசாமல் இருப்பது நல்லது.

திரு. கே. டி, கே. தங்கமணி. : "மிஸ்டர் டிபுடி ஸ்பீக்கர் சார், இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன.

பல கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பிலே மணலி அவர்கள்
சொல்லிவிட்டார்கள். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில்
1969-ம் ஆண்டு மே மாதம் 2-ந் தேதியிலிருந்து இந்த இலாகாவை ஒரு
தனி இலாகாவாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். தனி இலாகாவாக
அமைத்து நான்கு ஆண்டு காலமாகிவிட்டது. இந்த நான்காண்டில்
ஏற்பட்ட சாதனைகள் என்ன என்ன என்பதை ஏதாவது ஒரு திட்டத்தின்
மூலம் வெளிப்படுத்த வேண்டும். அந்தமாதிரி விளக்கினால் எந்த
விஷயத்தில் எப்படி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை
புரிந்துகொள்ள முடியும். "ப்ராக்மெட்டிக் அப்ரோச், ப்ரோகிராமெட்டிக்
அப்ரோச்" என்று விஷயங்களை தெளிவுபடுத்திப்போட வேண்டும். இது
வரை அப்படிச் செய்யாமல் இருந்தாலும் கூட அடுத்தாண்டிலாவது
ஐந்தாண்டு காலத்திலே இந்த இந்த முறையிலே நாங்கள் செய்திருக்
கிறோம் என்று தெளிவுபடுத்தினால் அதை பரிசீலனை செய்து பார்க்க
வசதியாக இருக்கும். இல்லாவிட்டால் தனியாக ஒரு அமைச்சரையே
அமைத்திருக்கிறோம் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாமே
தவிர, அந்த அமைச்சர் வந்த பிறகு இன்னின்ன காரியங்களைச் செய்
திருக்கிறார்கள் ; இந்த இந்த வகையிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது;
மேலும் இன்னின்ன திட்டங்கள் இருக்கின்றன என்று சொல்லக்கூடிய
ஒரு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதன் அடிப்படையிலே சில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாம் பிற்பட்டவர்கள் என்று சொல்லி, அவர்களுக்குகாக சில சலுகை
களைச் செய்து கொண்டிருப்பது, ஜாதியை ஒழிக்கவேண்டுமென்று சொல்லக்
கூடியவர்களே மேலும் மேலும் ஜாதிகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்
கள் என்று ஆகிவிடக்கூடாது. இந்த மானியத்தைப் பற்றி அதிகமாக
நான் பேச வேண்டாம் என்று நினைத்தாலும் சில அனுபவங்களை மட்டும்
தெரிவித்துக் கொள்கிறேன். "இருட்டறையிலே உள்ளதடா உலகம், ஜாதி
இருக்கிறது என்பானும் இருக்கிறானே" என்று ஒரு புலவன் பாடிவிட்டு
போய்விட்டான். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகளைப் பார்த்தால்
"நான் இந்த ஜாதியாக இருக்க வேண்டும்" என்று போட்டிபோட்டுக்
கொண்டு வரக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டிலே, சமுதாயத்திலே பிற்பட்டோர்
இருந்தார்கள்.

There are people who are socially backward and economically back-
ward அவர்களை முன்னே கொண்டுவர வேண்டுமென்று அரசியல் சட்ட
நிபுணர்கள் சட்ட திட்டங்களை வகுத்தார்கள். அதை நாம் வைத்துக்கொண்டு,
அந்த அடிப்படையிலேதான் இந்த இலாகா செயல்பட வேண்டுமென்று
சொன்னால், அதற்கு ஒரு தனி அமைச்சர் தேவை இல்லை. திருமதி
அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அதைப்பற்றித் தெளிவாகச் சொன்
னார்கள். இன்றைக்கு இந்த இலாகாவை வைத்துக்கொண்டு அரசியல்
சட்டத்தின் அடிப்படையில் சமுதாயத்தில் ஒரு பகுதியினர் பின்தங்கிய
வர்கள் என்று சொல்லி அவர்களுக்கு சலுகைகளை செய்துக் கொண்டிருப்
பது வரவேற்கத்தக்கதல்ல.



இப்போது இருக்கின்ற பின்தங்கிய சமுதாயத்தினர் என்று சொல்லக்
கூடியவர்களில் பலர் பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள். இந்த
தமிழ்நாட்டிலே நாம் அதைப்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம் ; அவர்
களுக்கும் சலுகை அளிக்கப்பட்டுத்தான் வருகிறது. அப்படிச் செய்யாமல்
பொருளாதாரத்தின் அடிப்படையில் பின்தங்கியவர்களா என்று பார்த்து
அவர்களுக்குச் சலுகை அளிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். பின்
தங்கியவர்களின் உதவித் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் 14 லட்சம்
ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள் ; இப்போது நிறுத்திவிட்டார்கள் என்று
சொல்லக்கூடும். அவர்கள் நிறுத்திவிட்டாலும் உதவித் திட்டத்தை
தொடர்ந்து செயல்படுத்துவதற்காகத்தான் இந்த இலாகாவை தனியாகப்
பிரித்திருக்கிறார்கள். இதிலே என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.
இந்தத் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்றால்,
அதில் அரசியல் சட்டத்தின் கீழ் வருகின்ற பின்தங்கிய வகுப்பினருக்கு
6 கோடி ரூபாய் என்றும், சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய
பிரிவினருக்கு 4 கோடி ரூபாய் என்றும் ஒரு "பைஃபர்கேஷனை" ஏற்
படுத்தி செயல்படக்கூடிய அளவில் இந்த இலாகா இருந்தால், அது ஒரு
தனி இலாகாவாக செயல்படுவதில் நல்ல பலன் கிடைக்கும். இல்லை
யென்றால் இது தேவையில்லை என்பதுதான் என் கருத்து.

இன்றைக்கு பலர் மேல் ஜாதியினராக இருக்கலாம். ஆனால் அவர்கள்
ஓட்டல் தொழிலாளர்களாகவும், கூலி வேலை செய்பவர்களாகவும், மில்
தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் மிகவும்
பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கல்விச் சலுகையும்
கிடையாது ; வேலை வாய்ப்புகளிலும் சலுகை கிடையாது; வேறு சலுகை
களையும் அவர்கள் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள். அதனால் மேலும்
மேலும் அவர்கள் சமுதாயத்தில் ஒரு தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள்.
அப்படிப்பட்டவர்கள் மேல் ஜாதிக்காரர்களாக இருந்தாலும், பொருளா
தாரத்தில் அடித்தளத்தில் இருப்பதால் அவர்களுக்கும் சலுகைகள் செய்ய
வேண்டும். அவர்கள் உழைப்புக்கு மதிப்பு இருக்க வேண்டும். அவர்கள்
உயர்வுக்கு உதவி செய்யவேண்டும். அப்படியானால்தான் இந்த இலாகா
தனியாக செயல்படுவதில் அர்த்தம் உண்டு என்பதை சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். இன்றைக்கு 25 ஆண்டு கால அனுபவத்திற்குப் பிறகு
பழைய நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று நிலை ஏற்பட்டிருக்கிறது.
அமைச்சரவர்களும் அந்த எண்ணமுடையவர்கள் என்பது எனக்குத் தெரி
யும். ஆகையால் இந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்
என்று நான் விரும்புகிறேன்.

ஏற்கெனவே பின்தங்கிய வகுப்பினருக்காக மத்திய அரசாங்கம்
ஒரு கமிஷனை அமைத்திருக்கிறது. அந்த கமிஷனின் கருத்து
களைச் செயல்படுத்துவதற்காக நாம் தமிழகத்திலே ஒரு குழுவை
அமைத்திருக்கிறோம். நானும் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினராக
இருக்கிறேன். அதனால் அதைப்பற்றி நான் குறை சொல்ல முடியாது.
அந்த குழு எதற்காக நியமிக்கப்பட்டதோ அந்தக் காரியங்களை நிறை
வேற்ற முடிகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான்

நான் சொல்லுவேன். 6 மாதங்களுக்கு ஒரு முறை அந்தக் குழு கூடுகிறது. சில விஷயங்களைப் பற்றி முடிவு செய்கிறது. அந்தமுடிவு களை செயல்படுத்துகிறார்களா என்றால் இல்லை. இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்க விரும்புகிறேன்.

ஒரு வருஷத்திற்கு முன்பு முதுகுளத்தூர் பகுதியில் இருக்கின்ற பிரமலை கள்ளர்களை—இப்போது மேல் ஜாதியினர் என்று சொல்லப் படக்கூடியவர்கள்—பின்தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று மாங்காட்டு மதியழகன் அவர்கள் காரணத்தோடு விளக்கிச் சொன்னார்கள் அந்த அளவுக்குத்தான் மறவர்களும் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த நேரத்தில் அதை குழுவினர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, அதை அமுல்படுத்த வேண்டுமென்று முடிவு செய்தனர். அடுத்த கமிட்டிக் கூட்டத்தில் அதை நடைமுறைப்படுத்துகிற காரண காரியங்களை ஆராய்வதற்காக ஒரு ஸ்பெஷல் தாசில்தாரைப் போட்டோம். அவர் என்ன ஆனார் என்றே இந்நாள் வரையில் தெரியவில்லை. கமிட்டியின் அந்த முடிவை நிறைவேற்றுவதற்கு ஸ்பெஷல் தாசில்தார் கூட வேண்டியதில்லை. எத்தகைய பரிசுகள் வந்தாலும். இந்தக் குழுவின் முடிவுப்படி நடத்தினால் போதும். இந்தக் குழுவின் முடிவுப்படி பிரமலைக்கள்ளர்களுக்கு, அவர்கள் முன்னேற்றத்திற்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அவைகளைச் செய்து கொடுத்தால போதும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தாற்போல் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள சில வேண்டுகோள்
பி ■ களை வைத்து சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜனங்
1·00 களுக்கு தனியாக மானியம் இருக்கிறது. இன்னும் சில வசதிகள் அதிகமாக கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு எவ்வளவு தான் வசதிகள் அதிகமாகச் செய்தாலும் அவைகள் எல்லாம் அதிகமாக ஆகாது. அந்த அளவுக்கு அவர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதில் அபிப்பிராய பேதத்திற்கு இடமே இல்லை. கிட்டத்தட்ட அதே அளவுக்கு இன்னும் சில பகுதி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் செய்யக் கூடிய வேலைகளை வைத்துப் பார்த்தால், நரிக் குறவர்கள் சுமார் 20 ஆயிரம் பேர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

மருத்துவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள்—முடி திருத்துகிறவர் மட்டுமல்ல, இன்னும் பல மருத்துவம் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இவர்களுக்கு ஒரு சங்கம் கூட இருக்கிறது. சுமார் 4,13,807 பேர்கள் இருக்கிறார்கள். சலவைத் தொழிலாளர்கள் 4,61,239 பேர்கள். இந்த மூன்று பகுதியினரையும்—நரிக் குறவர்கள், சலவைத் தொழிலாளர்கள், மருத்துவர்கள்—ஆகியவர்களுக்கு இன்னும் அதிக வசதி கிடைக்கக் கூடிய முறையில் செய்யலாம். இப்படிச் சொல்வதன் மூலம், ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகையை பிடுங்கிவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தச் சலுகைகள் இவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று தான் சொல்கிறேன்.

இன்று பல உறுப்பினர்கள் முஸ்லிம்கள் பற்றிப் பேசினார்கள். இதில் எனக்கு சொந்த அனுபவமுண்டு.





மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, நரிக் குறவர்களை, "மலை ஜாதியினர்" என்று வைத்து, மலை ஜாதியினருக்கு அளிக்கப்படுகிற அத்தனை சலுகைகளும் நரிக்குறவர்களுக்குப் கொடுக்கப் பட்டு வருகின்றன, என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிக்க நன்றி. பாராட்டக் கூடிய விஷயம்.

முஸ்லீம்களைப் பொறுத்த வரையில், மதுரையில், தாஜ்மல் தெருவில் உருது பேசக்கூடியவர்கள்—சையது என்று சொல்வார்கள்— இருக்கிறார்கள். ஜாதியின் பெயரைக் குறிப்பிடுகிறேன் என்று எண்ணக் கூடாது. இந்து மதத்தில் உயர்ந்தவர்களை பிராமணர்கள்—சாஸ்திரிகள் என்று சொல்கிறார்களே, அதே மாதிரி. அந்த வகுப்பைச் சேர்ந்தவர் கள் எந்த விதமான வசதி வாய்ப்பும் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். அந்த சையது ஜாதியினர், தங்களை "லப்பை" என்று சொல்லிக் கொண்டு கன்செஷன்ஸ் வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. அது கண்டிப்பாக மாற்றம் செய்யப்பட வேண்டிய ஒன்று. இவர்களுக்கு நன்மை செய்தால், அந்த உருது பேசக் கூடியவர்கள் நம்மைப் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இன்றைக்கும் அந்த உருது பேசக் கூடியவர்கள் சென்னையில் ஆயிரம் விளக்குப் பகுதியிலும், வட சென்னையிலும், மேலும் வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் சேர்த் தால், ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்தால் நான்கு லட்சத்திற்கு மேல் இருக்க மாட்டார்கள்.

நான் சார்ந்துள்ள கட்சி மைனாரிடிகளுக்கு எல்லாச் சலுகையும், கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. அண்மையில் கேரளாவில்— கோபிக்கக் கூடாது—உருது பேசு கேரளாவைப் பற்றிச் சொன்னால் கிறவர்கள் மட்டுமல்ல, முஸ்லீம்களை ஒரே மாதிரியாக வைத்து எல்லாச் சலுகைகளையும் கொடுக்கிறார்கள். அதே மாதிரி சலுகைகள் கன்னியா குமரி மாவட்டத்தில் இருந்தது. அந்த கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில் சேர்ந்ததற்குப் பிறகு உருது பேசும் மக்கள் தாங்கள் முன்பு பெற்றிருந்த சலுகைகளையும் இழந்து விட்டார்கள் என்பது துர்பாக்கியமான விஷயம். இந்த முறையில் முஸ்லீம்களுக்கு சலுகைகள் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

499-வது வெட்டுப் பிரேரணையில் திரு. அழகிரிசாமி அவர்கள் "பின் தங்கிய வகுப்பினர்களுக்கு கால்நடைகள் வாங்கி விற்று வாழ்க்கை நடத்தும் முறையில் வட்டியில்லாக் கடன் வசதி கிடைக்க அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மை யிலே ஆடு மாடுகள் வாங்கி, விற்க இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். குறிப்பாக ஆடு, இன்னும் வாத்துக்களை வாங்கி விற்கக்

கூடிய தொழிலே இவர்கள் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் வட்டியில்லாக் கடன் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கை உயரும். இது மிகவும் முக்கியமான விஷயம்.

அடுத்து, சலுகைகள் பெறுவதற்கு குறைந்த பட்ச வருமானம் ரூபாய் 1,000 என்று இருக்கிறது. இன்றைக்கு பணத்தின் மதிப்பு மிகவும் குறைந்து போயிருக்கிறது. அப்படி இருக்கிற நேரத்தில், இந்தச் தொகை மிகவும் குறைந்த தொகையாகும். மாதம் ரூபாய் 500-க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இந்த சலுகைகொடுக்க வேண்டும். முன்பு கடன் நிவாரணச் சட்டம் இருந்த போது நாங்கள் ரூபாய் 600 என்று சொன்னோம். பிறகு 200 என்று வைத்தார்கள். எனவே, இப்போது ரூபாய் 500 மாத வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை இருக்க வேண்டும்.

அடுத்து, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் பற்றிய பிரச்சினை எற்கெனவே வந்தது. இது மிகப் பெரிய இயக்கமாக நடந்து நீக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். முத்துராமலிங்கத்தேவர், ஜீவானந்தம் ஆகியவர்கள் எல்லாம் இதற்காக போராடியிருக்கிறார்கள். கலியாணம் செய்து கொண்ட அன்று இரவு கூட 6 மணிக்கு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டும் என்ற கொடுமைகள் எல்லாம் இருந்தது. கடைசியாக இவர்கள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு இப்படிப்பட்டவர்களுக்கு, காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, இப்போதும் சரி, எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை. காங்கிரஸ் காலத்தில் கொஞ்சம் செய்தார்கள். இவர்கள் காலத்தில் இன்னும் கொஞ்சம் செய்தார்கள். அவ்வளவுதான். இது போதாது. இன்னும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். இப்போது மதுரை மாவட்டத்தில் 208 பள்ளிகளில் 26,595 மாணவர்கள் பலன் அடைகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆறே பள்ளிகள் தான் இருக்கின்றன. அவற்றில் 779 மாணவர்கள்தான் பலன் அடைகிறார்கள் என்ற நிலை இருக்கிறது. எனவே, இவர்களுக்கு, இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சி. டி. ஆக்டில் எற்கெனவே பல ஹாரஸ்மெண்டுகள் இருந்தன. இப்போது புதிய முறையில் ஒரு ஹாரஸ்மெண்ட் இருந்து கொண்டு வருகிறது. ஒரு ஊரில் ஒரு செல்வாக்குள்ளவராக ஒருவர் இருக்கலாம். அவர், ஏதோ பத்தாண்டுகளுக்கு முன்னால் ஒரு கொலை கேசில் சம்பந்தப்பட்டிருக்கலாம். இப்போது ஒழுங்காக செயல்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால், அங்கே உள்ள போலீஸ் அதிகாரிக்கு அல்லது வேறு பெரியவர்களுக்கு அவரைப் பிடிக்கவில்லை என்றால், "ஜாமீன் கேஸ்" போடுகிறார்கள். இப்படி ஜாமீன் கேஸ் போட்டு ஹேபிசுவல் அஃபெண்டர் என்று ஆக்கிவிடுகிறார்கள். இப்படி செய்வது பழைய சி. டி. ஆக்டைக் கொண்டு வருவது போலாகும். இவர்களுடைய பிள்ளைகள் பி. ஏ., எம். ஏ., படித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், இவர்களும் இரவு 6 மணிக்குமேல் ஊரை விட்டுப்





போகவேண்டுமானால் போலீஸ் அனுமதி பெற வேண்டும். இப்படிப்பட்ட கேசுகள் இராமநாதபுரம் மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் அதிக மாக இருக்கின்றன. எனவே, இதில் ஏற்கெனவே குற்றப்பட்டியலிலி ருந்து நீக்கப்பட்டவர்கள் இப்படி எச். ஓ.-வாக சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களை எச். ஓ. பட்டியலிலிருந்து நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரூபாய் 5½ கோடி செலவழிக்கிறோம் என்று இன்னொரு முறை இப்படி அமைச்சர்கள் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன். முன்பு இரண்டு கோடிதான் செலவழித்தார்கள். நாங்கள் 5 கோடி செலவு செய்கிறோம் என்று பேசுவதில் பொருள் இல்லை. முன்பு இரண்டு கோடி இப்போது ஐந்து கோடிக்குச் சமம். எனவே, உங்கள் டார்கட்- டில் அச்சீவ்மெண்டு என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி கூடியிருக்கிறது. ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே போகிறது. எனவே, முன்பு இரண்டு கோடி இப்போது ஐந்து கோடி என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, அச்சீவ்மெண்டு என்ன எப்பதைச் தெளிவாகச் சொல்லுங்கள்.

கடைசியாக நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, நான்கு வருஷத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக ஒரு ரெவ்யூ —கடந்த நான்கு ஆண்டுகளில் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன, இன்னும் அடுத்த ஐந்தாண்டுகளில் எந்த முறையில் செல வழிக்கப் போகிறோம் என்பது பற்றிய ரெவ்யூ பற்றி யோசிக்க வேண்டும்.

இன்னொரு விஷயம். டைஃபர்கேஷன் பற்றிச் சொன்னேன். சோஷி யலி பேக்வேர்ட், இகனமிகலி பேக்வேர்ட் என்ற இரண்டையும் சேர்க்காமல் டைஃபர்கேஷன் செய்து எந்த முறையில் என்னென்ன செலவழிக்கப் போகிறோம் என்பதையும் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வெட்டுப் பிரேரணைகள் 2, 3 இருக்கிறது. இவற்றையும் வற்புறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பிற்பட்ட நலத்துறையின் சார்பாக கோரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது திரு. மணலி கந்தசாமி முதல் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வரை 16 உறுப்பினர்கள் பங்கேற்று இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை நாம் அணுகுவதற்கு முன்னால் சில விவரங்களை முன் கூட்டித் தெரிந்து கொள்வது நலமாக இருக்கும் என்று கருது கிறேன்.

1971-ம் ஆண்டு எடுத்த கணக்குப்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4,00,34,200 ஆகும். இதில் மொத்தம் பிற்பட்ட வகுப்பினர் 2,04,67,928. அதாவது 51·13 விழுக்காடு ஆகும். பிற்பட்ட வகுப்பினர் 1,15,14,597 ஆகும். அதாவது 28·76 விழுக்காடு ஆகும். மிகப் பிற் படுத்தப்பட்டோர் 89,53,331. அதாவது 22·37 விழுக்காடு ஆகிறது.

[திரு. க. இராசாராம்] [1973 மார்ச் 15

அதே போல இதில் உள்ள சட்ட நிலைமையையும் தெரிந்துகொண்டாக வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 15 (4) பிரிவின்படி நாம் இந்த நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். திரு. எம். ஆர். பாலாஜி அவர்களுக்கும், மைசூர் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில் திரு. வாஞ்சு, சுப்ரீம் கோர்ட் நீதிபதி அளித்த தீர்ப்பின்பேரில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது.

அரசியலமைப்பு 15 (4) பிரிவில் தொனிக்கிறபடி அரசுப் பணிகள் ஒதுக்கீடு செய்யவும், 16 (4) பிரிவில் தொனிக்கிறபடி நியமனங்கள் செய்யவும் தனி வசதி செய்வது என்பது நியாயமான வரம்புக்குள் இருக்க வேண்டும். மாநில அரசினரும், மத்திய அரசினரும் தங்கள் முதல் பொறுப்பாகக் கொண்டிருக்கிற நலிந்த மக்களின் நலன், சமுதாயம் முழுவதற்குமான நலனுடன் இசைந்து இருத்தல் வேண்டும். பல்வேறு கோரிக்கைகளை வைத்து இயைந்த முறை காண்பது என்பது சங்கடமான வேலை. ஆனால் தனி வசதி செய்வது என்ற பேரால் எல்லாக் கல்லூரிகளிலும் அநேகமாக எல்லா இடங்களையும் அரசாங்கம் ஒதுக்கி வைத்துவிடுமானால் அது 15 (4) பிரிவின் நோக்கத்தை மீறிய செயலாகிவிடும். இதில் சரியான ஒதுக்கீடு என்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாதவர்களாக நாங்கள் இருக்கிறோம். பொதுவாக ஏகதேசமாகச் சொல்லுமிடத்து தனி ஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் சந்தர்ப்பச் சூழ்நிலையைப் பொறுத்து அமைத்துக்கொள்ளலாம்'' என்பதாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் தான் நாம் 49 சதவிகிதம் என்பதாக ஒதுக்கியிருக்கிறோம். இந்த அடிப்படையில்தான் பிற்பட்ட நலத்துறை தன் பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு, இங்கே பலதரப்பட்ட வகுப்புகளையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதாக வற்புறுத்தினார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது "நாங்கள் 5½ கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்பதைச் சாதனையாகச் சொல்லாதீர்கள். விலைவாசி ஏற்றத்தினால் அன்றைக்கு 2 கோடி என்பது இன்றைக்கு 5½ கோடியாகி இருக்கும். பணத்தில் உங்கள் சாதனைகளைச் சொல்லாதீர்கள்'' என்றார்.

பிற்பட்ட நலத்துறை என்பதாக ஏற்பட்ட பிறகு இவர்கள் ஆண்டுக்கு ஆண்டு பரிசீலனை செய்து—உண்மையிலேயே மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். இந்த அடிப்படையில் சென்ற ஆண்டு 14 சாதிகளை இதில் சேர்த்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டுகூட இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்குப் பல்வேறுபட்ட விண்ணப்பங்கள் வந்தன. நான்கு சாதிகளை இந்த ஆண்டு பிற்பட்டோர் நலப் பட்டியலில் சேர்க்க அரசு முடிவு செய்திருக்கிறது.

பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார் என்கிற சமூகம் ஒன்று. சேலம் மாவட்டத்தில் நூறு குடும்பங்களுக்குமேல் கூலி வேலை, தொடக்கப்பள்ளி ஆசிரியர் வேலை செய்து வருகிறவர்கள்.



1973 மார்ச் 15] [திரு. க. இராசாராம்]

வல்லம்பர் என்பதாக காரைக்குடி, தஞ்சாவூர் பகுதிகளில் இருக்கக் கூடிய சுமார் ஒரு லட்சம் பேர்கள். நகரத்தார் வீடுகளில் சமையல் வேலை, வீட்டு வேலை செய்து வந்தவர்கள், இரண்டாவது.

யவனர் என்பதாக ஏறக்குறைய குறவர்களைப் போன்றவர்கள். தென்
ஆற்காடு மாவட்டம் திண்டிவனம், சிதம்பரம், காட்பாடி பகுதிகளில்
உள்ளவர்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளே இல்லை.
இவர்கள் மூன்று.

சாலிவாகனன் என்பதாக சேலம் மாவட்டத்தில் காவலராகப் பணி
யாற்றிவரக் கூடியவர்கள். இந்த உத்தம செட்டியார், வல்லம்பர்,
யவனர், சாலிவாகனன் என்ற நான்கு பிற்பட்ட சமூகத்தவர்களையும்,
இந்த ஆண்டு பிற்பட்ட சமூகத்தவர் பட்டியலில் சேர்க்க மாண்புமிகு
முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு இலாக்கா இருக்கிற காரணத்தினால்தான் ஆண்டுக்கு ஆண்டு
நல்ல முறையில் இதைப் பரிசீலிக்க முடிகிறது. கல்வியிலும், சமூகத்தி
லும் இருக்கிற பிற்பட்ட நிலையைத்தான் கணக்கு எடுக்கிறோமே தவிர
மற்ற எதையும் கணக்கில் வைப்பதில்லை.

15 (4)-வது அரசியல் அமைப்பு சட்டப் பிரிவின்படி—

(4) Nothing in this article or in clause (2) of article 29 shall
prevent the State from making any special provision for the
advancement of any Socially and educationally backward classes of
citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes.

என்பதற் கிணங்க கொடுக்கிற உதவி கொஞ்சமாகத்தான் இருக்கிறது.
இதை எவ்வளவு அதிகமான பேர்கள் பங்கிட்டுக் கொள்கிறார்களோ
அவ்வளவுக் கவ்வளவு ஒவ்வொன்றிலும் பயன் அடைகிறவர்கள் குறை
வாகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பெரியார் அரசியலுக்கு
வருவதற்கு முன்னால், சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்னால்
தங்களை பல சாதிக்காரர்களும் பிராமணர்கள் என்றே அழைத்துக்கொண்டு
முன்னேறும் சமூகமாக இருந்த நிலையை யாரும் மறந்திருக்கமாட்டார்
கள். வைச்யர்கள் கூட வைச்ய பிராமணாள் என்றேதான் தங்களை
அழைத்துக் கொள்வார்கள். அப்படி ஒவ்வொரு சாதியும் முன்னேறிக்
கொண்டிருந்தது. ஆனால் பிற்பட்ட இனத்தவர்களுக்கு அரசியல்
அமைப்புப்படி தனிச் சலுகைகள் அளிக்கத் தொடங்கியவுடன் முற்பட்ட
சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூட தங்களை பிற்பட்ட சமூகத்தவர்களாகச்
சொல்லிக் கொண்டு, பிற்பட்ட சமூகத்தவர்களது பட்டியலில் தங்களையும்
சேர்க்க வேண்டும் என்பதாகப் போட்டி போட்டுக் கொண்டு வருவதைப்
பார்க்கிறோம். இதைத் தவிர்க்க வேண்டும்.

தாரத் துறையில், தொழில் துறையில் மற்றச் சமுதாயத்தினரோடு வாழத்
தக்க முறையில், அவர்களின் நிலைக்கு உயர்த்தத் தக்க முறையில் இந்த
முத்துராஜா குல மக்களுக்கு அத்தனைச் சலுகைகளையும் வழங்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு விடுதிகளை எடுத்துக்கொண்டால் தனியார்கள் தனிப்பட்டமுறையில்
பல்வேறு இனங்களின் அடிப்படையில் விடுதிகளை நடத்திக் கொண்டு
வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக்கூறியதுபோல்
தனிப்பட்டோர் விடுதிகள் நடத்துகிற முறையை ஓரளவிற்கு நீக்கிவிட்டு
அரசாங்கமே பூர்ணமாக அந்த விடுதிகளை ஏற்று நடத்துவது சாலச்
சிறப்புடையதாகும் என்று தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்
கிறேன். தனிப்பட்டோர் அந்த விடுதிகளை ஒரு பிஸினஸ் போல், வியா
பார நோக்கோடு நடத்துகிறார்களே தவிர பொது நோக்கோடு, மக்க
ளுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற மனோபாவத்தோடு அந்த
விடுதிகளை நடத்துவதாகத் தெரியவில்லை. அவர்கள் அவற்றை வியாபார
நோக்கோடு நடத்துவதால் அவற்றை தனியார் நடத்தாமல் அரசே
அவைகளை மேற்கொண்டு எந்த அளவிற்கு நடத்த முடியுமோ அந்த
அளவிற்குச் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முகவை மாவட்டம், நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி
மாவட்டம் இவற்றில் பரவர், முக்குவர் என்று இரண்டு மூன்று இனங்க
ளாக இருக்கிறார்கள். முக்குவர் என்று சொல்லப்படுகிற இனம் வலைஞர்
என்பதன் ஒரு உட்பிரிவாக இருப்பதாகத் தெரிகிறது. அவர்களில்
நூற்றுக்கு நூறு பேர் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்
கிறார்கள். குமரி மாவட்டத்திலும், செங்கோட்டை வட்டத்திலுமுள்ள இந்த
மீனவ சமுதாய மக்களை, அவர்கள் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்களாக
இருப்பினும் அவர்களைப் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்து
அவர்களுக்குண்டான எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுவதாக அறிகிறேன்.

ஆனால் அதே நேரத்தில் முகவை, நெல்லை மாவட்டங்களில் இந்த
மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்
களாக இருந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்குவதாகத்
தெரியவில்லை. ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள், ஒரே உறவினர்கள்,
ஒரு பகுதியில் உள்ளவர்கள் சலுகை பெறுகிறார்கள், இன்னொரு பகுதியில்
இருப்பவர்களுக்கு அந்தச் சலுகைகள் இல்லை என்ற நிலைமையை மாற்றி
குமரி மாவட்டத்தில் உள்ள இந்த இன மக்களுக்கு என்னென்ன சலுகை
கள் வழங்கப்படுகின்றனவோ அதேபோல் மற்ற மாவட்டங்களிலும் உள்ள
இவர்களைப் பின்தங்கியோர்ப் பட்டியலில் சேர்த்து இவர்களுக்குள்ள சலுகை
கள் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். செல்வாக்கை வைத்துக்கொண்டு உயர்ந்த வகுப்பார்கூட இத்
தகைய சலுகைகளைப் பெறக்கூடிய தன்மை பல்வேறு பகுதிகளில் காணப்
படுகிறது. அந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட
வகுப்பு மக்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றனவோ
அத்தகைய சலுகைகள் எல்லாம் இந்த முத்துராஜா குல மக்களுக்கும்
ஒதுக்கி தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்
கிறேன். வணக்கம்.





லப்பைகள் 37·7 சதவிகிதத்தினர் இருக்கிறார்கள். சமுதாயத்தில்,
அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அதிலே,
உருது முஸ்லிம்கள் ஏற்கனவே சமுதாயத்திலே முன்னேறியவர்களாக
இருக்கிறார்கள். அவர்களைச் சேர்த்துக்கொள்ள உங்களுடைய சமுதாயத்தில்
இருக்கிற ஒரு பகுதியினர் பிற்பட்டவர்களாக இன்றைய வரையிலே இருக்
கிறார்கள் என்றால், அதை நீங்கள் தான் கவனிக்க வேண்டும். முன்
னேற்றம் என்றால், கல்வித் துறையில். கல்வித் துறையிலே ஒதுக்கப்
பட்டவர்களாக இருப்பவர்களுக்குச் சலுகைக் காட்டுவதற்குப் பதிலாக, அவர்
களைக் கைகொடுத்து தூக்கி விடுவதற்குப் பதிலாக நீங்களே அவர்களைப்
பின்னால் வைத்திருக்க வேண்டுமென்று கருதுவது எப்படிப் பொருந்தும்
என்று தாழ்மையாக கேட்க விரும்புகிறேன்.

முஸ்லிம் சமுதாயம் நல்ல அளவுக்கு இன்றைக்கு முன்னுக்கு வரு
கிறது. பிற்படுத்தப்பட்டோம் என்று சொல்வது, கல்வித் துறையிலும்,
சமுதாயத்திலும். இதைத்தான் நாம் கவனத்திலே கொள்ளவேண்டும்.
கல்வித்துறையிலே இன்றைக்கு நல்ல பல காரியங்களை முஸ்லிம் சமுதாயம்
செய்துகொண்டு வருகிறது என்பதை பெரு மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள
விரும்புகிறேன். இதுவரையிலே இல்லாத அளவுக்கு 60 உயர்நிலைப்
பள்ளிகள் அந்த சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. 11
கல்லூரிகளும் அந்த சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது
அவர்கள் வளர்ந்து வருகிற நிலைமையைக் காட்டுகிறது.

இந்த இடத்திலே தான் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்
களுடைய கருத்து எனக்கு உதவிகரமாக வருகிறது. உயருகின்ற நிலையி
லிருப்பவர்களுக்கு உதவி செய்யவேண்டும். உயர்ந்தவர்களுக்கு எல்லா
வற்றையும் செய்துகொண்டு வரக்கூடாது என்ற அந்த அம்மையார்
சொன்னார்கள். ஆகவே, அந்தச் சமுதாயத்தில் உயர்ந்து கொண்டிருப்பவர்
கள் பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டுமே தவிர, உயர்ந்தவர்களை
மேலும் மேலும் உயர்த்த அந்த இலாகா இல்லை என்பதையும்,
அப்படிப்பட்ட எண்ணத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளக்
கூடாது என்பதனையும் அவர்கள் அரசோடு துணையாக இருக்க வேண்டு
மென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார்: 60 உயர்நிலைப் பள்ளிகளையும்
11 கல்லூரிகளையும் முஸ்லிம் சமுதாயம் ஏற்படுத்தி இருக்கிறது என்று
அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த அடிப்படையில் அந்தச் சமுதாயம்
முன்னேறி விட்டது என்ற கருத்தையும் கூறினார்கள். ஆனால் உண்மை
என்னவென்று சொன்னால், நாங்கள் சொந்த முயற்சியிலே ஏற்படுத்திய
கல்லூரிகளிலும் பெரும்பான்மையான மக்கள் தான் இடம் பெற்றிருக்
கிறார்கள் என்ற கருத்தையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தகவலுக்கு நன்றி. அடுத்து,
மத்திய அரசும் பற்றிய விவ
குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரும் மத்திய அரசும் பற்றிய விவ
[illegible]த்தை நான் இங்கே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு வெளியிட்ட 'வெல்பேர் ஆப் பாக்வார்ட் கிளாஸஸ்', என்ற பதிப்பில் 1963-ல் ஒரு மக்கட்தொகை கணக்கை வெளியிட்டிருக் கிறது. அதன்படி, இந்தியாவிலே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோ ரின் மொத்த எண்ணிக்கை 40 லட்சம் அதே வருடம் 1963-ல் தமிழ் நாட்டிலுள்ள குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் எண் ணிக்கை 13 லட்சம். இந்தியாவிலேயே இருக்கிற குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் எண்ணிக்கையில் மொத்தம் 33 சத விகிதம் தமிழ் நாட்டில்தான் இருக்கிறோம். ஆனால், இன்றைக்கு, இதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 450 லட்சம். அதில் தமிழ்நாட்டிற்குக் கொடுத்த தொகை ரூ. 90 லட்சம் தான். இது எவ்வளவு சத விகிதம் என்றால் 20 சதவிகிதம் தான். தமிழ் நாட்டிலுள்ள சமூகத்தினருடைய தொகை அளவுக்கு ஒதுக்கி இருக்க வேண்டியது ரூ. 148·50 லட்சமாகும். அவ்வளவு தொகை ஒதுக்கு வதற்குப் பதிலாக ரூ. 90 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக மத்திய அரசு செய்துள்ள இந்தக் கொடுமையினையும் மாண்புமிகு உறுப் பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

1969–70-ல் மாநில அரசு இந்த துறைக்குச் செலவிடத் திட்டமிட்ட தொகை ரூ. 18·36 லட்சம். மத்திய அரசு வழங்கிய மானியம் ரூ. 16 லட்சம்தான். மாநில அரசாங்கம் செலவழித்த தொகை ரூ. 17·83 லட்சம். 1970–71-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 21·91 லட்சம். மத்திய அரசு மானியம் ரூ. 18·50 லட்சம். செல வழிக்கப்பட்ட தொகை, நாம் திட்டமிட்ட தொகையை விட, ரூ. 3 லட்சம் அதிகமாக 24·08 லட்சம் செலவழித்திருக்கிறோம். 1971–72-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 53·19 லட்சம். மத்திய அரசு ஒதுக்கிய தொகை, என்றைக்கும்போல் அது ஒதுக்கியிருக்கிறது, அந்தத் தொகை ரூ. 18·50 லட்சம். ஆனால், மாநில அரசு செலவு செய்த தொகை ரூ. 45·7 லட்சம். 1972–73-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 58·14 லட்சம். மத்திய அரசு மானியம் ரூ. 18·50 லட்சம்தான்.

இந்த ஆண்டு என்ன சாதனை என்று தங்கமணி அவர்கள் கேட் டார்கள். இந்த ஆண்டு திட்டமிட்ட தொகை ரூ. 72·69 லட்சம் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காக மட்டும். இப்பொழுதும் மத்திய அரசு ரூ.18.50 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறது. மாநில அரசு செலவு செய்து கொண்டு வருவது ஆண்டுக்காண்டு அதிகப்படியாகிக்கொண்டு வருகிறது. ஆனால், மத்திய அரசு அளிக்கும் தொகையில் எந்தவிதமான முன்னேற்ற மும் இல்லை. இதுபற்றி மத்திய அரசோடு பலமுறை வாதாடியிருக் கிறோம். பலமுறை கடிதம் மூலமாக எழுதியிருக்கிறோம். அம்மையார் அவர்கள் தெரிவித்தார்கள், ஆனால் மத்திய அரசு செவி சாய்க்கவே இல்லை. மத்திய அரசுக்கு கடிதம் எழுதிய விவரம் எல்லாம் வைத் திருக்கிறேன். அதை வைத்துக்கொண்டுதான் தெரிவிக்கிறேன். (குறுக் கீடு) ஒரு செய்தியை முதலிலே கூறவேண்டுமென்று கருதினேன். திடீ ரென்று எதிர்கட்சிகள் போலீஸ் மானியத்தை தள்ளி வைக்கவேண்டு மென்று கேட்ட நேரத்தில், பிற்பட்டவர் நலத் துறையை முன்னாலே எடுத்துக்கொண்டதால், 2 நாளிலே இந்த புத்தகம் தயாரிக்கப்பட்டது. ஆகவே, அச்சுப் பிழைகளைப் பொறுத்தருளவேண்டுமென்று நான் கேட் டுக்கொள்கிறேன்.



இந்தப் பிரச்சினையில் திரு மதியழகன் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். இதிலிருந்து நீக்கப்பட்டவர்கள் பலர் திண்டுக்கல் தொகுதியிலேதான் பல ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். 1969—ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த ஒன்று இன்று வளர்ந்து கொண்டு போகிறது. தேர்தலுக்க்காக ஒன்றும் நடை பெறவில்லை.

இராஜாங்கத்தைப் பற்றி சொன்னார்கள். இராஜாங்கமும் அப்பொழுது உயிரோடு இருந்தார். திரு மதியழகன் அவர்களும் அப்பொழுது இதே கட்சியில் இருந்தார்கள். 16 பேர் பேசியதில் அவர் ஒருவர் தான் இந்த பிரச்சினையை விட்டுவிட்டு, வேறு அரசியலைப்பற்றி, பத்திரிகை களுக்கு தலைப்பு கிடைக்கிற வகையில் பேசினார். அந்தப் பிரச்சினைக்கு நான் பின்னால் வருகிறேன்.

உதவித் தொகையால் பயன்பெற்றவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதை நம்முடைய உறுப்பினர்கள் அறிந்துகொள்ளவேண்டு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாலே 50 சத விகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்றிருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு 40 சத விகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்று தெரிவிக்கப்பட்டு, அதிலே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், வெறும் தேர்வு பெற்றிருந்தால் போதும், அவர் களுக்கு குறிப்பிட்ட மார்க்கே தேவையில்லையென்ற வகையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1969–70-ம் ஆண்டில் செலவு செய்த தொகை ரூ. 160·99 லட்சம் பலன் அடைந்தவர்கள் எண்ணிக்கை 90,565. 1970–71-ல் செலவு செய்தது ரூ. 201·20 லட்சம். பலனடைந்தவர் எண்ணிக்கை 1,34,249. 1971–72-ல் ரூ. 290·50 லட்சம். பலனடைந்தவர்கள் எண்ணிக்கை 1,68,975. 1972–73-ல் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக் காக உதவித் தொகையாகக் கொடுத்தது 309·38 லட்சம். பலன டைந்தவர்கள் 1,89,466. இப்பொழுது ஒதுக்கப்பட்ட ரூ. 5½ கோடியில் எவ்வளவு பேர் பலன் அடைய இருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நான் திரு தங்கமணி அவர்களுக்குச் சமர்ப்பிக்க கடமைப் பட்டிருக்கிறேன். ரூபாய் மதிப்பு மட்டும் கூடிவிடவில்லை. பலன டைவோர்களுடைய எண்ணிக்கையும் தொடர்ந்து கூடிக்கொண்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) தட் இஸ் என்டையர்லி டிஃபரண்ட்.

இந்த ஆண்டு என்ன என்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்ப தைப் பார்ப்போமானால், வருட வருமானம் ரூ. 2,000-க்கும் ரூ. 6,000-க் கும் இடைப்பட்ட பெற்றோர்களுடைய பிள்ளைகளுக்கு, இதுவரையிலே எல்லோரும் பேசினார்கள், திருமதி அனந்தநாயகி அவர்கள் கூட குறிப் பிட்டார்கள்., ரூ. 2,000 போதாது, ரூ. 5,000-ஆக ஆக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அது நிதி வசதியைப் பொறுத்த விவகாரமாக இருக் கிற காரணத்தாலே, அதிலும் என். ஜி. ஓக்களைப் பற்றியும், போலீஸ் காரர்கள் பற்றியும் பேசினார்கள், திரு. சௌடி சுந்தரபாரதி கூடப்

பேசினார்கள், அவர்களுக்கெல்லாம் பயன்படுகிற வகையிலே, ரூ. 2,000-க்கும் ரூ. 6,000-க்கும் இடையில் வருமானம் பெறுவோரின் பிள்ளைகள் தொழில் கல்வி பயில வருடத்திற்கு ரூ. 500 கடன் உதவ ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியொடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப் பிற்பட்டவர்களாகக் கருதப்படுகிற, மொழிகூட தங்களுக்குச் சொந்தம் என்று அறியாத, லம்பாடிக் கூட்டம் நர்மபுரியிலே இருக் கிறது. அவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் சித்தலிங்க தண்டாவில் உருவாக் கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு பள்ளிக்கூடத்தை அவர்களுக்கு உருவாக்கலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனு மதியோடு அலுவல் நேரத்தை நீட்டித்துக்கொள்கிறேன்.

பி.ப. 1-3) மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1973–74 ஆம் ஆண்டில் மேலும் 20 பின்தங்கிய வகுப்பு இல்லங்களும், 8 குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இல்லங்களும் திறக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 5½ கோடி ரூபாய்க்கு மானியம் கோரியிருக்கிறோம். அதோடு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக 1 கோடி ரூபாயைப் பெற்று அதிலிருந்து பின்தங்கிய வகுப்பினர் மாணவரில்லங்களுக்கான கட்டடங்களைச்கட்ட இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த மானியக் கோரிக்கை 5½ கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமல்ல, 6½ கோடி ரூபாய் அளவுக்கு வந்து, பிற்படுத்தப்பட்ட மாண வர்கள், மக்கள் அந்த அளவிற்குப் பயன்பெற இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதன்மூலமாக நல்ல நல்ல கட்டடங்கள், நல்ல நல்ல விடுதிகள் உருவாக இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினரை குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர் களைச் சேர்ந்த மாணவர்களிலே சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் யாருமே இல்லை என்ற குறைபாடு கன்னியாகுமரியிலே நடைபெற்ற அந்தக் குழுவின் கூட்டத்திலே எடுத்து வாதாடப்பட்டது. அவர்களுக்கும் அந்தப் பயிற்சி தரப்பட வேண்டுமென்பதை அரசு ஏற்றுக் கொண்டு ஏறக்குறைய 30 ஆயிரம் ஒதுக்கி 5 மாணவர்களுக்கு அந்தப் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு நான்கு புதிய சமூகத்தைச் சேர்ந்தவர்களை இந்த பிற்படுத்தப்பட்டவர்களின் பட்டியலிலே சேர்த்த காரணத்தினாலே சுமார் 34 ஆயிரம் ரூபாய் வரையிலே அதிகமாகச் செலவாகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





ஏறக்குறைய இலட்ச ரூபாய் செலவிலே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மற்றவர்களில் 10 சதவீதம் பேர்கள் ஆகியவர்களை புறநகர்களிலிருந்து சென்னை நகரத்திற்கு அழைத்து வந்து காட்டுகின்ற திட்டம் போட்டியிருக்கிறோம்.

பத்திரிகையிலே ஒரு படம் வந்தது. அதிலே எல்லா மாணவர்களும் கைதூக்கிக்கொண்டிருக்கின்ற படம் போடப்பட்டிருந்தது. ஒரு கேள்வி, ரயிலையே பார்க்காதவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்ட பொழுது அத்தனை பேர்களும் கைதூக்கிக்கொண்டிருக்கிறார்கள். அது எந்த மாவட்டம் என்றால் கன்னியாகுமரி மாவட்டம். இப்படி ரயிலையே பார்க்காதவர்கள், கடலோரத்தைக் காணாதவர்கள், கப்பலைப் பார்க் காதவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அந்த மாணவர்களை யும் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும், அந்த மாணவர்களுக்கும் தன்னம்பிக்கையை ஊட்டவேண்டும் என்ற முறையிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 300 பேர்களையும், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 300 பேர் களையும், உயர்ந்த மாணவர்களிலே 10 சதவீதம் பேர்களையும் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும், மூன்றும் பாரம் முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிக்கின்ற மாணவர்களிலே தேர்ந்தெடுத்து அவர்களைச் சென்னைக்கு அழைத்துவந்து, மாநிலக் கல்லூரிக்கு அழைத்து வந்து விஞ்ஞான வளர்ச்சியைக் காட்டி, பெரிய பெரிய நூல்நிலையங்களைக்காட்டி—நாங்கள் பிரிட்டிஷ் தூதரலாயத்தில் உள்ள பேராசிரியரோடு தொடர்புகொண்டு அவர்களிடம் கேட்டுக்கொண்டோம்—பிற்பட்ட மாணவர்கள் ஆங்கிலத்திலே லாகவகமாக பேசுவதற்குப் பயிற்சி தந்தார்கள். அந்த முறையிலே அவர்கள் விஞ்ஞானப் பாடத்திலேயும் நல்ல தேர்ச்சிபெற்றார்கள். எதிர் காலத்திலே அவர்களை நல்ல மாணவர்களாக உருவாக்குவதற்கான திட்டத்திற்காக 1 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 300 மாணவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். இந்த ஆண்டும் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

66 நகராட்சிகளிலே உள்ள ரிக்ஷாக்காரர்கள்—அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும் தான் இருக் கிறார்கள்—பயன்பெறத்தக்க முறையில் டான்ஸியின் மூலம் 1,000 சைக் கிள் ரிக்ஷாக்கள், ஒரு ரிக்ஷா 875 ரூபாய் வீதம் செய்யச் சொல்லி— சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகராட்சிகளைத்தவிர மற்றநகராட்சிகளைப் பொறுத்தவரையில்—அங்கே உள்ளவர்கள் பயன்பெறக் கூடிய முறையில், இதற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியல்ல, மதுரை பாங்கு மூலம் ஆக ஏற்பாடு செய்து அவர்கள் முன்வந்து அதற்கான ஏற்பாடுகளை இந்த இலாகா செய்ய முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு 1973–74 ஆம் ஆண்டில் ரூ. 14·14 லட்சம் ஒதுக்கப்பட்டு இதனால் ஏறக்குறைய 47 ஆரயிம் பிள்ளைகள் பயன் பெறுவர்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள், மாணவர் இல்லங்களில் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 1969–70-ல் 2·07 லட்சமும், 1970–71-ல் 2·08 லட்சமும், 1971–72-ல் 9·83 லட்சமும்—திடீரென

உயர்வதை நீங்கள் பார்க்க வேண்டும்—1972–73-ல் 2·44 லட்சமாக இருந்தது, 1973–74-ல 4·74 லட்சமாக உயர்த்தப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்ன என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள். அதற்குப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு சென்ற ஆண்டு பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 8. அதிலே நேர்முக தேர்வுக்குத் தகுதி பெற்றவர்கள் 3 பேர்கள். வாய்மூலமான தேர்விலே கலந்து கொள்ள அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஒரு புதிய நிலைமை உருவாகியிருக்கிறது. 64 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதிலே 57 பேர்கள் முழுநேரப் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள், 7 பேர்கள் பகுதி நேரப் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் இவர்களிலே இந்த 64 பேர்களிலே 7 பேர்கள் பெண்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி அவர்கள்பேசும்பொழுது தொட்டிநாயக்கரை பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று கேட்டார்கள். தொட்டி நாயக்கர் என்பது சேர்க்கப்பட்டு அவர்கள் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி அவர்கள் பேசுகின்ற நேரத்திலேசிற்பிகளைப்பற்றி மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்திலே உள்ள சிற்பிகள் மிகச் சிறப்பானமுறையிலே பணியாற்றினார்கள், பணியாற்றுகிறார்கள் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சிற்பிகளுக்கு நல்ல வேலை தருகின்ற முறையிலே சிலப்பதிகாரக் காவியத்தை எதிர்காலத் தமிழகம் நல்ல முறையிலே உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்காக மாமல்லபுரத்திலே சிற்பிகள் சிலப்பதிகாரக் காவியத்தைக் கல்லிலே வடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது என்னுடைய இலாகா இல்லையென்றாலும், சுற்றுலா சம்பந்தப்பட்ட முறையிலே நான் அந்தக் கருத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அரசு ஆஸ்தான சிற்பியொருவரை நியமிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆந்திராவிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். அதை அரசு கவனித்து விரைவிலே முடிவை அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்பொழுது முத்துராஜா, வல்லம்பர் இவற்றை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவை அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டு சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தனியார் நடத்துகின்ற ஹாஸ்டல்களைப் பற்றிப் பலபேர்கள் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பின் தங்கியவரின் வாழ்க்கையே பின் தங்கிக் கிடக்கிற நேரத்திலே யாரோ சிலபேர்கள் வந்து ஹாஸ்டல் நடத்துவதற்கு விரும்புகிறார்கள் என்றால் அதை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றி விரைவிலே முடிவெடுக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள மீனவ கிறித்துவர்களைப் பொறுத்த வரையிலே அவர்களைப் பிற்பட்டவர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தனிப்பட்ட நிலைமை இருக்கிறது.திருவாங்கூர் சமஸ்தானத்தோடு சேர்ந்திருந்து அவர்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்தபொழுது ஏற்பட்ட ஒப்பந்தத்தில் அடிப்படையிலே சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன பரவன், வேட்டின் கத்தோலிக்ஸ், எஸ்.ஐ.யு.சி. ஆகிய மூன்றையும் பிற்பட்டவர்களாகக் கருதி கல்லூரிகளிலே சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடுசெய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலே அந்த நிலைமையைச் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பட்ட மாணவர்களுக்குப் பல உதவிகள் செய்யவேண்டுமென்று திரு செ.நா. சுந்தரபாரதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசின் நிதியிலே பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் இந்த இலாகா தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக ஏதாவது செய்யமுடியுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைசாமி அவர்கள் வேளாள கவுண்டரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றார்கள். திரு. ஆறுமுகமும் சொன்னார்கள். அவர்கள் உருது முஸ்லீம்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் எல்லாம் கல்வித் சலுகையில் முன்னேறி இருக்கிறார்கள். அப்படி முன்னேறி இருப்பவர்களுக்கு மற்ற பல காரியங்களைச் செய்வது என்பது முடியாத காரியம். கிறிதுதவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து என்னிடம் கேட்கிறார். அவர் வேறு சலுகைகள் எதுவும் கேட்கவில்லை. அவர்கள் பொருளாதாரத்தில் நன்றாக இருக்கிறார்கள். மெடிகல் காலேஜுகளில், எஞ்சினியரிங் காலேஜுகளில் இடம் கேட்கிறார்கள். அதற்காகத்தான் பின் தங்கியவர்கள் சமுதாயத்தில் சேர்க்க வேண்டுமென்று பலரும் கோருகிறார்கள். இப்போது பி. யு. சி. வரை எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இலவசக் கல்வி கொடுத்து விடுகிறோம். ஆகவே, இதிலே வேறு பெரிய பிரச்சினை அல்ல. எல்லோரையும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்துக்கொள்வது என்பது இயலாத காரியம். சட்டக் குறுக்கீடு இருக்கிறது என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மதியழகன் அவர்கள் சில பிரச்சினைகளைச் சொல்லி எங்களை எல்லாம் நல்ல முதலியார் ஜாதியாக்கி விட்டார்கள். அதற்கான நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு என்னுடைய வீடு தெரியும். என்னை பெரிய சாதிக்காரனாக ஆக்க அவருடைய வீடு தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருவேளை சட்டத்தில் இட மில்லாவிட்டாலும் இருதயத்தில் இடம் இருந்தால் எதையும் செய்து வைக்கமுடியும். அந்த நம்பிக்கையோடு திரு லத்தீப் அவர்கள் முறை யீட்டை நிறுத்திக் கொள்வது நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இரண்டாயிரம் என்பதை ஐயா யிரம் என்றாக்க வேண்டிய அவசியமும் பதில் இல்லை. 2,500ல் இருந்து 6,000 ரூபாய் வரை உள்ளவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அது தொழில் கல்விக்குத்தான் கொடுக்கிறார்கள். கடன்தானே, மற்றவற்றிற் கும் கொடுக்கக் கூடாதா ? 2,000ல் இருந்து 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்கப்பட்டது. அப்படிச் செய்தால்தான் லாபம். பழைய இரண்டாயிரம் ரூபாய் இன்று ரூ. 6,000க்குச் சமம். ரூபாய் இரண்டாயிரம் என்று வைத்து ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் அர்த்தமில்லை. அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நாம் பிற்படுத்தப்பட்ட வகுப் பினரோடு எல்லாம் நின்று விடுவதாக நினைத்து தவறாகப் பேசுகிறோம். நாம் எந்தப் பேச்சை ஆரம்பிக்கறோமோ. அதில் மிக்க கவனம் செலுத்துவதுதான் இந்தத் தவற்றுக்குக் காரணம். பிற்படுத்தப்பட் வர்களை விட வசதி குறைந்த நிலையில் இருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர். அந்த மானியம் வர இருக்கிறது. அவர்களையும் இவர்களையும் ஒப்பிட்டுப்பார்த்துத்தான் கருத்தைச் சொல்லவேண்டி யிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிற சலுகைகளுக்கு மேலாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுத்து விடவேண்டு மென்று சொல்வது அல்லது ஆசைப்படுவது தவறு, நல்லதும் அல்ல. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கொஞ்சமாவது கையிலிருந்து செலவு செய்து வீட்டுப் பிள்ளைகளைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். கல்வித்துறையில் , சமூகத்துறையில்—பொருளாதாரத் துறையில் அல்ல —என்பதை மனதில் கொண்டு இந்த இலாகாவின் மானியக் கோரிக் கையை அணுகவேண்டும். தொழில் கல்விக்கு மட்டும்தானா என்றா'கள் என் மற்ற கல்விகளுக்குத் தரக்கூடாது என்று கேட்கிறார்கள். அரசாங்கம் ஆலோசித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது நிதிக் கோரிக்கையின்மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

கோரிக்கை எண் : 30-க்கு திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி, திரு. கே. ஏ. வகாப், ஆகியோர் கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாக கருதப் பட்டது.



தரப்படவில்லை ; மதுரையிலுள்ளவர் அண்ணாவை வசப்படுத்தி விட்டார் ; கருணாநிதியை வசப்படுத்தி விட்டார் ; ஆகையால் மந்திரிசபையிலே இடம் கொடுக்கவில்லை " என்றெல்லாம் பேசுவது திண்டுக்கல் தேர்தலுக்காகப் பேசுகின்ற பேச்சு. அப்படிப்பட்ட முறையில் நானும் பேசுவதாக இருந்தால் " திண்டுக்கல் தேர்தலுக்குப் பிறகு அதைப் பற்றிக் கவனிக் கலாம் " என்று கூட நான் பேசிவிடலாம்.

மாண்புமிகு திரு க. இ ராசாராம் : திரு. ரத்தினவேலு பாண்டியன் பிரச்சினையைப் பொறுத்தவரை மறவர் குலத்திலிருந்து பப்ளிக் ப்ராசிக் யூட்டராக முதல் முதலாக வந்தவர். இதுவரை இருந்தது கிடையாது. இதிலே அரசியல் இல்லை. விளம்பரம் செய்வதற்காக இந்த இலாகாவைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. விளம்பரம் செய்வதாக இருந்தால், இந்த ஐந்தரைக் கோடி ரூபாயிலா முடித்துக் கொண்டு வ்டுவோம் ? இதிலே ஒரு ஆரம்பத்தைக் காட்டியாக வேண்டும்.

எவ்வளவு காரியங்கள் அக்கறையோடு, பொறுப்போடு, அடித்தளத்தில் இருக்கிற மக்களை மேலே கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த நல்ல நோக்கம் நையாண்டி செய்யப்படுமானால் உண்மையிலே பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் நிலையை உணராமல் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

பொறுப்பானவர்களாக இருக்கிறீர்கள், எனவே பொறுப்பான முறை யில் எவ்வளவே காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் உணர வேண்டும். சட்டநாதன் குழு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் எவ்வளவு செய்யப்பட்டிருக்கின்றன என்றால், சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்களை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டாகிவிட்டன. மிகப் முக்கியமான காரியங்கள் எல்லாம் நடைமுறையில் இருக்கின்றன. ஏதோ பின்தங்கியது என்று பிரிப்பதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. இது ஒரு விளம்பர இந்த இலாகா விளம்பரத்திற்காக இருக்கவில்லை. மனப்பூர்வமாக, இருதய சுத்தியோடு பின்தங்கிய சாதனமும் அல்ல. வேறு மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள இலாகா இந்த இலாகா. எந்த மாநிலத்திலும் இந்த இலாகாவிற்கு என்று ஒரு தனி அமைச்சர் இல்லை. இதை நல்ல வகையில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

திரு எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது ஒரு சட்ட பிரச்சினையை எழுப்பி ஒன்று சொன் னார்கள். உருது பேசுகிற முஸ்லிம்களையும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்துவிட்டால் அரசியல் சட்டத்தின் விதி 15 (4) படி அதில் பல சிக்கல்கள் ஏற்படும் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். இது ஒரு தவறான கருத்து. இப்படி ஒரு தவறான கருத்து இந்த அவையில் ரிக்கார்ட் செய்யப்பட்டு அதுவே ஒரு பொது பிரச்சினையாக ஆகி விடக்கூடாது என்பதற்காக இந்த விளக்கத்தைத் தந்துவிட விரும்பு கிறேன்.

அரசியல் சட்டத்தின் 15 வது விதியில் சொல்லியிருப்பது, அதாவது ஆர்டிகிள் 15-ல் சொல்லியிருப்பது, ஆர்டிகிள் என்பதை தமிழில் விதி என்று சொல்கிறேன், ஜாதி அடிப்படையில், மத அடிப்படையில், அல்லது தேசத்தின் அடிப்படையில் சமுதாயத்தில் இருக்கிற சில பொது இடங்களைப் யாரும் அந்த இடங்களை பயன்படுத்துவதற்கும் அந்த இடங்களுக்குச் செல்வதற்கும் அல்லதுசில காரியங்களில் ஈடுபடுவதற்கும் உரிமை உண்டு. அந்த அடிப்படையில் அவர்கள் தடுக்கப்படக் கூடாது என்பதுதான் அந்த விதியின் முக்கிய அம்சம். அந்த விதியின் நான்காவது பிரிவில் இவைகள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சமுதாயத்தில் பின் தங்கியோருக்கு, ஒடுக்கப் பட்டவர்களாக, அடக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அவர்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அந்த நடவடிக்கைகள் அரசியல் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு விதியாக இருக்கும் என்பது நான்காவது பிரிவு. நாங்கள் கேட்பது சமுதாயத்தில் மிக மிகப் பின்தங்கிய நிலையில் அடக்கப்பட்டவர் களாவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும் சமுதாயத்தில் மிகப் பின்தங்கிய நிலையில் ரிக்ஷாக்காரர்களாகவும் இருப்பவர்களைப் பார்த்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் மிக முன் னணியில் இருக்கிறார்கள் என்று................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : க்ளாரிபிக்கேஷன் கேளுங்கள்

திரு எம். ஏ. லத்தீப் : க்ளாரிபிகேஷன்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வர்ணனை கொடுத்தால் எப்படி ? இது முறை அல்ல. இதே கருத்தை இரண்டு வாக்கியங் களில் கேட்கக் கூடாதா ? தயவு செய்து எண்ணிப் பாருங்கள், இரண்டு வாக்கியங்களில் கேட்டிருக்கலாம்.

திரு எம். ஏ. லத்தீப் : தலைவருக்குள்ள மொழிவளம் என்னிடத் தில் இல்லை. தமிழில் பேசும்போது அந்த வளம் என்னிடம் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருக்கிற தகாரறு மொழி வளம் அதிகமாக இருப்பதினால்தான்.

திரு எம். ஏ. லத்தீப் : என்னிடம் அந்த வளம் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக இருப்பவர் களைப் பார்த்து, அவர்களைப் பார்த்து அவர்கள் முன்னேறி யிருக்கிறார்கள், ஆகவே கொடுக்க முடியாது என்ற திட்டவட்டமான அறிவிப்பு, அரசாங்க அறிவிப்பு எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தேன். எனவே இந்த மாதிரியான ஒரு திட்டவட்டமான முடிவைச் சொல்வது அதுவும் அரசியல் சட்டத்தின் 15-வது விதியைக் குறிப்பிட்டுச் சொல்வது நல்ல எண்ணத்தை உருவாக்காது. அரசியல் சட்டத்தின் அதே பிரிவின்



அடிப்படையில் இந்த உரிமையைக் கோருகிறோம். எந்த ஒரு விதி அமைச்சர் அவர்களால் சுட்டிக்காட்டபட்டு செய்யமுடியாது என்று சொன்னார்களோ அதே விதியின் அடிப்படையில்தான் இந்த சமுதாயம் மிகமிகப் பின்தங்கிய சமுதாயமாக இருக்கிறது, உருது பேசும் முஸ்லிம் களை நீங்கள் அதில் சேர்த்துக்கொள்ளவேண்டும், சட்டப்படி உரிமை கொடுக்க வேண்டும் என்றும் வாதாடப்பட்டுள்ளது. இது அரசு எடுக்க வேண்டிய முடிவு. மிக மிகப் பின்தங்கியவர்களாக இருக்கக் கூடியவர் களுக்கு இந்த அரசு தரக்கூடிய ஒரு கருணை. கருணை மிகுந்தவர்களாக நம் கலைஞர் அவர்கள் இருந்து வருகிறார்கள். சரியான அறிவிப்பு கூட இல்லாமல் திட்டவட்டமாக அரசியல் சட்டத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது எங்களுக்கு மிகுந்த வேதனையையும் சங்கடத்தையும் அளிக் கின்றன. நீங்கள் நம்பிக்கை வைக்காதீர்கள் என்று சொன்னால் நாங்கள் நிச்சயமாக வைக்கவில்லை என்று சொல்லி அரசியல் சட்டத்தின் விதிபற்றி அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் சரியான விளக்கம் அல்ல, அதன் அடிப்படையிலேதான் இந்த உரிமையைக் கோருகிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதற்குச் சட்டத்தில் இடமில்லை என்று எடுத்துச் சொன்னேனே தவிர அரசாங்கத்தின் முடிவான கருத்தைச் சொல்லவில்லை. அவர்கள் தவறுதலாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். சட்டத்தில் இடம் இல்லை.15 (4) விதியைப் பற்றிய கருத்து என்ன வென்றால்

The Law Department has opined that Muslims as a body would not fall under the term 'Classes' for the purpose of Article 15(4) of the Constitution, but only groups among Muslims may fall under the term 'Classes' and that such groups among Muslims could be determined only byunde rtakinga reveiw of the progress made by the various groups among the Muslims. என்றிருக்கிறது. இது முடிவான பிரச்சினை அல்ல. ஆராய்ச்சி செய்ய வேண்டிய பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்கிறேன், அதில் வேறுபட்ட கருத்து இல்லை. அவரிடம் தனிப் பட்ட முறையில் கூட பேசியிருக்கிறேன். சட்டத்தில் இடமில்லை என்று தான் எடுத்துச் சொன்னேனே தவிர என்றைக்குமே இது கிடையாது. என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சட்டத்தில் இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த விதியில் 15 (4)ல் சொல்லியிருப்பது 'all Muslims' என்றால் 'Tamil speaking Muslims and Urudu speaking Muslims' சட்டத்தில் எந்தவித மான தடையும் கிடையாது. அந்த விதத்தில், அமைச்சர் அவர்கள் அக்கறை வைத்தால், அரசாங்கம் அக்கறை வைத்தால் செய்ய முடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருவேளை சட்டத்தில் இடமில்லாவிட்டாலும் இருதயத்தில் இடம் இருந்தால் எதையும் செய்து வைக்கமுடியும். அந்த நம்பிக்கையோடு திரு லத்தீப் அவர்கள் முறையீட்டை நிறுத்திக் கொள்வது நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இரண்டாயிரம் என்பதை ஐயாயிரம் என்றாக்க வேண்டுமென்பதற்கு பதில் இல்லை. 2,500ல் இருந்து 6,000 ரூபாய் வரை உள்ளவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அது தொழில் கல்விக்குத்தான் கொடுக்கிறார்கள். கடன்தானே, மற்றவற்றிற்கும் கொடுக்கக் கூடாதா ? 2,000ல் இருந்து 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்கப்பட்டது. அப்படிச் செய்தால்தான் லாபம். பழைய இரண்டாயிரம் ரூபாய் இன்று ரூ. 6,000க்குச் சமம். ரூபாய் இரண்டாயிரம் என்று வைத்து ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் அர்த்தமில்லை. அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரோடு எல்லாம் நின்று விடுவதாக நினைத்து தவறாகப் பேசுகிறோம். நாம் எந்தப் பேச்சை ஆரம்பிக்கிறோமோ. அதில் மிக்க கவனம் செலுத்துவதுதான் இந்தத் தவற்றுக்குக் காரணம். பிற்படுத்தப்பட்டவர்களை விட வசதி குறைந்த நிலையில் இருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர். அந்த மானியம் வர இருக்கிறது. அவர்களையும் இவர்களையும் ஒப்பிட்டுப்பார்த்துத்தான் கருத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிற சலுகைகளுக்கு மேலாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுத்து விடவேண்டுமென்று சொல்வது அல்லது ஆசைப்படுவது தவறு, நல்லதும் அல்ல. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கொஞ்சமாவது கையிலிருந்து செலவு செய்து வீட்டுப் பிள்ளைகளைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். கல்வித்துறையில் , சமூகத்துறையில்—பொருளாதாரத் துறையில் அல்ல —என்பதை மனதில் கொண்டு இந்த இலாகாவின் மானியக் கோரிக்கையை அணுகவேண்டும். தொழில் கல்விக்கு மட்டும்தானா என்றார்கள் ஏன் மற்ற கல்விகளுக்குத் தரக்கூடாது என்று கேட்கிறார்கள். அரசாங்கம் ஆலோசித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது நிதிக் கோரிக்கையின்மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

கோரிக்கை எண் : 30-க்கு திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி, திரு. கே. எ. வகாப், ஆகியோர் கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாக கருதப் பட்டது.



திருமதி த. ந. அனந்தநாயகி : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "நிதிக்கோரிக்கை எண் 30—பின் தங்கிய வகுப்பினர் நலன், என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,56,27,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(5) அறிவிப்பு—(தொடர்ச்சி).

(ஆ) திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் விடுதலை செய்யப்பட்டது குறித்து :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், 13—3—1973 தேதியிட்ட உயர்நீதி மன்ற ஆணை எண் CRMP 816-73-க்கு இணங்கவும், மார்ச் 5-ம் தேதியிட்ட இராமநாதபுரம் செஷன்ஸ் நீதிபதியின் ஆணைக்கிணங்கவும் விடுதலை செய்யப்பட்டதாக 14—3—1973 நாளிட்ட தந்தி ஒன்று திருவாடானை நீதித்துறை குற்றவியல் நீதிபதி அவர்களிடமிருந்து இன்று காலை 10-40 மணிக்கு எனக்குக் கிடைத்தது என்ற தகவலை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 2-02 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

(9) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

77. Notification issued with G.O. Ms. No 96, Revenue, dated the 17th January 1973, in regard to certain amendments to the Assessment, Levy and Recovery of Contribution Costs Rules. [*Laid on the Table of the House under section* 116(3) *of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Tamil Nadu Act* 22 *of* 1959).]

78. Notification issued with G. O.R. No. 2944, Revenue, dated the 14th November 1972, in regard to exemption from payment of surcharge levied under the Tamil Nadu Sales Tax Surcharge Act, 1971 by any dealer on the sale or purchase of the declared goods. [*Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).*]

79. Notification issued with Roc. No. 208854/72-E5, dated the 4th December 1972 in regard to extension of certain provisions relating to water supply under Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Uppiliapuram Town Panchayat in Tiruchirapalli district. [*Laid on the Table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).*]

## B. *Reports, Notifications and Other Papers.*

* 93. Policy Note on Demand No. 30—Backward Classes Department 1973-74—(Tamil).

---

* Despatched to Members on 14th March 1973.



## இணைப்பு I.

[1-ம் பக்கத்தில் 371 எண் உள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவுக்கான விடையைக் காண்க.]

தமிழக அரசின் திரைப்பட தொழில் நுட்ப கல்லூரியிலுள்ள அரசு திரையரங்கை விரிவாக்கும் திட்டம் ஒன்று உள்ளது.

(1) 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சினிமாத்துறைக் கருவிகள் வாங்க ரூ. 11,85,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) தச்சுப்பட்டறை, செட் சம்பந்தப்பட்ட சாமான்களைப் பாதுகாக்கக் கொட்டகை, வாகனங்கள் நிறுத்துவதற்கான கொட்டகை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் ஊழியர்களுக்கு வீடுகள் ஆகியவற்றிற்காக ரூ. 5,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) தற்போதுள்ள படப்பிடிப்புக் கூடத்தைப் போன்று இன்னொரு கூடமும், சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட மற்றக் கூடங்களும் உருவாக்க அரசு திட்டம் தீட்டி வருகிறது.

(4) ஸ்டியோவிற்கும், கல்லூரிக்கும் மிக்க பயன்படக்கூடியதான ஒரு பிலிம் கழுவும் லாபரடரியை உருவாக்க திட்டம் தீட்டி வருகிறது.

## இணைப்பு—II.

[17-ம் பக்கத்தில் 379 எண் உள்ள வெள்ளைக் குறியிட்ட வினாவுக்கான விடையைக் காண்க.]

*List of places where fish ponds are located in Tamil Nadu.*

| *Places where Fish Farms are located.* (1) | *Places where demonstration tanks are located.* (2) |
|---|---|
| 1. ***Madras District :*** | |
| Chetput .. .. .. .. | .... |
| Adyar .. .. .. .. | .... |
| 2. ***Chingleput District :*** | |
| Poondi .. .. .. .. | Sriperumbudur. |
| | Kancheepuram. |
| | Ponneri. |
| | Poondi. |
| | Thiruthani. |
| | Chingleput. |
| | Mathuranthagam. |
| 3. ***Thanjavur District :*** | |
| Karuthattangudi .. .. | |
| Vennar Vettar Regulator (Near Thenperambur). .. | Thanjavur. |
| | Kumbakonam. |
| | Adirampattinam. |
| | Mannargudi. |
| | Ambal Village in Nagapattinam. |
| | Mayuram. |
| 4. ***South Arcot District :*** | |
| Porto novo .. .. .. | Cuddalore. |
| Vidur .. .. .. .. | Lalpet. |
| Lalpet .. .. .. .. | Chidambaram. |
| Gomukhi (Near Kallakurichi) .. | Kattumannarkoil. |
| 5. ***Tiruchirapalli District :*** | |
| .... | Pudukkottai. |
| .... | Ariyalur. |



| *Places where Fish Farms are located.* (1) | *Places where demonstration tanks are located.* (2) |
|---|---|
| 6. ***Tirunelveli District :*** | |
| Konniyur .. .. .. .. | Kadamba. |
| Hope Lake (Ambasamudram Taluk). .. | Kuruthurai. |
| Manimuthar .. .. .. | Sankarankoil. |
| | Valliur. |
| 7. ***Madurai District :*** | |
| Vaigai Dam .. .. .. | Madurai. |
| Manjalar Dam .. .. .. | Dindigul. |
| Sathiar Dam .. .. .. | Kodaikanal. |
| Kodaikanal .. .. .. | .... |
| 8. ***Ramanathapuram District :*** | |
| .... | Kalayarkoil. |
| | Chettinad. |
| | Kallal. |
| | Kallukkatti. |
| | Chengei. |
| | Kil Oorni. |
| | Kovilur. |
| | Virudhunagar. |
| 9. ***Kanyakumari District :*** | |
| Manakudy .. .. .. .. | ...... |
| 10. ***Coimbatore District :*** | |
| Bhavanisagar .. .. .. | Thalakulam. |
| Poongar .. .. .. .. | Olapalayam. |
| Amaravathi .. .. .. | Googalur. |
| Aliyarnagar .. .. | Odathurai. |
| 11. ***Nilgiris District :*** | |
| Ootacamund .. .. .. | .... |
| Avalanche .. .. .. | .... |
| 12. ***Salem District:*** | |
| Mettur Dam .. .. .. | |

13. *Dharmapuri District :*

Krishnagiri Dam .. .. .. ....

14. *North Arcot District :*

Sathanur Dam .. .. .. Tirupathur.
Arni .. .. .. .. Arni.
Tiruvannamalai.
Vellore.

தமிழ் நாட்டில் மீன் வளர்ப்புக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களின் பட்டியல்.

| மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள். (1) | கட்புல விளக்கக் குட்டைகள் அமைந்துள்ள இடங்கள். (2) |
|---|---|
| 1. சென்னை மாவட்டம்— | |
| சேத்துப்பட்டு .. .. .. | .... |
| அடையாறு .. .. .. | .... |
| 2 செங்கற்பட்டு மாவட்டம்— | |
| பூண்டி .. .. .. .. | ஸ்ரீபெரும்பூதூர். காஞ்சிபுரம். பொன்னேரி. பூண்டி. திருத்தணி. செங்கற்பட்டு. மதுராந்தகம். |
| 3. தஞ்சாவூர் மாவட்டம்— | |
| கருத்தட்டாங்குடி வெண்ணாறு, வெட்டாறு, பொறிமதகு (தென் பேரம்பூர் அருகில்). | தஞ்சாவூர். கும்பகோணம். அதிராம்பட்டினம். மன்னார்குடி. நாகபட்டினத்தில் அம்பாள் கிராமம். மாயூரம். |
| 4. தென் ஆர்க்காடு மாவட்டம்— | |
| பரங்கிப்பேட்டை .. .. .. | கடலூர். |
| வீடூர் .. .. .. .. | லால்பேட்டை. |
| லால்பேட்டை .. .. .. | சிதம்பரம். |
| கோமுகி (கள்ளக்குறிச்சி அருகில்) | காட்டுமன்னார்கோயில். |



| மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள். (1) | கட்புல விளக்கக் குட்டைகள் அமைந்துள்ள இடங்கள். (2) |
|---|---|
| 5. திருச்சிராப்பள்ளி மாவட்டம்— | புதுக்கோட்டை. அரியலூர். |
| 6. திருநெல்வேலி மாவட்டம்— | கடம்பா. |
| கொன்னியூர் .. .. .. | |
| ஹோப்லேக் (அம்பாசமுத்திரம் வட்டம்) | குருந்துறை. |
| மணிமுத்தாறு .. .. .. | சங்கரன்கோயில். வள்ளியூர். |
| 7. மதுரை மாவட்டம்— | மதுரை. |
| வைகை அணை .. .. .. | திண்டுக்கல். |
| மஞ்சளாறு அணை .. .. .. | கோடைக்கானல். |
| சத்தியாறு அணை .. .. .. | |
| கோடைக்கானல். | |
| 8. இராமநாதபுரம் மாவட்டம்— | காளையார்கோயில். செட்டிநாடு. கல்லல். கல்லுக்கட்டி. செங்கை. கீழ் ஊருணி. கோவிலூர். விருதுநகர். |
| 9. கன்னியாகுமரி மாவட்டம்— | .... |
| மணக்குடி .. .. .. | |
| 10. கோயம்புத்தூர் மாவட்டம்— | |
| பவானிசாகர் .. .. .. | தாலக் குளம். |
| பூங்கார் .. .. .. | ஒலப்பாளையம். |
| அமராவதி .. .. .. | கூகளூர். |
| ஆழியாறு நகர் .. .. .. | ஒடத்துறை. |
| 11. நீலகிரி மாவட்டம்.— | .... |
| உதகமண்டலம் .. .. .. | |
| அவலாஞ்சி .. .. .. | |
| 12. சேலம் மாவட்டம்.— | |
| மேட்டூர் அணை. | |

| மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள். (1) | கட்புல விளக்கக் குட்டைகள் அமைந்துள்ள இடங்கள். (2) |
|---|---|
| 13. தருமபுரி மாவட்டம்— | |
| கிருஷ்ணகிரி அணை .. .. .. | .... |
| 14. வடஆர்க்காடு மாவட்டம்— | |
| சாத்தனூர் அணை .. .. .. | திருப்பத்தூர். |
| ஆரணி .. .. .. .. | ஆரணி. |
| | திருவண்ணாமலை. |
| | வேலூர். |



இணைப்பு—III

[39-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க]

## பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியம் கொள்கை விளக்கக் குறிப்பு 1973-74.

பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கான மானியக் கோரிக்கையை நான் இம்மன்றப் பேரவை மூன் வைக்க உங்கள் முன்பு வந்துள்ளேன். நமது மாநிலத்தில் பின்தங்கிய வகுப்பினரின் குறைகளைக் களைவதற்காக மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளையும், அதனால் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் 1973—74-ம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் திட்டத்தையும்பற்றி நான் இப்பேரவையில் விளக்க விரும்புகிறேன்.

2. 1949 ஏப்ரல் திங்கள் 1-ம் நாளுக்கு முன்பு அரிசன வகுப்பினர் நலன், பழங்குடி வகுப்பினர் நலன் ஆகியவற்றுடன் பின்தங்கிய வகுப்பினர் நலனையும் தொழிலாளர் நலத்துறை கவனித்து வந்தது. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனைக் காவல்துறை கவனித்து வந்தது. அரிசனங்கள், பழங்குடியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனைக் கவனிக்க 1949 ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று அரிசன நலத்துறை அமைக்கப்பட்டது. பின்தங்கிய வகுப்பினர் தமிழக மக்கள் தொகையில் பெரும் பகுதியினராக இருப்பதாலும், அவர்களின் நலனுக்காக நாம் கொண்டு வரும் நடவடிக்கைகள் பெருகி வருவதனாலும், இப்பணிக்காக அதிக நாட்டம் செலுத்த வேண்டியிருப்பதாலும், 1969 மே திங்கள் 2-ம் நாளன்று "பிற்பட்டோர் துறை" புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அரிசன நலத்துறை ஆற்றிய, பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இவர்களின் நலன்கள் இப்புதுத் துறைக்கு மாற்றப்பட்டன.

3. துறை ஆரம்பித்த பின், சில மாதங்கள்வரை இத்துறையின் பொறுப்பை முதலமைச்சர் நேரடியாக வகித்து வந்தார். பின்னர் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கென்று ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டு அவரிடம் இத்துறையின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இத்துறை ஐ.ஏ.எஸ்., பதவித் தரத்திலான ஓர் இயக்குநரது நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. 1971—72-ம் ஆண்டு முதல் வரவு—செலவுத் திட்டத்தில் இத்துறைக்கென்று புதிதாக தனி மானியக் கோரிக்கையும் உருவாக்கப்பட்டது.

4. பிற்பட்டோர், குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோரின் நலனுக்கு 1968—69-ல் அதாவது புதுத்துறை ஆரம்பிக்கும் மூன் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 187 லட்சமாகும். இத்தொகை புதுத்துறை கண்ட 1969—70 ஆண்டில் மட்டும் ரூ. 248 லட்சமாகி, 1970—71-ல் 301 லட்சமாகி, 1971—72-ம் ஆண்டில் 433 லட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்க

தாகும். இத்துறைக்கென 1972–73-ம் ஆண்டிற்கு திருத்திய மதிப்
பீட்டில் ரூ. 502 லட்சங்களும் 1973–74க்கு ரூ. 556 லட்சங்களும்
ஒதுக்கப்பட்டுள்ளன. இச்செலவின் உயர்வே, துறை மேற்கொண்
டுள்ள பொறுப்பினையும் இத்துறையின் அவசியத்தையும் உணர்த்
தும். இனவாரி ஒதுக்கீடுகளை அட்டவணையில் காணவும்.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையின் முக்கியமான நட
வடிக்கைகள்பற்றி நான் சுருக்கமாக விளக்குகிறேன் :—

**5. படிப்பு உதவித் தொகைகள்.**

(1) பின்தங்கிய வகுப்பினரின் நிலை உயர வேண்டுமானல்
அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு வகை செய்வதுதான் மிகச்
சிறந்த வழி என்று கருதப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பைச்
சேர்ந்த மாணவர்களும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்
டோரைச் சேர்ந்த மாணவர்களும், தங்களது படிப்பினைத் தொடர்
வதற்கு இயலும் வகையில் அவர்களுக்குப் படிப்பு உதவித்
தொகைகள் வழங்குவதனாலும், அவர்களுக்காக மாணவர்
இல்லங்கள் தொடங்கப்படுவதனாலும் அவர்களின் கல்வியின் தரம்
உயர்ந்தது. பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு
ஒன்பதாம் வகுப்பு முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படு
கின்றன. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த
மாணவர்களுக்கு ஒன்ரும் வகுப்பு முதல் படிப்புதவித் தொகை
கள் வழங்கப்படுகின்றன. இப்படிப்பு உதவித் தொகைகள் பெற
விழையும் மாணவர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவராகவோ
அல்லது குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்தவ
ராகவோ இருக்க வேண்டும். மேலும் அவரது பெற்ருேரின்
முந்திய ஆண்டு வருமானம் ரூ. 2,000க்கு மேற்படக் கூடாது.
கடந்த ஆண்டு தேர்வில் குறைந்தது 40 சதவிகித மதிப்பெண்கள்
பெற்றுள்ள பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப்
படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. குற்றப்பட்டிய
லிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் தேர்ச்சிஅடைந்து இருந்
தாலே போதும்.

(2) பின்தங்கிய வகுப்பினருக்குப் படிப்பு உதவித் தொகைகள்
வழங்கும் திட்டம் ஒரு லட்சம் ரூபாயுடன் 1948–49-ம் ஆண்டில்
தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்குப் பயனளித்தது. பின்னர்
இத்தொகை 1949–50-ம் ஆண்டில் ஐந்து லட்சம் ரூபாயாக
உயர்த்தப்பட்டதில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர்.
படிப்பு உதவித் தொகைக்கான மனுக்கள் படிப்படியாகப் பெருகி
வந்துள்ளன. 1960–61-ல், 19,900 மாணவர்களுக்கு ரூபாய் 41
லட்சம் செலவழிக்கப்பட்டது. ஆனல் 1968–69-ம் ஆண்டு வரை
மனுதாரர்கள் அனைவருக்கும் படிப்பு உதவித்தொகை வழங்க
முடியவில்லை. தனித்துறை ஒன்று அமைக்கப்பட்ட பின்னர்
ரூ. 2,000க்குள் பெற்ருேரின் ஆண்டு வருமானம் உள்ளவர்களும்



கடந்த ஆண்டுத் தேர்வில் மொத்தத்தில் 40 சதவிகித மதிப்
பெண்கள் பெற்றுள்ளவர்களுமான பின்தங்கிய வகுப்பினரைச்
சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் படிப்பு உதவித் தொகைகள்
வழங்கப்படுகின்றன. இதற்கென பின்தங்கிய வகுப்பினர் நலத்
துறை 1969–70-ல் ரூ. 160·99 லட்சம் செலவு செய்தது. இதன்
மூலம் 90,565 மாணவர்கள் பயனடைந்தனர். 1970–71-ல்
ரூ. 201·20 லட்சம் செலவிடப்பட்டதில் 1,34,249 மாணவர்கள்
பயனடைந்தனர். 1971–72-ல் 1,68,975 மாணவர்களுக்கு ரூ.
290·50 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1972–73-ல் பிப்ரவரி
முடிய 1,89,466 மாணவர்களுக்கு ரூ. 309·38 லட்சம் செல
வழிக்கப்பட்டுள்ளது.

(3) இந்த வழியில் கடந்த சில ஆண்டுகளில் எய்திய சாதனைகள் வருமாறு :—

| ஆண்டு. | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் | | | பின்தங்கிய வகுப்பினர். | | |
|---|---|---|---|---|---|---|
| | மெட்ரிக்குக்கு முன். | மெட்ரிக்குப் பின். | செலவான மொத்தத் தொகை. | மெட்ரிக்குக்கு முன். | மெட்ரிக்குப் பின். | மொத்தம் செலவான தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூ. லட்சத்தில்.) | | | (ரூ. லட்சத்தில்.) |
| 1966–67 .. | 24,745 | 1,619 | 13·71 | 10,306 | 21,099 | 82·90 |
| 1967–68 .. | 27,967 | 1,941 | 14·50 | 10,075 | 25,260 | 91·78 |
| 1968–69 .. | 32,347 | 2,122 | 16·71 | 20,375 | 33,162 | 113·07 |
| 1969–70 .. | 41,361 | 2,828 | 21·16 | 42,515 | 48,050 | 160·89 |
| 1970–71 .. | 53,769 | 3,173 | 25·55 | 74,842 | 59,407 | 201·20 |
| 1971–72 .. | 60,614 | 3,805 | 30·85 | 93,694 | 76,281 | 290·50 |
| 1972–73 பிப்ரவரி முடிய | 67,565 | 4,330 | 33·40 | 1,02,153 | 87,313 | 309·38 |



(4) மேற்கண்ட விவரங்கள் படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கைகளில் ஏற்பட்டுவரும் உயர்வைக் காட்டும். அத்துடன் பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ் வித்துவான் முதலிய 57 பாடமுறைகளைப் பொறுத்தவரையில் படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்கு வரையறுக்கப்பட்டிருந்த பழைய வரம்புகள் 1969–70-ல் நீக்கப்பட்டு விட்டன என்பதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். இவ்வாறு வரம்பு நீக்கப்பட்டதனால், பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் இவ்வுதவியைப் பெற ஏதுவாயிற்று. பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ்ப்புலவர் போன்ற துறைகளில் ஏரான மானபேர் இதன்மூலம் பயன் பெறுகின்றனர்.

(5) பின்தங்கிய வகுப்பினர் மற்றும் குற்றப்பரம்பரை சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினரில் 5 நபர்களுக்கு ''பட்டயக் கணக்கர்'' பாடமுறை பயில உதவித்தொகை வழங்கும் பொருட்டு 1973–74 மதிப்பீட்டில் ரூ. 0·30 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களின் தகப்பனார் ஆண்டு வருமானம் ரூ. 2,000க்கு மேல் ரூ. 3,000 வரையில் உள்ள மாணவர்களுக்கு தகுதி வசதி உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

(6) பிற்பட்ட மாணவர்கள் பெற்று வரும் உண்டி—உறைவிட செலவுகள் போதாமையால் அல்லலுற்றனர். அரசின் நிதி நிலைமை இடம் அளிக்காவிடினும் அவர்களுக்கு அச்செலவைக் கீழ்க் கண்ட முறையில் உயர்த்தப்பட்டது.

| (1) | சென்னையில். | | | | புறநகரில். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பழையது. | | புதியது. | | பழையது. | | புதியது. | |
| | பி.வ. | கு.ப. | பி.வ. | கு.ப. | பி.வ. | கு.ப. | பி.வ. | கு.ப. |
| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | (திங்கள் ஒன்றுக்கு.) | | | | | | | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 கலை, விஞ்ஞானம் .. | 40 | 60 | 60 | 70 | 35 | 50 | 50 | 55 |
| 2 மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம். | 40 | 70 | 60 | 75 | 35 | 70 | 55 | 70 |
| 3 தொழில் டிப்ளமோ .. | 40 | 50 | 50 | 60 | 35 | 45 | 45 | 50 |

பி.வ.—பின்தங்கிய வகுப்பினர்.

கு.ப.—குற்றப் பரம்பரை சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினர்.



(7) படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்காக, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள செலவுத் தொகைகள் வருமாறு:—

| | 1971–72 செலவு. | 1972–73 திருத்த மதிப்பீடு. | 1973–74 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| பின்தங்கிய வகுப்பினர் .. | 290·50 | 323·14 | 355·70 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். .. | 30·85 | 35·62 | 39·18 |

(8) இந்திய அரசு தெரிவித்துள்ள விதிகளின் மாதிரியில் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் களுக்கும் படிப்பு உதவித் தொகைகள் வழங்கும் மற்றொரு திட்டம் 1970–71 முடிய இருந்தது. ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 14.84 லட்சமாகும். இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு இந்திய அரசு குறிப்பிட்டுள்ள கோட் பாடுகளின் அடிப்படையில் 1964–65 முதல் செயல்படுத்தப்பட் டிருந்தும்கூட, இச்செலவுக்காக இந்திய அரசு அளித்துவந்துள்ள உதவி 1969–70 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. 1964–65க்கு முன்பு குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் உட்பட பின்தங்கிய வகுப்பினருக்காகவென்றே இத்திட்டம் வகுக்கப்பட்டது. மத்திய அரசின் உதவியின்றியே 1969–70, 1970–71-ம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டது. நிதி நிலைமை பற்றுக்குறையின் காரண மாகவும் மத்திய அரசு மானியமளிக்காததாலும் 1971–72-ம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் புது மனுக்கள் ஏற்கப்படவில்லை. ஏற்கெனவே இச்சலுகை பெற்றவர்கள் அவர்கள் எடுத்துக் கொண்ட பாடமுறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை இத் திட்டம் அவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் மாற்றப்பட்டு விட்டது.

6. கட்டணச் சலுகை.—புகுமுக வகுப்பு வரையில் எல்லா மாணவர் களிடமும், அவர்கள் எந்த வகுப்பினராயிருந்தாலும், தற்போது பள்ளிக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற் குப் பின்னர் பெற்றோருடைய ஆண்டு வருவாய் ரூ. 1,500 வரை உள்ள மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கு முழுக் கட்டணச் சலுகை யும், பின்தங்கிய வகுப்பினருக்கு அரைக் கட்டணச் சலுகையும் அளிக்கப்படுகிறது. இந்தச் சலுகை அளிக்கப்படுவதின் காரண

மாக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பு பின்தங்கிய நலத்துறையினல் ஈடு செய்யப்படுகிறது. 1971–72-ல் ரூ. 3.30 லட்சம் அளிக்கப்பட்டது. இதற்காக 1972–73-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ 3.15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் கூடுதல் நிதி ஒதுக்கப்படும். வருகிற ஆண்டிற்கு ரூ. 3.15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய கல்லூரிகளில் சம்பந்தப்பட்ட மட்டில், இவ்விழப்புத் தொகை கல்வித் துறையினரால் ஏற்கப்படுகிறது.

7. மாணவர் இல்லங்கள்.—(1) பின்தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காகவும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காகவும் மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டு அரசினல் பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் அரிசனங்களுக்காகவும் முன்னிலை வகுப்பினர்களுக்காகவும் கீழ்க்காணும் விகிதத்தில் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன :—

| | | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இல்லங்கள். | பின்தங்கிய வகுப்பினர் இல்லங்கள். |
|---|---|---|---|
| | | (சதவிகிதம்) | |
| பின்தங்கிய வகுப்பினர் | .. | 10 | 65 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். | | 60 | |
| அரிசனங்கள் | .. | 25 | 25 |
| முன்னிலை வகுப்பினர் | .. | 5 | 10 |
| மொத்தம் | .. | 100 | 100 |

(2) மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கையும் வருமாறு :—

| ஆண்டு. | | பின்தங்கிய வகுப்பினர். | | குற்றப்பட்டியலிருந்து நீக்கப்பட்டோர். | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை. | பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. | எண்ணிக்கை. | பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1966–67 | .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1967–68 | .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1968–69 | .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1969–70 | .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1970–71 | .. | 28 | 2,144 | 40 | 4,039 |
| 1971–72 | .. | 81 | 5,333 | 46 | 4,369 |
| 1972–73 | .. | 123 | 7,608 | 46 | 4,369 |



(3) மேலே கண்ட 123 இல்லங்களில், 34 இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவியர்களுக்காக நடத்தப்படுகின்றன.

(4) குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காகவும், பின் தங்கிய வகுப்பினர்களுக்காகவும் மாணவர் இல்லங்களைப் பேணு வதற்கு 1973–74 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 52·15 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பு மாணவர் களும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களும் தங்களுடைய படிப்பைத் தொடர்வதற்கு வசதியளிக்கும் வகை யில் 1973–74-ல் மேலும் 20 பின்தங்கிய வகுப்பு இல்லங்களும் 8 குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இல்லங்களும் புதியதாக ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. தேவையைக் கணக்கிட்டு இப்புதிய இல்லங்கள் துவக்கப்படும். மேலும், மதுரை மாவட் டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய இடங்களிலுள்ள குற் றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் விடுதிகளில் மாணவர் களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அரசு கருதியுள்ளது.

8. இல்லங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுதல்.—வங்கிகளிட மிருந்து ரூ. 1 கோடி வரை கடன் பெற்று பின் தங்கிய வகுப்பினர் மாணவரில்லங்களுக்கான கட்டிடங்களைக் கட்ட அரசு கருதியுள்ளது. இக்கட்டிடங்கள் வீட்டு வசதி வாரி யத்தின் மூலம் கட்டப்படும். இவ்வாறு கட்டிடங்கள் கட்டுவதன் நோக்கம், எல்லா வசதிகளும் நிறைந்த சொந்தக் கட்டிடங்களில் தற்சமயம் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் இல்லங்களை நடத்த வேண்டும் என்பதே. இத்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 85 புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

9. பள்ளிகள்.—(1) குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காக இம் மாநிலம் முழுவதிலும் 276 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து விவரங்கள் பின் வருமாறு :—

| வரிசை எண்ணும் மாவட்டமும். | உயர்நிலைப் பள்ளி. | | உயர் தொடக்கப் பள்ளி. | | தொடக்கப் பள்ளி. | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | மாணவர்கள். | எண்ணிக்கை. | மாணவர்கள். | எண்ணிக்கை. | மாணவர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 வட ஆற்காடு .. .. | .. | .. | .. | .. | 4 | 415 |
| 2 தென்னாற்காடு .. | 1 | 268 | .. | .. | 1 | 233 |
| 3 மதுரை .. .. | 8 | 1,930 | 31 | 10,171 | 208 | 26,595 |
| 4 இராமநாதபுரம் .. | .. | .. | 1 | 315 | 6 | 729 |
| 5 திருநெல்வேலி .. | .. | .. | .. | .. | 10 | 939 |
| 6 சேலம் .. .. .. | .. | .. | .. | .. | 2 | 285 |
| 7 கோயம்புத்தூர் .. .. | .. | .. | 1 | 37 | 1 | 283 |
| 8 தர்மபுரி .. .. | .. | .. | .. | .. | 2 | 218 |
| மொத்தம் .. | 9 | 2,198 | 33 | 10,523 | 234 | 29,607 |





1973 மார்ச் 15]

(2) சென்ற கல்வி ஆண்டு முதல் மதுரை மாவட்டம் கே.பெருமாள்பட்டி, மேலக்கால், தும்மக்குண்டு, விளாம்பட்டியிலுள்ள உயர் தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டு நடைபெறுகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் 'லம்பாடி' வகுப்பினர் குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் கருதி இவ்வாண்டு உண்டி உறைவிட வசதியுடன் கூடிய பள்ளி ஒன்று சிட்டலஞ்சி தாண்டாவில் துவக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் மேலக்கூடலூரில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி, அவ்வுயர்நிலைப் பள்ளிக்கு மறைந்த திரு எம். இராஜாங்கம், எம்.பி., அவர்களின் பெயரைச் சூட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிற வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும் இந்த பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கீழ்க்காணும் வசதிகளை இந்த பள்ளிகள் செய்து தருகின்றன:—

10. நண்பகல் உணவு—குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கென இந்தத் துறையால் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு 15 பைசா வீதம் மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்துடன், திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் அரசு அல்லாத பள்ளிகளில் இவ்வகுப்பு மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்து கல்வி பயிலுவார்களேயானால் அவ்வாறான பள்ளிகளுக்கும் மதிய உணவு இந்தத் துறையால் வழங்கப்படுகிறது. இவ்வாறு மதிய உணவு வழங்கப்படுவதன் நோக்கம் ஏழ்மை நிலையிலுள்ள இம்மாணவர்கள் இதனால் கவரப்பட்டு பெரும் எண்ணிக்கையில் பள்ளியில் சேர்ந்து அதன் மூலம் கல்வி பெறுவார்கள் என்பதாகும். 1973–74-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 14·14 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 47,000 பிள்ளைகள் பயனடைவர்.

11. உணவு மானியங்கள்—(அ) பள்ளி மாணவர்களுக்கு—தனியாராலோ, அரிஜன சேவக் சங்கம் போன்ற இதர சமூக அமைப்புக்களாலோ நடத்தப்படும் மாணவரில்லங்களில் பிற்பட்ட மற்றும் குற்றப்பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் தங்கி பள்ளி வகுப்புகளில் படிப்பார்களேயானால் அவ்வில்லங்களை அரிஜன நலத்துறை 1955–56 வரை உணவு மானியங்கள் வழங்கவென அங்கீகரித்து வந்தது. இவ்வித இல்லங்கள் மானியம் பெறும் இல்லங்கள் என அழைக்கப்பட்டன. 1956–57 முதல் இவ்வாறான புதிய இல்லங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது நிறுத்தப்பட்டது. அத்துடன் நல்ல முறையில் நடைபெறாத மானியம் பெறும் இல்லங்களையும் படிப்படியாக அரசு ஏற்று நடத்த துவங்கியதுடன் அரசு இல்லங்களும் தேவைப்படும்

இடங்களில் புதிதாகத் துவக்கப்பட்டு வருகின்றன. இப்போது
மானியம் பெறும் இல்லங்கள் 56 இருக்கின்றன. இவைகளுக்கு
மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் ஆண்டில் 10 மாதங்
களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1973–74-ம்
ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இவ்வுணவு
மானியத்திற்கென ரூ. 5.73 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கல்லூரி மாணவர்களுக்கு—கல்லூரி மாணவர்களுக்கு
உணவு மானியம் வழங்கப்படுவதில்லை.
களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் ஆனால் இவர்
உணவு, இருக்கை வசதிக்கென ஒரு தொகை தொகையுடன்,
வழங்கப்படுகிறது. கல்வித் துறை, அரிசன சேர்த்து
பிற்பட்டோர் நலத்துறை ஆகியவற்றால் அங்கீகரிக்கப்படும் நலத்துறை,
வர் இல்லங்களிலும், கல்லூரிகளுடன் இணைந்து மாண
மாணவர் இல்லங்களிலும் தங்கியுள்ள மாணவர்கள் செயல்படும்,
பெறுவார்கள். மாணவர்களாலும் இந்த உதவி
அமைக்கப்படும் இவ்வாறான மாணவர் இல்லங்களை தனியார்களாலும்
உணவு, இருக்கை வசதித் தொகை வழங்கவேண்டும் அங்கீகரித்து
கைகள் இப்போதெல்லாம் அதிக எண்ணிக்கையில் என கோரிக்
யுள்ளபடியாலும், 1972–73-ம் ஆண்டில் மட்டும் வரத் துவங்கி
வாறான கோரிக்கைகளை ஏற்க வேண்டியிருந்ததாலும், நிறைய இவ்
வாறான இல்லங்களை அங்கீகரிப்பதில் கீழ்க்கண்ட இனி, இவ்
பின்பற்றலாமா என்று அரசு யோசித்து வருகிறது. நடைமுறைகளைப்

(1) தனியார் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்ட
இல்லங்களை மட்டும் அங்கீகரிப்பது.

(2) பிரபலமான தனியார் இல்லங்களை மட்டும் அங்கீ
கரிப்பது.

(3) மாணவர்களால் கூட்டுறவு முறையில், சம்பந்தப்பட்ட
அரசு கல்வி நிலையத்தினரின் மேற்பார்வையுடன் நடத்தப்பெறும்
இல்லங்களை மட்டும் அங்கீகரிப்பது.

இந்த யோசனையின்மேல் விரைவில் அரசு முடிவு செய்யும்.

12. புத்தகங்களும் கற் பலகைகளும்—குற்றப் பட்டி
யலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் உள்ள மாணவர்
களுக்கு அவர்களுடைய பெற்றோரின் ஏழ்மையான பொரு
ளாதார நிலையைக் கருத்திற்கொண்டு புத்தகங்களும்,
கற்பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன, 1969–70-ல்





7,600 மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ. 0·38 லட்சமும்
1970–71-ல் 11,800 மாணவர்களுக்காக 0·59 லட்சமும், 1971–
72-ல் 1,13,459 மாணவர்களுக்காக 0·96 லட்சமும் செலவிடப்
பட்டது. 1972–73 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 0·95 லட்சமும்
1973–74-க்கு ரூ. 1·01 லட்சமும் வகை செய்யப்பட்டுள்ளது.
தேவையைப் பொறுத்து அவசியமானால் கூடுதல் தொகை
வேண்டுமளவுக்கு ஒதுக்கப்படும்.

13. சீருடைகள்.

(1) குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள்
மற்றும் மாணவர் இல்லங்கள் ஆகியவற்றில் ஆண்டுக்கு இருமுறை
உடைகள் வழங்கப்படுகின்றன. பள்ளி திறந்தவுடன் ஒரு முறை
யும், அடுத்து பொங்கலின் போதும் அவை வழங்கப்படுகின்றன.
மதுரை மாவட்டத்தில் இத்திட்டம் முதல் மூன்று வகுப்புகளில்
பயிலும் மாணவர்களுக்கு மட்டும் பயன்படும் வகையில் 1969–
70-ல் தொடங்கப்பட்டது. அவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை
மட்டும் உடைகள் வழங்கப்பட்டன. இப்போது இருமுறை வழங்கப்
படுகின்றன. எல்லா வகுப்புகளிலும் பயிலும் மாணவர்
களுக்கும் 2 சீருடைகள் வழங்க முடியவில்லை. இத் தலைப்பின்கீழ்
1969–70-ல் ரூ. 2·07 லட்சமும் 1970–71-ல் ரூ. 2·08 லட்சமும்
1971–72-ல் ரூ. 9·83 லட்சமும் செலவிடப்பட்டது. இதற்
கென 1972–73 திருத்திய மதிப்பீட்டில் 2·44 லட்சமும்
1973–74 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 4·74 லட்சமும்
வகை செய்யப்பட்டுள்ளது.

(2) 1971–72 முதல் பின்தங்கிய வகுப்பினர் இல்லங்களில் தங்கி
உள்ள அனைவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2 உடைகள் வழங்கப்
படுகின்றன. 1971–72-ல் ரூ. 1·07 லட்சம் செலவிடப்பட்டது.
அதற்கென 1972–73 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 2·58 லட்சமும்,
1973–74-ல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·88 லட்ச
மும் வகை செய்யப்பட்டுள்ளது. கூடுதல் தொகைவேண்டுமளவு
அளிக்கப்படும்.

14. பயிற்சி அளித்தல்.

(1) விடுதியில் தங்கியிருக்கும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்
பட்டோர் மற்றும் பின் நிலை வகுப்பு மாணவர்களுக்கு அவர்தம்
பாடங்களில் தனிப் பயிற்சி அளிப்பதற்கென பகுதி நேரப் பயிற்சி
ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1969–70-ம்
ஆண்டு ரூ. 0·03 லட்சமும் 1970–71-ம் ஆண்டு ரூ. 0·06 லட்சமும்
1971–72-ம் ஆண்டு ரூ. 0·23 லட்சமும், 1972–73-ம் ஆண்டிற்கான
திருத்திய மதிப்பீடும் 1973–74-ம் ஆண்டிற்கான வரவு செலவுத்
திட்ட மதிப்பீடும் முறையே ரூ. 0·48-ம், ரூ. 0·54 லட்சமாகும்.

(2) கல்லூரிகளில் முதலாவது ஆண்டு பி.எஸ்ஸி. படிக்கும் திறமை யுள்ள பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களை எல்லா மாவட் டங்களிலிருந்தும் ஒன்று திரட்டி அவர்களின் தகுதி முன்னேற்றத் திற்கு ஒரு சிறப்பு தனிப்பயிற்சி வகுப்பு சென்னையில் 3 வாரங் களுக்கு செப்டம்பர், அக்டோபர் 1972-ல் நடத்தப்பட்டது. இவ் வாருன பயிற்சி வகுப்புகளை மாவட்டத் தலைநகரங்களிலும் மே, ஜூன் 1973-ல் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15. மாணவர் இல்லங்கள் அரவணைப்பு.

(1) பிற்பட்டோர் நலத்துறை அநேக மாணவ, மாணவியர் இல்லங்களை நடத்தி வருகிறது. அவற்றுள் ஒன்ருன சென்னை அடையாற்றில் உள்ள மாணவியர் இல்லத்தை சமீபத்தில் சென்னை அடையாற்றில் உள்ள அரிமா சங்கம் தன் அரவணைப்பில் ஏற்றுக் கொண்டுள்ளது. வசதியுள்ளவர்கள் வசதியற்றவர்கள்பால் தங்களுக்கு உள்ள தார்மீகக் கடமையை வெளிப்படுத்த இது உதவுகிறது என்பதைத் தவிர, இதனுல் இவ்வில்லத்தில் உள்ள மாணவியர் வேறு ஒரு அமைப்பின் பராமரிப்பில் இருப்பார்கள் என்று பொருள் அல்ல. ஒரு மாணவர் இல்லம், அரிமா சங்கம் அல்லது ரோட்டரி சங்கம் போன்ற அமைப்புகளால் அரவணைக்கப் படுகிறது என்ருல் அதனுல் அவ்வில்லமோ அல்லது அதில் உள்ள மாணவர்களோ, கடிகாரம், பழைய மரச் சாமான்கள், முதல் உதவிக்கான பொருள்கள், எழுதுபொருள்கள் முதலான சில்லறைத் தேவைகளை அரவணைத்துகொள்கிற அமைப்புக்களிலிருந்து பெற முடியும். இவ்வகையான உதவிகள் இவ்விரு சாரார்க்கிடையில் ஒரு இணைப்பை ஏற்படுத்த உதவும், அரவணைக்கும் அமைப்புக் களின் உறுப்பினர்கள் இதனுல் ஊக்கம்பெற்று மாணவர் களின் நலனில் அக்கறை செலுத்தவும் இது உதவும்.

(2) எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும், தங்கள் மாவட்டங் களில் உள்ள மாணவ மாணவியர் இல்லங்களில் குறைந்தது மாணவர் இல்லங்களில் ஒன்றையும், மாணவியர் இல்லங்களில் ஒன்றையும், ஆங்காங்கு உள்ள சமூக அமைப்புகள் தங்கள் அர வணைப்பில் ஏற்றுக் கொள்ளச் செய்யும் வகையில் முயலவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிருர்கள். அவர்களும் இவ்வாருன முயற்சிகளில் ஈடுபட்டு வருகிருர்கள்.

16. ஆசிரியர்களுக்கு வீடுகள்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கென நடத் தப்படுகின்ற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீடு ஒன்று ரூ. 6,200 செலவில் (ஒவ்வொரு வீட்டு மனைக்கும் உரிய விலையையும் சேர்த்து) வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன.





1969–70-ம் ஆண்டில் 6 வீடுகளும், 1970-71-ம் ஆண்டில் 7 வீடு களும். 1971–72 ஆம் ஆண்டில் 7 வீடுகளும் கட்டப் பட்டுள்ளன. 1972–73 -ல் 15 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வருகிற ஆண்டில் 15 வீடுகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

17. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அத்துடன் தொடர்புடைய வேலைகளுக்கான தேர்வுகளுக்கு சிறப்புப் பயிற்சியளிக்கும் நிலையம்.

(1) பல பரிந்துரைகளுக்கிடையே அனைத்து இந்தியப் பணி களுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு பின்தங்கிய வகுப்பினரை பயிற்சியளிக்க பயிற்சி நிலையம் ஒன்று துவக்கப் பட வேண்டுமென்று பிற்பட்டோர் நலக் குழு பரிந்துரைத்தது. அதன்படி 50 பின்தங்கிய மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் 1971 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. முதற் பயிற்சி 1971 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் துவக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிவடைந்தது. அதில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடத்தப்பட்ட அனைத்து இந்திய பணிகளுக்கான தேர்வில் பங்கு பெற்றனர். இப் பயிற்சி நிலையத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை, 1972 அக்டோ பரில் நடந்த தேர்வில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை, மற்றும் பங்கு பெற்றவர்களில் தேர்வு பெற்றவர்கள் எண்ணிக்கை முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | 1971–72. |
|---|---|---|
| 1 | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை .. .. | 50 |
| 2 | பயிற்சியில் ஆரம்ப காலத்தில் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை. | 12 |
| 3 | பயிற்சியை முடிக்காது.. இடையில் விலகியவர்களின் எண்ணிக்கை. | 4 |
| 4 | பயிற்சி முடிந்து 1972 அக்டோபரில் நடந்த தேர்வில் பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கை. | 8 |
| 5 | பங்கு கொண்டவர்களில் நேர்முக தேர்விற்கு தகுதி பெற்றவர்கள் எண்ணிக்கை. | 3 |

(2) இரண்டாவது பயிற்சி 1972 நவம்பர் மாதம் ஆரம்ப மாகியது. 64 பேர்கள் பயிற்சி பெற அனுமதி அளிக்கப் பட்டுள்ளனர். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1 முழு நேரப் பயிற்சியாளர் | .. | .. | .. | 57 |
| 2 பகுதி நேரப் பயிற்சியாளர் | .. | .. | .. | 7 |
| | | மொத்தம் | .. | 64 |

இவர்களில் ஏழுபேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் 1973 அக்டோபரில் நடக்கும் தேர்வில் பங்கு பெறுவர்.

18. பொருளாதார உயர்வு.

(1) சென்னை மாநகரம் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களி லும் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கும், முடித்திருத்துவோர் களுக்கும் இலவசமாக கருவிகள் வழங்கப்பட்டு வந்தன. சென்னை யிலும் 1971–72 முதல் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு தொழிலிலும் 62 பேர் இதன் மூலம் பயன் பெறுவர். இத் திட்டத்தின்கீழ் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு.—

| ஆண்டு. | | | பயன் பெற்றவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1966–67 | .. | .. | 1,440 |
| 1967–68 | .. | .. | 1,425 |
| 1968–69 | .. | .. | 1,498 |
| 1969–70 | .. | .. | 1,542 |
| 1970–71 | .. | .. | 1,512 |
| 1971–72 | .. | .. | 1,633 |
| 1972–73 | .. | .. | 1,699 |

(2) இத்திட்டத்திற்கென 1972–73-ல் திருத்திய மதிப்பீட்டிலும் 1973–74 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் ரூ. 2·03 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



(3) சுகாதார முறையில் சலவைத் துறைகள் கட்டுவதும் இத் துறையின் திட்டங்களில் ஒன்று. இதற்கென பாதி மானியப் பாதி கடன் என்ற முறையில் திட்டமிட்டு சென்ற ஆண்டில் 13 இடங்களில் சலவைத் துறைகள் கட்ட ஆணை பிறப்பிக்கப் பட்டது. மேலும் பல துறைகள் கட்ட திட்ட மதிப்பீட்டில் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(4) இரண்டாம் திட்ட காலத்திலிருந்து மூன்று பொது நோக்கு பொறியியல் பணி மனைகள் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வரு கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஒன்றும் மதுரை மாவட்டம் செக்கானூரணியில் ஒன்றும் திருநெல்வேலி மாவட்டம் வீர கேரளம் புதூரில் ஒன்றுமாக இவைகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தப் பணிமனைகள் முறையே 1960–61, 1962–63, 1965–66-ஆம் ஆண்டுகளில் செயல் படத் தொடங்கின. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்து அதன் வாயிலாக பயன் தரக்கூடிய தொழில்களை தனிப் பட்ட முறையில் அவர்கள் நடத்தி வாழ்வில் வளம் பெற வகை செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி அளிக்கப் படுகின்ற காலம் 18 திங்களாகும். இத்தகைய பயிற்சி நிலையங்களின் மூலம் இதுவரை பயிற்சி பெற்றவர்களின் எண் ணிக்கை பின் வருமாறு.

| ஆண்டு. | | | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1963–64 | .. | .. | 15 |
| 1965–66 | .. | .. | 24 |
| 1966–67 | .. | .. | 48 |
| 1968–69 | .. | .. | 51 |
| 1969–70 | .. | .. | 47 |
| 1970–71 | .. | .. | 93 |
| 1971–72 | .. | .. | 163 |
| 1972–73 | .. | .. | 213 |

(5) இத்தொழிற் கூடங்களில் பயிற்சி பெற்று பொருளாதார வசதிக் குறைவினால் தானாக தொழில் நடத்த முடியாதவர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் அளிக்கும் திட்டத்திற்காக கடந்த ஆண்டுமுதல் நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதற் காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 0·25 லட்சம். இதனால், 26 நபர்கள் கருமார் தொழில், பிட்டர் தொழில் போன்ற தொழில் களுக்கான கருவிகளை இலவசமாகப் பெற்றனர். நடப்பு ஆண்டிற்

கும் இதே அளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர சென்னை பிரிஸ்லி நகர் குடியிருப்பில் பிரம்பு நாற்காலி பயிற்சி நிலையம் ஒன்றும், நெல்லை மாவட்டத்தில் களக்காட்டில் பிரம்பு அறைக்கலன்கள் பயிற்சி நிலையமும் மாநில வணிகத்தொழிற் இயக்குநரால் பேணப்பட்டு வருகின்றன. மகளிர் நல இயக்கு நரால் நெல்லை மாவட்டம் பெருங்குளத்தில் தையல் ரெடிமேட் ஆடைகள் தயாரிப்புப் பயிற்சி நிலையமும், தர்மபுரி மாவட்டம் சாமியாபுரத்தில் மூங்கில் வேலை நிலையமும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் தையல் தொழில் நிலையமும் நடத்தப்படுகின்றன. மேற்சொல்லப்பட்ட நிறுவனங்கள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்டோரின் பயன் கருதி இத்துறையின் நிதியின் மூலம் நடத்தப் படுகின்றன. இதற்கென 1973–74-ம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·84 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(6) இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டம், பாக்கோட்டில் ஒரு கயிறு மற்றும் தும்புப் பொருள் பயிற்சி நிலையங்கள் செயல் பட்டு வருகின்றன. மார்த்தாண்டத்தைச் சுற்றியுள்ள பின்தங் கிய வகுப்பு பெண்களை பயிற்றுவிக்க பாக்கோட்டில் உள்ள தும்பு பொருள் பயிற்சி நிலையம் மார்த்தாண்டத்திற்கு மாற்றப்பட்டுள் ளது. இதற்கென 1972–73-ம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0·28 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே அளவு ஒதுக்கீடு 1973–74-ம் ஆண்டுக்கும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையங்களினால் 40 பேர் பயனடைகின்றனர்.

19. வேளாண்மை—(1) குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட் டோர் தங்கள் வேளாண்மையை மேம்படுத்திக்கொள்ள அவர் களுக்கு பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு கிணறு ஒன்றுக்கு ரூ. 2,000 வரை மான்ய உதவி கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தினால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| ஆண்டு. | | | | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. (பாசனக் கிணறுகள்). |
|---|---|---|---|---|
| 1966–67 | .. | .. | .. | 135 |
| 1967–68 | .. | .. | .. | 10 |
| 1968–69 | .. | .. | .. | 105 |
| 1969–70 | .. | .. | .. | 80 |
| 1970–71 | .. | .. | .. | 78 |
| 1971–72 | .. | .. | .. | 95 (முடிக்கப்படாத பழைய கிணறுகள் உள்பட): |
| 1972–73 | .. | .. | .. | 30 (முடிக்கப்படாத பழைய கிணறுகள் உள்பட): |





(2) இத்திட்டத்திற்காக 1973–74-ம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) கடலூரிலும், சேலத்திலும் நான்கு பாறை உடைக்கும் பிரிவுகள் இத்துறை நிதி உதவியுடன் செயல்பட்டு வந்தன. இவை களின் சேவை மேலும் தேவைப்படாததால் இவை 31—5—1972 அன்று வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டன.

20. சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள்.

வீட்டு வசதி—1956–57-ம் ஆண்டிலிருந்து, குற்றப்பட்டி யலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு கடன் மற்றும் மான்ய அடிப் படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய வீடுகள் உறுதியாக இல்லாததாலும் இயற்கைப் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வகையில் இல்லாததினாலும் மாற்றியமைக்கப் பட்ட திட்டத்தின் மூலம் ரூ. 1,200 செலவில் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டது. இதற்கான தொகையில் ரூ. 900 உதவி தொகையாகவும், ரூ. 300 கடனாகவும், மாநில அரசு வழங்கும். களிமண் பாங்கான இடங்களில் வீடு கட்டுவதற்கு ரூ. 1,600 செலவிடப்படும். இதற்கென 1973–74 மதிப்பீட்டில் ரூ. 2·70 லட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

21. சலவைத் துறை கட்டுதல்—சலவைத் துறைகள் கட்டுவதற் காக உள்ளாட்சி மன்றங்களுக்கு பாதி கடனாகவும், பாதி மானியமாகவும், நிதி உதவி வழங்கப்படுகிறது. மானியப்பகுதிக் காக 1972–73 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் திருத்திய மதிப்பீட்டிலும் ரூ. 2·50 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

22. பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு—(1) பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை களை மறு ஆய்வு செய்யவும், அவர்கள் நிலைமையை மேம்படுத்து வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனை மதிப்பிடவும் குறிப்பாக கல்வித் திட்டங்கள் குறித்தும் அரசுப் பணிகளில் அவர்களின் வீதாச்சாரத்தைப் பற்றி மதிப்பிடவும் 1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள் பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு ஒன்றை அரசு அமைத்தது. (1) கல்வியில் அவர்களின் நிலை, (2) அரசுப் பதவி களில் அவர்களின் வீதாச்சாரம், (3) வர்த்தகம், வாணிகம் தொழில்கள் இவற்றில் அவர்களின் நிலை, (4) கடன் வசதி, வாணிபம் வசதி கூட்டுறவு இவற்றில் அவர்களின் வாய்ப்பு, (5) வீட்டு வசதி வாய்ப்பு போன்ற இக்கூறுகளில் பின்தங்கிய

மக்களின் நிலையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பரிந்துரைக்கும்படியும், அவ்வாணைக்குழு கேட்டு கொள்ளப்பட்டது.

(2) ஆணைக்குழு 1971-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2-ம்நாள் தன் அறிக்கையை அரசிடம் பணிந்தனுப்பியது. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் பல்வகை இனங்கள் குறித்து ஆணைக்குழு 110 பரிந்துரைகள் செய்துள்ளது. 17 ஒப்புக்கொள்ளப்பட்டது. அவற்றில் முக்கிய பரிந்துரைகளின் மேல் அரசு வழங்கிய ஆணைகள் பின் வருமாறு:—

(1) கல்வி நிறுவனங்களிலும், பொதுப் பணிகளிலும், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக ஒதுக்கபபட்டுள்ள இடம் 25 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

(2) அனைத்து இந்திய பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு 50 பின்தங்கிய வகுப்பினரைப் பயிற்றுவிப்பதற்காக 1971—72-ம் ஆண்டு சென்னையில் பயிற்சி நிலையமொன்று துவக்க ஆணையிடப்பட்டது.

(3) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் மேலும் 14 வகுப்பினரை புதிதாக சேர்த்துக் கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(4) பரிந்துரைக்கிணங்க 51 மாணவரில்லங்கள் திறக்கப்பட்டன.

(5) மாணவரில்லங்களில் வழங்கும் உணவு செலவிற்கு மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 5 உயர்த்தியது.

(6) படிப்பு உதவிகளில் உண்டி உறைவிட செலவு மானியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 20வரை உயர்த்தியது.

(7) அரசு பணிகளிலும், கல்லூரிகளிலும் 31 சதவிகித இடங்களை பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதை கண்டு அறிய ஆய்வு நடத்த ஆணையிடப்பட்டது.

(8) வருட வருமானம் ரூ. 2,500க்கும் ரூ. 6,000க்கும் இடைப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் தொழில் கல்வி பயில வருடம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 500 கடன் உதவியளிக்க ஆணையிட்டு 1972—73 முதல் நடைபெறுகிறது.



(9) ஐந்து சதவீத மனைகளை சலவையாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் ஒதுக்க மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

(10) லம்பாடிகளுக்கு தர்மபுரி மாவட்டத்தில் சித்தலிங்க தண்டாவில் உண்டி உறைவிட வசதியுடன் கூடிய பள்ளி ஒன்று திறக்கப்பட்டது.

(3) நிதிப் பற்றாக்குறையினாலும் வேறு சில காரணங்களினாலும் 88 பரிந்துரைகள் அரசினால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஒரு சில பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

23. (1) ஐந்தாண்டு திட்டங்களுக்கென இம்மாநில குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோரின் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு வழங்கும் மானியம் ரூ. 18·50 லட்சமாகும். 1973—74-க்கும் இதே அளவில்தான் வழங்கும். தேவைக்கேற்ப இவ்வுதவி இல்லாததினால் அதாவது திட்டமிட்ட தொகைக்கு உதவியளிக்காததால், வருட மத்தியில் சில திட்டங்களை கைவிட நேர்கிறது. செலவழிக்கப்பட்ட தொகையும், மத்திய அரசு வழங்கிய மானியமும் வருமாறு:

ஐந்தாண்டு திட்டங்கள் குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோர்.

| ஆண்டு. | மாநில அரசு திட்டமிட்ட தொகை. | மத்திய அரசு வழங்கிய மானியம். | மாநில அரசு செலவழித்த தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. (ரூ. இலட்சத்தில்.) | ரூ. |
| 1969—70 .. | 18·36 | 16·00 | 17·83 |
| 1970—71 .. | 21·91 | 18·50 | 24·08 |
| 1971—72 .. | 53·19 | 18·50 | 45·07 |
| 1972—73 (திருத்த மதிப்பீடு). | 58·14 | 18·50 | .. |
| 1973—74 (மதிப்பீடு). | 72·69 | 18·50 | .. |

குறிப்பு.—மாநில அரசு திட்டமிட்ட தொகை என்பது திட்டமல்லாத மாநில அரசு செலவினங்களைத் தவிர்த்த தொகையை மட்டும் குறிக்கும்.

(2) மக்கள் தொகை அடிப்படையில் இந்தியா முழுவதிற்கும் ரூ. 450 லட்சம் இச்சமூகத்தினரின் நல்வாழ்விற்கு இந்திய அரசு நான்காம் ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கியுள்ளது. அவர்களின் மக்கள் தொகை 40 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இம்மாநிலத்தில் உள்ள சுமார் 13 லட்ச குற்றப் பரம்பரை சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மக்களுக்கு நியாயமாக நான்காம் ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய மானிய தொகை ரூ. 150 லட்சமாகும். ஆனால் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 90 லட்சமே. இருப்பினும் நமக்குரிய பங்கைப் பெற இவ்வரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளும்.

(3) மதுரை மாவட்டத்தில் வாழும் பிரமலை கள்ளர்கள் முன்னேற்றத்தை விரைவுபடுத்த பணிந்துரைகள் வழங்க, மாவட்ட அளவில் ஆலோசனைக்குழு ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டது.

(4) பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தலைமையின்கீழ் மாநிலப் பின்தங்கிய வகுப்பினர் ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது ஆறு மாதங்களுக்கொருமுறை கூடி, பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக வழிமுறைகளைப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்கின்றது.

(5) பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழுவின் அறிக்கைமீது அரசு முடிவுகள் எடுக்கும்போது, இத்துறையினால் மேலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் புதிய திட்டங்கள் தொடங்கப்பெற வேண்டும் என்றும் தற்போதுள்ள திட்ட நடவடிக்கைகள் மும்முரப்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசு விழைகிறது. வரும் ஆண்டுகளில் இவைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு தேவையாயிருக்கும்.

(6) குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பின்தங்கிய வகுப்பினர் துறைக்கு தொழில் வணிகத்துறை இயக்குநர், மகளிர் நலத்துறை இயக்குநர் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

(7) பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியோரது முன்னேற்றத்திற்கான செலவு 1967–68-ல் ரூ. 161.40 லட்சமாக இருந்தது. 1968–69-ல் ரூ. 187.09 லட்சமாகவும், 1969–70-ல் ரூ. 265.46 லட்சமாகவும் அதிகரித்தது. 1970–71-ம் ஆண்டில் ரூ. 320.14 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1971–72-ம் ஆண்டு ரூ. 432.57 லட்சமாக இத்



தொகை உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். 1972–73-ம் ஆண்டின் திருத்த மதிப்பீடு ரூ. 501.63 லட்சமாகும். 1973–74-ம் ஆண்டின் மதிப்பீடு ரூ. 556.27 லட்சமாகும்.

(8) பின்தங்கிய வகுப்பினர் சமுதாயத்தில் தமக்குரிய இடத்தைப் பெறுவதற்காகவும் அவர்களை விரைவில் முன்னேறச் செய்வதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு பரிசீலித்து வருகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலோர் பின்தங்கிய வகுப்பினராக உள்ளதால் வரும் ஆண்டுகளில் இந்த நடவடிக்கைகளுக்குப் படிப்படியாக அதிகம் செலவிட வேண்டியிருக்கும்.

அட்டவணை அ.

ரூ. லட்சத்தில்.

1973–74 மதிப்பீடு ரூ. 556·27.

| | நிர்வாகம்—ரூ. 6·01. ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள இனங்கள். ரூ. 379·99. | | திட்டங்கள்—ரூ. 550·2 ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராத இனங்கள்—ரூ. 170·27. | | |
|---|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பு 307·31. | குற்றப்பரம்பரை சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு 72·68. | பிற்பட்ட வகுப்பு 99·68. | குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு 66·59. | குறைந்த வருமான பிரிவினர் 4·00. |
| படிப்பு உதவி | 270·70 | 24·49 | 85·00 | 14·69 | 4·00 |
| பள்ளிகள் | .. | 11·73 | .. | 32·65 | .. |
| மதிய உணவு | .. | 6·87 | .. | 7·27 | .. |
| புத்தகங்களும் சீருடையும் | 2·88 | 5·55 | .. | 0·20 | .. |
| உணவு மானியம் | .. | .. | 5·46 | 0·27 | .. |
| மாணவரில்லங்கள் | 31·38 | 8·53 | 2·64 | 9·60 | .. |
| பல்கலைக் கழகங்களுக்கு ஈட்டுத் தொகை. | — | .. | 3·15 | .. | |
| ஆசிரியர் வீட்டு வசதி | .. | 0·90 | .. | .. | .. |
| மாணவரில்லங்கள் கட்டுதல். | 0·32 | 5·72 | .. | .. | .. |
| வேளாண்மை | ... | 3·00 | .. | .. | .. |
| கைத்தொழில் | .. | 2·84 | 0·28 | .. | .. |
| தொழிற் கருவிகள் | 2·03 | 0·25 | .. | .. | .. |
| குடிநீர் வசதி | .. | .. | .. | 0·03 | .. |
| ஒழுக்கக்கல்வி | .. | .. | .. | 0·01 | .. |
| சலவைத்துறைகள் | .. | .. | 1·00 | .. | .. |
| அஜீஸ் நகர் | .. | .. | .. | 1·87 | .. |
| ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம். | .. | .. | 1·83 | .. | .. |
| ஆய்வாளர்கள் | .. | 0·10 | .. | .. | .. |
| வீடுகள் | .. | 2·70 | .. | .. | .. |
| மாணவர்களுக்கு பயிற்சி. | .. | .. | 0·32 | .. | .. |
| மொத்தம் | 307·31 | 72·68 | 99·68 | 66·59 | 4·00 |

## அட்டவணை 'ஆ'

### சிறப்பட்டோர் நல உணவு இல்லங்கள் உள்ள இடங்கள்.

### 1973—74.

#### சென்னை மாவட்டம்.

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1. அரசினர் மாணவியர் இல்லம், அடையாறு. | 150 |
| 2. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தென் சென்னை. | 150 |
| 3. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வட சென்னை. | 100 |
| 4. அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், சென்னை. | 50 |
| 5. அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் இல்லம், சென்னை. | 55 |

#### திருநெல்வேலி மாவட்டம்.

| | |
|---|---|
| 6. அரசினர் பெண்கள் இல்லம், புதூர் .. | 75 |
| 7. அரசினர் மீனவ மாணவர் இல்லம், தூத்துக்குடி. | 150 |
| 8. அரசினர் மாணவர் இல்லம், ஏருவாடி ... | 80 |
| 9. அரசினர் மாணவர் இல்லம், பணிக்க நாடார் குடியிருப்பு. | 50 |
| 10. அரசினர் மாணவர் இல்லம், ஸ்வாமிநாதபுரம். | 49 |
| 11. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருநெல்வேலி. | 50 |
| 12. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தூத்துக்குடி. | 50 |

#### தஞ்சாவூர் மாவட்டம்.

| | |
|---|---|
| 13. அரசினர் மாணவர் இல்லம், மகாதேவபட்டினம். | 50 |
| 14. அரசினர் மாணவர் இல்லம், பேராவூரணி | 50 |
| 15. அரசினர் மாணவியர் இல்லம், அறந்தாங்கி | 40 |
| 16. அரசினர் மாணவர் இல்லம், மன்னார்குடி | 100 |
| 17. அரசினர் மாணவியர் இல்லம், வலங்கிமான். | 50 |



#### தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| | எண்ணிக்கை. |
|---|---|
| 18. அரசினர் மாணவர் இல்லம், நீடாமங்கலம் | 75 |
| 19. அரசினர் மாணவர் இல்லம், உம்பலாச்சேரி | 30 |
| 20. அரசினர் மாணவர் இல்லம், வேதாரண்யம் | 50 |
| 21. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தஞ்சாவூர் டவுண். | 100 |
| 22. அரசினர் மாணவர் இல்லம், ஆலத்தூர். | 40 |
| 23. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கும்பகோணம். | 50 |
| 24. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருவாரூர். | 50 |

#### தென்னாற்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| 25. அரசினர் மாணவர் இல்லம், விருத்தாசலம் | 100 |
| 26. அரசினர் மாணவர் இல்லம், பெண்ணாடம் | 90 |
| 27. அரசினர் மாணவர் இல்லம், பெரியகுப்பம் | 70 |
| 28. அரசினர் மாணவர் இல்லம், சேத்தியாதோப்பு. | 140 |
| 29. அரசினர் மாணவர் இல்லம், சிறுபாக்கம் | 75 |
| 30. அரசினர் மாணவர் இல்லம், திருநாவலூர் | 50 |
| 31. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கடலூர். | 75 |
| 32. அரசினர் மாணவர் இல்லம், கம்மாபுரம் | 50 |
| 33. அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், கடலூர் | 50 |
| 34. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திண்டிவனம். | 50 |
| 35. அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், விருத்தாசலம். | 150 |

#### மதுரை மாவட்டம்.

| | |
|---|---|
| 36. அரசினர் மாணவர் இல்லம், அலங்காநல்லூர். | 104 |
| 37. அரசினர் மாணவர் இல்லம், திருநகர் | 80 |
| 38. அரசினர் மாணவர் இல்லம், தல்லாகுளம் | 110 |
| 39. அரசினர் மாணவர் இல்லம், தர்மபுரி (பெரிய குளம் தாலுக்கா). | 40 |

## மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 40. | அரசினர் மாணவர் இல்லம், பெரியகுளம் | 80 |
| 41. | அரசினர் மாணவர் இல்லம், செக்காபட்டி | 75 |
| 42. | அரசினர் மாணவர் இல்லம், சின்னுளப்பட்டி | 80 |
| 43. | அரசினர் மாணவர் இல்லம், மேலவளவு | 50 |
| 44. | அரசினர் மாணவர் இல்லம், போடி நாயக்கனூர். | 120 |
| 45. | அரசினர் மாணவர் இல்லம், த. வாடிப்பட்டி | 80 |
| 46. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மதுரை. | 50 |
| 47. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திண்டுக்கல். | 50 |
| 48. | அரசினர் மாணவர் இல்லம், அச்சம்பட்டி | 50 |

## தர்மபுரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 49. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தர்மபுரி. | 21[illegible] |
| 50. | அரசினர் மாணவியர் இல்லம், பாப்பாரப்பட்டி. | 50 |
| 51. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கிருஷ்ணகிரி. | 50 |
| 52. | அரசினர் மாணவர் இல்லம், வேலம்பேட்டை | 50 |
| 53. | அரசினர் மாணவர் இல்லம், ஹோசூர் | 50 |
| 54. | அரசினர் மாணவர் இல்லம், பாலக்கோடு | 60 |
| 55. | அரசினர் மாணவர் இல்லம், ஜக்க சமுத்திரம் | 50 |
| 56. | அரசினர் மாணவர் இல்லம், ஹரூர் | 50 |

## இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 57. | அரசினர் மாணவியர் இல்லம், பாகநேரி | 30 |
| 58. | அரசினர் மாணவர் இல்லம், கண்டரமாணிக்கம். | 30 |
| 59. | அரசினர் மாணவர் இல்லம், வடக்குச் சமுத்திரம். | 50 |
| 60. | அரசினர் மாணவியர் இல்லம், நாட்டரசன் கோட்டை. | 30 |
| 61. | அரசினர் மாணவர் இல்லம், திருக் கோஷ்டியூர். | 50 |



## இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 62. | அரசினர் மாணவர் இல்லம், காரியாபட்டி | 30 |
| 63. | அரசினர் மாணவர் இல்லம், புதுவாயல் | 50 |
| 64. | அரசினர் மாணவர் இல்லம், திருத்தாங்கல். | 60 |
| 65. | அரசினர் மாணவர் இல்லம், மண்டல மாணிக்கம். | 30 |
| 66. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், விருதுநகர். | 50 |

## கோயம்புத்தூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 67. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கோயம்புத்தூர். | 100 |
| 68. | அரசினர் மாணவர் இல்லம், பெருந்துறை. | 50 |
| 69. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், ஈரோடு. | 50 |
| 70. | அரசினர் மாணவர் இல்லம், சத்திய மங்கலம். | 60 |
| 71. | அரசினர் மாணவர் இல்லம், புஞ்சப் புளியம்பட்டி. | 60 |

## வடாற்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 72. | அரசினர் மாணவர் இல்லம், பொன்னை .. | 50 |
| 73. | அரசினர் மாணவர் இல்லம், திருவண்ணாமலை .. | 50 |
| 74. | அரசினர் மாணவர் கல்லூரி இல்லம், குடியாத்தம் | 50 |
| 75. | அரசினர் மாணவர் இல்லம், திருப்பத்தூர் .. | 50 |
| 76. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், செய்யார். | 30 |
| 77. | அரசினர் மாணவர் இல்லம், குடியாத்தம் .. | 50 |
| 78. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வேலூர். | 50 |
| 79. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வாணியம் பாடி. | 50 |

## நீலகிரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 80. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், உதகமண்டலம் | 50 |
| 81. | அரசினர் மாணவர் இல்லம், கூனூர் .. .. | 30 |

## சேலம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 82. | அரசினர் மாணவர் இல்லம், இளம்பிள்ளை .. | 80 |
| 83. | அரசினர் மாணவர் இல்லம், கொங்கணாபுரம் .. | 50 |

சேலம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 84. | அரசினர் மாணவர் இல்லம், மகுடஞ்சாவடி | 50 |
| 85. | அரசினர் மாணவர் இல்லம், கண்ணன்குருச்சி .. | 50 |
| 86. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், சேலம் .. சந்திப்பு. | 50 |
| 87. | அரசினர் மாணவர் இல்லம், தாரமங்கலம் .. | 50 |
| 88. | அரசினர் மாணவர் இல்லம், இடப்பாடி .. | 50 |
| 89. | அரசினர் மாணவர் இல்லம், எருமைப்பட்டி .. | 50 |
| 90. | அரசினர் மாணவர் இல்லம், தீவட்டிப்பட்டி .. | 50 |
| 91. | அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், நாமக்கல். | 50 |
| 92. | அரசினர் மாணவர் இல்லம், எலச்சிபாளையம். | 50 |
| 93. | அரசினர் மாணவர் இல்லம், மல்லசமுத்திரம் ... | 50 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 94. | அரசினர் மாணவியர் இல்லம், மேட்டுப் பாளையம் | 30 |
| 95. | அரசினர் மாணவர் இல்லம், குல்லக்குடி .. | 50 |
| 96. | அரசினர் மாணவர் இல்லம், விராலிமலை .. | 75 |
| 97. | அரசினர் மாணவர் இல்லம், திருவெரம்பூர் .. | 100 |
| 98. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருச்சி டவுன். | 100 |
| 99. | அரசினர் மாணவர் இல்லம், ஜெயம்கொண்டான் | 50 |
| 100. | அரசினர் மாணவர் இல்லம், பெரம்பலூர் .. | 50 |
| 101. | அரசினர் மாணவர் இல்லம், லாலாப்பேட்டை | 75 |
| 102. | அரசினர் மாணவர் இல்லம், திருமயம் .. | 50 |
| 103. | அரசினர் மாணவர் இல்லம், பஞ்சபட்டி .. | 50 |
| 104. | அரசினர் மாணவர் இல்லம், கண்ணனூர் .. | 50 |
| 105. | அரசினர் மாணவர் இல்லம், துங்காபுரம் .. | 50 |
| 106. | அரசினர் மாணவர் இல்லம், அரியலூர் .. | 50 |
| 107. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், புதுக்கோட்டை | 125 |
| 108. | அரசினர் மாணவர் இல்லம், மருவத்தூர் ... | 60 |
| 109. | அரசினர் மாணவர் இல்லம், மணப்பாறை .. | 60 |
| 110. | அரசினர் மாணவர் இல்லம், பொன்பரப்பி .. | 50 |

செங்கற்பட்டு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 111. | அரசினர் மாணவர் இல்லம், வெங்கானூர் .. | 50 |
| 112. | அரசினர் மாணவர் இல்லம், கனகம்மா சத்திரம். | 50 |



செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 113. | அரசினர் மாணவர் இல்லம், மதுரமங்கலம், | 25 |
| 114. | அரசினர் மாணவர் இல்லம், சாலவாக்கம் .. | 25 |
| 115. | அரசினர் மாணவர் இல்லம், பெரியபாளையம். | 50 |
| 116. | அரசினர் மாணவர் இல்லம், கருங்குழி .. | 30 |
| 117. | அரசினர் மாணவர் இல்லம், அத்திமாஞ்சேரிபேட் | 50 |
| 118. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், செங்கற்பட்டு | 50 |
| 119. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருத்தணி | 50 |
| 120. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், காஞ்சீபுரம். | 100 |
| 121. | அரசினர் மாணவர் இல்லம், பாதிரிவேடு .. | 50 |

கன்னியாகுமரி மாவட்டம்:

| | | |
|---|---|---|
| 122. | அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், நாகர் கோவில். | 50 |
| 123. | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், நாகர்கோவில்50 | |

சுருக்கம்.

| இல்லங்களின் எண்ணிக்கை: | | பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை: |
|---|---|---|
| 80 | உயர் நிலைப் பள்ளி ஆண்கள் இல்லம் .. | 4,698 |
| 9 | உயர்நிலைப் பள்ளி பெண்கள் இல்லம் .. | 515 |
| 30 | கல்லூரி மாணவர்கள் இல்லம் ... .. | 2,195 |
| 4 | கல்லூரி மாணவியர் இல்லம் ... ... | 200 |
| 123 | | 7,608 |

அட்டவணை 'இ'

குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோர் இல்லங்கள் உள்ள இடங்கள்.

மதுரை மாவட்டம்.

| | | எண்ணிக்கை: |
|---|---|---|
| 1. | அரசினர் மாணவர் இல்லம், திருமங்கலம் ... | 120 |
| 2. | அரசினர் மாணவர் இல்லம், திண்டுக்கல் ... | 180 |

அட்டவணை ஈ.

கைத்தொழில் நிலையங்கள்.

(i) கைத்தொழில் மற்றும் வாணிபத் துறையினரால் நடத்தப்படுபவை.

| | துவக்கிய வருடம். | பயிற்சி பெறுபவர் எண்ணிக்கை. | உதவித் தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1 பொது பொறியியற் பட்டறை, செக்காஜாரணி (மதுரை மாவட்டம்). | 1963 | 15 | 45 |
| 2 பொதுப் பொறியியற் பட்டறை, வீர கேரளம்புதூர் (திருநெல்வேலி மாவட்டம்). | 1965 | 15 | 45 |
| 3 பொதுப் பொறியியற் பட்டறை, முதுகுளத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1961 | 30 | 45 |
| 4 பிரம்பு பொருள்கள் செய்யும் பயிற்சிப் பள்ளி, பிரிசிலி நகர் செட்டில்மெண்ட் (சென்னை மாவட்டம்). | 1971 | 20 | 30 |
| 5 பிரம்பு மற்றும் மூங்கில் தொழில் பயிற்சிக் கூடம், களக்காடு (திருநெல்வேலி மாவட்டம்). | 1971 | 15 | 40 |

(ii) மகளிர் நலத்துறையினரால் நடத்தப்படுபவை

| | | | |
|---|---|---|---|
| 1 தையல் பயிற்சி மற்றும் உடை தயாரிக்கும் தொழிற் பயிற்சி நிலையம், பெருங்குளம் (திருநெல்வேலி மாவட்டம்). | 1970 | 20 | 25 |
| 2 மூங்கில் சாமான்கள் செய்யும் நிலையம், சாமியாபுரம் (தர்மபுரி மாவட்டம்). | 1970 | 15 | 30 |
| 3 தையல் மற்றும் பூவேலை தொழிற் பயிற்சி நிலையம், உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்). | 1971 | 50 | 30 |



அட்டவணை ஈ—தொடர்ச்சி.

கைத்தொழில் நிலையங்கள்—தொடர்ச்சி.

(iii) பிற்பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படுபவை

| | துவக்கிய வருடம். | பயிற்சி பெறுபவர் எண்ணிக்கை. | உதவித் தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1 தும்புப் பொருள் தயாரிப்பு பயிற்சி நிலையம், மார்த்தாண்டம் (கன்னியாகுமரி மாவட்டம்). | 1960 | 25 | 30 |
| 2 பிரம்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், பாக்கோடு (கன்னியாகுமரி மாவட்டம்). | 1960 | 15 | 30 |

## மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | எண்ணிக்கை. |
|---|---|
| 3. அரசினர் மாணவியர் இல்லம், உசிலம்பட்டி .. | 500 |
| 4. அரசினர் மாணவர் இல்லம், உசிலம்பட்டி .. | 500 |
| 5. அரசினர் மாணவர் இல்லம், மதுரை .. .. | 60 |
| 6. அரசினர் மாணவர் இல்லம், செக்கானூரணி .. | 200 |
| 7. அரசினர் மாணவியர் இல்லம், திருமங்கலம் .. | 125 |
| 8. அரசினர் மாணவியர் இல்லம், சின்னமனூர் .. | 100 |
| 9. அரசினர் மாணவர் இல்லம், நாட்டாமங்கலம் .. | 120 |
| 10. அரசினர் தொழிற் பயிற்சி இல்லம், கே. புதூர். | 100 |
| 11. அரசினர் மாணவர் இல்லம், உத்தமபாளையம். | 150 |
| 12. அரசினர் மாணவியர் இல்லம், கம்பம் .. .. | 50 |
| 13. அரசினர் மாணவர் இல்லம், வத்தலகுண்டு .. | 140 |
| 14. அரசினர் மாணவர் இல்லம், கடமலைக்குண்டு: | 60 |
| 15. அரசினர் மாணவர் இல்லம், பாப்பாப்பட்டி ... | 80 |
| 16. அரசினர் மாணவர் இல்லம், விளாத்தூர் ... | 45 |
| 17. அரசினர் மாணவியர் இல்லம், சொக்கனூரணி .. | 50 |
| 18. அரசினர் மாணவர் இல்லம், ராஜதானி .. | 70 |
| 19. அரசினர் மாணவர் இல்லம், அல்லிநகரம் ... | 60 |

## திருநெல்வேலி மாவட்டம்.

| | |
|---|---|
| 20. அரசினர் மாணவர் இல்லம், கயத்தார் .. | 50 |
| 21. அரசினர் மாணவர் இல்லம், கோயில்பட்டி .. | 60 |
| 22. அரசினர் மாணவர் இல்லம், சங்கரன் கோயில். | 110 |
| 23. அரசினர் மாணவர் இல்லம், நாங்குநேரி .. | 90 |
| 24. அரசினர் மாணவர் இல்லம், ஸ்ரீவைகுண்டம் .. | 60 |
| 25. அரசினர் மாணவர் இல்லம், அம்பாசமுத்திரம். | 75 |
| 26. அரசினர் மாணவர் இல்லம், தென்காசி .. | 60 |
| 27. அரசினர் மாணவர் இல்லம், பாளையங்கோட்டை. | 75 |
| 28. அரசினர் மாணவர் இல்லம், வீரகேரளம்புதூர்.. | 30 |
| 29. அரசினர் மாணவர் இல்லம், வெள்ளான்குளம். | 30 |
| 30. அரசினர் மாணவர் இல்லம், வன்னிகோநேந்தல்.. | 30 |
| 31. அரசினர் மாணவர் இல்லம், சாயமலை .. | 30 |

## செங்கற்பட்டு மாவட்டம்

| | |
|---|---|
| 32. அரசினர் மாணவியர் இல்லம், வில்லிவாக்கம் .. | 50 |



## இராமநாதபுரம் மாவட்டம்.

| | |
|---|---|
| 33. அரசினர் மாணவியர் இல்லம், அருப்புக்கோட்டை. | 50 |
| 34. அரசினர் மாணவர் இல்லம், கமுதி .. | 150 |
| 35. அரசினர் மாணவர் இல்லம், அருப்புக்கோட்டை. | 100 |
| 36. அரசினர் மாணவர் இல்லம், முதுகுளத்தூர் .. | 100 |
| 37. அரசினர் மாணவர் இல்லம், நயினார்கோயில் .. | 75 |
| 38. அரசினர் மாணவர் இல்லம், பொம்மநேந்தல் .. | 50 |
| 39. அரசினர் மாணவர் இல்லம், மேலகிடாரம் .. | 50 |
| 40. அரசினர் மாணவர் இல்லம், கடலாடி .. .. | 60 |

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | |
|---|---|
| 41. அரசினர் மாணவர் இல்லம், புதுக்கோட்டை .. | 44 |
| 42. அரசினர் மாணவர் இல்லம், திருச்சி .. | 50 |
| 43. அரசினர் மாணவியர் இல்லம், திருச்சி .. | 30 |
| 44. அரசினர் மாணவியர் இல்லம், பொன்னமராவதி. | 50 |
| 45. அரசினர் மாணவர் இல்லம், மேல மாயனூர் .. | 50 |

## கோயம்புத்தூர் மாவட்டம்.

| | |
|---|---|
| 46. அரசினர் மாணவர் இல்லம், அவிநாசி .. .. | 50 |

## சுருக்கம்.

| இல்லங்களின் எண்ணிக்கை. | | பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 9 | பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லங்கள். | 1,005 |
| 37 | ஆண்கள் உயர்நிலை பள்ளி இல்லங்கள். | 3,364 |
| 46 | | 4,369 |

அட்டவணை 2.

**கல்வி உதவித் தொகை பெற்ற பள்ளி மாணவர்களின் தேர்வு சதவிகிதம்.**

| வகுப்பு. | 1970–71-ல் உதவித்தொகை பெற்றவர்கள். | | | தேறியவர்கள். | | | தேர்வு சதவிகிதம். |
|---|---|---|---|---|---|---|---|
| | புதியவர். | புதுப்பிக்கப்பட்டவர். | மொத்தம். | புதியவர். | புதுப்பிக்கப்பட்டவர். | மொத்தம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | பிற்பட்ட மாணவர்கள். | | | | |
| ix-ம் வகுப்பு .. | 31,956 | .. | 31,956 | .. | .. | .. | .. |
| x-ம் வகுப்பு .. | 11,845 | 12,181 | 24,026 | 14,018 | 16,778 | 30,796 | 52 |
| xi-ம் வகுப்பு .. | 7,870 | 10,990 | 18,860 | 14,356 | 16,831 | 31,187 | 70 |
| | | | குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினர். | | | | |
| ix-ம் வகுப்பு .. | 18,453 | 9,332 | 27,785 | .. | .. | .. | .. |
| x-ம் வகுப்பு .. | 9,358 | 7,190 | 16,548 | 3,344 | 6,731 | 10,075 | 24 |
| xi-ம் வகுப்பு .. | 5,148 | 4,288 | 9,436 | 1,740 | 5,677 | 7,417 | 34 |

குறிப்பு.—குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினருக்கு I-ம் வகுப்பு முதல் VIII-ம் வகுப்பு வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் இந்த வகை உதவித் தொகைகளின் எண்ணிக்கை இங்கு விமர்சிக்கப்படவில்லை.



அட்டவணை ஊ.

**குறிப்பிட்ட வகுப்புகளில் கல்வி உதவித் தொகை பெற்ற கல்லூரி மாணவர்களின் தேர்வு சதவிதம்.**

பிற்பட்ட வகுப்பினர்—

| வகுப்பு. | 1970–71-ல் உதவித்தொகை பெற்றவர்கள். | | | | தேறியவர்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | விடுதிகளில் தங்குபவர்கள். | | விடுதிகளில் தங்காதவர்கள். | | விடுதிகளில் தங்குபவர்கள். | |
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பி.யூ.சி. .. | 6,076 | 1,144 | 11,763 | 2,173 | 1,880 | 680 |
| பி.ஏ. .. | 3,410 | 896 | 5,326 | 1,206 | 3,304 | 839 |
| பி.எஸ்ஸி. .. | 4,382 | 822 | 4,701 | 628 | 3,630 | 571 |
| பி.காம். .. | 858 | 21 | 1,540 | 194 | 848 | 4 |
| பி.ஈ. .. | 841 | 1 | 439 | .. | 803 | .. |
| எம்.பி.பி.எஸ். .. | 635 | 209 | 282 | 129 | 323 | 62 |
| புலவர் .. | 192 | 57 | 132 | 42 | 42 | 21 |
| எம்.ஏ. .. | 414 | 35 | 237 | 45 | 213 | 17 |
| பி.பார்ம் .. | 27 | .. | 20 | 1 | 23 | .. |

அட்டவணை ஊ—தொடர்ச்சி.

குறிப்பிட்ட வகுப்புகளில் கல்வி உதவித்தொகை பெற்ற கல்லூரி மாணவர்களின் தேர்வு சதவீதம்—தொடர்ச்சி.

| வகுப்பு. | தேறியவர்கள்—தொடர்ச்சி. விடுதியில் தங்காதவர்கள். | | தேறியவர்கள் விடுதியில் தங்குபவர்கள். | | சதவிகிதம். விடுதியில் தங்காதவர்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள் |
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பி.யு.சி. .. | 5,076 | 2,043 | 31 | 59 | 43 | 94 |
| பி.ஏ. .. | 4,250 | 1,197 | 97 | 94 | 80 | 99 |
| பி.எஸ்ஸி. .. | 4,062 | 455 | 83 | 69 | 86 | 72 |
| பி.காம். .. | 1,323 | 150 | 99 | 19 | 86 | 77 |
| பி.ஈ. .. | 298 | .. | 95 | .. | 68 | .. |
| எம்.பி.பி.எஸ். | 36 | 39 | 50 | 30 | 13 | 30 |
| புலவர் .. | 62 | 19 | 20 | 37 | 47 | 45 |
| எம்.ஏ. .. | 142 | 31 | 51 | 49 | 60 | 91 |
| பி.பார்ம். .. | 4 | .. | 85 | .. | 20 | .. |



குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினர்—தொடர்ச்சி.

| வகுப்பு. | 1970–71-ல் உதவித்தொகை பெற்றவர்கள். விடுதிகளில் தங்குபவர்கள். | | 1970–71-ல் உதவித்தொகை பெற்றவர்கள். விடுதிகளில் தங்காதவர்கள். | | தேறியவர்கள். விடுதிகளில் தங்குபவர்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பி.யு.சி. .. | 847 | 111 | 376 | 49 | 135 | 26 |
| பி.ஏ. .. | 540 | 67 | 140 | 9 | 453 | 63 |
| பி.எஸ்ஸி .. | 351 | 44 | 93 | 9 | 349 | 41 |
| பி.காம். .. | 59 | .. | 24 | 1 | 50 | .. |
| பி.ஈ. .. | 16 | .. | .. | .. | 16 | .. |
| எம்.பி.பி.எஸ். .. | 19 | 4 | 3 | .. | 13 | 3 |
| புலவர் .. | 10 | .. | 3 | .. | 4 | .. |
| எம்.ஏ. .. | 18 | 2 | 6 | .. | 14 | .. |
| பி.பார்ம். | 2 | | .. | .. | 1 | .. |

குற்றபரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினர்.

| வகுப்பு. | தேறியவர்கள்—தொடர்ச்சி. விடுதியில் தங்காதவர்கள். | | தேறியவர்கள். விடுதியில் தங்குபவர்கள். | | சதவிகிதம். விடுதியில் தங்காதவர்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். |
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பி.யூ,சி. .. | 104 | 21 | 16 | 23 | 28 | 43 |
| பி.ஏ. .. | 121 | 9 | 84 | 94 | 86 | 100 |
| பி.எஸ்ஸி. .. | 83 | 9 | 99 | 93 | 89 | 100 |
| பி.காம். .. | 14 | .. | 85 | .. | 58 | .. |
| பி.ஈ. .. | .. | .. | 100 | .. | .. | .. |
| எம்.பி.பி.எஸ். | 1 | .. | 68 | 75 | 33 | .. |
| புலவர் .. | 1 | .. | 40 | .. | 33 | .. |
| எம்.ஏ. .. | 3 | .. | 78 | .. | 50 | .. |
| பி.பார்ம். .. | .. | .. | 50 | .. | .. | .. |



## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### வெள்ளிக் கிழமை, 1973 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### ஜெயங்கொண்டத்திற்குக் குடிநீர் வழங்கல்.

* 386 வினா.—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டத்திற்கு குடிநீர் வழங்குவதற்கென புதிய திட்டம் ஒன்று அண்மையில் செயல்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். செயங்கொண்டத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று 20-3-1972 நாளிட்ட பொதுப் பணித்துறை அரசு ஆணை எண் 516-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 47·00 இலட்சம்.

திரு. கு. காமாட்சி : இந்தத் திட்டம் எவ்வளவு காலத்தில் முடியும் என்பதைத் தயவு செய்து தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மொத்த மதிப்பீட்டில் 1972-73-ம் ஆண்டில் 3·8 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1973-74-ம் ஆண்டுக்கு 12 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1975-ஆம் ஆண்டுக்குள்ளாக இந்தத் திட்டம் முடிவடைந்துவிடும்.

திரு. கே. எ. வகாப் : இந்தக் குடிநீர்த் திட்டத்திற்குப் பொதுவாகத் தேவைப்படும் இரும்புக் குழாய்கள் பற்றாக்குறையாக இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, அதை உள்நாட்டில் தயாரிப்பதற்கோ அல்லது வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதற்கோ ஏதாவது செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த இரும்புக் குழாய்களைக் கூடுமான வரையிலும், அதனுடைய பற்றாக்குறைக்காக கல்கத்தா போன்ற இடங்களிலிருந்து வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

## Study on Slum Areas.

* 387 Q.—THIRU R. R. MUNUSAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether it is a fact that the Central Planning Commission thas proposed to undertake a study of the slums and their conditions in his State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (a) & (b) சென்னை நகரில் உள்ள
குடிசைப் பகுதிகளின் நிலைமைகளைக் கண்டறிய 27-10 1972 அன்று
இந்திய அரசின் திட்டக் குழு நியமித்த பணிக்குழு ஒன்று சென்னை
வந்தது. அவர்கள் சென்னையிலுள்ள தற்போதைய குடிசைப் பகுதி
களையும் குடிசைமாற்றும் பணி நடைபெறும் திட்டப் பகுதிகளையும்,
குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட வேலைகள் நடைபெறும் சில பகுதி
களையும் பார்வையிட்டனர். இக் குழுவினரின் கூட்டம் ஒன்று 27-10 1972
அன்று குடிசைப் பகுதி மாற்று வாரிய அலுவலகத்தில் நடைபெற்றது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, 27-10-1972
அன்று நடந்த கூட்டத்தில் என்ன என்ன காரியங்கள் விவாதிக்கப்பட்டன,
அது சம்பந்தமாக என்ன முடிவுகள் ஏற்பட்டன என்பதை முதல்
அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது ஒரு முக்கியமான கேள்வி,
அதற்கான விவரங்கள் எதையும் இலாக்கா அளிக்கவில்லை. அதைக்
கண்டுபிடித்து விவரங்களை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

குடிசைமாற்று வாரியத் தலைவரும் நம்முடைய அதிகாரிகளும்
அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதில் எடுத்துச் சொல்ல
பட்டவை—நிதி ஒதுக்கீட்டின்போது வீட்டுவசதிக்கு முதல் இடம் தரப்பட
வேண்டும் என்றும், குடிசைப் பகுதி மாற்றும் திட்டப் பகுதிகளில்
வாழ்பவர்கள் அதிக வருமானம் பெறத்தக்க அளவுக்குச் சிறு தொழில்
கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத்
திட்டத்தின்கீழ் ஒதுங்கியுள்ள தொகையைக் குடிசைமாற்றுத் திட்ட
வேலைகளுக்கும் பயன்படுத்தலாம் என்று பரிந்துரை செய்ய வேண்டும்
என்றும், ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டுக்கு ஒதுக்கப்படுகிற தொகையை ஸ்லம்
க்ளியரன்சுக்கும் பயன்படுத்த வேண்டும் என்றும், ஆண்டொன்றுக்கு
தமிழ்நாடு அரசுக்கு குடிசைமாற்று வாரியத் திட்டங்களுக்காகப் பத்து
கோடி ரூபாய், சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம் தவிர, இம்ப்ரூவ்மெண்ட்
திட்டம் தவிர, அளிக்க வேண்டும் என்று திட்டக்குழுவுக்குப் பரிந்துரை
செய்ய வேண்டும் என்றும் நம்முடைய குடிசைமாற்று வாரியத் தலை
வரின் சார்பாகவும், அதிகாரிகளின் சார்பாகவும் கருத்துக்கள் கூறப்பட்டன.
பணிக் குழுவினரும் அந்தக் கருத்துக்களை ஓரளவு ஏற்றுக்கொண்டு அவர்
களும் சில நல்ல கருத்துக்களை அந்தக் கூட்டத்தில் வழங்கி
யிருக்கிறார்கள்.



திரு. ரா. ரா. முனுசாமி: மத்திய சர்க்கார், திட்டக்குழுவை அனுப்பி நம்முடைய மாநிலத்தைச் சர்வே செய்ததுபோல, தமிழகத்திலேயும் ஒரு திட்டக் குழு அமைத்து, மாவட்ட வாரியாகக் குடிசைப்பகுதிகளை மாற்றியமைப்பதற்கு வகை செய்து, அங்குள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த நம்முடைய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்ட வாரியாக அமைக்கத் தேவை இல்லை. குடிசைமாற்று வாரியம் சென்னை மாநகரத்தில், தாம் ஒப்புக் கொண்டிருக்கும் இந்தப் பெரும்பகுதி வேலைகளை ஓரளவு முடித்து விட்ட பிறகு, அந்த வாரியத்தின் சார்பாகவே அந்தக் காரியங்களை மேற்கொள்ள இயலும்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில், இந்த திட்டக் குழு சென்னையில்தான் பரிசீலனை செய்தது என்று குறிப்பிட்டார்கள். இதுபோன்று நம்முடைய மாநிலத்தில் இருக்கும் பெரிய நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளும் பரிசீலிக்கப் படுமா? அல்லது செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் குழு சென்னை மாநகரத்தில் தம்முடைய பணியை முடித்துவிட்டு மதுரை சென்று வந்ததாகத் தகவல் உண்டு. . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பத்து கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்டதாக முதலமைச்சவர்கள் கூறினார்கள். இந்தப் பத்து கோடி ரூபாய் தர ப்ளானிங் கமிஷனிலிருந்து ஏதாவது உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால், மத்திய அரசே நமக்கு நிதி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய சர்க்காரிலிருந்து குடிசைப் பகுதிகளுக்காகக் கிடைக்கிற நிதி, ஸ்லம் க்ளியரன்சுக்காகக் கிடைக்கவில்லை. ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டுக்காகத்தான் கிடைக்கிறது. குடிசைப் பகுதியின் சுகாதார மேம்பாடு போன்றவற்றுக்காகத்தான் கிடைக்கிறது. ஸ்லம் க்ளியரன்சு செய்ய குடிசைகளை மாற்றியமைப்பதற்காக நாம் தொகை கேட்டதற்கு, அந்தக் குழுவினர் நமக்கு அளித்துள்ள பரிந்துரையில், குடிசைப் பகுதி மாற்றத்திற்கு நீண்ட காலக் கடன் வழங்க வீட்டு வசதி மற்றும் நகர மேம்பாட்டுக் கழகத்தைக் கேட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு யோசனையை அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கல்கத்தா போன்ற நகரங்களை மேம்பாடு செய்வதற்கும் இம்மாதிரி குடிசைப் பகுதிகளில் ஸ்லம் க்ளியரன்ஸ் செய்வதற்கும் தனியாக மத்திய சர்க்காரே பணம் ஒதுக்கிக் காரியங்கள் செய்கிறார்களே அதேமாதிரி சென்னை போன்ற நகரங்களுக்கு ஒதுக்குவதற்கும் அங்கே ஏதாவது சிபார்சு செய்யப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிபாரிசு கூட அல்ல ; கல்கத்தாவுக்கு அளிப்பதைப் போல சென்னை மாநகரத்திற்கும் பெரும் தொகையை ஒதுக்கி அளிக்க வேண்டும் என்று அரசின் சார்பில் மத்திய சர்க்காருக்குப் பல முறை வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்தப் படும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நடைபெறும் பணிகளுக்கு சென்னை நகரத்தில் நடைபெறும் வேலைகளுக்கு எட்டு கோடி ரூபாய் வரையில் ஆண்டொன்றுக்கு அளித்து விட்டு, சென்னை நகரம் தவிர மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் 35 இலட்ச ரூபாய்தான் ஒதுக்கப்படுகிறது. இது போதாது என்று எல்லா இடங்களிலும் சொல்லப்படுவதால் இந்த ஆண்டிலிருந்து மற்ற மாவட்டப் பகுதிகளுக்கும் ஓரளவு அதிகத் தொகை செலவிட ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களிலும், கிராமங்களிலே கூட குடியிருக்கிற மக்களுக்கு நல்ல கெட்டியான வீடுகள், விபத்துக்களுக்கு ஆளாகிற நேரத்தில் உயிர்கள் பாதிக்கப்படாத அளவுக்குக் கட்டப்பட வேண்டும் என்னும் தேவையை உணர்ந்து, அந்த வகையில் அரசு முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. முதல் கட்டமாகத்தான் சென்னை மாநகரத்தில் அந்தப் பணி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அடுத்த அடுத்த கட்டங்கள் தொடர்ந்து யோசிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : டில்லியிலிருந்து வந்த பணிக் குழு சென்னை நகரத்தில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளையெல்லாம் சுற்றிப் பார்த்தார்களே அதைப்பற்றி ஏதாவது கருத்துத் தெரிவித்திருக் கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் கருத்து எதுவும் தெரிவித்ததாக அதிகாரபூர்வமாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால், இந்தப் பணிகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்று அவர்கள் அந்தக் கூட்டம் நடைபெற்ற நேரத்தில் எடுத்துரைத்ததாகச் சொல்லப் பட்டது.

THIRU B. VENKATASWAMY : Sir, 50 per cent of the slum-dwellers live in the rural areas. So may I know from the Hon. Chief Minister whether a beginning will be made to extend this scheme to the rural areas at least from this year ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னையில் இருக்கும் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றவர்களும் கிராமப் புறங்களிலிருந்து வந்த மக்கள்தான். ஆகவே, இங்கே செய்யப்படுகிற காரியங்களும் கிராம மக்களுக்காகச் செய்யப்படுகிற காரியங்கள்தான் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். வெளியூர்களிலும், கிராமப் புறங்களிலும் குடிசைப் பகுதிகளில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பதற்கு அரசு தொடர்ந்து படிப்படியாகத்தான் அதனுடைய பணிகளை நிறைவேற்ற இயலும்.



திரு. கே. ஏ. வகாப் : பொதுவாக, மத்தியிலிருந்து வருகிற எல்லா அமைச்சர்களும் குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் திட்டம் சென்னையில் நடைபெறுவதைக் குறித்துச் சிறப்பாகக் கூறிவிட்டுச் செல்கிறார்கள் ஆனால், கல்கத்தாவுக்கு அளிக்கப்படுகிற அந்த உதவிகள் நம்முடைய தமிழகத்திற்கு அளிக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கல்கத்தாவில் ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அவர்கள் சார்புடையவர்களாக இருப்பதாலும், ஒரு வேளை இங்கே இருக்கிற கட்சி மாற்றுக் கட்சியாக இருக்கிற காரணத்தாலும் அப்படி இருக்குமோ என்ற அச்சம் இருந்தால், நம்முடைய மாநிலத்திலிருந்து அங்கே சென்றிருக்கிற அமைச்சர்கள் மூலமாக வற்புறுத்திச் சொல்லி வாங்கிக் கொடுக்க அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கல்கத்தாவில் இருக்கிற பிரச்சனை வேறு, சென்னையில் உள்ள பிரச்சனை வேறு என்பதுதான் மத்திய சர்க்கார் நமக்கு அளித்து வருகின்ற பதிலாக இருக்கிறது. ஏனென்றால், அங்கே இந்தக் குடிசைகள் காரணமாகப் பெரிய புரட்சியே கூட ஏற்பட்டு விடுகிற நிலைமையைக் கல்கத்தா அனுபவித்துக் கொண்டிருக்கிறது. சென்னையில் அப்படி இல்லை, அதை இந்த அரசே சமாளித்துக் கொள்ளும் என்ற அளவுக்கு மத்திய சர்க்கார் விட்டுவிட்டது. அவர்கள் இவர்களுக்கு ஆதரவு தராவிட்டாலும்—எல்லா அமைச்சர்களும் பாராட்டியதாகத் திரு. வகாப் அவர்கள் சொன்னார்கள். அதைத் திருத்திக் கொள்ளவேண்டும், சில அமைச்சர்கள் பாராட்டுகிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் குடிசை வாழ் பகுதி மாற்றுத் திட்டங்களுக்குப் பயன்படுத்த "சுழல் நிதி" என்ற பெயரில் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. அதன் அடிப்படையில் வருகை தந்த திட்டக் குழுவிடம் தமிழக சர்க்கார் செய்யவிருக்கிற 40 கோடி ரூபாய்த் திட்டத்திற்கான தொகையைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது விவரமாகச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பணிக் குழுவிற்கு நம்முடைய வாரியத்தின் சார்பாக என்ன என்ன சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. என்பதையும் விளக்கமாகச் சொல்லியிருக் கிறேன். அதற்குமேல் தகவல் எதுவும் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : It is stated that the Central Planning Commission is going to study the conditions in the State. Will the Hon. Chief Minister state whether they have asked the State Government to prepare the Tour Programme and if so, whether the Hon. Chief Minister be pleased to tell them to have the local M.L. As. ; also to tour with them and explain the conditions ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பணிக் குழுவிலே இருக்கின்ற உறுப்பினர்களுடன் இப்போது டில்லியிலே இருக்கின்ற சில அதிகாரிகளும் சென்னையிலே இருக்கின்ற தலைமைப் பொறியாளரும் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்ய வேண்டுமென்று சொல்வார்களானால் அந்தக் குழுவிலே எம்.எல்.ஏ.க்கள் இடம் பெறாவிட்டாலும் அவர்களுடைய யோசனைகள் கொடுக்கப்படலாம்.

## அரியலூருக்கு அரசு மருத்துவமனை.

* 388 வினா.—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ரிஷிவந்தியம் தொகுதியிலுள்ள அரியலூரில் அரசினர் மருத்துவமனை ஒன்று திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## ரிஷிவந்தியம் ஆரம்பச் சுகாதார நிலையம்.

* 389 வினா— திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சி தாலூக்கா, ரிஷிவந்தியம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது இத் திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநரிடமிருந்து தேவையான செயற்குறிப்பு கேட்கப்பட்டுள்ளது. அவை அரசுக்குக் கிடைத்த பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி : துணைத் தலைவரவர்களே, இந்த- ஆரம்பச் சுகாதார நிலையங்களை நிரந்தரமாக்குவதற்குக் காலவரையறையை அல்லது ஏதாவது தகுதியை அரசு நிர்ணயித்திருக்கிறதா ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முதலில் அந்த ஒன்றியத்திலிருந்து ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்திலே மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு தெரிவித்தார்கள். பின் அங்கே ஏற்படுத்தக்கூடிய நேரத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டன ; முதலில் இடம் கிடைக்க வில்லை. அதற்குப் பின்னர் மற்றொரு இடத்தில் வாடகைக் கட்டிடத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை நிறுவ வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி நிறுவப்பட்டு 5, 6 ஆண்டுகள் நடைபெற்றது. அதன் பின்னர் முதலில் சொன்ன இடத்தில் கட்டிடம் கட்ட அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த பகுதியில் உள்ள மக்கள் அதை மாற்றக் கூடாது என்று எதிர்த்தார்கள். ஆகவே, இப்போது அந்த இரு பகுதியினருக்கும் திருப்தி அளிக்கின்ற வகையில் குடும்பக் கட்டுப்பாடு பிரிவை ஒரு பகுதியிலும், ஆரம்பச் சுகாதாரப் பிரிவை மற்றொரு பகுதியிலும் அமைத்து ஒரு தொடர்பான பணியை உருவாக்க அரசு கருதியுள்ளது.

திரு ரா. ரா. முனுசாமி : துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களை அரசாங்கமே ஏற்று நடத்தப் போவதாக 1971-72-ல் அறிவித்து, முதற்படியாக போதிய மருத்துவர்களை நியமிப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் சில இடங்களில் மருத்துவர்களைப் போடவில்லை என்று தெரிகிறது. அந்த மாதிரி இடங்களில் உடனடியாக மருத்துவர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களை எல்லாம் உடனடியாக எடுப்பதாகச் சொல்லவில்லை. அது அரசாங்கத்தால் தான் நடத்தப்படுகிறது. தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் உடனடியாக மருத்துவர்களை நியமிப்பதாக தெரியவிக்கப்பட்டது. அதன்படி விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு ந. தருமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, அரியலூர் மக்கள் தொகை அதிகமாக உள்ள இடம் அங்கே உள்ளவர்கள் சிகிச்சை பெற வேண்டுமானால் 12, 15 மைல் கடந்து திருக்கோயிலூர் அல்லது சங்கராபுரத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அரியலூரில் உடனடியாக ஒரு மருத்துவமனை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : அரியலூரில் இப்போது குடும்பக் கட்டுப்பாடு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. வருங்காலத்தில் அங்கேயே இன்னும் ஒரு சிறு மருத்துவமனைக் கட்டிடம் வரக்கூடும். ஆக, அந்த பகுதியில் குடும்பககட்டுப்பாடு மருத்துவ மனையும், ஆரம்பச் சுகாதார நிலையமும் நடைபெறுவதற்கு ஆலோசனை இருக்கிறது. அதற்குச் சிறிது காலம் ஆகும்.

## மகளிர், குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கு திட்டம்.

* 390 வினா :—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் 1971–72-ல் சத்துணவுத் திட்டத்துக்காக தமிழ் நாடு அரசு வழங்கியுள்ள தொகை எவ்வளவு ?

(இ) இதில் மத்திய அரசு எவ்வளவு தொகை வழங்கியுள்ளது ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) 1971–72 ஆம் ஆண்டு கேர் நிறுவனத்தால் வழங்கப்படும் மகப்பேறு குழந்தை நல உணவுத் திட்டத்திற்குத் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டத் தொகை ரூ. 8·21 லட்சம்.

(இ) இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி ஒன்றும் இடையாது.

திரு மே. சி. தூயமணி : சத்துணவு வழங்கும் திட்டத்திற்கு மத்திய மாநில அரசு நிதியுடன் யுனஸ்கோ உலக நிறுவனத்திடமிருந்தும் உதவி பெறப்படுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இப்போது யூனிசெப் நிறுவனத்திலிருந்து பெறப்பட்டு வந்த "ஸ்கிம்ட் மில்க்" கூட நிறுத்தப் பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக கான் சாய் மில்க் அன்டு சாலட் ஆயில் அளிக்கப்படுகிறது. அதைக்கூட 1—4—1974 முதல் நிறுத்திவிட வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. வெளிநாட்டுப் பொருட்களை நிறுத்திவிட்டு உள் நாட்டிலிருந்து கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களை வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது. இப்படிபட்ட நிலைமையில் மேலும் மற்றவர்களை உதவி கோருவதாக எண்ணமில்லை.

திரு கே. எ. வகாப் : வெளிநாட்டிலிருந்து வருகிற உணவையும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, மத்திய அரசாங்கமும் உதவி செய்ய மாட்டார்கள் என்று தெரிகிறது. இந்தக் குழந்தைகள் மகளிர் சத்துணவுத் திட்டம் மிகவும் முக்கியமான ஒன்று. ஆகவே, வெளிநாட்டு உதவியை நாட வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : மத்திய அரசு, மாநில அரசுகளைத் தாங்களே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அந்தந்த மாநிலங்கள் தன்னிறைவு பெறவேண்டுமென்ற காரணத்தினால் அவர்களே, ஆங்காங்கே கிடைக்கின்ற பண்டங்களைக் கொண்டு சத்துணவு தயாரித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறது மத்திய அரசு. இப்போது எடுத்திருக்கின்ற இந்த முடிவை மத்திய அரசு மாற்றுமானால் அதைத் தமிழக அரசு வரவேற்கும்.



## Ennore—Tiruvanmiyur Underground Railway.

*Q. 391 THIRU N. K. PALANISWAMY, THIRU N. DENNIS, THIRU K. THIRUPPATHY: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether this Government have represented to the Centre during 1973 to take steps for the provision of an underground railway line in Madras connecting Ennore and Tiruvanmiyur; and

(b) if so, whether the above scheme will be included in the Fifth Five Year Plan ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் (அ), (ஆ) ஆம். எதிர்பார்க்கப்படும் போக்குவரத்து அதிகரிப்பை சமாளிப்பதற்கென பெருமளவிலான விரைவுப் போக்குவரத்துத் தேவை பெருகி வருவதைக் கருதி, சென்னை மாநகரின் வடக்குப் புறநகராகிய எண்ணூரையும், தெற்குப் புறநகராகிய திருவான்மியூரையும் இணைக்கும் வகையில் சென்னையில் பாதாள ரயில்பாதை அமைப்பதற்கென உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை, இந்த அரசு வற்புறுத்தியுள்ளது. இதற்கென ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேவையான நிதியுதவி வழங்குமாறும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு என். கே. பழனிசாமி : சார், இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் ? இந்தப் பாதாள ரயில்பாதை எந்தெந்த பகுதிகளைத் தொட்டுச் செல்லும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, எண்ணூர் பகுதியிலிருந்து திருவான்மியூர் வரை கடற்கரை வழியாக இந்தப் பாதை செல்லும். கடற்கரை வழியாக என்றால் பீச் ஓரமாக என்று கூற முடியாது. மக்கள் போக்குவரத்து நெருக்கமாயுள்ள பகுதிகளைப் பொறுத்து கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் அளவுக்கு உட்பட்டுச் செல்லும். அந்த அடிப்படையிலே ஆலோசனைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் செலவாகும். விரைவில் தக்க நடவடிக்கை எடுப்பதற்காக மத்திய அரசை நமது அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு மே. சி. தூயமணி : துணைத் தலைவரவர்களே, அறிஞர் அண்ணா நகர் வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே, அங்கும் மக்கள் நெருக்கத்தைக் கட்டுப்படுத்தி, சென்னை சர்குலர் ரயில் திட்டம் போக்குவரத்திற்கு வசதி செய்யும் பொருட்டு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே அண்மையிலே நான் சென்னை பெருநகர் திட்ட துணைக் குழு ஒன்று அதிகாரம் பெற்றதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது விரைவிலே பெருநகர் மக்களுக்குப் பல நற்காரியங்களைச் செய்யும் கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. அப்படிக் கொண்டிருக்கிற போது 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கு குந்தகம் இல்லாத வகையில் ஒவ்வொரு பகுதிக்கும் கிடைக்கின்ற செதிகளை ஆராய்ந்து, மாநகராட்சிக்கும் நகராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தரமான வளர்ச்சி ஏற்படுகின்ற வகையில்—ஏற்ற வகையில் வளர்ச்சி சீராக அமைந்திட இந்தத் திட்டக் குழு முயற்சி செய்யும்.

திரு என். கே. பழனிசாமி: ஏற்கெனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் மேற்கு வங்காளத்தில் ஆரம்பித்து வைத்தாகிவிட்டது. சென்னை நகரம் எப்போது எடுத்து கொள்ளப்படும்? ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் ஒரு நகரம் என்ற அடிப்படையில் எடுத்துவருகிறார்களா? அல்லது இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: மத்திய அரசின் நேரடிக் கவனத்துக்குரிய டெல்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மெட்ரோபாலிடன் நகரங்களில் ஒன்று என்னும் முறையில் தனி கவனம் செலுத்தவேண்டியதாக இருக்கிறது. இந்த நான்கு நகரங்களிலும் இன்றைக்குசென்னைநகரின் நிலைமைதான் முற்றும் சீர்கெடாது இருக்கிறது. இந்நகர் சீர்கெடுவதற்கு முன்னாலேயே பெருகிவருகின்றபோக்குவரத்து நெரிசலுக்கு ஏற்பத்திட்டமிட்டுச் செயல்படவேண்டும் என்பதாக தமிழக அரசு வற்புறுத்துகிறது. ஏற்கெனவே சீர்கெட்டுப்போன இடங்களை எடுத்துப் புதுத்திட்டங்களை நிறை வேற்றிவிட்டு இங்கே வருவதாக அவர்கள் சொல்கிறார்கள். அதனால் தாமதம் ஆகிறது. அனைத்துக் கட்சிகளின் கருத்தும் ஒருமித்து உருவானால் சென்னை நகரத்தையும் அவர்கள் உடனடியாகக் கவனிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு கே. டி. கே. தங்கமணி: எண்ணூர் திருவான்மியூர் பாதாள ரயில் திட்டத்திற்கு ரயில்வே இலாக்காவினர் பலவிதமான சர்வேக்களை நடத்துவார்களே, அவற்றை அவர்கள் நடத்திவிட்டார்களா? இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் இது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: அதற்கான சரியான கணிப்புகளை நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் சென்னை மாநகர வளர்ச்சிபற்றி டவுன் ப்ளானிங் டைரெக்டர் பல புள்ளி விவரங்களைச் சேகரித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார். மத்திய அரசினரும் இந்தத் திட்டத்தை ஆராயும்படி ரயில்வே இலாக்காவில் இதற்காக ஒரு தனி அதிகாரியை நியமித்து—அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர்—தொழில் நுட்ப பொருளாதார வாய்ப்புக் கூறினை பற்றிய ஆய்வை நடத்தியிருக்கிறார்கள். இது நடக்கிறபோதே சில அதிகாரிகள் இது வராது கைவிடப்படும் நோக்கத்தில் மாறுபட்ட கருத்தை கொண்டிருப்பதாக ஒரு புகார் கிடைத்தது. மத்திய அரசின ரயில்வே அமைச்சர் திரு. பாய்க்கு முதலமைச்சர் அவர்கள்



ஒரு வேண்டுகோள் கடிதம் ஏற்கெனவே எழுதியிருக்கிறார்கள். அமைச்சர்களாகிய நாங்களும் மத்திய ரயில்வே அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். மறுபடியும் இப்போது ரயில்வே அமைச்சருடன் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

திரு நா. வீராசாமி: சமீபத்தில் மத்திய ரெயில்வே அமைச்சர் சென்னைக்கு வந்திருந்த போது நமது அமைச்சர் அவர்கள் அவரைச் சந்தித்திருக்கிறார்களே, அப்போது இதுபற்றி பேசப்பட்டதா? அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: மத்திய ரயில்வே அமைச்சருடன் பேசியபோது இதைப்பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்த வேண்டும். புள்ளி விவரங்களையும் ஆராய்ந்து பார்ப்பேன் என்ற கருத்தைத் தெரிவித்தார். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை—அண்டர் கிரவுண்டு ரயில்வேபற்றி அவருக்குச் சொந்தமுறையில் நம்பிக்கையில்லை என்றும் தெரிவித்தார். அன்று இருந்த ரயில்வே அமைச்சரின் கருத்தாக இருக்கலாம். ஆனால், இத் திட்டம் நிறைவேற்ற முடியாதது என்று கூற முடியாது.

திரு வை. பாலசுந்தரம்: இது மிகப் பெரிய திட்டம், இதற்கு 50 கோடி செலவாகும் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசு கை விரித்தாலும் கூட உலக வங்கியிடம் இருந்து கடன் பெற்றாவது இதனை நிறைவேற்ற நமது அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய சர்க்கார் கொடுப்பதற்கு கைவிரித்தாலும் உலக வங்கியிடம் கடன் பெற அவர்கள்தான் கைகாட்ட வேண்டும். அவர்கள் கைவிரித்தாலும் கைகாட்டுகிற மனப்பான்மையாவது அவர்களிடம் இருந்தால்தான் இதை நடத்த முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know whether the proposed railway line will be of Meter Guage or Broad Guage?

THE HON. THIRU K. ANBAZHAGAN. It is yet underground and so I cannot say the 'Guage' of it.

திரு முனு ஆதி: துணைத் தலைவர் அவர்களே, ரயில்வேயை ஒட்டிய கேள்வி ஒன்று. சென்னை அரக்கோணம், சென்னை பொன்னேரி ஆகிய இந்தப் பக்கங்களை மின்சார ரயில்பாதையாக்க முடிவு செய்யப்பட்டது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: மத்திய சர்க்காரின் உத்தேசத்தில் இருக்கிறது.

திரு மா. வை. நாராயணசாமி: எண்ணூரில் இருந்து திருவான்மியூருக்கு பாதாள ரயில் பாதை போட முன்பு ஜனநெருக்கமான பகுதி சர்வே செய்யப்பட்டது. அடுத்து பக்கிங்காம் கால்வாயை ஒட்டி அந்தப் பாதை அமைக்கப்படும் என்கிறார்களே, அது எப்படி அமைய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாதாள ரயில் பூமிக் அடியில் மக்கள் நெரிசல் இருக்கிற இடமாகத்தான் அமைய வேண்டும் என்பது ஒன்று. ஆயினும் குடியிருப்புக் கட்டிடங்கள் அதிகமாக உள்ள தெருக்கள் வழியாகச் செல்வதை விட கட்டிடம் கட்டாத பகுதியாக தேர்ந்தெடுக்கிற முயற்சியில்தான் பக்கிங்காம் கால்வாயை ஒட்டி அமைக்க ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆனால் நிபுணர்கள் கருத்து இன்னும் உருவாகவில்லை.

## நலத்துறை தாசில்தார்களுக்கு ஜீப்புகள்.

*392 விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா ?

அரிசன நலத்துறை தாசில்தார்களுக்கு அவர்தம் அலுவல்களைச் சரிவர நிறைவேற்றிட அவர்களுக்கு தனியே ஜீப் கார் வழங்கிட செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு கு. காமாட்சி : அரிசன நலத்துறையைக் கவனிக்க இரண்டு மூன்று இடங்களுக்கு ஒரு தாசில்தாரை நியமிக்கிருர்கள். அதனுல் வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை. ஆகவே ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு தாசில்தாரை நியமிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

திரு ந. தருமலிங்கம் : அரிசன நலத்துறை தாசில்தார்கள் இரண்டு மூன்று வட்டங்களில் உள்ள கிராமங்களைச் சென்று பார்வையிட வேண்டிய நிலைமையில் இருப்பதனுல் மீண்டும் அரசு பரிசீலனை செய்து அவர்களுக்கு ஜீப்புகள் வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது மொத்தம் 38 தாசில்தார்கள் இருக்கிருர்கள். அந்த 38 பேர்களுக்கும் ஜீப்புகள் வழங்க 9.50 லட்சம் ரூபாய் செலவாகிறது. அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நலத்துறையினர் கேட்கிருர்கள். நிதிப் பற்ருக்குறை காரணமாக இப்போது அதை எடுப்பதாக இல்லை.

திரு வை. பாலசுந்தரம் : பற்ருக்குறை காரணமாக எடுத்துக் கொள்ளவில்லை என்கிருர்கள். ஒன்றியத்திலுள்ள ஜீப்புகளையாவது சில குறிப்பிட்ட நாட்களில் எடுத்துக் கொள்ள அனுமதிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒன்றிய தனி தாசில்தார்களுக்கு ஒதுக்கப்பட்ட ஜீப்புகளைக் கொடுக்க இயலாது என்று நான் கருதுகிறேன்.





திரு எஸ். முருகையன் : அரிசன நலத்துறையில் 3 வட்டாரங்களை ஒரு தாசில்தாரரிடம் கொடுத்திருக்கிருேம். நிறைய அரிசன கிராமங்களைச் சென்று அவர்கள் சுற்றிப் பார்க்கவும் வேண்டியதாகஇருக்கிறது. ஜீப்பும் கொடுப்பதில்லை என்ருல் அவர்களால் துரிதமாக எப்படி வேலை செய்ய முடியும். ஆகவே எல்லா இடத்திற்கும் ஒரே நேரத்தில் செல்லாவிட்டாலும் சில பகுதிகளிலுள்ள சில தாசில்தார்களுக்காவது கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது நல்ல யோசனை பரிசீலிக்கலாம்.

திரு என். இராஜாங்கம் : தென்னுற்காட்டைப் பொறுத்தவரை நான்கு டிவிஷன்கள்—நான்கு தாசில்தார்கள். டிவிஷனுக்கு 2. தாலுக்கா பார்க்க வேண்டியிருப்பதால் வெல்பேர் ஆபிசருக்குக் கொடுக்கப் பட்டுள்ள ஜீப்பையாவது இவர்கள் வாரத்திற்கு ஒரு நாள் பயன்படுத்த அனுமதிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெல்பேர் ஆபிசருக்கு இதைவிட வேலை அதிகமாக இருக்கிறது. மாவட்டம் பூராவும் அவர்கள் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு, புள்ளிவிவரங்கள் சேகரிக்க வேண்டியிருப்பதால் அது நியாயமாக இருக்காது என்று கருதுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, though it is not possible to provide jeeps in other places, in hilly areas like Hosur, Denkanikotta and Dharmapuri it is very difficulty to approach the villages and understand and remedy the difficulties of Harijans. May I know from the Hon. Minister for Harijan Welfare whether at least in these areas Government will be prepared to give them jeeps ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தத் தாசில்தார்களுக்கு ஜீப் கொடுக்க வேண்டிய அவசிய, அவசரத்தை உணர்கிருேம். மொத்தமாகக் கொடுக்க முடியவுமில்லை என்ருலும் ஒ[illegible] இடத்திலாவது கொடுப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு கோ. செபமாலை : சில இடங்களில் ஜீப் இருந்தும் செயல்படவில்லை. அவற்றை சரிபடுத்த ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நலத்துறை அதிகாரிகளிடம் தான் ஜீப் இருக்கிறது. அதை வாங்குவதில் சங்கடங்கள் இருக்கின்றன என்பதை உறுப்பினர்களும் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு ஆ. கு. சுப்பையா : அரிசனங்களுக்குச் செய்கின்ற வேலை வேகமாக நடைபெருது தாமதமாக நடக்கிறது. பரமேசுவான் கமிட்டியில் சிபார்சுகளைச் செய்திருக்கிறதே. , அந்தச் சிபார்சுகளையாவது உடனடியாக அமல்படுத்த முன் வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவற்றை விரைவாகச் செயல்படுத்தத்தான் தனி அதிகாரிகளைப் போட்டு இந்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. நில ஆர்ஜிதம் செய்வதில்தான் நிலக்காரர்கள் கோர்ட்டுக்கு போவதால் சிறிது தாமதமாகிறது. மற்ற பணிகள் இன்றைக்கு சற்று துரிதமாகவேதான் நடைபெற்று வருகிறது.

திரு நா. வீராசாமி : இந்த ஹரிஜன வெல்பேர் தாசில்தார்களுக்கு தனி ஜீப் கொடுக்காவிட்டாலும், ஒவ்வொரு டிவிஷனின் கீழ் ஏழு, எட்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த ஒன்றியங்களிலிருந்து வாரத்திற்கு ஒரு நாள் இந்த ஹரிஜன் வெல்பேர் தாசில்தார்களுக்கு ஒரு ஜீப் ஒதுக்க வேண்டுமென்று ஏதாவது வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒன்றியங்களில் இருக்கிற ஜீப்களை இந்தத் தனித் தாசில்தார்களுக்கு வழங்குவார்களா என்பது பற்றி எனக்குச் சரியாகத் தெரியவில்லை என்றாலும் அவர்களுக்கு அவர்கள் பணிகளுக்கு அந்த ஜீப் தேவைப்பட்டிருக்கின்றன, அதை வேறு அதிகாரிகளுக்குத் தர வேண்டுமென்று கேட்டால் கொடுப்பார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

திரு தி. பொன்னுமலை : எல்லா மாவட்டங்களுக்கும் ஜீப் கொடுக்கா விட்டாலுங்கூட தலைநகரமாக உள்ள தாலுக்காகளுக்காவது ஜீப் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஜீப் தரவேண்டிய அவசியத்தை உறுப்பினர்கள் எல்லோரும் உணர்கிறார்கள் என்பதை நான் இதிலிருந்து புரிந்து கொள்கிறேன். எனவே அதற்கான முயற்சியில் துரிதமாக ஈடுபட நான் முயற்சிக்கிறேன்.

திரு. முனு ஆதி : பிற்பட்டோர் நலத்திலும் தாழ்த்தப்பட்டோர் நலத்துறையிலும் அக்கறை கொண்டிருக்கிறது. என்று சொல்கிற இந்த அரசு ஒன்பது லட்சம் ரூபாயைப் பெரிதாகக் கருதாமல் ஜீப்புகள் கொடுத்து ஹரிஜன முன்னேற்றத்திற்கான ஆக்க வழிகள் செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதன் அவசியத்தை அரசு உணருகிறது. கடந்த அல்லது இந்த ஆண்டு, இந்த ஆண்டு அல்ல அடுத்த ஆண்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

திரு. ப. முத்துசாமி : இந்த ஜீப்கள் கொடுப்பதற்கு இயலாவிட்டாலும் கூட ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை அதிகப்படுத்தி, அந்தப் பணியை விரைவு படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனித் தாசில்தார்கள் அரிசனங்களுக்காக அவர்களின் முன்னேற்றத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்கிற பணியில் இருப்பவர்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் எனவே அவர்களை இந்தப் பணியில் ஈடுப் படுத்துவது சாத்தியமல்ல.



## அய்யனூர் மலைப்பகுதி மலைவாசிகள்.

*393. வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையத்திற்கு மேற்கேயுள்ள அய்யனூர் மலைப்பகுதியில் (மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி) வாழ்ந்து வரும் மலைப்பளியர் ஜனத்தொகை என்ன ?

(இ) அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 37. ஆனால் மொத்தம் 19 குடும்பங்களில் தற்சமயம், நான்கு மட்டுமே அங்கு இருக்கின்றன.

(இ) பால்மாடுகள் வாங்க தலா ரூ. 250 வீதம் 4 நபர்களுக்கு மானியமும், வீடு கட்ட தலா ரூ. 600 மானியமாகவும், ரூ. 250 வட்டி இல்லாக் கடனாகவும் 8 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## ஈரோடு வட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*394. வினா—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு தாலூக்கா, சூரியம்பாளையம் கிராமம், மாவாபாளையம் கிராமத்து அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ஈரோடு தாலூக்கா சூரியம்பாளையம் உட்கடை மாவாபாளையம் கிராமத்து அரிசனங்களுக்கு வீட்டுவசதி அளிக்க 2·73 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான பிரிவு 4 (1) முன்மொழிவு வரைவு அரசு வாலாய ஆணை எண். 4957 (ச.ந.) நாள் 11—12—1972-ல் ஏற்கப்பட்டு 27—12—1972 தேதிய தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் மேலும் துரித நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

திரு. மா. சுப்பிரமணியன் : ஆர்ஜிதம் செய்ய உத்தேசித்திருக்கும் இடத்தை அந்த நிலச் சொந்தக்காரர் பள்ளமாக்கி வயலாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிவார்களா ? அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றித் தனியாக எழுதுவார்களேயானால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

## Wild Life Pockets in Kanyakumari District.

*395 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there are wild life pockets in Kanyakumari district ; and

(b) if so, the steps taken to preserve them ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம். கன்னியாகுமரி மாவட் டத்தில் உள்ள கிளாமலை, வீரப்புளி மற்றும் அரம்பு காடுகளிலும் முத்துக்குழிவயலைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், வன விலங்குகள் காணப் படுகின்றன.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லாக் காடுகளிலும், சுடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முத்துக்குழிவயல் என்று சொல்லப் படுகிற பகுதியில், இந்தமாதிரி வன விலங்குகளைப் பாதுகாப்பதற்குச் சிறப்பான பகுதி எனக் கருதப்பட்டு, பல திட்டங்களை எல்லாம் முன்பு தீட்டி யிருந்தார்கள். அதை ஒரு கேம் சாங்க்சுவரியாக மாற்றுவதற்கு அரசாங் கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதுபற்றிப் பரிசீலிக்கலாம்

## Tree top Hotels in Mudumalai.

* 396 Q.—Thiru N. DENNIS Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there are proposals to permit private parties to set up "Tree top" hotels at Mudumalai Sanctuary ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று முதுமலைக் காட்டுக்கு அதிக மான டூரிஸ்டகள் போகிற ஒரு நிலை இருக்கிறது. முதுமலையில் இப்போது இருக்கக்கூடிய ஒரு ஹோட்டலைத் தவிர வேறு ஹோட்டல்களுக்கு ஏற்பாடு செய்ய, அங்கு வருகிறவர்கள் தங்குவதற்காக, அரசுக்கு ஆலோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்டவர்களுக்கு வழங்க இப்போது உத்தேசமில்லை என்று விடையளித்திருக்கிறேன். அரசாங்கம்



ஐ.நா. ஸ்தாபன நிதி உதவி மூலமாகவும் உதவி பெற முடியும் என்று மத்திய அரசு ஆலோசனை கூறியிருக்கிறது. அதுபற்றி ஒரு திட்டம் வகுத்து தனியார்கள் வந்து தங்குவதற்கு விடுதி கட்ட ஏற்பாடு செய்ய இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : முதுமலை சரணலயத்தில்—அங்கு அந்த மோயார் பிராஜக்ட் என்ற அணைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான சர்வேக் கள் எல்லாம் முடிந்துவிட்டதாக அறிகிறேன். இந்த மோயார் பிராஜக்ட் திட்டம் வந்தால் ஒரு மிருகமும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதில் 30 மெகாவாட்ஸ் தான் மின் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்கிறார் கள். ஆகவே அரசாங்கம் அருள்கூர்ந்து அந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டு அந்த வன விலங்குகளைப் பாதுகாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இரண்டுக்கும் குந்தகம் இல்லா மல் ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. மே. சி. தூயமணி : கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள டாப் ஸ்லிப் சரணலயம் சிறப்பானதாகும் என்று சொல்லப்படுகிறது. அதை மேலும் மேம்படுத்த மத்திய அரசின் உதவி கோரப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்த ஆண்டுதான் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு ஒரு லட்சத்திற்கு மேல் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப் படுகிறது. ஐக்கிய நாட்டு ஸ்தாபன நிதி உதவி பெற முடியும் என்று கருதி அதோடு தொடர்பு கொண்டிருக்கிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி : முதுமலை சரணலயத்தில் வன விலங்குகளை அண்மையில் இருந்து காண்பதற்கு அரசு என்னென்ன வசதிகள் செய்து கொடுத்திருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஊர்திகள் மூலம் நடுக்காட்டிற் குச் சென்று வனவிலங்குகளை நேரடியாகப் பார்க்கவும், யானைகள் மேல் ஏறிச் சென்று காட்டுக்கு நடுவில் நின்று மிருகங்களைப் பார்ப்பதற்கும் வாய்ப்புகள் இப்போதிருக்கின்றன.

Thiru K. S. KOTHANDARAMIAH : With the Estimates Committee we had been to this forest a number of times. But we were unable to see even a single wild animal, even though we tried. May I know from the Hon. Minister whether a zoo will be set up there, so that we can see the animals and conveniently understand their situations ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சென்று வந்தவர்கள் பலர் பார்த்ததாகவும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிபார்சு கூட அல்ல ; கல்கத்தா வுக்கு அளிப்பதைப் போல சென்னை மாநகரத்திற்கும் பெரும் தொகையை ஒதுக்கி அளிக்க வேண்டும் என்று அரசின் சார்பில் மத்திய சர்க்காருக்குப் பல முறை வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்தப் படும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : குடிசை மாற்று வாரியத் தின் மூலம் நடைபெறும் பணிகளுக்கு சென்னை நகரத்தில் நடைபெறும் வேலைகளுக்கு எட்டு கோடி ரூபாய் வரையில் ஆண்டொன்றுக்கு அளித்து விட்டு, சென்னை நகரம் தவிர மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் 35 இலட்ச ரூபாய்தான் ஒதுக்கப்படுகிறது. இது போதாது என்று எல்லா இடங்களிலும் சொல்லப்படுவதால் இந்த ஆண்டிலிருந்து மற்ற மாவட்டப் பகுதிகளுக்கும் ஓரளவு அதிகத் தொகை செலவிட ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களிலும், கிராமங்களிலே கூட குடியிருக்கிற மக்களுக்கு நல்ல கெட்டியான வீடுகள், விபத்துக்களுக்கு ஆளாகிற நேரத்தில் உயிர்கள் பாதிக்கப்படாத அளவுக்குக் கட்டப்பட வேண்டும் என்னும் தேவையை உணர்ந்து, அந்த வகையில் அரசு முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. முதல் கட்டமாகத்தான் சென்னை மாநகரத்தில் அந்தப் பணி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அடுத்த அடுத்த கட்டங்கள் தொடர்ந்து யோசிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : டில்லியிலிருந்து வந்த பணிக் குழு சென்னை நகரத்தில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளையெல்லாம் சுற்றிப் பார்த்தார்களே அதைப்பற்றி ஏதாவது கருத்துத் தெரிவித்திருக் கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் கருத்து எதுவும் தெரிவித்ததாக அதிகாரபூர்வமாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால், இந்தப் பணிகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்று அவர்கள் அந்தக் கூட்டம் நடைபெற்ற நேரத்தில் எடுத்துரைத்ததாகச் சொல்லப் பட்டது.

THIRU B. VENKATASWAMY : Sir, 50 per cent of the slum-dwellers live in the rural areas. So may I know from the Hon. Chief Minister whether a beginning will be made to extend this scheme to the rural areas at least from this year ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னையில் இருக்கும் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றவர்களும் கிராமப் புறங்களிலிருந்து வந்த மக்கள்தான். ஆகவே, இங்கே செய்யப்படுகிற காரியங்களும் கிராம மக்களுக்காகச் செய்யப்படுகிற காரியங்கள்தான் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். வெளியூர்களிலும், கிராமப் புறங்களிலும் குடிசைப் பகுதிகளில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பதற்கு அரசு தொடர்ந்து படிப்படியாகத்தான் அதனுடைய பணிகளை நிறைவேற்ற இயலும்.





திரு. கு. காமாட்சி : இப்போது கூட சிலயிடங்களில் டிக்கட்ஸ் கொடுக்கிற இடம் என்றிருக்கிறது. அது மிகவும் சௌகரியமாக இருக் கிறது. அதே போல் ஒவ்வொரு இடத்திலும் டிக்கட் கொடுக்கிற இடத்தைக் வைத்து ஆங்காங்கு ஒவ்வொரு கண்டக்டரை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக விரைவுப் பேருந்துகளில் டிக்கட்டுகள் வழங்குவதில் அவ்வளவாகப் பிரச்சினைகள் இருப்பதில்லை. அதுமட்டுமல்லாமல், பேருந்துகள் சென்று சேருகிற இடங்களில் (Bus Terminals), டிக்கட்ஸ் வழங்குவதற்கான அலுவலகங்கள் ஏற்கனவே இருக்கின்றன. அதோடு மட்டு மல்லாமல் வழியில் டிக்கட்ஸ் வழங்குவதற்கும் டோக்கன் ஸிஸ்டம் என்ற முறையில் வில்லைகள் கொடுக்கிற முறையும் இருக்கிற காரணத் தால் இதில் ஸ்டாண்ட் கண்டக்டர்கள் தேவையில்லை என்று கருதுகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ரிசர்வேஷனுக்கு வொயர் லெஸ் மூலம் பல பகுதிகளில் ஏற்பாடு செய்வதற்கு, அரசுத் தரப்பிலிருந்து செய்வதற்கு, அது ஒரு சிறப்பான முறையாக இருக்காதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் ரிசர்வேஷன் செய்வதற்கும், அதே நேரத்தில் பேருந்துகள் எங்கேயாவது நின்றுவிட்டால் மாற்றுப் பேருந்துக்கு ஏற்பாடு செய்வதற்கும் வொயர்லஸ் ஸிஸ்டத்தை அமல்படுத்துவது என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்து நிற்கும் நிலையங்களில் பெண் கண்டக்டர்களை நியமிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உத்தேசம் இல்லை.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, சென்னை பிராட்வேயில் உள்ள மபுசல் பஸ் ஸ்டாண்ட் பிரயாணிகள் நிற்பதற்குக்கூட முடியாத அளவிற்கு சுகாதாரக் கேடாக இருக்கிறது. அதைக் கவனித்து சீர்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பொருத்தது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நெரிசல் நேரங்களில் பஸ்ஸில் பயணம் செய்கின்றவர்கள் சில நேரங்களிலே டிக்கட் வாங்கா மலே விட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் பெண் கண்டக்டர்களை நியமித்தால் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் வராது. ஆகவே, சில பெண் கண்டக்டர்களை நியமிக்க அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெரிசல் நேரங்கள் என்று விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையிலே எதுவும் கிடையாது. ஆனால், பெண்களை நியமித்தால் ஏமாற்றாமல் இருப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் ?

திரு. ஆ. கருப்பையா : தலைவர் அவர்களே, விரைவு வண்டிகள் நாகர்கோவிலிலிருந்து வருவதால், திருநெல்வேலி பெருநகரமாக இருப்பதால் அங்குள்ள பாஸன்ஜர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலியிலிருந்து வண்டிகளை விட அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய வேண்டுகோள் ஒன்று திருநெல்வேலி வட்டாரத்திலிருந்து வந்திருக்கிறது. ஆகையினாலே, திருநெல்வேலியிலிருந்து சென்னைக்குக், நேராக விரைவு பேருந்துகளை இயக்கலாம் என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்து நிலையங்கள் இல்லாத இடங்களிலே, பேரூராட்சி மன்றங்கள் இருக்கக்கூடிய பெரும் ஊர்களிலாவது புக்கிங் கவுண்டர் அமைத்து டிக்கட்டுகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கிட்டத்தட்ட 35 இடங்களிலே அத்தகைய புக்கிங் கவுண்டர்கள் இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், டெர்மினலில் 26 இடங்களில் அந்த புக்கிங் கவுண்டர்கள் இருக்கின்றன. ஆகவே, மறுபடியும் தேவை என்கின்ற சூழ்நிலை அங்கங்கே ஏற்படுமானால் அதைப் பரிசீலித்து அங்கங்கே புக்கிங் கவுண்டர்களை நாம் திறக்கலாம்.

THIRU B. VENKATASWAMY :—Sir, the Hon. Minister has stated that wireless equipment would be fixed in the express buses shortly. May I know when positively the wireless equipment would be fitted into the buses ?

THE HON. THIRU S. RAMACHANDRAN. Sir, as far as the installation of the wireless equipment is concerned, we are having talks with the concerned people and it is likely that in the ensuing year it may materialise.

## சென்னை—செஞ்சி பேருந்துகள்.

*399 வினா : திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செஞ்சி to சென்னை செல்லும் அரசாங்க பஸ் நேரத்தோடு போகவில்லை யென்று பொதுமக்களிடமிருந்து அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்தனவா ?

(இ) ஆம் எனில், இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கும் பஸ்ஸை மாற்றி துரித வண்டி விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—

(அ) தனி நபர் ஒருவரிடமிருந்து முறையீடு வந்தது. தாமதமான ஓட்டத்தை தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(இ) இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, செஞ்சியிலிருந்து வந்த பேருந்து வழியிலே நேரம் நீடிக்கப்பட்டதாகப் போது மக்களிடமிருந்து புகார் வந்ததாகச் சொன்னார்கள். அதன் பேரில் துரித வண்டி விடவும் செஞ்சியிலிருந்து சென்னைக்கு வந்திருந்ததை மாற்றி, திருவண்ணாமலையிலிருந்து சென்னைக்கு என்று ஓடவிடுகிறார்கள். அதை மாற்றி, செஞ்சியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து வண்டி விடவும் அரசு முற்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலே பணிமனை வசதிகள் இருக்கிற காரணத்தால், செஞ்சியிலிருந்து சென்னை என்கின்ற அந்தப் பேருந்தை, திருவண்ணாமலையிலிருந்து விடுவதற்கான ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், செஞ்சியிலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு பஸ் விட்டால் போதுமான வருவாய் இருக்கும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த காரணத்தால் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : அதேபோல், செஞ்சியிலிருந்து சென்னைக்கு மேல்மலையனூரிலிருந்து ஈமக்குளம், எம்பலம் தாதங்குப்பம், மேலஞ்சேரி, சிங்கவரம் வழியாக மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள் வழியாக பேருந்து விட மேல்மலையனூர் பஞ்சாயத்து யூனியனால் தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டதா ? ஆமெனில், அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதலில் செஞ்சி முடியட்டும். பிறகு மேல்மலையனூர் பற்றிக் கேட்கலாம்.

திரு. கே. எ. வகாப் : சென்னையிலிருந்து செஞ்சிக்குப் போகும் வண்டிகளை வந்தவாசி வழியாக விட செயற் குறிப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன். தெற்கே திருச்சி போன்ற இடங்களுக்குச் செல்லும் வண்டிகளில் ஒன்றிரண்டையாவது வந்தவாசி வழியாக செலுத்த வேண்டுமென்ற கோரிக்கை வந்ததா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வந்தவாசி வழியாக விடுவது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று தெரியவில்லை. ஏனென்னில் நீண்ட தூரம் செல்கின்ற பஸ்களை வந்தவாசி வழியாக விடவேண்டுமென்று வந்தவாசி பேரூராட்சி மன்றத்திலிருந்து அவர்கள் எடுத்துச் சொன்னாலும் இதனால் நேரமும் காலமும் அதிகமாகும் என்ற காரணத்தினால் தற்~~போதைக்கு அந்த யோசனை~~ பரிசீலனையில் இல்லை.

திரு. மே. சி. தூயமணி : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்து வண்டிகளைக் காலதாமதமின்றி ஓட்டும் ஓட்டுநர்களுக்கு சிறப்பு பூரிப்பூதியம் தரும் யோசனை இருக்கிறதா ~~என அறிய விரும்புகிறேன்.~~

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. கோ. செபமாலை: தலைவர் அவர்களே, கடலூரிலிருந்து சேலம் செல்லும் ...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள். செஞ்சியைப் பற்றிய கேள்வியாக இருந்தால் கேளுங்கள்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, பொதுவாக பேருந்துகள் தாமதமாக வருவதற்குக் காரணமே வண்டியை ஓட்டுகின்ற நேரத்தில், நிறுத்தக் கூடாத இடங்களில் எல்லாம் அடிக்கடி நிறுத்துகின்றதுதான். ஆகையால், எந்த இடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட வேண்டுமோ, அந்த இடங்களில், குறிப்பிட்ட நேரம் மாத்திரம் நிறுத்த வேண்டுமென்று மிகக் கடுமையாக அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிடப்படாத இடங்களிலே அதிக நேரம் நிறுத்துவதற்கு இப்பொழுது வாய்ப்பில்லை. ஏனென்றால் இப்பொழுது டேக்கோகிராப் பொருத்துவதனால் எந்த இடத்தில் எவ்வளவு நேரம் நிறுத்துகிறார்கள் என்பதை வரைபடத்திலிருந்து பரிசீலிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏதாவது பேருந்துகளில் டேக்கோகிராப் பொறுத்தப்படாதிருந்தால் அத்தகைய குறைபாடு ஏற்பட்டிருக்குமே தவிர வேறு அல்ல. ஆகையினாலே, டேக்கோகிராப் பொறுத்துவதன் மூலம் இந்தக் குறைகள் தவிர்க்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளிக்கோட்டை, மைசூருக்குப் புதிய பேருந்துகள்.

*400—வினா: திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உதகைக்கும், கள்ளிக்கோட்டைக்கும்; உதகைக்கும், மைசூருக்கும் இடையே இப்போது ஓடிக்கொண்டிருக்கும் பழைய பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்துகளை இத்தடங்களில் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்பழைய பேருந்துகள் வரையறுக்கப்பட்ட மைல்கள் ஓடாததால் அல்லது குறிப்பிட்ட ஆண்டுகள் செயல்படாததால், அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகளை விடுவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகைக்கும் பெங்களூருக்கும் நேரடியாகத் துரிதப் போக்குவரத்து விடும் செயற்குறிப்பு இருந்ததே அது விரைவில் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆவனசெய்யப்படும்.



THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there is a transport bus running from Ootacamund to Gundulpet in the Mysore State and it is a convenient one for the people. May I know whether it would be extended to Bangalore also?

THE HON. THIRU. S. RAMACHANDRAN. Sir, I have no information on that.

THIRU B. VENKATASWAMY: Sir, the Hon. Minister has stated that there is no proposal to replace the existing buses by new buses. May I know whether the existing buses will at least be reconditioned and run on those routes?

THE HON. THIRU S. RAMACHANDRAN: As far as the express buses are concerned, we would like them to be replaced within three years but for want of availability of chassis, we find it difficult to do so. There are still a number of express buses which are six to eight years old. As a first measure, we would like to replace the buses which are more than three years old so that an uninterrupted, comfortable and convenient long distance service can be made available to the passengers. As such the difficulty is only in respect of the availability of chassis and as and when they are sufficiently made available we will be able to replace them

திரு. மா. வெ. நாராயணசாமி: துணைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலிருந்து, மைசூருக்குச் செல்லக்கூடிய அரசுப் பேருந்து வண்டிகள் அதிக மணி நேரம் ஓடிக்கொண்டே இருக்கின்றன. அந்த இடைவெளி அத்தனை மணி ஓட்டித்தான் ஆக வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தாலே, அரசாங்கம் உடனடியாக, அந்த போக்குவரத்து நேரத்தை "ரன்னிங் டைம்மை" குறைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மலைப்பாங்கான இடத்திலே வேகத்தை அதிகரித்தால் என்ன ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி: சார், எக்ஸ்பிரஸ் பஸ்கள் இரண்டாண்டுக்கு ஒரு தடவை மாற்றப்பட வேண்டுமென்றும் அதே பஸ்கள் பின்னாலே டிஸ்ட்ரிக்ட் ரூட்டுகளுக்கு வைக்கப்பட்டு, அங்கு 2 ஆண்டுகளுக்குப் பின்னால், டவுன் பஸ்களாக வைக்க வேண்டுமென்ற ஏற்பாடு முன்பிருந்ததே அதிலே மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா? ஏனென்றால் அமைச்சர் அவர்கள் 3 ஆண்டுகள் என்று சொல்கிறார்களே, இன்றைய நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையிலே, இரண்டாண்டுகள் வரையிலே ஓட்டினால் போதும் என்ற கருத்து கொள்கை அளவிலே, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகளையெல்லாம் மாற்ற வேண்டிய நிலை ஏற்படுமானால் ஏராளமான பேருந்துகளை வாங்கவேண்டி

யிருக்கிறது. ஆகவே, முதல்கட்டமாக 3 ஆண்டுகளுக்கு மேலுள்ள விரைவுப் பேருந்துகளை மாற்றுவது பொருத்தம் என்றுதான் அரசு இந்த முடிவினை எடுத்திருக்கிறது.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட வழித்தடங்களில் பழைய பேருந்துகளையெல்லாம் போராட்ட நேரங்களில் விட்டு, புதிய பேருந்துகளை நல்ல நேரங்களில் விடுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனை நல்ல யோசனை தான். இப்போது போராட்ட நேரங்களில் புதிய பஸ்களும் கொளுத்தப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் பஸ்களை எப்போது, யார் கொளுத்துவார்கள் என்று முன் கூட்டியே தெரிவது இல்லை. தெரிந்தால் பஸ்ஸையே விடாமல் இருக்க லாம். பழையது என்ன? புதிது என்ன? எரிந்தால் எல்லாம் நஷ்டம் தானே. ஆங்காங்கு ஏற்படுகிற கலவரங்களின் காரணமாகப் புதிய பஸ் களும் சமயத்தில் பாழாகின்றன என்பதை மறந்து விடுவதற்கு இல்லை.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கும், சாதாரண பஸ்களுக்கும் ஏதாவது வயது வரம்பு வைக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த வயது அடைந்ததற்குப் பிறகு அந்த பஸ்களை என்ன செய்கிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பென்ஷன் கொடுக்கிறார் கள்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பொறுத்தவரையில் முதல் கட்டமாக 3 ஆண்டுகள் வயது வரம்பாகவும், அடுத்து 2 ஆண்டுகள் வயது வரம்பாகவும் வைத்திருக் கிறோம். அதற்குப் பிறகு அந்த பஸ்களை மாவட்ட வழித்தடங்களிலும், நகர வழித்தடங்களிலும் விடப்படுகிறது.

திரு எம். தேவராசன் : தலைவரவர்களே, இந்த காட் செக்ஷனில் ஓடும் பஸ்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன. ஆகவே, இந்த உதகை-மைசூர் வழித்தடத்தில் புதிதாக பேருந்துகளை விட்டு, விபத்துக்களை தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் அதைத்தான் முதலில் தெரிவித்தேன். பஸ்களையெல்லாம் மாற்றுகின்ற குறிப்பு ஏற்கனவே இருக்கிறது. ஆகவே, அங்கே பழைய பஸ்கள் ஓடிக்கொண்டிருக்குமானால் அவற்றை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

DR. H.V. HANDE : May I know whether it is possible to have tachometers tacked on to these buses so that the department will know the performance of these buses and they will be able to have remote control over performance of these buses.



THE HON. THIRU. S. RAMACHANDRAN : I have already replied on the same lines that all express buses are fitted with tachometers.

திரு கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, மிகவும் கிழடு தட்டிய பஸ்களை கிராமப்புற வழித்தடங்களில் விடுவதால் அவை அடிக்கடி நின்றுவிடு கின்றன. ஆகவே, கிராமப்புறங்களுக்கும் முன் உரிமை கொடுத்து அந்த வழித்தடங்களிலும் புதிய பஸ்களை விடுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பஸ்கள் எப்படி கிழடுதட்டும் என்று எனக்குத் தெரியவில்லை. வயோதிகர்களுக்கு இப்போது மதிப்பு அதிகமாகி வருகிற சூழ்நிலையில், அவைகளையும் நாம் புறக்கணிப்பதற்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக் குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவை உறுப்பினர் திரு மு. சின்னசாமி கைதானது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோவை மாவட்டம், மொடாக் குறிச்சி தொகுதி உறுப்பினரான திரு மு. சின்னசாமி அவர்கள் இந்தியக் குற்றவியல் சட்டப் பிரிவுகள் 147, 148, 307, 323, 332 மற்றும் 436 ஆகியவற்றின் கீழ் நேற்று மாலை 5-30 மணிக்குச் சென்னை காவல் துறையினரால் சென்னையில் கைது செய்யப்பட்டார் என்றும், மேலப் பாளையம் காவல் நிலையம் குற்ற எண் 28/73-படி அவர் மீதுவழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அவர் ஈரோடு குற்றவியல் நீதிபதி முன் அனுப்பி வைக்க காவலுடன் ஈரோட்டிற்கு அனுப்பப்பட்டார் என்றும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என்பதை இப் பேரவைக்கு அறி விக்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும், வெளியாட்கள் அவர்களைத் தாக்கி இருப்பதும் குறித்து.

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru Suppu has given notice of an adjournment motion under Rule 42 of the Assembly Rules to discuss the serious situation arising out of the deliberate attack on workers of Kallakurichi Co-operative Sugar Mills on 9—3—1973 by outsiders numbering more than 2,000 and the utter failure of Government to give protection to the workers. Similar notice has been given by the hon. Member Dr. H.V. Hande also. I request the hon. Members to explain briefly how this comes under Rule 42.

திரு க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நியாயமான போனஸ் வேண்டுமென்று கேட்டு 6—1—73 தேதி முதல் வேலைநிறுத்தம் செய்து வரக்கூடிய கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழி லாளர்களின் பிரச்சினையை அமைதியான முறையில் சமரசமான முறையில் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய போராட்டம் 2 மாதம் நடைபெற்றும், எந்த விதமான சமரச முயற்சி ஏற்பாடு செய்ய முற் படாமல், அதற்குப் பதிலாக வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்களை வெளி ஆட்கள் 2,000 பேர்கள் தாக்கி இருக்கிறார்கள். இந்தத் தாக்குதல் நடந்ததற்குப் பின்னால் அந்தத் தொழிற்சங்கத் தலைவர் கோவிந்தன், திருவேங்கடம் ஒரு காலனியில் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில், காலனிக் குள் சென்று அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். காவல் துறையினர் வீட்டில் இருப்பவர்களைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, பாதுகாப்பதற்குப் பதிலாக வெளியே போகச் சொல்லியிருக்கிறார்கள். வீட்டில் இருப்பவர்கள் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். தாக்கப்பட்டு காயம் அடைந்தவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைதும் செய்யப்பட்டிருக்கிறார்கள். தாக்குபவர்கள் தப்பித்துக் கொள்வதும், தாக்கப்பட்டு காயம் அடைந்தவர்கள் கைதாவதும் தற் போது நடைமுறையாகப் போய்விட்டது. அங்கே இருக்கும் தொழிலாளர் களும், அலுவலர்களும் அவர்களுக்கு விரும்பிய தலைவரைத் வைத்திருக் கிறார்கள் என்ற காரணத்திற்காக சமரச ஏற்பாடு செய்யவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். தொழில்துறை அமைச்சர் இந்தப் பிரச்சினையில் அதிக அக்கறை காட்டவில்லை என்று கருதுகிறேன்.

தமிழக அரசின் கொள்கை, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் விரும்புகிற வர்களே தலைவராக வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிற நேரத்தில், அங்கேயிருக்கும் தொழிலாளர்களும், அலுவலர் களும் தங்களுக்கு விரும்பிய தலைவரை தேர்ந்தெடுத்து அங்கே சங்கம் நடத்தி வருகிறபோது, அவர்களுக்கு விரும்பாத தலைவரைத் திணிக்க வேண்டுமென்பதற்காக, எந்தவிதமான சமரச முயற்சியும் எடுக்காமல் 2 மாதத்திற்கும் மேலாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் வைத்திருக் கிறார்கள்.

அது மட்டுமல்ல, அங்கேயிருக்கும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டிருக் கிறார்கள். கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து தொழி லாளர்கள் ஓடி மூங்கில் தொரப்பட்டில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். அங்கேயும் டிராக்டரில் 60 பேர் சென்று தாக்கியிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு ஆலையின் நிர்வாகம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை யில் இருக்கிறது. தொழிற்சங்கம் அவர்களுடைய கட்சியின் தலைமையில் இல்லை. வேறு கட்சியின் தலைமையில் இருக்கிறது. அந்தக் காரணத் திற்காக இவ்வாறு தொழிலாளர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சங்கத் தலைவரையும் தாக்கியிருக்கிறார்கள். இந்தத் தாக்குதல் நடப்பதற்கு முதல் நாள் திரு. கோவிந்தராசன் அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இந்த மாதிரியான தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டு இருக்கிறார்கள், எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள், என்று கேட்டு இருக்கிறார்கள். அப்படித் தெரிவித்து இருந்தும் அந்தத் தாக்கு தலைத் தடுக்க இந்த அரசு தவறி விட்டது. அப்படியில்லையென்றால் ...ம்.



அடுத்து நம்முடைய திட்டத்தின் வாயிலாக சிறுநில உடமையாளர்களை ஒன்று திரட்டி ஒவ்வொரு பகுதிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு கூட்டுறவு விவசாயப் பண்ணையை உருவாக்க திட்ட மிட்டிருக்கிறார்கள். இது நல்ல முறையில் உருவானால்தான் நம்முடைய மாநிலத்தில் நிலங்களை எல்லாம் ஒன்றுபடுத்தி நவீன இயந்திர சாதனங்களை பயன்படுத்தி விவசாயத்துறையில் பெரியதொரு வெற்றியைக் காண முடியும்.

DR. H.V. HANDE: Sir, I have given notice that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance viz., the forcible eviction of labourers in labour colony attached to the Kallakurichi Co-operative Sugar Mills by outsiders on 9—3—1973. I think the matter is quite simple for an adjournment motion. There is law and order problem and there is also trade union problem. Besides a great amount of irritation and violence has been caused in and around the factory. For instance nearly 2,000 people from outside were brought inside and workers had been forcibly evicted. Government's plea is that persons responsible for setting fire to the tractor or destroying or partially destroying the tractor should be arrested. But how did the tractor come there? That is the whole pivotal point. It was brought there by outsiders with purpose of bringing more outsiders.

In other words my information is that it has been brought there with the intention of manhandling the persons striking. The question boils down to two things. What was the Government doing to resolve the strike? A resolvable strike could have been resolved. In fact the workers had been agitating for bouns of 45 per cent but later on they were prepared to negotiate for 15 to 20 per cent with the Chief Minister. In fact Thiru Govindarajan, who was a previous M.L.A. and our colleague here, had told the Chief Minister."

நாளைய தினம் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தயவுசெய்து உடனடியாக பாதுகாப்புக் கொடுங்கள்.

In these words he had told the Chief Minister. That is what I had been told. The Hon. Chief Minister had said" "பார்க்கலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள்" That is what he seems to have uttered. But in spite of that assurance what happened was different. Violence was let loose which was tragic and no action has been taken against those who perpetrated the violence. We could understand if the Chiee Minister had not known the thing; if that be the case he could havf told. "I do not know about this at all". But he cannot say so in this

case. He knows the whole thing. Here there is no question of inter-union rivalry also. There is the clerks union and there is the workers' union and both are affiliated to the same CITU and so there is no question of inter-union rivalry there at all But what happened is, that 2,000 outsiders had come and
மு.ப. 10-00 attacked innocent wokers.

I do not have the proof. I hope the Hon. Chief Minister would give the particulars. Mr. Umanath also has made a statement that they were persons brought by the D.M.K. in that place. It is up to the Hon. Chief Minister to say that they are not. The question is that they are not The 2,000 people, cane growers, but they are persons brought there in several tractors. There is therefore clear indication that there is a strong case for taking up the adjournment motion.

I hope and trust the Hon. Chief Minister will—I do not know who is going to answer whether it is the Hon. Chief Minister or the Hon. Minister for Industries--give an answer with full detalis. I be seech the Government not to make this into a major issue, but somehow try to solve this. I am not making a political capital out of this, I am not interested in that. What do we gain by some people being hit or manhandled or beaten? I am told a lady who went to collect her clothes was also prevented ; some other member, I think it was the hon. Member Thiru A.K. Subbiah who had mentioned about it two or three days ago.

The point is this. Such a situation has arisen and therefore please do something to set things normal. I would like the Hon. Minister in his answer to give some indication that sincere attempts will be made on the part of the Government to solve this problem and bring about normalcy there as soon as possible. Therefore, it is a strong case for adjournment of other business of the House and discuss this issue. With this, I resume my seat.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த ஆலையில் உள்ள பிரச்னை பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததன் மூலமாக கருத்துக்களைக் கூறுகின்ற வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஆலை கூட்டுறவு ஆலையாதலால், இதிலே முதலாளி தொழிலாளி என்ற பிரச்னை கிடையாது. தொழிலாளர்களுக்குள்ளே சண்டையும் கிடையாது. காரணம், அந்த ஆலையில் இருப்பது ஒரே தொழிற் சங்கம். ஆகையினால் அந்தச் சங்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும், குலைக்க வேண்டும். பிரிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கும் வாய்ப்பே இல்லை யாது. போனஸ் கோரிக்கையைத் தவிர பெரும்பாலும் வேறு எந்த கோரிக்கையும் கிடையாது. 3—1—1973 முதல் 7—1—1973 வரை போனஸ் கோரிக்கையின் அடிப்படையில் உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னால் 7—1—1973 அன்று வேலை நிறுத்தம் தொடங்கப் பட்டது. அதற்குப் பின்னால் அமைதியாக கொண்டிருந்தது. 11—1—1973 அன்று நிர்வாகம் கதவடைப்புச் செய்துவிட்டார்கள். அதற்குப்



பின்னால் அந்த ஆலைக்கு வருகின்ற சர்க்கரை மூட்டை போக்குவரத்தைத் தடுக்க ஆரம்பித்தார்கள் என்று 26 பேர் கைது செய்யப்பட்டார்கள். அதற்குப் பின்னாலும் எல்லாம் அமைதியாக நடந்திருக்கின்றது. எந்தவிதமான சச்சரவும் கிடையாது. பின்னால் நடந்த தகராறைப்பற்றி என்னுடைய உரையின் பின்பகுதியில் விவரமாகச் சொல்லுகிறேன்.

ஆனால், போனஸ் பிரச்சினையைப் பொறுத்த அளவுக்கு எதுவுமே இந்த அரசாங்கம் பேசவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுவது தான் எனக்கு வருத்தமாக இருக்கின்றது. அங்கே நிர்வாகத்தின் தரப்பில் பல கூட்டங்களில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. பிறகு சென்னையில் என்னிடத்தில் வந்து தொழிலாளர் தலைவர்கள், சென்னையில் உள்ள அவர்களுடைய தலைவர்கள் பேச்சு வார்த்தையை நடத்தினார்கள். முதலமைச்சரிடத்திலும், என் முன்னாலும் பல தடவை பேசினார்கள். ஆகவே போனஸ் பிரச்னைபற்றி பேசவே இல்லை என்று சொல்லுவது தவறாகும்.

இதில் ஏற்பட்ட பிரச்னை என்னவென்றால், அந்த ஆலையின் மொத்த நஷ்டம் இதுவரை ரூ. 78,08,773 இந்த ஆண்டு கொஞ்சம் இலாபம் கிடைத்திருக்கிறது. இந்த இலாபத்திற்கு எவ்வளவு போனஸ் கொடுப்பது என்பது பிரச்னை. ஒரு புது ஆலை என்ற முறையில், 6 ஆண்டுகளுக்கு இலாப நஷ்டத்தை சரிக்கட்டு செய்துகொண்டு போனஸ் கணக்கீடு (கால்குலேஷன்) செய்ய வேண்டுமென்பது ஒருமுறை. அப்படி போட்டுப் பார்த்ததில், ரூ. 4,47,631 போனஸ் கொடுப்பதையும் கழித்துப் பார்த்ததில் வருகிற இலாபம்—கணக்கு சரியா இல்லையா என்பது வேறு பிரச்னை—ஒன்றுமில்லை, ரூ. 73,61,142 நஷ்டம். இந்தக் கணக்கின் அடிப்படையில் அவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது நிர்வாகத்தின் வாதம்.

இதற்கு முன்னால் சில ஆண்டுகளில் இலாபம் இல்லாவிட்டாலும் போனஸ் 4 சதவிகிதம், 7 சதவிகிதம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கணக்கில் போகாமல், சட்டப் பிரச்னைக்குள்ளே போகாமல், இந்த ஆண்டு குறைந்தபட்சம் 4 சதவிகித போனஸ் கொடுக்க வேண்டுமென்று எடுத்துக் கொண்டாலும், பரவாயில்லை. 12 சதவிகிதம்வரை போனஸ் கொடுப்பதாக நிர்வாகம் ஒப்புக்கொண்டுவிட்டது. அதற்குப் பின்னால் நடந்த பேச்சு வார்த்தையில்தான் அதிகபட்சமாக எவ்வளவு கொடுக்கலாம் என்று பேசப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கணக்கெல்லாம் பிறகு பார்க்கலாம், எப்படியாவது 15 சதவிகித போனஸ் கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னால் நான் தொழிலாளர்கள் தலைவரிடத்தில் நேராகச் சொன்னேன். இந்தக் கணக்கு வழக்குக்குப் போக வேண்டாம். நீங்கள் திரும்புங்கள். 15 சதவிகித போனஸ் நிச்சயமாகத் தரச் சொல்லுகிறேன் ; தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பச் சொல்லுங்கள் என்று முதலமைச்சருக்கு முன்னாலும் சொன்னேன். நானும் தனியாகவும் சொன்னேன். ஆனால் அவர்களால் அந்தத் தொழிலாளர்களைச் சம்மதிக்கச் செய்யமுடியவில்லை என்றுதான் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 16

தொழிலாளர்களுடைய வாதம்—அவர்கள் என்னிடத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் தெரிவித்தது—செட் ஆப் (set off ; சட்டப்படி இந்த அளவுக்கு இருக்கக்கூடாது என்றார்கள். அதற்கு நான் பதில் சொன்னது, இப்போது கொடுப்பதை வாங்கிக் கொள்ளுங்கள்; செட் ஆப் உண்டா இல்லையா என்பதை நீங்கள் எந்த நீதிபதி வேண்டு மென்று சொல்லுகிறீர்களோ, தொழிலாளர்களின் தலைவர்கள் எந்த நீதிபதியிடத்தில் விசாரணைக்கு விடவேண்டுமென்று சொல்லுகிறார்களோ அந்த நீதிபதியிடம் விடத் தயாராக இருக்கிறேன். அவர்கள் செட் ஆப் சரியில்லை என்றால், அந்தத் தீர்ப்பை ஏற்று அவ்வளவு தொகையையும் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. It is a question of law சட்டத்தை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து 15 சதவிகிதம் தரத் தயாராக இருக்கிறோம். அதைத் தந்த பின்னால், வாங்கிக்கொண்ட பின்னால், மீண்டும் செட் ஆப் சரியில்லை என்று தீர்ப்பு வந்தால் அந்தப் பணத்தையும் கொடுக்கத் தயாரென்று அரசு தரப்பில் சொல்லப்பட்டது. தீர்ப்பு வர நாளாகுமே என்றார்கள். குறிப்பிட்ட காலம் மூன்று மாதம், இரண்டு மாதம் என்று நிர்ணயித்து, அதற்குள்ளே நீதிபதி தீர்ப்பு வழங்க வேண்டுமென்று வாய்ப்புக் கொடுக்கிறோம் என்று சொன்னேன். அப்படி சொன்ன பிறகு எங்களிடத்தில் நியாயம் என்று ஒத்துக்கொண்டு சென்றவர்கள், வெளியில் சென்றால் தொழிலாளத் தோழர்களை ஒத்துக் கொள்ள வைக்க முடியவில்லை அவர்களால்.

இது ஒருபக்கம் இருக்க, இப்போது சட்டம், ஒழுங்குப் பிரச்னை வந்து விட்டது. நிர்வாகத்தின் சார்பில் ஒவ்வொரு கட்டமாகப் பேசிப் பார்த்து, கடைசியாக நீண்டநாள் கரும்பு அரைக்காமல் இருந்தால் பெருத்த நஷ்டம் ஏற்படும். ஆகவே ஆலையைத் திறப்பது என்று முடிவெடுத்தார்கள். அப்படி திறக்கும்போதுதான் தகராறு ஏற்பட்டிருக்கிறது. விவரங்களை மறைகது இருக்கின்ற காரணத்தால் சொல்லக் கூடாது. மொத்த மாக பார்க்கின்றபோது, தொழிலாளர்கள் ஆலைக்கு கரும்பு வரக்கூடாது, லாக் அவுட் இருக்கும்போது கொண்டுவரக் கூடாது என்பது அவர்கள் கோரிக்கை. ஆனால் விவசாயிகள், அங்கே வந்தவர்கள்—அவர்களை விவசா யிகள் இல்லை என்று சொன்னார்கள். அது வெறும் கற்பனை ; விவசாயி கள் இல்லாமல் வேறு யார் வந்திருக்க முடியும்—எங்கள் கரும்பு காய்கிறது. இதைத் தடுப்பது நியாயமில்லை; கரும்பை அரைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் கரும்பு கொண்டுவருவதைத் தடுக்க முன்வந்திருக்கிறார்கள். தடுக்கும் போது தகராறு ஏற்பட்டிருக்கிறது. அது நடந்து முடிந்துவிட்டது. அது முதல் கட்டம்.

இரண்டாவது கட்டம்தான் பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு யார் காரணம் என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாக விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். விசாரிக்க வேண்டும். சொன்ன வுடன் நம்பி அப்படியே சொல்லி விடக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. முதல் கட்டம் முடிந்த பின்னால், மாலை நேரத்தில் டிராக்டர் வருகிறது. டிராக்டர் ஏன் இங்கே வரவேண்டும் என்று கேட்டார்கள். கரும்பு இருக்கிற இடத்தில் டிராக்டர் இல்லாமல் வேறு என்ன வர வேண்டும் ? கரும்பு எடுத்துக் கொண்டுவர டிராக்டர்தான் வைத்துக் கொள்ளுவார்கள். ஆகவே, டிராக்டர் ஏன் வந்தது என்பது கற்பனை



*1973 மார்ச் 16]* [திரு. செ. மாதவன்]

வாதம். மாலை நேரத்தில் கொஞ்சதூரம் தள்ளி அந்த விவசாயிகளுக்குச் சொந்தமான டிராக்டர் வருகிறது. அதில் விவசாயிகள் வந்துகொண்டி ருக்கிறார்கள். அப்படி வரும்போது தொழிலாளர்களைச் சேர்ந்தவர்கள் இங்கே மத்தியானம் நடந்த நிகழ்ச்சிக்கு ரிடாலியேட் செய்ய வேண்டு மென்ற நோக்கத்தோடு செய்ததாகக் கூறப்படுகிறது. அதில் இரண்டு விவ சாயி ளுக்குக கத்திக்குத்து ஏற்பட்டிருக்கிறது. அங்கேதான் தகராறு முற்றி யிருக்கிறது. கத்திக்குத்து ஏற்பட்ட பின்னால்தான் மறுபடியும் விவசாயி கள் தரப்பில் அடிக்கப்பட்டது. அதில் தொழிலாளர்கள் சில பேருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இரண்டு விவசாயிகள் கத்திக்குத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர் கள் தரப்பிலும் சிலபேர் அடிக்கப்பட்டு அவர்களும் காயப்பட்டு மருத்துவ விடுதியில் இருக்கிறார்கள். வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தான் நடந்த நிகழ்ச்சி. அரசாங்கமோ, நிர்வாகமோ வேண்டுமென்றே செய்ததாகச் சொல்ல முடியாது. சாதாரணப் பிரச்னை கடைசியில் விவசாயி களுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே சண்டை ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

தொழிலாளர்கள் காலனியிலிருந்து விரட்டப்பட்டதாகச் சொல்வது கற்பனைதான். விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறு ஏற் பட்டிருக்கிறது. ஒரு பகுதி தொழிலாளர்கள் வரலாம் என்கிறார்கள். இன் னொரு பகுதி வரக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் வரத்தான் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தகராறில் கலவரம் ஏற்பட்டதில் கூடியிருந்த தொழிலாளர்களில் சிலர் தகராறுக்குப் பயந்து வெளியே போய்விட்டதாக நிர்வாகத்தின் தகவல். தொழிலாளர்கள் வெளியே செல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்தி நிர்வாகம் சொன்ன தாக நான் கருதவில்லை. அதை நம்ப வேண்டாம் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிர்வாகத்தைப் பொருத்த அளவுக்கு தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அதற்கும் நிகழ்ச்சிக்கும் சம்பந்தமில்லை. நிகழ்ச்சியின் காரணத்தால் தொழிலாளர் களாகவே வெளியே சென்றிருக்கலாம். அதை நாம் ஊகிக்க வேண்டும். யாரோ கட்டாயப்படுத்தி, நிர்வாகமோ போலீஸ் தரப்போ கட்டாயப்படுத்தி, அடித்து வெளியே செல்ல வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுவது தவறான வாதம். சட்ட ஒழுங்குப் பிரச்னை விவாதத்திற்குரிய பிரச்னை அல்ல.

இது ஒருவருக்கொருவரிடையே நடந்த நிகழ்ச்சியே தவிர வேறல்ல. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், போனஸ் பிரச்சினையில் இதைவிட நியாயமான முறையில் தீர்வுகாண முடியும் என்று நம்பவில்லை. இதில் முதலாளிக்கு இலாபம் என்று சொல்ல முடியாது. காரணம் என்ன வென்றால், இது கூட்டுறவு ஆலை—அரசுப் பணம் போட்டு நடக்கிறது. ரூ. 78 இலட்சம் நஷ்டத்தை செட்-அசைட் செய்துவிடக் கூடாது என்ற கருத்தை நாங்களாகவே வலிந்து ஒத்துக் கொண்டால், விளைவு என்ன வாகும் ? ரூ. 78 இலட்சம் யார் கொடுப்பது என்ற பிரச்னையாக வரும். அது தனிப்பட்ட முதலாளிகளின் பணம் அல்ல. எனவே, 15 சதவிகிதம்

கொடுக்கின்றோம் என்று ஒத்துக்கொண்டதற்குப் பின்னால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சரி என்று சொன்னால் என்னால் ஒன்றும் சொல்ல முடியாது.

முதலமைச்சரிடம் முன்னமேயே தகராறு வரும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான், முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது பக்கத்திலேயே இருந்தேன். இது திட்டமிட்டு அடித்ததல்ல. திட்டமிட்டு அடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்று சொல்வது வெறும் கற்பனையாகத் தான் இருக்க முடியும். நேற்றைய முன்தினம் முதலமைச்சரிடம் திரு. கோவிந்தராசன் பேச வந்தபோது, நான் உடனடியாக அழைக்கப்பட்டேன். முதலமைச்சர் அவர்கள், திரு. கோவிந்தராசனிடம், "இதை எப்படியாவது தீர்த்து விடப்பா" என்று சொன்னார்கள். முன்கூட்டி திட்டமிட்டு அடிதடி நடக்கப் போகிறது, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியதாகச் சொன்னது அது வெறும் கற்பனை. காரணம், திரு. கோவிந்தராசன் முதலமைச்சரிடம் பேசியபோது நானும் பக்கத்திலே இருந்தேன். சில நாட்களுக்கு முன்னாலேயே இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறும் என்று சொன்னதாகச் சொல்வது வெறும் கற்பனை. முற்றிலும் தவறான விஷயம்.

போனஸ் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அது மிகத் தெளிவான பிரச்சினை. அரசு சார்பில், தொழிலாளர்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப் பட வேண்டுமென்ற ஆசையோடு இது தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இதில், வதந்திகளை நம்பிவிடக் கூடாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு மனுவைக் காண்பித்து, இதற்கு நீங்கள்தான் காரணம் என்று தொழிலாளர் தலைவர் சொல்கிறார் என்று சொன்னார்கள். அதிலே என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்கிறபோது, டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல வேகமாக எதும் எழுதப்படவில்லை. தீர்த்து வைக்கப்பட்ட விதம் சரியில்லை என்பதைத் தவிர, அதைத் தீர்க்க வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் எதும் இல்லை. இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சொன்னார் என்று ஹாண்டே சொன்னார்கள். நிச்சயம் அப்படிப்பட்ட கருத்து இல்லவே இல்லை.

எனவே, வதந்திகளை நம்ப வேண்டாம். வதந்திகளை நம்புவது நாட்டுக்கும் நல்லதல்ல. சில நாட்களுக்கு முன்புகூட ஒரு பத்திரிகையில் படித்தேன்; "ஒரு தகராறில் ஒரு தொழிலாளி கொலை செய்யப் பட்டார்" என்ற ஒரு செய்தி வந்திருக்கிறது. திரு. ஹாண்டே அவர்கள் கூட அதை அரைகுறையாக நம்பினார். நான்கூட அதிர்ந்து போனேன். ஆனால் விசாரித்தபோது, 10—3—1973 அன்று நடந்தது—11—3—1973-ல் வந்தது—ஒரு தொழிலாளி உடம்பு சரியாக இல்லாமலிருந்து கிராமத்தில் இறந்திருக்கிறார். இதையும் சேர்த்து ஒரு பத்திரிகையில், நமக்கே ஒரு பயம் ஏற்படுகிற முறையில் போட்டிருக்கிறார்கள். எனவே, வதந்திகளை நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளில், சுமுகமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில், தலைவர்களை அழைத்துப் பேசி எந்த அளவுக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ, அதைக் கொடுத்து பிரச்சினையைத் தீர்க்க



வேண்டுமென்று தான் அரசு விரும்புகிறது. இது தொழிலாளர்கள் பிரச்சினை. கட்சிப் பிரச்சினை அல்ல. விவசாயிகள், தொழிலாளிகள் பிரச்சினையே தவிர வேறொன்றுமில்லை. எனவே, தொழிலாளர்கள் பிரச்சினையில், எல்லாக்கட்சித் தலைவர்களும் சேர்ந்து தீர்க்க வேண்டுமென்ற அளவில் இந்த வாதத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கொண்டு இதில் விவாதத்திற்கு ஒன்றுமே இல்லை என்று கருதுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் தந்திருக்கின்ற விளக்கத்தின்படி, முதலமைச்சரிடம் தகராறு பற்றி சொல்லவில்லை என்று சொன்னார்கள். உமாநாத் அவர்களும் கோவிந்தராஜன் அவர்களும் இரண்டு நாளைக்கு முன்பு முதலமைச்சரை சந்தித்தேன் என்று சொன்னார்கள். இதை நான் சொல்லவில்லை. இது தவறு என்றால், அவர் சொன்னது தவறு என்பதாகும். இரண்டு பேர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

டிராக்டரைப் பொறுத்தவரையில், தொழிற்சாலை ஸ்டிரைக்கில் இருக்கிறது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடக்கிற நேரத்தில், வேலை நடக்காத வேளையில், டிராக்டருக்கு என்ன வேலை என்பதுதான் கேள்வி. ஆகவேதான் நான் சொன்னேன், சிலரை எடுத்துக்கொண்டு போனார்கள் என்று. நஷ்டம் ஏற்பட்டது மேனேஜ்மெண்ட் நிர்வாகம் சரியாக நடக்காததால். சிலர் இதில் யாருக்கோ சாதகமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நிர்வாகம் தவறாக நடந்ததற்கு நாங்கள் எப்படி விட்டுக்கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதில், 15 சதவிகிதத்தில் 20 சதவிகிதம் இருந்து வரை ஒத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள்.

It came down. Their final offer was, any advice by the Chief Minister between 15 and 20 per cent.

உமாநாத் கடிதம் மூலம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நான் சொன்ன விளக்கத்திற்கும் விளக்கம் தேவையாக இருக்கும். தீர்த்து வைக்க என்ன நடவடிக்கை என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, டிராக்டரைப் பொருத்தவரையில், விவசாயிகள் டிராக்டர் உபயோகிக்கக்கூடாது என்று சொல்வது பொருத்தமாக இல்லை. விவசாயிகள் டிராக்டரை உபயோகப் படுத்தத்தான் செய்வார்கள். உபயோகப்படுத்தக் கூடாது என்று சொல்வது சரியல்ல. தொழிற்சாலை வேலை நிறுத்தத்தில் இருந்தால், விதைக் கரும்பு கொண்டு போக உபயோகப்படுத்தியிருக்கலாம். எல்லோரும் வந்திருக்கிறார்கள். இவர்கள் எப்படி வந்தார்கள் என்று கேட்டால், அவர்கள் எப்படி மறுத்தார்கள் என்று கேட்கலாம். இதில் ஆராய்ச்சிக்குப் போகக்கூடாது.

[திரு செ. மாதவன்]

ரூபாய் 78 லட்சம் நஷ்டம் நிர்வாகம் காரணம் என்று திரு ஹாண்டே கூறுகிருர்கள். நஷ்டம் வந்தது என்றால் யார் கொடுப்பது? ரூபாய் 78 லட்சம் நஷ்டத்தை செட்-அசைட் செய்ய தயாராக இல்லை, அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன். இதில் திரு ஹாண்டே அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இது மக்களின் வரிப்பணம்.

அடுத்து, போனசைப் பொறுத்தவரையில், 15 சதவிகிதம் கொடுப் பதைப் பற்றி அரசு கவலைப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, 15 சத விகிதம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இத் தீர்மானத்தை விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத் தால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## 4. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 19—வேளாண்மை.

### கோரிக்கை எண் 44—வேளாண்மை மூலதனச் செலவு.

### கோரிக்கை 51—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 19—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,06,72,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I Move the following cut motion to discuss policy—

" That the allotment of Rs. 24,06,72,900 under Demand No· 19—Agriculture—be reduced by Rs. 100.

திரு எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, கிராமங்கள்தோறும் மாதிரிப் பண்ணைகள் அமைக்க வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க " நிதிக் கோரிக்கை எண் 19— வேளாண்மை என்ற தலைபபின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 24,06,72,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1973 மார்ச் 16]

திரு அ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள் களுக்கு நியாய விலை நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 19—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 24,06,72,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு கே. எ. வகாப் : தலைவரவர்களே, வேளாண்மை முறையில் மாற்றங்கள் செய்ய, விஞ்ஞான முறை வேளாண்மையை விவசாயிகளுக்கு ஏற்படுத்தத் திட்டம் வகுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

" நிதிக்கோரிக்கை எண். 19—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 24,06,72,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்."

THIRU B. VENKATASWAMY : Sir, I move the following cut motion to discuss the need to have a special Directorate for Horticultural Department—

" That the allotment of Rs. 24,06,72,900 under Demand No. 19—Agriculture be reduced by Rs. 100 ".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I move the following cut motion to discuss about the improvements to be made in agricultural system in Dharmapuri district—

" That the allotment of Rs. 24,06,72,900 under Demand No. 19—Agriculture—be reduced by Rs. 100. "

THIRU K. M. SUBRAMANIAM : On a point of order. I have given a cut motion on behalf of the A.D.M.K. party in proper time. That has not been taken up.

MR. DEPUTY SPEAKER : You have not intimated us the number of the cut motion which you are going to move.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following cut motion to discuss policy—

" That the allotment of Rs. 24,06,72,900 under Demand No. 19—Agriculture—be reduced by Rs. 100 ".

நிதிக் கோரிக்கை எண். 44—வேளாண்மை மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 44—வேளாண்மை மூலதனக் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

" That the allotment of Rs. 30,13,000 under Demand No. 44—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100. "

நிதிக் கோரிக்கை எண் 51—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண். 51—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 38,44,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy—

" That the allotment of Rs. 38,44,67,000 under Demand No. 51—Capital Outlay on Schemes of Government Trading—be reduced by Rs. 100. '

THIRU B. VENKATASWAMY : Sir, I move the following cut motion to discuss policy—

" That the allotment of Rs. 38,44,67,000 under Demand No. 51—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100.

திரு சோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, விவசாய விளை பொருள்களுக்கு நியாய விலை கிடைக்கும் வகையில் விற்பனைக்கு வரும் விளைபொருள்கள் அனைத்தையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டிய விதிமுறைகள் வகுக்க வேண்டுமென்று வலியுறுத்தி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 51—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 38,44,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே,



"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்துக் கெடுக இவ்வுலகியற்றியான்"

என்று வள்ளுவரும்—

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று பாரதியாரும் சொல்லியிருந்தாலும் யாரையும் சாகடிக்க வேண்டிய தேவையில்லை என்று இந்த அரசு கருதி வேளாண்மைத் துறையில் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளை பற்றிக் குறிப்பாக இங்கே ஒரு புத்தகத்தை* வைத்திருக்கிறேன் என்றாலும் அதிலே சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

1966–67-ல் உணவுத்துறையில் 38 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்த தமிழ்நாடு 1972–73-ல் 55 லட்சம் லட்சம் டன் அரிசியை உற்பத்தி செய்து தமிழகத்திலே இன்றையதினம் உணவுக்குத் தட்டுப்பாடு இல்லை, கட்டுப் பாடு இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். 1973–74-ம் ஆண்டில் அரிசி உற்பத்தி 59 லட்சம் டன்னுக உயர்த்த முடியும் என்ற இலக்கை நிர்ணயித்து அதற்காக வேண்டி பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பது பற்றி கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் தெளிவாக கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் புத்தகத்தில் ஒரு சிறு தவறு இருக்கிறது. அதைத் திருத்திவிடுங்கள்.

திரு ஆர். பொன்னப்ப நடார் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : நானே சொல்லி விடு கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் மானியக் தொகை '19 வேளாண்மை' என்ற தலைப்பில் ரூ. 22,14,44,400 என்று கொடுத் திருப்பதை ரூ. 24,06,72,900 என்று திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் '44 வேளாண்மை மூலதனச் செலவுகள்' என்பதன்கீழ் ரூ. 22,40,000 என்று கொடுக்கப்பட்டிருப்பதை ரூ. 30,13,000 என்று திருத்திக் கொள்ள வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தானியங்கள் 15 லட்சத்து பத்தாயிரம் டன்னுக இருந்ததை 17 லட்சத்து ஐம்பதாயிரம் டன் அளவுக்கு உற்பத்தி செய்யத் திட்ட மிட்டிருக்கிறது. பருப்பு வகைகள் உற்பத்தி 1·9 லட்சம் டன்னுக இருந்தது இந்த ஆண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலம் 2 லட்சத்து 50 ஆயிரம் டன் அளவுக்கு உற்பத்தி செய்யத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்குப் உற்பத்திப் பெருக்கத்திற்காக தமிழகத்திலே உழவுத்

*113–178-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 16] [திரு அ. பெ. தர்மலிங்கம்]

தொழிலிலேயே ஈடுபட்டிருப்பவர்கள் பல கஷ்ட நஷ்டங்களை ஏற்று உற்பத்தியைப் பெருக்கியதற்காக அவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்களுக்கு உறுதுணையாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் ..........

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : May I make one request through the Chair ? இரண்டு மானியக் கோரிக்கைகள் இன்று விவாதத்தில் இருக்கின்றன. அறிக்கை நமக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை அமைச்சர் படித்ததாகக் கருதி இங்கே விவாதம் தொடங்குவதுதான் சாதாரணமாக இங்கே நடந்து வரும் வழிமுறையாகும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளட்டும். இப்போது உறுப்பினர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : நான் முதலில் மற்றவர்கள் கடைப்பிடித்ததையே கடைப்பிடிக்கலாம் என்றுதான் நினைத்தேன் எவ்வளவு பேர் இதைப் படித்துப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. தவருகச் சொல்லவில்லை, குறையாகச் சொல்லவில்லை வாய்ப்பு இல்லாமல், நேரம் இல்லாமல் இருந்திருக்கலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல் அவ்வளவு பேரும் இதைப் படித்திருப்பார்கள் என்று கருதி இத்தோடு விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உணவுத் துறையைப் பற்றி எவ்வளவு ஆர்வமாக எல்லோரும் பேச இருக்கிருர்கள் என்பது தெரியும். சட்டமன்றம் ஆரம்பித்த நாளில் இருந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் இதைப்பற்றிப் பேசியிருக்கிருர்கள். நான் ஒரு கொள்கை அறிக்கையாக* வைத்திருக்கிறேன். இதிலே பேசுகின்றவர்களிடம் தயவு செய்து ஒன்றே ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் பங்கீட்டு முறையில் என்ன குறைகள் இருக்கின்றன என்பதை மனச் சாட்சிக்கு விரோதம் இல்லாமல் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

*Thiru B. VENKATASWAMY : I thank the Deputy Speaker for giving me an opportunity to speak a few words on the Demand on Agriculture.

I am an agriculturist and I consider it a great privilege to initiate discussion on this Demand. In the beginning itself Hon. Minister has given statistics about the production of foodgrains. Especially in 1971–72 we produced about 70.45 lakh tonnes. In 1972–73 we produced about 72.02 lakh tonnes. In 1973–74 the estimate of production is about 79 lakh tonnes. In fact I want to note here that only because of the inputs we were able to produce about 2 lakh tonnes more and in



1973 மார்ச் 16] [Thiru. B. Venkataswamy]

1973–74 we have estimated to produce about 7 to 8 lakh tonnes more So, I request the Hon. Minister to see that the inputs are maximised and the production increased so that the ryots will be benefited. The cost of production is being increased now. I know that our Hon. Minister is much interested in agriculture. I am very happy that our Hon. Minister is having that portfolio because he knows something about agriculture. We must see that some new methods are implemented and the cost of production also should be minimised. This is a great problem which we are having not only in Tamil Nadu, but in the entire nation. The ryots should be benefited and the soaring prices should be put down. I hope that the Hon. Minister will, in consultation with the Centre, see that something is done to minimise the production cost of any variety.

I have given a cut motion about establishment of a Directorate for Fruit Development, that is, horticulture development. A horticulture development directorate should be opened. In this respect I want to stress very much about this horticulture development made in Mysore State. When our Hon. Minister Thiru Narayanaswamy was the Agriculture Minister I requested him to come and see at Lalbagh in Mysore how they are doing it. Really everybody will have to appreciate. One ryot is having only two acres. He is able to get about Rs. 50,000 to 60,000 per year. He has planted two varieties of grapes—Anabishahi and Thempson seedless—in two acres and out of it he is getting about Rs. 50,000 within a year. Like that we can also do here. We are having very good offices here. I know we can open a special directorate as in Mysore, so that we can produce more. This is one of my suggestions for the benefit of the ryots and at the same time we can earn some foreign exchange also.

Regarding mangoes, we put some questions and the Hon. Minister had stated that they were going to export mango juice so that we could get some foreign exchange out of it. So, I request the Hon. Minister to give serious attention to fruit development and it is only through the development of horticulture, ryots can be benefited as it fetches a good amount of money. Even in regard to foodgrains, they do not get that amount as the production cost of rice and ragi is much more. So I request the Hon. Minister to set up a Horticulture Directorate for the development of fruits. மு.ப. 10·30

As regards bananas, they are exported and 'robusta' bananas are grown in the Chingleput district and I am given to understand that there is a good market for such bananas in Japan and Germany. As we can get foreign exchange, I request the Hon. Minister to make arrangements to export these bananas and the ryots also will be benefited. At the same time the Government will also get good name. I request the Hon. Minister to look into this aspect of the matter.

Regarding sugarcane, the ryots who are producing it are not benefited. It is only the middlemen, the black marketeer who is getting the benefit. In the open market one kilo of sugar costs Rs. 4 but what is the actual price that the ryot gets? He gets only about Rs. 95 per tonne. The rytots could be paid more. Why should the middlemen be benefited? I hope and trust that the Hon. Minister will look into this matter.

As regards potatoes, reference has been made about the production of potatoes in the Nilgiris and Hosur. I thank the Hon. Minister for taking steps to introduce it at Hosur. I understand that a proposal has been sent to the Central Government for the cultivation of potatoes on 10,000 acres. In Ootacamund the disease, Nematode, is prevalent and we have not cured it. So it is necessary that we must develop some other areas for growing potatoes so that we can increase its cultivation. In this connection, I wish to point out that there are some bottlenecks in regard to the production of potatoes. We are getting seeds from Simla at an abnormal rate, say about Rs. 100 or Rs. 120. Last year we paid Rs. 200. No ryot is willing to purchase it at such a high cost. So I suggest that we can import some quantity of seeds from Simla and multiply it in our State Seed Farms. That is why I suggested on a former occasion that we should have more State Seed Farms so that we can produce seeds at a cheap rate and distribute it at low cost to the ryots so that more people can take to the cultivation of potatoes.

Regarding cold storage facilities........

MR. DEPUTY SPEAKER : To day we have got two demands and a number of hon. Members have given their names to speak.

DR. H. V. HANDE : So far as our Party is concerned, he is the only Member to speak.

THIRU B. VENKATASWAMY : Sir, I want five minutes.

MR. DEPUTY SPEAKER : No. Let the Hon. Member come straight-away to the point.

THIRU B. VENKATASWAMY : Sir, we are finding it very difficult to store potatoes for want of cold storage facilities. Now we are storing our potatotes at Bangalore and I request the Hon. Minister to establish a cold storage plant.

Regarding NPK fertiliser, we are not able to get it from the Panchayat offices. We get only urea. Even potash and super phosphate are not available. There is no use in having urea only. So I request that the Government should distribute NPK fertiliser properly to the ryots so that we can get very good production. In this connection, I have to



point out that there is a fall in the production of fertilisers. We can substitute it by natural fertilisers. In towns cow-dung is used as a fuel. The Government should pass an order, that those who use cow-dungl as fuei would be punished. Only then we can increase the natura fertiliser and we need not depend upon chemical fertilisers.

As regards pestioides, it is sold at a high rate. The Government should see that it is brought down. So also the price of spare parts for the tractors should be brought down.

**Thiru N, Veeraswamy** *in the ehair.*]

So far as the soil conservation scheme is concerned, in the Dharmapuri district the entire allotment for it is spent towards contour-bunding. I request that 50 per cent of the amount should be spent for land-levelling also—50 per cent for contour-bunding and 50 per cent for land-levelling.

Now I want to stress that the taking over of the wholesale trade of foodgrains by the Government will be suicidal. Within two years the people will rise against the Government because of starvation. I hope the Government will take note of my warning. The Food Corporation of India has lost Rs. 8·2 crores in 1971–72 and Rs. 8·6 crores in 1972–73 due to pilferage and wastage due to poor storage.

Also may I know the report on Agricultural Research prepared by the State Administrative Reforms Commission has not been placed on the table of the House. I am told that the Government are not in favour of the report and so it has been rejected by the Government. We would like to know what action has been taken in regard to this matter.

Finally, there are a few points concerning my district...............

(Mr. Chairman sounded the gong.)

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி)</u> : இன்று 15 உறுப்பினர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு மானியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். ஆகவே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 5 நிமிடமும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் 7 நிமிடமும், தலைவர் 10 நிமிடமும், அமைச்சர்கள் 20 நிமிடமும் எடுத்துக் கொண்டால்தான் ஏறத்தாழ இரண்டு மணிக்காவது பேரவை நிகழ்ச்சிகளை முடிக்க முடியும். ஆகவே, எல்லோரும் இந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் தங்கள் உரையை முடித்து, பேரவைத் தலைவரோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு.மணலி சி.கந்தசாமி</u> : Sir, within five or seven minutes it is not possible for us to cover all the points. The Chair can as well say, 'Do not speak'. The Chair has allotted only 3½ hours for two Demands......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திரு. மணலி அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அவர்கள் சீனியர் மெம்பர். எல் லோரும் ஒத்துழைத்தால் இந்தக் கால வரையறைக்குள் மு... த்துவிட முடியும். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமாளுல் அவை முன்னவருடன் கலந்து முடிவு செய்துகொள்ளுங்கள். இன்று இரண்டு மணிக்குள் முடிக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருப்பதால் நான் இந்த யோசனை யைத் தெரிவித்தேன். அதற்குள் முடியாது ; மாலையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பிளுல், நீங்கள் அவை முன்னவருடனும், அமைச்சர்களுடனும் கலந்துபேசி முடிவு செய்து கொள்ளலாம். ஆகவே, மணலி அவர்கள் கோபப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன், அடுத்து, திரு. எ. ஆர். சுப்பையா அவர்கள் பேசுவார்கள்.

திரு. எ. ஆர். சுப்பையா : துணைத் தலைவரவர்களே..............

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த 'ஃபுட்', 'அகிரிகல்சர்' இரண்டு மானியங்களுமே மிகவும் முக்கியமான மானியங்கள். இந்த மானியங்களுக்கு அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிருர்கள். அவைகளைப்பற்றி சற்று விரிவாக விவாதித்தால் தான் பொருத்தமாக இருக்கும். தலைவர்களுக்கு பத்து நிமிடமும், அமைச்சர்களுக்கு 20 நிமிடம் என்ருல் அதற்குள் அவர்களுடைய கருத்துக்களையும், விளக்கங்களையும் சொல்ல முடியாது. அட்ரஸ் பண்ணத் தொடங்குவதற்குள் நேரம் முடிந்துவிடும். எனவே, காலையில் 'ஃபுட்' மானியத்தையும், மாலையில் 'அகிரிகல்சர்' மானியத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அம்மையார் அவர்கள் இதை முதலிலே தங்கள் கட்சித் தலைவருடன் கலந்து பேசி அதற்குப் பின்ருல் அவை முன்னவருடனும் அமைச்சர்களுடனும் பேசி முடிவு செய்திருக்க வேண்டும். இப்போது என்னிடத்தில் சொல்லிப் பயன் இல்லை. எனக்கு என்ன தெரிவித்திருக்கிருர்களோ, அதைத்தான் நான் செய்ய முடியும். இரண்டு மணிக்குள் முடித்துவிடுவதற்கு அம்மை யார் அவர்கள் கட்சித் தலைவரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஆகவே, இன்றைக்கு அதிகமாக பாயின்ட் ஆஃப் ஆர்டர், கிளாரிபிஃகேஷன் எழுப்பாமல் குறித்த காலத்திற்குள் அவை நிகழ்ச்சிகளை முடிப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். சுப்பையா : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது மின்சாரப் பற்ருக்குறை இருப்பதளுல் நிலத்திற்கு தண்ணீர் இறைக்க ஆயில் என்ஜின்களைத்தான் உபயோகப் படுத்தியாக வேண்டும். ஆயில் என்ஜின்கள் வாங்க தவணை முறையிலோ, ...டகைக்கோ எல். டி. ...ங்க், சாதாரண பாங்க் மூலம் திட்டம் இருக்கிறது. ஆனல் இதற்கு ...ரு விரிவான திட்டத்தை இந்த அரசு வகுக்க வேண்டுமென்று கேட்டுக் ...காள்கிறேன். அதை சர்க்காரே வாங்கிக்கொடுப்பது நன்ருக இருக்கும் ...ர்ஸ்ட் சார்ஜ் ஆன் த ப்ராப்பர்டி—என்பதாக அவசரகால நிலைமைபோல—



வாங்கிக்கொடுப்பதுபோல வாங்கிக் காடுக்க போர்க்கால நிலைமையில் வேண்டும். இன்றைக்கு ஆயில் என்ஜின் மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இப்படி விலை ஏருது இருக்கவும் நடவடிக்கை உடனடியாக எடுத்தாகவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம நிலையில் கூட்டங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றுக்கு நல்ல பலன் இருந்துகொண்டிருக்கிறது. வானெலியில் செய் கள் கொடுக்கப் படுகிறது. அதை லோகல் பேப்பர்களிலும் கொடுத்துவிட்டால் பிரயோசன மாக இருக்கும்.

சிறுபாசன கூடுதல் ஏற்படுத்த அண்டர் கிரவுண்டு ரிசோர்சை கண்டு பிடிக்க வெல் அமைக்க திட்டமிட்டிருக்கிறது. அதை இப்பொழுது ப்ளாக் லெவலில் ஒதுக்குவதாகத் தெரிகிறது. அது சரியல்ல. விவசாய இலாக்கா மேற்பார்வையில் இந்த அண்டர் கிரவுண்டு வெல் திட்டம் செயல்படவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

வாட்டர் மானேஜ்மெண்டு சம்பந்தமாக தஞ்சாவூரில் ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. இதற்காக 9·65 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில் இப்போது தேவைப்படுவது வாட்டர் மானேஜ்மெண்டு நிலையம் வறட்சிப் பகுதிகளில் ட்ரைனேஜ் திட்டம் தான். வாட்டர் மானேஜ்மெண்டு நிலையம் வறட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகவே இந்த ஆராய்ச்சி நிலையம் ஒரு பக்கம் இருந்தாலும் அதன் கிளையாக வறட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தித் தரவேண்டும்.

தரமான விதைகள் சர்டிபைட் சீட் 1·470 சான்றிதழ் வழங்கும் திட்டம் மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்று. ரெஸ்பான்சிபிலிட்டி பிக்ஸ் பண்ண வேண்டும்.

ரசாயன உரங்களுக்கு பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனல் விநி யோகத்தில்தான் ஒழுங்கீனம் இருக்கிறது.. கார்டு சிஸ்டம் மூலமாக, பி. டி. ஓ., ப்ளாக் ஒப்புதல் பெற்று முறையாக விநியோகிக்க ஆவன செய்ய வேண்டும். இன்றுள்ள நிலைமையில் ஒருவரே பலயிடங்களில் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போக்க இந்தக் கார்டு சிஸ்டம் கொண்டுவருவதுதான் சிறந்தது.

பருத்தி வளர்ச்சித் திட்டம் வரவேற்கத்தக்க திட்டம். நாங்கள் உற்பத்தி செய்கிருேம் வாங்க ஆள் இல்லை. சீசனபிள் ப்ரைஸ் பிக்ஸ் பண்ணி சர்க்காரே கொள்முதல் செய்ய வேண்டும்.

பெஸ்டிசைட் விநியோகிக்க 6 சர்வீஸ் சென்டர்கள் ஏற்படுத்தியிருப் பதை வரவேற்கிருேம். புதிய வேளாண்மைத் துறை இயக்குநர் வந்த பிறகு இந்த வேலைகள் சிறப்பாக நடைபெறுவதைப் பாராட்டுகிறேன். இவை நல்ல முறையில் செயல்பட வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெகுலேடெட் மார்க்கெட் சட்டம் இருக்கிறது. அதை என்போர்ஸ் பண்ணத்தான் அமைச்சர் அவர்கள் தயங்குகிருர்கள். அதை என்போர்ஸ் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் விவசாயக் கருவிகளைத் தயார் செய்ய திட்டமிட்டிருக்கிறது. இப்போதே வெளி மார்க்கெட்டில் தரமான கருவிகள், மலிவான விலையில் கிடைக்கின்றன. கிடைக்காத பொருளை இவர்கள் தயார் செய்வதாக இருந்தால் சரி, கிடைக்கிற கருவிகளையே இவர்களும் தயார் செய்ய திட்டமிட்டிருப்பது சரியல்ல. நாட்டில் எது இல்லையோ அதைச் செய்ய வேண்டும். இருக்கக்கூடியவற்றில் போட்டி மனப்பான்மையில் செய்வது நல்லதல்ல. இப்போது அவர்கள் அளிக்கிற டிராக்டர்கள் நல்ல கண்டிஷனில் இல்லை. அதை சரியான முறையில் வழங்க வழிவகை செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* <u>திரு. பு. செ. முத்துச்செல்வன் :</u> சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்றைய வேளாண்மைத் துறை மானியம் கோரிக்கையை ஆதரித்து எனது சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

வேளாண்மைத்துறை சீரும் சிறப்போடும் நல்ல முறையில் வெற்றி நடை போட்டு நடந்து கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட சிறப்பான முறையில் தமிழகத்தில் வேளாண்மைத் துறையின் மூலமாக நாம் உணவுப் பொருளில் தன்னிறைவு பெற்று, மற்ற மாநிலங்களுக்குக் கூட உணவுப் பொருளை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையை அடைந்திருக்கிறோம். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் ஒருபோக சாகுபடி நிலங்களாக இருந்தவற்றை இருபோக சாகுபடி நிலங்களாக மாற்ற விரிவானதொரு திட்டம் தயாரித்துக் கொடுக்க அந்த அடிப்படையில் நமது டாக்டர் கலைஞர் அவர்கள் பசுமைப்புரட்சித் திட்டத்தைத் உருவாக்கி நாட்டில் உணவு உற்பத்தியை லட்சம் டன் அதிகப் படுத்தியிருக்கிறார்கள். இதை மேலும் சிறப்படையச் செய்யவேண்டும் என்கிற என்னுடைய வேண்டுகோளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையில் விவசாயத் தொழிலாளர்களது கோரிக்கைகளுக்கிணங்க நாம் நமது மாநில அரசே நிறைவேற்றக்கூடிய பெரும்பாலானவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். அவர்களது கோரிக்கைகளில் ஒன்றிரண்டு குறிப்பாக மத்திய அரசுதான் நிறைவேற்ற வேண்டும். அதற்குக் கூட கோவை மாவட்டத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் ஆய்வு வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. சோளம், •கம்பு, நெல், போன்றவற்றுக்கு எப்படி பயிர் இன்ஷூரன்ஸ் கொண்டுவர முடியும் என்பதுதான் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிகிறது. அடுத்தபடியாக நம்முடைய விவசாயத் தொழிலாளர்களுக்குத் தனி ஒரு நிதியை உருவாக்க நிதிநிலை அறிக்கையில் டாக்டர் கலைஞர் அவர்கள் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது மிகமிகப் பாராட்டத்தக்கதாகும். இன்னும் இந்தத் துறையில் பல அபிவிருத்திகளைக் காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பஞ்சாப் மாநிலத்தில் இருந்து பருப்பு வகைகளை இப்போது தருவித்து வந்தாலும் பருப்பு வகைகளிலும் நம் மாநிலம் தன்னிறைவு பெற நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அரும்பாடுபட்டு வருகிறார்கள். இந்தப் பருப்பு உற்பத்தியிலும் சிறு தானிய உற்பத்தியிலும் நாம் தன்னிறைவு காண முயற்சிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து நம்முடைய திட்டத்தின் வாயிலாக சிறுநில உடமையாளர்களை ஒன்று திரட்டி ஒவ்வொரு பகுதிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு கூட்டுறவு விவசாயப் பண்ணையை உருவாக்க திட்டமிட்டிருக்கிறார்கள். இது நல்ல முறையில் உருவானால்தான் நம்முடைய மாநிலத்தில் நிலங்களை எல்லாம் ஒன்றுபடுத்தி நவீன இயந்திர சாதனங்களை பயன்படுத்தி விவசாயத்துறையில் பெரியதொரு வெற்றியைக் காண முடியும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கூட்டுறவு விவசாயப் பண்ணை வீதம் அமைக்க ஆவன செய்ய வேண்டும். 2 அல்லது 3 ஏக்கர் என்று நிலங்களை அடமானம் செய்யும்பொழுது சிறு நில உடமையாளர் களையெல்லாம் ஒன்று சேர்த்து 500 ஏக்கர் அல்லது 1,000 ஏக்கர் அளவில் ஒரு பெரிய கூட்டுறவு விவசாயப் பண்ணையாக அமைத்து விவசாயத் துறையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேலும் வெற்றி காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலே எல்லாம் இது போன்ற இயந்திர மயமாக்குகின்ற முறையில் இன்று விவசாயத் துறையில் வெற்றி கண்டிருக்கிறார்கள். அமெரிக்கா அல்லது ரஷியா போன்ற நாடுகளைப் போல், விவசாயத் துறையில் மேலும் முன்னேறுவதற்கு முயற்சி கனடா லும், நமக்குள்ள விவசாய நிலங்கள் குறைவாக இருப்பதனால், ஜனத்தொகை அதிகமாக இருப்பதனால், ஜப்பான் நாட்டை நாம் மனதிலே கொண்டு, அந்த நாட்டைப் போல், விவசாயத் துறையில் வெற்றி காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு 10 ஏக்கர், 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற அளவில் உள்ளவர்களுக்கு இந்த டிராக்டர் வழங்குகின்ற பொழுது ரூ. 50,000 என்ற அளவுக்கு அவர்கள் டிராக்டர் வாங்கி, ஒன்றிரண்டு ஆண்டுகளிலே கடனைக் கூடத் திருப்பிச் செலுத்த முடியாமல், வாழ்கின்ற நிலைமை இன்றிருக்கிறது. இப்பொழுது டிராக்டர்களை உலக வங்கி திட்டத்தின் மூலமாகக் கடன் தொகை பெற்று, மாநில நிலவள வங்கி மூலமாக, வாங்குவதற்கு வகை இருக்கிறது, இனி சிறிய விவசாயிகள் வாங்குவதற்குரிய ரூ. 10,000 அல்லது 15,000 அளவுக்கேற்ற சிறிய டிராக்டர்களையும் தருவிக்கவேண்டும். பெரிய நிலச் சுவாந்தார்கள் வேண்டுமானாலும் ரூ. 50,000, ரூ. 60,000 அளவில் டிராக்டர்களைப் பயன் படுத்த இலகுவாக இருக்குமேயொழிய, 10, 15 ஏக்கர் உடைய உழவர்களுக்குப் பெரிய டிராக்டர்களை வைத்துப் பயன் படுத்துவது கஷ்டமாக இருக்கிறது. எனவே, ரூ. 10,000 உள்ள டிராக்டர் களை வாங்கி வழங்குவதற்கும் அதற்கு எக்ஸைஸ் டியூட்டிகளிலிருந்து விலக்குபெற மத்திய அரசு வாதாடி பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*<u>திரு வ. ஆர். மாரிமுத்து.</u>—மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றையதினம் நாட்டிலே ஒரு பகுதியிலே பஞ்சம் இருந்தாலும் கூட, வெள்ளத்தினாலே பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, விவசாய உற்பத்தி

ஓரளவு பெருக்கத்தில் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறி இருப்பது மனதிற்கு நிறைவு அளிக்கக்கூடியதாக இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக உற்பத்தியினுடைய கணக்கை எடுத்துப் பார்ப்போமானால், ஆண்டுக்காண்டு உணவு தானியங்களுடைய பெருக்கம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் விவசாயத் துறையிலே அரசு தீவிரமாக எடுத்துக் கொண்ட முயற்சியோடு அல்லாமல், அதிக விளைச்சல் தரக்கூடிய வித்துக்களை அதிகமாக பயன்படுத்தியதுதான் காரணம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையிலும், விவசாயத்துறையில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு துறையிலுமே அந்தத் துறை சம்பந்தமான ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுத்து, அதிகப்படியான தொகை ஒதுக்கப்படவேண்டுமென்ற நிலைமையே இல்லை. எல்லா துறைகளிலும் இது புறக்கணிக்கப்படுகிறது என்று உண்மையிருந்தாலும், இந்த விவசாயத் துறையைப் பொறுத்தும் கூட அதைத்தான் நாம் காணமுடிகிறது. கால மாறுபாட்டிற்கு ஏற்றவாறு நாமெல்லாம் முற்போக்காக, வேகமாக எண்ணுகின்ற பொழுது, அதற்கேற்றவாறு மாறுதல்களும் நடக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். இந்த மாறுதல்களை ஆராய்ச்சிதான் நமக்கு கொடுக்கவேண்டுமே தவிர, ஆராய்ச்சியற்ற நிலைமையிலே கிடைக்கின்ற அனுபவம் மட்டும் நமக்கு கொடுக்க முடியாது.

ஆகையினாலேயே, நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாய ஆராய்ச்சிக்காக, இதற்காக ஒதுக்கப்படும், தொகையிலே குறைந்த பட்சம் 5 சதவிகிதமாவது ஒதுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இன்றைக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று பார்த்தால் ஒரு சதவீதம் கூட இல்லை. அதற்கும் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அடுத்த ஆண்டிலாவது —இன்றைக்கு மாற்றமுடியாது, பட்ஜெட் கொடுத்தாகிவிட்டது டிமாண்ட் கொடுக்கப்பட்டாகிவிட்டது—விவசாய ஆராய்ச்சிக்காக அதிகப்படியான தொகையை ஒதுக்கி பொருத்த அளவிலே விவசாய ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இப்பொழுது இந்த அதிக விளைச்சல் தரக்கூடிய வித்துக்கள் 105 நாட்களுக்கு மேற்பட்டதாகத்தான் இருக்கிறதேயொழிய, குறைந்த நாட்களுக்கு உள்ளதாக இல்லை. ஆகவே, இந்த 105 நாட்களுக்குக் குறைவாக இருக்கிற வகையை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். குறுவைக்கு 105 நாள் என்பதை 90 நாள் ஆக்குகின்ற அளவில் கண்டுபிடித்து வெற்றி பெற்றால், விளைச்சலை இன்னும் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு.

விவசாயி என்ற முறையிலே, என்னுடைய அனுபவத்திலே, தஞ்சை மாவட்டத்தைப்பொறுத்தவரையிலே—மாவட்டத்திற்கு மாவட்டம் விளைச்சல் மாறுபடுகிறது—தாளடியை புரட்டாசியிலே நடவு நட்டுவிடவேண்டும். புரட்டாசியில் நட்டால் நமக்கு விளைச்சல் அதிகமாக இருக்கும். ஆகவே 90 நாட்களாக ஆக்குவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். அதை நாளைக்கே செய்ய முடியாது. ஆராய்ச்சியிலே செய்யவேண்டும்.





அடுத்தபடியாக, இந்தத் தண்ணீரைக் குறைச்சலாக உபயோகப்படுத்த முடியுமா என்பதைப்பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்யவேண்டும். அதைப் பற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இருந்தாலும், ஆராய்ச்சியினுடைய வேகம் போதாது. இன்னும் பல்வேறு இடங்களிலே ஆராய்ச்சி செய்யவேண்டும். கோவை, சேலம் போன்ற இடங்களிலே நிலம் காய்ந்தால், புல் அதிகம் முளைப்பது இடையாது. களை அதிகம் இடையாது நஞ்சையிலே தண்ணீர் இருந்துகொண்டே இருக்கவேண்டும். தண்ணீர் குறைந்தால், களை ஏறிக்கொண்டே இருக்கும். அதற்காக, 40 ஆள் 50 ஆள் வைத்து செலவு செய்ய வேண்டிய நிலைமை அங்கு இருக்கிறது. இந்த நிலைமை இடத்திற்கு இடம் மாறுகிறது. தண்ணீர் குறைவாக இருந்தால் பயிர் நன்றாக வருகிறது என்பது உண்மை, அதனால் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. அந்தக் களையைப் போக்குவது எப்படி ? களைக் கொல்லி மருந்து கொடுக்கிறார்கள், அது ரொம்ப விலை அதிகமாக இருக்கிறது. சாதாரண விவசாயி உபயோகப் படுத்த முடியாத அளவுக்கு அதிக விலையாக இருக்கிறது. ஆகவே, தேவையான முறைகளைக் கையாண்டு அந்த களைகளை எடுப்பதற்கான முயற்சி செய்தால் குறைந்த நீரைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரை, தண்ணீர் 13 லட்சம், 15 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாய்கிறது அந்த தண்ணீர் அதிகம் தான். அதை வீணாக்குகிறோம். அந்தத் தண்ணீரைக் கொண்டு இரண்டு தஞ்சாவூர்களுக்குப் பாய்ச்சலாம். ஆனால் இருக்கிற நிலைமைகள் அப்படி. பல்வேறு திட்டங்கள் போட்டு பாசன வசதி, வடிகால் வசதி, இவைகள் கொடுத்து, குறைவான நீரைப் பயன் படுத்துவதற்கான ஆராய்ச்சி செய்து, இம்மாதிரியான சிரமம் ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். விவசாய ஆராய்ச்சியை பொறுத்தவரை, ஒரு மாவட்டத்திற்குப் பொருத்தமுடையதாயிருப்பது இன்னொரு மாவட்டத்திற்குப் பொருந்த முடியதாயில்லையென்பது என்னுடைய கருத்து.

ஐ. ஆர். 8-ஐ சேலம் கோவை மாவட்டங்களில் போடுகிறார்கள் என்றால் அவர்களால் 3 டன், 4 டன் மகசூல் எடுக்க முடிகிறது. தஞ்சை மாவட்டத்திலே, என்னைப் பொறுத்தவரையிலே, எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே, 1½ டன்னுக்கு மேல் எடுக்கமுடியவில்லை. மண்வளத் தன்மை, அல்லது அங்கிருக்கிற தட்பவெப்ப நிலை காரணமா என்பதைப் புரிந்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இதெல்லாம் பற்றி தெளிவாக ஆராயவேண்டும். எந்த மாவட்டத்திலே எந்த நெல் சரியாக விளைகிறது என்பதை ஆராய வேண்டும். ஒரு மாவட்டத்திலே விளைகிற நெல், அதே சீசனிலே இன்னொரு மாவட்டத்திலே சரியாக இல்லை. அதற்கான ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சாகுபடி நிலங்கள், ஏக்கர் விளைச்சல் அதிகரித்திருக்கிறது என்பது உண்மை. இன்றைக்கு ஏக்கராவாரி விளைச்சல் அதிகரித்திருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரையிலே நான் ஒன்றைச் சொல்லமுடியும். இந்த உயர்வு போதாது, இது, திருப்தி அளிக்கக் கூடிய உயர்வு அல்ல. ஏன் எல்லா நிலங்களிலும் விளைச்சலை அதிகப் படுத்தமுடியாது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்தாகவேண்டும். விளை

நிலங்களை எடுத்துப் பார்த்து, ஒழுங்காக சாகுபடி செய்தோமானல் இன்றைக்கு 53 லட்சம் தான் அரிசி தானியம் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை 75 லட்சம், 85 லட்சம் கிடைக்கும் அளவிற்கு இப்பொழுது சாகுபடி இருக்கிற பூமியிலேயே, நாம் விளைச்சலை மிகுதியாக்கமுடியும். இன்றைக்கு விவசாயிகளிடம் இருக்கிற குறைபாடு என்ன ? ஏன் அவர்களால் அந்த அளவுக்கு விளைச்சல் எடுக்க முடியவில்லை ? நவீன முறைகளைக் கையாள என்ன இடையூறுகள் இருக்கின்றன, ஏன் முழு அளவு விளைச்சலை எடுக்க முடியவில்லையென்பதைப் பற்றி ஆராய வேண்டும்.

நான் என்னுடைய பகுதியில் 60 செண்ட் நிலத்தை எடுத்து மூன்று போக நெல்போட்டு முயற்ச்சி செய்து பார்த்தேன். ஒரு எக்கருக்கு
மு.ப. ஒரு வருஷத்திற்கு 100 மூட்டை அளவுக்கு தஞ்சை மாவட்டத்திலே
11-00 விளைவிக்க முடியும் என்பது தெரிய வருகிறது.

அந்த நிலையில் ஒரு ஏக்கருக்கு 100 மூட்டை விளைவிக்க முடியும். அப்படி எல்லா நிலங்களையும் ஏன் கொண்டு வரக்கூடாது? அப்படிக் கொண்டு வருவதிலே என்ன சிரமம் இருக்கிறது என்பதை பற்றித் தெளிவாக அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் விவசாயிகளோடு கலந்து பேசி அந்த சிரமத்தைப் போக்குவதற்கான முயற்சியைச் செய்யவேண்டும்.

நவீன முறைகள் எல்லாம் சிறிய விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். இதிலே அதிகாரிகள் பேரில் குறை சொல்லுவதற்கில்லை. இவ்வளவு லட்சிய அளவு என்று நிர்ணயித்து விடுவதால் அதிகாரிகள் பெரிய மிராசுதார்களாக யார் யார் இருக்கிறார்களோ, 30 ஏக்கர், 50 ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடியவர்களை முடுக்குவதற்கான முயற்சியிலேதான் ஈடுபடுவார்கள். சிறு விவசாயிகளை அணுகி அவர்களுடைய நிலையை உயர்த்த நவீன முறைகளைச் சொல்லிக் கொடுக்க சாத்தியம் இல்லாத காரணத்தால் இதுவும் சாத்தியமில்லாமல் இருக்கிறது. சிறு விவசாயிகளோடு தொடர்பு கொள்ளும் அளவுக்கு விவசாய ஸ்தாபனத்தை ஆக்க வேண்டும். லட்சிய அளவை இவ்வளவு ஏக்கருக்கு இத்தனை விவசாயிகளின் மூலம் என்று வரையறுக்க வேண்டும்.

மின்சாரப் பற்றுக் குறையால் விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் நஷ்டம் இருக்கிறதே அது ரொம்ப அதிகம். பம்ப் செட் மானியம் கொடுக்கும் போது ஒரு குறிப்பிட்ட கம்பெனி பம்ப் செட்டுக்கு மாத்திரம்தான் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இது சரியான தகவலா என்று தெரியவில்லை. அது உண்மையாக இருக்குமானல் அதை தவிர்த்து விவசாயிகள் எந்த பம்ப் செட்டை வாங்க விரும்புகின்றார்களோ, அதற்கு மானியம் கொடுக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாதிரிப் பண்ணைகள் சில இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிராமங்கள் தோறும் மாதிரிப் பண்ணைகள் அமைக்க வேண்டும். இது நீண்ட நாளைய கோரிக்கை. எல்லா இடத்திலும் சர்க்கார் செலவில் பண்ண வேண்டியதில்லை. குறிப்பிட்ட விவசாயிகளுக்கு நிலத்தை ஓரிடமாக



வைத்திருக்கும் கிராமத்தில் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுத்து முப்போகம் விளையக்கூடிய அளவுக்கு மாதிரிப்பண்ணையாக அமைத்தால் எல்லோருக்கும் விளங்கும்படி அமையும்.

கால்நடை இலாகா இதிலே சேர்ந்து வந்திருந்தால் அதைப்பற்றியும் பேச முடியும், இரண்டும் இணைந்தது. அடுத்த முறையாவது கால்நடை இலாக்கா விவசாய அமைச்சரிடத்தில் இருக்கும்படி விவாதத்திற்குக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். இரண்டு மூன்று ஏக்கரில் சாகுபடி செய்து விவசாயத்தைப் பெருக்குவதைவிட , 15 சிறு விவசாயக் குடும்பங் கள் ஒன்றுகச் சேர்ந்து 50 ஏக்கர் நிலத்தை வைத்து, அந்தக் குடும்பங் களுக்குத் தேவையான ஆலோசனைகளை விவசாயத்துறை மூலமாகக் கொடுத்து, உற்பத்தி செய்வதன்மூலம் ஒரு குடும்பத்திற்கு மாதம் 350 ரூபாய் வருவாய் கிடைக்க முடியும். அவர்கள் கறவை மாடு வைத்துக்கொள்ளலாம். கோழிப்பண்ணை வைத்துக்கொள்ளலாம். காய் கறிப் பண்ணை வைத்துக்கொள்ளலாம். அப்படிச் செய்வதன் மூலம் ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் முதல் 350 ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். உற்பத்தியையும் பெருக்கமுடியும். இதைப் பரீட்சார்த்தமாக சர்க்கார் நிலங்கள் இருக்கும் இடங்களிலாவது செய்ய முயற்சி செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : முதலிலேயே சொன்னேன். இரண்டு டிமாண்டுகள் இருக்கின்றன. உறுப்பினர்கள், தலைவர்கள் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். ஒரு உறுப்பினருக்கு 10 நிமிடந்தான். தாங்கள் 14 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : தாங்கள் நேரங்கொடுத்தால் பேசுகிறேன், இல்லாவிட்டால் உட்கார்ந்து விடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : நீங்கள் ஒரு மணி நேரம் பேசுவதைப் பற்றிக்கூட ஆட்சேபணை இல்லை. இருக்கின்ற நேரம் 2½ மணிதான். இன்னும் உறுப்பினர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் பேசவேண்டியிருக்கிறது. இரு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. முனு ஆதி : இரண்டு மானியக் கோரிக்கைகளை இவ்வளவு துரிதமாக விவாதிப்பதை விட, மாலை நேரத்தில் அமைச்சர்கள் பதில் சொல்ல இடம் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : நீங்கள் முன்னாலேயே வந்து தலைவர்களோடும் அமைச்சர்களோடும் கலந்து முடிவு செய்திருக்கலாம். அப்போது நீங்கள் எல்லாம் வரவில்லை. தலைவர்கள் எல்லாம் சேர்ந்து முடிவு செய்த பிறகுதான் இந்த நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : முதலில் மாலையில் வைத்துக்கொள்வதாகத்தான் இருந்தது. அதற்குப் பிறகு டாக்டர் ஹாண்டே, திரு. பொன்னப்ப நாடார், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் எல் லோரும் உட்கார்ந்து மாலையில் கமிட்டி இருப்பதாகவும், 17 உறுப்பினர் களுக்குமேல் செல்ல வேண்டியதாக இருப்பதாலும் காலையிலேயே முடித்து விட வேண்டிய இந்த நிலைமை ஏற்பட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : எலித் தொல்லையை ஒழித்தாக வேண்டும். கோடையில் சாகுபடி செய்கிறபோது ஒழித்துவிட வேண்டும். முன்பு இந்த எலிகளை ஒழிப்பதற்காக ஒரு எலிக்கு இரண்டணா வீதம் பஞ்சாயத்து யூனி யன்கள் மூலம் கொடுத்துப் பிடித்தார்கள். அந்த முறையை மீண்டும் கொண்டு வந்தாவது எலியை ஒழிக்க வேண்டும்.

தென்னந்தோப்புக்கு கலப்பு இனத் தென்னங் கன்றுகளை வருவத ற்கு 5,000 தயாரிக்க திட்டம் இருப்பதாக அறிக்கையில் தெரிவித்திருக்கி றார்கள். அதிகப்படியாக இதிலே முயற்சி செய்ய வேண்டும். ஒரு தென்னை 60, 70 ஆண்டுகள் இருக்கும். ஆகவே இந்த கலப்புத் தென்னை வளர்ப்பில் ஐயாயிரத்துக்கும் அதிகப்படியாகத் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆ. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த மானியத்தைப பாராட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1966-67-ல் நமது மாநிலத்தில் அரிசி உற்பத்தி 44 லட்சம் டன்னாக இருந்தது இன்றைக்கு 72 லட்சம் டன் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இதிலே நமது அரசு அதிகக் கவனம் செலுத்துவதைக் கண்டு உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயம் முன்னேற வேண்டுமென்றால், விவசாயிகளுக்குத் தரமான விதைகளும், உரங்களும், தண்ணீரும் முக்கியம் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். தண்ணீரைப் பற்றி பெரியோர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்,

“வானுயர வரப்புயரும்
வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்.”

என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் மிக அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இது கூறப்பட்டிருக்கிறது. நமக்கு எல்லாக் காலங்களிலும் மழை பெய்வதில்லை. ஆகவே, பெய்கின்ற மழை தண்ணீரைத் தேக்கிவைத்துப் பங்கிட்டுக்கொடுக்க வேண்டும். அதற்கு குளங்களின் கரைகள் எல்லாம் உயர வேண்டும். கால்வாய்களை ஆழப் படுத்த வேண்டும். இதையெல்லாம் செய்தால்தான் விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயனடையக் கூடிய வகையில் தண்ணீரைக்கொடுக்க வழிவகைகள் இடைக்கும்.



விவசாயிகளை முற்போக்கான நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக கடன் வழங்குகிறோம். இந்தக் கடனை விவசாயிகள் உண்மையில் விவ சாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்களா என்றால் முடியவில்லை. அவர்கள் 100-க்கு பத்து ரூபாய் வீதம் தனி நபரிடத்தில் கடன் பெறுகிறார்கள். ஒரு ஆண்டு கழித்து அது 2 0 ரூபாய் ஆகிறது. அந்தக் கடனை அடைக்க அரசு கொடுக்கும் கடனைப் பயன்படுத்துகின்ற நிலைமையில் எல்லா விவ சாயிகளும் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு கடன் நிவாரணச் சட்டம்கொண்டு வந்து யாரிடம் அவர்கள் கடன் வாங்கியிருந்தாலும் இரண்டு ஆண்டுக்காலம் வட்டி செலுத்தியிருப்பார்களானால் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லை இன்றைய தினம் நல்ல முறையில் விற்க முடிவதில்லை. கரண்ட் பற்றிச் சொல்கிறார்கள். ஆலை களில் அரைக்க முடியவில்லை, எப்படி நெல்லை வாங்கி வைத்துக் கொள் வோம் என்கிறார்கள். இதற்கு நான் ஒரு யோசனை சொல்கிறேன். மூவா யிரம் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு விவ சாயக் கிடங்கை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் சர்க்காருக்கு திருப் பிக் கொடுக்க வேண்டிய கடன்களை அவர்கள் நெல்லாக கொடுக்க முன் வந்தால் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாவட்டந்தோறும் இன்று நவீன ஆலைகள் இருக்கின்றன. அதில் ஓடாத பல ஆலைகள் இருக்கின்றன. அங்கு இந்த நெல்லைக் கொடுத்து அரைக்க ஏற்பாடு செய்தால் பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும் வழி ஏற்படும். எனவே இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்காக நல்ல பல காரியங்கள் செய்து வருவதால் அவர்கள் இன்று நல்ல பலன் பெற்று வருகிறார்கள். குத்தகை 81-ஆம் பசலிக்கு கட்டிவிட்டார்கள். அதற்கு மேல் கட்ட வேண்டியதில்லை என்ற நல்லதொரு திட்டத்தைக்கொண்டு வந்திருப்பதற்காக விவசாயிகள் இன்று அரசைப் பாராட்டுகிறார்கள்.

அதேபோல் இந்தக் கடன் சட்டத்தையும் கொண்டுவந்து விட்டால் அது விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருக்கும் என்றுசொல்லிக் கொண்டு என் தொகுதி பற்றிய சில குறைகளை எடுத்துச்சொல்ல விரும்பு கிறேன்.

எங்கள் பகுதியில் பராக்கிரம பாண்டியன் டாங்க் 65-ல் அடைக்கப்பட்டது. ஆனால் சில மடைகள் அமைத்துக்கொடுக்கப்படாமல் இருக்கின்றன. பொதுப்பணித் துறை அமைச்சரோடு ஒத்துழைத்து இந்தக் காரியத்தைச் செய்துதர வேண்டும். தாம்பிரவர்ணியில் மழைக்காலத்தில் தண்ணீர் பெருகி கடலைச் சென்றடைகிறது. அங்குள்ள குளங்களையெல்லாம் ஆழ மாக்கி வெட்டி கொடுத்தால், ஆழமாக்கிக் கரைகள் அமைத்துக்கொடுத்தால் அந்தக் குளங்களில் தண்ணீர் வந்து நிரம்பி தண்ணீர் தட்டுப்பாடே ஏற் படாது. கங்கைகொண்டான் பகுதியில் மானூர் குளம் என்ற ஒரு பெரிய குளம் இருக்கிறது. அது 1300 ஏக்கர் கொள் அளவு கொண்ட இடம் தாம்பிரவர்ணியில் இருந்து அதற்கு ஒரு கால்வாய் வெட்டிகொடுத்து விட்டால்

20,000 ஏக்கர்கள் மூன்று போகம் விளையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணமாக நாம் நம் உணவு உற்பத்தியையும் பெருக்க ஒரு வாய்ப்பு ஏற்படும்.

பராக்கிரம பாண்டியன் டாங்கிலிருந்துதான் சிவலப்பேரி குளத்திற்குத் தண்ணீர் செல்ல வேண்டியிருக்கிறது. பத்தாண்டுகள் ஆகியும்கூட அந்தக் கால்வாய் வெட்டிக்கொடுக்கப்படவில்லை. ஆகவே, அதையும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், அங்கு சாகுபடி செய்யவேண்டிய நிலங்களில் முள் செடி முளைத்திருக்கிறது. இத்துறை அதிகாரி அவர்கள் அந்த ஜில்லா கலெக்டராக இருந்திருக்கிறார்கள். ஆகவே இதுபற்றி அவர்களுக்கும் தெரியும். அந்த முள் செடிகளை அகற்றினால் அங்கு அந்நிலங்களில் இரண்டு போகம் சாகுபடி செய்ய முடியும். எனவே அதையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த விவசாயத்துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லி அமரலாம் என்று நினைக்கிறேன்.

1965-66-ல் 35 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகிய நிலையில் இன்றைக்கு 55 லட்சம் டன் உற்பத்தியாகி இருக்கிறது என்ற ஒரு அறிக்கையைப் பார்க்கும்போது, இந்தக் குறைந்த காலத்தில் சுமார் 20 லட்சம் டன் அதிகமான அரிசியை உற்பத்தி செய்து, இந்த அரசாங்கம் பசுமைப் புரட்சியை எவ்வளவு வேகமாகவும் முனைப்பாகவும் நடத்தியிருக்கிறது என்பதை இன்றைக்கு இது உணர்த்தியிருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். பொதுவாக இன்றைக்குத் தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால், முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் விவசாய அபிவிருத்திக்காகவே பிரதானமாகத் தீட்டப்பட்டன என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில், they were intended to develop agricultural field என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி திட்டங்களை நடத்தியும், பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் உற்பத்தியில், குறிப்பாக நெல் உற்பத்தியில் எந்தவிதமான ஒரு முன்னேற்றத்தையும் காண முடியாத ஒரு சோகமான நிலை இருந்த அந்த நேரத்தில் நம்முடைய இந்த அரசு இந்தக் குறைந்த காலத்தில் இவ்வளவு பெரியதொரு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்றால் அதற்காக உண்மையை ஒப்புக்கொள்ளக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்ற அந்த அடிப்படையில்தான் நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று விவசாயிகளுக்கு [illegible] அனுபவபூர்வமான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.



இன்று விவசாயிகளுக்கு உற்பத்திக்கான செலவு குறையவில்லை. அது அதிகமாகிக் கொண்டே போகிறது. காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன், இன்று தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை காரணமாக விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்லும்போது அதற்குரிய விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலை இன்று மார்க்கெட்டில் இல்லை. குறிப்பாக நான் சொல்வேன். கமர்ஷியல் ப்ராடக்ட்ஸ் என்று சொல்கிற கரும்பு, பருத்தி, வேர்க்கடலை போன்ற பொருள்களை எடுத்துக் கொள்வோமானால் காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் அப்படியே இருக்கிறது. ஆனால் பருத்திக்கு ஒரு குறிப்பிட்ட செலவு செய்து உற்பத்தி செய்து அதை மார்க்கெட்டுக்கு எடுத்துச் சென்றால் அதற்கு போதிய டிமாண்ட் இல்லை, ஆனால் டிமாண்ட் வருகிற வரையில் காத்துக் கொண்டு ஸ்டாக் செய்து கொண்டு பிறகு விற்கலாம் என்ற நிலைமை நம் விவசாயிகளுக்கு இல்லாத காரணத்தினால் ஏதோ கிடைத்த விலைக்கு அவர்கள் அதை விற்று விடுகிறார்கள். ஆகவே, அதிகச் செலவு செய்து குறைந்தவிலையில் விற்று இன்று ஒரு சிக்கலான சூழ்நிலையில் விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசே முன் வந்து ஏதாவது ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைய தினம் விவசாயிகளுக்கு பலவிதமான கடன்களை நம் அரசு கொடுத்துக் கொண்டு வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து அதை மீண்டும் திருப்பிப் பெறுகிற நிலை ஏற்படும்போது—இப்போது நான் எடுத்துக் கூறியபடி பல சிக்கல்கள் எல்லாம் ஏற்படுவதால்—உரிய நேரத்தில் ஏற்றுக் கொண்ட முறையில் அவர்களுக்கு கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அப்படி ஒரு நிலை ஏற்படுகிறபோது அதிகாரிகள் சென்று கெடுபிடி செய்து, விவசாயிகளுடைய மாடுகளையும், அவர்களுடைய விளைபொருட்களையும் ஜப்தி செய்து வசூல் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலை இருக்குமானால் நிச்சயமாக விவசாயத் துறை பெரிதும் பாதிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். பொதுவாக தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் பலவிதக் கடன்கள் கொடுக்கிறது. ஆனால் அப்படி அளிக்கப்படுகிற கடன்கள், தொழிற்சாலை ஆரம்பமாகி, அந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கி, உற்பத்தியில் ஒரு நிதானம், ஒரு நிலையான அடிப்படை ஏற்பட்ட பிறகுதான் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நிலையை நாம் இன்று வைத்திருக்கிறோம். ஆனால் அதே நிலையை அல்லது வசதியை நாம் இன்று விவசாயிகளுக்குக் கொடுப்பதில்லை. விவசாயிகளுக்கு கிணறு வெட்ட கடன் கொடுத்து விட்டால், மாடுகள் வாங்குவதற்கு அரசாங்கம் கடன் கொடுத்து விட்டால், விதைகள் வாங்குவதற்கு கடன் கொடுத்து விட்டால், உரம் வாங்க கடன் கொடுத்து விட்டால், பம்ப் செட்ஸ் போடுவதற்கு கடன் கொடுத்து விட்டால், ஒரு ஆண்டில் உற்பத்தியாகிறதோ இல்லையோ அவர்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்குமானால், நிச்சயமாக இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கிற இந்த விவசாயத் துறை பாதிக்கப்படுமானால் அது எல்லாத் துறைகளையும் பாதிக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிணறு வெட்டுவதற்கு அல்லது பம்ப் செட் வைப்பதற்கு அல்லது நிலத்தை வளப்படுத்துவதற்காகக் கொடுக்கப்படுகிற கடன்கள் ஒரு ஆண்டுக் காலத்தில் திரும்பப் பெறப்படுவதில்லை. அவை எல்லாம் நீண்ட காலக் கடன்கள். அவர்கள் விரும்பினால் கொடுக்கலாமேயொழிய ஒன்பது ஆண்டுகள் வரையில் அதை கொஞ்சங் கொஞ்சமாக திருப்பிக் கொடுக்க அனுமதி இருக்கிறது. அது வேறு. பயிர் கடன் என்பது வேறு. பயிர் என்பது ஒரு ஆண்டில் விளைந்து விடுகிறது. அப்படி ஒரு வருடத்தில் விளைச்சல் சரியாக இல்லை என்றால் காலத்தோடு கேட்டால் அக்கடனை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க முடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய வாதம் எல்லாம் எந்த முறை தொழில் துறையில் கடைபிடிக்கப்படுகிறதோ அதே முறையை விவசாயத் துறையிலும் கடைபிடிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அந்தத் துறையில் கொடுக்காத சில சலுகைகளையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தத் துறையில் இருக்கும் இடைத்தரகர்களால் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுகிறது. "கான்சன்டிரேஷன் ஆப் எகனாமிக் பவர்" என்று சொல்வார்களே, பொருளாதாரத்தின் அதிகாரங்கள் ஒரு சில இடத்தில் குவிவதால் ஒரு சிலருக்குத்தான் லாபம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த முறையில்தான் நம்முடைய பங்கீட்டு முறையும், நம்முடைய பொருளாதாரத் திட்டங்களும் அமைந்து இருக்கின்றன. அதன் காரணமாக பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மிகவும் ஏழைகளாகவும் இருக்கின்ற சூழ்நிலை வளர்ந்து வருகிறது. இதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இதை நாம் மாற்றுவதற்கு ஒரு முறையைக் கண்டாக வேண்டும். இதை விவசாயத் துறை நல்ல முறையில் ஆராய்ந்து, இந்த விவசாயத் துறையை நல்ல முறையில் மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விவசாயிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் எப்படித் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக ஒரு கமிஷன் நியமித்து, அவர்கள் கொடுக்கும் அறிக்கை மீது ஒரு முடிவு எடுக்கப்படுமானால், அது நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, அப்படி ஒரு கமிஷன் நியமிப்பது சாத்தியமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தொடர்பு கொண்டிருக்கிற அக்ரிகல்சுரல் இன்ஜினீயரிங் ஒர்க்ஷாப், விவசாயக் கருவிகள் சம்பந்தப்பட்ட ஒர்க்ஷாப், சென்னையில் வண்ணைப் பகுதியில் இயங்கி வருகிறது. நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும் அந்த ஒர்க்ஷாப் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்பதற்காக தங்களுடைய ஆலோசனைகளை, நல் முயற்சிகளை அதற்குத் தந்து கொண்டிருக்கிறார்கள்



என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் அந்த இடத்தில் இருக்கும் உற்பத்திக்கான முழுமையான கபாசிடி பயன்படுத்தப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவன் என்ற காரணத்தால் அங்கே இருக்கும் பணியாளர்கள் முழு அளவுக்கு வேலை பெற முடியாத அளவுக்கு தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற புகார் எனக்கு அடிக்கடி வருகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிற்சாலையை முழுமையாகப் பயன்படுத்தும் அளவுக்குத் திட்டங்கள் வகுத்து, விவசாயத் துறைக்கு வேண்டிய கருவிகளை அந்தத் துறையில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன் வெளியில் இருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அந்தக் கருவிகளை இங்கே செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் "பழத் தோட்டங்கள், பழப்பண்ணைகள்" ஏற்படுத்துவதற்காக நல்ல பல திட்டங்களை சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஜவ்வாது மலையைப் பற்றியும் அவர்கள் குறிப்பிடத் தவறவில்லை. நான் அதற்காக என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏலகிரிப் பகுதியில் 4,000 அடிக்கு மேல் காப்பி பயிரிடலாம் என்ற பரிந்துரையை கடந்த பல ஆண்டுகளாக மதிப்பீட்டுக் குழு கொடுத்து வருகிறது. அதைப் பரிவுடன் கவனித்து அங்கே காப்பி உற்பத்தி செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். ஏலகிரியில் ஜெரேனியத்தையும் அதிகமாக உற்பத்தி செய்யலாம். சோதனை செய்து பார்த்ததில் நீலகிரி மாவட்டத்தில் விளைவது போல் அங்கேயும் விளைகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு அதைப் பயிரிடுவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜவ்வாது மலைப் பகுதியில் முந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம் உற்பத்தி செய்வதற்கும் நல்ல ஒரு திட்டத்தை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில்—மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பாகச் சொல்லிக் கொள்வேன்—வேர்க்கடலை அதிகமாக விளைகிறது. என்னுடைய பகுதி முல்லை நாடு—மலைப் பகுதி. அந்த மலைப் பகுதியில் அதிகமான அளவில் வேர்க்கடலை விளைகிறது. ஆகவே, அங்கே ஒரு வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலையை—வாணியம்பாடியிலோ, அல்லது ஆலங்காயத்திலோ—அரசுத் துறையிலோ, அல்லது கூட்டுறவுத் துறையிலோ அமைக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும், அந்த வேர்க்கடலையும் நல்ல முறையில் பயன்படுத்தப்படுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் வகாப் அவர்கள் இருக்கிற நௌலாக் பண்ணையை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சோ. கருணைநாதன் : வணக்கத்திற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மரனியத்தை ஆதரித்து நீலகிரி மாவட்டத்தின்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கிணறு வெட்டுவதற்கு அல்லது பம்ப் செட் வைப்பதற்கு அல்லது நிலத்தை வளப்படுத்து வதற்காகக் கொடுக்கப்படுகிற கடன்கள் ஒரு ஆண்டுக் காலத்தில் திரும்பப் பெறப்படுவதில்லை. அவை எல்லாம் நீண்ட காலக் கடன்கள். அவர்கள் விரும்பினால் கொடுக்கலாமேயொழிய ஒன்பது ஆண்டுகள் வரையில் அதை கொஞ்சங் கொஞ்சமாக திருப்பிக் கொடுக்க அனுமதி இருக்கிறது. அது வேறு. பயிர் கடன் என்பது வேறு. பயிர் என்பது ஒரு ஆண்டில் விளைந்து விடுகிறது. அப்படி ஒரு வருடத்தில் விளைச்சல் சரியாக இல்லை என்றால் காலத்தோடு கேட்டால் அக்கடனை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க முடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய வாதம் எல்லாம் எந்த முறை தொழில் துறையில் கடைபிடிக்கப்படுகிறதோ அதே முறையை விவசாயத் துறையிலும் கடைபிடிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அந்தத் துறையில் கொடுக்காத சில சலுகைகளையும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தத் துறையில் இருக்கும் இடைத்தரகர்களால் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுகிறது. "கான்சன்டிரேஷன் ஆப் எகனமிக் பவர்" என்று சொல்வார்களே, பொருளாதாரத்தின் அதிகாரங்கள் ஒரு சில இடத்தில் குவிவதால் ஒரு சிலருக்குத்தான் லாபம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த முறையில்தான் நம்முடைய பங்கீட்டு முறையும், நம்முடைய பொருளாதாரத் திட்டங்களும் அமைந்து இருக்கின்றன. அதன் காரண மாக பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மிகவும் ஏழைகளாகவும் இருக்கின்ற சூழ்நிலை வளர்ந்து வருகிறது. இதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இதை நாம் மாற்றுவதற்கு ஒரு முறையைக் கண்டாக வேண்டும். இதை விவசாயத் துறை நல்ல முறையில் ஆராய்ந்து, இந்த விவசாயத் துறையை நல்ல முறையில் மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விவசாயிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் எப்படித் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக ஒரு கமிஷன் நியமித்து, அவர்கள் கொடுக்கும் அறிக்கை மீது ஒரு முடிவு எடுக்கப்படுமானால், அது நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, அப்படி ஒரு கமிஷன் நியமிப்பது சாத்தியமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தொடர்பு கொண்டிருக்கிற அக்ரிகல்சுரல் இன்ஜினீயரிங் ஒர்க்ஷாப், விவ சாயக் கருவிகள் சம்பந்தப்பட்ட ஒர்க்ஷாப், சென்னையில் வண்ணைப் பகுதி யில் இயங்கி வருகிறது. நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும் அந்த ஒர்க்ஷாப் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்பதற்காக தங்களுடைய ஆலோசனைகளை, நல் முயற்சிகளை அதற்குத் தந்து கொண்டிருக்கிறார்கள்





என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் அந்த இடத்தில் இருக்கும் உற்பத்திக்கான முழுமையான கபாசிடி பயன்படுத்தப்படவில்லை என் பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவன் என்ற காரணத்தால் அங்கே இருக்கும் பணியாளர்கள் முழு அளவுக்கு வேலை பெற முடியாத அளவுக்கு தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற புகார் எனக்கு அடிக்கடி வருகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிற்சாலையை முழுமையாகப் பயன்படுத்தும் அளவுக்குத் திட்டங்கள் வகுத்து, விவசாயத் துறைக்கு வேண்டிய கருவிகளை அந்தத் துறையில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள் கிறேன் வெளியில் இருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அந்தக் கருவிகளை இங்கே செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் "பழத் தோட்டங்கள், பழப்பண்ணைகள்" ஏற்படுத்துவதற்காக நல்ல பல திட்டங்களை சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஜவ்வாது மலையைப் பற்றி யும் அவர்கள் குறிப்பிடத் தவறவில்லை. நான் அதற்காக என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏலகிரிப் பகுதியில் 4,000 அடிக்கு மேல் காப்பி பயிரிடலாம் என்ற பரிந்துரையை கடந்த பல ஆண்டுகளாக மதிப்பீட்டுக் குழு கொடுத்து வருகிறது. அதைப் பரிவுடன் கவனித்து அங்கே காப்பி உற்பத்தி செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். ஏலகிரியில் ஜெரேனியத்தையும் அதிகமாக உற்பத்தி செய்யலாம். சோதனை செய்து பார்த்ததில் நீலகிரி மாவட்டத்தில் விளைவது போல் அங்கேயும் விளைகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு அதைப் பயிரிடுவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜவ்வாது மலைப் பகுதியில் முந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம் உற்பத்தி செய்வதற்கும் நல்ல ஒரு திட்டத்தை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில்—மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் குறிப் பாகச் சொல்லிக் கொள்வேன்—வேர்க்கடலை அதிகமாக விளைகிறது. என் னுடைய பகுதி முல்லை நாடு—மலைப் பகுதி. அந்த மலைப் பகுதியில் அதிகமான அளவில் வேர்க்கடலை விளைகிறது. ஆகவே, அங்கே ஒரு வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலையை—வாணியம்பாடியிலோ, அல்லது ஆலங்காயத்திலோ—அரசுத் துறையிலோ, அல்லது கூட்டுறவுத் துறை யிலோ அமைக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். இதனால் அந்தப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும், அந்த வேர்க்கடலையும் நல்ல முறையில் பயன்படுத்தப்படு வதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் வகாப் அவர்கள் இருக்கிற நெளலாக் பண்ணையை நல்ல முறை யில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சோ. கருணைநாதன் : வணக்கத்திற்குரிய மாற்றுத் தலைவரவர் களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியத்தை ஆதரித்து நீலகிரி மாவட்டத்தின்

சார்பாக 1,-2 கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்
தில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியின் போதும், ஏனைய இன்னல்
களின் போதும், அந்த மாவட்ட மக்களுக்கு இந்த அரசு பல வகைகளிலும்
உதவி செய்து, ஆதரவைத் தந்து, நல் ஆதரவை நல்கி, அங்கேயுள்ள
ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு நன்மையைச் செய்து இருக்கிறது.
அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு அங்கே ஏற்பட்ட வரட்சியின் காரணமாகவும், இந்த
ஆண்டு ஏற்பட்ட இன்னல்களின் காரணமாகவும் அங்கே ஏழை எளிய
விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பித் தருவதற்கு மிகவும் கஷ்டப்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இது
பற்றி எடுத்துக் கூறி, ஒரு தீர்மானம் கூடப் போட்டு அனுப்பியிருக்கிறோம்.
ஓராண்டு காலத்திற்கு அரசு அந்தக் கடனைத் தள்ளி வைக்க வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக யுத்த காலத்தில் புறம்
போக்கு நிலங்களை விவசாயிகளுக்குத் தந்து இருந்தார்கள். அந்தப் புறம்
போக்கு நிலங்களை மீண்டும் அந்த நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்குத்
தருவீர்களானால் அங்கே நல்ல முறையில் விவசாயிகள் உணவு உற்பத்
தியைப் பெருக்க முடியும், ஆகவே, அந்த விவசாயிகளுக்கு நிலம்
வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காய்கறி, உருளைக்கிழங்கு
உற்பத்தி செய்வதற்கு உதவியாக அங்கே செக்டாம்கள் கட்டிக் கொடுத்து
இருக்கிறார்கள். சில இடங்களில் அந்தச் செக்டாம்கள் மழையால் இடிந்து
சரிந்து போய் இருக்கின்றன. அதைத் சீர்படுத்தியும், மேலும் பல கிராமப்
புறங்களில் செக்டாம்கள் ஏற்படுத்தித் தரவும் அரசு நடவடிக்கை மேற்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உருளைக் கிழங்கு பூச்சி
கொல்லி மருந்து (டைதீன்)க்கு முன்பு அரசு பாதி மானியம் கொடுத்து
விற்று வந்தது. இப்போது அதை பூரா விலையும் கொடுத்து வாங்க
வேண்டி இருக்கிறது. மீண்டும் அந்தச் சலுகையை அவர்களுக்குத் தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் இன்டோ-ஜெர்மனி மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழ் உருளைக்கிழங்கு வளர்ச்சி போன்றவற்றிற்கு உதவும்
வகையில் 12,000 மெட்ரிக் டன் ரசாயன உரம் தரப்படுகிறது. இதை
நீலகிரி மார்கெட்டிங் சொசைடி மூலமாக விவசாயிகளுக்கு வழங்க
ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக அந்த நீலகிரி
மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரி
வித்துக் கொள்கிறேன். தரமான உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வதற்கு
அவர்கள் விதை தருகிறார்கள். ஆனால் எல்லா ஏழை விவசாயிகளுக்கும்
சரிசமமாகத் தர முடியவில்லை. ஆகவே, அந்த ஏழை விவசாயிகளுக்கு
ஓரளவுக்கு வெளி மார்க்கெட் விலையை அனுசரித்து அந்தவிலைக்கு கொடுத்து
அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் தேயிலைத்
தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் நிலையைக் கருத்தில் கொண்டு கடந்த
ஆண்டு ஜுன், ஜுலை, ஆகஸ்டின் மின்சாரத்தை வழங்கப்படவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லாமல் இருந்தால் தேயிலைத்
தொழில் செய்பவர்கள் இன்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள்
நிலையை ஆராய்ந்து தகுந்தபடி மாற்றவேண்டுமென்று கூறிக்கொள்
கிறேன்.



மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிற
இந்த அரசு நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஏழை மக்களுக்கு பல
விதத்திலும் உதவி செய்திருக்கிறது. அங்கே மழையால் மண் அரிப்பு
ஏற்படும். அதைத் தடுத்து நிறுத்த மண் அரிப்புத் திட்டத்தின் கீழ்
அங்கே ஏழை எளிய விவசாயிகளின் நிலங்களுக்கு கடன் வழங்கியது. மு. ப.
ஆனால் அந்தக் கடனை திருப்பித் தர முடியாமல் இருந்தார்கள். 11.30
நீண்ட நாட்களாக அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டும்,
சம்பந்தப்பட்ட அமைச்சர் மனம் உருகியும் அது நிறைவேற்றப்பட
வில்லை. ஆனால் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ. 29·76
லட்சத்தை தற்போது ரத்து செய்து இன்று ஆணையிட்டு இருக்கிறார்கள்.
அதற்காக நீலகிரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். நான் அதிருஷ்டக்காரன். இன்று என்னுடைய பிறந்த
நாள். இன்று இது வந்திருப்பதை என்னுடைய பிறந்த நாள் பரிசாக
ஏற்றுக்கொள்கிறேன். அதைத் தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன்.

வணக்கம்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> தலைவரவர்களே, இந்த இரண்டு
மானியங்களும் மிகக் கேந்திரமான, விரிவாக விவாதிகன்] பலன்
பெற்த் தக்க மான்யங்களாக இருந்தாலும் கூட, இந்த மான்யங்களுக்கு
ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் நியாயம் என்று படக்கூடிய விதத்தில் இல்லா
மலும், அங்கத்தினர்கள் எதையும் சொல்லமுடியாத அளவுக்கும் தான்
இருக்கிறது என்பதை முதலில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.
இங்கே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த விஷயத்தில்
தலையிட்டு இந்த மான்யங்களுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டிருந்தால்
நலமாக இருந்திருக்கும் என்று கருதுகின்றேன்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :</u> பேரவைத் துணைத்
தலைவரவர்களே, நான் எதிர்க்கட்சித் தலைவரிடத்திலும், ஆளுங்கட்சித்
தலைவரிடத்திலும், மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களிடத்திலும்
வேளாண்மைத் துறை மான்யக் கோரிக்கை விவாதத்தை இன்றைய தினம்
காலையிலும், மாலையிலோ அல்லது மறு நாளோ உணவுத் துறை
மான்யக் கோரிக்கையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று
சொன்னேன். முதலில் அவர்களும் சரியென்று ஒத்துக்கொண்டார்கள்.
பிறகு என்ன காரணத்தாலோ எதிர்க்கட்சித் தலைவர்கள் இன்றைய தினம்
இந்த ஒரு வேளையே போதும் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் :</u> (திரு. நா. வீராசாமி) இதை ஒரு
விவாதமாக ஆக்கி இதற்கு அரை மணி நேரம் ஆக்கிவிட வேண்டாம்
என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார் :</u> தலைவரவர்களே, மாலை நேரத்
திலும் இன்றைய தினம் விவாதத்தை வைக்கவேண்டும் என்று முதலில்
ஒத்துக்கொண்டோம். ஆனால் மத்தியானத்திற்குப் பிறகு கல்வித்துறை
செலக்ட் கமிட்டி கூட்டம் இருப்பதால் கலந்தாலோசித்து, மத்தியானத்
திற்குப் பிறகு இந்த விவாதத்தை வைக்கக்கூடாது என்று அரசு தரப்பில்

[திரு ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 16

கருத்து தெரிவித்ததால், காலையோடு போதும் என்று ஒத்துக்கொண்
டோம். ஏதோ மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் அவகாசம்
வேண்டாம் என்று உத்தேசித்துச் சொல்லவில்லை.

(Thiru K. T. K. Thang amani rose)

Mr. CHAIRMAN (THIRU N. VEERASAMI): I am sorry, I am
not going to allow any points of order on this.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, முற்பகலில்
வேளாண்மைத் துறை மான்ய விவாதம் தனியாக நடக்க வேண்டு
மென்றும், பிற்பகல் உணவுத் துறையை விவாதிக்கலாம் என்றும் முத்
லமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கல்வி சம்பந்தமான செலக்ட்
கமிட்டி கூட்டம் பிற்பகலில் இருப்பதாலும், இந்த மான்யங்கள் மீது
அதிகமான உறுப்பினர்களே பேச வேண்டியிருப்பதாலும், 3 மணி வரை
யிலாவது இன்றைய தினம் அவையில்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) நடவடிக்கைகளை
நீடிக்கின்ற அளவுக்கு வைத்தால் நல்லது. பல பேர் பேச
வேண்டியிருக்கிறது. எங்களுடைய கட்சியிலிருந்து ஒருவர்
வேளாண்மைத் துறை பற்றியும், ஒருவர் உணவுத்துறை பற்றியும்
பேசவேண்டியிருக்கிறது. ஆகவே பிற்பகல் கூட்டம் வேண்டா
மென்றால், எவ்வளவு தூரம் முற்பகலில் நீடிக்க முடியுமோ அவ்வளவு
தூரம் நீடித்துக் கொடுத்தால் நல்லது. சென்ற வருடம் இந்தக்
கோரிக்கையை மூன்று மணி வரையிலும் உட்கார்ந்து விவாதித்திருக்கி
றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(Mr Deputy Speaker was in The Chair)

THIRUMATHI T. N. ANANDANAYAKI: One more request,
Sir. When there is the Budget Session, it would be advisable not to have
any meetings of the Select Committees. If Government have meeting
of Select Committee in the afternoon, we are put to a lot of difficulties.
After the session in the forenoon, it is difficult to come to the Select
Committee meeting in the afternoon. Therefore, I request that the
Select Committee may be postponed and more time allotted for these
Demands.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செலக்ட் கமிட்டி
கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றால், சேர்மனை கேட்க வேண்டும்.
ஆகவே முற்பகலிலேயே முடித்து விடலாம் என்று தெரிவித்துக் கொள்ளு
கிறேன். ஏதோ அட்வைஸ் சொல்லுவதாக நினைக்க வேண்டாமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன். இண்டரப்ஷன் இல்லாமல் பேசினால் ஒவ்
வொருவரும் 10, 12 நிமிடம் பேசி முடிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, தாங்களே
செலக்ட் கமிட்டி சேர்மனிடம் ஒத்திவைக்க வேண்டும் என்று சொல்லலாம்.
அது அவ்வளவு சிரமமான விஷயமல்ல.



1973 மார்ச் 16] [திரு. கே. டி. கே. தங்கமணி]

Please think over if it is possible to have the Select Committee meeting
postponed to some other day. If that is done, discussions can be
completed in the forenoon and replies can be reserved for the afternoon.

Mr. DEPUTY SPEAKER: I do not mind sitting up to 2·30 or
even 3 p.m. Members have to think of the difficulties of other Members
also. For many members there will be the lunch problem. (Interrup-
tion) The Select Committee on Private Schools is meeting this afternoon
and that had been arranged and it is impossible to postpone that meeting
now. It has to finish its deliberations and present its report before the
Education Demand is taken up.

திரு. நா. வீராசாமி: 3 மணி என்றால், பிரஸ் இருக்கிறது, அதிகாரி
கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உணவுக்குச் செல்லவேண்டும்.
அவர்களை எல்லாம் 3 மணி வரை உட்காரும்படி கட்டாயப்படுத்தக்
கூடாது. 2 மணி அல்லது 2¼ மணி வரை பேசி முடித்துக் கொள்ளலாம்
என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. முனு ஆதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 2 மான்யங்
களில் 2 பேருக்கு பேச சந்தர்ப்பம் அளிப்பதாகச் சொல்லிவிட்டு, இப்போது
ஒருவருக்குத்தான் பேச சந்தர்ப்பம் என்கிறீர்கள். மிக முக்கியமான
மான்யங்கள் ஆதலால், அவையின் கூட்டத்தை மூன்று மணி வரை,
அல்லது மாலையில் வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். உறுப்பினர்
பெயரைக் கொடுத்துவிட்டு, பேசமுடியாத நிலையில் இருப்பதால், மாலை
யில் வைத்தால், பேச சந்தர்ப்பம் இருக்குமென்று தெரிவித்துக் கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
கள் அலங்கார வார்த்தைகளைக் குறைத்து விஷயத்தைச் சொன்னால்
பரவாயில்லை.

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, பேசுகின்ற பாணியை
புதிதாக மாற்றிக்கொள்ளுவது முடியாது. இந்த மான்யம் மிகவும் முக்கிய
மானமான்யம். 22½ கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இதை வைத்துக்
கொண்டு இந்த வருடத்தில் த ழகத்தின் பாதி செல்வத்தை உற்பத்தி
செய்கின்ற மிக முக்கியமான மான்யமென்பதை உணர்கிறேன்.

அது மாத்திரமல்ல. இந்த விவசாயத் துறையில் 100-க்கு 75
மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும்
தமிழ் நாட்டின் செல்வத்தில் பாதி, தமிழ் நாட்டின் பொருளாதார,
அரசியல், சமுதாய வாழ்வு இந்த விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற
100-க்கு 75-மக்களால் ஏற்படுகின்றது என்பதால் பல்வேறு அம்சங்களைக்
குறிப்பிட வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால்,
என்னைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்தி அதிகரிப்பு சம்பந்த
மாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டுகிறேன்.
அதில் எந்தவித ஆட்சேபமும் கிடையாது. இந்தப் புள்ளி விவரங்களைப்
பார்க்கின்றபோது எனக்கு பிரமை ஏற்படுகிறது. இவ்வளவு உற்பத்தி
செய்திருக்கிறோம்; கறிகாய், தான்ய வகைகள், பழத் தோட்டங்கள்
என்று புள்ளி விவரங்களில் கொடுத்திருப்பதைப் பார்த்தால், தமிழ்நாடு
முழுவதும் பாலும் தேனும் ஓடுவது போல் காட்சி என் முன்பாக
நிற்கிறது.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 மார்ச் 16

ஆனால் உண்மையாகவே இந்தச் செல்வ உற்பத்தி ஏற்பட்டிருக்கும்
போது விவசாயிகளுடைய நிலைமை என்ன ? விவசாயிகளின் தரம்
எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால்தான் சரியான
முடிவுக்கு வர நமக்கு சௌகரியமாக இருக்கும். ஏனென்றால்,
"ஏர் பின்னது உலகம்" என்ற திருக்குறள் எல்லாம் போடப்படுகிறது.
நான் ஒன்று கூறுவேன். பாரதியார் பாடியிருக்கிறார். "நெஞ்சு
பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மானிடரை நினைந்துவிட்டால்"
என்று பாரதியார் பாடியிருப்பது இன்றைக்கும் பொருத்தமாக இருக்
கிறது. யாரைக் கண்டாலும் பயப்படுகின்ற அளவுக்கு, எல்லோராலும்
ஏமாற்றப்படுகின்ற அளவுக்கு, நவீன சமுதாயத்துக்குச் சம்பந்தமில்லாத
அளவுக்கு வாழும் விவசாயிகளை கணக்கில் எடுத்துக்கொண்டு கவனிக்க
வேண்டும். அந்த அடிப்படையில் எடுத்துக் கொண்டு சுருக்கமாக
கூறுகிறேன். இன்றைக்கு விவசாயத்தை மேம்பாடு செய்ய எடுத்துக்
கொள்ளப்பட்டிருக்கிற பல்வேறு விஷயங்களில் முக்கியமான சில விஷ
யங்களை குறிப்பிட்டுவிட்டு ஏனைய விஷயங்களுக்கு வருகிறேன்.

இன்றைய தினம் நல்ல முறையில் உரமிடுதல், பயிர் பாதுகாப்பு,
இது போன்ற பல்வேறு இனங்களில் மிகச் சிறப்பாக பணியாற்றியிருக்
கிறார்கள் என்றாலும், அனுபவ அடிப்படையில் பார்த்தால், தரமான
விதை என்பது தனியார் கம்பெனிகளிடத்தில் வாங்குவது என்பதை
கூடுமான வரையில் தடுக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் விதை
முளைப்பதில்லை. அவ்வாறு போனால் விவசாயியின் ஒரு வருட வாழ்வு
நசிந்து போகும். அவன் வேறு தொழிலுக்குப் போகவேண்டியிருக்கும் ;
தொழிலை மாற்ற வேண்டியிருக்கும். ஆகவே தனியார் துறையில்
விதையை தயார் செய்வதை நிச்சயமாக நிறுத்த வேண்டும். உத்திர
வாதமான விதைகளைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, பூச்சி மருந்து சம்பந்தமாக எடுத்துக்கொண்டால்
சமீப காலத்தில் பலவித புகார்கள் வருகின்றன. பூச்சி மருந்து கொடுப்பது
உணவு உற்பத்திக்கு பாதுகாப்பு நடவடிக்கையாகும். ஆகவே பூரா
பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். விவசாயிக்கு
இந்தச் சேவையைச் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை மொத்தமாக
அரசாங்கம் வசூல் செய்து கொள்ளலாம். ஏனென்றால் பூச்சி மருந்து
தெளிப்பதில் சில விவசாயிகள் அலட்சியமாக இருக்கிறார்கள். ஒரு
வயலில் இருக்கின்ற பூச்சி, அந்த வயல்காரன் அலட்சியமாக இருப்ப
தால், பல வயல்களுக்குப் பரவும். எல்லோரையும் பூச்சி மருந்து
அடித்தே தீரவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. ஆகையால்
பூச்சி மருந்து அடிக்கும் பொறுப்பை அரசாங்கமே எடுத்துக் கொண்டு
பூச்சி மருந்து தெளிப்பானை வைத்துக் தெளித்தாலும் சரி, விமானம்
மூலம் தெளித்தாலும் சரி, இந்த மான்யு கோரிக்கையான ரூ. 22½
கோடியில், ஒரு இரண்டு, மூன்று கோடி இந்த இனத்திற்குச் செல
வழித்தால் நாட்டுக்கு நல்லது. அப்படிச் செய்ய வேண்டிய வழி
வகைகளைச் செய்யவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றத் தொழில்களை தேசியமயமாக்குவதைப்போல் இந்த உரம் தயா
ரிக்கும் கம்பெனிகளையும் தேசியமயமாக்கவேண்டும். இல்லை என்றால்
அவர்கள் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டுதான் இருப்பார்கள். அது
மட்டுமல்ல. தரமான உரமாக உற்பத்திச் செய்வதில்லை. விலையும் அதிகம்.



1973 மார்ச் 16] [திரு. மணலி சி. கந்தசாமி]

இதெல்லாம் சாதாரண விவசாயிகளுக்குத் தெரியாது. ஆகவே, தனிப்
பட்டக் கம்பெனிக்காரர்களிடம் விற்பனைச் செய்வதற்குள்ள உரிமையைக்
கொடுக்கக்கூடாது. உரம் தயாரிக்கும் கம்பெனிகளையே அரசாங்கம் ஏற்று
நடத்தவேண்டும். இந்திய அரசாங்கம் கொடுக்கின்ற உரம், இங்கே இருக்கக்
கூடிய கம்பெனிகள் தயாரிக்கின்ற உரங்கள் எல்லாம் ஏராளமாக
இருக்கின்றன. இருந்தும் நியாயமான விலைக்குக் கிடைக்கவில்லை
என்றால் அதற்கு என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.
அதற்கு எல்லாம் தனிப்பட்டவர்கள் விற்பனை செய்வதுதான் காரணம்.
ஆகவே உடனடியாக எல்லா உரங்களையும் அரசாங்கமே கொள்முதல்
செய்து விநியோகம் செய்தால் இந்தப் பிரச்சனையைக் கட்டுப்படுத்த
முடியும்.

இந்த புள்ளி விபரங்களைப் பார்க்கின்றபோது நாம் உற்பத்தியில்
எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம். இருந்தாலும் விலைவாசி குறைந்த
பாடில்லை. ஏறிக்கொண்டே போகிறது. எல்லாப் பொருட்களையுமே உற்
பத்தி செய்கிறோம். வாழைப்பழம் 12 காசு, உருளைக்கிழங்கு கிலோ 1½
ரூபாய் விற்கிறது. அதேமாதிரி நெல், அரிசி, பருப்பு வகைகள் எல்லாமே
உற்பத்திப் பெருக பெருகப் விலையும் ஏறிக்கொண்டே இருக்கிறது. 59
லட்சம் டன் அரிசி உற்பத்தி என்று சொல்கிறீர்கள். எனக்கு ஒரு
சந்தேகம் ஏற்படுகிறது, அந்த அளவுக்கு இன்னும் விலை ஏறிவிடுமோ
என்று. அந்த பொருட்களை உற்பத்தி செய்பவர்களிடம் உரிய விலை
கிடைப்பதில்லை. உற்பத்தி செய்தவர்களே அந்தப் பொருளை வாங்க
வேண்டுமென்றால் அவன் கொடுத்த விலைக்கு அல்லது அதற்கு சம்பந்தப்
பட்ட விலைக்கு கிடைப்பதில்லை. வாங்கும் விலைக்கும் கொடுக்கும் விலைக்கும்
சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. இதற்கு யார் காரணம் என்று
பார்த்தால் இடையிலே இருக்கின்ற இடைத்தரகர்கள்தான் என்பது
நமக்கு நன்றாகத் தெரியும். இடைத்தரகு செய்கின்ற வணிக சூதாடிகள்
தான் இதற்குக் காரணம். பருத்தியை எடுத்துக்கொண்டாலும் சரி,
கரும்பை எடுத்துக்கொண்டாலும் சரி, பருப்பு வகைகளை எடுத்துக்கொண்
டாலும் சரி, அரிசியை எடுத்துக்கொண்டாலும் சரி—இப்படி எந்தப்
பொருளை எடுத்துக்கொண்டாலும் சரி, இந்த வணிக சூதாடிகளினால்
வாங்கும் விலைக்கும், கொடுக்கும் விலைக்கும் ஒரு சம்பந்தமே இல்லாமல்
விலை அதிகரித்துவிடுகிறது. ஆகவே, இந்த இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட
வேண்டும். இல்லை என்றால் நீங்கள் 59 அல்ல, 69 அல்ல, 72 லட்சம் டன்
அரிசி உற்பத்தி செய்தாலும் பிரயோஜனம் இல்லை ; உற்பத்தி பெருகக்
கூடிய அளவுக்கு விலை ஏறிவிடுமோ என்றுதான் நான் பயப்படுகிறேன்.

பருத்தி அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடும்
ஒன்று. இங்கே அதிகமான டெக்ஸ்டைல் மில்ஸ் இருக்கின்றன. ஆனால்
பருத்தி விலைக்கும், துணி விலைக்கும், நூல் விலைக்கும் ஏகப்பட்ட வித்தி
யாசம் இருக்கிறது. அதற்குக் காரணமான, பெருச்சாளிகள் ஒழிக்கப்பட
வேண்டும். இந்த அறிக்கையிலே கூட சர்க்கரை ஆலை முதலாளிகளோடு
இணக்கமாகப் பேசி முடிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அவர்களிடத்தில் என்ன இணக்கம் வேண்டியிருக்கிறது. அவர்கள் சிண்டைப்
பிடித்து கொடு என்று சொல்வதை விட்டுவிட்டு கெஞ்சினால் அவர்கள்
எப்படிக் கொடுப்பார்கள் ? 2½ லட்சம், 3 லட்சம் என்று அவர்கள் பெருத்த
லாபம் சம்பாதிக்கிறார்கள். அதிலிருந்து 6 அல்லது 7 சதவிகிதம் விவசாயி
களுக்குக் கொடுத்துவிடுவதால் அவர்கள் ஒன்றும் கெட்டுவிடமாட்டார்கள்.

கஷ்டப்பட்டு உழைப்பவன் விவசாயி. அவனுக்கு லாபம் இல்லை. எங்கோ ஒரு இடத்தில் சோம்பேறியாய் போனை வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு லட்சக்கணக்கில் லாபம் கிடைக்கிறது. அந்த சோதனை, இந்த சோதனை, அதற்குத் தள்ளுபடி, இதற்குத் தள்ளுபடி 6 சதவிகிதம், 7 சதவிகிதம் என்று எதை எதையோ சொல்லி இவ்வளவு தான் பணம் என்று கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு இதெல்லாம் எங்கே தெரியப்போகிறது ? கொடுத்ததை வாங்கிக்கொண்டு போகிறார்கள். இவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். நெல் ஒரு கலம் 12 ரூபா யாக வாங்குகிறார்கள். 20 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஒரு கலத்திலே லாபம் 8 ரூபாய். இது நியாயமா ? இந்த அநியாயம் தடுக்கப்பட வேண் டும். இவைகளுக்கு எல்லாம் ஒரு முடிவு ஏற்படாவிட்டால் உண்மை யிலேயே நாட்டில் ஒரு புரட்சி ஏற்படக்கூடும், விவசாயிகள் கிளர்ந்தெழு வார்கள். நான் அரசாங்கத்தைப் பயமுறுத்துவதற்காக இதைச் சொல் கிறேன் என்று நீங்கள் எண்ணவேண்டாம். விவசாயிகள் நிலைமைகளைப் பற்றி பலர் எழுதியிருக்கிறார்கள். அதையெல்லாம் படித்திருக்கிறேன். அண்மையில் குன்ரால் முர்ரார் என்பவர் விவசாயிகளைப்பற்றி 4 சாப்டர் எழுதியிருக்கிறார். அதையும் படித்தேன். ஆகவேதான் இந்திய பொரு ளாதாரத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று சொன்னால், இடைத் தரகர்கள், சோம்பேறிகள், பெருச்சாளிகள் ஒழிக்கபபட்டாகவேண்டும் என் பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே இந்த மானியத்தைப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, பூச்சிக்கொல்லி மருந்து அடிப்பதைப்பற்றி சில வார்த்தைகள் கூறுகிறேன். விசைத்தெளிப்பான் கொண்டோ அல்லது வேறு சாதனங்கள் மூலமோ பூச்சி மருந்து தெளிப்பதற்கு விவசாயி களுக்குப் போதுமான அனுபவம் கிடையாது. இப்போது நீங்கள் பல படைகளை வைத்திருக்கிறீர்கள். அதைப்போன்று இந்த மருந்து தெளிப்பதற்கும் சிரணிப் படையோ அல்லது வேறு ஒரு படையோ வைத்துக்கொண்டால் நல்லது. படித்த வாலிபர்கள் ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருக் கிறார்கள். அவர்களில் 10 பேரை ஒரு ஊருக்கு மருந்து தெளிக்கும் வேலையைச் செய்யச் சொல்லலாம். மருந்து தெளிக்கும் சமயத்தில் மாதம் ஒருவருக்கு 50 ரூபாய் சம்பளம் கொடுக்கலாம். அந்தப் பணத்தை வேண்டுமானால் அறுவடைக் காலங்களில் விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். பூச்சிகொல்லி மருந்து விற்பனையையும் அரசாங்கமே மேற்கொண்டு, அரசாங்கமே பூச்சிகொல்லி மருந்தைத் தெளிப்பதற்கும் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து வசூல் செய்யும் முறையை மாற்றியமைக்கவேண்டும். இந்த வருஷம் கடனைக்கொடுத்து, அடுத்த வருஷம் வசூல் செய்துவிட்டு, பின்னால் அடுத்த சாகுபடிக்கு உடனே கடன் கொடுக்கும் முறையால் பல தொல்லைகள்தான் ஏற்படுகின்றன. நான் கூட சாகுபடிக்காக ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். இப் போது திருப்பிக் கட்டப்போகிறேன். கட்டிய 15 நாட்களுக்குள் திரும்பவும் கடன் வாங்கப் போகிறேன். பணத்தைக் கட்டுவதற்கு இப்போது எனக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். அதில் பணத்தைக் கட்டிவிட்டு, திருப்பி வேண்டுமானால் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் கடனைக் கொடுத்துவிட்டு



மூன்று வருடங்கள் கழித்து வசூல் செய்யலாம். அதற்குள் இந்த விவசாயி திரும்ப கடன் வாங்காமல் சாகுபடி செய்வதற்குள்ள ஒரு நிலையை அடைந்துவிடக்கூடும். அந்த மூன்று வருஷங்களுக்கும் சேர்த்து வட்டியை வாங்கிக்கொள்ளுங்கள். அதில் தவறு இல்லை. வருஷா வருஷம் கடன் வாங்குவதால், விவசாயிகள் போகவும் வரவும், பாரம் ஃபில்லப் பண்ணவும்தான் சரியாக இருக்கும். ஆகவே கடனைப்பற்றி ஒரு புதிய கண்ணோட்டம் செலுத்தவேண்டும். அது அல்லாமல் தனிப்பட்டவர் லேவா தேவி மாதிரி ஆதித்தனார் லேவாதேவியாக அமைந்துவிடக் கூடாது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒரு விளக்கத்தைக் கேட் கிறேன். விதைக்கக்கூடிய காலத்தில் கடன் கொடுக்கிறோம். அறு வடைக் காலத்தில் கடனை வசூல் செய்கிறோம். நமது விவசாயிகள் நிலைமை நமக்குத் தெரியும். 2, 3 வருஷங்கள் கடனை வசூல் செய்யாமல் விட்டுவிட்டால் அவர்களால் திருப்பிச் செலுத்துவது கஷ்டம். ஆகையால் விதைக்கும்போது கடன் கொடுத்து, அறுவடை காலத்தில் வசூல் செய்து, திரும்பவும் விதைக்கும்போது கொடுக்கின்ற முறை சிறந்த முறை இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : நமது விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் அல்ல. இப்போது மட்டும் திருப்பிக் கொடுக்கா மலா இருக்கிறார்கள் ? அதைக் கறாராக வசூல் செய்யாமலா இருக் கிறீர்கள் ? அதேமாதிரி, கடனைக் கொடுத்துவிட்டு, ஒரு மூன்று வருஷம் விட்டு வையுங்கள். மூன்று வருஷத்திற்குள்ள வட்டியையும் சேர்த்து இப்போது வசூலிப்பதுபோல் கறாராக வசூல் செய்யுங்கள். அதிலே தவறு கிடையாது. அதற்கு ஏன் தயக்கம் காட்டவேண்டும் ? இப்படி தனிப்பட்ட வர்கள் லேவாதேவி நடத்துவது மாதிரி அவ்வப்போது வசூல் செய்வது நல்ல முறை அல்ல. கடனைக் கொடுத்து விட்டு மூன்று வருஷம் கழித்து வசூல் செய்து கொள்வதுதான் அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஒரு சிறந்த பரிகாரமாக இருக்கும் ; அப்படியானால்தான் அவர்கள் முன்னேற முடியும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு கடன் கொடுக்கக்கூடிய நிலவள வங்கிகள், கோவாப்ரேடிவ் பேங்குகள் எல்லாம் இருக்கின்றன. இதில் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு சம்பந்தமே இல்லை என்ற நிலை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். என்னுடைய தொகுதியிலே இந்த நிலவள வங்கி எங்கே இருக்கிறது என்பதே எனக்குத் தெரியாது. அதேபோல இந்த மார்க்கெட்டில் சொசைடியும் எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். எனவே, இதிலே நான் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம் இந்த ஸ்தாபனங்களில், சட்டசபை அங்கத்தினர்களையாவது சேர்த்துக்கொள்வது பொருத்தமுடையதாக இருக் கும். அது உங்களுக்கும் நல்லது. விவாதங்களுக்கு இடம் இருக்காது என்ற வகையிலே. அதேபோல, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் சேர்ப்பது, பொறுப்பை கொடுப்பது மிகமிக அவசியம் என்று கருதுகிறேன். பதவி வேண்டும் என்பதற்காக இதை சொல்லவில்லை. கோயில் பஞ்சாயத்து கேட்கவில்லை. பல்வேறு விஷயங்

களில் நிர்வாகம் செம்மையாக நடைபெற சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அதில் பங்கு கொடுப்பது நன்மையாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு....மணி அடித்துக்கொண்டே இருக்கிறது, முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வி. பழனிவேலு (ஆத்தூர்): பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டு வேளாண்மை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

விவசாயத்திற்கு அடிப்படைத் தேவை தண்ணீர். பாசன வசதி உள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் தொல்லைப் படவேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் நிலத்தடி நீரை நம்பித்தான் விவசாயத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில், மழை நீரை தேக்கி வைத்து கிணற்றில் நீர் ஊற்று பாசனம் செய்ய வேண்டியிருக்கிறது. சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் இப்படி பெரும்பாலும் கிணற்று நீரை பாசனத்திற்கு உபயோகப்படுத்துகின்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் நிலத்தடி நீரை பயன்படுத்திக்கொள்ள, மழை நீரை தேக்கி வைத்துக்கொள்ள பொதுப்பணித்துறையும், வருவாய்த்துறையும் ஆதரவு அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயத்துறை நல்ல முறையில் இயங்க வாய்ப்பு இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் மேட்டூரில் தண்ணீரைத் தேக்கி, அதை வாய்க்கால்கள் மூலமாக பாசனம் செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் அந்தப் பகுதிகளில் இரண்டு போகங்கள் பாசனம் செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஒரு போகத்திற்கு தண்ணீர் வரவில்லை என்றால், அங்கே இருக்கிற விவசாயிகள் அந்தத் தண்ணீரை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற காரணத்தால், நிலத்தை தரிசாகப் போட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில், அரசு முயற்சி எடுத்துக் கொண்டு, விவசாய ஸ்தாபனங்களின் மூலம் கிணறுகள் அமைத்து பாசனம் செய்யலாம் என்று ஆங்காங்கே எடுத்துச் சொல்லியும் அவர்கள் அப்படிச் செய்யாமல், நிலத்தை தரிசாகப் போட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில், இந்த நில உச்சவரம்பு மூலமாக மிச்சம் வரக்கூடிய நிலங்களை சேலம் கோவைப் போன்ற மாவட்டங்களிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கினால் அந்த விவசாயிகள் அங்கே கிணறுகளைத் தோண்டி பாசனம் செய்து வாழ்க்கையை நடத்த ஏதுவாக இருக்கும். சேலம், கோவை போன்ற மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் ஆழமான கிணறுகளைத் தோண்டி பழக்கப்பட்டவர்கள். பல அடி ஆழங்கள் தோண்டி, அதற்குக் கீழே பாறைகள் இருந்தாலும் அவற்றைத் துளைத்து கிணறு எடுத்து பாசனம் செய்கிறவர்கள். எனவே, அந்த நிலங்களை இவர்களுக்குக் கொடுத்தால் இவர்கள் எப்படி பயிர் செய்கி றார்கள் என்பதை நேரில் அந்தப் பகுதி விவசாயிகள் பார்த்தால், நிச்சயமாக விழிப்புணர்ச்சி அடைய ஏதுவாக இருக்கும். சென்ற ஆண்டு, திருச்சி,



தஞ்சை மாவட்டங்களில் 'ஒரு கமிட்டியில் சுற்றுப்பயணம் செய்தபோது அங்கே, மிகவும் உயர்ந்த, சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள், வாய்க்காலில் தண்ணீர் வராத காரணத்தால், தரிசாக, பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலைமையை நேரில் பார்த்தேன். அப்போது திரு. மணலியார் கூட வந்திருந்தார்கள். ஒவ்வொரு இடத்திலும் வண்டியை நிறுத்திக்கொண்டு மண்ணைப் பார்த்துப் பார்த்து பரவசம் அடைகிறீயே என்று கூட கேலியாகச் சொன்னார்கள். இதை விளையாட்டிற்காகச் சொல்லவில்லை. அந்த பகுதி களில் எல்லாம் மூன்று அடிக்குக் கீழே தண்ணீர் இருக்கிறது. அந்தப் பகுதிகளை எல்லாம் வாய்க்காலில் தண்ணீர் வரவில்லை என்று சொல்லி தரிசாகப் போட்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட உச்ச வரம்பில் வரக்கூடிய நிலங்களை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்குக் கொடுத்தால் நிச்சயமாக அவர்கள் அங்கே பாசனம் செய்து லாபம் அடைவதோடு, நாட்டிற்கும் லாபத்தைத் தேடித் தருவார்கள். அத் தோடு அந்தப் பகுதி மக்களுக்கும் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நில உச்ச வரம்பு ஏற்படுகிற காரணத்தால் ஒவ்வொரு விவசாயிக்கும் குறைந்தபட்ச அளவுக்குத்தான் நிலம் (5 ஸ்டாண்டர்டு எக்கர்) இருக்கிறது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு சிறிய அளவுக்குக் ஹார்ஸ் பவர் உள்ள ரஷ்யன் டி. ஒ. 14 போன்ற டிராக்டர்கள் இருந்தால் சௌகரியமாக இருக்கும். எனவே, அந்த டிராக்டர்களை வரவழைத்து சிறு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். கல்டிவேடார், கேஜ்வீல், பரம்பு போன்ற கருவிகள் எல்லாம் சேர்த்து அதனுடைய விலை ரூபாய் 10,000-க்கு மேல் இருக்காது. மற்ற டிராக்டர்கள் ரூபாய் 25, 30 ஆயிரம் என்ற அளவில் இருக்கிறது. ஏழை விவசாயி களால் அவற்றை வாங்க முடியாது. அவற்றை வாங்கினால் பெரிய கடன் சுமைக்கு ஆளாவார்கள் என்ற காரணத்தால், குறைந்த விலையில் டிராக்டர்களை வாங்கி விவசாயிக்கு வழங்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உரத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளைக் கூற விரும்பு கிறேன். சென்ற ஆண்டு 2·85 இலட்சம் டன் கேட்டு அதில் நமக்குக் கிடைத்தது 1·31 இலட்சம் டன் தான். இந்த அளவுக்குக் குறைந்த உரத்தை வைத்துக் கொண்டு சரியாக விநியோகம் செய்ய வேண்டுமானால்—கூட்டுறவுத் துறையில் பல்வேறு இடங்களிலும் அது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அப்படியிருந்தாலும் நமது மணலியார் அவர்கள் சொன்னதைப் போல சில இடங்களில் சில வியாபாரிகள் தவறான முறையில் வியாபாரம் செய்ய முனைகிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரம் செய்யப்படுகிற காரணத்தால் ரூபாய் 50-க்கு விற்பனை செய்யப்பட வேண்டிய யூரியா போன்ற உரம் ரூபாய் 70, ரூபாய் 80-க்கு விற்கப்படுகிறது அந்த அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை விவசாயிக்கு ஏற்படுகிறது என்ற காரணத்தால், சென்ற மாதத்திலே ஆத்தூரில் சில வியாபாரிகள் இப்படிப்பட்ட தவறு களைச் செய்தார்கள் என்று உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச்

சொன்னேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக தலையிட்டு, அவர்களை அரஸ்ட் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தார்கள். அதற்கு அதிகாரிகளும் ஒத்துழைத்தார்கள். அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, கரும்புக்கு அதிக விலை தர வேண்டும் என்பது விவசாயிகளினுடைய ஒரு கோரிக்கையாக இருந்து வருகின்றது. அது நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஒரு டன் கரும்பில் ஏறக் குறைய ஒரு மூட்டை சர்க்கரை உற்பத்தி ஆகிறது. வெளி மார்க்கெட்டில் ரூபாய் 350 வரை சர்க்கரை விற்கிறது. லெவி கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்ட மார்க்கெட் விலை ரூபாய் 200 ஆக இருக்கிறது. எனவே, ஒரு டன்னுக்கு ரூபாய் 15 கூடுதலாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்வது நல்லது என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆத்தூர் முள்ளவாடியில் ஒரு விதைப் பண்ணை 250 எக்கர் நிலப் பரப்பில் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு விவசாயக் கல் லூரி ஏற்படுத்துவது மிகவும் நன்மையாக இருக்கும் என்று கூற விரும்பு கிறேன். அதே சமயம், சேலம் மாவட்டத்திலுள்ள அந்த ஆத்தூர் விதைப் பண்ணையை ஒரு கல்லூரியாக அமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ப. முத்துசாமி</u>: துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய
ந.ப
12·00 மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, விவசாயத் துறை இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருப்ப தற்கு முக்கிய காரணம், புது ரக விதைகளை ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்திருப்பதும், விவசாயத்திற்கு வேண்டிய உரம், பூச்சி மருந்துகள், கடன்கள் ஆகியவை காலா காலத்தில் கிடைக்கச் செய்வதில் இந்த அரசாங்கம் நல்ல முறையில் ஒத்துழைத்ததும்தான் என்பதை நாம் கண்டிக்கிறோம். இருந்தாலும் கூட இந்தத் துறையில் இன்னும் நல்ல முன்னேற்றம் காணவேண்டியது அவசியம். அதற்கு சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளும், குறிப்பாகக் கூட்டுறவுத் துறை, மின்சாரத் துறை, பொது மராமத்துத் துறை, வருவாய்த் துறை ஆகியவை ஒத்துழைப்புத் தரவேண்டும். விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை வரும்போது அதை மிக அனுதாபத்தோடு, காலம் தாழ்த்தாமல் எல்லாத் துறையினரும் காரியங்கள் செய்தால் இன்னும் நல்ல முன்னேற் றத்தைக் காண முடியும். விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்களில் பெரும்பகுதி கிணறு வெட்டுவது போன்ற நீர்ப்பாசன வசதிக்குச் செல விடப்பட வேண்டியிருக்கிறது. வறண்ட பகுதிகளில் கிணறு வெட்டவேண்டு மென்றால், பத்தாயிரம், பதினையாயிரம் ரூபாய் கடன் தருகிறார்கள். கிணறு சரியாக அமையவில்லையென்றால் அவர்கள் பெரிய நஷ்டத்தை அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எத்தனையோ





துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கும் இந்த நேரத்தில், வறண்ட பகுதிகளில் கிணறு வெட்டும்போது, எந்த இடத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதை விஞ்ஞான முறையில் நல்ல ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து, நன்றாக அமையும் இடத்தில் கிணறு வெட்ட அவர்களுக்குக் கடன் தர வேண்டும். அத்துடன் எந்த இடத்தில் வெட்டினால் தண்ணீர் வரும் என்பதையும் கண்டுபிடித்துக் கொடுக்கும் பொறுப்பையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டால் நிச்சயமாக அவர்களுக்குப் பெரிய உதவி செய்தவர் களாவோம்.

சிறப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக சிறு விவசாயிகளுக்காக மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்குப் பல சலுகைகள் கொடுத்திருக்கி றார்கள். லிப்ட் இரிகேஷன் சொஸைட்டி அமைக்க மூன்று ஏக்கரா முதல் ஐந்து ஏக்கரா நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்குப் பாதி ஸப்ஸிடி யாகவும், பாதி கடனாகவும் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனிப்பட்டவர்கள் கேட்டால் 25 சத விகிதம் கொடுத்துக் கொண்டிருக்கி றார்கள். அப்படியும் லிஸ்ட் சரியாக இருக்கிறதா என்றால் இல்லை. ஏற்கெனவே சிறு விவசாயிகளாக இருக்கிறவர்கள், லிஸ்டில் வராதவர்கள் பெரும் பகுதியினர் இருக்கிறார்கள். இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் அந்த லிஸ்ட் சரியானதா என்று கண்டுபிடித்து இன்னும் ஏராளமான விவசாயிகளை அந்த லிஸ்டில் வரக்கூடியவர்களைச் சேர்க்க வேண்டும். சிறிய விவசாயிகளாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் ஏற்கெனவே ஜாயின்ட் பட்டாவாக இருப்பதால் லிஸ்டில் இல்லாமலிருக்கிறார்கள். அப் படி விடப்பட்டவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து லிஸ்டில் கொண்டு வந்தால் நிச்சயமாகப் பல விவசாயிகள் அந்த லிஸ்டில் வரக்கூடும். இதற்கு ரெவின்யூ இலாக்காவின் ஒத்துழைப்பு வேண்டும். இதில் பட்டா பிரித்துக் கொடுக்கும் பிரச்சினை இருப்பதால், அதைக் கவனித்து உடனடி யாகப் பட்டா செய்து கொடுக்க ரெவின்யூ இலாக்கா ஒத்துழைக்கவேண்டும்.

மின்சார வெட்டின் காரணமாக விவசாயிகள் ஆயில் இன்ஜின்கள் வாங்கிக்கொள்ளவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறார்கள். இதில் பல கண்டிஷன்கள் இருப்பதால் கடன் கிடைப்பதில்லை. ஆயில் இன்ஜின்கள் வாங்க விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து அரசாங்கம் உதவ வேண்டும். தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கி அவர்கள் ஆயில் இன்ஜின்கள் வைத்துக் கொண்டாலும் டீசல் எண்ணெய் கிடைப்பதில்லை. சீமை எண்ணெய் கிடைப்பதில்லை. கேட்கின்ற நேரத்தில் மொத்த வியாபாரிகள் டீசல் எண்ணெய் தரமுடியாத நிலை இருப்பதால் ஸ்பெஷல் பர்மிட் விவசாயி களுக்குக் கொடுத்து, மாதமொன்றுக்கு 200 லிட்டர் எண்ணெய் கொடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

விவசாயத்திற்கு வேண்டிய விதைகள், உரங்கள் முதலியவை உரிய நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும். இவற்றைப் பஞ்சாயத்து யூனியன் தங்களுடைய பொது நிதியிலிருந்து வாங்குகிறார்கள். பொது நிதியில் பணம் இல்லாத நேரத்தில் மற்ற நிதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் டைவர்ட் செய்தால், அதற்கு ஆடிட் அப்ஜெக்ஷன் வந்துவிடுகிறது. இப்படிப்பட்ட சிரமத்தைப் போக்கி, வேறு நிதியில் இருந்தாகிலும் தொகையை

டைவர்ட் செய்து உரம் வாங்க யூனியனுக்கு அனுமதி வழங்க வேண்டும். எப்படியும் உரிய நேரத்தில் விதையும் உரமும் விவசாயி களுக்குக் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

பல இடங்களில் விதை கிடைக்கின்ற நேரத்தில் விவசாய எக்ஸ் டென்ஷன் ஆபீசர் அதை விற்ருக வேண்டும்; இல்லாவிட்டால் ரெகவரி செய்துவிடுவார்கள். இதனுல் தேவையான இடத்திற்குப் பல இடங்களில் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. விற்றது போக மீதியிருக்கும் விதை களைத் திருப்பி எடுத்துக்கொள்ள அனுமதி இருந்தால் இந்த சிரமம் இல்லாமல் வேண்டிய நேரத்தில் விதை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும்.

பூச்சி மருந்துகள் தெளிக்க பல இடங்களில் பவர் ஸ்ப்ரே அளிக்கப் பட்டிருக்கிறது. ஒரு யூனியனில் 20 முதல் 30 பவர் ஸ்ப்ரேக்கள் இருந்தால் அவை பழுதடைந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் அவை உடனுக் குடன் ரிபேர் செய்ய முடியாமலிருப்பதுதான். சிலருக்கு ட்ரெயினிங் கொடுத்திருக்கிருர்கள். ஐந்தாறு பேர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக் கிருர்கள் என்ருலும், சிறு ரிப்பேர் கூட அவர்களால் செய்யமுடியவில்லை. அதனுல் பல யூனியன்களில் இருபது ஸ்ப்ரேயர்கள் இருந்தாலும் அவை ஒழுங்காகப் பயன்படுத்தப்பட முடியாத அளவுக்கு இரண்டு மாதங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை உடனடியாகக் கவனித்தாக வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களில் ட்ராக்டர் பழுதடைந்துவிட்டால், டயர் போன்றவற்றையும் சிறு பொருளாக இருந்தாலும் தூரத்திலிருந்து பெற வேண்டிய காரணத்தால் அந்தந்த டிவிஷனிலேயே வாங்க அனுமதி அளிக்க வேண்டும். ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு பணிமனை துவங்க வேண்டியது அவசியம்.

விவசாயத்திற்குத் தண்ணீர் வசதி மிகவும் அவசியம். சிறு பாசன வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். கிணறுகளில் தண்ணீர் வற்ருது வரும் அளவுக்கு, மழைக் காலங்களில் கிடைக்கும் தண்ணீரை சிறு சிறு குளம் குட்டைகளில் தேக்கி வைக்க வேண்டும். எப்படியும் விவ சாயத்திற்கு நிரந்தர பாசன வசதி செய்துகொடுக்க வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் விளைச்சல் இன்னும் பன்மடங்கு அதிகரிக்க முடியும். விவசாய உற்பத்தி பெருகினுல்தான் நிச்சயமாகப் பொருளாதாரத் தில் முன்னேற்றம் காணமுடியும் என்று கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு கே. எ. மதியழகன் : மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற இந்த வேளாண்மைத் துறை, உணவு துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் நான் வைக்க விரும்புகிறேன்.





உணவுத் துறை மானியக் கோரிக்கையும், வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையும் வழக்கமாக இரண்டு நாட்கள் விவாதிக்கப்படுவது உண்டு. சில வேளைகளில் மாலை வேளையிலும்கூட விவாதிப்பது உண்டு. விவாதங்கள் அதிகம் நடைபெற வேண்டும் என்பதற்காகக் கூட அல்ல. தமிழ்நாட்டில் 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு அண்ணு அவர்கள் தலைமை யில் பொறுப்பேற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த உணவுத் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் எவ்வளவு அக்கறை காட்டி வந்தார்கள் என்பதை நல்ல முறையில் நிலைநிறுத்துகிற வகையில் ஒவ்வொரு ஆண்டும் நடந்து வந்தது. இன்றைக்கு என்ன அவசரக் கோலமோ தெரியவில்லை—உணவுப் பிரச்னை என்பதும் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை அல்ல, வேளாண்மைத் துறை என்பது ஏதோ புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்று என்ற காரணத்தினலோ என்னவோ, எதிர்க் கட்சித் தலைவர் மீது பழியைப் போட்டுவிட்டு, எல்லாவற்றையும் ஒன்றரை மணிக்குள்ளாக அவசா அவசரமாக முடிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானுல் இந்தக் குற்றச்சாட்டுக்கு நானும் உள்ளாகிறேன். ஆனுல், ஒன்றை மறந்துவிடக் கூடாது. இது பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலே முடிவு செய்யப் பட்டது. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இதுபற்றி முடிவு செய்யப்பட்ட போது உங்கள் கட்சியின் சார்பில் யாரும் வரவில்லை என்று கருதுகிறேன்.

திரு கே. எ. மதியழகன் : இப்போதுதான் குழந்தையாக இருக்கும் கட்சி. அதனுல் பல வேலைகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த சட்ட மன்றப் பணியும் எங்களுக்கு ஒரு பணி என்ற வகையில்....

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்தியானம் "உணவு" மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள்ளலாம் என்று அன்றைக்கு முதல் அமைச்சர் அவர்களே சொன்னுர்கள். அதை ஏற்றுக்கொண்டோம். ஆனுல், அதற்குப் பிறகு இன்று மத்தியானம் ஒரு செலக்ட் கமிட்டிக் கூட்டம் இருப்பதால், காலையில் எவ்வளவு நேரம் நீட்டித்தாலுங்கூட, உணவு மானியக் கோரிக்கையையும் வேளாண்மை மானியக் கோரிக்கையையும் ஒன்ருக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவு ஏற்பட்டது என்பது அவர்களுக்கும் தெரியும். அந்த நிலையில் எவ்வளவு நேரம் நீடித்துக் கொண்டு போக முடியுமோ அந்த அளவுக்கு நேரம் எடுத்துக்கொள்ள உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, காலையில் நானும் அவை முன்னவரும் திரு. பொன்னப்ப நாடார் அவர்களிடத் திலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களிடத்திலும், டாக்டர் ஹாண்டே அவர்களிடத்திலும் கலந்து பேசினேம். மாலையில் இந்த உணவுத் துறையைப் பற்றிய விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுக்குப் பிறகு இன்று மாலை செலக்ட் கமிட்டி இருப்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் நினைவுபடுத்தினுர்கள்.

அந்த செலக்ட் கமிட்டியில் 15 எம்.எல்.ஏ.-க்கள் இடம் பெற்றிருப்பதால்,
அவர்கள் நிச்சயமாக அதன் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள
வேண்டியிருப்பதால், அவர்கள் இங்கே கலந்துகொள்ள இயலாது;
ஆகவே, கொஞ்சம் காலத்தை நீட்டித்துக்கொண்டு இவ்விரு மானியக்
கோரிக்கைகளின் மீதான விவாதத்தை முடித்துவிடலாம் என்று தெரி
வித்தார்கள். ஏற்கனவே பிஸினஸ் அட்வைசரி கமிட்டி தீர்மானித்துத்
தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. திரு. மதியழகன் அவர்கள்
பிஸினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்திற்கு வந்திருந்தால் அப்போதே
அதுபற்றி விவாதித்து வேறு முடிவை எடுத்திருக்க முடியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
சொன்னதுபோல, இன்று மாலை நான்கு மணிக்கு செலக்ட் கமிட்டிக்
கூட்டம் இருக்கிறது என்று நாங்கள் சொன்னோம். கல்விச் சாலைகள்
குறித்த முக்கிய மசோதா விவாதிக்கப்பட இருக்கிறது. அதைப் பிறகு
போஸ்ட்போன் பண்ணலாம் என்று கூடச் சொன்னோம். கல்வி மானியக்
கோரிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் வரவேண்டிய நிலை இருக்
கிறது என்று சொன்னார்கள். அதை போஸ்ட்போன் பண்ண இயலாது
என்ற நிலை ஏற்பட்ட பின்னர்தான் இங்கே இருக்கும் முக்கியமான
கட்சித் தலைவர்களோடு கலந்துபேசி, இம்மாதிரியான இரண்டுங்கெட்டான்
நிலைமை ஏற்பட்டது. அதிலே எனக்கும் பொறுப்பு உண்டு என்று
சொல்வதற்காகத்தான் எழுந்தேன். Let us be honest about this

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விஷயத்தில் எல்
லோரும் சேர்ந்து முடிவு எடுத்திருக்கிறார்கள் என்ற தகவலை மாத்திரம்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: நான் இந்த மானியங்களை விஸ்தார
மாகவும், விளக்கமாகவும் விவாதித்திருக்கலாம் என்று சொன்னேனே
தவிர யாரையும் குற்றஞ்சாட்டச் சொல்லவில்லை.

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும், நமது முதல் அமைச்சர்
அவர்களையும் நான் முதலிலே பாராட்டிவிடுகிறேன். நடுவிலே பலவற்
றைப் பற்றி நான் விமர்சிக்கிறபோது இந்தப் பாராட்டுகள் மறைந்துவிடக்
கூடாது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் நான் இந்த அரசாங்கத்தின்
பொறுப்பை ஏற்றபோது நாட்டில் இருந்த நிலைமை என்ன? அப்போது
மாநிலத்திலே 35 லட்சம் டன் அரிசிதான் உற்பத்தி செய்யப்பட்டது.
இன்றைக்கு 1972-73-லே நமது மாநிலத்தில் 55 லட்சம் டன் அரிசி
உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றால் நமது விவசாய அமைச்சர்
அன்பில் அவர்களைப் பாராட்ட வேண்டும். இது ஒரு பெரிய சாதனையாகும்.
மற்ற உணவு தானியங்களை எல்லாம் சேர்த்து நமது மாநில உற்பத்தி
75 லட்சம் டன் என்றாலும்—நான் அரிசியை மட்டும் தான் கணக்கில்
கொண்டு பேசுகிறேன். முன்பு 35 லட்சம் டன் அரிசிதான் உற்பத்தி
செய்யப்பட்டது என்றால் இன்றைக்கு 55 லட்சம் டன் அரிசி உற்பத்தி



செய்யப்பட்டிருக்கிறது. பெரிய பசுமைப் புரட்சி நடைபெற்றிருக்கிறது
இந்தப் பசுமைப் புரட்சியில் எனக்கு ஒரு பெரிய பங்கு உண்டு—மாஜி
உணவு அமைச்சர் என்ற முறையில்—நானும் இதில் பெருமிதம் கொள்
கிறேன். மாஜி பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்து, இன்றைக்கு
முதல்வராக உள்ளவர் அவர்களும் இதில் பெருமை கொள்ளலாம்.
ரசாயன உரங்கள், கூட்டுறவுத் துறையில் ஏராளமான கடன்கள், பொறுக்கு
விதை ஆகியவற்றின் மூலம் 55 லட்சம் டன் அரிசி இன்றைய தினம்
உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு பிரமாதமான வெற்றி.

ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள்
இந்த மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்தில் நமது
மாநிலம் உணவு சம்பந்தமாக ஒரு பெரிய சங்கடமான நிலைமையில்
இருந்தது. எனக்கு இன்றைக்கும் ஞாபகம் இருக்கிறது. அத்தகைய
உணவு நெருக்கடியை முன்னால் இருந்த அமைச்சர்கள் தோற்றுவித்து
விட்டுப் போய்விட்டார்கள். அதன் காரணமாகத்தான் திராவிட முன்
னேற்றக் கழகம் அமோகமான வெற்றியைப்பெற முடிந்தது. சென்னை
நகரில் 2 நாட்களுக்குப் போதுமான உணவுதான் இருந்தது. மாநிலம்
முழுவதும் 50 நாட்களுக்குப் போதுமான உணவு தானியங்கள்தான்
இருந்தன. பேரறிஞர் அண்ணா அவர்களது சீரிய தலைமையில் தமிழ்
நாட்டின் மிகப்பெரிய உணவு நெருக்கடியைப் போக்க பெரும் திட்டங்களை
வகுத்தார்கள். ஆட்சிப் பொறுப்பைப்பெற்ற அடுத்த 70 நாட்களிலே
சென்னை நகரத்திலும், புறநகர்ப் பகுதிகளிலும், கோயம்புத்தூரிலும்,
அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 45 லட்சம் மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு
படி அரிசி கிடைக்கும் திட்டத்தை அமல்படுத்தினார்கள். இந்தத் திட்டம்
2 ஆண்டுகள் செம்மையாக நடைபெற்று இருக்கிறது. 45 லட்சம்
மக்கள் ஒரே கிலோ அரிசியை 66 பைசாவுக்குப் பெற்றுக்கொண்டு வந்திருக்
கிறார்கள். நான்—ஸ்டாடுடரி ஏரியாவில் குடும்பக் கார்டு என்ற முறையில்
ஒரு கோடியே முப்பத்தோரு லட்சம் மக்கள் பயன் அடைகிற வகையில்
நாம் செயல்படுத்தியிருக்கிறோம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்
நமது மாநில மூன்றேமுக்கால் கோடியில் மூன்றில் ஒருபங்கினர்—ஒன்னே
கால் கோடி மக்கள்—ஒரு கிலோ அரிசி 66 பைசா வீதம் வாங்கிப் பயன்
அடைந்திருக்கிறார்கள். எப்போது? நமது மாநிலத்தில் உணவு நிலைமை
மிக நெருக்கடியாக இருந்த காலத்தில். மொத்த அரிசி உற்பத்தியே 35
லட்சம் டன்னாக இருந்த காலத்தில். அத்தகைய நெருக்கடி மாநிலத்தில்
உண்டாகும்படி முன்னால் இருந்த அமைச்சர்கள் அலங்கோலமாக ஆட்சி
நடத்தி பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்துப்போன நேரத்தில் அண்ணா
அவர்கள்....

திருமதி த. ந. அனந்தநாயகி: முன்னால் இருந்தவர்களின் அலங்
கோல ஆட்சி என்று சொல்வது சரியல்ல. முன்னால் இருந்தவர்கள்
பற்பல நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றி வைத்துவிட்டுப் போன
காரணத்தினால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடிந்தது என்பதை
மறந்துவிடக்கூடாது.

[1973 மார்ச் 16

திரு கே. ஏ. மதியழகன்: அவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக
இருந்தால் முன்னால் இருந்த அழகான அரசு என்று சொல்கிறேன்.
அது ஒன்றும் முக்கியமானது அல்ல. அன்றைக்கு 35 லட்சம் டன்
அரிசிதான் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் இன்றைக்கு 55 லட்சம் டன்
அரிசி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அன்றைக்கு இருந்த மக்கள்
தொகையே தான் இன்றைக்கும் இருக்கிறது.
ஒரு கிலோ அரிசியை 66 பைசாவுக்கு வாங்கி சாப்பிட்டார்கள் என்றால் அன்றைக்கு
இன்றைக்கு படி அரிசி இரண்டேமுக்கால் ரூபாய், மூன்று ரூபாய் என்று
வாங்கிச்சாப்பிட வேண்டிய நிலைமை நாட்டில் இருப்பதை உணரவேண்டும்.
அம்மையார் அவர்கள் சமைக்கிறார்களோ என்னவோ தெரியாது. அமைச
சர்களுடைய மனைவிமார்கள் அரிசி வாங்கிச் சமைக்கிறார்களோ என்னமோ?
இப்படி அரிசி விலை ஒரேயடியாக ஏறியிருப்பதற்குக் காரணம் என்ன ?

மிக நெருக்கடியான நேரத்தில் நாம் ஏழு லட்சம் டன், 9 லட்சம் டன்
கொள்முதல் செய்தோம். சுப்பையா முதலியார் அவர்கள் கூட சிறிது
விலை கூட்டி விவசாயிகளுக்குத் தரவேண்டும் என்று சொன்னார்கள்.
இதே அரசாங்கம் ஒரு வருஷத்திற்கு 50 லட்சம் டன் கொள்முதல்
செய்து அரசாங்கக் கிடங்கில் வைத்தது. ஒரு கிலோ 66 பைசா
என்கிற அளவில் ஒண்ணேகால் கோடி மக்களுக்குக் கொடுத்தது. அதைத்
தான் நான் சொல்கிறேன். இன்றைக்கு பசுமைப் புரட்சிக்குப்
பிறகு, கோடி கோடியாக கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வழங்கிய
பிறகு, 55 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது என்கிற நிலையில்
சாதாரண மக்களுக்குக் கூட கிலோ இரண்டேமுககால், மூனறு ரூபாய்க்குக்
கூட கிடைக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன ? விலைவாசி
ஏன் இப்படி ஏறிற்று ? மத்திய அரசு பொறுப்பு என்று சொல்ல
முடியாது. மத்திய அரசுக்கு 60 சத விகிதம் என்றால் மாநில அரசுக்கும்
40 சத விகிதம் பொறுப்பு உண்டு எனக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

நமது நாட்டின் பொருளாதாரமே அரிசியைத்தான் மையமாகக்
கொண்டிருக்கிறது. தொழிலாளர்களது தலைவர்களுக்குத் தெரியும். ஒரு
புள்ளி ஏறிற்று என்றால் அதில் 60 சத விகிதம் அரிசியேற்றம்தான். விற
குக்கு, கெரோசினுக்கு அதிகம் ஆகிவிடாது. அரிசி விலை குறைந்தால்தான்
மற்ற பொருள்களின் விலை குறையும். முதலமைச்சர் அவர்கள் மத்திய
அரசாங்கம் நோட்டு அடிப்பதுதான் விலைவாசியேற்றத்துக்குக் காரணம்
என்று சொல்லிப் பயன் இல்லை. நாம் விவசாயத்திற்காக கோடிக்
கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு வருகிறோமே, அது எங்கே போயிற்று?
நெல்மணிகளை உற்பத்தி செய்து தருகிற தஞ்சைத் தரணியில் இருக்கிற
விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் சென்றதா ? யாரிடத்தில் சென்றது ?
முதலமைச்சர் அவர்கள் அதனைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.
இது ஒரு சாதாரண விவகாரம் அல்ல. இன்றைக்கு அரிசி விலை
ஒரேடியடியாக ஏறியிருக்கிறது என்றால் இதற்குக் காரணம் யார் ?
நம்முடைய பணம் எல்லாம் எந்தச் சுரண்டல்காரர்களிடம், பதுக்கல்
காரர்களிடம் சென்றது ? அந்தத் திருடர்கள் யார் ? நம்முடைய
பொருளாதாரம் அரிசியை மையமாகக் கொண்டது, அந்த அரிசியை இன்
றைக்குச் சாதாரண மக்கள் வாங்கிச் சாப்பிட முடியாத நிலைமையில்
விலை ஏறியிருக்கிறது என்றால் இடையில் கொள்ளை அடிக்கிறவர்கள் யார் ?



1973 மார்ச் 16] [திரு. கே. ஏ. மதியழகன்]

தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களிடத்தும் அந்தப் பணம்
போகவில்லை. வாங்கி உண்கிற மக்களுக்கும் பயன் இல்லை. இன்
றைக்கு விலைவாசி உயர்ந்துவிட்டது என்பதாக முதல் அமைச்சர் அவர்கள்
அரசாங்க ஊழியர்களுக்கு பத்து ரூபாய் கூட்டலாம், ஆள் உயர மாலை
யைக் கொண்டுவந்து போடுகிற அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய
குடும்பங்கள் இன்றைக்கு என்ன விலைக்கு அரிசி வாங்கி வருகின்றன ?
எங்கே போயிற்று அந்த 20 லட்சம் டன்கள் ? அந்தக் காரணத்தினாலே
தான் இந்த விலைவாசிக்கொள்கையை அமுல்படுத்துவதற்கு இந்த அர
சாங்கம் தவறி விட்டது, தவறி விட்டது என்று நான் அழுத்தம் திருத்த
மாகக் குற்றம் சாட்டுகிறேன். குற்றம் சாட்ட வேண்டுமென்பது சந்தோஷ
மானது அல்ல. 20 ஆண்டுகாலம் ஒருவரோடு பழகிய நான், தலைவராக
ஏற்றுக்கொண்டு, அவரது அமைச்சரவையிலே அவருக்கு பக்கத்திலே
இருந்து பணி புரிந்து இன்றையதினம் எதிரிலே நின்று அவரைக் குற்றம்
சாட்டுகிறேன் என்றால், எவ்வளவு மன வேதனையோடு என்னுடைய
மனசாட்சிக்கு வேண்டிய கடமையைச் செய்கிறேன் என்றுதான் இன்று
பேசிக்கொண்டிருக்கிறேன். இந்த 20 லட்சம் டன் போனதற்குக் கார
ணம், இந்த அரசினுடைய உணவுக் கொள்கை, விவசாயக் கொள்கை.

**It is neither consumer-oriented nor producer—oriented**
**It is not people-oriented.** மக்களுடைய கொள்கையாக அமையவில்லை

**It is trader-oriented. It is black marketeer-oriented. It is**
**smuggler—oriented.** என்ற காரணத்தினாலேதான் இந்த
20 லட்சம் டன்கள் காணமல் போயிருக்கின்றனவே தவிர, அதுதான்
காரணமே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதை அவர்கள்
அருள் கூர்ந்து மறுக்க முடியாது.

இன்றைக்கு திறந்து விட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்
சர் சாதிக் பாட்சா, மேட்டூர் மதகுக் கதவுகளைத் திறந்து விட்டதைப்போல,
பவானி ஆற்றைத் திறந்து விட்டதைப் போல, ஹை யீல்டிங் வெரைட்டி,
கருணை என்றெல்லாம் போர்டு செய்து விட்டு, அவைகள் யாரோ லாபக்
காரர்கள், கொள்ளை மார்க்கெட்காரர்கள், கொள்ளை லாபக்காரர்கள்,
வர்த்தகச் சூதாடிகள், கடத்தல்காரர்கள் கையிலே போனதனாலே, இன்
றைக்கு அவர்களுடைய நலன்களுக்காக உங்களுடைய உணவுக் கொள்
கைகள் இருக்கிற காரணத்தினால், நேற்றைக்கு பல லட்சக்கணக்கான
வர்கள், பொன்னப்ப நாடார் கட்சியிலே ஊர்வலம் வந்தார்கள், ஹாண்டே
போயிருக்கிறார். அவர்கள் போகிறார்கள் என்றால், இதெல்லாம் நிலாச்
சோறு, பொட்ட வெளியிலே ஊர்வலம் போகக் சிறு குழந்தைகளா ?
இவைகளெல்லாம் நாட்டினுடைய நிலைமை, நாட்டினுடைய தவிப்பு.

இந்த நிலைகளுக்கெல்லாம் என்ன காரணம் ? மக்களுக்காக உங்
களுடைய கொள்கையை நீங்கள் செய்யாத காரணத்தினாலேதான்
இந்த நிலைமை வந்தது. எங்கே கண்டுபிடிக்கப்பட்டார்கள் பதுக்கல்
காரர்கள் ? எவ்வளவு பேர் அதிகமாக விலை வைத்து விற்றார்கள்

என்பதற்காக தண்டனை பெற்றார்கள் ? அதற்குப் காரணம் இன்றைய
தினம் இருக்கிற கொள்கை. யாரும் ஆட்களைப் பற்றிக் கோளாறு சொல்
லிப் பிரயோஜனம் இல்லை. ரூ. 1¼-க்கு விற்றது ஏறிவிட்டது.

20 லட்சம் டன் வந்ததற்குப் பிறகும் குறையவில்லை. நான் ரொம்ப
வும் எதிர்பார்த்தேன். முதலமைச்சர் கூட கொஞ்ச நாளைக்கு முன்னாலே
சூசமாகச் சொன்னார்கள். உணவு வர்த்தகத்தை அரசாங்கமே ஏற்று
நடத்தப் போகிறது என்று கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்கிறோம்.
ஆனால் இந்த கொள்கைப் புத்தகத்திலே ஒன்றையும் காணோம். ஏதோ
பழைய பஞ்சாங்கத்தைப் போல், கிராமங்களிலே விவசாயப் பஞ்சாங்கம்
போட்டிருப்பார்கள், இப்பொழுதுகூட என் வீட்டிலே இருக்கும், முன்னால்
இரண்டு வரி, பின்னால் இரண்டு வரி, அமைச்சரின் பெயர் இவைதான்
போடப்பட்டிருக்கிறதே தவிர, ஹோல்சேல் டிரேட்ஸ் பற்றி குறிப்பிடப்பட
வில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அதைச் சொல்லித்தான் இந்த
அரசுக்கு வந்தது. அது அன்றைக்கு ரொம்ப முக்கியமான, உயிரான
கொள்கை. அதை அமுல்படுத்துவதற்காகத்தான் இந்த நாட்டிலே
ஏறத்தாழ ரூ. 50 கோடி அளவுக்கு ஸ்டேட் டிரேடிங் செய்தோம்
இரண்டாண்டு காலம். 10 லட்சம் டன்களைக் கொள்முதல் செய்தோம்.
அப்படிப்பட்ட இயந்திரத்தை, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள், அவர்களுடைய தீர்க்கதரிசனமில்லாத, உறுதியற்ற, மக்கள்
நலனுக்கு விரோதமான, விவசாயிகளுக்கு விரோதமான, உணவுக் கொள்
கையின் காரணமாக இவ்வளவு உணவு உற்பத்தியாகியும், மதகுக்
கதவுகளை எங்கோ திறந்து விட்டிருக்கிறார்கள்.

நான் கூறுகிறேன். இன்னமும் காலம் போய்விடவில்லை. இந்த
சட்டமன்றத் தொடர் முடிவதற்குள்ளேகூட, இதுபற்றிய நல்ல முடிவுகளை
எடுக்கலாம். நான் குற்றம் சாட்டுவதற்காக இதைச் சொல்லவில்லை.
ஒரு பொன்னான கொள்கையின் பெயரால், இந்த நாட்டிலேயுள்ள
ஒவ்வொரு பிரஜைக்கும், ஒவ்வொரு மகனுக்கும் உணவு கொடுக்கவேண்
டிய ஒரு பெரிய பொறுப்பு இருக்கிறது. அதை நாம் தட்டிக் கழித்து
விட முடியாது. அது மிகமிக முக்கியமான பொறுப்பு. அந்தப் பொறுப்பை
நிறைவேற்றவேண்டும்.

நியாயமான விலையில் தேவையான அளவு கிடைக்க வேண்டும்.
உணவு உற்பத்தி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எல்லா இடங்களிலும்
விளைந்திருக்கிறது. 55 லட்சம் டன் விளைந்திருக்கிறது. இருந்தும் விலை
ரூ. 2-3/4, ரூ. 3-3/4 என்றால், ஏன் இன்றைக்கு இப்படி இருக்கிறது
என்று முனைப்பாக யோசிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை,
சாதாரண பிரச்சினை அல்ல. விலைவாசியைக் குறைப்பதற்கு ஒன்றும்
சவானுடைய அதிகாரம் தேவையில்லை. இந்திரா காந்தி அம்மையார்
கையெழுத்துப் போடத் தேவையில்லை. வழிப்பறிக் கொள்ளையிலே மிகப்
பெயர்போன கொள்ளைக்காரர்கள் வாழ்கின்ற இடம் என்று சொல்லப்படு
கின்ற மத்தியப்பிரதேசத்திலே கோதுமைதான் அதிகமாக
இருக்கிறது. அங்கு உணவு தானிய வர்த்தகத்தை அரசாங்கம் எடுத்



துக்கொண்டது. இங்கு மிகப் பெரிய அற்புதமான அதிகாரிகள் இருக்
கிறார்கள். மிகப் பெரிய சிவில் சர்வீஸ் இருக்கின்றது. அவர்களால் நிர்வா
கம் நிர்வகிக்கப்படுகிறது. வெற்றி தோல்விகளிலே எல்லோருமே
மிகச்சிறந்த இயந்திரத்தை 4 ஆண்டுகளாக, மற்றவர்களுடைய நலனுக்குத்
திருப்பிவிட்டதன் காரணமாக, இன்றைக்கும் இவைகளுக்கான நிலைமை
நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய உரையிலே இல்லாதது
வருந்தத்தக்கது என்று சொல்லிக்கொண்டு அதற்கான நடவடிக்கையை
விரைவாக எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த ரைஸ் மில்களைத் தேசியமயமாக்க வேண்டும். ரைஸ் மில்
என்றால், கிராமங்களிலே கூலிக்காரர்கள் வைத்திருக்கிற ஓரிரு ரைஸ்
மில்களைச் சொல்லவில்லை. கள்ள மார்க்கெட்காரர்களுடைய நிலைக்களன்
களாக இருக்கிற ரைஸ் மில்களை, தேசியமயமாக்க வேண்டும். அலு
மினியத் தொழிற்சாலையை தேசியமயம் செய்கிறார்கள், பஸ்களை தேசியமயம்
செய்கிறார்கள். மிக முக்கியமான, உணவுத்துறையிலே இருக்கிற ஒரு
குறையை நீக்க, ரைஸ் மில்களை எல்லாம் தேசியமயமாக்கவேண்டும்.

அதேமாதிரியாக சர்க்கரை ஆலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். நெருக்கடியான நேரத்திலே
ரூ. 1-3/4-க்கு கிடைத்த சர்க்கரை இன்றைக்கு ரூ. 3-1/4-க்கு
வெளியிலே விற்கிறது. அதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சர்க்கரை
மில்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கிறது. கரும்பு விவசாயிகளுக்கு
ரூபாய் ஒன்று கொடுக்க வேண்டுமென்றால், ஏதோ பாக்கியவான்கள்
ரொம்ப ஆயாசப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்
கள்கூட, இணக்கமாகப் பேசி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.
யாருக்கு இணக்கம் ? கொள்ளை அடிப்பவனிடத்திலே இணக்கம் தேவைப்
படுகிறதா ?

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இங்கு சொல்லிக்
கொள்கிறேன், இன்றைக்கு தனியார் துறையிலே 9 ஆலைகள் இருக்கின்றன.
ஒவ்வொன்றிலும் ரூ. 2 கோடியோ ரூ. 3 கோடியோ வருகிறது. அலு
மினியம் கம்பெனியிலும் ரூ. 2 கோடி வருகிறது. நாம் நடத்தினால்
வருமா, வராதா தெரியவில்லை. அதிலெல்லாம் காட்டுகிற அக்கறையை
இதிலும் காட்டவேண்டும். இன்றைக்கு U. P. யிலே அனுமதி வழங்
கியிருக்கிறார்கள். நீங்கள் தேசியமயமாக்கிக்கொள்ளுங்கள் என்று
அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அதைப் போல், இந்தச் சர்க்கரை
ஆலையை உடனடியாக அரசின் கீழ் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டை
செய்து நீங்கள் நல்ல பெயரைத் தட்டிக்கொண்டு போயிருக்கலாம். ரூ. 20
கோடிக்கு வரியை எடுத்திருக்கலாம். ரூ. 20 கோடி சர்க்கரை ஆலைகளிலே
மட்டும் வரும். கரும்பு விவசாயிகளுக்கு பணம் வரும், சாப்பிடுகிற
வர்கள், கன்ஸ்யூமர்களுக்கும் சர்க்கரை கிடைக்கும், வரிப் பளுவினால்
கஷ்டப்படுகிற மக்களுக்கும் வரிப்பளு நீங்கும் என்ற வகையிலே இந்த
சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை
அறிவிக்க வேண்டுமென்பதை நான் அவர்களுக்கு அருள்கூர்ந்து

என்பதற்காக தண்டனை பெற்றார்கள்? அதற்குப் காரணம் இன்றைய தினம் இருக்கிற கொள்கை. யாரும் ஆட்களைப் பற்றிக் கோளாறு சொல்லிப் பிரயோஜனம் இல்லை. ரூ. 1½-க்கு விற்றது ஏறிவிட்டது.

20 லட்சம் டன் எந்ததற்குப் பிறகும் குறையவில்லை. நான் ரொம்பவும் எதிர்பார்த்தேன். முதலமைச்சர் கூட கொஞ்ச நாளைக்கு முன்னாலே சூசமாகச் சொன்னார்கள். உணவு வர்த்தகத்தை அரசாங்கமே ஏற்று நடத்தப் போகிறது என்று கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த கொள்கைப் புத்தகத்திலே ஒன்றையும் காணோம். ஏதோ பழைய பஞ்சாங்கத்தைப் போல், கிராமங்களிலே விவசாயப் பஞ்சாங்கம் போட்டிருப்பார்கள், இப்பொழுதுகூட என் வீட்டிலே இருக்கும், முன்னாள் இரண்டு வரி, பின்னால் இரண்டு வரி, அமைச்சரின் பெயர் இவைதான் போடப்பட்டிருக்கிறதே தவிர, [illegible] டிரேட்ஸ் பற்றி குறிப்பிடப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் [illegible] சொல்லித்தான் இந்த அரசுக்கு வந்தது. அது அன்றைக்கு ரொம்ப முக்கியமான, உயிரான கொள்கை. அதை அமுல்படுத்துவதற்காகத்தான் இந்த நாட்டிலே [illegible] ரூ. 50 கோடி அளவுக்கு [illegible] டிரேடிங் செய்தோம் [illegible]. 10 லட்சம் டன்களைக் கொள்முதல் செய்தோம். [illegible] இயந்திரத்தை, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய தீர்க்கதரிசனமில்லாத, உறுதியற்ற, மக்கள் நலனுக்கு விரோதமான, விவசாயிகளுக்கு விரோதமான, உணவுக் கொள்கையின் காரணமாக இவ்வளவு உணவு உற்பத்தியாகியும், மதகுக் கதவுகளை எங்கோ திறந்து விட்டிருக்கிறார்கள்.

நான் கூறுகிறேன். இன்னமும் காலம் போய்விடவில்லை. இந்த சட்டமன்றத் தொடர் முடிவதற்குள்ளேகூட, இதுபற்றிய நல்ல முடிவுகளை எடுக்கலாம். நான் குற்றம் சாட்டுவதற்காக இதைச் சொல்லவில்லை. ஒரு பொன்னான கொள்கையின் பெயரால், இந்த நாட்டிலேயுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும், ஒவ்வொரு மகனுக்கும் உணவு கொடுக்கவேண்டிய ஒரு பெரிய பொறுப்பு இருக்கிறது. அதை நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. அது மிகமிக முக்கியமான பொறுப்பு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றவேண்டும்.

நியாயமான விலையில் தேவையான அளவு கிடைக்க வேண்டும். உணவு உற்பத்தி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எல்லா இடங்களிலும் விளைந்திருக்கிறது. 55 லட்சம் டன் விளைந்திருக்கிறது. இருந்தும் விலை ரூ. 2-3/4, ரூ. 3-3/4 என்றால், ஏன் இன்றைக்கு இப்படி இருக்கிறது என்று முனைப்பாக யோசிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை, சாதாரண பிரச்சினை அல்ல. விலைவாசியைக் குறைப்பதற்கு ஒன்றும் சவானுடைய அதிகாரம் தேவையில்லை. இந்திரா காந்தி அம்மையார் கையெழுத்துப் போடத் தேவையில்லை. வழிப்பறிக் கொள்ளையிலே மிகப் பெயர்போன கொள்ளைக்காரர்கள் வாழ்கின்ற இடம் என்று சொல்லப்படுகின்ற மத்தியப்பிரதேசத்திலே கோதுமைதான் அதிகமாக இருக்கிறது. அங்கு உணவு தானிய வர்த்தகத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. இங்கு மிகப் பெரிய அற்புதமான அதிகாரிகள் இருக்கிறார்கள். மிகப் பெரிய சிவில் சர்வீஸ் இருக்கின்றது. அவர்களால் நிர்வாகம் நிர்வகிக்கப்படுகிறது. வெற்றி தோல்விகளிலே எல்லோருமே மிகச்சிறந்த இயந்திரத்தை 4 ஆண்டுகளாக, மற்றவர்களுடைய நலனுக்குத் திருப்பிவிட்டதன் காரணமாக, இன்றைக்கும் இவைகளுக்கான நிலைமை நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய உரையிலே இல்லாதது வருந்தத்தக்கது என்று சொல்லிக்கொண்டு அதற்கான நடவடிக்கையை விரைவாக எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.



இந்த ரைஸ் மில்களைத் தேசியமயமாக்க வேண்டும். ரைஸ் மில் என்றால், கிராமங்களிலே கூலிக்காரர்கள் வைத்திருக்கிற ஓரிரு ரைஸ் மில்களைச் சொல்லவில்லை. கள்ள மார்க்கெட்காரர்களுடைய நிலைக்களன்களாக இருக்கிற ரைஸ் மில்களை, தேசியமயமாக்க வேண்டும். அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயம் செய்கிறார்கள், பஸ்களை தேசியமயம் செய்கிறார்கள். மிக முக்கியமான, உணவுத்துறையிலே இருக்கிற ஒரு குறையை நீக்க, ரைஸ் மில்களை எல்லாம் தேசியமயமாக்கவேண்டும்.

அதேமாதிரியாக சர்க்கரை ஆலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். நெருக்கடியான நேரத்திலே ரூ. 1-3/4-க்கு கிடைத்த சர்க்கரை இன்றைக்கு ரூ. 3-1/4-க்கு வெளியிலே விற்கிறது. அதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சர்க்கரை மில்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கிறது. கரும்பு விவசாயிகளுக்கு ரூபாய் ஒன்று கொடுக்க வேண்டுமென்றால், ஏதோ பாக்கியவான்கள் ரொம்ப ஆயாசப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட, இணக்கமாகப் பேசி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். யாருக்கு இணக்கம்? கொள்ளை அடிப்பவனிடத்திலே இணக்கம் தேவைப்படுகிறதா?

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இங்கு சொல்லிக் கொள்கிறேன், இன்றைக்கு தனியார் துறையிலே 9 ஆலைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ரூ. 2 கோடியோ ரூ. 3 கோடியோ வருகிறது. அலுமினியம் கம்பெனியிலும் ரூ. 2 கோடி வருகிறது. நாம் நடத்தினால் வருமா, வராதா தெரியவில்லை. அதிலெல்லாம் காட்டுகிற அக்கறையை இதிலும் காட்டவேண்டும். இன்றைக்கு U. P. யிலே அனுமதி வழங்கியிருக்கிறார்கள். நீங்கள் தேசியமயமாக்கிக்கொள்ளுங்கள் என்று அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அதைப் போல், இந்தச் சர்க்கரை ஆலையை உடனடியாக அரசின் கீழ் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டை செய்து நீங்கள் நல்ல பெயரைத் தட்டிக்கொண்டு போயிருக்கலாம். ரூ. 20 கோடிக்கு வரியை எடுத்திருக்கலாம். ரூ. 20 கோடி சர்க்கரை ஆலைகளிலே மட்டும் வரும். கரும்பு விவசாயிகளுக்கு பணம் வரும், சாப்பிடுகிறவர்கள், கன்ஸ்யூமர்களுக்கும் சர்க்கரை கிடைக்கும், வரிப் பளுவினால் கஷ்டப்படுகிற மக்களுக்கும் வரிப்பளு நீங்கும் என்ற வகையிலே இந்த சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை அறிவிக்க வேண்டுமென்பதை நான் அவர்களுக்கு அருள்கூர்ந்து

தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) 10 நிமிடங்கள் கொடுங்கள், வேறு ஒன்றும் வேண்டாம். இன்னும் சில பாயிண்டுகள் இருக்கின்றன. சர்க்கரை விலையைக் குறைக்கலாம். நம்மிடத்திலே இருந்தால் குறைக்கலாம். எதற்காக கோருகிறோம்? அவர்களைப் போய் கேட்கிறோம். நான் உணவு அமைச்சராக இருந்தபொழுது, சர்க்கரை விலை ஏறியது. இங்கிருக்கிறவர்கள் எல்லாம் பம்பாய்க்கும் மற்ற பகுதி களுக்கும் வெல்லத்தை அனுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் சாரதி இப்பொழுது உறுப்பினராக இருக்கிறார், அவர்களுக்குத் தெரியும். இன்னும் திருப்பத்தூர் தொகுதி உறுப்பினருக்கும் தெரியும். மத்திய சர்க்காரிடம் நான் உத்தரவு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர் களிடம் சொன்னேன். மத்திய சர்க்கார் உத்தரவு இருக்கிறது. நாம் கட்டுப்படுத்த முடியாது. சட்ட விரோதமான உத்தரவு போட்டால் தவறில்லையா என்று கேட்டார்கள். பிறகு அவரிடம் சொல்லி மாநில அரசு குறுக்கிட்டு, வெல்லத்தை எல்லாம் வெளியே எடுத்துக் கொண்டு போகக் கூடாது என்று உத்தரவு போட்டோம். சில வெல்ல வியாபாரிகள்
பி.ப. 12-30 ஹைகோர்ட்டுக்குப் போனார்கள். மடமடவென்று விலை குறைந்தது. அதே போல் சர்க்கரை விலையையும் குறைத்திருக்க முடியும்.

எண்ணெயைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார்கள் விவசாய துறை அமைச்சர் அவர்கள். வேர்க்கடலையா, பருவ மழை தவறிவிட்டது. மின்சாரமா, பருவ மழை தவறிவிட்டது என்று எதற்கெடுத்தாலும் பருவ மழை தவறிவிட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குஜராத் மாநிலத்திலே கடலைப் பிண்ணாக்கு வெளியே எடுத்துச் செல்லக் கூடாது என்று தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கன்கரன்ஸ் வேண்டும். அப்படி இருந்தும் தைரியமாகச் செய்தார்கள். மூன்று மாதத்தில் விலை குறைந்து விட்டது. நீங்கள் அந்த மாதிரி நடவடிக்கை எடுத்தால் கடலை எண்ணெய் வியாபாரி கோபித்துக் கொள் வானே என்று பயப்படுகின்றீர்கள். இந்த விலைவாசிகளைக் குறைப்பதற் கெல்லாம் யார் ஜவாப்தாரி ?

தென்னை மரம் வைக்க திட்டம் வைத்திருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது?. கோட்டைக்கு வெளியே குரோட்டன்ஸ் வைத்திருக்கிறார்கள். மகத சாம்ராஜ்யத்தின் பொற்கால பூங்காக்கள் போல், நீர் ஊற்றுக்கள் எல்லாம் அமைத்து ரோமாபுரி ராஜ்யத்தின் எழிலைப்போல் வைத்திருக் கிறார்கள். தென்னம்பிள்ளை வைக்கும் நிலை எப்படி இருக்கிறது ? தேங்காய் எண்ணெய் நமக்கு 31 லட்சம் டன் தேவை ; 11 லட்சம் டன் தான் இருக்கிறது. ஏதோ சூரிய காந்திப்பூ, வைட்டமின் ஏ எல்லாம் இருக்கிறது என்கிறார்கள். அந்தத் திட்டத்தை எல்லாம் சீக்கிரமாகச் செய்வதற்கு முன் வரவேண்டும்.

இந்த மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய பருத்தி 7 லட்சம் பேல்கள் தேவை. இப்போது 4 லட்சம் பேல்கள்தான் உற்பத்தி யாகிக் கொண்டிருக்கின்றன. இதன் உற்பத்தியைப் பெருக்கி விலையைக் குறைத்திருந்தால் விவசாயிகள் போராட்டம் நடந்திருக்குமா ?



பருப்பு வகைகளை எடுத்துக்கொண்டால் எந்த அளவுக்கு உற்பத்தி அதிக
மாகச் செய்யப்பட்டிருக்கிறது ? பஞ்சாப் போன்ற வெளி மாநிலங்
களைத் தான் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறோம். திட்டம் என்ன ?
சமாராதனை இலையில் கூட்டு, சாம்பார், கத்தரிக்காய் என்று வைப்பது
போல்தான் பருப்பும் இருக்கிறது. அதன் உற்பத்தியைப் பெருக்க என்ன
திட்டம் இருக்கிறது ?

கெரோசின் விலையைக் குறைக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?
கள்ளக் கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களைச்
சம்பாதிக்கிறார்கள். கண்ட்ரோல் இல்லை என்றவுடன் பதுக்குகிறார்கள்.
ஓரிடத்தில் உற்பத்தியாகி இன்னொருவன் பயனடைகிறான். கொள்ளைக்
காரர்கள் ராஜ்யமாகத்தான் இருக்கிறதே தவிர, ஏழை மக்களுக்கு,
சாதாரண மக்களுக்கு உதவுகின்ற திட்டமாக இல்லை. சாதாரண பொது
மக்கள் பயன் அடையவில்லை. இடைத் தரகர்கள்தான் பலன் பெறக்
கூடிய அளவில் பிற்போக்காக இருக்கிறது.

அண்ணா அவர்கள் கொள்கையை காற்றிலே தூர எறிந்துவிட்டு
சாதாரண மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்களைக்
கொடுக்க வேண்டுமென்ற கொள்கைக்கு முரணாக இந்தக் கொள்கை
அமைந்திருக்கிறது. இந்தக் கொள்கையை மாற்றாத வரையில் இந்த
நாட்டுக்கு நல்ல காரியங்களைச் செய்தார்கள் என்ற பெயரை எடுக்க
முடியாது. மிகத் தீர்க்கமாக ஆலோசனை செய்து உணவு தானிய வர்த்த
கத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் ; அரிசி ஆலைகளைத் தேசிய
மயமாக்க வேண்டும், சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்
என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து
என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. துரை முருகன்</u> : திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது
ர்க்கரை ஆலைகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லு
ன்ற நேரத்தில் மால்கோ தொழிற்சாலையை எடுத்துக் கொண்டதால்
ரண்டு மூன்று கோடி ரூபாய்தான் லாபம் இடைக்குமென்று சொன்
ர்கள். நான் அறிந்து கொள்ள விரும்புவது மால்கோவை தேசுடைமை
ாக்கியதை அவர் வரவேற்கிறாரா இல்லையா என்பதுதான். அதைப்
ற்றித் தெளிவாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரை
ரு டன் கரும்புக்கு 85 ரூபாய் விலை கொடுக்கிறார்கள். அதற்கு 85
பாய், சேல்ஸ் டாக்ஸ் 5 ரூபாய் மத்திய சர்க்காருக்குக் கொடுக்க
வண்டும். 20 ரூபாய் உற்பத்திச் செலவு என்று இவை எல்லாம்
ர்த்து செலவு 135 ரூபாய் அளவுதான் வருகிறது. கண்ட்ரோலில்
ரு மூட்டை 185 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஒரு மூட்டைக்கு 50 ரூபாய்க்கு
லாக லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, இந்த சர்க்கரை ஆலைகளை
தசியமயமாக்க ஏற்பாடு செய்யவில்லை என்பதைப் பொறுத்தவரை பொது
வாதத்திலேயே பதில் சொல்லியிருக்கலாம். இந்த குறிப்பிட்ட
ாண்டிலாவது அரசின் நிலை என்ன என்பதைச் சொல்லவேண்டு
ன்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எ. மதியழகன் : மால்கோ தொழிற்சாலையைப் பொறுத்த வரை அதைத் தனியார் துறைக்குக் கொடுத்ததே தவறு என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 1964-ம் ஆண்டிலேயே திரு. வெங்கட்டராமன் அமைச்சராக இருந்த நேரத்திலேயே குறிப்பிட் டிருக்கிறேன். அன்று இருந்த காங்கிரஸ் அரசாங்கம்தான், திரு. காமராஜ் அவர்கள்தான் இதைத் தனியார் துறைக்குக் கொடுத்தார்கள். ஸ்டீல் போன்று உள்ள அலுமினியத் தொழிற்சாலையைத் தனியார் துறைக்குக் கொடுத்தது தவறு என்று வாதிட்டவன் நான். இப்போது என்ன விவகாரம் என்றால் இதிலே ஃபாரின் எக்ஸ்சேஞ்சு சம்பந்தப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. மத்திய சர்க்காரைக் கலக்காமல் இவ்வளவு அவசரம் அவசரமாக தேசியமயமாக்கிய நீங்கள் சக்கரை ஆலைகளையும் தேசிய மயமாக்கி இருந்தால் மக்களுக்குத் தேவையான, உதவிகரமானக் காரியங் களைச் செய்ததாக இருக்குமே என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிவபெருமாள்... ..

(திரு. சிவபெருமான் எழுந்தார்.)

திரு. கே. எ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்திலே நெடுங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறை பொது வாக உறுப்பினர்கள் பேசி முடித்த பிறகு எதிர்க் கட்சித் தலைவர்கள் பேசி, அதற்குப் பிறகு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். ஆனால் இரண்டு நாட்களாகக் கவனித்து வந்ததில் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசிய தற்குப் பிறகு இன்னொரு உறுப்பினரைப் பேச விடுவதைப் பார்த்தேன். நேற்று ஆறுமுகத்தைப் பேசவிட்டார்கள். இது மரபும் அல்ல, முறையும் அல்ல. எத்தனை ஆண்டு சரித்திரத்தை எடுத்துப் பார்த்தாலும் எதிர்க் கட்சித் தலைவர்கள் பேசிய பிறகு முதலமைச்சரோ மற்ற அமைச்சர்களோ பதில் சொல்ல வேண்டும். அதை விட்டு ஏதோ லாவணிக் கச்சேரி மாதிரி நடவடிக்கையை விட்டால் அது எங்கோ கொண்டு போய்விடும். இன்றைக்கு வேண்டுமானால் பேசிவிட்டும். இனிமேலாவது அப்படி இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தந்தக் கட்சியினர் பெயரைக் கொடுக்கிறார்கள். முதல் வரிசையில் இருக்கும் கட்சித் தலைவர்கள் சாதாரணமாகக் கடைசியில் பேசுகிறார்கள். இன்றைக்கு திரு. மாரிமுத்து அவர்கள் முதலிலேயே பேசி விட்டார். ஆளும் கட்சியிலிருந்து கொடுத்த பெயர்களில் பாதிப் பேருக்கு மறுத்துவிட்டேன். அவர்கள் எப்படியாவது பெயர்களை அழைக்க வேண்டுமென்று கேட்டார்கள். இதிலே ஏதோ லாவணிக் கச்சேரி என்றெல்லாம் சொல்லுவது சரியல்ல. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று மாறி மாறி வரும்போது நிகழ்ச்சிகள் சுவையாக இருக்கும். இதிலே அந்தஸ்து பேதம் இருப்பதாகக் கருதவில்லை.

*திரு கோ. சிவபெருமான் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று முன்னாள் அமைச்சராக இருந்து இன்று மதிப் பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத்தலைவராக வீற்று இருக்கக்கூடிய மதியழகன்



அவர்கள் பட்டதாரி ஆனாலும், நான் சாதாரணமானவன் என்றிருந்தாலும் நான் அவர்கள் சொன்ன கருத்துபற்றியோ, அதை எதிர்த்தோ பேச எழுந்திருக்கவில்லை. கூடுமானவரையில் இந்த அரசின் சாதனைகளைப் பற்றிப் பேசுவதற்குத்தான் எழுந்து நிற்கிறேனே தவிர வேறல்ல.

இந்த அரசு வேளாண்மைத் துறையில் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்பதை நாடு அறியும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ளது. அதோடு கூட தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 11,000 ஏக்கர் நிலங்கள் மணலால் மூடப்பட்டு சகாரா பாலைவனம் போல் காட்சி அளித்தது. அந்த நிலங்களைச் சார்ந்த விவசாயிகள் அத்தனை பேர் களும் ஏழை விவசாயிகள். அந்த மணலை அப்புறப்படுத்தி மீண்டும் சாகுபடி செய்யக்கூடிய நிலை இல்லாத நிலையில், அரசாங்கமே பொறுப்பை ஏற்று, 11,000 ஏக்கர் நிலங்கள், நன்செய் நிலங்கள், மணலால் மூடப் பட்டிருந்த, அந்த மணலை அப்புறப்படுத்தி அந்த நிலங்களை மீண்டும் சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக ஆக்குவதற்கு ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ரூபாய் வரை இந்த அரசு செலவு செய்து ஏற்ற நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவா களும், அதிகாரிகளும் தீவிரமாக எடுத்துக்கொண்டிருப்பதால் அந்த விவ சாயிகள் வாழக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்.

இதேபோல் பலயிடங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு கடன்கள் வழங்கி உதவி செய்து வருகிற நிலையைக் காண்கிறோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு ஆதித்தனார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வேறுமுறையில் கூறினாலும், எங்கள் அரிய லூர் கோட்டத்தைப் பொறுத்தவரையில் 5 ஏக்கர் நிலமுள்ள விவசாயி களுக்கு 10,000-ல் இருந்து 18,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்கத் தக்க வகையில், அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாக இருப்பதால், 1,100 அடிவரை கீழே இறக்க வேண்டியிருப்பதால், அப்படி இறக்கி பைப்ஸ் மூலம் தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலை இருப்பதால், தற்சமயம் 100 இடங்களில் பவர்டிரில்லர்ஸ் மூலம் வேலை செய்து கொண்டிருக்கிறா கள். மேலும் 100 இடங்களில் பவர் ட்ரில்லர்ஸ் மூலம் வேலை செய்ய அனுமதி கொடுக்க இருக்கிறார்கள். 10, 15 ஏக்கர்கள் உள்ள விவசாயி களுக்கு ட்ராக்டர்கள் வாங்குவதற்காக கடன் வழங்கும் நிலையம் இருக்கிறது. விவசாயிகளுக்கு மாட்டுக் கொட்டகைக்கு லோன், போன்று பல கடன்கள் வங்கிகள் மூலம் கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆக, விவ சாயிகளுக்கு என்னென்ன முறைகளில் சலுகைகள் கொடுக்க முடியுமோ அந்த அந்த வகைகளில் சலுகைகள் இந்த அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக, என் தொகுதியைப் பொறுத்தவரையில் அரியலூர் தொகுதியில் புதுக்கோட்டை என்ற கிராமம் இருக்கிறது. அது கொள் ளிடக்கரை ஓரமாக இருக்கிறது. கொள்ளிடத்துத் தண்ணீரும் வடிகால் தண்ணீரும் மழைக்காலங்களில் அதிகமாக வந்து புதுக்கோட்டை கிராமத் தையே தாக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதன் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கரா நிலங்கள் பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது. இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன்

நெல் விலை குறைவாக இருந்தாலும், அரிசி விலை அதிகமாகிக்
கொண்டு இருக்கிறது. இதற்குக் கார்ணம் தற்போதுள்ள மின் வெட்டு
என்று கூறிக்கொள்கிறேன். விவசாயம் எந்தப்பகுதியில் செய்தாலும்
அவர்களுடைய பம்பு செட்டுகளுக்கு இப்போது அதிக நேரம் மின்சாரம்
தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த மின்
சாரம் வழங்குவது ஒழுங்காக இல்லை என்று குற்றம் சாட்ட விரும்பு
கிறேன்.' அவர்களுக்குச் சில இடங்களில் எவ்வளவு நேரம் மொத்த
மாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு நேரம் கொடுக்காமல், காலை
யில் இரண்டு மணி நேரம், இரவில் இரண்டு மணி நேரம் என்று
பிரித்துக்கொடுக்கிறார்கள். இப்படிக்கொடுப்பதால் பல சங்கடங்கள்
இருக்கின்றன. நான் நேற்றையதினம் காஞ்சிபுரம் சென்றிருந்த
போது அங்கேயிருக்கும் விவசாயிகள் இந்தமாதிரி குறைபட்டுக்கொண்
டார்கள். அதை ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். மேலும் அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மாநிலத்தில் எங்கே சென்றாலும் வீரிய விதைகள் கொடுக்கப்
படுகின்றன. அந்தப் பண்ணைகளிலிருந்து வாங்கும் விதைகள் சிலது
விளையாமல் போய்விடுகிறது என்று பலயிடங்களிலிருந்து புகார் வருகிறது.
இதற்காகப் பொறுப்பான அதிகாரிகளைப் போட்டு என்ன முறையில்
அதைப் பயிரிட்டால் நல்ல முறையில் பலன் கிடைக்கும் என்பதை
உடனுக்குடன் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்கான
நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

டிராக்டர்கள் பழுது அடைந்தால் பல இடங்களில் ரிப்பேர் செய்
வதற்கு வழிவகை இல்லை. ஸ்பேர்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்
கிறார்கள். அது கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற குறை
பாடும் இருக்கிறது. இப்படிப்பட்ட புகார்கள் பல மாவட்டங்களிலிருந்து
வருகின்றன. ஸ்பேர் பார்ட்ஸ் கொடுப்பதிலும், உடனடியாக ரிப்பேர்
செய்வதிலும் அரசு முழு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அப்போது தான் விவசாயிகள் ஊக்கமும் ஆக்கமும்
பெற்று நல்ல முறையில் பயிர் செய்ய முடியும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

இப்போது கொடுக்கப்படும் பூச்சி கொல்லி மருந்து தரமாக இல்லை
என்ற குற்றச்சாட்டு பலயிடங்களிலிருந்து வருகிறது. அதிலே அடல்ட்
டிரேஷன் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பாலிடால்
மிகவும் கடுமையான ஒரு விஷம். அதை யாராவது
அருந்தினால் உயிர் இழக்கும் நிலை இருக்கிறது. ஆனால் அந்தப்
பாலிடால் தெளித்தால் பூச்சிகளைக்கொல்ல எந்த விதமான பிரயோ
சனமும் இல்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட கலப்படங்களைச்
செய்பவர்களை மிகவும் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மேலும், இந்த மருந்துகளை பிளாக் மூலமாக
விற்று வருகிறார்கள். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு
மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கெமிகல் பெர்ட்டிலைசர்ஸ் பொறுத்தவரையில், இன்று இருக்கும் விநி
யோக அமைப்பை மாற்றி அமைக்கவேண்டும். அடையாளக் கார்டு
முறைமூலம் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்
தாலும், அது உண்மையான விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்று
சொல்கிறார்கள். அது உண்மையான விவசாயிகளுக்குக் கிடைக்க வழி
வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மொத்தமாக மத்திய சர்க்காரிலிருந்து கொள் முதல் செய்து
விட்டு, ஸ்டேட் டிரேடிங் மூலமாக அரசாங்கம் செய்கிறதோ, எப்படி
உணவுப் பண்டங்களை மொத்தமாக அரசாங்கம் கொள்முதல் செய்து,
மொத்த வியாபாரமாகச் செய்கிறார்களோ, அதேபோல் சில்லரை வியா
பாரத்தையும் அரசாங்கம் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இப்போது கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல் இருக்கிறது. நான் ஒட்டு
மொத்தமாக இதை சொல்கிறேன் என்றாலும், பலயிடங்களிலிருந்து
இப்படிப்பட்ட புகார்கள் வருகின்றன. ஆகவே, இவற்றை அரசாங்க
மூலமாக விநியோகம் செய்தால் சாலத் சிறந்ததாக இருக்கும் என்று
நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, விளைபொருள்கள் கமிஷன் கரும்பு-ஷுகர் கேன் போன்ற
வற்றிற்குக் கொடுத்திருக்கும் விலை மிகவும் குறைவாக இருக்கிறது
என்று சொல்லப்படுகிறது. கரூரில் நடைபெற்ற எங்கள் கட்சியின்
மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ரூ. 85 என்று
நிர்ணயித்து இருப்பது குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற
மாநிலங்களில் ரூ. 110—ரூ. 115 என்று இருக்கிறபோது தமிழ்
நாட்டில் மட்டும் இந்த விலை இருப்பது தமிழ் நாட்டு விவசாயிகள் ஏதோ
பாவம் செய்தவர்களைப்போல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே,
இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் வழிவகை செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இந்த சர்க்கரை ஆலைகள் தேசிய மயம் பற்றி
எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ஆட்சேபணையும்
இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உ. பி. யில் நடந்த
மாதிரி அந்தத் தேசியமயக் கொள்கையை நடைமுறைப்படுத்துகிறபோது
ஊழல் இல்லாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான்
இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போது பஞ்சு விலை கூடியிருக்கிறது. இதற்கு முன்பு பஞ்சு
விலையில் தேக்கம் ஏற்பட்டிருந்தது. இந்த மன்றமும் அரசாங்கமும்
அதை உணர்ந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இந்தமாதிரி
தேக்கம் வருவதை அரசாங்கம் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தென்னம் பிள்ளை பயிரிடுவதில் பல இடங்களில் சிறப்புத் திட்டம்
நிறைவேற்றி இருக்கிறார்கள். தஞ்சைப் பகுதியில், கன்னியாகுமரியில்
அதைச் செய்கிறார்கள். இப்போது கடனுகப் பணம் தருகிறார்கள். அதை
மானியமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு
ஒரு கிராஷ் பிரோக்கிராம் என்ற அடிப்படையில் ஊக்கம் கொடுத்து செய்யப்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 16

படுமானால், அந்தத் தென்னம் பிள்ளை பயிரிடுபவர்கள் நல்ல வகையில்
அதை வளர்ப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத்
தென்னம் பிள்ளை பலன் கொடுக்கவேண்டுமென்றால் 7 ஆண்டுக்
காலம் 10 ஆண்டுக் காலம் ஆகிறது. ஆகவே, அவர்களுக்குக் கொஞ்சம்
மானியமாகத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அது பொருத்தமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்கிறேன். இப்போது தென்னம் பிள்ளை பூச்சிகளால் பாதிக்கப்படுகிறது.
அதைப் போக்குவதற்கு வேறு பூச்சி இருக்கிறது. அந்தப் பூச்சை
விட்டால் அதைப் போக்கலாமென்று சொல்கிறார்கள். அந்தப் பூச்சைக்
கொல்வதற்கு ஒரு ஆராய்ச்சி நடத்தி, அதன் மூலம் அந்தத் தென்னம்
பிள்ளைகளைப் பிழைக்கச் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

முந்திரி வளர்ப்புக்காகச் சிறப்புத் திட்டம் கொடுத்து இருக்கிறார்கள்.
புகையிலை அபிவிருத்திக்கும் திட்டம் கொடுத்திருக்கிறார்கள். முந்திரி
வளர்ப்பதற்கு ரூ. 150 ஒரு ஏக்கருக்கு விதை வாங்கக் கொடுக்கிறார்கள்.
அது மிகவும் குறைவாக இருக்கிறது. தரமான விதைகள் வழங்கி அதை
வளர்க்க ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
திருநெல்வேலி மற்றும் பல பகுதிகளில் இந்தமாதிரியான காரியங்களைச்
செய்வதற்கு வழிவகை இருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

இன்று பருப்பு, உளுந்து, பயறு போன்ற பொருட்களில் பற்றுக்குறை
இருக்கிறது. இந்தப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு, வெளி மாநிலத்
திலிருந்து இவற்றை வரவழைக்காமல், நமது மாநிலத்திலேயே உற்பத்தி
செய்வதற்கு இன்னும் விரிவான திட்டத்தைக் கையாள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

கோகோ பிளாண்டேஷன் எல்லாம் இன்று திருநெல்வேலி, கன்னியா
குமரி மாவட்டங்களில் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மார்க்
கெட்டிங் வசதி போதுமானதாக இல்லை. காட்பரீஸ் கம்பெனி மட்டும்தான்
அதை வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதைப்
பயிரிடுபவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் நல்ல விலை கொடுத்து
வாங்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள்
மாவட்டத்தில் அதிலே அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்
களிடத்தில் இதற்கு மார்க்கெட்டிங் சம்பந்தமாக என்ன வழிவகை செய்ய
முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

மண் வளம் சோதனை நிலையங்கள் ஒரு ஜில்லாவிற்கு ஒன்று ஏற்படுத்த
அரசு வழிவகை செய்யவேண்டும். அந்த முறை வைத்தால்தான்
பொருத்தமாக இருக்கும். அதற்கு வேண்டிய வழிவகை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1373 மார்ச் 16] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

விவசாயிகளுக்கு புல்டோசர்கள் வாங்குவதற்கு ரூபாய்களை அதிகமாகக்
கொடுத்து இருக்கிறார்கள். முன்பு குறைவாக இருந்தது. ரூ. 48
என்று கருதுகிறேன். அதை நோ லாஸ், நோ பிராபிட் என்ற முறையில்
கொடுத்திருக்கிறார்கள். செப்டம்பர் 1972-ல் கொடுத்திருக்கிறார்கள் என்று
நினைக்கிறேன். அதை உண்மையான விவசாயிகளுக்குக் கொடுக்க
வேண்டும். பெரிய விவசாயிகளுக்கு எந்த விதமான கன்சஷனும்
கொடுக்கக்கூடாது. இதற்கும் அரசாங்கம் வேண்டிய முறையில் வழி
வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி.ப.
1-00

கடைசியாக உணவுக் கொள்கை பற்றி ஒன்று கூற விரும்புகிறேன்.
உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், உணவு தானியம் அத்தனை
யையும் அரசாங்கமே கொள்முதல் செய்து விநியோகம் செய்ய திட்ட
மிட்டிருக்கிறார்களா இல்லையா என்பதை தெளிவாகக் கூறவேண்டுமென்று
மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்
களில் கோதுமை கொள்முதல் பூராவையும் அரசாங்கமே செய்கிறது.
இதை எல்லா மாநிலங்களும் ஒத்துக்கொண்டிருக்கிற நிலைமையைப்
பார்க்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எல்லாக் கொள்
முதலையும் அரசாங்கமே செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற
கருத்தையும் கூறுகின்றேன். தற்போது சென்டிரல் உணவு கார்ப்பொ
ரேஷன் ஒன்றும், நமது மாநில அளவில் ஒரு தனி நிறுவனமும்
இருக்கின்றன. இருவருமாகச் சேர்ந்து கொள்முதல் செய்கிறார்கள்.
அப்படிக் கொள்முதல் செய்வதில் இன்னும் துரிதமாக வேலைகள் நடைபெற
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் பல
இடங்களில் நெல் 57 கிலோ ரூ. 29 ஆக இருந்து கொண்டிருக்கிறது.
நான் பட்டுக்கோட்டைக்குச் சென்றபோது உற்பத்தியாளர்கள் என்னிடத்தில்
கூறினார்கள். உற்பத்தியாளர்களுக்கு அதிகமான விலை கிடைக்கவேண்டு
மென்றால், எங்களை ஒரு வேளை பிற்போக்கு வாதிகள் என்று சொல்லு
வார்கள் அரிசிக்கும் நெல்லுக்கும் விலையில் இடைவெளி 'அதிகமாக
இருக்கிறது என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் நினைக்கிறார்கள். நில
உச்சவரம்பு காரணமாக பெரிய நிலச்சுவாந்தார்கள் அகற்றப்பட்டிருக்
கிறார்கள். ஆகையினால் சிறு விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கிற
நிலைமை ஏற்பட வேண்டுமென்றால் நிச்சயமாக அவர்களுக்கு விலையைக்
கூட்டிக் கொடுக்கவேண்டுமென்ற கருத்தினை கூறக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

நெல்லை விற்றுத்தான் அவர்கள் எல்லா அத்தியாவசியப் பண்டங்களை
யும் வாங்க வேண்டியிருக்கிறது. நெல்லை விற்றுத்தான் அவர்கள் உரம்
வாங்கவேண்டும், பிண்ணாக்கு வாங்கவேண்டும், எல்லாப் பண்டங்களுக்கும்
வாங்க வேண்டுமென்ற நிலையிருப்பதால், நெல்லை அதிகமாக உற்பத்தி
செய்கின்ற அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்
களுக்கு விலையைக் கூட்டிக்கொடுக்க வழிவகைகள் செய்யவேண்டும்.
மொத்த வியாபாரத்தையும், சில்லறை வியாபாரத்தையும் அரசாங்கமே
எடுத்து நடத்த வேண்டும். இது ஒரு புரட்சிகரமான கருத்தாக
இருந்தாலும், இடைத் தரகர்களையும், கள்ள லாபக்காரர்களையும்
கள்ள மார்க்கெட்காரர்களையும் அப்புறப்படுத்த மேலான யோசனையாக,
இருக்குமென்ற கருத்தினையும் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மாச் 16

அடுத்து விநியோகம் செய்கின்ற தானியங்கள் எல்லாம் நல்ல தரம் உள்ளவைகளாக இருக்கவேண்டும். பல இடங்களில் அவை கெட்டுப் போகின்றன. பதம் இருக்கிறது. ஈரம் இருக்கிறது என்ற காரணத்தால் கெட்டுப்போகிறது. இதையெல்லாம் நீக்கி, தானியங்களை நல்லமுறையில் பாதுகாக்க வேண்டும். அதுவுமல்லாமல் இன்றிருக்கிற சில விநியோக விதி முறைகளை கையாண்டு கொண்டிருந்தால் கஷ்டமாக இருக்கும். ஒரு கிட்டங்கிலே (கோடவுன்), இன்னின்ன இடத்தில் தானியம் உளுத்துப் போயிருக்கிறது, கெட்டுப்போயிருக்கிறது என்று சொன்னால், அந்தப் பகுதியை அப்புறப்படுத்தி உடனடியாக மார்கெட்டிங் செய்வதற்கும், காயப் போட வேண்டிய முறையிலும் செயலாற்ற விதி முறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். எங்கள் எல்லையோரப் பகுதியில் அதிகமாக விலைவாசி கூடிக்கொண்டிருக்கிறது. கேரள எல்லையிலிருப்பதால் கடத்தல் காரர்கள் பலரும் இருக்கிறார்கள். இல்லை என்று நான் மறுக்கவில்லை. கடத்தல் காரர்களுக்காக நான் வாதாடவும் வரவில்லை. ஆகவே தான் சொல்லுகின்றேன். கேரள அரசாங்கத்தை அணுகி, நமது அரசாங்கத் தரப்பிலிருந்து எவ்வளவு நெல்லானாலும் சரி, அரிசியானாலும் சரி கேரள அரசாங்கத்திற்கு கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் கேரளத்தில் இருக்கிற வியாபாரிகள் எல்லையோரப் பகுதிகளில் முகாமிட்டுக் கொண்டு, வண்டியை வைத்துக்கொண்டு இந்தப் பகுதிகளிலிருந்து எவ்வளவோ உணவு தான்யத்தை கடத்தல் செய்கிறார்கள். இதைத் தடுக்க அரசாங்க ரீதியாக பேச்சு நடத்தி வழிவகைகளைக் காண வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பெல்ட் ஏரியாவில் அரிசி விலை லிட்டர் ரூ. 1·18 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஏனைய பகுதிகளில் விலை நிர்ணயம் இல்லாத காரணத்தால், ஒரு படி 2¼ ரூபாய், 2 3/4 ரூபாய், 3 ரூபாய் வரை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரி அபரிமிதமான விலை யேற்றம் இருப்பதால், கள்ள மார்க்கெட்டில் ஈடுபடும் நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் (non belt area)—வில் அரிசியின் விலையை நிர்ணயித்து வழங்கவேண்டும். எங்கள் மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இந்த கஷ்டம் இருக்கிறது. கல்குளம், விளவங்கோடு தாலூக்காக்களில் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக செக் போஸ்ட. செக் போஸ்ட்கள் எல்லாம் பெல்ட் ஏரியாவில் போடவேண்டும். பெல்ட் ஏரியா என்பது சில இடங்களில் 5 மைல், 6 மைல் இருக்கிறது. அந்த இடத்தில் அரிசி யாரும் கொண்டு போகக் கூடாது என்று அதிகமாக தடை போடுவது பொருத்தமாக இருக்கும். அதுவல்லாமல் (Non belt area) நான்-பெல்ட் ஏரியாவில் செக் போஸ்ட் போட்டால் அந்தப் பகுதியிலிருக்கிற விலைவாசியை கட்டுப்படுத்த கஷ்டமாக இருக்கும். ஆகவே செக் போஸ்ட் நான்பெல்ட் ஏரியாவில் இருப்பதையெல்லாம் உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும். அதுமட்டு மல்லாமல் வேறு கஷ்டங்களும் இருந்து கொண்டிருக்கின்றன. செக் போஸ்ட்டில் இருப்பவர்களை அடிக்கடி மாற்றினால்தான் கள்ளக் கடத்தலை தடுக்க வழிவகைகள் செய்ய முடியும் என்ற கருத்தினையும் நான் கூற



1973 மார்ச் 16] [திரு. ஆர். பொ... நாடார்]

விரும்புகிறேன். அந்தப் பகுதியில் விலைவாசி அதிகமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. இது என்ன காரணமோ தெரியவில்லை. இவ்வளவு உற்பத்தி பெருகியும் பல இடங்களிலும் விலைவாசி கூடிக்கொண்டிருக் கிறது. நெல்லை இன்றைய தினம் அரைப்பதில் பல கஷ்டங்கள் இருக் கின்றன. அரிசி ஆலைகளை எல்லாம் உணவு இலாக்காவுக்கு கொடுத் திருப்பதாக மாண்புமிகு கூட்டுறவு அமைச்சரவர்கள் கூறினார்கள். இவையெல்லாம் நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்தன. இப்போது நஷ்டத்தில் ஓடுகிறதா, லாபத்தில் ஓடுகிறதா என்பது பற்றியும் அமைச்ச ரவர்கள் விளக்கம் தெரிவிக்க வேண்டும். இந்தமாதிரி நஷ்டமான காரியங்களை உணவு இலாக்காவுக்கு மாற்றினால், ஏற்கெனவே இருக்கின்ற பெருத்த நஷ்டத்தோடு இன்னும் அதிகமாக நஷ்டம் ஏற்படும் என்ற கருத்தினையும் கூறுகிறேன்.

அடுத்தபடியாக படி அரிசி திட்டத்தைக் கைவிட்ட முறையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். சட்ட மன்ற 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையில் படி அரிசி திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அறிவித்த தால் அதை விவாதிக்க முடியவில்லை. திடீரென்று 4 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டு 82-வது விதியின் கீழ் அறிக்கையை தந்தார்கள். வங்காளத்தில் இருந்த நெருக்கடி நிலைமையை ஒட்டி இங்கே நெருக்கடி நிலைமை ஏற்பட்டமாதிரி, படி அரிசித் திட்டத்தை கைவிட்டிருக்கிறார்கள். படி அரிசித் திட்டத்தை மறுமுறையும் கொண்டு வராவிட்டாலும், எல்லாப் பகுதிகளிலும் நியாய விலைக் கடைகள் (பேர் பிரைஸ் ஷாப்) அரசாங்கத் தரப்பில் நடத்தவேண்டும். அப்படிச் செய்தால் தான் இன்றிருக்கின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். பொதுவாக வேளாண்மைத் துறையும், உணவுத் துறையும், மக்களை அதிகமாக பாதிக்கக் கூடிய இலாக்காக்களாக இருக்கின்றன. இதில் கஷ்டநஷ்டங்கள் இருக்கிறன. ஆதலால் அவற்றையெல்லாம் போக்க அரசாங்கம் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே அதிகமான உறுப்பினர்கள் இன்றைக்குப் பேசவில்லை. கடைசியாகப் பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தம்மால் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஒட்டியும், மற்ற சில பிரசினைகளையும் சொல்லியிருக்கி றார்கள்.

நமது பெரியவர் மணலி அவர்கள் வழக்கமாக அவர் 30 ஆண்டுகளாக பேசி வருகிற ஒரே அரசியலை இன்றைக்கும் சொல்லியிருக்கிறார். முத லாளி மாடி வீடு கட்டுகிறான், கொள்ளைக்காரன், கள்ள மார்க்கெட்காரன் என்று வழக்கமாகச் சொல்லுகின்ற வார்த்தைகளைச் சொல்லி, சூடு பிடிப் பதற்கு எங்களைக் காட்டிச் சொல்லியிருக்கிறார். மத்திய அரசாங்கம் என்று ஒன்று இருப்பதை அவர் மறந்துவிட்டுச் சொன்னார் என்றே கருதுகிறேன். ***

*** ***

*** (மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கு இணங்க நீக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :
*** *** ***

நம்முடைய உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களுக்கும், மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதங்களை குறிப்பேட்
டிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே,
உணவுப் பிரச்னையைப்பற்றி நான் முதலிலேயே ஒரு வேண்டுகோள் விடுத்
தேன். தயவுசெய்து தமிழ்நாட்டுக்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும்
இந்த உணவுப் பிரச்சனையை பொறுத்தவரையில் எல்லோரும் மனசாட்சி
யோடு பேச வேண்டுமென்று சொன்னேன். ஒரு சிலர் இந்தப் பிரச்னைக்கு
மத்திய அரசு காரணம் என்றும், இதிலே 60 சதவிகிதம் மத்திய அரசைச்
சார்ந்தது என்றும் 40 சதவிகிதம் மாநில அரசைச் சார்ந்தது என்றும் சொன்
னார்கள். நிஜலிங்கப்பா அவர்கள்கூட நேற்று பேசும்போது இந்தப் பிரச்
சனையைத் தீர்க்கவேண்டியது நம்முடைய மத்திய அரசுதான் என்று
சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதைக்கட்டுப்படுத்த முடிய
வில்லை என்றால் மத்திய அரசு ராஜிநாமா செய்ய வேண்டும் என்று
சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இதில் மத்திய அரசுக்கு என்னென்ன
உரிமையிருக்கிறது—பொறுப்பு இருக்கிறது என்று பார்க்கவேண்டும்.
இதையெல்லாம் நாம் சொல்லும்போது அவர்கள் இந்தப் பிரச்னையில்
தலையிடாமல் இருக்கிறார்கள்.

ஜீனியைப் பற்றி நமது பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
நமது மாநிலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் டன் ஜீனி உற்பத்தி
யாகிறது. அந்த ஜீனியை மத்திய அரசு வாங்கிக்கொண்டுபோய், நமக்கு
மாதம் ஒன்றுக்கு 9,600 டன் இட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம்
டன்தான் தருகிறார்கள். இந்த விபரத்தைச்சொன்னபோது நமக்கு உரிய
பங்கை பெறுவதற்காக ஏதாவது போராட்டம் நடத்தலாமா என்று
பொன்னப்பநாடார் அவர்கள் கேட்டார்கள். இது மட்டுமல்ல. இதைப்
போன்ற பல பிரச்சனைகள் இருக்கின்றன.

விலைவாசிப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எந்த
அளவுக்கு தன்னால் முடியுமோ அத்தனையும் செய்து வருகிறது. இன்
றைக்கு உணவு தானிய விலை எந்த அளவுக்கு குறைந்திருக்கிறது என்
பதைப்பற்றி வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் பின்னால் விளக்க
மாகச் சொல்லவிருக்கிறார்கள். இங்கே பேசிய பலர் நமது அரசு இதிலே
மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப் பாராட்டினார்கள். பலர் குறை
கூறினார்கள். விலைவாசி ஏறிக்கொண்டே போவதற்கான காரணங்களைப்
பற்றி இந்த அரசாங்கம் ஆராய்ந்து பார்க்கவில்லை என்று எல்லாம்கூட
சொன்னார்கள். அரசு கொள்முதல் செய்கின்ற முறையிலேதான் ஏதோ
தவறு இருக்கிறது ; அதனால்தான் திடீரென்று அதிகமாக நெல் விலை
ஏறி விட்டது என்று சொல்கிறார்கள். அதிலே தவறு நடக்கவேண்டு
மென்று சொன்னால் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலேதான் நெல்
அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது ; கொள்முதல் செய்கின்றவர்
கள் அங்கேதான் அதிகமாக இருக்கிறார்கள்.

*** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



கொள்முதல் செய்கின்றவர்கள் எல்லாம் இன்றைக்கு மாடி வீடு
கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று பெரியவர் மணலி அவர்
கள் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். ஆனால் அவர்கள் மாடி
வீடு கட்டியது 1967-க்கு முன்னால். அதற்குப் பின்னால் யாரும் மாடிவீடு
கட்டவில்லை என்பதை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
முன்னாள் உணவு அமைச்சர் கூட இன்றைக்கு நடைமுறைப்படுத்துகிற சட்டங்
களைப்போல பல சட்டங்கள் அப்போதும் இருந்தன என்று சொல்லியிருக்
கிறார்கள். அப்போது சட்டங்களை சரியாக அமல் படுத்தாததினால் குறைகள்
ஏற்பட்டன. இப்போது அப்படியல்ல. இன்றைக்குகூட நம்முடைய
பொன்னப்ப நாடார் அவர்கள் விலை குறைந்திருக்கிறது என்று சொல்லி
யிருக்கிறார்கள். நெல்லைப் பொறுத்த வரையில் விலை ஏறவும் இல்லை.
இறங்கவும் இல்லை.

விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு முன்பு சென்னை, கோவை
பகுதிகளில் ரேஷன் கார்டு கொடுத்திருந்தோம். அப்போதும் குறை
சொன்னார்கள். தமிழ்நாட்டிலே சென்னையிலும் கோவையிலும் இருக்
கின்ற மக்கள்தான் பாக்கியம் செய்தவர்களா? மற்ற பகுதிகளில் இருப்
பவர்கள் எல்லாம் என்ன பாவம் செய்தார்கள் என்றெல்லாம் கேட்டார்கள்.
தஞ்சை மாவட்டத்திலே கொள்முதல் தீவிரப்படுத்தப்படுவதால் அங்குள்ள
விவசாயிகள் அரிசி வாங்கிச் சாப்பிட முடிய வில்லை என்றார்கள்.
ஆகவே, எல்லோருக்கும் வாங்கக்கூடிய ஒரு முறையை பரவலாக்க வேண்
டும் என்ற முறையில் கொள்முதலை எல்லா இடங்களிலும் பரவலாக
செயல்படுத்தினோம். அப்போது படியரிசித் திட்டத்தினால் அரசாங்கத்துக்கு
9 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நஷ்டம் ஏற்பட்டது. அதையும்
பொருட்படுத்தாமல் அரசாங்கம் அந்தத் திட்டத்தை அமுல் படுத்தி
வந்தது. ஆனால் ஏதோ ஒரு சிலர்தான் இலாபம் அடைகிறார்கள் ;
மற்றவர்கள் எல்லாம் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் ; அதனால் எல்லோ
ருக்கும் சமநிலை ஏற்படுகின்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று
சொல்லப்பட்டது. அதனாலும் மற்ற பல காரணங்களாலும் படியரிசித்
திட்டம் கைவிடப்பட்டது. பொதுவாக விலையேற்றத்தைத் தடுக்கவேண்டு
மென்ற முறையில் இப்போது சிறப்பான ஏற்பாட்டை அரசாங்கம் செய்
திருக்கிறது. மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஒத்துழைக்குமானால்
நிச்சயமாக மற்ற தானியங்களின் விலை ஏற்றத்தையும் கட்டுப்படுத்த
முடியும்.

துவரம்பருப்பு, உளுந்து போன்ற பருப்பு வகைகள் நமது மாநிலத்திற்கு
4 லட்சம் டன் தேவைப்படுகிறது. நம்முடைய வேளாண்மைத் துறை
அமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இந்த விபரத்தைக் குறிப்
பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ஒரு லட்சம் டன் பருப்பு
வகைகள்தான் உற்பத்தியாகின்றன. மீதமுள்ள 3 லட்சம் டன் வெளி
மாநிலங்களிலிருந்து நாம் வரவழைக்க வேண்டியிருக்கிறது. கொஞ்ச
நாட்களுக்கு நாம் வெளிமாநிலங்களிலிருந்து வரவழைத்ததை நிறுத்தி
யிருந்ததால் திடீரென்று அவைகளின் விலை மேலும் ஏறிவிட்டது. நமக்
குத் தேவையான துவரம் பருப்பு உளுந்து போன்ற பருப்பு வகைகளை
மத்திய கொள்முதல் துறை வைத்திருக்கிறார்களே, அவர்கள்கூட கொள்

முதல் செய்து நமக்கு அளிக்கலாம். அவர்கள் அதற்கு முன்வரவில்லை.
இப்போது வெளிமாநிலங்களில் பருப்பு வகைகளின் விலை சற்று குறைந்
திருப்பதால் மீண்டும் 3 லட்சம் டன் பருப்பு வகைகளை நம்முடைய மாநிலத்
திற்கு கொள்முதல் செய்து, மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச்
செய்யலாம். மத்திய அரசு இப்படிப்பட்ட காரியங்களில் தலையிடுவது கிடை
யாது. அரிசி, கோதுமை போன்ற பொருட்களை மட்டும் பார்த்து, அவை
களுக்கு மட்டும் சில கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறார்கள்.

நமது மாநிலத்தில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன்மூலம் தானிய வகை
களை கொள்முதல் செய்து, நியாய விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்
வதற்காக சென்னையில் 14 இடங்களிலும், மற்றும் தமிழகம் பூராவும்
பற்பல இடங்களிலும்—பெரிய நகரங்களில் சர்க்காருடைய நியாய விலைக்
கடைகளை ஏற்படுத்தி துவரம் பருப்பு, உளுந்து, அரிசி, சினி போன்ற
பொருட்களை விநியோகம் செய்ய ஒரு திட்டத்தை முதலமைச்சர்
அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அரசாங்கம் அறிவித்திருக்கின்ற நல்ல திட்டங்கள் அடங்கிய இந்த
அறிக்கையைப் பார்த்து திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இது ஒரு
பஞ்சாங்கம் போல் இருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் பஞ்சாங்
கம் பார்ப்பது கிடையாது. அவர்கள் எப்போதிலிருந்து பஞ்சாங்கம் பார்க்க
தொடங்கியிருக்கிறார்கள் என்று தெரிய வில்லை. பஞ்சாங்கத்திற்கும்
அறிக்கைக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு பஞ்சாங்கம் பார்ப்பதிலே
மூழ்ந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தங்களுடைய
காலத்தைக் கணிக்கப் பஞ்சாங்கம் பார்க்கிறார்களா அல்லது மற்றவர்களு
டைய காலத்தைக் கணிப்பதற்கு பஞ்சாங்கம் பார்க்கிறார்களா என்பது
தெரியவில்லை.

எங்களால் முடிந்த அளவுக்குசோஷலிசக் கொள்கைகளை நல்லமுறை
யிலே செயல் படுத்தி வருகிறோம். மணலி அவர்கள் அதைப்பற்றிப்
பாராட்டினார்கள். மற்றவர்கள் கொஞ்சம் கொஞ்சம் பாராட்டினார்கள்.
முழுதும் பாராட்டிவிட்டால் ஏதோ ஆபத்து வந்துவிடும் என்று நினைத்து
விட்டார்களோ என்று கருதுகிறேன். இதைப் பார்த்து பஞ்சாங்கம்என்று
சொல்லக்கூடியவர்களும் இங்கே இருக்கிறார்கள் என்றால் அவர்கள்
வேண்டுமென்றே குறை கூறுவதற்காக வந்திருக்கிறார்கள் என்றுதான்
நான் நினைக்கிறேன்.

நம்முடைய நாகர்கோயில் பகுதியைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார்
அவர்கள் குறிப்பிட்டார்கள். கல்குளம் தாலூகாவில் ரேஷன் கார்டு
கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அங்கே நான்கு கிராமங்களில்—
கோஸ்டல் ஏரியாவில்—முன்பே ரேஷன் கார்டு கொடுத்து உணவுப்பொருட்
கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மற்றப் பகுதிகளில் விவசாயம் நடை
பெறுவதால் அங்கே கொடுக்கவில்லை. அங்கும் ரேஷன் கார்டு கொடுத்து
இங்கே இருந்து அரிசி அனுப்பினால் அவர்கள் உபரியாக வரக்கூடிய
அரிசி கடத்திக்கொண்டுபோய் கள்ளமார்க்கெட்டில் விற்கக்கூடும்,
அதனால் விலை ஏறிவிடும் என்று நினைத்து மற்ற இடங்களுக்கு ரேஷன்



கார்டு கொடுக்கவில்லை. விவசாயக் கூலிகளாக இருப்பவர்களுக்கும், விவ
சாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் ரேஷன் கார்டு கொடுத்தால் வியாபா
ரிகள் அவர்கள் கார்டுகளுக்கு கொடுக்கும் அரிசியை வாங்கி கல்குளம்
கேரளத்தில் எல்லையோரம் இருப்பதால் அங்கே கொண்டுபோய் கள்ள
மார்க்கெட்டில் விற்பனை செய்ய வழி ஏற்படும். அதனால்தான் இதுவரை
கல்குளத்திலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் ரேஷன் கார்டு கொடுக்கப்பட
வில்லை. ஆனால் இப்போது அவர்களுக்கும் கொடுப்பதற்கு வேண்டிய
முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்களுக்காக இங்கே
இருந்து அனுப்பக்கூடிய அரிசியின் விலையை நிர்ணயம் செய்து அனுப்ப
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் டென்னிஸ்
அவர்களும் பொன்னப்ப நாடார் அவர்களும் மற்ற உறுப்பினர்களும்
கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

(திரு. சுவாமிதாஸ் எழுந்தார்)

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நீங்கள் உட்
காருங்கள். அமைச்சரவர்கள் முடித்த பின்னால் விளக்கம் கேளுங்கள்.
இப்போது உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அங்கே உள்ள
சட்ட மன்ற உறுப்பினர்களையும் அரசுத் துறை செயலாளரையும் வைத்து
பேசி ஏற்பாடு செய்திருக்கிறோம். இங்கிருந்தே விலை நிர்ணயம் செய்து
அந்த விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
அதைக் கள்ள மார்க்கட்டில் விற்று விடாமல் இருப்பதற்காக, ரேஷன்
கார்டிலே கணக்கு வைக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.
விவசாய கூலியாக வேலை செய்கிறவர்கள் அரிசி எடுத்துச்செல்வதற்கு வழி
வகைச் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் 10
கிலோ வீதம் எடுத்துச் செல்லலாம் என்றும், அப்படி அடிக்கடி வராமல்
இருப்பதற்கு அந்த ரேஷன் கடைகளிலே பதிவு செய்து பார்த்துக்கொள்ள
வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம்.

அடுத்து விளவங்கோடு தாலூக்காவைப் பற்றிச் சொன்னார்கள். அது
கோஸ்டல் ஏரியாவில் இருக்கிறது. அங்கு கார்டு கொடுக்கப்பட்டிருந்தது.
இப்போது அந்தத் தாலுக்கா பூராவும் கார்டு கொடுக்க ஏற்பாடாகி
விட்டது. கால தாமதத்திற்குக் காரணம், நிலச் சுவாந்தார்கள், விவ
சாயிகள் என்று கணக்கெடுத்து மற்றவர்களுக்குக் கொடுப்பதில் தாமதம்
இருக்கிறது. அந்த தாலூகா பூரா அந்த மாதிரி நிலை. சர்ப்ளஸ் தாலூகா
வில் கூட செக்போஸ்ட் வைத்திருக்கிறோம். அங்கே நேராகப் போய்ப்
பார்த்தால், வீட்டின் வாசல்படி தமிழ் நாட்டின் எல்லையில் இருக்கும்,
கொல்லைப்புறம் கேரளாவில் இருக்கும். அப்படிப்பட்ட காரணத்தால் பாது
காப்பது கஷ்டமாக இருக்கிறது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் கூட
செக்போஸ்ட் இருக்கிறது. ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து அனுப்புவதால்
இன்னும் சரியான முறையில் கட்டுப்பாடு அமையும். இதில், அதிகாரிகள்
கஷ்டப்படுகிறார்கள். எல்லைப் பகுதியில் கஷ்டமாக இருப்பதால் சர்ப்ளஸ்
தாலூக்காவிலும் செக்போஸ்ட் வைத்து வடிகட்டி விடுகின்ற நிலைமையைச்
செய்திருக்கிறோம். அது சர்க்காரின் கொள்கையாக இருக்கிறது.

செக்போஸ்ட் எடுப்பதுபற்றிய சங்கடங்களைப்பற்றி திரு. பொன்னப்ப
நாடார் அவர்கள் சொன்னார்கள். இதை போகப்போக முடிவு செய்ய
முடியும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செக்போஸ்டு
களில் ஆட்களை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். மாற்றியிருக்
கிறோம். 1972-73-ல் மட்டும் சொல்கிறேன். நாகர்கோவிலில் மட்டும்
ரூ. 9 லட்சம் பெறுமான அரிசி பிடித்திருக்கிறோம். தமிழ் நாட்டில்
மொத்தம் ரூ. 30 லட்சம் அரிசி பிடித்திருக்கிறோம். மண்ணெண்
ணெய் பிடித்திருக்கிறோம். கள்ள மார்க்கெட்காரர்களுடைய, கொள்ளைக்
காரர்களுடைய காடாக திராவிட முன்னேற்றக் கழகம் மாறி விட்டது
என்று சொன்னார்கள். அதற்காகச் சொல்கிறேன். லிஸ்டே இருக்
கிறது. 1972-73-இல் ரூ. 36 லட்சம் பெறுமான அரிசி — நாகர்கோயிலில்
மட்டும் ரூ. 9 லட்சம் பிடித்திருக்கிறோம். உரம் ரூ. 85 ஆயிரம் பிடிக்கப்
பட்டிருக்கிறது. தஞ்சையைப் பொறுத்த வரையில் ரூ. 24 ஆயிரம் பிடிக்கப்
பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் ரூ. 27 ஆயிரம். தர்மபுரியில் உணவு
தானியங்கள் 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ளது.
மூன்று மாதங்களில் பிடிக்கப்பட்டு மற்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுத்
திருக்கிறார்கள். எனவே, உர விநியோகம் இன்னும் மற்றவைகள் எல்.
லாம், எந்தெந்தத் துறைகளில் கண்காணிக்க வேண்டுமோ, அந்தந்தத்
துறைகளில் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில்
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல இடங்களில் உரம் தவருக விற்கப்படுகிறது என்று உறுப்பினர்கள்
கூறினார்கள். நான் பட்டியலே வைத்திருக்கிறேன். எந்தெந்த சட்ட
மன்ற உறுப்பினர்கள் செய்தி கூறினார்கள், என்ன நடவடிக்கைகள்
எடுக்கப்பட்டன என்று. செய்தி கிடைத்த மறு நாளே நடவடிக்கை
எடுத்திருக்கிறோம். ஐந்து நாட்களுக்கு முன்பு அரிசி சரியாக இல்லை
என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். மறு
நாளே அந்த அரிசி மாற்றப்பட்டு அதை அவரிடம்கூட கொண்டு வந்து
காண்பித்தேன். அதற்கு நன்றி சொல்லி இருக்கிறார்கள். இப்படி, எந்த
எம். எல். ஏ. செய்தி கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருகிறது.

கருந்தட்டாங்குடியில் உரம் தவருக விநியோகிக்கப்படுகிறது, கார்டு
களுக்கெல்லாம் வசூல் செய்து விற்கிறார்கள் என்று செய்தி வந்து,
அதையும் பிடித்திருக்கிறோம். பத்திரிக்கையில் பார்த்திருப்பீர்கள். இப்படி
இருக்க, ஏதோ, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற
கொள்கைகளையெல்லாம் விட்டு விட்டு செயல்படுகிறோம் என்று சிலர்
சொல்வதைப் பற்றி கவலை இல்லை.

சோஷலிசக் கொள்கைகளையே உயிராக வைத்து நடக்கக்கூடிய திராவிட
முன்னேற்றக் கழகத்திலே — நான் உள்ளபடியே சொல்கிறேன் — இருக்
கிற நமது முதலமைச்சரைப்பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும் —
பாராட்டியிருப்பார்கள், திட்டியும் இருப்பார்கள். அவர் எங்களுடைய
இளைய அண்ணன். யாரும் மறுக்க முடியாது. ஆறு மாதம் கழித்து





என்ன நடக்கப் போகிறது என்பதைக் கண்டு பிடிக்க முடியாது. நாட்டின்
அன்றாட நிலைமை இப்படி அரசியல் தட்ப வெப்ப நிலைமையைப் பொறுத்து
மாறிக் கொண்டு வருகிறது. அவருடைய கொள்கையை பரிகாசம் பண்ணு
வதில் எனக்குக் கஷ்டம் கிடையாது. நாட்டில் அரசியல் நிலைமையை
சிறப்பாக வைக்க வேண்டுமானால் நியாயம் பேசுவதில், உண்மையான
குறைப்பாடுகளைச் சொல்வதில் யாருக்கும் மாறுபாடு கிடையாது. குறை
பாடுகளைச் சொல்லும்போது, நாம் யார் என்பதை மறந்து விட்டுச் சொல்வது
பெரிய தப்பு. நாம் யார்? நம்மைப் பற்றி மக்கள் என்ன பேசிக
கொண்டிருக்கிறார்கள்? நமது கொள்கை என்ன? நாம் இந்த மன்றத்
தில் வகித்த பொறுப்பு என்ன? யார் யார் என்னனென்ன குற்றச்
சாட்டுகளை சாட்டினார்கள்? எதற்காக மன்றத்திலிருந்து வெளியேற்றி
னார்கள் என்பதை எல்லாம் மறந்து விட்டுப் பேசுவது, திட்டுவது சரியல்ல.
எல்லோரும் பேசுகிறார்கள், எல்லோரும் திட்டுகிறார்கள். திரு. மணலி
கூட பேசுகிறார் நான் யாரைப்பற்றியும் தனிப்பட்ட முறையில் சொல்ல
வில்லை.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, நான் முதலிலிருந்தே
சொல்லிக் கொண்டிருக்கிறேன். பிரச்சினையை அணுகாமல், எங்கே, யார்
என்று பேசாமல், சாமர்த்தியமாக பேசுவதாக நினைத்துக் கொண்டு,
ஏதோ ஒருவர் என்ற முறையில் பேசுவது சரியல்ல. யார் அந்த உறுப்
பினர்? எந்த உறுப்பினரை வெளியேற்றினார்கள்? மக்கள் என்ன
அவரைப் பற்றி நினைக்கிறார்கள்? என்னென்ன குற்றச்சாட்டுகள்? குறிப்
பிட்டுச் சொல்ல வேண்டும். அப்படியல்லாமல், ஏதோ, சாயங்கால வேளை
யில், வெளியே பேசுவதைப் போல, ஒரு அமைச்சர் பேசுவது நல்லதல்ல.
அப்படிப் பேசுவதை தவிர்ப்பது நல்லது. இல்லாவிட்டால் தெளிவாகப்
பேசுவது நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எதைத் தவிர்ப்
பது என்பது பிறகு இருக்கட்டும். மதி அவர்கள் அடிக்கடி மைக்கைத்
தட்டித் தட்டிப் பேசுவது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. தட்டாமல்
பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கூடியவரையில், தனிப்
பட்ட முறையில் யாரையும் குறிப்பிடாமல் பேசுவது நல்லது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முதலமைச்சரைப் பற்றித்
தான் பேசுகிறேன். முதலமைச்சரைத் தான் கேட்கிறேன் என்று பலரும்
பேசியிருக்கிறார்கள். ஆகவே முதலமைச்சர் யார் என்று சொல்ல வேண்
டும். ஏனென்றால், முதலமைச்சர் தான் காரணம் என்று சொல்கிறார்கள்.
ஆகவே, எந்தெந்தக் கொள்கைகளைப் பற்றியும், பேசுகின்றவர்களைப் பொறு
த்துத் தான் எல்லாப் பிரச்சினைகளும் இருக்கின்றன என்பது உங்களுக்குத்
தெரியும். ஆகவே அவர்கள் பேசுகின்றபோது இவர்கள் சந்தோஷப்
படுகிறார்கள். எனவே மற்றவர்கள் சந்தோஷப்படும்படியாகப் பேசப்படு
கிறபோது இவர்கள் வருத்தப்படாமல் இருக்க வேண்டும்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 16

சோஷலிசக் கொள்கைகளில் முதலமைச்சர் அவர்களும் அவரைச்
சார்ந்துள்ளவர்களும் எங்கே இருந்து உற்பத்தியானவர்கள், தமிழ்
நாட்டைப் பொறுத்த வரையில் இந்தக் கொள்கைகளில் யார் யார் பிடி
வாதமாக இருந்தார்கள், யார் ஓடிப் போயிருக்கிறார்கள் என்பதெல்லாம்
எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்டவர்கள், ஒவ்வொரு சீஸனிலும்
தம் கொள்கையை விட்டுவிட்டு ஒவ்வொரு இடத்திற்கு ஓடியிருக்கிறார்கள்.
யார் யார் சாஸ்வதமாக இருக்கிறார்கள் என்பதும் தெரியும். நான் பால
பருவத்திலிருந்தே டாக்டர் கலைஞரைப் பார்த்துக் கொண்டு வந்திருக்
கிறேன். எழுதப் படிக்கத் தெரிந்தவுடன் பள்ளியில் அவர் எழுதி
இருப்பதே சோஷலிசத்தைப் பற்றித் தான். இன்றுவரை அவர் பேசிக்
கொண்டிருப்பது, எண்ணிக் கொண்டிருப்பது, சொல்லிக் கொண்டிருப்பது
அந்த சோஷலிசம் தான். அந்த சோஷலிசம்தான் இங்கே செயல்
படுத்தப்படுகிறது.

நாடக பாணியில் இங்கே நாடகம் ஆடுகிறார்கள், மக்களை ஏமாற்று
கிறார்கள் என்றெல்லாம் பேசப்பட்டது. உள்ளபடியே அந்த நாடகமாடு
கிற, ஏமாற்றுகிற வேலைகளையெல்லாம் தமிழ் நாட்டில் சிலர் வெளியே
செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே எதும் செய்யப்பட வில்லை. அது
உங்களுக்குத் தெரியும். கடவுளைப்பற்றி, மதத்தைப் பற்றி என்னென்ன
வெல்லாம் சொல்லியிருக்கிறார்கள், எல்லாமே கடவுள் ஆணையினால் தான்
நடக்கிறது என்று எப்படி நம்பியிருந்தார்கள். அதேபோல சோஷலிசம்
என்று வைத்துக் கொண்டு என்னென்ன நடைபெறுகிறது என்றெல்லாம்
மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடைசியில் சொல்லுங்கள்...
பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்றால் எக்ஸ்பஞ்ச் செய்து விடுவேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, மணி 1½ ஆகிறது. பேசப்பட
வேண்டியது உணவுத் துறையைப்பற்றியது. அதை விட்டு அமைச்சர்
அவர்கள் கடவுளைப் பற்றியும், மதத்தைப்பற்றியும் பேசுவது ஒழுங்கு
முறைக்கு உட்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் யாரையும்
தாக்குவதற்காகச் சொல்லவில்லை. மற்றவர்கள் பேசும் போதுகேட்டுக்
கொண்டிருந்தீர்கள். எவ்வளவு சந்தோஷப்பட்டீர்கள், சிரித்தீர்கள். அத
ற்கு பதில் அளிக்கிறேன். பதில் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்
கொள்ளுங்கள்.

தான் பேச வேண்டிய ஒன்றை இன்னொருவரை விட்டுப் பேசச் சொல்ல
வேண்டிய நிலை சிலருக்கு வந்து விட்டது கண்டு வருத்தப்படுகிறேன்.
நான் சொல்ல வந்தது யார், எந்தெந்தக் கொள்கைகளை வைத்து செயல்
பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பற்றித் தான். எல்லாம் ஆண்ட



1973 மார்ச் 16] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

வன் கிருபையினால்தான் நடக்கிறது, எல்லாம் கடவுள் செயல் என்று
அந்தக் காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதேபோல இன்றை
க்கு சோஷலிசம் பற்றி பலரும் பேசுகிறார்கள்.

திரு. மணலி பெரும் தலைவர்—பெரும் தியாகங்களைச் செய்தவர்— பி.ப
அவரை 30 வருஷமாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். அந்த இயக்கத் 1·30
தில் எவ்வளவு தீவிரமாகப் பணியாற்றினார்கள் என்பதையெல்லாம் அறி
வேன். இருந்தாலும் அவரால் என்ன செய்ய முடிந்தது? ஏதாவது
ஒரு சட்டமாவது செய்ய முடிந்ததா? நிலைமையை மாற்றி அமைக்க
மிகுந்த ஆசை உடையவர் என்பது எனக்குத் தெரியும். கழக அரசு
பொறுப்பேற்ற பிறகு நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக எத்தனை சட்டங்
களைக் கொண்டு வந்திருக்கிறது? நான் திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினராக இருந்தாலும்—அண்ணா கூட அடிக்கடி சொல்வார்கள்,
மணலியையே சுற்றிக்கொண்டு நீ அங்கே இருந்தவன்தானே, இங்கே
ஏன் வந்தாய்—என்பதாகச் சொல்லும் அளவுக்கு நான் அவர்களோடே
தான் இருந்திருக்கிறேன், அப்படி இருக்க மணலி அவர்கள் இன்று
என்னைப் பாராட்ட வேண்டியதாக இருக்க, எல்லோருடனும் சேர்ந்துகொண்டு
அவரும் கல்லால் அடிக்கிறாரே என்கிற போதுதான் வருத்தமாக
இருக்கிறது. எங்கள் பேரில் அடிக்கிறார்களா, எங்களது கொள்கைபேரில்
அடிக்கிறார்களா ? கொள்கையைச் செயலாற்றுபவர்கள்மீது அடிக்
கிறார்களா ?

நான் சொல்கிறேனே, கள்ளமார்க்கெட்காரன், கள்ளப்பணம் வைத்தி
ருக்கிறவன் கள்ளக் கணக்குக் கொடுக்கிறவன் எல்லாம் எங்கள் ஆட்சியில்
கடந்த நால்கைந்து ஆண்டுகளாக அடங்கித்தான் கிடந்தான். இவர்கள்
, எங்கள்பேரி கல்லெறிய ஆரம்பித்தபிறகு கொஞ்சம் துளிர்த்து விட்டார்
கள். பொய்கணக்கு வைத்திருந்ததற்கு, வரி கொடாததற்கு மத்திய
சர்க்கார் வழக்குத் தொடுத்தது மணலிக்குத் தெரியும். சுப்புவுக்குத்
தெரியும். அப்படி மத்திய சர்க்காரினால் பிடிபட்டவர் இன்றைக்கு வெளி
யில் நின்றுகொண்டு மற்றவர்கள்மீது கல்லெறிகிறார். மனச்சாட்சிபடி
பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் ஒரே ஆள் ஆறு லட்சத்திற்கு கணக்கை
ஒளித்திருக்கிறார் என்பதாக பிடிக்கப்பட்டவர்.

திரு. க. சுப்பு : எனக்குத் தெரியும் என்று என் பெயரை இழுத்த
தனால் சொல்கிறேன். எனக்கு யாரையும் தெரியாது. ஆகவே தெரிந்து
அவர் பெயரைச் சொல்லாது ஒளித்த குற்றத்தை நான் செய்யவில்லை.
அமைச்சர் அவர்கள் சொன்னால் நாங்கள் தெரிந்து கொள்கிறோம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவையில் இல்லாதவர்
கள் பெயரைச் சொல்லக்கூடாது என்று விதியிருக்கிறது. சுப்புவுக்கு நான்
சொல்கிறேன். மத்திய சர்க்கார் பிடித்த ஒரு ஆளை, மத்திய சர்க்கார்

வழக்குத் தொடர்ந்த ஒரு ஆளை நீங்கள் பாதுகாக்கிறீர்கள். அவரைத்
திரை மறைவில் நிறுத்தி தமிழ்நாட்டில் அவருக்கு நிறையச் செல்வாக்கு
இருப்பதுபோல் மத்திய சர்க்காரையே மிரட்டுகிறீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அந்த ஆள் பெயரைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைத்தான் சொல்கி
றேன். அவையில் இல்லாதவர்கள் பெயரை சொல்லக்கூடாது என்றால்
அந்த விதி அமைச்சருக்கும்தான் பொருந்தும். நான் கும்பகோணத்தில்
பேசும்போது சொன்னதாக பத்திரிகையில் கூட வந்தது. அமைச்சர்கள்
எம்.எல்.ஏ.க்கள் பணம் சேர்ந்து விட்டதாகச் சொல்கிறீர்களே, கடந்த
ஆண்டுகளில் வீட்டுக்கு மேல் வீடு கட்டியுள்ளவர்களை எல்லாம் வந்து
சென்னையில் பாருங்கள் என்று சொன்னேன். கள்ளமார்க்கெட்காரன்,
கள்ளப்பணத்தை வைத்திருக்கிறவன், சமுதாயத்தை சுரண்டிப் பிழைக்கிற
வன், திரை மறைவில் மறைந்து கொண்டிருக்கிறான், அரசியல் போர்வை
யில் மறைந்து கொண்டிருக்கிறான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.
இன்றைக்கு அவனுக்குப் பாதுகாப்பாக இருக்கிறவர்கள்தான்—தெரிந்து
என்றுகூட சொல்ல மாட்டேன்—எங்களிடத்தில் உள்ள காழ்ப்பு உணர்ச்சி
யின் காரணமாக பாதுகாப்பாக இருக்கிறவர்கள் சோஷலிச கொள்கைக்கு
நல்லது செய்யவில்லை.

நான் மணலி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள்
யார் யார் கொள்ளை அடிக்கிறார்கள் என்று சொல்லுங்கள். நமக்கே
சில பேர்களைத் தெரியும். எனக்குத் தெரியாத பேர்கள் யாராவது இருந்
தால் என்னிடத்தில் சொல்லுங்கள். உங்கள் தலைமையில் சுப்பு போன்ற
தொண்டர்கள் உதவியுடன் நான் அவர்களைப் பிடித்து தக்கபடி தண்டிக்கத்
தயங்கவில்லை. நிலச்சீர்திருத்தச் சட்டத்தை ஏமாற்றி நிலம் வைத்தி
ருக்கிறவர்களைச் சொல்லுங்கள். நாங்கள் அவர்களைப் பிடித்து தண்டிக்கத்
தயார். ஆனால் இன்றைக்கு திரு. ஹாண்டே அவர்களும், இவர்களும்
சேர்ந்து ஊர்வலம் வருகிறார்கள் என்றால், ஹாண்டே சுதந்திராக்
கட்சியைச் சேர்ந்தவர்—இவர்கள் பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள். இவர்கள்
சேர்வதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இவர்கள் சேர்ந்து வருவதைப்
பார்க்கும்போது எனக்கு மயக்கமாகக்கூட இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மயக்கம் தெளிய மருந்து
இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் சொல்கிற
கொள்கைதான் மருந்து. மத்திய சர்க்கார் குற்றவாளியைப் பிடித்து,
வழக்குப் போட்டது. வழக்குப்போட்டும்கூட அந்த குற்றவாளி தப்பிக்க
சோஷலிசக் கொள்கைகளைப் பேசுபவர்கள் உடந்தையாக இருக்கலாமா
என்பதைத்தான் யோசிக்க வேண்டும். நான் எல்லோரையும் கேட்டுக்
கொள்கிறேன். கள்ளமார்க்கெட்காரர்களை, கள்ளக்கணக்குக்காரர்களை, வரி
ஏய்ப்பவர்களை, மக்களைச் சுரண்டியே வாழ்பவர்களைப் பிடிப்பதற்கு நீங்கள்



உதவி செய்யுங்கள். உங்கள் தலைமையிலேயே நான் இயங்கத் தயார்.
இப்படி நான் நல்ல பட்டினி நேரத்தில் உணவுப்பிரச்சினைபற்றி பேசிக்
கொண்டே போகலாம். உற்பத்தி செய்கிற அமைச்சர் அவர்கள் பேச
வேண்டியிருப்பதால் இத்துடன் நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மணலி சி. கந்தசாமி : உணவு அமைச்சர் மன்னை நாராயண
சாமி அவர்கள் உணவுமானியக் கோரிக்கையின்மீது பல்வேறுதரப்பட்ட
பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். அது தேவையில்லை என்பதுதான் என்
கருத்து. இந்த மானியத்தின் மீது நாங்கள் பல கருத்துக்களைச் சொல்லி
யிருக்கிறோம். இடைத்தரகர்களினால் இன்றைக்கு நாட்டிலுள்ள நிலைமை
களைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். அவர் இல்லை என்று சொல்லலாம்.
வேறு பிரச்சினை. நாட்டின் உணவுப் பண்டங்களின் விலை எந்த அளவுக்கு
ஏறிக் கொண்டே போயிருக்கிறது என்பதைக் காட்டியிருக்கிறோம். அவற்றை
எல்லாம் சரியான முறையில் எடுத்துக் கொள்ளாது, சம்பந்தமில்லாத
விஷயங்களை புகுத்தி குழப்பிவிட்டிருப்பதோடு என் பிராணனையும் எடுக்கி
றார். (சிரிப்பு).

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அவர் எப்போதுமே
எனக்கு புத்தி சொல்வார். இப்போது சொல்கிறவற்றையும் புத்தியாக
எடுத்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : கள்ளக்கணக்கு வைத்திருப்பவர்கள்,
கள்ளமார்க்கெட் பண்ணுகிறவர்கள், சமுதாயத்தைச் சுரண்டுகிறவர்கள்
ஆகியவர்களின்மீது இந்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள
வேண்டும் என்கிறோம். அவர்கள் அந்த மாதிரியான நடவடிக்கை எடுத்துக்
கொள்கிறபோது நிச்சயமாக நாங்கள் எங்களது ஒத்துழைப்பை
அளிக்க தயார். உங்கள்மீது குற்றஞ்சாட்டி பேசவில்லை. சமுதாயத்தில்
பலபேர் இருக்கிறார்கள். அவர்களைப் பிடிக்க வேண்டும். அதற்காக என்
தலைமையில் உங்களை சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு போக நான் தயாராய்
இல்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத்தலைவர் அவர்களே,
இன்றையதினம் வேளாண்மைத் துறை மானியத்தின்பேரில் இங்கே பல
உறுப்பினர்கள் கலந்துகொண்டு நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கி
றார்கள். அதற்கு முன்னால் இதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தையேகூட
நீட்டித்துக் கொடுத்தாக வேண்டும் என்று அவர்கள் எல்லோரும்
கோரியபோது இது எவ்வளவு முக்கியம் வாய்ந்த மானியமாக அவர்கள்
கருதுகிறார்கள் என்று நினைத்து நான் மகிழ்ந்தேன். தனியாகவே ஒரு
நாள் ஒதுக்கியிருக்க வேண்டும் என்று கோரியதற்கு நான் என்னுடைய
பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் நல்ல பல
கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பார் முழுவதும் ஏர் முனையில்
என்றபடி ஏர்முனை சரியாக இருக்காவிட்டால் பார்முனையும் சரியாக இருக்
காது, போர்முனையும் சரியாக இருக்காது என்பதனை உணர்ந்து எல்லோரும்
பேசியிருப்பதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 16

இன்றைக்கு உணவு உற்பத்தித் துறையில் நாம் முன்னேற்றம் அடைந்
திருக்கிறோம் என்பதை நான் கொடுத்த குறிப்புகளில் இருந்து பல
அங்கத்தினர்களும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிறப்பாக
வேளாண்மைத் துறையைப் பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டிய
அவசியம் இல்லை. இந்த மன்றத்தில் இருக்கிற பெரும்பாலோர் வேளாண்
மைத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள்; பரம்பரையாக விவசாயம் செய்து
கொண்டிருப்பவர்கள். ஆகையால்தான் விவசாயத்திலே சூடுபிடுக்கிற இடம்
என்று நான் கருதியதெல்லாம் " உழுது பயன் இல்லை " என்கிற நிலைமை
யில்தான். ஏன் இல்லை என்கிற கேள்விக்குறிதான் என் உள்ளத்தில்
அப்போது எழுந்ததே தவிர அதைப்பற்றி முழுவதும் எடுத்துச் சொல்ல
இன்றைக்கு இங்கே எனக்கு நேரம் இல்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற
பெருமக்கள் மிகுந்த கேவலமாக நடத்தப்பட்ட ஒரு காலம் உண்டு
என்பதை மணலி அவர்கள் அறிவார்கள். விவசாயி என்றால் தீண்டப்
படாதவராக, தொடக்கூடாதவராக இருந்த காலம் மாறிவிட்டது. உழுது
உலகுக்கு சோறு அளிக்கிறவனுக்கு இருக்க இடம் இல்லை என்று சொல்லக்
கூடிய நிலைமையை இந்த அரசு வந்து மாற்றிவிட்டது. விவசாயத்
துறைக்கு இந்த அரசு வந்தபிறகு முக்கியத்துவம் பலவகையிலும்
அளித்திருப்பதுபோல உழவர் பெருங்குடி மக்களது அந்தஸ்து, கௌரவம்
பலவகையிலும் உயர்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இதற்கு
முக்கியமான காரணம் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்—அதுவும்
டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கொண்டு வருகிற முயற்சிகள்தான்.
அவர்மேல் இருக்கிற பாசத்தால் இப்படி அவரைப் பாதுகாப்பதாக நினைக்கத்
தேவையில்லை. எங்களை எல்லாம் ஆளாக்கின பேரறிஞர் அண்ணா அவர்கள்
தமிழகத்தில் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் பசுமைப்
புரட்சித் திட்டத்தை உருவாக்கி, அதனைச் சிறப்பாக நடத்தித்தரக்கூடியவர்
கலைஞர்தான் என்பதை உணர்ந்து அவரிடத்தில் அதனை ஒப்படைத்தார்
கள். அந்தத்துறைக்கு ஏற்றவர் டாக்டர் கலைஞர்தான் என்பதனை
அன்றைக்கே அவர்தம் உள்ளத்தில் எண்ணிச் செய்தாரே அதைப்
பாராட்டுகிறோம். அன்றைய தினம் பல அமைச்சர்கள் இருந்தார்கள்.
ஆனாலும்கூட, அண்ணா அவர்கள்,

" இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் "

என்ற வள்ளுவருடைய வாய்மொழிக்கேற்ப இதை யாரிடத்திலே ஒப்ப
டைக்க வேண்டுமென்று பார்த்து அன்றையதினம் அவரிடத்திலே ஒப்ப
டைத்தார்கள். நாங்களெல்லாம் அன்றையதினம் அமைச்சர்களாக இல்லை
யென்றாலும், முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக
இருந்தபொழுது, மன்னார்குடியிலே ஒரு வேளாண்மைக் கருத்தரங்கை
ஏற்பாடு செய்து, அவரே தலைமை வகித்து, அதனை வெற்றிகரமாக நடத்தி,
அதன் பயனாகத்தான் பசுமைப் புரட்சித் திட்டம் உருவாயிற்று.



1973 மார்ச் 16] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

ஆக, பசுமைப் புரட்சி உருவான இடமே மன்னார்குடி என்று சொன்னால்
அது மிகையாகாது. அங்கு துவக்கப்பட்ட அந்த திட்டம் நாளொரு
மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இன்றையதினம்
உணவுத் தட்டுப்பாடு இல்லையென்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறோம். 38
லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது அன்றைய தினம். இன்றைய
தினம் 55 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். அது மிகச் சாதாரண
காரியம் அல்ல.

எப்படி உற்பத்தி பெருகிற்று என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது.
அதற்கு உழவர் பெருமக்கள் எடுத்துகொண்ட முயற்சிகளையும், அதற்கு
உறுதுணையாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஒவ்வொருவர் எடுத்துக்
கொண்ட முயற்சிகளுக்கும் தமிழக அரசு அவர்களுக்கு செய்திருக்கிற
உதவிகளையும் ஒருகணம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில்
விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது இங்கிருக்கிற அனை
வருக்கும் தெரியும். அவர்கள் கடனுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டார்
கள் என்பது நன்றாகத் தெரியும். ஆனால், கூட்டுறவுத்துறை
இன்றையதினம் நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன், மத்தியக்
காலக் கடன் என்ற அளவில் ரூ. 100 கோடியை விவசாயிகளுக்கு
கடனாக வழங்கிவருகிறது. அது மாத்திரமல்ல, அவர்களுக்கு வேண்டிய
எல்லா உதவிகளையும் அவ்வப்போது செய்து வருகிறது அரசு என்பதை
விவசாயிகள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்றையதினம் உணவு உற்பத்தியை பெருக்கியும் ஏன் பஞ்சம்
இருக்கிறது, விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்றெல்லாம் கேட்டார்
கள். எனக்கு வேதனையாக இருக்கிறது. ஒரு பக்கத்திலே விலை
வாசிகள் ஏறிவிட்டது என்று பேசுகிறார்கள். மற்றொரு பக்கத்திலே
விவசாயிகளுக்குக் குறைந்துபோய் விட்டது என்று பேசுகிறார்கள். விவ
சாயிகள் கஷ்டப் பட்டும் யார் யார் பக்கமோ இருந்த காரணத்தினாலே
அவர்களுக்கு ஒரு நிலை இல்லாமல் இருந்தது. ஆனால், உண்மையான
விவசாயிகள் இன்றையதினம் யார் பக்கம் இருக்க வேண்டுமென்று
உணர்ந்திருக்கிறார்கள். அதன் பயனாக, இன்றையதினம் அவர்களுக்கு
செய்யப்படுகிற உதவிகளைக் கண்டு அவர்கள் மன நிறைவு பெற்றிருக்
கிறார்கள்.

இங்கு பேசிய பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்
சொன்ன நேரத்தில், இந்தத் திட்டம் மேலும் நல்லமுறையிலே அமைய
வேண்டும், இது மேலும் நல்ல முறையிலே மற்றவர்களுக்குப் பயன்
படவேண்டுமென்ற நோக்கத்தோடு தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி
யிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். இந்தத் துறையைப்
பலரும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் துறை ஆற்றிவருகிற பணி
களை மதிப்பிற்குரிய மணலி போன்றவர்களும், பொன்னப்ப நாடார்
போன்றவர்களும் பாராட்டி இருக்கிறார்கள். அதைப்போல் மதியழகன்
போன்றவர்கள் கூடப் பாராட்டி இருக்கிறார்கள்.

உண்மையில் இந்தத் துறையில் இன்றையதினம் ஒரு எழுச்சி ஏற்
பட்டிருக்கிறது. அதற்குக் காரணமே, உண்மையிலே நான் புகழ்ச்
சிக்காக சொல்லவில்லை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 16

அவர் வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டவர்லி மாத்திரமல்ல, அவர்
அமைச்சராக வருவோம் என்று நினைத்துப் பார்க்காத நேரத்திலே,
உங்களிலே பலருக்கு நன்ருகத் தெரியும், நங்கவூரிலே ஒரு விவசாயப்
போராட்டத்திற்கு தலைமையேற்று, அவர்களுடைய வாழ்விலே ஒளி
ஏற்றியவர். அப்படி விவசாயம் தெரிந்த ஒருவர், முதலமைச்சராக
இருக்கிற காரணத்தால், செய்ய வேண்டிய நேரத்தில், செய்யவேண்டிய
காரியங்களை, செய்ய வேண்டிய முறைப்படி செய்துவந்திருக்கிற
காரணத்தால், உரிய காலத்தில் விவசாயிகளுக்குப் பலன் கிடைத்து
வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை சொன்ஞர்கள்.
மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் கூட எங்களையெல்லாம்
பாராட்டி, இன்னும் சில விஷயங்களை சொன்ஞர்கள். அவர்களுக்கு
சொல்லிக்கொள்கிறேன், பூச்சி மருந்துகளை ஆராய்ச்சி செய்ய 7
நிலையங்கள். அவை தரமானவைதாஞ என்று கண்டுபிடிக்க அந்த
நிலையங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

மண் வள ஆய்வுக் கூடம் இப்பொழுதே தமிழ் நாட்டில் 12 இடங்
களில் இருக்கின்றன. தென் மாவட்டங்களில் இல்லையென்று குறிப்
பிட்டார்கள். தென் மாவட்டங்களில், மதுரையிலும், கோவில் பட்டி
யிலும், பரமக்குடியிலும் இருக்கின்றன. கன்னியாகுமரியிலே இல்லை
யென்று அவர்கள் கவலைப்பட்டார்கள். கன்னியாகுமரியிலே,
1973–74-ம் ஆண்டில் மண்வள, ஆராய்ச்சி பரிசோதனைக்கூடம்திறப்
பதற்கு அரசாங்கம் ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது. நிச்சயமாக அடுத்த
ஆண்டு திறக்கப்படும்.

அது மாத்திரமல்ல, தென்னையிலே விழுந்திருக்கின்ற பூச்சிகளைப் பற்றி
சொன்ஞர்க்ள். அது பற்றிய ஆராய்ச்சி முத்துப்பேட்டையிலே துவக்கப்
பட்டிருக்கிறது. கேரளத்திலிருந்து இங்கு வருவதைத் தடுப்பதற்கும்
நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்
பட்டிருக்கின்றன என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
பெரியவர் மணலி அவர்கள் இந்த விதைகளைப் பற்றி சொன்ஞர்கள்
தரமான விதைகள் கொடுக்க வேண்டுமென்பதற்காக இன்றையதினம்
அரசாங்கத்தின் மூலமாக ஏறத்தாழ 55 பண்ணைகளிலே உற்பத்தி செய்யப்
பட்டு, அந்த விதைகள் கொடுக்கப்பட்டாலும், உற்பத்தி செய்கின்ற விதை
களை வேறு விவசாயிகளிடத்திலே கொடுத்து, அவர்கள் உற்பத்தியைப்
பெருக்கிய பிறகுதான் மூன்ருவதாக, விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற
திட்டம் இருக்கிறது. அதன் பயஞக, தரமான விதைகள் வழங்கப்
பட்டிருக்கின்றன.

அது மாத்திரம் அல்ல, சரியான விதைகள்தாஞ என்பதற்காக அத்
தாட்சி பெற வேண்டும். இதற்காக டெஸ்டிங் லேபராட்டரீஸ் ஏற்
படுத்தி, சர்டிஃபைட் சீட்ஸ் என்று போட்டு, இது இத்தனை சதவிகிதம்



1973 மார்ச் 16] [திரு. அ. பெ. தர்மலிங்கம்.]

முளைக்கும் என்று சர்ட்டிஃபிகேட் கொடுத்ததற்குப் பிறகுதான் விதை
கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டம் இயற்றி, இன்றைய தினம் செயல்பட்டு
வருகிருேம்.

முன்பு பூச்சி மருந்தை ஆகாய விமானத்திலிருந்து தெளித்து
வந்தோம். அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆஞல் அதற்குப் பதிலாக,
தமிழக அரசின் 5,700 விசைத் தெளிப்பான்கள் மூலமாக
தெளிக்கப்பட்டு வருகிறது. அது போதாது என்று சொல்லி,
ஏறத்தாழ, 2,400 தெளிப்பான்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்
பட்டு, வாங்கப்பட்டிருக்கிறது. இவற்றை உடனடியாக எல்லாப் பகுதி
களுக்கும் கொடுக்கப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும். இது வேலை
யில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உதவும் என்று யோசனை சொன்ஞர்
கள். உழவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை அவற்றைத்
தெளிப்பதற்கு உதவி செய்தால், வேலையில்லாத திண்டாட்டத்தைப்
போக்கமுடியும் என்று சொன்ஞர்கள். இந்த நல்ல யோசனையை நான்
வரவேற்று, அவர்கள் சொல்வதற்கு முன்ஞலே அங்கங்கே இதை உடனடி
யாக செயல்படுத்தவேண்டுமென்று அனுமதியும் வழங்கியிருக்கிருேம்.
ஒவ்வொரு பிளாக்கிலேயும், ஒவ்வொரு வளர்ச்சி அலுவலகத்திலேயும்
உழவர்களை அழைத்து, வேலையில்லாதவர்களை அழைத்து, அவர்களுக்கு
பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவு வழங்கப்
பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் ஒன்று குறிப்பிட்டார்கள்.
பூச்சி மருந்து தெளித்து யாராவது உயிரிழந்தால் அவர்களுக்கும்
ரூ. 1,000 வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ் நாட்டிலே,
உங்களுக்குத் தெரியும், பூச்சி மருந்தை சாப்பிட்டாலும் செத்துப் போஞலும்
போகலாம், அதஞலும் தீங்கு வந்து விடும் என்ற அளவில் இலாகாவின்
மூலமாக, உடனே அந்த பரிசோதனை செய்து, அங்கங்கே, ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியத்திலேயும் 10 பேர், 20பேர் அல்லது 50 பேர், என்று தேர்ந்
தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவு
கொடுக்கப் பட்டிருக்கிறது. 1973–74-ல் அந்தத் திட்டம் செயல்படவும்
இருக்கிறது.

பல ஊராட்சி ஒன்றியங்களில் ஸ்ப்ரேயர்ஸ் பழுதடைந்திருக்கின்றன என்
பதை மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்.
ஏற்கெனவே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒவ்வொருவருக்கு பயிற்சி
அளிக்கப்பட்டு, அந்த பயிற்சியின் மூலமாக பலருக்குப் பயிற்சி அளிக்கிற
திட்டத்தை நிறைவேற்றி, 374 ஊராட்சி ஒன்றியங்களிலே 374 பேர்
பயிற்சி பெற்றவர்கள் இருக்கிருர்கள். மேலும் 374 பேர்களுக்கு
பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு சாமான்கள்
வாங்கி வைக்கவேண்டுமென்று சொன்ஞர்கள். ஒவ்வொரு யூனியனிலும்
ரூ. 500-க்கு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி வைக்கவேண்டுமென்று ஆங்காங்கு
இருக்கிற ஆணையர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்திகள் (கூடங்கள்) நம்
முடைய மாநிலத்தில் 6 இடங்களில் வைக்க அனுமதி வழங்கப்பட்டு,
அவை இன்று செயல்பட்டு வருகின்றன. மண்வள பரிசோதனைக்கும்

[திரு அ. பெ. தர்மலிங்கம்] ]1973 மார்ச் 16

3 கூடங்கள், நடமாடும் ஊர்திகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.
அதைப் போல் பழுதடைந்த சைக்கிள், பெட்ரோமாக்ஸ் இவைகளை ரிப்பேர்
செய்வதைப்போல, அங்கங்கே ரிப்பேர் செய்ய முடியுமா என்பதைக்
கூடப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம்.

அந்த முறையிலே, பெரியவர் மணலி அவர்கள் சொன்னதைப்
போல, இன்றையதினம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே இங்கே நம்முடைய மாரிமுத்து அவர்கள் ஒன்றை
சொன்னார்கள். எனக்குக் கூட ஆச்சரியமாக இருக்கிறது. 60 சென்ட்
நிலத்தில் மூன்று போகம் சாகுபடி செய்து 100 மூட்டை எடுக்கமுடியும்
என்று சொன்னார்கள். எனக்குக் கூட ஆச்சரியமாக இருக்கிறது.
100 மூட்டை எடுக்கவேண்டுமென்ற ஆசையே தவிர, எடுக்கமுடியாது என்று
தான் கருதுகிறேன்.

<u>திரு எ. ஆர். மாரிமுத்து :</u> நான் 60 சென்ட்டிலே 100 மூட்டை
என்று சொல்லவில்லை. அந்த விகிதாசாரப்படி ஒரு எக்கரில், 100
மூட்டை எடுக்க முடியுமென்றுதான் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :—</u>

பரிசு வாங்குவதற்காக பத்து சென்டிலே போடலாம். 60 சென்டிலே
அந்த அளவுக்கு வருகிறது என்று சொல்லுவது அனுபவ ரீதியாக முடியாது
என்று சொன்னேன்.

இன்னொன்றும் சொன்னார்கள். குறுகிய காலப் பயிர்களைக் கண்டு
பிடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக ஆய்வு செய்து
கண்ணகி என்ற நெல் அவருடைய மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வருவது
95 நாள் பயிர்தான். 85, 90 நாட்களில் வருகிற முறையில் கோடை
யிலே சாகுபடி செய்ய ஏற்ற பயிர்களை இப்போது ஆராய்ச்சி செய்திருக்
கிறார்கள். அவற்றை விரைவில் வெளியிட இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறு சில நல்ல
யோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அவற்றை நிறை
வேற்றத் தயாராக இருக்கிறோம்.

உழவர்கள் புதிய முறைகளை, நெல் வகைகளை எல்லாம் அறிந்து
கொள்ளும் வகையில் இப்போது பார்க்கும் இடங்களில் எல்லாம் விளம்
பரம் செய்திருக்கிறோம். அதிசய நெல் ஐ.ஆர். 8 ; அமோக விளைச்
சல் ஐ.ஆர். 20 என்று பல விளம்பரங்களைப் பார்த்திருப்பீர்கள். எந்தெந்தப்
பருவத்தில் எந்தெந்தப் பயிர்களைவைக்க வேண்டும். எத்தனை நாட்கள் உரம்
இட வேண்டும், அடி உரம் எப்படி இட வேண்டும், 30 நாளில் எப்படி
இட வேண்டும், 60 நாட்களில் எப்படி இட வேண்டும் என்றெல்லாம்
சொல்லுகிறோம். எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள்
டாப்ட்ரெஸ் பற்றிச் சொன்னார்கள். அது பற்றியும் விளம்பரம் செய்கிறோம்.
அடி உரம் 15—15—15 காம்ப்ளெக்ஸ், பற்றியெல்லாம் கூறுகிறோம்.



1973 மார்ச் 16] [திரு. அ. பெ. தர்மலிசிங்ம்]

இப்போது ஒரு சினிமா படம் கூட எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
மற்ற இடங்களில் எப்படி விவசாயத் துறையில் அபிவிருத்தி அடைந்
திருக்கிறார்கள், தமிழகத்தில் எப்படி விவசாயம் செய்ய வேண்டும்,
எப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதையெல்லாம் விவசாயி
களுக்கு உணர்த்த ஒரு படத்தைக் கூட எடுத்துக்கொண்டிருக்கிறோம்.
அதை ஜூன் மாதத்தில் வெளியிட இருக்கிறோம். நாம் செய்யும்
காரியங்கள் நேரடியாக விவசாயிக்குத் தெரிய வேண்டுமென்ற காரணத்
தால் அவர்களைப் பல வகைகளிலும் பயிற்றுவிப்பதற்கான காரியங்களைச்
செய்து வருகிறோம்.

திரு. சுப்பையா முதலியார் அவர்கள் ட்ரை லாண்ட் சீட்ஸ் பற்றிச்
சொன்னார்கள். வறட்சிப் பகுதிகளுக்கு ஏற்ற விதைகளை எப்படி விவசாயம்
செய்வது என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. பேரறிஞர்
அண்ணா அவர்கள் பெயரிலுள்ள குடுமியான் மலை ஆராய்ச்சிப் பண்ணையில்,
கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையத்தில் இவை பற்றி ஆராய்ச்சி நடந்து
வருகிறது.

சேலத்தில் எப்படி பயிர் வளர்ப்பது என்ற முறையில் அதற்கேற்ற
வாறு ரிசர்ச் ஸ்டேஷன் அமைக்க 1972–73-ல் அனுமதி வழங்கப்
பட்டிருக்கிறது. திரு. வெங்கடசாமி அவர்கள் நிச்சயமாகக் கவலைப்
பட வேண்டியதில்லை. அவர்களுடைய பகுதிக்கு வேண்டிய எல்லாவித
ஏற்பாடுகளையும் செய்து வந்திருக்கிறோம்.

பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சொல்லு
வது என்றால் அதற்கு நேரம் இல்லை. இந்தப் புத்தகத்தைப் படித்துப்
பார்த்தால் விளங்கிக் கொள்ள முடியும். இந்தத் துறையைப் பொறுத்த
வரை விவசாயப் பெருமக்களும் மற்றும் அனைத்து கட்சியினரும்
ஒத்துழைத்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாராட்டுதல்களைத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு பல கட்
மோஷன்கள் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட 70 கட் மோஷன்
களும் நான் ஏற்றிருக்கும் பொறுப்புக்கு உதவுபவையாக இருக்கின்றன
பலவற்றைப் படித்துப் பார்த்தேன்.

உரத்திற்கு கார்டு முறை கொண்டு வரவேண்டுமென்று திரு
பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லுவ
தற்கு முன்னாலேயே வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டத்திலே இந்த
முறையைச் செயல்படுத்தி வருகிறோம். தீவிர சாகுபடி செய்கின்றவர்
களுக்கு மட்டும் இன்ன உரம் தேவை என்று அதிகாரிகள் பார்த்து
கார்டு மூலம் கொடுக்கிறார்கள். இப்போது உரத் தட்டுப்பாடு இருக்கின்ற
காரணத்தால் எல்லோருக்கும் கொடுக்க முடியுமா என்று சந்தேகம்
இருக்கிறது. உரத் தட்டுப்பாடு இல்லையென்றால் நிச்சயமாக தமிழ்நாடு
முழுவதும் கார்டு கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 16

நாம் இரண்டாயிரம் டீசல் எஞ்சின்கள் வாங்கியிருக்கிறோம், விவ
சாயிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கிறோம். அண்மையில் மத்திய
அமைச்சர் ஷிண்டே அவர்களைச் சந்தித்தபோது கூட இதற்கு உடனடியாக
வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லி அவர்களும் உடனே செய்
வதாக ஏற்றுக் கொண்டார்கள்.

பருத்திக்கு நல்ல விலை இல்லை என்று சொன்னார்கள். பருத்திக்காக
கார்ப்பரேஷன் திட்டத்தில் சிலஉடனடி நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறோம். அவர்களும் ஆவன செய்வ
தாக சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கும் மில்களை
எடுத்துக் கொள்ள வசதி செய்யவேண்டுமென்று மாண்புமிகு தொழில
அமைச்சரித்தில் கேட்டு அவர்களும் ஓரளவு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.
விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எல்லாம்
செய்து கொண்டுதான் வருகிறோம்.

கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தத்
திட்டம் சரியாக வருகிறதா என்று நாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.
அதுபற்றிப் பரிசீலனை முடிந்த பிறகு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்
படும்.

பருப்பு பற்றுக்குறை பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டுக்கு ஆண்டு
ஒன்றுக்கு 7 லட்சம் டன், 8 லட்சம் டன் பருப்பு தேவைப்படுகிறது.
இன்று வெளியிலிருந்து வரவழைத்துக் கொண்டிருக்கிறோம். நாம்
23 லட்சத்து 50 ஆயிரம் எக்கரில் பருப்பு பயிரிடத் திட்டமிட்டு முன்
மாதிரியாக தஞ்சை, தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திலும் 6
லட்சம் எக்கராவில் இந்தக் கோடையில் இந்தப் பயிரைச் செய்து வரு
கிறோம். நிச்சயமாக இரண்டு லட்சம் டன்னுக்கு மேல் கிடைக்குமென்று
நம்புகிறோம்.

சூரியகாந்தி ஒரு தனித் திட்டம். சென்ற ஆண்டு 2 லட்சம்
எக்கராவில் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு 3 லட்சத்து 75 ஆயிரம்
எக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மலைத் தோட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரசு
10 கோடி ரூபாய்க்கு திட்டத்தைத் தயாரித்தது. இதுவரை எண்ணிக்
கொண்டிருந்தது எல்லாம் நீலகிரிமலைதான் மலை என்று. அதற்காகவே
திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வந்தன. அண்மையில் சென்ற ஆண்டு
ஒரு திட்டத்தை தயாரித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பினோம். அது
வருவதற்குள்ளாகவே கூட 1972-73-லே திட்டத்தை எடுத்துக் கொண்
டிருக்கிறோம். மலைவாழ் மக்கள் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்
காக மதுரை, திருச்சி, வட ஆற்காடு மாவட்டங்களில் பயிற்சித் திட்டம்
ஏற்படுத்த இருக்கிறோம். சேர்வராயன் மலை, ஜவ்வாது மலை, பச்சை
மலை, கொல்லி மலை, கோடை மலை, ஆகிய ஐந்து இடங்களில் வேலை
நடைபெற்று வருகிறது. வேறுபல திட்டங்களையும் செய்வதற்கு ஏற்பாடுகள்
நடைபெற்று வருகின்றன.



1973 மார்ச் 16] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இது போல் பல்வேறு திட்டங்களைப் பற்றி புத்தகத்தில் கொடுத்
திருக்கிறோம். 55 திட்டங்களுக்கான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறேன்.
பல திட்டங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, உருளைக் கிழங்கைப் பற்றி திரு. வெங்கடசாமி அவர்கள்
சொன்னார்கள். உருளைக் கிழங்குத் திட்டம் இந்தோ ஜெர்மன் நீலகிரித்
திட்டத்தின் கீழ் நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரியும். ஆனால்
கோல்டன் நெமட்டோடு என்ற வியாதி காரணமாக உருளைக் கிழங்கு பயிர்
இழங்கு வருகின்ற சமயத்தில் பாதிக்கப்பட்டு விடுகிறது. இதனால் விவசாயிகள்
பெருத்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஜெர்மனியில்
இருந்து டாஸ்நைட் என்ற மருந்தை இலவசமாக அனுப்பினார்கள். 75
லட்சம் ரூபாய் பெருமானமுள்ள மருந்தை அவர்கள் இலவசமாக அனுப்
பினார்கள். அந்த மருந்தை தெளிப்பதால் நல்ல பலன் ஏற்பட்டது.
அவர்கள் அந்த மருந்தை தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக நீலகிரி மலையில்
விவசாயிகள் படும் துன்பத்தைப் பார்த்து இலவசமாகக் கொடுத்தார்கள்.

ஆனால் மத்திய அரசு அதன் மீது போட்ட வரி ரூ. 53,25,439
இலவசயாகக் கிடைத்தது. எங்கள் கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு பி.ப.
பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தமாதிரி என்று. 75 1.00
லட்சம் பெறுமானமுள்ள அந்த மருந்துக்கு ரூ. 53,25,439 இந்த
ஆண்டு வரையில் இந்த அரசு மத்திய அரசுக்கு சுங்க வரியாகச்
செலுத்தியிருக்கிறது.

அண்மையில் மாண்புமிகு அமைச்சர் சிண்டே அவர்களிடம் இதைப்
பற்றிச் சொன்னேன், இதே பழமொழியையும் கூறினேன். அவர்கள்
இலவசமாக கொடுக்கிறார்கள், அதற்கு நீங்கள் இவ்வளவு வரி போடு
கிறீர்கள், இதை விவசாயிகளிடம் எப்படி வசூல் செய்வது என்று
வாதாடிய நோக்கில் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.
அந்தப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.
அங்குள்ள விவசாயப் பெருமக்கள், சட்டசபை உறுப்பினர்கள் முன்னாள்
சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் முன்னால் இருந்த அரசாங்கத்
தினிடம் வாதாடியது எனக்குத் தெரியும்.

இவ்வளவு கஷ்டங்களுக்கிடையே உற்பத்தியைப் பெருக்க முடியாமல்,
உருளைக்கிழங்கு விவசாயத்தை நல்லமுறையில் செய்வதில் பல கஷ்டங்கள்
இருந்ததைக் கவனித்து அங்குள்ள விவசாயிகளுக்காக மண்வளப் பாது
காப்புத்திட்டத்தின் கீழ் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. மண்வளப் பாதுகாப்பு
வேலைகளுக்காக செலவிடப்பட்ட தொகையை திருப்பி தர முடியவில்லை
என்று அங்குள்ள விவசாயிகள் விண்ணப்பித்தார்கள். அங்குள்ள
விவசாயிகள், எங்களிடம் ஒன்றும் அனுமதி கேட்கப்படவில்லை, அவர்கள்
ஏதோ செய்துவிட்டு போய்விட்டார்கள், ஒவ்வொரு ஆண்டும் நாங்கள்
பணம் கொடுக்கவேண்டுமென்று தொல்லைப்படுத்துகிறார்கள் என்று இங்
குள்ள விவசாயிகள் சொல்லி வந்தார்கள். சென்ற ஆண்டு நான்
அந்த இடங்களைச் சென்று பார்வையிட்டேன். பார்வையிட்டு வந்து
மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னேன், இதன் செலவு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 16

பூராவையும் மின்சார துறை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, அங்குள்ள விவசாயிகள் அவர்கள்படும் கஷ்டங்களை, நோய் காரணமாகப் படும் கஷ்டங்கள் எல்லாவற்றையும் எடுத்துரைத்தார்கள். நான் இதுபற்றி முதல்வர் அவர்களிடம் சொன்னேன். இந்த ஆண்டு நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரும்பிப் பெறவேண்டிய தொகை முழுவதையும், ரூ. 27 சொச்சம் லட்சத்தை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நினைத்துப் பார்த்தால் எந்த அளவிற்கு விவசாயிகளிடம் நம் முதல்வர் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதை உணரவேண்டும்.

இந்த 27 லட்சம் ரூபாய் என்பது பெரிதல்ல. மத்திய அரசுக்கு 53 லட்சம் ரூபாய் சுங்க வரியாகக் கொடுத்திருக்கிறோம். இப்படி இந்த 27 லட்சம் சொச்சம் ரூபாயை தள்ளுபடி செய்திருப்பதற்காக முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். பல்வேறு திட்டங்கள் பற்றி இந்த வெட்டுப் பிரேரணைகளில் கொடுத்திருக்கிறார்கள். பல திட்டங்கள் பற்றிப் பேசியபோது மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கூட நான் சொன்னேன்.

விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய விலை போதவில்லை என்று சொல்கிறார்களே, இதற்கு ஏதாவது பரிகாரம் கிடையாதா என்று முதல்வர் அவர்களைக் கேட்டோம். இந்த ஆண்டு அதற்காக பண்டக விலை மதிப்புக் குழு என்று அமைத்து அதற்கு நம் மதிப்பிற்குரிய சண்முகசுந்தரம் அவர்களையும், சிவ வடிவேல் உடையார் அவர்களையும், சின்னசாமி கவுண்டர் அவர்களையும், ஜெயராம ரெட்டியார் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு சரியான விலை கிடைக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அக்குழு ஆங்காங்கு சென்று பார்த்து சிபாரிசுகளைக் கொடுக்கவேண்டுமென்று அந்தக் குழுவை முதல்வர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

ஏற்கனவே அமைத்திருந்தது விவசாயத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட குழு. சென்ற ஆண்டு நம் முதல் அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தின் போது ஒரு உற்பத்தித் திறன் ஆய்வுக் குழு, ப்ரொடக்டிவிட்டி கவுன்ஸில், ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். பொதுவாக நாட்டிலே தொழில் துறைக்குத் தான் ப்ரொடக்டிவிட்டி கௌன்ஸில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் விவசாயத் துறைக்கு எங்கும் அப்படி இருந்ததில்லை. பல மாநிலங்களை எல்லாம் பார்த்த பிறகு நாமே இன்றையதினம் ஒரு ப்ரொடக்டிவிட்டி கௌன்ஸில் விவசாயத் துறைக்காக அமைத்திருக்கிறோம். அந்தக் குழு விவசாயிகளுக்கு பல ஆலோசனைகளைத் தரும்.

அடுத்து, கரும்பு விவசாயிகள், தங்கள் ஆலைப் பகுதிகளுக்கு சாலைகள் அமைப்பது பற்றி இதுநாள் வரையில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கரும்பு செஸ் நிதி என்று வசூலிக்கப்பட்டாலும் அந்த செஸ் நிதி வசூலிக்கப்பட்ட பகுதிகளில், வசூலிக்கப்படுகிற தொகை செலவழிக்கப்படுகிறதா என்றால் பெரும்பாலும் அப்படி இல்லாதிருந்த நிலைதான் இருந்து வந்தது. ஆனால் இப்போது நம் முதல் அமைச்சர் அவர்கள் எந்த



1973 மார்ச் 16] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

எந்தப் பகுதியில் எவ்வளவு எவ்வளவு வசூலாகிறதோ அதை அந்தந்தப் பகுதிகளிலேயே, கரும்பு அபிவிருத்திக்காகவும், சாலை அபிவிருத்திக்காகவும் அது செலவு செய்யப்படும். ஏற்கனவே இருந்தபடி பொது நிதியில் அது சேர்க்கப்பட வேண்டியதில்லை என்று அதற்காக ஒரு தனி சர்க்கிள் சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் தலைமையில் அவர்கள் கீழ் நான்கு டிவிஷனல் என்ஜினியர்களையும் நியமித்து கரும்பு விளைவிக்கும் பகுதிகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இன்றையதினம் அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

பிறகு, இங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பற்றிச் சொன்னார்கள். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு நிச்சயமாக நல்ல விலை கிடைக்கவேண்டியதுதான். அதற்காக இந்த அரசு ஆங்காங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. 120 இருக்கின்றன. மத்திய அரசின் உதவியோடு உலக வங்கிக்கு ஒரு திட்டம் தயார் செய்து தந்திருக்கிறோம். வருகிற ஆண்டுக்குள் 150 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்கவும் அந்தக் கூடங்களுக்கு விவசாயிகள் தங்களுடைய பொருள்களைக் கொண்டு சென்று சேர்ப்பதற்கும், நல்ல சாலைகள் அமைக்கவும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு 10 கோடி ரூ. திட்டமிட்டு, நான்கு கோடியில் நிறைவேற்றுவதற்கு, உடனடியாக ஒன்றரை கோடியில் காவேரி காம்ப்ளக்ஸ்-யை நிறைவேற்ற, தஞ்சை, தென் ஆற்காடு, திருச்சி மாவட்டங்களில், ஆறு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 30 லட்சம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறோம். விரைவில் பட்டுக் கோட்டையில் ஒன்று திறக்க இருக்கிறோம். 45 சாலைகள் எடுக்கப்பட்டு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே கூட சில உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தக் கூடங்கள் எல்லாம் சரியாகப் பயன்படுத்தப்படாமல் ஏதோ சலுகைகள் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது இன்று நேற்றல்ல. 1935-ல் இருந்து, ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் சொஸைட்டி அமைக்கப்பட்டு சரியான வரை முறை இல்லாமல் அதற்காக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. சில சிலபகுதிகளில் சில சில பயிர்களைக் குறிப்பிட்டிருந்தோம். எந்தெந்தப் பயிர்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். இப்போது எல்லாயிடங்களுக்கும் அதை விஸ்தரிப்பது என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

சேலம் மாவட்டத்தில் மட்டும் இதுவரையில் இல்லாமல் இருந்தது. அடுத்த ஆண்டும் அங்கும் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆரம்பிக்க இருக்கிறோம். இப்போது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கொண்டு வந்து வைத்து சரியான விலைக்குப் போகாமல் இருந்தால் பத்து நாட்கள் வரை வைத்திருக்கலாம், மூன்று நாட்களுக்கு இலவசம் என்றிருக்கிறது. கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடம் பேசி, இந்த விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க, சென்ட்ரல் பாங்கிலிருந்து 75-ல் இருந்து 80 சதவிகிதம் வரை கடன் கொடுத்து அங்கு வைக்கப்படுமானால் நல்ல விலை வரும்போது அதை விற்றுக் கொள்ளலாம் என்பதற்கு அவர்கள்

ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல விலை வருகிற வரையில் பாதுகாப்பு
அளிக்கக்கூடிய திட்டம் இன்றையத் தினம் இருந்து வருகின்றது. சில
திட்டங்கள் இன்று வேளாண்மை மறு நிதி உதவித் திட்டத்தின் கீழ்
நடைபெற்று வருகின்றன.

பூச்சி மருந்து பற்றிச் சொன்னார்கள். வெளியிடங்களிலிருந்து பூச்சி
மருந்துகளை வாங்குவதை விட அதை நாமே தயாரிப்பது என்ற முறையில்
அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் சார்பாக முதன்முதலில் தேவை
யான என்ட்ரின் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. பி. எஸ். ஜி. உற்பத்தி
செய்யப்பட்டுவருகிறது.

அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக தரமான பூச்சி
மருந்துகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமக்குத் தேவையான அள
விற்கு தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே வெளியிடங்
களிலிருந்தும் தரத்தைப் பரிசீலனை செய்து வாங்க வேண்டியிருக்கிறது.
அந்தத் தொழில் கழகத்தின் மூலமாக ஆங்காங்கு கிராமங்களுக்கு பயிற்சி
பெற்றவர்களை அனுப்பி ஆங்காங்கு டிராக்டர் பழுது பார்த்தல் இப்படிப்
பட்ட காரியங்களைச் செய்வது வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு
வருக்கும் மாதம் ரூபாய் 250 வீதம் 4 மாதத்திற்கு அவர்களுக்குக்
ஸ்டைபண்டு கொடுக்கப்பட்டு 89 பேர் தேர்வு பெற்று ஆங்காங்கு இப்போது
பணியாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோளம் அதிகமாக இப்போது உற்பத்தியாகிறது. ஆனால் அந்தச்
சோளத்தை வேறு வகையில் மாற்றினால் தான் விலை போகும் என்று
கருத்துச் சொல்லப்படுகிறது. ஆகவே, இன்றையதினம் அக்ரோ—இண்
டஸ்டீரீஸ் கார்ப்பரேஷன் மூலம் 2—3 திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.
மக்காச் சோளத்திலிருந்து ஸ்டார்ச்சு எடுப்பது, பழவகைகளிலிருந்து ஜூஸ்
செய்வது போன்ற சிறு தொழில்களை அமைப்பது என்று கொடுத்து
இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் எனக்கு
ஆதரவாக இருக்கின்றன என்று எடுத்து கூறி, இறுதியாக ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வேளாண்மைத்
துறைக்காக இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று கேட்டார்கள்.
நான் ஒரு விவசாயி என்ற காரணத்தினால் அதை விளக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் ஏராளமான முறை வெள்ளம் வந்திருக்
கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பண உதவி
செய்யும் வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு மானிய
மாகப் பணம் தரும். ஆனால், விவசாயிக்கு நிலத்தில் படிந்த மண்ணை
அகற்றுவதற்கு இது வரையில் எந்த அரசும் மானியமோ அல்லது வேறு
உதவியோ செய்ததில்லை. இது வரையில் பணமும் கொடுத்தது இல்லை
யாது. நான் என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். எங்
களுடைய நிலத்தில் படிந்து விட்ட மண்ணை எடுப்பதற்காக என்னுடைய



தகப்பனார் கடனை வாங்கி, அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், கடைசி
யில் அந்தக் கடனை அடைப்பதற்காக அந்த நிலத்தையே விற்று விட்டார்கள்.
அந்தக் கொடுமையை என்னுடைய கண்ணாலேயே கண்டேன்.

ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேளாண்மை செய்பவர்
களின் கஷ்டத்தை நன்கு புரிந்து கொண்டிருக்கிற காரணத்தால்,
தஞ்சை, திருச்சி, சேலம், தென்னார்க்காடு, கோவை மாவட்டங்களில்
சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 13,500 ஏக்கரில் படிந்து விட்ட
மண்ணை புல்டோசர்கள் மூலம் எடுப்பதற்காக உத்திரவிட்டார்கள்.
முதலில் அதைச் செய்வதற்கு அரசு 25 சத விகிதம் மானியம் கொடுக்கும்
என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த வெள்ளப்பகுதிகளைச் சுற்றிப்
பார்த்து விட்டு வந்தவுடன், அங்கேயுள்ள விவசாயிகள் படும் கஷ்டத்
தைப் பார்த்து விட்டு எல்லாவற்றையுமே மானியமாக, எவ்வளவு செல
வானாலும் அதைச் செய்து தருவது என்று உத்திரவிட்டார்கள். அதன்
பயனாக இன்றையத் தினம் 16,000 ஏக்கரில் மணல் எடுக்கப்பட்டு, தூர்
வாரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஒரு
போர் முறைத், திட்டமாக இருக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். அந்த அடிப்படையில் அது செய்யப்பட்டு, இன்றையதினம்
கடலூர் பகுதியில் 4,700 ஏக்கர் சரி செய்யப்பட்டு, அங்கே கடலைப் பயிரிட்டு
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தீவிரத்
திட்டத்தை இன்றையத்தினம் உழவர்களுக்கு பயன் அளிக்கும் திட்டத்தை
செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உழவர்களின்
சார்பில் நான் பாராட்டுகிறேன்.

இங்கே மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு
உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் எனக்குத் துணை
பாக இருப்பதால் அந்த வெட்டுத் தீர்மானங்களை அவர்கள் வற்புறுத்த
மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு அமைகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: விவாதம் முடிவுற்றது.
இப்போது மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

**கோரிக்கை எண். 19-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கே.
எம். சுப்பிரமணியம், திரு. மாரிமுத்து ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத்
தீர்மானங்களை அவர்கள் வற்புறுத்தவில்லையாதலால், அவைகள் பேர
வையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.**

<u>திரு. ஆ. கு. சுப்பையா</u>: தலைவரவர்களே, என்னுடைய வெட்டுத்
தீர்மானத்தில் விவசாயப் பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்ய தவறி
இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு
ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதில் குத்தகை
தாரர்கள், சாகுபடியாளர்கள், சிறு நிலக்கிழார்கள் பிரதிநிதிகள் அவர்
கள் சொன்ன லிஸ்டில் இல்லை. அரசாங்கம் அவர்களைச் சேர்த்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விவசாயிகள் சார்பில்
திரு. சின்னசாமி கவுண்டர் அவர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய
யோசனையையும் பரிசீலித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

திரு. ஆகு. சுப்பையா அவர்களின் வெட்டுத்தீர்மானம் அவையின்
அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. வகாப் அவர்கள் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தை வற்
புறுத்தவில்லையாதலால், அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப்
பெறப்பட்டது.

THIRU B. VENKATASAMY : Sir, I have moved a cut motin with regard to the setting up of a Special Directorate for Horticultural Department. No reply has been given to it on the floor of the House by the Hon. Minister. May I know whether he would consider it ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : டைரக்டர் போடவில்லை.
பழத்திற்கு தனியாக இயக்குனர் இல்லை. துணை இயக்குனர் இப்போது
இருக்கிறார்.

திரு. கே. எஸ். கோதண்டராமையா அவர்கள் தன்னுடைய இருக்
கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்
பட்டதாக கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள
கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண். 19—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ்
ரூபாய் 24,06,72,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட
வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்
பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 44-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார்
அவர்கள் கொடுத்திருந்த தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்
புறுத்தவில்லையாதலால், அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப்
பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள
கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண். 44—வேளாண்மை மூலதனச் செலவு என்ற
தலைப்பின் கீழ் ரூபாய் 30,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு
வழங்கப்படவேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்
பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.





நிதிக் கோரிக்கை எண். 51-க்கு திருவாளர்கள் ஆர். பொன்னப்ப
நாடார், பி. வெங்கடசாமி, டோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்திருந்த
தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால்,
அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள
கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண். 51—அரசு வாணிகத் திட்டங்களுக்கான
மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 38,44,67,000-க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்
பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய
நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை
மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·16 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

'NIL.'

### B. *Reports, Notifications and Other Papers.*

* 94. Speech by Hon. Mannai Thiru P. Narayanaswamy, Minister for Food on Demand No. 51—Capital Outlay on schemes of Government Trading (Food) (English and Tamil).

* 95. Policy Note on Demand No. 27—Community Development and Panchayat Development—1973-74 (English and Tamil).

† 96. Performance Budget on Backward Classes—1973-74.

97. Commercial Budget on Agricultural Engineering Workshop—1973-74.

‡ 98. Resume of work transacted by the Legislative Council during the period from 9th August to 14th November 1972 (Forty—second Session).

§99. Policy Note on Demand No. 34—Public Works—Grants-in-Aid—1973-74 (English and Tamil).

†100. Report of the Joint Select Committee on the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 39 of 1972).

---

* Despatched to Members on 14th March 1973.

† Laid on the Table on 15th March 1973.

‡ Despatched to Members on 13th March 1973.

§ Despatched to Members on 15—3—1973.



[37ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க)

# 1973-74 ஆம் ஆண்டு வேளாண்மைக் கோரிக்கை பற்றிய குறிப்பு

## தோற்றுவாய்.

1973–74ஆம் ஆண்டுக்கான கோரிக்கை எண் "19. வேளாண்மை" யின்கீழ் ரூ, 22,14,44,400-க்கு மேற்படாத தொகையையும், கோரிக்கை எண். "44. வேளாண்மை மீதான மூலதனச் செலவுகளின்" கீழ் ரூ, 22,40 000-க்கு மேற்படாத தொகையையும் அரசுக்கு வழங்குமாறு முன்மொழிகிறேன்.

1972–73-ஆம் ஆண்டில் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களை நிறை வேற்றியதில் அடைந்த முன்னேற்றம் குறித்த ஆய்வுரையையும், 1973–74 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தையும் இப்பேரவை முன் வைக்கிறேன்.

பல்வேறு வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின்கீழ் நமது ஆற்ற லுக்கு அறைகூவல் விடுக்கும் மாபெரும் பணியை நாம் மேற்கொண்டுள் ளோம். பல்வேறு வகைப் பயிர்களுக்கு முடிவிட்ட இலக்குகளை அடைய வேளாண்மைத் துறையில் உள்ள பணியாளரமைப்பு முழுவதும் பணி யாற்ற ஊக்குவித்து முடுக்கி விடப்பட்டது. இருந்த போதிலும், தென் ஆற்காடு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக நாம் உற்பத்தியில் பெரிதும் பின்னடைய நேரிட்டதும், சுமார் 5,463 ஹெக்டேர் (13,500 எக்கர் நிலம்) மணல் மேடிடப்பட்டதும் அனைவரும் அறிந்ததே. ஆயினும், மற்ற பகுதி களில் உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் மேற் கொண்ட முயற்சிகளில் சிறிதும் தடுமாறவில்லை. கடந்த ஆண்டு உற்பத்தியாகிய 70·45 லட்சம் டன்னுடன் ஒப்பிடுகையில், 1972–73-ல் 72·02 லட்சம் டன் உற்பத்தி நிலையை அடையக் கூடும் என்னும் நம்பிக்கையுடையவர்களாய் உள்ளோம். தமிழ் நாட்டு உழவர் பெருமக்கள் உணவு உற்பத்தியில் துணிவுடன் இந்த அறைகூவலை ஏற்றுப் பாராட்டும் வகையில் உணவு உற்பத்திப் பெருக்கத் தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை ஈண்டுக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன். உணவு உற்பத்தி இலக்கை இதே அளவில் நிலைநிறுத்த லாம் என்பதில் நமக்கு நம்பிக்கையும் உண்டு.

அடுத்து வரும் ஆண்டுக்கான உற்பத்தி (1973–74) இலக்கு 79 லட்சம் டன் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. உழவர்பெருமக்களும், அரசுப் பணியாளர்களும் உடன் நின்று உறுதியுடன் உழைப்பதன் மூலம் நாம் நமது திட்ட இலக்கை அடையக் கூடும் என்று நம்புகிறோம்.

1972–73 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை உற்பத்தி குறித்த பல்வேறு சிறப்புக் கூறுகளைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**பருவ நிலைமைகள்.**—இவ்வாண்டில் 1972 மே மாதம் முடிவதற்குள் முன்னதாகவே தென்மேற்குப் பருவமழை தொடங்கிய போதிலும், மழை போதிய அளவுக்கு இல்லாததோடு பரவலாகவும் பொழியவில்லை.

இதன் காரணமாக, குறுவைக் காலத்தில் உணவு தானிய விளைச்சல்
குறைந்து விட்டது. உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்ட குறைவு
சுமார் 2·54 லட்சம் டன் என மதிப்பிடப்பட்டது.

இம் மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் 1972 அக்டோபரிலிருந்து
1972 நவம்பர் இடைப்பகுதி வரை வடகிழக்குப் பருவ மழை தீவிரமாக
இல்லை. 1972 டிசம்பரில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றழுத்தங்
களினால், மாநிலமெங்கும் கனத்த அடை மழை பெய்தது. இம் மாநிலத்
தின் பெரும்பாலான மாவட்டங்களில் குறிப்பாக டிசம்பர் திங்கள் முதற்
பாதியில் கனமழை பொழிந்தது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், செங்கற்
பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், சேலம் ஆகிய
மாவட்டங்கள் புயற்காற்றுக்கும் வெள்ளச் சேதங்களுக்கும் உள்ளாயின.
மாநிலம் முழுவதும் மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால்,
பெருத்த மழையினால், 2·20 லட்சம் ஏக்கர் நெற்பயிர், 50,000 ஏக்கர்
பருத்தி, 12,000 ஏக்கர் கரும்பு, 0·22 லட்சம் ஏக்கர் பலவகைப் பயிர்கள்
பாதிக்கப்பட்டன.

**உணவு தானிய உற்பத்தி அளவு.**—1972–73 ஆம் ஆண்டிற்கான
உணவு தானிய உற்பத்தி அளவு 72·02 லட்சம் டன் வரை இருக்கக்கூடும்
என்பதை தற்காலிக மதிப்பீடு சுட்டிக் காட்டுகிறது. தனித்தனியான
விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (லட்சம் டன்களில்.) |
|---|---|
| அரிசி .. .. | 55·00 |
| சிறு தானியங்கள் .. .. | 15·10 |
| பருப்பு வகைகள் .. .. | 1·92 |
| மொத்தம் .. | 72·02 |

தென்மேற்குப் பருவக்காலத்தின் போது, டிசம்பரில் கனத்த மழை
யோடு பாதகமான பருவ நிலைகள், பருத்தி, நிலக்கடலை உற்பத்தியிலும்
மோசமான விளைவுகளை உண்டாக்கின.

1973–74 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தியளவு கீழ்க்
கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது :—

| | (லட்சம் டன்களில்.) |
|---|---|
| அரிசி .. — — | 59·00 |
| சிறு தானியங்கள் .. — | 17·50 |
| பருப்பு வகைகள் .. — | 2·50 |
| மொத்தம் .. | 79·00 |



மத்திய அரசுக்குழு ஒன்று 1972 டிசம்பர் கடைசி வாரத்தில் தமிழ்
நாட்டிற்கு வருகை தந்தது. இம் மாநிலத்தில் புயற்காற்றும், வெள்ள
மும் விளைவித்த சேத நிலைமையை உரிய இடங்களுக்கே சென்று மதிப்
பிட்டுப் பார்த்த பிறகு மத்திய உதவிக்காக செலவு வரம்பை பரிவுரை
செய்தது. இந்தப் பரிவுரைகளின் அடிப்படையில், இந்திய அரசு மற்றவை
களுக்கு இடையில் 1972–73, 1973–74 ஆண்டுகளுக்காக மொத்த மத்திய
நிதியுதவி ரூ. 14·25 கோடியிலிருந்து, மணல் மேடிட்ட நிலங்களைப் பண்
படுத்துவதற்காக உதவித் தொகையாகவும், கடனாகவும் முறையே ரூ. 25
லட்சமும், ரூ. 50 லட்சமும் அனுமதித்துள்ளது. 1973-ஆம் ஆண்டு
ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் வரையில் மணல் மேடிட்ட நிலங்களைப்
பண்படுத்துவதன் கீழ் மேற்கொண்ட செலவு ரூ. 10 லட்சம் ; 1973-ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளுக்குள் மேற்கொள்ள எதிர்
பார்க்கும் செலவு ரூ. 50 லட்சம் ஆகும்.

**மிகு பயன் தரும் தானிய வகைகள் திட்டம்.**—நெல், சிறு தானியங்கள்
உற்பத்தியை உயர்த்தும் பொருட்டு 1966–67-லே தமிழ்நாட்டில் மிகு
பயன்தரும் தானிய வகைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1966–67-ல்
5·27 லட்சம் ஏக்கர் என்று சிறிய அளவில் தொடங்கப்பட்ட இத் திட்டம்,
1971–72-ல் 64·14 லட்சம் ஏக்கராக படிப்படியாக உயர்ந்துள்ளது. குடி
யானவர் நிலங்களில் பெரிய அளவில் பயிர் முறை விளக்கங்களைச் செய்து
காட்டுவதோடு, வானொலி, ஒலி-ஒளிச் சாதனங்கள் மூலம் பயிர் முறை
பற்றி அவர்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். தமிழ்நாட்டில்
வேளாண் பொருளாதார நடவடிக்கைகள், பயிருக்கு இடப்படும் உரத்தின்
அளவு, பயிரிடும் முறை ஆகியவற்றில் புரட்சிகரமான மாறுதல்கள்
கொண்டுவரப்பட்டுள்ளன. குடியானவர்களுக்கு உரிய காலத்தில் வேண்டி
யுள்ள விதைகள், இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு இரசாயனங்கள்
முதலியவை போன்ற பயிரிடு பொருட்கள் யாவற்றையும் கொடுப்பது
இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

சிறு பாசனம் மூலமாகவும், நிலநீர் ஆதாரங்களைக் கண்டு பிடித்து
அதன் மூலமாகவும், கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்தி உணவு
உற்பத்தியைப் பெருக்குவதில் இவ்வரசு முனைப்பாக ஈடுபட்டுள்ளது.
அதே சமயத்தில், இந்தப் பகுதிகளில் மிகு பயன் தரும் பயிர்வகைகளை
முனைப்பாகப் பயிராக்கி உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகள்
எடுக்கப்பட்டு வருகின்றன.

1971–72-ஆம் ஆண்டில் மிகு பயன் தரும் நெற்பயிர் (ஐ.ஆர். 8)
55·43 லட்சம் ஏக்கரும், அதன் இனத்தைச் சேர்ந்த மற்ற ரகப் பயிர்கள்
31·53 லட்சமும், மற்ற வகைப் பயிர்கள் 23·90 லட்சமும், கலப்பினச்
சிறு தானியங்கள் 3·92 லட்சமும், வீரியக் கம்பு (எச்.பி. 3) 4·81
லட்சமும் விரைவுத் திட்டத்தின்கீழ் பயிரிட்டு பிரம்மாண்டமான சாதனைகளை
அடைந்தோம். இந்தச் சாதனையின் அடிப்படையில் 1972–1973-ஆம், 4·377

ஆண்டுகளிலும், நெற்பயிர் 55 லட்சம் ஏக்கரும் சிறு தானியங்கள் 4·15 லட்சம் ஏக்கரும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், எச்.பி. 3 வீரியக் கம்பு பயிரிடும் விரைவு திட்ட இலக்கு 1972–73-ல் 11 லட்சம் ஏக்கராக உயர்த்தப்பட்டு, அதே இலக்கு 1973–74-ஆம் ஆண்டிலும் அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி 1965–66-ல் 35·24 லட்சம் டன் மட்டுமே இருந்தது. நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங் களிலும் மிகு பயன் தரும் பயிர் வகைத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் காரணமாக, இதன் உற்பத்தி 1972–73-ல் 55·00 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது பெருமிதப்படக்கூடியதாகும்.

## அவசரகால சம்பா உற்பத்தித் திட்டம், 1972–73.

இவ்வாண்டில் 1972 மே மாதம் முடியுமுன்னமேயே, தென்மேற்குப் பருவ மழை தொடங்கியபோதிலும் மழை போதுமானதாயில்லை. மழையும் அங்கோரிடத்திலும் இங்கோரிடத்திலும் பொழிந்தாலும், தேவைப் பட்டபோது உரிய காலத்தில் பொழியவில்லை. இதன் காரணமாக, அரிசி 1·00 லட்சம் டன்னும், சோளம் 0·86 லட்சம் டன்னும், கம்பு 0·58 லட்சம் டன்னும், பருப்பு வகை தானியங்கள் 0·10 லட்சம் டன்னும் ஆக மொத்தம் 2·54 லட்சம் டன் உணவு தானியங்களில் இழப்பு ஏற்பட்டது. 1972 டிசம்பர் முதல் வாரத்தில் பெய்த கனமழை காரணமாக, பாசனத் திட்டங்களுக்கும், பாசன ஏரிகளுக்கும் போதிய அளவு நீர் கிடைத்தது.

இவ்வாறு 1972 குறுவைப் பயிர் காலத்தில் 2·54 லட்சம் டன் உணவுத் தானிய இழப்பை ஈடு செய்வதற்காக, அவசரகால சம்பாப் பயிர் திட்டம் தொடங்குவதென்று திட்டமிடப்பட்டது. இத் திட்டம், நெற் பயிருக்காக, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 1972 டிசம்பர் மூன்றாவது வாரத்திலிருந்து தொடங்கப்பட்டது.

பாசனம் பெறும் சிறு தானியங்களாகவும் இதைப்போன்றதொரு திட்டம், கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 1973 ஜனவரியில் தொடங்கப்பட்டது. பருப்பு வகை தானிய விளைச்சல் திட்டம் தஞ்சாவூர், தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்திலும், 1972 டிசம்பரிலும், 1973 ஜனவரியிலும் தொடங்கப்படும்.

நவரைப் பருவத்தின்போது, அவசரகால சம்பாப் பயிர் உற்பத்தித் திட்டத்தின் கீழ் தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங் களில் 4·82 லட்சம் ஏக்கர் பயிரிடப்படும். CO. 29 ரகத்திற்குப் பதிலாக ஐ.ஆர். 8, ஐ. ஆர். 20 இங்கு பயிரிடப்படுகிற பிரதான நெற்பயிர் ரகங்களாக அமைந்திருக்கும்.

**நெல்.**—CO. 29 மற்றும் ஏனைய ரகங்களுக்குப் பதிலாக ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 ரகங்களைக் கூடுதலாக 2 லட்சம் ஏக்கரில் தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களில் நவரையின்



போது பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மூன்று வட்டங்களில் நவரைக் காலத்தில் பயிரிடப்படும் ஐ. ஆர். 8 ரகங்கள் பின் வருமாறு :—

| | லட்சம் ஏக்கரில். |
|---|---|
| செங்கற்பட்டு .. .. .. .. .. .. .. | 1·97 |
| வட ஆற்காடு .. .. .. .. .. .. | 1·83 |
| தென்னாற்காடு .. .. .. .. .. | 1·02 |
| மொத்தம் .. | 4·82 |

புதிய ரகங்களையும் புதிய பயிர் முறைகளையும் பிரபலப்படுத்துவதற்காக தனி முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. முனைப்புப் பயிர் நடைமுறைகளையும், பயிரிடுவதில் சரியான முறைகளையும் பின்பற்றுவதில் கவனம் செலுத்து வதற்கு பொருட்காட்சிகளும், தனிப்பிரச்சார இயக்கங்களும் நடத்தப்படும். இராம நிலையில் கூட்டங்கள் நடத்துவதற்குத் ...

இப்பிரச்சார இயக்கத்தின்போது முனைப்புப் பயிர் நடைமுறையினைப் பற்றிய விளம்பரங்கள் மூன்று கட்டங்களாக வெளியிடப்படும். முனைப்புப் பயிர் நடைமுறையை விளக்கும் சிலேடுகள் திரையிடப்படும்—அத்துடன் களப்பணியாளர்களால் சிலேடுகள் காட்டி விரிவுரை ஆற்றவும் ஏற்பாடு செய்யப்படுகிறது—தமிழகம் முழுவதும் இராம வளர்ச்சிக் கூட்டங்கள் நடத்தப்படும்.

**சிறு தானியங்கள்.**—சிறு தானியப் பயிர்களுக்கு இரசாயன உரம் அல்லது பயிர்ப்பாதுகாப்பு முறைகள் இயல்பாகவே வெகுவாகப் பயன் படுத்துவதில்லை. மிக அண்மையில்தான் CH1, CH3, சுவர்ணா, சோளம், CO 1, CO 2, சாரதா கேழ்வரகு, HB 1, HB 3, HB 4, கம்பு பிரபலமடைந்துள்ளன. இத்தகைய மிகு பயன்தரும் பயிர்வகைகள் பயிரிடப்படும் பகுதியை கூடியமட்டில் நவரைக்காலத்தில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கண் ஆறு மாவட்டங் களில் ஜனவரி மத்தியிலிருந்து மார்ச் முடிய பாசனத்தினால் பயிரிடப் படும் சிறு தானியங்களுக்கு இரசாயன உரம், பயிர்ப் பாதுகாப்பு முறை கள் இவற்றைப் பயன்படுத்துவதில், குடியானவர்களுக்கு அறிவுரை தரவும் திட்டமிட்டுள்ளது. சிறு தானியங்களுக்கு இரசாயன உரங் களையும் பயிர்ப் பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்துமாறு குடி யானவர்களுக்கு நயமுடன் எடுத்துச் சொல்லப்படும். இத்திட்டத்தின் கீழ், கீழ்காணும் பகுதி கொண்டுவரப்படும்.

| மாவட்டத்தின் பெயர். | பரப்பளவு ஏக்கரில். |
|---|---|
| 1. கோயம்புத்தூர் .. .. .. .. .. | 1,50,000 |
| 2. சேலம் .. .. .. .. .. .. .. | 60,000 |
| 3. மதுரை .. .. .. .. .. .. .. | 67,500 |
| 4. திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. .. | 65,000 |
| 5 திருநெல்வேலி .. .. .. .. .. .. | 52,000 |
| 6, தருமபுரி .. .. .. .. | 19,000 |
| மொத்தம் .. | 4.13.500 |

**பருப்பு வகைகள்.**—தஞ்சாவூர் மாவட்டத்திலும், தென்னாற்காடு
மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்திலும் உள்ள தரிசு நிலங்களில்,
பெருவாரியான பகுதிகளில் பருப்பு வகைப்பயிரை பயிரிடுவதையே, இத்
திட்டம் முக்கியமாகக் கொண்டு அமைந்துள்ளது. கடந்த ஆண்டில்
தஞ்சாவூர் மாவட்டத்தில் உளுந்து, பச்சைப் பயிறு 3·5 லட்சம் எக்கரில்
பயிரிடப்பட்டதற்கு மாறாக, மேலும் 2·0 லட்சம் எக்கரில் பயிரிடத்திட்ட
மிட்டு உள்ளது. ஆக மொத்தம் 5·5 லட்சம் எக்கரில் பயறு வகைகள்
பயிரிடப்படும். தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்
தில் 40,000 எக்கர் பயிரிட மதிப்பிட்டதற்கு மாறாக, 20,000 எக்கர்
கூடுதல் பரப்பளவில் பயிரிடவும் திட்டமிட்டுள்ளது. பருப்புத் தானி
யங்களின் கீழ், மேலும் கூடுதலான பகுதிகளைக் கொண்டு வருவதற்கும்,
அந்தப் பயிர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதற்கும் முக்கியத்துவம்
அளிக்கப்படும்.

பருப்புத் தானியங்களின் நபர்வாரிச் செலவு 8 கிராம் மட்டும்தான்.
ஆனால், இதன் தேவையே 56 கிராம். தமிழ் நாட்டில் பருப்புத் தானியங்
களின் தேவை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 7 லட்சம் டன் ஆகும். நான்
காவது திட்டமுடிவுக்குள் தமிழ் நாட்டின் தேவையை ஈடு செய்ய
நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

பருப்புத் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியமான
ஏற்பாடுகளில் ஒன்று, தரம்படுத்திய விதைகளைப் பயன்படுத்துவதாகும்.
துவரை விதைகளின் தேவையை ஈடு செய்யும் பொருட்டு திருவரங்
குளம் காட்டுப் பகுதியில், விதைப் பெருக்குத் திட்டப்பணி மேற்
கொள்ளப்பட்டது. தனிப் பயிராகவும், ஊடு பயிராகவும் எல்லா
மாவட்டங்களிலும் பருப்புத் தானியங்களைப் பயிரிடுவதைப் பிரபலப்படுத்து
வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. விரைவுத் திட்டத்தின்கீழ்,
31–12–1972 வரை பருப்புத் தானியங்கள் 16·20 லட்சம் எக்கரின்கீழ்க்
கொண்டுவரப்பட்டன. தனிப்பயிர் ஊடுபயிராகவும், இவ்வகையில் இலக்க
மிட்டதன் அளவு 23·50 லட்சம் எக்கர்தான். இவ்வாண்டைப் போலவே
1973–74-லிலும் 23·50 லட்சம் எக்கர் பயிரிடப்படக் கூடும். தஞ்சாவூர்
மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரத்
திலும் நெல் பயிரான பின்னர் உள்ள தரிசு நிலங்களில் பருப்புத்
தானிய உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
பருப்புத் தானிய உற்பத்திக்கென மத்திய அரசு ஆதரவு பெற்ற
திட்டம் ஒன்றுக்கு, இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்
திட்டத்தின் கீழ், பயிரிடு பொருட்களுக்கு ஆகும் செலவிற்கு நிதி
யுதவி அளிக்கப்படுகிறது. தரமுள்ள பருப்புத்தானிய வகைகளைப்பயிரிட
விளக்கப்பாத்திகள் அமைப்பதற்கு குடியானவர்கள் இதனைப் பயன்படுத்திக்
கொள்வர். அரசுப் பண்ணைகளில், விதைப் பண்ணைகள் அமைக்கப்
பயிரிடு பொருட்களின் விலையில் 50 சதவீதம் வரையில் எக்கர்
ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூ. 75 கொடுக்கப்படுகிறது. 1972–73,
1973–74-ஆம் ஆண்டுகளில், குறுவை, சம்பாப் பயிர்க் காலங்களில் மேற்
கொள்ளப்படும் மொத்தச் செலவு ரூ. 19 லட்சமாக இருக்கும்.



**1973–74**-ல் அரசு மேற்கொள்ளக் கருதி வரும் புதிய திட்டங்கள்
பின்வருமாறு :—

(1) அவசர கால உணவுப் பயிர் கோடைத் திட்டத்தின் கீழ்,
ஐ.ஆர். 8 மற்றும் மிகு பயன்தரும் பயிர் வகைகளாகிய சோளம்,
கம்பு, கேழ்வரகு ஆகியவற்றில் 2·75 லட்சம் எக்கர் பயிரிடப்படுதல்.

(2) பருப்பு தானிய விரைவுத் திட்டத்தின்கீழ், 23·5 லட்சம் எக்கர்
பயிரிடுதல்.

(3) சூரியகாந்தி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 3·75 லட்சம் எக்கர்
பயிரிடுதல்.

**பல போகப் பயிர் முன்னோடித் திட்டம்.**—தமிழ்நாட்டில் பலபோகப்
பயிர் முன்னோடித் திட்டம், மூன்று வேளாண்மைக் கோட்டங்களாகிய
கடலூர் (தென்னார்க்காடு மாவட்டம்), முசிறி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்),
பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 1971 மார்ச்
திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முன்னோடித் திட்டத்தின் நோக்கம் மூன்றாண்டுக் கால அளவில்
அதாவது 1971–72 முதல் 1973–74 வரை பயிரிடப்படும் பரப்பளவை 20
சதவீதத்திற்குப் பெருக்குவதே ஆகும்.

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பயிரிடப்படும் அளவு 1 லட்சம் எக்கராகும்.

இந்தப் பகுதிகளில் ஆராய்ச்சி சோதனைகள், நவீன முறை விளக்கங்
கள், ஒலி–ஒளிச் சாதனங்களுடன் குடியானவர்களுக்குப் பயிற்சியளித்தல்
ஆகியவை மூலம் பலபோகப் பயிர் வளர்ச்சித் திட்டம் விரைவுபடுத்தப்
படும்.

நீண்ட கால வாலாயமான பயிர்களுக்குப் பதிலாக மிகு பயன்தரும்
குறுகியகாலப் பயிர் பயிரிடப்படும். ஊடு பயிரும் தொடர்ப் பயிரும்
அறிமுகப்படுத்தப்படும்.

**1971–72**-ல் முசிறித் திட்டத்தில் (10,000 எக்கர்), 4,000 ஹெக்டேர்
இலக்கிட்டதற்கு மாறாக, 51·51 ஹெக்டேர் (12,877·5 எக்கர்), பட்டுக்
கோட்டையில் (15,000 எக்கர்), 6,000 ஹெக்டேருக்கு மாறாக 4,734 ஹெக்டேர்
(11,835 எக்கர்), கடலூரில் 2,000 ஹெக்டேருக்கு (5,000 எக்கர்) பதிலாக
4,140 ஹெக்டேர் (10,350 எக்கர்) பயிரிடப்பட்டன.

**1972–73**-ல், கடலூர் திட்டத்தில் 3,140 ஹெக்டேர் (7,850 எக்கர்),
முசிறித் திட்டத்தில் 5,000 ஹெக்டேர் (12,500 எக்கர்), பட்டுக்கோட்டைத்
திட்டத்தில் 8,066 ஹெக்டேர் (20,165 எக்கர்) மேற்கொண்டும் கூடுதலாகப்.
பயிரிடப்படும்.

**1973–74**-ல் முசிறியில் 5,750 ஹெக்டேர் (14,375 எக்கர்), கடலூரில்
(5,264 ஹெக்டேர் (13,160 எக்கர்), பட்டுக்கோட்டையில் 5,070 ஹெக்டேர்
12,675 எக்கர்) கூடுதலாகப் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தஞ்சாவூர் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்

(i) முனைப்புப் பயிர் முறைகளை உருவாக்கிப் பல உத்திகளை குடி
யானவர்களிடையே பிரபலப்படுத்தியும், (ii) குடியானவர்களுக்கு உரிய
காலத்தில் பயிரிடு பொருட்களைக் கிடைக்கச்செய்து, சராசரி நெல்
உற்பத்தி அளவையும், பயிர்ப் பரப்பளவையும் பெருக்குவதற்காக 1960 ஆம்
ஆண்டில் மும்முர வேளாண்மைத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

எல்லாத் துறைகளின் ஒருங்கிணைந்த உதவியோடு தரப்படுத்தப்பட்ட
விதைகள், நைட்ரஜன் போன்ற ரசாயன உரங்கள், தகுந்த பயிர்ப்
பாதுகாப்பு, ரசாயன மருந்துகள் போன்ற பயிரிடு பொருட்கள், அந்தப்
பயிரிடு பொருட்களை வாங்கக் குடியானவர்களுக்குத் தேவைப்படும் கடன்கள்
ஆகியவை கிடைக்கின்றன.

பயிர் முறை ஆராய்ச்சி, புதிய முறையில் அமைந்த பயிர் வளர்ப்புத்
திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்
பட்டன. விரிவான ஆய்வுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் சோதனை
செய்து நவீன முறையில் அமைந்த பயிர் முறைகள் பின்பற்றப்பட்டு
வருகின்றன. ஆராய்ச்சிச் சோதனைகளோடு மூன்று எக்கரில் பல்
பயிர் விளக்கங்களும் நடத்திக் காட்டப்பட்டு வருகின்றன.

பயிர் ரகங்களை மாற்றியமைத்தும், பயிராகும் பரப்பளவை முனைப்பாக்கி
யதன் காரணமாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் உற்பத்தி 1959-60-ல்
8·86 லட்சம் டன்னுக இருந்தது, 1971-72-ல் 13·59 லட்சம் டன்னுக
உயர்ந்துள்ளது. மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் தொடர்ந்து
மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உற்பத்தியைக் கணிசமான அளவிற்குப்
பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### மும்முர வேளாண்மைப் பகுதி திட்டம்

மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம் இப்பொழுது மதுரை, செங்
கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து
மாவட்டங்களில் உள்ள 169 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு
வருகின்றது. இடையறு பாசனவசதியுள்ள பெருவாரியான பகுதிகளைக்
கொண்டுள்ளதால், இந்த மாவட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.
இந்தப் பகுதியிலுள்ள குடியானவர் ள் தங்கள் நிலங்களில் பயிரிடுவதில்
முனைப்புத் திட்ட முறைகளைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.
இரசாயன உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லிகள், விதைகள் முதலியவை
போன்ற பயிரிடு பொருட்கள் வாங்குவதற்கு குடியானவர்களுக்கு அவசிய
மான கடன் உதவி அளிக்கப்படுகிறது. 31-12-1972 வரை,
ரூ. 10·67 லட்சம் இலக்கிற்கு, ரூ. 7·61 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த செய்முறை விளக்கத் திட்டங்கள் முனைப்புப்பயிர் முறை
களை குடியானவர்கள் பின்பற்றுவதற்கு நடத்தப்படுகின்றன. இந்த
விளக்கத் திட்டங்கள் நெல், சிறு தானியங்கள் போன்ற மிகு பயன்
தரும் பயிர் வகைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தப்
பயிர்முறை விளக்கங்கள் ஒன்று அல்லது இரண்டு முக்கியமான இடங்
களில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், பயிராகும்
ஒருங்கமைந்த தொகுதிக்கு இந்த விளக்கங்கள் நல்ல பயனை



விளைவிக்கும். 1972-73 ஆம் ஆண்டிற்கு இலக்கிட்ட செய்முறை விளக்கப்
பாத்திகள் 605 ஆகும். ஆனால், 31-12-1972 வரை
இட்டிய சாதனை 548 பாத்திகளாகும். 1973-74 ஆம் ஆண்டிற்கான
இலக்கு 1,405 செய்முறை விளக்கப் பாத்திகளாகும். ஒவ்வொரு
செய்முறை விளக்கப் பாத்திக்கும் உதவித் தொகையாக ரூ 125
அளிக்கப்படுகிறது.

நீரை விவேகமுடன் பயன்படுத்தி குறைந்த அளவு நீரைக் கொண்டு
நிறைந்த பயனைப் பெறுவது பற்றி குடியானவர்களுக்கு அறிவுறுத்து
வதை நோக்கமாகக் கொண்டு இந்த பயிர் முறை விளக்கங்கள் அமைக்கப்
பட்டுள்ளன. ஒவ்வொரு பயிர்முறை விளக்கப் பாத்தியின் பரப்பளவும்
5 எக்கராகும். ஒவ்வொரு பயிர்முறை விளக்கப் பாத்திக்கும் உதவித்
தொகையாக ரூ. 750 கொடுக்கப்படுகிறது. 1972-73 ஆம் ஆண்டிற்கான
இலக்கு 76 பயிர் முறை விளக்கப் பாத்திகளாகும் ; சாதனை 31-12-1972
வரை 75 ஆகும். 1973-74 ஆம் ஆண்டிற்கான இலக்கு 76 விளக்கப்
பாத்திகளாகும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ், பயிர்முறை விளக்கப்
பண்ணைகள் அமைத்தல்.

### ஆயக்கட்டுப் பகுதி

பயிரிடுவதில் மேம்படுத்தப்பட்ட முறைகளைக் குடியானவர்களுக்குச்
செய்து காட்டவும், திட்டப் பகுதிகளில் தகுந்த பயிர் முறையை வகுக்கவும்,
பாசனப் புன்செய்ப் பயிர்களைப் பிரசித்திப் படுத்தவும், குடியானவர்
நிலங்களில் பயிர்முறை விளக்கப் பண்ணைகள் நடத்துவதே இத்
திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

1969-70 ஆம் ஆண்டில், 134 பண்ணைகள் அமைக்கப்பட்டு உதவித்
தொகையாக ரூ. 26,036 கொடுக்கப்பட்டது. 1970-71 ஆம் ஆண்டில்,
180 பண்ணைகள் அமைக்கப்பட்டு, உதவித் தொகை ரூ. 43,566 கொடுக்கப்
பட்டது. 1971-72 ஆம் ஆண்டில் 180 பண்ணைகள் அமைக்கப்பட்டு,
உதவித் தொகையாக ரூ. 49,980 கொடுக்கப்பட்டது.

பயிரிடப்பட்ட பயிர் வகை பருத்தி, சிறு தானியங்கள், நிலக்கடலை
என்பனவாகும். இப்போது சூரியகாந்தியும் சேர்க்கப்பட்டுள்ளது.
1972-73-ல் 180 பண்ணைகள் என்று இலக்கிட்டதற்கு மாறாக, 500
எக்கருக்கு ஒரு பண்ணை வீதம் 156 பண்ணைகள் தெரிந்தெடுக்கப்பட்டன.

1973-74 ஆம் ஆண்டிற்காக 103 பண்ணைகள் அமைக்கவும் திட்டமிடப்
பட்டுள்ளது. 1973-74 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 49,500 ஒதுக்கப்
பட்டுள்ளது.

சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தில் பயிர்முறை விளக்கப் பண்ணைகள்
அமைத்தல்.

### ஆயக்கட்டுப் பகுதி

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன.—(i) குடியானவர் நிலங்களில் பயிர் முறை விளக்கப் பண்ணைகள் அமைத்துப் பயிரிடுவதில் நவீன முறைகளைச் செய்து காட்டுதல்.

(ii) இந்தத் திட்டப்பகுதிக்கு ஏற்ற பயிர் ரகங்களை வகுத்தல்.

(iii) பாசனத்தின் கீழ், குறைவான நீர் தேவைப்படும் பயிர்கள் வளர்ப்பதைப் பிரபலப்படுத்தல்.

1969–70-ல் 25 பண்ணைகளும், 1970–71-ல் 26 பண்ணைகளும், 1971–72-ல் 26 பண்ணைகளும் அமைக்கப்பட்டன. 1969–70-ல் ரூ. 6,000-மும், 1970–71-ல் ரூ. 45,000-மும், 1971–72-ல் ரூ. 53,000 மும் உதவித் தொகையாக அளிக்கப்பட்டது.

பயிர்முறை விளக்கப் பண்ணைகள் பயிரிடப்படும் ஒரே ஒரு பயிர் நெல் ஆகும்.

1972–73 ஆம் ஆண்டு இலக்கான 6 விளக்கப் பண்ணைகளுக்கு மாறாக, 1972 செப்டம்பர் வரையில் 26 பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயிர் முறை விளக்கப் பண்ணைகளின் உழவர்களுக்கு உதவித்தொகை வழங்கு வதற்காக ரூ. 8,500 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1973–74 ஆம் ஆண்டில் 46 பண்ணைகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1973–74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 8,500 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### இந்தியா-ஜெர்மனி-நீலகிரி மேம்பாட்டுத் திட்டம்

இந்திய அரசுக்கும், மேற்கு ஜெர்மானிய அரசுக்கும் இடையில் 14—6—1966 அன்று கையெழுத்திடப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப் படையில் 1967 மே—ஜூன் முதற்கொண்டு இந்தியா-ஜெர்மனி-நீலகிரி மேம்பாட்டுத் திட்டம் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கென ஆலோசனை நடவடிக்கைகளைக் கூட்டாக நடத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட துறைகளில் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும் :—

(i) பயிரிடுவதற்கேற்ற நிலங்களில் பயிர் செய்தல், பயிர்ச் சத்து, உரமிடுதல்.

(ii) உருளைக்கிழங்கு பயிரிடுதல், உருளைக்கிழங்கு செடிகளை வளர்த்தல் ஆகியவற்றிற்குச் சிறப்பிடமளித்து, பயிர்ச் சாகுபடி பயிர் வளர்ப்பு பணிகள்.

(iii) பழ, காய்கறி வளர்ச்சி.

(iv) பயிர்ப் பாதுகாப்பும், பயிர் நோய்க் கட்டுப்பாடும்.

(v) கிராமப்புறங்களில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.



நீலகிரி உழவர்கள் மும்முர வேளாண்மையை மேற்கொள்வதற்கென அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் அவர் களது பொருளாதார நிலையை உயர்த்துவதும், வேளாண்மை உற்பத் தியை விரைவாகப் பெருக்குவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்க மாகும்.

31—12—1972-க்குப் பிறகும் இத்திட்டக் கால அளவை நீட்டிப்பது குறித்து, ஜெர்மானிய கூட்டாட்சியைக் கலந்து கொண்டு இந்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

1972–73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 36·05 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 31—12—1972 வரை ஆன மொத்தச் செலவு ரூ. 11,55,412·81 ஆகும். தாசானிட் இறக்குமதி மீது சுங்க வரி விலக்கு அளிக்க இந்திய அரசைக் கேட்டுள்ளோம்.

### பழ வளர்ச்சித் திட்டம்

பழத் தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலமும், பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்த இத்திட்டம் கருதுகிறது. ஒவ்வொரு தனி யாருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்கிற உயர்ந்த அளவுத் தொகைக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும், ஏனைய பழமரங்களை வளர்ப்பதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 2,000 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும் நீண்டகாலக் கடன்கள் வழங்க இத்திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டம் இம்மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1973–74 ஆம் ஆண்டில் 1,800 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வர திட் டமிடப்பட்டுள்ளது.

**மாதிரி பழத் தோட்டங்கள்.**—பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும், பழ உற்பத்தியாளர்களுக்குத் தேவைப்படும் நாற்றுக்களை வழங்குவதற்கும், தரமான பயிரிடு பொருட்களை வழங்கு வதற்கும் விளக்கப் பாத்திகளாகப் பணிபுரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இம்மாநிலத்தில் தற்போது 9 பழத்தோட்ட நாற்றுப் பண்ணைகள், பிற்சேர்க்கை ஒன்றில் காட்டிய இடங்களில் உள்ளன. ஒவ்வொரு பழத் தோட்டத்திலும் வழங்கப் படும் பயிரிடு பொருட்கள் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

**வாழை பயிரிடுவது குறித்த முனைப்புத் திட்டம்.**—முனைப்பு நட வடிக்கைகளைப் பின்பற்றி தற்போதுள்ள பகுதிகளில் வாழை உற்பத்தியை மும்முரப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், வட ஆர்க்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப் பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் ஏற்றுமதி செய்யத்தக்க குட்டைவகை வாழை, 'ரோபஸ்டா' வாழை போன்ற வகைகள் ,பயிரிடப்பட்டு வருகின்றன. மேலும், இத் திட்டத்தின் கீழ் வாழை பயிரிடுபவர்களுக்கு இலவசமாகத் தொழில்

நுட்ப ஆலோசனை அளிக்கப்படுகிறது. நோயற்ற வாழைக் கன்றுகள்,
வாழை பயிரிடுபவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.
பவர்களின் நிலங்களில் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன.
கூட்டுறவு, வணிக வங்கிகளின் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000
முதல் ரூ. 1,500 வரை குறுகிய காலக் கடன்கள் அளிக்கப்படுகின்றன.
1972-73 ஆம் ஆண்டில் 23,188 ஏக்கர் நிலத்தில் இத்திட்டம் அமுலாக்கப்
பட்டது. 1973-74-ல் இத்திட்டம் தொடர்ந்து 25,000 ஏக்கர் நிலப்
பரப்பில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகளை உற்பத்தி செய்வதற்கான மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம்.**—செங்கற்பட்டு மாவட்டத்தில்
காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இத்திட்டம் 1971-72 ஆம்
ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு
1,000 ஹெக்டேர் பரப்பில் ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகளைப்
பயிரிடுவதென்னும் குறிக்கோளுடன் இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டு
களில் 3,000 ஹெக்டேர் பரப்பில் இவ்வாழையைப் பயிரிடுவதே இத்
திட்டத்தின் நோக்கமாகும். பயிரிடு பொருட்கள் வாங்கப்படுவதற்
காக பாத்தி ஒன்றுக்கு ரூ. 1,000 உதவித் தொகையுடன் விளக்கப்
பாத்திகள் அமைக்கப்படும். யூனிட் ஒன்றுக்கு ரூ. 200 உதவித்
தொகையுடன் விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. பயிர்
பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீத உதவித் தொகையுடன் இடைக்
கிறது.

1972-73-ல் இத்திட்டத்தின்கீழ் 2,000 ஹெக்டேர் பரப்பைக் கொண்டு
வரவும், 124 விளக்கப் பாத்திகள் அமைக்கப்படவும் திட்டமிடப்
பட்டுள்ளது. 1973-74-ல் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்படும் நிலம்
3,000 ஹெக்டேர் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

**மலைப் பகுதிகளில் தோட்டப்பயிர் மேம்பாட்டுத் திட்டம்.**—கோடைக்
கானல், கல்ராயன், ஜவ்வாது, கொல்லிமலை, பச்சைமலை ஆகிய ஐந்து
மலைப் பகுதிகளில் தோட்டப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் 16-2-1972-
லிருந்து செயற்படுத்தப்படுகிறது. அப்பகுதியின் வளங்கள் குறித்த
ஆய்வு தற்போது நடத்தப்பட்டு வருகிறது.

1973-74 ஆம் ஆண்டிலும் உதவித் தொகையுடன் தொடர்ந்து இத்
திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி,
தோட்டப் பயிர்கள், காய்கறிகள் முதலியவை பயிரிடுவதன்கீழ் 1,160
ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

**எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம்.**—நம் நாட்டின்
வேளாண்மைப் பொருளாதாரத்தில் எண்ணெய் வித்துக்கள் முக்கியமான
பங்கை வகிக்கின்றன. 10 லட்சம் டன் அடிப்படை உற்பத்தி அளவுக்கு
மாறாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இம்
மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அளவை 13
லட்சம் டன்னுக்கு உயர்த்துவதற்காக எண்ணெய் வித்துக்கள் மேம்
பாட்டுத் திட்டங்கள் பல செயல் படுத்தப்படுகின்றன,



பகுதிகளை நல்ல தரமுள்ள விதைகளின் கீழ்க் கொண்டுவருவதற்காக
தரமான விதைகளைப் பெருக்கி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
இதன் மூலம் இம்மாநிலத்தின் உற்பத்தியை உயர்த்தலாம். வேர்க்கடலை
பயிரிடுவதற்காக, உழவர்கள் நிலங்களில் மண்டலத் தொடக்க நிலை
விதைப் பண்ணைகளும், இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளும் அமைக்க
ஏற்பாடு செய்யப்படுகிறது. தவிர, குடுமியான் மலையிலுள்ள அண்ணா
பண்ணையில் 200 ஏக்கர் பரப்பிலும், வேதகரை, மேக்கரை ஆகிய இடங்
களில் 147·12 ஏக்கர் பரப்பிலும் மூல விதைப் பண்ணைகளும் துறைக்
கண்காணிப்பில் நடத்தப்படுகின்றன. குத்தகைக்கு அதிகமாக நிலங்கள்
கிடைக்கும்போது இப்பரப்பளவு அதிகப்படுத்தப்படும் விதைப்பெருக்கத்
தின் மூன்றும் நிலைப் பணியை வேளாண்மைத் துறையின் தொழில்நுட்ப
ஆலோசனையுடன் கூட்டுறவுச் சங்கங்களால் கவனித்துக் கொள்ளப்படுகின்
றன. பயிர்ச் சாகுபடியின் மேம்பட்ட முறையைப் பிரபலப்படுத்துவதற்
கென 300 செய்முறை விளக்கங்களும் நடத்தப்படுகின்றன. ½ ஏக்கர்
கொண்ட விளக்கப் பாத்தி ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையும்
வழங்கப்படுகிறது. அதேபோல், எள், ஆமணக்கு விதைப் பண்ணைகளுக்
கும் ஏற்பாடு செய்யப்பட்டு, விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்
படுகின்றன.

விதைப்பண்ணை வைத்திருப்பவர்களிடமிருந்து, வேர்க்கடலை, ஆமணக்கு
விதைகளைப் பொறுத்தவரையில் அங்காடி விலைக்கு மேல் 20 சதவீதம்
அதிகத் தொகை கொடுத்தும் கொள்முதல் செய்யப்படுகின்றன. எள்ளைப்
பொறுத்தவரையில் 5 சதவீதம் அதிகத் தொகை கொடுக்கப்படுகிறது.

**வேர்க்கடலை முனைப்புத் திட்டம்.**—முனைப்புத் திட்டத்தின் நடைமுறைகளை
உழவர்கள் அறியச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவை
யாவன :—

(1) தர விதைகளை வழங்குதல்,

(2) மேம்படுத்தப்பட்ட வேளாண்மைப் பொருளாதார நடைமுறைகள்,

(3) உரங்களைப் பயன்படுத்துதல்,

(4) பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

செய்முறை விளக்கங்களும் இத்திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்றன. தஞ்சா
வூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய
மாவட்டங்களில் பிறசேர்க்கை இரண்டில் குறிப்பிட்ட 8 பிரிவுகளில் இத்
திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ½ ஏக்கர் பரப்புள்ள நிலப்பகுதி
விளக்கப்பாத்தி ஒன்றுக்கு 50 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது.
குறுவைப் பயிர் போன்ற முன்பருவப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு
ரூ. 350 வீதமும் சம்பா போன்ற பின்பருவப் பயிர்களுக்கு ஏக்கர்
ஒன்றுக்கு ரூ. 450 வீதமும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலம் குறுகிய
காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

**நிறுவனக் கடன் உதவி.**—இத்திட்டத்தின்கீழ், 1973-74-ஆம் ஆண்டில்
240 விளக்கப் பாத்திகள் அமைப்பது நீங்கலாக, 3·65 லட்சம் ஏக்கர்
நிலம் வேர்க்கடலை பயிரிடப்படுவதன் கீழ் கொண்டுவரப்படும்.

ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக வேர்க்கடலை உற்பத்தியைப் [1973 மார்ச் 16
பெருக்கும் திட்டம்.—இது மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டமாகும்.
பரிவுரை செய்யப்பட்டுள்ள முனைப்புத் திட்ட நடைமுறைகள் அனைத்தையும்
மேற்கொள்வதன்மூலம் ஏற்றுமதி செய்யும் காரியங்களுக்காக வேர்க்
கடலை உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அந்த
நடைமுறைகளாவன :—

(1) தர விதைகளை வழங்குதல்,

(2) உரமிடுதல்,

(3) பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளல்.

ஏற்பளிக்கப்பட்ட மேம்படுத்திய வேளாண்மைப் பொருளாதார நடை
முறைகளை மேற்கொள்ளலும், கட்புல விளக்கங்களை நடத்துதலும் செங்கற்
பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில்
பிற்சேர்க்கை மூன்றில் குறிப்பிட்டுள்ள 11 பிரிவுகளில் இத்திட்டம்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்பருவப் பயிர்கள் குறித்தும், பின்
பருவப் பயிர்கள் குறித்தும் செய்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன.
இவற்றை நடத்துவதற்காக, முன்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு
ரூ. 60 வீதமும், பின்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 80
வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. முன்பருவப் பயிர்களுக்கு
எக்கர் ஒன்றுக்கு ரூ. 70 வீதமும் பின்பருவப் பயிருக்காக எக்கர்
ஒன்றுக்கு ரூ. 100 வீதமும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலமாக குறுகிய
காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன. 1973–74-ல் இத்திட்டத்தின்
கீழ் 8·58 லட்சம் எக்கர் நிலம் கொண்டுவரப்படும். 1,540 விளக்கப்
பாத்திகள் அமைக்கப்படும்.

**ஆமணக்கு செய்முறை விளக்கத் திட்டம்.**—SA 1, SA 2 போன்ற
குறுகிய காலத்தில் மிகு பயன் அளிக்கும் ஆமணக்கு ரகங்களையும்,
முனைப்புத் திட்ட நடைமுறைகளை மேற்கொள்ளுதலையும் அனைவரும்
அறியச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சேலம், தருமபுரி,
திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், கோயம்புத்தூர்
ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஒரு எக்கர்
பரப்புள்ள பாத்தி ஒன்றுக்கு ரூ. 50 என்ற உதவித் தொகையுடன்
உழவர்களின் நிலத்தில் செய்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன.
1973–74-ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ஒரு எக்கர் பரப்புள்ள 200
விளக்கப் பாத்திகள் உழவர்களின் நிலங்களில் தொடர்ந்து அமைக்கப்
படும்.

### சூரியகாந்தி

நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்குத் தேவைப்படும் சூரியகாந்தி எண்
ணெயின் அளவு 57 கிராம் (அனைத்துநாட்டு தரத்தில்) ஆகும். தற்
போதைய தேவையைச் சரிக்கட்ட 31 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள்
தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் (வேர்க்கடலை,
எள், ஆமணக்கு ஆகியவற்றின்) மொத்த அளவு சுமார் 11 லட்சம் டன்
மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. உணவு எண்ணெய்களின் அதிகரித்து
வரும் தேவையைச் சமாளிப்பதற்கென அந்த எண்ணெய்களின்



உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு அதிக எண்ணெய் தரும் கூடுதலான
எண்ணெய் வித்துக்களை நாம் நாடவேண்டியுள்ளது. சூரியகாந்தி அதிக
எண்ணெய் கொடுக்கும் வளமுடையதாகும். மேலும், யூனிட் பகுதி
ஒன்றுக்கு அது அதிக விளைச்சலைத் தரும்.

ஊட்டச்சத்துணவு நோக்கில் பார்த்தாலும், சூரியகாந்தி எண்ணெய்
பிற எண்ணெய்களைக் காட்டிலும் மேன்மையானதாகும். சூரியகாந்தி
எண்ணெய்யில் கொழுப்பும் A,B,C,K போன்ற கரையத்தக்க உயிர்ச்
சத்துக்களும் உள்ளன. சூரியகாந்தி எண்ணெய்யில் 52 சதவீதம் முதல்
62 சதவீதம் வரை "லினோலிக்" அமிலம் உள்ளது. அது கரையா
நிலையிலுள்ள கொழுப்பு அமிலமாகும். இதய நோயுள்ளவர்களுக்கு அது
ஓர் வரப்பிரசாதமாகும். "ஆர்த்தரோஸ்க்லோரோஸிஸ்" என்ற கொடிய
ரத்தவோட்ட வியாதி பரவுவதை இந்த எண்ணெய் குறைக்கிறது. நீரிழிவு
நோயைக் கட்டுப்படுத்தவும் இந்த எண்ணெய் பயன்படுகிறது. சூரியகாந்தி
எண்ணெயில் நுண்ணியிர் இயக்கமும் உள்ளது. அது சிறுநீர்க் கழி
வினைத் தூண்டுகிறது. காற்றுக் குழாய், குரல்வளை, நுரையீரல் சார்ந்த
தொற்றுகளில் கபத்தை வெளிக்கொணரும் மருந்தாகப் பயன்படுகிறது.

உற்பத்தியைப் பெருக்கவும், வீடு, தொழிற் பயன்களுக்கான உணவு
எண்ணெய்களின் அதிகரித்துவரும் தேவையை நிறைவு செய்யவும்,
1971–72 முதல் 1973–74 வரையிலான கால அளவுக்கு இம்மாநிலத்தில்
சூரியகாந்தி உற்பத்தி குறித்த செய்முறை விளக்கத் திட்டத்தைச் செயல்
படுத்த இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த நோக்கத்தைக்
கருத்திற்கொண்டு, 1971–72-ல் வெளிநாட்டு ரகத்தைச் சேர்ந்த, குறுகிய
காலத்தில் மிகுபயன் தரக்கூடிய, அதிக அளவு எண்ணெய்ச் சத்துள்ள
சூரியகாந்தி விதைகளைக் கொண்டு செய்முறை விளக்கங்கள் நடத்தப்
பட்டன.

400 எக்கர் நிலத்தில் மொத்தம் 299 பாத்திகள் அமைக்கப்பட்டன.

EC. 68415 வகை சூரியகாந்தி, தமிழ்நாட்டிற்கு தகுந்ததாக
கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, சூரிகாந்தியை 2 லட்சம் எக்கர் நிலத்
தில் பயிரிடுவதற்கான மத்திய அரசால் தொடங்கப்படும் திட்டம் ஒன்று,
ரூ. 26·175 லட்சம் மொத்தச் செலவில் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள்
நீங்கலாக மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படுவதற்காக 1972–73-ல்
தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சுமார் 0·50 லட்சம் டன் சூரியகாந்தி
விதைகளை உற்பத்தி செய்யக் கருதுகிறது. மேம்பட்ட முனைப்பு நடவடிக்கை
களைப் பின்பற்றி 800 விளக்கப் பாத்திகளும் அமைக்கப்பட்டன. இத்திட்
டத்தின் கீழ் ஒரு ஹெக்டேர் பரப்பளவுள்ள பாத்தி ஒன்றுக்கு ரூ.300 வீதம்
உழவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு எக்கருக்கு 4
கிலோகிராம் விதைகளும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும், பயிரிடு முறை
குறித்த சிறு வெளியீடு ஒன்றும் அடங்கிய சிறுபைகள் இலவசமாக
வழங்கப்படுகின்றன. அந்தப் பை ஒவ்வொன்றின் மதிப்பு ரூ. 11 ஆகும்.
இவை தவிர, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் குறுகிய
காலக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும்.

1973-74-ல் 3·75 லட்சம் எக்கர் பரப்பளவுள்ள நிலம் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். 500 செய்முறை விளக்கங்கள் நடத்தப்படும்.

## தென்னை வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் தென்னை வளர்ப்புத் திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வருகின்றன:—

(i) **தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்துதல்.**— தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை வளர்க்கும் தனிப்பட்ட நபர்கள், ஊராட்சிகள் ஆகியோருக்குத் தேவைப் படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு ஆண் டும் 8·10 லட்சம் தென்னங்கன்றுகளை வளர்க்கும் வசதியுடன் கூடிய 18 தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் பிற்சேர்க்கை நான்கில் குறிப் பிட்டுள்ள இடங்களில் தற்பொழுது இம்மாநிலத்தில் உள்ளன. உயரமான அல்லது குட்டை வகையைச் சேர்ந்த தென்னங்கன்று ஒவ்வொன்றும் ரூ. 1·50 என்ற சலுகை வீதத்திலும், "ஜாவாஜெயண்ட்" என்ற வகையைச் சேர்ந்த தென்னங்கன்று ஒவ்வொன்றும் ரூ. 1·80 என்ற சலுகை வீதத்திலும் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1973—74-ஆம் ஆண்டில் சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் மேலும் இரண்டு தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) **தமிழ்நாட்டில் தென்னை உற்பத்தியைப் பெருக்குவதற்கானத் திட்டம்.**—தென்னை வளர்ப்பை மக்களிடையே பிரபலப்படுத்தி மேம் படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட இராமப் புற பொருளாதார நடவடிக்கைகள், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரங்களைப் பயன்படுத்துவது ஆகியவற் றைக் கடைப் பிடிக்க மும்முரப் பிரச்சாரம் இம்மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு தெளிப்பானுக்கும் ரூபாய் 100 என்ற பேரளவு உதவித் தொகைக்குட்பட்டு தென்னங்கன்றுகளுக்கு மருந்து தெளிப்ப தற்குத் தகுந்த தெளிப்பான்களுக்கு 50 சதவீத உதவித் தொகை வழங் கப்படுகிறது.

இம்மாநிலத்தில் தென்னை வளர்ப்பின்கீழ் உள்ள மொத்தப் பரப்பில் கிட்டத்தட்ட 50 சதவீதம் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப் படும். ஒவ்வோர் ஆண்டும் 100 தெளிப்பான்கள் பங்கிடப்படும்.

(iii) **புதிய தென்னந் தோப்புகளை ஏற்படுத்துதல்.**—தென்னை வளர்ப்பின் கீழ் அதிகப் பரப்பைக் கொண்டு வரும் நோக்கத்துடன், நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப் பட்டு வருகிறது. ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 3,000 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 300 வீதம் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது. இக்கடன்கள் பதினோராவது ஆண்டிலிருந்து வட்டியுடன் ஐந்து சம ஆண்டுத் தவணை களில் திரும்ப வசூலிக்கப்படத்தக்கவையாகும். நீலகிரி, கிழக்கு இராம நாதபுரம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம்மாநிலம் முழுவதும் இத் திறைவேற்றப்படுகிறது.



1973-74-ஆம் ஆண்டில் 800 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்தில் இத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(iv) **கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ப்புத் திட்டம்.** —நிலமற்ற ஏழைக் குடும்பங்களையும் இலங்கை அகதிகளையும் குடியமர்த்துவது இத் திட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும். இத் திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் 3 எக்கர் முதல் 5 எக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுக்கப்படுகிறது. கடன் உதவி அளிப்பதன் மூலம் அவர்கள் தென்னை பயிரிடுவதை மேற்கொள்ளச் செய்யப்படுகிறது.

1973-74-ஆம் ஆண்டில் இத் திட்டம் தொடர்ந்து செயல்படும்.

இத் திட்டத்தின்கீழ் செயல்புரியும் தென்னங்கன்று வளர்ப்புப் பண் ணைகள் ஆண்டு தோறும் 1·20 லட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்யும்.

(v) **முன்னோடி விளக்கப்பாத்திகள் (Pilot Demonstration Plots) அமைப்பதற்கான திட்டம்.**—நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதியில் ஒவ்வொன்றும் ஒரு ஹெக்டேர் பரப்பளவுள்ள 900 விளக்கப் பாத்திகள் அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ், தென்னை வளர்ப்பவர்களுக்கு உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், தெளிப்பான்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காகும் செல வுக்காக உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

1973-74-ல் 200 விளக்கப்பாத்திகள் அமைக்கப்படும்.

(vi) **ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம்.**—தென்னங்கன்றுகளைப் கருந்தலை கம்பளிப் புழு தாக்குவதால் ஏற்படும் பயிர் நோயைக் கட்டுப்படுத்து வதற்கென ஒட்டுண்ணிகளைப் பெருமளவில் வளர்த்து, நோயினால் பாதிக் கப்பட்ட தென்னந் தோப்புகளில் அவற்றை இலவசமாக விடுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். காஞ்சிபுரம், குடியாத்தம், இராமநாத புரம், உடன்குடி, நாகர்கோயில், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தருமபுரி ஆகிய இடங்களில் 11 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் உள்ளன. 1973-74-ல் கூடுதலாகச் சில நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(vii) **திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் தென்னை, முந்திரி வளர்ப்பு.**—சாகுபடி செய்யத்தக்க தரிசு நிலங்களில் தென்னை வளர்ப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் தென்னங் கன்றுகளை வளர்த்து வழங்குவதே இத் திட்டத்தின் நோக்க மாகும். முந்திரி, தென்னைப் பயிர்களை வளர்ப்பதற்காக எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 370 நீண்ட காலக் கடன் வழங்கப்படுகிறது. 1973-74-ல் 1,000 எக்கர் பரப்பில் முந்திரி பயிரிடவும், 750 எக்கர் பரப்பில் தென்னை பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தென்னங் கன்றுகளின் வகை (மத்திய அரசு தொடங்கிய திட்டம்).

ஆண்டு ஒன்றுக்கு 5,000 கலப்பினத் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

வேப்பங்குளம் வட்டாரத் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உயரமான, குட்டையான, கலப்பினத் தென்னங் கன்றுகள் பயிரடப்பட்டு வருகின்றன. 1973-74-ல் 5,000 தென்னங்கன்றுகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

## முந்திரி

முந்திரி, இம்மாநிலத்திற்கு டாலர் வசதியை ஈட்டித்தரும் முக்கிய மான வணிகப் பயிராகும். தற்போது 2,09,103 ஏக்கரில் (சாதாரண பகுதிகள் 1,36,468 கூட்டாட்சிப் பகுதிகள் 72,635 ஏக்கர்) முந்திரி பயிரிடப் படுகிறது. இப்பகுதிகளில் 21,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் முந்திரி கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் கீழ்க்காணும் முந்திரி வளர்ப்புத் திட்டங்கள் செயலில் உள்ளன :—

(a) தமிழ்நாட்டில் முந்திரி வளர்ப்புத் திட்டம்.

(b) கிழக்கு இராமநாதபுரத்தில் முந்திரித் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டம்.

(c) திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் முந்திரி, தென்னைத் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டம்.

(d) முந்திரி பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் (மத்திய அரசு தொடங்கிய திட்டம்)—

(i) முந்திரி பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள்.

(ii) முந்திரி விளக்கப் பாத்திகளை அமைத்தல்.

ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 3,000 என்கிற உயர்ந்த அளவுக்குட்
படடு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 150 வீதம் நீண்டகாலக் கடன்கள்
வழங்கி, ஆண்டு ஒன்றுக்கு 5,000 ஏக்கர் வீதம் நான்காம் ஐந்தாண்டுத்
திட்டக் காலத்தில் 25,000 ஏக்கரில் முந்திரிச் சாகுபடியை நீடிப்பதே
இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973-74 ஆம் ஆண்டில் 5,000 ஏக்கர்
பரப்பில் முந்திரிச் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் 3,000 ஏக்கரிலும், திருச்சி மாவட்டத்தில்
2,916 ஏக்கரிலுமாக மொத்தம் 5,916 ஏக்கர் நிலத்தில் பயிர்ப்
பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், தென் ஆற்காடு
மாவட்டம், தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், செங்கற்பட்டு ஆகிய
மாவட்டங்களில் 310 விளக்கப்பாத்திகளை அமைப்பதும், முந்திரி வளர்ப்பு
முனைப்புத் திட்டத்தின் (இது 1970-71-ல் தொடங்கப்பட்டது) நோக்க
மாகும். பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ், முந்திரி வளர்ப்பவர்
களுக்கு இரசாயன மருந்து வாங்குவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25
உதவித் தொகை வழங்கப்படுகிறது. விளக்கப்பாத்திகளின் கீழ், 2 ஏக்க
ருக்கு ரூபாய் 300 உதவித் தொகை இந்திய அரசால் வழங்கப்படுகிறது.
1973-74 ஆம் ஆண்டில் 7,900 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ப்பாதுகாப்பு
நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம்
உற்பத்தி 20 சதவீதம் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



## பாக்கு.

இம் மாநிலத்தில் சுமார் 4,500 ஏக்கரில் பாக்கு பயிரிடப்படுகின்றது.
பாக்கு உற்பத்தித் திட்டம் ஒன்று செயற்பட்டு வருகின்றது. இத திட்டத்
தின்கீழ், சுமார் 100 ஏக்கரில் துறையினைச் சேர்ந்த நாற்றுப் பண்ணைகள்
மூலம் வழங்கப்பட்ட உயர்ந்த ரக நாற்றுகளைக் கொண்டு பாக்கு
பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது பாக்கு பயிரிடுவோர் இனிமேல் பாக்கு
பயிரிடும் வாய்ப்புள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய,
வட்டார அடிப்படையில் குற்றாலம், கன்னியாகுமரி, கல்லார், கூடலூர்,
பெரியகுளம் ஆகிய இடங்களில் ஐந்து நாற்றுப் பண்ணைகளை அமைத்து,
தரமான பாக்கு நாற்றுகளை வளர்த்து வழங்குவது இத்திட்டத்தின்
நோக்கமாகும்.

பம்பாய் வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவியுடன்,
பெத்தநாய்க்கன் பாளையத்தில் பாக்கு பயிரிடும் திட்டம் ஒன்று நடை
பெற்று வருகின்றது.

பம்பாய் வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவியுடன் O. V. C.
மேட்டுப்பாளையத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 245 ஏக்கரில் பாக்கு
கால்வாய்க்கு அருகில் உள்ள பிற வட்டாரங்களிலும் இத்திட்டத்தின் கீழ், பயிரிடு
பயிரிடும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. 5,000 வழங்கப்படுகின்றது.
வோர் ஒவ்வொரு ஏக்கருக்கும் கடனுதவி ரூபாய்

## பருத்தி

தமிழ்நாட்டின் பயிர்களில் பருத்தி இன்றியமையாத வாணிகப்
பயிராகும். சுமார் 10 லட்சம் ஏக்கரில் பருத்தி பயிரிடப்படுகின்றது.
இம்மாநிலத்தில் உள்ள ஆலைகளின் தேவையை நிறைவு செய்ய குறைந்
தது 7 லட்சம் பஞ்சுப் பொதிகள் வேண்டியுள்ளது. ஆனால், இம்
மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுவதோ 4 லட்சம் பொதிகளேயாகும்.
இக்கடுமையான பற்றாக் குறை ஆலைகளின் பணிகளைப் பாதிப்பதை
அரசு உணர்ந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பருத்தி
பயிரிடும் முழுப் பரப்பையும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள
கோயில் பட்டியில் மானாவாரிப் பகுதி முழுமையையும் மும்முரா
வேளாண்மை மேம்பாட்டுத் திட்டக் கண்ணோட்டத்துடன் பருத்திச் சாகு
படியின் கீழ்க் கொண்டுவந்து பருத்தி உற்பத்தியை 4 லட்சம் பொதி
யிலிருந்து 8 லட்சம் பொதியாக உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்
கொள்ளப்படுகின்றன. சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை,
இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் முனைப்புத் திட்டப்
பகுதிகளில், 82,000 ஹெக்டேரில் பருத்தி சாகுபடிக்காகப் பல்வேறு
அறிவியல் நுட்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு இலக்கினை எய்தவும்
திட்டமிடப்பட்டுள்ளது.

பின்வரும் திட்டங்கள் இம்மாநிலத்தில் செயற்பட்டு வருகின்றன:—

| திட்டத்தின் பெயர். | திட்ட இலக்கிட்டின் கீழ் வரும் பரப்பளவு. |
|---|---|
| பருத்தி முனைப்புத் திட்டம் .. .. .. | 2·05 லட்சம் ஏக்கர். |
| ஒருங்கிணைக்கப்பட்ட பருத்தி வளர்ச்சித் திட்டம். | 3·87 லட்சம் ஏக்கர். |
| முழுமுர பருத்தி வளர்ச்சிக்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம். | 2·50 லட்சம் ஏக்கர். |

1972–73 ஆம் ஆண்டிற்காக இலக்கிடப்பெற்ற பருத்தி உற்பத்தியின் அளவு, ஒவ்வொன்றும் 180 கிலோ கிராம் கொண்ட 5·30 லட்சம் பொதி களாகும்.

1973–74-ல் ஒவ்வொன்றும் 180 கிலோகிராம் கொண்ட 5·35 லட்சம் பொதிகள் உற்பத்தி செய்ய மேற்குறிப்பிட்ட திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## சணல்-புளிச்சை (Mesta) வளர்ச்சி திட்டம் முன்னோடித் திட்ட ஆராய்ச்சி சோதனைகள்

இத் திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டதாகும். பொருத்தமான பகுதிகளில் சணல்–புளிச்சை சாகுபடியைக் கொண்டுவருவதற்கான சாத்தியக் கூறுபற்றி ஆராய்ச்சி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1971–72-ல் தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன; தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

இத் திட்டத்தின்கீழ் சணல்-புளிச்சை ஆகியவை ஒவ்வொன்றிற்குமாக 50 சோதனைப் பாத்திகள் போடப்பட்டுள்ளன. விதைகளும் பயிரிடு பொருட்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஊற வைப்பதற்கான தொட்டிகள், பலகைகள் ஆகியவை உழவர்களுக்கு வகைசெய்து தரப் படுகின்றன. தவிர, முழுமுர முறைகளையும் பின்பற்றும்படித் தெரிந் தெடுக்கப்பட்ட உழவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. துறையால் தொழில்நுட்ப ஆலோசனையும் வழிமுறையும் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்திற்கு 1971–72-ல் ரூ. 30,785-ம் 1972-73-ல் ரூ. 46,500-ம் செலவானது.

## புகையிலை அபிவிருத்தித் திட்டம்

சுருட்டுப் புகையிலை, தாம்பூலப் புகையிலை ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, புகையிலை வளர்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஏக்கர் ஒன்றில் புகையிலை விளைச்சலை அதிகரிக்கச் செய்ய, கோயம்புத்தூர் மாவட்டத்திலும் புகையிலை முனைப்புத்



திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சுருட்டுப் புகையிலைக் காகச் சோதனைத் திட்டமொன்றும், புகையூட்டிப் பக்குவப் படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலை வளர்ச்சித் திட்டமும் ஒசூர்ப் பகுதியில் செயல் படுகின்றன.

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போதுள்ள முனைப்புத் திட்டத்தின்கீழ்வரும் நிலப் பரப்பினை 6,000 ஏக்கராக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1973–74-ல் பின்வரும் பரப்பளவில் புகையிலை பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது :

| | |
|---|---|
| புகையூட்டிப் பக்குவப் படுத்தப்பட்ட புகையிலைத் (P. C. V.) திட்டம். | 245 ஹெக்டேர்கள். |
| புகையிலை முனைப்புத் திட்டம் .. .. .. | 8,090 ஹெக்டேர்கள். |
| சுருட்டுப் புகையிலை .. .. .. .. | 170 ஹெக்டேர்கள். |
| ஆராய்ச்சிச் சோதனைகள் .. .. .. | 20 எண்ணிக்கைகள். |

## புகையிலை வளர்ச்சிக்கான அடங்கல் திட்டம்

| | |
|---|---|
| (i) மேம்பட்ட முறை சாகுபடி .. .. | 12,000 ஹெக்டேர்கள். |
| (ii) செய்முறை விளக்கப் பாத்திகள் .. .. | 40 எண்ணிக்கை. |

மேற்கண்ட திட்டங்களைச் செயற்படுத்துவதனால், உற்பத்தி 24,000 மெட்ரிக் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கரும்பு வளர்ச்சித் திட்டம்

இத் திட்டத்தின் நோக்கம், உழவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு முழுமுர பிரசாரத்தை மேற்கொள்வதாகும். நிலப்பரப்பு முழுமையும் உறுதியாகப் பலன்தரக்கூடிய தூய, வளமிகுந்த, நோயற்ற குறுகியகால கரும்புப் பயிர் நிறைந்திருக்கும் கருத்தோடு நோய்த்தடுப்புக்காப்பு, முதல் நிலை, இரண்டாம் நிலை நாற்றங்கால்கள் பயிரிடுவோரின் நிலவுடைமைகளில் வளர்க்கப்படுகின்றன. அத்தகைய குறுகிய காலப் பயிர் நாற்றுக்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும்பொருட்டு, கரும்பு நாற்றுப் பண்ணைகள் வைத்துள்ள கரும்பு பயிரிடுவோருக்கும், அந்தப் பண்ணைகளிலிருந்து நாற்றுக்களைத் தங்கள் நிலங்களுக்கு எடுத்துச் சென்று பயிரிடும் உழவர் களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் செயற்படுத்தப் பட்டதன் விளைவாக, கரும்பு பயிரிடப்படும் நிலம் முழுமையும் மேம்படுத்தப் பட்ட கோயம்புத்தூர் ரகம் பயிரிடப்படுகின்றது. உரமிடுவது குறித்த செய் முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. செய்முறை விளக்கப் பாத்தி ஒவ்வொன்றிற்கும் உதவித் தொகை ரூ. 50 அளிக்கப்படுகிறது. நியாயமான வாடகைக் கட்டணங்களில், கையால் இயக்கப்படுவனவும், மின்சார சக்தியால் இயங்குபவையுமான தெளிப்பான்கள் உழவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யப்படுகின்றன. காஞ்சீபுரம், ஆம்பூர்,

கோபிச்செட்டிப்பாளையம், லால்குடி, மேலூர், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி
ஆகிய இடங்களிலுள்ள ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களில் உயிரியல் கட்டுப்
பாட்டின்கீழ் ஒட்டுண்ணிகள் வளர்க்கப்பட்டு வழங்கப்படுகின்றன. கோடை
காலங்களில் நீர் பற்றாக்குறையினால், கரும்பு உற்பத்தியில் தரமும்,
அளவும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, கரும்பு பயிரிடுவோர், பல்வேறு
மாவட்டங்களிலும் கிணறுகள் தோண்டுவதற்காக கரும்பு வளர்ச்சித்
திட்டத்தின்கீழ் அரசின் விரைவுத் திட்டத்தினைப் பயன்படுத்திக்கொண்டு,
கோடைக்காலங்களில் முறையாக நீர்பாய்ச்சும்படி ஆலோசனை கூறப்பட்
டுள்ளனர். அதிக விளைச்சலைத் தரும் ரகங்களைப் பயிரிட ஊக்குவித்து'
அதனால் உற்பத்தியைப் பெருக்க, மாநில, வட்ட, ஆலைகள் அளவில்
போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வோராண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.
பல்வேறுபட்ட ஆலை மண்டலங்களில், பல்வேறு ரக கரும்பு பயிடுவதற்
கான தகுதிக் கூற்றினைக் கண்டறியவும் ஒவ்வொரு பகுதிக்கும் சிறந்த
வேளாண்மை முறைகளை வகுக்கவும் கரும்பு மண்டலப் பண்ணைகள்
(Sugar Cane Zone Farms) நடத்தப்படுகின்றன. தேவையான நிலம்,
ஏனைய வசதிகளையும் சர்க்கரை ஆலைகள் தருகின்றன. சோதனைகளை
நடத்துவதற்குத் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வகை
செய்கின்றது. பணியாளர்க்கு ஆகும் செலவினை அரசு ஏற்கின்றது.
பயிரிடுவதற்கு ஆகும் செலவினை ஆலைகள் ஏற்கின்றன. நான்காவது
ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கரும்பு பயிரிடப்படும் நிலப்பரப்பினை
2·3 லட்சம் ஏக்கரிலிருந்து (1968–69 ஆம் ஆண்டிற்கு உறுதியளிக்கப்பட்ட
அளவு) 1973–74 ஆம் ஆண்டு இறுதிக்குள் 2·60 லட்சம் ஏக்கராக
உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வெல்லத்தின் விலை மிகவும்
உயர்ந்திருந்ததாலும் ஏனைய சாதகமான சூழ்நிலைகளின் காரணமாகவும்
1968–69-ல் கரும்பு பயிரிடப்படும் நிலப் பரப்பு இயல்புக்கு அதிகமாக
4·03 லட்சமாக உயர்ந்தது. 1972–73-ல் மதிப்பிடப்பட்ட நிலப்பரப்பு
சுமார் 2·98 எக்கராகும். 1973–74 ஆம் ஆண்டு இறுதியில், மதிப்பிடப்
பட்டுள்ள நிலப்பரப்பு இலக்கிடப்பட்ட நிலப் பரப்பு 2·60 லட்சம் ஏக்கருக்கு
மாறாக, சுமார் 3·20 லட்சம் ஏக்கராக இருக்குமென எதிர்பார்க்கப்
படுகின்றது.

நான்காவது, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உற்பத்தியைப் பொறுத்த
மட்டில் கரும்பு வெல்ல அளவில் 8·90 லட்சம் டன்னிலிருந்து 1973–74
இறுதியில் 11 லட்சம் டன்னாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–
73 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட இலக்கு 9·91 லட்சம் டன்னிற்கு
மாறாக கரும்பு வெல்ல அளவில் மதிப்பிடப்பட்ட உற்பத்தி 9·96 லட்சம்
டன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1973–74 ஆம் ஆண்டு



இறுதியில் கரும்பு வெல்ல அளவு இலக்கான 11 லட்சம் டன் உற்பத்தி
செய்யப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழான
இலக்குகளும், சாதனைகளும் பின்வருமாறு :—

| ஆண்டு. | இலக்கு. | சாதனைகள். | உற்பத்தியான வெல்லத்தின் அளவு. |
|---|---|---|---|
| | (லட்சம் ஏக்கரில்.) | | (லட்சம் டன்களில்.) |
| 1970–71 .. .. | 2·37 | 2·42 | 11·43 |
| 1971–72 .. .. | 2·48 | 2·48 | 9·91 |
| 1972–73 .. .. | 2·54 | 2·98 | 9·96 |
| 1973–74 .. .. | 2·60 | 3·20 (எதிர்பார்க்கப் படுகிறது.) | 11·00 |

1973–74-ஆம் ஆண்டிற்கான இலக்குகள் பின்வருமாறு :—

(i) கரும்பு பயிரிடப்படும் பரப்பினைப் பெருக்குதல் .. 3·20 லட்சம் ஏக்கர்

(ii) நிலத்தைச் செவ்வனே பண்படுத்தல் .. .. 1·43 லட்சம் ஏக்கர்.

(iii) தெரிந்தெடுக்கப்பட்டவற்றைப் பயிரிடுதல் .. 1·32 லட்சம் ஏக்கர்.

(iv) உரிய அளவு உரமிடுதல் .. .. .. 2·14 லட்சம் ஏக்கர்.

(v) பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் .. .. 2·06 லட்சம் ஏக்கர்.

(vi) முனைப்புத் திட்டம் .. .. .. .. 0·52 லட்சம் ஏக்கர்.

(vii) கரும்பு உற்பத்தி லட்சம் டன்னில் .. .. 112·00 லட்சம் ஏக்கர்.

(viii) வெல்ல அளவில் உற்பத்தி லட்சம் டன்னில் .. 11·00 லட்சம் ஏக்கர்.

1971–72 சர்க்கரை உற்பத்திக் காலத்தில், கரும்புக்கான குறைந்த
விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 73·70 ஆக வரையறுக்கப்பட்டது.
சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தினரைக் கூட்டி குறைந்த விலையை
மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 85 ஆக உயர்த்துமாறு இணக்கமாக
அரசு கேட்டுக்கொண்டது.

2. 1972-73 ஆம் ஆண்டிற்குக் கரும்பிற்கான குறைந்த விலையை
உயர்த்துமாறு அரசு பரிவுரை செய்துள்ளது. கரும்பு விலையை நிர்ண
யிப்பதில் விகிதாச்சாரத்தைப் பின்பற்றும்படி தென்னிந்திய சர்க்கரை
ஆலைகள் வாதாடுகின்றன. 1972—73 கரும்பு பருவத்திற்கான விலையை
நிர்ணயிக்கும்போது, இக்கருத்துக்கள் இந்திய அரசால் ஏற்றுக்

கொள்ளப்பட்டன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நேர்வில் ஆலைகளாற் கொடுக்கப்படும் குறைந்த விலை, மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 90 அல்லது அரசால் நிர்ணயிக்கப்படும் விலை, இவற்றில் எது அதிகமோ அவ்விலையாகும்.

3. 1971-72 கரும்புப் பயிர் காலத்தில், கரும்புப் பயிரிடுவோருக்கு, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைக் காட்டிலும் அதிக விலையினைக் கொடுத்தன. 1972-73 கரும்புப் பயிர் காலத்தில்கூட, ஆலைகளுள் செயற்படுதன்மையைக் கவனித்த பிறகு கரும்பு பயிரிடுவோருக்கு விலை அதிகமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கரும்பு தொழிற்சாலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்

வயல்களிலிருந்து கரும்பைத் தொழிற்சாலைகளுக்கு எளிதாகவும், விரைவாகவும் எடுத்துச் செல்வதற்குச் சர்க்கரைத் தொழிற்சாலைப் பகுதி களிலும், அவற்றைச் சுற்றிலும் உள்ள சாலைகளை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட கரும்பு செஸ் நிதியி லிருந்து ஒரு பகுதி ஒவ்வொராண்டும் இதற்காகச் செலவு செய்யப்படு கின்றது. 1972–73 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உயர் த்தப்பட்ட ஒதுக்கீடு ரூ. 50 லட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, கரும்பு தொழிற்சாலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக சிறப்புப் பொறியியல் உட்குழு ஒன்று செயல்படுகின்றது. பவானி, பண்ணுருட்டி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய இடங்கள் இக்குழுவிற்குக் கிளைகள் உள்ளன. கரும்பு வளர்ச்சியின்கீழ் பணிகளையும், ஏனைய சாலைப் பணிகளையும் கவனிப்பதற்காக, காவிரிப் பாசனப் பகுதியின்கீழ் (Cauvery Command Complex) தனியானதொரு வட்டத்தை அமைப்பது குறித்து, அரசு தனியாகப் பரிசீலனை செய்து வருகிறது. 1972–73-ல் பல்வேறு சர்க்கரைத் தொழிற்சாலைப் பகுதிகளில் சாலைப் பணிகள் நிறை வேற்றப்படுவதற்காக ரூ. 265·68 லட்சம் மதிப்பீட்டுச் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1972–73-ற்கான செலவு ரூ. 50 லட்சமாக வரவு-செலவுத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் சாலைப்பணிகள், தங்கு தடையற்ற கரும்பு போக்குவரத்துக்கு உதவும் வகையில் நல்ல நிலையில் உள்ளன என்பதை உறுதி செய்யும் முறையில், கரும்புத் தொழிற்சாலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும். சாலைப் பணிகளைப் பேணும் பொறுப்பினை, அரசு, மாநில நெடுஞ்சாலைகள் துறையிடம் ஒப் படைத்துள்ளது. அதற்காகும் செலவு கரும்பு செஸ் நிதியிலிருந்து சரிக்கட்டப்படும். 1973–74 ஆம் ஆண்டிற்காக, கரும்புத் தொழிற்சாலைப் பகுதிச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1973–74 ஆம் ஆண்டின் இலக்கு 40 கிலோ மீட்டர் சாலைகளை அமைப்பதும் மேம்படுத்துவதுமாகும்.



## காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்

மேம்படுத்தப்பட்ட முனைப்பு முறைகளைக் கையாண்டு, காய்கறி உற்பத் தியை பெருக்குவதும், காய்கறிப் பயிரின்கீழ் கூடுதலாகக் கணிசமான அளவு நிலப்பரப்பைக் கொண்டுவருவதும் இத்திட்டத்தின் நோக்கம். ஒவ்வொருவருக்கும் உயரளவு ரூ. 240 என்ற நிபந்தனைக்குட்பட்டு, ஒரு பகுதி விதை, உரம் போன்றவையாகவும் ஒரு பகுதி ரொக்கமாகவும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120 குறுகியக் காலக் கடன் வழங்கப்படுகின்றது. இத் திட்டம் 1973-74-லும் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இத் திட் டத்தின் கீழ், 1973–74-ல், 3,200 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

## நகர்ப் பகுதித் திட்டம்

வேளாண்மை மானியத் திட்டத்தின் கீழ், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு வழங்கப்படுவது போல நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள உழவர் களுக்கும் சலுகைகள் வழங்க வகை செய்வதே இத் திட்டத்தின் நோக்க மாகும். இத்திட்டத்தின்கீழ், பின்வரும் சலுகைகள் வழங்கப் படுகின்றன :—

| இனம். | சலுகை விலையில் விற்பனை. |
|---|---|
| 1 காய்கறி விதைகள், பழச் செடிகள் .. | காய்கறி விதைகள் 50 சதவீதமும், தென்னங் கன்றுகள் உட்பட பழச் செடிகள் 25 சதவீத மும் சலுகை விலையில் வழங் கப்படுகின்றது. |
| 2 தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கருவிகள்.— | |
| (1) மண்வெட்டிகள் .. .. | 50 சதவீத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. |
| (2) களைக் கொட்டுகள் .. .. | |
| (3) பரம்புகள் .. .. .. | |
| (4) வெட்டுக் கத்தரிகள் .. | |
| (5) பூவாளிகள் .. .. | |

குறிப்பு—1. பொது நிறுவனங்களுக்கு முழுத் தொகுதியும் வழங் கப்படும்.

2. தனிப்பட்டவர்களுக்கு ஒரு கருவி மட்டும் வழங்கப்படும்.

இத் திட்டம் 84 நகராட்சிகளிலும் இந்த நகராட்சி, மாநகராட்சி எல்லை களிலுள்ள பள்ளிகள், அனாதை இல்லங்கள் முதலிய பொது நிறு வனங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## உருளைக் கிழங்கு பயிர் மேம்பாட்டுத் திட்டம்

கோடைக்கானலிலும், தருமபுரி மாவட்டம் ஒசூரிலும் உருளைக் கிழங்கு பயிரிடும் நிலப் பரப்பைப் பெருக்குவது இத் திட்டத்தின் நோக்க மாகும், ஹோசூரில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்குத் துறையின் மூலமாக எக்கர் ஒன்றுக்கு ரூ. 750-ம், கோடைக்கானல் மலைப்பகுதியில் பயிரிடுபவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக எக்கர் ஒன்றுக்கு ரூ. 900-மும் கடனுதவி வழங்கப்படுகின்றன. பயிரிடுவோருக்குத் துறை யினைச் சேர்ந்த பணியாளர்கள் தொழில் நுட்ப உதவிகள் அளிக்கின்றனர்.

தற்போது, "ரைபிள் ரேஞ்ச்" என்னும் இடத்தில் ஒன்றும் மதுரை மாவட்ட, கோடைக்கானல் கோட்டம் வில்பட்டியில் ஒன்றுமாக இரண்டு அரசு விதைப் பண்ணைகள் உருளைக்கிழங்கு விதைகளைப் பெருக்குவதற்காக உள்ளன. ரூ. 4·00 லட்சம் செலவில் உருளைக்கிழங்குப் பயிரின்கீழ் 5,200 எக்கர் நிலப்பரப்பினைக் கொண்டு வருவதனால் 1973–74-ம் ஆண்டிலும் இத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

### தரவிதைகளும், 1973–74-ம் ஆண்டிற்கு அரசு விதைப் பண்ணைகளைத் தொடங்குதலும்

வேளாண்மை உற்பத்தி பெருக பாசனம், உரம், பயிர்ப்பாதுகாப்பு போன்ற பயிரிடு பொருட்கள் இன்றியமையாதவையாயிருப்பது போலவே தரவிதைகளும் இன்றியமையாதவையாகும். அரசு நடத்தும் அரசு விதைப் பண்ணைகளில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை விதைகள், இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளில் பெருக்கப்படுகின்றன. தனியார் பண்ணை களில் பதிவு செய்து கொண்ட பயிரிடுவோர்களாலும் மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழும், அவர்களது ஆலோசனையின் மேலும் தரவிதைகள் பெருக்கப்படுகின்றன. அரசு விதைப் பண்ணை களில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்வதற்காகத் தேவைப்படும் மூல விதைகள் அரசினால் நடத்தப்படும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வழங்கப்படுகின்றன. தற்போது இம் மாநிலத்தில் குடுமியாமலையிலுள்ள அண்ணா பண்ணை உட்பட பிற் சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ள 55 அரசு விதைப் பண்ணைகள் செயற்பட்டு வருகின்றன. விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் அடிப்படை அல்லது ஆரம்ப விதைகள் உற்பத்தி இலக்கினை அரசு விதைப் பண்ணைகள் எய்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

குடுமியாமலை அண்ணா பண்ணையில் விதைகளைத் தரப்படுத்தும் பிரிவு ஒன்று அமைக்கும் பணி முடியுந்தறுவாயில் உள்ளது. 1972–73-ல் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.. சாக்கோட்டையில் விதை களைத் தரப்படுத்தும் மற்றொரு பிரிவு ஒன்று அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அது 1973–74-ல் தான் செயற்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. "யூனிசெஃப்" (UNICEF) திட்டத்தின்கீழ், காய்கறிப் பயிர் விதைகளைப் பக்குவப்படுத்த விதைப் பக்குவப்படுத்தும் பிரிவுகள் இரண்டினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



**தர விதை வழங்கும் திட்டம்.**—நெல், சிறு தானியங்களின் சான்றளிக் கப்பட்ட விதைகளைப் பெருக்கி, வழங்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும். இரண்டாம் நிலை விதைகளைக் குடியானவர்களுக்கு வழங்குவதற்காக, அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் அடிப்படை விதைகள் இரண்டாம் நிலை விதைகளாகப் பெருக்கப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பயிரிடுவோருக்கு வழங்கப்படுகின்றன. இரண்டாம் நிலை விதைப்பண்ணை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் விதைகள் செய்முறைப்படுத்தப்பட்டு, குடியானவர்களுக்கு அவை சான்றளிக்கப்பட்ட விதைகளாக விற்கப்படு கின்றன. இந்த விதைகள் மூலம் திட்டமிடப்பட்ட பகுதியை இத் திட்டத் தின் கீழ் கொண்டு வரப்படுகின்றது. இத் திட்டத்தின்கீழ், மூன்றாண்டு களுக்கொருமுறை மாறி மாறி இம்மாநிலத்திலுள்ள மொத்த விளைச்சல் பகுதியில் 1/3 பகுதியில் தர விதைகள் விதைக்கப்படும். மேற் சொன்ன பகுதியின் 1/3 பகுதியில் மாநில வேளாண்மைத் துறை வழங்கும் விதைகள் விதைக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 2/3 பகுதி யில் உழவர்கள் தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொள்கிற விதை கள் பயிரிடப்படும். 1973–74-ல் பின்வரும் அளவுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது :—

| | இலக்கு (டன்னில்.) |
|---|---|
| நெல் முதல் நிலை .. .. .. .. .. | 2,780 |
| நெல் இரண்டாம் நிலை .. .. .. .. | 41,700 |
| சிறுதானியங்கள் முதல் நிலை .. .. .. .. | 60 |
| சிறு தானியங்கள் இரண்டாம் நிலை .. .. .. .. | 1,528 |

**விதைகளின் தரம் பற்றி சான்றளிக்கும் திட்டம்.**—குடியானவர் களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத் துடன், 1966-ம் ஆண்டு விதைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்திய அரசு, வெவ்வேறு மாநிலங்களுக்குச் சாகுபடி செய்யும் பயிர்களின் முக்கிய மான ரகங்களை அறிவிக்கிறது.

வேளாண்மைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் விதைகள் தரம் குறித்துச் சான்றளிக்கும் நிறுவனம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இது 1–4–1970 முதற்கொண்டு செயல்படத் தொடங்கி யது. சான்றளிக்கும் பணியாளர்கள் விதை உற்பத்தி செய்யும் பகுதி களுக்கு மூன்று முதல் நான்கு முறை சென்று, அப்பயிரில் அயல் ரகங்கள் கலக்காமல் உள்ளதா என்று சோதிப்பார். விதைகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, அறுவடை, உலரவைத்தல், சுத்தப்படுத்தல், சலித்தல், மூட்டைகளில் கட்டுதல் ஆகிய நடைமுறை களைச் சான்றளிக்கும் பணியாளர்கள் மேற்பார்வையிடுகிறார்கள்.

1972, டிசம்பர் வரை இத்திட்டத்தின்கீழ் 6,466 எக்கர் நிலப்பரப்பு கொண்டு வரப்பட்டுள்ளது.

1972-73-ல் சான்றளிக்கப்படவிருக்கிற திட்டமிட்ட பகுதியின் பரப்
பளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

நெல்—3,000 எக்கர்.

பருத்தி—6,000 எக்கர்.

கலப்பினச் சிறு தானியங்கள்—3,000 எக்கர்.

**விதைப் பரிசோதனை.**—கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் மற்
றொன்றுமாக இம் மாநிலத்தில் இரண்டு விதைப் பரிசோதனை ஆய்வுக்
கூடங்கள் உள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொன்றும், ஓராண்டில்
10,000 மாதிரிகளைச் சோதனை செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.
1972 டிசம்பர் முடிய 9,161 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## இரசாயன உரங்கள்.

ஆதாயமளிக்கத் தக்க வகையில் பயிர்கள் விளைவிப்பதற்கு இரசாயன
உரங்கள் இன்றியமையாதனவாகும். மிகுபயன் தரும் தானிய ரகங்கள்
பயிரிடும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்த பிறகு, இரசாயன
உரங்களைப் பயன்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உள்
நாட்டு உர உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த இரசாயன உரத்தின்
மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்தியதன் காரணமாக மத்திய உரக் களஞ்
சியம், இறக்குமதியாகும் உரங்களை மட்டும் பங்கீடு செய்து வருகிறது.

2. பல்வேறு இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது படிப்படியாகப்
பெருகி வருகிறது என்பது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து
தெரிய வருகிறது:—

| ஆண்டு. | பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்கள். | | |
|---|---|---|---|
| | நைட்ரஜன். | பாஸ்பேட். | பொட்டாஷ். |
| (1) | (2) | (3) | (4) |
| | (லட்சம் டன்களில்.) | | |
| 1968–69 .. .. | 1·13 | 0·35 | 0·31 |
| 1969–70 .. .. | 1·48 | 0·42 | 0·33 |
| 1970–71 .. .. | 1·73 | 0·72 | 0·51 |
| 1971–72 .. .. | 2·14 | 0·71 | 0·81 |



அமோனியம் சல்பேட், யூரியா போன்ற இரசாயன உரங்கள் இறக்குமதி
யின் மீது கட்டுப்பாடுகள் விதித்ததன் காரணமாக, நாடு முழுவதும்
உரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. தவிர, உள் நாட்டிலும் இந்த உரங்கள்
உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இந்திய அரசிடமிருந்து, சிறப்பு
நேர்வாக, உரம் பெறவும் இவ்வரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.
ஆயினும், இம் மாநிலத்திற்குத் தேவையான 2.74 லட்சம் டன்
நைட்ரஜனுக்குப் பதிலாக 1972 ஏப்ரல் முதல் 1973 ஜனவரி வரை
·48 லட்சம் டன் நைட்ரஜன் உரம் வழங்கப்பட்டது.

உரங்கள் போதிய இருப்பு இல்லாததன் காரணமாக, பருவக் காலத்தில்,
நைட்ரஜன் உரம் பயன்படுத்தும் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது.

3. பெங்களூரில், 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி 23, 24 ஆம் நாட்களில்
நடந்த உர மண்டல மாநாட்டில் 1973–74 ஆம் ஆண்டுக்கான உரத்தேவை
பற்றி மதிப்பிடப்பட்டது. முன் பருவத்திற்கு (1973 பிப்ரவரி முதல்
1973 ஜூலை வரை) நைட்ரஜன் கணக்கில் 1·20 லட்சம் டன் உரம்
தேவைப்படுமென்று நிர்ணயம் செய்யப்பட்டது. கையிலுள்ள இருப்பு,
தொகுப்பில் அடங்காத வழங்கல் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு
1973 பிப்ரவரி முதல் ஜூலை ஈருகவுள்ள கால அளவில் நைட்ரஜன்
கணக்கில் 44,000 டன் உரத்தைத் தொகுப்பு அளவிலிருந்து வழங்க
வேண்டும்.

4. மாநில அரசு நியமனம் செய்துள்ள வணிகர்களுக்கு, ஒவ்வொரு
மாதமும் முடிவதற்கு முன்பு, குறிப்பிட்ட அளவு உரத்தை வழங்குமாறு
உள்நாட்டு உரத் தயாரிப்பாளர்களுக்கு 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப்
பொருள்கள் சட்டத்தின் கீழ் கட்டளை ஒன்றை இந்திய அரசு 1972 ஜூலை
யில் பிறப்பித்தது. இரசாயன உரங்கள் மண்டல மாநாட்டில் உரத்
தயாரிப்பாளர்கள் வழங்க ஒப்புக் கொண்ட உர அளவின் அடிப்படையில்
மாநில அரசுக்கு வழங்க வேண்டிய உரங்களின் அளவு குறிப்பிடப்
பட்டுள்ளது. ஆயினும், மின்வெட்டு, தொழிலாளர் பிரச்சினை, மூலப்
பொருள்கள் கிடைக்காமை ஆகியவற்றினால், உள்நாட்டு உரத் தயாரிப்
பாளர்கள் ஒப்புக் கொண்ட அளவினை வழங்க முடியவில்லை. எனவே,
பல்வேறு வேளாண்மைத் திட்டங்களின் தேவையை நிறைவு செய்ய
மாநில அரசு, மத்தியத் தொகுப்பையே முழுதும் நம்பியிருக்கிறது.
உழவர்களின் தேவையை நிறைவு செய்ய, இயன்ற வரை மத்திய
உரத் தொகுப்பிலிருந்து போதிய அளவு உரம் பெற மாநில அரசு
பெருமுயற்சி செய்து வருகிறது. இரசாயன உரத் தயாரிப்பாளர்கள்
கூட்டத்தைக் கூட்ட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,
குறிப்பிட்டபடி உரங்களை வழங்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவர்.
உரத்தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்தவும்,
அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**பயிர்ப் பாதுகாப்பு.**—1969–70 முதல் 1971–72 வரை வழங்கப்பட்ட பயிர்ப் பாதுகாப்பு இரசாயன உரங்களின் அளவு கீழே குறிப்பிடப்பட் டுள்ளது :—

| | 1969–70. | 1970–71. | 1971–72. | 1972–73. |
|---|---|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்.) | | | |
| தூள் (Dust) | 23,247 | 25,079 | 30,787 | 23,586 |
| திரவம் (Liquid) | 639,880 லிட்டர். | 543,293 லிட்டர். | 1,057,384 லிட்டர். | 589,154 லிட்டர். |

1969–70 முதல் 1971–72 வரை பயிர்ப் பாதுகாப்பு குறித்து ஏற்பட்ட செலவு பின்வருமாறு :—

| | 1969–70. | 1970–71. | 1971–72. | 1972–73. (திருத்த மதிப்பீடு). | 1973–74 (திருத்த மதிப்பீடு). |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| மொத்தம் | 3,40·50 | 4,28·07 | 3,62·83 | 3,54·64 | 4,29·00 |
| வருவாய் .. | 2,25·89 | 2,85·61 | 2,44·09 | 3,30·00 | 3,50·00 |
| நிகரம் .. | 1,14·61 | 1,42·46 | 1,18·74 | 24·64 | 79·00 |

பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 1972 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் நிறுத்தப்பட்டு விட்டதன் காரணமாக 1972–73-ல் நிகரச் செலவு குறைந்துள்ளது.

பயிர்ப் பாதுகாப்பின்கீழ் செயல் படுத்தப்படவிருக்கும் பெரும் திட்டங்கள் பின்வருமாறு —

**பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் வழங்குதல்.**—துறை மூலமாக விற்பனைக்கு வரும் பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் அனைத்தும் முதற்கண் இரசாயன வகையிலும் நுண்ணுயிரியல் வகையிலும் நன்குச் சோதனையிடப்பட்டு அவை சிறந்தவையெனக் கண்டறியப்பட்ட பின்னரே அவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த இரசாயனங்களை திறந்த ஒப்பந்தப் புள்ளி முறை மூலம் இயக்குநர் வாங்கி அவற்றை இம் மாநிலத்திலுள்ள வேளாண்மை விற்பனை நிலையங்கள் அனைத்திற்கும் வழங்குகிறார். 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 562 லட்சம் மதிப்புடைய இரசாயனங்கள் வாங்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன. நடப்பாண்டில், ரூ. 570 லட்சம் மதிப்புடைய இரசாயனங்கள் நமது விற்பனை நிலையங்கள் மூலமாக வழங் கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**தரக் கட்டுப்பாடு.**—விற்பனை நிலையங்கள் மூலமாக தரமான மருந்துகள் மட்டுமே வழங்கப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ள, மருந்து கள் பொதுமக்களுக்கு விற்பனைக்காக வழங்கப்படுவதற்குமுன்பு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் குவியல் முறையில் பெறப்பட்ட இரசாயன மாதிரிகள், பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை கோவை, மதுரை, ஆடுதுறை, கோவில்பட்டி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள ஆய்வுக் கூடங்கள் ஐந்தில் சோதனையிடப்படுகின்றன. தரம் குறைந்த இரசா யனங்கள் வழங்கப்படும் நேர்வில், அவற்றை வழங்கியவர்கள் தண்டிக்கப் படுகின்றனர்.

**பூச்சிக் கொல்லிகளை சோதனையிடுதல்.**—தற்போதுள்ள பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு 4,000 மாதிரி களைப் பகுப்பாய்வு செய்யும் திறனுடையவையாகும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில், சேலத்திலும், திருச்சிராப் பள்ளியிலும் மேலும் இரு ஆய்வுக் கூடங்களை விரைவில் அமைத்தும் இந்த ஆய்வுக்கூடங்களில் பணியாற்றும் வேளாண்மைத் துணை அதி காரிகளின் எண்ணிக்கையை எழுவரிலிருந்து 26 பேராக உயர்த்தியும், 20,000 மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் அளவுக்கு இந்த ஆய்வுக்கூடங் களின் திறனளவை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிர்ப் பாதுகாப்புச் சாதனம் வழங்குதல்.**—கையினால் இயக்கப்படு பவையும், விசையில் இயங்குபவையுமான தெளிப்பான்கள், தூவு கருவி கள் ஆகியவை, சிறப்புத் திட்டப்பகுதிகளில் உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கையினால் இயக்கப்படும் தெளிப்பான்கள், குறைந்த விலையில் வட்டாரங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன், துறை அதிகாரிகள் பயிர்ப்பாதுகாப்புப் பொருள்களுக்கான மையத் தொகுதி ஏற்பாட்டை வைத்து வருகின்றனர். இந்த மையத் தொகுதியிலிருந்து பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள் நாள்தோறும் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 500 விசைத் தெளிப்பான்கள் வாங்கப்பட்டு இந்த மைய ஏற்பாட்டில் போதுமான அளவுக்கு இருப்பு வைத்துக் கொள்ளப்படுகின்றன. இதோடு, அவசரத் திட்டத்தின் ஒரு பாகமாக, இவ்வாண்டு 2,000 விசைத் தெளிப்பான்கள் வாங்கப்பட்டு, அவசரத் திட்டம் செயலில் இருக்கும் மாவட்டங்களில் உள்ள தொகுப்பு களில் வைத்து வரப்படும்.

மேற்கண்டவற்றுடன், கிராமங்களிலும், வட்டாரங்களிலும் உள்ள தெளிப்பான்கள் தாமதமின்றி பழுது பார்க்கப்படும் வகையில் 6 இயல் ஊர்திப் பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அவை இப்போது செயல் பட்டு வருகின்றன. இந்த ஆறு இயல் ஊர்திப் பிரிவுகளை மதுரை, வேலூர், திருவாரூர், கோவை, சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவிடங்களிலுள்ள வேளாண்மை பொறியியல் தொழிற் கூடங்களுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பயிர்களைப் பூச்சிகள் தாக்குவது பற்றிக் கண்காணிப்பு.**—பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் தாக்குவது பற்றி உழவர்களுக்கும், வளர்ச்சி அதிகாரிகளுக்கும் முன்னதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டால், உரிய வழி களைக் கையாண்டு பூச்சிகள், நோய்கள் தாக்கா வண்ணம் பயிர்களைச்

சிறந்த முறையில் பாதுகாக்கலாம். எனவே, பூச்சிகள் தாக்குவதும்,
நோய்கள் பரவுவதும் பற்றி உழவர்களுக்கு முன்னதாகத் தகவல் தெரி
விக்கும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பூச்சிகள் கண்காணிப்பு—
முன்னறிவிப்புத் திட்டம் தற்போது செயலில் இருந்து வருகின்றது.
ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இத் திட்டத்தை மாநிலம்
முழுவதிலும் நீட்டிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**களைகளை இரசாயன முறையில் கட்டுப்படுத்துதல்.**—இரசாயனங்களைப்
பயன்படுத்தி களைகள் வளராவண்ணம் கட்டுப்படுத்துவது நவீனமுறை
யாகும். மிகவும் முன்னேற்றம் அடைந்த மேலை நாடுகளில் இந்த
முறை மிகவும் பிரபலமாயிருந்தாலும்கூட, இது நமது நாட்டு உழவர்களை
இன்னும் கவரவில்லை. நிலத்தில் போடப்படும் இன்றியமையாமையாப்
பயிரிடுபொருள்களில் 25 சதவீதம் முதல் 50 சதவீதத்தினை இந்தக்
களைகள் எடுத்துக் கொண்டு விடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உரிய
காலத்தில் நடவடிக்கை எடுத்து இக் களைகளைக் கட்டுப்படுத்துவதனால்,
பயிர்கள் அதிகம் விரயமாவதையும், அதனைத் தொடர்ந்து உற்பத்தி
குறைவதையும் தவிர்க்கலாம். எனவே, களைகளைக் கட்டுப்படுத்தும்
இந்த நவீன முறையை உழவர்களிடையே பிரபலப்படுத்தும் பொருட்டு
இரசாயன களைக் கொல்லிகளை 75 சதவீதம் விலையில் வழங்குவதற்காக
25,000 ஏக்கர் பரப்பில் ரூ. 3·75 லட்சம் செலவில் களைக் கொல்லிகள்
பயன்படுத்தும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம்.**—1968 ஆம் ஆண்டு பூச்சிக்
கொல்லி மருந்துகள் சட்டம் 1—8—1971 முதல் செயலுக்கு வந்தது.
தரக் குறைவான மருந்துகளை வழங்கி அதன் விளைவாக மக்களின்
உடல் நலன் கெடுவதைத் தடுப்பதும், தரமான பூச்சிக் கொல்லி
மருந்துகளை வழங்குவதுமே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளிக்கும்பொழுது உயிர் இழக்கும்
விவசாயியின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்
படும்.

**வேளாண்மை விற்பனை நிலையங்களைக் கூடுதலாகத் தொடங்குதல்.**—
மிகுபயன் தரும் தானிய வகைகள் திட்டம், நவரை முனைப்புத் திட்டம்
ஆகியவற்றினால், வேளாண்மை பயிரிடு பொருள்களை உழவர்களுக்கு உட
னடியாக வழங்குவதற்காக அதிக இருப்பு வைத்துக் கொள்ள அவசியம்
ஏற்பட்டுள்ளது. வேளாண்மை பயிரிடு பொருள்களை உழவர்களுக்கு எளி
தில் கிடைக்கச் செய்ய, ஆண்டுதோறும் 50 விற்பனை நிலையங்கள் என்ற
வீதத்தில் இதுவரை 150 விற்பனை நிலையங்களைத் தொடங்க ஒப்பளிப்பு
வழங்கப்பட்டுள்ளது. 150 விற்பனை நிலையங்கள் யாவும் தற்போது செயல்
பட்டு வருகின்றன. 1973-74 ஆம் ஆண்டில் மேலும் 15 விற்பனை
நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர்களும், ஐந்
தாண்டுகள் பணியாற்றியுள்ளவர்களுமான குற்றேவலர்கள் 1,194 பேரை
அரசுப் பணியாளர்களாக மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது. 1972-73 ஆம்
ஆண்டு இறுதிக்குள் 597 பதவிகள் அரசுப் பதவிகளாக மாற்றப்படும்.
எஞ்சிய 597 பதவிகள் 1973-74 ஆம் நிதியாண்டில் அரசுப் பதவிகளாக
மாற்றப்படும்.



## வேளாண்மை உற்பத்தித் திறன் குழு

உழவர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், வளர்ச்சி பணியாளர்கள்,
தொழில் முனைவர்கள், வேளாண்மையிலும், தொடர்புள்ள பிற துறை
களிலும் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவர்களுக்கு
உற்பத்தித்திறனைப் பெருக்கும் உணர்வினை ஊட்டுவதற்காக, தமிழ்நாடு
வேளாண்மை உற்பத்தித் திறன் குழுவை ஏற்படுத்தி தமிழகம் புதுமை
யான, முற்போக்கான நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளது. இக்குழு
தனது பிற பணிகளுடன் கீழ்க்கண்ட பணிகளையும் ஆற்றி வரும்:—

(1) வேளாண்மைக் கருத்தரங்குகள் பல நடத்துவதன் மூலம் உழவர்
களிடையே உற்பத்தித் திறனைப் பெருக்கும் உணர்வினை ஊக்கி வளர்த்தல்;

(2) வயலிலே மேற்கொள்ளும் பணிகளிலும் நவீன பயிரிடு பொருள்
களைப் பயன்படுத்துவதிலும் வேளாண்மை உற்பத்தியில் தோன்றும் சிக்கல்
கள் பலவற்றிலும் தொழில் நுட்ப உத்திகளை உழவர்களுக்கு அளித்தல்;

(3) வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் துறையிலும் தொடர்புடைய
பிற துறைகளிலும் உள்ள சிக்கல்கள் குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சிகளை
மேற்கொள்ளுதல் ;

(4) பொதுவாக எல்லா வகையான உழவர்களுக்கும் குறிப்பாக
ஏழை உழவர்களுக்கும் பயனுள்ள ஆலோசனைகள் பலவற்றை நல்குதல்.

இக்குழுவை அமைப்பதற்காக ரூ. 1 லட்சம் தொகைக்கு அரசு
முன்னரே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இம்மன்றம் சிறந்த முறையில்
செயல்படுவதற்காக எண்ணற்ற உழவர்கள், வேளாண்மையை அடிப்
படையாகக் கொண்ட தொழில்கள், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களின்
ஒத்துழைப்பைப் பெறக் கருதப்பட்டுள்ளது.

## விற்பனை வசதி.

சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்
கொடுக்கும் நோக்கத்துடனும், துய்ப்போர் கொடுக்கிற விலையிலிருந்து
தகுந்த பங்கை, உற்பத்தியாளர் பெறுவது இயலும் பொருட்டும்,
முறைபடுத்தப்பட்ட பதினொரு அங்காடிக் குழுக்கள் இதுவரை அமைக்கப்
பட்டுள்ளன. சேலம் மாவட்டத்திலும் விற்பனைக் குழு நிறுவ உத்தேசிக்
கப்பட்டுள்ளது. இத்துடன் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை
விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின்படி, முறைப்படுத்தப்பட்ட 128
அங்காடிகள் தொடங்கப்பட்டுள்ளன. பிற்சேர்க்கை ஆறில் இம்மாநிலத்தி
லுள்ள ஒழுங்கு முறைவிற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வரும் இடங்கள்
குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதிக்குள், மேலும் 22
முறைப்படுத்தப்பட்ட அங்காடிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இதன் மூலம் நான்காம் திட்ட இறுதிக்குள் 150 அங்காடிக் கூடங்களை
தொடங்கும் இலக்கு எய்தப்படும். இம்மாநிலத்தில் இருக்கும் ஒழுங்கு
முறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக, மத்திய அரசின் மூலமாக
உலக வங்கியின் உதவி கோரி ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை அனுப்ப

உத்தேசிக்கப்பட்டுள்ளன. மேற்படி திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. உழவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், தங்களது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்தும்படி அவர்களைத் தூண்டும் நோக்கத்துடனும், இதுவரை 28 தரப்பிரிவு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 12 நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73 வரையில் 12 தரப்பிரிவு ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. "அக்மார்க்" தரத்தின் கீழ் எல்லாப் பொருட்களையும் தரப்படுத்துவதைக் கட்டாயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பூர், இராஜபாளையம், பொள்ளாச்சி, பெருந்துறை, புதூர் ஆகிய விடங்களில் "கப்பாஸ்" பருத்தித் தரப் பிரிவு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1971–72-ல் வணிகத் தரங்களுக்கேற்ப கீழ்க்கண்ட அளவுள்ள வேளாண்மைப் பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டன :—

| வரிசை எண்ணும், விளைபொருட்களின் பெயரும். | | எய்திய சாதனைகள். (குவிண்டால் அளவில்). |
|---|---|---|
| 1. | வேர்க்கடலைப் பருப்பு | 30,15,60 |
| 2. | என் | 3,69,73 |
| 3. | வெல்லம் | 6,53,60 |
| 4. | உருளைக்கிழங்கு | 18,20,49 |
| 5. | பழங்கள் (எண்ணிக்கையில்) | 27,87,650 |

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெறவும், சென்னை மாநகரில் காய்கறி பயன்படுத்துபவர்களுக்கு நியாயமான விலையில் புதிய காய்கறிகளை வழங்கவும் வேண்டி, சென்னை மாநகரில் காய்கறி விற்பனை வசதித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## நிறுவனக் கடனுதவி

### வேளாண்மை நிதியுதவிக் கழகம்

திருநெல்வேலி மாவட்டத்தில் பின்வரும் திட்டம், வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவி பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது.

**தூத்துக்குடியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள "தேரி நிலங்களை" வாழை பயிரிடுவதற்காக மேம்படுத்தும் திட்டம்**

இத்திட்டம் தூத்துக்குடியிலும் அதனைச் சுற்றிலுமுள்ள "தேரி நிலங்களை" ஏற்றுமதி செய்வதற்கேற்ற வாழை பயிரிடும் நிலங்களாக மேம்படுத்துவதைக் கருதியது. இத் திட்டத்தினால் 6,000 ஏக்கர்



நிலங்கள் பலன் பெறும். 3,000 ஏக்கர் வாழை பயிரிடுவதின் கீழும், எஞ்சிய பரப்பு, நெல், வேர்கடலை போன்ற பயிர்களையும், காய்கறிகளையும் பயிரிடுவதன் கீழும், கொண்டுவரப்படும். இதற்காகும் மொத்தக் கடன் தொகை ரூபாய் 443·30 லட்சமாகும்.

1970 மே 1-லும் அதற்குப் பிறகும் உழவர்களுக்குக் கடனாக, வழங்கிய தொகை திருப்பிச் செலுத்தப்படுவதற்கு இத் திட்டத்தின் கீழ் ரூ. 241·80 லட்சம் வரை, மாநில அரசு, வேளாண்மை நிதியுதவி கழகத்திற்கு உத்தரவாதம் அளிக்கும். இத்திட்டத்தின்கீழ் வெட்டப்படும் கிணறுகளின் எண்ணிக்கை 580-லிருந்து 380-ஆகக் குறைக்கப்பட வேண்டுமென்று வேளாண்மை நிதியுதவிக் கழகம் அரசுக்குத் தெரிவித்துள்ளது. இச்செயற்குறிப்பு குறித்து அரசு, சென்னை–17, நிலநீர் இயக்குநருடன் கலந்தாலோசித்துப் பரிசீலித்து வருகிறது.

### வாணிக வங்கிகள்

தமிழ்நாடு அரசின் உத்திரவாதத்தின் கீழ் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பதினொன்று கடன் வழங்கி வருகின்றன. இத் திட்டத்தின் கீழ் டிராக்டர்கள், மின்சார மோட்டார் விசையேற்றங்கள், எண்ணெய் என்ஜின்கள், விசைக் கலப்பைகள் முதலியவை வாங்குவதற்காக உழவர்களுக்கு நடுத்தரக் காலக் கடன்களை, இந்த வங்கிகள் வழங்குகின்றன. பதினொரு வங்கிகளுக்கும் உத்திரவாதம் அளிக்கப்பட்ட ரூபாய் 490·00 லட்சம் அளவில் வங்கிகள், ரூபாய் 347·11 லட்சத்தைக் கடனாக வழங்கியுள்ளது.

### வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம்—கொள்கை விளக்கக் குறிப்பு

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், வேளாண்மை பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கடன் வழங்குகின்றது. இக் கடன்கள் மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்றன. நிலவள வங்கி வெளியிடும் கடன் ஈட்டுப் பத்திரங்களில் வேளாண்மை மறுநிதியுதவிக் கழகமும் மாநில அரசும் 3 : 1 என்ற விகிதத்தில் பங்கேற்றுள்ளன.

2. தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னை வளர்க்கும் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,500 ஏக்கர் பரப்பில் ரப்பர் வளர்க்கும் திட்டம் ஆகிய இரு மலைத் தோட்டத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு திட்டங்களில் தென்னை, ரப்பர் வளர்க்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. இவற்றை நல்ல முறையில் பேணி வருவதற்காகக் கடன்கள் வழங்க இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுபோலவே, நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்ட அதிபர்களுக்காக 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடும் முனைப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இன்னும் கூடுதலாக 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடும் மற்றொரு திட்டம் பரிசீலனையிலுள்ளது. சிறு அளவில் காப்பி பயிரிடுவோர்க்குக் குறிப்பாக பழங்குடியினருக்காக, சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காட்டில் 2,000 ஏக்கர் பரப்பில் காப்பி பயிரிடும் திட்டமும்,

இத்திட்டத்திற்கு 1971 மார்ச் இறுதியில் ஒப்பளிக்கப்பட்டது.
19-4-1971 லிருந்து இத்திட்டம் செயல்படத் தொடங்கியது. மண்ணின்
நீர் ஈர்த்துச் சேமித்து வைத்துக கொள்ளும் சக்தியைப் பெருக்கவும்,
பயிர் உற்பத்திக்கான ஈரத் தன்மையைச் சேமித்து வைக்கும் திறனை
அதிகரிக்கவும் இவ்வகையில் தொழில் நுட்பமுறையை மேம்படுத்துவதும்
புன்செய்ச் சாகுபடியில் உரங்களைத் திறம்படப் பயன்படுத்தும் முறைகளை
வகுப்பதும் இத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

## காவிரி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

காவிரிப் பாசனப் பகுதியில் அங்காடி இணைப்புச் சாலைகளுக்கு முக்கி
யத்துவம் அளித்து, மத்திய அரசுத்துறைத் திட்டத்தின்கீழ் ரூ. 150
லட்சம் செலவில் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தஞ்சாவூர், திருச்சி
ராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் நிறை
வேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை,
திருத்துறைப்பூண்டி, குத்தாலம் (தஞ்சாவூர் மாவட்டம்), மணச்சநல்லூர்
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்), காட்டுமன்னார் கோவில் (தென் ஆற்காடு
மாவட்டம்) ஆகிய இடங்களில் ஆறு அங்காடித் தொகுதிகளை அமைக்கவும்,
இந்த அங்காடித் தொகுதிகளை இணைக்கும் இணைப்புச் சாலைகளை மேம்
படுத்தவும் கருதப்பட்டுள்ளது. 1973 ஜனவரி இறுதி வரையில் ரூ. 91·53
லட்சம் செலவாகியுள்ளது. 45 சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்
கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அங்காடிக் கூட்டுக்
தொகுதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தின் திட்டம்

### டிராக்டர்கள் வழங்கல்

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்து திட்டத்தின் மூலம், 5,000,000
டாலர் மதிப்புள்ள (இந்திய மதிப்பு ரூ. 3,75,00,000) 1,500 டிராக்டர்
களையும் உதிரி பாகங்களையும் இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, டிராக்டர்கள் வாங்கு
வதற்காகக் கடன் கோரி உழவர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்களைப்
பரிசீலித்து கடன் வழங்கப்படுவதற்கான இறுதிப்பட்டியல் ஒன்றைத்
தயாரித்து மாநில வேளாண்மைத் துறைக்கு அனுப்பியது. நிலவள
வங்கி, உழவர்களிடமிருந்து இக்கடனை வசூலித்துக் கொள்ளும். உலக
முழுவதிலுமிருக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று டிராக்டர்கள் வாங்கப்
படும். இந்த டிராக்டர்கள் நிலவள வங்கிகள் மூலமாக பயனடை
வோருக்கு வழங்கப்படுகின்றன. இவை டிராக்டர்களை வழங்கிய நிறு
வனங்களுக்குத் தொகை செலுத்திவிடும். 750 டிராக்டர்களுக்கான
ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டு இந்திய அரசின் ஏற்புக்காக அனுப்பப்
பட்டுள்ளன.



## துளைக்கிணறுகள் தோண்டும் இயந்திரமும் மண்வாரி இயந்திரமும் வாங்குதல்

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, 27,00,000
டாலர்கள் (இந்திய மதிப்பு ரூ. 202.50 லட்சம்) மதிப்புள்ள துளைக்கிணறு
கள் தோண்டும் இயந்திரங்களும், மண்வாரி இயந்திரங்களும் வாங்கத்
திட்டமிடப்பட்டுள்ளது.

இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் குறித்த ஆவ
ணங்கள் இந்திய அரசின் ஏற்பளிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளன. இது
ஏற்பளிக்கப்பட்ட பின்னர், இந்த இயந்திரங்கள் வாங்குவதற்கான
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு முக்கிய பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

## வேளாண்மைப் பொறியியல்

வேளாண்மைத்துறையின் வேளாண்மைப் பொறியியல் பணிகளில்
கீழ்க்கண்ட பெரும் பணிகள் அடங்கும் :—

(1) மண்வள - நீர் பாதுகாப்பு.

(2) வேளாண்மைப் பொறியியல் பணிக்களரிகள் உட்பட சிறு
பாசனம், நிலமேம்பாடு.

(3) ஆராய்ச்சியும் பயிற்சியும்.

பொறியியல் திட்டங்களின் மொத்த மூலதனம் ரூ. 6·43 கோடி
யாகும். இத் திட்டங்களில் 148 பரம்புப் பொறிகள் (Bull-dozer),
சங்கிலிச் சக்கரவகை டிராக்டர்கள் (Wheel-type Tractors) 160,
விசைத்துளைக் கருவிகள் 122, கையால் இயக்கப்படும் துளைக்
கருவிகள் (Hand-boring Sets) 386, கல் உடைப்புப் பிரிவு
கள் (Rock-blasting Units) 125, காற்று அழுத்தக் கருவிகள் 8,
ஆகியவை உள்ளன. இப்பிரிவின் நிர்வாகத்தின் கீழ், மதுரை,
வேலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், கோவை மற்றும் சென்னை
ஆகிய இடங்களிலுள்ள ஆறு வேளாண்மைப் பொறியியல் பணிமனை
களும், கோவையில் ஒரு மண்டல ஆராய்ச்சி நிலையமும் உள்ளன. மேலும்
ஒரு பணிக்களரி திருநெல்வேலியில் அமைக்கப்பட்டு வருகிறது.
தஞ்சாவூர், கோயம்பத்தூர் ஆகிய இடங்களில், பழுதுபார்க்கும் இயல்
ஊர்திகள் இரண்டு செயல் படுகின்றன. இவற்றைத் தவிர, வேளா
ண்மை இயந்திரங்களை நிறுத்தி வைப்பதற்கும் அவற்றைப் பழுது
பார்ப்பதற்கும் இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில் கொட்டகைகள்
உள்ளன. வேளாண்மைத் துறையின் கூட்டு இயக்குநர் (பொறியியல்)
இந்தப் பொறியியல் கருவிகள் அனைத்திற்கும் பொறுப்பு வகித்தார்.
அவருக்கு உதவி புரிய, தலைமை இடங்களிலும், மாவட்டங்களிலும்
தேவையான துணைப் பணியாளர்கள் இருந்தனர். இவ்வளவு உதிக
மான கருவிகளையும் ஒருவரே நிர்வகிப்பது மிகவும் கடினமாக இருந்

ததால், வேளாண்மைத்துறை இயக்குநர், வேளாண்மைத்துறை கூட்டு இயக்குநர் (பொறியியல்) பதவியை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியாளர்) பதவியாகத் தரம் உயர்த்துவதன் மூலம் தலைமையிடங்களில் உள்ள பிரிவில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தத் திட்டமிட்டுள்ளார். இதற்கு அரசு இசைவு தெரிவித்துள்ளது. தலைமையிடத்தில் உள்ள மூன்று வேளாண்மைக் கோட்டப் பொறியாளர்கள் அதே சம்பள வீதத்தில் துணைத் தலைமைப் பொறியாளர்கள் எனப் பதவி மாற்றப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தின் திட்டங்களைக் கவனித்துக் கொள்வதற்காக தலைமையிடத்தில் மற்றுமோர் துணைத் தலைமைப் பொறியாளரும் உள்ளார். கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மேலும் ஒரு கோட்டமும் இரண்டு துணைக் கோட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பொறியியல் பிரிவு முழுவதும் தலைமைப் பொறியாளர் நிர்வாகத்தில் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலான நிர்வாகப் பொறுப்பு வேளாண்மைத் துறை இயக்குநரைச் சார்ந்ததாகும்.

## நிலமேம்பாடு

**டிராக்டர் பணிக்களரிகள் திறத்தல் உட்பட டிராக்டர்கள் வாடகைக்குவிடும் திட்டம்.**—வேளாண்மைத் துறையின் பணிகளின் முக்கியக்கூறு டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டமாகும். இதுவரை பயிரிடப்படாத நிலங்களையும், தரிசு நிலங்களையும் பயன்படுத்துவதற்காகவும், ஏற்கெனவே உள்ள நிலங்களின் விளைச்சலைப் பெருக்க அவற்றை உழுவதற்காகவும் உழவர்களுக்கு வேளாண்மை இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதே டிராக்டர் வாடகைத் திட்டத்தின் நோக்கமாகும்.

இயந்திரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யும் முறையை மேம்படுத்துவதில் இத்துறை கணிசமான அளவுக்கு உதவியுள்ளது. சொந்தமாக டிராக்டர் வாங்குவது எல்லா உழவர்களுக்கும் இயலாத ஒன்றாகும். தங்களது சாகுபடியையும், தங்களது தரத்தையும் மேம்படுத்திக் கொள்வதில் தங்களுக்கு என்று சொந்தமாக டிராக்டர்கள் வைத்திராத உழவர்களுக்கு உதவி செய்வதற்காக, இத்துறை அவர்களுக்குச் சாதனங்களையும் சங்கிலிச் சக்கர டிராக்டர்களையும் வாடகைக்கு விடுகிறது. உழவர்களுக்கு டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது

வேளாண்மையில் இயந்திர முறைகளைப் பயன்படுத்தி அதனால் கிடைக்கும் நன்மைகளை அடையச் செய்வதற்காக 21—9—71 முதல் டிராக்டர்களுக்கான வாடகை வீதங்கள் பெரிதும் குறைக்கப்பட்டிருந்தன. 22—9—71 அன்றிலிருந்து இந்த வாடகை வீதங்கள் கட்டுபடியாகக்கூடிய வீதங்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளன,



பயிரிடு பருவங்களல்லாத ஏனைய பருவங்களில், உழவு கருவிகளுக்கு அதிகத் தேவையில்லாதபோது, உழவு வேலைகளுக்கு பாதகமில்லாமல் பயிர்த் தொழிலைச் சாராத காரியங்களுக்கும் டிராக்டர்களும் சங்கிலிச் சக்கர டிராக்டர்களும் வாடகைக்கு விடப்படுகின்றன. சாதாரண வாடகைக்கு மேல் கூடுதலாக ரூ. 5 விதித்து இவ்வாறு வாடகைக்கு விடப்படுகின்றன. அரசுத் துறையில், உள்ளாட்சி மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் டிராக்டர்கள் பயிர்த் தொழிலைச் சாராக் காரியங்களுக்காக பயன்படுத்தப்பட்ட போதிலும் உழவுக் காரியங்களுக்கு வசூலிக்கப்படும் அதே வீதங்களே வசூலிக்கப்படுகின்றன.

1971–72 ஆம் ஆண்டில், 10,615 எக்கர் நிலத்தை சமப்படுத்தவும் 50,900 எக்கர் நிலத்தில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டது. ஆனால், உண்மையில், 14,859 எக்கர் பரப்பளவுள்ள நிலமே சமப்படுத்தப்பட்டது. 48,955 எக்கர் நிலத்தில் இயந்திர முறை சாகுபடியும் செய்யப்பட்டது. அதாவது உணவு உற்பத்திக் கணக்கில் பார்த்தால் 8,607 டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டது. 1972–73 ஆம் ஆண்டில் 11,573 எக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும் 53,590 எக்கர் நிலத்தில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் கருதப்பட்டுள்ளது. 1972–73-ல் 8,243 டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1973–74 ஆம் ஆண்டில் 12,000 எக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும், 54,000 எக்கர் நிலத்தில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூடுதலாக 8,400 டன் உணவு தானிய உற்பத்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக தென்ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 13,500 எக்கர் நிலத்தில் மணல் மேடிட்டுவிட்டது. தேவையான சிறப்புப் பணியாளர்களுடன் சுமார் 100 பரம்புப் பொறிகள் இந்த நிலங்களைப் பண்படுத்தி வருகின்றன. இச்செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

வெள்ளத்தால் மணல் மேடிட்ட நிலங்களின் பரப்பும் 10—3—1973 வரை மீட்புப் பணிகள் செய்யப்பட்ட நிலங்களின் விவரங்களும் இங்கே குறிக்கப்பட்டுள்ளன :—

| மாவட்டத்தின் பெயர். | பாதிக்கப்பட்ட பரப்பு. (எக்கர்.) | மீட்கப்பட்டுள்ள பரப்பு. (எக்கர்.) |
|---|---|---|
| தென்னாற்காடு .. .. .. .. | 10,000 | 2,700 |
| கோவை .. .. .. .. .. | 1,800 | 300 |
| சேலம் மற்றும் தர்மபுரி .. .. .. | 1,200 | 550 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 500 | 150 |
| மொத்தம் .. | 13,500 | 3,700 |

மேலும், கீழ்க்கண்ட ஆறு மாவட்டங்களில் 2,100 எக்கராபரப்பளவின் மண் அரிப்பும் ஏற்பட்டிருக்கின்றது. இவைகளையும் மீட்பதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

| | | எக்கர். |
|---|---|---|
| 1. | தென்னுற்காடு .. .. .. | 910 |
| 2. | சேலம் .. .. .. | 450 |
| 3. | தர்மபுரி .. .. .. | 100 |
| 4. | கோவை .. .. .. | 550 |
| 5. | திருச்சிராப்பள்ளி .. .. | 15 |
| 6. | தஞ்சாவூர் .. .. .. | 75 |

## தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம்.

இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்களை உழவர்களுக்கு வழங்கும் ஓரே முகவமைப்பாகிய தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் இது வரையில் 2,145 டிராக்டர்களை விற்றுள்ளது. மற்றும் அண்மைக் கால மாக விசைக் கலப்பைகளையும், வழங்கத் தொடங்கியுள்ளது. 1970-71-ல் 760 டிராக்டர்களை விற்ற இக்கழகம் 1971-72 ஆம் ஆண்டில் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட 775 டிராக்டர்களை வழங்கியுள்ளது. இதனுல் ரூ. 8·31 லட்சம் ஆதாயம் கிட்டியது.

2. 1971-72 ஆம் ஆண்டில், திருவண்ணுமலை, புதுக்கோட்டை, தேனி, பரமக்குடி ஆகிய இடங்களில் நான்கு டிராக்டர் வாடகை—பழுது பார்க்கும் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கோயம்புத்தூரில் மேலும் ஒரு முக்கிய நிலையமும், 12 துணை நிலையங்களும் இக் கழகத்திஞல் அமைக்கப் படும். வேளாண்மைக் கருவிகளை தயாரிப்பதற்காக இக்கழகம் கிண்டி தொழிற்பேட்டைக்கு அருகில் ரூ. 5·82 லட்சம் செலவில் நவீன பணிக் களரி ஒன்றை அமைத்து வருகிறது. இப் பிரிவு 1973-74-ல் பணிபுரியத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் புரியும் மற்ருெரு முக்கியப் பணி, வேலை வாய்ப்பற்ற தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் உதவுவதேயாகும். இந்திய அரசுத் திட்டத் தின்கீழ், தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம், தொழில் நுட்பத் தகுதி பெற்று வேலையற்றிருப்போர், தாமாகவே டிராக்டர் வாடகைக்குவிட, மருந்து தெளிக்கும் பணியை ஒப்பந்தத்திற்கு எடுக்க, பயிரிடுபொருள்களைப் பிரித்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய இயலும் வகையில் அவர் களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட உதவி களைச் செய்ய இந்திய அரசு உறுதி அளித்துள்ளது;—

(a) இயந்திரங்கள் வாங்குவதற்கான மூலதனச் செலவிற்காக ரூ. 3·45 லட்சம் வழங்கல்.

(b) மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் நான்கு மாதத்திற்கு உதவித் தொகை வழங்கல்.



(c) தொழில் முனைவர் வங்கியிலிருந்து பெற்ற கடன்மீது செலுத்தும் வட்டியை விட 5 சதவீதம் அதிகமாக கொடுத்தல்.

இக்கழகம் இவ்வாண்டில் மேற்கொண்ட மற்றுமோர் முக்கியப் பணி, பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிப்பேயாகும். விற்பனை செய்யப் படும் பூச்சி கொல்லிகளின் தரம் அவற்றின் விலை ஆகியவற்றை முறைப் படுத்துவதற்காக எண்ட்ரின் 20 சதவீதம் E.C. B H.C 10 சதவீதம் தூள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட சில இரசாயனப் பொருட்களை இக் கழகம் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் இது வரையில் ரூ. 31 லட்சம் மதிப்புள்ள எண்ட்ரின் 20 சதவீதம் B.C. மருந்தும் சுமார் ரூபாய் 4 லட்சம் மதிப்புள்ள 1,109 மி. டன். B.H.C. 10 சதவீதம் தூள் மருந்தும் தயாரித்துள்ளது.

கீழ்க்கண்ட திட்டங்கள் பற்றி தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் மும்முரமாகப் பரிசீலித்து வருகிறது:—

(1) மக்காச் சோளத்தைச் செய் முறைப்படுத்தும் கூட்டு ஆலைகள் அமைத்தல்.

(2) ஆப்பிள், திராட்சை, அன்னுசி போன்ற பழங்களை சேமித்து வைப்பதற்காக சென்னை மாநகரில் குளிர் பதனப் பொறிகள் அமைத்தல்.

மீனளத்தைப் பொறுத்தவரையில் நைலான் மீன் வலை தயாரித்தல், உறையவைக்கப் பொருட்கள் சேமிப்பு ஆகியவற்றிற்கான திட்டங்களை இக் கழகம் முடிவு செய்து வருகிறது. ஒன்று அல்லது இரண்டு பாகங் களை இறக்குமதி செய்வதன் மூலம் இவ்விரு திட்டங்களும் விரைவிலேயே செயல்படத் தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

1970-71-ஆம் ஆண்டில் தமிழ் நாடு வேளாண்-தொழில் கழகத்திற்கு ரூ. 1·93 லட்சமே நிகர ஆதாயம் கிடைத்திருக்க 1971-72-ல் ரூ. 3·?3 லட்சம் நிகர ஆதாயம் கிட்டியது.

## சிறுபாசனம்

### தனியார் குழாய்க் கிணறுத் திட்டங்கள்

ஊற்று நீரைப் பாசனங்களுக்காகப் பயன்படுத்த, இத்துறை விசைத் துளைக்கருவிகள், கையிஞல் இயக்கப்படும் துளைக்கருவிகள் ஆகியவற்றின் உதவியைக் கொண்டு உழவர்களின் நிலங்களில் குழாய்க்கிணறுகள் (துளைக் கிணறுகள்) தோண்டுகிறது. வேளாண்மை வளர்ச்சி அடைந்து வருவதாலும் ஊற்று நீர்மட்டம் குறைந்து கொண்டே வருவதாலும், துளைக் கிணறுகள் தோண்ட வேண்டிய அவசியம் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஆரம்பத்தில், துளையிடும் கருவிகள் வாடகைக்கு விடப்பட்டு வந்தன (1) அவ்வாறு தோண்டுகையில் தண்ணீர் இருப்பது தெரிய வந்தால், துளையிடும் கருவிகளுக்கான வாடகைச் செலவு உட்பட கிணறு தோண்டு

வதற்கான செலவு, (2) வரிசை யேற்றங்கள், அதன் துணைப் பொருள்கள் (3) விசையேற்றக் கொட்டகைகளைக் கட்டுதல் ஆகியவற்றிற்காக சம்பந்தப் பட்ட உழவர்களுக்கு பேரளவு ரூ. 750 வரையில் கடன் வழங்கப்படுகிறது.

உழவர்களுக்குக் கடன் வழங்குவதை அரசு 1—4—1969 முதல் நிறுத்தி விட்டது. இப்பொழுது, நிலவள/வணிக வங்கி இவ்வுதவி அளிக் கிறது. எனினும், 16—10—1971 வரையில், அரசு, ரூ. 500 என்னும் பேரளவுக்கு உட்பட்டு, கடன் தொகையில் 10 சதவீதத் தொகையை உதவித் தொகையாக அளித்தது. இப்பொழுது, சிறு உழவர்களுக்கு அல்லது சிறு உழவர்களடங்கிய ஒரு தொகுதியினருக்கு மட்டும் இவ் வுதவித் தொகை வழங்கப்படுகிறது.

## கிணறுகளில் துளையிடுதல்.

சில மாவட்டங்களில், நீர்மட்டம் படிப்படியாக குறைந்து கொண்டே வருவதால், கிணறுகளில் நீர் ஊற்று மிகவும் குறைவாக இருக்கிறது. சில சமயங்களில் கிணறுகள் வற்றிக்கூடப் போகின்றன. இத்திட்டத்தின் கீழ் நீர் ஊற்றைப் பெருக்குவதற்காக கிணற்றுக்குள் துளையிடத் திட்டமிட பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான கடனையும் நிலவள/வணிக வங்கிகளே அளிக்கின்றன. எனினும், 16—10—1971 வரையில் ரூ. 500 என்னும் பேரளவுக்கு உட்பட்டு, கடன் தொகையில் 10 சதவீத உதவித் தொகை வழங்கப்பட்டது. அதன் பின்னர், சிறு உழவர் களுக்கு அல்லது சிறு உழவர்கள் அடங்கிய தொகுதியினருக்கு இவ் வுதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்.

பாறைப் பகுதிகளில் உள்ள பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக் காகப் பாறை வெடி வைத்துத் தகர்க்கப்படுகிறது. கிணறுகளைத் துளை யிடுவதற்குப் பதிலாக, 20 அடி முதல் 40 அடி வரை கனமுள்ள பாறைகள் வெடி வைத்துத் தகர்க்கப்படுகின்றன. இவ்வாறு வெடி வைத்துத் தகர்க்கப்படுவதால் புதிய ஊற்றுக் கண்கள் திறந்து கிணறுகளுக்கு அதிகப்படியான நீர் கிடைக்கின்றது. இது காரியத் திற்காக, வெடி வைத்துக் கல்லைத் தகர்க்கும் பிரிவுகள் குறைந்த வீதத்தில் உழவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. தற்பொழுது நிலவள/வணிக வங்கிகள் இக்கடன் உதவியை அளிக்கின்றன. முன் பெல்லாம் கடன் பெற்றவர்கள் அனைவருக்கும், ஒவ்வொரு நேர்விலும் ரூ. 200 என்னும் பேரளவுக்கு உட்பட்டு கடனில் 10 சதவீதத் தொகை உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. இப்பொழுது இந்தச் சலுகை நிறுத்தப்பட்டு விட்டது. இத் திட்டம் 1964–65 முதல் செயலில் இருந்து வருகிறது.

உழவர்களுக்கு வெடி மருந்து கிடைப்பது கடினமாக இருந்தது. எனவே தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங் களில் வெடி மருந்துச் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. இத்



துறை வெடி மருந்துகளை வாங்கி, சேமித்து வைத்து உழவர்களுக்கு வழங்குகிறது. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம், வட ஆற்காடு மாவட்டங்களில் இது போன்ற வெடி மருந்து சேமிப்பு கிடங்குகள் கட்டும் பணிகள் நடந்தேறி வருகின்றன.

## வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம்

குறைந்த ஆழத்திலேயே நீர்க்கசிவு கொண்ட மணல் இருப்பதனால் பாசனக் கிணறுகள் அமைப்பது கடினமாக உள்ள பகுதிகளில் வடி முனைக் குழாய்க் கிணறுகள் தோண்டப் படுகின்றன. வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு மிகக் குறைந்த செலவே ஆகிறது; கட்டுவதும் எளிது, மேலும், இக்கிணற்றிலிருந்து பாசனத்திற்கு ஏராளமாகத் தண்ணீர் கிடைக்கிறது. இத்திட்டத்திற்கும் கடன் வழங்கு வதை அரசு நிறுத்தி விட்டது. நிலவள/வணிக வங்கிகள் கடன் உதவி செய்கின்றன. 16—10—1971 வரையில் தோண்டி முடிக்கப்பட்ட கிணறுகளுக்கு ரூ. 150 என்னும் பேரளவுக்கு உட்பட்டு கடன் தொகையில் 10 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. அதன்பின்னர், சிறு உழவர்களுக்கும் சிறு உழவர்கள் தொகுதிக்கும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது.

## ஊருணிக் கிணறுகள் திட்டம்

சிறு உழவர்களுக்கு உதவுவதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தில் 50 ஊருணிக் கிணறுகள் தோண்டி பின்னர் பாசனக்காரியங் களுக்காக அவற்றை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங் களுக்கும் மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கிணறுகளில் பொருத்து வதற்கான விசையேற்றங்கள், கடன் அடிப்படையில் வழங்கப்படும் நீரேற்று இயந்திரத்திற்கான செலவில் 75 சதவீதம் கடனாகவும், 25 சத வீதம் உதவித் தொகையாகவும் கருதப்படும். எஞ்சிய தொகையை ஊராட்சிகளும் கூட்டுறவுச் சங்கங்களும், அரசினால் அவ்வப்போது வரை யறுக்கப்படும் வீதத்தில் சென்டேஜ் கட்டணங்கள் வட்டி ஆகியவற்றையும் சேர்த்துச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் விசையேற்றங் கள் செயல்படத் தொடங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தவணை செலுத்தப்படவேண்டும். நடைமுறைச் செலவு முழுவதையும் நிறுவ னங்கள் ஏற்க வேண்டும். இந்த நிறுவனங்கள் பயன் துய்ப்போரிடமிருந்து தண்ணீர்த் தீர்வை வசூலிக்கவும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்து வதற்காகத் தொகை வசூலிக்கவும் அனுமதிக்கப்படுகின்றன. இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவோர், இக்கிணற்றுப் பாசனத்தினால் விளைந்த பயிருக்காகத் தண்ணீர்த் தீர்வை செலுத்த வேண்டும். கிராமங்களில் அத் தகைய பாசனத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள வீதத்தில் இத்தீர்வை வசூலிக்கப்படும். இது வரையில், இத் திட்டத்தின் கீழ் 20 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இதுகாறும் இத் திட்டத்தை வேளாண்மைத் துறை நிர்வகித்து வந்ததற்குப் பதிலாக, இனிமேல் ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வகித்து வரும்.

1971-72 வரையில் எய்திய சாதனை 1972-73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு, சாதனை, 1973-74-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு, எதிர்பார்க்கப்படும் சாதனை ஆகியவை குறித்த விவரங்கள் 'ின் வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | சாதனை 1971-72 வரை. | 1972-73 குறிக்கோள் அளவு. | 1972-73 சாதனை 1972 அக்டோபர் வரை. | 1973-74 குறிக் கோள் அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (எண்ணிக்கையில்.) | | |
| (1) தனியார் குழாய்க் கிணறுகள் (1958). | 15,753 | 2,531 | 1,689 | 2,750 |
| (2) துளைக் கிணறுகள் (1966). | 3,922 | 719 | 441 | 900 |
| (3) வடிமுனைக் குழாய்க் கிணறுகள் முதல் திட்டம். | 20,563 | 2,540 | 1,321 | 3,300 |
| (4) கிணறுகளை ஆழப்படுத்துதல் (1965-66). | 5,426 | 1,405 | 1,040 | 900 |
| (5) ஊருணிக் கிணறுகள் (1969-70). | 20 | .. | .. | 10 |

## மண்வளப் பாதுகாப்பு

பொருத்தமான மண் அரிப்புத் தடுப்பு முறைகளை மேற்கொண்டு
மண் வளத்தைப் பாதுகாப்பதும், பயிர் வளர்ச்சிக்குத் தேவையான
ஈரத் தன்மையைப் போதுமான அளவில் பாதுகாப்பதுதான் இத் திட்டத்
தின் முக்கிய நோக்கமாகும். அதிக அளவில் மழை பெய்யும் இடங்
களிலும், நீலகிரி போன்ற சரிவு நிலப் பகுதிகளிலும் தக்கவாறு
அமைக்கப்பட்ட வெளியேற்றுக் கால்வாய் மூலம் அதிக அளவு நீரை
வெளியேற்றுவதும் இம் முறைகளின்கீழ் அடங்கும். உள்ளூரில் கிடைக்
கும் கூலியாட்களை வேலைக்கு வைத்துக்கொண்டு முக்கியமாக விவசாயம்
செய்ய இயலாத பருவத்தில் பல்வேறு மண்வளப் பாதுகாப்பு, நீர்ப்
பாதுகாப்பு குறித்த பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. விவசாய
மல்லாத பருவத்தில் அதிகமாக இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவதால்,
ஏராளமான விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு வேலை
கிடைக்காமல் இருக்கும் காலத்தில் இத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு
அளிக்க வசதியாய் உள்ளது.



நீரினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கும் முறைகளில் மண்
நீர் வளப் பாதுகாப்பு பணியின்கீழ் ஒவ்வொரு சரிவுப் பாத்தியிலும்
அல்லது சுற்றிலும் கரை கட்டப்பட்ட பாத்திகளிலும் பரவலாகத் தண்ணீர்
தேக்கப்படுகிறது. இவ்வாறு தேக்கப்பட்ட தண்ணீர் மண்ணில் கசிந்து
பூமிக்குள் சென்று தங்குகிறது. திட்டப் பகுதியிலும் திட்டப் பகுதியைச்
சுற்றிலும் உள்ள கிணறுகளின் நீரின் அளவும் பொதுவாகப் பூமிக்கடியில்
உள்ள நீர் மட்டமும் இதன் விளைவாக உயர்கிறது. நீர்ப் பரப்புப்
பகுதியில் அல்லது பூமிக்கடியில் உள்ள நீர் பரப்புப் பகுதியில் தண்ணீர்
அளவை அதிகரிப்பதன் மூலம் எல்லா வகை நிலங்களுக்கும் ஏற்ற
வகையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.
அதிக அளவு விளைச்சல் தரும் நிலப் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப்
பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன; தஞ்சாவூர் மாவட்டத்தின் காவிரி
கயவாய்ப் பகுதியிலும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்
பட்டன. இங்கு நிலத்தைச் சமன் படுத்துதல், பாசனத்தை முறைப்
படுத்துதல், வடிகால்கள், வயல் வரப்புகளைப் புதுப்பித்தல் அல்லது
பழுது பார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது
வட ஆர்க்காடு மாவட்டத்தில் சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டத்தின்
அதிக விளைச்சல் தரும் பகுதிகளிலும் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
மண்வளப் பாதுகாப்புப் பணிகளின்கீழ் இதுவரை சமவெளி, மலைப்
பகுதி உள்ளிட்ட 14 லட்சம் எக்கரில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
1973-74-ம் ஆண்டு 1·20 லட்சம் எக்கரில் மண்வளப் பாதுகாப்புப்
பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்குச் சமவெளியில் எக்கர் ஒன்றுக்குச்
சராசரி ரூ. 60 முதல் 65 வரை செலவாகிறது; மலைப் பகுதிகளில் எக்கர்
ஒன்றுக்கு ரூ. 650 முதல் ரூ. 750 வரை செலவாகிறது. இத் திட்டத்திற்
காகும் மொத்தச் செலவில் சமவெளிப் பகுதியில் 25 சத வீதமும்
மலைப் பகுதியில் 40 சத வீதமும் உதவித் தொகையாக அனுமதித்த
பிறகு மீதி செலவுத் தொகை இப் பணிகள் முடிவுற்ற இரண்டாண்டு
களுக்குப் பிறகு 10 ஆண்டு சம தவணைகளில் விவசாயிகளிட
மிருந்து வசூலிக்கப்படுகிறது. செலவுத் தொகை வசூலித்ததிலிருந்து
தளர்த்தப்பட்ட முதல் இரண்டாண்டுகளுக்கு எவ்வித வட்டியும் வசூலிக்கப்
படுவதில்லை. விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் திட்டச் செலவில்
பணியாளர்களுக்காக ஏற்பட்ட செலவில் குறிப்பிட்ட ஒரு சத வீதத்
தொகையும் நிர்வாகச் செலவுகளும் அடங்கும். விவசாயிகளின் இடர்
களைக் குறைப்பதைக் கருத்திற்கொண்டு மேற்சொன்ன கட்டணங்களை
வசூலிக்காமல் விட்டு விடுவது குறித்து அரசு தற்போது பரிசீலித்து
வருகிறது.

மண்வளப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டதால், சமவெளிப்
பகுதிகளில் எக்கர் ஒன்றுக்குக் கூடுதலாக $\frac{1}{2}$ டன் அரிசி உற்பத்தி கிடைக்
கும் என்றும் மலைப் பகுதிகளில் உருளைக்கிழங்கு விளைச்சலில் கூடுதலா
27 சத வீதம் உற்பத்தி கிடைக்கும் என்றும், மதிப்பிடப்பட்டுள்ளது
விவசாயிக்குக் கிடைத்த இத்தகைய அதிக அளவு நிகர வருமானத்தில்
பணிகளுக்கான செலவின் ஆண்டுத் தவணைகளை எவ்விதப் பணத் தொல்
லையுமின்றி விவசாயி திருப்பிச் செலுத்த முடியும்; நிகர வருமானத்தில்
ஆண்டுத் தவணைத் தொகை போக எஞ்சியுள்ள தொகையைக் கொண்டு
விவசாயி தன் பொருளாதார நிலையையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.

நீலகிரி மாவட்டத்தில் ப்ளைட் நோயினால் உருளைக்கிழங்கு பயிர் பாதிக்கப்பட்டு மிகவும் இழப்பு ஏற்பட்டதால் அங்குள்ள விவசாயிகள் மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையைத் திருப்பித் தர முடியவில்லையென்று அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. மண்வளப் பாதுகாப்பு வேலைகள் நீர் மின் திட்டத்திற்கு மறைமுகமாக உதவுவதால் மின் வாரியம் மொத்தச் செலவுத் தொகையில் 50 சதவீதம் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் கருத்துரைக்கப்பட்டது. மின் வாரியம் அச் செலவுத் தொகையை ஏற்க இயலாது எனக் கூறிவிட்டது. விவசாயிகளின் துன்பங்களைக் கருதி நீலகிரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து 30—9—72 வரை திருப்பிப் பெறவேண்டிய தொகையான ரூ. 29·76 லட்சம் முழுவதையும் தள்ளுபடி செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

### ஈடு செய் வீதத்தில் மண்ணைப் பண்படுத்தும் பொருள்களை வழங்குவதற்கான திட்டம்

களிக்கல் (Gypsum), சுண்ணாம்பு போன்ற மண் வளத்தைப் பண்படுத்தும் பொருள்கள் 50 சதவீத ஈடு செய் விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மண் வளத்தைப் பண்படுத்தும் பொருள்களை ஈடுசெய் விலை போக பாதி விலைக்குக் கூட வாங்க முடியாத விவசாயிகளுக்குக் கடனுதவி வழங்கப்படுகிறது.

1972–73-ஆம் ஆண்டில் ரூ. 2·60 லட்சம் செலவில் 2,000 மெட்ரிக் டன் களிக்கல், 500 மெட்ரிக் டன் சுண்ணாம்பு ஆகியவற்றை உற்பத்தி செய்ய வகை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து நல்ல ஆதரவு கிடைத்துள்ளதால் இத்திட்டத்தை 1973–74-ஆம் ஆண்டிலும் 1972–73 ஆம் ஆண்டுக்கான அதே அளவு குறிக்கோளுடன் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### மண் வளத்தைப் பண்படுத்தும் பொருள்களின் கட்புல விளக்கத் திட்டம்

இம் மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மண்ணைப் பண்படுத்தும் பொருள்களை ஈடுசெய் விலையில் விற்பனை செய்யும் திட்டத்திற்கு ஆதரவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் 100 ஏக்கர் நிலத்தில் மண்வளத்தைப் பண்படுத்தும் பொருள்கள் கட்புல விளக்கத் திட்டம் நடத்தப்பட்டது. மண்வளத்தைப் பண்படுத்தும் பொருள்களான சுண்ணாம்பு அல்லது களிக்கல்லை முறையே உவர் அல்லது களர் மண் நிலத்தில் போட்டுப் பயிரிடுவதன் பயனை விளக்குவதுதான இக்கட்புல விளக்கத் திட்டத்தின் நோக்கமாகும். இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தில் உள்ள (PH) மதிப்பு உரிய அளவுக்கு உயர்கிறது; இதன் மூலம் அந்த நிலங்கள் ஆதாயமான பயிர் விளைச்சலைக் கொடுக்கும். இத் திட்டம் 1972–73 ஆம் ஆண்டில் 8 வட்டாரங்களில் 100 ஏக்கர் நிலத்தில் மொத்தம் ரூ. 1·20 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1973–74 ஆம் ஆண்டிலும் இதே குறிக்கோள் அளவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த இரு திட்டங்களும் 1968–69 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



### தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர் பயன், நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதல் ஆகியவை குறித்த ஆராய்ச்சி நிலையம்

தமிழ் நாட்டில் ஆற்றுப் பாசன வளம் முழுவதையும் பயன்படுத்தி விட்டதால், ஊற்று நீரை வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் உரிய அளவுக்குப் பயன்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. எனவே, மொத்தம் ரூ. 9·65 லட்சம் செலவில் இம் மாநிலத்தில் குறிப்பாக காவிரி கயவாய்ப் பகுதியில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் குறித்த ஆராய்ச்சியை ஐந்தாண்டுக் கால அளவுக்கு மேற்கொள்ள மண் வள நிர்வாகம் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை, தஞ்சை மாவட்டத்தில் அரசு ஏற்படுத்தியது. இம் மாநிலத்தில் நீர் பயன்படுத்தும் முறை, நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய இந்நிலையம் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளும். விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கும் பயிர் விளைச்சலை அதிக அளவுக்கு உயர்த்தவும், இதன் மூலம் மாநிலத்தின் உணவு உற்பத்தி அதிக அளவு பெருகுவதற்கும், நீரைப் பயன்படுத்துவதில் உதவுவதிலும், இத்தகைய ஆராய்ச்சியின் முடிவு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. இந்த ஆராய்ச்சி நிலையம் 1972, ஆகஸ்டு முதல் தஞ்சாவூர் மாவட்டம் காட்டுத் தோட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் இப்போது தொடக்க நிலையில் உள்ளது.

### வேளாண்மைத் தகவல்—வேளாண்மை குறித்து செய்திப் படங்களைத் தயாரிப்பதற்கான திட்டம்

மிகச் சிறந்த தகவல் தொடர்பு சாதனமாகவுள்ள செய்திப் படங்கள் மூலம் ஏராளமான உழவர் பெருமக்களின் நாட்டத்தை ஈர்க்கமுடியும்; மேலும் இச்செய்திப் படங்கள் பொழுதுபோக்கையும் அளிக்கின்றன.

நான்காவது திட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகையாக "வேளாண்மைத் தகவல்" இனத்தின்கீழ், ஒதுக்கப்பட்ட ரூ. 20 லட்சம் தொகையில் இத்திட்டத்துக்காக ரூ. 6 லட்சம் தனியாக ஒதுக்கப்பட்டது. நான்காவது திட்டக் காலத்தில் 1969–70 முதற்கொண்டு மொத்தம் ரூ. 2·50 லட்சம் செலவில் அரசு இதுவரை ஆறு செய்திப் படங்களைத் தயாரிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றில் பின்வரும் பொருள் குறித்த 3 செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டன; இந்திய அரசு செய்திப் பிரிவின் மூலம் அண்மையில் இப்படங்கள் வெளியிடப்பட்டன :—

(i) அதிக விளைச்சல் தரும் ரகங்கள்.

(ii) உரங்கள்.

(iii) பயிர்ப் பாதுகாப்பு.

பின்வரும் பொருள் குறித்த எஞ்சிய மூன்று செய்திப் படங்களைத் தயாரிக்கும் பணி சென்னை-20, தமிழ்நாடு அரசு செய்திப் பிரிவின் தயாரிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது :—

(i) நெல் பயிரிடுதல்.

(ii) பருத்தி பயிரிடுதல்.

(iii) விசைத் தெளிப்பான்களைப் பேணுதல்.

**1973–74** ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. **1·53** லட்சம் செலவில் மேற்கொண்டும் மூன்று செய்திப் படங்களைத் கறுப்பு, வெண்மையில் இரண்டும், வண்ணப் படம் ஒன்றும் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. **1973–74** ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

**1971**, ஜூன் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கியது. கோயம்புத்தூர், மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகள், ஐந்து ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றை நடத்தும் பொறுப்பு இப்பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டு கல்லூரிகளிலும் **1,054** பட்ட வகுப்பு மாணவர்களும், **256** பட்ட மேற்படிப்பு வகுப்பு மாணவர்களும் பயிலுகின்றனர். இப்பல்கலைக் கழகத் தின் பயிற்றுத் திட்டம், நமது மாநிலத்திலுள்ள நிலைமைகளுக்கேற்பவும் பாடத்திட்டத்தை இக்காலத்திற்கேற்ப மேலும் புதுமுறைப்படுத்தியும் சீரமைக்கப்பட்டது. உழவர்கள் பயனடையும் வகையில் பயிரிடுவதில் ஏற் படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆராய்ச்சிப் பண்ணைகள் முழு வதுமாகச் சீரமைக்கப்பட்டன. உழவர்களின் வாலாய மொழியிற் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுதல், உழவர்களின் பயனுக்காக அறிவியல் கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துரைத்தல் ஆகிய பணிகளை பல்கலைக் கழகத்தின் கல்வி வளர்ச்சிப் பிரிவு மேற்கொண்டுள்ளது. இப்பணியில் இரண்டு வேளாண்மைக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள விவசாயிகள் பயிற்சி நிலையங்கள் இரண்டும், தென்னூர்க்காடு, திருச்சி ராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் தேசிய கட்புல விளக்கப் பிரிவுகள் மூன்றும் கல்வி வளர்ச்சிப் பிரிவுக்கு உதவி புரிகின்றன.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் பல்கலைக் கழக எல்லைக்குள்ளேயே வேளாண்மை பொறியியல் கல்லூரி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தியுள்ளது. ஐந்தாண்டு பி.ஈ. (வேளாண்மை) வகுப்பில் **40** பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வேளாண்மை, பொறியியல் ஆகிய வற்றின் அடிப்படைக் கூறுகள், மண் வளப் பாதுகாப்பு, நீரைச் சிக்கன மாகப் பயன் படுத்துதல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி, விவசாய இயந்தி ரங்கள், பண்ணை விளைபொருள்களை முறைப்படுத்துதல், பண்ணை அமைப்புக்கள் ஆகியவை குறித்து அறிவு புகட்ட இப்பாடமுறை வகை செய்கிறது. கல்லூரி ஆசிரியர்கள் இப்பிரிவுகளில் குறிப்பிடத்தக்க அளவு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.



பல்கலைக் கழ்கத்தில் உயிரியல், பௌதிக விஞ்ஞானம், சமூக விஞ்ஞா
ணம், மொழிகள் துறைகளுடன் அடிப்படை அறிவியல்—கலையியல் பட்டத்
துறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மையின் அடிப்படைக்
கூறுகள் குறித்து ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதில் இத்துறைகள்
உதவி புரியும் ; பட்ட வகுப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்பு மாணவர்களுக்கு
அடிப்படைக் கூறுகள் குறித்து இத்துறைகள் பயிற்றுவிக்கும். அறிவியற்
புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்தல், வேளாண்மை குறித்த
புத்தகங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடுதல் ஆகியவற்றை
மொழிகள் துறை கவனித்துக் கொள்கிறது.

**1973–74**-ஆம் ஆண்டில் வேளாண்மைப் புள்ளி விவரம், வேளாண்மை
வாணியல் ஆகியவற்றில் சில புதிய பணிகளை ஏற்படுத்துவதன் மூலம்
கோயம்புத்தூர், மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகள், கோயம்புத்
தூரிலுள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரி
கள் மேற்கொண்டும் விரிவுபடுத்தபடவுள்ளன. வனஇயல்,
மீனளம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக
இவற்றில் புதிய துறைகள் ஏற்படுத்தப்படவுள்ளன. பல்கலைக் கழகத்தின்
நிர்வாகத்தின்கீழ் கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலுள்ள ஐந்து
ஆராய்ச்சி நிலையங்களிலும் ஆராய்ச்சிப் பணிகள் மேலும் வலுவாக்கப்படும்.
பாசனப் பயிர், மானவாரிப் பயிர், கால்நடை வளர்ப்பு ஆகியவை
குறித்தும், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதியில் நீரைச் சிக்கன
மாகப் பயன்படுத்துதல், வடிகால் பிரச்சினைகள் ஆகியவற்றைச் சமாளிப்ப
தற்காகவும் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள புதிய பலநோக்கு
ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த பல்கலைக் கழகம் கொள்கை
அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

**1973–74** ஆம் ஆண்டுக்கான மொத்த வரவு-செலவு திட்ட மதிப்பீடு
ரூ. **211·586** லட்சம் ஆகும். இதில் இந்திய அரசு ஆதரவு தரும் திட்டங்
கள் வகையில் சுமார் ரூ. **44** லட்சம் இடைக்கும். பண்ணைகள் ஆராய்ச்சி
நிலையங்கள், கல்லூரிப் பயிற்சிக் கட்டணங்கள் ஆகியவைகளின் மூலம்
ரூ. **15** லட்சம் அளவுக்கு வருவாய் இடைக்கும். தமிழ்நாடு அரசுக்கு
ஏற்படும் நிகர செலவு ரூ. **157·923** லட்சம் ஆக இருக்கும் என்று மதிப்
பிடப்பட்டுள்ளது. இவற்றில் இரண்டாம் பகுதி ஆராய்ச்சி திட்டங்களுக்
கான செலவு, இந்திய அரசு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்,
ஆகியவற்றால் ஒரு பகுதிக்கு நிதிவசதி அளிக்கப்படும் திட்டங்களுக்கான
செலவும் அடங்கும். இத்திட்டங்களுக்காக இந்திய அரசும், இந்திய
வேளாண்மை ஆராய்சிக்கழகமும் மாநில அரசின் மூலம் நிதியுதவி
அளிக்கின்றன. **1973–74** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள மூல
தனப் பணிகளுக்காக ரூ. **17·432** லட்சம் செலவாகும். புதுரக நிலக்
கடலையைக் கண்டுபிடிப்பதற்கான மாற்று இனப் பெருக்கம், சிலவகை
நச்சுக் களைகளைக் கட்டுப்படுத்துதல், பயிர், மண் ஆகியவற்றில் தங்கிவருகிற
பூச்சிக்கொல்லி மருந்துகள் குறித்து ஆய்வு செய்தல், வாழையில் ஏற்படும்
புழுக்களை அழித்தல் குறித்த ஆய்வு ஆகிய பணிகள் பல்கலைக் கழகம்
மேற்கொள்ளவிருக்கிற புதிய ஆராய்ச்சித் திட்டத்தில் அடங்கும்.

| பகுதி. (1) | கோட்டம். (2) | அரசாங்க விதைப் பண்ணையின் பெயர். (3) |
|---|---|---|
| 22 தஞ்சாவூர் | .. மாயூரம் | .. திருக்கடையூர். |
| 23 தஞ்சாவூர் | .. கும்பகோணம் | .. சாக்கோட்டை. |
| 24 தஞ்சாவூர் | .. மன்னார்குடி | .. ஒரத்தூர். |
| 25 தஞ்சாவூர் | .. மன்னார்குடி | .. காஞ்சிகுடிகாடு. |
| 26 தஞ்சாவூர் | .. மன்னார்குடி | .. நெடும்பலம். |
| 27 தஞ்சாவூர் | .. மன்னார்குடி | .. கீரந்தை. |
| 28 தஞ்சாவூர் | .. மன்னார்குடி | .. தேவாம்பாள்பட்டிணம். |
| 29 தஞ்சாவூர் | .. நாகப்பட்டிணம் | .. சிக்கல். |
| 30 தஞ்சாவூர் | .. நாகப்பட்டிணம் | மூங்கில்குடி. |
| 31 தஞ்சாவூர் | .. பட்டுக்கோட்டை. | நாட்டுமங்கலம். |
| 32 மதுரை .. | .. மதுரை .. | .. விஜயகபுரம். |
| 33 மதுரை .. | .. பெரியகுளம் | .. வைகை அணை I (மேலம் கங்கல்). |
| 34 மதுரை .. | .. பெரியகுளம் | .. வைகை அணை II. |
| 35 மதுரை .. | .. பெரியகுளம் | .. கீழக்கூடலூர். |
| 36 மதுரை .. | .. கோடைக்கானல் | ரைபிள்ரேஞ்சு. |
| 37 மதுரை .. | .. கோடைக்கானல் | வில்ப்பட்டி. |
| 38 மதுரை .. | .. இராமநாதபுரம் | பரமக்குடி. |
| 39 மதுரை .. | .. சாத்தூர் .. | .. தேவதானம். |
| 40 திருநெல்வேலி | .. தென்காசி | .. மேலகரம். |
| 41 திருநெல்வேலி | .. தென்காசி | .. மணிமுத்தாறு. |
| 42 திருநெல்வேலி | .. நாகர்கோவில் | .. திருப்பதிசாரம். |
| 43 திருநெல்வேலி | .. திருநெல்வேலி | .. கரையிருப்பு. |
| 44 திருநெல்வேலி | .. தூத்துக்குடி | .. கிள்ளிகுளம். |
| 45 கோயம்புத்தூர் | .. பொள்ளாச்சி | .. கண்ணம்பாளையம். |
| 46 கோயம்புத்தூர் | .. பொள்ளாச்சி | .. பொங்கலூர். |
| 47 கோயம்புத்தூர் | .. பொள்ளாச்சி | .. பாப்பான்குளம். |
| 48 கோயம்புத்தூர் | .. சேலம் .. | .. முள்ளுவாடி. |
| 49 கோயம்புத்தூர் | .. சேலம் .. | .. மேட்டூர் அணை. |
| 50 கோயம்புத்தூர் | .. சேலம் .. | .. டேனிஸ்பேட்டை. |
| 51 கோயம்புத்தூர் | .. தர்மபுரி .. | .. பாப்பாரப்பட்டி. |
| 52 கோயம்புத்தூர் | .. தர்மபுரி .. | .. பவானிசாகர். |
| 53 கோயம்புத்தூர் | .. தர்மபுரி .. | .. சத்தியமங்கலம். |
| 54 கோயம்புத்தூர் | .. தர்மபுரி .. | .. பவானி. |
| 55 திருச்சி .. | .. புதுக்கோட்டை | .. அன்னை பண்ணை, குடுமியாமலை. |



## விற்சேர்க்கை VI.

### ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் இதுவரை திறக்கப்பட்டுள்ள இடங்கள்.

கோயம்புத்தூர் விற்பனைக் குழு—

1. திருப்பூர்.
2. பொள்ளாச்சி.
3. கோபிசெட்டிபாளையம்.
4. ஈரோடு.
5. கோயம்புத்தூர்.
6. பல்லடம்.
7. பெருந்துறை.
8. தாராபுரம்.
9. உடுமலைப்பேட்டை.
10. அம்மூர்.
11. புளியம்பட்டி.
12. வெள்ளகோவில்.
13. அந்தியூர்.
14. கொடுமுடி.
15. குன்னத்தூர்.
16. கிணத்துக்கடவு.
17. தொண்டாமுத்தூர்.
18. ஆனைமலை.
19. மேட்டுப்பாளையம்.
20. சத்தியமங்கலம்.
21. கவுண்டப்பாடி.

தென் ஆற்காடு விற்பனைக் குழு—

1. திண்டிவனம்.
2. விருத்தாசலம்.
3. திருக்கோயிலூர்.
4. கடலூர்.
5. உளுந்தூர்பேட்டை.
6. விழுப்புரம்.
7. பண்ருட்டி.
8. சின்ன சேலம்.
9. கள்ளக்குறிச்சி.
10. காட்டுமன்னார்கோவில்.
11. திட்டக்குடி.
12. செஞ்சி.
13. சிதம்பரம்
14. குறிஞ்சிப்பாடி.

வட ஆற்காடு விற்பனைக் குழு—

1. திருவண்ணாமலை.
2. வேலூர்.
3. ஆரணி.
4. ஆற்காடு.
5. திருப்பத்தூர்.
6. குடியாத்தம்.
7. வாண்டிவாஷ்.
8. அரக்கோணம்.
9. சேத்துப்பட்டு.
10. செங்கம்.
11. செய்யாறு.
12. வாணியம்பாடி.
13. போளூர்.
14. காவேரிப்பாக்கம்.
15. தக்கோலம்.

திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழு—

1. ஜெயங்கொண்டான்.
2. அரியலூர்.
3. கரூர்.
4. ஆலங்குடி.
5. மணப்பாறை.
6. ஆண்டிமடம்.
7. துறையூர்.
8. கீரனூர்.
9. புதுக்கோட்டை.
10. பெரம்பலூர்.
11. லால்குடி.
12. மனச்சநல்லூர்.
13. தொட்டியம்.
14. திருச்சிராப்பள்ளி.

தஞ்சை விற்பனைக் குழு—

1. சீர்காழி.
2. தஞ்சாவூர்.
3. பட்டுக்கோட்டை.
4. முத்துப்பேட்டை.
5. அதிராம்பட்டினம்.
6. மன்னார்குடி.
7. குத்தாலம்.
8. கும்பகோணம்.
9. திருவாரூர்.





தஞ்சை விற்பனைக் குழு—தொடர்ச்சி.

10. பாபநாசம்.
11. கந்தர்வகோட்டை.
12. கொரடாச்சேரி.
13. செம்பனார்கோவில்.
14. மதுக்கூர்.
15. அறந்தாங்கி.
16. பேராவூரணி.
17. திருத்துறைப்பூண்டி.
18. ஒரத்தநாடு.
19. வல்லம்.
20. கீவளூர்.
21. பேரளம்.
22. வேதாரண்யம்.
23. அம்மாபேட்டை.

கன்னியாகுமரி விற்பனைக் குழு—

1. ஈத்தாமொழி.
2. வடசேரி.
3. களியக்காவிளை.
4. தொடுவாதி.
5. திங்கள் சந்தை.

மதுரை விற்பனைக் குழு—

1. திண்டுக்கல்.
2. திருமங்கலம்.
3. தேனி.
4. மதுரை.

தர்மபுரி விற்பனைக் குழு—

1. தர்மபுரி.
2. ஓசூர்.
3. கிருஷ்ணகிரி.
4. கெலமங்கலம்
5. ஊறளூர்.

செங்கை விற்பனைக் குழு—

1. காஞ்சீபுரம்.
2. திருவள்ளூர்.
3. திருத்தணி.
4. செங்குன்றம்.

செங்கை விற்பனைக்குழு—தொடர்ச்சி.

5. நசரத்பேட்.
6. மதுராந்தகம்.
7. உத்திரமேரூர்.

திருநெல்வேலி விற்பனைக் குழு—

1. கோவில்பட்டி.
2. சங்கரன்கோவில்.
3. கடம்பூர்.
4. அம்பாசமுத்திரம்.
5. வள்ளியூர்.
6. புதூர்.
7. தென்காசி.
8. தூத்துக்குடி.
9. கழுகுமலை.
10. ஸ்ரீவைகுண்டம்.
11. திருநெல்வேலி.

இராமநாதபுரம் விற்பனைக் குழு—

1. விருதுநகர்.
2. ராஜபாளையம்.
3. சாத்தூர்.
4. அருப்புக்கோட்டை.
5. சிங்கம்புணரி.
6. பரமக்குடி.
7. இராமநாதபுரம்.
8. கமுதி.
9. சிவகங்கை.

## பிற்சேர்க்கை 7.

## ஆராய்ச்சி நிலையங்களின் பட்டியல்

### I. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள்

1. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம், தென் ஆற்காடு மாவட்டம்.

2. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.



3. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

4. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

5. கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர், தென் ஆற்காடு மாவட்டம்.

### II. வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள், துணை நிலையங்கள்

1. நெற்பயிர் ஆராய்ச்சி நிலையம், திரூர்குப்பம், செங்கற்பட்டு மாவட்டம்.

2. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பாலூர், தென் ஆற்காடு மாவட்டம்.

3. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம்.

4. கரும்பு ஆராய்ச்சி துணை நிலையம், சிறுகமணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

5. கரும்பு ஆராய்ச்சி துணை நிலையம், குடியாத்தம், வட ஆற்காடு மாவட்டம்.

6. பழ வளர்ப்பு நிலையம், கூனூர், நீலகிரி மாவட்டம்.

7. வாழை ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

8. பழ வகை ஆராய்ச்சி நிலையம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்.

9. நெற்பயிர் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்.

10. பருப்பு வகைகள் ஆராய்ச்சி துணை நிலையம், ஜெயங்கொண்டான், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

11. முந்திரி ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம், தென் ஆற்காடு மாவட்டம்.

12. தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

13. ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சேலம், சேலம் மாவட்டம்.

14. பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

[1973 மார்ச் 16

15. வாழை ஆராய்ச்சி நிலையம், வேலூர், வட ஆற்காடு மாவட்டம்.

16. தென்னை ஆராய்ச்சி நிலையம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

17. மலை வாழை துணை நிலையம், மங்கலம்கோம்பை, மதுரை மாவட்டம்.

18. பலவகைப் பயிர் ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூ மாவட்டம்.

19. கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், குடுமியாமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



1973 மார்ச் 16]

## இணைப்பு II

[38-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க.]

# கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு

### 1. கொள்முதல்

1972ஆம் ஆண்டில் வணிகர்களிடம் "லெவி" (விதிப்புக் கொள்முதல்) முறையில் நெல், அரிசி கொள்முதல் செய்யும் திட்டம், தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய நான்கு உபரி மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது. தொடக்கத்தில் 25 சத வீதமாக இருந்த "லெவி" வீதம் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் முதல் 15 சத வீதமாகக் குறைக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20-ம் நாளிலிருந்து வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், 1972ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாளிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திலும் "லெவி" முறை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டது. 1972ஆம் ஆண்டில் 1·10 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்படவேண்டுமென்று திட்டமிட்டிருக்க, 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் 1·09 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருந்தது.

லெவி முறையில் கொள்முதல் செய்ததைத் தவிர, முடையிருப்புகளை மேலும் பெருக்குவதற்காக 1972 சம்பாப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட் டத்தில் 57 கிலோ கிராம் கொண்ட நெல் மூட்டை ஒன்றுக்கு ரூ. 30-லிருந்து ரூ. 32 வரையுள்ள விலையில் வெளிச்சந்தையில் 33,230 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. விற்பனை செய்யத்தக்க உபரிக் குறுவை நெல்லை தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பு வதற்கு வசதி செய்யும் பொருட்டு, அந்த மாவட்டத்தில் செயலிலிருந்த லெவி முறையும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் 1972ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாளிலிருந்து நீக்கப்பட்டன. அதே நேரத்தில், விலைகள் சரிவதைத் தடுக்கும்பொருட்டு, நெல் உற்பத்தியாளர்கள் விற்பனை செய்த குறுவை நெல்லை அரசு அறிவித்த விலைகளில் அரசும், இந்திய உணவுக் கழகமும் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள் முதல் செய்ய அரசு ஏற்பாடு செய்தது. "லெவி" முறை மீண்டும் செயல்படுத்தப்பட்ட 1973ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ம் நாள் வரை 15,628 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

### கொள்முதல் விலைகள்

1971ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளிலிருந்து திருத்தி அமைக்கப்பட்ட கொள்முதல் விலைகள் 1972ஆம் ஆண்டு அக்டோபர்

திங்கள் 13-ம் நாள் வரை நீடித்தன. 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாளிலிருந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு விலைகள் ஏறு முகமாகத் திருத்தியமைக்கப்பட்டன:—

| | 1971ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளிலிருந்து 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ம் நாள் வரை. | 1972ஆம ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாளிலிருந்து. |
|---|---|---|
| 1. மிக நேர்த்தி .. | .. | குவின்டால் ஒன்றுக்கு, ரூ. 56 (புதிய வகைப் பாடு அறிமுகப்படுத்தப் பட்டது). |
| 2. நேர்த்தி .. | .. ரூ. 52.00 (குவின்டால் ஒன்றுக்கு). | ரூ. 54.00 (குவின்டால் ஒன்றுக்கு). |
| 3. நடுத்தரம் .. | .. ரூ. 49.00 (குவின்டால் ஒன்றுக்கு). | ரூ. 51.00 (குவின்டால் ஒன்றுக்கு). |
| 4. மோட்டா ரகம் | .. ரூ. 46.00 (குவின்டால் ஒன்றுக்கு). | ரூ. 47.00 (குவின்டால் ஒன்றுக்கு). |

நடுத்தர ரகங்களுக்கு ஏறுமுகமாக விலைகளை மாற்றியமைத்ததன் விளைவாக, மிகுபயன் தரும் ரகங்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டு வந்த ரூ. 1, 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது.

### அரிசிப் பங்கீடு

வெளிச் சந்தையில் அரிசி கிடைப்பதையும், அதன் விலையையும், வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி வாயில்களைச் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, "படி அரிசி"த் திட்டம் 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளில் கைவிடப்பட்டது. ஆயினும் மாத வருவாய் ரூ. 300-ம், அதற்குக் குறைந்தும் பெறுகிற குடும்பத்தினர்க்காக, மலிவு விலைகளில் அரிசி வழங்கும் திட்டம் சென்னையிலும், கோயம் புத்தூரிலும் 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் செயல் படுத்தப்பட்டது. அற நிறுவனங்கள் அரிசன நல மாணவ விடுதிகள், அரசு மருத்துவமனைகள், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் ஆகிய வற்றுக்கும் மலிவு விலைகளில் அரிசி கிடைக்க வகை செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதிகளில் முன்பு உள்ளூர் மொத்த ...ரிகளிடமிருந்து வாங்கிய இருப்புகளிலிருந்து செய்யப்பட்ட பங்கீட்டு ...ப்படுத்தப்பட்டது) அரசே மேற்கொண்டது. இதனால் ...நெல் வரவுகளை மேலும் செவ்வையாகக் கட்டுப்



படுத்துவதற்கு வழி ஏற்பட்டது. தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட டங்களில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறைந்த அளவில் அரிசி பங்கீடு செய்யப் பட்டது. இவ்வாண்டில் வெளிச்சந்தையில் அரிசி விலை பெருமளவுக்கு ஏறாததால், பற்றுக்குறைப் பகுதிகளில் மலிவு விலைகளில் அரிசி வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை. தனியார் வாணிபம் நடைபெற வாய்ப் பளித்து, முடையிருப்பு வைத்துக்கொண்டு மிகக் குறைந்த அளவில் கட்டுப்பாடுகள் விதித்து, 1970 முதற்கொண்டு அரசு பின்பற்றி வரும் உணவுக் கொள்கை வெற்றி பெற்று வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். அரசு இருப்புகளிலிருந்து 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை வழங்கப்பட்ட அரிசி 57,740 டன்னாகும். இது தவிர வெளி அங்காடிகளில் பச்சரிசி விலைகள் மிக அதிகமாயிருந்த தால், இந்திய அரசு நமது மாநிலத்திற்கு ஒதுக்கிய 1,376 டன் நெல்லூர் பச்சரிசியும், 1,000 டன் (நேர்த்தியான) மத்தியப் பிரதேச பச்சரிசியும் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வாங்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

அவ்வப்போது முடிவு செய்யப்பட்ட மலிவு விலைகளில் வழங்கிய அரிசியின் விலை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(சில்லறை விற்பனை விலை—கிலோ கிராம் ஒன்றுக்கு.)

| | | |
|---|---|---|
| புழுங்கல் அரிசி முதல் தரம். .. | ரூ. 1·08 | 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் வரை. |
| | ரூ. 1·10 | 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ம் நாளிலிருந்து. |
| இரண்டாந்தரம் .. | ரூ. 1·02 | 1972ஆம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாள் வரை. |
| | ரூ. 1·04 | 1972ஆம் ஆண்டு மே திங்கள் 16-ம் நாளிலிருந்து. |
| பச்சரிசி முதல் தரம் .. | ரூ. 1·14 | 1971ஆம் ஆண்டு நவம்பர் 26-ம் நாளிலிருந்து. |
| | ரூ. 1·08 | 1972ஆம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் வரை. |
| இரண்டாந்தரம் .. | ரூ. 1·10 | 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாளிலிருந்து. |
| நெல்லூர் பச்சரிசி .. | ரூ. 1·32 | |
| மத்தியப் பிரதேச பச்சரிசி. .. | ரூ. 1·30 | |

## கள்ளக்கடத்தலைத் தடுக்கும் எதிர் நடவடிக்கைகள்

இம் மாநிலம் தொடர்ந்து தனி மண்டலமாக இருந்து வருகிறது.
இம் மாநிலத்திற்கு வெளியே நெல், அரிசி இவற்றை ஏற்றியனுப்புவதற்கு
அனுமதிச்சீட்டுகள் தேவையாகும். கேரள மாநிலத்திற்கு அனுமதி
யின்றி தானியங்கள் ஏற்றியனுப்பப்படுவதாக புகார்கள் வந்தவண்ணம்
உள்ளன. இவ்வாறு அனுப்பப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு
எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகளும், ரோந்துக் காவலர் பிரிவு
களும் பலப்படுத்தப்பட்டுள்ளன. உபரி மாவட்டங்களில் "லெவி"
முறை செயல்படுத்தப்படாமல், வேலை குறைந்துள்ள காலத்தில்,
மாவட்டங்களிலுள்ள பணியாளர்கள், எல்லைகளில் சோதனைப் பணியை
வலுப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர். எல்லைப் பகுதி
களில் சோதனையை மேலும் கடுமையாக்கும் நோக்கத்துடன், உள்ளூரில்
கிடைக்கும் தானிய அளவைக் கருத்திற்கொண்டு எல்லைப் பகுதிகளில்
உள்ள ஒவ்வொரு வணிகருக்கும் பங்கீட்டு அளவுகளை முடிவு செய்து,
அதன்படி அந்தப் பகுதிக்குள் செல்லும் தானியங்களை முறைப்படுத்துமாறு
மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. எல்லைப் பகுதிகளுக்
குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் தானியங்கள் அந்தப் பகுதியில்
அவற்றைப் பயன்படுத்துவோருக்கே அவை விற்பனை செய்யப்படுகின்றனவா
வென்றும், நேர்மையற்ற வணிகர்களால் எல்லையைத் தாண்டி கள்ளத்
தனமாக கடத்திக்கொண்டு போகப்படாமலும் பார்த்துக்கொள்ளும்
பொருட்டு, சர்க்கரைப் பங்கீட்டிற்காக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளின்
பேரில் அரிசிப் பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டது. இந்த எல்லைப்
பகுதிகளில் நெல், அரிசி போக்குவரத்தை மிக விழிப்புடன் கண்காணித்து
வரவும், இந்த மாநிலத்திற்கு வெளியே நெல், அரிசி ஆகியவற்றைக்
கடத்திச் செல்வதற்காகக் கள்ளத்தனமாக இருப்பு கட்டி வைக்கப்
படுவதைத் தடுத்து நிறுத்தும் வகையிலும் எல்லையோரத்தில் 5 மைல்
சுற்றளவுக்குள் வருபவையும் ஏற்கெனவே போக்குவரத்துக் கட்டுப்பாடு
களின்கீழ் வருபவையுமான பகுதிகளைத் தவிர, கன்னியாகுமரி, கோயம்
புத்தூர், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் கட்டுப்பாட்டு விதிகளை
மீறுவதற்கு ஏதுவாயுள்ள பகுதிகளுக்கு அடுத்துள்ள பகுதிகளும், தமிழ்
நாடு 1970ஆம் ஆண்டு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாட்டு
ஆணையின்கீழ் அறிவிக்கப்பட்டன.

## அடுத்து வரும் ஆண்டிற்கான கொள்கை

சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் மாத வருவாய் ரூ. 300-ம்
அதற்குக் குறைந்தும் உள்ள குடும்பங்களுக்கு மலிவு விலைகளில் அரிசி
தொடர்ந்து வழங்கப்படும். அதற்காகவும், முடையிருப்புகட்டும் பொருட்டும்,
உபரி பகுதிகளில் செய்யப்படும் கொள்முதல்கள் மீதும் உபரிப் பகுதி
களிலிருந்து வெளியே அனுப்பப்படும் தானியங்கள் மீதும் "லெவி"
விதித்துக் கொள்முதல் செய்ய அரசு கருதியுள்ளது. முந்திய
ஆண்டுகளில் லெவி செயல்படுத்தப்பட்டுவந்த தஞ்சாவூர், வட ஆர்க்காடு,
தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைத் தவிர, இவ்வாண்டில்
உபரி விளைச்சல் பெற்றுள்ள மாவட்டங்களாகிய திருநெல்வேலி,
திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கும் லெவி முறை நீட்டிக்கப்பட்டுள்ளது.



இதற்கு முன்பு லெவி முறை செயல்படுத்தப்பட்டு வந்த கன்னியா குமரி மாவட்ட எல்லைப் பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங்களிலும், "லெவி" முறை தொடர்ந்து செயலில் இருக்கும். இது தவிர, "லெவி" முறை கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதற்கும் பொருந்தும். எல்லாப் பகுதிகளில் தானியம் வழங்கவும், இவ்வணிகத்தில் ஒழுங்கு முறையை நிலைநாட்டும் பொருட்டும் இந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய தானிய இருப்புகளை வெளிப்படுத்து வதற்காகவுமே இந்த "லெவி" முறை கொண்டுவரப்பட்டது.

## 2. கோதுமை

1972-ல் இந்திய அரசு 426,800 டன் கோதுமையை இம்மாநிலத் துக்கு ஒதுக்கியது. நவம்பர் வரையில் சராசரி திங்கள் ஒதுக்கீடு 35.000 டன்னாக இருந்தது. 1972 டிசம்பரில் இது 25,000 டன்னாகக் குறைக்கப் பட்டது. நாடு முழுவதிலும் ஏற்பட்ட பற்றுக்குறை காரணமாக ஜனவரி முதல் இது மேலும் திங்கள் ஒன்றுக்கு 15,000 டன்னாகக் குறைக்கப் பட்டது. 1972-ல் கோதுமைப் பொருள்கள் தயாரிப்புக்காக உருளைமாவு ஆலைகளுக்கு 402,295 டன் ஒதுக்கப்பட்டது. எஞ்சியவை பொதுப்பங்கீட்டு முறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காகப் பயன்படுத்தப் பட்டது.

### கோதுமைப் பொருட்கள் (மைதா/ரவை)

பல மாநிலங்களில் வறட்சி நிலைமைகள் நீடித்ததன் காரணமாக, கோதுமைக்கு அதிகத் தேவை ஏற்பட்டதால், மாவு ஆலைகள் தயாரிக்கும் கோதுமைப் பொருட்கள் முறையான பங்கீட்டின்கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்று இந்திய அரசு கருத்து தெரிவித்திருந்தது. இதற்கிணங்க கோதுமைப் பொருள்களைப் பெருமளவில் பயன்படுத்தி வந்தவர்களுக்கு அவர்கள் இதற்குமுன் செலவு செய்த பொருள்களின் அடிப்படையிலும் விற்பனை வரிக்காக மதிப்பிடப்பட்ட மொத்த வியாபாரத் தொகையின் அடிப்படையிலும் அவர்களுக்கு இப் பொருள்களுக்காக அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. சர்க்கரை வழங்கும் சில்லறை வியாபாரிகளின் மூலம், தேவை ஏற்படும்போதெல்லாம், குடும்ப அட்டைகளின் பேரில் குடும்பத்தினருக்கும் கோதுமைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

### கோதுமைத் தவிடு

இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமையின் அளவு குறைந்ததால், கோதுமைத் தவிடு உற்பத்தியும் குறைந்துவிட்டது. இதனால், கால்நடை வளர்ப்போர்க்கு, அனுமதிச் சீட்டின் பேரில், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாகக் கோதுமைத் தவிடு வழங்கும் முறை சென்னை மாநகரில் கொண்டுவரப் பட்டது. கால்நடை வளர்ப்போர் அனுப்பும் விண்ணப்பங்களைச் சரிபார்த்த பின்னர் அவர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க மாநகர் உணவுப் பொருள் வழங்கல் துணை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறை ஏனைய பெரிய நகரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளோ
ருக்குக் குறிப்பிட்ட அளவுக்கே கோதுமைத் தவிடு வழங்கப்படுகின்றது.

### 3. சிறு தானியங்கள்

1972ஆம் ஆண்டில், சிறு தானியங்கள் வெளி அங்காடியில் நியாய
மான விலைக்குத் தாராளமாகக் கிடைத்ததால், இம் மாநிலத்திற்கு
மைலோ ஒதுக்கப்படவில்லை. இம் மாநிலத்திற்குள் மக்காச்சோளம் அதிக
மாய்த் தேவைப்படாததால், உற்பத்தியாளர்களுக்கு நியாய விலை
கிடைக்கச் செய்வதற்காக, 1972ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மக்காச்
சோளம் ஏற்றுமதிக்காக அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. குஜராத்
அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், குஜராத் வெள்ளத் துயர் தணிப்புக்குழு
இங்கிருந்து 5,000 டன் கம்பும், 3,000 டன் மக்காச் சோளமும் ஏற்றுமதி
செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, குஜராத் அரசுக்கு
5,000 டன் மக்காச் சோளமும், 2,500 டன் கம்பும் வழங்குவதற்காக
அவற்றைக் கொள்முதல் செய்யும் வாய்ப்புபற்றிப் பரிசீலிக்கவும் அரசு
ஒப்புக்கொண்டுள்ளது. இதன் காரணமாக, மக்காச் சோளத்திற்குப்
போதுமான விற்பனை வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தனியார்
ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

### 4. சர்க்கரை

இந்திய அரசு, சர்க்கரை ஆலைகளுடன் செய்துகொண்ட ஓர் ஏற்பாட்டின்
படி, 1972 ஜனவரி முதல், சர்க்கரை ஆலைகளிலிருந்து உற்பத்தியாகும்
சர்க்கரையில் 60 சத வீதத்தை, அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அமைப்
புகள் மூலம் வழங்குவதற்காக எடுத்துக்கொண்டு இம் மாநிலத்திற்குத்
திங்கள் தோறும் சுமார் 10,000 டன் சர்க்கரையை ஒதுக்கி வந்தது.
நகர்ப்புற, கிராமப்புறப் பகுதிகளில் குடும்ப அட்டைகள் வழங்கப்
பட்டுள்ளன. உணவுப் பொருள்களையும் இன்றியமையாப் பிற பொருள்
களையும் பங்கீட்டு முறையின்கீழ் வழங்க நேரிட்டால், அப்படி வழங்கப்படும்
பொருள்களைப் பதிவு செய்வதற்கேற்ற வண்ணம் இந்த அட்டைகளில்
வகை செய்யப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்குக் குறைந்த அளவு ஒரு
கிலோ சர்க்கரையும் பேரளவாக 6 கிலோ சர்க்கரையும் வழங்குவதற்குட்
பட்டு, சர்க்கரை பயன்படுத்தும் அளவையொட்டி இது வருமானத்தைப்
பொறுத்தது. வெவ்வேறு பகுதிகளில் சர்க்கரை வழங்கும் அளவு
வரையறுக்கப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டில் 117,922 டன் சர்க்கரை
விற்பனையாயிற்று. சர்க்கரை ஆலைகள் மீது 60 சத வீதத்தில் சட்டப்படிக்
கான லெவி முறை 1972 ஜூலைத் திங்களில் கொண்டுவரப்பட்டது. இந்த
லெவி 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் 70
சத வீதமாக உயர்த்தப்பட்டது. மாநிலம் முழுவதிலும் 9,000-க்கும் அதிக
மான சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. இந்திய அரசு நிர்ண
யித்துள்ள லெவி விலைகளை வைத்து, லெவி சர்க்கரையின் விற்பனை விலை
1972ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ம் நாள் முதல் கிலோ ஒன்றுக்கு
ரூ. 1·85 ஆகக் குறைக்கப்பட்டது. பின்னர், சர்க்கரை விற்பனை விலை நாடு
முழுவதுக்கும் ஒரே சீரான விலையாக இருக்க வேண்டுமென்று இந்திய
அரசு முடிவு செய்ததன் விளைவாக, சர்க்கரை விலை 1972ஆம் ஆண்டு



அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 ஆகவும்,
1972 டிசம்பர் முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 2·15 ஆகவும் உயர்த்தப்
பட்டது. சர்க்கரை உற்பத்தி குறையுமென்று எதிர்பார்க்கப்பட்டதன் காரண
மாக, இம் மாநிலத்துக்கு வழங்கப்படும் சர்க்கரையின் அளவு திங்கள்
ஒன்றுக்கு ஏறத்தாழ 9,700 டன்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### 5. அரசு வணிகம்

1972-73ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை சட்ட மன்றத்தின்
முன் வைத்து முதலமைச்சர் உரையாற்றுகையில், இன்றியமையாப்
பொருள்களை உற்பத்தி செய்வோர், பயன்படுத்துவோர் ஆகியோரின் நல
னுக்காக இன்றியமையாப் பொருள்கள் வாணிபத்தை மேற்கொள்ள
தமிழ் நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தை அமைப்பது பற்றி
குறிப்பிட்டார். இக் கழகம் 1972 ஜூலை முதல் செயல்படத் தொடங்கியது.
அரிசிப் பங்கீட்டு முறை செயலில் இருந்து வரும் சென்னை, கோயம்
புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் உணவுப்பொருள் வழங்கல்
துறை பார்த்துவந்த அலுவல்கள், அதாவது அரிசி, சர்க்கரை, கோதுமை,
கோதுமைப் பொருள்கள் வழங்குவது போன்ற பணிகள் இக் கழகத்திற்கு
மாற்றப்பட்டன. கழகம் நலன்தரும் அளவிற்குச் செலவு செய்து இயங்கு
வதற்காக, "லெவி" தானியங்களைக் கொள்முதல் செய்வதோடு,
சர்க்கரை, கோதுமை வழங்கும் முறையை இணைக்க இயலும்போதெல்லாம்
பொதுப் பங்கீட்டு முறை மூலம் இப் பொருள்கள் வழங்கும் பணியும் கழகத்
திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோதுமைப் பொருட்கள் குறுகிய காலத்
திற்குள் கெட்டு விடுவதால் இப் பொருள்களை இருப்பு வைத்துக்கொள்
வதனால் ஏற்படும் விரயத்தைத் தவிர்க்கும் பொருட்டு கூடுமானவரை
ஆலைகள் அல்லது ஆலைகளிடமிருந்து கோதுமைப் பொருட்களை வாங்கி
இருப்பு வைத்துக் கொள்பவர்கள் மூலமாக கோதுமைப் பொருட்கள்
வழங்கப்படுகின்றன. நடப்புப் பருவத்திற்கான "லெவி" கொள்முதல்
பணியும் கழகத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களினால்
முன்னரே நிறுவப்பட்டு பின்னர் உணவுத் துறையிடம் ஒப்படைக்கப்
பட்டுள்ள நவீன அரிசி ஆலைகள், லெவி நெல்லைக் கொள்முதல் செய்து
அதனை அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. லெவி நெல்லைக்
கொள்முதல் செய்து அதனை வழங்குவதற்காக மாநிலக் கிடங்கு
வசதிக் கழகத்தின் பணியும் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளப்
படுகின்றது. பல நகர்ப்புறப் பகுதிகளில் சில்லறை விற்பனைக் கடைகளையும்
கழகம் நேரடியாகத் தொடங்கியுள்ளது. இதற்காகும் செலவைக் குறைக்
கும் பொருட்டு பல இடங்களில் மாநிலக் கிடங்கு வசதிக் கழகத்தின்
கிடங்குகளையும் மேற்படிக் கழகத்தின் பணியாளர்களையும் கழகம் பயன்
படுத்திக் கொண்டுள்ளது.

சட்டப்படி அரிசி, சர்க்கரை, கோதுமை போன்ற பொருள்களைப் பெறு
வதோடு, பருப்பு வகைகளை வெளி அங்காடிகளில் விற்பனை செய்யும்
பணியையும் கழகம் மேற்கொண்டுள்ளது. தற்போது இப் பருப்பு வகைகள்
சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாக வழங்கப்படுகின்றன. இப்
பருப்பு வகைகள் உற்பத்தியாகும் பகுதிகளில், வேளாண்மை தேசியக்
கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலமாக இவை கொள்முதல் செய்யப்
பட்டுள்ளன. இவற்றின் விற்பனையைப் பொறுத்து இந்த வாணிபம்
தகுந்தவாறு பெருக்கப்படும்.

இன்றியமையாப் பொருள்கள் பலவற்றின் விலைவாசிகளின் உயர்வு அரசுக்குக் கவலையைத் தருகிறது. அரிசி வாணிபத்தை முறைப்படுத்தும் பணி முழுவதும் மாநில அரசின் வரம்பிலேயே இருப்பதால்; அரிசி விலை கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், பிற பொருள்கள், குறிப்பாக பருப்பு வகைகள் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், அவற்றின் விலை உயர்வை நாம் தடுக்க முடியாத நிலையில் உள்ளோம். எண்ணெய் நிலையும் பெரும்பாலும் இதே தான். இம் மாநிலத்தில் வேர்கடலை போதுமான அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டாலும் கூட, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற பிற உணவு எண்ணெய்களை வெளி மாநிலங்களிலிருந்தே நாம் பெற வேண்டியுள்ளது. இவை உற்பத்தியாகும் பகுதிகளில் வறட்சி பரவலாக நிலவியிருந்ததன் காரணமாக, நடப்பாண்டில் இவை மிகக் குறைந்த அளவுக்கே கிடைத்து வருகின்றன. இதன் விளைவாக வேர்கடலைக்கு அதிகத் தேவை ஏற்பட்டது. நமது மாநிலமும் வறட்சியின் பிடியிலிருந்து முழுவதுமாக விடுபடவில்லை. தென் மேற்குப் பருவ மழை ஓரளவு பொய்த்ததன் காரணமாக, வேர்கடலை உட்பட கோடைகாலப் பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மற்றும், அது காரணமாகவே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு, நடப்பாண்டில் உழவு வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய இன்னல்கள் இருப்பினும், மத்திய அரசு இருப்பிற்கு ஒரு லட்சம் டன் அரிசி கொடுத்துதவ நாம் முன்வந்துள்ளோம். தவிர, குஜராத் அரசின் அனுமதி பெற்ற முகவர் அமைப்புகள் நமது மாநில வெளி அங்காடிகளில், கம்பு, மக்காச்சோளம் இவற்றைக் கொள்முதல் செய்யும் அளவிலிருந்து, குஜராத் மாநிலத்திற்கு அவற்றை 15,000 டன்னுக்கு மேல் ஏற்றுமதி செய்யவும் நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். நாட்டில் இக்கட்டான நிலைமை நிலவி வருவதைக் கருதி, பற்றாக்குறையாகவுள்ள பருப்பு வகைகள், உணவு எண்ணெய்கள் போன்ற பொருள்களைப் பயன்படுத்துவதில் ஓரளவு ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். உள்ளூரில் போதுமான அளவுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களையும்கூட, நாடு முழுவதின் நலனைக் கருதி நாம் அத்தகைய ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். விளைச்சல் குறைந்து விடுவதனாலும், பயிர்கள் சேதமடைவதாலும் உற்பத்தியாளரும் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளார். விலைகளைக் கட்டுப்படுத்துவதனால் உற்பத்தியாளர் மேலும் பாதிக்கப்படுவார். சில பொருள்கள் மீது பற்பல பகுதிகளில் வெவ்வேறு வகையில் தனிக் கட்டுப்பாடுகள் விதிப்பதனால், அப் பகுதிகளிலுள்ள மக்கள் அதிருப்தியடைகின்றனர். இத்தகைய இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்வதிலும், பற்றாக்குறைக் காலங்களில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அவற்றை, உற்பத்திப் பகுதிகளிலிருந்து, பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அனுப்புவதிலும் நாடு முழுவதற்குமான ஒரு கொள்கை வகுக்கப்படவேண்டும். பொதுப் பொருளாதார நிலையின் அடிப்படையிலேயே விலைவாசிகளை நிச்சயிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் விவசாயிக்கு நியாயவிலை கிடைக்கும்; பணவீக்கம் காரணமாக அவ்வப்போது ஈட்டுத்தொகைகள் பெறும் நகர மக்களோடு அவரும் நியாயம் பெற முடியும். எனவே, நாடு முழுவதுக்கும் பொருந்தும் விலைவாசி—ஊதியக்கொள்கையொன்று வகுக்கப்பட்டால் தான், இடைவிடாமல் ஏற்பட்டு வரும் இந்த விலைவாசிச் சிக்கலுக்கு நாம் நிலையான தீர்வு காண முடியும்.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (CA) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers Laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M.\|Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select\|Joint\|Select Committee, etc. |

(ii) Amendment to refer to Select|Joint Select Committee.
(iii) Amendment to circulate.
(iv) Motion to consider as reported by Select| Joint Select Committee.
(v) Amendment to re-commit to Select| Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. | .. Consideration of clauses of a Bill. |
| D.E.E | .. Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | .. Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | .. Demands for Supplementary Grants. |
| G.A. | .. Governor's Address. |
| G.D. | .. General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. | .. Half-hour Discussion. |
| Int. | .. Introduction stage of a Bill. |
| L.A. | .. Legislative Assembly. |
| L.C. | .. Legislative Council. |
| M. | .. Motion. |
| P.M. | .. Privilege Motion. |
| R\|Res. | .. Resolution. |
| St. | .. Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

SIXTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

13TH TO 16TH MARCH 1973.

(VOLUME XXXV. (Nos. 1 to 4.)

## A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—
BUDGET, 1973-74, VOTING :
Welfare of the Backward Classes, etc. .. .. 417-420

ADITANAR, THIRU SI. PA.—
BUDGET 1973-74, VOTING :
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. 576
Capital Outlay on Schemes of Government Trading.

Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. .. 328-329
District Administration and Miscellaneous ..

AGRICULTURE—
Mechanical Driers, Thanjavur district .. .. .. 388-389

PAGES

A—cont.

ALAGARSAMY, THIRU S.—
BUDGET, 1973-74, VOTING :
Agriculture .. .. .. .. .. .. 558
Capital Outlay on Agriculture .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading.
Land Revenue Department .. .. .. .. 288
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous ..
Medical .. .. .. .. .. .. 37
Public Health .. .. .. .. .. ..
Welfare of the Backward Classes, etc. .. .. 403

ALDA M. FOWLER, THIRUMATHI—
BUDGET, 1973-74, VOTING :
Medical .. .. .. .. .. .. 60-61
Public Health .. .. .. .. .. ..

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Allocation of seat in the front row to the Member of the Tamil Arasu Kazhagam (Point of Order) .. 32, 34
BUDGET, 1973-74, VOTING :
Medical .. .. .. .. .. 35, 36-37
Public Health .. .. .. .. .. .. 71-79
Welfare of the Backward Classes, etc. .. .. 403, 429-435, 474

ANBAZHAGAN, THIRU K.—
Alleged incorrect information given by Ministers (Point of Order) .. .. .. .. .. 269-270
B. Pharmacy Student's strike (St.) .. .. .. 265-267



PAGES

A—cont.

ANBAZHAGAN, THIRU K.—cont.
BUDGET 1973-74, VOTING :
Medical .. .. .. .. .. 34, 36, 38, 39, 40, 74-75, 78, 85, 89, 94-108
Public Health .. .. .. .. .. ..

ANIMAL HUSBANDRY—
Poultry farms, establishment in Coimbatore district. 253
Sheep, development of cross-breeding .. .. .. 250-253

ARCHAEOLOGY—
Idols excavated at Veedhividangan, case *re* .. 1-2

ARUMUGAM, THIRU C.—
Government Hospital at Madurantakam, reconstruction of Out-patient block .. .. .. 245-246

ARUMUGAM, THIRU S.—
BUDGET 1973-74, VOTING :
Welfare of the Backward Classes, etc. .. .. 443-446

B

BILL(S)—
Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972, Consd. .. .. .. .. 402

BIRD SANCTUARY—
Pranmalai, development as— .. .. .. .. 540

BOARD(S)—
ELECTRICITY :
Revenue Units at Athur, transfer of one unit .. 259

PAGES

B—cont.

BOMMAN, THIRU K. H.—

BUDGET 1973-74, VOTING :

Land Revenue Department .. .. .. .. 286, 304-307

State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous

Ootacamund-Calicut and Ootacamund-Mysore routes, new buses .. .. .. .. .. .. 544-547

BRIDGES AND CULVERTS—

Causeway near Manalmedu, construction .. .. 257-258

Foot bridge across Manniyaru, construction .. .. 374

C

CALLING ATTENTION—

Unemployed teachers of Tirunelveli district, fast .. 396-397

CHAIR—

ANNOUNCEMENTS :

Arrest of Thiru M. Chinnaswamy, M.L.A. .. .. 547

Points of Order, raising of .. .. .. 397-398

Release of K. T. K. Tangamani .. .. .. 475

RULINGS AND OBSERVATIONS—

*Absence of Opposition Parties :*

To a point raised that none of the leaders of the Opposition parties were present in the House during the discussion on a Demand at a particular time, the Chair expressed the view that it would be better if one of the leaders was present at least by turns . .. .. .. 296-297



PAGES

C—cont.

CHAIR—cont.

*Rulings and Observations—cont.*

*Prior intimation about non-attendance of Opposition Members of the House :*

A member rising on a point of order enquired whether the members belonging to some Opposition parties who were absent from the House en bloc had intimated the Chair about the reasons for their absence and got its permission in accordance with the established practice.

The Chair ruled that there was no point of order and observed that there was no such custom or practice that they should intimate their absence. But if any Member was absent for a certain number of days, there is provision for taking action. In the instant case, they had already intimated, though it was not a rule .. .. .. .. .. .. 392-393

*Adjournment Motion :*

A member rising to seek information about the notice of an Adjournment Motion given by another Member the Deputy Speaker observed that no Member other than a Member who has actually given notice of the Motion could speak on it .. .. .. .. .. .. 399

ALLEGATIONS—

General accusations against officials should be avoided .. .. .. .. .. .. 317

DEBATE—

*Reference to a particular community :*

Remarks attacking a particular community should be avoided .. .. .. .. .. .. 449

*Reference to Service Commission :*

It was desirable not to talk about the Service Commission in the House .. .. .. .. 451

DECORUM—

It would be better to speak without referring to anybody in his private, individual capacity .. 615

Members should not speak sitting .. .. .. 446

PAGES

C—cont.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

MATTERS *Subjudice*—

Certain remarks made by some Members and Ministers about the matter relating to the removal of Thiru Royappa, from the post of Chief Secretary, were ordered to be expunged as the matter was pending before the Supreme Court .. .. 441

MEMBERS' SEATS—

*Allocation of seats in the House to Members :*

With reference to a Point of Order raised regarding the allotment of seats to certain Members, the Deputy Speaker observed that the seats in the House were allotted to members at the discretion of the Speaker and the Chair was not going to abdicate the same.

All Members were treated alike in the House and all were equals wherever they were seated. Perhaps it would be appropriate if the matter was discussed at the meeting of the Rules Committee or other Committee meetings when Leaders of all parties were present .. .. 400–401

*Allotment of a seat to a Member of Tamil Arasu Kazhagam in the front row :*

A Point of Order was raised questioning the allotment of seat in the front row to the only member of the Tamil Arasu Kazhagam who had won the election on the symbol of the ruling party, though a seat in a back bench was allotted to the only Member of the Republican Party in the previous Assembly.

The Chief Minister cited an earlier precedent of the only Member of the Socialist Party having been allotted a seat in the front row.

The Deputy Speaker observed that he was even of the view that the discretionary power of the Chair in regard to allotment of seats was not necessary and that the matter could be settled when Leaders of Parties met together.



PAGES

C—cont.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

MEMBERS' SEATS—*cont.*

*Allotment of a seat to a Member of Tamil Arasu Kazhagam in the front row*—cont.

In the instant case, he observed that the Member had been allotted a seat as a Member of the Tamil Arasu Kazhagam .. .. 32–34

*Delay in allotment of seat to Thiru K. A. Mathialagan :*

A point of order was raised that though the Secretary of the A.D.M.K. Party in the Legislature had written a letter to the Deputy Speaker informing him of admission of Thiru K. A. Mathialagan, as a Member of their party and his election as Deputy Leader, and requesting allotment of seat to him, he had not been allotted a seat. It was alleged that by delaying the allotment of a seat to him, the member was prevented from coming to the House and taking part in the proceedings.

The Deputy Speaker pointed out that correspondence between members and the Deputy Speaker should not be raised in the House. He said that because of pressure of work there was some delay in allotting change of seat to Thiru Mathialagan who had already been allotted seat No. 135. There was, therefore, no intention on the part of anyone, much less the Deputy Speaker, to prevent him from coming to the House .. .. .. .. 280–285

It would be better if the members spoke from their respective seats .. .. .. .. 404

Members should occupy the seats allotted to them. They should not go hither and thither during Question hour .. .. .. .. .. 252

***Personal remarks :***

Certain personal remarks exchanged by Members were ordered to be expunged .. .. .. 445

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

POINT OF CLARIFICATION—

Should be limited to one sentence as that would always be better and it was left to the member's cleverness .. .. .. .. .. .. 443

Members might seek clarification as briefly as possible and should not make a speech .. .. 472

POINT OF ORDER—

*Admissibility* :

Though very important problems might arise from time to time, if every one of them were to be brought before the House and a request was made for a discussion of the same, adjourning the other business, it would affect the normal business of the House. So, rules of procedure for raising certain matters had been prescribed and these have to be scrupulously followed. When once a ruling was given by the Chair, that a motion was disallowed, it was not proper to raise it again in the House by means of a Point of Order. Information about such matters should not be sought in the House but should be sought in the Speaker's Chamber .. .. .. .. 399

With reference to points of order raised to seek information about motions given notice of by some members, the Deputy Speaker observed that it was not in order for Members to raise points of order to seek information about such motions for which he has withheld his consent in his Chamber itself and thus waste the time of the House. If such a practice was allowed in the House, it would be a bad precedent. So, in such matters, each one should act as a judge for himself and decide whether it was really a point of order and then raise it on the floor of the House.







CHAIR—*cont.*

POINT OF ORDER—*cont.*

*Admissibility*—cont.

Point of order could be raised only when there was any breach of the Rules of Procedure. Otherwise, if points of order were raised against the rules governing the raising of points of order they would be expunged from the proceedings of the House .. .. .. 397–398 616

*Brevity* :

Points of Order should be as brief as possible .. 268

*Minister's statement correcting an earlier statement*—

On 14th March 1973, the Minister for Health made a statement under Rule 82 correcting a statement made by him the previous day about the withdrawal of the strike by Pharmacy students. Thereupon, a Member rose on a point of order and stated that only innocuous wrong statements of facts and figures could be corrected by a statement under Rule 82. It was not in order to correct a wrong statement about an important event especially when the Minister asserted his statement the previous day and contradicted the averments of Opposition members which actually happened to be true as admitted by the Minister. Such a practice was deliberately adopted to gag the Opposition.

After hearing the Health Minister, the Deputy Speaker ruled that the point of order was not a very substantial one as the statement had not been wilfully made to mislead the House. 268–271

*Precedence* :

Even a Minister should yield whenever a point of order was raised .. .. .. .. 446

*Procedure* :

The Deputy Leader of a party rising on a point of order objected to the Chair calling another member to speak after him contrary to the established procedure of calling only opposition party leaders and then the Minister

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

PRIVILEGE MATTER—*cont.*

*Alleged misleading statement made by the Minister for Co-operation*—cont.

that he would not accept it as he would not consider that the Minister's statement could in any way have curtailed the freedom of speech and the self-confidence of a leading lawyer like the hon. lady member .. .. .. .. 393–395

*Notice in writing* :

Members desirous of raising matters of privilege should give notice of the same in writing and should not raise it all on a sudden on the floor of the House and request the Chair to waive notice. It would be a bad precedent to allow it and the Speaker should be given time to consider it .. .. .. .. .. 34

Questions and Answers—

*Supplementary questions* :

Expunging some supplementary questions the Chair appealed to Members to refrain from putting questions which wounded the feelings of a section of the people .. .. .. .. 264

General accusations should not be levelled .. 391

*Relevancy* :

A supplementary which did not relate to the main question was disallowed .. .. .. 13–14, 249

Supplementary questions should relate to the main question .. .. .. .. .. .. 241, 246

*Statistics* :

If members ask for statistics in their supplementary questions, the Minister could not furnish them off hand and so they need not answer such supplementaries .. .. .. 13–14



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings* :

After the Chair gave its ruling, if the members rose to give further explanation or clarification, it would necessitate the Speaker to give a further reply again and that would tantamount to disregarding his own ruling. Hence it was a wrong procedure that should not be permitted .. 398

CHELLIAH, THIRU KUZHA—

Budget, 1973–74, Voting—

Welfare of the Backward Classes, etc. .. .. 411–414

CHINNASAMY, THIRU M.—

Arrest (Ann.) .. .. .. .. .. .. 547

COLLEGE(S)—

B. Pharmacy Students' strike (St.) .. .. .. 265–267

COMMISSION(S)—

Central Planning, study on slum areas .. .. .. 524–528

COMMITTEE(S)—

Estimate—

Report on Fire Service Department, presentation .. 280

CURRENCY—

Fake notes, seizure at Mannargudi .. .. .. 4–7

D

DENNIS, THIRU N.—

Agriculture Department staff in Nilgiris district, grant of project allowance ... ... .. .. 388

Committee on Ceiling on Urban Property, Report .. 18

Devi and Devi Paradise Theatres, labour dispute .. 378–379

*D*—cont.

DENNIS, Thiru N.—*cont.*
Ennore-Tiruvanmayur underground railway, opening. 531-534
Fake notes, seizure at Mannargudi .. .. .. 4-7
Fish ponds, particulars .. .. .. .. .. 381-385
Lighted belt and batons for constables, supply .. 235-237
Measuring tapes, manufacture .. .. .. .. 14
Mechanised boats for fishermen, supply .. .. 379-381
Prosperity Brigade Volunteers, remuneration .. 12-14
Sheep, development of cross breeding .. .. .. 250-253
Teachers Training School at Dindigul, closure .. 237-240
"Tree top" hotels at Mudumalai Sanctuary, opening. 538-540
Wild life pockets in Kanyakumari district, preservation .. .. .. .. .. .. 538

DHARMALINGAM, Thiru A. P.—
Budget, 1973-74, Voting—
Agriculutre .. .. .. .. .. .. 556,
Capital Outlay on Agriculture .. .. .. 557-558
Capital outlay on Schemes of Government Trading 560, 579, 619-631, 632

DHARMANIGAM, Thiru N.—
Forest lands at Malaikkottalam, assignment to agriculturists .. .. .. .. .. .. .. 260
Government Hospital for Ariyalur .. .. .. 528
Rishivandiyam Primary Health Centre .. .. .. 528-529



*D*—cont.

DURAISAMY, Thiru S.—
Budget, 1973-74, Voting—
Welfare of the Backward Classes, etc. .. .. .. 420-423
Lightning Express buses, particulars .. .. .. 26-28
Private school at Velampalayam, taking over .. .. 9

E

EDMUND, Thiru G. R.—
Allocation of seat in the front row to the Member of the Tamil Arasu Kazhagam (Point of Order) .. 32
Budget, 1973-74, Voting—
Medical .. .. .. .. .. .. .. .. 62-67
Public Health .. .. .. .. .. .. ..
Letter written by Secretary A.D.M.K. Legislature party to Deputy Speaker (Point of Order) .. 280-282, 283

EDUCATION—
Schools and Colleges, standard of English .. .. 370-373

ELECTRICITY—
Cinema shows, supply of (St.) .. .. .. .. .. 401-402

EMPLOYEES—
Harijan Welfare Tahsildars .. .. .. .. 534-536
State Transport Department, supply of uniforms .. 389-391

ETTIAPPAN, Thiru P.—
Budget, 1973-74, Voting—
Welfare of the Backward Classes, etc. .. .. 415-416

EXPUNCTION(S)—
Question hour .. .. .. .. .. .. .. 6, 252, 264, 441, 445, 609, 610

PAGES

F

FACTORIES—

Agricultural implements, manufacture .. .. .. 23–24

FILMS—

Institute of Film Technology, Adayar, expansion of Film Studio .. .. .. .. .. .. 365–369

Studios, establishment in Co-operative Sector .. 369

FINANCIAL BUSINESS—

Budget, 1973–74, Voting—

Agriculture
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading. 556–633

Land Revenue Department
State Excise Duties
Stamps—Administraiton
District Administration and Miscellaneous 286–296, 297–337

Medical
Public Health 34–109

Welfare of the Backward Classes, etc .. .. 402–475

FISHERIES—

Fisherman reported missing, rescue operations .. 15–18

Fish ponds, particulars .. .. .. .. .. 381–385

Mechanised boats for fishermen, supply .. .. 379–381

FOOD—

Women and Children, supply of nutritious food .. 530



PAGES

G

GANAPATHY, Thiru N.—

Absence of Members, prior intimation (Point of Order) .. .. .. .. .. .. .. 392

Budget, 1973–74, Voting—

Welfare of the Backward Classes, etc. .. .. 407–411

GANAPATHY, Thiru T.—

Budget, 1973–74, Voting—

Land Revenue Department
State Excise Duties
Stamps—Administration
District Administration and Miscellaneous .. .. 298–301

GURUSAMI, Thiru N. V.—

Kanmois in Andipatty Constituency, construction .. 257

Rural Man-power Programme, work done in Andipatti Union .. .. .. .. .. .. .. 9–11

H

HANDE, Dr. H. V.—

Alleged incorrect information given by Ministers (Point of Order) .. .. .. .. .. 268–269

Budget, 1973–74, Voting—

Land Revenue Department
State Excise Duties
Stamps—Administration
District Administration and Miscellaneous .. .. 287, 288

Medical
Public Health 35, 36 88–94,

Welfare of the Backward Classes, etc. .. .. 446–448

Co-operation Minister's announcement re. filing of case against "Alai Osai" (Privilege Matter) .. 274–275

PAGES

*H—cont.*


HANDE, DR. H. V.—*cont.*

BUDGET, 1973-74, VOTING—*cont.*

Kallakurichi Co-operative Sugar Mills, alleged attack on workers (A.M.) .. .. .. .. .. 549-550

Tamil Pandits, strength .. .. .. .. 555

HARIJAN WELFARE—

Harijans of Erode taluk, house-sites .. .. .. 369-370

Harijans of Gummudipoondi sub-taluk, house-sites .. 537

HOSPITALS AND DISPENSARIES—

Ariyalur, opening of .. .. .. .. .. 253-255

Cancer Unit at Madurai, closure .. .. .. .. 528

Madurantakam, reconstruction of out-patient block .. 246-250

Rishivandiyam Primary Health Centre .. .. 245-246

Siddha dispensaries run by Hindu Religious and Charitable Endowment Department, number of B.I.M. Doctors .. .. .. .. .. 528-529

Stanley Hospital, utilisation of grants .. .. .. 30-37

HOTELS—

Mudumalai Sanctuary, opening "Tree top" hotels .. 257


I


INFORMATION AND BROADCASTING—

Radio Station for Thanjavur district .. .. 538-540

IRRIGATION—

Tube wells, loans for sinking .. .. .. 2-4


J


JAMES, THIRU J.—

Budget, 1973-74, Voting—

Medical .. .. .. .. .. .. .. 19-22

Public Health .. .. .. .. .. ..

Cancer Unit at Madurai, closure .. .. .. 246-250




PAGES

*J—cont.*


JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Budget, 1973-74, Voting—

Medical .. .. .. .. .. .. ..

Public Health .. .. .. .. .. .. .. 81-88


K


KAMATCHI, THIRU K.—

Budget, 1973-74, Voting—

Land Revenue Department .. .. .. ..

State Excise Duties .. .. .. .. ..

Stamps—Administration .. .. .. ..

District Administration and Miscellaneous .. .. 309-311

KANDAPPAN, THIRU S.—

Allotment of seats to Members (Point of Order) .. 400-401

KANDASAMY, THIRU K.—

Budget, 1973-74, Voting—

Land Revenue Department .. .. .. ..

State Excise Duties .. .. .. ..

Stamps—Administration .. .. ..

District Administration and Miscellaneous .. .. 311-315

Co-operation Minister's announcement *re.* filing of case against "Alai Osai" (Privilege Matter) .. .. 278-279

KANDASAMI, THIRU MANALI C.—

Budget, 1973-74, Voting—

Agriculture .. .. .. .. .. ..

Capital Outlay on Agriculture .. .. .. ..

Capital Outlay on Schemes of Government Trading 581-586

Medical .. .. .. .. .. .. ..

Public Health .. .. .. .. .. .. 52-57

Welfare of the Backward Classes, etc. .. .. 402-475

Estimates Committee, Report on Fire Service Department, presentation .. .. .. .. 280

PAGES

K—*cont.*


KANDASWAMY, THIRU M.—

Budget, 1973–74, Voting—

Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. .. .. 67–69

KARUNAINATHAN, THIRU S.—

Budget, 1973–74, Voting—

Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 577–579

KARUNANIDHI, DR. M.—

Allocation of seat in the front row to the Member of the Tamil Arasu Kazhagam (Point of Order) .. 32–33

Budget, 1973–74, Voting—

Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 591–592

Land Revenue Department .. .. .. .
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 330

Welfare of the Backward Classes, etc. .. .. 432, 438, 439, 470, 471, 474

Letter written by Secretary, A.D.M.K. Legislature Party to Deputy Speaker (Point of Order) .. 283

KARUPPIAH, THIRU A.—

Budget, 1973–74, Voting—

Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 572–574

KITTAPPA, THIRU N.—

Budget, 1973–74, Voting—

Beedi workers in North Arcot district, grievances .. 374–378
Causeway near Manelmedu, construction .. .. 257–258




PAGES

K—*cont.*


KITTAPPA, THIRU N.—*cont.*

Budget 1973–74, Voting—*cont.*

Committee on Ceiling on Urban Property, report .. 18
Drinking water-supply for Jayankondam .. .. 523
Film Studios, establishment in co-operative sector .. 369
Foot bridge across Manniyaru, construction .. 374
Harijan Welfare Tahsildars, jeeps for .. .. 534–536
Lighted belt and batons for constables, supply .. 235–237
Lightning Express buses, particulars .. .. 26–28
Manalmedu-Thiruthuraipoondi bus route, opening. 392
Nutrious food for women and children, supply .. 530
Pranmalai, development as Bird Sanctuary .. 540
Radio Station for Thanjavur district .. .. 2–4
Staff under Local Bodies, appointment .. .. 242–245
State Transport Department employees, supply of uniforms .. .. .. .. .. .. 389–391

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1973–74, Voting—

Agriculture .. .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 557

Land Revenue Department .. .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 286, 289, 317–319

Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. .. 36, 70–71

KRISHNAMOORTHI, THIRU V. (NELLIKUPPAM)—

Budget, 1973–74, Voting—

Welfare of the Backward Classes, etc. .. .. 448–451

Letter written by Secretary, A.D.M.K. Legislature Party to Deputy Speaker (Point of Order) .. 282

PAGES

L

LABOUR—
Beedi workers in North Arcot district, grievances .. 374–378
Devi and Devi Paradise Theatres, labour dispute .. 378–379

LANDS—
Committee on Ceiling on Urban Property, report .. 18
Encroachments in Gudalur taluk .. .. .. 18–19
Forest at Malaikottalam, assignment to agriculturists. 260
Kotturpuram, particulars *re* : acquisition .. .. 258–259

LATHEEF, THIRU M.A.—
Budget, 1973–74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 574–577
Medical .. .. .. .. .. .. 37–42,
Public Health .. .. .. .. .. .. 48
Welfare of the Backward Classes, etc. .. .. 471–473
Co-operation Minister's announcement *re* : filing of case against "Alai Osai" (Privilege Matter) .. 275–277
Testing clinics in State Transport Depots .. .. 28–29

LOCAL BODIES—
Staff, appointment .. .. .. .. .. 242–245

M

MADHAVAN, THIRU S.—
Kallakuruchi Co-operative Sugar Mills, alleged attack on workers (A.M.) .. .. .. .. .. 550–556

MARIMUTHU, THIRU A.R.—
Budget, 1973–74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 556
567–572
624



PAGES

*M*—cont.

MARIMUTHU, THIRU M.—
Revenue Units of Electricity Board at Athur, transfer of one unit .. .. .. .. .. .. .. 259

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1973–74, Voting :
Medical .. .. .. .. .. .. 36
Public Health .. .. .. .. .. ..

MATHIALAGAN, THIRU K. A.—
Budget, 1973–74, Voting :
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 590–599,
600
435–442
470
Welfare of the Backward Classes, etc. .. ..

MEASURING TAPES—
See 'Weights and Measures'.

MOTION(S)—
Ad. Motions :
Kallakurichi Co-operative Sugar Mills, alleged attack on workers .. .. .. .. .. .. 547–556

MUNUSAMI, THIRU R. R.—
Diamond Crown for Goddess Meenakshi, Madurai, details .. .. .. .. .. .. 261–265
Madras-Gingee, express buses for .. .. .. 542–544
Slum areas, study on .. .. .. .. .. 524–528

MUTHUSAMY, THIRU P.—
Budget, 1973–74, Voting :
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 588–590

PAGES

M—cont.

MUTHUSELVAN, THIRU P. S.—
Budget, 1973-74, Voting :
Agriculture .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 566-567

N

NAINAMALAI, THIRU R.—
Budget, 1973-74, Voting :
Medical
Public Health .. .. .. .. .. .. 43-45

NARAYANASAMI, THIRU MANNAI P.—
Budget, 1973-74, Voting :
Agriculture .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 558, 560, 572, 609-619

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Alleged incorrect information given by Ministers (Point of Order) .. .. .. .. .. 270
Allotment of seats to Members (Point of Order) .. 401
Letter written by A.D.M.K. Legislature Party Secretary to Deputy Speaker (Point of Order) .. .. 283
Unemployed teachers of Tirunelveli district fasting (C.A. St.) .. .. .. .. 396, 397

P

PALANIAPPAN, DR. S. M.—
Budget, 1973-74, Voting :
Medical
Public Health .. .. .. .. .. .. 49-52



PAGES

PALANISAMY, THIRU N. K.—
Ennore-Thiruvanmiyur underground railway, opening. 531-534
Nightsoil, transport of .. .. .. .. 255-257
Water-supply for Palathuluvu tank .. 385-386

PALANIVELU, THIRU V.—
Budget, 1973-74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 586-588

PAPERS LAID ON THE TABLE—
Administration and Enforcement of Excise and Prohibition Acts during 1972-73 Review (English and Tamil) .. .. .. .. 338
Backard Classes Department, Policy note 1973-74 (Tamil) .. .. .. .. .. 476
Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972, report of Joint Select Committee .. 634
Capital Outlay on Schemes of Government Trading, Minister's speech (English and Tamil) .. .. 633
Cinemas (Regulation) Act, 1955, Notification .. .. 337
Commercial Budget on Agricultural Engineering Workshop, 1973-74 .. .. .. .. .. 633
Community Development and Panchayat Development 1973-74, Policy Note (English and Tamil) .. 633
Demand for "Medical" grants, Minister's speech .. 338
Demand for "Public Health" Grants, Minister's speech .. .. .. .. .. .. .. 338
Fire Service Department, Estimates Committee's Report .. .. .. .. .. .. .. 338
General Sales Tax Act, 1959, Notification .. .. 476
Health Services and Family Planning, Performance Budget, 1973-74 .. .. .. .. .. 338
Hindu Religious and Charitable Endowments Act, 1959, Notification .. .. .. .. .. 475

PAGES

*P*—cont.

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Industrial Growth in Tamil Nadu—Handloom and Textile, 1972-73, review (English and Tamil) .. 110

Industrial Growth in Tamil Nadu—Industrial Finance, review (English) .. .. .. .. 110

Industrial growth in Tamil Nadu—Industrial Finance, 1972-73, review (Tamil) .. .. .. .. 337

Industrial growth in Tamil Nadu—Major Industries, 1972-73, review (English and Tamil) .. .. 110

Industrial growth in Tamil Nadu—Mineral Development, 1972-73, review (English and Tamil) .. 110

Industrial growth in Tamil Nadu—Small Industries Development Corporation, review (English and Tamil) .. .. .. .. .. .. .. 110

Industrial growth in Tamil Nadu—Small Scale Industries, 1972-73, review (English and Tamil) .. 110

Industrial Growth in Tamil Nadu—State Industries Promotion Corporation of Tamil Nadu, review (English and Tamil) .. .. .. .. .. 110

Industrial Growth in Tamil Nadu—Sugar Industry, 1972-73, review (English and Tamil) .. .. 110

Industrial Growth in Tamil Nadu—Industrial Development Corporation Limited, 1972-73, review (English and Tamil) .. .. .. .. .. .. 110

Industrial Growth in Tamil Nadu—Small Industries Corporation Limited, review (English and Tamil) .. 110

Industrial Growth in Tamil Nadu—Textile Corporation Limited, review (English and Tamil) .. .. 110

Madras Metropolitan Development Plan, 1971-1991, summary (English) .. .. .. .. .. 338

Pamphlets on State Industries Promotion Corporation of Tamil Nadu .. .. .. .. .. .. 110

Pamphlets on Tamil Nadu Small Industries Corporation Limited .. .. .. .. .. .. 110

Panchayats Act, 1958, notification .. .. .. .. 476



PAGES

*P*—cont.

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Performance Budget on Backward Classes, 1973-74 .. 633

Performance Budget on Industries, 1973-74 .. .. 110

Performance Budget on Medical Education, 1973-74 .. 338

Public Works—Grants-in-Aid, 1973-74, Policy Note (English and Tamil) .. .. .. .. 634

Resume of work transacted by Legislative Council during the period from 9th August to 14th November 1972 .. .. .. .. .. .. .. 633

Speech by Health Minister at Salem (A Guide for Regional Development) (Tamil) .. .. .. 338

Tamil Nadu Government comes to the Rescue of Sick Units, 1972-73, review (English and Tamil) .. 110

PERIASAMY, THIRU K.—

Idols excavated at Veedhividangan, case *re*: .. 1-2

POLICE—

Lighted belt and batons for constables, supply .. 235-237

Quarters in Wandawasi, shifting .. .. .. 235

POLYTECHNIC—

Fisheries Technology of Central Polytechnic, hunger-strike by students .. .. .. .. .. 14-15

PONNAPPA NADAR, THIRU R.—

Allocation of seat in the front row to the Member of the Tamil Arasu Kazhagam (Point of Order .. 33

Budget, 1973-74, Voting—

Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 556, 558, 560, 579, 580, 602-609

Budget, 1973–74, Voting—
Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 286, 287, 288, 320–328, 329, 331–332

Co-operation Minister's announcement *re* : filing of case, against "Alai Osai" (Privilege Matter) .. 273–274, 277

PRIVILEGE—
Co-operation Minister's announcement *re* : filing of case against "Alai Osai" .. .. .. .. 271–280

PROSPERITY BRIGADE—
Remuneration to volunteers .. .. .. .. 12–14

PUBLIC HEALTH—
Night soil, transport of .. .. .. .. .. 255–257

R

RAILWAYS—
Ennore-Tiruvanmaiyur underground, opening .. 531–534

RAJA, THIRU A. M.—
Institute of Film Technology, Adayar, expansion of Film Studio .. .. .. .. .. .. 365–369

RAJANGAM, THIRU N.—
Budget, 1973–74, Voting—
Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 293–295



RAJARAM, THIRU G.—
Co-operation Minister's announcement *re* : filing of case against "Alai Osai" (Privilege Matter) .. 280

RAJARAM, THIRU K.—
Budget, 1973–74, Voting—
Welfare of the Backward Classes, etc. .. .. 403, 402, 440, 471, 473, 474 474

Buildings (Lease and Rent Control) Second Amendment, Bill, 1972 .. .. .. .. .. 402

RAMAKRISHNAN, THIRU KUPPAL K. S.—
Budget, 1973–74, Voting—
Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 307–309

RAMAN, THIRU O. P.—
Cinema shows, electricity supply (St.) .. .. 401–402

REPATRIATES—
Burma and Ceylon, Educational concessions to children of .. .. .. .. .. 7–9

ROADS—
Elagiri and Javadu Hill areas, roads for .. .. 24–26

RURAL MAN-POWER PROGRAMME—
Andipatti Union, work done under .. .. .. 9–11

S

SAMPATH, THIRU T. V.—
Absence of Opposition Party Leaders (Point of Order) .. .. .. .. .. 296

PAGES

S—cont.


Budget, 1973-74, Voting—
Land Revenue Department
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. .. 315-317

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Fisheries Technology of Central Polytechnic, hunger-strike by students .. .. .. .. .. 14-15
Repatriates from Burma and Ceylon, educational concessions to children of .. .. .. .. .. 7-9

SCHEDULED TRIBES—
Tribal people of Ayyanar Hill area, uplift .. .. 537

SCHOOLS—
Private school at Velampalayam, taking over .. 9
Teachers Training School, Dindigul, closure .. .. 237-240

SERVICES—
Staff of Agriculture Department in Nilgiris district, grant of project allowance .. .. .. 383

SHANMUGAM, THIRU P. U.—
Budget, 1973-74, Voting—
Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 286, 287, 288, 289, 332-336

SIVAPERUMAL, THIRU G.—
Budget, 1973-74, Voting—
Agriculture .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 600-602




PAGES

S—cont.


SIVAPRAKASAM, THIRU D. S. A.—
Lands acquired at Kotturpuram, particulars .. .. 258-259
Siddha dispensaries run by H.R. and C.E. Department, number of B.I.M. doctors .. .. .. .. 30-31

SLUMS—
Central Planning Commission, study on .. .. 524-528

SOUNDARAPANDIAN, THIRU P.—
Agricultural implements, manufacture .. .. .. 23-24
Encroachments in Gudalur taluk .. .. .. .. 18-19
Express buses, stand conductors for .. .. .. 540-542
Schools and Colleges, standard of English .. .. 370-373

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1973-74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 557, 531

Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 286, 289-293

SUBBIAH, THIRU A. R.—
Budget, 1973-74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 564-566

SUBRAMANIAM, THIRU A.—
Poultry farms, establishment in Coimbatore district .. 253

PAGES

S—cont.

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1973–74, Voting—
Agriculture .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 657
Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 296, 297–298
Letter written by A.D.M.K. Legislature Party Secretary to Deputy Speaker (Point of Order) .. .. 282

SUBRAMANIAM, THIRU M.—
Harijans in Erode taluk, house-sites for .. .. 537

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Allocation of seat in the front row to the Member of the Tamil Arasu Kazhagam (Point of Order) .. 33
Budget, 1973–74, Voting—
Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. .. 35, 45–49
Welfare of the Backward Classes, etc. .. .. 403, 423–426

SUPPU, THIRU K.—
Co-operation Minister's announcement re: filing of case against "Alai Osai" (Privilege Matter) .. 272–273, 279
Kallakuruchi Co-operative Sugar Mills, alleged attack on workers (A.M.) .. .. .. .. .. 548, 549
Tribal people of Ayyanar hill area, uplift .. .. 537
Unemployed teachers of Tirunelveli district, fasting (C.A.) .. .. .. .. .. 396, 397



PAGES

T

TANKS—
Kanmois in Andipatti Constituency, construction .. 257
Water-supply for Palathuluvu tank .. .. .. 385–386

TEACHERS—
Tamil Pandits, strength .. .. .. .. .. 369–370
Unemployed—of Tirunelveli district, fasting (C.A.) .. 396–397

TEMPLES—
Diamond crown for Goddess Meenakshi at Madurai, details .. .. .. .. .. .. .. 261–265

THANGAMANI, THIRU K. T. K.—
Allotment of seats to Members (Point of Order) .. 399–400
Budget, 1973–74, Voting—
Welfare of the Backward Classes, etc. .. .. 451–457
Fishermen reported missing, rescue operation .. 15–18
Release of (Ann.) .. .. .. .. .. .. 475

THEATRES—
Cinema theatres, running by Madras Corporation .. 240–243

THIRUPPATHY, THIRU K.—
Co-operation Minister's announcement re: filing of case against "Alai Osai" (Privilege Matter) .. 279
Ennore-Tiruvanmiyur underground railway, opening. 531–534

THYAGARAJAN, THIRU E. S.—
Budget, 1973–74, Voting—
Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. .. 79–80
Welfare of the Backward Classes, etc. .. .. 428–429

TRANSPORT AND COMMUNICATIONS—
Express buses, stand conductors for .. .. .. 540–542
Lightning Express buses, particulars .. .. .. 26–28

PAGES

*T*—cont.

Madras–Gingee, express buses for .. .. .. 542–544
Manalmedu–Thiruthuraipoondi bus route, opening .. 392
Ootacamund–Calicut and Ootacamund–Mysore routes, new buses for .. .. .. .. .. .. 544–547
Testing Clinics in Depots .. .. .. .. 28–29

V

VADIVELU, THIRU S. K.—
Budget, 1973–74, Voting—
Welfare of the Backward Classes, etc. .. .. 426–427

VEERASAMI, THIRU N.—
Letter written by A.D.M.K. Legislature Party Secretary to Deputy Speaker (Point of Order) .. .. 282

VENKATASWAMY, THIRU B.—
Budget, 1973–74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 557, 558, 560–563
Elagiri and Javadu Hill areas, roads for .. .. 24–26

VEZHAVENDAN, THIRU K.—
Harijans of Gummudipoondi sub-taluk, house-sites for. 253–255

VISWANATHAN, THIRU C. G.—
Budget, 1973–74, Voting—
Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. .. 57–60

W

WAHAB, THIRU K. A.—
Beedi workers in North Arcot district, grievances .. 374–378



PAGES

*W*—cont.

WAHAB, THIRU K. A.—*cont.*
Budget, 1973–74, Voting—*cont.*
Budget, 1973–74, Voting—
Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading. 557

Land Revenue Department .. .. .. ..
State Excise Duties .. .. .. .. ..
Stamps—Administration .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. 286, 287, 288, 301–304

Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. 35, 36, 403
Welfare of the Backward Classes, etc. .. .. 240–242
Cinema theatres, running by Madras Corporation .. 388–389
Mechanical Driers, Thanjavur district .. .. 235
Police quarters in Wandawasi, shifting .. .. 386–388
Siruvani Scheme, conciliatory talks .. .. 257
Stanley Hospital, utilisation of grants .. .. 19–22
Tube-wells, loans for sinking .. .. ..

WATER-SUPPLY— 523
Drinking, for Jayankondan .. .. .. 386–388
Siruvani Scheme, conciliatory talks .. ..

WEIGHTS AND MEASURES— .. .. 14
Measuring tapes, manufacture .. .. ..

WILD LIFE— 538
Pockets in Kanyakumari district, preservation ..

61605